

# பாபாசாகேப்
# டாக்டர் அம்பேத்கர்
## நூல் தொகுப்பு :
தொகுதி 10



# டாக்டர் பாபாசாகேப்


# அம்பேத்கர் :

# பேச்சும் எழுத்தும்



நூல் தொகுப்பு

## தொகுதி 10



டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

தோற்றம் : ஏப்ரல் 14, 1891 பரிநிர்வாணம் : டிசம்பர் 6, 1956

''பார்க்கத்தகாமையை மட்டுமே தீண்டாமைக்கு அறிகுறிச் சான்றாக எடுத்துக் கொள்ளும் பட்சத்தில், அணுகக்கூடாத வர்களைத் தீண்டத்தகாதவர் வகை வகுப்பினரிலிருந்து விலக்கிவைக்க நேரிடும். இதேபோன்று, அணுகக்கூடாமை யைத் தீண்டாமைக்கு அறிகுறிச் சான்றாக எடுத்துக் கொள்வ தனால், தொட்டால் மட்டுமே தீட்டு ஏற்படக்கூடியவர்களைத் தீண்டத்தகாதவர் வகை வகுப்பினரிடமிருந்து நீக்கி வைக்க நேரிடும். இவ்வாறே, தொடுவது தீட்டை உண்டு பண்ணிவிடும் என்பதைத் தீண்டாமையின் அறிகுறியாகக் கொள்ளும் பட்சத்தில், கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கப்படாத வர்களைத் தீண்டத் தகாதவர்கள் என்ற பட்டியலிலிருந்து ஒதுக்கி வைக்க நேரிடும். இதைத்தான் இந்துக்கள் செய்ய விரும்பினர். தீண்டத்தகாதவர்கள் என்பவர்கள் யார் என்பதை நிர்ணயிப்பதற்கு நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான அளவு கோலைக் கைக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்து வதன் மூலம் சில வகுப்பினரைத் தீண்டத்தகாதவர்கள் வரிசையிலிருந்து அப்புறப்படுத்தவும் அதன் மூலம் தீண்டத் தகாதவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் அவர்கள் விரும்பினர். தீண்டாமை என்பது ஒரு குறிப்பிட்ட நபரின்பால் ஒரு இந்துவுக்கு உள்ளத்தில் உள்ள வெறுப்பின் வெளிப்புறச் சின்னமேயாகும். இந்த வெறுப்பின் வெளிப்புற வடிவம் இடத்துக்கு இடம், காலத்திற்குக் காலம் வேறுபடலாம். சுருக்க மாகச் சொன்னால் இந்த வடிவம் வெறுப்பின் அளவையே குறிக்கிறது. எங்கெல்லாம் இந்த வெறுப்பு நிலவுகிறதோ, அங்கெல்லாம் தீண்டாமை நிலவுகிறது. இந்த சர்வசாதாரண உண்மையை இந்துக்கள் நன்கு அறிவார்கள்.''

*- டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் -*

'பல லட்சங்களிலிருந்து பின்னத்துக்கு'

This Volume X in Tamil forms the second part of the English Edition Volume 5 : Dr. **Babasaheb Ambedkar - Writings and Speeches** Published by the Education Department, Government of Maharashtra, 1989.

*முதற் பதிப்பு : ஏப்ரல், 1997*
*சைத்ரா, 1919*

© உரிமைப் பதிப்பு

***விலை ரூ. 40/-***
***நூலகப் பதிப்பு : ரூ. 100/-***

***வெளியீட்டாளர்:***

*டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,*
*நல அமைச்சகம், இந்திய அரசு,*
*புது டில்லி.*

***விற்பனை நிலையம்:***

*நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்.,*
*41B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,*
*அம்பத்தூர், சென்னை - 98.*

---

***அச்சிட்டோர்:***

*பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,*
*சென்னை - 600 014.*
*தொலைபேசி: 8532441, 8532973*

# ஆலோசனைக் குழு

**மாண்புமிகு பல்வந்த்சிங் ராமுவாலியா**
நலத்துறை அமைச்சர்
இந்திய அரசு

**திரு. கே.கே. பக்ஷி,** இ.ஆ.ப.
செயலாளர், நல அமைச்சகம்

**பி.எல். சர்மா,** இ.ஆ.ப.,
உறுப்பினர் - செயலாளர்,
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

**எச்.ஆர். பீமா சங்கர்,** ஐ.ஆர்.எஸ்.,
இயக்குநர்,
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

**நிர்வாகப் பதிப்பாளர் (தமிழ்) :**

**டாக்டர் எஸ். பெருமாள்,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.

**ஆங்கிலத் தொகுப்பாளர் :**

**திரு. வஸந்த் மூன்**
பம்பாய்

**தமிழ் நூல் பதிப்பாளர் :**

**டாக்டர் எஸ். பெருமாள்**

**மொழி பெயர்ப்பாளர்கள்:**

**திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)**
**திரு. தியாகராஜன் (தியாகு)**
**முனைவர் அ. இளங்கோவன்**
**திரு. எ.எஸ். மணி**
**திரு. என். இராமகிருஷ்ணன்**

**ஒப்புநோக்கியோர்:**

**திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)**

**பிழைதிருத்த உதவி:**

**திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)**
**முனைவர் எஸ். தேவராசன்**

# அணிந்துரை

சமுதாயத்தில் சிலர் தம்மை உயர்ந்தவர்கள் என்று கருதிக் கொள்வதும், பிறரை இழிந்தவர்கள் என்று அவமதிப்பதும் உயர்ந்தவர்கள் என்று கருதிக் கொள்வோர் மற்றவர்களைத் தொடுவதற்குக் கூட அஞ்சுவதும், வெறுத்தொதுக்குவதும் வழக்கமாக உள்ளது. இந்தப் போக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கக் கூடியதாகும். இந்த மனநிலை இப்போது மாறிவரக் காண்கிறோம். பழையன கழிந்து, புதியன புகுதல் நிகழ்வதோடு, இந்த மாற்றத்தை ஏற்படுத்த பாடுபடுவோரும் பெருகி வருகின்றனர். இவர்களின் முயற்சி வெற்றி பெற்றே தீரும்.

புத்தரின் நெறியை அறியாதவர்கள் வெகுசிலர். அவர் காட்டிய நெறியைப் பின்பற்றிச் சமத்துவச் சமுதாயத்தை உருவாக்கும் பணியைப் பலரும் மேற்கொண்டுள்ளனர். சமத்துவமற்ற நிலையைப் போக்கிடப் பாடுபட்டவர்களில் பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அவர் வகுத்தளித்த சமத்துவக் கொள்கையைப் பாரத அரசு நிறைவேற்றப் பாடுபட்டு வருகின்றது.

பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர், தீண்டாமையைத் தீரமுடன் எதிர்த்த சிறப்புக்குரியவர். மக்களிடையே பிறப்பினால் ஏற்றத்தாழ்வு பாராட்டுவதை அறவே வெறுத்தவர்.

நம் நாட்டின் விடுதலைக்காக எண்ணற்றவர்கள் இரத்தம் சிந்தியுள்ளனர். அவர்கள் சிந்திய இரத்தத்தில் வேற்றுமை இல்லை. இந்த உண்மையை அறிந்த பின் மக்கள் அனைவரும் சமமே என்பதில் நாம் உறுதியாக இருப்பதோடு, மக்களிடையே நிலவும் அனைத்து வகை வேறுபாடுகளையும் களைந்து நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும்.

இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதில் ஈடுபட்டிருப்போர் அனைவரும் நமது பாராட்டுக்கு உரியவர்களாகின்றனர்.

**பல்வந்த் சிங் ராமுவாலியா**
நலத்துறை அமைச்சர்,
இந்திய அரசு

புது டில்லி

## வாழ்த்துரை

'பாரத் ரத்னா' விருதுபெற்ற டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்கள் ஒப்பற்ற அறிஞரும், உண்மையான தேசபக்தருமாவார். அவர் நம் நாட்டுக்கு ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவை; எண்ணற்றவை. நம் நாட்டை நலிவடையச் செய்த பிரச்சினைகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றைப் போக்கும் முயற்சிகளை மேற்கொண்டார்.

சமுதாயத்தில் நிலவும் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் காரணமாக உள்ள சாதி, மத வேறுபாடுகளை ஒழித்தால் தான் நாடும், மக்களும் முன்னேற்றம் காணமுடியும். மக்களிடையே வேற்றுமை பாராட்டும் தீண்டாமைக் கொடுமையை ஒழித்து ஒன்றுபட்டு வாழும்போதே உயர்ந்த பண்பாடுள்ள சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்ற நிலையை எய்த முடியும். இத்தகைய கொள்கையை எடுத்துரைத்து நிலைநிறுத்துவதற்காகத் தம் வாழ்நாள் முழுதும் அயராது பாடுபட்டவர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். இந்த முயற்சியில் அவர் வெற்றியும் பெற்றார்.

டாக்டர் அம்பேத்கர் அவர்கள், தம் கருத்துகளை ஆங்கில மொழியில் அழகாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்துள்ளார். அவருடைய சிந்தனைகளை இந்திய மொழிகளில் வெளியிட்டுப் பரப்பும் பணியை மாண்புமிகு நலத்துறை அமைச்சர் திரு. பல்வந்த்சிங் இராமுவாலியா அவர்களும், நலத்துறைச் செயலாளர் திரு. கே.கே. பக்ஷி அவர்களும் மேற்கொண்டு நிறைவேற்றி வருகின்றனர்.

சமத்துவச் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்ட டாக்டர் அம்பேத்கர் அவர்களின் எண்ணங்களையும், கருத்துகளையும் தாங்கிவரும் இந்தத் தொகுதியும் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

புது டில்லி

**பி.எல். சர்மா,**
உறுப்பினர் - செயலாளர்
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
நல அமைச்சகம்

## பதிப்புரை

மகாராஷ்டிர மாநில அரசு ஆங்கில மொழியில் வெளியிட்டு வரும் டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுதிகளை இந்தியிலும் ஏனைய இந்திய மொழிகளிலும் மொழி பெயர்த்து வெளியிடும் பணியை இந்திய அரசின் நல அமைச்சகத்தைச் சார்ந்த டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன் மேற்கொண்டு நிறைவேற்றி வருகின்றது. இந்தப் பணி மக்களிடையே வரவேற்பைப் பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகும்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்பு வரிசையில் 10-வது தொகுதியை நாட்டு மக்களுக்கு அளிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம். உயர்ந்ததொரு இலட்சியத்தை நோக்கி நம் நாடு செல்லும் பயணத்தில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூல்கள் வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

ஆங்கில நூல்களை இந்திய மொழிகளில் அளிப்பதில் முனைந்து பணியாற்றும் பதிப்பாசிரியர்கள், மொழிபெயர்ப் பாளர்கள், ஒப்புநோக்குவோர், அச்சகத்தார் ஆகிய அனைவரும் நமது பாராட்டுதலுக்கு உரியவர்கள். இந்த அரிய பணியில் ஒத்துழைப்பு நல்கும் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக் கின்றோம்.

ஏனைய தொகுதிகளைப் போலவே இந்தத் தொகுதி யையும் மக்கள் வரவேற்று ஆதரிப்பார்கள் என நம்புகின்றோம்.

புதுடில்லி,

**எச்.ஆர். பீமா சங்கர்,**
இயக்குநர்
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

# தமிழ் நூல் பதிப்பாசிரியர் உரை

மகாராஷ்டிர மாநில அரசு ஆங்கிலத்தில் வெளியிட்டு வரும் டாக்டர் பாபா சாகேப் பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்பு வரிசையில் ஐந்தாவது தொகுதி, தமிழில் இரு பகுதிகளாக வெளியிடப் படுகின்றது. தமிழில் முதல் பகுதி ஒன்பதாவது தொகுதியாகவும், இரண்டாம் பகுதி பத்தாவது தொகுதியாகவும் அமைந்துள்ளது.

இந்திய நாட்டில் ஒடுக்கப்பட்டும், ஒதுக்கப்பட்டும் அடையாளங் காணமுடியாத வகையில் வைக்கப்பட்டுள்ள ஐந்திலொரு பகுதி மக்களின் அவல வாழ்க்கையையும், அவர்களுடைய மனித உரிமை பற்றிய பிரச்சினைகளையும் சமூகம், சமயம், அரசியல் என்னும் மூன்று கோணங்களில் விரிவாக ஆய்ந்து எழுதப் பட்டுள்ள இந்த நூல், சிறந்ததொரு சமூகவியல் ஆவணமாக அமைந்துள்ளது. பலவகை ஆதாரங்களை ஒருங்கே திரட்டி எழுதப்பட்டுள்ள இந்நூல், டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் மேற்கொண்ட அறிவுப்பணிக்கும், போராட்டத்திற்கும் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

ஆங்கில மொழியில் சிறந்த சிந்தனைக் களஞ்சியமாக உள்ள டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூல்களை மக்களுக்குப் பயன்படும் வகையில் தமிழிலும் ஏனைய இந்திய மொழி களிலும் வெளியிடும் மகத்தான பணியை மேற்கொண் டுள்ள இந்திய அரசின் நலத்துறையும், டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷனும் பாராட்டுதலுக்கு உரியவை. இந்த நூல்களை மொழிபெயர்க்கும் பணியைப் பலர் மேற்கொள்வதாலும் விரைந்து வெளியிட வேண்டியுள்ளதாலும் மொழி நடையிலும், சொல்லாட்சியிலும் வேறுபாடு ஏற்படுவது தவிர்க்க இயலாத தாகியுள்ளது. இந்தக் குறைகளைத் தமிழ் மக்கள் பொறுத்துக் கொள்வார்கள் என நம்புகின்றோம்.

இந்த அரிய பணியில் ஈடுபட்டுள்ள மொழிபெயர்ப் பாளர்கள், ஒப்புநோக்குவோர் ஆகிய யாவரும் நன்றிக்குரிய வர்கள். முந்தைய தொகுதிகளைப் போலவே இந்தத் தொகுதி யையும் மக்கள் வரவேற்று ஏற்பார்கள் எனவும் நம்புகின்றோம்.

**எஸ். பெருமாள்**
தமிழ்நூல் பதிப்பாசிரியர்

# பொருளடக்கம்


பக்கம்

அணிந்துரை

வாழ்த்துரை

பதிப்புரை

தமிழ் நூல் பதிப்பாசிரியர் உரை

**பகுதி இரண்டு - சமூகம்**

| | | |
|---|---|---|
| இயல் 15 | நாகரிகமா, கொடுங்குற்றமா | 3 |
| இயல் 16 | இந்துக்கள் கட்டிய வீடு | 31 |
| இயல் 17 | இந்து சமுதாயத்தின் அடிக்கல் | 71 |
| இயல் 18 | தீண்டத்தகாதவர்களுக்கு எதிராகத் தீண்டத்தக்கவர்கள் | 105 |
| இயல் 19 | சாதியின் சாபக்கேடு | 135 |

**பகுதி மூன்று - அரசியல்**

| | | |
|---|---|---|
| இயல் 20 | பல இலட்சங்களிலிருந்து பின்னத்துக்கு | 157 |
| இயல் 21 | தீண்டத்தகாதவர்களின் எழுச்சி | 185 |
| இயல் 22 | இக்கட்டான நிலையில் | 205 |

இயல் 23 அவர்களுடைய விருப்பங்களே எமக்குச் சட்டங்கள் 227

இயல் 24 திருவாளர் காந்தியின் சமுதாய நோக்கு 251

இயல் 25 காந்தியும் அவரது உண்ணாவிரதமும் 315

இயல் 26 தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஓர் எச்சரிக்கை 429

**பகுதி நான்கு - சமயம்**

இயல் 27 இந்துக்களிடமிருந்து விலகிச் செல்லுதல் 439

இயல் 28 சாதியும் மதமாற்றமும் 471

இயல் 29 தீண்டப்படாதவர்களைக் கிறித்தவர்களாக்குவது 479

இயல் 30 சமயம் மாறியவரின் நிலை 511

பகுதி இரண்டு

# சமூகம்

இந்நூற் தொகுதியின் பகுதி ஒன்றில் சேர்க்கப் பட்டுள்ள ''தீண்டப்படாதார் அல்லது இந்தியச் சேரியின் குழந்தைகள்'' தொடர்பான தொகுப்புக் கட்டுரை தவிர, 'தீண்டப்படாதாரும் தீண்டாமையும்' என்ற பொருள் குறித்து டாக்டர் அம்பேத்கர் எழுதிய வேறு பல கட்டுரைகளும் உள்ளன. இந்தக் கட்டுரைகள் - சமூகம், அரசியல், சமயம் என்று - மூன்று வகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன. பகுதி இரண்டில் ''சமூகம்'' என்ற பிரிவில் ஐந்து கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

## இயல் 15

# நாகரிகமா, கொடுங்குற்றமா?

I. இந்திய மக்கள்தொகை குறித்த மற்றுமொரு மாறுபட்ட கருத்து.

II. இக்கருத்தின் அடிப்படையில் பார்க்கப்படும் ஒடுக்குண்ட வகுப்புகள்:

அ) ஆதிப்பழங்குடிகள்.

ஆ) குற்ற மரபினர்,

இ) தீண்டப்படாதார்

III. இந்த வகுப்புகளின் நிலைமை மீது இந்து நாகரிகத்தின் தாக்கம்.

IV. இந்த வகுப்புகளின் பிரச்சினைகளிலுள்ள வேறுபாடு.

இந்திய மக்கள் தொகையைப் பொதுவாக மொழி அடிப்படையிலோ சமய அடிப்படையிலோ வகைப்படுத்துவர். இந்திய மக்களை வகைப்படுத்துவதில் இவ்விரு வழிகள்தான் தொடர்ந்து நெடுங்காலமாய் வழக்கில் உள்ளன. இதனால், இந்திய நாட்டின் மக்களினங்கள் தொடர்பாக ஆர்வத்தைத் தூண்டுவதும் முக்கியமாய்த் தெரிந்து கொள்ள வேண்டியதும் அவர்கள் சார்ந்துள்ள சமயங்களோ, பேசுகிற மொழிகளோதான் என்ற எண்ணமே அயலாருக்கு ஏற்படுகிறது. அவர்களது ஆர்வம் இந்த அளவோடு குறுகிப் போவதால், இந்தியாவில் வழங்கிவரும் சமயங்கள் குறித்தும் மொழிகள் குறித்தும் தெரிந்து கொண்டதே போதும் என்று இருந்து விடுகின்றனர். ஓர் அயலவர் கவனமாய்த் தெரிந்து வைத்துக்கொள்ள விரும்புவதெல்லாம் அவர் சமய அக்கறை உடையவரானால் - இந்தியாவில் மக்கள் இந்துக்களாகவோ முகமதியர்களாகவோ இருக்கிறார்கள் என்பதைத்தான். அல்லது இந்திய மக்களில் சிலர் மராத்தி பேசுகின்றனர், சிலர் குஜராத்தி பேசுகின்றனர், சிலர் வங்காளி பேசுகின்றனர், சிலர் தமிழ் பேசுகின் றனர்... என்பதைத் தான்.

இந்திய மக்களை வகைப்படுத்தும் இவ்விரு வழிகளில் சமயவழி வகைப்படுத்தல்தான் கூடுதலான அளவில் அயல்நாட்டவரின் மனத்தில் பதிவதாகவும் அவரை ஈர்ப்பதாகவும் உள்ளது. மொழிகளைக் காட்டிலும் சமயங்களே அவரது கவனத்தைக் கவர்கின்றன. ஆனால் அவரும் கூட இந்தியாவில் எல்லா சமயப் பிரிவுகளையும் அறிந்திருக்கவில்லை. அவருக்கு இந்துக்களையும் முகமதியர்களையும்தான் தெரியும். அவர் சில நேரம் சீக்கியர்களைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளார்; கிறித்தவர்கள் மேன்மேலும் பெருகிச் செல்லும் சமயத்தவராக இருந்தாலும் அவர்களைப் பற்றி மிக அரிதாகவே கேள்விப்பட்டுள்ளார். பௌத்தர்களைப் பற்றி கேள்விப்பட்டதே இல்லை. மேலும் அவரது கண்ணோட்டத்தில் இன்றைய இந்தியாவைப் பொறுத்தவரை பௌத்தர் என்று யாருமில்லைதான்.*

இந்தியாவில் இந்துக்களும் இஸ்லாமியர்களும்தான் உள்ளனர் என்றும், வேறுயாரைப் பற்றியும் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை என்றும் அயல்நாட்டவர் எண்ணிக் கொள்கிறார். இயல்பாகவே அவருக்கு இப்படித்தான் எண்ணத்தோன்றும். எங்குப் போனாலும் இந்து-முஸ்லீம் பூசலின் இரைச்சல்தான் ஓங்கிக் கேட்கிறது. இந்தப் பூசல் எவ்வளவு மோசமாக முற்றியுள்ளது என்பதைக் கடந்த சில ஆண்டுகளில் நடைபெற்றுள்ள இந்து-முஸ்லீம் கலகங்களின் எண்ணிக்கையிலிருந்தும், அவற்றில் காயமுற்றவர்கள், மரணமுற்றவர்களின் எண்ணிக்கையிலிருந்தும் அறியலாம்.

ஆனால், இது ஒரு பேரரசை நிறுவுவதற்கான போராட்டம். முகமதியர்கள் குடிகளாய் மட்டும் இருக்கும் படியான இந்து ராஜ்யத்தை இந்தியாவில் நிறுவுவதற்காகக் கிளர்ச்சி செய்யும் இந்துக்கள் உண்டு. அனைத்து இஸ்லாமியவாதக் கனவுகளில் மூழ்கிக் கிடக்கும் முகமதியர்களும் உண்டு. வாள் அல்லது குரான் இரண்டிலொன்றை இந்துக்கள் தேர்ந்தெடுக்கும் முறையில் இந்தியாவை ஒரு முஸ்லீம் பேரரசின் அங்கமாக்க இவர்கள் ஆசைப்படுகிறார்கள். இந்த இரு வகைத் தீவிர வாதிகளுக்கும் நடுவில், இந்து-முஸ்லீம் இருசாராரும் சமபங்காளர்களாய் வாழக்கூடிய ஓர் அரசை நிறுவ விரும்பும் நல்லறிவாளர்களும் இருக்கிறார்கள். இதில் வெல்லப்போவது தீவிரவாதிகளா, மிதவாதிகளா என்ற வினாவிற்குக் காலம்தான் விடைசொல்லும். இதற்கிடையில் இருதரப்பிலும் உள்ள தீவிரவாதிகள் இரத்தக் களரிகளை உண்டாக்கிப் பத்திரிகைகளில்

* பௌத்த சமயத்துக்குப் புத்துயிரூட்ட மிகச் சன்னமாய் ஒரு முயற்சி நடைபெறுகிறது. கல்கத்தா மகா போதி சங்கம் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இது போன்ற தகவல்கள் 1931 ஆம் ஆண்டில் இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, முதல்பாகம், பகுதி 3 லிருந்து தரப்படுகின்றன.

தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்து வருகிறார்கள். இது ஒரு புறமிருக்க, இந்துக்களுக்கும் முகமதியர்களுக்குமான இந்தப் போராட்டத்தில் அவ்வளவாக அக்கறை கொள்ளாத பலர் இருப்பதாகவே நான் நினைக்கிறேன். பார்க்கப்போனால் இது மேலாண்மைக்கான போராட்டம், ஆதிக்கத்துக்கான போராட்டம். இது விடுதலைக்கான போராட்டமன்று. இது ஒரு தரப்பினர் மறுதரப்பார் மீது பேராதிக்கத்தை நிறுவுவதற்கான போராட்டம். இந்தப் போராட்டத்தைப் பெரிதாகக் கருதாத பலர் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டங்களில்தான் அதிக அக்கறை கொண்டுள்ளனர். தாங்கள் மானமுள்ள மனிதர்களாக மதிக்கப்படவேண்டும் என்பதற்காக அவர்கள் நடத்தும் போராட்டங்கள் இவை. இங்கிலாந்தில் 'விக்கு'களுக்கும் 'டோரி'களுக்கும்* இடையிலான பழைய பூசலில் 'விக்கு'களின் அரசியல் கொள்கை பற்றிப் பேசுகையில் பிரான்சிஸ் பிளேஸ் இப்படிச் சொன்னார்:

> ஒரு புறம் மன்னரையும் மறுபுறம் மக்களையும் நசுக்கிவிட்டு, ஆளும் வகுப்பினரின் மேட்டுக்குடி ஆட்சியை நிறுவுவதே அவர்கள் நோக்கம். இதே கொள்கையைத்தான் இன்று போராடிக் கொண்டிருக்கும் இந்த இந்துக்களும் முஸ்லீம்களும் இந்திய அரசியலில் கடைப்பிடிக்கிறார்கள். தத்தமது வகுப்பினரை ஆளும்பொறுப்பில் அமர்த்தவே இவர்கள் விரும்புகிறார்கள். இந்துக்களும் சரி முஸ்லீம்களும் சரி, தங்களது வெகுஜனப் பகுதியினரைப் பயன்படுத்தி இவ்வகுப்புகளின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கே முயல்கிறார்கள். இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்தப் போராட்டம் உண்மையில் இவ்வகுப்புகளின் போராட்டம் தானே தவிர வெகுஜனங்களின் போராட்டமன்று.

வெகுஜனங்களின் போராட்டத்தில் அக்கறையுள்ளவர்கள் இந்திய மக்கள்தொகையை வேறொரு கோணத்தில் பார்க்கக் கற்றுக் கொண்டாக வேண்டும். முற்ற முழுக்க சமயம் என்ற கோணத்தில் மட்டும் பார்ப்பதை விட்டொழிக்க வேண்டும். இந்திய மக்கள் தொகையைச் சமூக, பொருளாதாரக் கோணத்தில் பார்த்தாக வேண்டும். இந்திய மக்களின் பொருளாதார, சமூக வாழ்வில் சமயம் எவ்வாறு தாக்கம் கொண்டுள்ளது என்பதை அறியும் கவலை தேவையற்றது என்று இதற்குப் பொருளில்லை. இந்துக்கள் என்றாலும் இஸ்லாமியர் என்றாலும் இந்திய மக்களை ஆய்வு செய்யும்போது சமயத்தைக்

---

★ 'விக்கு'கள்- முற்கால பிரிட்டனில் புதுமைச் சார்புக் கட்சியினர்
'டோரி'கள் - முற்கால பிரிட்டனில் பழமைச் சார்புக் கட்சியினர்.
- மொழிபெயர்ப்பாளர் குறிப்பு

கருத்தில் கொள்ளாமல் விட்டுவிட்டால், அவர்களின் வாழ்க்கையைத் தக்கவாறு படம் பிடித்துக்காட்ட முடியாமற்போகும். ஏனென்றால் மத்தியகால ஐரோப்பாவில் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை எப்படியோ, அதேபோல் இந்தியாவிலும் சமயம் உயர்ந்த இடம் பெற்றுள்ளது. மக்களின் வாழ்க்கை மீது திருச்சபை கொண்டிருந்த ஆதிக்கம் குறித்து பிரைஸ்* கூறியிருப்பதை இங்கு எடுத்துக்காட்டத் தகும்: ''திருச்சபையில், திருச்சபைக்காகத் திருச்சபை வழியாக வாழ்கின்ற வாழ்க்கை; காலை நேர வழிபாட்டில் ஆசீர்வதிக்கப்பெற்று, மாலைநேர தேவகீதத்தால் அமைதியான ஓய்வுக்கு அனுப்பிவைக்கப் பெறும் வாழ்க்கை; ஓயாமல் திரும்பத் திரும்பச் செய்யும் புனிதச் சடங்குகளைக் கொண்டு ஊக்கமும், பாவ அறிவிப்பைக் கொண்டு நிம்மதியும், நோன்பைக் கொண்டு தூய்மையும், நினைக்கவும் துதிக்கவும் முன்னிறுத்தப்படும் கண்ணுக்குத் தெரிகிற பொருட்களைக் கொண்டு நன்னெறியும் பெற்றுத் திருச்சபையின் துணையோடு நடைபெறும் வாழ்க்கை; மத்திய காலத்தைச் சேர்ந்த பலரும் இதைத்தான் ஒழுக்கமான மனித வாழ்க்கையாகக் கருதினர். பலர் உள்ளபடியே அப்படி வாழ்ந்தனர்; அனைவரும் அதையே இலட்சிய வாழ்க்கையாக எண்ணினர்.''

இன்று இந்திய மக்களின் வாழ்க்கை மீதான சமயத்தின் ஆதிக்கம் மத்திய காலத்து மக்களின் வாழ்க்கை மீதான திருச்சபையின் ஆதிக்கத்திற்கு எள்ளளவும் குறைந்ததன்று. ஆக சமயத்தைக் கருத்தில் கொள்ளாது விட்டால் தவறாகிவிடும். ஆனால் முற்ற முழுக்க சமயக் கண்ணோட்டத்தில் மட்டும் பார்ப்பது ஒரு மேலோட்டமான சித்திரத்தையே தரும் என்பதுதான் உண்மை. முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால்: இந்தியாவில் வெகுஜனங்களும் வகுப்புகளும் வாழ்வது எவ்வாறு? அவர்கள் கூடி வாழும் வாழ்க்கையின் சமூக, பொருளாதார நிலைமைகள் என்ன? இந்நிலைமைகள் மீது சமயம் எந்த அளவுக்குத் தாக்கம் கொள்கிறது? இந்து எனும் வட்டத்துக்கு உட்பட்ட சில வகுப்புகளின் நிலைமையை காணும்போது அதுவே இந்த வினாவிற்கு விடையாகிறது.

## II

பேராசிரியர் மாக்ஸ் முல்லர் இந்தியாவை வந்து பார்க்காமல் போனது வருத்தத்துக்குரியது. பார்த்திருந்தால், தத்துவத்துக்கும் நடைமுறைக்குமான மாறுபாட்டைக்கண்டு, அதற்கு அவர் விளக்கமும்

---

★ புனித ரோமானியப் பேரரசு, பக். 36

அளித்திருக்கக் கூடும். இப்போதைக்கு இந்த மாறுபாடு ஒரு புதிராகவே இருந்து வருகிறது.

இது,''பிரம்மம்'' பற்றிய கோட்பாட்டுக்கு மாறானது. பிரம்மம் என்பது ஒவ்வொரு மனிதப் பிறவிக்குள்ளேயும் குடிகொண்டு வியாபித்திருப்பதாக பிராமணர்கள் அறுதியிட்டுரைக்கிறார்கள். பிரம்மம் பிராமணனுக்குள் இருக்கிறதென்றால், ஆதிப் பழங்குடி மனிதனுக்குள்ளும் கூட இருக்கவேண்டுமே! அவ்வாறே தீண்டப்படாத மனிதனுக்குள்ளும்கூட இருக்கவேண்டுமே! இந்த இரண்டையும் எவ்வாறு ஒத்துப்போகச் செய்வது? அதாவது, பிரம்மம் பற்றிய கோட்பாட்டையும், இதற்கு மாறாக ஆதிப்பழங்குடிகள், குற்றமரபினர், தீண்டத்தகாதார் என்று இருப்பதையும் எவ்வாறு இணக்கப்படுத்துவது?

இந்த ஒடுக்குண்ட மனிதஇனம் மூவேறு இனங்களாய்ப் பிரிந்துள்ளது. ஓர் இனம் ஆதிப்பழங்குடிகள் எனப்படும் மக்களைக் கொண்டுள்ளது. குற்ற வகுப்புகளாகப் பட்டியலிடப்பட்டுள்ள சமுதாயங்கள் இரண்டாவது தனியினம் ஆகின்றன. தீண்டத்தகாதோர் எனப்படுவோரைக் கொண்டு அமைவதே மூன்றாவது இனம்.

இந்த மூன்று இனங்களையும் சேர்ந்தவர்களின் மொத்தத் தொகை சிறிதன்று. 1931 ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் கண்டுள்ளபடி, இந்தியாவில் ஆதிப்பழங்குடி மக்கள்தொகை இரண்டரை கோடிக்கு மேல். இப்போது குற்ற வகுப்புகளாகப் பட்டியலிடப்படும் பிரிவுகளின் மொத்த மக்கள்தொகை சுமார் 45 இலட்சம். தீண்டத்தகாதோரின் மொத்த மக்கள்தொகை 5 கோடி. கூட்டிப் பார்த்தால் இந்த வகுப்புகளின் ஒட்டுமொத்த மக்கள் தொகை 7 கோடியே 95 இலட்சம் ஆகிறது. இந்த 7 கோடியே 95 இலட்சம் மக்களின் நிலை என்ன என்பதுதான் கேள்வி.

ஆதிப்பழங்குடியினரை முதலில் எடுத்துக்கொள்வோம். எத்தகைய நாகரிக நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்?

ஆதிப் பழங்குடிகள் என்ற பெயரே அம்மக்களின் இப்போதைய நிலையைக் காட்டுவதாக உள்ளது. காடுகளில் சிதறலாய் உள்ள சிறு குடிசைகளில் அவர்கள் வசிக்கிறார்கள். காட்டுப் பழங்களையும் கொட்டைகளையும் கிழங்குகளையும் உணவாகக் கொண்டு உயிர் வாழ்கிறார்கள். உணவுப் பொருட்கள் கிடைப்பதில் சற்றேனும் நிச்சயமில்லாத நிலை இருப்பதால் அவர்கள் அரைப்பட்டினியோடு வாழ்வது தவிர வேறு வழியில்லை. உடைகளைப் பொறுத்த வரை,

கடுஞ்சிக்கனம்தான். கிட்டத்தட்ட பிறந்தமேனியராகவே அவர்கள் நடமாடுகிறார்கள். ''போந்தா போராஜாக்கள்'' என்றே ஒரு பழங்குடியினர் பெயர் பெற்றுள்ளனர். ''நிர்வாணமான போராஜாக்கள்'' என்று இதற்குப் பொருள். இவர்களில் பெண்கள் சிறிய துண்டுத்துணியைப் பாவாடை போல் அணிகிறார்கள். இது அசாமில் மோம்ஜாக் நாகாக்கள் அணிவதை ஒத்தது. இதன் முனையிரண்டும் இடது தொடையில் மேற்புறம் சேர்ந்தும் சேராதது போல் இருக்கும். இந்த பாவாடைகள் ஒரு காட்டு மரத்தின் நாரினால் வீட்டிலேயே நெய்யப் படுகின்றன. பெண்கள் உருமணிகளாலும் பனை ஓலையாலும் செய்த தலைப்பட்டி அணிகிறார்கள். கோம்ஜாக் பெண்களைப் போலவே கழுத்திலும் ஏராளமாய் மணிச்சரங்களும் ஏனைய அணிகலன்களும் பூணுகிறார்கள். இவை தவிர, இப்பெண்கள் வேறொன்றும் அணிவதில்லை. பெண்கள் தலையை அறவே மொட்டையடித்துக் கொள்கிறார்கள். நிஜாமின் ஆளுகையில் ஃபாராபாத் அருகே வசித்து வரும் செஞ்சுப் பழங்குடியினரைப் பொறுத்தவரை, ''அவர்களின் குடிசைகள் கூம்பு வடிவில் உள்ளன. மூங்கில்களை நடுப்பகுதியில் ஒன்றுசேரும்படி சரிவாக அமைத்து, மெல்லிய அளவில் கூரையிட்டுச் சன்னமாய்க் கட்டப்பட்டவை இவை. உண்மையில் அவர்களுக்குச் சொந்தமான பொருட்கள் என்று பெரியதாய் ஒன்றுமில்லை. அவர்கள் அணியும் துணிமணிகள் சொற்பமே - ஆண்களுக்கு லங்கோடு மற்றும் ஒரு துணி, பெண்களுக்கு மார்க்கச்சும் பாவாடையும். உடை என்பது அநேகமாய் இவ்வளவுதான். ஒரு சில சமையல் பாத்திரங்களும் ஓரிரு கூடைகளும் இருக்கும். கூடையில் சிலநேரம் தானியம் கிடக்கும். அவர்கள் ஆடுமாடு வைத்துள்ளார்கள். குறிப்பிட்ட இந்தச் சிற்றூரில் கொஞ்சம் சாகுபடியும் செய்கிறார்கள். மற்ற இடங்களில் தேனும் ஏனைய வன விளைபொருள்களும் திரட்டி விற்றுப் பிழைக்கிறார்கள்'' மற்றோர் ஆதிப் பழங்குடியான மோரியாக்களைப் பொறுத்தவரை, ஆண்கள் இடுப்பில் ஒரு துண்டுத் துணியைச் சுற்றிக் கட்டி ஒரு முனையை முன்புறம் தொங்கவிடுவது வழக்கம். அவர்கள் கழுத்தில் ஒரு மணிமாலையும் அணிந்து கொள்கிறார்கள். நடனமாடும்போது முண்டாசில் சேவலிறகும் மயிலிறகும் செருகிக் கொள்கிறார்கள். பல பெண்கள் உடம்பெல்லாம் பச்சை குத்தியிருக்கிறார்கள். குறிப்பாகச் சொன்னால், முகத்தில் - சிலர் கால்களிலும் கூட - பச்சை குத்தியுள்ளனர். அவரவரின் தனிப்பட்ட ரசனைக்கேற்ப பச்சை குத்திக்கொள்கின்றனர். முள்ளாலும் ஊசியாலும் பச்சை குத்தப்படுகிறது. பலரும் தலை முடியில் காட்டுச் சேவல் இறகுகளைக் குத்திக் கொள்கின்றனர். மரத்திலும் தகரத்திலும் பித்தளையிலுமான சீப்புகளால் முடியலங்காரம் செய்து கொள்கின்றனர்.

இந்த ஆதிப் பழங்குடியினர் எதை உண்ணவும் தடையில்லை.

புழுபூச்சிகளையும் கூட உண்ணலாம். அவர்கள் உண்ணாத இறைச்சி அநேகமாய் ஒன்றுமில்லை என்பதே உண்மை - இறைச்சிக்குரிய மிருகம் இயற்கையாக செத்திருந்தாலும் சரி, நான்கைந்து நாள் முன்னதாகப் புலி அடித்துச் செத்திருந்தாலும் சரி அதன் மாமிசத்தைத் தாராளமாகச் சாப்பிடுவார்கள்.

இந்த ஆதிப் பழங்குடியினரின் சமயம் என்பது அனைத்து வகைப் பேய்பிசாசுகளையும், தொன்றுதொட்டு வாழ்ந்து மறைந்த மூதாதையரையும் வழிபடுவதாகும். பில்லிசூனியம், மாந்திரிகம், மிருகபலி யாவும் உண்டு. படிப்பு இல்லை, அறிவியல் பற்றியோ, இயற்கை இயங்கும் விதம் பற்றியோ எதுவும் தெரியாது என்ற நிலையில், அறியாமையிலும் மூடநம்பிக்கையிலும் ஊறிக்கிடக்கும் இந்த ஆதிப்பழங்குடிகள், நாகரிகத்தின் எல்லையோரத்திலும் நாகரிகத்தை நெருங்கி ஒட்டியும் காட்டுமிராண்டி நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். காலங்காலமாய் இப்படித்தான் இருந்து வருகிறார்கள். முன்னேறிச் செல்வதற்கு பதிலாக இவ்வளவு காலமும் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு, எதுவும் செய்யாமல் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருசமயம் குற்ற வகுப்புகள் என்கிறவற்றில் தொழில்முறைக் குற்றவாளிகளின் நன்கு ஒழுங்கமைந்த கூட்டிணைவுகளும் அடங்கும். பிந்தாரிகளையும், தக்குகளையும், எடுத்துக்காட்டுகளாகக் குறிப் பிடலாம்.

பிந்தாரிகள் என்போர் ஆயுதமேந்திய கொள்ளைக் கும்பலாக இருந்தனர். கொள்ளையர்களின் வெளிப்படையான படையமைப்பாக இயங்கி, இருபதாயிரத்துக்கு மேற்பட்ட சிறந்த குதிரைகளை வைத்திருந் தனர். அவர்களை வழிநடத்தக் குழுத் தலைவர்கள் இருந்தார்கள். வலிமை மிகுந்த தளபதிகளில் ஒருவராய் விளங்கிய சிட்டுவிடம் மட்டும் காலாட்படை, துப்பாக்கிகளோடு, 10,000 குதிரைகளும் திறமையான 5,000 குதிரை வீரர்களும் இருந்ததைக் குறிப்பிடலாம். உதிரியான முறைசாராப் படையாட்களைக் களத்தில் இறக்குவதற்கென இராணுவத் திட்டங்கள் ஏதும் பிந்தாரிகளிடம் இல்லை. இந்த ஆட்கள் கொள்ளையடிப்பதையே தொழிலாகக் கொண்ட கும்பல்களாக வளர்ந்தார்கள். பிந்தாரிகளுக்கு நாடு பிடிக்கும் நோக்கம் ஏதுமில்லை. பணமும் பொருளும் கொள்ளையடிப்பதே அவர்கள் குறி. பொதுவான கொள்ளையும் சூறையும்தான் அவர்களின் வேலை. ஆட்சியாளர் எவரையும் அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. யார்க்கும் அவர்கள் குடிகளும் அல்ல. எவரிடத்தும் அவர்களுக்கு விசுவாசம் இல்லை.

எவரையும் அவர்கள் மதிப்பதும் இல்லை. கீழோர்- மேலோர், ஏழை-பணக்காரர் எல்லாரிடத்தும் அவர்கள் அச்சமின்றியும் இரக்கமின்றியும் சூறையாடினார்கள்.

தக்குகள்* என்போர் கொலை செய்வதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்கள் 10 முதல் 200 பேர் வரை கும்பலாகச் சேர்ந்து, இந்திய நாடெங்கும் பல்வேறுபட்ட வேடங்களில் பயணம் செய் வார்கள். செல்வந்தர்களான வழிப்போக்கர்களிடம் சாமர்த்தியமாகப் பேசிப் பழகி அவர்களின் நம்பிக்கையைப் பெற்று, சரியான சந்தர்ப்பம் வாய்க்கும்போது கைக்குட்டையாலோ கயிற்றாலோ கழுத்தை நெரித்துக் கொன்று, கொள்ளையடித்துவிட்டுப் பிணத்தைப் புதைத்து விடுவார்கள். கண்டிப்பான சில பழங்காலத்திய சட்டதிட்டங்களின் படியும், தனிச்சிறப்பான சமயச் சடங்குகளுக்குப் பிறகுமே இவையாவும் செய்யப்பட்டன. இந்தச் சடங்குகளில் கொலைக்கோடாரியை வைத்துக் கும்பிட்டதோடு சர்க்கரைப் படையலும் செய்தனர். அவர்கள் இந்துக் களின் அழிவுக் கடவுளாகிய காளியை வழிபடும் தீவிர பக்தர்கள். கொள்ளையடிப்பதற்காகக் கொலை செய்வது அவர்களுக்கு சமயக் கடமை. கௌரவமான புனிதத் தொழிலாக இதை அவர்கள் மதித்தார்கள். தவறு செய்கிறோம் என்ற உணர்ச்சியே உண்மையில் அவர்களுக்கு இருக்கவில்லை. அவர்களின் ஒழுக்கவுணர்ச்சிகள் இதற்கு குறுக்கே வரவில்லை. காளித் தெய்வத்தின் ஆணைப்படியும் அத் தெய்வத்தைப் போற்றும் வகையிலும் அவர்கள் தொழில் புரிந்தார்கள். மிகச் சிக்கலான பற்பல சகுனக் குறிகள் வாயிலாகவும் தெய்வத்தின் சித்தம் அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. சகுனக்குறிகளின் கட்டளையேற்று, அவர்கள் தங்கள் சூழ்ச்சித்திட்டங்களை நிறை வேற்றப் பத்திரமான வாய்ப்பு வந்து சேரும்வரை, பலியாகப் போகிற வருடன் சேர்ந்தோ அவரைப் பின்தொடர்ந்தோ நூற்றுக்கணக்கான மைல்கள் பயணம் செய்வது உண்டு. காரியம் முடிந்தவுடன் அந்தக் காவல் தெய்வத்தைப் போற்றிச் சடங்குகள் செய்யப்பட்டன. கொள்ளை யடித்ததில் ஒரு பெரும்பகுதி அத்தெய்வத்திற்கென ஒதுக்கி வைக்கப் பட்டது. தக்குகள் தமக்கென்று தனியொரு பேச்சுமொழியும் வைத்திருந் தனர். குறிப்பிட்ட சில அடையாளக் குறிகளைப் பயன்படுத்தி, இந்தியா வின் எந்த மூலையிலும் அவர்கள் ஒருவரை ஒருவர் இனங்கண்டு கொண்டார்கள். முதுமையினாலோ உடல்நலிவுகளாலோ முன்போல் செயற்பாடுகளில் முனைந்து பங்கேற்கமுடியாதவர்களும் கூட காவற்காரர்களாகவோ உளவாளிகளாகவோ சமையற்காரர்களாகவோ துணை நின்று செயலாற்றுவது வழக்கமாய் இருந்தது. அவர்கள்

---

★ என்சைக்ளோபேடியா பிரிட்டானிகா, தொகுதி 24, பக். 896.

நூற்றாண்டுக் கணக்கில் தமது தொழிலைச் செய்து வர முடிந்தது என்றால், அதற்குக் காரணம் அவர்கள் செவ்வனே திட்டமிட்டு ஒழுங்கமைப்புடன் இயங்கியதும், அவர்களின் வேலையைச் சூழ்ந்துள்ள இரகசியமும் இடர்க்காப்பும் ஆகும். தாங்கள் செய்யும் கொலைகளை மறைப்பதற்கு அவர்கள் சமயப் போர்வையைப் பயன் படுத்துவதுதான் முதன்மைக் காரணம். வேடிக்கை என்னவென்றால், இந்து ஆட்சி யாளர்களும் சரி, முகமதிய ஆட்சியாளர்களும் சரி, தக்குத் தொழிலை முறைப்படியான தொழிலாக மதித்தார்கள். தக்குகள் அரசுக்கு வரி செலுத்தினார்கள். அரசும் அவர்கள் மீது கைவைக்க வில்லை.

பிரித்தானியர் நம் நாட்டை ஆளத் தொடங்கும்வரை தக்குகளை அடக்க எந்த முயற்சியும் நடைபெற்றதில்லை. 1835க்குள் 382 தக்குகள் தூக்கலிடப்பட்டு விட்டனர். 986 பேருக்கு ஆயுட்கால நாடுகடத்தல் அல்லது சிறைப்படுத்தல் தண்டனை தரப்பட்டது. 1879 இல் கூடப் பதிவு செய்யப்பெற்ற தக்குகளின் தொகை 344. இந்திய அரசில் தக்கு மற்றும் கொள்ளை விவகாரத்துறை 1904 வரை நீடித்திருந்தது. பிறகு அது மத்தியக் குற்ற உளவுத்துறையாக மாற்றப்பட்டது.

இந்த வெளிப்படையான தொழில்முறைக் குற்றவாளிகள் ஒடுக்கப்பட்டுவிட்டார்கள் என்றாலும் அவர்கள் காவு கொள்வதும், அமைதியைக் குலைப்பதும் இப்போது இல்லை என்றாலும், இந்தியாவில் இன்றும் கூடக் குற்றத்தையே தொழிலாகக் கொண்ட வகுப்புகள் உள்ளன. இவர்களையே குற்றமரபினர் என்று இந்திய அரசு பட்டியலிட்டுள்ளது.

குற்ற மரபினர் சமவெளிப் பரப்பில் நாகரிக வாழ்க்கை வாழாவிட்டாலும் அதனுடன் மிகவும் நெருங்கிய வாழ்க்கை வாழுகின்றனர். திட்டமிட்ட முறையில் திருடியும் கொள்ளையடித்தும் பிழைப்பதால் அவர்கள் இந்திய அரசினால் குற்ற மரபினர் என்று விலக்கி வைக்கப்படுகிறார்கள். ''ஐக்கிய மாகாணங்களின் குற்ற மரபினர்'' என்ற நூலில் ஹோலியஸ், அவர்களின் செயற்பாடுகளை எடுத்துரைக்கிறார். அவர்கள் முற்றமுழுக்கக் குற்றங்கள் செய்தே வாழ்கிறார்கள். ஒருசிலர் வேளாண்மையில் ஈடுபட்டிருப்பது போல் தோன்றலாம். ஆனால் அவர்களின் உண்மையான செயற்பாடுகளை மூடிமறைப்பதே இதன் நோக்கம். வன்முறை வழிப்பட்ட திருட்டு அல்லது கொள்ளையில் அவர்களின் கொடுஞ்செயல்கள் மிக அதிகமாய் வெளிப்பட்டன. ஆனால் திட்டமிட்ட குற்றச் செயலுக்கென்றே அமைந்த சமுதாயத்தினர் ஆதலால் எதிலும் அவர்கள் குறி தவறுவதில்லை. குறிப்பிட்ட ஒரு வட்டாரத்தில் கொள்ளையடிப்பது என்று தீர்மானித்தவுடன், யாரைக்

குறிவைப்பது பொருத்தமாய் இருக்கும் என்று தெரிந்தெடுக்கவும், கிராமத்தவர்களின் பொதுவான பழக்கங்களைக் கண்டறியவும், அவர்களின் உதவிக்கு யார் வரக்கூடுமென்பதைக் கணிக்கவும், அவர்களிடமுள்ள துப்பாக்கிகளின் எண்ணிக்கையைக் கணக்கிடவும் உளவாளிகள் அனுப்பப்படுகிறார்கள். கொள்ளை, நள்ளிரவில் நடப்பதே வழக்கம். உளவாளிகள் தரும் தகவல்களின் அடிப்படையில், குறிப்பிட்ட கிராமத்தில் பல்வேறு இடங்களில் ஆட்கள் நிறுத்தப்படுகிறார்கள். இவர்கள் துப்பாக்கியால் வேட்டுக் கிளப்பிக் கவனத்தைத் தங்கள் பக்கம் ஈர்க்கும்போதே முக்கியக் குழுவினர் முன்கூட்டி நிர்ணயித்தவாறு குறிப்பிட்ட வீடு அல்லது வீடுகளைத் தாக்குவர். கொள்ளைக் கூட்டத்தில் வழக்கமாக 30 முதல் 40 ஆட்கள் இடம்பெறுவார்கள்.

இந்த மக்களினங்களின் பொதுவான வாழ்க்கையில் குற்றம் பெரும்பங்கு வகிப்பதை அழுத்தங்கொடுத்துச் சொல்லியாக வேண்டும். இவர்கள் கூட்டத்தில் பிறக்கும் ஒரு சிறுவன் நடக்கவும் பேசவும் முடிகிறது என்றவுடன் அவன் குற்றவாளிக் கூட்டத்தில் சேர்க்கப்பட்டு விடுகிறான். இதன் நோக்கம் பெருமளவுக்கு நடைமுறையை ஒட்டியதாகும். ஏனென்றால், எப்போதுமே சிறு திருட்டில் ஒரு சிறுவனை விட்டுப் பார்ப்பது உசிதம். சிக்கிக்கொண்டால் அனேகமாய் அவனை அறைவார்கள். பெரிய ஆள் என்றாலோ உடனே கைது செய்து விடுவார்கள். பெண்களும் கூட முக்கிய பங்கு வகிக்கிறார்கள். அவர்கள் நேரடியாகக் கொள்ளைத் தாக்குதல்களில் பங்கேற்பதில்லை என்றாலும் பல பெரும் பொறுப்புகளை ஏற்கிறார்கள். திருட்டுச் சொத்தில் பெரும் பகுதியை விற்றுக் காசாக்குவதோடு, கடைகளில் பொருள் வாங்குவது போல் திருடுவதிலும் அவர்கள் வல்லவர்கள்.

குற்றமரபினரைப் போலவே தீண்டப்படாதவர்களும் நாகரிக இந்து சமுதாயத்துக்கு நடுவில்தான் வாழ்கிறார்கள். பண்பாட்டிலும் அறவொழுங்கிலும் அவர்கள் அடைந்துள்ள படித்தரம், ஆதிப் பழங்குடியினரிடமிருந்தும் குற்றமரபினரிடமிருந்தும் அவர்களை அறவே வேறுபடுத்திக்காட்டும். தீண்டப்படாதவர்கள் இந்து சமுதாயத்தின் பண்பாட்டைப் பெற்றுள்ளார்கள். அவர்கள் இந்து சமுதாயத்தின் சமயச் சடங்குகளை அனுசரிக்கிறார்கள். இந்துக்களின் தெய்வநெறிகளையும் அதேபோல் உலகியல் நெறிகளையும் ஏற்றுக்கொள்கிறார்கள். இந்துப் பண்டிகைகளைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் அவர்கள் இதிலிருந்து பெறுகிற நன்மை ஒன்றுமில்லை. மாறாக அவர்கள் விலக்கி வைக்கப்படுகிறார்கள்; வெறுத்து ஒதுக்கப்படுகிறார்கள். ஏனென்றால்

அவர்களைத் தொட்டாலே தீட்டு என்று இந்துக்கள் கருதுகிறார்கள். ஆகவே, தவிர்க்கவியலாத நோக்கங்கள் இருந்தால் தவிர அவர்களுடன் எவ்வித சமூக உறவாடலும் கூடாதென்று தடையுள்ளது. அவர்கள் கிராமத்தின் வெளிப்புறத்தில் வசிக்கிறார்களே தவிர ஊருக்கு நடுவில் அல்ல. ஒவ்வொரு கிராமத்திலும் தீண்டப்படாதவர்களுக்கென்று தனிக்குடியிருப்பு உண்டு. அவர்கள் ஊருடன் இணைந்தவர்களே தவிர, ஊரின் அங்கமாக மாட்டார்கள். அவர்கள் ஏனைய இந்துமக்களிட மிருந்து விலக்கி வைக்கப்பட்டு, அடிமைகள் போன்று சில விதிமுறை களுக்குள் கட்டுண்டு கிடக்கிறார்கள். இந்த விதிகளின்படி, தீண்டப் படாத ஒருவர் வாழ்க்கையில் தனக்கென்று விதிக்கப்பெற்ற இடத்துக்கு மேல் தன்னை உயர்த்தக் கூடிய எதையும் செய்யலாகாது. தன் தகுதிநிலைக்குமேல் உயர்ந்த பாங்கில் உடையுடுத்தக் கூடாது. தீண்டப்படாத பெண் உயர்வகுப்பு இந்துப் பெண்களைப் போல் அணிகலன்களால் தன்னை அலங்கரித்துக் கொள்ளக்கூடாது. தீண்டப் படாதவரின் வீடு இந்துக்களின் வீடுகளைக்காட்டிலும் நல்லதாகவோ பெரியதாகவோ இருக்கக்கூடாது. எந்நிலையிலும் அது ஓட்டுவீடாக இருக்கக்கூடாது. தீண்டப்படாதவர் ஓர் இந்துவின் முன்னிலையில் அமரக்கூடாது; எப்போதுமே தீண்டப்படாதவர்தான் முதலில் வணங்கவேண்டும். தீண்டப்படாதவர் தூய்மையான ஆடைகளை உடுத்தக்கூடாது; பித்தளை அல்லது செப்புப் பானைகள் பயன் படுத்தக்கூடாது; பொன்-வெள்ளி நகைகள் அணியக்கூடாது. இந்துவின் குடும்பத்தில் ஒருவர் இறந்து போனால், எவ்வளவு தொலைவில் இருந்தாலும் உறவினர்களுக்கு இழவுச் செய்தி சொல்வதற்குத் தீண்டப் படாத ஒருவர்தான் மைல்கணக்கில் நடந்தாகவேண்டும். ஏனென்றால் கிராமத்தில் இருக்கும் இந்துவானவர் இத்தகைய செய்திகளை அஞ்சல் வழியில் தெரிவிக்க வேண்டியிருந்தால், உறவினர்கள் பார்வையில் அவமானமுற்றதாக நினைக்கிறார். இந்துக்களின் வீட்டுப்பெண்கள் புக்ககத்திலிருந்து பிறந்தகத்துக்கும் பிறந்தகத்திலிருந்து புக்ககத்துக்கும் பயணம் செய்யும்போது தீண்டப்படாத ஒருவர் உடன் சென்றாக வேண்டும். பரிவாரத்துக்கு இப்படிப்பட்ட ஒருவர் இருந்தால்தான் அவர்களின் கண்ணியத்திற்குச் சரிப்படுமாம். இப்படி ஒருவரை எந்தச் செலவும் இல்லாமல் தீண்டப்படாத வகுப்பிலிருந்துதான் பெற முடியும். இந்துவின் வீட்டில் நடக்கும் ஒவ்வொரு சடங்கிலும் தீண்டப்படாதவர்கள் வந்திருந்து அடிமை வேலை செய்தாகவேண்டும். தீண்டப்படாத ஒருவர் சொந்த நிலம் வைத்துக் கொள்ளவும் சாகுபடி செய்யவும் பிறரைச் சாராது சுயேச்சையாக வாழவும் கூடாது. இந்துக் குடும்பங்கள், விட்டு வைத்துச் சலித்துப்போன உணவு எச்சங்களையும், ஊரில் செத்துப்போகும் கால்நடைகளின் இறைச்சியையுமே அவர்

உண்டுவாழ வேண்டும். அவர் வீடுவீடாகச் சென்று எச்ச உணவைச் சேகரித்துக்கொள்ளவேண்டும். இதற்காக ஒவ்வொரு நாள் மாலையும் அவர் பிச்சையெடுத்துச்செல்லவேண்டும். செத்த மிருகங்களை ஊருக்கு வெளியே சுமந்து செல்வதும் தீண்டப்படாதவரின் வேலைதான். அவர் மட்டுமே அவற்றைத் தூக்கிச் சென்றாக வேண்டும். ஏனெனில் எந்த இந்துவும் தோட்டி வேலை செய்ய ஒப்பமாட்டார். தீண்டப்படாத ஒருவர் சாதி இந்துக்கள் மீது தனக்கு உரிமையும் அதிகாரமும் தரக்கூடிய பணிகளைச் செய்ய முற்படலாகாது. அவர் அடக்கமாய் இருத்தல் வேண்டும். தீண்டாமை விதிகளின்படி தன் கதி எதுவோ அதற்குமேல் கேட்கலாகாது. தீண்டப்படாதவர்களில் சிலர் இந்த வழக்காற்று நடத்தை விதிகளால் விதிக்கப்பெற்ற கீழ்நிலைக்கு மேல் எழுந்திருப்பதும் உயர்ந்த இடம் பெற்றிருப்பதும் உண்மைதான். ஆனால் அவர்களில் பெரும்பாலோர் இன்னமும் சமூகரீதியில் இழிவான அடிமை நிலையிலும், பொருளாதார ரீதியில் கொடிதான வறுமை நிலையிலும் தான் இருந்து வருகின்றனர்.

ஏழு கோடியே தொண்ணூற்றைந்து இலட்சம் மக்களின் நிலைமை இப்படித்தான் உள்ளது. சாகாமல் சாகடிக்கப்பட்டுள்ள இந்த மனிதர்களின் பிரச்சினை என்பது எவ்வகையிலும் சிறு பிரச்சினை அன்று. இந்த மூன்று வகுப்புகளின் மொத்த மக்கள் தொகையானது அமெரிக்க ஐக்கிய நாட்டின் மக்கள் தொகையில் 60% ஆகிறது; ஆனால் பிரித்தானியப் பேரரசில் உள்ள வெள்ளையர்களின் தொகையைக் காட்டிலும் இது 95 இலட்சம் கூடுதலாகும். ஜப்பானின் மக்கள் தொகையை விடவும் கூட 95 இலட்சம் கூடுதலாகும். இத்தாலியின் மக்கள்தொகையைவிட 3 கோடியே 70 இலட்சம் கூடுதலாகும். ஜெர்மனியின் மக்கள்தொகையைவிட ஒரு கோடியே 35 இலட்சமும், பிரான்சின் மக்கள்தொகையைவிட 3 கோடியே 75 இலட்சமும் கூடுதலாகும். பெல்ஜியத்தின் மக்கள்தொகையைப்போல் பத்து மடங்கும், டென்மார்க் மக்கள் தொகையைப் போல் இருபது மடங்கு ஆகும். எவ்வளவு பெரிய மானுடத் திரள் ஒடுக்குண்டு கிடக்கிறது!

## III

இதில் மனவருத்தமளிக்கிற பகுதி-வேதனையளிக்கிற பகுதி என்றே சொல்லலாம் - என்னவென்றால், இந்த அவலப்பட்ட மனிதப் பிறவிகள் உயர்ந்தவொரு நாகரிகத்தால் சூழப்பெற்றும் சோறிடப் பெற்றும் இருந்தபோதிலும் இவர்களின் நிலை இப்படி இருக்கிறதே

என்பதுதான். ஏழுகோடியே 95 இலட்சம் மனிதப் பிறவிகளைத் தூக்கிவிட்டு அவர்களுக்கு மனிதத்தன்மை அளிக்கத் தவறிவிட்டது ஒரு நாகரிகம் என்றால், அதில் ஏதோ அடிப்படையான குளறுபடி இருந்தாகவேண்டும் என்பது நடுநிலை நின்று நோக்குகிற எவருக்கும் உறைத்திடும்.

நாகரிகம் என்பது மனிதனையும் இயற்கையையும் பற்றிய, கலைகளையும் கைத் தொழில்களையும் பற்றிய அறிவு ஆகும். அந்த அறிவின் திரண்ட களஞ்சியம் ஆகும்; மனிதன் தன் சகமனிதர்களின்பால் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று விதிக்கிற நன்னெறித் தொகுப்பு ஆகும்; தனிமனிதர்கள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்கு களையும் மரபுகளையும் வகுத்துரைக்கிற சமூக நெறிச்சட்டம் ஆகும்; ஆளுகிறவர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்குமான உரிமைகளையும் கடமைகளையும் அறிவுறுத்துகிற குடிமையியல் அறநூல் ஆகும்; இயற்கையானதை இயற்கைக்கு அப்பாற்பட்டதுடன் உறவுபடுத்தும் சமயக்கோட்பாடு ஆகும். இவ்வகையில் நாகரிகம் என்பதை ஓர் அருங்கொடை எனலாம். நாகரிகத்தை முழுஅளவில் வளர்த் தெடுக்கும் நற்பேறு எல்லா இனங்களுக்கும் வாய்த்திடவில்லை. பல இனங்கள் தொடக்கத்தில் நின்ற இடத்திலேயே நின்றுள்ளன. பல இனங்கள் இரண்டோர் அடி எடுத்து வைத்து அப்படியே நின்றுவிட்டன. வேறுசில இனங்கள் சுற்றிச் சுற்றியே சுழன்றுள்ளன. ஆஸ்திரேலி யாவையும் பாலினேசியாவையும் சேர்ந்த தொல்லினங்கள் ஒருசில தலைமுறைகள் முன்பு முதலில் கண்டுபிடிக்கப்பட்டபோது, தெளிந்த பேச்சுத் திறனை வளர்த்துக்கொண்டிருப்பதும் தீ உண்டாக்குவது எப்படி என்று அறிந்திருப்பதும் தெரிந்தது. அவர்கள் காட்டுமிராண்டி நிலையின் நடுக்கட்டத்தைத் தாண்டி முன்னேறாமல் இருந்தார்கள். ஹட்சன் விரிகுடாப் பரப்பைச் சேர்ந்த அலிபாஸ்கஸ் எனும் ஆதிப்பழங்குடி யினரும், கொலம்பியா பள்ளத்தாக்கைச் சேர்ந்த சிவப்பு இந்தியர்களும் வில்-அம்புக் கட்டத்தையே தாண்டியிருக்கவில்லை. மண்பாண்டத் தொழில், மிருகங்களைப் பழக்கி வீட்டில் வளர்த்தல், இரும்பை உருக்கிப் பிரித்தல் இவை குறித்து அவர்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. எகிப்து, பாபிலோனியா, அசிரியா ஆகியவற்றின் நாகரிகம், ஏன், ரோமாபுரி, கிரேக்கம் ஆகியவற்றின் நாகரிகமும் கூடச், சுற்றிச் சுழலும் நாகரிகமாகத்தான் இருந்துவிட்டது. அவற்றின் முன்னேற்றமும் சாதனைகளும் மனிதன் அநாகரிக நிலையில் இருந்தபோது விட்டுச் சென்ற வழிமுறைகளுக்கும் விருப்பங்களுக்குமான பொழிப்புரை தானே தவிர வேறல்ல. அவை எதற்கு வாரிசுகளோ அந்த ஒட்டுமொத்த நாகரிகத்துக்கு இது புரட்சிகரமாய் எதையும் சேர்த்திடவில்லை. முன்சென்ற நாகரிகங்கள் செப்பமின்றிச் செய்ததை அவை இன்னும்

நன்றாகச் செய்தன என்பதற்கு மேல் ஒன்றுமில்லை. முன்னேற்றத்தின் கட்டங்கள் விரைவாக அடுத்தடுத்து வந்திடவும் இல்லை. மனிதன் நீண்ட பல காலம் காட்டுமிராண்டியாக இருந்த பிறகுதான் அநாகரிகன் என்றழைக்கப்படும் அளவிற்குப் போதிய முன்னேற்றம் கண்டான் என்பதிலும் ஐயத்திற்கு இடமில்லை. நீண்ட பலகாலம் அநாகரிக நிலையில் இருந்த பிறகுதான் முடிவில் நாகரிகத்தின் மிகத் தாழ்ந்த கட்டத்திற்கே ஏறிச் செல்ல முடிந்தது என்பதிலும் ஐயத்திற்கு இடமில்லை. அடுத்தடுத்து வந்த இந்த 'யுகங்கள்' அளாவிய துல்லிய மான கால அளவினை ஊகமாய்த்தான் சொல்லமுடியும். ஆனால் நூறாயிரம் ஆண்டுகள் என்பது போல் ஆபத்தில்லாத ஒரு குறைந்தபட்ச மதிப்பீட்டை வைத்துக் கொள்வது உசிதம்.

நாகரிகம் என்பது எளிதில் வந்ததன்று. ஒரு தலைமுறைக்கு மட்டுமல்ல, அடுத்த தலைமுறைக்கும் அது உயிரானது. ஒரு தலைமுறையின் நாகரிகம் வாரிசுரிமையாகப் பெறப்படும்போது அடுத்த தலைமுறையின் கருவியாகிறது. இந்தச் சமூக வாரிசுரிமை ஒவ்வொரு தலைமுறைக்கும் இன்றியமையாதது. இந்தச் சமூக வாரிசுரிமை அழிந்துபோனால் முன்னேற்றம் என்பதே ஒழிந்துபோகும். இது குறித்துச் சரியாகவே சொல்லியிருப்பதை எடுத்துக்காட்டலாம்: ''திருவாளர் வெல்ஸ் கண்டுபிடித்த வால் நட்சத்திரங்களில் ஒன்று புவியைத் தாக்க, அதனால் இப்போது உயிரோடிருக்கும் ஒவ்வொரு மனிதப் பிறவியும் முன்சென்ற தலைமுறைகளிலிருந்து ஈட்டிச்சேர்த்த அறிவு, பழக்கங்கள் அனைத்தையும் இழப்பதாய் வைத்துக்கொண்டால் (இருந்தபோதிலும் தனது கண்டுபிடிப்பு மற்றும் நினைவு ஆற்றல் களையும் வாழ்விடத்தையும் மாற்றாமல் தக்கவைத்துக்கொள்வதாகக் கொண்டால்) புவிவாசிகளில் பத்தில் ஒன்பது பங்கினர் ஒரு மாதத்தில் இறந்துவிடுவர். எஞ்சியுள்ள பத்தில் ஒரு பங்கில், 99 சதவீதத்தினர் ஆறு மாதத்தில் இறந்து விடுவர். எஞ்சியவர்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்த எந்த மொழியும் இருக்காது. தெளிவற்ற மயக்கநிலையே மிஞ்சியிருக்கும். அவர்கள் அறிக்கைகள் படிக்கவோ மோட்டார் கார் ஓட்டவோ குதிரை ஏறவோ மாட்டார்கள். அவர்கள் அலைந்து திரிவார்கள். இயற்கையில் அதிக ஆற்றலுள்ள தனியாட்களின் தெளிவற்ற கூச்சல்கள் அவர்களை வழிநடத்தும். தாகமெடுக்கையில் நூற்றுக்கணக்கில் ஆற்றில் இறங்கி மூழ்கிச் சாவார்கள். உணவு விளைவிப்பதற்கோ மிருகங்களைப் பழக்குவதற்கோ வழிமுறைகளை மனிதர்கள் உரிய காலத்தில் கண்டுபிடித்து, உயிரைக் காத்துக் கொள்ள முடியாமற்போகலாம். வாழ்க்கையை மீண்டும் ஆதிநிலையிலிருந்து தொடங்க வேண்டியிருக்கும். சமூக வாரிசுரிமையை இழந்துவிட்ட ஒரு தலைமுறையானது ஆதிகாலக்குலங்களைப் போல் தொடக்கத்தில்

காட்டுப் பழங்களையும் புழுக்களையும் உண்டு வாழ வேண்டியிருக்கும். அவர்கள் ஒரு புதிய சமூக வாரிசுரிமையைத் திரட்டி முடிக்கும் வரை இந்நிலை நீடிக்கும். சில ஆயிரம் தலைமுறைகளுக்குப் பிறகுதான், அனேகமாய் மொழியென்று இனங்காணக் கூடிய ஏதோ ஒன்றை அவர்கள் பெற்றிருக்கக்கூடும். மிருகங்களைப் பழக்குவதும் நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்வதுமான கலையையும் கொஞ்சம் கற்றிருக்கக்கூடும். சமயம் என்று நாம் சொல்லக்கூடியதையும், நம் எளிய இயந்திரக் கண்டுபிடிப்புகளிலும் அரசியல் வழிவகைகளிலும் ஒரு சிலவற்றையும் அவர்கள் படைத்திருக்கலாம், அல்லது படைக்காமலும் இருக்கலாம். சட்டம், சுதந்திரம், நீதி போன்ற பொதுக் கருத்துக்கள் அவர்களுக்கு இருக்கலாம் அல்லது இல்லாமற் போகலாம். சமூக வாரிசுரிமையால் விளையும் இவ்வேறுபாடு மிகப் பெரியது என்பதில் ஐயமில்லை.

நாகரிகம் என்பது அனைவருக்கும் வாய்த்திருக்கும் சிறப்புரிமை அன்று. நாகரிகம் எனும் நற்பேறு பெற்றவர்களுக்கும் கூட அது மெல்ல மெல்லவே வளரக்கூடியது; ஆனால் நாகரிகத்தின் வயப்பட்டவர்களுக்கு அவர்களின் நாகரிகம் துணையாவதற்குப் பதில் தடையாகவும் கூடும் என்பது மெய்தான். அது தப்பான தடத்தில் சென்றிருக்கக் கூடும். தவறான விழுமங்கள், தவறான அடிக்கோள்களை அது அடிப்படையாகக் கொண்டிருக்கக்கூடும். இத்தகையதொரு நாகரிகமானது சமுதாயம் தேக்கமுறுவதற்கும் எளிதில் வழிசெய்யக் கூடும். இப்படி ஒரு நாகரிகத்தால் சுமையேற்றப்பட்டுத் தளையிடப்படுவதற்கு பதில் நாகரிகம் இல்லாமல் இருப்பதே மேல்.

இந்து அல்லது வேத நாகரிகம்தான் உலகிலேயே தொன்மையானது என்று நாட்டுப்பற்றுமிக்க ஒவ்வோர் இந்துவும் பெருமை பேசுகிறார். ஏனையவர்கள் எல்லாம் ஆதிகால வாழ்க்கை வாழ்ந்து கொண்டும் ஆடையின்றி நடமாடிக் கொண்டும் இருந்த போதே இந்தியா நாகரிகத்தில் மிக உயர்ந்த படித்தரத்தை அடைந்துவிட்டது என்று இந்துக்கள் ஓரளவு வன்மப் பெருமிதம் கலந்து சொல்லிக் கொள்வதையும் ஆவேசமாய்த் திரும்பத் திரும்பப் பேசிக் கொண்டிருப்பதையும் கேட்கிறோம். எகிப்து, பாபிலோன், யூதேயா, ரோம், கிரேக்கம் போன்ற மற்றெல்லாப் புராதன நாகரிகங்களும் மறைந்துவிட்ட போதும் இந்து நாகரிகம் அழியாது நிலைத்திருப்பதால், அது உள்ளார்ந்த வலிமை உடையது என்றும் அவர் சொல்லக் கேட்கிறோம். இப்படி ஒரு பார்வை எவ்வளவுதான் முறையானதென்றாலும் முக்கியமானதைத் தவற விடுகிறது. நாகரிகம் பழமையானதா என்பதும், அது அழியாது நிலைத்துள்ளதா என்பதும் அல்ல முக்கியம்* ஒரு நாகரிகத்தின் தகுதி

* பார்க்கவும்: நான் எழுதிய 'சாதி ஒழிப்பு'

கள் என்ன? அதன் பெறுமானம் என்ன? அது அழியாது நிலைத்துள்ளது என்றால் எந்தத் தளத்தில் நிலைத்துள்ளது? என்பதுதான் முக்கியம். அதாவது முதன்மையான கேள்வி இதுதான்: சமூக வாரிசுரிமையாக வந்துள்ள இந்த இந்து நாகரிகம் சுமையா, நன்மையா? வகுப்புகளுக்கும் தனிமனிதர்களுக்கும் வளர்ச்சி என்ற வகையிலும் விரிவாக்கம் என்ற வகையிலும் அது வழங்குவது என்ன?

மனிதனையும் இயற்கையையும் பற்றிய அறிவுக்கு இந்து நாகரிகத்தின் பங்களிப்பு என்ன? மனிதனையும் இயற்கையையும் பற்றிய அறிவு இந்துக்களிடமிருந்தே தொடங்கியதாக நாட்டுப் பற்றுமிக்க இந்துக்கள் பலரும் நம்புகிறார்கள். அப்படியே தொடங்கிய தாக ஏற்றுக்கொண்டாலும், அது மிகவும் தொடக்க நிலையிலேயே நின்றது, அதற்கு மேல் முன்னேறவில்லை என்பது உறுதி. இந்து மொழிநூல் வளர்ச்சி பாணினியும் காத்தியாயனரும் விட்ட இடத்திலேயே தங்கியுள்ளது என்பதில் இந்து எவருக்கும் சந்தேகம் இருக்கமுடியுமா? சரியோ தவறோ மெய்யியல் வளர்ச்சி கபிலரும் கௌதமரும் விட்ட இடத்திலேயே தங்கியுள்ளது என்பதை அவரால் மறுக்கமுடியுமா? இலக்கியமானது வியாசரும் வால்மீகியும் விட்ட இடத்திலேயே தங்கியுள்ளது என்பதில் அவருக்குச் சந்தேகம் இருக்க முடியுமா? சூக்குமவாதத்தில் இந்துக்கள் செந்நிறைவு நிலையை அடைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்து சூக்குமவாதம் குறித்து பேராசிரியர் ஹர்தயாள் இப்படிச் சொல்கிறார்:★

> ''சூக்குமவாதம் என்பது இந்தியாவின் சாபக்கேடாகவே இருந்துள்ளது. அதன் வரலாற்றை ஊறுபடுத்தி, அதன் அழிவுக்கு வழி வகுத்துள்ளது. அதன் மகத்தான மனிதர்களைக் கேவலமான வாய்வீச்சுக்காரர்களாக மாற்றி, ஆராய்ச்சியிலும் முயற்சியிலும் பயனற்ற வழிகளில் ஏவியுள்ளது. பற்பல நூற்றாண்டுகளாய் இந்திய அறிவுத்திறம் தேடியலையும் கொள்ளிவாய்ப் பிசாசாக இருந்துள்ளது. குதர்க்கத்தை ஒரு கலையின் நிலைக்கு உயர்த்தி அறிவின் இடத்தை வீண் கற்பனைகளுக்கு அளித்துள்ளது. இந்தியர்களின் அறிவுநுட்பம் பலநூற்றாண்டுகளுக்கு அதே பழைய தடத்தில் செல்லும்படித் தள்ளி விட்டுள்ளது. இந்திய நாட்டின் ஞானிகளைக் குருடாக்கி மாயாவிகளை மெய்ந் நடப்பிகள் என்று தவறாகக் கருதிக் கொள்ளும்படி செய்துள் ளது..... அகந்தையும் பாசாங்கும் சொல்லடுக்கும் பார்வைக் குறைவும் சேர்ந்த இந்தச்சூக்குமவாதம் தன் கொக்கரிப்பை அருள் வாக்கென்றும் தன் அதிவினோத சொற்கோபுரங்களைச்

★ மாடர்ன் ரெவ்யூ, 1912 ஜூலை.

சிந்தனைக் கட்டுமானத்தின் உறுதிவாய்ந்த அடுக்குகள் என்றும் எண்ணிக் கொண்டுள்ளது...''.

'' ....'எதைத் தெரிந்து கொண்டால் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளலாமோ அதை' எடுத்துரைப்பதாக உபநிடதங்கள் கூறிக் கொள்கின்றன. 'முழுமுதலானதை' அடைவதற்கான இந்த மத்திய கால வேட்கைதான் இந்தியாவின் உயர்ந்த சூக்குமவாதம் அனைத்துக்கும் அடிப்படையாகும். உபநிடதக் கருத்துரைகளில் அபத்தமான தற்பெருமைகளும் முரண்பட்ட கற்பனைகளும் குழப்பமான ஊகங்களும் நிறைந்துள்ளன. அவை பயனற்றவை என்பதை நாம் இன்னும் கற்றுக்கொள்ளவில்லை. ''சமாதி'' அல்லது செய்மறதிநிலை என்பது ஆன்ம முன்னேற்றத்தின் கொடுமுடியாக மதிக்கப்படுகிறது! மயக்கமடையும் திறனே மதிநுட்பத்தின் அடையாளமாகக் கருதப்படுவது எவ்வளவு பெரிய வேடிக்கை! ஆவேச உணர்ச்சிகளும் வலுவற்ற அறிவுத் திறமும் இருந்தால் உணர்விழப்பது மிகவும் எளிது. அதனால்தான் மிகச் சிறு தூண்டலுக்கே பெண்கள் இவ்வளவு அடிக்கடி மயக்கமடைகிறார்கள். ஆனால் இந்தியாவில் சமாதி என்பது யோகத்தின் எட்டாம் நிலை. **'பரமகான்களால்'** மட்டுமே அந்நிலையை அடைய முடியும். ஓ, இஸ்ராவேல், இவை உன் கடவுளர்களாகட்டும்! இயல்புக்கு மாறான ஓர் உளவியல் நிலைமையைச் செயற்கை வழிகளில் தோற்றுவித்து அந் நிலைமையை அறிவொளியின் அடையாளமாகக் கருதுவது இந்திய மெய்யியலார்க்கே உரித்தான முட்டாள்தனமாய் இருந்தது.''

அறிவியல், கலைகள், கைத்தொழில்கள் என்ற களத்தில் இந்து நாகரிகத்தின் பங்களிப்பு மிகவும் கற்றுக்குட்டித்தனமானது. நெசவு, நூற்பு போன்ற சில துறைகளை விலக்கிப் பார்த்தால், மனிதன் மிருக வாழ்வுக்கு மேம்பட்டதென்று சொல்லும்படியான குறைந்தபட்ச வாழ்வை அமைத்துக்கொள்ள இயற்கைக்கு எதிராக நடத்தும் போராட்டத்தில் அவனுக்குத் துணை செய்யக்கூடிய தொழில்நுட்ப சாதனம் எதையும் இந்து நாகரிகம் வகுத்திடவில்லை. அறிவியல், தொழில் நுட்ப சாதனங்களே இல்லாத நிலையும், கொட்டிக் குவிக்கப்படுகிற பிரம்மஞானக் குப்பையும் சேர்ந்து கொண்டதால்தான் காலந்தோறும் பஞ்சங்கள் இந்நாட்டைப் பாழாக்கிச் செல்கின்றன. உள்ளத்தைப் பீடிக்கும் அறியாமை, மூட நம்பிக்கை நோய்களும் உடலைப் பீடிக்கும் மலேரியா, பிளேக் நோய்களும் காலங்காலமாய் நாட்டின் மீது சவப்போர்வையாய்க் கவிந்துள்ளன.

சமயமும் நன்னெறிகளுமான களத்தில்தான் இந்துக்கள்

ஆகப்பெரும் முயற்சிகள் செய்துள்ளார்கள். அவர்களின் பங்களிப்பு களில் இவையே மிக விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவை மனிதனுக்கு உயிர்நாடியானவை என்பதில் ஐயமில்லை. இவை மனிதனுள் சிந்தனையும் செயலும் ஊற்றெடுக்கும் துணை செய்கிறவை என்ற ஒரு காரணமே போதும். இவை, வாழ்க்கை குறித்து மனிதன் கொண்டுள்ள கண்ணோட்டத்துக்குக் காரணமாகின்றன. ஒருவர் தன் சக மனிதனின் பால் மேற்கொள்ளும் போக்கிற்குக் காரண மாகின்றன. நடத்தையை நிர்ணயித்து, ஒழுக்கத்தை உருவமைத்து மனசாட்சி எனப்படும் அந்த மருமப் பொருளை மனிதனுள் ஊன்று கின்ற கோட்பாடுகளை வரையறுக்கின்றன. மனசாட்சிதான் அரணாய் நின்று மனிதனைக் காத்துத் தப்பு செய்யவிடாமல் தடுக்கிறது.

இந்த இந்து நாகரிகத்தை அதன் சமய உள்ளீடு தொடர்பாகவும், அது அறிவுறுத்தும் வாழ்க்கைமுறை தொடர்பாகவும் ஆராய்ந்து பார்க்க முற்படும்போதுதான், இந்நாகரிகத்தை வாரிசுரிமையாக அடைய விதிக்கப்பெற்ற தலைமுறைகளுக்கு அதனால் சற்றேனும் நன்மை உண்டா என்ற சந்தேகம் வருகிறது. இந்த நாகரிகம் அதன் எல்லைகளில் வாழ்ந்து வரும் இரண்டரைக் கோடி ஆதிப் பழங்குடி யினருக்குக் கொடுப்பது என்ன? அதற்கு நடுவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஐம்பது இலட்சம் குற்ற மரபினருக்குக் கொடுப்பது என்ன? அந்த நாகரிகத்துக்கு நடுவில் வாழ்ந்து கொண்டிருப்பதோடு அதனைத் தாங்கிப் பிடிக்க வேண்டுமென்றும் கோரப்படும் 5 கோடி தீண்டப்படாதவர்களுக்குக் கொடுப்பது என்ன? தங்களை ஏற்று அரவணைத்துக் கொள்ள முயற்சியே செய்யாத ஒரு நாகரிகம் குறித்து ஆதிப்பழங்குடியினர் என்ன கூறுவர்? பிழைப்புக்காகக் குற்ற வழி களில் செல்வதற்குத் தங்களைத் துரத்திய ஒரு நாகரிகம் குறித்துக் குற்ற மரபினர் என்ன கூறுவர்? இது நாகரிகமல்ல, கொடும்பழி என்று அவர்கள் கூறினால் அநியாயம் ஆகுமா?

தீண்டப்படாதவர்களைப் பொறுத்தவரை, கடந்த காலத்தில் இழிவும் இல்லாமையுமே அவர்களுக்கு விதியாயிற்று. இந்து நாகரிகத் தில் அவர்கள் தப்புவதற்கு வருங்காலத்திலும் வழி ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தத் தீண்டாமை அமைப்பில் எந்த அளவுக்கு இழிவும் இல்லாமையும் கோலோச்சுகின்றன என்பதை இந்தியர்களே கூட உணர்ந்ததாகத் தெரியவில்லை. தாழ்த்தப்பட்ட வகுப்புகள், தொல்குடிகளின் குறைகளை விசாரித்தறிய 1928இல் பம்பாய் அரசு நியமித்த குழுவின் கருத்துகள் ஈண்டு பொருத்தமானவை. அது கூறியது:

> ''தூய்மையற்ற மனிதனோ பொருளோ அருவருப்பு உண் டாக்குவது என்ற கருத்தில் விசித்திரம் ஒன்றுமில்லை. இந்த

அருவருப்புதான் தீட்டு என்ற கருத்துக்கு அடிப்படையாகிறது. ஆனால் தீண்டப்படாதவர்களைப் பொறுத்த வரை இந்தக் கருத்து அறிவுக்கொவ்வாத முறையில் பொருத்திப்பார்க்கப்படுவதுதான் வருத்தத்துக்குரியது. ஒரு தனி மனிதனுக்கு அவரது பிறப்பு என்னும் தற்செயல் நிகழ்வினாலேயே தீண்டத்தகாதவர் என்று முத்திரையிடப்படுகிறது. தீண்டத்தகாதவராகப் பிறக்கிற ஒருவர் தீண்டத்தக்கவர் எனப்படுகிறவரைக் காட்டிலும் சொந்தத் தூய்மையில் எவ்வளவுதான் உயர்ந்திருந்தாலும் தீண்டப்படாத வராகவே இருந்து வருகிறார். தன் விதியிலிருந்து தப்ப அவருக்கு வழியேதும் திறந்திருக்கவில்லை. இதில் வியப்புக்குரியது என்னவென்றால் ஒரு வைதிக இந்து தன் சமயக் கருத்துகளிலும் வாழ்க்கை முறையிலும் வாழ்க்கைக் கண்ணோட்டத்திலும் முகமதியர்கள், பார்சிகள், கிறித்தவர்களோடு எவ்வளவுதான் மாறுபட்டபோதிலும் அவர்களைத் தீண்டத்தக்கவர்களாகவே நடத்துகிறார். தீண்டப்படாதவர்களின் நிலை இதனால் மேலும் மோசமாகியுள்ளது. வைதிக இந்துக்கள் இவ்விதம் அநியாய மாய்ப் பாகுபாடு காட்டுவதோடுகூட, சில இடங்களில், முக்கிய மாய்க் கிராமங்களில் முகமதியர்களும் பார்சிகளும் கிறித்துவர் களும் கூட வைதிக இந்துக்களின் தாக்கத்தினால் தீண்டப் படாத மக்களின்பால் தீண்டாமையைக் கடைப்பிடிக்கிறார்கள். இவ்வளவுக்கும் அவர்களது சமய போதனை தீண்டாமைக்கு எதிராகவே உள்ளது. தனிமைப்படுத்துவதும் தாழ்வு மனப் பான்மையும் தீண்டாமையில் அடங்கும் என்ற அளவில் அதனால் விளையக்கூடிய தீமைகளைத்தான் மிகுந்த கவலை யோடு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஆனால் திட்டவட்ட மாகத் தீண்டாமையையே காரணமாய்க் கொண்ட தீமைகளும் உள்ளன. தீண்டாமையை அதன் தர்க்க எல்லைக்கே நீட்டுவதாய் இருந்தால், வைதிக இந்து சமுதாயத்தில் அரசு செலவில் நடத்தப்படும் பொதுப்பள்ளியில் கூடத் தீண்டப்படாதவர்கள் சேரவிடாமல் அது தடுத்துவிடும். பொதுநிதியால் பராமரிக்கப் படும் பொது நீர்நிலைகளிலிருந்து அவர்கள் அரசுப்பணிகளில் சேருவதற்குத் தகுதி பெற்றிருந்தாலும் அவர்களுக்கென்று வழக்கமாய் ஒதுக்கப்பட்டவை தவிர ஏனைய பணிகளில் சேரவிடாமல் தடுத்துவிடும். பொது நிதியால் பராமரிக்கப்படும் பொது நீர்நிலையிலிருந்து அவர்கள் நீர் எடுக்க விடாமலும் தடுத்துவிடும். இந்தக் கோணத்தில் நோக்குமிடத்து தீண்டாமை என்பது வெறும் சமூகச் சிக்கல் மட்டுமன்று. இது உயர்ந்தபட்ச அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சிக்கலாகும்; அரசுக்குக் குடிகளாய் இருப்பவர்களின் குடிமை உரிமைகள் என்னும் அடிப்படைப் பிரச்சினைக்குத் தொடர்புடையதாகும்.''

தீண்டப்படாதவர்களின் இன்னல்களை மட்டுமே இது எடுத்துரைக்கிறது. இந்த இழிந்த வாழ்வுக்கு உள்ளாக்கப்படுகிறவர்கள் தீண்டப்படாதவர்கள் மட்டுமல்ல. அவர்களை விடவும் மோசமான நிலையில் இருக்கும் வகுப்புகள் உண்டு. தீண்டப்படாதவர்களைத் தொட்டாலோ அவர்களின் உடல் பட்டாலோதான் தீட்டு. வேறுசிலர் நெருங்கி வந்துவிட்டாலே தீட்டு. இவர்கள் அணுகத்தகாதவர்கள் என்று அறியப்படுகிறார்கள். இந்த அணுகத்தகாதவர்களை விடவும் மோசமான நிலையில் இருப்பவர்களும் உண்டு. பார்வையில் பட்டாலே தீட்டு. இவர்கள் காணத்தகாதவர்கள் என்று அறியப் படுகிறார்கள். அணுகத் தகாதவர்கள் என்ற வகையைச் சேர்ந்த மக்களாகிய நாயாதிகள்* குறித்துச் சொல்லப்படுவது என்னவென்றால், ''இந்துக்களிலேயே இவர்கள் நாய் உண்பவர்கள்; விடாப்பிடியாக தருமம் கேட்பவர்கள்; நடந்தோ வண்டியிலோ படகிலோ செல்கிற எவரையும் மரியாதையுடன் இடைவெளிவிட்டு மைல்கணக்கில் பின்தொடர்வார்கள். அவர்களில் ஒருவருக்கு நீங்கள் ஏதேனும் தருவதாய் இருந்தால் அதைக் கீழே வைத்துவிட்டுத் தொலைவாகப் போய்விட வேண்டும்; பிறகு அவர் கூனிக்குறுகி முன்னால் வந்து அதை எடுத்துக்கொள்வார்.'' இதே மக்கள் குறித்து திரு. தர்ஸ்டன் கூறுவ தாவது: ''ஷோரனூரில் என் விசாரணைக்கும் ஆய்வுக்கும் உட்பட்ட வர்கள் (நாயாதிகள்) மூன்றே மூன்று மைல் தள்ளி வசித்த போதிலும் ஆற்றின் மீதமைந்த நீண்ட பாலத்தில் நடப்பதைத் தவிர்ப்பதற்காக சுற்றுவழியில் பலமைல் தூரம் நடந்து செல்வார்கள். பரம்பரையாக அவர்கள் மேல் தீட்டு ஒட்டியிருப்பதுதான் காரணம்''.

சென்னை மாகாணம் திருநெல்வேலி மாவட்டத்தில் புதிரை வண்ணார் எனும் காணத்தகாதவர்களின் வகுப்பு ஒன்றுள்ளது. அவர்களைப் பற்றிச்சொல்லப்படுவது என்னவென்றால்,''அவர்களைப் பார்த்தாலே தீட்டு தொற்றிக்கொள்ளும் என்பதால், அவர்கள் பகற் பொழுதில் வெளியே வரலாகாது. பாவப்பட்ட இம்மக்கள் இராக்காலப் பழக்கங்களைக் கைக்கொள்வது தவிர 'வேறு வழியில்லை'. வளைக் கரடியைப் போலவும் கழுதைப் புலியைப் போலவும், ஆந்தையைப் போலவும் இருள் கவிழ்ந்தபின் பொந்திலிருந்து புறப்பட்டு வெள்ளி முளைக்கையில் ஓடோடி வீடு திரும்புவார்கள்.

அணுகத்தகாதவர்களும் காணத்தகாதவர்களும் என்னென்ன இன்னல்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்க வேண்டும்? அவர்கள் எப்படி வாழ்நாளைக் கடத்திக் கொண்டிருக்கவேண்டும்? அவர்கள் காணப்

★ மலபார் மேனுவல்

படுவதோ அருகில் வருவதோ கூட சகித்துக் கொள்ளப்படவில்லை யானால் அவர்களுக்கு என்னதான் வேலை கிடைக்கும்? பிச்சை கேட்பதையும் நாய்க்கறி உண்டு வாழ்வதையும் விட்டால் அவர்கள் வேறென்ன செய்யமுடியும்? இதனினும் கொடிய குற்றத்தை வேறெந்த நாகரிகமும் செய்யமுடியாது என்பது உறுதி! யார் காட்டிய கருணையோ, அணுகத்தகாதவர்கள், காணத்தகாதவர்களின் மக்கள்தொகை குறைவு தான். ஆனால் 5 கோடி தீண்டப்படாதவர்கள் நாகரிகம் எதற்கும் உரிமை படைத்துள்ளார்களா?

தீண்டப்படாத எவரும் தன் விதியிலிருந்து தப்ப முடியாது. தீண்டத்தக்கவர் என்று ஏமாற்றமுடியாது. அவர் வசிக்கிற கிராமத்தில் அவரை அனைவருக்கும் தெரியும். அங்குள்ளவரை ஆள்மாறாட்டத் துக்கு வாய்ப்பே இல்லை. அவர் கிராமத்தை விட்டு வெளியேறி நகரத்துக்கு வரும்போது தீண்டத்தக்கவர் என்று ஏமாற்றுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. ஆயின் உண்மை வெளியானால் தன் கதி என்னவாகும் என்று அவருக்குத் தெரியும்.

ஆள்மாறாட்டம் செய்யும் முயற்சியில் எவ்வளவு ஆபத்து உள்ளது என்பதை ஏடுகளில் செய்தியாக வந்த பின்வரும் நிகழ்ச்சி ஓரளவுக்கு அறியத்தரும்:

*** வைதிகத்தின் வெறித் தாண்டவம்**
**''தீண்டப்படாதவர்கள்'' மேல் காட்டுமிராண்டித்தனம்:**
**மகர்களாய் இருப்பதென்னும் குற்றம்**

ஆமதாபாத்தைச் சேர்ந்த திரு.கேசவ்ஜி ராஞ்சோத்ஜி வகேலா என்பவரான பகிஷ்கிரித் ஹித்கரணி சபாவின் தலைவரான டாக்டர் பி.ஆர்.அம்பேத்கருக்குத் தெரிவித்திருப்பதாவது:

பாபுராவ் லட்சுமண் என்பவரும் அவருடைய சகோதரர் கௌராவும் கடந்த ஆறு ஆண்டுகளாக ஆமதாபாத்தில் வசித்து வருகிறார்கள். தக்காணத்திலிருந்து வந்த மராத்தா சாதிக்காரர்கள் சிலரோடு அவர்கள் கலந்து பழகி வந்தார்கள். கௌராவின் இரு புதல்வர்களான தாமூவும் லட்சுமணும் மராத்தியர்களின் பஜனைக் கச்சேரிகளில் கலந்து கொள்வது வழக்கம். ஆனால் தாமூ, லட்சுமண் ஆகிய இரு சகோதரர்களும் மகர் சாதியைச் சேர்ந்த வர்கள் என்பது மராத்தியர்களுக்கு அண்மையில் தெரியவந்தது.

---

★ பாம்பே கிரோனிக்கிள், 1938 பிப்ரவரி25.

இதை உறுதி செய்து கொள்ளும் பொருட்டும் சூரத்துக்கும் ஆமதாபாத்துக்கும் இடையில் ஓடுகிற சரக்குத் தொடர்வண்டியில் வேலை செய்யும் மகர்கள் இருவர் தாமூவையும் லட்சுமணனை யும் அடையாளங் காட்டுவதற்கென்றே அழைக்கப்பட்டனர். தாமூவும் லட்சுமணனும் மகர்கள்தாம் என்று உறுதியாகத் தெரிந்த பின், அதே திங்கள் 11ஆம் நாள் நள்ளிரவில் பந்தாரிபோலைச் சேர்ந்த காலூப்பூரில் நடைபெற்ற பஜனைக் கச்சேரிக்கு அழைக்கப்பட்டார்கள். நீங்கள் என்ன சாதி என்று கேட்டதற்கு, தாமூவும் லட்சுமணனும் தாங்கள் சோமவன்ஷிக்கள் என்று விடையிறுத்தார்கள். இதனால் மராத்தியர்கள் ஆத்திரமுற்றுத், தங்களையும் தங்கள் இடங்களையும் தீட்டு பண்ணியதற்காக அவ்விரு சகோதரர்களையும் கண்டபடி திட்டினார்கள், அடித்து நொறுக்கினார்கள். சகோதரர்களில் ஒருவர் தங்க மோதிரம் அணிந்திருந்தார். அது அவரிடமிருந்து பறிக்கப்பட்டு 11 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இதில் 6 ரூபாய் சகோதரர்களை அடையாளங் காட்டுவதற்காக சூரத்திலிருந்து வரவழைக்கப்பட்ட மகருக்குத் தரப்பட்டது. தாமூவும் லட்சுமணனும் கெஞ்சி மன்றாடினார்கள். தங்களை வீடு திரும்ப விடும்படி மராத்தியர்களிடம் வேண்டி னார்கள். 500 ரூபாய் தண்டம் தராவிட்டால் விடமாட்டோம் என்று மராத்தியர்கள் சொல்லிவிட்டார்கள். இவ்வளவு பெருந் தொகை கொடுக்க இயலாது என்று மகர் சகோதரர்கள் கெஞ்ச, அவர்களுக்கு 125 ரூபாய் மட்டும் தண்டம் விதிக்கலாம் என்று மராத்தியர்களில் ஒருவர் யோசனை கூறினார். ஆனால் மற்றொரு மராத்தியர் தண்டம் விதிக்கும் யோசனைக்கே எதிர்ப்பு தெரிவித் தார். தண்டம் போதுமென்று நாம் மனநிறைவு கொள்ளக்கூடாது, மகர்கள் தங்கள் சாதியை மறைத்த குற்றத்துக்கு கடும் தண்டனை தரப்படவேண்டும் என்றார். செய்யவேண்டியது என்ன என்று முடிவெடுத்தபின், மகர் சகோதரர்கள் காவலில் அடைத்து வைக்கப்பட்டார்கள். காலை சுமார் 9 மணிக்கு அவர்கள் அநாகரி கமான இழிவுகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இடது பக்க மீசையும் வலது பக்கப் புருவமும் மழிக்கப்பட்டன. உடலெங்கும் எண்ணெயில் புகைக் கரியும் புழுதியும் கலந்து பூசப்பட்டது. கழுத்தைச் சுற்றி செருப்பு மாலை போடப்பட்டது. ஒருவர் கையில் துடைப்பக் கட்டையும், மற்றவர் கையில் அட்டையும் ஏந்தி நிற்குமாறு செய்யப்பட்டது. உயர்சாதியினரைத் தொடத் துணிந்த குற்றத்துக்கான தண்டனை என்று அந்த அட்டையில் எழுதப்பட்டிருந்தது. மகர் சகோதரர்கள் அப்படியே ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஊர்வலத்தில் சுமார் 75பேர் கலந்துகொண்டனர். ஊர்வலத்துக்கு முன்னால் பறை ஒலித்துச் சென்றனர்.

மகர் சகோதரர்கள் இருவரும் காவல்துறையிடம் முறையீடு செய்துள்ளனர். தாமூவும் லட்சுமணும் முறையீட்டில் கண்டவாறு நடத்தப்பட்டதைக் குற்றஞ்சாட்டப்பட்ட எதிரிகள்தங்கள் வாக்குமூலத்தில் ஒப்புக் கொண்டார்கள். ஆனால் முறையீட்டாளர்கள் இருவரும் விரும்பியே தண்டனைக்கு உட்பட ஒத்துக்கொண்டதாக வாதிட்டார்கள். தாமூவும் லட்சுமணும் திட்டு வாங்கியபோதும், தாக்குண்ட போதும், கடும் தண்டனையைச் சொல்லி மிரட்டப்பட்ட போதும், உள்ளபடியே அநாகரிகமான இழிவுகளுக்கு ஆளாக்கப்பட்ட போதும் நிர்க்கதியாய் நின்றார்கள் என்பது கண்கூடாகத் தெரிகிறது. தீண்டப்படாத சாதிகள் எனப்படுகிறவற்றைச் சேர்ந்த மக்களிடையே இவ்வழக்கு பெரும் பரபரப்பை உண்டுபண்ணியுள்ளது. முறையீட்டாளர்களுக்கு சரியான சட்ட உதவி நல்குவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் இந்து நாகரிகத்தின் விதிகள் தீண்டாமையை பொறுத்தவரை மிகவும் உன்னிப்பாக உள்ளன. தீண்டப்படாத ஒருவர் தீண்டத்தக்கவராகக் காட்டிக்கொள்ளக்கூடும் என்பதற்கு அவ்விதிகளில் இடமே இல்லை. குறிப்பிட்ட சில பகுதிகளில் இருக்கும் விதிகளின்படி, தீண்டப்படாதவர்கள் எளிதில் அடையாளங் காணப்படும் விதத்தில் கறுப்பு நூல் அணிந்தாக வேண்டும்; தீண்டப்படாத ஒருவரைத் தீண்டத்தக்கவர் தெரியாத்தனமாகத் தொட்டு அதனால் தீட்டாவதைத் தடுக்கும் பொருட்டு, தான் தீண்டப்படாதவன் என்பதை வாய்மொழியாய் அறிவித்தாக வேண்டும். இந்துப் பெருங்கடவுளாகிய கிருஷ்ணர் கோயில் கொண்டிருக்கும் புகழுக்குரிய துவாரகை நகரத்தில் (பம்பாய் மாகாணம்), தீண்டப்படாத ஒவ்வொருவரும் தெருவில் நடக்கும் போது தான் தீண்டப்படாதவன் என்பதை அறிவிப்பதற்காகவும், தன்னைப் பற்றித் தீண்டப்படாதவர்கள் எச்சரிக்கையாக இருக்கச் செய்வதற்காகவும், கைத்தட்டிக்கொண்டும், கத்திக்கொண்டும் செல்ல வேண்டும். சென்னை மாகாணத்தைச் சேர்ந்த செருமான்கள் குறித்துப் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

“இந்த அவலப் பிறவிகளின் சமூக நிலை உண்மையிலேயே மிகவும் தாழ்ந்தது. செருமான் ஒருவர் உயர்சாதியைச் சேர்ந்தவரை சந்திக்கும்போது முப்பது அடி தொலைவில் நிற்கவேண்டும். விலக்கப்பட்ட இந்தத் தொலைவுக்குள் அவர் வந்துவிட்டால், அவரின் அணுக்கத்தால் தீட்டுப்படும். நீரில் மூழ்கிக் குளித்தால்தான் இந்தத் தீட்டு கழியும், செருமான் எவரும் பிராமணர்க்குரிய கிராமத்தையோ கோயிலையோ குளத்தையோ நெருங்கிச் செல்லமுடியாது. நெருங்கிச் சென்றால், தீட்டுக் கழிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். அனைவருக்கும் பொதுவான சாலையைப் பயன்படுத்துகிற போதுங்கூட, ஒரு

செருமான் தன் பிரபு அல்லது ஆண்டையைப் பார்த்துவிட்டால் சாதாரண வழியை விட்டு விலகி நடக்க வேண்டும் - சேற்றிலோ சகதியிலோ நடக்க வேண்டியிருந்தாலும் சரி! தற்செயலாக ஆண்டையைத் தீட்டுப் படுத்தி அவரது கோபத்துக்கு ஆளாவதைத் தவிர்ப்பதே நோக்கம். வழிப்போக்கரைத் தீட்டுப்படுத்தி விடாமல் தவிர்ப்பதற்காகத் திரும்ப திரும்ப ''ஓ, ஓவ், ஓ'' என்று ஒலியெழுப்பிக் கொண்டே செல்கிறார். பாலக்காடு போன்ற சில இடங்களில் ஒரு செருமான் சாலையோரத்தில் அழுக்குத் துண்டை விரித்து ''ஐயா, ஐயா, காசு போடுங்கள் ஐயா, துண்டுல வீசிப் போடுங்க ஐயா'' என்று கெஞ்சுங்குரலில் கத்திக் கொண்டிருக்கக் காணலாம். கொச்சி, திருவிதாங்கூர் ஆகிய சுதேசி சமஸ்தானங்களில் செருமானின் நிலை சகிக்கவொண்ணாதது. இங்கெல்லாம் பிராமண ஆதிக்கம் ஏறுமுகமாய் உள்ளது. பாலக்காடு வட்டத்தில் இன்றளவும் செருமான்கள் கடைத் தெருவில் நுழைய முடியாது. மலபாரில் ★''உயர்சாதிக்காரர் சென்று கொண்டிருக்கையில் அவ்வப்போது குரல் கொடுக்கிறார். அவர் தீட்டுப்படாமல் செல்வதற்குத் தோதாகக் கீழ்ச்சாதிக்காரர் சாலையை விட்டு ஒதுங்கிக் கொள்வதற்காகவே இந்த ஏற்பாடு. ஆகக் கீழ்ச் சாதிகளைச் சேர்ந்தவர்கள் நடந்து செல்கையில் தாங்கள் தீட்டுடன் வந்து கொண்டிருப்பதை முன்னறிவிப்புச் செய்யும் பொருட்டுக் குரல் கொடுத்துக் கொண்டே செல்லவேண்டும். உயர்சாதிக்காரரின் கட்டளை கேட்டு சாலையிலிருந்து விலகிச் சென்று விடவேண்டும். கீழ்ச் சாதிக்காரர்கள் சாலையில் நடக்கத் துணியாமல் அதற்கிணையாக ஓரமாய் ஒதுங்கிப் பயணம் செய்வதை சாதாரணமாகப் பார்க்கலாம்''.

இந்து நாகரிகத்தால் சமூகத் தொழுநோயாளிகளாக மாற்றப் பட்டுள்ள இந்த அவல ஆன்மாக்களுக்குத்தான் எத்தனை இழிவு! தீண்டப்படாதவர் என்றழைக்கப்படுவதே பெருங்கேடுதான். ஆனால் தீண்டப்படாதவன் என்ற மானக்கேட்டை அறிவித்துக்கொள்ள வேண்டும் என்பதைப் போல் வேறு கொடுமை ஏதும் இல்லை எனக் கருதுகிறேன். இந்த இந்து நாகரிகம் குறித்துத் தீண்டப்படாதவர் என்ன சொல்வார்? அது கொடுங்குற்றமே தவிர நாகரிகமல்ல என்று அவர் சொன்னால் தவறாகுமா?

ஆதிப் பழங்குடிகளின், குற்ற மரபினரின், தீண்டப்படாத வர்களின் நிலைமைக்கு இந்து நாகரிகத்தின் அடிப்படைக் கோட்பாடு களே காரணம் என்பதில் சந்தேகமே இருக்க முடியாது.

★ தர்ஸ்டன் - தெற்கு இந்தியாவின் பழங்குடிகளும் சாதிகளும், பாகம் 5, பக்கம் 196.

இந்த ஆதிப் பழங்குடிகளை இந்து அரவணைப்புக்குள் கொண்டுவரச் சமயப் பரப்புப் பணிகள் ஏதும் செய்யப்பட வில்லையே, ஏன்?

குறிப்பிட்ட சில பழங்குடியினருக்குக் குற்றமே தொழிலாகிப் போனது ஏன்? தீண்டப்படாதார் போன்ற குறிப்பிட்ட சில வகுப்பினர் மனித சகவாசத்திற்கே லாயக்கற்றவர்களாக நடத்தப்பட்டுள்ளனரே, ஏன்?

இந்தக் கேள்விகள் ஒவ்வொன்றுக்குமான விடை இந்து நாகரிகத் தின் ஏதேனுமோர் அடிப்படைக் கோட்பாட்டை சான்றாகக் கொண்டிருக்கும்.

**முதல் கேள்விக்கான விடை:** சாதியமைப்பு இந்து சமயத்தை மேலும் பரவக்கூடிய சமயமாக ஆகவிடாமல் தடுத்துவிடுகிறது. சாதி என்பது இந்து சமயத்தின் அடிப்படைக் கூறுகளில் ஒன்று.

**இரண்டாம் கேள்விக்கான விடை:** ஒரு மனிதன் கௌரவமான முறையில் பொருளீட்டி வாழ்ந்திடும் வாய்ப்புகளுக்கு நால்வருண அமைப்பு வரம்பிடுகிறது. படிப்பு என்பதெல்லாம் பிராமணர்களின் தனிச்சொத்து; போர்த்தன்மை வாய்ந்த பணிகள் எல்லாம் சத்திரியர் களின் முன்னுரிமை; வணிகம் வைசியர்களுக்கு மட்டும் உரியது; தொண்டுப்பணி சூத்திரர்களுக்கு. இவர்களுக்கு வெளியே இருப் பவர்கள் கௌரவமாய் எதுவும் மிச்சமில்லாததால், கௌரவக் குறைவான வழிகளிலும் குற்றவழிகளிலும் பொருளீட்டி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இது நால்வருணத்தின் விளைவு. நால்வருணமோ இந்து நாகரிகத்தின் அடிப்படைக்கூறுகளில் ஒன்று.

**மூன்றாம் கேள்விக்கான விடை:** தீண்டாமை என்பது ஸ்மிருதிகளில் அடங்கியுள்ள இந்துச் சட்டத்தின் பகுதி ஆகும். ஸ்மிருதிகளோ இந்து நாகரிகத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்று.

## IV

கடந்த காலத்தைப் பொறுத்தவரை, இந்திய மக்கள்தொகையில் 7 கோடியே 95 இலட்சமாக அமைந்துள்ள இந்த மூன்று இனங்களுக்கு இழிநிலையே பொதுவிதியாக இருந்திருப்பது மெய்தான். ஆனால்

வருங்கால விதியும் அவர்களுக்குப் பொதுவிதியாய் இருக்கும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அவர்களின் நிலைமை ஒன்றுபோல் தோன்றினாலும், அடிப்படையில் மாறுபட்டதாகும்.

இங்குக் குறித்துக்கொள்ள வேண்டிய முதல் செய்தி என்னவென்றால், ஆதிப்பழங்குடிகளுக்கும், குற்ற மரபினருக்கும் இந்தத் தீண்டாமைக் கொடுமை இல்லை. ஓர் இந்து அவர்களால் தீட்டுப்படுவதில்லை. இந்த ஆதிப்பழங்குடியினரும் குற்ற மரபினரும் தீண்டப்படாத மக்களிடமும் தீண்டாமை அனுசரிக்கிறார்கள் என்பதுதான் விந்தை. இந்த ஆதிப் பழங்குடியினரும் குற்ற மரபின்ரும் தீண்டத்தகாத ஒருவரைத் தொட நேர்ந்தால் தீட்டுப்படுவோம் என்று கருதுவதுதான் பெரிய வேடிக்கை. தீண்டப்படாத மக்களை விடவும் அவர்கள்தாம் மிக அதிகமாய் வறுமையிலும் அழுக்கிலும் மூடநம்பிக்கையிலும் அறியாமையிலும் வீழ்ந்துகிடப்பவர்கள் என்றாலும் தீண்டப்படாதாருக்குத் தாங்கள் சமூக ரீதியில் மேலானவர்கள் என்று கர்வம் இருக்கிறது. இது இந்துக்களிடமிருந்து அவர்களைத் தொற்றியுள்ள நோயின் விளைவுதான். ஆனால் இந்துக்கள் அவர்களைத் தீண்டப் படாதவர்களாக நடத்துவதில்லை என்பதைக் குறித்துக் கொள்ள வேண்டும். இது தீண்டப்படாதவர்களுக்கு இல்லாமல் அவர்களுக்கு இருக்கும் ஒரு நன்மை, அனுகூலம். இது அவர்களின் வருங்காலத்துக்கு நம்பிக்கையளிப்பதாகும். ஆதிப்பழங்குடியினர் முன்னேறுவதற்கு வாய்ப்புகளே இல்லை என்றால் அவர்களாகத் தனித்து ஒதுங்கி வாழ்வதே அதற்குக் காரணம். ஆனால் அவர்கள் தங்களின் காட்டு ஒதுக்கிடங்களிலிருந்து வெளியே வந்து நாகரிகத்தில் பங்கேற்பார்களானால், அவர்கள் முன்னேறத் தடையேதும் இல்லை. குற்ற மரபினரின் வருங் காலத்துக்கும் இதேபோல் நம்பிக்கை உள்ளது. இந்தக் குற்றமரபினரைத் தங்க வைத்து அவர்களுக்குப் பயனுள்ள தொழில்கள் கற்றுத் தருவதற்கான குடியிருப்புகளை அரசு நிறுவியுள்ளது. மிகக் குறுகிய காலத்தில் அவர்கள் குற்றப் பழக்கங்களிலிருந்து அறவே விடுவிக்கப் பட்டு விடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

தீண்டப்படாத மக்களின் நிலைமை அடிப்படையிலேயே மாறுபட்ட ஒன்று. அவர்களின் ஊனங்கள் அவர்கள் மீது சுமத்தப் பட்டவை, திணிக்கப்பட்டவை ஆகும். அவர்களின் தனிமைநிலை என்பது உண்மையில் தனித்து ஒதுக்கப்பட்ட நிலை ஆகும். அவர்கள் மீது திணிக்கப்பட்ட ஒதுக்கம் ஆகும். தீண்டப்படாத மக்களைப் பொறுத்தவரை ஒதுக்கப்படுவதால் எழும் தீமைகள் தீண்டாமையால் முற்றிப்போகிற நிலையில் அவர்களின் சிக்கல் ஆதிப்பழங்குடியினரின்

சிக்கலிலிருந்து வேறுபடுகிறது. ஆகவே, ஆதிப்பழங்குடியினரைப் பொறுத்தவரை நிலவியல் தனிமைப்பாடும், அத்துடன் முன்னேற்ற வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள விருப்பமில்லாமையும் சேர்ந்து சிக்கலுக்குக் காரணமாகின்றன. ஆனால், அதேசமயம் தீண்டப்படாத மக்களைப் பொறுத்தவரை நேரடியாகவே வாய்ப்புகள் மறுக்கப்படுவது சிக்கலுக்குக் காரணமாகின்றன.

தீண்டப்படாதோரின் விடுதலைக்கு அதிக நம்பிக்கை இருப்பதாகத் தோன்றவில்லை. எப்படியும் அவர்களின் விடுதலை ஆதிப் பழங்குடியினரின் விடுதலையைக் காட்டிலும் சிக்கல் நிறைந்தது, நெடுந்தொலைவிலிருப்பது. அடிமைகளின் சிக்கல் என்பது அரசியல் அல்லது பொருளாதார உரிமைகள் மறுக்கப்படும் சிக்கலாகும். தீண்டப்படாதாரின் சிக்கலும் அரசியல், பொருளாதார உரிமைகள் மறுக்கப்படும் சிக்கலாக இருக்குமானால், அதனைச் சட்டவியல், அரசமைப்பியல் வழிமுறைகளைக் கொண்டு தீர்க்கக்கூடும். அரசியல், பொருளாதார உரிமைகள் மறுக்கப்படுவது இந்துக்களது சமூக உளவியலின் விளைவு ஆகும். தீண்டப்படாதவர்களுக்கான சிக்கல் என்பது நேரடியாக இந்துக்களின் சமூக நடத்தையிலிருந்தே விளைகிறது. இந்துக்கள் தங்கள் மனநிலையை மாற்றிக் கொள்ளும்போதுதான் தீண்டாமை மறையும். இந்துக்கள் தமது வாழ்க்கை முறையை மறக்கும் படிச் செய்வது எப்படி என்பதுதான் சிக்கல். ஒரு தேசம் முழுவதும் தனக்குப் பழகிப் போன வாழ்க்கை முறையைக் கைவிடும்படிச் செய்வது எளிதன்று. இது இந்துக்களுக்குப் பழகிப்போன வாழ்க்கை முறையாக மட்டுமல்லாமல், அவர்களது சமயத்தின் புனித இசைவு பெற்றதாகவும் உள்ளது. அவர்கள் அப்படித்தான் நம்புகிறார்கள். அவர்களது வாழ்க்கை முறையை மாற்றுவது என்பது அவர்களின் சமயத்தை மாற்றுவது போன்றதாகும்.

இது எப்போது முடியும்? எது தீண்டப்படாதாருக்குப் பெருஞ்சோகமோ, அது, இந்துக்களின் கொடுங்குற்றம் என்பது உணரப் படும்போதுதான் முடியும். இந்துக்களின் சமய உளவியலில் இந்தப் புரட்சி நிகழ்வதற்காகத் தீண்டப்படாத மக்கள் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டும்? தீர்க்கதரிசன ஆற்றல் படைத்தவர்கள் விடை சொல்லட்டும். இதற்கிடையில் அவர்களின் நிலைமையை விரித் துரைப்பதும், அவர்களும் அவர்களின் நண்பர்களும் முகங்கொடுக்க வேண்டியிருக்கிற சிக்கல்களை எடுத்துரைப்பதும் நன்று.

□□□

## இயல் 16

# இந்துக்கள் கட்டிய வீடு

## 1

இந்துக்களின் சமூக ஒழுங்கமைப்பில் ஏதேனும் தனித்தன்மை உண்டா? அறிஞர்கள் செய்துள்ள ஆராய்ச்சிகளைப் பற்றி அறியாத ஒரு சாதாரண இந்து என்ன சொல்வார்? அவர் சார்ந்த சமூகத்தின் ஒழுங் கமைப்பில் இயல்பல்லாத அல்லது இயற்கையல்லாத தனித்தன்மை ஏதும் இல்லை என்று சொல்வார். அவர் இப்படிச் சொல்வதில் வியப்பில்லை. தனித்தொதுங்கிய வாழ்க்கை வாழ்கிற மக்கள் தங்களின் பழக்க வழக்கங்களில் தனித்தன்மைகள் இருப்பதை உணர்தல் அரிது. மக்கள் தங்களுக்கு ஒரு பெயர் தந்து கொள்ள வேண்டுமென்று நினைக்காமலே தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து சென்றுள்ளார்கள். ஆனால் வெளியாருக்கு, இந்து அல்லா தாருக்கு இந்துக்களின் சமூக ஒழுங்கமைப்பு எப்படித் தெரிகிறது? இயல்பானதாகவும் இயற்கையானதாகவும் தெரிகிறதா?

கி.மு.305 ஆம் ஆண்டு வாக்கில் சந்திரகுப்த மௌரியரின் அரசவைக்குக் கிரேக்க மன்னர் செலூக்கஸ் நிக்கத்தரின் தூதராக இந்தியா வந்த மெகஸ்தனிஸ், இந்துக்களின் சமூக ஒழுங்கமைப்பு மிகவும் அலாதியானது என்றே கருதினார். இல்லையேல் இந்துச் சமூக ஒழுங் கமைப்பின் தனித் தன்மைகளை அவர் இவ்வளவு கவனமாய் விரித்துரைத்திருக்கமாட்டார். அவர் எழுதியிருப்பதாவது:

> 'இந்தியாவின் மக்கள்தொகை ஏழு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. குருமார்கள் என்போர் சமுதாயப்படி வரிசையில் முதலிடம் பெறுகிறார்கள், ஆனால் எண்ணிக்கையில் ஆகச்சிறிய வகுப்பாக அமைகிறார்கள். யாகம் செய்யவோ வேறு புனிதச் சடங்குகள் செய்யவோ விரும்புகிறவர்கள் தனிப்பட்ட முறையில் இவர்களை அமர்த்தி இவர்களின் பணியைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அரச பெருஞ்சபையில் அரசர்களும் பொதுமுறையில் இவர்களின் பணியைப் பயன் படுத்திக் கொள்கிறார்கள். புத்தாண்டின் தொடக்கத்தில் எல்லாக்

குருமார்களும் கோட்டை முகப்பில் மன்னர் முன்னிலையில் சபை கூடுவார்கள். அப்போது, விளைச்சலையும் கால்நடைகளையும் மேம்படுத்தவோ பொதுநலனுக்குத் துணை செய்யவோ பயனுள்ள ஆலோசனை ஏதும் எழுதிக்கொடுத்துள்ள, அல்லது வழிவகை ஏதும் கண்டுள்ள குருமார் எவரும் அதனை அனைவர் முன்னிலையிலும் அறிவிக்கலாம். யாரேனும் மும்முறை பொய்த் தகவல் கொடுத்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அதன் பிறகு வாழ்நாள் முழுதும் வாய் திறக்கக்கூடாது என்பது சட்டத்தின் கட்டளை. மாறாகச், சிறந்த அறிவுரை தருகிறவர் வரிகள், காணிக்கைகள் ஏதும் செலுத்துவதிலிருந்து விலக்குப் பெறுகிறார்.

''இரண்டாம் சாதியில் உழவர்கள் இடம் பெறுகிறார்கள். இவர்கள் தாம் மக்கள் தொகையில் பெரும்பான்மையினர். கனிவும் பணிவும் மிக்கவர்கள். படைச்சேவையிலிருந்து விலக்கு பெற்றவர்கள். அச்சம், கலக்கம் ஏதுமின்றித் தங்கள் நிலத்தை உழுது பயிர் செய்கிறவர்கள். இவர்கள் நகரத்துக்குச் செல்வதே இல்லை. நகரத்தில் ஏற்படும் அமளிகளில் கலந்து கொள்வதற்கோ வேறு எதற்குமோ செல்வதே இல்லை. ஆகவே பல சந்தர்ப்பங்களில் என்ன நடக்கிறது என்றால், ஆட்கள் போர்க்களத்தில் அணிவகுத்து நின்று, உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் போரிட்டுக் கொண்டிருக்க, அதே நேரத்தில், நாட்டின் அதே பகுதியில், மிக அருகிலேயே மற்றவர்கள் இடர் ஏதுமின்றி உழுதும் கொத்தியும் பாடுபட்டுக் கொண்டிருப்பார்கள். படை வீரர்களின் பாதுகாப்பு அவர்களுக்கு இருக்கும். நிலமனைத்தும் மன்னரின் சொத்து. உழவர்கள் அதை உழுது பயிரிட்டு விளைச்சலில் கால்பங்கைப் பெறுவார்கள்.

''மூன்றாம் சாதியில் மந்தைக்காரர்களும் வேட்டைக்காரர்களும் இடம் பெறுகிறார்கள். இவர்கள் மட்டுமே வேட்டையாடலாம்; கால்நடை வளர்க்கலாம்; சுமையிழுக்கும் பிராணிகளை விற்கலாம், அல்லது வாடகைக்கு விடலாம். நிலத்திலிருந்து காட்டு விலங்குகளையும், வயல்களில் விதைக்கப்படும் விதைகளைத் தின்று விடும் காட்டுக்கோழிகளையும் இல்லாமற் செய்வதற்காக மன்னரிடமிருந்து இவர்களுக்கு தானியப்படி கிடைக்கிறது. இவர்கள் அலைந்து திரியும் வாழ்க்கை நடத்துகிறார்கள், கூடாரங்களில் வசிக்கிறார்கள்.

''மந்தைக்காரர்கள், வேட்டைக்காரர்களை அடுத்து, நான்காம் வகுப்பில் கைத்தொழில் செய்கிறவர்களும், பண்டம்

விற்கிறவர்களும், உடல் உழைப்பில் ஈடுபடுத்தப்படுகிற வர்களும் இடம்பெறுகிறார்கள். இவர்களில் சிலர் கப்பம் செலுத்துவதோடு, அரசுக்குக் குறிப்பிட்ட சில சேவைகளும் ஆற்றித் தருகின்றனர். ஆனால், கவசஞ்செய்கிறவர்களும் கப்பல் கட்டு கிறவர்களும் மன்னரிடமிருந்து கூலியும் உணவுப் பொருட் களும் பெறுகிறார்கள். இவர்கள் மன்னருக்கு மட்டுமே வேலை செய்கிறவர்கள். படைத்தலைமையானது படையாட்களுக்கு ஆயுதம் வழங்குகிறது. கடற்படைத் தளபதியானவர் பயணிப் போக்குவரத்துக்கும் சரக்குப் போக்குவரத்துக்கும் கப்பல்களை வாடகைக்குத் தருகிறார்.

''ஐந்தாம் வகுப்பில் போர்வீரர்கள் இடம் பெறு கிறார்கள். இவர்கள் முனைப்புடன் படைச்சேவையில் ஈடுபடாத போது, குடியும் கூத்துமாய் வெற்றுப் பொழுது போக்குகிறார்கள். மன்னரின் செலவில் பராமரிக்கப்படுகிறார்கள். அழைப்பு வந்தவுடன் களத்தில் குதிக்க எப்போதும் தயாராக இருக் கிறார்கள். ஏனெனில் தங்கள் உடல்களைத் தவிர இவர்களிடம் இருப்பது வேறொன்றும் இல்லை.

''ஆறாம் வகுப்பில் கண்காணிப்பாளர்கள் இடம் பெறு கிறார்கள். நடப்பதையெல்லாம் கண்காணித்து, இரகசியமாய் மன்னருக்கு அறிக்கைகள் தரும் கடமை இவர்களைச் சாரும். சிலர் நகரத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் படையைப் பார்த்துக்கொள்ள வேண்டும். முன்னவர்கள் நகரத்தின் அவைப் பெண்டிரையும் பின்னவர்கள் பாசறையின் அவைப் பெண் டிரையும் துணைக்கு வைத்துக் கொள்கிறார்கள். மிகவும் திறம் வாய்ந்த, மிகவும் நம்பிக்கைக்குரிய ஆட்களே இப்பதவிகளில் அமர்த்தப்படுகிறார்கள்.

''ஏழாம் வகுப்பில் மன்னரின் அவையினரும் வரித் தண்டலரும் இடம் பெறுகின்றனர். அரசில் உயர்பதவிகளும் நீதித் தீர்ப்பாயங்களும் பொது நடவடிக்கைகளின் வழக்கமான நிர்வாகமும் இவர்களைச் சார்ந்தது. எவர் ஒருவரும் தன் சாதிக்கு வெளியே மணம் புரிந்து கொள்ளவோ வேலை அல்லது தொழிலை மாற்றி கொள்ளவோ, ஒன்றுக்கு மேல் தொழில் செய்யவோ அனுமதி இல்லை. குருவுக்கு மட்டும் விலக்கு தரப்படுகிறது. அவரது உயர்வின் பொருட்டு இத்தனியுரிமை வழங்கப்படுகிறது.''

கி.பி. 1030 வாக்கில் எப்போதோ இந்தியாவில் பயணம் செய்து பயணக்குறிப்பு எழுதிய அல்பெரூனி என்பவர் இந்து சமூக ஒழுங்கமைப்பின் தனித்தன்மையைக் கண்டு வியப்புற்றிருக்க வேண்டும். அவரும் அதைக் குறிப்பிலேற்றத் தவறவில்லை. அவர் எழுதியதாவது:

''இந்துக்கள் தங்கள் சாதிகளை வருணங்கள், அதாவது நிறங்கள் என்றழைக்கிறார்கள்; மரபுவழிக் கண்ணோட்டத்தில் ஜாதகங்கள், அதாவது பிறவிகள் என்றும் அழைக்கிறார்கள். தொடக்கத்திலிருந்தே இந்த சாதிகள் நான்கே நான்குதான்.

I. பிராமணர்கள்தாம் மிகவுயர்ந்த சாதி. இவர்கள் பிரம்மாவின் தலையிலிருந்து படைக்கப்பெற்றதாக இந்துக்களின் புனிதநூல்கள் சொல்கின்றன. பிரம்மா என்பது இயற்கை எனப்படும் சக்திக்கு மறுபெயரே. தலைதான் பிராணியின் உடலில் மிகவுயர்ந்த பகுதி. பிராமணர்கள்தாம் முழு இனத்திலும் மேலான பகுதியாவர். ஆகவே இந்துக்கள் இவர்களை மிகச்சிறந்த மனிதகுலமெனக் கருதுகிறார்கள்.

II. சத்திரியர்கள்தாம் அடுத்த சாதி. இவர்கள் பிரம்மாவின் தோளிலிருந்தும் கையிலிருந்தும் படைக்கப்பெற்றதாகச் சொல்கிறார்கள். இவர்களின் படித்தரம் பிராமணர்களின் படித்தரத்துக்கு அவ்வளவு அதிகமாய்க் கீழன்று.

III. அடுத்து வருவது வைசியர்கள். இவர்கள் பிரம்மாவின் தொடையிலிருந்து படைக்கப் பெற்றவர்களாம்.

IV. பிரம்மாவின் பாதத்திலிருந்து படைக்கப் பெற்றவர்களாம், சூத்திரர்கள்.

''கடைசியாகச் சொன்ன இரு வகுப்பினர்களுக்குமிடையே மிகப் பெரிய வேறுபாடு ஒன்றுமில்லை. இந்த வகுப்பினர் ஒன்றுக்கொன்று எவ்வளவுதான் மாறுபட்டிருந்தாலும், நகரங்களிலும் கிராமங்களிலும் சேர்ந்து வாழ்கின்றனர்; வீடுகளிலும் விடுதிகளிலும் கலந்து கிடக்கின்றனர்.

''சூத்திரர்களை அடுத்து அந்த்யஜர் எனப்படும் மக்கள் இருக்கிறார்கள். இவர்கள் பல்வேறு வகைத் தொண்டுகள் செய்கிறார்கள். இவர்கள் ஒரு குறிப்பிட்ட கைத்தொழில் அல்லது

பணியைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்களே தவிர, எந்தச் சாதியையும் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்களே தவிர, எந்தச் சாதியையும் சேர்ந்தவர்களாக அல்ல. எட்டு வகுப்புகளாக இருக்கும் இவர்களில் வண்ணார், சக்கிலியர், நெசவாளர் தவிர மற்றவர்கள் தமக்குள் தடையின்றி மணவுறவு கொள்கிறார்கள். வேறு எவரும் அவர்களோடு எவ்விதத்தும் தொடர்பு கொள்வதற்கு மனமிரங்கமாட்டார். வண்ணார், சக்கிலியர், கழைக்கூத்தாடிகள், கூடை முடைவோர், படகோட்டி, மீனவர், வேட்டுவர், நெசவாளர் என்பவை இந்த எட்டுத் தொழில் வகுப்புகள் ஆகும். நான்கு சாதிகளும் இவ்வகுப்புகளோடு ஓரிடத்தில் சேர்ந்து வாழ்வதில்லை. நான்கு சாதிகளின் கிராமங்கள், நகரங்களை ஒட்டி, ஆனால் அவற்றுக்கு வெளியே இவ்வகுப் பினர் வசிக்கின்றனர்.

''ஹதி, தொமா(தொம்பர்), சண்டாளர், பாதட்டோ(?) எனப்படுவோர் எந்தச் சாதி அல்லது வகுப்பிலும் சேர்த்துக் கணக்கிடப் படுவதில்லை. கிராமங்களைத் தூய்மைப்படுத்து வதும் ஏனைய தொண்டுகளும் போன்ற அழுக்கு வேலையில் இவர்கள் ஈடுபடு கிறார்கள். இவர்கள் ஒரே ஒரு வகுப்பாகக் கருதப்பட்டு, செய்யும் வேலைகளால் மட்டும் வேறுபடுத்தப் படுகிறார்கள். உண்மையில் இவர்கள் கள்ளக் குழந்தைகள் போலவே கருதப்படுகிறார்கள். இவர்கள் கள்ளத்தனமாகப் பிறந்த குழந்தைகளாக, சூத்திரத் தந்தையிலிருந்தும் பிராமணத் தாயிலிருந்தும் வழிவந்தவர்களாகப் பரவலாகக் கருதப்படு கிறார்கள். ஆகவே இவர்கள் சாதி கெட்டவர்கள் என்று இழிவு படுத்தப்படுகிறார்கள்.

''இந்துக்கள் நான்கு சாதிகளையும் சேர்ந்த ஒவ்வொரு வருக்கும் அவரவரின் வேலையையும் வாழ்க்கை முறையையும் பொறுத்து காரணப்பெயர் சூட்டுகிறார்கள். எடுத்துக்காட்டாக, பிராமணர் வீட்டில் தங்கித் தன் வேலையைச் செய்து கொண்டிருக்கும் வரை பிராமணர் என்றே அழைக்கப்படுகிறார். அவர் ஒரு தீக்குண்டம் வளர்த்தால் இஷ்தின் என்று அழைக்கப் படுகிறார். மூன்று தீக்குண்டம் வளர்த்தால் அக்னிஹோத்ரி எனப்படுகிறார். இது தவிர தீக்கு ஒரு படையலும் செய்தால் தீட்சிதர்என்று அழைக்கப்படுகிறார். பிராமணர்களைப் பொறுத்து எப்படியோ, ஏனைய சாதிகளைப் பொறுத்தும் அதேபோலத் தான். சாதிகளின் கீழமைந்த வகுப்புகளில் ஹதி என்போர் குறித்தே உயர்வாகப் பேசப்படுகிறது. ஏனென்றால் அவர்கள்

எவ்விதத் தூய்மைக் கேட்டுக்கும் இடங்கொடுப்பதில்லை. அடுத்து தொமாக்கள்; இவர்கள் யாழிசைத்துப் பாடுகிறார்கள். இன்னுங் கீழமைந்த வகுப்பினர் கொலை செய்வதையும் நீதியின் தண்டனைகளை நிறைவேற்றுவதையும் ஒரு தொழில் போல் செய்கின்றனர். அனைவரிலும் மோசம் பாதட்டோக்கள். இவர்கள் இறந்த பிராணிகளின் இறைச்சியை, நாய்கள் மற்றும் இதர விலங்குகளின் இறைச்சியையும் கூட உண்ணுகிறார்கள்.

'நான்கு சாதிகளில் ஒவ்வொன்றும் சேர்ந்து உண்ணும் போது அந்தப் பந்தியில் அச்சாதியினர் மட்டுமே இருக்கலாம். ஒரே பந்தியில் இருவேறு சாதியினர் இருக்கலாகாது. மேலும், பிராமணர்களின் பந்தியில் ஒருவருக்கு ஒருவர் பகைமை கொண்டு வாழ்ந்து வரும் இருவர் பக்கத்துப் பக்கத்து இருக்கையில் அமர நேரிட்டால், இரு இருக்கைகளுக்கும் நடுவில் தடையாக ஒரு பலகை வைக்கப்படுகிறது; அல்லது ஒரு துணி விரிக்கப்படுகிறது; அல்லது இப்படி வேறு ஏதாவது ஒன்று செய்யப்படுகிறது. அவர்களுக்கு நடுவில் ஒரே ஒரு கோடு வரைந்தாலே போதும், அவர்கள் பிரிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகிறது. சாப்பாட்டில் மிச்சமாவதைச் சாப்பிடத் தடை இருப்பதால், ஒவ்வொரு தனியாளும் தானே தன் உணவை உண்டாக வேண்டும். சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்களில் ஒருவர் மற்றொருவருடன் சேர்ந்து ஒரே தட்டிலிருந்து உணவெடுப்பதானால், முதலாமவர் எடுத்தபின் தட்டில் எஞ்சியிருப்பது இரண்டாமவருக்கு மிச்சச் சாப்பாடு ஆகிறது. இதை உண்ணத் தடை உள்ளது''.

இந்தச் சமூக ஒழுங்கமைப்பில் தனித்தன்மையாகத் தனக்குப் பட்டதைப் பதிவு செய்வதோடு அல்பெரூனி மனநிறைவு கொள்ளவில்லை. அவர் மேலும் கூறினார்:

''இந்துக்களிடையே இத்தகைய மரபொழுங்குகள் ஏராளம். முஸ்லீம்களாகிய நாங்கள் முழுக்க முழுக்க இச்சிக்கலின் மறு பக்கத்தில் இருக்கிறோம் என்பது மெய்தான். இறைப் பற்று ஒன்றில் தவிர எல்லா மனிதர்களும் சமம் என நாங்கள் கருதுகிறோம். இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே அணுகல் அல்லது பிரிதல் ஏதும் இல்லாமல் தடுக்கும் மிகப் பெரிய தடை இதுவே.''

இந்தியாவில் 1500 முதல் 1517 வரை போர்த்துக்கீசிய அரசுப் பணியில் இருந்த துவார்த்த பார்போசா என்னும் போர்த்துக்கீசிய

அதிகாரி இந்து சமுதாயம் தொடர்பாக தம் மனதில் பதிந்தவற்றைக் குறித்து வைத்துள்ளார். அவர் எழுதியுள்ளார்:

''இந்த குஜராத் ராஜ்யம் மூர்களிடம் வீழ்வதற்கு முன், ஒரு மிலேச்ச இனத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு வாழ்ந்து வந்தார்கள். இவர்களை ராஜபுத்திரர்கள் என்று மூர்கள் அழைத்தார்கள். இந்த ராஜபுத்திரர்கள்தாம் அக்காலத்தில் வீரத்திருமக்களாகவும் பாதுகாவலர்களாகவும் இருந்தார்கள். தேவைப்பட்ட இடத்தெல்லாம் போர் புரிந்தார்கள். இவர்கள் ஆடு, மீன் மற்றும் எல்லா வகை உணவும் உண்பவர்கள். மலைகளில் இன்னமும் அவர்களில் பலர் உள்ளனர். அங்கு இவர்களின் பெரிய பெரிய கிராமங்களே உள்ளன. இவர்கள் குஜராத் மன்னருக்குக் கீழ்ப்படிவதில்லை என்பதோடு, அன்றாடம் அவரை எதிர்த்துப் போரும் புரிகிறார்கள். என்ன செய்தும் மன்னரால் இன்னமும் இவர்களை வெற்றி கொள்ள இயலவில்லை. அவர் வெற்றிபெறப் போவதும் இல்லை. ஏனென்றால் இவர்கள் மிகச் சிறந்த குதிரை வீரர்கள், குறிதவறாத வில்லாளர்கள், முக்குளிப்பதில் வல்லவர்கள். மூர்களுக்கெதிராகத் தங்களை தற்காத்துக் கொள்ள ஏனைய போர்க்கருவிகளும் இவர்களிடம் உள்ளன. மூர்கள் மீது ஓயாமல் போர் தொடுத்த போதிலும் இவர்களை ஆள மன்னரோ பிரபுவோ யாருமில்லை.

''இந்த ராஜ்யத்தில் பனியாக்கள் என்னும் இன்னொரு வகை மிலேச்சர்களும் இருக்கிறார்கள். இவர்கள் பெரும் வணிகர்களும் வர்த்தகர்களும் ஆவார்கள். இவர்கள் மூர்களிடையில் வாழ்வதோடு, மூர்களுடனேயே வணிகமனைத்தும் செய்கிறார்கள். இவர்கள் இறைச்சியோ மீனோ உண்பதில்லை; இறந்து போகக் கூடிய எதையும் உண்பதில்லை. எதையும் கொல்வதில்லை; எந்தவொரு பிராணியும் கொல்லப்படுவதைக் காணவும்கூட விரும்புவதில்லை. இவர்கள் தங்கள் ஜீவ காருண்யக் கொள்கையை மிகப் பிடிவாதமாகக் கடைப்பிடிக்கிறார்கள். அதற்காக இவர்கள் எதையும் செய்வார்கள். மூர்கள் உயிருள்ள பூச்சிகளையோ பறவைகளையோ பனியாக்களிடம் கொண்டு சென்று அவற்றை இவர்களெதிரில் கொல்லப் போவது போல் செய்வார்கள். பனியாக்கள் அவற்றின் மதிப்புக்கும் மிகையாகப் பெருந்தொகை கொடுத்து வாங்கி, உயிரைக் காப்பாற்றி, அவற்றை விடுவிப்பார்கள். மன்னரோ ஆளுநரோ ஏதேனும் ஒரு குற்றத்துக்காக ஒருவருக்கு மரண தண்டனை விதித்திருந்தால், அவர் சாகக் கூடாது என்பதற்காக பனியாக்கள்

ஒன்றுகூடி (தண்டனை விதித்தவர் அவரை விற்க விரும்பினால்) அவரை விலைக்கு வாங்கி விடுவார்கள். பல்வேறுபட்ட பிச்சைக்கார மூர்களும் இந்த பனியாக்களிடம் பிச்சை பெற விரும்பினால், தற்கொலை செய்துகொள்வது போல் அவர்கள் முன்னிலையில் பெருங்கற்களை எடுத்துத் தோளிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்வார்கள். இதைத் தடுத்து அவர்களை அமைதியாகச் செல்ல வைப்பதற்காக பனியாக்கள் பெரும் பிச்சை கொடுப்பார்கள். வேறுசிலர் கத்தியுடன் வந்து கைகால்களில் கிழித்துக் கொள்வர். அவர்கள் தங்களைத் தாங்களே சாகடித்துக் கொண்டுவிடாமல் பனியாக்கள் பெரும் பிச்சை கொடுப்பார்கள். வேறுசிலர் பனியாக்களின் வீட்டுக்குச் சென்று, இவர்களுக்காக எலி பாம்புகளைச் சாகடிக்க வந்திருப்பதாகச் சொல்வர். அப்படிச் செய்ய வேண்டாமென்று அவர்களுக்கும் நிறையப் பணம் கொடுப்பார்கள். ஆக, இவர்களிடம் மூர்கள் பெருமதிப்பு வைத்துள்ளார்கள்!

"இந்த பனியாக்கள் போகிற வழியில் எறும்புகள் சாரை சாரையாகக் குறுக்கிட்டால் அப்படியே நின்று திரும்பி அவற்றை மிதித்து விடாமல் வேறு பாதையில் செல்லுவார்கள். வீட்டில் பகல் வெளிச்சம் இருக்கும் போதே இரவு உண்டி சாப்பிட்டு விடுவார்கள். பகலோ இரவோ வீட்டில் விளக்கேற்றி அந்த விளக்குச் சுடரில் சிறு பூச்சிகள் மடிந்து விடக்கூடாது என்பதே நோக்கம். இரவில் எப்படியாவது வெளிச்சம் வேண்டும் என்றால், வார்ணிஷ் காகிதம் அல்லது துணித் திரி கொண்ட ஒரு விளக்கு வைத்துள்ளார்கள். உயிருள்ள எதுவும் இந்த விளக்கின் சுடரில் விழுந்து மாளாது. இவர்கள் தங்கள் தலையில் தோன்றும் பேன்களைக் கூட கொல்ல மாட்டார்கள். அவை அளவுக்கு மேல் வளர்ந்து பெருகி அவர்களுக்குத் தொல்லை தந்தால் குறிப்பிட்ட சிலரைக் கூப்பிட்டனுப்புவார்கள்; அவர்களும் மிலேச்சர்கள்; இவர்களிடையே வாழ்ந்து, இவர்களைப் புனித வாழ்வு வாழ்வோராய்க் கருதுகிறவர்கள். தங்கள் கடவுளரிடம் பக்தி சிரத்தையுடன் பெருந்துறவு பூண்டு வாழும் துறவிகளைப் போன்றவர்கள். அவர்கள் பனியாக்களுக்குப் பேன் பார்ப்பார்கள். பிடிக்கிற எல்லாப் பேன்களையும் தங்கள் தலையில் விட்டுத் தங்கள் ஊனைத் தந்து வளர்ப்பார்கள். இவ்வாறு தங்கள் குலதெய்வத்துக்குப் பெருந்தொண்டு செய்வதாகச் சொல்கிறார்கள். இவ்விதம் மொத்தத்தில் கொல்லாமை நெறியைப் பனியாக்கள் மிகுந்த மனக் கட்டுப்பாட்டுடன் கடைப்பிடிக்கிறார்கள். மறுபுறம் இவர்கள் பெரும் கடுவட்டிக்காரர்கள், எடைகளிலும் அளவைகளிலும் வேறு பல பண்டங்களிலும்

நாணயங்களிலும் மோசடி செய்கிறவர்கள்; பெரும் புளுகர்கள். இந்த மிலேச்சர்கள் பெருத்த உருவினர்; வாட்டசாட்டமாகவும் வனப்பாகவும் காணப்படுவர்; உல்லாசமாய் உடையுடுத்திக் கொள்வர்; சுவை பார்த்தும் மிதமாகவும் உண்பர். அவர்களது உணவில் பால், வெண்ணெய், சர்க்கரை, அரிசி இவற்றோடு பல்வேறுபட்ட ஊட்டச் சத்துள்ள பண்டங்களும் இடம் பெறும். பழம், காய்கறிகள், தொட்டியில் வளர்ந்த மூலிகைகள் இவற்றால் செய்த உணவுப் பதார்த்தங்களை இவர்கள் அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். எந்த இடத்தில் வசித்தாலும் காய்கறித் தோட்டங்களும் கனிச் சோலைகளும் வளர்க்கிறார்கள். ஏராளமாய்க் குளங்கள் தோண்டி வைத்து அவற்றில் ஆண்களும் பெண்களும் நாளொன்றுக்கு இருமுறை குளிக்கிறார்கள். குளித்து முடித்ததும், அதுவரை செய்த அத்தனைப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு விட்டதாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இந்த பனியாக்கள் நம் பெண்களைப் போல் நீளமாய் முடி வளர்க்கிறார்கள். அதை அள்ளி முடிந்து, மேலே முண்டாசு கட்டிப் பூக்களும் ஏனைய நறுமணப் பொருட்களும் சூடிக் கொள்கிறார்கள்.

''இவர்கள் குங்குமப் பூவும் இதர வாசனைப் பொருட்களும் கலந்த வெள்ளைச் சந்தனத்தைப் பூசிக் கொள்கிறார்கள். காதல் நாட்டம் மிக்கவர்களான இவர்கள் பருத்தியிலும் பட்டிலும் நீண்ட சட்டை அணிகிறார்கள். ஆடம்பரமாய் அமைந்த கூர்முனைப் பாத அணிகளைப் பயன்படுத்துகிறார்கள். இவர்களில் சிலர் பட்டிலும் சரிகையிலுமான சிறு மேலங்கி அணிகிறார்கள். தங்கத்திலும் வெள்ளியிலும் அலங்கார வேலைப்பாடு செய்த மிகச் சிறிய கத்தி தவிர இவர்கள் வேறு எந்த ஆயுதமும் வைத்துக் கொள்வதில்லை. இதற்கான காரணங்கள் இரண்டு: முதலாவதாக, இவர்கள் பெரும்பாலும் ஆயுதங்களையே பயன்படுத்துவதில்லை. இரண்டாவதாக, இவர்களை மூர்கள் பாதுகாக்கிறார்கள்.

''பிராமணர்கள். இதோ இன்னொரு மிலேச்ச வகுப்பினர்; இவர்களுக்கு பிராமணர்கள் என்று பெயர். இவர்களிடையே புரோகிதர்களும் உண்டு, வழிபாட்டுக் கூடங்களை நிர்வகித்து, விக்கிரக ஆராதனையை நடத்தி வைக்கிற குருக்கள்மாரும் உண்டு. இந்த வழிபாட்டுக் கூடங்கள் பெரிய அளவிலானவை. இவற்றுக்கு ஏராள வருவாய் வருகிறது. இவற்றில் பலவற்றைப் பிச்சை எடுத்தும்கூட பராமரிக்கிறார்கள். இந்த வழிபாட்டுக் கூடங்களில் மரத்திலும், கல்லிலும், பித்தளையிலுமான ஏராளமான சிலைகள் உள்ளன. இந்தக் கூடங்களில் அல்லது மடாலயங்களில்

இவர்கள் இந்தச் சிலைகளுக்குப் பெருமளவில் பூசை செய்கிறார்கள். அங்கெல்லாம் நம்மைப் போலவே ஏராளமான வத்திகளும், எண்ணெய் விளக்குகளும் ஏற்றிவைத்து மணியடிக்கிறார்கள். இந்தப் பிராமணர்களும் மிலேச்சர்களும் கடைப் பிடிக்கிற இறைக் கொள்கை பலவகையிலும் பரிசுத்த மும்மையை நினைவு படுத்துவது போலுள்ளது. இவர்கள் முத்தெய்வங்களின் உறவைப் போற்றி வணங்குகிறார்கள். எப்போதுமே தெய்வத்துக்குப் பிரார்த்தனைகள் செய்து, அவரையே உண்மைக் கடவுளென்றும் உலகைப் படைத்தவரென்றும் அனைத்தையும் ஆக்கியவ ரென்றும் மூன்று உருவம் கொண்ட ஒரே கடவுளென்றும் துதிக்கிறார்கள். அவரின் கீழமைந்து ஆட்சி புரிகிற வேறுபல தெய்வங்களும் இருப்பதாகச் சொல்லி அவற்றிடத்தும் நம்பிக்கை வைத்துள்ளார்கள். இந்தப் பிராமணர்களும் மிலேச்சர்களும் நம் தேவாலயங்களைக் கண்டு விட்டால் உள்ளே வந்து நமது புனிதப் படிமங்களை வணங்கி வழிபடுகிறார்கள். இவை குறித்தெல்லாம் கொஞ்சம் தெரிந்தும் புரிந்தும் வைத்திருப்பவர் களைப் போல் புனித மேரியைப் பற்றிக் கேட்கிறார்கள். நம்மைப் போலவே தேவாலயங்களை உயர்வாய் மதிக்கிறார்கள். எங்க ளுக்கும் உங்களுக்கும் அதிக வேறுபாடில்லை என்று சொல் கிறார்கள். இறக்கக்கூடிய எதையும் இவர்கள் உண்பதில்லை, எதையும் கொல்வதுமில்லை. குளியலைப் பெருஞ் சடங்காக்கி அதனால் தாங்கள் இரட்சிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள்.

''இதே கோழிக்கோடு ராஜ்யத்தில் பிராமணர்கள் எனப்படும் ஒரு சாதியினரும் உள்ளனர். பிறிதோர் இடத்தில் இவர்களைப் பற்றி நான் குறிப்பிட்டுள்ளேன். இவர்கள் (நம்மிடையிலான குருமார்களைப் போல) குருக்களாக இருப்பவர்கள்.

''இவர்களெல்லாம் ஒரே மொழி பேசுகிறவர்கள். பிராமணனின் பிள்ளைதான் பிராமணனாக இருக்க முடியும். வேறு யாரும் பிராமணனாக முடியாது. இவர்களுக்கு ஏழு வயதில் தோளின் மீது இரு விரற்கடை அளவுக்கு பதனம் செய்யாத மிருகத்தோல் அணிவிக்கப் படுகிறது, அதில் முடியும்கூட அப்படியே இருக்கும். இது ஒரு காட்டு விலங்கின் தோலாகும். இந்தக் காட்டு விலங்கை அவர்கள் கிரிவா மிருகம் என்கிறார் கள். இது ஒரு காட்டுக் கழுதையைப் போல் இருக்கிறது. இதிலிருந்து ஏழாண்டுக் காலம் அவன் வெற்றிலை போடக் கூடாது, அவ்வளவு காலமும் இந்தப் பட்டையை அணிந்து கொண்டிருக்க வேண்டும். பதினான்கு வயதாகும்போது அவனை பிராமணராக்குகிறார்கள்; தோள்பட்டியை எடுத்துவிட்டு முப்பிரி

நூல் அணிவிக்கிறார்கள்; தான் பிராமணன் என்பதன் அடையாளமாக வாழ்நாள் முழுதும் இந்தப் பூணூலை அணிந்திருக்க வேண்டும். இங்கு, குருவான ஒருவர், முதல் திருப்பூசை பாடும் போது நாம் எப்படிச் செய்வோமோ அதே போல் இவர்களும் இந்தப் பூணூல் வைபவத்தை பெருஞ் சடங்குகளோடு மகிழ்ந்து கொண்டாடுகிறார்கள். இதன் பிறகு அவர் வெற்றிலை போடலாம், ஆனால் இறைச்சியோ மீனோ உண்ணக்கூடாது. இந்தப் பிராமணர்களுக்கு இந்தியர்களிடையே பெருமதிப்பு உள்ளது. நான் முன்பே கூறியது போல இவர்கள் என்ன செய்தாலும் மரண தண்டனை கிடையவே கிடையாது. இவர்களின் குலத் தலைவரே மெல்லக் கடிந்து கொள்வார். அவ்வளவுதான். நம்மைப் போலவே இவர்களும் ஒருமுறைதான் திருமணம் செய்து கொள்கிறார்கள். தலை மகனுக்கு மட்டும்தான் திருமணம். அவர் தனக்குரிமையுள்ள ஓர் ஆதீனத்தின் தலைவரைப் போல மதிக்கப்படுகிறார். அவருடன் பிறந்த மற்றவர்கள் வாழ்நாள் முழுதும் ஒண்டிக்கட்டைகளாகவே இருந்துவிடுகிறார்கள். இந்தப் பிராமணர்கள் தங்கள் மனைவிமாரைக் கட்டுக்காவலுடன் பாதுகாத்து வைத்துக் கொள்கிறார்கள், அவர்களைப் பெரிதும் மதிக்கிறார்கள். வேறுயாரும் அந்தப் பெண்களுடன் உடலுறவு கொள்ளாமல் பார்த்துக் கொள்கிறார்கள். அவர்களில் யாராவது இறந்துபோனால், இவர்கள் மறுமணம் செய்து கொள்வதில்லை. ஆனால் மனைவி கணவனுக்குத் துரோகம் செய்தால் அவளை நஞ்சூட்டிக் கொன்று விடுவார்கள். திருமணம் செய்து கொள்ளாத தம்பிமார்கள் நாயர் பெண்களோடு உடலுறவு கொள்வார்கள்; இதைப் பெரிய கௌரவமாகக் கருதுகிறார்கள். இவர்கள் பிராமணர்கள் ஆதலால் எந்தப் பெண்ணும் இவர்களுக்கு இணங்க மறுப்பதில்லை. ஆனால் இவர்கள் தங்களைக் காட்டிலும் வயதில் மூத்த எந்தப் பெண்ணுடனும் உறவுகொள்ளலாகாது. இவர்கள் தங்கள் சொந்த வீடுகளிலும் நகரங்களிலும் வசிக்கிறார்கள். வழிபாட்டுக் கூடங்களில் குருக்களாகப் பணிசெய்கிறார்கள். ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் இறைவனை வழிபட்டு, சடங்கு செய்து ஆசாரங்களைக் கடைப்பிடிக்கிறார்கள்.

''இந்தப் பிராமணர்கள் சிலர் ஆயுதமெடுப்பது தவிர ஏனைய ஒவ்வொரு வகையிலும் மன்னருக்குச் சேவை புரிகிறார்கள். ஒரு பிராமணர் அல்லது அவரினத்தார் தவிர, வேறுயாரும் மன்னருக்கு எந்த உணவும் சமைக்கக் கூடாது.

இவர்கள் பிற நாடுகளுக்குச் செய்தி கொண்டு செல்லும் பணியை செய்கிறார்கள். கடிதங்கள், பணம் அல்லது வணிகப் பொருட்களைப் பத்திரமாக எடுத்துச் செல்கிறார்கள். யாரும் இவர்களுக்கு எந்தக் கெடுதலும் செய்வதில்லை. மன்னர்கள் போரிட்டுக் கொண்டிருந்தாலும் கூட இதே நிலைதான். இந்தப் பிராமணர்கள் இறைவழிபாட்டில் கற்றுத் தேர்ந்தவர்கள். இதுகுறித்து நூல்கள் பலவும் வைத்திருப்பவர்கள். மன்னர்கள் இவர்களை உயர்வாக மதிக்கிறார்கள்.

''நாயர்களைப் பற்றி முன்பே பலமுறை குறிப்பிட்டுள்ளேன். இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நான் இதுவரை சொல்லவில்லை. இந்த மலபார் நாட்டில் நாயர் எனப்படும் இன்னொரு சாதியினர் இருப்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பிரபுக் குலத்தவராய் இருந்து போரில் பணியாற்றுவதை தவிர இவர்களில் சிலருக்கு வேறு எந்தக் கடமையுமில்லை. இவர்கள் எப்போதுமே எங்குப் போனாலும் ஆயுதம் வைத்திருப்பவர்கள். சிலர் வாளும் கேடயமும் வைத்திருக்க, வேறுசிலர் வில்லும் அம்பும் வைத்திருப்பர்; வேறு சிலர் ஈட்டி வைத்திருப்பர். இவர்கள் அனைவரும் மன்னருடனும் ஏனைய பெரும் பிரபுக்களுடனும் வசிக்கின்றனர். ஆயினும் அனைவருக்கும் மன்னரிடமிருந்து அல்லது இவர்கள் சார்ந்து வசிக்கும் பெரும் பிரபுக்களிடமிருந்து உதவித் தொகை கிடைக்கிறது. நாயர் குல மரபில் வந்தவர்களைத் தவிர வேறு எவரும் நாயராக முடியாது. இவர்கள் அப்பழுக்கில்லாத உயர் குடியினர். கீழ்ச்சாதிக்காரர் எவரையும் இவர்கள் தீண்ட மாட்டார்கள். நாயரின் வீட்டில் அல்லாமல் வேறு எங்கும் உண்ணவோ பருகவோ மாட்டார்கள்.

''இவர்கள் திருமணம் செய்து கொள்வதில்லை. இவர்களின் மருமகன்களே (சகோதரியின் மகன்கள்) இவர்களுக்கு வாரிசுகள். நற்குடிப்பிறந்த நாயர் பெண்கள் மிகவும் சுயேச்சை ஆனவர்கள். இவர்கள் விருப்பம் போல் பிராமணர்களிடமும் நாயர்களிடமும் தங்களை ஒப்புவித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் கீழ்ச் சாதிக்காரர்களுடன் உடலுறவு கொள்ள மாட்டார்கள். அப்படிச் செய்தால் அவர்களுக்கு மரண தண்டனைதான். இவர்களுக்கு பன்னிரண்டு வயதாகும்போது, தாய்மார்கள் ஒரு பெரிய சடங்கு செய்கிறார்கள். மகள் அவ்வயதை அடைந்துவிட்டதாக தாய் கருதும்போது, இரத்த உறவுக்காரர்களை அழைத்து மகளுக்கு

மரியாதை செய்ய அணியமாகும்படி கேட்டுக் கொள்கிறார்கள். உறவுக்காரர்களைக் குறிப்பாக அவர்களில் ஒருவரை அல்லது மிகவும் வேண்டப்பட்ட நண்பர் ஒருவரைத் தன் மகளை மணமுடித்துக் கொள்ளுமாறு வேண்டுகிறாள். அவர் விரும்பி இதற்கு உறுதி அளிக்கிறார். பிறகு அரைச் சவரனில் சிறு நகை ஒன்றைச் செய்து, வெண்பட்டு நூலில் அதைக் கோர்த்து வைத்துக் கொள்கிறார். குறித்த நாளில் தாய், தன் மகளை நகைகளால் ஆடம்பரமாய் அலங்கரித்து விடுகிறாள். இசையும் பாட்டுமாய்ப் பெரும் கொண்டாட்டம்தான். ஏராளமானவர்கள் வந்து குழுமுகிறார்கள். அப்போது அந்த உறவுக்காரர் அல்லது நண்பர் அந்த நகையுடன் வந்து, சில பல சடங்குகளுக்குப் பிறகு பெண்ணின் கழுத்தில் அதை அணிவிக்கிறார். அவள் அதைத்தான் வாழ்நாள் முழுதும் ஓர் அடையாளமாக அணிந்து கொள்கிறாள். ஆனால் அவள் விருப்பம்போல் எவருக்கும் தன்னை அளித்துக் கொள்ளலாம். அந்த ஆள் அவளுடைய இரத்த உறவுக்காரராய் இருந்தால் அவளுடன் படுத்துறங்காமலே புறப்பட்டுப் போய் விடுகிறார். அப்படியில்லை என்றால் அவர் அவளுடன் படுத்துறங்கலாம். ஆனால் அப்படிச் செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பிறகு அந்தத் தாய் தேடி அலைந்து, யாராவது ஓர் இளைஞனிடம் தன் மகளைக் கன்னி கழிக்குமாறு கேட்டுக் கொள்கிறாள். அந்த இளைஞர் நாயராக இருக்க வேண்டும். ஒரு பெண்ணைக் கன்னி கழிப்பது அவமானம் என்றும், அசிங்கம் என்றும் நாயர்களிடையே கருதப்படுகிறது. யாராவது அவளுடன் படுத்து உறங்கி முடிந்ததென்றால், ஆண்களுடன் உறவுக்கு அவள் பொருத்தமாகி விடுகிறாள். பிறகு தாய் மீண்டும் ஒருமுறை தேடிச் சென்று, தன் மகளை ஆதரிக்க விருப்பமா என்று வேறு நாயர் இளைஞர்களிடம் கேட்கிறாள். அவளை ஆசைநாயகியாக வைத்துக் கொள்ளச் சொல்கிறாள். மூன்று நான்கு நாயர்கள் அவளை வைத்துக் கொள்ளவும் அவளுடன் படுத்துறங்கவும் ஒப்புக் கொண்டால், ஒவ்வொருவரும் நாளொன்றுக்கு இவ்வளவு என்று பணம் செலுத்த வேண்டும். ஒருத்திக்கு ஆசை நாயகர்கள் எத்தனை பேர் என்பதைப் பொறுத்து அவளது கௌரவம் கூடுதலாகும். அவர்களில் ஒவ்வொருவரும் அவளுடன் ஒரு நாளைச் செலவிடுகிறார்கள். ஒருநாள் மதியத்திலிருந்து மறுநாள் மதியம் வரை என்ற கணக்கில் மாறி மாறி அவளுடன் இருப்பார்கள். தங்களுக்கிடையே பூசலோ வம்புச் சண்டையோ எதுவுமில்லாமல் இப்படியே தொடர்ந்து வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் யாராவது அவளை விட்டுச் செல்ல விரும்பினால்

அவ்வாறே செய்து, வேறு ஒருத்தியிடம் போய்விடலாம். ஆண்களில் ஒருவரிடம் அவளுக்கு சலிப்பு ஏற்பட்டால் அவளும் கூட அவரைப் போகச் சொல்லலாம். அவன் போய் விடுகிறான் அல்லது அவளுடன் சமரசம் செய்து கொள்கிறான். அவர்களுக்குக் குழந்தைகள் இருந்தால் தாயுடனே தங்கிவிடுவார்கள்; அவள்தான் அவர்களை வளர்க்க வேண்டும். குழந்தைகள் எவருடைய சாயலில் இருந்தாலும் எந்த ஒரு குறிப்பிட்ட ஆணுக்கும் பிறந்தவர்களாகக் கருதப்படுவதில்லை. அந்த ஆண்களும் அவர் களைத் தங்கள் குழந்தைகளாகக் கருதுவதில்லை. அந்தக் குழந்தைகள் அவர்களின் சொத்துடைமைகளுக்கு வாரிசுகள் ஆகவும் முடியாது. ஏனென்றால் நான் முன்பே கூறியதுபோல சகோதரியின் பிள்ளைகள்தான் அவர்களுக்கு வாரிசு ஆவார்கள். (இந்த விதியை நுணுகி ஆராய்ந்தால் பாமர மக்கள் கருதுவதைப் போல் அல்லாமல் ஆழ்ந்த அர்த்தத்துடன்தான் இவ்வாறு செய்யப்பட்டது என்று தெரியவரும்). எப்படி என்றால், நாயர்கள் குழந்தை வளர்க்கிற சுமையாலும் உழைப்பாலும் மன்னர்களுக்கு ஆற்றவேண்டிய தொண்டில் பின்தங்கிவிடக்கூடாது என்பதற்காகத்தான் மன்னர்கள் இந்த நெறியை ஏற்படுத்தியதாகச் சொல்கிறார்கள்.

"இந்த மலபார் ராஜ்யத்தில் வியாபாரிகள் எனப்படும் இன்னொரு சாதியினரும் இருக்கிறார்கள். இவர்கள் இந்திய வணிகர்கள்; இம்மண்ணுக்கு உரியவர்கள். அயல்நாடுகள் இந்தியாவுக்குக் கப்பல் விடுவதற்கு முன்பே இவர்கள் இருந் துள்ளார்கள். கடல் துறை முகங்களிலும் உள்நாட்டிலும் வணிகத் திலிருந்து அதிகப்பட்ச இலாபம் கிடைக்கக்கூடிய இடங்களி லெல்லாம் இவர்கள் சகலவகைச் சரக்குகளிலும் வணிகம் செய்கிறார்கள். நாயர்களிடமிருந்தும் வேளாளர்களிடமிருந்தும் மிளகு, இஞ்சி அனைத்தையும் இவர்கள் கொள்முதல் செய்கிறார் கள். கடல் துறைமுகங்களில் வைத்துள்ள பருத்தித் துணி களுக்கும், ஏனைய சரக்குகளுக்கும் ஈடாக, விளைந்து கொண் டிருக்கும் புதிய பயிரை இவர்கள் முன்கூட்டியே வாங்கி விடுவதும் உண்டு. பிறகு அவற்றை விற்றுப் பெருந்தொகை ஈட்டுவார்கள். இவர்களுக்கென்று சிறப்புரிமைகள் தரப்பட் டுள்ளன. இவர்கள் வாழும் நாட்டின் மன்னர் சட்ட வழி முறைகளின் வாயிலாக இவர்களுக்கு மரண தண்டனை நிறை வேற்ற முடியாது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

''இந்த நாட்டில் குயவர் என்னும் இன்னொரு சாதி மக்களும் இருக்கிறார்கள். இவர்கள் வேறு, நாயர்கள் வேறு அல்ல. ஆனால் இவர்கள் செய்த ஒரு குற்றத்தினால் அவர்களிடமிருந்து வேறாகத் தனித்திருக்கிறார்கள். மண்பாண்டங்கள் செய்வதும், மன்னர்களும் தெய்வச் சிலையும் குடிகொண்டிருக்கும் இல்லங் களுக்கான செங்கல் செய்வதும் இவர்களது வேலை. ஓடுகளுக்கு பதில் செங்கல் கொண்டு இந்த இல்லங்களுக்குக் கூரை வேயப் படுகிறது. மற்றபடி வீடுகளுக்கு மரக் கிளைகளால் கூரை வேயப்படுகிறது. இவர்கள் தங்களுக்கே உரிய தெய்வ வழிபாட்டு முறையையும் தங்களுக்கென்று தனியான குல தெய்வங்களையும் வைத்து வணங்குகிறார்கள்.

''மைனதர்கள் எனப்படும் இன்னொரு மிலேச்ச சாதியும் உள்ளது. மன்னர்களுக்கும் பிராமணர்களுக்கும் நாயர்களுக்கும் துணிவெளுப்பதுதான் இவர்கள் தொழில். இதைக் கொண்டு இவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் வேறு எந்த வேலையும் செய்யலாகாது.

''காளேத்திகள் எனப்படும் கீழ்ச்சாதியினரும் உண்டு. இவர்கள் நெசவாளர்கள். பருத்தி, பட்டு, ஆடைகளை நெய்து கொடுப்பது தவிர, இவர்கள் பொருளீட்டுவதற்கு வேறு வழி யில்லை. ஆனால் இவர்கள் கீழ்ச்சாதியினர்; இவர்களிடம் காசு பணம் அதிகமில்லை. கீழ்ச்சாதியினருக்கு இவர்கள் துணி நெய்து கொடுக்கிறார்கள். தாங்களே விலகி வாழ்ந்து, தங்களுக்கே உரிய குலதெய்வ வழிபாட்டைக் கொண்டிருக்கிறார்கள்.

''மேற்கூறிய சாதிகளைத் தவிர, இன்னும் கீழ்ப்பட் டவையாக பதினொரு சாதிகள் உள்ளன. இவர்களோடு மற்றவர்கள் உறவு கொள்ள மாட்டார்கள், இவர்களைத் தீண்டவும் மாட்டார்கள். தீண்டினால் மரணம்தான். இந்த சாதிகளுக் குள்ளேயே ஒன்றுக்கொன்று பெருத்த வேற்றுமைகள் உள்ளன. இதனால் இவை ஒன்றுடன் ஒன்று கலக்க முடிவதில்லை. இந்த ஏழை எளிய மக்களில் மிகக் கலப்பில்லாதவர்களை துயாக்கள் என்றழைக்கின்றனர்.

இவர்களுடைய வேலை முக்கியமாகப் பனங்காடு களைப் பார்த்துக் கொள்வதும் அவற்றின் கனிகளைத் திரட்டி முதுகில் சுமந்து சென்று அதற்குக் கூலி பெறுவதும் ஆகும்.

ஏனென்றால் இந்த நாட்டில் பொதி சுமக்கும் விலங்குகள் ஏதுமில்லை.

'இவர்களுக்கும் கீழாக மேனன் என்னும் இன்னொரு சாதியினரும் உண்டு (அச்சிட்ட வாசகத்தில் மாங்கு என்றுள்ளது). இவர்கள் மற்றவர்களுடன் உறவு கொள்வதில்லை, அவர்களைத் தொடுவதும் இல்லை, மற்றவர்கள் இவர்களைத் தொடுவதும் இல்லை. இவர்கள் சாதாரண மக்களுக்குத் துணி வெளுப்பவர்கள், பாய் முடைகிறவர்கள். இந்தத் தொழில்களில் இவர்களைத் தவிர வேறுயாரும் ஈடுபடக் கூடாது; இவர்களின் புதல்வர்கள் கட்டாயம் இதே தொழிலைச் செய்ய வேண்டும்; இவர்களுக் கென்று தனியொரு குலதெய்வ வழிபாடு உள்ளது.

''இந்த நாட்டில் இன்னும் கீழே இன்னொரு சாதி உள்ளது. இச்சாதியினரைக் கணக்குகள் என்றழைக்கிறார்கள். வார்ப்பூட்டுகளும் குடைகளும் செய்வது இவர்களின் தொழில். வானவியலுக்காக வேண்டி இவர்கள் எழுத்துக்களைக் கற்றுக் கொள்கிறார்கள். இவர்கள் பெரிய ஆரூடக்காரர்கள். வரப் போகிறவற்றைத் துல்லியமாக முன்கூட்டிச் சொல்லி விடுவார்கள். இதற்கென்றே இவர்களை வைத்துச் சோறு போடுகிற சில கனவான்களும் உண்டு.

''இன்னொரு கீழ்ச்சாதியினர், இவர்களும் மிலேச்சர்கள், ஆசாரிகள் எனப்படுகின்றனர். இவர்கள் கொத்தனார்களாகவும் தச்சர்களாகவும் கொல்லர்களாகவும் உலோகத் தொழிலாளர் களாகவும் வேலை செய்கிறார்கள். சிலர் பொற்கொல்லர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் பொதுவான வம்சா வழியில் வந்தவர்கள். தனிச் சாதியினர். ஏனையவர்களுக்கு இல்லாத தெய்வங்களை உடையவர்கள். இவர்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள். இவர்களின் ஆண் மக்கள் இவர்களது சொத்துக்கு வாரிசாகிறார்கள்; தந்தையரின் தொழிலைக் கற்றுக் கொள்கிறார்கள்.

''இந்த நாட்டில் இன்னும் கீழான இன்னொரு சாதி யினருக்கு 'மோகர்கள்' என்று பெயர். இவர்களும் துயாக்களும் கிட்டத்தட்ட ஒன்றுதான் என்றாலும் ஒருவரை ஒருவர் தீண்ட மாட்டார்கள். அரசரும் அவருடைய பரிவாரமும் இடம்விட்டு இடம் பெயர்ந்து செல்லும் போது அவர்களது உடைமைகளைக்

கொண்டு சேர்க்கும் சுமை தூக்கிகளாக இவர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால் இவர்கள் இந்நாட்டில் மிகச் சில ராகவே இருக்கிறார்கள். இவர்கள் ஒரு தனிச் சாதியினர். இவர்களுக்கென்று திருமணச் சட்டம் ஏதுமில்லை. இவர்களில் பெரும்பாலானவர்கள் கடலை நம்பிப் பிழைக்கிறார்கள். இவர்கள் மாலுமிகள், இவர்களில் சிலர் மீன் பிடிக்கிறவர்கள். இவர்களுக்குக் குலதெய்வம் ஏதுமில்லை. இவர்களை நாயர் களுக்கு அடிமைகள் என்றே சொல்லிவிடலாம்.

''இன்னும் கீழான இன்னொரு சாதி உள்ளது. இவர்களை மோங்கர் என்றழைப்பர். இவர்கள் மீனவர்கள், மீன் பிடிப்பது தவிர வேறு எந்த வேலையும் செய்யாதவர்கள். இருப்பினும் சிலர் மூர்களின் கப்பல்களிலும் ஏனைய மிலேச்சர்களின் கப்பல்களிலும் மாலுமிகளாகச் செல்கின்றனர். இவர்கள் கடலோடுவதில் வல்லவர்கள். இவர்களின் இனம் மிகவும் முரட்டுத்தனமானது. இவர்கள் வெட்கங்கெட்ட திருடர்கள். இவர்கள் திருமணம் செய்து கொள்கிறார்கள். இவர்களின் ஆண் மக்கள் இவர்களுக்கு வாரிசாகிறார்கள். இவர்களின் பெண்கள் ஒழுக்கமில்லாதவர்கள். எவருடனும் உடலுறவு கொள்ளக் கூடியவர்கள். அதனை ஒரு கேடாகக் கருதாதவர்கள். இவர்களுக்கென்று குலதெய்வ வழிபாடு உள்ளது.

''இந்த மலபார் நாட்டில் இன்னும் கீழ்நிலையில் மிலேச்சர்களின் இன்னொரு சாதி உள்ளது. இவர்களை பெத்துரனர்கள் என்பர். இவர்களின் தொழில் உப்புக் காய்ச்சுவதும் நெல் விளைவிப்பதும் ஆகும். இவர்களுக்கு வேறு எந்தப் பிழைப்பும் இல்லை.

''இவர்கள் வசிக்கும் வீடுகள் சாலைகளிலிருந்து வெகுதூரம் ஒதுங்கி வயல்களில் தனித்து நிற்கும் ஒற்றை வீடுகளாகும். கனவான்கள் அந்தப் பக்கம் செல்ல மாட்டார்கள். இவர்களுக்கென்று குலதெய்வ வழிபாடு உள்ளது. இவர்கள் மன்னர்களுக்கும் நாயர்களுக்கும் அடிமைகளாக இருந்து, வாழ்நாள் முழுதும் வறுமையில் உழன்று சாகிறார்கள். நாயர்கள் இவர்களைத் தங்களிடமிருந்து தூர விலகிச் செல்லும்படியும், தொலைவிலிருந்தே தங்களிடம் பேசும்படியும் செய்வார்கள். இவர்கள் வேறெந்தச் சாதியுடனும் எவ்வகையிலும் உறவாடு வதில்லை.

''இன்னுங் கீழாகவும் முரட்டுத்தனமாகவும் உள்ள மிலேச்சர்களின் இன்னொரு சாதி உண்டு. இவர்களை பானீனர்கள் என்பர். இவர்கள் பெரும் மந்திரவாதிகள். பிழைப்பதற்கு இது தவிர வேறு எந்த வழியும் இல்லாதவர்கள்.

இன்னுங் கீழாகவும் முரட்டுத்தனமாகவும் இன்னொரு சாதி உள்ளது. இவர்களுக்கு ரெவோலியர்கள் என்று பெயர். இவர்கள் மிகவும் வறியவர்கள்; நகரங்களுக்கு விறகும் புல்லும் சுமந்துசென்று பிழைப்பவர்கள். இவர்கள் எவரையும் தீண்டலாகாது. வேறு எவரும் இவர்களைத் தீண்டலுமாகாது. மீறினால் மரணம்தான். இவர்கள் ஆடை உடுத்துவதில்லை, அந்தரங்க உறுப்புகளை மட்டும் கந்தல் துணியால் மறைத்துக் கொள்கின்றனர்; குறிப்பிட்ட மரங்களின் இலைகளைக் கொண்டு மறைத்துக் கொள்வோரும் உண்டு. இவர்களின் பெண்கள் காதிலும் கழுத்திலும் கைகால்களிலும் தலையிலும் ஏராளமாய்ப் பித்தளை வளையங்களும் ஆரங்களும் காப்புகளும் அணிந்து கொள்கிறார்கள்.

''இவர்களை விடவும் கீழான இன்னொரு மிலேச்ச சாதியினர் உண்டு. இவர்களை போலியர்கள் என்பர். மற்ற அனைவரை விடவும் சபிக்கப்பட்டவர்களாகவும் சமுதாயத்திலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டவர்களாகவும் இவர்கள் கருதப்படுகிறார்கள். இவர்கள் வயல்களிலும் இரகசியமான மறைவிடங்களிலும் வசிக்கிறார்கள். மேற்சாதி மக்கள் இந்த இடங்களுக்குத் தற்செயலாகப் போனால்தான் உண்டு. இவர்கள் மிகவும் குறுகிச் சிறுத்த குடிசைகளில் வசிக்கிறார்கள். எருமைகளையும், எருதுகளையும் பயன்படுத்தி நெல் வயல்களை உழவு செய்கிறார்கள். தொலைவிலிருந்து மட்டுமே நாயர்களிடம் பேசுவார்கள். அவர்களுக்குக் கேட்க வேண்டும் என்பதற்காகக் கத்திப் பேசுவார்கள். இவர்கள் சாலையில் செல்லும்போது உரக்க ஒலியெழுப்பியபடி செல்வார்கள்; யாரும் எதிர்ப்பட்டுவிடக் கூடாதாம். ஒலி கேட்கிற எவரும் சாலையை விட்டு விலகிப் போய் விடுவார். இவர்கள் கடந்து போகிறவரைக்கும் ஒதுங்கிக் காட்டில் நின்றுகொள்வார். ஆணோ பெண்ணோ ஒருவர் இவர்களைத் தீண்டிவிட்டால் அவரின் உறவுக்காரர்கள் உடனே அவரைக் கொன்றுவிடுவார்கள். ஆகவே பழிக்குப்பழி என்ற முறையில் அவர்கள் போலியர்களைக் கொன்றுவிடுவார்கள். இப்படிக் கொலை செய்ததற்காக அவர்கள் எத்தண்டனையும் அனுபவிக்க வேண்டியதில்லை.

''இன்னும் கீழாகவும் இழிவாகவும் கருதப்படுகிற மற்றுமொரு சாதியினர் ''பறையர்'' எனப்படுகின்றனர். இவர்கள் ஏனைய எல்லா சாதிகளிடமிருந்தும் விலகி மிகவும் தனித்தொதுங்கிய இடங்களில் வசிக்கிறார்கள். இவர்கள் எவருடனும் எவ்விதத்தும் உறவாடுவது கிடையாது, எவரும் இவர்களுடன் உறவாடுவதும் கிடையாது. இவர்கள் சைத்தான் களை விடவும் மோசமானவர்கள் என்றும், சபிக்கப்பட்டவர்கள் என்றும் கருதப்படுகிறவர்கள். இவர்களைப் பார்த்தாலே போதும், தீட்டு ஒட்டிக்கொள்ளும், சாதி கெட்டுப் போகும். இவர்கள் வள்ளிக் கிழங்கும் ஏனைய காட்டுக் கிழங்குகளும் உண்கிறார்கள். உடலில் நடுப்பாகத்தை இலை தழைகளால் மறைத்துக் கொள்கிறார்கள். காட்டு விலங்குகளின் இறைச்சியும் கூட உண்கிறார்கள்.

''மிலேச்சர்களின் சாதிகளிடையிலான வேற்றுமைகளே இவையெல்லாம். மொத்தம், பதினெட்டு சாதிகள் உள்ளன. ஒவ்வொன்றும் தனித்தனியாகவும் மற்ற சாதியினரைத் தீண்டவோ அவர்களுடன் திருமண உறவு கொள்ளவோ இயலாதவையாகவும் உள்ளன. மலபார் மண்ணுக்குரிய மிலேச்சர்களின் இந்தப் பதினெட்டு சாதிகளைத் தவிர வெளியிலிருந்து வந்த வணிகர்கள் மற்றும் கைவினைத் தொழிலாளர்களும் இந்நாட்டில் உள்ளனர். இவர்களுக்கு வீடுகளும் தோட்டங்களும் சொந்தமாய் உள்ளன. இவர்கள் மண்ணுக்குரியவர்களைப் போலவே, ஆனால் தமக்குரிய பழக்கவழக்கங்களுடன் வாழ்ந்து வருகிறார்கள்.''

இந்த அயல் நாட்டவரால் சாதி குறித்து உண்மையான, விவரமான ஒரு படப்பிடிப்பைத் தர இயலவில்லை. இது புரிந்து கொள்ளத்தக்கதே. அயல்நாட்டவர் ஒவ்வொருவருக்கும் இந்துவின் சொந்த வாழ்க்கை மூடுமந்திரமாகவே இருக்கிறது. அதனை ஊடுருவிப் பார்க்க அவரால் முடிவதில்லை. மேலும், இந்தியாவின் சமூக ஒழுங்கமைப்பு, அதன் உந்துவிசைகளின் செயற்பாடு என்பது ஒரு சட்டப் பாடப்புத்தகத்திலிருந்து பொறுக்கி எடுக்கக் கூடிய ஏதேனும் ஒரு சட்டச் சூத்திரத்தால் நிர்ணயிக்கப்படுவதைக் காட்டிலும் பன்மடங்கு கூடுதலாய் வழக்காற்றினால் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த வழக்காறு இடத்துக்கு இடம் மாறக் கூடியதும் திணறடிக்கும் சிக்கல்கள் நிறைந்ததும் ஆகும். ஆனால் இந்து சமுதாயத்தை வேறுபடுத்திக் காட்டும் முதன்மையான கூறு சாதிதான் என்று அயல்நாட்ட வருக்குத் தோன்றியதில் வியப்பேதுமில்லை. இல்லையேல் அவர்கள்

இந்தியாவுக்கு வந்தபோது பார்த்தவற்றைப் பதிவு செய்கையில் சாதி இருப்பதைக் குறித்திருக்க மாட்டார்கள்.

ஆகவே சாதி என்பது இந்து சமூக ஒழுங்கமைப்பில் தனியானதொன்று, இந்துக்களை ஏனைய மக்களினங்களிடமிருந்து வேறுபடுத்தி அடையாளங் காட்டுகிற ஒன்று. சாதி என்பது வளர்ந்து செல்லும் நிறுவன ஏற்பாடாக இருந்துள்ளது. காலமெல்லாம் மாறாத ஒன்றாக அது இருந்திடவில்லை. மெகஸ்தனிஸ் தன் குறிப்பை எழுதியபோது சாதிக்கிருந்த உருவமும் வடிவமும் அல்பெருனி வந்தபோது அதற்கிருந்த உருவத்திலிருந்தும் வடிவத்திலிருந்தும் பெரிதும் மாறுபட்டிருந்தது. போர்த்துக்கீசியருக்கு அது காட்டிய தோற்றம் அல்பெருனீயின் காலத்தில் இருந்ததிலிருந்து மாறுபட்டிருந்தது. ஆனால் சாதியை நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால் இந்த அயல்நாட்டவர்களால் சொல்ல முடிந்திருப்பதைக் காட்டிலும் இன்னுங்கூடத் துல்லியமாய் அதன் இயல்பை அறிந்து கொள்ள வேண்டும்.

சாதி எனும் பொருள் குறித்துத் தொடர்ந்து விவாதிப்பதாய் இருந்தால், இந்து சமூக ஒழுங்கமைப்பின் அடிநாதமாய் உள்ள சில அடிப்படைக் கருத்தோட்டங்களை வாசகர்கள் அறியச் செய்தாக வேண்டும். இந்துக்களிடையே நிலவும் சமூக ஒழுங்கமைப்பின் அடிப்படைக் கண்ணோட்டம் இந்து சமுதாயத்திற்குள் நான்கு வகுப்புகள் அல்லது வர்ணங்கள் பிறப்பதிலிருந்து ஆரம்பமாகிறது. இந்து சமுதாயம் இந்த நான்கு வகுப்புகளாகவே பிரிக்கப்பட்டுள்ளது. இந்நான்கு வகுப்புகளாவன: (1) பிராமணர்கள் - குருமார்களும் படித்தவர்களுமான வகுப்பு (2) சத்திரியர்கள் - படைத்துறை வகுப்பினர் (3) வைசியர்கள் - வணிக வகுப்பு (4) சூத்திரர்கள் - வேலைக்கார வகுப்பினர். சிறிது காலம் இவை வகுப்புகளாக மட்டுமே இருந்தன. வகுப்புகளாக (வர்ணங்கள்) மட்டும் இருந்தவை பிறகு சாதிகளாயின. நான்கு சாதிகள் நான்காயிரமாயின. இவ்விதம் நவீன சாதியமைப்பானது பழங்காலத்திய வர்ண அமைப்பின் பரிணாம வளர்ச்சிதான்.

சாதி அமைப்பு, வர்ண அமைப்பின் பரிணாம வளர்ச்சி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வர்ண அமைப்பை ஆராய்வதன் மூலம் சாதியமைப்பை நம்மால் புரிந்து கொள்ள முடியாது. சாதியை வர்ணத்திலிருந்து வேறாக நாம் ஆராய்ந்திட வேண்டும்.

# 2

ஒரு பழைய சம்சயவாதி தன் மெய்யியலைப் பின்வருமாறு சுருக்கிச் சொன்னாராம்:

"நான் அறிந்த ஒன்றே ஒன்று எதையும்
அறியவில்லை என்பதே. அதை நான்
அறிந்துள்ளேன் என்றும் அவ்வளவு
உறுதியாகச் சொல்ல முடியாது"

பஞ்சாபில் சாதி என்பது குறித்து எழுத முற்பட்ட சர் டென்ஸில் இபர்ட்சன், மேற்கூறிய சம்சயவாதி அவரது மெய்யியல் தொடர்பாகச் சொன்னது சாதி தொடர்பாகத் தன் எண்ணங்களை மிகத் துல்லியமாய் வெளியிடுவதாகக் குறிப்பிட்டார். வட்டாரச் சூழ்நிலைமைகளின் காரணத்தால் சாதியமைப்பில் ஓரளவுக்கு வேறுபட்ட தன்மைகள் வெளிப்படுகின்றன என்பதும், சாதிகளில் எந்த ஒரு சாதி தொடர்பாக வும் எல்லா வட்டாரங்களுக்கும் அறுதியாகப் பொருந்தும்படி ஏதும் சொல்வது மிகக் கடினம் என்பதும் மெய்தான். ஒரு சாதி குறித்து ஒரு வட்டாரத்தைப் பொறுத்தவரை சொல்லக்கூடிய செய்திகள், அதே சாதி குறித்து வேறு ஒரு வட்டாரத்தைப் பொறுத்தவரை சொல்லக் கூடிய செய்திகளுடன் முரண்படாதிருக்கும் என்று உறுதி யளிப்பதற்கில்லை.

என்ற போதிலும், சாதியின் சாரமான, அடிப்படையான கூறுகளை அதன் சாரமல்லாத, மேற்போக்கான கூறுகளிலிருந்து வேறுபடுத்திப் பிரிப்பது கடினமன்று. ஒருவரை சாதியிலிருந்து விலக்கி வைப்பதற்கான காரணிகள் எவை என்று கேட்டறிவது ஓர் எளிய அணுகுமுறையாகும். சாதியிலிருந்து வெளியேற்றுவதற்கான கார ணங்களைத் திரு. பட்டாச்சாரியார் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்: (1) கிறித்தவ அல்லது இஸ்லாமிய சமயத்தைத் தழுவுதல்; (2) ஐரோப்பா அல்லது அமெரிக்காவிற்குச் செல்லுதல் (3) கைம்பெண்ணை மணம் புரிதல்; (4) பூணூலை பகிரங்கமாகக் கழற்றி எறிதல்; (5) மாட்டுக் கறி, பன்றிக் கறி அல்லது பறவைக் கறி பகிரங்கமாக உண்ணுதல்; (6) ஒரு முகம்மதியரோ கிறித்தவரோ கீழ்ச்சாதி இந்துவோ சமைத்த உணவை பகிரங்கமாக உண்ணுதல்; (7) மிகவும் கீழ்ச்சாதியைச் சேர்ந்த ஒரு சூத்திரனின் வீட்டில் பணியாற்றுதல்; (8) வீட்டிலிருந்து தொலைவாகச் செல்லும் ஒரு பெண்ணிடம் ஒழுக்கக்கேடாக நடந்து கொள்ளுதல்; (9) கைம்பெண் கருவுறுதல். இந்தப் பட்டியல் முழுமையானதன்று.

சாதியிலிருந்து வெளியேற்றப்படுவதற்கான இரு மிக முக்கியக் காரணங்கள் இதில் விடுபட்டுள்ளன. அவையாவன: (10)) சாதி விட்டு சாதி கலப்பு மணம் செய்தல்; (11) வேற்றுசாதியினருடன் சேர்ந்து சாப்பிடுதல்; (12) தொழிலை மாற்றிக் கொள்ளுதல். திரு. பட்டாச்சார்யா வின் கூற்றிலுள்ள இரண்டாவது குறைபாடு என்னவென்றால், அடிப்படைக் கூறுகளும் அடிப்படை அல்லாத கூறுகளும் எவ்வகை யிலும் வேறுபடுத்திக் காட்டப்படவில்லை என்பதுதான். ஒருவர் தன் சாதியிலிருந்து வெளியேற்றப்படும் போது தண்டனை ஒரேசீராக இருப்பது மெய்தான். இவருடைய நண்பர்களும் உறவினர்களும் சக மனிதர்களும் இவரது விருந்தோம்பலை ஏற்க மறுக்கிறார்கள். அவர்களின் வீடுகளில் நடக்கும் விழாக்களுக்கு இவரை அழைப்ப தில்லை. இவரின் பிள்ளைகளுக்கு மணமகனோ, மணமகளோ கிடைப்பதில்லை. இவரின் மணமான புதல்விக்ளும் கூட இவரைப் பார்க்க வர முடியாது. வந்தால் அவர்களும் சாதியிலிருந்து நீக்கப்படும் ஆபத்து உள்ளது. இவருடைய புரோகிதரும், சவரத் தொழிலாளியும், சலவைத் தொழிலாளியும் இவருக்குப் பணி செய்ய மறுத்து விடுகிறார் கள். இவருடைய சாதிக்காரர்கள் இவருடனான தொடர்பை அறவே அறுத்துக் கொள்கிறார்கள். இவரது குடும்பத்தில் ஒருவர் இறந்தால் அந்த இறுதிச் சடங்கிலும் கூட உதவ மறுத்து விடுகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். சில இடங்களில், சாதியிலிருந்து விலக்கப் பட்டவர் பொதுக் கோயில்களிலும் சுடுகாடு அல்லது இடுகாட்டிலும் கூட நுழைவதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

சாதியிலிருந்து வெளியேற்றுவதற்கான இந்தக் காரணங்கள் சாதியின் விதிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் துலாம்பர மாக வெளிப்படுத்துகின்றன. ஆனால் எல்லா விதிகளும் அடிப்படை யானவை அல்ல. அடிப்படை அல்லாத பல விதிகளும் உள்ளன. இவை இல்லாமலே சாதி என்ற ஒன்று இருக்க முடியும். மற்றொரு கேள்வியைக் கேட்டுப் பார்த்தால் அடிப்படையானதையும் அடிப்படை அல்லாததை யும் வேறுபடுத்திக் காணமுடியும். சாதி இழந்த ஓர் இந்து எப்போது தன் சாதியை மீளப் பெற முடியும்? பிராயச்சித்தங்கள் என்று இந்துக்கள் ஒரு முறை வைத்திருக்கிறார்கள். சாதியிலிருந்து நீக்கப்பட்ட ஒருவர் தன் சாதி சனத்தில் மீண்டும் சேர்க்கப்பட வேண்டுமானால் இந்தப் பிராயச் சித்தங்களைச் செய்தாக வேண்டும். இந்தப் பிராயச்சித்தங்களைப் பொறுத்தவரை ஒரு சில முக்கியக் கூறுகளை நினைவிற் கொள்ள வேண்டும். முதலாவதாகப், பிராயச்சித்தமே இல்லாத சாதிக் குற்றங்கள் உள்ளன. இரண்டாவதாக், குற்றத்தைப் பொறுத்துப் பிராயச்சித்தங்கள் மாறுபடுகின்றன. சில நேர்வுகளில் மிகச்சிறு தண்டத் தொகையே

பிராயச்சித்தமாகி விடுகிறது. மிகக் கடுமையாக தண்டம் விதிக்கப்படும் நேர்வுகளும் உண்டு.

பிராயச்சித்தம் என்ற ஒன்று இருப்பதும், அது இல்லாமற் போவதும் பொருள் பொதிந்தது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பிராயச்சித்தம் இல்லை என்பதன் பொருள் அந்தக் குற்றத்தை யார் வேண்டுமானாலும் அச்சமின்றிச் செய்யலாம் என்பதன்று. மாறாகக், குற்றம் அளவிடற்கரிய ஒன்று, குற்றவாளியை நீக்கிவிட்டால் பிறகு மீட்கவே முடியாது என்பதே இதன் பொருள். அவர் எந்தச் சாதியிலிருந்து வெளியேற்றப்படுகிறாரோ அந்தச் சாதியில் மீண்டும் சேருவதற்கு அனுமதியில்லை. பிராயச்சித்தம் இருக்கிறது என்றால், அந்தக் குற்றம் ஒத்துப்போகச் செய்யும்படியானதே என்று பொருள். குறிப்பிட்ட பிராயச்சித்தத்தை மேற்கொண்டு, குற்றவாளி தன்னை வெளியேற்றிய சாதியில் சேர்ந்து கொள்ளலாம்.

பிராயச்சித்தமே இல்லாத இரு குற்றங்கள் உண்டு. அவை யாவன: (1) இந்து சமயத்திலிருந்து வேறு சமயத்துக்கு மாறுதல்; (2) வேறுசாதி அல்லது வேறு சமயத்தைச் சார்ந்த ஒருவருடன் திருமணம். ஒருவர் இந்தக் குற்றங்களுக்காகச் சாதியை இழந்தால், இழந்தது இழந்ததுதான் என்று கண்கூடாய்த் தெரிகிறது.

மிகக் கடுமையான பிராயச்சித்தம் செய்ய வேண்டிய ஏனைய குற்றங்களில் இரண்டு வருமாறு: (1) வேறு சாதியைச்சார்ந்த ஒருவருடன் அல்லது இந்து அல்லாத ஒருவருடன் சேர்ந்து உண்ணுதல்; (2) சாதிக்குரிய தொழிலல்லாத வேறு தொழில்களை மேற்கொள்ளுதல். இதர குற்றங்களைப் பொறுத்தவரை தண்டனை இலகுவானது, அநேகமாய்ப் பெயரளவுக்கானது.

சாதியின் அடிப்படை விதிகள் யாவை, சாதி என்பது எதில் அடங்கியுள்ளது என்ற கேள்விக்கு உறுதியான விடையளிப்பவை பிராயச்சித்தம் தொடர்பான விதிகளே. எந்த விதிகளை மீறினால் பிராயச்சித்தம் கிடையாதோ அவைதாம் சாதியின் ஆன்மா ஆகும்; எவற்றை மீறுவதற்கு மிகக் கடுமையான பிராயச்சித்தம் செய்தாக வேண்டுமோ அவைதாம் சாதியின் உடலாகும். ஆகவே சாதிக்கு நான்கு அடிப்படை விதிகள் இருப்பதாகத் தயங்காது கூறலாம். (அ) இந்து சமயத்தில் நம்பிக்கை கொண்டிருப்பதும், (ஆ) திருமணம், (இ) உணவு, (ஈ) தொழில் ஆகியவை தொடர்பான குறிப்பிட்ட சில விதிமுறைகளுக்குக் கட்டுண்டிருப்பதுமான ஒரு சமூகக் குழுவே சாதி

என்று இலக்கணம் கூறலாம். இத்தோடு இன்னொரு தனித்தன்மையையும் சேர்த்துக் கொள்ளலாம், அதாவது தன்னை இனங்காட்டுகிற ஒரு பொதுப் பெயரைப் பெற்றுள்ள சமூகக் குழு எனலாம்.

திருமணத்தைப் பொறுத்தவரை அகமணம்தான், அதாவது சாதிக்குள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதுதான் விதிமுறை. வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்களிடையே கலப்புத் திருமணம் கூடவே கூடாது. சாதியின் முழுக் கட்டமைப்புக்குமான முதற் கருத்து, மிக அடிப்படையான கருத்து இதுவே.

உணவைப் பொறுத்தவரை, ஒருவர் தன் சாதியைச் சேராத எவரிடமிருந்தும் உணவு பெற முடியாது, அவருடன் சேர்ந்துண்ண முடியாது என்பதே விதி. ஒருவருக்கொருவர் திருமணம் செய்து கொள்ளக் கூடியவர்கள்தான் சேர்ந்துண்ணவும் முடியும் என்பது இதன் பொருள். மண உறவு கொள்ள முடியாதவர்கள் சேர்ந்துண்ண முடியாது. அதாவது சாதி என்பது ஓர் அகமண அலகு மட்டுமன்று, அது ஒரு கூட்டுச் சமுதாய அலகுமாகும்.

தொழிலைப் பொறுத்த வரை, ஒருவர் தன் சாதியின் பரம்பரைத் தொழிலைத்தான் செய்யவேண்டும்: சாதிக்குத் தொழிலேதும் இல்லையென்றால் தந்தையின் தொழிலைச்செய்து வரவேண்டும் என்பது விதி.

ஒருவரின் தகுநிலையைப் பொறுத்தவரை அது நிலையானது, வழிவழியாக வரப்பெறுவது. ஒருவரின் தகுநிலை அவர் சார்ந்த சாதியின் தகுநிலையால் நிர்ணயிக்கப்படுவதால் நிலையானது என்கிறோம். இந்துவாகிய ஒருவருக்கு அவரது பெற்றோர் சார்ந்த சாதியின் முத்திரை குத்தப்பட்டு விடுவதால், அது வழிவழியாக வரப்பெறுவது என்கிறோம். ஓர் இந்து தன் சாதியை மாற்றிக் கொள்ள முடியாது என்பதால் தன் தகுநிலையையும் மாற்றிக் கொள்ள முடியாது. ஓர் இந்து ஒரு சாதியில் பிறக்கிறார், பிறந்த சாதியைச் சேர்ந்தவராகவே இறந்தும் போகிறார். ஓர் இந்து சாதியை இழந்தால் தன் தகுநிலையை இழக்கிறார். ஆனால் அவர் ஒரு புதிய அல்லது மேம்பட்ட அல்லது வேறான தகுநிலையை ஈட்டமுடியாது.

ஒரு சாதிக்கென்று ஒரு பொதுப்பெயர் இருப்பதன் முக்கியத்துவம் என்ன? அவசியமான இரு கேள்விகளைக் கேட்டுப் பார்த்தால் இந்த முக்கியத்துவம் தெளிவாகத் தெரியவரும். இந்த இரு கேள்விகளில்

ஒவ்வொன்றுக்கும் சரியான விடை அளித்தல் சாதி என்னும் இந்நிறுவன ஏற்பாட்டை முழுமை யாகப் புரிந்து கொள்ள இன்றியமையாதது. சமூகக் குழுக்கள் ஒழுங்கமைந்தோ, ஒழுங்கமையாமலோ உள்ளன. குழுவில் உறுப்பினராய் இருப்பதும், குழுவில் சேருவதும், அதை விட்டு வெளியேறுவதுமான நிகழ்வும் திட்டவட்டமான சமூக விதிமுறைகளுக்கு உட்பட்டவையாக இருக்கும்போது, குழுவின் ஏனைய உறுப்பினர்கள் தொடர்பாகக் குறிப்பிட்ட சில கடமைகளை யும் உரிமைகளையும் அவசியப்படுத்தும்போது, அக்குழுவை ஒழுங்கமைந்த குழு எனலாம். ஒரு குழுவில் சேரும் உறுப்பினர்கள் தாங்கள் என்ன செய்கிறோம் என்பதையும், அக்குழு கூடி நிறைவேற்ற வேண்டிய நோக்கங்களையும் முழுமையாகத் தெரிந்து கொண்டு சேரும்போது, அது ஒரு விரும்பிச் சேர்ந்த குழுவாகும். இவற்றில் தனிப்பட்ட ஒருவர் தானாக விரும்பி எதையும் செய்யாமலே உறுப்பினராகி விடுகிறார், தன்னால் எவ்வகையிலும் கட்டுப்படுத்த முடியாத சமூக விதிமுறைகளுக்கும் பாரம்பரியங்களுக்கும் உட்பட் டவராகி விடுகிறார்.

சாதி என்பது மிகவும் ஒழுங்கமைந்த ஒரு சமூகக் குழுச்சேர்க்கை என்பது கூறாமல் விளங்கும். அது ஒரு தளர்வான அல்லது நிலை யில்லாத அமைப்பன்று. இதேபோல் சாதி என்பது விரும்பிச்சேராத ஒரு குழுச்சேர்க்கை என்பதையும் சொல்லத் தேவையில்லை. எந்த இந்துவும் ஒரு சாதியில் பிறந்து அந்தச் சாதியைச் சேர்ந்தவராகவே இறக்கிறார். சாதியில்லாத இந்து எவரும் இல்லை. இந்துவால் சாதியிலிருந்து தப்பமுடியாது; பிறப்பிலிருந்து இறப்புவரை சாதிக்குக் கட்டுண் டிருப்பதால், அவர் தன்னால் கட்டுப்படுத்தமுடியாத சாதிக்குரிய சமூகவிதிகளுக்கும் பாரம்பரியங்களுக்கும் உட்பட்டவராகிறார்.

ஒரு சாதிக்கென்று தனியாக ஒருபெயர் இருப்பதன் முக்கியத் துவம் என்னவென்றால், இப்பெயர்தான் சாதியை ஒழுங்கமைந்த குழுச்சேர்க்கையாகவும் விரும்பிச் சேர்க்காத குழுச் சேர்க்கையாகவும் ஆக்குகிறது. ஒரு சாதிக்கென்று வேறுபட்டதொரு தனிப்பெயர் இருப்பது சாதியை நிரந்தர வாழ்வும் தனிக்கூறு எனும் முத்திரையும் கொண்ட தொழிற்கழகம் போன்றதாக்கிவிடுகிறது. தனித்தனிச் சாதிகளுக்கு தனித்தனிப்பெயர்கள் இருப்பதன் முக்கியத் துவத்தை சாதி குறித்து எழுதிய எழுத்தாளர்கள் போதிய அளவுக்கு உணரவில்லை. ஆகவே, சாதிச் சமூகக் குழுக்களுக்குரிய ஒரு தனிச்சிறப்பான பண்புக்கூறு ஒவ்வொரு சமுதாயத்திலும் இருக்கிறது, இருந்தாக வேண்டும் என்பதை அவர்கள் பார்க்கத் தவறிவிட்டார்கள். பல நாடுகளிலும் இருக்கிற பல சமூகக் குழுக்களை இந்தியாவில் உள்ள

பல்வேறு சாதிகளுக்கும் சமன்படுத்தமுடியும்; இவற்றின் சமதையாகக் கருதவும் செய்யலாம். சமூகக் குழுக்கள் என்றமுறையில் மண்பாண்டம் செய்கிறவர்களும் சலவைத் தொழிலாளர்களும் அறிவாளர்களும் எங்கெங்கும் இருக்கிறார்கள். ஆனால் ஏனைய நாடுகளில் அவர்கள் ஒழுங்கமையாத, விரும்பிச் சேர்ந்த குழுக்களாகவே இருந்துள்ளார்கள்; இந்தியாவிலோ ஒழுங்கமைந்த, விரும்பிச் சேராத குழுக்கள் ஆகி விட்டார்கள்; அதாவது சாதிகள் ஆகிவிட்டார்கள். வேறுநாடுகளில் இந்த சமூகக் குழுக்களுக்குப் பெயர் தரப்படவில்லை, இந்தியாவில் தரப் பட்டது என்பதே காரணம். சாதி சூடியுள்ள பெயர்தான் அதற்கு நிலைத்தன்மையும் தொடர்ச்சித் தன்மையும் தனித்தன்மையும் அளிக் கிறது. அதன் உறுப்பினர்கள் யார் என வரையறுப்பதே பெயர்தான். ஒரு சாதியிற்பிறந்தவர் பெரும்பாலும் தன் பெயருடன் சாதிப்பெயரைச் சேர்த்துக் கொள்கிறார். சாதியானது அதன் விதிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் செயலாக்குவது பெயரால் தான் எளிதாகிறது. இது இரு வழிகளில் நடைபெறுகிறது. முதலாவதாக, தனிமனிதனின் துணைப் பெயராகிற சாதிப்பெயரானது, விதியை மீறுகிற எவரும் தான்வேறு சாதியைச் சேர்ந்தவன் என்று சொல்லி ஏமாற்றி விடாமலும், இவ்விதம் சாதியின் மேலுரிமையிலிருந்து தப்பி விடாமலும் தடுக்கிறது. இரண்டாவதாக, விதியை மீறும் தனி மனிதரையும் அவர் எந்தச் சாதியின் மேலுரிமைக்கு உட்பட்டவர் என்பதையும் அடையாளம் காட்டுவதற்கு அது பயன்படுகிறது; இவ்விதம் சாதி விதி மீறலுக்காக அவரைப் பிடித்துத் தண்டிப்பது எளிதாகிறது.

சாதி என்பதன் பொருள் இதுதான். இப்போது சாதி அமைப்புக்கு வருவோம். வெவ்வேறு சாதிகளும் தமக்கிடையில் ஒன்றுக்கொன்று கொண்டிருக்கும் உறவுகளை ஆய்வு செய்திட வேண்டும். சாதிகளின் ஒரு கூட்டுச்சேர்க்கையாகப் பார்க்குமிடத்து, சாதியமைப்பு வெளிப் படுத்தும் பல பண்புக்கூறுகள் ஆய்வாளரின் மனத்தில் உடனே பதிகின்றன. முதலாவதாக ஓர் அமைப்பின் அங்கங் களாக உள்ள பல்வேறு சாதிகளுக்குள் இடைத் தொடர்பு ஏதுமில்லை. ஒவ்வொரு சாதியும் வேறுவேறாகவும் தனித்தனியாகவும் உள்ளது. தன் உள் விவகாரங்களைத் தீர்வு செய்வதிலும் சாதிக்கட்டுப்பாடுகளைச் செயலாக்கு வதிலும் அது சுயேச்சையானது, இறைமை கொண்டது. சாதிகள் தொட்டுக் கொள்கின்றன, ஆனால் ஒன்றுக்குள் ஒன்றாக ஊடாடுவதில்லை. இரண்டாவது கூறு என்பது, சாதிய அமைப்பில் ஒரு சாதி மற்ற சாதிகள் தொடர்பாக எந்த வரிசையில் நிற்கிறது என்பதாகும். இந்த வரிசை செங்குத்தானதே தவிர படுகிடையானதன்று.

அதாவது, சாதிகள் தகுநிலையில் சமமானவை அல்ல. அவற்றின் வரிசை ஏற்றத்தாழ்வை அடிப்படையாக கொண்டது. ஒரு சாதி இன்னொரு சாதிக்கு உயர்ந்தது அல்லது தாழ்ந்தது. சாதிகளின் படிக்கட்டில் ஒரு சாதி உச்சியிலுள்ளது. அதுதான் மிக உயர்ந்த சாதி, இன்னொரு சாதி அடியில் உள்ளது, அதுதான் மிகத் தாழ்ந்த சாதி. இரண்டுக்குமிடையே பல சாதிகள் உள்ளன. இவற்றில் ஒவ்வொன்றும் ஒரே நேரத்தில் ஏதோ ஒரு சாதிக்கு மேலாகவும் ஏதோ ஒரு சாதிக்கு கீழாகவும் உள்ளன. சாதி அமைப்பு, ஒரு படிவரிசை அமைப்பாகும். இந்தப் படிவரிசையில் மிக உயர்ந்த சாதியையும் மிகத்தாழ்ந்த சாதியையும் தவிர ஏனைய ஒவ்வொரு சாதிக்கும் வேறு ஏதோ சாதியின் மீது முன்னுரிமையும் முதன்மையும் உள்ளது.

இந்த முதன்மை அல்லது இந்த உயர்நிலை எவ்வாறு நிர்ண யிக்கப்படுகிறது? உயர்வும் தாழ்வுமான இந்த வரிசை அல்லது இந்தச் சீரற்ற நிலைமை (!) சமயச்சடங்குகள் தொடர்பான, (உ) திருமண உறவு தொடர்பான விதிகளால் நிர்ணயிக்கப்படுகிறது.

முன்னுரிமை விதிகளின் அடிப்படையாக சமயம் அமைவது மூன்று வழிகளில் வெளிப்படுகிறது. முதலாவதாக சமயச் சடங்குகளின் வாயிலாகவும், இரண்டாவதாக சமயச்சடங்குகளோடு இணைந்துவரும் மந்திரங்களின் வாயிலாகவும், மூன்றாவதாகப் புரோகிதர் வாயிலாகவும் இது நிகழ்கிறது. சடங்குகள் முன்னுரிமை விதிகளுக்கு அடிப்படை ஆவதிலிருந்து தொடங்கலாம். இந்து ஆகமங்கள் பதினாறு சமயச் சடங்குகளை விதிக்கின்றன என்பதைக் குறித்துக் கொள்ள வேண்டும். அவை இந்துச் சடங்குகளே என்றாலும், ஒவ்வோர் இந்துச் சாதியும் பதினாறு சடங்குகளையுமே செய்வதற்கு உரிமை கொண்டாட முடியாது. ஒரு சில சாதிகள் மட்டுமே எல்லாச் சடங்குகளையுமே செய்வதற்கு உரிமை கொண்டாட முடியும். சில சாதிகள் குறிப்பிட்ட சில சடங்குகளைச் செய்ய அனுமதி உண்டு: சிலவற்றைச் செய்ய அனுமதியில்லை. பூணூல் அணிவிக்கும் உபநயனம் என்ற சடங்கை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். சில சாதிகள் இச்சடங்கைச் செய்யமுடியாது. சடங்குகளைச் செய்வதற்கான உரிமையைப் பொறுத்து எழுகிற இந்த வேறுபாடு முன்னுரிமைக்கு வழிகாட்டுகிறது. எல்லாச் சடங்குகளையும் செய்ய உரிமை படைத்த சாதியானது ஒருசிலவற்றை மட்டும் செய்ய உரிமை படைத்த சாதியைக் காட்டிலும் தகுநிலையில் உயர்ந்தது.

மந்திரங்கள் முன்னுரிமைவிதிகளுக்கு மற்றோர் அடிப்படை யாகும். இந்து சமயத்தில் உள்ளபடி, ஒரேசடங்கை மூவேறு வழிகளில்

செய்யலாம்: (1) வேதோக்தா, (2) சாஸ்திரோக்தா, (3) புராணோக்தா. வேதங்களிலிருந்து மந்திரங்கள் சொல்லிச் சடங்கு செய்யும் முறை வேதோக்தா ஆகும். சாஸ்திரங்களிலிருந்து மந்திரங்கள் சொல்லிச் சடங்கு செய்யும் முறை சாஸ்திரோக்தா ஆகும். புராணங்களிலிருந்து மந்திரங்கள் சொல்லிச் சடங்குசெய்யும் முறை புராணோக்தா ஆகும். இந்து ஆகமங்கள் மூவேறு வகைப்பட்டவை: (1) வேதங்கள் நான்கு (2) சாஸ்திரங்கள் ஆறு; (3) புராணங்கள் பதினெட்டு. இவையனைத்துமே ஆகமங்களாகப் போற்றப்பட்ட போதிலும் எல்லாம் ஒரே அளவிலான புனிதத் தன்மை உடையவை அல்ல. வேதங்கள் மிக உயர்ந்த புனிதத் தன்மை படைத்தவை. புனிதத் தன்மையில் அடுத்த இடம் சாஸ்திரங்களுக்கு. புராணங்கள் மிகக் குறைந்த புனிதத்தன்மை உடையவை. வேதோக்தா முறையில் சடங்கு செய்விக்கும் உரிமை எல்லாச் சாதிகளுக்கும் இல்லை என்பதை மனத்திற் கொண்டால் மந்திரங்கள் எப்படி சமூக முன்னுரிமைக்கு வழிசெய்கின்றன என்பது புலப்படும். பதினாறு சடங்குகளில் ஒன்றைச் செய்வதற்கு மூன்று சாதிகள் உரிமை கொண்டாடுவதாக இருக்கலாம். ஆனால் அவற்றில் ஒன்று வேதோக்தா முறையிலும், இன்னொன்று சாஸ்திரோக்தா முறையிலும், மூன்றாவது புராணோக்தா முறையிலும்தான் அதைச் செய்ய உரிமை உண்டு. சமயச்சடங்கு ஒன்றைச் செய்கையில் ஒரு சாதி எவ்வகை மந்திரத்தைப் பயன்படுத்த உரிமை படைத்தது என்பதற்கேற்ப முன்னுரிமை அமைகிறது. வேத மந்திரத்தைப் பயன்படுத்த உரிமை படைத்த சாதி, சாஸ்திர மந்திரத்தைப் பயன்படுத்த உரிமை படைத்த சாதிக்கு மேலானது. சாஸ்திர மந்திரத்தைப் பயன்படுத்த உரிமை படைத்த சாதி, புராண மந்திரத்தை மட்டுமே பயன்படுத்த உரிமை படைத்த சாதிக்கு மேலானது.

சமயம் தொடர்பான முன்னுரிமைக்கு மூன்றாவது அடிப்படையாகப் புரோகிதரை எடுத்துக்கொள்ளலாம். ஒரு சமயச் சடங்கைச் செய்வதிலிருந்து முழுநன்மைபெறவேண்டுமானால் ஒரு புரோகிதர் அதற்குத் தேவை என்று இந்து சமயம் கோருகிறது. பிராமணரே ஆகமங்களால் நியமிக்கப்பட்ட புரோகிதர் ஆவார். ஆகவே பிராமணர் இன்றியமையாதவர் ஆகிறார். ஆனால் ஒரு சமயச் சடங்கை நடத்தித் தருமாறு எந்த இந்து அழைத்தாலும், அவரது சாதி கருதாமல் அவரது அழைப்பைப் பிராமணர் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று ஆகமங்கள் கட்டளையிடவில்லை. எந்தச்சாதியின் அழைப்பை ஏற்றுக் கொள்வார், எந்த சாதியின் அழைப்பை ஏற்றுக் கொள்ளமாட்டார் என்பது அந்தப் பிராமணரின் விருப்புரிமைக்கே விடப்படுகிறது. எந்தச் சாதிக்கு அவர் சடங்கு செய்து வைப்பார், எந்தச் சாதிக்குச் செய்துவைக்கமாட்டார்

என்பது நீண்ட நெடிய வழக்காற்றால் இப்போது நிலைபெற்று விட்டது. இந்த உண்மை சாதிகளுக்குள்ளான முன்னுரிமைக்கு அடிப்படை ஆகியுள்ளது. சமயச்சடங்குகளின்போது பிராமணர் சடங்கு செய்து வைக்கிற சாதி, அவர் சடங்கு செய்து வைக்காத சாதிக்கு மேலானதாய்க் கருதப்படுகிறது.

முன்னுரிமை விதிகளுக்கு இரண்டாவது அடிப்படையாக இருப்பது உணவருந்தல் ஆகும். உணவருந்தல் தொடர்பான விதிகளைப் போல், திருமண விதிகள் முன்னுரிமை விதிகளுக்கு வழிகோலவில்லை என்பது நோக்கற்பாலது. கலப்பு மணத்தையும் கலந்துண்பதையும் தடைசெய்கிற விதிகளுக்கிடையில் வேறுபாடு உண்டென்பதே காரணம். அந்த வேறுபாடு கண்கூடான ஒன்று. கலப்பு மணத்தின் மீதான தடையை மதித்தே ஆகவேண்டும் என்பது மட்டுமல்ல, அதைக் கண்டிப்பாகச் செயலாக்க முடியும். ஆனால் சேர்ந்து உண்பதன் மீதான தடைக்கு இடர்ப்பாடுகள் உள்ளன. எல்லா நிலைமைகளிலும் அதனை அவ்வளவு கண்டிப்பாகச் செயலாக்க முடியாது. மனிதன் இடம்விட்டு இடம் புலம் பெயர்ந்து செல்கிறான்; செல்லத்தான் வேண்டும். அவன் செல்லநேரிடுகிற எல்லா இடங்களிலும் சாதிக்காரர்கள் இல்லாமற் போகலாம். புதியவர்களுக்கு நடுவில் போய் இறங்க நேரிடலாம். திருமணத்துக்கு அவசரமில்லை, ஆனால் உணவு அப்படியன்று. அவன் தன் சாதிக்காரர்களின் சமுதாயத்திற்குத் திரும்பி வரும்வரை திருமணம் செய்து கொள்வதற்காக காத்திருக்கமுடியும். ஆனால் உணவுக்காக அப்படிக் காத்திருக்கமுடியாது. எங்கிருந்தோ யாரிடமிருந்தோ அது அவனுக்குக் கிடைத்தாக வேண்டும். உணவு பெறத்தான் வேண்டு மென்றால் எந்தச் சாதியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்ற கேள்வி எழுகிறது. அவன் தன் சாதிக்கு மேலான சாதியிடமிருந்து உணவுபெறலாமே தவிரக் கீழான சாதியிடமிருந்து பெறக்கூடாது என்பது விதி. ஓர் இந்து ஒரு சாதியிடமிருந்து உணவு பெறலாம், வேறொரு சாதியிடமிருந்து பெறக்கூடாது என்று தீர்மானிக்கிற நிலை எப்படி ஏற்பட்டது என்பதை அறிய வழியில்லை. நெடுங்காலமாய்த் தொடர்ந்துவரும் முன்னுதாரண அடிப்படையில் ஒவ்வோர் இந்து வுக்கும் எந்தச்சாதியிலிருந்து உணவுபெறக்கூடும், எந்தச்சாதியிலிருந்து கூடாது என்று தெரியும். முக்கியமாகப் பிராமணர் கடைப்பிடிக்கிற விதியினால் இது தீர்மானிக்கப்படுகிறது. ஒரு சாதியிடமிருந்து பிராமணர் உணவு பெறுகிறாரா இல்லையா என்பதைப் பொறுத்து அந்தச் சாதி உயர்ந்ததோ தாழ்ந்ததோ ஆகிறது. உணவைப் பொறுத்தும் நீரைப் பொறுத்தும் பிராமணர் ஒரு மிக விரிவான விதித் தொகுப்பே வைத்துள்ளார். (1) அவர் சிலரிடமிருந்து மட்டும் நீர் பெற்றுக் கொள்வார், மற்றவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளமாட்டார்.

(2) வேறெந்தச் சாதியைச் சேர்ந்தவரும் நீரில் வேகவைத்துக் கொடுக்கும் உணவைப் பெற்றுக்கொள்ள மாட்டார். (3) சில சாதியினரிடமிருந்து எண்ணெயில் வேகவைத்த உணவை மட்டும் ஏற்றுக்கொள்வார். உணவையும் நீரையும் ஏற்றுக்கொள்வதற்கான பாண்டத்தைப் பொறுத்தும் அவர் ஒரு விதித்தொகுப்பு வைத்துள்ளார். ஒரு சாதியிடமிருந்து மண்பாண்டத்தில் உணவோ நீரோ பெற்றுக்கொள்வார். வேறொரு சாதியிடமிருந்து உலோகப் பாண்டத்தில் மட்டுமே பெற்றுக் கொள்வார். வேறு சாதியிடமிருந்து கண்ணாடிப் பாண்டத்தில் மட்டுமே பெற்றுக் கொள்வார். இது, சாதியின் நிலையை நிர்ணயிக்கப் பயன் படுகிறது. அவர் எண்ணெயில் வேக வைத்த உணவை ஒரு சாதியிடமிருந்து பெற்றுக்கொள்வார், வேறொரு சாதியிடமிருந்து பெற்றுக் கொள்ளமாட்டார் என்றால், முன்னது பின்னதை விடவும் உயர்ந்த தகுநிலை உடையது. அவர் ஒரு சாதியிடமிருந்து நீர் பெற்றுக் கொள்வார், வேறொரு சாதியிடமிருந்து பெற்றுக் கொள்ளமாட்டார் என்றால் முன்னது, பின்னதை விடவும் உயர்ந்த சாதியாகும். அவர் ஒரு சாதியிடமிருந்து உலோகப் பாண்டத்தில் நீர் பெற்றுக்கொள்வார், வேறொரு சாதியிடமிருந்து மண்பாண்டத்தில் பெற்றுக்கொள்வார், என்றால் முன்னது பின்னதை விடவும் உயர்ந்த சாதியாகும். அவர் ஒரு சாதியிடமிருந்து மண்பாண்டத்தில் நீர் பெற்றுக்கொள்வார் வேறொரு சாதியிடமிருந்து கண்ணாடிப் பாண்டத்தில் பெற்றுக் கொள்வார் என்றால் முன்னது, பின்னதை விடவும் உயர்ந்த சாதியாகும். கண்ணாடியானது நிர்லெப் (கறைபடியாதது) எனப்படுகிற ஒரு பொருளாகும். ஆகவே ஒரு பிராமணர் மிகத் தாழ்ந்த சாதியிடமிருந்தும் கூட கண்ணாடியில் நீர் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் மற்ற உலோகங்களில் கறைகள் படிந்து விடுகின்றன. கறையினால் தீட்டுப்படுதல் என்பது அதைப் பயன்படுத்தியவரின் தகுநிலையைப் பொறுத்தது. இந்தத் தகுநிலையானது அந்தப்பாண்டத்தில் நீர் கொடுத்தால் ஏற்றுக்கொள்ள பிராமணர் விரும்புவதைப் பொறுத்தது.

இந்து சமயத்திற்குரிய சாதிகளின் இந்தப் படித்தர அமைப்பில் ஒரு சாதியின் இடத்தையும் தகுநிலையையும் நிர்ணயிக்கிற காரணிகளில் சிலவற்றைப் பார்த்தோம்.

இதுதான் சாதி, இதுதான் சாதியமைப்பு. கேள்வி என்னவென்றால், இந்துச்சமூக ஒழுங்கமைப்பை அறிந்து கொள்வதற்கு இது போதுமா? இந்துச்சமூக ஒழுங்கமைப்பு குறித்து நடுநிலையாகப் புரிந்து கொள்வதற்குச் சாதியையும் சாதியமைப்பையும் அறிந்து கொள்வதே போதும். இந்துக்கள் சாதிகளாகப் பிரிந்திருக்கிறார்கள், இந்தச்சாதிகள் ஓர் அமைப்பாக உள்ளன, இந்த அமைப்பின் ஊடாகச்

செல்லும் இழை ஒன்றில் எல்லாச்சாதிகளும் தொங்கிக் கொண்டுள்ளன, இந்த இழை ஒரு சாதியை வேறொரு சாதியிடமிருந்து வளையமிட்டு வேறுபடுத்துகிற அதே போதில், ஒன்றுக்குமேல் ஒன்றாகத் தொங்கும் பந்துகளின் சரம்போல் சாதிகளைக் கோர்த்துக்கொண்டும் உள்ளது என்ற உண்மையை நினைவு வைத்துக் கொண்டாலே போதுமானது. ஆனால், ஓர் இயக்கத்துடிப்புள்ள நிகழ்வாக சாதியைப் புரிந்து கொள்ள இதுபோதாது. செயலளவில் சாதி எவ்வாறு இயங்குகிறது என்பதை அறிய வேண்டுமானால், சாதி அமைப்பைத் தவிர சாதியின் வேறொரு பண்புக்கூறினையும், அதாவது வகுப்பு-சாதி அமைப்பையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

சாதி, வகுப்பு என்ற கருத்துக்களிடையிலான உறவுமுறை உயிர்த்துடிப்பான விவாதத்துக்கு உரிய ஒன்றாக இருந்து வருகிறது. சாதி என்பது வகுப்பை ஒத்தது என்று சிலர் சொல்கின்றனர். சாதி எனும் கருத்து, வகுப்பை ஒத்தது; இரண்டுக்கும் எந்த வேறுபாடும் இல்லை என்று வேறுசிலர் கருதுகின்றனர். சாதியெனும் கருத்து வகுப்பெனும் கருத்துக்கு அடிப்படையிலேயே எதிரானது என்று கருதுவோரும் உண்டு. சாதியெனும் ஆய்வுப்பொருளின் இந்தக்கூறு குறித்து மேலும் சொல்ல வேண்டியவற்றைப் பிறகு சொல்வோம். இப்போதைக்கு, இதற்குமுன் குறிப்பிடப்படாத சாதி அமைப்பின் ஒரு பண்புக்கூறினை அழுத்த மேற்றிச் சொல்லியாக வேண்டும். அது என்னவென்றால், சாதி என்பது வகுப்பு என்னும் கருத்துக்கு மாறுபட்டதாகவும் எதிரான தாகவும் இருந்தபோதிலும், சாதி அமைப்பானது- சாதி அல்ல- மேலே குறிப்பிட்ட படிப்படியான தகுநிலையிலிருந்து சற்றே வேறுபட்ட ஒரு வகுப்பு அமைப்பை ஏற்றுக்கொள்கிறது. இந்துக்கள் எத்தனையோ சாதிகளாகப் பிரிந்திருப்பதைப் போலவே, சாதிகளும் சாதிகளின் வெவ்வேறு வகுப்புகளாகப் பிரிந்துள்ளன. இந்துக்குச் சாதி உணர்வு உள்ளது. அவருக்கு வகுப்பு உணர்வும் உள்ளது. அவருக்கு சாதி உணர்வு உள்ளதா, வகுப்பு உணர்வு உள்ளதா என்பது எந்தச் சாதியோடு அவர் மோதிக்கொள்கிறார் என்பதைப் பொறுத்தது. அவர்மோதிக் கொள்ளும் சாதி, அவர் சார்ந்த வகுப்புக்குள் அடங்கிய சாதியாக இருக்குமானால் அவர் சாதி உணர்வு பெறுகிறார். அந்தச் சாதி, அவர் சார்ந்த வகுப்புக்கு வெளியே இருக்குமானால், அவர் வகுப்பு உணர்வு பெறுகிறார். இது குறித்து யாருக்கேனும் சான்று தேவைப்பட்டால் சென்னை மாகாணத் திலும் பம்பாய் மாகாணத்திலும் நடைபெற்ற பிராமணரல்லாதார் இயக்கத்தை ஆராய்ந்து பார்க்கலாம். இத்தகைய ஆய்வு ஓர் இந்துவுக்கு வகுப்புச் சுற்றெல்லையைப் போலவே சாதிச் சுற்றெல்லையும் உண்மையானது என்பதையும் வகுப்பு உணர்வைப் போலவே சாதி உணர்வும் உண்மையானது என்பதையும் ஐயந்திரிபற வெளிப்படுத்தும்.

சாதி என்பது வருண அமைப்பின் பரிணாம வளர்ச்சிதான் என்று சொல்லப்படுகிறது. இது அபத்தம் என்பதைப் பிற்பாடு தெளிவாக்குவேன். சாதி என்பது வருணத்தின் உருத்திரிபு ஆகும், எப்படிப் பார்த்தாலும் அது எதிர்த்திசையிலான ஒரு பரிணாம வளர்ச்சியே ஆகும். சாதியானது வருண அமைப்பை அறவே உருத் திரியச்செய்துள்ளது என்று கூறும் அதேபோது, அது வகுப்பு அமைப்பை வருண அமைப்பிலிருந்து இரவல் வாங்கியுள்ளது. உள்ளபடியே வகுப்பு-சாதி அமைப்பானது வருண அமைப்பின் வகுப்புப் பிளவுகளை நெருக்கமாய் ஒட்டியுள்ளது.

இந்தக் கோணத்தில் சாதி அமைப்பைப் பார்ப்போமானால், வகுப்புப் பிளவின் பல கோடுகள் இந்தச் சாதிக் கோபுரத்தின் ஊடாகச் சென்று, அக் கோபுரத்தை சாதிகள் என்னும் பாளங்களாகப் பிரிப்பதை அறியலாம். முதல் பிளவுக்கோடானது பழங்காலத்திய சதுர்வருண அமைப்பில் காணப்படும் பிரிவுக் கோட்டை ஒட்டியுள்ளது. பழைய சதுர்வருண அமைப்பானது பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் ஆகிய முதல் மூன்று வருணங்களுக்கும் சூத்திரர்களாகிய நான்காவது வருணத்துக்கும் இடையில் வேற்றுமை பாராட்டியது. முதல் மூன்றும் இரு பிறப்புக்குரிய வகுப்புகளாக வகைப்படுத்தப்பட்டன. சூத்திர வருணம் இரு பிறப்பில்லாத வகுப்பெனக் கருதப்பட்டது. பூணூல் அணியவும் வேதங்கள் ஓதவும் முன்னவர்களுக்கு உரிமை உண்டு என்பதன் அடிப்படையில் இந்த வேற்றுமை கற்பிக்கப்பட்டது. சூத்திரருக்கு இந்த இரு உரிமைகளுமே இல்லை. அதனால்தான் அவர் இருபிறப்பில்லாத வகுப்பைச் சேர்ந்தவராகக் கருதப்பட்டார். இந்த பிளவுக்கோடு இன்றளவும் இருக்கத்தான் செய்கிறது. பரந்துபட்ட சூத்திர வகுப்பிலிருந்து விளைந்துள்ள சாதிகளை பிராமணர், சத்திரியர், வைசியர் ஆகிய மூன்று வகுப்புகளிலிருந்தும் விளைந்துள்ள சாதி களிலிருந்து வேறுபடுத்துகிற இக்காலத்திய வகுப்புப் பிரிவினையின் அடிப்படையாக அமைவதும் அதுவே. இந்த வகுப்புப் பிளவுக் கோட்டினைத்தான் உயர் சாதிகள், கீழ்ச்சாதிகள் என்ற சொற்றொடர்கள் வெளிப்படுத்துகின்றன. உயர் வகுப்புச் சாதிகள், கீழ் வகுப்புச் சாதிகள் என்பதற்கான சுருக்கப் பெயர்களே இவை.

இந்தப் பிளவுக் கோட்டுக்கு அடுத்தபடி சாதிகளின் கோபுரத்தி னூடே இரண்டாவதாக ஒரு வகுப்புப் பிளவுக்கோடு செல்கிறது. கீழ் வகுப்புச்சாதிகள் என்பதற்குச்சற்றே கீழாக அது செல்கிறது. அது நான்கு வருணங்களிலிருந்து பிறந்த எல்லாச் சாதிகளையும், அதாவது உயர் சாதிகளையும் அதே போல் கீழ்ச்சாதிகளையும் எஞ்சிய சாதிகளுக்கு மேலே நிறுத்துகிறது. இந்த எஞ்சிய சாதிகளை 'ஏனையவை' என்று

மட்டும் குறிப்பிடுவேன். வகுப்புப்பிளவின் இந்தக் கோடும் மெய் யானது, சதுர் வருண அமைப்பானது, நாம் மேலே சுட்டிக் காட்டியது போல, நான்கு வருணங்களுக்கு இடையே ஒரு வேற்றுமையை நுழைத்து மூன்று வருணங்களை நான்காவது வருணத்திற்கு மேலே நிறுத்தியது. ஆனால் சதுர்வருணத்துக்கு உள்ளே இருப்பவர்களுக்கும் வெளியே இருப்பவர்களுக்கும் இடையிலும் கூட இதே போல் தெளிவானவேற்றுமை பாராட்டியது. இந்த வேற்றுமை யைத் தெரிவிக்க அது ஒரு சொல்லாட்சி வைத்திருந்தது. சதுர் வருணத்துக்கு உள்ளே இருப்பவர்கள் - உயர்ந்தவர்களோ தாழ்ந்தவர்களோ, பிராமணர்களோ சூத்திரர்களோ - சவர்ணர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அதாவது வருண முத்திரை பெற்றவர்கள் என்று பொருள். சதுர் வருணத்திற்கு வெளியே இருப்பவர்கள் அவர்ணர்கள் என்றழைக்கப்பட்டார்கள். அதாவது வருண முத்திரை இல்லாதவர்கள் என்று பொருள். நான்கு வருணங்களிலிருந்து பரிணமித்துள்ள எல்லாச் சாதியினரும் இந்துக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்களைத் தான் சாதி இந்துக்கள் என்று சொல்கின்றனர். 'ஏனையவர்கள்' அவர்ணர்கள் ஆவர். இப்போதுள்ளபடி ஐரோப்பியர்கள் இவர்களை சாதியில்லாத இந்துக்கள் என்கின்றனர். அதாவது நான்கு மூலச்சாதிகள் அல்லது வருணங்களுக்கு வெளியே இருப்பவர்கள் என்று பொருள்.

சாதி அமைப்பு குறித்து எழுதப்படுவதில் பெரும்பகுதி சவர்ண இந்துக்களிடையிலான சாதியமைப்பு தொடர்பானதாகவே உள்ளது. அவர்ண இந்துக்கள் குறித்து அவ்வளவாகத் தெரியவில்லை. யார் இந்த அவர்ண இந்துக்கள்? இந்து சமுதாயத்தில் இவர்கள் நிலை என்ன? இவர்களுக்கும் சவர்ண இந்துக்களுக்கும் என்ன உறவு? இந்தக் கேள்விகள் குறித்து இதுவரை கவனமே செலுத்தப்படவில்லை. இந்தக் கேள்விகளை ஆராயாமல் இந்துக்களின் சமூகக் கட்டுமானத்தை யாராலும் உண்மையாகப் படம் பிடித்துக்காட்டமுடியாது என்று நம்புகிறேன். சவர்ண இந்துக்களுக்கும் அவர்ண இந்துக்களுக்கும் இடையிலான வகுப்புப்பிளவைக் காணாமல் விடுவது என்பது மோகினிகளையும் பேய்பிசாசுகளையும் விட்டுவிட்டு கிரிம்மின் தேவதைக் கதை சொல்வதே ஆகும்.

அவர்ண இந்துக்கள் மூன்று பிரிவுகளாக இருக்கிறார்கள்: (1) ஆதிச் சாதிகள் (2) குற்றச் சாதிகள் (3) தீண்டப்படாத சாதிகள். இந்த மூன்று வகுப்புகளையும் சேர்ந்தவர்களின் மொத்த மக்கள் தொகை சிறிதன்று. இந்தியாவின் ஆதிப்பழங்குடிக்ளின் மக்கள் தொகை 1931 ஆம் வருடத்தியக் கணக்கெடுப்பின்படி சுமார் இரண் டரைக்கோடி

ஆகும். குற்றமரபினர் என்று பட்டியலிடப்பட்டவர்களின் மொத்த மக்கள் தொகை 45 இலட்சமாகும். 1931 இல் தீண்டப்படாத மக்களின் மொத்த மக்கள் தொகை சுமார் 5 கோடி ஆகும். இந்த மூன்றையும் கூட்டிவரும் மொத்தத் தொகை 7 கோடியே 95 இலட்சம் ஆகிறது.

சவர்ண சாதிகளுக்கும் அவர்ண சாதிகளுக்கும் என்ன உறவு? சவர்ண சாதிகளுக்கும் அவர்ண சாதிகளுக்கும் இடையிலான பிளவின் விளைவுகள் ஒரே சீரானவை அல்ல; ஆகவே இதனால் தோன்றக்கூடிய நிலைமையை எளிதில் புரிந்துகொள்ள முடிவதில்லை. சவர்ண சாதிகளுக்கும் அவர்ண சாதிகளுக்கும் இடையில் ஓடும் பிளவுக்கோடு சவர்ண சாதிகளுக்கும் இரு அவர்ண சாதிகளுக்கும் - ஆதிச் சாதிகள், குற்றச்சாதிகள் - இடையே ஓர் உறவுமுறையைத் தோற்றுவிக்கிறது. இந்த உறவுமுறையானது சவர்ண சாதிகளுக்கும் அவர்ண சாதிகளில் கடைசியாக வரும் தீண்டப்படாத மக்களுக்கும் இடையே அது தோற்றுவிக்கும் உறவுமுறையிலிருந்து மாறுபடுகிறது. சவர்ண சாதிகளுக்கும் முதல் இரு அவர்ண சாதிகளுக்கும் இடையிலான இந்தப் பிளவுக்கோடு உறவுக்காரர்கள், நண்பர்கள் இடையிலானதைப் போன்றதாகும். இந்த இரு பிரிவினருக்கும் இடையே மரியாதையான அடிப்படையில் உறவாடல் நிகழ்வது இதனால் சாத்தியமற்றுப் போய்விடுவதில்லை. சவர்ண சாதிகளுக்கும் தீண்டப்படாத சாதியினர்க்கும் இடையிலான பிளவு வேறுவகைப்பட்டது. உறவுக்காரர் அல்லாத இரு பகைக் குழுக்கள் இடையிலான ஒரு பிள்வாகும் இது. மரியாதையான அடிப்படையில் நட்பார்ந்த உறவாடலுக்கு வாய்ப்பே இல்லை.

இந்த பிளவுக் கோட்டின் முக்கியத்துவம் என்ன? திட்ட வட்டமான பிளவுதான் என்றாலும் அதன் அடிப்படை வரையறுக்கப் படாமல் உள்ளது. ஆனால் இந்தப்பிளவின் அடிப்படையும் துவிஜர்களுக்கும் சூத்திரர்களுக்கும் இடையிலான பிளவின் அடிப்படையும் ஒன்றே எனத் தோன்றுகிறது. சூத்திரர்களைப் போலவே அவர்ண சாதியினர் இருபிறப்பில்லாத மக்கள் ஆவர். அவர்கள் இருமுறை பிறந்தவர்கள் அல்ல; பூணூல் அணியும் உரிமை அவர்களுக்கு இல்லை. நாம் பார்க்கத் தவறிவிடக் கூடிய மேலும் இரு உண்மைகளையும் இது வெளிப்படுத்துகிறது.

முதலாவது உண்மை என்னவென்றால், சவர்ணப்பிரிவைச் சேர்ந்த சூத்திர சாதிகளுக்கும் அவர்ணப்பிரிவைச் சேர்ந்த ஆதிச் சாதிகள் மற்றும் குற்றச் சாதிகளுக்கும் இடையிலான வேறுபாடு மிக மெல்லியது. இருவருமே தீண்டத்தக்கவர்கள். இருவருமே இரு

பிறப்பில்லாதவர்கள். வேறுபாடு என்பது பண்பாட்டு வளர்ச்சியில் தான். ஆனால், இரு பிரிவுகளுக்கும் இடையிலான பண்பாட்டு வேறுபாடு பெரிதென்றாலும் - பண்பாட்டில் உயர்ந்த ஒருவருக்கும் திருந்தாத அநாகரிகப் பேர்வழிக்கும் இடையிலான வேறுபாட்டைப் போல் பெரிதென்றாலும் - வைதிக இந்துவின் கண்ணோட்டத்தில் அவர்களிடையிலான வேறுபாடு படித்தர வேறுபாடேயாகும். இந்தப் பண்பாட்டு வேறுபாட்டைக் குறிக்கத்தான் இந்துக்கள் ஒரு புதிய சொல்லாட்சியைக் கண்டுபிடித்து இருவகைச் சூத்திரர்களை இனங்காட்டினார்கள்: 1. சத்சூத்திரர்கள் , 2. சூத்திரர்கள் ஆகியோரே இந்த இருவகைச் சூத்திரர்கள். பழைய சூத்திரக் கூட்டத்தை சத்சூத்தி ரர்கள் அல்லது பண்பட்ட சூத்திரர்கள் என்று அழைப்பதும், இந்து நாகரித்தின் எல்லைக்குள் வந்துவிட்ட ஆதிச் சாதிகளைச் சேர்ந்தவர் களுக்கு சூத்திரர்கள் என்ற சொல்லைப்பயன்படுத்துவதும் இவ்வாறே. புதிய சொல்லாட்சியானது சூத்திரர்களின் உரிமைகளிலும் கடமை களிலும் எந்த வேறுபாட்டையும் குறிக்கவில்லை. துவிஜர்களுடன் எந்த வேறுபாட்டையும் குறிக்கவில்லை. துவிஜர்களுடன் கூடிவாழ்வதற்குப் பொருத்தமுள்ள சூத்திரர்களையும் அதற்கு அவ்வளவு பொருத்த மில்லாத சூத்திரர்களையும் இவ்விதம் வேறு படுத்திக் காட்டினார்கள்.


அவர்ண சாதிகள் ஒன்றுக்கொன்று கொண்டிருக்கும் உறவு என்ன? அவை சாதிகளின் வெறுந்தொகுப்பாய் உள்ளனவா? அல்லது ஏதேனும் வகுப்புப் பிளவுகளைக் கொண்டுள்ளனவா? அவை சாதி களின் வெறுந்தொகுப்பே என்பது உறுதி. அவர்ண சாதிகளின் இந்தத் தொகுப்பினூடே வகுப்புப் பிளவுக்கோடுகள் ஓடுவது உறுதி. ஆதிச் சாதிகளுக்கும் குற்றச் சாதிகளுக்கும் இடையே ஓடுகிற வகுப்புப் பிளவின் கோடு ஒன்று உள்ளதா என்பது ஓரளவு சந்தேகத்திற்குரியதாய் இருக்கலாம். அந்தக் கோடு மங்கலாய் இருக்கக்கூடும். ஆனால், ஆதிச் சாதிகள், குற்றச்சாதிகள் ஆகியவற்றுக்கும் தீண்டப்படாத மக்களுக்கும் இடையே மிகவும் திட்டவட்டமான, மிகவும் அகலமான, மிகவும் அழுத்தமான ஒரு பிளவுக்கோடு இருக்கிறது என்பதில் ஐயமில்லை. முதல் இரு சாதியினரும் அவர்ண சாதிகளின் இந்தத் தொகுப்புக்குள் தாங்கள் உயர் வகுப்பினர் என்றும் தீண்டப்படாதவர்கள் கீழ் வகுப் பினர் என்றும் தெளிவாய் எண்ணங் கொண்டுள்ளனர்.

இதுவரை செய்துள்ள ஆய்விலிருந்து தனிக்குறிகளான மூன்று பண்புக்கூறுகள் வெளிப்படுகின்றன அவை: (1) சாதி, (2) சாதிகளின் படிக்கட்டு அமைப்பு, (3) சாதி அமைப்பை ஊடறுத்துச் செல்லும் வகுப்பு அமைப்பு. இந்தக் கட்டமைப்பு மிகவும் சிக்கலான ஒன்று என்பதில் ஐயமில்லை. இதில் ஓர் அங்கமாய் இல்லாமல் வெளியில் நின்று பார்ப்பவருக்கு இதனைத் தன் மனத்திரையில் உள்ளவாறு

காண்பது கடினம் எனலாம். வரைபடமாகக் காட்டினால் உதவியாய் அமையக்கூடும். என் கணிப்பில் இந்துக்களின் இந்தச் சமூகக் கட்டமைப்பை அறியச் செய்யும் நோக்கத்துடன் கீழ்க்காணும் அட்டவணையைத் தருகிறேன்.

| அ. சாதி இந்துக்கள் சவர்ண சாதிகள் | இ. சாதி இந்துக்கள் சவர்ண சாதிகள் | உ.சாதி யல்லாத இந்துக்கள் அவர்ண சாதிகள் | எ.சாதி யல்லாத இந்துக்கள் |
|---|---|---|---|
| வகுப்பு I | வகுப்பு II | வகுப்பு III | வகுப்பு IV |
| உயர்சாதிகள் துவிஜர்கள் பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் ஆகிய மூன்று வருணங்களிலிருந்தும் பரிணமித்த சாதிகள் | கீழ்ச்சாதி சூத்திரர்கள்- சூத்திரர்கள் என்னும் நான்காவது வருணத்திலிருந்து பரிணமித்த சாதிகள் | ஆதிச்சாதிகள், குற்றச்சாதிகள் | தீண்டப்படாதவர்கள் |

ஆ ஈ ஊ ஏ



கையெழுத்துப் பிரதியில் இந்த வரைபடம் காலியாக விடப்பட்டுள்ளது.

- பதிப்பாசிரியர்.

இந்த வரைபடம் இந்துக்களின் வகுப்பு-சாதி அமைப்பைக் காட்டுவதாகும். அவர்களின் சமூக ஒழுங்கமைப்பை உண்மையாகவும் முழுமையாகவும் படம் பிடித்துக்காட்டும் வகையில் இது வரைப் பட்டுள்ளது. இந்த வரைபடம் அச்சமூக ஒழுங்கமைப்பின் முக்கியக் கூறுகளில் பலவற்றை வெளிப்படுத்துகிறது. இந்துக்கள் இருபிரிவுகளாக இருப்பதை இது காட்டுகிறது: (I) சவர்ண இந்துக்கள் (II) அவர்ண இந்துக் கள். முதல் பிரிவுக்குள் சாதிகள் இருவகுப்புகளாக இருப்பதை இது காட்டு கிறது: (1) துவிஜர்கள், (2) சூத்திரர்கள். இரண்டாவது பிரிவுக்குள் சாதிகளின் இருவகைகள் உள்ளன: (1) ஆதிச்சாதிகளும் குற்றச் சாதி களும், (2) தீண்டப்படாத சாதிகள். அடுத்துக் குறிப்பிடவேண்டிய செய்தி என்னவென்றால் ஒவ்வொரு சாதியும் ஏனையவற்றிடமிருந்து பிணைக்கப்பட்டும் பிரிக்கப்பட்டும் உள்ளது. இந்தஉண்மை வரை படத்தில் காட்டப்படவில்லை. சாதிகள் நான்கு வகைகள் ஒவ்வொன் றும் ஒன்றாகக் குழுச்சேர்க்கப்பட்டு ஒரு வகுப்பு அடைப்புக்குள் வைக்கப் படுகிறது. இந்த அடைப்பு ஒரு சாதியின் ஒரு வகுப்பைத் தனியாகப் பிரித்து பிறிதொரு வகுப்பிடமிருந்து வேறுபடுத்திக் காட்டு கிறது. சாதிகளின் ஒருவகுப்பு ஒரு சாதியைப் போல் ஒழுங்கமைந்த தன்று. ஆனால் ஒரு வகுப்பு உணர்ச்சி உள்ளது. மூன்றாவதாகக் குறித்துக் கொள்ளவேண்டிய செய்தி, அடைப்புகளுக்குப் பயன்படுத்தபட்டுள்ள பிரிவுத் தடுப்புகளின் தன்மையாகும். அவை பல்வேறுபட்ட வலிமை கொண்டவை. சில நிரந்தரமானவை. சில தற்காலிகமானவை. துவிஜ சாதிகளுக்கும் சூத்திரசாதிகளுக்கும் பிரிவுத் தடுப்பு ஒரு பிரிவுத் தடுப்பே அல்ல. அஃது ஒரு திரை மட்டுமே. இரண்டையும் விலக்கி வைப்பதே நோக்கம். அவற்றை வெட்டித் துண்டாடும் நோக்கம் அதற்கு இல்லை. சூத்திர சாதிகளுக்கும் முதல் இரு அவர்ண சாதிகளுக்கும் இடையிலான பிளவுக்கோடு ஒரு முறையான பிரிவுத்தடுப்பு ஆகும். ஆனால் அது மெலிதாகவும் சிறிதாகவும் உள்ளது. அதைத் தாண்டிப் போய்விடலாம். இந்தத் தடுப்பு வேறுபடுத்துவதே தவிர, அறுத்துத் துண்டிப்பதன்று. ஆனால் இந்த மூன்று வகுப்புகளுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் இடையிலான பிரிவுத்தடுப்பு மெய்யானது. அதனை அகற்றமுடியாது. அது ஒரு முட்கம்பிவேலி. உறவறுந்து போனதைக் குறிப்பது அதன் நோக்கம். இதையே வேறுவிதமாகச் சொன்னால், முதல் மூன்று அமைப்புகளும் ஒன்றுக்குள் ஒன்றாக இருக்கும்படி அமைந்துள்ளன. துவிஜசாதிகளுக்கும் சூத்திரர்களுக்கும் இடையிலான முதல் பிரிவுத் தடுப்பை அகற்றிவிடலாம். அப்போது இரண்டும் இருவேறு அடைப்பு களுக்குப் பதில் ஒரே அடைப்பில் இருக்கும் நிலை ஏற்படும். இதே போல் இரண்டாவது பிரிவுத் தடுப்பை அகற்றிவிடலாம். அப்போது துவிஜ, சூத்திர, ஆதி, குற்றச்சாதிகள் ஒரே அடைப்புக்குள் - முழுமை

யான ஒற்றை அடைப் புக்குள் இல்லையென்றாலும் - ஒரு முழுமையாக அமைகின்றன. ஆனால் மூன்றாவது பிரிவுத் தடுப்பை ஒருபோதும் அகற்றமுடியாது. ஏனென்றால் சாதிகள் அடங்கிய மூன்று வகுப்பு களுமே ஒரு பிரச்சினையில், அதாவது தீண்டத்தகாதவர்களுடன் ஒன்றுசேர்ந்து (**கையெழுத்துப் பிரதியின் தட்டச்சுப்படியில் இந்த இடம் காலியாக விடப்பட்டுள்ளது. 'ஒன்று சேர்ந்து' என்ற தொடர் நம்மால் நுழைக்கப்படுகிறது - பதிப்பாசிரியர்**) ஒரே மக்களினமாக இருக்க மாட்டோம் என்பதில் ஒன்றுபட்டுள்ளன. தீண்டப்படாத வர்களை ஏனையவர் களிடமிருந்து அறுத்துத் துண்டித்து அவர்களை வேறாகவும் வெளியிலும் இருக்கும்படி கட்டாயப்படுத்துகிற கொடுந்தடை ஒன்றுள்ளது.

வரைபடமானது சாதிகளின் வெவ்வேறு வகுப்புகளை ஒன்றுக்குமேல் ஒன்றாகக் காட்டுகிறது. சாதியமைப்பின் ஒரு முக்கியப் பண்புக் கூறாகிய படிக்கட்டுமுறையைக் குறிப்பதற்காக இவ்விதம் செய்யப்படுகிறது. சவர்ண சாதிகளின் இருவகுப்புகளை உயர்வகுப்பு சாதிகள் என்றும் கீழ்வகுப்பு சாதிகள் என்றும் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் அவர்ண சாதிகளின் மற்றுமிரு வகுப்புகளை இன்னும் கூடக் கீழ்வகுப்புச் சாதிகள் என்று, மிகவும் கீழ்வகுப்பச்சாதிகள் என்றும் நான் குறிப்பிடவில்லை. இப்படிக் குறிப்பிடுவதே ஒரு பொருளில் சரியான தாக இருந்திருக்கும். பொதுவான சமூக மதிப்பில் இவர்கள் இன்றும் கூட மிகவும் கீழான தகுநிலையில் இருக்கிறார்கள் என்பதில் ஐய மில்லை. ஆனால் வேறொரு பொருளில் இது பொருத்தமாக இருக்காது. உயர்ந்த, கீழான, இன்னுங்கூட கீழான, மிகவும் கீழான என்ற சொல்லாட்சி அவை ஒரே முழுமையின் பகுதிகள் என அனுமானம் செய்துகொள்கிறது. ஆனால் அவர்ண சாதிகளும் சவர்ண சாதிகளும் ஒரே முழுமையின் பகுதிகளா? அல்ல. இப்போதுள்ள சாதிஅமைப்பின் தாயாகிய வருண அமைப்பின் திட்டம் வகுக்கப்பட்டபோது ஆதிச்சாதிகளும் குற்றச்சாதிகளும் கணக்கில் கொள்ளப்படவில்லை. ஆதலால் வருண அமைப்பின் விதிகளில் அச்சாதிகளின் நிலை மற்றும் இடம் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால் தீண்டப்படாத மக்களின் நிலைமை இதுவன்று. வருண அமைப்பின் கணக்கில் இவர் கள் இருந்தார்கள்; தீண்டப்படாதவர்கள் தொடர்பாக வருண அமைப் பின் விதி தெள்ளத்தெளிவாகவும் திட்டவட்டமாகவும் உள்ளது. இந்துச்சட்டத்தை வழங்கிய மனு வகுத்துரைத்தவிதி என்னவென்றால் வருணங்கள் நான்குதான். ஐந்தாவது வருணம் என்ற ஒன்று இல்லை. தீண்டாமை ஒழிப்புக்கான இயக்கத்தில் காந்தியாரின் நண்பர்களாகி இருக்கும் சீர்திருத்தக்காரர்கள் மனுவின் கூற்றுக்கு ஒரு புதுப்பொருள் கற்பிக்க முயல்கிறார்கள். மனு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருப் பதாக அவர்கள் சொல்கிறார்கள். ஐந்தாவது வருணம் ஏதும் இல்லை

என்று மனு கூறியிருப்பதால், அவர் தீண்டப்படாதவர்களையும் நான்காவது வருணத்தில், அதாவது சூத்திரர்கள் என்பதில் சேர்த்துக் கொள்ள எண்ணினாராம். ஆனால் இது ஒரு தெளிவான திரிபுவேலை. தொடக்கத்தில் நான்கு வருணங்கள் இருந்தன, அவை நான்காகவே இருந்து வரவேண்டும் என்பதுதான் மனு கூறியதன் பொருள். பழங் காலத்தில் இந்துக்கள் கட்டியிருந்த வீட்டுக்குள் அவர் தீண்டப் படாதவர்களை அனுமதிக்கப்போவதில்லை. இதற்காக வருண அமைப்பை ஐந்து வருணங்கள் கொண்டதாக விரிவாக்கப் போவ தில்லை. ஐந்தாவதாக ஒரு வருணம் இருக்கலாகாது என்று அவர் சொன்னதன் பொருள் இதுதான். தீண்டப்படாதவர்கள் இந்து சமூகக் கட்டமைப்புக்கு வெளியேதான் இருந்துவரவேண்டுமென அவர் விரும்பினார் என்பது தீண்டப்படாதவர்களைக் குறிப்பிடுவதற்கு அவர் பயன்படுத்திய பெயரிலிருந்து தெளிவாகிறது. அவர் அவர்களை வருண-பாஹியாக்கள் (வருணஅமைப்புக்கு வெளியே இருப்பவர்கள்) என்று குறிப்பிடுகிறார். ஆதி மற்றும் குற்றச்சாதிகளுக்கும் தீண்டப்படாத வர்களுக்கும் இடையிலான வேறுபாடு இதுதான். முன்னவர்களை இந்து சமுதாயத்தில் சேர்த்துக் கொள்வதற்கு எதிராக நேரடித் தடை ஏதும் இல்லாத நிலையில், காலப்போக்கில் அவர்கள் அதில் உறுப்பினராகலாம். இப்போது அவர்களுக்கு இந்து சமுதாயத்துடன் பிணைப்புள்ளது; இனிமேல் அவர்கள் அதில் ஒன்றிணைக்கப்பட்டு அதன் அங்கம் ஆகலாம். ஆனால் தீண்டப்படாதவர்கள் நிலை இதுவல்ல. அவர்களை இந்து சமுதாயத்தில் இணைப்பதற்கு எதிராக நேரடித் தடையாணையே உள்ளது. சீர்திருத்தத்துக்கு இடமே இல்லை. அவர்கள் இந்து சமுதாயத்தின் அங்கம் ஆகாமல் வேறாகவும் தனித்தொதுக்கப்பட்டுமே இருந்து வரவேண்டும். தீண்டப்படாத வர்கள் இந்து சமுதாயத்தின் அங்கம் அல்ல. அவர்கள் ஓர் அங்கம் என்றால் அந்த முழுமையின் அங்கம் அன்று. இந்துக்களுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் இடையிலான தொடர்பைத் தெளிவாக எடுத்துக்காட்டித் துல்லியமாகக் கருத்து வெளியிட்டிருப்பவர் வைதிக இந்துக்களின் தலைவராகிய ஜனாப்பூர் சாஸ்திரி. பம்பாயில் நடை பெற்ற ஒரு மாநாட்டில் பேசுகையில், தீண்டப்படாதவர்களுக்கும் இந்துக்களுக்குமான உறவு ஒரு மனிதனுக்கும் அவனது பாதஅணிக்கு மான உறவைப் போன்றது என்று அவர் சொன்னார். ஒருவன் பாதஅணி அணிந்துகொள்கிறான். அந்தப் பொருளில் அது மனிதனோடு இணைந்துள்ளது, அதை மனிதனின் ஓர் அங்கம் என்றும் சொல்லலாம். ஆனால் அது முழுமையின் அங்கம் ஆகாது; ஏனென்றால் சேர்க்கவும் பிரிக்கவும் கூடிய இருபொருட்கள் ஒரே முழுமையின் அங்கங்கள் ஆவதாகச் சொல்ல முடியாது. எது எப்படியோ இந்த உவமை துல்லியமானது.

□□□

## இயல் 17

# இந்து சமுதாயத்தின் அடிக்கல்

இந்து சமுதாயம் என்பது சாதிகளின் வீடாகும். இந்துக்கள் என்போர் ஒரு மக்களினம் அல்லர். அவர்கள் சாதிகளாக அமைந்த மக்கள் குழுக்களின் ஒட்டுமொத்தம் ஆவர். இதுதான் இந்து சமுதாயத்தின் தனித்தன்மை. வரலாற்று ஓட்டத்தில் அடுத்தடுத்து இந்தியாவுக்கு வருகை புரிந்த அயலார்களின் கவனத்தை ஈர்த்தது இந்தத் தனித் தன்மை தான். என்றாலும் சாதிக்கென்று தனித்தன்மை ஒன்றுமில்லை என்று சாதிக்க முயல்வோரும் இருக்கின்றனர். எடுத்துக்காட்டாக பேராசிரியர் பெய்ன்ஸ் சொல்கிறார்:

''ஏனைய நாடுகளில், மேலைநாடுகளிடையேகூட காணப் படாதவை, அல்லது ஏதேனும் ஒரு காலத்தில் நிலவியிராதவை இந்தச் சாதியமைப்பில் அதிகமாய் ஒன்றுமில்லை. ஆனால் அங்கெல்லாம் வேறு தாக்கங்களினால் நெடுநாள் முன்பே இது தேய்ந்து ஒழிந்து விட்டது. எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட சில குழுமங்கள் திட்டவட்ட மான ஒழுங்குவரிசைகளாக அல்லது வகுப்புகளாக உருவம் பெறுவது ஒரு பொதுவான, அநேகமாய் உலகளாவிய இயல்புதான். இவை வாரிசுரிமை வழிப்பட்டவையாகவும் சூழ்நிலைமைகள் இடந்தரக் கூடிய அளவுக்குப்பிறிது விலக்கியவை அல்லது பேராசை கொண் டவை ஆகவும் மாறிப் போகிறபோக்கையும் அநேகமாக இயற்கை என்றே சொல்லிடலாம்''.

ஆதிகால மக்களினங்களின் சமூக ஒழுங்கமைப்பை எடுத்துக் காட்டுவது இந்த வாதத்துக்கு வலுச் சேர்ப்பதாய் இருக்கக்கூடும். ஆதி காலச் சமுதாயத்தில் மனிதனின் மிகப்பொதுவான நிலைமை, மிக இயல்பான நிலைமை, குழுக்களாக வாழ்வதுதான். இந்தச் சமூகக் குழுச்சேர்க்கை வரலாற்றுப்போக்கில் பலவடிவங்கள் எடுத்துள்ளது. குடும்பம் என்பது இப்படியொரு சமூகக் குழுதான், இந்த உலக ளாவிய சமூகக்குழு இன்றளவும் அழியாது நிலைத்துள்ளது. நேரடிக் குடும்பத்தை விடப் பெரியகுழு கணம் ஆகும். மிகத்தாழ்ந்த நிலை களில், கணமானது (இரத்த உறவுக்குழு, செப்ட் 'அல்லது 'சிப்' என்றும் அழைக்கப்படுகிறது) தாய்வழியாகவோ தந்தைவழியாகவோ ஒரு வருக்கொருவர் உறவுகொண்ட தனியாட்களின் குழு என்று கருதப்

பட்டது. தொலைதூரத் தாயாதிகள் இந்த உறவுமுறையில் சேர்க்கப் படலாம்; இவர்கள் குழுவின் உறுப்பினர்களாக மதிக்கப்பெற்றார்கள். இந்த உறவுமுறை முழுக் கற்பனையாகவும் கூட இருக்கலாம். ஆனால் சமூகக் கண்ணோட்டத்தில் இந்த உறவைப் போலவே இதுவும் உண்மையான பிணைப்பாக இருந்தது. கணத்துக்கு அடுத்தபடி பெரிய பிரிவு கணங்களின் சமூகக் குழுச்சேர்க்கையாகும். கணங்கள் இரு குழுக்களாக ஒழுங்கமைக்கப்படும்போது ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு 'மொய்த்தி' என்று அழைக்கப்படுகிறது. அது இரண்டுக்கு மேற்பட்ட குழுக்களாக ஒழுங்கமைக்கப்படும்போது ஒவ்வொரு குழுவும் 'பிராத்ரி' என்றழைக்கப்படுகிறது. இந்த இரட்டை அமைப்பு எவ்வகையிலும் உலகளாவிய பரவல் பெறவில்லை. பிராத்ரி அல்லது மொய்த்தி ஆற்றவேண்டிய பணிகள் திட்டவட்டமாகத் தெரியவில்லை. ஆனால் ஒவ்வொரு மொய்த்தியும் பிராத்ரியும் ஒரு சமூகக்குழுச் சேர்க்கையாக இருந்தது என்பதிலும், அதில் ஒன்றிணைந்த கண உறுப்பினர்களுக்கிடையே சகோதரத்துவ உணர்வு இருந்தது என்பதிலும் ஐயமில்லை. அடுத்து வருவன குலக்குழுக்கள். குலங்களின் இயல்பிலும் தன்மை யிலும் கட்டமைப்பிலும் விரிவான வேறுபாடுகள் உள்ளன. குலங்கள் என்பவை கணங்களாகவோ மொய்த்திகளாகவோ எந்தப் பிரிவினைகளும் இல்லாத கிராம சமுதாயங்களால் ஆனவை யாகவோ இருக்கலாம். அவற்றில் கணங்கள் இருந்து மொய்த்திகள் இல்லாமற் போகலாம் அல்லது மொய்த்திகள் இருந்து கணங்கள் இல்லாமற் போகலாம், அல்லது மொய்த்திகள் கணங்கள் இரண்டுமே இருக்கலாம். குல உணர்வு சிலநேரம் வலுவானது. சில நேரம் நலிவானது. குலக் குழுக்களின் உருவாக்கத்தில் ஒருதிட்டவட்டமான விதியோ ஒற்றைப் பரிணாம வளர்ச்சியோ இல்லாவிட்டாலும், குறிப்பிட்ட சில பொதுவான பண்புக்கூறுகள் இருந்தன. அதாவது ஒரு பொதுவான திசைமொழி, பொதுவான பழக்கங்கள், சற்றே திட்ட வட்டமான எல்லைப்பரப்பு, குலம் முழுவதற்குமாக ஒருவிதமான அரசாங்கம் ஆகியவை உள்ளன. குலத்தைக் காட்டிலும் பெரியதாக குலங்களின் பெருங்கூட்டு அல்லது ஒன்றியம் இருந்தது. ஆனால் இது மிகவும் அசாதாரணமாய் இருந்தது. குறிப்பானதோர் ஆபத்தைச் சமாளிப்பதற்காகத் தளர்வாகவும் முறைசாராமலும் ஏற்படுகிற நேசக் கூட்டு குலங்களின் ஒன்றியத்தைத் தோற்றுவிக்கலாம். ஆதிகால மக்கள் கூட்டங்களிடையே மிக அரிதாகத் தான் ஒரு திட்டவட்டமான கூட்டிணைப்பு காணப்படுகிறது. புகழ் பெற்ற இரகுவாய் குலக்கூட்டு இத்தகைய விதிவிலக்குகளில் ஒன்றாகும்.

இரத்தஉறவு என்ற கருத்தையோ வட்டாரம் என்ற கருத்தையோ அடிப்படையாகக் கொண்ட சமூகக்குழுக்கள் இவை. ஆதிகால மக்கள்

கூட்டங்களிடையே வேறுவழிகளில் பிரிந்திருக்கும் குழுக்களும் உண்டு. இந்த வேறுவகைக் குழுச் சேர்க்கைகள், பால், வயது அல்லது வேறு ஏதேனும் அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டவை. சமூகக்குழுச்சேர்க்கையின் வடிவம் என்ற முறையில் சாதி எனும் இந்நிறுவன ஏற்பாட்டில் புதுமையோ தனித்தன்மையோ எதுவு மில்லை. சாதி என்பது ஒரு கணத்தைப் போன்றது, கணத்தைப் போலவே அதுவும் சமூகக் குழுச்சேர்க்கையின் ஒரு வடிவம்தான்.

சாதிக்கும் கணத்துக்கும் இடையிலான ஒப்புமையை ஏற்றுக் கொள்ளலாம் என்றாலும், பொருள் மற்றும் நோக்கத்தைப் பொறுத்த வரை கணத்துக்கு எதிரானது சாதி என்பதை அழுத்தந்திருத்தமாய்ச் சொல்லியாக வேண்டும். சாதிஅமைப்புடன் ஒப்பிட்டுச் சொல்லும் படியான கண அமைப்பு ஏதுமில்லை. வகுப்பு-சாதி அமைப்புக்கு இணையாக வகுப்பு - கண அமைப்பு ஏதுமில்லை என்பதால் கணங் களின் படிவரிசை என்ற ஒன்றே இல்லை. பார்க்கப்போனால் ஆதி காலத்திய மக்களின் கண ஒழுங்கமைப்பானது இந்துக்களின் சாதி ஒழுங்கமைப்புக்கு நேர்எதிர்நிலை ஆகும். என் கருத்தைப் புரிய வைப்பதற்காக மட்டுமே ஒப்புமையை ஏற்றுக்கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரை சாதி ஏற்பாடு இயற்கையானதா இயற்கைக்கு மாறானதா, தனித்தன்மை வாய்ந்ததா பொதுவானதா என்ற கேள்வி கருத்துக்குரியது, அறிவூட்டும்படியானது என்பதில் ஐயமில்லை. ஆனால் நான் எழுப்ப விரும்புகிற கேள்வி அளவுக்கு இது முக்கிய மானதன்று. ஏனைய நாடுகளில் நிலவிவந்த சாதியை ஒத்த சமூகக் குழுச் சேர்க்கைகள் நாகரிகம் வளர்ந்தபோது மறைந்துவிட்டனவே, சாதி மட்டும் நீடித்து நிலைத்திருப்பது ஏன், குலைவுறாமல் இருந்து வருவது ஏன் என்பதுதான் அந்தக் கேள்வி.

இந்துக்களை மிகவும் ஒத்ததான ஒரு சமூக ஒழுங்கமைப்பு ரோமானியர்களிடம் இருந்தது.

இதுபோன்ற நிறுவன ஏற்பாடுகளெல்லாம் மறைந்துபோய் விட்டபோது சாதிமட்டும் நிலைத்திருப்பது ஏன்? மக்கள் அதன் விதிகளுக்குக் கீழ்ப்படிவது ஏன்? சாதிக்குரிய கட்டளை என்ன?

சமூகவிதிகளுக்கு மனிதர்கள் கீழ்ப்படிந்து நடப்பது எங்குமே பின்கண்ட நான்கு கட்டளைகளின் துணைகொண்டு சாதிக்கப்படுகிறது: 1. இயற்கைக் கட்டளை, 2. மக்கள் கட்டளை, 3. சட்டக் கட்டளை, 4. சமயக் கட்டளை. இவற்றில் சாதி அமைப்பைத் தாங்கி நிறுத்துவது எது? ஆனால், இந்தக் கேள்வியை ஆராயப் புகுமுன், இந்தக்

கட்டளைகளில் ஒவ்வொன்றும் எவ்விதம் இயங்குகிறது என்பதை விவரிப்பது உசிதமாய் இருக்கும்.

இயற்கைக் கட்டளையானது, பழக்கத்தின் வாயிலாகச் செயல்படுகிறது. ஒருவர் ஒரு குறிப்பிட்ட வழியில் செயல்படப் பழக்கப்பட்டிருக்கும்போது அவரை அவ்வழியில் செயல்படுவதற்குக் கட்டாயப்படுத்த எதுவும் தேவையில்லை. அவர் ஒரு தன்னியக்கப் பொறி ஆகிவிடுகிறார். அச்செயல் திரும்பத்திரும்ப நடைபெறுவது வழக்கப்படியான ஒன்றாக உறுதிசெய்யப்படுகிறது.

மக்கள் கட்டளை, பொதுசனக் கருத்தின் வாயிலாகச் செயல்படுகிறது. குறிப்பிட்ட சிலவழிகள் மற்றும் நடைமுறைகள் தொடர்பாகச் சமூகத்தில் நிலவுகிற போற்றுதலும் தூற்றுதலுமான உணர்வு அது. ஒரு குறிப்பிட்ட வழி மக்களின் வழியாகி, நிலைபெற்ற ஒரு மக்கள் வழியுடன் இணக்கமாய்ச் செயல்பட்டுப் போற்றப்படுகிறது. இதற்கு மாறான ஒரு செயல் தூற்றப்படுகிறது.

இயற்கைக் கட்டளையிலோ, மக்கள் கட்டளையிலோ தனிச் சிறப்பானதொன்றுமில்லை. அவற்றை எங்கும் காணலாம். சமூக முக்கியத்துவம் வாய்ந்த ஒவ்வொன்றின் பின்னாலும் காணலாம். அவற்றின் சொந்தவலிமை அதிகமில்லை. அது சாதாரணத்துக்கு மேல் செயல்திறனுடன் இருக்குமிடங்களிளெல்லாம், ஏனைய இரு கட்டளைகளில் ஏதேனும் ஒன்றிலிருந்து வரப்பெறக் காணலாம். சட்டக்கட்டளையும் சமயக்கட்டளையும்தான் குறிப்பிட்ட எந்த நிறுவன ஏற்பாட்டையும் நிலைநிறுத்த வல்லவை ஆகும்.

சாதி என்பது இந்துச்சட்டத்தின் கட்டளையைப் பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை. இந்துச்சட்டநூல் ஒவ்வொன்றும் சாதியை ஒரு சட்டஏற்பாடாக ஏற்றுள்ளது. இதை மீறுவது குற்றம், தண்டனைக் குரிய குற்றம். மனுதர்ம சாஸ்திரம் எனப்படும் மனுவின் சட்டநூல் இந்துக்களின் மிகப்பழைய, அதிகாரவுரிமை படைத்த சட்டநூலாகும். சாதியைச் சட்டம் ஏற்றுக்கொள்வது என்பதைக் காட்டும்படியான வாசகங்களை அந்நூலிலிருந்து மேற்கோளாய்த் தருவது போதுமானதாய் இருக்கும்.

இந்துச் சட்டநூலை வழங்கிய மனு நால்வருண ஏற்பாட்டுக்கு சட்டஇசைவு தருகிறார். நான்கு வருணங்களுக்கான சட்டத்தை வகுப்பதே மனுச்சட்டத்தின் முதன்மைக் குறிக்கோள் எனத் தோன்றுகிறது. சட்டத்தின் தொடக்க வாசகங்களிலிருந்தே இது தெளிவாகும்.

அவை கூறுவதாவது:

I.1 ஒருமித்த உள்ளத்தோடு வீற்றிருந்த மனுவை அணுகி மாமுனிவர்கள் அவரை முறைப்படி வணங்கி வழிபட்டபின் பின்வருமாறு பேசினார்கள்:

"I.2 தெய்வத்தன்மை பொருந்தியவரே, (தலையாய நான்கு) சாதிகள் (வருணம்), இடைப்பட்ட சாதிகள் இவை ஒவ்வொன்றின் புனிதச் சட்டங்களைச் சரிநுட்பமாகவும் தக்கவரிசைப்படியும் எங்களுக்கு அறிவித்து அருள்பாலியுங்கள்.''

அவர், இதற்குத் தன் சட்டக் கட்டளையை வழங்கியதோடு இந்த நிறுவன ஏற்பாட்டைக் காப்பது மன்னரின் கட்டாயக் கடமை என்றும் ஆக்கி விடுகிறார்:

"VII.35. சாதிகளையும்(வருணம்) ஒழுங்குவரிசைகளையும் பாதுகாப்பதற்கே மன்னர் படைக்கப்பட்டுள்ளார். இந்தச் சாதிகளும் ஏனையவையும் தங்கள் படிநிலைக்கேற்பத் தங்களுக்குரிய பல கடமைகளை நிறைவேற்றுகின்றன.''

"VIII.24. சாதிகள்(வருணம்) அனைத்தும் (ஒன்றுடன் ஒன்று கலப்பதால்) கெட்டுப்போகும், எல்லாத் தடைகளும் உடைந்து போகும், தண்டனை தொடர்பான தவறுகளின் விளைவாக எல்லா மனிதர்களும் (ஒருவரை ஒருவர் எதிர்த்து) ஆவேசம் கொள்வார்கள்.''

சாதிமீறலை மனு ஒருபாவமாக்கிச் சாதியை இழந்ததால் பாவியாகிவிட்ட ஒருவருக்கு மூவேறு தண்டனைகளை வரையறுக்கிறார்.

முதலாவது தண்டனை மரணத்துக்குப் பிற்பட்டது. மனு சொல்கிறார்:

"XIII. 60. சாதிகெட்டவரோடு உறவுகொண்டவன், பிறருடைய மனைவிமாரை அணுகியவன், பிராமணரின் சொத்தைத் திருடியவன், இவனெல்லாம் பிரம்மராட்சசன் ஆகிறான்.''

இந்த வாழ்க்கையில் பாவி ஒருவன் அடையவேண்டிய தண்டனை இருவகைப்பட்டது. ஒன்று சமூகநீக்கம். சமூகநீக்கத்தின் இயல்பும் தன்மையும் மனுவால் பின்வருமாறு வரையறுக்கப் பட்டுள்ளது:

"XI.181. சாதிகெட்ட ஒருவனோடு உறவுகொள்கிறவன், அவனுக்காகத் தியாகம் செய்வதன் மூலமோ அவனுக்குக் கல்வி கொடுப்பதன் மூலமோ அவனுடன் மணஉறவு ஏற்படுத்திக்கொள்வதன் மூலமோ அல்லாமல், ஒரே ஊர்தி அல்லது இருக்கையைப் பயன்படுத்து வதன் மூலமோ அவனுடன் சேர்ந்து சாப்பிடுவதன் மூலமோ இவ்விதம் உறவுகொண்டான் என்றால் அவனே ஓராண்டுக்குப்பின் சாதி கெட்டவன் ஆகிவிடுகிறான்.

"XI.182. அந்தச் சாதிகெட்டவர்களில் எவர் ஒருவரோடும் உறவுகொள்கிறவன் (இத்தகைய) உறவாடலுக்குப் பரிகாரம் தேடும் பொருட்டு அதற்கென (பாவிக்கு) குறித்துரைக்கப்பட்ட பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

"XI.183. சாதிகெட்ட ஒருவனின் சப்பிந்தர்களும் சமனோதாக் களும் (கிராமத்துக்கு வெளியே), ஒரு கெட்ட நாளில், மாலைவேளை யில், உறவினர்கள், சடங்குசெய்யும் புரோகிதர்கள் மற்றும் ஆசான் களின் முன்னிலையில் (அவர் இறந்துவிட்டாற்போல் அவருக்கு) நீர் (தீர்த்தம்) தரவேண்டும்.

"XI.184. பெண் அடிமையொருத்தி இறந்து போனவருக்குச் செய்வதுபோல் நீர் நிரம்பிய பானையைக் காலால் தட்டிவிடுவாள்; (அவனுடைய சப்பிந்தர்கள்) மற்றும் சமனோதர்கள் ஒரு பகலும் இரவும் தீட்டானவர்களாய் இருப்பார்கள்.

"XI.185. ஆனால் அதன்பிறகு அவனுடன் உரையாடுவதும், அவனுடன் சேர்ந்து அமர்வதும், பரம்பரைச் சொத்தில் அவனுக்குப் பங்கு கொடுப்பதும், மனிதர்களிடையே வழக்கமாக நிகழ்வது போல் அவனுடன் உறவாடுவதும் தடைசெய்யப்படும்.''

மற்றொரு தண்டனை வாரிசுரிமையை இழத்தல் ஆகும்.

"IX.201. அலிகளுக்கும், சாதிகெட்டவர்களுக்கும், பிறவிக் குருடர், செவிடர்களுக்கும் சித்தசுவாதீனமற்றவர்களுக்கும், அறிவிலி களுக்கும், ஊமைகளுக்கும் அதேபோல் (செயல் அல்லது புலனுணர்ச் சிக்கான) எந்த ஓர் உறுப்பிலும் குறைபாடு உள்ளவர்களுக்கும் பங்கு ஏதும் கிடையாது.''

"XI.186. (அவன் மூத்தமகனாய் இருப்பானாகில்) அவனது தலைப்பிள்ளை உரிமையும், தலைமகனுக்குரிய கூடுதல்பங்கும்

நிறுத்தி வைக்கப்படும். அவனுக்குப் பதிலாகப் பண்பில் சிறந்த தம்பிகளில் ஒருவன் மூத்தவனின் பங்கைப்பெறுவான்.''

சமூகநீக்கமும் வாரிசுரிமை இழப்புமான இந்த இருதண்டனை களையும் தவிர்ப்பதற்கு ஓரேவழி, குறிப்பிட்ட முறையில் பிராயச் சித்தம் செய்வதுதான். பிராயச்சித்தம்தான் ஓரே பரிகாரம். மனு சொல்கிறார்:

"XI.187. ஆனால், அவன் தன் பிராயச்சித்தத்தைச் செய்து முடித்தபின் அவர்கள் அவனுடன் ஒரு புண்ணியக்குளத்தில் குளித்து, நீர் நிரம்பிய புதுப்பானையை வீசிப்போடுவார்கள்.

"XI.188. ஆனால் அவன் அந்தப் பானையை நீரில் எறிந்து விட்டுத் தன் வீட்டினுள் நுழைந்து, முன்போலவே ஓர் உறவினன் செய்ய வேண்டிய எல்லாக் கடமைகளையும் செய்வான்''.

பாவியாகிய ஆணுக்கும் பாவியாகிய பெண்ணுக்கும் வேற்றுமை காட்டப்பட்டது. இருவரில் யாருக்கும் விலக்கில்லை. விதி இருவருக்கும் பொருந்தும். மனுசொல்கிறார்:

"XI.189. சாதிகெட்ட பெண்கள் தொடர்பாகவும் அவர் இதே விதியைக் கடைப்பிடிப்பாராக; ஆனால் அவர்களுக்கு உடைகளும் உணவும் பானங்களும் தரப்படும். அவர்கள் (குடும்பத்தின்) வீட்டுக்கு நெருக்கமாய் வசிப்பார்கள்.''

சட்டத்தின் கட்டளை வலிமைமிக்கது என்பதில் ஐயமில்லை.

சாதிமீறலுக்கு சட்டம் வகுத்தளித்த தண்டனை, இருதரப் பட்டது. சமூகநீக்கமும் வாரிசுரிமையை இழப்பதுமே அது. இந்தத் தண்டனைகள் எவ்வளவு கடுமையானவை என்பதை சர் தாமஸ் ஸ்ட்ரேஞ்சு இந்துச்சட்டம் பற்றிய தன் கட்டுரையில் நன்கு எடுத் துரைக்கிறார். இப்பொருள் குறித்து அவர் கூறுவதாவது:

''தனிமனிதன் சாதிக்கட்டுப்பாட்டை மீறும்போது குறிப்பிட்ட சில சடங்குகளோடு செய்யப்படும் சாதிநீக்கத்தின் விளைவு என்ன வென்றால், நீக்கப்பட்டவனைச் சமூக உறவாடல் அனைத்தி லிருந்தும் விலக்கிவைத்தல், குடியியல் பணி ஒவ்வொன்றிலிருந்தும் இடை நீக்கம் செய்தல், பதவிகள் அனைத்துக்கும், வாழ்வின் தர்மங்கள் அனைத் துக்கும் அவனைத் தகுதியற்றவனாக்குதல் என்பதாகும். அவனோடு தொடர்புள்ளவர்கள் அவனைக் கைவிட்டுவிட வேண்டும், அவனுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட அக்கணத்திலிருந்தே,

அவனிடம் பேசுவதையும், அவனோடு சேர்ந்து அமர்வதையும், பரம்பரைச் சொத்தானாலும் வேறுவகைச் சொத்தானாலும் அதை அவனிடம் ஒப்படைப்பதையும், புத்தாண்டுநாளில் அவனை விருந்துக்கு அழைப்பது போன்ற செயலையும் தவிர்த்திடல் வேண்டும். இந்நிலைமைகளுக்கு ஆளாகிற ஒருவனது நிலை, செத்துப்போனதற்கு இணையான நிலையாகும். பார்க்கப் போனால் இந்துச் சட்டம் அவனைச் செத்துப் போனவனாகத் தான் கருதுகிறது. இயற்கையாக அவன் இறந்துபோனால் எப்படியோ அதேபோல் தெய்வத்துக்குத் தீர்த்தக்காணிக்கை செய்யும்படி அச்சட்டம் கட்டளையிடுகிறது. துன்பங்களைச் சுமத்துகிற இந்த அமைப்பு இழிவு செய்வதாகவே இருக்கும் என்றாலும், இந்தச் சட்டத்திலிருந்து தப்பிக்கத் துணை செய்கிற எவருக்கும் இதேகதி ஏற்படுமாறு செய்து பழங்காலச் சட்டம் இதனைச் செயலாக்கியது. ஆனால் இந்த யுகத்தின் தொடக்கத்தில் தண்டனையின் கடுமை தணிக்கப்பட்டது. ''பாவிமட்டுமே தன் குற்றத்தைச் சுமக்கிறான்'' என்று கூறப்பட்டுள்ளது. ஒருவர் இன்னொருவருடன் சேர்ந்து உண்ணவேண்டும் என்றிருக்கும் போது, போதிய காரணம் இல்லாமல் அவர் அப்படிச் செய்ய மறுத்தால் தண்டனைக் குரியவராகிறார். பம்பாய்ச் செய்திகளில் சாதியிலிருந்து கெடு நோக்குடன் நீக்கியதற்காக இழப்பீடு பெற்ற ஒரு சட்டநடவடிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்துச் சட்டத்தினால் சாதிகெடுவதற்கும், முன்பு நம்மிடையே நிலவிவந்த சமூக நீக்கத்துக்கும் இடையிலான ஒப்புமை இந்நடவடிக்கையின் பொதுத் தன்மையிலும் விளைவிலும் மட்டுமல்லாமல் இரண்டுமே இருதரப்பட்டதாய் உள்ள தனிச் சூழ்நிலையிலும்கூடப் பொருந்துகிறது. நம்மைப் பொறுத்தவரை குறைந்த சமூகநீக்கம், கூடுதல் சமூகநீக்கம் என்று இருந்ததைப் போலவே, இந்துக்களிடையே வாரிசுரிமை யிலிருந்து விலக்கிவைக்கும் நிலையை அவசியமாக்குகிற குற்றங்களையும் இருதரக் கண்ணோட்டத்தில் பார்க்கலாம். **1814** இல் வங்காளத்தைச் சேர்ந்த சுதர் திவானி அதாலத்தில் நடைபெற்ற ஒரு வழக்கிலிருந்து இதைத் தெரிந்து கொள்கிறோம். இவ்வழக்கில் விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்கிய அரசுப் பண்டிதர்கள் ''அரை குறையான, தற்காலிக இழிவுறுதல் தேவைப்படுகின்ற குற்றங்களையும் சாதி இழப்பு தேவைப்படுகின்ற குற்றங்களையும்'' வேறுபடுத்திக் காட்டினார்கள். அவர்கள் கூறியதாவது:

''அணுகுமுறை இழிவுறுதலைக் கோருகிற முதல்நேர்வில், இதற்கு வழிசெய்த குற்றத்துக்குப் பரிகாரம் செய்துவிடும்போது வாரிசுரிமைக்கான தடை அகற்றப்படுகிறது; ஆனால் முழுமையான

இழிவுறுதல் சுமத்தப்படுகிற இரண்டாம் நேர்வில், பிராயச்சித்தம் செய்து குற்றத்தின் பாவத்தன்மையைப் போக்கலாம் என்றாலும் வாரிசுரிமைக்கான தடை நீடிக்கிறது. ஏனென்றால் ஒருவன் தன் குலத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டால் பின் என்றென்றும் சாதிகெட்ட வனாகவே இருந்து வரவேண்டும்.'' இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப் பட்டவர் ''ஊதாரித்தனமாக மனம்போன போக்கில் நடந்து கொண்டதான குற்றம்புரிந்தவர், மதுபானங்களுக்கு வெட்கங்கெட்ட முறையில் அடிமையானவர், இழிவான ஆட்களுடன் சேர்ந்து பழகுவதையும் சேர்ந்து உண்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தவர், மிகவும் ஒழுக்கக்கேடானவர், பல்வேறு சந்தர்ப்பங்களில் பலரையும் வேண்டுமென்றே தாக்கிக் காயப்படுத்தியவர், முகம்மதிய பிரிவைச் சேர்ந்த ஒரு பெண்ணுடன் வெளிப்படையாகவே கூடிவாழ்ந்தவர், தன் வளர்ப்புத் தாயின் வீட்டுக்குத் தீவைத்தவர் வேறுவழிகளிலும் அந்தத் தாயாரை அழிக்க முயன்றவர்'. பண்டிதர்கள் அறிவித்தனர்: ''ஷியன்னாத் இழைத்ததாக மெய்ப்பிக்கப்பட்டுள்ள குற்றங்கள், அனைத்திலும், ஒன்று மட்டுமே, அதாவது ஒரு முகம்மதியப் பெண் ணுடன் சேர்ந்து வாழ்ந்த குற்றம் மட்டுமே அவனை அவனது குலத்திலிருந்து நிரந்தரமாக நீக்கும் தண்டனைக்கு உள்ளாக்கக்கூடிய தன்மை கொண்டதாகும். இழிவுறுதலைச் சுமத்துவதற்கான அதிகாரம் முதலாவதாக சாதிகளையே சேர்ந்தது. இதற்கென்று அவை கூடி ஆலோசிக்க வேண்டும். சாதிப்பேரவை அளிக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்ளவில்லையேல், மன்னரின் நீதிமன்றங்களுக்கு மேல் முறையீடு செய்யலாம்''. மேலே எடுத்துக்காட்டியுள்ள வழக்கில் வாரிசுரிமைக் கோரிக்கையின் அடிப்படையில் கேள்வி எழுந்தது என்பதைச் சொல்லிவைக்கலாம். இந்த அதிகாரமானது மக்களின் அறநெறிகளுக்குப் பொருந்தக்கூடிய ஒருவகைத் தணிக்கை முறைக்கு இணையாகிறது. கண்டிப்பாகச் சொல்வதென்றால் இத்தகைய நேர்வு களுக்கு இதரவகையில் சட்டம் பொருந்தாது எனலாம். குற்றவாளி, தன் நிகழ் நிலவரத்தில் இழைத்த குற்றங்களுக்காக மட்டுமே தண்டனைகள் விதிக்கமுடியும். சாதாரணக்குற்றம் என்றால் அது மறுபடியும் செய்யப்பட் டிருந்தால் மட்டுமே தண்டனை நியாயமாகும். சாதியிலிருந்து வெளியேற்றுவதற்கான ஏனைய காரணங்களி லிருந்து இழிவுறுதலை வேறுபடுத்திக் காட்டுவது என்னவென் றால், தண்டனைக்குக் காரணமான செயலைத் தொடர்ந்து மகன் பிறந்திருந்தால் தண்டனையின் விளைவுகள் மகனுக்கும் போய்ச் சேருகின்றன. தந்தையின் பறிகொடுப்பில் மகனுக்கும் பங்குண்டு. முன்கூட்டிப் பிறந்திருந்தால், அவனுக்கு வாரிசுரிமை உண்டு. தந்தை இறந்துவிட்டாற்போல் அவன் கருதிக்கொள்கிறான். இதரவகை

சாதிநீக்கம் ஒவ்வொன்றிலும் மகன் உள்ளபடியே தந்தைக்குள்ள அதே இக்கட்டில் சிக்கவில்லையென்றால் வாரிசாகித் தந்தையைக் காப்பாற்றுகிறான்; கொள்ளுப்பேரன் வரைக்கும் இதேஉரிமை நீண்டு செல்கிறது. குற்றம்புரிந்த தந்தையைப் பொறுத்தவரை, வாரிசுரிமை யிலிருந்து விலக்கப்படுவது இயற்கைக் குறைபாடுகளுக்காக அல்ல வென்றால், சொத்திலான பாகப்பிரிவினை அல்லது வாரிசுவழி உடைமை மாற்றத்துக்கு முன்னதாகக் காரணம் உருவாகியிருக்க வேண்டும். அது முடியும்வரை எதுவும் நிகழவில்லையென்றால் வாரிசுரிமையை அது நீக்கிவிடுவதில்லை. ஆகவே, கணவனின் பாதுகாப்பில் இருக்கும்போது மனைவி சோரம்போவது அவளது வாரிசுரிமையைத் தடை செய்கிறது; கைவரப்பெற்ற பிறகும்கூட அதனைப் பறித்துவிடுகிறது. இவ்வகையில் இந்துக் கைம்பெண் நம்நாட்டுக் கைம்பெண்ணின் நிலைமையை நினைவுபடுத்துகிறாள். நம்நாட்டுக் கைம்பெண் தனக்கெனக் கணவன் விட்டுச் சென்ற படியுரிமைச் சொத்துக்களை வைத்துக் கொள்வதும் இழக்காம லிருப்பதும் இதே நிபந்தனைப்படிதான். மிகவும் மதிக்கத்தக்க ஒரு கருத்தின்படி, சாதியை இழந்தபின் அதைப் பிராயச்சித்தத்தின் மூலம் ஈடுசெய்யாமலும் பரிகாரத்தின் மூலம் மீட்டுக்கொள்ளாமலும் விட்டுவிட்டால், சாதி பறிபோய்விடுகிறது. பொதுவாகச் சொன்னால் தகுதிநீக்கச் சட்டம், ஒன்றேபோல் இருபாலாருக்கும் பொருந்தும். ''சாதிகெட்டவனைத் தவிர்த்துப் பார்த்தால் வாரிசாக முடியாமல் போனது சொந்த முறையிலான இயலாமை என்று மட்டுமே தோன்றும். ஒவ்வொரு நேர்விலும் நீக்கப்பட்டவருக்குப் பராமரிப்புப் பெற உரிமை இருக்கக் கூடும். பெரும்பாலான நேர்வுகளில் எந்த நேரத்திலும் தானே தன் உரிமைகளை மீட்டுக்கொள்வது அவரது அதிகாரத்துக்குட்பட்டது. இந்த விதிமுறைகள் சிலவற்றின் விவேகம் குறித்து யார் என்ன நினைத்தாலும் சரி, இவை எங்கும் எதிலும் நீதியற்றுப்போனவை என்றோ, எந்நிலையிலும் கொஞ்சம்கூட மனிதத்தன்மை இல்லாதவை என்றோ சொல்லிவிடமுடியாது. சட்டத்தின் இந்தப்பகுதியை நம் நாட்டுச் சட்டத்துடன் ஒப்புநோக்கும்போது, உயிலின் வாயிலாகக் குழந்தைகளின் வாரிசுரிமையை அடியோடு பறிப்பதைத் தடுப்பதற்கு நம் சட்டம் எதுவும் செய்யவில்லை என்பதை மறந்துவிடலாகாது.

''இரு சமயப்பிரிவுகளில் ஏதேனும் ஒன்றில் சேர்ந்த உடனே பக்தர் (சமயச்சீர்திருத்துக்கு முன்னர் நம்நாட்டில் துறவியாக அறிவித்துக் கொண்டவர் எப்படியோ அதேபோல குடியியல் வகையில் இறந்தவர்) ஆகிவிடுகிறார். அவர் இயற்கையாக இறந்திருந்தால் எப்படியோ அவ்வாறே, அடுத்த வாரிசு உரிமை பெறுகிறார். பக்தர், உலகியல் கவலைகளைத் துறந்து வாரிசுரிமையற்றவராகி விடுவது போலவே,

சமயப்பகடியும், இறுதியில் சமயப் பகைவனும் கூட வாரிசுரிமை அற்றவனாகி விடுகிறான். சமயப்பகடி என்பதில் போலிகளையும் மோசடிப் பேர்வழிகளையும் சேர்க்கலாம். புனிதச் சின்னங்கள் பூண்டு, உள்நோக்கத்துடன் தவம் செய்கிறவர்கள் இப்பெயர் பெறுகிறார்கள்.

''சாதியிலிருந்து விலக்கிவைப்பதற்கு எஞ்சியுள்ள மற்றொரு காரணம் பொருந்தா மணம் ஆகும். அதாவது கணவனும் மனைவியும் ஒரே தாய்மூலத்திலிருந்து வந்தவர்களானால் இத்தகைய பொருந்தா மணத்தில் உதிக்கிற சந்ததி வாரிசாக முடியாது. சூத்திரர்கள் மட்டும் இந்த விதிக்கு விலக்காவார்கள். வகுப்புவரிசையின்படி திருமணம் நடைபெறவில்லை என்றால் அப்போதும் இதே விளைவு தான். வாரிசு அல்லது வாரிசுகள் எந்த ஊனத்துக்கும் உட்படவில்லை, வாரிசுரிமையும், பெற்றாகிவிட்டது என்றால், அடுத்து இது எந்தக் குற்றச்சாட்டுக்கு உரியது என்பதைப் பார்க்க வேண்டும்.''

சாதிக்கு ஒரு சமயக்கட்டளையும் உள்ளதா? வேதங்கள் சாதியை ஏற்றுக்கொள்கின்றன.

ரிக்வேதம் சாதியை ஏற்றுக்கொண்டு, அதன் பிறப்பைப் பின்வருமாறு விளக்கிச் சொல்கிறது:

''1. புருஷருக்கு ஆயிரம் தலைகள், ஆயிரம் கண்கள், ஆயிரம் பாதங்கள். உலகை அணைத்து ஒவ்வொரு பக்கத்திலும் பத்துவிரற்கடை கூடுதலாகப் பரப்பி நின்றார்.

2. புருஷரே (பிரபஞ்சம்) முழுவதிலும் என்னவாகவும் இருந்துள்ளார், என்னவாகவும் இருப்பார். உணவினால் (அல்லது உண்ணும்போது) அவர் பெருகுவதால் இறவாமையின் இறைவனாகவும் அவரே உள்ளார்.

3. அவரது பெருமை இப்படிப்பட்டது. புருஷர் இதற்கும் மேலானவர். இருப்பவை அனைத்தும் அவரில் கால் பங்குதான். அவரில் முக்கால் பங்கு அழிவில்லாத விரிவானம்.

4. முக்கால் பங்கைக் கொண்டு புருஷர் மேலே மேலே ஏறிச்சென்றார். அவரின் கால்பங்கு, இங்கு உண்டாயிற்று. பிறகு எல்லா இடங்களிலும் உண்கிறவற்றுக்கும் உண்ணாதவற்றுக்கும் இடையில் அவர் தூவப்பெற்றார்.

5. அவரிடமிருந்து விராஜரும், விராஜரிடமிருந்து புருஷரும் பிறந்தார்கள். பிறந்தபோது அவர் முன்னும் பின்னும் பூமியைத் தாண்டி நீண்டு கிடந்தார்.

6. தேவர்கள் புருஷரை வைத்து யாகம் வளர்த்தபோது வசந்தம் அதற்கு நெய்யாயிற்று. கோடை அதற்கு விறகாயிற்று. இலையுதிர்காலம் படையலாயிற்று.

7. தொடக்கத்தில் பிறந்த புருஷர் என்னும் இந்தப் பலியை அவர்கள் யாகத் தீயிலிட்டு எரித்தார்கள். அவருடன் தேவர்களும் சத்யர்களும் ரிஷிகளும் பலியானார்கள்.

8. இந்தப் பெரும்பலியிலிருந்து தயிரும் வெண்ணெயும் கிடைத்தன. காட்டுக்கும் வீட்டுக்கும் உரிய பறவைகளும் விலங்குகளும் உருவாயின.

9. அந்தப் பெரும்பலியிலிருந்து இருக்கு, யஜுர், சாம, அதர்வண வேதங்களும் சந்தங்களும் பிறந்தன.

10. அதிலிருந்து குதிரைகளும் இரண்டு வரிசைப் பல் கொண்ட எல்லா மிருகங்களும் பிறந்தன; பசுக்கள் பிறந்தன; வெள்ளாடுகளும் செம்மறியாடுகளும் பிறந்தன.

11. புருஷரை (தேவர்கள்) கூறுபோட்டபோது, எத்தனைக் கூறுகளாக வெட்டிப் பிரித்தார்கள்? எது அவரது வாய்? எவை அவரின் கைகள்? அவரின் தொடைகளாகவும் பாதங்களாகவும் (இருந்ததாக) சொல்லப்படுகிறவை (இருபொருட்கள்) எவை?

12. பிராமணன் அவரது வாயாக இருந்தான்; ராஜன்யன் அவரது தோளாக இருந்தான்; வைசியன் (எனப்பட்டவன்) அவரது தொடையாக இருந்தான்; சூத்திரன் அவரது பாதத்திலிருந்து பிறந்தான்.

13. திங்கள், அவரது ஆன்மாவிலிருந்து (மனஸ்) பிறந்தது; ஞாயிறு, அவரது கண்ணிலிருந்து பிறந்தது; இந்திரனும் அக்கினியும் அவரது வாயிலிருந்தும் வாயு, அவரது மூச்சிலிருந்தும் பிறந்தன.

14. அவரது தொப்புளிலிருந்து காற்றுவெளியும், அவரது தலையிலிருந்து வானமும், அவரது பாதத்திலிருந்து பூமியும், அவரது காதிலிருந்து (நான்கு) திசைகளும் பிறந்தன. இப்படித் தான் (தேவர்கள்) உலகங்களையும் படைத்தார்கள்.

15. யாகம் வளர்த்த தேவர்கள் புருஷரைப் பலியாகக் கட்டிப் போட்டபோது, (தீயைச்சுற்றி) அதற்காக ஏழு குச்சிகள் (நட்டு) வைத்தனர். ஏழு விறகுக் கட்டைகள் மூன்றுமுறை மூட்டப்பட்டன.

16. தேவர்கள் பலிகொடுத்து யாகம் வளர்த்தார்கள். இவையே ஆரம்பச்சடங்குகள். இந்தப் பேராற்றல்கள் விண்ணைச் சாடின. அங்குத்தான் முன்னாளைய சதயர்கள், தேவர்கள் இருக்கிறார்கள்.''

பிராமணங்களும் சாதியை ஏற்றுக்கொள்கின்றன. சதபத பிராமணங்களில் சாதி பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது:

''23. பிரம்மா (பொழிப்புரையாளரின் கருத்துப்படி) இங்கு அக்கினி வடிவில் இருப்பவர், பிராமண சாதிக்குப் பிரதிநிதியாய் இருப்பவர், முன்னதாக இந்த (பிரபஞ்சமாய்) ஒன்றே ஒன்றாக இருந்தார். ஒன்றென்பதால் அது வளரவே இல்லை. அது ஆற்றல் மிக்க முறையில் சத்ரன், அதாவது தேவர்கள் நடுவில் இருப்பவன் என்ற அழகு வடிவத்தைத் தோற்றுவித்தது. இவர்கள் இந்திரன், வருணன், சோமன், ருத்ரன், பரஜன்யன், யாவன், மிருத்யு, ஈசனன் ஆகிய சக்திகளாக (சத்ராணி) உள்ளனர். ஆகவே எதுவும் சத்திரனுக்கு மேலானதில்லை. ஆகவே ராஜசூய யாகத்தில் பிராமணன் சத்திரியனுக்குக் கீழே அமர்கிறான். அவன் அந்தப் புகழை சத்திரனுக்கு (அரச சக்தி) வழங்குகிறான். இந்தப் பிரம்மாதான் சத்திரனுக்கு ஆதிமூலம். எனவே மன்னன் மேலாதிகம் பெற்றாலும் முடிவில் தன் மூலாதாரமாக பிராமணனை நாடுகிறான். அவனை (பிராமணனை) அழிப்பவன் யாரானாலும் தன் சொந்த மூலாதாரத்தையே அழித்துக் கொள்கிறான். அவன் தனக்கு மேற்பட்ட ஒருவனைக் காயப்படுத்தியவன் என்ற முறையில் மிகவும் அவலப்பட்டவனாகிறான்.

24. அவர் வளரவில்லை. அவர் விஷ்ணுவைப் படைத்தார். அதாவது வாசுக்கள், ருத்ரர்கள், ஆதித்யர்கள், வசுதேவர்கள், மாருதர்கள் என்னும் படையணிகளின் பெயர் கொண்ட தேவர் வகுப்புகளைப் படைத்தார்.

25. அவர் வளரவில்லை. சூத்திர வகுப்பாகிய பூஷணத்தைப் படைத்தார். இந்தப் பூமியே பூஷணம் ஆகும். ஏனென்றால் இருப்பவை அனைத்துக்கும் பூமித்தாயே ஊட்டமளிக்கிறாள்.

26. அவர் வளரவில்லை. தர்மம் என்னும் அற்புத வடிவத்தை ஊக்கத்துடன் படைத்தார். இந்த வடிவம்தான் அரசனுக்கு (சத்திரனுக்கு) அரசன்(சத்திரன்) அதாவது நீதி தேவன். எனவே தர்மத்துக்கு மேலானது எதுவுமில்லை. நலிந்தவன் வலிந்தவனைத் தர்மத்தைக் கொண்டு வெல்ல முனைகிறான். இங்கு தர்மம் மன்னனைப் போன்றது. இந்த தர்மமே சத்தியம். ஆகவேதான் உண்மை பேசினால் 'தர்மம் பேசுகிறான்' என்று சொல்கிறார்கள். அல்லது ஒருவன் தர்மம் பேசினால் 'உண்மை பேசுகிறான்' என்று சொல்கிறார்கள். இவை இரண்டுமே ஒன்றுதான்.

27. பிரம்மா, சத்திரன், விஷ்ணு, சூத்திரன் என்பது இப்படித்தான். தேவர்களிடையே பிரம்மா அக்கினியின் வாயிலாக மனிதர்களிடையே பிராமணன் ஆகிறார், (தெய்விக) சத்திரியன் வாயிலாக ஒரு (மனித) சத்திரியனும், (தெய்விக) வைசியன் வாயிலாக ஒரு (மனித) வைசியனும், (தெய்வீக) சூத்திரன் மூலமாக ஒரு (மனித) சூத்திரனும் ஆகிறார். ஆகவேதான் தேவர்களிடையே அக்கினியிடத்தும் மனிதர்களிடையே பிராமணனிடத்தும் உறையுள் தேடுகிறார்கள்.

தைத்ரிய பிராமணம், 1, 2, 6, 7 - தைவ்யோ வை வர்ணே பிராஹ்மன் அசூர்யோ சூத்ரா. ''பிராமண சாதி தேவர்களிடமிருந்து உதித்தது; சூத்திரசாதி அசுரர்களிடமிருந்து உதித்தது.''

சாதியைத் தொடர்ந்து இயங்கிவரச்செய்வதற்குச் சட்டக் கட்டளையும் சமயக் கட்டளையும் சக்திமிக்க கருவிகளாக இருந்தன என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் சமயக் கட்டளைதான் முதன்மையாக இருந்தது, முழுக்கமுழுக்க சமயக் கட்டளையின் வலிமையினால்தான் சாதி காப்பாற்றப்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. இரு காரணிகள் இதைத் தெளிவாக்கும். சட்டக் கட்டளை மிக அரிதாகவே துணைக்கழைக்கப்பட்டது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கும். வேறு வழிகளைக் கொண்டு சாதி காப்பாற்றப்பட்டது என்பது இதன் பொருள். இந்த சட்டக்கட்டளை 1850 வரைதான் பயன்பாட்டில் இருந்தது. அந்த ஆண்டில் பிரித்தானிய அரசு இயற்றிய சாதித் தீமைகள் நீக்கச் சட்டம் என்னும் சட்டத்தால் இந்த சட்டக் கட்டளை அகற்றப்பட்டது, அல்லது ஒழிந்து போயிற்று எனலாம். சட்டக்கட்டளை விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகும் சாதி குறையாமல் தொடர்ந்துள்ளது. சாதிக்கு சட்டக் கட்டளையைச் சார்ந்திராத இன்னும் வலிமையான இன்னொரு

கட்டளையாகச் சமயக்கட்டளை இல்லாது போயிருந்தால் இது சாத்தியமாகி இருக்க முடியாது.

ஒரு நிறுவன ஏற்பாடு அல்லது ஒரு நம்பிக்கையைத் தாங்கிப் பிடித்துக் காப்பாற்றக் கூடிய மிக உயர்ந்த கட்டளை, சமயக் கட்டளைதான் என்பதில் கேள்விக்கு இடமில்லை. சமயக் கட்டளையின் ஆற்றல் அளவிடற்கரியது. அது ஏற்படுத்துகிற தடை மிகப்பெரியது. ஆனால் இந்தச்சமயத் தடைக்கு இவ்வளவு உயர்ந்த 'குதிரைத்திறன்' எப்படி, எங்கிருந்து கிடைக்கிறது என்பது பெரும் பாலும் புரிந்து கொள்ளப்படுவதில்லை. சமயக் கட்டளையின் பின்னா லிருக்கும் அதிகாரத்தின் அடிப்படை இருதரப்பட்டது என்பதைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

முதலாவதாக எது சமய வழிப்பட்டதோ அது சமூக வழிப் பட்டதும் ஆகும். பேராசிரியர் துர்க்கிம் சொல்வதைப் பாருங்கள்: *

''உண்மையிலேயே சமயம் தொடர்புள்ள நம்பிக்கைகள் என்பவை எப்போதுமே குறிப்பிட்ட ஒரு குழுவிற்குப் பொதுவானவை. இந்தக் குழு, அந்நம்பிக்கைகளைக் கடைப்பிடிப்பதையும் அவை தொடர்பான சடங்குகளைச் செய்வதையும் தன் சமயக் கடமையாக்கிக் கொள்கிறது. இந்த நம்பிக்கைகள் இந்தக் குழுவில் உறுப்பினர்களாய் இருக்கிற அனைவரும் தனித்தனியாகக் கொண்டிருப்பவை மட்டுமல்ல, இவை குழு முழுவதுக்குமே மொத்தமானவை, குழுவை ஒன்றுபடுத்து கிறவை. குழுவாகச் சேர்ந்துள்ள தனிமனிதர்கள் தங்களுக்கொரு பொதுநம்பிக்கை இருப்பதால்தான் ஒருவருடன் ஒருவர் ஒன்றுபட் டிருப்பதாக உணர்கிறார்கள்.''

இரண்டாவதாக, எது சமயவழிப்பட்டதோ அது சடங்குவழிப்பட்டதும் ஆகும். இதுகுறித்தும் துர்க்கிம் சொல்வதைப் பாருங்கள்: **

> ''நாமறிந்த சமய நம்பிக்கைகள் யாவும், அவை சாமானிய மானவை என்றாலும், சிக்கலானவை என்றாலும் ஒரு பொதுத் தன்மையைக் காட்டுகின்றன. மெய்யானவை என்றாலும், கருத்தளவிலானவை என்றாலும் மனிதர்களின் சிந்தனைக்குரித் தாகிற எல்லாவற்றையும் இருவகைகளாக அல்லது எதிரெதிர்க் குழுக்களாக வகைப்படுத்துவது இந்நம்பிக்கைகளுக்கு அவசிய மாகிறது. இவ்விரு வகைகளும் பொதுவாக இருவேறு சொற்

---

* சமயவாழ்க்கையின் அடிநிலை வடிவங்கள், பக்கம் 37-40.

** அதே நூல், பக்கம் 43

களால் குறிக்கப் பெறுகின்றன. ஆசாரமானவை, ஆசாரங் கெட்டவை என்ற சொற்களே அவை.. மனிதச்சிந்தனையின் வரலாறு முழுவதிலும் இவ்வளவு ஆழமாய் வேறுபடுத்தக் கூடிய அல்லது இவ்வளவு தீவிரமாய் ஒன்றையொன்று எதிர்த்து நிற்கக்கூடிய இருவகையினங்களுக்கு வேறு எந்த எடுத்துக் காட்டுமில்லை. நல்லதற்கும் கெட்டதற்குமான பாரம்பரிய எதிர்ப்பென்பது இதற்குப் பக்கத்தில் நிற்கும்போது ஒன்று மில்லாது போகிறது. எப்படியென்றால், நல்லதும் கெட்டதும் ஒரே வகையின் அதாவது அறநெறிகளின் எதிரெதிர் இனங்களே ஆகும். எப்படி உடல் நலிவும் உடல்நலமும் ஒரே பொருண்மை யின், அதாவது உயிரின் இருவேறு பண்புக்கூறுகளே ஆகுமோ அதேபோலத்தான் இதுவும். ஆனால் ஆசாரமும் ஆசாரக்கேடும் எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் மனித உள்ளத்தால் இருவேறு வகைகளாகவே கருதப்பட்டுள்ளன, இருவேறு உலகங்களைப் போல் அவற்றிடையே பொதுவானது எதுவு மில்லை.... சமய நம்பிக்கைகள் என்பவை ஆசாரமானவற்றின் தன்மையையும் அவை ஒன்றுடன் ஒன்றோ ஆசாரங் கெட்ட வற்றுடனோ நிலைநிறுத்திவரும் தொடர்புகளின் தன்மையையும் வெளியிடும் குறியீடுகளாகும். (அதேபோது) சடங்குகள் என்பவை ஒருவன் இந்த ஆசாரப் பொருட்களின் முன்னிலையில் எப்படி ஆறுதல் பெறவேண்டும் என்பதைக் குறித்துரைக்கும் நடத்தை விதிகளாகும்.''

சமூக, சமய, சடங்கு நம்பிக்கைகள் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருப்பது இதிலிருந்து தெளிவாகும். சமய வழிப்பட்டது சமூக வழிப்பட்டதாகும். ஆனால் சமூகவழிப்பட்ட எல்லாம் சமய வழிப் பட்ட தன்று. சடங்கு வழிப்பட்டது சமூகவழிப்பட்டதாகும். ஆனால் சமூக வழிப்பட்டதெல்லாம் சடங்கு வழிப்பட்டதன்று. மறுபுறம் சமயவழிப் பட்டது சமூகவழிப்பட்டதும் சடங்குவழிப்பட்டதும் ஆக இரண் டும் ஆகும்.

சமயம் சமூகவழிப்பட்டது என்பதும், சமயநம்பிக்கைகள் சமூக நம்பிக்கைளாகும் என்பதும், சமய நம்பிக்கைகள் சமயக் கட்டளைக்குப் பின்னாலுள்ள அதிகாரவுரிமைக்கு ஓர் அடிப்படை ஆகின்றன. சமயநம்பிக்கைகள் தனிமனிதன் மீது குழுவினால் சுமத்தப்படுகிற விதமும், சுமத்தப்படுகிற காரணங்களும் அது தான் ஏனைய சமயமல்லாத, முழுக்க முழுக்க சமூகரீதியான நம்பிக்கை களைச் சுமத்துகிற அதேவிதமும், சுமத்துவதற்கான அதே காரணங்களும் தான். குழுவின் கட்டுக்கோப்பைக் காப்பதே குறிக்கோள். குழுவின்

கட்டுக்கோப்பு அதன் சமயநம்பிக்கைகளோடு இன்னும் நெருக்கமாய்க் கட்டுண்டிருப்பதால் ஒரு குழு சமயநம்பிக்கை மீறலுக்குத் தண்டனை விதிக்கும்போது காட்டுகிற கண்டிப்பும் கடுமையும் சமயமல்லாத நம்பிக்கை மீறலுக்காக ஒருவரை கடிந்து கொள்ளும்போது காட்டுகிற கண்டிப்பையும் கடுமையையும் காட்டிலும் வழக்கமாய்க் கூடுதலாகும். சமூக சக்திக்குக் கட்டாயப்படுத்தும் அதிகாரம் உள்ளது. இந்த அதிகாரத்தின் எதிரில் தனிமனிதர் பெரும்பாலும் எதுவும் செய்ய இயலாதவராகிறார். சமயநம்பிக்கையை மீறுவது இன்னும் மோசமான மீறலாகும் என்ற எண்ணம் சமூக சக்தியின் கட்டாயப்படுத்தும் அதிகாரத்தை உருக்குப்போல் உறுதியாக்கி, முற்றிலுமான சமூகக் கட்டளைகளைக் காட்டிலும் சமயக்கட்டளைக்கு மிகக் கூடுதலான வலிமை தருகிறது.

சமயக் கட்டளைக்குப் பின்னாலுள்ள அதிகாரவுரிமையின் சடங்கு அடிப்படையானது முதன்மையாகத் தனி மனிதனிடமிருந்தும், இரண்டாம் பட்சமாகவே, குழுவிடமிருந்தும் வருகிறது. சமயக் கட்டளையின் சமூக அடிப்படைக்குள்ள குறிப்பிடத்தக்க தனித்தன்மை இதுவே. இது சமயநம்பிக்கைகளைக் காப்பதற்குத் தனிமனிதனை அணியமாக்குகிறது. குழு, தன் சமூகத் தன்மையை பயன்படுத்தும் அவசியத்தை இது ஒழித்துவிடுகிறது. இதனால்தான் அதன் அதிகாரத்தின் சடங்கு அடிப்படையானது சமயக் கட்டளைக்கு இவ்வளவு உயர்ந்த இடம்கொடுத்து, ஏனைய எல்லாக் கட்டளைகளையும் விஞ்சும்படி, ஏன், பார்க்கப் போனால் அவற்றை இல்லாமற் போகும்படி செய்து விடுகிறது. இதனால்தான் சமயநம்பிக்கைகளின் கட்டுக்கோப்பைக் காத்திட சமயக்கட்டளை மட்டுமே போதும் என்றாகிறது. காலமும் சூழ்நிலைகளும்கூட இந்த நம்பிக்கைகளைப் பாதிக்க இயலாதவையாகி விட்டன. இது எப்படி நிகழ்கிறது என்பதைப் புரிந்து கொள்வது எளிது. ஆசாரமானது தனிமனிதனிடம் பயபக்தியைத் தூண்டுகிறது, ஆசாரங் கெட்டவற்றிடம் அவனுக்குப் பயமும் இல்லை, பக்தியும் இல்லை. துர்க்கிம் சொல்வதுபோல,

> ''உயர்ந்த சமூகப் பொறுப்புகள் வகிக்கும் மனிதர்களிடம் சாதாரணமாய்ப் பணிவு காட்டுகிறோமே, அது (ஆசாரமானவற்றுக்குக் காட்டப்படும் சமய மரியாதையிலிருந்து வேறுபட்டதன்று. அதே அசைவுகளால் இதுவும் வெளியிடப்படுகிறது. ஒருவர் உயர்ந்த பிரமுகரிடமிருந்து விலகியே நிற்கிறார். முன்னெச்சரிக்கையோடுதான் அவரை நெருங்கிச் செல்கிறார். அவரோடு உரையாடுகையில், சாதாரண மனிதர்களிடம் பயன் படுத்தாத) வேறு அடையாளங்களையும் மொழிநடையையும் பயன்படுத்துகிறார்.''

ஆசாரமானது பயபக்தி எனும் உணர்வைத் தோற்றுவிக்கிறது. அது மீறவொண்ணாதது என்ற உணர்வையும் தோற்றுவிக்கிறது. ஒரு நம்பிக்கை என்பது ஆசாரமான ஒன்றாக உயர்த்தப்பட்டபின், அதைத் தொடுவதோ, மறுப்பதோ, எதிர்த்து வரதிடுவதோ தடைசெய்யப் படுகிறது. ஆசாரமானதைக் குற்ற விமர்சனம் செய்வதற்குத் தடை யுள்ளது. ஆசாரமானது 'தொட்டுப்பார்க்க முடியாததும் விவாதத்துக்கு அப்பாற்பட்டதும்' ஆகும். தனியொரு மனிதர் இந்த உணர்வுகளால் ஆட்கொள்ளப்படும்போது, இந்த உணர்வுகள் அவரது வாழ்வில் ஒரு பகுதியாகிவிடும்போது, எதை ஆசாரமென்று மதிக்க அவருக்குக் கற்றுத்தரப்பட்டதோ அதைத் தூக்கிப் பிடித்துப் பாதுகாப்பவராகி விடுகிறார்.

சரியாக இதைத்தான் சாதியைப் பொறுத்து இந்துக்கள் செய்துள் ளனர். அவர்கள் வேதங்களில் சாதிக்கு இடம் கொடுத்துள்ளனர். இதனால் சாதி ஆசாரமாகிவிட்டது. ஏனென்றால் வேதங்கள் ஆசார மானவை. வேதங்கள் சமயவழிப்பட்டவை என்பதால்தான் ஆசார மானவை என்று சொல்வது தவறு. அவை ஆசாரமானவை என்பதால் சமயவழிபட்டவை என்பதுதான் நிலை.

இந்துக்கள் வேதங்களின்பால் ஆசாரம் என்னும் உணர்வைக் கொண்டிருந்தாலும் அவ்வுணர்வை நேராக வெளியிடும் வகையில் அவர்களிடம் வேதத்துக்கென எந்தப் பெயரும் இல்லை எனத் தோன்றும். வேதம் என்றால் அறிவு, அவ்வளவுதான். அவ்வாறே இருக்கலாம். ஆனால் அவர்கள் வேதங்களை ஆசாரமாக மதிக்கிறார் கள் என்பதில் ஐயமில்லை. பார்க்கப்போனால், வேதங்களுக்கென்று அவர்கள் பயன்படுத்தும் சொல்லாட்சி ஆசாரம் என்ற சொல்லைக் காட்டிலும் மிகக் கூடுதலான அளவில் பயபக்தியை வெளியிடுவதாக உள்ளது. அவர்கள் வேதங்களை **ஸ்ருதி** என்று அழைக்கிறார்கள். மனிதன் காதால் கேட்கிற (அதாவது மனிதனுக்கு வெளிப்படுத்தப் படுகிற) கடவுளின் சொல் என்று பொருள். ஆதிகாலச் சமயத்தில் மனிதன் செய்திருப்பதே ஆசாரம். இந்து சமயத்தில் கடவுள் எதை ஆசாரமென்று நியமித்துள்ளாரோ அதுவே ஆசாரம்.

இந்துக்கள் வேதங்களைத் தங்கள் சமயத்தின் ஆசார நூலாக மதிக்கிறார்கள். அவர்கள் வேதங்களை உயர் தனிச்சிறப்புடையதாக மதிக்கிறார்கள். கல்பங்கள் எனப்படும் படைப்புச் சகடங்கள் இருப்ப தாக இந்துக்கள் நம்புகிறார்கள்.* ஒவ்வொரு சகடத்தின் முடிவிலும்

★ எம். கிருஷ்ணமாச்சாரியார், உயர்தனி சமஸ்கிருத இலக்கியம், முன்னுரை, பக்கம் VII- VIII, பக்கம். 836

ஒரு பிரளயம் ஏற்படுகிறது. பிறகு ஒரு புதிய படைப்புச் சகடம் தொடங்குகிறது. ஒரு கல்பத்தின் முடிவில் பிரளயத்தில் வேதங்கள் அழிந்து போகின்றன. ஒவ்வொரு கல்பத்தின் தொடக்கத்திலும் அவை கடவுளால் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆகவே சென்ற கல்பத்தின் முடிவில் ஏற்பட்ட பிரளயத்தில் வேதங்கள் அழிந்துபோயின. இப்போதைய கல்பம் கிருதயுகத்தில் தொடங்கிற்று. வேதங்கள் கடவுளால் ரிஷிகளுக்கு வெளிப்படுத்தப்பட்டன. வேதங்களை இந்துக்கள் நித்தியம் என்றும் அனாதி (தொடக்கம் இல்லாதது) என்றும் அபௌருஷேய(மனிதனால் செய்யப்படாதது) என்றும் மதிக்கிறார்கள். சுருங்கச் சொல்லின் வேதங்கள் கடவுளின் சொற்களாம்! மனிதனுக்கு கடவுள் இட்ட ஆணைகளாம்!

வேதங்களை **ஸ்ருதி** என்று அழைக்காவிட்டாலும் கூட அவற்றுக்கு ஆசாரம் என்பதன் கட்டாயத் தன்மை இருந்திருக்கும். சமயங்களைப் பேராசிரியர் மாக்ஸ் முல்லர் பல்வேறு விதமாக வகைப்படுத்தியுள்ளார்.★ வெளிப்படுத்தின சமயத்திற்கு மாறாக இயற்கைச் சமயம் என்பது அவற்றை வகைப்படுத்துவதற்கு ஒரு வழியாகும். தேசியச் சமயத்திற்கு மாறாக தனிமனிதச்சமயம் என்பது இன்னொரு வழி. சமயங்களை நாத்திகம், சிலை வழிபாடு, இரட்டைத் தெய்வம், பலதெய்வம், ஏசு தெய்வம், விலங்கு வழிபாடு என்றெல்லாம் சொல்வது அவற்றை வகைப்படுத்துவதற்கு மூன்றாவது வழி. உண்மை என்றும், பொய் என்றும் சொல்வது சமயங்களை வகைப்படுத்த மற்றும் ஒரு வழியாகும். நூலற்ற சமயங்கள், நூற் சமயங்கள் என்றும் சமயத்தை இருவகைகளாகப் பிரிக்கக் கூடும். சமயங்களை வகைப்படுத்துவதற்கு இதற்கு மேலும் வழிகள் இருக்கலாம். மேலும் ஒருவகை வேறுபாட்டைக் குறிப்பிட வேண்டும். மூலவர்களால் நிறுவப்பட்ட சமயங்கள், மூலவர்கள் யாருமற்ற சமயங்கள் என்பதே அது.

இந்த வகை வேறுபாடுகள் சமூக முக்கியத்துவம் கொண்டவை - இரண்டைத் தவிர. இயற்கைச் சமயத்திற்கும் வெளிப்படுத்தின சமயத்திற்கும் இடையேயான வகை வேறுபாடும், நூலற்ற சமயத்திற்கும் நூற் சமயத்திற்கும் இடையிலான வகை வேறுபாடுமே அவை. அவற்றின் செயற்பாட்டில் மாறுபாடு உள்ளது என்றாலும் அந்த மாறுபாடு பலநேரம் கவனிக்கப் பெறுவதில்லை.

நூற்சமயமானது, நூலற்ற சமயத்திற்கு மேல் ஒரு திட்ட வட்டமான வசதியைப் பெற்றுள்ளது. நூலற்ற சமயமென்பது

★ சமயத்தின் அறிவியலுக்கு அறிமுகம்.

எழுதப்பெற்ற யாப்பு ஒன்றில்லாத சமயம் ஆகும். நூற்சமயமானது அது உண்மையானது என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது. நூலற்ற சமயத்தால் இப்படிச் செய்யமுடியாது. ஒரு நூற்சமயத்துடன் ஒப்பிடுங் கால், நூலற்றசமயம் என்பது பொய்மை என்னும் தாழ்வு மனப் பான்மையைக் கொண்டுள்ளது. மாக்ஸ் முல்லர் கூறுவதைப் போல நூற்சமயங்கள் மட்டுமே ''உண்மைச் சமயங்களாகக் கருதப்படுகின்றன. அவை பொய்க் கோட்பாடுகளைக் கொண்டிருக்கலாம் என்றாலும் ஒருவகை உயர்குலமாக மதிக்கப்படுகின்றன. இந்த உயர்குலத்தின் பிழைகளைப் பெரும்பாலும் மன்னித்து விடலாம். அதேபோது நூலற்ற அல்லது தற்குறிச் சமயங்களின் கொச்சைக் கூட்டத்திற்கு சபையில் இடமே இல்லை.''★ நூலற்ற சமயத்தைக் காட்டிலும் நூற்சமயத்திற்கு அளிக்கப்படும் உயர்வைப் புரிந்து கொள்வது எளிது. ஏட்டில் எழுதி விட்டால் அது உண்மையின் மறுபெயராகும்போது, ஏட்டில் எழுதப் பெற்ற சமயம் பொய்யில்லை என மிக இயல்பாகவே தோன்றக் கூடும். நூலானது உண்மைக்குச் சான்றுப் பத்திரமாகி விடுகிறது. நூல் இல்லாத சமயம் சான்றுப் பத்திரம் ஏதுமற்றதாகிறது.

ஒரு நூற் சமயத்தின் சமூக முக்கியத்துவம் என்னவென்றால், நூலில் அடங்கிய சமயம் உண்மை என்ற எண்ணத்தை ஏற்படுத்துவதன் மூலம் அது மக்களின் உள்ளத்தைக் கட்டுப்படுத்துகிறது. அது சமயத்திற்கு மக்களின் மேல் அதிகாரவுரிமை வழங்கி அவர்கள் தாமாக விரும்பிக் கீழ்ப்படியத் தூண்டுகிறது.

ஆனால் ஒரு சமயம் நூற்சமயமாக இருப்பதால் எவ்வளவுதான் உண்மையானதாகத் தோன்றினாலும், அனுபவ வழியில் தவறான நம்பிக்கைகளும் சடங்குகளும் அதற்குள் புகுந்துவிட்டால் இந்தத் தோற்றம் அதனை அழிவிலிருந்து காப்பாற்றிவிடாது. மனிதன் தத்துவத்தில் வழி தவறிப் போகலாம், ஆனால் அவனது நடைமுறை உள்ளுணர்வுகள் நீண்டகாலத்திற்கு ஒரு தவறான தத்துவத்தைப் பின்பற்ற அவனை அனுமதித்தல் அரிது. ஆகவே ஒரு சமூகக் குழுவின் சமய நம்பிக்கைகள் உண்மையாக இல்லாவிட்டால், நடைமுறையில் சமயமானது நாளாவட்டத்தில் ஒதுங்கி வழிவிடத்தான் வேண்டும்.

இயற்கைச் சமயத்திற்கும், வெளிப்படுத்தின சமயத்திற்கும் இடையிலான வகை வேறுபாட்டின் சமூக முக்கியத்துவம் இங்கே வெளிப்படுகிறது. வெளிப்படுத்தின சமயம் இயற்கைச் சமயத்திற்கு மேல் உயர்வு கொண்டுள்ளது. சமயத்தின் குறிப்பிட்ட சில வரலாற்று வடிவங்களை அறிந்து கொள்வதற்கு இயற்கைச் சமயத்தை அநேக எழுத்தாளர்கள் பயன்படுத்துகிறார்கள். மக்கள் வளர வளர இயற்கைச்

★ இயற்கைச் சமயம், பக்கம் 549

சமயம் சேர்ந்து வளர்ந்துள்ளது. மக்களின் தேவைகளுக்கும் அவர்களின் சுற்றுச் சூழலுக்குமான இடைச்செயலின் விளைவே இது. இயற்கைச் சமயம் என்பது மனிதனால் ஏற்படுத்தப்படுகிறது. அதற்கான கட்டளையென்பது மனிதனிடம் காணப்படும் உண்மை உணர்ச்சியும் மனச்சாட்சியின் குரலுமேயாகும். வெளிப்படுத்தின சமயம் என்பது மனித அதிகாரத்தில் தங்கி நிற்பதில்லை. அது மனிதனால் செய்யப்பட்டது அல்ல, கடவுளால் செய்யப்பட்டது. அதற்கான கட்டளை என்பது முழுமுதல் உண்மையும் முழு முதல் நன்மையும் ஆகிய கடவுள்தான். வெளிப்படுத்தின சமயத்தின் பணி, சமயத்தை ஆசார மாக்குவதும் இதன்மூலம் மீறவொண்ணாததும் விமர்சனத்திலிருந்து விலக்கப் பெற்றதுமாக ஆக்குவதும் ஆகும்.

இருவகைச் சமயங்களுக்கும் உரிய தனித்தன்மைகள் வேதங்களுக்கு உண்டு. நூலற்ற சமயத்தின் மேல் நூற்சமயம் பெற்றுள்ள வசதி அவற்றுக்குண்டு. இயற்கைச் சமயத்தின் மேல் வெளிப்படுத்தின சமயம் பெற்றுள்ள வசதியும் அவற்றுக்குண்டு.

சாதி என்பது வேதங்களால் உபதேசிக்கப்படுவதால், ஏடேறிய நூலின் அதிகாரவுரிமையும், தெய்வச் சொல்லின் புனிதத்தன்மையும் தானாகவே அதற்குவந்துவிடுகின்றன என்ற முடிவை அறுதி யிட்டுச் சொல்வதே இந்த விவாதத்தின் நோக்கம். வேதங்களால் வகுத்துரைக்கப்பட்ட ஒருதிட்டம் என்ற முறையில், சாதி இருமடங்கு பாதுகாப்புப் பெறுகிறது. ஒவ்வொருவரும் சாதியை ஏற்றுக் கொண்டாக வேண்டும், ஏனென்றால், அது தெய்விக உண்மையாகும். எந்த ஒருவரும் சாதியைப் பிழை என்று சொல்லித் தாக்கலாகாது. அப்படித் தாக்குவது புனிதத்தைக் கெடுக்கிற குற்றமாகும். ஏனென்றால், சாதி ஆசாரமானது.

சாதி குறித்த இந்துக் கண்ணோட்டம் இதுதான். சாதி குறித்த நவீன கால விளக்கங்கள், ரிஸ்லியின் இனவழித்தத்துவம், செனார்ட்டின் தொழில் வழித்தத்துவம், நெஸ்பீல்டின் பணிவழித்தத்துவம் எதுவும் சராசரி இந்துவிடம் தாக்கம் கொள்வதில்லை. சாதியைக் கடவுள்தான் படைத்திருக்கவேண்டும். ஏனென்றால் அது வேதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேதம் என்பது **ஸ்ருதி**, அதாவது கடவுளின் சொல் ஆகும் என்று அவர் அறிந்துள்ளார், நம்புகிறார். ஆகவே அது நித்தியமும் சத்தியமும் ஆகும் எனக் கருதுகிறார்.

சாதி தெய்விகமானது, சாதி ஆசாரமானது, ஆகவே சாதி நித்தியமாய் இருந்து வரக்கூடியது என்பதுதான் பிராமணர்களின் வாதம்.

சாதிக்கு எதிரானவர்கள் அதுகுறித்துக் குற்றவிமர்சனம் செய்வதற்கு எதிராக சாதிக்கு வக்காலத்து வாங்க வேண்டிய தேவை ஏற்பட்ட போதெல்லாம் பிராமணர்கள் இப்படித்தான் வாதிட்டுள்ளனர். ஒரு காலத்தில் சாதி எனும் பொருள் குறித்து ஒரு பக்கம் பிராமணர்களுக்கும் மறுபக்கம் புத்தருக்கும் அவரைப் பின்பற்றியவர்களுக்கும் எழுந்த கருத்து மோதலில் சாதிகுறித்த இந்தக் கண்ணோட்டம் ஒளிமயமாகவும் வண்ணமயமாகவும் வெளிப்படுகிறது. அதாவது:

> "ரிஷிகளின் சாதாரணக் கூற்றுகள் மட்டுமல்லாமல், பிராமணர்களின் கூர்ந்த கோட்பாடுகளும் கூட ஒரு தெய்விக மூலத்திலிருந்து பிறந்தவை என்பதும், ஆகவே அவற்றை மனிதப்பகுத்தறிவு கொண்டு தாக்கமுடியாது என்பதுமான நம்பிக்கை நிலைபெற்றது என்றால், பிராமணர்கள் வேதங்களை ஆசாரச் சான்றாகக் கொண்டு, தமக்கென்று கொண்டாடிய சிறப்புரிமைகளை எதிர்ப்பதென்பதே சமயமறுப்பு ஆயிற்று என்று தெளிவாய்த் தெரிகிறது. பிராமணர்களின் கோட்பாடுகள் மக்களின், சொல்லப்போனால் மன்னரின் சமயமாக இருந்த விடத்து, இத்தகைய எதிர்ப்பென்பது அரசின் படிவரிசைச் சட்டங்களுக்கு இணக்கமாய் இருந்தது. ரிஷிகளின் கோட்பாடு களை அவற்றிற்குரிய மூல எளிமையும் தூய்மையும் மாறாமல் காப்பதைக் காட்டிலும், ஸ்ருதியின் தெய்விக அதிகாரத்தை மறுப்பின்றி ஒப்புக்கொள்ளுமாறு செல்வதில்தான் பிராமணர் களே கூடுதலான அக்கறை எடுத்துக் கொண்டார்கள். மெய்யியல் வாதப் பிரதிவாதங்களில் அவர்கள் முடிந்தவரை அதிகப்பட்ச சுதந்திரத்திற்கு இடம்கொடுத்தார்கள். முதலில் மூன்று மெய்யியல் அமைப்புகள் மட்டுமே (இரண்டு மீமாம்சைகளும் நியாயமும்) வைதிகமானவையாக ஏற்றுக் கொள்ளப்பட்டன என்றாலும் அவற்றின் எண்ணிக்கை விரைவில் ஆறாக உயர்த்தப்பட்டு, வைசேஷிகம், சாங்கியம், யோகம் ஆகிய மரபுகளும் சேர்த்துக் கொள்ளப்பட்டன. உயிராதார முக்கியத்துவம் வாய்ந்த கூறுகள் குறித்து மிகவும் முரண்பாடான கண்ணோட்டங்களை முன் வைத்தவர்கள் எவ்வழியிலேனும் தங்கள் கோட்பாடுகளை வேதவாசகங்களோடு இணக்கப்படுத்திக் காட்டுவதில் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கும் வரை, அந்தக் கருத்துகளும்கூட சகித்துக்கொள்ளப்பட்டன. இதற்காக சாத்தியமான ஒவ்வொரு பொருளிலும் வேதவாசகங்கள் நீட்டி இழுக்கவும் முறுக்கித் திரிக்கவும் பட்டன. புலன்களின் உணர்தலையும் பகுத்தறிவின் ஆய்தலையும் தவிர வேதத்தில் கூறியுள்ளவாறு கடவுளின் வெளிப்படுத்தலும் மனித அறிவுக்கு ஓர் உண்மை அடிப்படை

ஆகிறது என்பதை மட்டும் ஏற்றுக் கொண்டாலே போதும், ஏனைய கூறுகள் அனைத்தும் அற்பமாகத் தோன்றின. மெய் யுலகிற்கும், பரவுலகிற்கும் இடையிலான, படைத்தவருக்கும் படைக்கப்பட்டவருக்கும் இடையிலான, தெய்வத் தன்மைக்கும் மனிதத் தன்மைக்கும் இடையிலான உறவுகுறித்து சாத்தியமான எல்லாக் கண்ணோட்டங்களையும் கொட்டித் தீர்க்க மெய்யியல் உள்ளங்கள் அனுமதிக்கப்பட்டன. இத்தகைய சிந்தனைச் சிதறல் களிலிருந்து பிராமணர்களின் சாதிக்கு ஆபத்து வரக்கூடிய வாய்ப்பு இல்லை. சாக்கிய முனி புத்தரின் சமயமறுப்பு என்பது அவ்வள வாக அவருடைய மெய்யியல் கோட்பாடுகளில் காணப்பட வில்லை. இந்தக் கோட்பாடுகளில் பலவும் கபிலரின் வைதிக நாத்திகத்தில் இருந்து வரக்காணலாம். புத்தரின் உண்மைக் குற்றம், பிராமணர்களின் தனிச்சிறப்புரிமைகளையும் மோசடி களையும் எதிர்த்தார் என்பதுதான். வேதத்தின், குறிப்பாகச் சொன்னால் பிராமணர்களின் தெய்விக அதிகாரம் அனுமதித்த மோசடிகள் இவை. இவற்றைத் தாக்கியதன் மூலம் புத்தர் இவற்றிற்கு அடிப்படையான தெய்விக அதிகாரத்தைத் தாக்கி னார். அவருக்குக்கெதிரான வாதம் மிகச்சுருக்கமானது: அவர் ஒரு சமய மறுப்பாளர், சமயப் பழிப்பாளர்.''

''புத்தர் ஒரு சத்திரியர். அவர் பிறப்பில் முதன்மை யானவர், நாட்டின் பிரபுக் குலத்தை சேர்ந்தவர். அவரது சாதியில் அவர்தான் பிராமணர்களின் பேராசையை முதன்முதலாக எதிர்த்தார் என்பதில்லை. புத்தருக்குப் பல நூற்றாண்டுகள் முன்பே, புத்தரைப் போலவே அரச சாதியைச் சேர்ந்தவரான விசுவாமித்திரர் புரோகிதர்களின் சிறப்புரிமைக்கு எதிராகப் போராடவேண்டியிருந்தது. ஆயினும் அந்தத் தொடக்க காலத்தில் பிராமணர்களின் நிலை இன்னமும் அசைக்க முடியாததாக இருக்கவில்லை. விசுவாமித்திரர் சத்திரியராக இருந்தபோதிலும் தனக்கும் தன் குடும்பத்திற்கும் உரிமைகளைப் போராடிப் பெறுவதில் வெற்றி கண்டார். இந்த உரிமைகளை அதுவரை பிராமணர்கள் தங்கள் சாதிதவிர மற்ற எவருக்கும் கிடைக்காமல் வைத்துக் கொண்டிருந்தார்கள். விதேகத்து ஜனக மன்னர் - இவருடைய கதை, பிராமண காவியத்தில் தரப்பட்டுள்ளது - பிராமணர்களின் படித்தர அதிகாரப் பகட்டுகளுக்கு உட்பட மறுத்தார். புரோகிதர்களின் இடையீடு இல்லாமல் தாமே யாகம் வளர்க்கும் உரிமையை வலியுறுத்தினார். இந்த இரு மனிதர் களுக்கும் புத்தருக்கும் இடையே தனிப்பட்ட குணத்தில் எவ்வளவு பெரிய வேறுபாடு இருந்தாலும், அவர்கள் காட்டிய

எதிர்ப்பின் முதற்கோட்பாடு ஒன்றேதான். மூவருமே ஒரு தன்னலக்கார புரோகிதக் கூட்டத்தின் தற்செருக்கான சிறப்புரிமை களை எதிர்த்துப் போராடியவர்கள்.

''ஆனால் விசுவாமித்திரர் தன் குலம் அல்லது குடும்பத் தின் உரிமைகளைக் காத்துக் கொண்டதோடு மனநிறைவு அடைந்துவிட்டார், புரோகித அதிகாரத்தின் ஆதாயங்களில் பங்குபெறத் தம்மை அனுமதித்த உடனேயே இணங்கிப் போய் விட்டார் என்னும் அதே போது, ஜனகமன்னர் தமக்கு யக்ஞ வால்க்கியரும் பிராமணர்களும் செலுத்திய புகழஞ்சலியைக் கேட்டு மனநிறைவு தெரிவித்தார் என்னும் அதேபோது, சுருங்கச் சொல்லின் அடுத்தடுத்து வந்த சீர்திருத்தக்காரர்கள் தோற்கடிக்கப் பட்டார்கள் அல்லது பிராமணர்களின் நலனுக்கு ஈர்த்தெடுக்கப் பட்டார்கள் என்னும் அதேபோது, மனவருத்தத்தின் விதைகள் மக்கள் உள்ளத்தில் ஊன்றி வளர்ந்து கொண்டிருந்தன. இந்திய வரலாற்றில் ஓர் இருண்ட அத்தியாயம் உண்டு: சத்திரியர்கள் அனைவரையும் பரசுராமர் அழித்துவிட்டதாகச் சொல்கிற அத்தியாயம் அது. இது பிராமணர்களின் படித்தரத் தலைமை தொடங்கியதைக் குறிக்கிறது. பிராமணர்கள் ஒருபோதும் அரசுஅதிகாரத்துக்கு ஆசைப்பட்டதாகத் தெரியவில்லை என்ற போதிலும், இந்தியாவின் வரலாற்றையும் பாரம்பரியங்களையும் நாமறிந்துள்ள வரை, அவர்களுடைய சாதிதான் எப்போதுமே உண்மையில் ஆளும் சாதியாக இருந்துள்ளது. தெய்விக அருளைப் பெறுதற்கு ஒரே வழி பிராமணர்களின் துணைதான் என்று கருதப்பட்டது. அவர்களின் கோட்பாடுகள், பிழையாப் பெருமை கொண்டவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டன, அவர்களின் தெய்வங்கள் மட்டுமே உண்மைத் தெய்வங்கள் என்று வணங்கப் பட்டன. ரிஷிகளின் சாதாரணக்கூற்றுகளுக்கும் பிராமண காவியம் படைத்தோரின் அபத்தமான சிந்தனைச்சிதறல்களுக்கும் தெய்விக அதிகார முத்திரை குத்துமளவுக்கு பிராமணர்களின் குரலுக்கு வலு இருந்தது. ஆயினும் இந்தக் கடைசி நடவடிக்கைக்குப் பிறகு பிராமணியத்தின் வெற்றி அதன் வீழ்ச்சிக்கு அணியமாகிக் கொண்டிருந்தது. வேறு எந்த நாட்டிலும் போலவேதான் இந்தியா விலும் மக்கள் உண்மையின் ஏகபோகத்துக்குப் பணிய மாட்டார்கள். அரசியல் கொடுங்கோன்மையின் நுகத்தடியை பொறுமையாகச் சுமந்து கொண்டிருந்த அதே கோடானு கோடி யினர், ஓர் அறிவுக்கொடுங்கோன்மையின் அடிமைத்தளைகளை அறுத்தெறிந்தனர். உலகின் மிகப் பழமையான சமயங்களில்

ஒன்றை வீழ்த்துவதற்கு, பூதேவர்களாகிய பிராமணர்களின் அதிகாரத்தை எதிர்த்து ஒரே ஒருவர் கேள்வி கேட்பது போது மானதாய் இருந்தது. புரோகிதர்களின் இடையீடு இல்லாமலே, புரோகிதர்களால் இறைவெளிப்பாடு என்று பெயர்தரப்பெற்ற நூல்களில் நம்பிக்கை வைக்காமலே, விமோசனம் பெறமுடியும் என்ற சாதாரண உண்மையைக் கடவுளின் படைப்புகளான வெறுப்புக்கும் இழிவுக்குமுரிய பிறவிகளிடம் அவர் உப தேசிப்பது போதுமானதாய் இருந்தது. அவர்தான் **புத்தர், ஒரு சாக்கிய முனிவர்.** புத்தரின் கோட்பாடுகளுக்குப் பிராமணர்கள் எப்படி முகங்கொடுத்தார்கள் என்பதை இப்போது ஆராய்ந்து பார்க்குங்கால், இங்கும் அங்குமாகத் தங்கள் மெய்யியல் நூல் களில் அவரது சூக்குமக் கருத்துகளில் சிலவற்றைப் பகுத்தறிவின் துணைகொண்டு வீழ்த்த முயன்றிருப்பது உண்மைதான். வேதாந்த சூத்திரங்கள் பற்றிய வாச்சஸ்பதி மிஸ்ராவின் பொழிப்புரையில் இப்படி ஒரு முயற்சி நடந்திருக்கக் காண்கிறோம். ''இருத்தல், இல்லாமை போன்ற கருத்துகள் விவாதத்துக்கு இடமளித்த தில்லை'' என்ற புத்தரின் கோட்பாடுளைப் பற்றிச் சொல்லும் போது, இந்தக் கருத்துகளைப் பற்றிப் பேசுவதே இவற்றைக் கருத்தாக்கம் செய்யும் சாத்தியப்பாட்டைத் தன்னுள் கொண்டிருப் பதாக வாச்சஸ்பதி சொல்கிறார். அதுமட்டுமல்ல, அவை பகுத்தறியும் சிந்தனைக்கு இடமளிப்பதில்லை என்று செல்வதே கூட உள்ளபடியே அவை தொடர்பான ஒரு பகுத்தறிவுச் சிந்தனையைத் தன்னுள் கொண்டிருப்பதாகும், இருத்தல் என்ற கருத்தை இல்லாமை என்ற கருத்திலிருந்து வேறாக உருவாக்க மனத்தினால் இயலும் என்று மெய்ப்பிக்கிறார்.

''என்றாலும் பௌத்தத்துக்கு எதிராகப் போராடுவதற்குப் பிராமணியம் பயன்படுத்திய வழக்கமான ஆயுதங்கள் அல்ல இவை. புத்தரின் போதனை உண்மையாக இருக்கமுடியாது, ஏனென்றால் அது ஸ்ருதி அல்லது இறைவெளிப்பாட்டிலிருந்து கட்டளை பெற்றதன்று என்பதே எப்போதும் சொல்லப்பட்டு வரும் முதன்மையான மறுப்புரை. ஒரு சாதி என்ற முறையில் பிராமணர்கள் இருத்தலுக்கும் இல்லாமைக்கும் தயங்காமல் இடங்கொடுத்திருப்பார்கள். மிக முக்கியக் கூறுகளில் வேதாந் தத்தை வெளிப்படையாக எதிர்த்து நின்ற சாங்கிய மெய்யியலை அனுமதித்தது போலவே புத்தரின் மெய்யியலையும் அனுமதித் திருப்பார்கள். ஆனால் சாங்கிய மரபை நிறுவிய கபிலர் பகுத்தறி வுக்கும் அனுபவத்துக்கும் இறைவெளிப் பாட்டின் அதிகாரமே

முதன்மையானதென்று வெளிப்படையாக அறிவித்ததன் மூலம் பிராமணியப் பரிசோதனைக்கு ஒத்துப் போனார். புத்தரோ அவரது மெய்யியல் கோட்பாடுக்கும் (அவிதர்மம்) சரி, இன்றுங்கூட முக்கியத்துவம் வாய்ந்த அவரது அறநெறி மற்றும் சமயநெறிக் கோட்பாட்டுகளுக்கும் (வினயம்) சரி, பிராமணியப் பரிசோதனைக்கு உட்பட மறுத்தார். தன் கோட்பாடுகளில் சில எப்படி வேதவாசகங்களுடன் இசைவாய் உள்ளன என்று காட்டுவது அவருக்கு எளிதாகவே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனென்றால் மனிதஉள்ளத்தின் சாத்திய மான சகல சாயல்களும் வேதத்தில் இயல்பாகப் பிரதிபலிக்கக் காணலாம். அவர் தன் போதனைகளில் சிலவற்றிற்கு மட்டும், எடுத்துக்காட்டாக, ''கொலை செய்யாதே'', ''குடிக்காதே'', ''நின்றுகொண்டுஉண்'' போன்றவற்றிற்கு மட்டும் இப்படிச் செய்திருப்பாரானால், பிராமணர்கள் எவ்விதத் தயக்கமுமின்றி ஏனைய கோட்பாடுகளையும் கண்டு கொள்ளாமல் விட்டிருப் பார்கள். ''விண்ணுலகு ஆசைப்படுகிறவன் புனித சமாதியை வழிபடவேண்டும்'', ''அவன்தன் முடியைப் பிடுங்க வேண்டும்'' போன்ற புத்தரின் மரணத்துக்குப் பின் நடைமுறைக்கு வந்த கோட்பாடுகளையும் கூடக் கண்டுகொள்ளாமல் விட்டிருப் பார்கள். புத்தர் அப்படிச் செய்ய மறுத்ததால் பிராமணர்கள் முன்னிறுத்திய வாதமுறையானது புத்தரின் கோட்பாடுகள் உண்மையாக இருக்கமுடியாது என்பதற்குச் சான்றாக இறை வெளிப்பாட்டை எடுத்துக்காட்டுவதோடு நின்றுகொண்டது.

''இந்த வாதமுறையில் பெரிதும் மயக்கமூட்டுகிற ஏதோ ஒன்று இருக்கவேண்டும். ஏனென்றால் பிற்காலத்தில் பௌத்தர் களும் கூட பிராமணர்கள் வேதத்துக்கு என்று நிலைநிறுத்திய அதே தெய்விகத்தன்மை தங்களின் புனித எழுத்துகளுக்கும் உண்டு என்று உரிமை கொண்டாட முயன்றார்கள். இதற்கு ஒரு வேடிக்கை யான எடுத்துக்காட்டு குமரிலாவின் தந்திர-வர்த்திகாவி லிருந்து தரப்படும் பின்வரும் விவாதத்தில் காணப்படுகிறது. வேதத்தை மனிதர்கள் படைக்கவில்லை என்பதை மெய்ப்பிக்கிற அதே வாதங்கள், அதே அளவுக்கு சாக்கியரின் போதனைக்கும் பொருந்தும் என்று இங்கே எதிராளி (பூர்வ பக்ஷர்) கருது கிறார். சாக்கியரின் கருத்துகள் தெளிவாகவும் எளிதில் புரியக் கூடியவையாகவும் இருப்பதால் அவரது அதிகாரவுரிமை குறித்துக் கேள்விகேட்கமுடியாது என்கிறார். சாக்கியர் இந்தக் கருத்து களை போதனை செய்கிறவரே தவிர கண்டுபிடித்தவர் அல்ல என்பதால், சாக்கியரின் கோட்பாடுகளுக்கு ஆசிரியர் பெயர் என்று

எதுவும் தரப்படாததால், மனித ஆசிரியர்களிடம் இயல்பாகக் காணப்படும் பலவீனங்கள் வேதத்தைப் போலவே அந்தக் கோட்பாடுகளையும் பாதிப்பதில்லை என்கிறார். வேதத்தின் அதிகாரவுரிமையை மெய்ப்பிப்பதற்காக மீமாம்சகர்களால் முன்னிறுத்தப்பட்டுள்ள ஒவ்வொன்றும் அதே விதமாய் புத்தரது கோட்பாட்டின் அதிகாரவுரிமைகளையும் மெய்ப்பிக்கிறது என்ற முடிவுக்கு அவர் வருகிறார். இது குறித்து வைதிக குமரிலா கடுங்கோபம் கொள்கிறார். அவர் சொல்கிறார்: ''பற்றுதல் மிக்க மீமாம்சகர்களைக் கண்டு மிரண்டு நிலைதடுமாறிப் போயுள்ள இந்த சாக்கியர்களும் வைசேஷிகர்களும் ஏனைய சமயமறுப்பாளர் களும் ஒரு நிழலைப்பிடிக்க முயல்வதே போல் நம் வார்த்தை களையே உளறிக் கொட்டுகிறார்கள். தங்கள் புனிதப் படைப்புகள் சாசுவதமானவை என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அவர்களது உள்ளம் வெறுமையாகக் கிடக்கிறது. வேதமே மிகத் தொன்மையான நூல் என்பதை மறுக்க அவர்கள் ஆசைப்படுவது வெறுப்பினால்தான். தர்க்கவாதிகளாக இருக்க ஆசைப்படுகிற இவர்கள், தங்கள் சில போதனைகள் (இவை நம்மிடமிருந்து இவர்கள் திருடியவை), உலக நன்மை வேண்டுவது போன்றவை, வேதத்திலிருந்து வரப்பெற்றவை அல்ல என்று கூட அறிவிக் கிறார்கள். ஏனென்றால், புத்தரின் ஏனைய கூற்றுகளில் பெரும் பாலானவை வேதத்துக்கு நேரெதிராக உள்ளன. இவர்கள் இது தொடர்பாகவும் தங்களை மெய்ப்பித்துக் கொள்ள ஆசைப்படு கிறார்கள். ஆனால் வெறும் மனிதக் கருத்து ஏதும் அறப் பொருட்கள் மீதும் இயற்கைக்கு அப்பாற்பட்ட பொருட்கள் மீதும் எவ்வித அதிகாரமும் கொண்டிருக்கமுடியாது என்பதைப் பார்க்கிறார்கள். ஆகவே, வேதம் சாசுவதம் என்பதற்கான நம் வார்த்தை ஒற்றியெடுத்து தங்கள் இடர்ப்பாட்டை மூடி மறைக்க முயல்கிறார்கள். மனிதர்களின் எந்தக் கூற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட பொருட்கள் மீது எவ்வித அதிகாரமும் கொண் டிருக்க முடியாது என்று மீமாம்சகர்கள் மெய்ப்பித்திருப்பதை இவர்கள் அறிவார்கள். ஏனென்றால், அதன் தெய்விக மூலத்திற்கு தரப்பட்டுள்ள நிரூபணங்களை எதிர்த்து இவர்களால் எதையும் முன்னிறுத்த முடியாது. வேதத்தின் மனித மூலம் தொடர்பான அனுமானங்கள் யாவும் இந்த நிரூபணங்களால் ஒழிந்துவிட்டன. இந்த பௌத்தர்களின் இதயத்தை அவர்களின் சொற்களே குடைகின்றன. குழந்தைகள் குழறிப்பேசுவது போன்ற சொற்கள் இவை. இவர்கள், விடை என்று சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஏனென்றால் இவர்களின் குதர்க்க வாதங்களின் ஏமாற்றுத்தனம் அழிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் இவர்கள் பெண்கேட்டு

வந்த முட்டாள் மாப்பிள்ளை போல் பேசுகிறார்கள்: 'என் குடும்பம் என்றாலும் உங்கள் குடும்பம் என்றாலும் எல்லாம் ஒன்றுதான்.' இவ்வாறே இப்போது அவர்கள் மற்றவர்களைப் போல் பேசித் தங்கள் நூல்கள் சாசுவதமானவை என்று சாதிக் கிறார்கள். அவர்களின் கூற்றை மறுத்தாலும், இது எங்கள் வாதம் ஆயிற்றே என்று கூறினாலும், அவர்கள் பிதற்றுகிறார்கள், மீமாம்சகர்கள் ஆகிய நாம்தான் அதை அவர்களிடமிருந்து காதால் கேட்டுக் களவாடியிருப்பதாகச் சொல்கிறார்கள். யோசனை அனைத்தையும் இழந்துவிட்டவனும், பொருளற்றுப் பேசக்கூடிய வனும், தன் எதிராளியை ஏமாற்ற முயல்கிறவனுமாகிய ஒருவன் ஒருபோதும் களைப்படைய மாட்டான், ஒருபோதும் அடங்க மாட்டான்.'' இந்த விளாசலின் முடிவில் குமரிலா சொல்கிறார்: ''ஒவ்வொன்றும் தற்காலிகமாக மட்டுமே இருக்கமுடியும் என்று கருதுகிற பௌத்தர்களுக்கு ஒரு சாசுவத வெளிப்பாடு குறித்துப் பேசுவதற்கு எவ்வித அருகதையும் கிடையாது என்பதுதான் இதைவிடவும் முக்கியமானது.''

மேற்கூறிய விவாதத்திலிருந்து சாதி என்பது சமயத்தில் பிறப்பதும், சமயமானது சாதியைப் புனிதமாக்கி ஆசாரப்படுத்தி யிருப்பதும் தெரியவரும். ஆகவே சமயம் என்கிற அடிக்கல்லின் மீதுதான் இந்துக்கள் தங்கள் சமூகக்கட்டமைப்பைக் கட்டியுள் ளார்கள் என்று சரியாகவும் உண்மையாகவும் சொல்லி விடலாம்.

சாதி என்பது மிகவும் தனித்தன்மை வாய்ந்த ஒரு நிறுவன ஏற்பாடு, அதனை சமூகக் குழுச்சேர்க்கையின் வேறு வடிவங்களோடு ஒப்பிடமுடியாது என்று இதிலிருந்து தெளிவாகிறது அல்லவா? சாதி என்பதில் அதிகமாய் எதுவுமில்லை என்று சாதிக்கிற எவருக்கும் சாதி என்றால் என்னவென்றே தெரியாது என்று துணிந்து சொல்வேன். சாதி ஆசாரமானது, இது அதனை நீடித்துநிலைக்கச் செய்வது என்பதை மீண்டும் வலியுறுத்த விழைகிறேன்.

பேராசிரியர் மாக்ஸ்முல்லர் ஆசார நூல்களுடன் கூடிய சமயம் சமூக முன்னேற்றத்தில் ஏற்படுத்தும் விளைவுகளைப் பற்றிப் பெரிதும் கருத்துக்குரிய சில செய்தியைச் சொல்கிறார்:

''ஆயினும் வரலாறு நமக்கு வேறொரு பாடத்தைத் தருகிறது. அதாவது சட்டநெறிகள் ஒருவகை மாய்மாலமாகி, மறுப்பின்றியும் கேள்வியின்றியும் அவற்றிற்குக் கீழ்ப்படியுமாறு செய்துவிடுகின்றன. அவற்றின் வரலாற்று அல்லது இயற்கை மூலம் பல சந்தர்ப்பங்களில்

அடியோடு மறந்துபோகிறது. எது சரியானது, நியாயமானது என்பது தொடர்பான பழங்கருத்துகள், எது ஏட்டில் எழுதப்பட்டது, சட்டப் படியானது என்ற ஒரு கருத்தில் கிட்டத்தட்ட உள்வாங்கிக் கொள் கின்றன, அல்லது கிட்டத்தட்ட அழித்தொழிக்கப்பட்டு விடுகின்றன.

''கீழைச்சமயங்களை ஆராய்ந்து பார்த்தாலும் இதே பாடம் கிடைக்கிறது. புனிதநூல்கள் பலநேரம் ஒருவகை மாய்மாலமாகி, மறுப்பின்றியும் கேள்வியின்றியும் நம்பவேண்டியவை ஆகின்றன. அவற்றின் வரலாற்று அல்லது இயற்கை மூலம் பல சந்தர்ப்பங்களில் அடியோடு மறந்து போகிறது. எது உண்மையானது, தெய்விகமானது என்பது பற்றிய பழைய கருத்துகள், எது ஏட்டில் எழுதப்பட்டது, தெய்விகமானது என்ற ஒரு கருத்தில் கிட்டத்தட்ட உள்வாங்கிக் கொள்கின்றன.

''வரலாறு நமக்குக் கற்பிக்கிற மூன்றாவது பாடமும் உள்ளது. சட்டம் ஒரு தொழிலாக மாறி, எது சரி, எது தவறு என்பது பற்றிய வலுவான மனித உணர்வைக் கொண்டு அல்லாமல், இயந்திரத் தனமான சரிநுட்பத்தைக் கொண்டு ஆளப்படும்போது ஒவ்வொரு குடிமகனும் எந்தச் சட்டத்துக்குட்ப்ட்டு வாழ்கிறானோ அந்தச் சட்டத்தின்பால் அவனுக்குள்ள பொறுப்புணர்வு செத்தொழிந்து போகும் பேராபத்து உருவாகிறது. சமயம் என்பது ஒரு தொழிலாகி, எது உண்மை, எது பொய் என்பது பற்றிய வலுவான மனிதப் புரிதலைக் கொண்டு அல்லாமல், சடங்காசார நுட்பத்துடன் ஆளப் படும்போது, சமய நம்பிக்கையுள்ள ஒவ்வொருவனும் எச்சமயத்துக்கு உட்பட்டு வாழுகிறானோ அச்சமயத்தின்பால் அவனுக்குள்ள பொறுப்புணர்வும் செத்தொழிந்து போகும் அதே பேராபத்து உருவாகிறது என்பதை மறுக்கமுடியாது.

'' ஆனால் புனித நூல்களால் வரக்கூடிய ஆபத்துக்களைக் காட்டுவதன்று, எந்தப் புனிதநூல்களும் இல்லாத சமயங்களுக்கெதிராக இவ்வளவு பரவலாய் காணப்படும் காழ்ப்புணர்வுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதுதான் என் நோக்கம்.

''நூற்சமயங்களுக்கும் நூலற்ற சமயங்களுக்கும் இடையே பெருத்த வேறுபாடு உள்ளது. இந்த வேறுபாடானது வரலாற்றுக் கண்ணோட்டத்தில் மிகவும் உண்மையானதொரு பிரிவுக் காரணத்தைக் காட்டுகிறது. ஆனால் நூற்சமயங்கள் குறிப்பிட்ட சில வசதிகளைப் பெற்றிருப்பதால், நூலற்ற சமயங்கள் வெறுமனே ஒதுக்கப்பட்டவை என்று நாம் கற்பனை செய்து கொண்டுவிடக்கூடாது. அவற்றுக்கென்று

வசதிக் குறைவுகள் இருப்பது மெய்தானென்றாலும் ஒரு சிலவசதி களும் கூட உள்ளன.

கிறித்துவ சமயப் பணியாளர் ஒருவருடன் வாதிடுகையில் ஒரு செவ்விந்தியர் தனது சமயத்திற்கும் வெள்ளையர் சமயத்திற்குமான வேறுபாட்டைப் பின்வருமாறு எடுத்துரைத்தார்:

> ''பரிசுத்த ஆவி இருசமயங்களைக் கொடுத்தது. ஒன்று வெள்ளையர்களை வழிநடத்துவதற்கான ஒரு நூலில் தரப் பட்டது. அவர்கள் அதன் போதனைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் வெள்ளையருக்குரிய விண்ணுலகை அடைவார்கள். இரண் டாவது சமயமானது வானமாகவும், பாறைகளாகவும், ஆறு களாகவும் மலைகளாகவும் இந்தியர்களின் கையில் கொடுக்கப் பட்டது. இயற்கையில் கடவுளைச் செவிமடுக்கும் செவ்விந்தி யர்கள் அவரது குரலைக் கேட்பார்கள், இறுதியில் அப்பாலிருக் கும் விண்ணுலகைக் காண்பார்கள்.''

''ஆக, தலையிலும் இதயத்திலும் இருக்கிற, வானமாகவும் பாறைகளாகவும் ஆறுகளாகவும் இருக்கிற சமயத்தையே இயற்கைச் சமயம் என்கிறோம். இயற்கையிலும், மனித இயல்பிலும், ஒருங்கே, தெய்விகத்தின் மூடுதிரையாகவும் வெளிப்பாடாகவும் நமக்கு அமைந் துள்ள புற இயற்கையிலும் அது வேர் கொண்டுள்ளது. அது தடை யில்லாதது, மனித உள்ளம் வளரவளரச் சேர்ந்து வளரக்கூடியது, ஒவ்வொரு யுகத்தின் தேவைகளுக்கும் ஏற்பத் தகவமைந்து கொள்வது. 'நீ செய்யாதே' என்று அது சொல்வதில்லை. மாறாக 'நான் செய்வேன்' என்றுதான் சொல்கிறது. இந்த இயற்கைச் சமயங்கள் அல்லது நூலற்ற சமயங்கள் முடிவான கோட்பாடுகளும் நிலைபெற்ற வழக்காறுகளும் கொஞ்சங்கூட இல்லாதவை என்பதன்று. நம்பிக்கை, ஒழுக்கம், சடங்கு ஆகியவை தொடர்பாக அதிகாரம் செலுத்துவதற்குப் பொதுவாக இச்சமயங்கள் ஒருவகைக் குருத்துவம் பெற்றுள்ளன. ஆனால் இச்சமயங்களில் இறுகிப் போனதாகவோ மாற்ற முடியாததாகவோ எதுவும் இல்லை, சிந்தனை வளர்ச்சிக்கு நிரந்தரத் தளையிடக்கூடிய எதுவுமில்லை. தவறுகள் இருப்பது கண்டுபிடிக்கப் படும்போது பணிந்து ஒப்புக் கொடுத்துவிடலாம். ஒரு புதிய உண்மை தெளிவாகத் தெரிந்து வலுவாக எடுத்துரைக்கப்படும்போது அதனை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் நூல் என்ற ஒன்று, ஏட்டில் எழுதப்பட்ட ஒன்று இருந்துவிட்டாலே, அதைப் பிழையாப் பெருமை படைத்ததாகவும், மனிதப் பகுத்தறிவின் எல்லைக்கு எட்டாததாகவும் கொண்டு அதனிடம் வேண்டிக் கொள்ளும் பொருட்டு, மனித அதிகாரத்துக்கும் மேலான

ஒன்றை அதற்கு உரித்தாக்க வேண்டும் என்னும் ஆசை பெரிது, அநேகமாய் அடக்க முடியாத ஒன்று. வேதத்தை இயற்றிய பழங் காலத்திய புலவர்கள் தங்கள் பாடல்கள் கடவுளால் அருளப்பட்டவை என்று கூறியதும், தாங்கள் பார்த்தவை, கேட்டவைதானே தவிர தாங்களே இயற்றியவை அல்ல என்று பேசியதும் என்ன பொருளில் என்பதை நாம் எளிதில் புரிந்து கொள்ளலாம். ஆனால் ஒரு புதிய தலைமுறை இந்த வாசகங்களுக்குப் புதிய பொருள் கொடுத்தது. முடிவில் வேதத்தின் ஒவ்வொரு சிந்தனையையும் சொல்லையும் எழுத்தையும் 'கடவுளால் அருளப்பட்டதாக' அல்லது வெளிப்படுத்தப் பட்டதாகக் காட்டியது. வைதிக சமயத்திற்குத் தரப்பட்ட மரணஅடி இது; ஏனென்றால் வளரவும் மாறவும் முடியாதது எதுவானாலும் ஒழிந்துபோயாக வேண்டும். நூலற்ற சமயத்துக்கு இந்த ஆபத்தில்லை.''

சர் வில்லியம் முயிரும் இதே போன்ற கருத்துகளை வெளியிட் டுள்ளார். இஸ்லாம் குறித்துப் பேசுகையில் புனிதமான சமயச் சட்டங்களிலிருந்து வரக்கூடிய ஆபத்துகளை அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துள்ளார். சர் வில்லியம் முயிர் கூறுவதாவது:

> ''முகமதினுடைய சமயமானது இவ்விதம் இறுக்கமானதொரு போர்வையினால் மூடப்பட்டுள்ளது. அதனால் இப்போர்வை யிலிருந்து வெளிப்பட முடியாது. தன் தொடக்க காலத்தில் அது செலுத்தியதற்கப்பால் நெகிழ்வாற்றல் ஏதும் அதற்கில்லை. இப்போது இறுகிக் கெட்டிப்பட்டுப் போய்விட்ட அச்சமயத்தி னால் மனித குலத்தின் மாறிவரும் நிலைமைகளுக்கும் தேவை களுக்கும் வளர்ச்சிகளுக்கும் ஏற்பத் தகவமைத்து கொள்ள முடியாது, தன் விசுவாசிகளை உருவமைத்துக் கொள்ளவோ, அவர்கள் தங்களை உருவமைத்துக் கொள்ளும்படி நெறிப் படுத்தவோகூட முடியாது.'' *(ஆசியாடிக் குவார்டர்லி ரெவ்யூ, 1889 ஏப்ரல் இதழில் இ.டெ. பன்சென் எழுதிய ஒரு கட்டுரையில் மேற்கோளாகத் தரப்பட்டுள்ளது, திருச்சபையில் முகம்மதின் இடம், பக்கம் 287).*

மனித குலத்தின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட ஒவ்வொருவரும் புனிதமான சமயச் சட்டங்களின் சமூக விளைவுகள் குறித்து இந்த எண்ணங்களை எதிரொலிக்காமல் இருக்க முடியாது. ஆனால் புனிதச் சட்டங்களுடன் கூடிய சமய வகைக்குள்ளேயே மேலுமொரு வேறுபாடு சாத்தியம் என்று எனக்குத் தோன்றுகிறது. பேராசிரியர் மாக்ஸ் முல்லர், இதுகுறித்து இதற்குமேல் செல்லவில்லை

என்பது வருத்தத்துக்குரியது. ஆனால் மேலுஞ் சென்று ஆராய்வதால் பயனுண்டு. ஏனென்றால் அப்போது மிகவும் மெய்யானதொரு வேறுபாடு வெளிப்படுகிறது. இந்த வேறுபாடுதான் புனிதமான சமயச் சட்டத்துடன் கூடிய மக்களாகிய இந்துக்களைப் புனிதமான சமயச் சட்டத்துடன் கூடிய ஏனைய மக்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டு கிறது. சமயங்கள் என்னென்ன பொருட்களைப் புனிதப்படுத்த முனைந் தன என்பதைக் கண்டுபிடிப்பதற்காக வெவ்வேறு சமயங்களை ஆராய முற்படுவோமானால் இவ்வேறுபாடு தெளிவாகத் தெரியவரும்.

சமூகமானது உயிரற்ற பொருட்களைப் புனிதப்படுத்தி, அவை ஆசாரமானவை என்ற சமய நம்பிக்கையைச் சமூக உறுப்பினர்களின் உள்ளத்தில் ஏற்றியதற்கான எடுத்துக்காட்டுகளை இந்தப் பரிசீலனை வெளிப்படுத்தும். கற்கள், ஆறுகள், மரங்கள் ஆகியவை ஆண், பெண் தெய்வங்களாக மாற்றப்பட்ட எடுத்துக்காட்டுகள் உண்டு. சமூகமானது உயிருள்ளவற்றைப் புனிதமாக்கி அவை ஆசாரமானவை என்ற சமய நம்பிக்கையைச் சமூக உறுப்பினர்களின் உள்ளத்தில் ஊட்டிய நேர்வு களும் உண்டு. மிருகங்கள்; குலமரபுச் சின்னங்கள் ஆக்கப்பட்டதும் உண்டு. சமூகம் மனிதப் பிறவிகளைப் புனிதப்படுத்தி, அவர்கள் ஆசார மானவர்கள் என்ற சமய நம்பிக்கையை ஊட்டியதுண்டு. ஆனால் ஒரு குறிப்பிட்ட சமூக ஒழுங்கமைப்பைச்சமயத்தால் புனிதப்படுத்தி அதுவே ஆசாரம் என்று ஆக்கிய எடுத்துக்காட்டுகள் எதுவுமில்லை. ஆதி உலகம் கண ஒழுங்கும் குல ஒழுங்கும் கொண்டிருந்தது. ஆனால் கண ஒழுங்கோ குல ஒழுங்கோ ஒரு சமூக ஒழுங்குதானே தவிர, ஒருபோதும் சமயத்தால் புனிதப்படுத்தப்பட்டு, இது ஆசாரம், மீறவொண்ணாதது என்று ஆக்கப்பட்டதில்லை. எகிப்து, பாரசீகம், ரோம், கிரேக்கம் போன்ற பழைய உலக நாடுகள் ஒவ்வொன்றும் அதனதன் சமூக ஒழுங்கைக் கொண்டிருந்தது. இந்த ஒழுங்கில் சிலர் சுதந்திர மனிதர் களாகவும், சிலர் அடிமைகளாகவும், சிலர் குடிமக்களாகவும், சிலர் அயலவர்களாகவும், சிலர் ஓர் இனத்தவராகவும், சிலர் வேறு இனத்த வராகவும் இருந்தனர். இந்தப் பகுப்பு ஒழுங்கும்கூட ஒரு சமூக ஒழுங்குதான். இது ஒருபோதும் சமயத்தால் புனிதப்படுத்தப்பட்டு, ஆசாரம், மீறவொண்ணாதது என்று ஆக்கப்பட்டது இல்லை. நவீன உலகம் அதற்குரிய ஒழுங்கைப் பெற்றுள்ளது. சில நாடுகளில் ஜனநாயகம், சிலவற்றில் பாசிசம், சிலவற்றில் நாசிசம், சிலவற்றில் போல்ஷிவிசம். ஆனால், இங்கேயும் இந்த ஒழுங்கு சமூக ஒழுங்கு தான். சமயத்தால் புனிதப்படுத்தப்பட்டதோ ஆசாரமும் மீற வொண்ணாததுமாக ஆக்கப்பட்டதோ அன்று.

சமூகம் எங்குமே அதன் தொழில்களை, அதாவது பிழைப்பு தேடும் வழிகளைப் புனிதப்படுத்தியது இல்லை. பொருளாதாரச் செயற்பாடு எப்போதுமே சமயத் தூய்மைக்கு அப்பாற்பட்டதாகவே இருந்துள்ளது. வேட்டையாடும் சமூகமும் சமயமற்று இருக்கவில்லை. ஆனால் வேட்டையாடும் தொழில், சமயத்தால் புனிதப்படுத்தப்பட்டு ஆசாரமாக்கப்படவில்லை. மேய்ச்சல் சமூகமும் சமயமற்றதாய் இருக்கவில்லை. ஆனால் மேய்ச்சல் தொழில், சமயத்தால் புனிதமாக்கப் பட்டு ஆசாரமாக்கப்படவில்லை. உழவுத் தொழிலும் சமயத்தால் புனிதமாக்கப்பட்டு ஆசாரமாக்கப்படவில்லை. படிவரிசைகளுடன் கூடிய - பிரபுமார்கள், குடியானவர்கள், பண்ணை அடிமைகள் ஆகியோருடன் கூடிய - பிரபுத்துவம் முழுக்க முழுக்க சமூகத்தன்மை கொண்டதாகவே இருந்தது. அதில் புனிதம் ஒன்றுமில்லை.

சமயத்தால் புனிதமாக்கப்பட்டு, ஆசாரமும் சாசுவதமும் மீறவொண்ணாததும் ஆக்கப்படும் சமூக ஒழுங்கை — மனிதருக்கு மனிதரான உறவை — உடைய மக்கள் உலகிலேயே இந்துக்கள் மட்டும்தான். சமயத்தால் புனிதப்படுத்தப்பட்டு, ஆசாரமும் சாசுவத மும் மீறவொண்ணாததும் ஆக்கப்படும் பொருளாதார ஒழுங்கை — உழைப்பாளிக்கும் உழைப்பாளிக்குமான உறவை — உடைய மக்கள் — உலகிலேயே இந்துக்கள் மட்டும்தான்.

ஆகவே இந்துக்கள் ஒரு புனிதமான சமயச்சட்டம் உடைய மக்களினம் ஆவார்கள் என்று சொல்வது போதுமானதன்று. ஜொராஸ்ட் ரியர்கள், இஸ்ரேலியர்கள், கிறித்தவர்கள், முஸ்லீம்கள் இவர்களும் கூட இப்படித்தான். இவர்களுக்கெல்லாம் புனிதச்சட்டங்கள் உள்ளன. இவர்கள் நம்பிக்கைகளையும் சடங்குகளையும் புனிதப்படுத்தி ஆசாரமாக்குகிறார்கள். இவர்கள் சமூகக் கட்டமைப்பின் ஒரு குறிப் பிட்ட வடிவத்தை — மனிதனுக்கும் மனிதனுக்குமான உறவின் ஒரு தூல வடிவத்தை — குறித்துரைப்பதும் இல்லை, ஆசாரமும் மீறவொண்ணாததும் ஆக்குவதும் இல்லை. இவ்வகையில் இந்துக்கள் தனித்து நிற்கிறார்கள். இதுதான் காலத்தின் ஆவேசப்புயல்களையும் கொடுந் தாக்குதல்களையும் எதிர்த்துத் தாக்குப் பிடித்து நின்று நிலைத்திருக்கும் வலிமையை சாதிக்கு அளித்துள்ளது.

இந்துக்கள் தங்களின் புனிதச் சட்டத்தை ஒத்த சட்டங்களை உடைய சமயங்களைச் சேர்ந்த ஏனைய மக்களிடமிருந்து இன்னொரு வகையிலும் வேறுபடுகிறார்கள். இந்து சட்டமானது கடவுளிடமிருந்து வரும் வெளிப்பாடாகும். அதனால்தான் வேதங்கள் 'ஸ்ருதி' (காதால்

கேட்பது) என்று அழைக்கப்படுகின்றன. ஜொராஸ்ட்ரியர்கள், யூதர்கள், கிறித்தவர்கள், முஸ்லீம்கள் ஆகியோர் ஏற்றுக்கொண்டிருக்கும் சமயச் சட்டங்களும் கூட இப்படித்தான். ஒரு கேள்வி கேட்டுப் பாருங்கள்: ஜொராஸ்ட்ரியர்களுக்கும் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முஸ்லீம் களுக்கும் அனுப்பிவைக்கப்பட்ட இந்தக் கடவுளின் வார்த்தை யாருக்கு வெளிப்படுத்தப்பட்டது? இந்தக் கடவுளின் வார்த்தையைக் காதால் கேட்டவர் யார்? ஜொராஸ்ட்ரியர்கள் சொல்வார்கள். எங்கள் சமயச்சட்டத்தில் அடங்கியுள்ள கடவுளின் வார்த்தையை ஜொராஸ்டர் கேட்டார் என்று, மோசஸ் கேட்டார் என்று யூதர்களும், இயேசு கேட்டார் என்று கிறித்தவர்களும், நபிகள் நாயகம் கேட்டார் என்று முஸ்லீம்களும் சொல்வார்கள். இப்போது இந்துவைக் கேளுங்கள்: வேதங்களில் அடங்கியுள்ள கடவுளின் வார்த்தையைக் கேட்டவர் யார்? அது யாருக்கு வெளிப்படுத்தப்பட்டது? இந்துவிடம் விடையேது மில்லை. இன்னார்தான் இந்தக்கடவுளின் வார்த்தையைக் கேட்டார் என்று அவரால் ஒரு பெயரைச் சொல்ல முடியாது. வேதங்களில் அடங்கியுள்ள மந்திரங்களைப் படைத்தவர்கள் யாரென்று அந்த வேதங்களிலேயே சொல்லப்பட்டுள்ளது. ஆனால் வேதங்களில் அடங்கியுள்ள கடவுளின் வார்த்தையைக் கேட்டவர்கள் இவர்கள் தாமென்று இந்துக்கள் சொல்லமாட்டார்கள். இந்த வேறுபாடு வேதங்களின் புனிதத்தன்மையைப் பாதுகாப்பதற்குப் பெரிதும் பயன்படுகிறது. ஏனென்றால் மோசஸ் அல்லது இயேசுவின் பண்பைத் தாக்குவதன் மூலம் புனித நூலாகிய விவிலியத்தைத் தாக்கமுடியும். இதேபோல் நபிகள் நாயகத்தின் பண்பைத் தாக்குவதன் மூலம் புனிதநூலாகிய குரானைத் தாக்கமுடியும். ஆனால் தூதுவர் அல்லது மூலவரின் பண்பைத் தாக்குவதன் மூலம் வேதத்தைத் தாக்கமுடியாது. அப்படி யாரும் இல்லை என்பதுதான் காரணம்.

நான் முன்பே கூறியது போல சமயம் என்னும் அடிக்கல்லின் மீதுதான் இந்துக்கள் வீட்டைக் கட்டியுள்ளார்கள். இது ஒரு சாதாரணக் கல் அல்ல என்பது இப்போது தெரியவரும். அது பாறாங்கல்.

□□□

# இயல் 18

# தீண்டத்தகாதவர்களுக்கு எதிராகத் தீண்டத்தக்கவர்கள்

## I

தீண்டப்படாதவர்களுக்கு எதிராகத் தீண்டத்தக்கவர்கள் என்கிற உறவுமுறை வியப்பை ஏற்படுத்தக்கூடும். இந்த வியப்புக்குக் காரணமே இல்லாமற் போகாது. தீண்டத்தக்கவர்கள் ஒரே சீரான ஒரு மக்கள் கூட்டம் அல்ல. அவர்களேகூட எண்ணற்ற சாதிகளாய்ப் பிரிந்திருக் கிறார்கள். இந்து ஒவ்வொருவருக்கும் தான் சார்ந்த சாதி குறித்த உணர்வு உண்டு. இந்தப் பலபடித்தான தன்மையை வைத்துப் பார்க்கும்போது தீண்டத்தக்க சாதிகள் அனைத்தையும் ஒரு குழுவாகச் சேர்த்து, அவற்றைத் தீண்டப்படாதவர்களுக்கு எதிரான ஒரு தொகுதி யாகக் கருதுவது பொருளற்ற ஒரு பிரிவினையைத் தோற்றுவிப்பது போலத் தான் தோன்றும். ஆனால், தீண்டப்படாதவர்களுக்கு எதிராகத் தீண்டப்படத்தக்கவர்கள் என்னும் இந்தப்பிரிவினைக்கு விளக்கம் தேவைப்படலாம் என்ற போதிலும், நவீனகால இந்தியாவைப் பொறுத்தவரை இந்தப் பிரிவினை மெய்யானது, பொருள் பொதிந்தது.

தீண்டத்தக்கவர்கள் எப்படி ஒரு தொகுதி ஆகியிருக்கிறார்கள், எப்படித் தாங்கள் தீண்டத்தகாதவர்களிடமிருந்து வேறுபட்டிருப்பதை உணர்கிறார்கள் என்ற விளக்கத்தின் பொருள், நான்கு வருணங்களின் ஒன்றுக்கொன்றான உறவுமுறையைத் திரும்பவும் எடுத்துரைப்பது தானே தவிர வேறல்ல.

காந்தியாரைப் போன்ற சிலர், சதுர்வருணம் ஓர் இலட்சிய சமூக வடிவம் என்று ஏற்றுக்கொள்கின்றனர். நான்கு வருணங்களின் ஒன்றுக் கொன்றான உறவுகளின் வரலாற்றை இவர்கள் அறியமாட்டார்கள்; அல்லது, இவர்கள் எந்த நோக்கங்களுக்குச் சேவை செய்ய முற்பட் டிருக்கிறார்களோ, அந்த நோக்கங்களுக்காக வேண்டி ஒரு மாயையை ஊட்டி வளர்க்கிறார்கள்; அல்லது பொய்த்தோற்றம் காட்ட ஜால வித்தை செய்கிறார்கள். ஏனென்றால் நான்கு வருணங்களும் அன்பான சகோதரத்துவத்தின் அடிப்படையில் அல்லது கூட்டுமுயற்சியின்

மீதமைந்த பொருளாதார ஒழுங்கமைப்பின் அடிப்படையிலான ஒரு சமூகமாக ஒருநாளும் அமைந்ததில்லை என்பதே உண்மை. நான்கு வருணங்களும் ஒன்றின் மீதொன்று கொண்ட பகைமையுணர்வினால் தான் உயிரூக்கம் பெற்றன. இந்துக்களின் சமூகவரலாறு வகுப்புப் போராட் டத்தின் வரலாறு மட்டுமல்ல மிகக் கடுமையாக நடைபெற்ற வகுப்புப் போரின் வரலாறும் ஆகும். இதற்கு இணையான நேர்வுகளை எடுத்துக்காட்ட மார்க்சியவாதிகளேகூட சிரமப்பட வேண்டியிருக்கும் என்றால் மிகையாகாது.

ஒரு பக்கம் பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்களுக்கும் மறுபக்கம் சூத்திரர்களுக்குமிடையே முதல் வகுப்புப் போராட்டம் நடைபெற்றதாகத் தெரிகிறது.

காத்தியாயணரின் ஸ்ரௌத சூத்திரங்களில் உறுப்புக் குறை பாடுள்ளவர்களையும், வேதம் படிக்காதவர்களையும், அலிகளையும், சூத்திரர்களையும் தவிர மற்றவர்கள் யாகப்பலிகொடுக்கும் உரிமை படைத் திருப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது. வேதத்தில் கூறியுள்ளபடி பிராமணர்களுக்கும், இராஜன்யர்களுக்கும், வைசியர்களுக்கும் (மட்டுமே) இந்தச் சிறப்புரிமை உள்ளது.

*மனு நமக்கு இப்படிச் சொல்கிறார் (கையெழுத்துப் படியில் மேற்கோள் தரப்படவில்லை).*★

*மனு நமக்கு இப்படிச் சொல்கிறார் (கையெழுத்துப் படியில் மேற்கோள் தரப்படவில்லை).*★

மனுவைக் காட்டிலும், ஏன் காத்தியாயணரைக் காட்டிலும் கூடக் காலத்தால் முற்பட்ட வேத இலக்கியத்தில் சூத்திரர்களின் தகுநிலை தொடர்பாக இடம்பெற்றுள்ள பின்வரும் நிகழ்வுகளையும் கூற்றுகளை யும் இதனுடன் ஒப்புநோக்குங்கள்.

''**காவேதுகச்சறு**'' போன்ற பெரும் யாகங்களுக்கு சூத்திரர்கள் அனுமதிக்கப்பட்டார்கள் என்பதைக் காட்டுவதற்கு இரு எடுத்துக்காட்டு களைப் பேராசிரியர் மாக்ஸ் முல்லர் தருகிறார். ஒருவர் ரதகரா, மற்றொருவர் நிஷாடஸ்பதி, இருவருமே சூத்திரர்கள்.

---

★ ஆயினும் இந்தத் தொடரின் மூன்றாம் தொகுதியில் இயல் 16 வாசகரின் கவனத்துக் குரியது. இது சூத்திரர்கள் இழிவுபடுத்தப்படுவது தொடர்பான மனுவின் சட்டங்களை எடுத்துரைக்கிறது. இவ்விடத்திற்கு அது பொருத்தமாய் இருக்குமென்று தோன்றுகிறது.

- பதிப்பாசிரியர்

ஆனால் சூத்திரர்களிடையிலிருந்து வந்த விதிவிலக்கான வர்களுக்குத் தரப்பட்ட ஒரு சலுகை இது என்று அனுமானம் செய்யப் படலாம். இது வெறும் சலுகையல்ல, சூத்திரர்கள் அனுபவித்த ஓர் உரிமை என்பதில் கேள்விக்கிடமில்லை. வேதத்தின் ஒரு பகுதி யாகிய சதபத பிராமணத்தில், யாகப்பலி கொடுப்பவரை முன்னுக்கு வந்து படையலைச் செய்யுமாறு பிராமணப்புரோகிதர் அழைப்பதற்கான சூத்திரம் தரப்பட்டுள்ளது. பிராமணராய் இருந்தால் **ஏஹி**, (வா) என்று அவர் சொல்லவேண்டும். வைசியராய் இருந்தால் **அகாஹி**, (இங்குவா) என்று சொல்ல வேண்டும். சத்திரியராக இருந்தால் **அத்ரவா** (இங்கு விரைந்துவா) என்று சொல்லவேண்டும். சூத்திரராய் இருந்தால் **அதவா**, (இங்கு ஓடிவா) என்று சொல்லவேண்டும்.

இந்த வாசகம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. சூத்திரன் ஒரு காலத்தில் யாகப் பலிகொடுக்க உரிமை பெற்றிருந்தான் என்பதை இது காட்டுகிறது. இல்லையேல் பலிகொடுக்க வரும் சூத்திரருக் கென்று ஒருவிதமான விளிப்புமுறை வேதவசனத்தில் இடம் பெற்றி ருக்க முடியாது. சூத்திரர் யாகப்பலிகொடுக்கும் உரிமை பெற்றிருந்தார் என்றால், வேதங்களைப் படிக்கிற உரிமையும் அவருக்கு இருந்திருக்க வேண்டும்.

ஏனென்றால், காத்தியாயணரின் கூற்றுப்படி வேதங்களைப் படிக்க உரிமை பெற்றவர்களுக்கு மட்டுமே யாகம் செய்வதற்கும் உரிமை இருந்தது. ஒரு காலத்தில் சூத்திரர்கள் வேதம் படிக்க உரிமை இருந்தது என்ற உண்மைக்கு, மகாபாரதத்தின் சாந்திபர்வத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாரம்பரியம் தக்க சான்றாக உள்ளது. அங்கே ''வருணத்தை எப்படி நிர்ணயிப்பது?'' என்ற கேள்விக்குப் பிருகு முனிவர் பின்வருமாறு விடையளிக்கிறார்:

> ''சாதி வேறுபாடு ஏதுமில்லை. முதலில் இந்த உலகம் முழுக்க முழுக்க பிராமண உலகமாக பிரம்மாவால் படைக்கப் பெற்றது, (பிற்பாடு) வேலைகளின் விளைவாக சாதிகளாகப் பிரிக்கப்பட்டதாயிற்று. 6940. இந்தப் பிராமணர்களில் (அல்லது இருமுறை பிறந்தவர்கள்) சிற்றின்பத்தில் நாட்டம் கொண்ட வர்களும், ஆத்திரக்காரர்களும், முன்கோபிகளும், வன்முறைச் சார்புள்ளவர்களும், கடமை தவறியவர்களும், செந்நிறத்தவரும் சத்திரியர்களின் நிலைமைக்கு தாழ்வுற்றார்கள். கால்நடை களைக் கொண்டு பிழைப்பு தேடியவர்களும், மஞ்சள் நிறத்த வரும், வேளாண்மையால் வயிறு வளர்த்தவர்களும், கடமைகளை

செய்யாமல் புறக்கணித்தவர்களுமான பிராமணர்கள் வைசியர்களின் நிலைமைக்குச் சென்றார்கள். தீச்செயலுக்கும் பொய்மைக்கும் பழகிவிட்டவர்களும், கள்ளத்தன்மை உடையவர்களும் எல்லாவகை வேலைகளும் செய்து பிழைத்தவர்களும், கருநிறத்தவர்களும், தூய்மையிலிருந்து வழுவியவர்களுமான பிராமணர்கள் சூத்திரர்களின் நிலைக்குத் தாழ்ந்து போனார்கள். இந்த வேலைகளால் ஒருவரிடமிருந்து ஒருவர் வேறுபடுத்தப்பட்டு பிராமணர்கள் வெவ்வேறு சாதிகளாகப் பிரிந்து போனார்கள். கடமையும் யாகச் சடங்குகளும் அவர் களுக்கு (எவருக்கும்) எப்போதும் விலக்கப்பட்டதாக இருந்ததில்லை. இவைதாம் நான்கு வகுப்புகள். இவ்வகுப்புகளுக்காகத்தான் பிரம்மா முதலில் பிராமணிய சரஸ்வதியை வகுத்துக் கொடுத்தார். ஆனால் இவை தங்களின் பேராசையினால் அறியாமையினுள் வீழ்ந்து பட்டன.''

''பிராமணிய'' சரஸ்வதி என்ற சொல்லுக்கு விளக்கமளிக்கையில் உரையாசிரியர் சொல்கிறார்:

''வேதமாகிய சரஸ்வதி பிரம்மாவால் முன்பு அனைத்து நான்கு சாதிகளுக்கும் வடிவமைக்கப்பட்டாள். ஆனால் பேராசை காரணமாய் அறியாமை இருளுக்குள் வீழ்ந்துவிட்ட சூத்திரர்கள் வேதத்திற்கான தங்கள் உரிமையை இழந்துவிட்டார்கள்.''

சூத்திரர் தாழ்த்தப்பட்ட பின், வைசியரின் முறை வந்துற்றது. பிராமணர்களுக்கும் சத்திரியர்களுக்கும் இடையே மிகக்கடுமையான வகுப்புப் போர் நடைபெற்றது. இந்துக்களின் தொல்லிலக்கியம் இந்த இருவருணங்களுக்கும் இடையிலான வகுப்புப் போர்கள் பற்றிய குறிப்புகளால் நிறைந்துள்ளது.

முதலாவது பிராமணர்களுக்கும் அரசன் வீணனுக்கும் இடையிலான மோதல்.

''முன்னதாக ஒரு பிரஜாபதி (படைக்கப்பட்டவற்றின் ஆண்டகை) இருந்தார். நேர்மையைக் காப்பவரான இவர் அங்கன் என்று அழைக்கப்பட்டார். இவர் ஆத்ரியின் குலத்தைச் சேர்ந்தவர், அவரைப் போலவே வலிமை பெற்றிருந்தார். அவருடைய மகன் பிரஜாபதி வீணன். கடமையில் அவ்வளவாகத் தேர்ச்சி பெறாதவன். மிருத்யனின் மகள் சுனிதைக்குப்

பிறந்தவன். காலாவின் (மரணத்தின்) மகளுக்குப்பிறந்த இந்த மகன், தாய்வழிப் பாட்டனிடம் இருந்து வரப்பெற்ற கறையினால் தன் கடமைகளைப் புறக்கணித்துவிட்டு, ஆசைக்கு அடிமையாகி ஆடம்பரமாக வாழ்ந்தான். இம்மன்னன் சமயப்புறம்பான ஒரு நடத்தை முறையை நிறுவினான். வேதத்தின் ஆணைகளை மீறி, ஒழுக்கக் கேட்டில் உறுதியாக இருந்தான். இவனது ஆட்சியில் மனிதர்கள் புனிதநூல்கள்களைப் படிக்காமலும் வஷத்கரா இல்லாமலும் வாழ்ந்தனர். தேவர்கள் யாகங்களின்போது பருகுவதற்குச்சோமபானங்கள் ஏதுமில்லை. அவன் அறிவித்தான்: ''யாகத்தின் குறியும், யாகத்தை நிகழ்த்துவதும், யாகம் என்பதும் நானே. எனக்குத்தான் பலிகொடுக்கவும் படையல்கள் சார்த்தவும் வேண்டும்.'' விதிகளையும் கடமையையும் மீறித் தனக்கு உரியதல்லாததைக் கைப்பற்றிக் கொண்ட இவனுக்குப் பிறகு மாரிச்சி தலைமையிலான எல்லா மகரிஷிகளும் வேண்டுகோள் விடுத்தார்கள்: 'பல ஆண்டுகள் நீடிக்கக்கூடிய ஒரு சடங்கிற்காக எங்களைப் புனிதப்படுத்திக்கொள்ளப் போகிறோம். வீணனே, நேர்மையற்றவனாக நடந்துகொள்ளாதே. இது கடமையின் சாசுவத விதியன்று. பார்க்கப் போனால், நீதான் ஆத்ரி குலத்தில் ஒரு பிரஜாபதி. உன் குடிகளைப் பாதுகாக்க உறுதியளித்திருக்கிறாய்.' முட்டாள் வீணன் எது நேர்மை என்பதை அறியாமல் சிரித்துக் கொண்டே அந்த மகரிஷிகளுக்கு விடையளித்தான்: 'வேறு யாருமில்லையா, நான்தான் கடமையைச் செய்யவேண்டுமா? அல்லது யாருக்கு நான் கீழ்ப்படிய வேண்டும்? இந்த உலகில் புனித அறிவிலும், வல்லமையிலும், ஊக்கத்திலும் சத்தியத்திலும் எனக்கு நிகரானவர் யார்? இருப்பவை அனைத்துக்கும் கடமைகள் அனைத்துக்கும் நானே ஊற்றுக்கண் என்பது ஏமாந்தவர்களுக்கும் அறிவில்லாதவர்களுக்கும் தெரியாது. நான் விரும்பினால் பூவுலகை எரித்துவிடலாம், அல்லது வெள்ளப் பிரளயத்தில் மூழ்கடித்துவிடலாம், அல்லது விண்ணுலகையும் மண்ணுலகையும் இழுத்து மூடிவிடலாம் என்பதை நம்பத் தயங்காதீர்கள்'. தன்மயக்கத்தினாலும் அகந்தையினாலும் வீணன் அடங்காப்பிடாரியாகிவிட்டபோது, வலிமைமிக்க ரிஷிகள் ஆத்திரமுற்று மன்னனைப் பிடித்தனர், அவன் கோபாவேசமாய்ப் போராடினான். அவர்கள், அவனது இடது தொடையைத் தேய்த்தார்கள். அந்தத் தொடையிலிருந்து மிகவும் குள்ளமான உருவத்தில் ஒரு கறுப்பு மனிதன் தோற்றுவிக்கப்பட்டான். அவன் அச்சமுற்றுக் கைகட்டி நின்றான். அவன் கலக்கமுற்றிருப்பதைக் கண்டு ஆத்ரி அவனிடம் 'உட்கார்' (நிஷிடா) என்று கூறினான். அவனே

நிஷிடாக்கள் என்ற குலத்தை நிறுவியவன் ஆனான். வீணன் கெட்டுச் சீரழிந்ததால் பிறந்த திவாராக்களின் (மீனவர்) மூதாதையும் ஆனான். விந்திய மலைத்தொடரில் வாழ்ந்துவரும் ஏனையவர்களான துக்காரராக்கள், தும்புராக்கள் ஆகியோரும் இவ்வாறே உண்டாக்கப்பட்டனர். இவர்கள் சட்டதிட்டம் இல்லாதவர்கள். கிளர்ச்சியும் எரிச்சலுமுற்ற மகாமுனிவர்கள் பிறகு வீணனின் வலதுகையை ஆரணி மரத்தைத் தேய்ப்பது போல் தேய்த்தார்கள். அதிலிருந்து கொழுந்து விட்டெரியும் அக்கினியைப் போல் ஒளிச்சுடர் உருவம் படைத்த பிரீத்து பிறந்தான்.''

''பிறகு வீணனின் மகன் (பிரீத்து) கை கூப்பியபடி மகரிஷிகளைப் பார்த்துச் சொன்னான்: 'கடமைக் கோட்பாடுகளை உணர்ந்து கொள்வதற்கான ஒரு சிற்றறிவை இயற்கை எனக்குத் தந்துள்ளது. நான் எப்படி அதைப்பயன்படுத்தவேண்டும் என்று உண்மையாக எனக்குச் சொல்லுங்கள். நீங்கள் கடமை என்று எதை எனக்கு அறிவித்தாலும் அதையும் அதன் குறிக்கோளையும் நான் செய்து முடிப்பேன் என்பதில் உங்களுக்கு ஐயம் வேண்டாம்.' அப்போது அந்தத் தேவர்களும் மகரிஷிகளும் அவனைப் பார்த்துச் சொன்னார்கள்: 'என்ன கடமை தரப்பட்டாலும் தயங்காமலும் விருப்புவெறுப்பு கொள்ளாமலும், எல்லாச் சீவன்களையும் சரிநிகராய்க் கண்ணுற்றும், காமம், கோபம், பேராசை, கர்வம், ஆகியவற்றை விலக்கி வைத்தும் அந்தக் கடமையைச் செய்துமுடி. நேர்மையிலிருந்து விலகிச் செல்லும் மனிதர்கள் அனைவரையும் உனது வலிமை கொண்டு தடுத்து நிறுத்து. எந்நேரமும் கருமமே கண்ணாயிரு. சிந்தனையிலும் சொல்லிலும் செயலிலும் இகலோக பிராமணனை(வேதம் அல்லது பிராமணர்களை?) பாதுகாக்கும் பொறுப்பை சிரமேற்கொள், தொடர்ந்து அந்தப் பொறுப்பைப் புதுப்பித்துக்கொள்... பிராமணர்களுக்கு தண்டனையிலிருந்து விலக்களிக்கவும் சாதிகளின் குழப்பத் திலிருந்து சமூகத் தைப் பாதுகாப்பதாகவும் சத்தியம் செய்' வீணன் புதல்வன் ரிஷிகளின் தலைமையிலான தேவர்களுக்கு இவ்வாறு விடையளித்தான்: 'மனிதருள் சிறந்தவர்களான உன்னதப் பிராமணர்களை நான் மதித்து வணங்குவேன்.' 'அவ்வாறே ஆகட்டும்' என்று வேதத்தை அறிந்தவர்கள் ஆணையிட்டார் கள். தெய்விக அறிவின் களஞ்சியமாகிய சுக்கிரன் அவனுக்குப் புரோகிதர் ஆனார். பாலகில்யர்களும் சரஸ்வேதியர்களும் அவனுக்கு அமைச்சர்கள் ஆனார்கள்; வணக்கத்துக்குரிய மகரிஷி கார்கா அவனுக்குச் சோதிடரானார்.'

இரண்டாவது மோதல் பிராமணர்களுக்கும் சத்திரிய மன்னன் புரூரவனுக்கும் நடைபெற்றது. மகாபாரதத்தின் ஆதிபர்வத்தில் இதுபற்றிய ஒரு சுருக்கமான குறிப்பு உள்ளது.

''இதையடுத்து மதிநுட்பம் வாய்ந்த புரூரவன் அவனுக்குத் தந்தையும் தாயுமாய் இருந்ததாக நாமறியும் இனைக்குப் பிறந்தான். பெருங்கடலில் பதின்மூன்று தீவுகளின்மீது அவன் ஆட்சி புரிந்தான். அவனைச் சுற்றி அனைவரும் அமானுஷ்யர்களாய் இருந்தனர். அவனே பெரும்புகழ் படைத்தவன். வல்லமையின் போதை தலைக்கேறி, புரூரவன், பிராமணர்களுடன் மோதலில் இறங்கினான். பிராமணர்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி அவர்களின் நகைகளைக் கொள்ளையிட்டான். பிரம்மாவின் தேவலோகத்திலிருந்து வந்த சனத்குமார் அவனைக் கடிந்து பேசினார். ஆயினும் அவன் அதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. பிறகு ஆத்திரமுற்ற ரிஷிகளால் நேரடியாகவே சபிக்கப்பட்டு அவன் அழிவுற்றான். அதிகாரத் திமிரினால் அறிவை இழந்த இந்தப் பேராசைக்கார முடிமன்னனின் கதை முடிந்தது. இந்தப் புகழிழந்த பிறவி (விராட்டு) ஊர்வசி உடன்வரக் கந்தர்வர்களின் தேவலோகத்தில் இருந்த தீச்சுடர்களைப் புனிதச்சடங்குகள் செய்வதற்காகக் கீழே கொண்டுவந்து, முறைப்படி மூன்றாகப் பகிர்ந்தளித்தது.''

மூன்றாவது மோதல், பிராமணர்களுக்கும் மன்னன் நகுஷனுக்கும் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. மகாபாரதத்தில் உத்யோகபர்வத்தில் இந்தக் கதை விரிவாகத் தரப்படுகிறது. அங்கே சொல்லப்படுவதாவது:

''விருத்திர அரக்கனை வதம் செய்த பின்னர், ஒரு பிராமணனின் உயிரைப் பறித்துவிட்டதாக இந்திரன் அச்சமுற்று (ஏனென்றால் விருத்திரன், பிராமணன் என்று கருதப்பட்டான்) தண்ணீரில் ஒளிந்து கொண்டான். தேவர்களின் அரசன் ஒளிந்து கொண்டதன் விளைவாக விண்ணுலகிலும் மண்ணுலகிலும் எல்லா விவகாரங்களும் குழப்பத்தில் ஆழ்ந்தன. பிறகு ரிஷிகளும் தேவர்களும் நகுஷனைத் தங்களுக்கு அரசனாய் இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். முதலில் அதிகாரமில்லை என்று சொல்லி மறுத்துப்பார்த்த நகுஷன், முடிவில் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி உயர்ந்த பதவியை ஏற்றுக் கொண்டான். அரியணை ஏறும் காலம் வரைக்கும் ஒழுக்கமாக

வாழ்க்கை நடத்தி வந்தவன், இப்போது கேளிக்கைக்கும் சிற்றின்பத்துக்கும் இரையானான். இந்திரனின் மனைவி இந்திராணியைப் பார்க்க நேர்ந்தபோது அவளையே கூட அடைய ஆசைப்பட்டான். இந்திராணி தேவர்களின் குருவாகிய அங்கிரஸ் விரசாஸ்பதியின் உதவியை நாடினாள். அவரும் அவளைப் பாதுகாக்க முன்வந்தார். இந்தத் தலையீட்டை அறிந்து நகுஷன் கடுங்கோபமுற்றான். தேவர்கள் அவனைச் சாந்தப்படுத்த முயன்றார்கள். அடுத்தவன் மனைவியைச் சொந்தமாக்கிக் கொள்வது ஒழுக்கக்கேடாகும் என்று சுட்டிக் காட்டினார்கள். ஆனால், நகுஷன் யார் சொல்லையும் கேட்பதாயில்லை, அடுத்தவன் மனைவிக்கு ஆசைப்படுவதில் இந்திரனைக் காட்டிலும் தான் ஒன்றும் மோசமில்லை என்று அடித்துச் சொல்லிவிட்டான். *373.* ஒரு ரிஷியின் மனைவியாகிய புகழ்பெற்ற அகலிகை, கணவன் உயிருடன் இருக்கும்போதே இந்திரனால் கெட்டது பழையகதை. அவனை நீங்கள் ஏன் தடுக்கவில்லை? *374.* அந்தக் காலத்தில் பல அநாகரிகச் செயல்களையும் நேர்மையற்ற காரியங்களையும் மோசடிகளையும் இந்திரன் செய்தான். நீங்கள் ஏன் அவனைத் தடுக்கவில்லை? நகுஷன் வலியுறுத்தியபடி இந்திராணியைக் கூட்டிவரச் சென்றார்கள். ஆனால், விரகஸ்பதி அவளைக் கைவிடுவதாயில்லை என்றாலும், அவரது ஆலோசனைப்படி சற்றே தாமதத்திற்குப் பொறுத்துக்கொள்ளும்படி அவள் நகுஷனை வேண்டினாள். அதற்குள், தன் கணவருக்கு என்னாயிற்று எனத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று சொன்னாள். இந்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தேவர்கள் இதையடுத்து இந்திரன் சார்பாக விஷ்ணுவை வேண்டிக்கொண்டார்கள். தனக்கு யாகம் வளர்த்தால் அவனது குற்றத்திலிருந்து விடுவிக்கப்பட்டு அவனது ஆட்சியை மீட்டுக் கொள்ளலாம், அதேபோது நகுஷன் அழிக்கப்படுவான் என்று விஷ்ணு உறுதியளித்தார். அதன்படி இந்திரன் யாகம் வளர்த்தான். இதன் விளைவு இவ்வாறு கூறப்பட்டுள்ளது: ''பிராமணக்கொலை என்னும் குற்றத்தை மரங்கள், ஆறுகள், மலைகள், பூமி, பெண்கள், பஞ்சபூதங்கள் இடையே பிரித்துக்கொடுத்த தேவர்களின் தலைவனாகிய வாசவன் (இந்திரன்) துன்பத்திலிருந்தும் பாவத்திலிருந்தும் விடுவிக்கப்பெற்று தன்னாட்சி பெற்றான்.'' இவ்விதம் நகுஷன் அவனது இடத்திலிருந்து அசைக்கப்பெற்றான். ஆனால் (விளக்கம் என்ற முறையில் இதைச் சொல்லிவிட்டால் கதையில் கொஞ்சம் குழப்பம் உள்ளது) அவன் தன்னிடத்தை விரைந்து மீட்டுக் கொண்டிருக்கவேண்டும். ஏனென்றால், இந்திரன்

மறுபடியும் நாசமானதாகவும் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது. இப்போது இந்திராணி தன் கணவனைத் தேடிச் சென்றாள், (இரவுத் தேவதையும் இரகசியங் களை வெளிப்படுத்துகிறவளுமான) உபஸ்ருதியின் உதவி கொண்டு இந்திராணி இந்திரனைக் கண்டுபிடித்தாள். அவன் இமயமலைக்கு வடக்கே ஒரு பெருங்கடலுக்குள் அமைந்த கண்டப்பரப்பில் அமைந்த ஏரியில் வளர்ந்து கொண்டிருந்த ஒரு தாமரைத் தண்டில் மிக நுணுக்கமாய் மறைந்திருந்தான். அவள் அவனிடம் நகுஷனின் கெடுநோக்கத்தைத் தெரியப்படுத்தி, அவனது ஆற்றலைப் பயன்படுத்தித் தன்னை ஆபத்திலிருந்து காப்பாற்றும்படியும் அவனது ஆளுகையை மீட்டுக்கொள்ளும் படியும் மன்றாடினாள். நகுஷன் கூடுதல் வலிமை படைத்தவன் என்று சொல்லி, இந்திரன் உடனடியாக இடம்மாறி வர மறுத்து விட்டான். ஆனால் ஆட்சியைப் பறித்துக்கொண்ட நகுஷனை அவனது இடத்திலிருந்து தூக்கியெறியத் தன் மனைவிக்கு ஓர் உபாயம் சொன்னான். '' ரிஷிகள் தூக்கிவரும் விண்ணுலகப் பல்லக்கு ஒன்றில் நீ என்னிடம் வந்தால் நான் மனமகிழ்ந்து உனக்கு இணங்குவேன்'' என்று நகுஷனிடம் கூறும்படி இந்திரன் அவளுக்கு ஆலோசனை சொன்னான். இதன்படி தேவர்களின் விஷயம் நகுஷனிடம் சென்றது. அவன், அவளைக் கண்ணியமாய் வரவேற்றான். அவள் தன் யோசனையைச் சொன்னாள்: ''தேவர்களின் அரசரே, விஷ்ணுவோ ருத்ரனோ அசுரர்களோ ராட்சதர்களோ பயன்படுத்தாத, இதுவரை அறியப் படாத ஒரு பல்லக்கு தங்களுக்கு வேண்டுமென நான் விரும்பு கிறேன். மகரிஷிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து, நாரதரே, உங்களை ஒரு பல்லக்கில் தூக்கி வரவேண்டும்; இதுதான் எனக்கு மகிழ்ச்சி தரும்.'' நகுஷன் தன் தற்பெருமைக்குத் தீனிபோட்ட இந்த வேண்டுகோளை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்கிறான். விடை யிறுக்கும்போது தன்னைத்தானே பாராட்டும் விதத்தில் இப்படிச் சொல்லுகிறான்: ''முனிகளைத் தன் பல்லக்கு தூக்கி களாக்குகிற ஒருவன் அற்பசொற்ப வலிமை உடையவனாய் இருக்க மாட்டான். வருங்காலத்துக்கும் நிகழ்காலத்துக்கும் நானே தலைவன். நான் கோபமுற்றால் உலகம் அதன்பின் நில்லாது. அனைத்தும் என்னைப் பொறுத்ததே.... ஆகவே தேவதையே, சந்தேகமே இல்லாமல் உன் ஆலோசனையை நிறைவேற்று வேன். ஏழு ரிஷிகள், எல்லாரும் பிராமண ரிஷிகள் என்னைத் தூக்கிச் சுமப்பார்கள். அழகுதேவதையே, என்பெருமையை, என் செழுமையைப் பார்த்துக்கொள்.'' கதை மேலும் செல்கிறது:

''சொன்னபடியே இந்தக் கொடியவன், சமயப்பகைவனும் வன்முறையாளனும் ஏமாற்றுப் போதை ஏறியவனும் மனம் போன போக்கில் நடந்துகொள்ளக் கூடியவனுமான அவன், ரிஷிகளைப் பல்லக்குத் தூக்கிகளாக்கினான். அவர்களும் அவனது கட்டளைக்குப் பணிந்து அவனைத் தூக்கிச் சுமந்தார்கள்.'' இந்திராணி மறுபடியும் விரசாஸ்பதியின் உதவியை நாடுகிறாள். வன்மம் விரைவில் நகுஷனை வெற்றிகொள்ளும் என்று அவர் உறுதி சொல்கிறார். கொடுமைக்காரனை அழிப்பதற்காகவும் இந்திரன் மறைந்துள்ள இடத்தைக் கண்டுபிடிப்பதற்காகவும் தாமே யாகம் வளர்ப்பதாக உறுதியளிக்கிறார். பிறகு இந்திரனைக் கண்டுபிடித்து விரசாஸ்பதியிடம் கூட்டி வருவதற்காக அக்கினி அனுப்பி வைக்கப்படுகிறான். இந்திரன் வந்து சேர்ந்ததும், விரகஸ்பதி அவன் இல்லாதபோது நடந்ததையெல்லாம் அவனுக்குத் தெரியப்படுத்துகிறார். குபேரன், எமன், சோமன், வருணன் ஆகியோருடன் சேர்ந்து இந்திரன் நகுஷனை அழிப்பதற்கான வழியை வகுத்துக்கொண்டிக்கும்போது அகத்திய முனிவர் வருகிறார். இந்திரனின் போட்டிக்காரன் வீழ்ச்சியுற்றது குறித்து அவனைப் பாராட்டி வாழ்த்துகிறார், இது எப்படி நிகழ்ந்தது என்று எடுத்துச் சொல்கிறார். பாவியாகிய நகுஷனைத் தூக்கிச் சுமந்து களைப்புற்ற உன்னதமான தெய்வ ரிஷிகளும் அப்பழுக்கில்லாத பிராமண ரிஷிகளும் தெய்வமகன் நகுஷனிடம் ஒரு சிக்கலை விடுவிக்கும்படி கேட்டார்கள்:' வெற்றிவீரர்களில் மிகச்சிறந்த வாசவர்களில் ஒருவனாகிய நீ, பசுக்களை யாகத் தீயில் எரிக்கும்போது ஓதப்படும் பிராமண மந்திரங்களை மெய்யாகக் கருதுகிறாயா?' 'இல்லை' என்றான் நகுஷன். அவனது புத்தியை இருள் சூழ்ந்துள்ளது. ரிஷிகள் சொன்னார்கள்: 'ஒழுக்கக் கேட்டில் விழுந்துள்ள நீ ஒழுக்கத்தை அடையமுடியாது; முன்னதாக மகரிஷிகளால் உதிர்க்கப்பட்ட இந்த மந்திரங்களை நாங்கள் மெய்யெனக் கருதுகிறோம். முனிவர்களுடன் சண்டை போட நகுஷன் (கதையைத் தொடர்கிறவர் அகத்தியர்) ஒழுக்கக் கேட்டினால் உந்தப்பட்டு என் தலையைத் தன் காலால் தொட்டான். இதன் விளைவாக மன்னனின் புகழ் மறைந்தது, அவனது வலிமை விலகிப்போனது. உடனே அவன் மனக் கலக்கமுற்று அச்சத்தில் ஆடிப்போனான். நான் அவனுக்குச் சொன்னேன்: 'அட முட்டாளே, நீ அந்தப்புனிதமந்திரத்தை, எப்போதுமே உயர்வாக மதிக்கப்படுவதும் முற்காலத்தில் முனிவர்களால் இயற்றப்பட்டதும் பிராமண ரிஷிகளால் பயன் படுத்தப்பட்டதுமான அந்தப்புனித வாசகத்தை அவமதித்து

விட்டதாலும், என் தலையை உன் காலால் தொட்டுவிட்டதாலும், பிரம்மாவைப் போன்றவர்களும் எதற்கும் மயங்காதவர்களுமான ரிஷிகளை உன்னைச் சுமக்கும் பல்லக்குத் தூக்கிகளாகப் பயன்படுத்தியதாலும் உன் பளபளப்பை இழந்து, உன் திறமையெல்லாம் வற்றிப்போய், பாவியே, விண்ணிலிருந்து மண்ணுக்கு இழிவுற்றுத் தாழ்ந்துபோ. அடுத்துவரும் ஆயிரம் ஆண்டுகளுக்கு நீ, ஒரு பெரியபாம்பாக வடிவெடுத்து ஊர்ந்து கொண்டிருப்பாயாக. அந்தக் காலம் முடிவடைந்த பிறகு மீண்டும் விண்ணுலகிற்கு ஏறிவருவாய்! இப்படித்தான் அந்தக் கொடியவன் தேவர்களின் இறைமையிலிருந்து வீழ்ச்சியுற்றான்.''

அடுத்து, நிமி மன்னனுக்கும் பிராமணர்களுக்கும் நடந்த மோதலைப்பற்றிய குறிப்பு காணப்படுகிறது. விஷ்ணு புராணத்தில் இந்தக்கதை பின்வருமாறு சொல்லப்படுகிறது:

''ஆயிரம் ஆண்டுகள் நீடிக்க வேண்டிய ஒரு யாகத்தை முன்னின்று நடத்திக் கொடுக்கும்படி வசிஷ்டர் என்ற பிராமண ரிஷியை நிமி கேட்டுக்கொண்டான். இந்திரனிடம் ஐந்நூறு ஆண்டுகள் ஒரு வேலைக்கு முன்கூட்டியே ஒப்புக்கொண்டிருப்பதாக வசிஷ்டர் விடையளித்தார். ஆனால் அந்தக் காலம் முடிவுற்றபின் திரும்பிவருவதாக உறுதியளித்தார். மன்னன் எதுவும் சொல்லவில்லை. அவன் இந்த ஏற்பாட்டுக்கு இணங்கிவிட்டதாக எண்ணி வசிஷ்டர் போய்விட்டார். ஆனால் அவர் திரும்பிவந்தபோது, யாகத்தை நடத்துவதற்காக கௌதமரையும் (இவரும் வசிஷ்டரைப் போலவே ஒரு பிராமணரிஷி) மற்றவர்களையும் நிமி தன்னிடமே வைத்துக்கொண்டிருந்ததைக் கண்டுகொண்டார். என்ன நோக்கமென்பதைத் தனக்கு அறிவிக்காமல் அலட்சியப்படுத்தியதால் அவர் கோபமுற்று, அந்நேரம் உறங்கிக்கொண்டிருந்த மன்னனுக்கு அவனது உடற்கூட்டை இழக்கும்படி சாபமிட்டார். நிமி விழித்துப்பார்த்து, எந்த முன்னெச்சரிக்கையுமில்லாமல் தனக்குச் சாபமிட்டதை அறிந்தபோது, பதிலடியாக வசிஷ்டருக்கு இதேபோல் ஒரு சாபமிட்டுப் பின் இறந்துபோனான். (விஷ்ணுபுராணம் தொடர்ந்து செல்கிறது. IV,5,6) ''இந்த சாபத்தின் விளைவாக வசிஷ்டரின் சக்தியானது மித்ரன், வருணன் ஆகியோரின் சக்திக்குள் நுழைந்துகொண்டது. ஆனால் ஊர்வசியைப் பார்த்தவுடன் அவர்களின் விந்து விழுந்தபோது வசிஷ்டர் அவர்களிடமிருந்து வேறு உடல் பெற்றார். நிமியின் உடலுக்குத் தீ வைக்கப்பட்டது. அவன் மூட்டிய

யாகத்தின் முடிவில், புரோகிதர்களின் வேண்டுதலை மதித்து அவனுக்கு மீண்டும் உயிர்கொடுக்க தேவர்கள் சித்தமாயிருந் தார்கள். ஆனால் அவன் அதை ஏற்க மறுத்துவிட்டான். அவனது விருப்பப்படி தெய்வங்கள் அவனை உயிர்ப்பிராணிகள் அனைத்தின் கண்களிலும் வைத்தனர். இதனால்தான் அவை எப்போதும் இமைத்த வண்ணம் உள்ளன. (நிமிஷம் என்றால் 'கண்ணிமைத்தல்' என்று பொருள்).''

பிராமணர்களும் சூமுக மன்னனுக்கும் நடந்த இன்னொரு மோதலையும் மனு குறிப்பிடுகிறார். ஆனால் இதுபற்றிய விவ ரங்கள் ஏதும் கிடைக்கவில்லை. பிராமணர்களுக்கும் சத்திரிய மன்னர் களுக்கும் மோதல் நிகழ்ந்ததற்குப் பல எடுத்துக் காட்டுகள் உண்டு. இதிலிருந்து பிராமணர்களும் சத்திரியர்களும் இருவகுப்புகளாக நின்று மோதிக்கொண்டதில்லை என்று அனுமானம் செய்து விடக்கூடாது. மன்னர்களுடனான மோதல்கள் என்றில்லாமல் இருவகுப்புகளுக் கிடையிலான மோதல்களும் நடைபெற்றன என்பது வரலாற்று மதிப்பு வாய்ந்த சான்றுகளால் ஐயந்திரிபற மெய்ப்பிக்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சிகளையும் குறிப்பிடலாம்.

முதலாவது, சத்திரியராகிய விசுவாமித்திரருக்கும் பிராமண ராகிய வசிஷ்டருக்கும் நடந்த போட்டி. ஒரு சத்திரியன் பிராமணத் தன்மைக்கு உரிமை கொண்டாட முடியுமா என்பதுதான் இருவருக்கும் எழுந்த சிக்கல்.

இராமாயணத்தில் இந்த கதை சொல்லப்பட்டுள்ளது. அது என்னவென்றால்:

''முற்காலத்தில் குசன் என்றொரு மன்னன் இருந்தானாம். இவன் பிரஜாபதியின் குமாரன். இவனுக்கு குஷானபா என்றொரு மகன் இருந்தான். இவன் காதியின் தந்தை. காதியோ விசுவாமித்ரரின் தந்தை. விசுவாமித்திரர் பல்லாயிரம் ஆண்டுகள் உலகை ஆண்டு வந்தார். ஒருமுறை விசுவாமித்திரர் அவர் உலகை வலம்வந்து கொண்டிருந்த போது, துறவிகளும் முனிவர்களும் புண்ணியம் செய்த பக்தகோடிகளும் ஏராளமாய் வாசம் புரிந்து வந்த வசிஷ்டரின் இனிய ஆசிரமத்துக்குச் சென்றார். பிரம்மனின் புதல்வர் அங்கே விசுவாமித்திரருக்கும் அவருடைய சீடர் களுக்கும் விருந்தோம்பல் செய்தபோது அதை அவர்கள் முதலில் ஏற்க மறுத்துவிட்டார்கள், பிறகு ஏற்றுக்கொண்டார்கள். ஆயினும் விருந்தில் பரிமாறப்பட்ட அனைத்தையும் வழங்கிய அதிசயப்

பசுவின் மீது விசுவாமித்திரர் ஆசை கொண்டார். நூறாயிரம் சாதாரணப் பசுக்களைப் பெற்றுக்கொண்டு அந்த அதிசயப் பசுவைத் தனக்குத் தரும்படி எடுத்த எடுப்பிலேயே அவர் கேட்டுவிட்டார். அவர் சொன்னார்: ''அந்தப் பசு ஓர் இரத்தினம், இரத்தினங்கள் மன்னரின் சொத்தாகும். ஆகவே இந்தப் பசு உரிமைப்படி என்னைச் சேர்ந்தது.'' இந்த விலை ஏற்கப் படவில்லை என்றதும் மன்னர் பற்பல பெரும்பெரும் விலை களைச் சொல்லிப் பார்க்கிறார். ஆனால் எதுவும் எடுபட வில்லை. பிறகு அவர் நன்றிகெட்ட முறையிலும் கொடுங் கோன்மையுடனும் அந்தப்பசுவை வலு வந்தமாய்க் கைப்பற்ற முற்படுகிறார். ஆனால் பசுவானது அவரின் பணியாட்களிட மிருந்து தப்பி ஓடித், தன் எசமானரிடமே போய்ச் சேருகிறது. 'நீங்கள் என்னைக் கைவிடுகிறீர்களே' என்று முறையிடுகிறது. 'நான் உன்னைக் கைவிடவில்லை, ஆனால் மன்னர் என்னை விடவும் மிக அதிக வலிமை வாய்ந்தவர்' என்று அவர் விடை யிறுக்கிறார். பசு சொல்கிறது, '' மனிதர்கள் ஒரு சத்திரியனை வலிமைமிக்கவனாகச் சொல்வதில்லை, பிராமணர்கள் கூடுத லான வலிமை உடையவர்கள். பிராமணர்களின் வலிமை தெய்விகமானது, சத்திரியர்களின் வலிமைக்கும் மேலானது. தங்களின் வலிமை அளவிடற்கரியது. விசுவாமித்திரர் பேராற்றல் படைத்தவர் என்றாலும் தங்களைவிட வலிமைவாய்ந் தவர் அல்ல. தங்களின் ஆற்றலை வெல்வது அரிது. பிராமணிய சக்தி அடையப்பெற்ற எனக்கு ஆணையிடுங்கள், நான் இந்தக் கொடிய இளவரசனின் கர்வத்தையும் வலிமையையும் முயற்சியையும் அழித்துவிடுவேன்.'' அவ்வாறே பசுவானது உக்காரமிட்டு நூற்றுக்கணக்கான பகல்வாக்களை உருவாக்கி விடுகிறது. அவர்கள் விசுவாமித்திரரின் கூட்டத்தையே அழித்து விடுகிறார்கள். ஆனால் பதிலுக்கு விசுவாமித்திரரால் கொல்லப் பட்டு விடுகிறார்கள். பிறகு பெரும்வலிமையும் வீரமும் கொண்ட சகன்களும் யவன்களும் உருவாக்கப்பட்டார்கள். இவர்கள் ஆயுதசகிதம் வந்தார்கள். இவர்களும் விசுவாமித்திரரின் படை யாட்களை அழித்துப், பிறகு அவரால் தோற்கடிக்கப்பட்டார்கள். பிறகு பசுவானது தன் உக்காரத்தைக் கொண்டு உடலின் வெவ்வேறு உறுப்புகளிலிருந்து பல்வேறு குலங்களையும் சேர்ந்த போர் வீரர்களை உண்டாக்கியது. இவர்களும் விசுவாமித்திரரின் காலாட்படையினர், யானைகள், குதிரைகள், தேர்கள் என்று படைமுழுவதையும் அழித்துவிட்டார்கள். பிறகு மன்னரின் புதல்வர்களில் நூறுபேர் பல்வேறு ஆயுதங்களும் ஏந்தி ஆவேசத்துடன் வசிஷ்டர் மீது பாய்ந்தார்கள். ஆனால் அந்த

முனிவரின் வாயிலிருந்து ஊதிய காற்றில் அவர்கள் எல்லோரும் நொடிப்பொழுதில் சாம்பாலாகிப்போனார்கள். இவ்வாறு படுதோல்வியும் அவமானமும் உற்ற விசுவாமித்திரர் தன் மகன்களில் ஒருவனை ஆட்சிப்பொறுப்புக்கு நியமித்துவிட்டு இமயமலைக்குப் பயணமானார். அங்குக் கடுந்தவம் செய்து மகாதேவரின் தரிசனம் பெற்றார். அவரது விருப்பப்படி மகா தேவர் ஆயுத விஞ்ஞானத்தின் அனைத்துக் கலைகளையும் அவருக்கு வெளிப்படுத்தினார், அவருக்கு விண்ஆயுதங்களும் வழங்கினார். இதனால் மகிழ்ந்து கர்வம் நிறைந்து அவர் வசிஷ்டரின் ஆசிரமத்தை எரித்து, அதில் இருந்தவர்களை ஓடச் செய்தார். பிறகு வசிஷ்டர் விசுவாமித்திரரை அச்சுறுத்தி அவரது பிராமணியத் திரையை அகற்றினார். விசுவாமித்திரரும் தன் நெருப்பு ஆயுதத்தைத் தூக்கிப் பகையாளியை நின்று பார்க்குமாறு அழைத்தார். நீ உன் வலிமையைக் காட்டு என்று கூறிய வசிஷ்டர், உன் அகந்தையை விரைவில் ஒடுக்கிக் காட்டுவேன் என்றார். அவர் கேட்டார்: ''ஒரு சத்திரியனின் வலிமை ஒரு பிராமணனின் மாவலிமைக்கு ஈடாகுமா? பார், அட கேடுகெட்ட சத்திரியனே, என் தெய்விக பிராமண சக்தியைப் பார்.'' காதியின் மகன் தூக்கிய பயங்கர நெருப்பாயுதம் பிராமணனின் தடியால் அணைக்கப்பெற்றது — நெருப்பை நீர் அணைப்பது போல்! பிரம்மா, காலன், வருணன் ஆகியோரின் சுருக்குக் கயிறுகள், விஷ்ணுச்சக்கரம், சிவனின் திரிசூலம் போன்ற வேறுபல விண்கணைகளையும் விசுவாமித்திரர் தன் பகைவன் மீது எறிந்தார். ஆனால் பிரம்மாவின் புதல்வர் எல்லாவற்றையும் கபளீகரம் செய்கிற தன் ஆற்றலைப் பயன்படுத்தி அவற்றை யெல்லாம் விழுங்கிவிட்டார். முடிவில் தேவர்கள் எல்லாம் கடுங்கோபம் கொள்கிற விதத்தில், அந்தப் போர்வீரர் அதி பயங்கர பிரம்மாஸ்திரத்தை ஏவினார். ஆனால் இதுவும் அந்தப் பிராமண முனிவரிடம் செல்லுபடியாகவில்லை. வசிஷ்டர் இப்போது பயங்கரத் தோற்றம் மேற்கொண்டார்: ''புகையுடன் கூடிய தீச்சுவாலைகள் அவரது உடலின் துவாரங்களிலிருந்து சீறிப்பாய்ந்தன. பிராமணிய ஆற்றல் புகையற்ற ஊழித் தீ போல் அவரது கையில் சுடர்விட்டது, அல்லது எமனின் இரண்டாவது வாள் போலிருந்தது.'' ஆயினும் அவர் அவருடைய போட்டி யாளருக்கு மேலானவர் என்று அறிவிப்பு செய்த முனிகளால் சாந்தமுற்று, வசிஷ்டர்தம் பழியாவேசத்தை நிறுத்திக் கொண்டார். விசுவாமித்திரர் வேதனைக் குரலில் வியந்து சொன்னார்: ''ஒரு சத்திரியனின் வலிமைக்கு இது அவமானம். பிராமணனின் வலிமை மட்டுமே வலிமையாகும். ஒரே ஒரு பிராமணிய

ஆற்றலால் என் ஆயுதங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டனவே!'' படுதோல்வியால் அவமானமுற்ற முடிமன்னருக்கு இப்போது வேறுவழியில்லை. ஒன்று, அவர் இந்த அனாதரவான கீழ்நிலையை ஏற்றுப்பணிந்து விட வேண்டும், அல்லது பிராமணியத் தரத்துக்குத் தன்னைத்தானே உயர்த்திக் கொள்ள வழிபார்க்க வேண்டும். அவர் இரண்டாவது வழியைக் கைக்கொண்டார்: ''இந்தத் தோல்விகுறித்து ஆழ்ந்து யோசித்த பின், நான் நிதான புத்தியுடனும் ஒருமித்த உள்ளத்துடனும் கடுந்தவமுயற்சியில் இறங்குவேன். இது என்னை ஒரு பிராமணனின் தரவரிசைக்கு உயர்த்தும்''. வேதனையும் விரக்தியுமுற்று சலிப்புடனும் பகைவனிடம் மாறா வெறுப்புடனும் அவர் தன் அரசியுடன் தென்னாட்டுக்குப் பயணம் செய்து தன் உறுதியான முடிவைச் செயலாக்கினார். ஹவிஷ்யந்தன், மதுஷ்யந்தன், திரிதநேத்ரன் ஆகிய மூன்று மகன்கள் அவருக்குப் பிறந்ததாக முதலில் நமக்குச் சொல்லப்படுகிறது. ஆயிரம் ஆண்டுக் கால முடிவில் பிரம்மா காட்சியளித்து, நீ ராஜரிஷிகளின் தேவ லோகத்தை வென்றுவிட்டாய் என்று அறிவித்தாராம். தவ வலிமையின் விளைவாக அவர் அந்தத் தரத்தை அடைந்துவிட்டதாக அங்கீகரிப்பட்டது. ஆனால் விசுவாமித்திரர் இவ்வளவு குறைவான சன்மானம் வழங்கப்படுவது குறித்து வெட்கமும் வருத்தமும் கோபமும் அடைந்தார். அவர் கூவினார்: ''நான் கடுந்தவம் செய்துள்ளேன். தேவர்களும் ரிஷிகளும் என்னை ஒரு ராஜரிஷியாக மட்டுமே மதிக்கிறார்கள். தவம் செய்தால் எப் பலனும் இல்லை எனத் தோன்றுகிறது.'' இந்த ஏமாற்றம் இருந்தபோதிலும், அவர் ஒருபடி உயர்ந்துவிட்டார். உடனே தன் தீவிரப்புலனடக்கமுயற்சியை மறுபடியும் தொடங்கினார்.

''இந்தக் கட்டத்தில் பின்வரும் நிகழ்ச்சிகள் அவரது தவத்தில் குறுக்கிட்டன: இஷ்வாகுவின் வழிவந்தோரில் ஒருவரான திரிசங்கு மன்னன் ஒரு யாகம் நடத்தத் திட்டம் வகுத்திருந்தான். அந்த யாகத்தின் பயனாய் அவன் கூண்டோடு கைலாசம் செல்லவேண்டுமென விரும்பினான். வசிஷ்டரை அழைத்துச் சொன்னபோது, இதுமுடியாத காரியம் என்று கூறிவிட்டார். திரிசங்கு தென்னாட்டுக்குச் சென்றான். அங்கே வசிஷ்ட முனிவரின் நூறுபுதல்வர்கள் தவம்செய்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் அவர்களின் தந்தை மறுத்து விட்டதைச் செய்து கொடுக்கும்படி திரிசங்கு வேண்டிக்கொண்டான். அவன் அவர்களை மிகுந்த பயபக்தியுடனும் பணிவுடனும் விளித்துப் பேசிய போதிலும், ''இஷ்வாகு அவர்களின் குடும்பப்

புரோகிதர்களை இடர்ப்பாடுகளின்போது பயன்படும் மிகச்சிறந்த செல்வம் போல் மதிப்பதாகவும், அவர்களின் தந்தைக்குப் பிறகு அவர்களையே தன் குட்டித்தெய்வங்களாகக் கருதுவதாக வும்'' சொல்லிப் பார்த்த போதிலும், அவனது ஆசையை அந்தக் கோபக்கார புரோகிதர்கள் வெறுப்புடன் ''முடியாத காரியம்'' என்று சொல்லி மறுத்துவிட்டார்கள்.'' முட்டாளே, உண்மை பேசுகிற உன்னுடைய குரு உன்னை மறுதலித்துவிட்டார். அவரது அதிகாரத்தை மதிக்காமல், நீ இன்னொரு பள்ளியை (சக்கா) நாடியிருக்கிறாய். குடும்பப் புரோகிதர்தான் இஷ்வாகு அரச வம்சத்தைச் சேர்ந்த அனைவருக்கும் உயர்ந்த குரு ஆவார். அந்த உன்னதத் தலைவரின் கட்டளையை மீறமுடியாது. தெய்வ ரிஷியாகிய வசிஷ்டர் 'இது முடியாத காரியம்' என்று அறிவித்து விட்டார். எப்படி நாங்கள் உன் யாகத்தை நடத்தமுடியும் ? நீ முட்டாள் அரசன். உன் தலைநகரத்துக்கே திரும்பிப்போ. தெய்வகுரு (வசிஷ்டர்) மூன்று உலகங்களுக்குப் புரோகிதராகச் செயல்பட அருகதையுள்ளவர். எப்படி நாங்கள் அவருக்கு அவமரியாதை செய்ய முடியும்?'' பிறகு திரிசங்கு அவர்களுக்கு ஒன்றைப் புரியச் செய்தார். ''என் குருவும் என் குருவின் புதல்வர் களும் என் வேண்டுதல்களுக்கு இணங்க மறுத்துவிட்டதால் வேறு ஏதேனும் உபாயம் குறித்து யோசிக்க வேண்டும்.'' திமிரடியான இந்த நோக்கத்தை அவன் தெரிவிக்கத் துணிந்ததன் விளைவாக, அவர்கள் அவனைச் சண்டாளனாகும்படி சாபமிட் டனர். இந்தச் சாபம் பலித்துவிட்டதாலும், பரிதாபத்துக்குரிய மன்னனின் உருவம் சாதிகெட்டு இழிந்துபோன ஒருவனின் உருவமாக மாற்றப்பட்டதாலும் அவன் விசுவாமித் திரரை நாடிச் சென்றான். (அவர் இந்தக் காலத்தில் தெற்கே வாழ்ந்து வந்தார் என்பதை முன்பே பார்த்தோம்.) மன்னன், தன் சொந்தச் சிறப்புகளையும் பக்தியையும் அவரிடம் விளக்கிச் சொல்லி தனக்கேற்பட்ட கதி குறித்துப் புலம்பினான். விசுவாமித்திரர் அவனது நிலைமை குறித்து வருந்தி, அவனுக்காக யாகம் நடத்தவும், அவனது சாபத்தால் வந்துள்ள அதே சண்டாள உருவத்தில் அவனைக் கைலாசத்திற்கு உயர்த்தவும் உறுதி யளித்தார். ''நீ குசிகனின் புதல்வனை நாடி வந்திருப்பதால் கைலாசமே உன் கைக்கு வந்துவிட்டதுபோலத்தான்.'' பிறகு அவர் யாகத்துக்கு ஆயத்தப்பணிகள் செய்யும்படி கட்டளை யிட்டார். வசிஷ்டரின் குடும்பம் உட்பட எல்லா ரிஷிகளும் யாகச் சடங்குக்கு அழைக்கப்படவேண்டும் என்றார். விசுவாமித்திரரின் சீடர்கள் அவரது செய்தியைக் கொண்டு சேர்த்துவிட்டுத் திரும்பி வந்ததும் அவரது அழைப்பின் விளைவைப் பின்வருமாறு

தெரிவித்தார்கள்: ''உங்கள் செய்தியைக் கேட்டு எல்லா நாடுகளிலும் உள்ள எல்லாப் பிராமணர்களும் ஒன்று திரண்டுவந்து கூடிவிட்டார்கள் — மகோதயா (வசிஷ்டர்) தவிர. அந்த நூறு வசிஷ்டர்களும், கோபத்தால் குரல்நடுங்க உதிர்த்த கடுஞ் சொற்களைக் கேளுங்கள்: ''தேவர்களும் ரிஷிகளும் அந்த ஆள் நடத்துகிற யாகத்தில் தரப்படும் தீர்த்தத்தை எப்படி வாங்கிப் பருகமுடியும்? அதிலும் குறிப்பாக அவன் ஒரு சண்டாளனின், அவனுக்குப்புரோகிதர் வேலையை பார்ப்பவன் ஒரு சத்திரியன் என்றால், இது எப்படி முடியும்? உன்னதப் பிராமணர்கள் ஒரு சண்டாளரின் உணவை உண்டபின், விசுவாமித்திரரின் உபசரிப்பைப் பெற்றபின் எப்படிக் கைலாசத்திற்குச் செல்ல முடியும்?' மகோதயருடன்சேர்ந்து எல்லா வசிஷ்டர்களும் இந்தக் கொடுஞ்சொற்களை உதிர்த்த போது அவர்களின் கண்கள் கோபக்கனல் கக்கின. இந்தச் செய்தி கிடைத்ததும் பெரிதும் எரிச்ச லுற்ற விசுவாமித்திரர் வசிஷ்டரின் புதல்வர்கள் சாம்பலாகிப் போவதற்கும் எழுநூறு பிறவிகளுக்கு இழிந்த சாதிகெட்டவர் களாக (மிருத்தப்பர்களாக) மறுபிறப்பெடுக்கவும் சாபமிட்டார். மகோதயர் ஒரு நிஷாதர் ஆவதற்கும் சாபமிட்டார். இந்தச் சாபம் பலித்துவிட்டதை அறிந்துகொண்ட விசுவாமித்திரர் அதன்பிறகு திரிசங்கைப் புகழ்ந்து பேசி, யாகம் நடத்தவேண்டுமென்று கூடியிருந்த ரிஷிகளுக்கு முன்மொழிந்தார். இதற்கு அவர்கள் சம்மதித்தார்கள். பயங்கரமான அந்த முனிவரின் கோபத்திற் கஞ்சியே இப்படிச் செய்தார்கள். யாகத்தில் விசுவாமித்திரரே யாசகராகப் பணிபுரிந்தார். ஏனைய ரிஷிகள் புரோகிதர்களாக (ரிக்விஜா) பணிபுரிந்தார்கள். எல்லாச்சடங்குகளும் நிறைவேறின. பிறகு விசுவாமித்திரர் தீர்த்தம் வாங்குவதற்குத் தேவர்களை அழைத்தார். ''ஆனால் தெய்வங்கள் தீர்த்தம் பெற வராதபோது, விசுவாமித்திரர்கடுங்கோபமுற்றார். யாகப் பலகையை உயர்த்திப் பிடித்தவண்ணம் திரிசங்குவைப் பார்த்துச் சொன்னார்: ''முடிமன்னனே, நானே என் முயற்சிகளைக் கொண்டு ஈட்டிய தவவலிமையின் ஆற்றலைப்பார். நானே என் ஆற்றலைக் கொண்டு உன்னைக் கைலாசத்திற்கு அழைத்துச் செல்வேன். மண்ணுலகிற்குரிய உடற்கூண்டில், எந்த விண்ணுலகப்பகுதியை அடைவது மிகக் கடினமோ அந்தப் பகுதிக்கே நீ ஏறிச் செல். என் தவத்துக்கு சிறிது பலன் கிட்டியிருப்பது உறுதி.'' உடனே முனிவர்கள் பார்க்கும்படியே கைலாசத்துக்கு உயர்ந்து சென்றான். ஆனால் இந்திரன் அவனைத் தொலைந்து போகும்படி ஆணையிட்டான். தன் ஆன்மிகக் குருமார்களின் சாபத்துக்கு ஆளானவன் என்ற முறையில் அவன் கைலாய மோட்சத்திற்குத்

தகுதியில்லாவன் என்பதே காரணம். அவன் தலைகுப்புற பூமியில் வந்து விழவேண்டுமென இந்திரன் ஆணையிட்டான். அவ்வாறே அவன் இறங்கத் தொடங்கினான். தன் ஆன்மகுருவின் உதவியை உரக்க அழைத்தபடி விழுந்து கொண்டிருந்தான். கடும்கோபமுற்ற விசுவாமித்திரர் நிற்கும்படி அவனை நோக்கிக் கத்தினார். பிறகு தன் தெய்வீக அறிவின் சக்தியாலும் கடுந்தவ வலிமையாலும் மற்றொரு பிரஜாபதியைப் போல வானத்தின் தென்பகுதியில் மற்றும் ஏழு ரிஷிகளை (இந்தப்பெயரில் ஒரு நட்சத்திரக் கூட்டம் உள்ளது) படைத்தார். கைலாயத்தின் இந்தப் பகுதிக்குப் புறப்பட்ட மகா முனிவர் கடுங்கோபத்துக்கு ஆளாகி ரிஷிகளுக்கு நடுவில் இன்னொரு நட்சத்திரமாலையை உருவாக்கினார். 'நான் இந்திரனைப் படைப்பேன், அல்லது உலகத்தில் இந்திரனே இல்லாமல் போய்விடுவான்'' என்று தொடங்கி, தேவர்களைத் தோற்றுவிக்க ஆரம்பித்தார். ரிஷிகளும் தேவர்களும்(சூரர்கள்) அசுரர்களும் இப்போது உண்மையிலேயே அச்சமுற்றார்கள். அவர்கள் விசுவாமித்திரரிடம் இணக்கமான தொனியில் பேசினார்கள்: ''திரிசங்கு அவனுடைய குருமார்களால் சபிக்கப்பட்டதால், அவன் ஏதேனும் பரிகாரம் செய்யும் வரை தண்டனை அனுபவிக்கும் வரை கூண்டோடு கைலாசம் வருவதற்கு அனுமதிக்கக்கூடாது'' என்றனர். தான் திரிசங்குக்கு ஓர் உறுதியளித்திருப்பதாக முனிவர் விடையிறுத்தார். என்னுடைய சீடன் தன் உருவிலேயே கைலாயத்தில் இருப்பதற்கு அனுமதிக்கும்படியும், புதிதாகப் படைக்கப்பட்ட நட்சத்திரங்கள் நிரந்தர மாய் அவற்றுக்குரிய இடங்களில் இருந்து வர அனுமதிக்கும்படியும் தேவர்களை வேண்டிக்கொண்டார். ''இந்தப் பற்பல நட்சத்திரங்களும் நீடித்து இருந்துவரும், ஆனால் சூரியனின் பாதைக்கு அப்பால்தான் இருந்து வரவேண்டும், திரிசங்கு ஓர் அமரனைப் போல் தலைகுப்புற அந்த நட்சத்திரங்களுக்கிடையே ஒளிர வேண்டும். அவனுக்குப் பிறகுதான் அந்த நட்சத்திரங்கள் வர வேண்டும்'' என்று தேவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ''இவ்விதம் விசுவாமித்திரரின் குறிக்கோள் நிறைவேறும், அவரது புகழுக்குப் பங்கம் ஏற்படாது, அவர் தேவலோக வாசியைப் போல் இருப்பார்'' என்று கூறிவிட்டார்கள். ஆக இப்படித்தான் இந்தப் பெருஞ்சண்டை விசுவாமித்திரரும் ஏற்றுக்கொண்ட ஒரு சமரசத்தால் சரிக்கட்டப்பட்டது.''

திரிசங்குவின் இந்தக் கதை ஹரிவம்சத்திலிருந்து எடுத்துக் காட்டிய கதைக்குப் பெரிதும் மாறாயிருக்கக் காணலாம். ஆனால் வசிஷ்டருக்கும் விசுவாமித்திரருக்கும் இடையிலான மோதலின் தன்மையை இது கூடுதலான தெளிவுடன் வெளிப்படுத்துகிறது.

தேவர்கள், ரிஷிகள் அனைவரும் யாகம் முடிந்து புறப்பட்டுச்சென்றபின் விசுவாமித்திரர் தன்சீடர்களைப் பார்த்துச் சொன்னார்: 'தென்னாட்டில் நடந்திருப்பது (நமது தவத்திற்கு) பெருத்த இடையூறாகும். நாம் நமது பிராயசித்தங்களைத் தொடருவதற்கு வேறு திசையில் சென்றாக வேண்டும்.' அவ்வாறே அவர் மேற்கிலிருந்த ஒரு காட்டுக்குச் சென்று, மீண்டும் தவம் செய்யத் தொடங்கினார். இங்கேயும் இந்தக் கதையில் இன்னொரு கதை வந்து குறுக்கிடுகிறது. அது அயோத்தி மன்னன் அம்பரீசனின் கதை. இவன் மரபுவழியில் இஷ்வாகு விடமிருந்து இருபத்தெட்டாவது அரசன், திரிசங்குவிடமிருந்து இருபத்திரண்டாவது அரசன் என்று இராமாயணம் சொல்கிறது என்றாலும், விசுவாமித்திரர் இந்த இரு அரசர்களோடும் சமகாலத்தில் வாழ்ந்து வளர்ந்தது போல் காட்டப்படுகிறது. அம்பரீசன் யாகம் செய்வதில் ஈடுபட்டிருந்தனாம், அப்போது யாகப்பலியை இந்திரன் தூக்கிக்கொண்டு போய்விட்டானாம். மன்னரின் மோசமான ஆட்சியினால்தான் இந்த அபசகுனம், நேரிட்டுவிட்டது என்று புரோகிதர் கூறி, நரபலி ஒன்று தரமுடியாவிட்டால் பெரும்பரிகாரம் செய்யவேண்டியிருக்கும் என்று கூறிவிட்டார். நீண்டகாலம் தேடியலைந்தபின் அம்பரீசனின் அரச ரிஷி பிருகுவின் மரபில் வந்த ரிச்சிகா என்ற பிராமண ரிஷியைச் சந்தித்தார். அவருடைய மகன்களில் ஒருவனை நரபலி கொடுப்பதற்கு நூறாயிரம் பசுக்களை விலையாகப் பெற்றுக் கொண்டு விற்றுவிடும்படி கேட்டுக்கொண்டார். நான் என் தலைப்பிள்ளையை விற்கமாட்டேன் என்று ரிச்சிகா விடையிறுத்தார். கடைக்குட்டி மகனை விற்கமாட்டேன் என்று அவருடைய மனைவி கூறிவிட்டாள். ''தலைப்பிள்ளை பொதுவாகத் தந்தைக்குச் செல்லம், கடைக்குட்டி தாய்க்குச் செல்லம் '' என்று அவள் கூறினாள். அப்படியானால் விற்கப்பட வேண்டியவன் நானே என்று கூறிய நடுமகன் சுனசெப்பா, என்னைக் கொண்டு செல்லுங்கள் என்று மன்னரிடம் கூறினான். நூறாயிரம் பசுமாடுகளும் கோடிக்கணக்கான தங்க நாணயங்களும் குவியலாய் நகைகளும் விலையாகத் தந்து, சுனசெப்பாவைக் கொண்டு சென்றனர். அவர்கள் புஷ்கரம் வழியாகச் சென்று கொண்டிருந்த போது சுனசெப்பா தன் தாய்மாமன் விசுவாமித்திரர் ஏனைய ரிஷிகளோடு அங்குத் தவம்செய்து கொண்டிருக்க கண்டான். அவன் விசுவாமித்திரரிடம் போய் அவரைக் கட்டித் தழுவிக் கொண்டான். எனக்கு உதவுங்கள் என்று மன்றாடினான். தான் அனாதையாகவும் அனாதரவாகவும் இருக்கிற நிலையை

எடுத்துரைத்து முனிவரின் உதவியைக் கோரினான். விசுவாமித்திரர் அவனை ஆற்றுப்படுத்தித், தன் மகன்களை சுனசெப்பாவுக்குப் பதில் பலிகளாக முன்வரும்படி வலியுறுத்தினார். மதுஷ்யந்தனும் அரசகுடியைச் சேர்ந்த ஏனைய பிள்ளைகளும் இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் வெறுப்புடனும் கோபத்துடனும் விடையிறுத்தார்கள்: ''தாங்கள் தங்களுடைய பிள்ளைகளையே பலிகொடுத்து, மற்றவர் பிள்ளைகளை மீட்க முனைவது எங்ஙனம்? இது முறையற்றது, தானே தன் ஊனைத் தின்பது போன்றது எனக் கருதுகிறோம்.'' தன் கட்டளை இப்படி அவமதிக்கப்பட்டது குறித்து முனிவர் கடுங்கோபமுற்றார். தன் பிள்ளைகள் வசிஷ்டரின் பிள்ளைகளைப் போலவே, ஆயிரம் ஆண்டுகளுக்கு மிக இழிந்த வகுப்புகளில் பிறக்கும்படியும் நாய் இறைச்சி உண்ணும்படியும் சாபமிட்டார். பிறகு சுனசெப்பாவைப் பார்த்துச் சொன்னார்: ''அம்பரீசனின் யாகத்தில் உன்னைப் புனிதக்கயிறுகளால் கட்டி செந்நிறமாலையினால் அலங்கரித்து, வாசனைத் திரவியங்களைப் பூசி விஷ்ணுவின் யாகத் தூணுடன் சேர்த்துக் கட்டும்போது, அக்கினியை அழைத்து, இந்த இரண்டு தேவகீதங்களையும் பாடு. அப்போது உன் விருப்பம் நிறைவேறும்.'' இரு கீதங்களையும் பெற்றுக்கொண்ட சுனசெப்பா உடனே நாம் புறப்படலாம் என்று மன்னர் அம்பரீசனிடம் கூறினான். செவ்வாடை அணிவித்துத் தீப்பலியாக்கிட முளையில் கட்டப்பட்டபோது, ''அவன் இந்திரனும் அவனுடைய தம்பியும் (விஷ்ணு) ஆகிய இரு தேவர்களையும் அற்புதமான கீதங்களால் போற்றிப் பாடினான். ஆயிரங்கண்ணுடையான் (இந்திரன்) இந்தப்புனிதக்கீதத்தைக் கேட்டு மனமகிழ்ந்து, சுனசெப்பாவுக்கு நீண்ட ஆயுள் வழங்கினான்.'' மன்னன் அம்பரீசன் இந்த யாகத்திலிருந்து ஏராள நன்மைகள் அடைந்தான். இதற்கிடையில் விசுவாமித்திரர் தொடர்ந்து தவம் செய்து கொண்டிருந்தார். இந்தத் தவம் ஆயிரம் ஆண்டுக் காலம் நீடித்தது.

''இந்த ஆயிரம் ஆண்டுக் கால முடிவில் தேவர்கள் அவருக்குக் கைம்மாறு தர வந்தார்கள். அவர் ரிஷிபதம் அடைந்துவிட்டதாக பிரம்மா அறிவித்தார். இவ்விதம் ஒரு கூடுதல் அடியினை முன்கூட்டி எடுத்து வைத்துவிட்டதாகத் தோன்றியது. முனிவர் இதனால் வருத்தமுற்றது போல் தெரிகிறது. அவர் மீண்டும் தவம் செய்யத் தொடங்கிவிட்டார். சிறிதுகாலம் கழித்து, புஷ்கர தடாகத்தில் குளிக்க வந்த அப்சரசாகிய மேனகையை அவர் பார்த்துவிட்டார். வான்மேகத்தில் மின்ன

லடித்ததுபோல் அவளது பேரெழில் அவர் கண்ணில் பட்டு விட்டது. அவளது கவர்ச்சியினால் தீண்டப்பட்டு அவளை அவர் தன் ஆசிரமத்தில் தன்னோடிருக்க அழைத்தார். பத்தாண்டுக் காலம் அவளது மயக்குவித்தைக்கு அடிமையாகிக் கிடந்தார். இதனால் அவரது தவம் பெரிதும் ஊறுபட்டது. முடிவில் இந்த அவமானத்துக்குரிய அடிமைத்தனத்தை எண்ணிஅவர் வெட்க முற்றார். தன் பக்தியைக் கெடுக்க தேவர்கள் செய்த உபாயம் இஃது என்று நம்பி ஆத்திரமுற்றார். மேனைகையை மென்மையாகப் பேசி அனுப்பிவிட்டு, வடநாட்டு மலைப்பிராந்தியத்துக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு கௌசிக ஆற்றங்கரையில் ஆயிரம் ஆண்டுக்காலம் கடுந்தவம் செய்தார். அவர் அடைந்துவந்த முன்னேற்றம் குறித்து தேவர்கள் கலக்கமுற்று, மகரிஷி பட்டம் கொடுத்து அவரைப் பெருமைப்படுத்தவேண்டும் என்று தீர்மானித்தார்கள். தெய்வங்களின் பொதுக்கருத்தைச் செயலாக்க முற்பட்ட பிரம்மன் அவருக்கு அந்தப் பதவியை வழங்குவதாக அறிவித்தார். அவரது கையைப் பிடித்துத் தலைவணங்கிநின்று விசுவாமித்திரர் பதிலளித்தார். ஈடிணையற்ற பிரம்ம ரிஷிப் பட்டம் எனக்கு வழங்கப்படுமானால், என் புலன்களை அறவே அடக்கி ஆண்டுவிட்டதாகக் கருதிக் கொள்வேன் என்றார். நீர் இன்னமும் உமது புலன்களைச் செந்நிறைவாக அடக்கியாளும் ஆற்றலைப் பெறவில்லை என்று பிரம்மா சொன்னார். அதற்காக நீர் மேலும் முயற்சிகள் செய்யவேண்டும் என்றார். பிறகு முனிவர் இன்னுங் கூடக் கடுமையான தவமுறைகளுக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டார். எதன்மீதும் சாயாமல் தலைகீழாகக் கையூன்றி நிற்றல், காற்றையே உணவாகக் கொள்ளுதல், கோடை காலத்தில் ஐவகை நெருப்புகளுக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ளுதல் (அதாவது நாற்புறமும் பக்கத்துக்கு ஒரு நெருப்பு, தலைக்கு மேல் கதிரவன்), மாரிக்காலத்தில் திறந்தவெளியிலேயே இருத்தல், குளிர்காலத்தில் இரவும்பகலும் நீர்மேல் படுத்தல் ஆகியவற்றைச் செய்துவந்தார். தொடர்ந்து ஆயிரம் ஆண்டுகள் இவ்வாறே செய்தார். இதனால் அவருக்குச் சேர்ந்து வந்த தகுதி குறித்தும், இவ்விதம் அவர் ஈட்டிவந்த ஆற்றல் குறித்தும் எண்ணிப்பார்த்த இந்திரனும் ஏனைய தேவர்களும் பெரிதும் கலக்கமுற்றவர்களாய் மற்றொரு அப்சரசாகிய ரம்பை அவரை மயக்கி இழுக்க வேண்டுமென தேவர்களின் தலைவன் வேண்டி னான். வலிமைமிக்க அந்த முனிவரின் கோபத்துக்கு ஆளாக அவள் பெரிதும் தயக்கம் காட்டினாள். ஆனால் இந்திரன் மறுபடியும் மறுபடியும் கட்டளையிட்டபோது கீழ்ப்படிந்து

விட்டாள். நானும் (காதற்கடவுள்) கந்தர்வனும் உனக்குத் துணைநிற்போம் என்று இந்திரன் அவளுக்கு உறுதியளித்தான். முனிவரின் கட்டுப்பாட்டை உடைக்கும் நோக்குடன் அவள் மிகக் கவர்ச்சியான தோற்றத்தை மேற் கொண்டு சென்றாள். ஆனால் இதில் சூழ்ச்சி இருப்பதாக அவர் ஐயுற்றுக் கடும் கோபம் கொண்டு சாபமிட்டார். சாபம் பலிக்க, கந்தர்வனும் இந்திரனும் நழுவி விட்டார்கள். இவ்விதம், அவர், சிற்றின்ப ஆசையை எதிர்த்து வெற்றிகொண்ட போதிலும், கோபத்துக்கு இரையானதால் தன் தவப்பலன் முழுவதையும் இழந்துவிட்டார். அவர் மறுபடியும் தன் பணியைத் தொடங்கவேண்டியதாயிற்று. ஆத்திரத்தை அடக்குவதற்கும் மௌனமாய் இருப்பதற்கும், நூறாண்டுகளுக்கு மூச்சுக்கூட விடாமல் இருப்பதற்கும் அவர் உறுதி பூண்டார். உடலைக்காயப்போட முடிவுசெய்து, பிராமணன் என்ற உயர்சிறப்பை அடையும்வரை உண்ணாநோன்பிருக்கவும் மூச்சை அடக்கவும் தீர்மானித்தார். பிறகு அவர் இமயமலைக்குப் புறப்பட்டுச் சென்று, கிழக்கே பயணம் செய்தார். அங்கு அவர் தவங்களின் வரலாற்றிலேயே ஈடுஇணையற்ற கடுமையான ஒரு முயற்சியை மேற்கொண்டார். சூளுரைத்தபடி ஆயிரம் ஆண்டுகள் மௌனம் காத்தார். முடிவில் அவர் பரிபூரணத்துவம் அடைந்து விட்டார். தடைகள் பல குறுக்கிட்டபோதும் கோபம் கொள்ளா திருந்தார். இந்தத் தவமுயற்சியின் முடிவில் அவர் உண்பதற்குச் சிறிது உணவு தயாரித்தார். ஒரு பிராமணனின் உருவத்தில் வந்த இந்திரன் அவரிடம் பிச்சை கேட்டான். விசுவாமித்திரர் தன்னிடமிருந்ததைப் பிச்சையாகக் கொடுத்துவிட்டார். மிச்சம் ஏதும் இல்லாமற்போனதால் அவர் உண்ணாதிருக்க வேண்டிய தாயிற்று. மௌனவிரதம் மேற்கொண்டிருந்ததால் பிராமணனைப் பார்த்து அவர் எதுவும் சொல்லவில்லை. அவர் தொடர்ந்து மூச்சை அடக்கிக் கொண்டிருந்ததால் தலையிலிருந்து புகை வெளிப் பட்டது. இதனால் மூவுலகங்களும் பெருந்துன்பத்துக்கும் துயரத்துக்கும் உள்ளாயின. அப்போது தேவர்களும் ரிஷிகளும் பிறரும் பிரம்மாவை நோக்கிச் சென்னார்கள்: ''மாமுனிவர் விசுவாமித்திரரைப் பல்வேறு வழிகளிலும் மயக்கியும் ஆத்திர மூட்டியும் பார்த்தாயிற்று. ஆனாலும் அவர் தன் புனிதப் பயணத்தில் முன்னேறிக் கொண்டே இருக்கிறார். அவரது விருப்பம் ஈடேறவில்லையென்றால் மூவுலகங்களையும் தவவலிமையால் அழித்துவிடுவார். பிரபஞ்சத்தின் எல்லாப் பகுதிகளும் குழம்பியுள்ளன, எங்கும் வெளிச்சம் இல்லை; எல்லாப் பெருங்கடல்களும் கொந்தளிக்கின்றன, மலைகள் ஆடுகின்றன, புவி அதிர்கிறது, காற்று தாறுமாறாக வீசுகிறது.

ஓ பிரம்மா, மனிதகுலம் நாத்திகத்துக்கு மாறிவிடாதென்று எம்மால் உறுதியளிக்க முடியாது... தீயுருவம் பூண்டுள்ள உன்னத மாமுனிவர் (அனைத்தையும்) அழித்துவிடத் தீர்மானிப்பதற்குள் அவரைச் சாந்தப்படுத்துக.'' பிறகு பிரம்மனின் தலைமையில் தேவர்கள் கூடி விசுவாமித்திரரை வேண்டிக்கொண்டார்கள்:

''பிராமணிய ரிஷியே, நீர் வாழ்க! உம் தவத்தினால் யாம் அகமகிழ்ந்தோம். கௌசிகரே, நீர் கடுந்தவத்தின் வாயிலாக பிராமணத்தன்மை அடைந்துவிட்டீர். ஓ பிராமணரே, மாருதர் களுடன் கூடி நான் உமக்கு நீண்ட ஆயுள் வழங்குகிறேன். உமக்கு சகலபேறும் உண்டாகட்டும். எங்கு விரும்பினாலும் புறப்பட்டுச் செல்க'' மகிழ்ந்துபோன மாமுனிவர் தேவர்களைப் பணிந்து வணங்கிச் சொன்னார்: ''நான் பிராமணியத் தன்மையும் நீண்ட ஆயுளும் அடைந்துள்ளேன் என்றால் ஓங்காரமும் வசத்காரமும் வேதங்களும் என்னை அவ்வாறு ஏற்றுக் கொள்ளட்டும். பிரம்மா வின் புதல்வரும், சத்திர வேதமும், பிரம்மவேதமும் (சத்திரியருக் கும் பிராமணருக்கும் உரிய கலைகளின் அறிவு) கற்றுத் தேர்ந்தவருமான வசிஷ்டர் என்னை அவ்வாறு விளிக்கட்டும்!'' தேவர்களால் சினந்தணிக்கப் பெற்ற வசிஷ்டர் அவ்வாறே விசுவாமித்திரரிடம் சமாதானமாகி, ஒரு பிராமண ரிஷிகளுக்குரிய எல்லாச் சிறப்புகளையும் அடைய அவருக்குள்ள உரிமையை ஒப்புக்கொண்டார்..... விசுவாமித்திரரும் பிராமண பதம் அடைந்துவிட்ட நிலையில் வசிஷ்டருக்கு மரியாதை செலுத்தினார்.''

இரண்டாவது நிகழ்ச்சி பிராமணர்களைச் சத்திரியர்கள் வதம் செய்தது தொடர்பானது. மகாபாரதத்தின் ஆதிபர்வத்தில் இந்தக் கதை சொல்லப்பட்டுள்ளது. அதிலிருந்து பின்வருவது எடுத்துத் தரப்படுகிறது:

''கிருத்வீரியன் என்றொரு மன்னன் இருந்தான். இவனுக்குப் புரோகிதர்களாகப் பணிபுரிந்தவர்களும் வேதங் களைக் கற்றுத் தேர்ந்தவர்களுமான பிருகுக்கள் இவனது தாராள குணத்தினால் ஏராளமாய்த் தானியங்களும் பணமும் பெற்று நிறைந்திருக்கிறார்கள். அவன் விண்ணுலகுக்குச் சென்றபின் அவனுடைய வாரிசுகளிடம் பணமில்லை. அவர்கள் பிருகு களிடம் பிச்சை கேட்டுச் சென்றார்கள். பிருகுக்களின் செல்வச் செழிப்பை அவர்கள் நன்கறிவார்கள். பிருகுக்களில் சிலர் தங்கள் பணத்தைப் பூமிக்கடியில் புதைத்து வைத்திருந்தார்கள். வேறு

சிலர் சத்திரியர்களுக்கு அஞ்சி பிராமணர்களுக்கு வாரி வழங்கினார்கள். மற்றவர்களோ சத்திரியர்களுக்கு வேண்டியதை எல்லாம் அள்ளிக் கொடுத்தார்கள். என்றாலும், சத்திரியர்களில் ஒருவர் தரையைத் தோண்டும்போது ஒரு பிருகுவின் வீட்டில் கொஞ்சம் பணம் புதைத்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்தார். சத்திரியர்கள் ஒன்று கூடி, இந்தப்புதையலைக் கண்ணுற்று, ஆத்திரத்தில் பிருகுக்கள் அனைவரையும் கொன்றுவிட்டார்கள். பிருகுக்கள் மீது கொண்ட கடும்வெறுப்பினால் கருவிலிருந்த குழந்தைகளைக்கூட அவர்கள் விட்டுவைக்கவில்லை. என்றாலும் கணவரை இழந்து கைம்பெண்கள் ஆனவர்கள் இமயமலைக்கு ஓடிவிட்டார்கள். அவர்களில் ஒருத்தி இன்னும் பிறவாத தன் குழந்தையைத் தொடையில் மறைத்து வைத்திருந்தாள். இந்தச் செய்தியை ஒரு பிராமண ஆள்காட்டியிடமிருந்து தெரிந்து கொண்ட சத்திரியர்கள் அக்குழந்தையைக் கொல்லமுற்பட்டார்கள். ஆனால், அது தாயின் தொடையிலிருந்து பெரும் பிரகாசத்துடன் வெளிவந்து, தன்னை வதைக்க முற்பட்டவர்களைக் குருடாக்கிவிட்டது. இவ்விதம் விழியிழந்தவர்கள் திகைத்துப்போய் கொஞ்ச காலம் மலைகளில் சுற்றித் திரிந்தபின், குழந்தையின் தாயிடம் தங்கள் பார்வையை மீட்டுத் தரும்படி கெஞ்சி மன்றாடினார்கள். ஆனால் அவள் அவர்களைத் தன் அற்புதக்குழந்தை அபூர்வனிடம் அனுப்பிவைத்தாள். வேத வியாசத்துடன் கூட வேதம் முழுவதும் அந்தச் சிறுவனுள் நுழைந்திருந்தது. (வதம் செய்யப்பட்ட உறவினர்கள் வேண்டிக் கொண்டபடி) அவர்களின் கண்பார்வையைப் பறித்தவன் என்ற முறையிலும், அவனால் மட்டுமே அதை மீட்டுக் கொடுக்க முடியும் என்ற முறையிலும் அவர்கள் இவ்வாறு அவனிடம் அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவன் அவர்களின் கண் பார்வையை மீட்டுக்கொடுத்தான். என்றாலும் பிருகுக்கள் வதம் செய்யப்பட்டதற்குப் பழிக்குப் பழி வாங்குவதற்காக அபூர்வன் உயிர்வாழ்வன அனைத்தையும் அழிக்க முற்பட்டான், இதற்காகத் தவம் செய்யலானான். இதனால் தேவர்களும் அசுரர்களும் மனிதர்களும் அச்சமுற்றார்கள். ஆனால் அவனுடைய மூதாதையர்களே (பித்ருக்கள்) காட்சி தந்து, சத்திரியர்களைப் பழிக்குப்பழி வாங்கும் விருப்பமேதும் தங்களுக்கு இல்லையென்று கூறி அவனை அவனது நோக்கத்திலிருந்து மாற்ற முயன்றனர்: ''இறைப்பற்று மிக்க பிருகுக்கள் கொலைகார சத்திரியர்களால் செய்யப்பட்ட படுகொலையை அலட்சியம் செய்தது பலவீனத்தால் அன்று. நாங்கள் வயோதிகத்தினால் தொல்லையுற்ற

போது, அவர்களால் வதம் செய்யப்படுவதை நாங்களே விரும்பினோம். ஒரு பிருகுவின் வீட்டில் யாரோ புதைத்துவைத்த பணமானது, சத்திரியர்களுக்கு ஆத்திரமூட்ட விரும்பியவர்களால் வெறுப்பைக் கிளறி விடுவதற்கென்றே அங்கு வைக்கப்பட்டது. ஏனென்றால் மோட்சத்தை நாடிக் கொண்டிருந்த நாங்கள் பணத்தை வைத்து என்ன செய்யப் போகிறோம்? நாங்கள் தற்கொலைக்குற்றம் செய்ய விரும்பாததால் இந்த உபாயத்தைக் கண்டுபிடித்தோம்'' என்றும் அவர்கள் கூறினார்கள். அபூர்வன் தன் கோபத்தை அடக்கிக் கொள்ள வேண்டும், அவன் செய்ய முற்பட்டிருக்கும் பாவத்தைச் செய்யாதிருக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டிமுடித்தார்கள்: ''சத்திரியர்களை அழிக்க வேண்டாம், மகனே, ஏழு உலகங்களையும் அழிக்க வேண்டாம். தவ வலிமையின் ஆற்றலை அழித்துவிடக்கூடிய உன் ஆத்திரத்தை அடக்கிக்கொள்.'' ஆயினும் அபூர்வன் தன் அச்சுறுத்தலை செயல்படுத்தாமல் விடமுடியாது என்கிறான். என் ஆத்திரத்தை வேறு ஏதேனும் ஒரு பொருளின்மீது தீர்த்துக் கொள்ளாவிட்டால் என்னையே விழுங்கிவிடும் என்கிறான். மூதாதையர் பரிந்துரைத்த வாறு கருணைகாட்டுவதற்கு எதிராக நீதியையும் உசிதத்தையும் கடமையையும் ஆதாரமாகக் காட்டி அவன் வாதிடுகிறான். ஆயினும் பித்ருக்கள் அவனது கோபத்தீயைக் கடலில் வீசும்படி எடுத்துச்சொல்லி இணங்க வைக்கிறார்கள். கடலில், அது, நீர்ப்பூதத்தைத் தாக்கப் பயன்படும்; இவ்விதம் அவனது அச்சுறுத்தல் நிறைவேறும் என்று அவர்கள் எடுத்துச் சொல்கிறார்கள்.''

மூன்றாவது நிகழ்ச்சி சத்திரியர்களைப் பிராமணர்கள் வதம் செய்தது தொடர்பானதாகும். மகாபாரதத்தில் ஆங்காங்கே பல இடங்களில் இந்தக் கதை சொல்லப்படுகிறது.

''வனப்பும் வலிமையும் பொருந்திய ஆயிரங் கைகளுடைய கார்த்தவீரியார்ச்சுனன் இந்த உலகம் முழு வதற்கும் நாதனாக மகிஷ்மதியில் வாழ்ந்து வந்தான். கேள்விக் கிடமில்லாத வீரம் பொருந்திய இந்த மாமன்னன் பெருங்கடல் களும் கஷ்டங் களும் அடங்கிய ஆழிசூழ் உலகு முழுவதன் மீதும் ஆட்சி புரிந்தான். அவன் தத்ரேய முனிவரிடமிருந்து வரங்கள் பெற்றான். உலகம் முழுவதையும் வெல்வதற்கு அவன் போருக்குச் செல்லும்போதெல்லாம் ஆயிரம் கைகளும், உலகை நீதிதவறாமல் ஆளும் ஆற்றலும், வழிதவறிப் போகும்போது நல்லோரிடமிருந்து அறிவுரை கிடைக்கும் என்ற உறுதிமொழி

யும் வரங்களால் வாய்த்தன. பிறகு சுடர்விடும் கதிரவனைப் போல் புகழார்ந்த தேரில் ஏறி, வல்லமையின்போதை தலைக்கேற அவன் கூவினான்: ‘ஆற்றலிலும் துணிவிலும் புகழிலும் வீரத்திலும் தீரத்திலும் ஊக்கத்திலும் எனக்கு நிகர் யார்?’ பேச்சின் முடிவில் வானிலிருந்து ஓர் அசரீரிக் குரல் அவனை விளித்தது: ‘அட முட்டாளே, சத்திரியனைக் காட்டிலும் பிராமணன் மேலானவன் என்பது உனக்குத் தெரியாது. பிராமணனின் உதவி யோடுதான் சத்திரியன் தன் குடிகளை ஆள்கிறான்.’ அர்ச்சுனன் விடையிறுக்கிறான்: ‘நான் விரும்பினால் உயிர்வாழ்வனவற்றைப் படைக்கவும், வெறுப்புற்றால் அவற்றை அழிக்கவும் முடியும். சொல், செயல், சிந்தனையில் எந்தப் பிராமணனும் எனக்கு மேலானவன் இல்லை. ‘பிராமணர்கள் மேல்’ என்பது முதல் கருத்து, ‘சத்திரியர்கள் மேல்’ என்பது இரண்டாம் கருத்து. இந்த இரு கருத்துகளையுமே அவற்றிற்குரிய ஆதாரங்களோடு நீ சொல்லி யிருக்கிறாய். ஆனால் (அழுத்தம் என்ற அம்சத்தில்) அவற்றிற் கிடையே வேறுபாடு உள்ளது. பிராமணர்கள் சத்திரியர்களைச் சார்ந்திருக்கிறார்கள். சத்திரியர்களைப் பிராமணர்கள் அடிப்ப தில்லை, பிராமணர்கள் சத்திரியர்களுக்குப் பணிவிடை செய்யக் காத்திருக்கிருக்கிறார்கள். வேதங்கள் அவர்களுக்கு ஒரு பாசாங்கு தான். மக்களைப் பாதுகாக்க வேண்டிய நீதி சத்திரியர்களிடம் குடிகொண்டுள்ளது. சத்திரியர்களிடமிருந்துதான் பிராமணர்கள் சீவனம் பெறுகிறார்கள். பிராமணர்கள் எப்படி மேலானவர்களாய் இருக்கமுடியும்? எல்லாப்பிறவிகளிலும் தலையானவர்களாகிய பிராமணர்களை, பிச்சையெடுத்து வாழ்கிறவர்களும் தங்களைப் பற்றி உயர்வாகக் கருதிக்கொள்பவர்களுமான அந்தப் பிராமணர்களை, நான் எப்போதுமே எனக்கு அடங்கியவர்களாக வைத்துள்ளேன். ஏனென்றால் காயத்ரி என்ற பெண்தான் வானுலகில் உண்மை பேசினாள். அடங்காப்பிடாரிகளான பிராமணர்களை யெல்லாம் தோலாடை உடுக்கச் செய்து அடக்கிவைப்பேன். மூவுலகில் எவரும், அவர் தேவரானாலும் மனிதரானாலும் என்னை என் அரசஅதிகாரத்திலிருந்து வீழ்த்த முடியாது. ஆகவே நான் எந்தப் பிராமணனுக்கும் மேலானவன். இப்போது பிராமணர்களின் கை ஓங்கியிருக்கிற உலகத்தைச் சத்திரியர்களின் கை ஓங்கியிருக்கிற உலகமாக மாற்றிவிடுவேன். ஏனென்றால் போரில் என் வலிமைக்கு எதிர்நிற்க எவனுக்கும் துணிவில்லை.’ அர்ச்சுனன் இப்படிப் பேசக்கேட்டு, இரவில் உலாவும் பெண் அச்சமுற்றாள். அப்போது காற்றில் அலைந்து கொண்டிருந்த வாயுபகவான் அர்ச்சுனனைப் பார்த்துச் சொன்னான்: ‘இந்தப் பாவச் சிந்தனையை விட்டுவிடு.

பிராமணர்களைப் பணிந்து வணங்கு. நீ அவர்களுக்குக் கேடு செய்தால் உனது இராச்சியம் குழப்பத்திற் குள்ளாகும். அவர்கள் உன்னை அடக்குவார்கள். வலிமை மிக்கவர்களான அந்த மனிதர்கள் உன்னைப் பணியவைத்து உன் நாட்டிலிருந்தே வெளியே தள்ளிவிடுவார்கள்.' அரசன் அவனைக் கேட்டான்: 'யார் நீ?' வாயு விடையிறுத்தான்: 'நான்தான் வாயு, தேவர்களின் தூதன், உனக்கு எது நன்மை என்று சொல்ல வந்துள்ளேன்.' மறுத்துப் பேசினான் அர்ச்சுனன் 'ஓ, இன்று நீ பிராமணர்களிடம் ஆழ்ந்த பயபக்தியுடன் பேசுகிறாய். ஆனால் பிராமணனும் உலகில் பிறந்த வேறெந்தப் பிறவியையும் போலத்தான் என்று சொல்கிறேன்!.''

இந்த அரசனுக்கு ஜமதக்கனி என்ற பிராமண முனிவரின் மகனாகிய பரசுராமனுடன் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலின் வரலாறு பின்வருமாறு:

''காதி என்றொரு மன்னன் கன்யகுப்ஜாவில் இருந்து வந்தான். அவனுக்குச் சத்தியவதி என்றொரு மகள் இருந்தாள். இந்த இளவரசி இருஷிகன் என்ற ரிஷிக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டாள். இவர்களுக்கு ஜமதக்னி பிறந்தான். ஜம தக்னிக்கும் அவன் மனைவி ரேணுகைக்கும் ஐந்து மகன்கள், இவர்களில் மிகவும் இளையவன் வலிமைக்கும் ஆற்றலுக்கும் புகழ்பெற்ற பரசுராமன் ஆவான். தந்தையின் கட்டளைப்படி அவன்தன் தாயைக்கொன்றான். (பாவகரமான ஆசையில் வீழ்ந்து இவள் தன் முந்தைய பத்தினித் தன்மையிலிருந்து வீழ்ச்சியுற் றவள்) முன்னதாக மூத்த மகன்கள் நால்வரும் இவ்விதம் தாயைக் கொல்ல மறுத்துவிட்டார்கள். இதனால் தந்தையின் சாபத்துக்கு ஆளாகிப் பகுத்தறிவைப் பறிகொடுத்துவிட்டார்கள். என்றாலும் பரசுராமனின் விருப்பத்துக்கிணங்கி அவனுடைய தந்தை அவனுடைய தாய்க்கு மீண்டும் உயிர்கொடுத்தார், அவனுடைய சகோரர்களுக்கும் மீண்டும் பகுத்தறிவு கொடுத்தார். பரசு ராமனையும் கொலைக்குற்றத் திலிருந்து அறவே விடுவித்தார். யாராலும் வெல்லமுடியாதவனாய் இருப்பதற்கும் நீண்ட ஆயுளுக்கும் தந்தையிடமிருந்து அவன் வரம்பெற்றான். அவனது வரலாறு இப்போது மன்னன் அர்ச்சுனன் (அல்லது கார்த்த வீரியன்) கதையுடன் தொடர்பு படுத்தப்படுகிறது. அர்ச்சுனன் ஜமதக்னியின் ஆசிரமத்துக்கு வர நேரிட்டது. அவருடைய மனைவி அவனை மரியாதையுடன் வரவேற்றான். ஆனால் அவன் முனிவரின் யாகப்பசுவின் கன்றுக்குட்டியைக் கவர்ந்து

சென்றதாலும், அவருடைய உயர்ந்த மரங்களை வெட்டிச் சாய்த்ததாலும் இந்த மரியாதையை இழந்துவிட்டான். இந்த வன்முறை குறித்து அறிந்த பரசுராமன் கோபம் நிறைந்தவனாய் அர்ச்சுனனைத் தாக்கி அவனுடைய ஆயிரம் கைகளையும் வெட்டி அவனைக் கொன்று போட்டான். இதற்குப் பதிலாக அர்ச்சுனனின் புதல்வர்கள் பரசுராமர் இல்லாத நேரத்தில் சாந்தமுனிவர் ஜமதக்னியைக் கொலை செய்தார்கள்.''

பரசுராமன் திரும்பி வந்ததும் தன் தந்தையின் இறுதிச் சடங்குகளை முடித்தபிறகு சத்திரிய இனம் முழுவதையும் அழிக்க சபதமேற்றான். முதலில் அர்ச்சுனனின் புதல்வர்களையும் அவர்களின் கூட்டத்தாரையும் கொன்று, தன் அச்சுறுத்தலை செயலாக்கினான். அவன் இருபத்தொரு தடவை சத்திரியர்கள் அனைவரையும் புவியிலிருந்து துடைத்தெறிந்தான்; சாமந்த பஞ்சகத்தில் ஐந்து குருதித் தடாகங்களையும் உருவாக்கினான். இவற்றில் பிருகுக்களின் ஆவிகளை சாந்தப்படுத்தினான், (தன் பாட்டனார்) இறிகுறிகளை நேருக்கு நேர் கண்டான். அவர் பரசுராமனைப் பார்த்து பேசினார். இந்திரனுக்கு யாகம் செய்து அவனைப் பரசுராமன் மகிழ்வித்தான். யாகம் செய்த புரோகிதர் களுக்குப் புவியை எடுத்துக் கொடுத்தான். மேலும் வலிமைமிக்க கசியபருக்குப் பத்துபாகம் நீளமும் ஒன்பதுபாகம் உயரமும் கொண்ட தங்கப் பலிபீடத்தை வழங்கினான். அவனது அனுமதி பெற்று இதைப் பிராமணர்கள் தங்களிடையே பிரித்துக் கொண்டார்கள். இதிலிருந்துதான் கந்தவாவனர்கள் என்ற பெயர் வந்தது. புவியைக் கசியபருக்குக் கொடுத்துவிட்டதால் பரசு ராமனே மகேந்திர மலையில் இருந்துவந்தான். அவனுக்கும் சத்திரியர்களுக்கும் பகைமை வந்ததும், எல்லையில்லா வலிமை யுடைய பரசுராமன் உலகை வென்றதும் இப்படித்தான்.''

பரசுராமனால் கொல்லப்பட்ட சத்திரியர்கள் பற்றி மகா பாரதத்தில் துரோண பர்வத்தில் சொல்லப்பட்டுள்ளது. காஷ்மீரர்கள், தரதர்கள், குந்திரிகள், சூத்திரகர்கள், மாளவர்கள், அங்கர்கள், வங்கர்கள், கலிங்கர்கள், விதேகர்கள், தம்பிராலிப்தாக்கள், மார்த்திக வாதாக்கள், சிவிகள், ஏனைய ராஜன்யர்கள் என்று இவர்கள் பல்வேறு மாகாணங்களையும் சேர்ந்தவர்கள்.

சத்திரிய இனம் எவ்வாறு மீண்டு வந்தது என்ற செய்தியும் சத்திரியர்களைப் பிராமணர்கள் அழித்தொழித்த இந்தக் கதையின் பகுதியாகத் தரப்பட்டுள்ளது. அது பின்வருமாறு:

‘‘இருபத்தொரு தடவை சத்திரியர்கள் அனைவரையும் புவியிலிருந்து துடைத்தெறிந்த ஜமதக்கினியின் மகன் மலைகளுக் கெல்லாம் தலைசிறந்த மலையாகிய மகேந்திர மலையில் தவம் செய்தான். அவன் சத்திரியர்களை உலகிலிருந்து ஒழித்துக் கட்டியபின், அவர்களின் விதவைகள் பிராமணர்களிடம் வந்து குழந்தை வேண்டி னார்கள். சமயப்பற்று மிக்க பிர்ாமணர்கள் எவ்விதச் சிற்றின்ப ஆசைக்கும் இடம்கொடாதவர்கள். அவர்கள் உரிய பருவகாலங்களில் இந்தப் பெண்களுடன் கூடினார்கள். இதனால் கருவுற்ற அப்பெண்கள் வீரசத்திரிய சிறுவர்களையும் சிறுமிகளையும் பெற்று ஆளாக்கி சத்திரியகுலம் தொடரச் செய்தார்கள். இப்படித்தான் சத்திரியப் பெண் களுக்குப் பிராமணர்கள் ஒழுக்கந்தவறாமல் சத்திரிய இனத்தைப் பெற்றுக் கொடுத்தார்கள். இப்படித்தான் சத்திரிய இனம் பல்கிப் பெருகி நெடுங்காலம் வாழ்ந்தது அதிலிருந்து பிராமணர்களுக்குக் கீழான நான்கு சாதிகள் வந்தன.

□□□

## இயல் 19

# சாதியின் சாபக்கேடு

முதல் கட்டுரையில்★ நான் கூறியிருப்பதுபோல், சாதி என்பது ஒருமை எண்ணில் இருக்க முடியாது. அது பன்மை எண்ணில்தான் இருக்கமுடியும். சாதி என்ற ஒன்று மெய்யானதாக இருக்க வேண்டுமென்றால், ஒரு குழுவைச் சிதைத்துக் கலைப்பதன் வாயிலாகத்தான் இருக்கமுடியும். சாதியின் மேதைமை, பிரிப்பதும் சிதைப்பதும்தான். சாதியின் சாபக்கேடும் அதுதான். ஆகவே சாதி ஏற்படுத்தியுள்ள சிதைவைச் சுட்டி, இந்த சாபக்கேடு எவ்வளவு விரிந்து பரந்த ஒன்று என்பதை எடுத்துக்காட்டியாக வேண்டும். ஒவ்வொரு சாதியாக எடுத்துக்கொண்டு அது எவ்வாறு சிதைவுற்றுச் செல்கிறது என்பதைக் காட்டமுடியாது. ஒரே ஒரு சாதியின் சாதிவரலாற்றை முன்வைப்பதோடு நின்று கொள்ள வேண்டியதுதான். சாதியின் மூலவர்களும் காவலர்களுமான பிராமணர்களை எடுத்துக்கொண்டு, அவர்களையே கூட, நான் சொல்கிற சாதியின் சாபக்கேடு எவ்வாறு ஆட்டிப்படைக்கிறது என்பதைக் காட்டலாம். இந்தியப் பிராமணர்கள் இரு வேறு வகைப்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். ஒரு பிரிவு திராவிடர்கள் என்றும், மறுபிரிவு கவுடர்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

ஆனால், திராவிடர்களோ, கவுடர்களோ ஒருபடித்தான ஒரே குழுவினர் என்று அனுமானம் செய்துவிடக்கூடாது. அவர்கள் ஏராளமான குழுக்களாகப் பிரிந்துள்ளார்கள். பிரிவுகளும் உட்பிரிவுகளுமான இவற்றின் உள்ளபடியான பட்டியல்களைக் கண்ணெதிரில் வைத்துக் கொள்ளாவிட்டால், இவற்றின் எண்ணிக்கையைக் கற்பனையிலும் எண்ணிப் பார்க்க முடியாது. கீழே, வகைப்பிரிவின் ஒவ்வோர் உட்பிரிவும், மேலும் பிரிவதால் வரும் சாதிகள் மற்றும் உட்சாதிகளைப் பட்டியலிட்டுச் சொல்ல முயல்கிறோம்.

---

★ 'இந்தியாவில் சாதிகள்' என்ற கட்டுரையைக் குறிப்பதாகும் இது. இந்தத் தொடரின் முதல் தொகுதியில் அது வெளியிடப்பட்டது.

- பதிப்பாசிரியர்.

# I

## திராவிட பிராமணர்கள்

திராவிடர் என்னும் வகைப்பிரிவு ஐந்து உட்பிரிவுகளைக் கொண்டது. இந்த ஐந்தும் சேர்ந்து பஞ்ச திராவிடர் எனப்படும். இவ்வைந்து உட்பிரிவுகளின் பெயர் வருமாறு:

(1) மகாராஷ்டிரர்
(2) ஆந்திரர்
(3) (முறைப்படியான) திராவிடர்
(4) கர்னாடகர்
(5) குர்ஜரர்

அடுத்து, பஞ்ச திராவிடர்களின் இந்த உட்பிரிவுகள் ஒவ்வொன்றும் சிதைவுற்று வரும் சாதிகளையும் உட்சாதிகளையும் பார்ப்போம்.

### 1. மகாராஷ்டிர பிராமணர்

மகாராஷ்டிர பிராமணர்களிடையே பின்வரும் சாதிகளும் உட்சாதிகளும் உள்ளன:

*(1) தேஷாஸ்தர்கள், (2) கொங்கணாஸ்தர்கள், (3)கறாதர்கள், (4)கன்வர்கள், (5)மத்யாந்தினர்கள், (6)பாத்யர்கள், (7)தேவருகர்கள், (8) பலாஷர்கள், (9) கிர்வந்தர்கள், (10) திர்கூலர்கள், (11) ஜாவலர்கள், (12)அபிரர்கள், (13) சவாஷர்கள், (14)கஸ்தர்கள், (15)குந்த கோலகர்கள் (16)ரந்த கோலகர்கள் (17) பிராமண ஜாய்கள், (18)சோப்பரர்கள், (19)கிஷ்டிகள், (20) உசைனிக்கள், (21)கலங்கிகள், (22) மைத்ராயனியர்கள், (23) வரதி-மத்யாந்தினர்-யஜுர்வேதி, (24)வரதி-மத்யாந்தினர்-ரிக்வேதி, (25)ஜேடுகள்*

ஷென்விக்கள் மேலும் பிரிந்து, பின்வரும் ஒன்பது உட்சாதிகள் வருகின்றன.

*(26)நர்வாங்கர், (27)கிலோஸ்கர், (28)பர்தேஷ்கர், (29)குதல்தேஷ்கர், (30)பெத்னேகர், (31)பாலவிலேகர்,*

## 2. ஆந்திர பிராமணர்

ஆந்திர பிராமணர்களின் சாதிகள், உட்சாதிகளின் பட்டியல் வருமாறு :

(1) வர்ணசலு, (2) காமருக்குபி, (3) கரணகமுலு, (4) மத்யாந்தினர்கள், (5) தைலங்கர்கள், (6) முரகனாடுகள், (7) ஆராத்யர்கள், (8)யஜ்னவல்க்யர்கள், (9) கசரனாடுகள், (10)வேலாண்டுகள், (11)வெங்கினாடுகள், (12) வேதினாடுகள், (13)சாமவேதிகள், (14)ராமனுஜிகள், (15)மாதவச்சாரிகள், (16) நியோகிகள்.

## 3. தமிழ் பிராமணர்

தமிழ் பிராமணர்களில் பின்வரும் சாதிகள் உள்ளன:

(1) ரிக்வேதிகள், (2)கிருஷ்ண யஜுர்வேதிகள், (3)சுக்ல யஜுர்வேதிகள்-மத்யாந்தினார்கள் , (4) சுக்ல யஜுர்வேதிகள்-கன்வார்கள் , (5) சாமவேதிகள், (6) அதர்வர்கள், (7) வைணவர்கள், (8) வீர வைணவர்கள், (9) ஸ்ரீ-வைணவர்கள், (10) பாகவதர்கள், ( 11) ஷக்தர்கள்.

## 4. கர்னாடக பிராமணர்

இவர்களில் பின்வரும் சாதிகள் உள்ளன:

(1) ரிக் வேதிகள், (2) கிருஷ்ண யஜுர்வேதிகள், (3)சுக்ல யஜுர்வேதிகள்-மத்யாந்தினர்கள், (4)சுக்ல யஜுர்வேதிகள்-கன்வர்கள், (5) சாம வேதிகள், (6) கூமே பிராமணர்கள், (7) நாகர் பிராமணர்கள்.

## 5. குர்ஜர பிராமணர்

இவர்களில் பின்வரும் சாதிகள் உள்ளன.

I. அந்திச்ய பிராமணர்கள். இவர்கள் பிரிந்து வருகிற உட்சாதிகளாவன:

(1) சித்தபுர அந்திச்யா, (2)சிகோர் அந்திச்யா, (3) தோல்க்கிய

அந்தியச்யா, (4)குன்பிகோர், (5)இனோச்சிகோர், (6) தார்ஜிகோர், (7) கிரந்த்ரபகோர், (8)கோலிகோர், (9)மார்வாடி அந்திச்யா, (10) கச்சி அந்திச்யா, (11) வக்திய அந்திச்யா.

II. நாகர் பிராமணர்கள் இவர்களின் உட்சாதிகள் பின்வருமாறு:

(12) வடநாகர் பிராமணர்கள், (13) விஷால்நாகர், பிராமணர்கள், (14) சத்தோத்ர பிராமணர்கள், (15) பிரஷ்னோராக்கள், (16) கிருஷ்ணோ ராக்கள், (17) சித்ரோதர்கள், (18)பரதர்கள்.

நாகர் பிராமணர்களில் மேலும் மூன்று பிரிவுகளும் உள்ளன. அவையாவன.

(19) குஜராத்தி நாகர்கள், (20) சோராதி நாகர்கள், (21) ஏனைய நகரங்களைச் சேர்ந்தவர்கள்.

III. கிர்னார் பிராமணர்கள். இவர்கள் பிரிந்துவரும் சாதிகளாவன:

(22) ஜுனகத்ய கிர்னார்கள், (23)சோரவத கிர்னார்கள், (24) அஜக்ஜுயர்கள்

IV. மேவாத பிராமணர்கள். இவர்கள் பின்வரும் சாதிகளாகப் பிரிந்துள்ளார்கள்:

(25) பாத மேவாதர்கள், (26) திரிவாதி மேவாதர்கள், (27) சரோஷி மேவாதர்கள்.

V. தேசவாலா பிராமணர்கள். இவர்களில் ஓர் உட்சாதி உண்டு. அதாவது:

(28) தேசவாலா பிராமண சூர்த்தி

VI. ராயகாவாலா பிராமணர்கள். இவர்களில் இரு உட்சாதிகள் உண்டு;

(29) நவாக்கள், (புதியவர்கள்), (30)மோத்தாக்கள் (பழையவர்கள்),

VII. கேத்வாலா பிராமணர்கள். இவர்களில் ஐந்து உட்சாதிகள் உண்டு:

(31) கேத்வால பஜாக்கள், (32) கேத்வால பிதாராக்கள், (33)கேத்வ பஜாக்கள், (34 ) கேத்வ பிதாராக்கள்

VIII. *மோதா பிராமணர்கள. இவர்கள் பதினொரு உட்சாதிகளாகப் பிரிந்து கிடக்கிறார்கள்:*

*(35) திரிவேதி மோதாக்கள், (36)சதுர்வேதி மோதாக்கள், (37) ஆகிஹன்ஸ் மோதாக்கள், (38) திரிபால் மோதாக்கள், (39) கிஜாதிய சன்வன மோதாக்கள், (40) ஏகாதஷ்த்ர மோதாக்கள், (41) தண்டுலோத்த மோதாக்கள், (42)உதஞ்சலிய மோதாக்கள், (43) ஜேதிமால் மோதாக்கள், (44) சதுர்வேதி தினோஜ மோதாக்கள், (45) தினோஜ மோதாக்கள்,*

IX. *ஸ்ரீமலி பிராமணர்கள். இவர்கள் பிரிந்து வரும் சாதிகளாவன:*

*(46) மார்வாடி ஸ்ரீமலி, (47)மேவாடி ஸ்ரீமலி, (48)கச்சி ஸ்ரீமலி, (67) கத்தியவாடி ஸ்ரீமலி, (68) குஜராத்தி ஸ்ரீமலி.*

*குஜராத்தி ஸ்ரீமலி மேலும் பிரிந்து உட்பிரிவுகளாவன:*

*(51) அகமதாபதி ஸ்ரீமலி, (52)சூரத்தி ஸ்ரீமலி, (53)கோகரி ஸ்ரீமலி, (54) கம்பாட்டி ஸ்ரீமலி. கம்பாட்டி ஸ்ரீமலி மறுபடியும் பிரிந்து வரும் உட்பிரிவுகளாவன:*

*(55) யஜுர்வேதி கம்பாட்டி ஸ்ரீமலி, (56)சாமவேதி கம்பாட்டி ஸ்ரீமலி.*

X. *சோவிஷா பிராமணர்கள். இவர்கள் இரு உட்சாதிகளாகப் பிரிகிறார்கள்:*

*(57) மோட்டா (பெரியவர்கள்), (58)லகானா (சிறியவர்கள்).*

XI. *சரஸ்வத பிராமணர்கள். இவர்கள் இரு உட்சாதிகளாகப் பிரிகிறார்கள்.*

*(59) சோரத்திய சரஸ்வதா, (60) சிந்தவ சரஸ்வதா.*

XII. குஜராத்தி பிராமணர்களிடையே உட்சாதிகள் வளர்ந்திராத சாதிகளின் பட்டியல் பின்வருமாறு:

*(61) சச்கோர பிராமணர்கள், (62)உதம்பர பிராமணர்கள், (63) நர்சிப்பார பிராமணர்கள், (64)வலத்ர பிராமணர்கள், (65)பங்கோரா பிராமணர்கள், (66) நந்தோத்ர பிராமணர்கள், (67) வயத பிராமணர்கள், (68) தமிழ் (அல்லது திராவிட) பிராமணர்கள், (69)ரோதவால பிராமணர்கள், (70)பத்மிவால பிராமணர்கள், (71)கோமதிவால பிராமணர்கள், (72) இத்தவால பிராமணர்கள், (73)மேதாத்வால பிராமணர்கள், (74)காயவால பிராமணர்கள், (75)காயவால பிராமணர்கள், (76) அ்கஸ்தியவால பிராமணர்கள், (77) பிரேத்தவால பிராமணர்கள், (78) உனேவால பிராமணர்கள், (79) ராகவால பிராமணர்கள், (80)கனோஜிய பிராமணர்கள், (81) சர்வாரிய பிராமணர்கள், (82)கணோலிய பிராமணர்கள், (83)கர்க்கேலிய பிராமணர்கள், (84)பர்வலியாய பிராமணர்கள், (85)சோரத்ரிய பிராமணர்கள், (86)பர்வலியாய பிராமணர்கள், (87)தங்கமதிய பிராமணர்கள், (88)சனோதிய பிராமணர்கள, (89)மோத்தல் பிராமணர்கள், (90)ஜாலோர பிராமணர்கள், (91)ராயபுல பிராமணர்கள், (92)கபில பிராமணர்கள், (93) அட்சயமங்கல பிராமணர்கள், (94)குக்லி பிராமணர்கள், (95)நப்பால பிராமணர்கள், (96)கனவால பிராமணர்கள், (97) வால்மீக பிராமணர்கள், (98)கலிங்க பிராமணர்கள், (99)தைலிங்க பிராமணர்கள், (100)பர்கவ பிராமணர்கள், (101)மாலவலி, (102)பந்துவின் பிராமணர்கள், (103) கதயத பிராமணர்கள், (104)மாரு பிராமணர்கள், (105)தகிம பிராமணர்கள், (106)சோவிச பிராமணர்கள், (107) ஜம்பு பிராமணர்கள், (108)மராத்த பிராமணர்கள், (109)தசிச்ச பிராமணர்கள், (110)லலத பிராமணர்கள், (111) வலுத பிராமணர்கள், (112) போர்ஷித பிராமணர்கள், (113)கோலவால பிராமணர்கள், (114)பிரயாகவால பிராமணர்கள், (115)நாயக்வால பிராமணர்கள், (116) உத்கல பிராமணர்கள், (117)பலிவால பிராமணர்கள், (118) மதுரா பிராமணர்கள், (119) மைதில பிராமணர்கள், (120)குலாப பிராமணர்கள், (121)பெதுவ பிராமணர்கள், (122)ரவாவல பிரா்மணர்கள், (123)தகாகர பிராமணர்கள், (124) கர்னாடி பிராமணர்கள், (125) தலஜிய பிராமணர்கள், (126) பரஷாரிய பிராமணர்கள், (127)அபிர பிராமணர்கள், (128)குந்து பிராமணர்கள், (129)ஹிரயாஜிய பிராம ணர்கள், (130) மஸ்தவ பிராமணர்கள், (131)ஸ்திடிஷ பிராமணர்கள், (132)பிரேதத்வால பிராமணர்கள், (133)ராம்புர பிராமணர்கள், (134) ஜீல பிராமணர்கள், (135)திலோத்ய பிராமணர்கள், (136)துர்மல பிராம ணர்கள், (137)கொத்வ பிராமணர்கள், (138)ஹனுஷுன பிராமணர்கள், (139)ஷெவாத*

பிராமணர்கள், (140) இத்ராக பிராமணர்கள், (141)பசுல தாஸ் பிராம ணர்கள், (142)மக்மர்ய பிராமணர்கள், (143)ரயதால பிராமணர்கள், (144) சபில பிராமணர்கள், (145) பரதாஸ் பிராமணர்கள், (146)புக்கனிய பிராமணர்கள், (147) கரோட பிராமணர்கள், (148) தபோரன பிராம ணர்கள்.

II

## கவுட பிராமணர்கள்

திராவிட பிராமணர்களைப் போலவே கவுட பிராமணர்கள் என்னும் வகைப்பிரிவும் ஐவேறு பிராமணக் குழுக்களால் ஆனது. இந்த ஐந்து குழுக்களும் பின்வருமாறு அறியப்படும்:

(1) சரஸ்வத பிராமணர்கள்,(2)கன்யாகுப்ஜ பிராமணர்கள், (3)கவுட பிராமணர்கள், (4) உத்கல பிராமணர்கள், (5)மைதில பிராம ணர்கள்.

பஞ்ச கவுடர்கள் எனப்படும் இந்த ஐந்து குழுக்கள் ஒவ்வொன் றின் உள்கட்டமைப்பையும் ஆராய்ந்து பார்த்தால், பஞ்ச திராவிடர்கள் எனும் வகைப்பிரிவைச் சேர்ந்த ஐந்து குழுக்கள் தொடர்பாகக் கண்ட அதே நிலைமையைக் காணலாம். பஞ்ச கவுடர்களுக்குள்ளான பிரிவுகளும் உட்பிரிவுகளும் பஞ்ச திராவிடர்களுக்குள்ளான பிரிவு களையும் உட்பிரிவுகளையும் காட்டிலும் குறைவா கூடுதலா என்பது தான் ஒரே கேள்வி. இதற்காக ஒவ்வொரு குழுவையும் தனித்தனியே எடுத்துக்கொள்வது நன்று.

## சரஸ்வத பிராமணர்கள்

சரஸ்வத பிராமணர்களை அவர்கள் வாழும் இடங்களின் அடிப்படையில் மூன்றாகப் பிரிக்கலாம்.

(1) பஞ்சாபைச் சேர்ந்த சரஸ்வதாக்கள், (2) காஷ்மீரைச் சேர்ந்த சரஸ்வதாக்கள், (3) சிந்துவைச் சேர்ந்த சரஸ்வதாக்கள்.

## 1. பஞ்சாப் சரஸ்வதாக்கள்

பஞ்சாபைச் சேர்ந்த சரஸ்வதாக்களில் மூன்று உட்பிரிவுகள் உண்டு.

(அ) லாகூர், அமிர்தசரஸ், பாட்டாலா, குர்தாஸ்பூர், ஜலந்தர், முல்தான், ஜாங், ஷாப்பூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சரஸ்வதாக்கள். மீண்டும் இவர்கள் உயர்சாதி, கீழ்ச்சாதி என்று பிரிக்கப்படுகிறார்கள்.

### உயர் சாதிகள்

(1)நவாலே, (2)சூனி, (3)ராவடே, (4)சரவாலியே, (5)பண்டிட், (6)திக்கே, (7) ஜிங்கன், (8) குமதியே, (9)ஜெட்லே, (10)மோஹ்லே அல்லது மோலே, (11)திக்கே-அந்தே, (12)ஜிங்கன்-பிங்கன், (13)ஜெட்லி-பெட்லி, (14) குமதியே - லுமதியே, (15)மோலே-போலே, (16)பாகே, (17)கபூரியே, (18)பதூரியே, (19)மலியே, (20) கலியே, (21)சண்டா, (22)பதக், (23)குரால், (24)பரத்வாஜ், (25)ஜோஷி, (26)ஷோரி, (27)திவாதி, (28)மருத், (29)தத்தா, (30)முஜால், (31)சிபார், (32)பாலி, (33) மொகனா, (34)லவா, (35) வைத்யா (36)பிராபகர், (37)ஷாமே-பொத்ரே, (38)போஜா-பொத்ரே, (39)சிங்கே-பொத்ரே, (40)வத்தே-பொத்ரே, (41) தனன்-பொத்ரே, (42)திராவடே, (43) கைந்தார், (44) தக்த் லலாடி, (45) ஷாமா தாசி, (46) சேத்பால் (அல்லது ஷேத்பால்), (47)புஷ்ராத், (48) பரத்வாஜி, (49)கத்பாலே, (50) கோட்கே, (51)புக்கார்னே.

### கீழ் வகுப்புகள்

(52)திடி, (53)ஸ்ரீதரா, (54)வினாயகா, (55)மஜ்ஜு, (56)கிந்தாரியே, (57)ஹரத், (58)பிராபகர், (59)வாசுதேவா, (60)பரஷரா, (61)மொகனா, (62)பாஞ்சன், (63) திவாரா, (64)கபலா, (65)பர்க்காரி, (66)சோதி, (67)கைஜார், (68)சங்கத், (69)பரத்வாஜி, (70)நாகே, (71)மக்காவர், (72)வஷிஷ்தா, (73) தங்கவல், (74) ஜலாப், (75)திரிபானே, (76) பரதே, (77)பன்சாலே, (78)கங்காஹர், (79)ஜொத்தாஷி, (80)ரிக்கி (அல்லது ரிஷி), (81)மந்தர், (82) பிராஹ்மி, (83) தேஜ்பால், (84)பால், (85) ருபால்,

(86) லக்கன்பால், (87) ரத்தன்பால், (88) ஷேத்பால், (89) பிந்தே, (90) தாமி, (91) சனான், (92) ரந்தேகா, (93) பூட்டா, (94) ரத்தி, (95) குந்தி, (96) ஹசாதிர், (97) புஞ்ச், (98) சந்தி, (99) பஹோராயே, (100) விராத், (101) கலந்த், (102) சுரண், (103) சுதன், (104) ஒஜே, (105) பரம்ம-சுகுல், (106) ஹரியே, (107) கஜேசு, (108) பனோட், (109) தினூனி, (110) ஜல்லி, (111) தோலே, (112) ஜலப், (113) சிச்சோட், (114) பாதே அல்லது பாண்டே, (115) மருத், (116) லலாதியே, (117) தோட்டே, (118) குசரித், (119) ராம்தால், (120) கபாலே, (121) மசோதரே, (122) ரத்னியே, (123) சந்தன், (124) சுராவன், (125) மந்தஹர், (126) மாதேரே, (127) லகார்ப்பர், (128) குந்த், (129) கர்தாம், (130) தண்டே, (131) சஹஜ்பால், (132) பாபி, (133) ரத்தி, (134) ஜெய்ட்கே, (135) தைத்ரியே, (136) பட்டாரே, (137) காலி, (138) ஜல்பாத், (139) மைத்ரா, (140) சங்காத்ரே, (141) லுத்ரா, (142) வியாசா, (143) பல்டு, (144) கிரார், (145) புஜே, (146) இசார், (147) லட்டா, (148) தாமி, (149) கலான், (150) மதார்கம்ப், (151) பெதேசர், (152) சல்வாகன், (153) தண்டே, (154) மாருத், (155) பட்டுரே, (156) ஜோத்தி, (157) சோயாரி, (158) தேஜ்பால், (159) குரல்பால், (160) கலஸ், (161) ஜலப், (162) தின்மானி, (163) தங்கனிவாத்தே, (164) ஜல்போட், (165) பட்டு, (166) ஜஸ்ராவா, (167) ஜெயச்சந்த், (168) சன்வால், (169) அக்னிஹோத்ரி, (170) அக்ரபாக்கா, (171) ருத்தாடே, (172) பாஜி, (173) குச்சி, (174) சைலி, (175) பாம்பி, (176) மேது, (177) மேதுகத், (178) யாம்யே, (179) சங்கார், (180) சங், (181) நெகார், (182) சக்பாலியே, (183) பிஜ்ராயே, (184) நரத், (185) குத்வால், (186) கோத்பால், (187) நாப், (188) நாத், (189) பரெஞ்செ, (190) கேத்தி, (191) அத்ரி, (192) சாவ்ஹே, (193) பிப்தே, (194) பண்டு, (195) மச்சு, (196) சுந்தர், (197) கராடகே, (198) சிப்பே, (199) சதி, (200) தல்லான், (201) கர்தாம், (202) ஜமான், (203) ரங்டே, (204) போக், (205) பாண்டே, (206) காண்டே, (207) பாந்தே, (208) காந்தே, (209) திண்டே, (210) தகலே, (211) டகலே, (212) லகத், (213) தத், (214) காயி, (215) லுத், (216) கந்தார், (217) மாஹே, (218) சைலி, (219) பாகி, (220) பாண்டே, (221) பிப்பார், (222) ஜத்தீ.

ஆ. கங்காதாவையும் அதை ஒட்டிய மலைநாட்டையும் சேர்ந்த சரஸ்வத பிராமணர்கள். இவர்களும் கூட உயர்வகுப்பு கீழ்வகுப்பு என்று பிரிக்கப்படுகிறார்கள்.

### உயர் சாதிகள்

(1)ஓஸ்டி, (2)பண்டிட் காஷ்மீரி, (3)சோத்ரி, (4)வெத்வே, (5)நாகா, (6)தீட்சித், (7)மிஸ்ரி காஷ்மீரி, (8)மதிஹாத்து, (9)பஞ்ச்கரண், (10)ரைனே, (11)குருது, (12) ஆச்சரியே.

### கீழ் வகுப்புகள்

(13) சித்து, (14)பன்யாலு, (15)தும்பு, (16)தேஹைடு, (17) ருக்கே, (18)பம்பார், (19)குத்ரே,(20)தியாபுடு,(21)மைத்தே, (22)புரோத் (புரோகித) ஜக்தோத்ரோத்தியே, (23)விஷ்த் புரோத், (24)பதே சரோஜ், (25)பதே கஜுரே,(26)பதே மகிதே, (27) கஜுரே, (28) சுத்வான், (29) பன்வால், (30) ரம்பே, (31) மங்ருதியே , (32) குர்வாத், (33) கல்வாத், (34)தங்மார், (35) சலிவாலே.

(இ) தத்தார்ப்பூர், ஹோசியார்ப்பூர் மற்றும் அண்டை யிலுள்ள நாட்டுப்புறத்தைச் சேர்ந்த சரஸ்வத பிராமணர்கள்.

இவர்களும் உயர்வகுப்பு, கீழ் வகுப்பு என்று பிரிக்கப்படுகிறார்கள்.

### I. உயர்சாதிகள்

(1) தோக்ரே, (2) சர்மாயி, (3) துபே, (4) லக்கன்பால், (5) பதே தொல்பால்வையா, (6)பதே கொஹாஸ்னியே, (7) பதே தாதியே, (8)பதே கிந்தாதியே, (9)கஜுரிவே.

### II. கீழ் வகுப்புகள்

(10) கபாஹாத்தியே, (11) பரதியால், (12) சப்ரோஹியே, (13)மகதே, (14)குதல்தியே, (15)சரத் , (16)தகடு, (17)வந்தாடே, (18)முச்லே, (19)சம்மோல், (20)தோசே, (21) பத்தோல், (22)ராஜோஹத், (23)தனிக், (24) பன்யால், (25)சிப்பே, (26)மதோட்டே, (27)மிசார், (28)சாக் கோத்தர், (29)ஜல்ரீயே, (30)லகத், (31)சேல், (32)பசூல், (33)பண்டிட், (34)சங்கியால், (35)லத், (36)சாந்த், (37)லாய், (38)கதோத்தரே, (39) சிர்னோல், (40) பத்லே, (41) ஸ்ரீதர், (42)பத்டு, (43) ஜுவல், (44)மைத்தே, (45) கக்லியே, (46) தக், (47) ஜோல், (48)பாதோ, (49) தந்திக், (50) ஜும்முத்தியார். (51) ஆல், (52) மிராட், (53) முகட்டி, (54) தல்சாலி, (55)பத்தோஹயே, (56) தியாஹயே, (57) பட்டாரே.

## 2. காஷ்மீர் சரஸ்வதாக்கள்

காஷ்மீர் சரஸ்வதாக்களில் இரு உட்பிரிவுகள் உள்ளன.

(அ) ஜம்மு, ஜஸ்ரோட்டா மற்றும் அண்டையில் உள்ள மலைநாட்டைச் சேர்ந்த சரஸ்வத பிராமணர்கள்.

இவர்கள் உயர்,நடு, கீழ் என்று மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்படுகிறார்கள்.

### I. உயர் சாதிகள்

(1) அங்காத்ரே, (2)தாப்பே, (3) துபே, (4)சப்போலியே பதே, (5)பதியால், (6)கேசர், (7)நாத், (8)கஜுரே புரஹோத், (9) ஜம்வால் பண்டிட், (10) வைத்யா, (11) லவா, (12) சிபார், (13) அலியே, (14) மோகன், (15) பம்பாவல்.

### II. நடுச் சாதிகள்

(16)ரைனே,(17)சத்தோத்ரே,(18)கத்தோத்ரே,(19)லலோத்ரே,(20)பங் கோத்ரே, (21)சம்னோத்ரே, (22)காஷ்மீரி பண்டிட், (23)பந்தோத்ரே, (24)விலானோச்,(25)படு,(26)கொர்ணாயேபண்டிட்,(27)தனால் பதே,(28) மகித்தே,(29)சுத்ராலியே,(30)பட்டியாத்,(31)புரோச், (32)அதோத்ரே,(33)மிஸ்ரா,(34)பராஷரா,(35)பவகோத்ரே, (36) மன்சோத்ரே, (37) சுதாத்தியே.

### III. கீழ் வகுப்புகள்

(38)சுதன், (39)சுக்கே, (40)புரே, (41)சந்தன், (42) ஜலோத்ரே, (43) நபோத்ரே, (44) கதோத்ரே, (45) சக்தோல், (46) புரியே, (47)பகனாச்சல், (48)ரஜுலியே, (49)சங்தே, (50)முண்டே, (51)சர்ன ாச்சல், (52)லதஞ்சன், (53) ஜகோத்ரே, (54)லக்கன்பால், (55)கவுட புரோகிதா, (56)ஷாஷ்கோத்ரே, (57)காணோத்ரே, (58)கரோச், (59)மரோத்ரே, (60) உபாதே, (61)கிந்தையே பதே, (62)கலந்தாரி, (63)ஜரத், (64) உதிகல், (65)கோடே, (66)பஸ்னோத்ரே, (67)பரத்,

*(68)சர்காட்,(69)லவங்தே,(70)பரங்கோல், (71)ஜரங்கல், (72)குகாலியே, (73)தரியஞ்சா, (74)பிந்தாட், (75)ரஜுனியே, (76)பதகுலிவே, (77) சிர்கண்டியே, (78)கிர்பாத், (79)பள்ளி, (80)சலூரன், (81)ரத்னபால், (82) பனோத்ரே, (83)யந்த்ரதாரி, (84)ததோரிச், (85)பலோச், (86)சாச்சியாலே, (87)ஜங்கோத்ரே,(88)மக்தோல்,(89)பவுன்பான், (90)சரோச்,(91)குதே,(92)கிர்லே,(93)மன்சோத்ரே, (94)தம்மோத்ரே, (95) தன்மத், (96) பிராமியே, (97)குந்தன், (98) கோகுலியே கோசெயின், (99) சக்கோத்ரே, (100)ரோத், (101)பர்கோத்ரே, (102)காவ்டே, (103)மக்தியாலியே, (104)மத்தர், (105)மகிஜியே, (106)தாக்குரே புரோகிதா, (107) கல்ஹால், (108)சாம், (109)ரோத், (110)லபோத்ரே, (111) ரெடாத்தியே, (112)பாத்தல், (113)கமானியே, (114)கந்தர்கல், (115)பிருத்விபால், (116)மதோத்ரே, (117)கம்போ, (118)சர்மாயி, (119)பச்சல், (120) மக்கோத்ரோ, (121)ஜாத், (122)பட்டியாலியே, (123) குடிதாப், (124) ஜம்பே, (125) கரணாதியே, (126)சுதாடே, (127)சிகாத், (128)கராதியே, (129)மச்சர், (130) பகோத்ரே, (131) சைன்ஹைாசன், (132) உத்ரியல், (133) சுகந்தியே, (134)ஜிந்தாத், (135) பத்தால், (136) பைன்காரே, (137) பிஸ்கோத்ரே, (138) ஜாலு, (139)தாப், (140)புட்டா, (141)கத்தியாலு, (142)பலாது, (143)பலாது, (144)ஜக்கோத்ரே, (145) பங்கே, (146) சோலே, (147)சுகுனியோ, (148)சனோச், (149)துகல், (150) பந்தோ, (151)கனுங்கோ, (152) ஜாவ்து, (153) ஜபாது, (154)கலியோ, (155)கபாங்கோ.*

## ஆ. காஷ்மீர் சரஸ்வதாக்கள்*

காஷ்மீரி பிராமணர்களின் பட்டியல் பின்வருமாறு:

*(1)கவுல், (2)ராஜ்தன், (3) குரித்தி, (4)ஜிதீஷ், (5)தார், (6) தக்காரி, (7) முஜ்ஹி, (8) முன்ஷி, (9) புட்டல், (10) ஜாவி, (11) பஜாய், (12)ரீய், (13)ஹுண்டோ, (14)திப்தி,(15)சிச்வாலி, (16)ருகி, (17)கால், (18)சும், (19)ஹாஞ்சி, (20)ஹஸ்திவாலி, (21)முட்டு, (22)திக்கு, (23)கெய்ஸ், (24)காதி, (25)பிராரி, (26)கஞ்ச், (27) வங்கன், (28) வகானா, (29)பட், (30)பைரவா, (31) மதன், (32) தினா, (33) வுர்கால், (34) ஹக்சர், (35) ஹக், (36) கூகர், (37) சாத்தாரி, (38) சவுன்புரி, (39)மத்தி, (40)குஷ்,*

---

★ காஷ்மீர் பிராமணர்கள் சரஸ்வதாக்கள்தானா என்பது பற்றி ஒரு கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் ஆமென்றும் வேறு சிலர் இல்லையென்றும் சொல்கின்றனர்.

*(41)*ஷக்தர், *(42)*வைஷ்ணவா, *(43)*கோத்தர், *(44)*ஹக், *(45)*கச்சாரி, *(46)*தோட்டே, *(47)*சரப், *(48)*குரா, *(49)*தந்தர், *(50)*கார், *(51)*தவுர், *(52)*தெங், *(53)*சையத், *(54)*துருபுரயா, *(55)* முத்தி, *(56)*சபாய், *(57)*பான், *(58)*வான்யா, *(59)*கரியல், *(60)*தாப்பல், *(61)*நவுரி, *(62)*மசல்தான், *(63)* முஷ்ரன், *(64)* துர்க்கி, *(65)* போத்தேதார், *(66)*காரு, *(67)* கர்பாங்கி, *(68)*பாத், *(69)*கிச்சிலு, *(70)* சான், *(71)* முக்தம், *(72)* கப்பரி, *(73)* புலாக்கி, *(74)* கார், *(75)* ஜெலாலி, *(76)*சபாயு, *(77)*பட்பாலி, *(78)* ஹுக்கி *(79)* குக்பாரி, *(80)* காலி, *(81)* ஜாரி, *(82)*கஞ்ச், *(83)*கிம், *(84)*முண்டி, *(85)*ஜங்கல், *(86)*ஜாட்டி, *(87)* ராக்கியாஸ், *(88)* பகாயி, *(89)* கெரி, *(90)*காரி, *(91)* காளி, *(92)* பஞ்சி *(93)* பங்கி, *(94)* சாகிப், *(95)* பிலாப், *(96)* ராயி, *(97)* காலிகாரப், *(98)* சான், *(99)* கபாபி, *(100)*யாச்லி, *(101)* ஜல்புரி, *(102)*நவஷாகரி, *(103)* கிசி, *(104)* துசி, *(105)* காம்கார், *(106)* தொலால், *(107)* பிஸ்தா, *(108)* பாதம், *(109)* திரச்சால், *(110)* நாதிர், *(111)* லிதாகாரி, *(112)* பியால், *(113)* கபி, *(114)* சாத்ரி, *(115)*வந்தி, *(116)*வட்லிலு, *(117)*கான், *(118)*வாஸ், *(119)*ஜாட்டி, *(120)*சபஞ்ச், *(121)*தண்டி, *(122)*ராவல், *(123)*மிசாரி, *(124)*சிபி, *(125)*சிங்கரி, *(126)*மிர்ஜே, *(127)* மால், *(128)* வரிக்கி, *(129)* ஜன், *(130)* லுட்டாரி, *(131)* பரிம், *(132)* ஹாலி, *(133)* நக்காயிப், *(134)* மைன், *(135)* அம்பரதார், *(136)*உக்கல், *(137)*காந்த், *(138)*பாலி, *(139)* ஜங்காலி, *(140)* துலி, *(141)*பரவா, *(142)*ஹர்கர், *(143)*காகர், *(144)*பண்டிட், *(145)*ஜாரி, *(146)*லங்கி, *(147)* முக்கி, *(148)*பிகி, *(149)*பதோர், *(150)*பதே, *(151)*ஜந்த், *(152)*தெங், *(153)* துந்த், *(154)* திராபி, *(155)* திரால், *(156)* பாம்பி, *(157)*சஜாவுல், *(158)* பக்ஷி, *(159)*உக்ரா, *(160)*நிச்வி, *(161)*பதான், *(162)*விச்சாரி, *(163)* உந்த், *(164)*குச்சாரி, *(165)*ஷால், *(166)*பாபி, *(167)*மக்கானி, *(168)* லபாரி, *(169)*கன்யா, *(170)*கன்யகாட்டி, *(171)*ஷா, *(172)*பிர், *(173)*குர்தி, *(174)*குங்கி, *(175)*கல்போஷ், *(176)* பிஷான், *(177)*பீஷன், *(178)* புல், *(179)* சோக்கி, *(180)*சாக், *(181)*ராய், *(182)*பிரித்தி, *(183)*பாத்தி, *(184)*கிச்சிலி, *(185)*காஹி, *(186)*ஜிஜி, *(187)*கில்மக், *(188)* சல்மான், *189)*கடல்பாஜு, *(190)*கந்தஹாரி, *(191)*பாலி, *(192)*மனத்தி, *(193)*பங்கன், *(194)* ஹக்கிம், *(195)*கரிப், *(196)*மண்டல், *(197)*மஞ்சகா, *(198)*ஷைர், *(199)*நன், *(200)* தெலி, *(201)*கலாசி, *(202)* சந்திரா, *(203)*காதிர், *(204)*ஜராபி, *(205)*சிகாரி, *(206)*கல்விச், *(207)*நகரி, *(208)*முங்வுச், *( 209)*கைபாரி, *(210)*குள்ளி, *(211)*கபி, *(212)*கோசா, *(213)*துராணி, *(214)*துலி, *(215)*கரீப், *(216)*கதி, *(217)* ஜாட்டி, *(218)*ராக்ஷஸ், *(219)*ஹர்கர், *(220)*கிராத், *(221)*வகரி, இன்னும் பல.

### 3. சிந்து சரஸ்வதாக்கள்

சிந்து சரஸ்வதாக்களின் உட்பிரிவுகள் வருமாறு:

(1)சிக்கார்புரிகள், (2)பரோவிகள், (3)ராவன்ஜாகுகள், (4)ஷேத் பாலாக்கள், (5)குவசந்தர்கள், (6)பொக்காரானா.

## II. கன்யாகுப்ஜ பிராமணர்கள்

கன்யாகுப்ஜர்கள் என்ற பெயர்.... பேரரசின் தலைநகரமாய் இருந்த கனோஜ் நகரத்திலிருந்து பெறப்பட்டதாகும்...... இவர்கள் கனோஜர்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள். கன்யாகுப்ஜ பிராமணர்களில் இருவகை உண்டு. ஒரு வகையினர் சர்வாரியர்கள் என்றும், மறுவகையினர் கன்யாகுப்ஜர்கள் என்றும் அழைக்கப்படு கின்றனர். சர்வாரியர்கள் என்ற பெயர் தொன்மைமிக்க சரயு ஆற்றிலிருந்து பெறப்பட்டாதாகும். இந்த ஆற்றுக்குக் கிழக்கேதான் இவர்கள் அதிகமாய்க் காணப்படுகிறார்கள். இவர்கள் கனோஜர் களிடமிருந்து மாகாண அடிப்படையில் பிரிந்தவர்கள். இப்போது இருவேறுவகையினரும் தமக்குள் திருமண உறவு கொள்வதில்லை. சர்வாரியர்களிடையே காணப்படும் உட்பிரிவுகளும் பொதுவாக ஒன்றுதான். ஆகவே கனோஜர்களிடையிலான உட்பிரிவுகளை விவரிப்பதே போதுமானது:

கன்யாகுப்ஜ பிராமணர்களில் பத்து பிரிவுகள் உள்ளன:

(1)மிஸ்ரா, (2)சுக்லா, (3)திவாரி, (4)துபே, (5)பதக், (6) பாண்டே, (7) உபாத்யா, (8) சௌபே, (9)தீட்சிதர், (10) வாஜ்பேயி.

இந்த உட்பிரிவுகளில் ஒவ்வொன்றுக்குள்ளும் பல உட்பிரிவுகள் உண்டு. அவையாவன:

### 1.மிஸ்ராக்கள்

மிஸ்ராக்களில் பின்வரும் பிரிவுகள் உள்ளன:

(1)மத்பானி, (2)சம்பரான்,(3)பத்லால் அல்லது பத்லயாலா, (4)ரத்தன் வாலா, (5)பந்தோல், (6)மத்தோல் அல்லது மத்தேவாலா, (7)அதே வேதத்தைச் சேர்ந்த கட்டாரியா, (8)வத்ச கோத்திரத்தைச் சேர்ந்த நகரியா, (9) வத்ச கோத்திரத்தைச் சேர்ந்த பயாசி, (10)கானா,

(11)தேவந்தா, (12)மர்ஜானி, (13)குர்ரா, (14)மர்க்காரா, (15)ஜிகன்யா, (16)பராயனா, (17)பெப்பாரா, (18) அதர்வா, (19) ஹதேப்பரா, (20)சுகந்தி, (21)கேத்தா, (22)கிரம்பாசி,(23) பிர்ஹா, (24)கௌசி, (25)கேவதி, (26)ரைசி, (27)பகாஜியா, (28) பெல்வா, (29) உஸ்ரைனா, (30)கோதியா, (31)தவக்புரி, (32) ஜிமல்புரி, (33) சிருங்கார்புரி, (34) சீதாபுரி, (35)புத்தாவா,(36)சிராஜ்புரி,(37)பாம்புரி, (38)தெர்க்கா, (39) துதா கௌமி, (40) ரத்னபுரி, (41) சுன்ஹன்யா.

## 2. சுக்லாக்கள்

சுக்லாக்களில் பின்வரும் பிரிவுகள் உள்ளன:

(1) இரு கிராமங்களின் அடிப்படையில் பெயர் சூடிய காக்காயிஜ்கோர்,(2) இரு கிராமங்களின் அடிப்படையில் பெயர் சூடிய மாம்கோர், (3)திப்தி, (4)பேதி, (5)பகாருவா, (6)கஞ்சாகி, (7)காந்தயில், (8)பேலா, (9)சாங்கே அவஸ்தி, (10)தேவராசி பர்பாக்கர், (11)மெகூலியார், (12)கர்பாகியா, (13)சந்தா, (14)கிரகா, (15)கௌதமி, (16)பராசா, (17)தாரா, (18) பரிக்புரி, (19) கர்யாவா, (20) அஜ்மத்கத்யா, (21)பிச்சோரா, (22)மசோவா, (23)சொந்தியான்வா, (24)ஔகின், (25)பிர்,(26)கோபிநாத்.

## 3. திவாரிகள்

திவாரிகளில் பின்வரும் பிரிவுகள் உள்ளன:

(1) லோனாக்கர்.(2)லோனாப்பர்,(3)முஞ்சோனா, (4)மங்ரைச், (5)ஜ"னதியா,(6)சோஹ்கோரா,(7)தாரா,(8)கோரக்புரியா, (9)தௌரவா, (10)பெந்தி, (11)சிர்ஜாம், (12)தத்தூரா, (13)பனோலி, (14)நதோலி அல்லது தந்தோலி, (15) புரியாபாரி, (16) குரோலி, (17)ஜோகியா, (18)தீட்சிதர், (19)சோனோரா, (20)அகோரி, (21)பர்காவா, (22)பாகியா, (23) குகுர்காரியா, (24) தாமா, (25) கேபாலா, (26)கோவர்த்தனா, (27) துகே, (28)சாட்டு, (29) ஷிவாலி, (30) ஷக்க ராஜ்,(31)உமாரி, (32)மனோகா, (33)ஷிவராஜ்பூர், (34)மந்தனா, (35)சாபே,(36)மந்தன் திரிவேதி,(37)லகாரி திரிவேதி,. (38)ஜேத்தி திரிவேதி.

## 4. துபேக்கள்

துபேக்களில் பின்வரும் பிரிவுகள் உள்ளன.

*(1) கஞ்சனி, (2) சிங்வா, (3)பெலாவா, (4) பரவா, (5)கரையா, (6) பர்கைன்யா, (7) பஞ்சனி, (8) லத்தியாகி, (9)குர்த்வான், (10)மெதிபர், (11) பிரம்மபுரியா, (12) சிங்கிலாவா, (13)குச்சலா, (14)முஞ்சால்வா, (15) பாலியா, (16)கேதகவா, (17)சிஸ்ரா, (18)சினானி, (19)குதவார்யே, (20)கதையா, (21)பன்வா.*

## 5. பதக்குகள்

பதக்குகளில் பின்வரும் பிரிவுகள் உள்ளன:

*(1)சொனோரா, (2)அம்பட்டாரா, (3)பதக்வாலியா, (4)திகவாச், (5)பதாரி.*

## 6. பாண்டேக்கள்

பாண்டேக்களில் பின்வரும் பிரிவுகள் உள்ளன:

*(1) திரிபாலா, (2)ஜொராவா, (3) மத்தைன்யா, (4) தொராயா, (5) நாக்சோரி, (6) பர்சிகா,(7)சாகங்கோல், (8) பர்ஹாதியா, (9)கேகா, (10)கொரியா, (11)பிச்சோரா, (12) பிச்சோரா பயாசி, (13) ஜீதியா அல்லது ஜத்யா, (14)இதார் அல்லது இந்தார், (15) பெஷ்தோல் அல்லது பெஷ்தவாலா, (16) சர்பாந்து, (17)சிலா, (18)அதுர்ஜ், (19)மதாரியா, (20)மஜ்கோம், (21)திலிபாப்பர், (22)பேய்ஹாத்யா, (23)நாகவ், (24)தலவா,(25)ஜம்பு.*

## 7. உபாத்யாக்கள்

உபாத்யாக்களில் பின்வரும் பிரிவுகள் உள்ளன.

*(1) ஹரைன்யா அல்லது ஹிரண்யா, (2) தேவரைன்யா, (3)கொரியா, (4)ஜைதியா, (5)தகேந்திரா, (6)கொராட், (7)ராணிசரப், (8)நிஜாமாபாத், (9) துதோலியா, (10) பஸ்காவா.*

## 8. சௌபேக்கள்

சௌபேக்களில் முக்கிய உட்பிரிவுகள் வருமாறு:

(1) நயபுரா, (2)ராக்காதி, (3)சௌகார், (4)கட்டயா, (5)ராம்புரா, (6)பலியா, (7) ஹர்தாஸ்புரா, (8) திபையா, (9) ஜமாதுவா, (10) கர்கேயா.

## 9. தீட்சிதர்கள்

தீட்சிதர்களில் பின்வரும் உட்பிரிவுகள் உள்ளன:

(1) தேவகோம், (2)கக்கரி, (3)நெவார்ஷியா, (4)அந்தேர், (5)சுகந்தா, (6)சௌதாரி, (7) ஜுஜாத்வத்தியா.

## 10. வாஜபேயிகள்

வாஜபேயிகளில் பின்வரும் உட்பிரிவுகள் உள்ளன:

(1) ஊஞ்சே, அதாவது உயர், (2) நீச்சே, அதாவது கீழ்.

மேலே குறிப்பிட்ட கன்யாகுப்ஜர்களின் பிரிவுகள், உட்பிரிவுகள் தவிர, கீழானவர்களாகக் கருதப்பட்டு முக்கியப் பிரிவுகளிலிருந்தும் உட்பிரிவுகளிலிருந்தும் தனித்து ஒதுங்கப்படும் கன்யாகுப்ஜர்களும் இருக்கிறார்கள். இவர்களில் பின்வரும் பிரிவுகளும் அடங்கும்:

(1)சம்தாரியா, (2)திரிகுவதி, (3)போர்ஹா, (4)கபிசா, (5)கேவதி (6)சந்திரவாலா, (7)குசும்பியா, (8)பிசோஹ்யா, (9)கன்ஹாலி, (10) கஜுவாய், (11)கிசர்மன், (12) கிசர்மன் பைத்தியா, (13)மசோனத், (14)பிஜாரா, (15) அன்ஸ்னோரா.

# III. கவுட பிராமணர்கள்

கவுட பிராமணர்கள் என்ற பெயர் கவுடா என்னும் மாகாணம் மற்றும் (இப்போது சிதிலமடைந்துவிட்ட) நகரத்திலிருந்து பெறப்பட்டதாகும். இந்த நகரம்தான் நீண்ட நெடுங்காலம் பீகார், வங்கம்

*(அங்கர்கள் மற்றும் வங்கர்கள் அல்லது பங்கர்களின் இருப்பிடம்) ஆகியவற்றுக்குத் தலைநகரமாக இருந்தது. கவுட பிராமணர்களிடையே உட்பிரிவுகள் ஏராளம். அவற்றில் மிக நன்றாகத் தெரிந்தவை பின்வருமாறு:*

*(1)கவுடா அல்லது கேவல கவுடா,(2)ஆதி கவுடா,(3)சுக்லவால ஆதிகவுடா, (4)ஓஜா, (5)சனாத்ய கவுடா,(6)சிங்கலா,(7)கந்தேவாலா, (8) தாய்மியா, (9)ஸ்ரீ-கவுடா,(10)தம்போலி கவுடா, (11) ஆதி-ஸ்ரீ கவுடா, (12)குர்ஜார் கவுடா, (13)தேக் பாரா கவுடா,(14)சாமர் கவுடா (15) ஹரியானா கவுடா, (16) கீர்த்தன்ய கவுடா, (17) சுகுல் கவுடா.*

## VI. உத்கல பிராமணர்கள்

*உத்கல் என்பது ஒரிசாவின் தொன்மை நகரம். உத்கல் பிராமணர்கள் என்றால் ஒரிசா பிராமணர்கள் என்று பொருள். இவர்களின் பிரிவுகளாவன:*

*(1) ஷாஷானி பிராமணர்கள், (2)ஷ்ரோத்ரிய பிராமணர்கள், (3) பண்டா பிராமணர்கள், (4)கட்டியா பிராமணர்கள், (5)மகாஸ்தான பிராமணர்கள், (6) கலிங்க பிராமணர்கள்.*

*ஷாஷானி பிராமணர்களில் பின்வரும் உட்பிரிவுகள் உள்ளன:*

*(1) சவந்தா, (2)மிஸ்ரா, (3)நந்தா, (4)பத்தே, (5)காரா, (6)ஆச்சார்யா, (7) சதபஸ்தி, (8) பேதி, (9)சேனாபதி, (10)பர்ணகிரகி, (11)நிஷாங்க், (12)ரைனிபதி*

*ஷ்ரோத்ரிய பிராமணர்களில் பின்வரும் நான்கு உட்பிரிவுகள் உள்ளன:*

*(1) ஷ்ரோத்ரியர்கள், (2) சோனார்பாணி, (3) தெலி, (4) அக்ரபக்ஷா.*

## VI. மைதில்ய பிராமணர்கள்

*மைதில்ய பிராமணர்கள் என்ற பெயர் பண்டைக் காலத்தில்*

இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த மிதிலாவிலிருந்து பெறப்பட்ட தாகும். இக்காலத்தில் திர்ஹட், சரன், பூர்ணியா ஆகிய மாவட்டங் களும், ஒட்டியுள்ள நேபாள நிலப்பரப்பின் சில பகுதிகளும் கூட இதில் அடங்கும்.

மைதில்ய பிராமணர்களில் பின்வரும் உட்பிரிவுகள் உள்ளன:

(1) ஓஜாக்கள், (2)தாக்கூர்கள், (3)மிஸ்ராக்கள், (4)புராக்கள், (5) ஷ்ரோத்ரியர்கள், (6)புயிஹராக்கள்.

இவர்களில் மிஸ்ராக்கள் பின்வரும் உட்பிரிவுகளைக் கொண்டிருக்கிறார்கள்.

(1) சந்தாரிகள், (2) ராயாக்கள், (3)பரிஹஸ்தாக்கள், (4)கானாக்கள், (5)குமாராக்கள்.

## III. ஏனைய பிராமணர்கள்

பஞ்ச திராவிடர்கள் என்பது விந்திய மலைக்குக் கீழ்ப்புறம் வாழும் பிராமணர்களுக்கு ஒரு பொதுப்பெயர் ஆகும். பஞ்ச கவுடர்கள் என்பது விந்திய மலைக்கு மேற்புறம் வாழும் பிராமணர்களுக்கு ஒரு பொதுப்பெயர் ஆகும். வேறு விதமாகச் சொன்னால், பஞ்ச கவுடர் என்பது வடக்கத்திய பிராமணர்களையும் பஞ்ச திராவிடர் என்பது தெற்கத்திய பிராமணர்களையும், குறிக்கும். ஆயினும், வடக்கத்தி பிராமணர்களாகவும் தெற்கத்திய பிராமணர்களாகவும் அமைந்துள்ள பிராமணர்களின் ஐந்து பிரிவுக்ளில், வட இந்தியாவிலோ தென் இந்தியாவிலோ வாழும் பிராமணர்களின் எல்லாப் பிரிவுகளும் அடங்க மாட்டா என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்த ஏனைய பிரிவுகளையும் அவற்றின் உட்பிரிவுகளையும் பதிவு செய்தால்தான் பொருள் நிறைவுறும்.

### ஏனைய தென்னிந்திய பிராமணர்கள்

இந்த வகையில் பின்வரும் பிரிவுகள் உள்ளன:

*(1) கொங்கணி பிராமணர்கள்*, (2) ஹ¬பு**, (3) கவுகர்னா***, (4) ஹவிகா****, (5) துல்வா *****, (6) சும்ம கொடகா****** (7) நம்பூத்ரி ,*

*நம்பூத்ரி பிராமணர்களே மலபாரில் வாழும் பிராமணர்களில் முதன்மையானவர்கள். நம்பூதிரிகள் தவிர, பிராமணர்களின் ஏனைய பிரிவுகளும் உள்ளன. அவையாவன:*

*(1) பாத்திகள், (2)முத்தடுகள், (3)பிளீடுகள், (4)நாமநாத்-ரீத் பரசாகர்கள், (5)அம்பல்வாசிக்கள்.*

## ஏனைய ராஜபுத்திர பிராமணர்கள்

*குர்ஜார் பிராமணர்களின் பட்டியலில் குறிப்பிடாது விட்ட ராஜபுத்திர பிராமணப் பிரிவுகள் பின்வருமாறு:*

*(1)ஸ்ரீமலி பிராமணர்கள், (2)சச்சோத பிராமணர்கள், (3)பள்ளிவலர் பிராமணர்கள், (4)நந்தன பிராமணர்கள் (5)புஷ்கர பிராமணர்கள், (6)பொக்கார் சேவக பிராமணர்கள், (7)மேடத்வால பிராமணர்கள், (8)பரிக்க பிராமணர்கள்.(9)லவன பிராமணர்கள்,(10) தகோட்ட பிராமணர்கள்,(11) கருடிய பிராமணர்கள்,(12)ஆச்சார்யர்கள்,(13)புரா பிராமணர்கள், (14) கபிதர்கள், (15) தகிமர்கள், (16) கந்தெல்வாலாக்கள், (17)திவாக்கள், (18)சிக்காவதாக்கள், (19) சமத் வாலாக்கள், (20)மருக்கள் (21)ஸ்ரீவந்தாக்கள், (22)அபிராக்கள், (23)பர்தனாக்கள், (24)சனகடாக்கள், (25)வகதிகள், (26)மேவாடாக்கள், (27)ராஜ குருகள், (28) பட்கள், (29) சரணாக்கள்.*

□□□

---

* கொங்கணி பிராமணர்கள் வேறு, மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த கொங்கணர்கள் வேறு. கொங்கணி பிராமணர்கள் போர்த்துகிசிய ஆட்சிக்குட்டப்பட்ட கோவாவைச் சேர்ந்தவர்கள்.

** இவர்கள் கர்வாரைச் சேர்ந்தவர்கள்.

*** .... பகுதியைச் சேர்ந்தவர்கள்.(எந்தப் பகுதி என்று கையெழுத்துப் பிரதியில் குறிப்பிடப்படவில்லை - பதிப்பாசிரியர்.)

**** இவர்களைத் தெலிச்சேரி சுற்றுவட்டாரத்தில் காணலாம்.

***** இவர்களை உடுப்பிப் பக்கம் காணலாம்.

****** இவர்களைக் கூர்க்கில் காணலாம்.

பகுதி மூன்று

# அரசியல்

அரசியல் பிரச்சினைகள் குறித்து இதன் முன்னர் பிரசுரிக்கப்படாத ஏழு கட்டுரைகள், இந்தப் பகுதியில் 'அரசியல்' என்னும் பிரிவில் சேர்க்கப் பட்டிருக்கின்றன.

## இயல் 20

# பல லட்சங்களிலிருந்து பின்னத்துக்கு

***1. நெடுங்காலம் தெரிந்திராத தீண்டப்படாதோரின் எண்ணிக்கை, II. 1911 ஆம் வருட மக்கட்தொகைக் கணக்கெடுப்பும் தனிக் கணக்கெடுக்கும் முதல் முயற்சியும், III. 1911ஆம் வருட மக்கட் தொகைக் கணக்கெடுப்பின் முடிவுகள் ஊர்ஜிதம், IV. லோதியன் குழுவும் ''தீண்டப்படாதவர்கள் கூடாது'' என்ற இந்துக் களின் கூச்சலும், V. இந்தக் கூப்பாட்டுக்கான காரணங் கள், VI. பிற்பட்ட வகுப்பினர் மற்றும் முஸ்லீம்களின் போக்கு.***

### 1

*இந்தியாவில் தீண்டத்தகாதோரின் மொத்த மக்கள் தொகை என்ன? இவர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதில் ஆர்வமுடையவர்கள் கேட்கும் முதல் கேள்வி இதுதான். இந்தக் கேள்விக்கு இப்போது பதிலளிப்பது எளிது. ஏனென்றால் 1931ல் மேற்கொள்ளப்பட்ட குடிமதிப்புக் கணக்கு, இவர்களது மொத்த எண்ணிக்கை 5 கோடி என்று கூறுகிறது. இந்தியாவில் தீண்டத் தகாதவர்களின் மக்கட்தொகையை இப்போது ஏறத்தாழத் துல்லிய மாகக் குறிப்பிடுவது சாத்தியமாகி இருக்கிறது. ஆனால் இதற்கு முன்னர் அப்படியல்ல; நீண்டகாலம்வரை இவ்வாறு கணிப்பது சாத்தியமற்றதாக இருந்தது.*

*இதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. முதலாவதாக, தீண்டாமை என்பது ஒரு சட்டப்பூர்வமான பதம் அல்ல. யார் தீண்டத்தகாதவர், யார் தீண்டத்தகாதவர் இல்லை என்று கூற முடியாது; அவ்வாறு கூறும்வகையில் தீண்டாமை எனும் பதத்துக்கு சட்டரீதியான, சரிநுட்பமான விளக்கம் ஏதும் இல்லை. தீண்டாமை*

என்பது ஒரு சமூகக் கண்ணோட்டம். அது ஒரு வழக்கமாக உருக் கொண்டுள்ளது. வழக்கம் வேறுபடுகின்றபொழுது தீண்டாமையும் வேறுபடுகின்றது. இதனால் தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையை இம்மியும் பிசகாமல் உறுதியாகக் கூறுவதில் எப்பொழுதுமே ஏதேனும் சிரமம் இருந்து வந்திருக்கிறது. இரண்டாவதாகச் சாதி அடிப்படையில் மக்கட்தொகையைக் கணிப்பதைச் சாதி இந்துக்கள் கடுமையாக எதிர்த்து வந்திருக்கின்றனர். அதுமட்டுமல்ல, மக்கட் தொகைக் கணக்கெடுப்பு வினாப்பட்டியலில் சாதியைப் பற்றிய கேள்வி தவிர்க்கப்படவேண்டும் என்றும், மக்கட்தொகையைச் சாதி மற்றும் குலத்தின் அடிப்படையில் வகைப்படுத்திக் கணக்கிடுதல் கூடாது என்றும் வலியுறுத்தி வந்திருக்கின்றனர். 1901ஆம் வருடக் குடிமதிப்புக் கணக்கின்போது இது சம்பந்தமாக ஒரு யோசனை முன்வைக்கப்பட்டது. அதாவது மக்கட்தொகையில் பல்வேறு சாதி களையும் குலங்களையும் சேர்ந்தோரின் விகிதாசாரம் நீண்டகால இடைவெளிக்குப் பிறகுதான் மாறுவதால், ஒவ்வொரு பத்தாண்டுக் கணக்கெடுப்பின் போதும் அவர்களது எண்ணிக்கையைப் பெற வேண்டிய அவசியமில்லை என்ற அடிப்படையில் இந்த யோசனை தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இம்மாதிரியான ஆட்சேபங்கள் ஏதும் குடிமதிப்புக் கணக்கு ஆணையரிடம் எடுபடவில்லை. மக்கட்தொகையைச் சாதி அடிப்படையில் கணக்கிடுவது நல்லது, முக்கியமானது, அவசியமானது என்று குடிமதிப்பு ஆணையர் உறுதியாகக் கருதினார். அவர் பின்கண்டவாறு ஆணித்தரமாக, அழுத்தம் திருத்தமாக வாதிட்டார்:

''ஒரு சமூக அமைப்பு என்ற முறையில் சாதியினால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் அல்லது பிரதிகூலங்கள் பற்றி எத்தகைய கருத்து நிலவியபோதிலும், சாதியை ஒரு முக்கியமான அம்சமாக எடுத்துக்கொள்ளாமல், மக்கட்தொகை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து பயனுள்ள முறையில் விவாதம் செய்வது என்பது எவ்வகை யிலும் சாத்தியமல்ல. சாதி இன்னமும் 'இந்திய சமூகக் கட்டமைப்பின் அடித்தளமாக இருந்து வருகிறது.'; அதே போன்று, 'சாதி பற்றிய பதிவேடு இந்திய சமுதாயத்தின் பல்வேறு பகுதியினரிடையே ஏற்பட்டுவரும் மாற்றங்களைத் தெரிந்துகொள்ள உதவும் மிகவும்சிறந்த கையேடாக' இன்னமும் திகழ்ந்து வருகிறது. ஒவ்வொரு இந்துவும் (அதன் மிகவும் நெகிழ்ந்து கொடுக்கும் பொருளில் கூறுவதானால்) ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறக்கிறான்; அந்தச் சாதிதான் தொட்டிலிலிருந்து சுடுகாடுமட்டும் அவனது சமய, சமூக, பொருளாதார, குடும்ப வாழ்வைத் தீர்மானிக்கிறது. ஆனால் மேலை நாடுகளின் நிலைமையே

வேறு. அங்குச் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரது நிலையைச் செல்வம், கல்வி, தொழில் முதலிய அம்சங்கள்தான் நிர்ணயிக்கின்றன; பிறப்பு, மரபுவழி ஆகிய அம்சங்கள் அவர்களது நிலையை எவ்வகை யிலும் தீர்மானிப்பதில்லை. இதற்குமாறாக இந்தியாவில் ஆன்மீகமும், சமூகநிலையும், சாதிவழிவந்ததொழிலும் இதர அம்சங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு ஆதிக்கம் செலுத்துகின்றன. இவ்வாறு மேலைநாடுகளில், மக்கள் பொருளாதார அடிப்படையிலும் வாழ்க்கைத் தொழில் அடிப்படையிலும் வகை பிரிக்கப்படும்போது இந்தியாவில் நடப்பது என்ன? இங்குச் சாதி, மத வேறுபாடுகளின் அடிப்படையில் மக்கள், இனம் காணப்படுகின்றனர். ஒரு தேசிய, சமூக அமைப்பு என்ற முறையில் சாதியைப்பற்றி எத்தகைய கருத்துக் கொண்டிருந்தாலும், அதனை உதாசீனம் செய்வது அர்த்தமற்றது, பயனற்றது. ஒருவனது அதிகாரத்தையும் அந்தஸ்தையும் சமூக நிலையையும் இனங்காணுவதற்குச் சாதி ஒரு முக்கிய அம்சமாகத் தொடர்ந்து பயன்படுத்தப்படும்வரை, பத்தாண்டுகளுக்கு ஒருமுறை சாதி, மத அடிப்படையில் மக்கட்தொகை கணக் கெடுப்பது இந்த வெறுக்கத்தக்க, விரும்பத்தகாத சாதி அமைப்பு முறையை நிரந்தரப் படுத்துவதற்கே, சாசுவதமாக்குவதற்கே உதவுகிறது என்று வரட்டுத் தனமாக வாதாடுவதில் அர்த்த மில்லை.

1911இல் சாதி அடிப்படையில் மக்கட்தொகைப் புள்ளி விவரங் களைக் கணக்கு எடுப்பதற்கு முற்பட்டபோதுதான், முன் என்றையும் விட மிகக்கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது; பலத்த ஆட்சேபம் எழுப்பப்பட்டது. அப்போது ஒரு விசேடக் கேள்விப் பட்டியல் வெளியிடப்பட்டது. அதில் பல்வேறு சாதியினைரையும் நிர்ணயிக்கும் பத்துக் கேள்விகள் இடம் பெற்றிருந்தன. தாழ்த்தப்பட்ட மக்களைச் சாதி இந்துக்களிடமிருந்துப் பிரித்துக்காட்டும் வகையில் இந்தக் கேள்விகள் அமைந்திருந்தன. இந்த விஷயத்தில் முஸ்லீம்கள் மீது இந்துக்களுக்கு ஐயம் ஏற்பட்டது; பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்ச ரிடம் முஸ்லீம்கள் சமர்ப்பித்த விண்ணப்பத்தின் விளைவாகத் தான் இது நடந்திருக்கும் என்று அவர்கள் கருதினர்; மேலும், இந்துக்களிட மிருந்து தாழ்த்தப்பட்ட இனத்தவரைப் பிரித்து, அதன்மூலம் இந்து சமூகத்தின் வலிமையையும் செல்வாக்கையும் முக்கியத்துவத்தையும் குறைப்பதே இந்த நடவடிக்கையின் நோக்கம் என்றும் அவர்கள் அஞ்சினர்.

ஆனால், இது சம்பந்தமாக இந்துக்கள் நடத்திய கிளர்ச்சி பலனளிக்கவில்லை; ஏற்கனவே திட்டமிட்டபடி, முன்கூறிய பத்துக்

கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட பதில்களின் அடிப்படையில் சாதி வாரியாக மக்கட்தொகைக் கணக்கெடுப்பு நடைபெற்றது. எனினும் இதற்கு எதிரான கிளர்ச்சி ஓயவில்லை, 1920 ஆம் வருடக் குடிமதிப்புக் கணக்கெடுப்பின்போது அது மீண்டும் தலைதூக்கிற்று. இச்சமயம், விதிமுறைப்படி ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. 1920ல் சட்ட மன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. சாதிரீதியாகத் தகவல்கள் சேகரிப்பதற்கு அத்தீர்மானத்தில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அதற்கு இரண்டு காரணங்கள் கூறப்பட்டன: (அ) சாதிபாகுபாட்டு முறையை அதிகாரப்பூர்வமாக அங்கீகரிப்பதும் நிரந்தரமாக்குவதும் விரும்பத்தக்கதல்ல; (ஆ) இவ்வாறு சேகரிக்கப்படும் தகவல்கள் தவறானவையாகவும் பயனற்றவையாகவும் இருக்கின்றன; கீழ்ச் சாதியினர் தங்களை உயர் சாதியினராகக் காட்டிக் கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டனர். இந்தத் தீர்மானம் மட்டும் ஏற்கப்பட்டிருந்தால் தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையைத் தெரிந்துகொள்ளமுடியாது போயிருக்கும். அதிர்ஷ்டவசமாகத், தீர்மானத்தை முன்மொழிந்தவர் அவைக்கு வராததால் அத் தீர்மானம் குறித்து அவையில் விவாதம் ஏதும் நடைபெறவில்லை. இதனால், 1921 ஆம் வருடக் குடிமதிப்புக்கணக்கு ஆணையர் வழக்கம் போல் விசாரணை நடத்தித் தகவல்கள் சேகரிப்பதில் எந்தச் சிரமமும் ஏற்படவில்லை.

மூன்றாவதாக, 1911ஆம் வருடத்திற்கு முன்னர் தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையைத் தனியாகக் கணிப்பதற்கு மக்கட்தொகைப் புள்ளிவிவர ஆணையாளர்களில் எவரும் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. 1881 ஆம் ஆண்டில்தான் இந்தியாவின் முதலாவது பொது மக்கட்தொகைக் கணக்கெடுப்பு நடைபெற்றது. பல்வேறு சாதியினரையும் மதத்தவரையும் பட்டியலிட்டு, அவர்களது எண்ணிக்கையைக் கூட்டி இந்தியாவின் மொத்த மக்கட்தொகையை நிர்ணயித்ததற்கு அதிகமாக 1881ஆம் வருட சென்சஸ் வேறு எதுவும் செய்யவில்லை. இந்தியாவின் இரண்டாவது பொது ஆட்தொகைக் கணக்கெடுப்பு(சென்சஸ்) 1891ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. இந்த மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்போதுதான் சாதி, இனம், சமுதாயப்படித்தரம் இவற்றின் அடிப்படையில் மக்கட்தொகையை வகை பிரித்துக்காட்டுவதற்குச் சென்சஸ் கமிஷனர் முதல் தடவையாக முயற்சி எடுத்துக்கொண்டார்.

இந்தியாவின் மூன்றாவது பொது மக்கட்தொகைக் கணக்கெடுப்பு 1901 ஆம் ஆண்டில் நடைபெற்றது. இந்தக் கணக்கெடுப்பில் மக்களை வகைப்பிரிப்பதற்கு ஒரு புதிய கோட்பாடு

கடைப்பிடிக்கப்பட்டது: ''சமுதாயத்தில் ஒருவர் பெற்றிருக்கும் நிலையை அடிப்படையாகக் கொண்டு மக்களை வகைப்பிரிப்பதே'' அந்தக்கோட்பாடு. இந்து சமுதாயம் சமத்துவத்தை அங்கீகரிப்பதில்லை; உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற பாகுபாட்டைக் கொண்டது அதன் சமூக அமைப்பு; எனவே, மேலே கூறிய கோட்பாடு இந்து சமுதாயத்துக்கு மிகவும் ஏற்புடையதாக இருந்ததில் வியப்பேதும் இல்லை. இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் அதன் சமூக வாழ்வும் அமைந்திருந்தது.

## II

தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையைத் திட்டவட்டமாகவும் தெள்ளத்தெளிவாகவும் தீர்மானிப்பதற்கு 1911இல் சென்சஸ் ஆணையரால் முதல் முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது.

1911ஆம் வருட மக்கட்தொகைக் கணக்கெடுப்பு நடைபெறுவதற்கு முக்கியகாலம் மிண்டோ-மார்லி சீர்திருத்தங்கள் உருவாகிக் கொண்டிருந்த காலம். தனித்தொகுதிகள் மூலம் சட்டமன்றங்களில் தங்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும் என்று இந்தச் சமயம்தான் இந்திய முஸ்லீம்கள் கிளர்ச்சி செய்யத் தொடங்கியிருந்தனர். அவர்கள் அப்போது இந்தியா மந்திரியான மார்லி பிரபுவிடம் தூது சென்று, 1909 ஜனவரி 27 ஆம் தேதியன்று ஒரு மகஜரை சமர்ப்பித்தனர். அந்த மகஜரில் பின்கண்டவாறு குறிப்பிட்டிருந்தனர்: (இதன் விவரம் கையெழுத்துப்பிரதியில் காணப்படவில்லை-தொகுப்பாசிரியர்).

தீண்டத்தகாதவர்கள் பற்றி 1907இல் முஸ்லீம் தூதுக்குழுவினர் தங்கள் மகஜரில் வலியுறுத்தியிருந்ததற்கும் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையைத் தனியாகக் கணிப்பதற்குச் சென்சஸ் ஆணையர் எடுத்த முயற்சிக்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமா என்பது பற்றித் திட்டவட்டமாக எதுவும் கூறுவதிற்கில்லை. சென்சஸ் ஆணையர் 1911இல் செய்ய உத்தேசித்தது மக்களின் சமுதாய நிலையை ஆய்வு செய்யும் விஷயத்தில் அவருக்கு முந்தைய ஆணையர்கள் கைக்கொண்ட வழிமுறைகளை அனுசரித்ததாகவும் இருக்கலாம். இது எப்படி இருப்பினும், தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையைத் தனியாகக் கணக்கிடும் தமது திட்டத்தைச் சென்சஸ்

ஆணையர் அறிவித்ததுமே, அதை எதிர்த்து இந்துக்களிடமிருந்து பெரும் கூக்குரல் எழுந்தது. மக்கட்தொகைக் கணக்கெடுப்பு ஆணையரின் இந்த முயற்சியை அவர்கள் வன்மையாகக் கண்டித்தனர்; இந்து சமுதாயத்தைப் பிளவுபடுத்தி அதனைப் பலவீனப்படுத்த முஸ்லீம்களும் பிரிட்டிஷ் அரசும் சேர்ந்து செய்த கூட்டுச் சதி என்று இதனைச் சாடினர். தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையை அறிந்துகொள்வது இந்த முயற்சியின் உண்மையான நோக்கமல்ல, மாறாக, இந்து சமுதாயத்தின் ஒற்றுமையைச் சிதைத்து உருக்குலைத்து, தீண்டத்தகாதவர்களைத் தீண்டத்தக்கவர்களிடமிருந்து பிரிப்பதே இதன் உண்மையான குறிக்கோள் என்றும் கூறப்பட்டது. இதனையொட்டி இந்துக்கள் நாடெங்கும் பல கண்டனக் கூட்டங்களை நடத்தினர்; சென்சஸ் ஆணையரின் இந்தத் திட்டத்தை மிக வன்மையாகக் கண்டித்தனர்.

எனினும், இந்த எதிர்ப்புச் சூறாவளியைக் கண்டு சென்சஸ் ஆணையர் சிறிதும் அஞ்சவில்லை, நிலைகுலையவில்லை; தமது திட்டத்தை உறுதியாகச் செயல்படுத்த முனைந்து இறங்கினார். தீண்டத்தகாதவர்களைத் தனியாகக் கணக்கிடுவதற்கு அவர் ஒரு நூதனமான முறையைக் கைக்கொண்டார். பல்வேறு மாகாணங்களிலும் உள்ள மக்கட்தொகைக் கணக்கெடுப்புக் கண்காணிப்பாளர்களுக்கு ஓர் ஆணை பிறப்பித்தார்; சில குறிப்பிட்ட நியதிகளுக்கு உட்படாமலும், சில குறிப்பிட்ட தகுதிகள் இல்லாமலிருந்தபோதிலும் இந்து மதத்தினராகக் கருதப்படும் சாதியினரையும் பழங்குடியினரையும் தனியாகக் கணக்கிடும்படி அவர்களுக்கு உத்தரவிட்டார்.

இதன்படியே சென்சஸ் கண்காணிப்பாளர்கள் பின்கண்ட நோக்கும் போக்குமுடைய சாதியினரையும் பழங்குடியினரையும் தனியாகக் கணக்கிட்டனர்: (1) பிராமணர்களின் மேலாதிக்கத்தை மறுப்பவர்கள், (2) பிராமணர்களிடமிருந்தோ அல்லது வேறு இந்து குருக்களிடமிருந்தோ மந்திரதீட்சை பெறாதவர்கள், (3) வேதங்களின் ஆணை உரிமையை ஏற்காதவர்கள், (4) உயர்ந்த இந்துக் கடவுள்களை வழிபடாதவர்கள், (5) பிராமணர்களால் உணவு பரிமாறப்படாதவர்கள், (6) அறவே பிராமண புரோகிதர்களைக் கொண்டிராதவர்கள், (7) இந்துக் கோவில்களுக்குள்ளே அனுமதிக்கப் படாதவர்கள், (8) தீட்டுப்படுத்துபவர்கள், (9) இறந்தவர்களைப் புதைப்பவர்கள், (10) மாட்டிறைச்சி சாப்பிடுபவர்கள், (11) பசுவை போற்றிப் பூசிக்காதவர்கள்.

மக்கட்தொகைக் கணக்கெடுப்பு ஆணையர் நடத்திய ஆய்வு எத்தகைய ஊகத்துக்கும், ஐயப்பாட்டுக்கும் இடம் கொடுக்கவில்லை. தீண்டத்தகாதோரின் உண்மையான எண்ணிக்கை என்ன என்பதை அவர் கண்டறிந்தார். கீழே உள்ள அட்டவணை 1911 ஆம் வருடக் குடிமதிப்புக் கணக்கில் கண்டுள்ளபடி தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையை மாகாண வாரியாகத் தருகிறது.★

| மாகாணங்கள் | மொத்த மக்கட் தொகை (பத்து லட்சத்தில்) | தாழ்த்தப் பட்ட மக்களின் மக்கட் தொகை (பத்து லட்சத்தில்) | மொத்த இடங் கள் | தாழ்த்தப் பட்ட வகுப் பினருக்கான இடங்கள் |
|---|---|---|---|---|
| சென்னை | 39.8 | 6.3 | 120 | 2 |
| பம்பாய் | 19.5 | 0.6 | 113 | 1 |
| வங்காளம் | 45.0 | 9.9 | 127 | 1 |
| ஐக்கிய மாகாணங்கள் | 47.0 | 10.1 | 120 | 1 |
| பஞ்சாப் | 19.5 | 1.7 | 85 | - |
| பீகார் மற்றும் ஒரிசா | 32.4 | 9.3 | 100 | 1 |
| மத்திய மாகாணங்கள் | 12.0 | 3.7 | 72 | 1 |
| அசாம் | 6.0 | 0.3 | 54 | - |
| | 221.2 | 41.9 | 791 | 7 |

இந்த ஆய்வுகளின் முக்கியத்துவத்தை வெளியார் புரிந்து கொள்ளமுடியாதிருக்கலாம். தீண்டாமைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்றும் அவர்கள் வினவலாம். ஆனால் தீண்டப்படாத

★ மகாராஷ்டிர அரசாங்கத்தின் கல்வித்துறை வெளியிட்ட 'டாக்டர் அம்பேத்கரின் பேச்சும் எழுத்தும்' தொகுதி - 2 என்னும் நூலிலிருந்து இந்த அட்டவணை இங்குத் தரப்பட்டிருக்கிறது. பக்கம் 364. இந்த அட்டவணை கையெழுத்துப்பிரதியில் இடம்பெறவில்லை.

வர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் விஷயத்தில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அவர்கள் நிச்சயம் புரிந்து கொள்வார்கள். ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோல், தீண்டாமை என்பதற்குச் சட்டரீதியான பொருள் வரையறை ஏதும் இல்லை; இருக்கவும் முடியாது. ஒருவரது தலை ரோமத்தைக் கொண்டோ, தோலின் நிறத்தைக் கொண்டோ நிர்ணயிக்கப்படுவதல்ல தீண்டாமை. இரத்தத்தைக் கொண்டும் அது தீர்மானிக்கப்படக்கூடியதல்ல. தீண்டத்தகாதவன் என்பவன் இந்துக்களால் ஒரு குறிப்பிட்ட முறையில் நடத்தப்படுபவன்; இந்துக்களிலிருந்து மாறுபட்ட சில குறிப்பிட்ட பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பவன். சமூக விஷயங்களில் இந்துக்கள் தீண்டத்தகாதவர்களை நடத்தும் சில குறிப்பிட்ட முறைகள் இருக்கின்றன. அதே போன்று தீண்டத்தகாதவர்கள் கடைப்பிடிக்கும் சில குறிப்பிட்ட பழக்கவழக்கங்களும் நடைமுறைகளும் உள்ளன. இவ்வாறிருப்பதனால், யார் தீண்டத்தகாதவர்கள் என்பதைச் சில பழக்கவழக்கங்களைக் கொண்டும், அவற்றிற்கு யார் ஆளாகியிருக்கிறார்கள் என்பதைக் கொண்டுமே தீர்மானிக்க வேண்டி யிருக்கிறது; இதையே ஒரே அளவு கோலாகக் கொள்ள வேண்டியிருக்கிறது; இதைத்தவிர வேறு வழியில்லை. இதனை மனத்தில் கொண்டால், சென்சஸ் ஆணையர் வகுத்தளித்த பரிசோதனை முறைகள் உண்மையில் தீண்டாமையை நிர்ணயிக்கும் முத்திரைகள் என்பது தெள்ளத் தெளிவாகும். ஆதலால், சென்சஸ் ஆணையர் கடைப்பிடித்த நடைமுறைகளும் சோதனைகளும் சரியானவையே என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. எனவே, இந்த ஆய்வு நல்ல பலனை அளித்திருப்பதோடு, தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கை பற்றிய, கூடியமட்டும் துல்லியமான புள்ளி விவரங் களையும் தந்துள்ளது என்றே உண்மையில் கூறவேண்டும்.

## III

தீண்டத்தகாதவர்களின் மொத்த எண்ணிக்கை குறித்து 1911ஆம் வருட சென்சஸ் ஆணையர் மேற்கொண்ட முடிவுகளை 1921 ஆம் வருட சென்சஸ் ஆணையர் உறுதி செய்தார்.

இதுவன்றித், தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையை உறுதி யாய்க் கண்டறியும்பொருட்டு 1921 ஆம் வருட சென்சஸ ஆணையரும் ஓர் ஆய்வினை மேற்கொண்டார். இந்த அறிக்கையில்

பகுதி Iஇல் பத்தி 1931இல் சென்சஸ் ஆணையர் பின்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்:

" சமுதாயத்தின் குறிப்பிட்ட பகுதியினரைத் 'தாழ்த்தப்பட்ட வகுப்பினர்' என்று குறிப்பிடுவது அண்மை ஆண்டுகளில் ஒரு வழக்கமாகிவிட்டது. நான் அறிந்தவரை இந்தப் பதத்துக்கு ஒரு முடிவான விளக்கம் இருப்பதாகத் தெரியவில்லை; அதேபோல் துல்லியமாக அது யாரைச் சுட்டுகிறது என்பதையும் அறிய முடிய வில்லை. 1912-17 முதல் கல்வி கண்டுவரும் முன்னேற்றம் குறித்த ஐந்தாண்டு அறிக்கையில் (அத்தியாயம் 28, பத்தி 505) கல்வி உதவி மற்றும் முன்னேற்றக் கண்ணோட்டத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பற்றிப் பிரத்தியேகமாகக் கூறப்பட்டிருக்கிறது; அதோடு, அந்த அறிக்கையின் 13ஆவது பிற்சேர்க்கையில் இந்தச் சமூகத்தில் அடங்கி யுள்ள சாதிகளின் பட்டியல் தரப்பட்டிருக்கிறது. இந்தப்பட்டியலின் படித் தாழ்த்தப்பட்டவர்கள் என வகைப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 3 கோடி 10 லட்சமாகும்; இது, பிரிட்டிஷ் இந்தியாவின் இந்துக்கள் மற்றும் பழங்குடியினர் மக்கட்தொகையில் 19 சதவிகிதம். மனக்கசப்பு உண்டுபண்ணக்கூடிய சமூகவேறுபாடுகளை ஒரு பகிரங்க அறிக்கையில் வெளியிடுவதில் பலரது உணர்ச்சிகளைப் புண்படுத்தக் கூடிய அபாயம் இருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் இப்பட்டியல்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுவிட்டன; குறிப்பாகத் தென்னிந்தியாவில் 'தாழ்த்தப்பட்டவகுப்பினர்' இன உணர்வைப் பெற்றிருப்பதோடு, தங்களுக்கென ஒரு நிறுவனத்தையும் அமைத்துக் கொண்டிருக்கின்றனர்; மனிதநேயக் கழகங்களால் 'தோற்றுவிக்கப் பட்ட' பல விசேட அமைப்புகள் அவர்களுக்காகப் பாடுபட்டு வருகின்றன; இதல்லாமல் சட்டமன்றங்களிலும் அவர்கள் அதிகாரப்பூர்வமாக இடம்பெற்றுள்ளனர். இவற்றை எல்லாம் கருத்திற்கொண்டு பார்க்கும் பொழுது, தைரியமாக உண்மைகளை எதிர்கொள்வதும், அவர்களது எண்ணிக்கை குறித்துச் சில புள்ளி விவரங்களைப் பெற முயற்சிப்பதும் நிச்சயமாக உசிதமானதென்றே தோன்றுகிறது. ஆகவே, 'தாழ்த்தப் பட்டோர்' எனப்படுவோர் பிரிவில் வழக்கமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் சாதியினரின் தோராயமான பலத்தைப் பற்றிய மதிப்பீட்டை மக்கட் தொகைப்புள்ளி விவரங் களின் அடிப்படையில் வழங்குமாறு மாகாணக் கண்காணிப்பாளர் களைக் கேட்டிருக்கிறேன்.

"எல்லா மாகாணங்களிலிருந்தும் சில வகையான பட்டியல்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. ஆனால் ஐக்கிய மாகாணங்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கு. அங்கு ஏகதேசமான ஒரு மதிப்பீட்டைப்

பெறுவதற்குக் கூட அதிகாரிகள் மிகுந்த தயக்கம் காட்டியதே இதற்குக் காரணம். சில குறிப்பிட்ட பிரிவினரின் நிலை குறித்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பலதரப்பட்ட கருத்து நிலவியதால் ஒரே மாதிரியான அளவுகோலின் அடிப்படையில் புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்பட்டு என்னிடம் அளிக்கப்படவில்லை. இதன் காரணமாக கல்வி அறிக்கையிலும், 1911ஆம் வருட அறிக்கையிலும், அட்ட வணைகளிலும் தரப்பட்டிருந்த புள்ளிவிவரங்களின் அடிப்படையில் சில மதிப்பீடுகளை நான் மாற்றவேண்டியதேற்பட்டது. இதுவன்றி, ஏற்கனவே குறிப்பிட்டிருந்தது போன்று, எந்த ஒரு சாதியின் மொத்த எண்ணிக்கையும் பதிவுசெய்யப்படாததால், சில பொதுவான குறைபாடுகளையும் நான் எதிர்கொள்ளவேண்டியிருந்தது. இருப் பினும், இந்து சமுதாயத்தின் 'தாழ்த்தப்பட்ட வகுப்பினர்' எனக் கருதப்படுவதற்குத் தேவையான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை குறித்த ஒரு தோராய மறுமதிப்பீட்டை இந்த அறிக்கை தருகிறது. இந்த மாகாணங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை சுமார் 5 கோடி 30 லட்சத்தை எட்டுகிறது. ஆனால் இதனை ஒரு குறைந்த மதிப் பீடாகவே எடுத்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் (1) சம்பந்தப் பட்ட சாதிகள், பழங்குடியினரின் மொத்த எண்ணிக் கையும் இதில் சேர்க்கப்படவில்லை, (2) இதேபோன்று, இந்துசமய அரவணைப்பில் வெகு அண்மையில் ஈர்த்துக்கொள்ளப்பட்ட தொல் குடி மக்களின் மொத்த எண்ணிக்கையும் இதில் இடம்பெறவில்லை; இவர்களில் பெரும்பாலோர் தூய்மையற்றவர்களாகக் கருதப்படு கின்றனர். ஆகத், தூய்மையற்றவர்களாக எண்ணப்படும் இந்தத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அனைவரின் எண்ணிக்கையை (இந்தியா வின் மக்கட் தொகையில் 5.5 கோடி முதல் 6 கோடி என நம்பகமாக நிர்ணயிக்கலாம்.''

இதன் பின்னர், **சைமன் கமிஷன்** விசாரணை வந்தது. 1919ஆம் வருட இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி புகுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் கண்டறிவதற்காகவும், மேற்கொண்டு செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் குறித்துப் பரிந்துரைப் பதற்காகவும் 1929ல் பிரிட்டிஷ் பாராளுமன்றம் இந்தக்கமிஷனை நியமித்தது.

1919ஆம் வருடச் சட்டத்தின்படி உருவான சீர்திருத்தங்கள் விவாதிக்கப்பட்டுவந்த வேளையில், **மாண்டேகு- செம்ஸ்போர்டு** அறிக்கை வெளிவந்தது. தீண்டத்தகாதவர்களின் பிரச்சினையை இந்த அறிக்கை தெள்ளத்தெளிவாக ஒப்புக்கொண்டது. அதுமட்டுமன்றிச்,

சட்டமன்றங்களில் அவர்கள் பிரதிநிதித்துவம் பெறத் தகுந்த ஏற்பாடு செய்வதாகவும் அறிக்கையைத் தயாரித்தவர்கள் உறுதி கூறினார்கள்.

ஆனால், வாக்குரிமையையும் தேர்தல் முறையையும் தீர்மானிப்பதற்காக **சவுத்பரோ** பிரபுவின் தலைமையில் நியமிக்கப் பட்ட குழு, இவர்களை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டது, ஓரங்கட்டிவிட்டது. இந்தப் போக்கை இந்திய அரசாங்கம் ஏற்க வில்லை; அது தனது கருத்தைப் பின்வருமாறு வெளியிட்டது:

(i) அவர்கள் (தீண்டத்தகாதவர்கள்) மொத்த மக்கட் தொகை யில் ஐந்தில் ஒரு பங்கினராக இருக்கின்றனர். மார்லி-மிண்டோ கவுன்சில்களில் அவர்களுக்கு எந்தப் பிரதிநிதித்துவமும் இல்லை. குழுவின் அறிக்கை, அவர்களைப் (தீண்டப்படாதவர்கள்) பற்றி இருமுறை குறிப்பிடுகிறது. ஆனால் திருப்திகரமான வாக்காளர் தொகுதிகள் இல்லாததன் காரணமாக, நியமனத்தின் மூலம் அவர் களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்னும் விஷயத்தை விளக்கிக்கூறும் சந்தர்ப்பத்தில்தான் அவர்களைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்த மக்களின் நிலை பற்றியோ, தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அவர்களுக்குள்ள ஆற்றலைப் பற்றியோ அந்த அறிக்கையில் எவ்வகையிலும் விவாதிக்கப்பட வில்லை. அது மட்டுமல்ல, அவர்கள் விஷயத்தில் அறிக்கை பரிந்துரைக்கும் பிரதிநிதித்துவத்தின் அளவும் குறிப்பிடப்பட வில்லை.:.. பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த மக்கட்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினராக உள்ள அவர்களுக்கு, மொத்தமுள்ள எண்ணூறு இடங்களில் ஏழு இடங்கள் ஒதுக்கப்படும் என்பதாக யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எல்லாக் கவுன்சில்களிலுமுள்ள அதிகாரி களில் ஆறில் ஒரு பங்கினர் தீண்டத்தகாதவர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டு செயல்படுவர் என எதிர்பார்க்கலாம் என்பது உண்மையே; ஆனால் சீர்திருத்தங்களைப்பற்றிய அறிக்கையின் நோக்கத்தை இந்த ஏற்பாடு அனுசரித்ததாக இல்லை என்று நாங்கள் கருதுகிறோம். தீண்டப்படாதவர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்வ தற்குக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிக்கையைத் தயாரித்தவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், அறுபது அல்லது எழுபது சாதி இந்துக்கள் இருக்கும் ஒரு சட்டமன்றத்தில் இச்சமூகத்தைச் சேர்ந்த ஒரே ஒரு உறுப்பினரைச் சேர்த்துக் கொள்வதன் மூலம் இதனைச் சாதிக்கமுடியும் என்று எதிர்ப்பார்ப்பது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கோட்பாடுகளை நல்லவிதமாக செயல்படுத்தவேண்டுமானால், ஒதுக்கிப்புறக்கணிக்கப்பட்டிருக்கும் இவர்களைத் தாராள மனப்பான்மையுடன் நாம் நடத்த வேண்டும்.''

தீண்டப்படாதவர்களுக்குக் குழு ஒதுக்கியுள்ள இடங்களை இரட்டிப்பாக்கவேண்டும் என்று அரசு பரிந்துரைத்தது. இதன்பிரகாரம் ஏழுஇடங்களுக்குப் பதிலாக அவர்களுக்குப் பதினான்கு இடங்கள் தரப்பட்டன. இந்திய அரசாங்கத்தின் பெருந்தன்மை நடைமுறைப் படுத்தப்பட்டபோது, அது ஒன்றும் அவர்களுக்கு, பெரிய நன்மை எதையும் செய்துவிடவில்லை. தீண்டத்தகாதவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயத்தை, அது அவர்களுக்கு வழங்கிடவில்லை.

1919இல் முறையாகத் தீர்க்கப்படாத பிரச்சினைகளில் தீண்டத்தகாதவர்களின் பிரச்சினையும் ஒன்றாகும். **சைமன் கமிஷன்** முன்னால் அது பூதாகாரமாக உருவெடுத்து நின்றது. அச்சமயம் இந்தியா மந்திரியாக இருந்த **பிர்க்கென்ஹெட்** பிரபுவின் விசேடக் கவனத்தை அதிர்ஷ்டவசமாக இப்பிரச்சினை ஈர்த்தது. **சைமன் கமிஷன்** நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர் நிகழ்த்திய சொற்பொழிவில் இவ்வாறு கூறினார்: (கையெழுத்துப் பிரதியில் இந்த இடம் காலியாக விடப் பட்டிருக்கிறது. தொகுப்பு ஆசிரியர்).

★★★

இயல்பாகவே இந்தப் பிரச்சினை சைமன் கமிஷனின் ஒரு விசேடப் பணியாயிற்று. இப்பிரச்சினை, பிரதிநிதித்துவம் சம்பந்தப் பட்ட ஒரு பிரச்சினையாக முன்வைக்கப்பட்டபோதிலும் அடிப் படையில், தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் ஓர் அரசியல் பிரச்சினையாகப் பரிணமித்தது. ஏனென்றால், அவர் களது எண்ணிக்கை உறுதிசெய்யப்பட்டாலன்றிச் சட்டமன்றத்தில் அவர்களுக்கு எந்த அளவுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும் என்பதைத் தீர்மானிக்க முடியாது.

எனவே, தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கை பற்றி சைமன் கமிஷன் தீவிரமாக ஆராயவேண்டியதேற்பட்டது. தமது பிரதேசத் தில் வசிக்கும் தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையைக் காட்டும் புள்ளிவிவர அறிக்கைகளை அனுப்பும்படி, அது பல்வேறு மாகாண அரசாங்கங்களையும் கேட்டுக்கொண்டது. இத்தகைய அறிக்கை களைத் தயாரிப்பதில் மாகாண அரசாங்கங்களும் தனி அக்கறை எடுத்துக் கொண்டன என்பது நன்கு தெரிந்ததே. எனவே, தீண்டத்தகாதவர் களின் மொத்த எண்ணிக்கை குறித்த புள்ளிவிவரங்களின் துல்லியம்

பற்றிய பிரச்சினை ஏதும் எழவில்லை. கீழே உள்ள அட்டவணை யில்* சவுத்பரோ குழுவின் அறிக்கைப்படியும் சைமன் கமிஷன் அறிக்கைப் படியும் தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கை தரப் பட்டிருக்கிறது.

## IV

ஆகத், தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கை சுமார் 5 கோடி என மதிப்பிடப்பட்டது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. இந்த எண்ணிக்கை 1911ஆம் வருட சென்சஸ் ஆணையராலும், அதே போன்று 1921ஆம் வருட சென்சஸ் ஆணையராலும் நிர்ணயிக்கப் பட்ட எண்ணிக்கையாகும்; 1929ல் **சைமன் கமிஷன்** இதனையே உறுதிசெய்தது. இருபது ஆண்டுக் காலமாகப் பதிவேட்டில் குறிக் கப்பட்டிருந்த இந்தப் புள்ளிவிவரங்களை ஆட்சேபித்து எந்த இந்துவும் குரல் எழுப்பவில்லை. அதற்குமாறாக, சைமன்கமிஷனுடன் ஒத்துழைக்கும்பொருட்டு மாகாண சட்டமன்றங்களும் மத்திய சட்டமன்றமும் நியமித்த பல்வேறு கமிட்டிகளின் அறிக்கை களைக் கொண்டு இந்துக்களின் கருத்தைக் கணித்துப்பார்க்கும் போது, அவர்கள் இந்தப் புள்ளிவிவரங்களை எத்தகைய முணு முணுப்புமின்றி ஏற்றுக்கொண்டார்கள் என்பதில் எத்தகைய ஐயமுமில்லை.

ஆனால் 1932இல் **லோதியன் கமிட்டி** அமைக்கப்பட்டு, அது தனது விசாரணையைத் தொடங்கியபோது இந்துக்களின் மனோ பாவத்தில் திடீரென்று மாற்றம் ஏற்பட்டது; அவர்கள் போர்க் கோலம் பூண்டு, இந்தப் புள்ளிவிவரங்கள் சரியானதென ஏற்க மறுத்துவிட்டனர். சில மாகாணங்களில் தீண்டத்தகாதவர்கள் என்று யாருமே இல்லை என்று மறுக்கும் அளவுக்குக்கூடச்சென்றனர். அதாவது முழுப்பூசணிக்காயைச்சோற்றில் மறைக்கும் 'திருப்பணியில்' இறங்கினர். இந்தச் சம்பவம் இந்துக்களின் மனப்பான்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது. எனவே, இது குறித்து இங்குச் சற்று விளக்கமாகக் கூறுவது பொருத்தமாக இருக்கும்.

இந்திய வட்டமேசை மாநாட்டின் வாக்குரிமைத் துணைக் கமிட்டியினது பரிந்துரையின் பேரிலேயே இந்த **லோதியன் கமிட்டி** அமைக்கப்பட்டது. கமிட்டி, இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம்

---

* கையெழுத்துப்பிரதியில் இந்த அட்டவணை தரப்படவில்லை.

செய்தது; மத்திய மாகாணங்களும் அசாமும் நீங்கலாக எல்லா மாகாணங்களுக்கும் சென்றது. இந்தக் கமிட்டிக்கு உதவிசெய்ய மாகாண அரசாங்கங்கள், மாகாணக் கமிட்டிகளை அமைத்திருந்தன. ஒவ்வொரு மாகாணத்திலும் பல்வேறு சிந்தனைப் போக்குகளைப் பிரதிபலிப் பவர்களும், பலதரப்பட்ட நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்து பவர்களும், கமிட்டிகளில் இடம்பெற்றிருந்தனர். இந்த மாகாணக் கமிட்டிகளில் மாகாணக் கவுன்சில்களின் உறுப்பினர்களே பெரும்பாலும் அங்கம் வகித்தனர். அதிகாரிகளல்லாதவர்கள் இக்கமிட்டிகளுக்குத் தலைவர்களாக இருந்தனர். விவாதத்துக்கு வழி செய்யும்பொருட்டு இந்திய வாக்குரிமைக் கமிட்டி ஒரு கேள்விப் பட்டியலை வெளியிட்டிருந்தது. விவாதிக்க வேண்டிய விஷயங்களும் மற்றும் இதர விஷயங்களும் இதில் குறிப்பிடப்பட்டிருந்தன. மாகாண அரசாங்கங்களும், மாகாணக் கமிட்டிகளும் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதற்கு ஒரு நடைமுறைத் திட்டத்தையும் வாக்குரிமைக் கமிட்டி வகுத்துத் தந்திருந்தது. இதன்படி, மாகாண அரசாங்கங் கள் கேள்விப்பட்டியலில் எழுப்பப்பட்டிருக்கும் விஷயங்கள் குறித்துத் தமது சொந்தக் கருத்துகளை உருவாக்கிக்கொள்ளவேண்டும்; அதன் பின்னர், அவை குறித்து வாக்குரிமைக் கமிட்டியுடன் விவாதிக்க வேண்டும். அதிகாரப்பூர்வமான ஆலோசகர்களாகக் கருதப்படும் மாகாணக் கமிட்டிகளோ, தாமே சுதந்திரமாகத் தமது சொந்தக் கருத்துகளை வகுத்துக்கொள்ள வேண்டும்; தமது உசிதம்போல் பூர்வாங்கமாக சாட்சிகளை விசாரித்து, அவர்களது வாக்குமூலங்களை எழுத்துமூலமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஆக, இவ்விதம் விரிவான விசாரணையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வாக் குரிமைக் கமிட்டியின் அறிக்கை, ஒரு முழு நிறைவான ஆவணமாக அமைந்ததில் வியப்பேதும் இல்லை.

இந்திய வாக்குரிமைக் கமிட்டி செய்யவேண்டிய பணிகளை விவரித்து அக்கமிட்டியின் தலைவரான லோதியன் பிரபுவுக்குப் பிரதமர் எழுதியிருந்த கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது:

''இந்திய வட்டமேசை மாநாட்டில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து நடைபெற்ற விவாதங்களிலிருந்து ஒரு விஷயம் தெள்ளத் தெளிவாயிற்று: அதாவது, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப் புதிய அரசியல் அமைப்புச்சட்டம் வகை செய்யவேண்டும். நியமனத்தின் மூலம் அவர்களுக்குப் பிரதிநிதித் துவம் அளிக்கும் முறை உசிதமானதல்ல என்பது புலனாயிற்று. தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்குத் தனிவாக்காளர் தொகுதிகள் அமைக்கப் படவேண்டுமா என்பது குறித்துக் கருத்து வேற்றுமை நிலவுவது உங்களுக்குத் தெரியும். எனவே, பொதுவாக்குரிமையை நீங்கள்

பரிந்துரைக்கக்கூடிய விதத்தில் விஸ்தரிப்பதன் மூலம், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பொதுமுறையான வாக்காளர் தொகுதிகளில் வாக் காளிப்பதற்கு எந்தஅளவுக்கு உரிமை பெறுவார்கள் என்பதனைச் சுட்டிக்காட்டி, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு உங்கள் கமிட்டியின் விசாரணை உதவிபுரிவதாக இருக்கவேண்டும்; இன் னொருபுறம், நாடு முழுவதுக்குமான அடிப்படையிலோ, அல்லது மக்கட்தொகையில் குறிப்பிடத்தக்க, திட்டவட்டமான சக்தியாக தாழ்த்தப்பட்டோர் விளங்கும் மாகாணங்களிலோ அவர் களுக்குத் தனித்தொகுதிகள் அமைப்பதென முடிவு செய்யப் பட்டால், இவ்வாறு அவர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் வழங்கும் முறையை வகுப்பதற்கு உதவக்கூடிய வகையில் உங்கள் கமிட்டி அவசியமான தகவல்களைச் சேகரித்து அளிக்க வேண்டும்.''

இதன்பேரில், இந்திய வாக்குரிமைக்கமிட்டி வெளியிட்ட கேள்விப்பட்டியலில் பின்கண்ட கேள்வியும் சேர்க்கப்பட்டது:

''தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் என எந்தச் சமூகங்களை நீங்கள் சேர்த்துக்கொள்வீர்கள்? தீண்டத்தகாதவர்கள் தவிர வேறு வகுப்பினரையும் இப்பட்டியலில் சேர்த்துக்கொள்வீர்களா? அவ்வாறாயின் எந்த வகுப்பினரைச் சேர்த்துக் கொள்வீர்கள்?''

'வாக்குரிமைக் கமிட்டியில் அப்போது நான் ஓர் உறுப்பினனாக இருந்தேன். நான் உறுப்பினானபோது, சாதி இந்துக்களுடன் நான் போராட வேண்டிய பிரச்சினை என்ன என்பதை அறிந்தே இருந்தேன்: தீண்டத்தகாதவர்களுக்குக் கூட்டுத்தொகுதியா, தனித்தொகுதியா என்பதே அந்த முக்கியமான பிரச்சினை. வாக்குரிமைக் கமிட்டியில் நிலைமை எங்களுக்கு அத்தனை சாதகமாக இருக்காது என்பதை அறிந்திருந்தேன். ஏனென்றால் தீண்டத்தகாதவர்களின் பிரதிநிதியாகக் கமிட்டியில் நான் ஒருவன் மட்டுமே இருந்தேன்; அதேசமயம் எங்களுக்கு எதிராக அரைடஜன் சாதி இந்துப்பிரதிநிதிகள் கமிட்டியில் இடம் பெற்றி ருந்தனர். இத்தகைய சமத்துவமற்ற போராட்டத்திற்கு என்னைத் தயார் செய்துகொண்டேன். இந்திய வாக்குரிமைக் குழு உறுப்பினர் பதவியை ஏற்பதற்கு முன்னர், நான் ஒரு நிபந்தனை விதித்தேன்: அதாவது தீண்டத்தகாதவர்களுக்குக் கூட்டு வாக்காளர் தொகுதிகள் இருக்க வேண்டுமா அல்லது தனிவாக்காளர்கள் தொகுதிகள் இருக்க வேண்டுமா என்னும் பிரச்சினை கமிட்டியில் விவாதிக்கப்படும் பிரச்சினைகளில் ஒன்றாக இருக்கக்கூடாது என்று கூறினேன். என் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. இப்பிரச்சினை, கமிட்டியின் அதிகார வரம்பிலிருந்து விலக்கப்பட்டது. எனவே, இந்தப் பிரச்சினையில் அதிக

வாக்குகள் வித்தியாசத்தில் நான் தோல்வியுறக்கூடும் என்ற அச்சம் எனக்கு இல்லாதுபோயிற்று. நான் கையாண்ட இந்த உத்திமுறை கமிட்டியின் இந்து உறுப்பினர்களைச் சீற்றம் கொள்ளச்செய்தது; இந்த விஷயத்தில் அவர்கள் என்னை ஒருபோதும் மன்னிக்கத்தயாராக இல்லை. ஆனால் நான் சற்றும் எதிர்பாராத மற்றொரு பிரச்சினை எழுந்தது. அதுதான், தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கை சம்பந்தப் பட்ட விஷயம். 1911 முதல் 1929 ஆம் ஆண்டுக்கு இடையே நான்கு வெவ்வேறு அதிகாரிகள் இந்தப் பிரச்சினையைப் பரிசீலனை செய்தனர்; தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 5 கோடி என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர். இதனால் இந்த விஷயம் குறித்துக் கமிட்டியில் எத்தகைய ஆட்சேபமும் எழுப்பப்பட மாட்டாது என்றே நினைத் திருந்தேன்.

ஆனால், வேதனையூட்டும் விபரீதம் என்னவென்றால், இந்த எண்ணிக்கைகள் பிரச்சினை குறித்துத்தான் இந்திய வாக் குரிமைக் கமிட்டியில் மிக உக்கிரமான, உணர்ச்சிக் கொந்தளிப் பான போராட்டம் நடைபெற்றது. தீண்டத்தகாதவர்கள் என்போர் களே இல்லை என்று குழுவுக்குப்பின் குழுவாக வந்து, சாட்சி களுக்குப் பின் சாட்சிகளாக வந்து பிடிவாதமாக வாதிட்டனர். இது மிகவும் அதிர்ச்சியூட்டுவதாக இருந்தது. தீண்டத்தகாதவர்கள் என்ற ஒரு வகுப்பினரே இல்லை என்று தனிப்பட்டவர்கள் பலர் இங்கு வந்து சாட்சியம் அளித்தனர். இவற்றைப் பற்றியெல்லாம் இங்கு விவரிப்பது சாத்தியமல்ல; அவசியமும் இல்லை. எனவே, தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கை பிரச்சினை குறித்து மாகாண வாக்குரிமைக் கமிட்டிகளும் அவற்றின் ஊறுப்பினர்களும் தெரிவித்த கருத்துகளையும் அவை சம்பந்தமான எனது அபிப்பிராயத்தையும் இங்குக் கூறினால் போதும் என்று நினைக்கிறேன்.

## பஞ்சாப்

பஞ்சாப் அரசாங்கத்தின் கருத்து வருமாறு:★

"குத்தகைதாரர்களுக்கு வாக்குரிமை அளிப்பது தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் கணிசமானோருக்கு வாக்குரிமை கிட்டச்செய்யும். அந்த அளவுக்குக் கவுன்சிலுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்

★ இந்திய வாக்குரிமைக் கமிட்டிக்கு பஞ்சாப் அரசாங்கம் சமர்ப்பித்த மகஜர். ஐ.எப்.சி. தொகுதி 3, பக்கம் (கையெழுத்துப் பிரதியில் குறிப்பிடப்படவில்லை.)

பதில் அவர்கள் செல்வாக்கு செலுத்துவதைச் சாத்தியமாக்கும் என்று பஞ்சாப் அரசாங்கம் கருதுகிறது. *''

### பஞ்சாப் மாகாண வாக்குரிமைக் கமிட்டியின் அபிப்பிராயம்

''முகமதியர்களிடையே தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் எவரு மில்லை; இந்துக்களிடையேயும் சீக்கியர்களிடையேயும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களது மொத்த எண்ணிக்கை 13,10,709 என்று கமிட்டியில் தீண்டத்தகாதவர்களின் பிரதிநிதிகளாக இடம் பெற்றிருந்த **கே.பி.தின் முகமதும்,** திரு. **ஹன்ஸ்ராஜும்** கூறினர். இந்தப்பட்டியல் அரைகுறையானது என்று ஹன்ஸ்ராஜ் கருத்துத் தெரிவித்தார்.''

''தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ஒரு தனி சமூகமாகக் கருதி அவர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் அளிக்க வகை செய்ய வேண்டும் என்று அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். சிவில் உரிமை கள் விஷயத்தில் தங்களது மதம் காரணமாகப் பாதிக்கப்பட்டவர் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, பஞ்சாபில் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் இருக்கின்றனர் என்று கூறுவது சாத்தியமல்ல என திரு. **நஸீர் ஹுசேன்,** ராய் பகதூர் **சௌத்ரி சோட்டு ராம்,** திரு. **ஓவன் ராபர்ட்ஸ், கே.பி. முகமது ஹயத்,** திரு.**குயர்ஷி,** திரு.**சட்டர்ஜி,** சர்தார் **பூட்டா சிங்,** பண்டிட் **நானக் சந்த்** ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர். தென்னிந்தியாவில் இருப்பதுபோன்று பஞ்சாபில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் எவரும் இல்லை; பொருளாதார ரீதியிலும் சமூக ரீதி யிலும் மிகவும் கீழ்ப்பட்ட வகுப்பினர் கிராமங்களில் இருந்தாலும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் ஒரு இந்து, தோல்பதனிடும் தொழிலாளியை அல்லது சாமரை ஒரு தனிவகுப்பைச் சேர்ந்தவர் என்று கருதப்படாத ஒரு முஸ்லீம் தோல் பதனிடும் தொழிலாளி அல்லது மோச்சியிடமிருந்து வேறுபடுத்திக் காண்பது சாத்தியமல்ல என்று கமிட்டித் தலைவரும், பண்டிட் நானக் சந்தும், சர்தார் பூட்டா சிங்கும் கூறினர்.''**

பஞ்சாப் அரசாங்கம் இக்கேள்விகட்குப் பதிலளிப்பதைத் தவிர்த்துவிட்டது என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். தாழ்த்தப்பட்டவர்கள் அல்லது தீண்டத்தகாதவர்கள் என்று ஒரு

---

★ பஞ்சாப் அரசாங்கத்தின் துணை மகஜர், ஐ.எப்.சி, தொகுதி III, பக்கம்229

★★ பஞ்சாப் மாகாண வாக்குரிமைக் கமிட்டி சமர்ப்பித்த மகஜர், ஐ.எப்.சி. தொகுதி 3, பக். 35.

வகுப்பினர் எவரும் பஞ்சாபில் இல்லை என்று பஞ்சாப் மாகாணக் கமிட்டி பெரும்பான்மை வாக்குகள் மூலம் தெரிவித்தது.

## ஐக்கிய மாகாணங்கள்
## மாகாண வாக்குரிமைக் கமிட்டியின் கருத்து

''தீண்டத்தகாதவர்கள் மட்டுமே 'தாழ்த்தப்பட்டோர்' என அழைக்கப்பட வேண்டுமென ஐக்கிய மாகாணங்கள் வாக்குரிமைக் கமிட்டி கருதுகிறது. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது தீண்டாமைப் பிரச்சினை இந்த மாகாணத்தில் இல்லை. பங்கிகள், தோம்கள், தனுக்குகள் இதற்கு விதிவிலக்கு; இவர்களில் தீண்டத் தகாதவர்களையும் சேர்த்து இவர்களது மொத்த எண்ணிக்கை 5,82,000 தான்.''*

தீண்டத்தகாதவர்களின் பிரதிநிதியாக ஐக்கிய மாகாணங்களின் வாக்குரிமைக் கமிட்டியில் உறுப்பினராக இருக்கும் **பாபு ராம் சகாய்** மேலே கூறியவற்றிற்கு மாறுபட்ட கருத்துத் தெரிவித்து, ஐக்கிய மாகாணங்களில் தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கை 11,435,417 என மதிப்பிட்டுக் கூறினார்.''** ஐக்கிய மாகாணங்கள் வாக்குரிமைக் கமிட்டியில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மற்றொரு உறுப்பினரான **ராய் சாகிப் பாபு ராம் சரண்,** ஐக்கிய மாகாணங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கை 2 கோடி எனக்குறிப்பிட்டார். ஐக்கிய மாகாணங்களில் தாழ்த்தப் பட்ட வகுப்பினரின் அதிகபட்ச எண்ணிக்கை 1 கோடி 70 லட்ச மாகவும், குறைந்தபட்ச எண்ணிக்கை சுமார் பத்துலட்சத்துக்குக் கீழாகவும் இருக்கும் என்று அரசாங்கம் தெரிவித்தது. குறைந்தபட்ச எண்ணிக்கை 67,73,814 ஆக இருக்கும் என்று அது கருதிற்று.

### வங்காளம்

வங்க மாகாண வாக்குரிமைக் கமிட்டி தனது முதல் அறிக்கையில் கூறியதாவது:

''இந்தப் பிரச்சினையில் கமிட்டியால் எந்த முடிவுக்கும் வர

---

★ ஐ.எப்.சி, தொகுதி 3, பக்கம் 398.

★★ அதே நூல், பக்கம் 440

இயலவில்லை. மத்தியக் கமிட்டியுடன் சேர்ந்து மீண்டும் பரிசீலிக்க அது முடிவு செய்தது.

தனது இறுதி அறிக்கையில் இதே கமிட்டி கூறியதாவது:

'' தீண்டாமை, அணுகமுடியாமை என்னும் பதங்கள் இந்தியாவின் இதர பகுதிகளில் பொருள் கொள்ளப்படும் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, புய்மாலிங்களைத் தவிர, இந்த மாகாணத்தில் தாழ்த்தப்பட்டோர் என்ற வகுப்பினர் எங்கும் இல்லை என்றே கூற வேண்டியுள்ளது.''*

வங்க மாகாண வாக்குரிமைக் கமிட்டியில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதியாக உள்ள திரு.முல்லிக் வேறுபட்ட கருத்தை வெளியிட்டார்; தீண்டத்தகாத வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் என்று 86 சாதிகள் அடங்கிய பட்டியல் ஒன்றைத் தந்தார்.

## பீகாரும் ஒரிசாவும்

பீகாரிலும் ஒரிசாவிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கை 1911ஆம் வருட சென்சஸ்படி 93,00,000;** 1921 ஆம் வருடச் சென்சஸ்படி 80,00,000.*** ஆனால் பீகார், ஒரிசா மாகாண வாக்குரிமைக் கமிட்டி தனது அறிக்கையில்**** பின்கண்டவாறு குறிப்பிட்டிருந்தது:

''தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்ற பகுப்பின்கீழ்வரும் சாதியினர் அல்லது பிரிவினரின் ஒரு விரிவான பட்டியலை அளிப்பது என்பது கடினமான காரியம். முஸஹார்கள், துஸாத்கள், சாமர்கள், தோம்கள் ஆகிய வகுப்பினரை மட்டும்தான் தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறமுடியும். ஆனால், ஒரு தனிவாக்காளர் பட்டியலில் சேர்க்கும் அளவுக்கு அவர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லை. மேலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பிரச்சினை, பம்பாய் அல்லது தென்னிந்தியாவில் போன்று இங்கு அத்தனை முனைப்பானதாக, கடுமையானதாக இல்லை. ஆதலால் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு விசேடப்

---

★ மேற்படி நூல், பக்கம் 230

★★ 'டாக்டர் அம்பேத்கரின் எழுத்தும் பேச்சும்' என்னும் நூல் தொகுதி 2, பக்கம் 437

★★★ மேற்படி நூல், பக்கம் 431

★★★★ ஐ.எப்.சி, தொகுதி3, பக்கம் 129

பிரதி நிதித்துவம் அளிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கமிட்டி கருதுகிறது.''

இதே கமிட்டி தனது இறுதி அறிக்கையில் கூறியிருப்ப தாவது:★ ''புஸாத்துக்கள், சாமர்கள், தோம்கள், ஹலால்கோர்கள், ஹரிகள், மோச்சிகள், முஸஹார்கள், பான்பாசிகள் ஆகியோரே பொதுவாகத் தீண்டத்தகாதவர்கள் எனக் கருதப்படுகின்றனர்...... எனினும் பம்பாய் அல்லது தென்னிந்தியாவைப் போன்று இங்குள்ள தாழ்த்தப்பட்டோருக்கு அவ்வளவு அதிகமாக குறைபாடுகள் இல்லாததால் அவர்களுக்கு விசேடப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டியதில்லை என்று கமிட்டியில் பெரும்பாலோர் கருதுகின்றனர்.''

தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையைக் கோடிக்கணக் கிலிருந்து ஏன் திடீரென்று பின்னத்துக்குக் குறைக்க இந்துக்கள் முற்பட்டுள்ளனர்? 1911ஆம் ஆண்டிலிருந்தே இந்த எண்ணிக்கை 5 கோடியாக இருந்து வந்திருக்கிறது. இது குறித்து எவரும் ஐயப்பாடு எழுப்பியதில்லை. அப்படியிருக்கும்போது, இந்த எண்ணிக்கை யின் துல்லியத்தை மறுதலிக்க எந்த ஆதாரமும் இல்லாமலேயே 1932இல் இந்துக்கள் இந்த விஷயத்தில் இவ்வளவு உடும்புப் பிடி வாதமான போக்கைக் கடைப்பிடித்தது ஏன்?

இதற்குப் பதிலளிப்பது மிகவும் எளிது. 1932 வரை தீண்டத் தகாதவர்கள் எத்தகைய அரசியல் முக்கியத்துவத்தையும் பெற்றிருக்க வில்லை. பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் ஆகிய சதுர் வருணங்களை மட்டுமே அங்கீகரிக்கும் இந்து சமுதாயத் துக்கு வெளியே தீண்டத்தகாதவர்கள் இருந்த போதிலும், அரசியல் நோக்கங்களுக்காக அவர்கள் இந்து சமுதாயத்தின் ஒரு பகுதி யாகவே கருதப்பட்டு வந்துள்ளனர். இதனால், சட்டமன்றப் பிரதி நிதித்துவம் போன்ற விஷயங்களில் தீண்டத்தகாதவர்களின் எண் ணிக்கைப் பிரச்சினை அச்சமயம் எவ்வகையிலும் முக்கியத்துவம் பெறவில்லை. சட்டமன்ற இடங்களை இந்துக்களும் முஸ்லீம்களும் எப்படித் தங்களுக்குள் பிரித்துக் கொள்வது என்பதே 1932 வரை முக்கிய அரசியல் பிரச்சினையாக இருந்து வந்தது. இந்துக்களின் பங்குக் குரிய இடங்களைத் தீண்டத்தக்கவர்களுக்கும் தீண்டத்தகாதவர் களுக்கும் இடையே பிரித்துக் கொள்ளும் பிரச்சினையே அப்போது

★ ஐ.எப்.சி. தொகுதி 3, பக்கம் 188

எழவில்லை. எல்லா இடங்களும் தீண்டத்தக்க இந்துக்களுக்கே போய்ச் சேர்ந்துவந்தன. இதன் காரணமாகத் தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிந்து கொள்வதற்குச் சாதி இந்துக்கள் சிறிதும் அக்கறை கொள்ளவில்லை; அது பற்றி அவர்கள் எத்தகைய கவலையும் கொள்ளவில்லை. ஆனால் 1932ஆம் ஆண்டு வாக்கில் நிலைமை அடியோடு மாற்றமடைந்தது. சட்ட மன்ற இடங்களைப் பிரித்துக் கொள்வது இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையேயான சமாசாரமாக இனியும் இருக்கவில்லை. சட்டமன்ற இடங்களை இந்துக்களும் முஸ்லீம்களும் மட்டுமே பங்கு போட்டுக் கொள்ளக் கூடாது, இந்துக்களுக்கான இடங்கள் மேலும் பிரிக்கப்பட்டுத், தீண்டத் தகாதவர்களுக்கான பங்கை அவர்கள் அனுபவிக்கப் பிரித்துத் தர வேண்டும் என்று தீண்டத்தகாதவர்கள் கோரிக்கை முன்வைக்கத் தொடங்கினர். பங்கிட்டுக்கொள்ளும் இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு, இந்திய வட்டமேசை மாநாட்டுக்குத் தீண்டத்தகாதவர்கள் தங்கள் வகுப்பைச் சேர்ந்த தங்கள் சொந்தப் பிரதிநிதிகளை அனுப்பவும் அனுமதிக்கப் பட்டனர். தீண்டத்தகாதவர்களின் தனித்துவம் இவ்வாறு அங்கீகரிக்கப்பட்டது மட்டுமல்ல, இந்திய வட்டமேசை மாநாட்டின் சிறுபான்மையினர் துணைக் கமிட்டி இன்னும் ஒருபடி மேலே சென்றது. புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அவர்களது மக்கட் தொகைக்கு ஏற்ப இடங்கள் ஒதுக்க வேண்டும் என்ற கோட்பாட்டை அது ஏற்றுக் கொண்டது. இவ்வாறு தீண்டத் தகாதவர்களின் மக்கட் தொகைப் பிரச்சினை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகப் பரிணமித்தது. இதனால் தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கை எவ்வளவு குறைவாக நிர்ண யிக்கப்படுகிறதோ அந்த அளவுக்குத் தீண்டத்தக்க இந்துக்கள் அதிக அரசியல் பிரதிநிதித்துவம் பெறுவர். தீண்டத்தகாதவர்களின் மக்கட் தொகைப் பிரச்சினை பற்றி 1932க்கு முன்னர் கவலைப்படாத தீண்டத்தக்க இந்துக்கள், 1932க்குப் பிறகு தாழ்த்தப்பட்டவர்கள் என்ற ஒரு வகுப்பினர் இருப்பதையே மறுக்கத் தொடங்கினர்.

தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்று **லோதியன்** கமிட்டியில் இந்துக்கள் வலியுறுத்தி வாதாடிய போது, அதற்கு இரண்டு தட்டிக்கழிக்கும் காரணங்களை முன் வைத்தனர்: சென்சஸ் ஆணையர் அளித்துள்ள புள்ளி விவரங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கானதேயன்றித் தீண்டத்தகாதவர்களுக் கானதல்ல, மேலும் தாழ்த்தப்பட்டோர் என்ற பட்டியலில் தீண்டத் தகாதார் மட்டுமன்றி, வேறு பல வகுப்பினரும் அடங்கியுள்ளனர் என்பது அவர்கள் கூறிய முதல் காரணம். அடுத்து, அவர்கள் முன்வைத்த இரண்டாவது காரணம் என்ன என்பதைப் பார்ப்போம்: தீண்டத்

தகாதவர்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும்போது, தீண்டத்தகாதவர் என்ற பதத்தின் பொருள்வரையறை அனைத்து இந்தியாவுக்கும் ஒரே மாதிரியானதாக, எல்லா மாகாணங்களுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். சுருக்கமாகச் சொன்னால், தீண்டாமை என்பதற்கு ஸ்தல அளவில் பொருள் கொள்வதை அவர்கள் எதிர்த்தனர்.

முதலாவது வாதம் முற்றிலும் அபத்தமானது, அர்த்தமற்றது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்ற பதம் தீண்டாதோரைக் குறிக்கும் ஒரு மறுபெயரே அன்றி வேறல்ல; அதே போன்று, தீண்டத்தகாதவர்களைக் குறிப்பதற்கே தாழ்த்தப்பட்டோர் என்ற பதம் பயன்படுத்தப்பட்டு வந்தது; இப்பிரிவினரில் அடங்கும் சில பகுதியினரின் மனத்தை தீண்டத்தகாதவர்கள் என்ற பதம் புண்படுத்தக்கூடும் என்பதாலேயே தீண்டத்தகாதவர்களைக் குறிக்கத் தாழ்த்தப்பட்டவர் என்ற பதம் உபயோகப்படுத்தப்பட்டது. தாழ்த்தப்பட்டோரைக் குறிப்பதற்கு மட்டுமே இது பயன்படுத்தப்பட்டதே அல்லாமல், ஆதிவாசிகள், குற்றப்பரம்பரையினர் போன்றோர் இதில் சேர்க்கப்படவில்லை. 1916இல் இம்பீரியல் சட்ட மன்றத்தில் மதிப்பிற்குரிய திரு. **தாதாபாய் நௌரோஜி** முன்மொழிந்த தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் இது தெள்ளத் தெளிவாயிற்று. யார் தீண்டத்தகாதவர் என்பதை நிர்ணயிப்பதற்குக் கையாளும் முறை, ஒரே மாதிரியானதாக இருக்க வேண்டும் என்பது, சாதி இந்துக்கள் முன்வைத்த இரண்டாவது வாதம். தீண்டாதோரின் எண்ணிக்கையைக் குறைப்பதே இந்த வாதத்தின் அடிப்படை நோக்கம். தீண்டாமை என்பது இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளிலும் வெவ்வேறு ரூபங்களில் உள்ளது. இந்தியாவின் சில பகுதிகளில் தீண்டத்தகாதவர்களைப் பார்ப்பதே பாவம்; தீண்டத்தக்க ஓர் இந்துவின் கண்ணில் படும்படியான தூரத்தில் ஒரு தீண்டத்தகாதவன் வந்து விட்டால் தீட்டு உண்டாகிவிடும். வேறு சில பகுதிகளில் தீண்டத் தகாதவர்கள் அருகில் வருவதே பெரும் குற்றம். இதனால், அவர்களால் தீட்டு உண்டாகி விடுகிறது. இதிலும் இரண்டு வகை உண்டு. ஒன்றில், தீண்டத்தக்க ஒரு இந்து இருக்கும் இடத்திற்கு ஒரு குறிப்பிட்ட தூரத்திற்குள் தீண்டத்தகாதவன் வரமுடியாது. மற்றொன்றில், ஓர் இந்துவின் மீது தனது நிழல் படும்படியாக வெகு அருகில் ஒரு தீண்டத்தகாதவன் வரக்கூடாது. நாட்டின் சில பகுதிகளில் தண்ணீரையோ அல்லது உணவையோ தொடுவதற்குத் தீண்டப்படாதவன் அனுமதிக்கப்படுவதில்லை. வேறு சில பகுதிகளில் தீண்டத்தகாதவன் கோவிலுக்குள் செல்லத் தடை உண்டு. இவ்வாறு, நாட்டில் தீண்டத்

தகாதவர்கள் பல்வேறு பிரிவினராக இருக்கும் நிலைமையில், பார்க்கத்தகாமையை மட்டுமே தீண்டாமைக்கு அறிகுறிச் சான்றாக எடுத்துக் கொள்ளும் பட்சத்தில், அணுகக்கூடாதவர்களைத் தீண்டத் தகாதவர்வகை வகுப்பினரிலிருந்து விலக்கிவைக்க நேரிடும். இதேபோன்று, அணுகக்கூடாமையைத் தீண்டாமைக்கு அறிகுறிச் சான்றாக எடுத்துக் கொள்வதனால், தொட்டால் மட்டுமே தீட்டு ஏற்படக்கூடியவர்களைத் தீண்டத்தகாதவர் வகை வகுப்பினரிட மிருந்து நீக்கி வைக்க நேரிடும். இவ்வாறே, தொடுவது தீட்டை உண்டு பண்ணிவிடும் என்பதைத் தீண்டாமையின் அறிகுறியாகக் கொள்ளும் பட்சத்தில், கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கப்படாதவர்களைத் தீண்டத் தகாதவர்கள் என்ற பட்டியலிலிருந்து ஒதுக்கி வைக்க நேரிடும். இதைத்தான் இந்துக்கள் செய்ய விரும்பினர். தீண்டத்தகாதவர்கள் என்பவர்கள் யார் என்பதை நிர்ணயிப்பதற்கு நாடு முழுவதற்கும் ஒரே மாதிரியான அளவுகோலைக் கைக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதன் மூலம் சில வகுப்பினரைத் தீண்டத்தகாதவர்கள் வரிசையிலிருந்து அப்புறப்படுத்தவும் அதன் மூலம் தீண்டத்தகாத வர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் அவர்கள் விரும்பினர். தீண்டாமை என்பது ஒரு குறிப்பிட்ட நபரின்பால் ஒரு இந்துவுக்கு உள்ளத்தில் உள்ள வெறுப்பின் வெளிப்புறச் சின்னமேயாகும். இந்த வெறுப்பின் வெளிப்புற வடிவம் இடத்துக்கு இடம், காலத்திற்குக் காலம் வேறுபடலாம். சுருக்கமாகச் சொன்னால் இந்த வடிவம் வெறுப்பின் அளவையே குறிக்கிறது. எங்கெல்லாம் இந்த வெறுப்பு நிலவுகிறதோ, அங்கெல்லாம் தீண்டாமை நிலவுகிறது. இந்த சர்வசாதாரண உண்மையை இந்துக்கள் நன்கு அறிவார்கள்.

அப்படியிருந்தும் தீண்டத்தகாதவர்கள் யார் என்பதை நிர்ணயிப்பதற்கு நாடு முழுவதும் ஒரே மாதிரியான அளவுகோலைக் கைக்கொள்ள வேண்டும் என்று இந்துக்கள் வலியுறுத்தியதற்குக் காரணம் என்ன? எப்படியேனும் தீண்டத்தகாதவர்களின் எண் ணிக்கையைக் குறைத்து, அதன் மூலம் அரசியல் பிரதிநிதித்துவத்தின் பெரும் பங்கைத் தாங்கள் அபகரித்துக்கொள்ள அவர்கள் விரும்பியதே இதற்குக் காரணம்.

## VI

இந்துக்களுக்கும் தீண்டத்தகாதவர்களுக்கும் இடையேயான போராட்டமே பிரதான போர்க்களமாக அமைந்திருந்தது என்பதில் ஐயமில்லை. எனினும் இந்தப் போர்க்களத்திற்குள்ளும் மற்றொரு போர்க்களம் உருவாகி இருந்தது. அது சற்றுச் சிறிய போர்க்களமேயாயி னும், மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. பிற்பட்ட வகுப்பினருக்கும்

தீண்டத்தகாதவர்களுக்கும் இடையேயான போராட்டத்தையே இங்குக் குறிப்பிடுகிறோம். தாழ்த்தப்பட்டவர்கள் என்னும் பிரிவில் தீண்டத்தகாதவர்கள் மட்டுமின்றிப் பொருளாதார ரீதியிலும் கல்வி ரீதியிலும் பின்தங்கியிருக்கும் வகுப்பினரும் சேர்க்கப் பட வேண்டும் என்று பிற்பட்ட வகுப்பினரின் பிரதிநிதிகள் வாதிட் டனர். தீண்டத் தகாதவர்களுக்கு மட்டுமன்றிப் பொருளாதாரத்திலும் கல்வித் துறை யிலும் பின்தங்கி இருப்பவர்களுக்கும் தனிப்பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களின் நோக்கம் பாராட்டு தற்குரியதே. இந்த வாதத்தை முன்வைப்பதன் மூலம் அவர்கள் புதிதாக ஒன்றும் கேட்டுவிடவில்லை. 1920இல் நடைமுறைக்கு வந்த திருத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின்படி, பம்பாய், சென்னை ஆகிய இரண்டு மாகாணங்களிலும் பொருளாதார ரீதியிலும் கல்வி ரீதியிலும் பின்தங்கியிருக்கும் வகுப்பினருக்கு இந்த உரிமை அங்கீகரிக்கப்பட்டது. பம்பாயில் மராட்டியர்களும் அவர்களுடன் இணைந்த சாதியினரும், அதேபோன்று சென்னையில் பிராமண ரல்லாதோரும் பொருளாதார, கல்வித் துறைகளில் பின்தங்கியவர்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. இந்த வகுப்பினருக்கு விசேடப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்றால், பிராமணர்கள் போன்ற சிறுபான்மை உயர்சாதி இந்துக்களால் அவர்கள் அரசியல் ரீதியில் ஒடுக்கப்படக்கூடும் என்று அஞ்சப்பட்டது. இதே நிலையிலுள்ள இதர பல வகுப்பினர்களும் ஏனைய மாகாணங்களில் இருக்கின்றனர்; அவர்கள், மேல் சாதியினரால் ஒடுக்கப்படுவதைத் தடுப்பதற்காக அவர்களுக்கு விசேட அரசியல் பிரதிநிதித்துவம் அளிப்பது அவசியம். எனவே இந்துக்களில் பிற்பட்டவர்களாக இருக்கும் வகுப்பினரின் பிரதிநிதிகள், தங்கள் இனத்தவருக்கும் விசேடப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கோரியது முறையேயாகும்! அவர்களது கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கு மாயின் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மொத்த எண்ணிக்கை பிரம் மாண்டமான பரிமாணத்தை எட்டியிருக்கும். ஆனால் தீண்டத் தகாதவர்களும் சரி, உயர் சாதி இந்துக்களும் சரி, அவர்களை ஆதரிக்கவில்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட முயற்சி என்று இந்துக்கள் இதனை எதிர்த்தனர். உண்மையில் தீண்டத்தகாதவர்களாக இல்லாதவர்களைத் தங்கள் அணியில் சேர்த்துக் கொள்வதைத் தீண்டத்தகாதவர்கள் விரும்பவில்லை. தீண்டத்தக்க இந்துக்களை முன்னேறியவர்கள் என்றும், பிற்பட்டவர்கள் என்றும் இரண்டாகப் பிரித்து, பிற்பட்டவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று பிற்பட்ட வகுப்பினர் கோரியிருக்க வேண்டும்;

இதுவே முறையானதாக, சரியானதாக இருந்திருக்கும்.* அவ்வாறு செய்திருந்தால் அவர்களது முயற்சிக்குத் தீண்டத்தகாதவர்கள் தங்கள் ஆதரவை அளித்திருப்பார்கள். ஆனால் பிற்பட்ட வகுப்பினர் இதற்கு இணங்கவில்லை; தங்களைத் தாழ்த்தப்பட்ட இனத்தவர் பிரிவில் சேர்க்க வேண்டும் என்றே அவர்கள் பிடிவாதமாக வலியுறுத்தி வந்தனர். தங்கள் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள இதுதான் எளிதான வழி என்று அவர்கள் நினைத்ததே இதற்குக் காரணம். ஆனால், தீண்டத் தகாதவர்கள் இதனை எதிர்த்ததால் பிற்பட்ட வகுப்பினர் திசை திரும்பி இந்துக்களுடன் சேர்ந்து கொண்டனர்; அதுமட்டுமல்ல, தீண்டத்தகாதவர்கள் என்ற வகுப்பினரே இல்லை என்று இந்துக் களைவிட மிக உக்கிரமாக மறுக்கவும் தலைப்பட்டனர்.

தீண்டத்தக்கவர்களுக்கும் தீண்டத்தகாதவர்களுக்கும் இடையே நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், தீண்டத்தகாதவர்களுக்கு முகமதியர்களிடமிருந்து எத்தகைய ஆதரவும் கிடைக்கவில்லை. பஞ்சாப் சமூகத்தினரில் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படுபவர்கள் இருக்கிறார்கள் என்று பஞ்சாப் மாகாண வாக்குரிமைக் கமிட்டியில் அச்சமூகத்தின் பிரதிநிதி ஒருவர் கூறியபோது, முகமதியர் பிரதிநிதி களில் ஒருவர் மட்டும்தான் அவரை ஆதரித்துப் பேசினார். கமிட்டி யிலிருந்த ஏனைய முகமதிய பிரதிநிதிகள் வாய்மூடி மௌனிகளாக இருந்தனர்; தீண்டத்தகாதவர்களுக்கு எத்தகைய ஆதரவையும் அவர்கள் தெரிவிக்கவில்லை.

வங்காளத்திலும் இதே கதைதான் நடைபெற்றது. இந்த விஷயத்தில் கருத்து ஏதும் தெரிவிப்பதில்லை என்று வங்க மாகாண வாக்குரிமைக் கமிட்டியில் இருந்த இந்து உறுப்பினர்களும் முகமதிய

★ பிற்படுத்தப்பட்டோர் சம்பந்தமான இத்தகைய கோரிக்கை பிரதானமாக ஐக்கிய மாகாணங்களிலிருந்துதான் முன்வைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பின ருக்கு இத்தகையதோர் ஏற்பாடு செய்வது அவசியம் என்பதை வலியுறுத்தி ஐக்கிய மாகாணங்களின் அரசாங்கம், சைமன் கமிஷனிடம் ஒரு மகஜர் சமர்ப்பித்தது. ஐ.மா. சட்டமன்றத்தின் இயைபு பற்றி அந்த மகஜரில் அது குறிப்பிட்டிருந்ததாவது: ''இந்த மாகாணத்தில் பிராமணர்கள், தாகூர்கள், வைசியர்கள், காயஸ்தர்கள் ஆகிய நான்கு பிரதான இந்து சாதியினர் மொத்த மக்கட் தொகையில் 21.5 சதவீதமாக உள்ளனர்; ஆனால் சட்டமன்றத்திலுள்ள இந்து உறுப்பினர்களில் 93 சதவீதத்தினர் இந்த நான்கு சாதிகளைச் சேர்ந்தவர்களே ஆவர். மக்கட்தொகையில் 1.8 சதவீதத்தினராக உள்ள ஜாட்டுகள் இந்துக்களுக்கான இடங்களில் 5 சதவீதத்தைப் பெற்றுள்ளனர்; உண்மையான வேளாண் சாதியினர் உட்பட இதர சாதியினர் அனைவரும் இந்துக்களின் தொகையில் 76 சதவீதத்துக்கு அதிகமாக இருந்தும், சட்டமன்றத்தில் 2 சதவீதப் பிரதிநிதித்துவத் தையே பெற்றுள்ளனர்.'' பக்கம் 560.

உறுப்பினர்களும் இரகசியமாகக் கூடிப்பேசி முடிவு செய்து கொண்டனர். இவ்வாறு முகமதியர்கள் ஊமை வேடம் பூண்டது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. தீண்டத்தகாதவர்களை ஒரு தனி அரசியல் சக்தியாக அங்கீகரிப்பது முகமதியர்களின் நலன்களுக்கு உகந்ததாக இருந்திருக்கும். தீண்டத்தக்கவர்களுக்கும் தீண்டத்தகாத வர்களுக்கும் இடையேயான இந்த வேறுபாடு அவர்களுக்குத் தான் நன்மை பயக்கக்கூடியது. அவ்வாறிருக்கும்போது, இந்த எண்ணிக்கைப் போராட்டத்தில் அவர்கள் தீண்டத்தகாதவர்களை ஏன் ஆதரிக்க வில்லை? முகமதியர்கள் இந்த நிலையை மேற்கொண்டதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவதாக, முகமதியர்கள் தங்களது எண்ணிக்கை விகிதாசாரத்துக்கும் அதிகமாகவே பிரதிநிதித்துவம் கோரி வருகிறார்கள். இந்திய அரசியல் பரிபாஷையில் இதனை 'மிகுதியான பிரதிநிதித்துவம்' என்பார்கள். தங்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் அளித்தால், அது இந்துக்களுக்குத்தான் இழப்பை உண்டுபண்ணும் என்பதை அவர்கள் அறிவார்கள். இந்த இழப்பை இந்துக்களில் எந்தப் பகுதியினர் ஏற்பது என்பதுதான் பிரச்சினை. தங்களுக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படாமல் முஸ்லீம்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் கொடுப்பதில் தீண்டத்தக்க இந்துக்களுக்கு எந்த ஆட்சேபமும் இல்லை. ஆனால், இதை எவ்வாறு செய்வது என்பதே பிரச்சினை. தீண்டத்தகாதவர்களின் பங்கைக் குறைப்பதுதான் இதற்கு ஒரே வழி. அவர்களது பங்கைக் குறைப்பதென்றால் அவர்களது எண்ணிக்கையைக் குறைத்துக் காட்ட வேண்டும். எண்ணிக்கைக்கான இந்தப் போராட்டத்தில் முகமதியர்கள் தீண்டத்தகாதவர்களை ஆதரிக் காததற்கு இதுவும் ஒரு காரணம். முகமதியர்கள் தீண்டத்தகாதவர் களுக்கு உதவ முன்வராததற்கு இந்துக்கள், எங்கே தங்கள் பலவீனங்களை அம்பலப் படுத்திவிடுவார்களோ என்பது இரண்டாவது காரணம். இனம், நிறம் இவற்றையெல்லாம் கடந்து, பலதரப்பட்ட மக்களையும் சகோதரத்துவ அரவணைப்பில் மிக நெருக்கமாக இணைக்கக்கூடிய ஒரு மதம் இஸ்லாம். ஆனால் இந்திய முஸ்லீம்களிடையே சாதியை வேரறுப்பதில் இந்தியாவில் இஸ்லாம் வெற்றிபெறவில்லை. முஸ்லீம்களிடையே சாதி உணர்வு இந்துக்கள் மத்தியில் இருப்பது போன்று அத்தனை உக்கிரமானதாக, நச்சுத்தன்மை கொண்டதாக இல்லை. எனினும் முஸ்லீம்களிடையே சாதி உணர்வு இருந்து வரவே செய்கிறது என்பதை மறுக்க முடியாது. முஸ்லீம்களிடையே காணப்படும் இந்த சாதி உணர்வு சமூக ஏற்றத்தாழ்வுக்கு இட்டுச் செல்லுகிறது; இந்திய முஸ்லீம் சமூகத்தின் ஓர் அம்சம் இது; இந்த விஷயத்தை ஆராய வாய்ப்புப் பெற்றவர்கள் அனைவரும் இதனைக்

கவனித்திருப்பார்கள். வங்காள சென்சஸ் ஆணையர் தமது அறிக்கையில் பின்வருமாறு கூறுகிறார்: (இந்த மேற்கோள் கையெழுத்துப் பிரதியில் காணப்பட வில்லை - தொகுப்பு ஆசிரியர்).

இந்த உண்மைகள் யாவும் இந்துக்களுக்கு நன்கு தெரியும். இந்த எண்ணிக்கைப் போராட்டத்தில் தீண்டத்தகாதவர்களுக்கு உதவுவதில் முஸ்லீம்கள் வரம்பு மீறிச் சென்றால், அவர்களை அம்பலப் படுத்துவதற்கு இந்துக்கள் முற்றிலும் தயாராக இருந்தார்கள். ஏனென்றால் சட்டமன்றத்தில் சாதிஇந்துக்களுக்கான இடங்கள் குறைவதைச் சகித்துக் கொள்ள அவர்கள் சித்தமாக இல்லை. முஸ்லீம்களும் தங்களது பலவீனங்களை நன்கு அறிந்தே இருந்தார்கள். முகமதியர் களிடையே நிலவும் சமூக ஏற்றத்தாழ்வுகளை, பிரிவினைகளைக் கிண்டிக்கிளறி உலகறியச் செய்வதற்கு இந்துக்களுக்கு ஒரு சாக்குப் போக்கை அளிக்க முஸ்லீம்கள் விரும்பவில்லை; மேலும் சாதி இந்துக்களுக்கு ஆத்திரமூட்டாத வகையில் நடந்து கொள்வதுதான் தங்களது நலன்களுக்கு உகந்தது என்றும் அவர்கள் கருதினார்கள்.

இவ்வாறு தங்களது எண்ணிக்கைக்கான போராட்டத்தைத் தன்னந்தனியாக நடத்த வேண்டிய நிலைக்குத் தீண்டத்தகாதவர்கள் தள்ளப்பட்டார்கள். ஆனால் இதிலும்கூட தங்கள் முழுச் சக்தியையும் திரட்டுவதில் இடர்ப்பாடு ஏற்பட்டது. தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் தாங்கள் வெற்றிபெற முடியாது என்பதைத் தெரிந்து கொண்ட இந்துக்கள் வேறு பல உபாயங்களைக் கைக்கொள்வதில், அஸ்திரங்களைப் பிரயோகிப்பதில் ஈடுபட்டனர்; தீண்டத்தகாத சமூகங்களின் பட்டியல் ஒன்றை அரசாங்கம் தயாரித்து வருகிறது என்றும், இத்தகைய ஒரு பட்டியலில் ஒரு சமூகத்தின் பெயர் இடம்பெறச் செய்ய அனுமதிப்பது தவறு என்றும், இது தீண்டாமையை நிலைத்திருக்கச் செய்யும் என்றும் அவர்கள் தவறான பிரசாரம் செய்து, தீண்டத்தகாதவர்களைத் திசை திருப்ப முயன்றனர். இதன் விபரீத விளைவு என்ன தெரியுமா? உண்மையில் தீண்டத்தகாத சமூகத்தினரான பல சமூகத்தினர் தாங்கள் தீண்டத்தகாத சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவென்றும், எனவே தங்கள் சமூகத்தின் பெயரைப் பட்டியலில் சேர்க்கக் கூடாது என்றும் மனுக்கள் அனுப்ப ஆரம்பித்தனர். இத்தகைய சமூகத்தினரிடம் எதார்த்த நிலையை விளக்கிக் கூறியும், சட்டமன்றத்தில் அவர்களுக்குரிய இடங்களை நிர்ணயிப்பதே அவர்களது எண்ணிக்கையைக் கணக்கிடுவதன் உண்மையான நோக்கம் என்பதைத் தெள்ளத் தெளிவாக

விளக்கியும் அவர்கள் தங்கள் மனுக்களைத் திரும்பப்பெற்றுக் கொள்ளச் செய்வதற்கு மிகுந்த சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டிய தாயிற்று.

அதிர்ஷ்டவசமாக இந்தப் போராட்டம் இப்போது முடிவுக்கு வந்துவிட்டது; இது குறித்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது. தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கைக் குறித்து இனி எவரும் ஒருபோதும் வீண் விதண்டாவாதம் செய்ய முடியாது. தீண்டத் தகாதவர்கள் என்னும் பதத்துக்கு இப்போது சட்டரீதியாகவே விளக்கம் தரப்பட்டு விட்டது. தீண்டத்தகாதவர்கள் என்பவர்கள் யார் என்பது 1935 ஆம் வருட இந்திய அரசாங்கச் சட்டத்துடன் இணைக்கப்பட்ட ஓர் அட்டவணையில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது; அவர்களை ஷெட்யூல்டு வகுப்பினர் என்று அது வருணிக்கிறது. இந்தப் போராட்டம் இந்து குணத்தின் ஒரு தனி அம்சத்தைத் தோலுரித்துக் காட்டுகிறது. தீண்டத்தகாதவர்கள் மட்டும் எத்தகைய குரலும் எழுப்பாமல் வாய்மூடி மௌனமாக இருந்திருந்தால் அவர்களது நிலைக்காக ஓர் இந்து எவ்வகையிலும் வெட்கித் தலைகுனிந்திருக்க மாட்டான்; அவர்களது எண்ணிக்கை குறித்து எத்தகைய அக்கறையும் காட்டியிருக்க மாட்டான். அந்த எண்ணிக்கை ஆயிரமாகவோ, லட்சமாகவோ அல்லது கோடியாகவோ இருந்தாலும் அது குறித்து கவலைப்பட்டிருக்க மாட்டான். ஆனால் தீண்டத்தகாதவர்கள் எழுச்சி யுற்று, தங்களை அங்கீகரிக்க வேண்டும் என்று கோரும்போதுதான், தீண்டத்தகாதவர்கள் என்ற வகுப்பினர் இருப்பதையே மறுக்கத் தயாராகிறான்; தனக்குள்ள பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறான்; மனச்சான்றின் உறுத்தலோ, துளிகூட ஈவிரக்கமோ, அன்போ அரவணைப்போ இல்லை. அவர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள அறவே மறுக்கிறான்.

# இயல் 21

# தீண்டத்தகாதவர்களின் எழுச்சி

இந்து சமூக அமைப்பின் அநீதிக்கு எதிராக தீண்டத்தகாத வர்களின் போராட்டம் நீண்ட வரலாறுடையது; மகாராஷ்டிரத்தில் நடைபெற்ற போராட்டத்தை இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இந்த வரலாறு இரண்டு கட்டங்களைக் கொண்டது. முதல் கட்டம் விண்ணப்பங்களும் கண்டனங்களும் நிறைந்த கட்டம். இரண்டாவது கட்டம் இந்து சமூக அமைப்புக்கு எதிராக நேரடி நடவடிக்கை என்ற வடிவத்தில் தீண்டத்தகாதவர்கள் ஏறுகள் போல் வீறு கொண்டு பகிரங்கமாக எழுச்சிக் கொடி தூக்கிய கட்டம். இந்த மனமாற்றத்துக்குக் காரணம் இரண்டு சந்தர்ப்பச் சூழ்நிலைகள். முதலாவதாக, வெறும் விண்ணப்பங்களாலும் ஆட்சேபங்களாலும் பலனில்லை, இதற்கெல்லாம் இந்துக்கள் அசைந்து கொடுக்க மாட்டார்கள் என்பதைத் தீண்டத்தகாதவர்கள் உணர்ந்து கொண்டு விட்டார்கள். இரண்டாவதாக, எல்லாப் பொது வசதிகளையும் பொது நிறுவனங்களையும் தீண்டத்தகாதவர்கள் உட்பட அனைத்துக் குடிமக்களும் எத்தகைய கட்டுப்பாடும், தட்டுத் தடையுமின்றிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அரசாங்கம் பிரகடனம் செய் திருக்கிறது. ஏனையோர் அனைவரையும் போலவே தீண்டத் தகாதவர்களும் எவ்வகையான உடைகளையும் உடுத்தலாம், எந்த விதமான ஆபரணங்களையும் அணியலாம் என்பது பிரிட்டிஷ் இந்தியச் சட்டம் அவர்களுக்கு வழங்கியுள்ள உரிமைகளில் சில. இவற்றோடு, பொதுக் கிணறுகள், பள்ளிக்கூடங்கள், பேருந்துகள், டிராம்கள், ரயில்வேக்கள், பொது அலுவலகங்கள் போன்றவற்றை மற்றவர்களைப் போலவே தீண்டத்தகாதவர்களும் பயன்படுத்திக் கொள்ளும் உரிமைகளும் இப்போது ஐயத்துக்கிடமின்றி அறிவிக்கப் பட்டுள்ளன. எனினும் இந்துக்களின் எதிர்ப்பு காரணமாக தீண்டத் தகாதவர்கள் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள இயல வில்லை. இந்த நிலைமையை எதிர்கொள்ளும் பொருட்டு, தங்களது போராட்ட முறைகளை மாற்றிக் கொள்ளத் தீண்டப்படாத வர்கள் தீர்மானித்தனர்; தங்களுக்கு இழைக்கப்பட்டு வரும்

கோரக்கொடுமைக்கு முடிவுகட்ட நேரடி நடவடிக்கையில் இறங்க முடிவு செய்தனர். இந்த மாற்றம் 1920ஆம் ஆண்டு வாக்கில் ஏற்பட்டது.

## I

இவ்வாறு தீண்டப்படாதவர்கள் மேற்கொண்ட நேரடி நடவடிக்கைகளில் ஒரு சிலவற்றை இங்குக் கூறினால் போதும் என்று கருதுகிறேன். இதிலிருந்தே இந்த சமூக அமைப்புக்கு எதிராகத் தீண்டப்படாதவர்கள் தூக்கிய போர்க்கொடியைப் பற்றிய, அவர்களது எழுச்சியை, கிளர்ச்சியைப் பற்றிய ஒரு படப்பிடிப்பைப் பெற முடியும். பொதுச்சாலைகளைப் பயன்படுத்துவதற்கு எல்லோருக்கும் போலவே தீண்டப்படாதவர்களுக்கும் உரிமை உண்டு. இந்த உரிமைகளை நிலைநாட்டுவதற்கு தீண்டத்தகாத மக்கள் நடத்திய போராட்டத்திற்கு உதாரணமாக 1924இல் திருவாங்கூர் சமஸ்தானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை இங்குக் குறிப்பிடலாம். அங்கு, வைக்கத்தில் உள்ள கோவிலைச் சுற்றியுள்ள சாலைகள் அரசால் பராமரிக்கப்பட்டுவரும் பொது சாலைகள்; அவற்றை எவர் வேண்டுமானாலும் எத்தகைய தடையுமின்றிப் பயன்படுத்த உரிமை உண்டு. ஆனால் இந்தச் சாலைகள் கோவிலுக்கு மிக அருகில் இருப்பதால், தீண்டத்தகாத வர்கள் அவற்றைப் பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை. இதனை எதிர்த்து சத்தியாக் கிரகம் நடைபெற்றது. இதன் பயனாகக் கோவிலின் சுற்றுப்புற மதில்கள் விஸ்தரிக்கப்பட்டு, சாலைகள் மாற்றியமைக்கப் பட்டன. இதன் காரணமாக இச்சாலைகளைத் தீண்டத்தகாத வர்கள் பயன்படுத்தினாலும், கோவிலுக்குத் தீட்டு ஏற்படாதபடி செய்யப்பட்டது.

## II

பொதுக் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுப்பதற்குத் தீண்டத் தகாதவர்களுக்கு உள்ள உரிமையை நிலைநாட்டும் பொருட்டுத் தீண்டத் தகாதவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்குச் சௌதார் குளம் விவகாரத்தை இங்கு விவரித்தால் போதும் என்று கருதுகிறேன்.

இந்த சௌதார் குளம் பம்பாய் மாகாணத்தில் கொலாபா மாவட்டத்தைச் சேர்ந்த **மஹாத்** என்னும் நகரில் இருக்கிறது. இது மிகப்பெரிய குளம். மழையாலும், ஒரு சில இயற்கையான ஊற்று களாலும் இதில் எப்போதும் தண்ணீர் இருந்து கொண்டே இருக்கும். குளத்தைச் சுற்றிலும் கரை கட்டப்பட்டுள்ளது. குளத்தைச் சுற்றி

லும் தனியார்க்குச் சொந்தமான சிறு துண்டு நிலங்கள் இருக்கின்றன. இந்தத் துண்டு நிலங்களுக்கு அப்பால் குளத்தைச் சுற்றிலும் நகர சபை சாலை அமைக்கப்பட்டுள்ளது. இந்த சாலையை ஒட்டித் தீண்டத் தக்கவர்களுக்குச் சொந்தமான வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இந்தக் குளம் இந்துக் குடியிருப்புகளின் மத்தியில் அமைந்து சுற்றிலும் இந்துக்களின் வீடுகள் சூழ்ந்திருக்கின்றன.

இந்தக் குளம் மிகவும் பழமையானது. இதை யார் கட்டினார்கள். என்பது யாருக்கும் தெரியாது. எனினும் மஹத் நகரில் 1869இல் அரசாங்கம் நகரசபையை உருவாக்கியபோது, இந்தக் குளத்தை நகரசபையின் பொறுப்பில் அரசு ஒப்படைத்தது. அப்போது முதல் இது நகரசபைக் குளமாக அதாவது பொதுக் குளமாகப் பாவிக்கப்பட்டு வந்திருக்கிறது.

**மஹத்** ஒரு சுறுசுறுப்பான வாணிகக் கேந்திரம். ஒரு தாலுகா தலைநகரமும் கூட. தீண்டத்தகாதவர்கள் சாமான்கள் வாங்கு வதற்கு அடிக்கடி **மஹத்**துக்கு வருவார்கள். இதுவன்றி, கிராமத் தலையாரிகள் என்ற முறையிலும் இங்கு வருவார்கள்; கிராம அதிகாரிகள் கொடுத்தனுப்பும் கடிதங்களைத் தாலுகா அதிகாரியிடம் சேர்ப்பிப்பார்கள்; கிராம அதிகாரிகள் வசூல் செய்யும் நிலவரியை தாலுகா கஜானாவில் செலுத்துவதற்கும் அவர்கள் அடிக்கடி வருவ துண்டு. வெளியிலிருந்து வருபவர்கள் தண்ணீர் குடிப்பதற்கான ஒரே பொதுக் குளம் இந்த **சௌதார்**_குளம்தான். ஆனால், தீண்டத்தகாத வர்கள் இந்தக் குளத்திலிருந்து தண்ணீர் எடுக்க அனுமதிக்கப் படுவதில்லை. தீண்டத் தகாதவர்கள் தங்களுக்கு வேண்டிய தண்ணீரை எடுத்துக் கொள்வதற்கான ஒரே ஆதாரம் அவர்களது குடியிருப்பு களுக்கு மத்தியில் அமைந்துள்ள கிணறுதான். இந்தக் கிணறு நகரிலிருந்து சற்றுத் தொலைவில் அமைந்திருக்கிறது. அந்தக் கிணறும் கூட நகரசபை நிர்வாகத்தின் அலட்சியம் காரணமாகப் பெரிதும் சீர்கெட்டுப் போயிருந்தது.

எனவே, தீண்டத்தகாதவர்கள் தண்ணீர் விஷயத்தில் மிகவும் அவதிப்பட்டு வந்தனர்; சொல்லொண்ணா வேதனையும் துன்பமும் பட்டு வந்தனர். இவ்வாறு அவர்களது துன்பதுயரங்கள் நீண்ட காலம் நீடித்து வந்தன. இந்த நிலைமையில் 1923இல் பம்பாய் சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிற்று. பொதுநிதிகளி லிருந்து நிர்மாணிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டு வருகின்ற அல்லது அரசால் நியமிக்கப்பட்ட அமைப்புகள் நிர்வகித்து வருகின்ற அல்லது

சட்டத்தின் மூலம் தோற்றுவிக்கப்பட்டு நடைபெற்று வருகின்ற எல்லாப் பொதுப் பள்ளிக்கூடங்கள், பொது நீர்நிலைகள், கிணறுகள், தர்மசத்திரங்கள், மருந்தகங்கள், நீதிமன்றங்கள், அலுவலகங்கள் போன்றவற்றைப் பயன்படுத்திக் கொள்ளத் தீண்டத்தகாதவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று அந்தத் தீர்மானம் வலியுறுத்தியது. அரசாங்கமும் இதனை ஏற்றுக் கொண்டு பின்வரும் ஆணையைப் பிறப்பித்தது.

''சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு இணங்க, அரசாங்கத்துக்குச் சொந்தமானவையும் அதனால் பராமரிக்கப்பட்டு வருபவையுமான பொது இடங்கள், அமைப்புகள், நிறுவனங்கள் சம்பந்தமாக மேற்கண்ட தீர்மானத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று எல்லா அலுவலகங்களின் தலைவர்களுக்கும் பம்பாய் அரசாங்கம் இதன் மூலம் உத்தரவிடுகிறது. தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் பரிந்துரைகளை ஏற்பதன் உசிதம் குறித்துப் பரிசீலிக்கும்படி ஸ்தல ஸ்தாபன அமைப்புகளுக்கு ஆலோசனை கூறும்படி மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.''

அரசாங்கத்தின் இந்த ஆணைக்கு இணங்கக் **கொலாபா** மாவட்ட ஆட்சியர், **மஹத்** நகரசபையின் பரிசீலனைக்கு இந்த ஆணையின் நகல் ஒன்றை அனுப்பிவைத்தார். குளத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தீண்டத்தகாதவர்களை அனுமதிப்பதில் தங்களுக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்று **மஹத்** நகரசபை 1924 ஜனவரி 5ஆம் தேதியன்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிற்று. இந்தத் தீர்மானம் ஏற்கப்பட்டதைத் தொடர்ந்து **கொலாபா** மாவட்ட தீண்டத்தகாதவர்களின் மாநாடு **மஹத்தில்** நடைபெற்றது. அம்மாநாட்டிற்கு நான் தலைமை வகித்தேன். 2500க்கு மேற்பட்ட தீண்டத்தகாதவர்களின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கு கொண்டனர். எங்கும் உற்சாகம் கரை புரண்டோடியது; அவர்களிடையே ஏற்பட்டிருந்த விழிப்புணர்ச்சியை அது பிரதிபலிப்பதாக இருந்தது. மாநாட்டின் முதல் நாளன்று நான் தலைமை உரையாற்றினேன். தங்கள் உரிமைகளுக்காக ஆர்த்தெழுந்து போராடும்படி அவர்களுக்கு உத்வேகமூட்டினேன்; கண்ணியமற்ற தீய பழக்கவழக்கங்களை எல்லாம் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, மலைகுலைந்தாலும் நிலைகுலையாதவர்களாகத் தலை நிமிர்ந்து நிற்கும்படி ஆவேச அறைகூவல் விடுத்தேன். சாதி இந்துக்கள் பலரும் மாநாட்டிற்கு வந்திருந்தனர்; தாங்கள் தீண்டத்தகாதவர்களின் நண்பர்கள் என்று தங்களை இனம் காட்டிக் கொண்டனர்; சட்டம் வழங்கியுள்ள உரிமைகளை

துணிச்சலோடு, நெஞ்சுரத்தோடு பயன்படுத்திக் கொள்ளும்படி அவர்களுக்கு அறிவுரை கூறினர். இத்துடன் முதல் நாள் நடவடிக்கைகள் முடிவடைந்தன. மறுநாள் நடைபெறவிருக்கும் பகிரங்க மாநாட்டில் முன்மொழியப்பட வேண்டிய தீர்மானங்களைப் பற்றி விவாதித்து முடிவெடுப்பதற்காக விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் அன்றிரவு நடைபெற்றது. தீண்டத்தகாதவர்களுக்கு **மஹத்தில்** குடிநீர் கிடைப்பதிலுள்ள பெரும்சிரமங்களைச் சிலர் கமிட்டிக் கூட்டத்தில் உருக்கமாக விவரித்தனர்; இந்த மாநாட்டிற்கு வந்திருப்பவர்களுக்குத் தேவையான தண்ணீரைப் பெறுவதற்குக் கூட வரவேற்புக் கமிட்டியினர் சில சாதி இந்துக்களைக் கெஞ்சிக் கூத்தாடி, **15 ரூபாய்** பணம் கொடுத்துப் பெற வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டதையும் சிலர் கமிட்டிக் கூட்டத்தில் எடுத்துரைத்தனர்.

மறுநாள் 20 ஆம் தேதி காலை 9 மணி அளவில் மாநாடு கூடியது. விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டத்தில் ஏற்கப்பட்ட தீர்மானங்கள் மாநாட்டில் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டன. மொத்தம் 3 மணி நேரத்தில் மாநாடு முடிவடைந்தது. இறுதியில் பேசிய என்னுடைய தோழர்களில் ஒருவர் மாநாடு வெற்றி பெறப் பெரிதும் துணை புரிந்த மாநாட்டுத் தலைவருக்கும் பிரதிநிதிகளுக்கும், ஏனையோருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்; அத்துடன் நில்லாமல், தீண்டத்தகாதவர்களுக்குக் குடிநீர் கிடைப்பதிலுள்ள சொல்லொண்ணா சிரமங்களையும் விவரித்தார்; மாகாண சர்க்கார் பிறப்பித்துள்ள உத்தரவையும் அதனைத் தொடர்ந்து **மஹத்** நகரசபை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தையும் சுட்டிக்காட்டி, **சௌதார்** குளத்திற்குச் சென்று அக்குளத்திலிருந்து தண்ணீர் எடுப்பதற்குத் தங்களுக்குள்ள உரிமையைப் பயன்படுத்திக் கொள்ளும்படி மாநாட்டிற்கு வந்திருந்தவர்களை அவர் உற்சாகப்படுத்தினார்; தூண்டி ஊக்குவித்தார்; இதற்கு இந்து நண்பர்களும் உதவுவார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்தார். அவ்வளவுதான், மாநாட்டிற்கு வந்திருந்த சாதி இந்துக்களுக்கு, இது வெடிகுண்டாக இருந்தது. தீண்டத்தகாதவர்கள் உறுதியோடு இருக்க வேண்டும் என்றும், தங்கள் உரிமைகளைப் பயன்படுத்தச் சற்றும் தயங்கக்கூடாது என்றும் சற்று முன்னர் வீராவேச மாகப் பேசிய சாதி இந்து நண்பர்கள் அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர். ஆனால், இப்பேச்சின் தாக்கம் தீண்டத்தகாதவர்களிடம் வேறு விதமாக இருந்தது. அவர்கள் புதிய சக்தியும், ஒளியும், விழிப்பும், எழுச்சியும் பெற்றனர். அங்குக் குழுமியிருந்த 2500 பேரும் ஒரே மனிதனாக எழுந்து நகரின் பிரதான தெருக்களில் ஊர்வலமாகச் சென்றனர்; இந்த ஊர்வலத்துக்கு நானும் என் சகத் தோழர்களும் தலைமை

தாங்கினோம். இச்செய்தி காட்டுத்தீ போல் பரவிற்று. இக்காட்சியைக் காணப் பெருந்திரளான மக்கள் தெருக்களில் கூடிவிட்டனர்.

நகர இந்துக்களும் இக் காட்சியைக் கண்டனர். அவர்கள் இதனைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. இதற்கு முன்னர் ஒரு போதும் கண்டிராத இக்காட்சி அவர்களை மிகுந்த அதிர்ச்சி கொள்ளச் செய் து விட்டது. ஒரு கணம் அப்படியே திகைத்துப் போய்ச் செய்வதறியாது நிலை குலைந்து போய் நின்றனர். ஊர்வலத்தினர் நால்வர் நால்வராக அ ணிவ குத்து **சௌதார்** குளத்தை வந்தடைந்தனர். தீண்டத்தகாதவர்கள் மு தல் தடவையாக அந்தக் குளத்தின் நீரை எடுத்துப் பருகினர். என்ன விபரீதம் நடந்து விட்டது என்பதை இப்போது இந்துக்கள் உணர்ந்து கொண்டனர். அவர்கள் எல்லையற்ற ஆவேசம் கொண்டனர்; குளத்து நீரை மாசுபடுத்தத் துணிந்த தீண்டத்தகாதவர்கள் மீது வெறி கொண்டு பாய்ந்தனர்; விவரிக்கவொண்ணாக் கொடுமைகளை நெஞ்சீரமின்றி, ஈவுஇரக்கமின்றி இழைத்தனர். இந்த அட்டூழியங்களை உரிய இடத்தில் விவரிப்போம்.

**மஹத்தில் சௌதார்** குளத்தில் தீண்டத்தகாதவர்கள் பிர வேசித்தபோது இந்துக்கள் நடத்திய கொடூரத்தாக்குதல் தீண்டத் தகாதவர்களுக்கு விடுக்கப்பட்ட ஒரு சவால் என்பதில் எள்ளள வும் ஐயமில்லை. இந்நிலைமையில், தீண்டத்தகாதவர்கள் தங்கள் உரிமைகளை அனுபவிப்பதோடு திருப்தியடையத் தயாராக இல்லை; அந்த உரிமைகளை நிரந்தரமாக நிலைநாட்டவும் உறுதி கொண்டனர். இந்துக்கள், தங்களுக்கு விடுத்துள்ள சவாலை ஏற்ப தென அவர்கள் தீர்மானித்தனர். இது முற்றிலும் இழப்பானதே. இதன்படி, தீண்டத்தகாதவர்களின் இரண்டாவது மாநாடு ஒன்று கூட்டப்பட்டது. சத்தியாக்கிரகம் செய்து வெஞ்சிறை செல்வது உட்பட எத்தகைய இக்கட்டான நிலைமைகளையும் சமாளிப்ப தற்கு முற்றிலும் தயாராக வரும்படி தீண்டத்தகாதவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

இதனை முன்கூட்டியே தெரிந்து கொண்ட இந்துக்கள் **சௌதார்** குளத்தில் தீண்டத்தகாதவர்கள் இறங்கித் தண்ணீரை மாசுபடுத்தி விடாதபடி அவர்களுக்கு எதிராக இ.பி.கோ-144 தடை உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும் என்று மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டிடம் மனு செய்து கொண்டனர். ஆனால் அவர் இத்தகைய தடையைப் பிறப்பிக்க மறுத்துவிட்டார்; இது, அனைத்து மக்களுக்கும் உரிய பொதுவான

குளம், எனவே இக்குளத்திலிருந்து தீண்டத்தகாத மக்கள் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று சட்டபபடி அவர்களைத் தடுக்க முடியாது என்று அவர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். வேண்டுமானால், நீதிமன்றத் திற்குச் சென்று வாதாடி உங்கள் உரிமையை நிலைநாட்டிக் கொள்ளுங்கள் என்றும் சாதி இந்துக்களுக்கு அவர் ஆலோசனை கூறினார். இதற்கிடையே மாநாட்டை 1927 டிசம்பர் 25,26,27 தேதி களில் நடத்துவதற்கு நிச்சயிக்கப்பட்டிருந்தது. அந்தத் தேதிகள் இப்போது நெருங்கிக் கொண்டிருந்தன. இப்போது என்ன செய்வது? தீண்டத்தகாத மக்களோ தங்கள் முடிவில் உறுதியாக இருந்தனர். இந்த நிலையிலிருந்து அணுவளவும் பின்வாங்க அவர்கள் தயாராக இல்லை. மாஜிஸ்ட்ரேட்டோ தம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று கைவிரித்து விட்டார். அவர்களது உதவிக்கு வர மறுத்துவிட்டார். இந்த நிலைமையில் சாதி இந்துக்களுக்கு ஒரே ஒரு மார்க்கம்தான் இருந்தது: நீதிமன்றம் செல்லுவதுதான் அந்த ஒரே வழி. இப்பொதுக் குளத்தி லிருந்து தீண்டத்தகாதவர்கள் தண்ணீர் எடுப்பதற்கு உரிமையில்லை என்று அவர்கள் அங்கு வாதாடி தங்கள் உரிமையை நிலைநாட்ட வேண்டும். இதுதான் அவர்கள் முன்னாலிருந்த ஒரே வழி. அவ்வாறே இந்த முயற்சியில் இறங்கவும் செய்தனர். பல்வேறு சாதிகளைச் சேர்ந்த ஒன்பது இந்துக்கள் முறையீட்டாளர்களாக அதாவது வாதிகளாக ஆயினர். அவர்கள் 1927டிசம்பர் 12ஆம் தேதி **மஹாத்** உதவி நீதிபதியின் நீதிமன்றத்தில் இந்துக்களின் பிரதிநிதிகளாக ஒரு வழக்கைத் தாக்கல் செய்தனர். வழக்கு எண் 405, 1927. இதில் தீண்டப்படாதவர்களின் பிரதிநிதிகளாக நான்குபேர் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டனர். இந்த வழக்கின் முக்கிய அம்சங்கள்தான் என்ன? 'மேலே குறிப்பிடப் பட்ட **சௌதார்** குளம் தீண்டத்தக்கவர்களுக்கு மட்டுமே உரிய ஒரு தனிப்பட்டச் சொத்து; அந்தக் குளத்துக்குச் செல்லவோ, அதில் தண்ணீர் எடுக்கவோ தீண்டப்படாதவர்களுக்கு எத்தகைய உரிமையும் இல்லை; எனவே பிரதிவாதிகள் இக்காரியங்களில் எதை ஒன்றையும் செய்யாதபடி நீதிமன்றம் நிரந்தரத் தடை விதிக்க வேண்டும். இதுவே சாதி இந்துக்கள் தாக்கல் செய்த வழக்கின் சாராம்சம். வழக்கு தாக்கல் செய்யப்பட்ட அதே நாளில் வாதிகள் வேறொரு மனுவையும் சமர்ப்பித்தனர். இந்த வழக்கின் முடிவு தெரியும்வரை, தீண்டத் தகாதவர்கள் குளத் திற்குச் செல்லாதபடியும், அதிலிருந்து தண்ணீர் எடுக்காதபடியும் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கும்படி அந்த மனுவில் கோரி யிருந்தனர். நீதிபதி இந்தக் கோரிக்கையை ஏற்று எனக்கும் இதர பிரதிவாதிகளுக்கும் 1927 டிசம்பர் 14ஆம் தேதி தடை உத்தரவு பிறப்பித்தார்.

நீதிபதி பிறப்பித்த இந்தத் தடை உத்தரவு பம்பாய்க்கு அனுப்பப்பட்டு மாநாடு நடைபெறுவதற்கு இரண்டு அல்லது மூன்று நாள் இருக்கும்போது என்னிடம் சேர்ப்பிக்கப்பட்டது. இது சம்பந்தமாக எவருடனும் கலந்தாலோசிக்கவோ, மாநாட்டை ஒத்திவைக்கவோ நேரமில்லை. என்ன செய்வது? இந்த விஷயம் பற்றி மாநாடே முடிவு செய்யட்டும் என்று விட்டுவிட்டேன்.

**சௌதார்** குளத்திலிருந்து தண்ணீர் எடுப்பதற்குத் தீண்டப் படாதோருக்குள்ள உரிமையை நிலைநாட்டும் குறிப்பிட்ட நோக்கத் துக்காகவே இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த உரிமையை இந்துக்கள் ஏற்க மறுத்தனர். தீண்டத்தகாத மக்கள் இந்த உரிமைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று ஜில்லா மாஜிஸ்ட் ரேட் கூறினார்; கதவுகளையும் திறந்துவிட்டார். ஆனால், இப்போது ஒரு நீதிபதி இத்தகைய நடவடிக்கைக்கு இடைக்காலத் தடை விதித் திருக்கிறார். எனவே மாநாடு கூடியபோது அதன் முன்னாலிருந்த முதல் பிரச்சினை, நீதிமன்றம் பிறப்பித்துள்ள இந்தத் தடை உத்தரவுக்குக் கீழ்ப்படிவதா அல்லது தடையை மீறிக் குளத்தில் தண்ணீர் எடுப்பதா என்பதுதான். இங்கு மற்றொரு சிக்கலும் எழுந்தது. தீண்டத்தகாத வர்களுக்கு ஆதரவாக இருந்த ஜில்லா மாஜிஸ்ட்ரேட் இப்போது மாறுபட்டதொரு நிலையை மேற்கொண்டார். அவரே நேரில் மாநாட்டுக்கு வந்திருந்து, தமது கருத்தை மிகத் தெளிவாக விளக்கிக் கூறினார். சிவில் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்திருக்கவில்லை என்றால், இந்துக்களின் எதிர்ப்பையும் மீறித் தீண்டத்தகாதவர்கள் குளத்தில் இறங்கித் தண்ணீர் எடுப்பதற்கு நான் உதவி செய்திருப்பேன்; ஆனால் உதவி நீதிபதி ஓர் உத்தரவு பிறப்பித்து விட்டதால் என் நிலைமை மாறிவிட்டது. இப்போதைய சந்தர்ப்பத்தில் தீண்டத்தகாத வர்கள் குளத்திற்குச் சென்று தண்ணீர் எடுப்பதை நான் அனுமதிக்க முடியாது; ஏனென்றால் **மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் அரசின் நீதிமன்ற உத்தரவை மீறுவதற்கு** மறைமுகமாக நான் உதவுவதுபோல் இது ஆகும். இவ்விதம் அவர் தமது நிலைமையை விளக்கிக் கூறினார். 'இந்தத் தடையையும் மீறிக் குளத்தில் தண்ணீர் எடுத்தே தீருவோம்' என்று தீண்டப்படாதவர் பிடிவாதம் பிடித்தால் அதைத் தடுப்பதைத் தவிர தனக்கு வேறு வழியில்லை என்றும் கூறினார். இந்துக்களுக்கு ஆதரவாக இவ்வாறு செய்யத் தான் விரும்ப வில்லை என்றும், ஆனால் இந்த உத்தரவு மதிக்கப்பட்டு, சிவில் நீதி மன்றத்தின் கண்ணியமும் கௌரவமும் மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்ய வேண்டியிருக்கிறது என்பதையும் அவர் தெளிவுபடுத்தினார்.

மாவட்ட ஆட்சியர் தெரிவித்த இந்தக் கருத்தை மாநாடு உரிய முறையில் கணக்கிலெடுத்துக் கொண்டது; அத்தோடு நீதிமன்றத்தின் தடை உத்தரவை மீறி தீண்டத்தகாத மக்கள் குளத்திற்குச் சென்று தண்ணீர் எடுத்தால் இந்துக்களிடம் எத்தகைய பிரதிபலிப்பு ஏற்படும் என்பதையும் அது கருத்திற்கொண்டது. இறுதியில், சட்டத்தை மதிப்பதுதான் சிறந்ததும் உகந்ததுமாகும், இது எவ்வளவு தூரம் தங்கள் உரிமைகளைப் பெற்றுத்தர உதவும் என்பதைப் பார்க்க வேண்டும் என்ற முடிவுக்கு மாநாடு வந்தது. எனவே, வழக்கின் இறுதி முடிவு தெரியும்வரை நீதிபதியின் உத்தரவுக்கு எதிராகச் சட்டமறுப்பில் ஈடுபடுவதை நிறுத்தி வைப்பது என்று மாநாடு தீர்மானித்தது.

ஆனால், இவ்வாறு தீண்டத்தகாதோர் சட்ட் மறுப்பு இயக்கத்தில் ஈடுபடவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. ஏனென்றால் வழக்கு அவர்களுக்குச் சாதகமாக முடிந்தது; அவர்கள் வெற்றி பெற்றனர்; இந்துக்கள் தோல்வியடைந்தனர் .தீண்டத்தகாதோர் சட்டத்தை மதிப்பதற்கும், சட்ட மறுப்பில் ஈடுபடுவதில்லை என்று முடிவு செய்ததற்கும் ஒரு முக்கியமான காரணம் இருந்தது. அந்தக் காரணம் என்ன? தீண்டாமை என்பது சட்டப்படி செல்லுபடியாகக் கூடியது தானா என்ற பிரச்சினையில் நீதிமன்றம் தீர்ப்பளிப்பதை அவர்கள் விரும்பினர். ஒரு வழக்கம் செல்லுபடியாகத் தக்கதாக இருக்க வேண்டுமானால் அது தொல்பழமையான காலம் முதல் கடைப் பிடிக்கப்பட்டு வந்திருப்பதாகவும், நம்பகமானதாகவும், தார்மிக நெறிக்கோ, பொதுக் கொள்கைக்கோ முரணற்றதாகவும் இருக்க வேண்டும் என்பது சட்ட நியதி. தீண்டாமை என்னும் வழக்கம் அப்படிப்பட்டதல்ல, அது தார்மிக நெறிக்கும், பொதுக் கொள்கைக்கும் புறம்பானது என்று தீண்டத்தகாதோர் அழுத்தம் திருத்தமாக வாதிட்டனர். ஆனால், இதனை நீதிமன்றம் கூறவேண்டும். இல்லையேல் பயனில்லை. இவ்வாறு தீண்டாமை வழக்கம் செல்லுபடியாகத் தக்கதல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளிப்பது சிவில் உரிமைகளுக்கான தீண்டத்தகாதோரின் போராட்டத்தில் அவர்களுக்கு மிகுந்த மதிப்புடையதாக இருக்கும்; மிகப்பெரும் வலுவை, உத்வேகத்தை அளிக்கும். ஏனென்றால், குடியுரிமை விஷயங்களில் தீண்டாமையைப் புகுத்துவது சட்டவிரோதமானதாகக் கரு தப்படும். சௌதார் குளம் சம்பந்தப்பட்ட வழக்கில் தீண் டப்படாதோர் பெற்ற வெற்றி மகத்தானது. ஆனால் ஒரு வகையில் அது ஏமாற்றம் அளிப்பதாகவும் இருந்தது; தீண்டாமை வழக்கம் செல் லு படியாகத் தக்கதா, இல்லையா என்ற பிரச்சினையில் பம்பாய் உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கூறாததே இதற்குக் காரணம்.எனினும் தீண்டத்தகாதவர்கள் குளத்தில் தண்ணீர்

எடுப்பதற்கு அனுமதிக்கப்படாத வழக்கம் தொன்னெடுங் காலமாகவே இருந்து வருகிறது என்று இந்துக்கள் நிரூபிக்கத் தவறியதால் நீதிமன்றம் அவர்களுக்கு எதிராகத் தீர்ப்பளித்தது. இப்படி ஒரு வழக்கம் இருந்து வருவதையே இந்துக்கள் நிரூபிக்கத் தவறி விட்டனர் என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்தது. இந்தத் தீர்ப்பினை அடுத்துக் குளத்தைத் தீண்டத்தகாதவர்கள் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்பட்டனர். எனினும் இந்தத் தீர்ப்பின் மூலம் தீண்டப்படாதோர் தங்கள் நோக்கத்தில் வெற்றி பெற்றுவிட்டதாகக் கூற முடியாது. ஏனென்றால் தீண்டாமை வழக்கம் சட்ட ரீதியானதுதானா என்பதுதான் பிரதான பிரச்சினை. துரதிர்ஷ்ட வசமாக இந்தப் பிரச்சினையில் தீர்ப்பளிப்பதை உயர்நீதிமன்றம் தவிர்த்துவிட்டது.

## IV

இந்த நேரடி நடவடிக்கை வரலாற்றில் குறிப்பிடத்தக்க மற்றொரு நிகழ்ச்சியை இங்குக் கூறுவது பொருத்தமாக இருக்கும். அதுதான் நாசிக்கிலுள்ள புகழ்பெற்ற இந்துக் கோவிலான **காலாராம்** கோவிலில் நடைபெற்ற ஆலயப்பிரவேசமாகும். இவை யாவும் குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு மேற்கொள்ளப் பட்ட நேரடி நடவடிக்கைகளாகும். இந்து சமுதாய அமைப்பின் அடித்தளங்களையே வெடிவைத்துத் தகர்க்கும் குறிக்கோள் கொண்ட இந்த இயக்கத்தில் பின்கண்ட இரண்டு நேரடி நடவடிக்கை களும் அடங்கும். ஒன்று, மனு ஸ்மிருதியை எரிப்பது; மற்றொன்று இந்துக்களுக்குச் சொந்தமான கால்நடைகள் மடிந்துபோனால் அவற்றை அப்புறப்படுத்துவதற்கும், அவற்றின் தோலை உரிப்பதற்கும் தீண்டத்தகாதோர் மறுப்பது.

**மனு ஸ்மிருதியை** எரிக்கும் நிகழ்ச்சி 1927 டிசம்பர் 20இல் **மஹத்தில்** நடைபெற்றது. **சௌதார்** குளத்திலிருந்து தண்ணீர் எடுப்பதற்குத் தீண்டத்தகாதோருக்குள்ள உரிமையை நிலை நாட்டும் போராட்டத்தின் ஒரு பகுதியாக இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப் பட்டது. தீண்டப்படாதோரின் மாநாட்டில் **மனு ஸ்மிருதி** எல்லோர் முன்னிலையிலும் பகிரங்கமாக எரிக்கப்பட்டது. **மனு ஸ்மிருதியை** எரிப்பதற்கு முன்னர், மாநாடு சில தீர்மானங்களை நிறைவேற் றிற்று. தீண்டத்தகாதவர்களின் இயக்க வரலாற்றில் இத்தீர்மானங்கள்

முக்கிய திரும்பு கட்டங்களாகும், பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படத்தக்க அத்தியாயங்களாகும். எனவே இத்தீர்மானங் களை இங்குத் தந்துள்ளோம்:

**"தீர்மானம் 1:**

### ஓர் இந்துவின் உரிமைப் பிரகடனம்

இந்து சமுதாயத்தின் இன்றைய நிலை மிகவும் வருந்தத்தக்க தாக, இரங்கத்தக்கதாகப், பரிதாபத்துக்குரியதாக இருக்கிறது என்று இந்த மாநாடு உறுதியாகக் கருதுகிறது; சமூக அநீதியைக் கண்டும் காணாமல் பொறுத்துக் கொள்வதன் மூலம், தவறான பொய்யான சமய நம்பிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலமும், பொருளாதாரச் சீர்கேடுகளை முன்பின் யோசியாமல் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பதன் மூலமும் ஒரு சமுதாயம் எவ்வாறு சீரழிந்து போகும் என்பதற்கு இந்து சமுதாயத்தின் இன்றைய அவலநிலை ஓர் அசைக்க முடியாத எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இச் சமுதாயத்தைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் ஒரு மனிதனது பிறப்புரிமை என்ன என்பதை அறிந்து கொள்ள அக்கறை கொள்ளவில்லை இந்த உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது குறித்து எத்தகைய கவலையும் படவில்லை, சுயநலவாதிகளின் கயமைத்தனமான இந்தச் செயல் களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வரவில்லை. இவைதான் இந்து சமுதாயத்தின் வீழ்ச்சிக்கு முழுமுதல் காரணம் என்று இம்மாநாடு திடமாக நம்புகிறது. இந்த அடிப்படையான பிறப்புரிமைகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதும், மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையேயும் வர்க்கத்துக்கும் வர்க்கத்துக்கும் இடையேயும் நடை பெறும் போராட்டத்தில் இந்த உரிமைகள் மிதித்துத் துவைக்கப் பட்டுவிடாதபடி பார்த்துக் கொள்வதும் ஒவ்வொருவரது புனிதமான கடமைகளாகும். இந்த மாநாட்டின் கண்ணோட்டத்தில் மனிதனது பராதீனப்படுத்த முடியாத பிறப்புரிமைகள் என்ன என்பது குறித்து ஒவ்வொரு இந்துவும் அறியாதிருக்கலாம். எனவே அவர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு அந்த உரிமைகள் அடங்கிய பின்கண்ட பிரகடனத்தை மாநாடு வெளியிடுகிறது.

i) எல்லா இந்துக்களுமே பிறந்தது முதல் சமத்துவ அந்தஸ்தைப் பெற்றுள்ளனர். இந்தச் சமத்துவ சமூக அந்தஸ்து

என்பது இறக்கும்வரை அவர்கள் பாதுகாத்துப் பராமரித்துவரும் இயல்பான பண்பாகும். சமுதாயத்தில் தங்களுக்குரிய பணிகளை ஆற்றுவதில் அவர்களுக்கிடையே தனித்தன்மைகளும் வேறுபாடுகளும் இருக்கலாம். ஆனால் இவை, அவர்களது சமூக அந்தஸ்தில் வேறுபாடுகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கக்கூடாது. எனவே, சமூக அந்தஸ்தில் வேறுபாட்டை உண்டுபண்ணக்கூடிய எத்தகைய ஒரு நடவடிக்கையும் அரசியல், பொருளாதார அல்லது சமூக வாழ்க்கையில் எடுத்துக் கொள்ளப்படுவதை இந்த மாநாடு உறுதியாக எதிர்க்கிறது, வன்மையாகக் கண்டிக்கிறது.

ii) அனைத்து அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களின் முடிவான, இறுதியான நோக்கம் சகல இந்துக்களின் சமத்துவ அந்தஸ்தை அப்படியே முழுமை கெடாது பாதுகாப்பதாகவே இருக்க வேண்டும். மாநாட்டின் கருத்து இதுவாக இருப்பதால், பெரும் கேடு விளைவிக்கும், சொல்லொண்ணா நாசத்தைச் செய்யும் ஏற்றத்தாழ்வு சித்தாந்தத்தை இந்து சமூக அமைப்பின் அடித்தளமாக, அஸ்திவாரமாகச் சித்திரிக்கும் இந்துக்களின் எல்லா வகையான இலக்கியங்களையும், அவை பண்டைய இலக்கியமானாலும் சரி, இன்றைய இலக்கியமானாலும் சரி இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது, அடியோடு நிராகரிக்கிறது.

iii) அனைத்து அதிகாரங்களும் மக்களிடமிருந்தே தோன்றுகின்றன. எனவே, மக்களால் வழங்கப்படாத சலுகைகளை எந்த ஒரு வகுப்பினரும் அல்லது தனிநபரும் கோர முடியாது; சபை செல்லுபடியாக மாட்டா. ஆதலால் மக்களின் விருப்பார்ந்த சம்மதத்தாலன்றி, வேதங்கள், ஸ்மிருதிகள், புராணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்துக்களில் சில வகுப்பினர் அனுபவித்துவரும் சமூக, மதச் சலுகைகளை இந்த மாநாடு மறுதலிக்கிறது, ஏற்க மறுக்கிறது.

iv) செயல் சுதந்திரமும், பேச்சு சுதந்திரமும் ஒவ்வொருவரது பிறப்புரிமையாகும். வேறு எந்த நோக்கங்களுக்காக அன்றி, இந்தச் சுதந்திரம் பெறுவதற்கு மற்றவர்களுக்குள்ள உரிமையைப் பாதுகாப்பதற்காக மட்டுமே இந்த சுதந்திரம் கட்டுப்படுத்தப்படலாம். மேலும், இந்து சாஸ்திரங்களின் அதிகார ஆணைகளில்லாமல், மக்களின் ஒப்புதலுடனேயே இந்தக் கட்டுப்பாட்டைச் செயல்படுத்த முடியும். எனவே, மக்களாலன்றி சாஸ்திரங்களால் இந்துக்களின்

சிந்தனை மீதும் செயல்மீதும் சுமத்தப்படும் எவ்விதமான சமய, சமூக, பொருளாதாரக் கட்டுப்பாடுகளையும் இந்த மாநாடு நிராகரிக்கிறது.

v) இந்துக்களின் பிறப்புரிமைகள் தவிர, இதர உரிமைகளைச் சட்டத்தால் மட்டுமே பறிக்க முடியும். சட்டத்தால் தடை செய்யப்படாத எதையும் செய்வதற்கு ஒரு இந்துவுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும்; அதேபோன்று, சட்டப்படிப் பிணைக்கப்படாத எதையும் செய்யும்படி ஒரு இந்துவை நிர்ப்பந்திக்கக்கூடாது. இந்தக் காரணத்தினால், பொதுச் சாலைகளையும், பொதுக் கிணறுகளையும், பொதுக்குளங்களையும், பொதுக் கோவில்களையும் இதர எல்லாப் பொதுவசதிகளையும் எவரும் பயன்படுத்திக் கொள்வதற்கு எந்தத் தடைகளும் இருக்கக்கூடாது; எத்தகைய கட்டுப்பாடுகளும் இருத்தலாகாது. சட்டம் எத்தகைய தடையும் விதிக்காத விஷயங்களில் இடைஞ்சல் செய்பவர்களை, இடையூறு விளைவிப்பவர்களை மக்களின் விரோதிகள் என இந்த மாநாடு கருதுகிறது.

vi) சட்டம் என்பது ஒரு தனிப்பட்ட நபரின் அல்லது ஒரு தனிப்பட்ட குழுவின் ஆணையல்ல. மாறாகச், சட்டம் என்பது மாற்றத்துக்கு மக்கள் வகுத்துத் தரும் விதிமுறை. இவ்வாறிருப்பதால், சட்டம் மதிக்கப்பட வேண்டும், போற்றப்பட வேண்டும்; அது அனைவரது ஒப்புதலோடு இயற்றப்பட வேண்டும்; எத்தகைய பாகுபாடுமின்றி அனைவர் விஷயத்திலும் அதனைச் செயல்படுத்த வேண்டும். சமுதாயத்தின் நலனுக்காக, நோக்கத்துக்காக சமூகப் பிரிவுகளை ஏற்படுத்துவது அவசியமென்றால் அவை தகுதியின் அடிப்படையில் இருக்க வேண்டுமே அன்றிப், பிறப்பின் அடிப்படையில் இருக்கக் கூடாது. இந்து சாதி அமைப்பு முறை முதலாவதாகச் சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிப்பதாக இருக்கிறது; இரண்டாவதாகப் பிறப்பை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது; மூன்றாவதாக, மக்களின் எத்தகைய ஒப்புதலையும் பெறாததாக இருக்கிறது; எனவே, இந்த மாநாடு இந்து சாதி அமைப்பை ஏற்க மறுக்கிறது.''

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இரண்டாவது தீர்மானம் பின்கண்டவாறு அமைந்திருந்தது :

**''தீர்மானம் 2:**

இந்து சட்டங்களின் பிதா எனக் கருதப்படும் மனுவின் பெயரால் பிரகடனப்படுத்தப்பட்டிருப்பவையும், மனு ஸ்மிருதியில்

அடங்கியிருப்பவையும், இந்துக்களின் சட்டத் தொகுப்பாக அங்கீகரிக்கப்பட்டிருப்பவையுமான இந்து சட்டங்கள், கீழ்ச்சாதியினரை அவமதிப்பவையாக இருக்கின்றன; மனித உரிமைகளை அவர்களுக்கு மறுப்பவையாக உள்ளன. அவர்களது ஆளுமையை நசுக்குபவையாக இருக்கின்றன; நாகரிக உலகம் முழுவதிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளுடன் இவற்றை ஒப்பிடும்போது இந்த மனுஸ்மிருதி எத்தகைய நன்மதிப்பையும் பெற அருகதையற்றது, ஒரு புனிதமான நூல் எனப் போற்றப்படுவதற்குத் தகுதியற்றது என இந்த மாநாடு கருதுகிறது; இதன் பால் தனக்குள்ள ஆழமான அளவிட முடியாத வெறுப்பை வெளிப்படுத்தும் பொருட்டும், மதம் என்ற போர்வையில் அது சமூக ஏற்றத்தாழ்வைப் பொதித்து வருவதைக் கண்டித்தும் மாநாட்டு நடவடிக்கைகளின் முடிவில் இதன் பிரதி ஒன்றை எரிப்பதென இம் மாநாடு தீர்மானிக்கிறது.''

இந்தத் தீர்மானங்களை மேலெழுந்தவாரியாகப் பார்த்தாலே கூட, மாநாடு எத்தகைய திசைவழியை மேற்கொண்டது என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஒரு குறிப்பிட்ட அநீதிக்குப் பரிகாரம் காண்பதற்கு இந்த மாநாடு நடைபெற்றபோதிலும், சிறு சிறு தீமைகளைக் களைவதோடு அது திருப்தியடையப்போவதில்லை என்பதை அது புலப்படுத்திற்று. தீண்டப்படாதவர்களின் குறிக்கோளை, லட்சியத்தை வகுத்துக் கொள்ளும் தருணம் வந்துவிட்டது என்று மாநாடு கருதிற்று. அது நிர்ணயித்துக் கொண்ட குறிக்கோள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இந்து சமூக அமைப்பு முற்றிலுமாகப் புனரமைக்கப் பட வேண்டும் என்று மாநாடு பிரகடனம் செய்தது; இந்தச் சீரமைப்பு பழைய சாஸ்திரங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப் படக்கூடாது என்று அது பறைசாற்றிற்று. இனி இடப்படப்போகும் அஸ்திவாரங்கள், அடித்தளங்கள் எத்தகையதாய் இருப்பினும் அவை நீதிக்கு இசைந்தவையாகவும், இந்துவுக்கும் இந்துவுக்கும் இடையே சமத்துவத்தை நிலைநாட்டுபவையாகவும், இந்தப் புனருத்தாரண விஷயத்தில் இந்து சாஸ்திரங்கள் எவ்வகையிலும் சம்பந்தப்படுத்தப்படமாட்டா என்பதைத் தெள்ளத்தெளிவாக உறுதிப்படுத்தப்படுபவையாகவும், இது குறித்து எத்தகைய ஐயப்பாட்டுக்கும் இடம் கொடுக்காதவையாகவும் இருக்க வேண்டும் என்றும் மாநாடு அறிவித்தது. மாநாடு, இந்த இந்து சாஸ்திரங்களை நிராகரித்ததோடு, அவற்றைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கும் அளவுக்கும் சென்றது.

**வால்டேர்** தம் காலத்தில் கத்தோலிக்கத் திருச்சபையை மறுதலித்தது போன்று இது இருந்தது; அதன் எதிரொலிபோல் இது அமைந்திருந்தது. முதல் தடவையாக இந்து சமூக அமைப்புக்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்டது; ''வெறுக்கத்தக்க இந்த அமைப்பு ஒழிக'' என்று வீர உணர்வோடுகோஷமிடப்பட்டது. இந்தத் தீர்மானங்கள் முற்றிலும் புரட்சிகரமானவை என்பதும் தெளிவாயிற்று.

இந்து சமூக அமைப்பு என்னும் கட்டுமானம், மனு ஸ்மிருதி என்ற அடித்தளத்தின்மீது நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த மனு ஸ்மிருதி இந்து சமய நூல்களின் ஒரு பகுதி. எனவே, அது எல்லா இந்துக்களுக்கும் புனிதமானதாக உள்ளது. புனிதமானது என்பதால் பிழைபாடற்றதாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு இந்துவும் அதன் புனிதத்தில் நம்பிக்கை வைக்கிறான்; அதன் ஆணைகளை ஏற்று நடக்கிறான். மனு, சாதியையும் தீண்டாமையையும் ஆதரித்து நிற்ப தோடு அதற்குச் சட்ட வலுவையும் தருகிறார். எனவே இத்தகைய அபகீர்த்தி வாய்ந்த மனு ஸ்மிருதியை எதிர்த்தது ஒரு துணிகரமான செயலாகும். இந்து சமயம் என்ற கொத்தளத்தின் மீதே தொடுக்கப் பட்ட தாக்குதலாகும். பிரான்சில் **பாஸ்டில் சிறை** எவ்வாறு கொடுங் கோன்மையின் உருவகமாக இருந்ததோ, அவ்வாறே இந்து வாழ்க்கை முறைக்கும் சிந்தனைப் போக்குக்கும் அடிநாதமாக இருந்த ஏற்றத் தாழ்வின் உருவகமாக இருந்தது **மனு ஸ்மிருதி பாஸ்டிலின்** வீழ்ச்சி, பிரான்சிலும் ஐரோப்பாவிலும் பரந்த மக்கள் பகுதியினரின் விடுதலையையும் வெற்றியையும் எவ்விதம் குறித்ததோ, அவ்விதமே 1927 ஆம் ஆண்டு **மஹத்தில், மனு ஸ்மிருதி** எரிக்கப்பட்ட நிகழ்ச்சி தீண்டப்படாத மக்களின் விடுதலை வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகத் திகழ்ந்தது.

இந்து சமூகக் கட்டமைப்புக்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட இரண்டாவது நேரடி நடவடிக்கை இந்துக்களுக்குச் சொந்த மான செத்த பிராணிகளின் தோலை உரிப்பதற்கும், அவற்றை அகற்றுவதற்கும் தீண்டப்படாதவர்கள் மறுத்ததாகும்.

தீண்டாமை எனும் சாபத்தீட்டை, சாபக்கேட்டைத் தீண்டப் படாதோர் தாங்களாகவே தேடிக்கொண்டதுதான் என்று அடிக்கடி குற்றம் சாட்டப்படுவதைக் கேட்கிறோம். தீண்டப்படாதவர்கள் ஏற்றுள்ள தொழிலும், இந்துக்களுக்குச் சொந்தமான செத்த பிராணி களை அப்புறப்படுத்துவது, அவற்றின் ஊழ்த்த இறைச்சியை

உண்ணுவது, அவற்றின் தோலை உரிப்பது போன்றவற்றையுமே இந்தக் குற்றச் சாட்டுக்குப் பிரதான ஆதாரமாகக் காட்டப்படுகிறது.

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் மாபெரும் நண்பரான **அபே டுபோய்,** சென்னை மாகாணத்தைச் சேர்ந்த பறையர்களைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்:

''ஏனைய சுதேசிகளைப் பிரதானமாக அருவருப்படையச் செய்வது, பறையர்கள் உண்ணும் மிகவும் வெறுக்கத்தக்க உணவே ஆகும். சிறிது நாற்றமடித்தால் போதும், அவர்கள் எந்த செத்தப் பிராணியின் உடலைச் சுற்றிலும் கூட்டம் கூடிவிடுவார்கள். அந்த விலங்கின் எச்சமிச்சங்களைப் பங்கு போட்டுக் கொள்வதற்காக நாய்கள், நரிகள், காகங்கள் போன்ற மாமிசப் பட்சணிகளுடன் எல்லாம் போட்டி போடுவார்கள். பிறகு, பாதி அழுகிப்போன மாமிசத்தைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வார்கள். அவ்வாறு பங்கிட்டுக் கொள்ளப்பட்ட இறைச்சியைத் தத்தமது குடிசைகளுக்கு எடுத்துச் செல்வார்கள்; அங்குச் சாதத்தையோ அல்லது வேறு எந்தப் பதார்த்தங்களையோ சேர்த்துக் கொள்ளாமல் அதனை அவசர அவசரமாக மிகுந்த ஆவலோடு விழுங்கி விடுவார்கள். அந்தப் பிராணி ஏதேனும் நோயால் செத்திருந்தால்கூட அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டார்கள். சில சமயங்களில் அவர்கள் பசுக்களுக்கோ, எருமைகளுக்கோ இரகசிய மாக விஷம் கொடுத்து அவற்றைச் சாகடிப்பதும் உண்டு. அப்படிச் செத்துப்போன பிராணிகள் அவர்களுக்கு நல்ல விருந்தாக அமையும்! கிராமத்தில் எந்தப் பிராணி செத்துப்போனாலும் அது தோட்டிக்குத்தான் சொந்தம். அவன், அதன் மாமிசத்தை அக்கம் பக்கத்திலுள்ள மற்ற பறையர்களுக்கு மிகக் குறைந்த விலைக்கு விற்றுக் காசு சம்பாதிப்பான். கிடைத்த இறைச்சி முழுவதையும் ஒரே நாளில் சாப்பிட முடியாத போது அதை வெயிலில் காயவைத்துத் தங்கள் குடிசைகளில் பத்திரப்படுத்தி வைப்பார்கள். உணவு கிடைக்காதபோது அவர்களுக்கு அது பயன்படும். இந்த மாமிசத் துண்டங்களைத் தோரணமாகக் கட்டித் தொங்கவிட்டிராத பறையர் வீடுகளை காண்பது அரிது. இதன் முடைநாற்றம் பறையர்களை எவ்வகையிலும் பாதிப்ப தில்லை. அதைப் பற்றி அவர்கள் கவலைப்படுவதும் இல்லை. ஆனால் அவர்களது கிராமங்களின் வழியாகச் செல்லும் வழிப்போக்கர் சட்டென்று மோப்பம் பிடித்து அந்தப் பகுதிகளில் எந்த சாதி மக்கள் வாழ்கிறார்கள் என்பதை உடனே சொல்லி விடுவார்கள்.

''மேலே கூறியவற்றை ஏனைய சாதிக்காரர்கள் அருவருப்போடு

நோக்குகிறார்கள் என்றால் அதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது? இத்தகைய காட்டுமிராண்டிகளுடன் எத்தகைய தொடர்பும் வைத்துக் கொள்ள மறுப்பதற்கு அவர்களை எப்படிக் குற்றம் சாட்ட முடியும்? அல்லது இந்த மக்கள் ஒதுங்கிப்போய் தனியாக கிராமங் களில் வசிப்பதற்கும் இவர்கள் எவ்வாறு பொறுப் பாவார்கள்?...''

இந்தத் தொழில் தீண்டப்படாதவர்களுக்கு எதிராக இந்துக் களின் மனத்தில் வெறுப்பு உணர்வைத் தோற்றுவித்துள்ளது என்பது உண்மையே. ஆனால் **அபேயோ** அல்லது அவரைப் போன்ற கருத்துடைய வேறுஎவருமோ, இரண்டு முக்கியமான கேள்விகளை எழுப்ப மறந்துவிடுகிறார்கள். முதலாவதாகத் தீண்டப்படாதோர் ஏன் செத்த பிராணிகளின் மாமிசத்தைச் சாப்பிடுகிறார்கள்? தங்களது செத்துப்போன பிராணிகளை அப்புறப்படுத்தும் பணியையும் அவற்றின் தோலை உரிக்கும் பணியையும் செய்யாமலிருக்கும் சுதந்திரத்தைத் தீண்டப்படாதவர்களுக்கு இந்துக்கள் வழங்கு வார்களா? தீண்டப்படாதவர்கள் செத்த பிராணிகளின் அழுகிப்போன மாமிசத்தை ஏன் சாப்பிடுகிறார்கள் என்னும் கேள்விக்கு முந்திய அத்தியாயங்களில் பதிலளிக்கப்பட்டிருக்கிறது.

முறையான மாமிச உணவு கிடைக்குமானால், யாரும் செத்த பிராணிகளை நாடமாட்டார்கள். தீண்டப்படாதவர்கள் பிராணிகளின் அழுகிப்போன பிணத்தைச் சாப்பிடுகிறார்கள் என்றால் அதில் அவர்களுக்கு என்ன தனி மோகமா? தாங்கள் உயிர் வாழ்வதற்கு வேறு எதுவும் இல்லாததாலேயே செத்த பிராணிகளை சாப்பிடுகிறார்கள். தீண்டாமை காரணமாக அவர்கள் வாழ வழியில்லை என்பதை உணரும் எவருமே இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்வார்கள். அவர்களுக்கு எல்லாத் தொழில்களும் மூடப்பட்டுவிட்டன. துண்டு நிலமிருந்தாலாவது அதில் பயிரிட்டு உயிர் பிழைக்கலாம். அதற்கும் வாய்ப்பில்லை. ஏதேனும் வர்த்தகத்தில் ஈடுபடலாம் என்றால் அதற்கும் வழியில்லை. கிராமவாசிகளிடமிருந்து கிடைக்கும் உணவும் அழுகிப்போன இந்தச் செத்த பிராணிகளும்தான் அவர்களது வாழ்விற்கான பிரதான ஆதாரம். இந்த அழுகி நாற்றமெடுத்துப்போன செத்த பிராணிகளின் இறைச்சிகூடக் கிடைக்கவில்லை என்றால் அவர்கள் பயங்கர பட்டினியால் எப்போதோ மாண்டு மடிந்து போயிருப்பார்கள். எனவே, தவறு தீண்டப்படாதவர்களுடையதல்ல என்பது தெள்ளத் தெளிவு. தீண்டத்தகாத மக்கள் செத்துப்போன பிராணிகளின் ஊழ்த்த இறைச்சியை உண்டு உயிர் வாழ்கிறார்கள் என்றால் இந்துக்கள் அவர்களுக்கு கௌரவமான ஜீவனோ

பாயத்துக்கு வழி செய்து தராததே காரணம். அடுத்து, இரண்டாவது கேள்விக்கான விடையும் தெள்ளத் தெளிவானது. இந்துக்களின் செத்துப்போன பிராணிகளின் உடல்களையும் தோலையும் தீண்டப் படாதவர்கள் எடுத்துச் செல்லுகிறார்கள் என்றால், அவர்களுக்கு வேறு வழியில்லை. இதைச் செய்யும்படி அவர்கள் நிர்ப்பந் திக்கப்படுகிறார்கள். இதைச் செய்ய மறுத்தால் அவர்கள் தண்டிக்கப் படுவார்கள். அந்தத் தண்டனையும் கூடச் சட்டப்பூர்வமானது. சில மாகாணங்களில் இந்த மோசமான, இழிந்த தொழிலைச் செய்ய மறுத்தால், அது ஒப்பந்தத்தை மீறுவதாக எடுத்துக்கொள்ளப் படுகிறது. மற்ற சில மாகாணங்களில், இது கிரிமினல் குற்றம்; இதற்கு அபராதமும் உண்டு. பம்பாய் போன்ற மாகாணங்களில் தீண்டப் படாதவர்கள் கிராம சேவகர்களாக இருக்கின்றனர். கிராம சேவகர்கள் என்ற முறையில் அவர்கள் அரசாங்கத்துக்கும் சேவை செய்ய வேண்டும், இந்துக்களுக்கும் சேவை செய்ய வேண்டும். இந்த சேவைக்குப் பிரதியாக அவர்களுக்கு நிலங்கள் அளிக்கப்படுகின்றன. இவற்றில் சாகுபடி செய்து, அதில் கிடைக்கும் மகசூலைக் கொண்டு ஜீவனம் நடத்தி வருகிறார்கள். கிராமத்தில் அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளில் இந்துக்களின் செத்த பிராணிகளின் தோலை உரிப்பதும், அவற்றின் உடல்களை அகற்றுவதும் அடங்கும். இந்துப் பொதுமக்க ளுக்கு இந்த வேலைகளைச் செய்யத் தீண்டப்படாதவர்கள் மறுத்தால், அவர்களுக்குத் தரப்பட்ட நிலங்கள் பறிமுதலாகும். அப்போது அவர்களுடைய நிலை இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையாகி விடுகிறது. ஒன்று, இந்த மோசமான தொழிலைச் செய்ய வேண்டும்; இல்லையென்றால், பட்டினி கிடந்து சாகவேண்டும்.

உத்தரப் பிரதேசம் போன்ற மாகாணங்களில் நிலைமை இன்னும் மிக மோசம். அங்கு தீண்டப்படாத மக்கள்தான் தோட்டி களாகப் பணிபுரிகிறார்கள். அவர்கள் வீடுகளையும் கட்டடங் களையும் கூட்டிச் சுத்தம் செய்யும் பணியைச் செய்ய மறுப்பது ஒரு குற்றமாக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மாகாணங்களின் 1916 ஆம் வருட நகரசபைச் சட்டம் பின்வருமாறு கூறுகிறது:

***பிரிவு 20 (1):*** வீடுகளையும் கட்டடங்களையும் பெருக்கிச் சுத்தம் செய்யக் கடமைப்பட்ட ஒரு தோட்டி, அவ்வாறு தனது பணியை முறையாக, ஒழுங்காகச் செய்யவில்லை என்றால் வீட்டுக்குரிய வரோ, கட்டடச் சொந்தக்காரரோ, அல்லது நகரசபையோ மாஜிஸ் டிரேட்டிடம் புகார் செய்யலாம்.

(2) ''இத்தகைய புகாரைப் பெற்றுக் கொள்ளும் மாஜிஸ்டிரேட் ஒரு விசாரணை நடத்துவார். வழக்கமான தோட்டி தனது கடமையைச் செய்யத் தவறிவிட்டான் என்று தெரிய வந்தால், அவனுக்குப் பத்து ரூபாய் அபராதம் விதிப்பார். அதே வீட்டிற்கு, மேலும் வேலை செய்யாமல் அதன் பொருட்டு மேற்கொண்டு ஓரிருமுறை அபராதம் விதிக்கப்படுமானால், அவன் தனது மரபு வழியான தோட்டி வேலையை இழப்பான்.''

''227. இவ்வாறு வேலை இழப்பதை எதிர்த்து அடுத்த மேல் நீதிமன்றத்துக்கு 165 ஆவது பிரிவின்படிஅவன் மேல் முறையீடு செய்து கொள்ளலாம். மற்றபடி வேறு சந்தர்ப்பங்களில் இவ்வாறு அவன் செய்ய முடியாது.''

இவ்வாறு கட்டாய உழைப்பு முறை இருந்து வந்திருப்பதைப் படிப்பவர்கள் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடையக் கூடும். இது அப்பட்டமான அடிமைத்தனமே தவிர வேறன்று என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அடிமைத்தனத்துக்கும் சுதந்திரமான உழைப்புக்கும் இடையே உள்ள வேறுபாடு இதுதான். அடிமை முறையில் வேலை ஒப்பந்தத்தை மீறுவது அபராதமோ, சிறை தண்டனையோ விதிக்கப் படக் கூடிய குற்றம். சுதந்திர உழைப்பு முறையில் வேலை ஒப்பந்தத்தை மீறுவது ஒரு சிவில் குற்றமே ஆகும். இதற்கு அவன் நட்டஈடு தர வேண்டும். இந்த அடிப்படையில் பார்க்கும்போது, தோட்டி வேலை செய்வது என்பது தீண்டத்தகாத மக்கள் மீது சட்டரீதியாகத் திணிக்கப்பட்டுள்ள ஒரு கடப்பாடு; இதிலிருந்து அவன் தப்ப முடியாது.

உண்மை இவ்வாறிருக்கும்போது, தீண்டப்படாதவர்கள் தாங்களே முன்வந்து, சுயவிருப்பத்தோடு இந்தக் கீழ்த்தரமான வேலையைச் செய்கிறார்கள் என்று எப்படி அவர்கள் மீது குற்றஞ் சாட்ட முடியும்?.

இந்துக்களுக்காக, இத்தகைய இழிவான வேலைகளைச் செய்து தீண்டப்படாதவர்கள் தீண்டாமை எனும் சாபத்தீட்டைத் தங்களுக்குத் தாங்களே வரவழைத்துக் கொள்கிறார்கள் என்று எப்படி அவர்கள் மீது குற்றம் சாட்ட முடியும்?

இது ஒருபுறமிருக்க, இங்கு ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனத்திற் கொள்ள வேண்டும்: இனி எந்த ஒரு தீண்டப்படாதவனும்

இந்துக்களின் செத்துப்போன விலங்குகளின் தோலை உரிக்கவோ அல்லது அதன் அழுகிப்போன உடலை அப்புறப்படுத்தவோ கூடாது என்று **மஹத் மாநாடு** தீர்மானித்தது. இந்தத் தீர்மானங்களின் நோக்கம் இருவகைப்பட்டது. தீண்டப்படாதவர்களிடையே சுயமரியாதை உணர்வையும் தன்மதிப்பு உணர்வையும் ஊட்டி வளர்ப்பது ஒரு நோக்கம். இது ஒரு சிறுதரப்பட்ட நோக்கம் தான். இந்து சமூக அமைப்பின்மீது ஓர் உக்கிரமான தாக்குதல் தொடுப்பதே பிரதான நோக்கம். இந்து சமூக அமைப்பு உழைப்புப் பிரிவினையை அடிப்படையாகக் கொண்டது. இதன்படி, இந்த அமைப்பு இந்துக் களுக்கு அழுக்குப்படியாத, சுத்தமான, சமுதாய மதிப்புடைய பணிகளை வழங்குகிறது; அதே சமயம் தீண்டப்படாதவர்களுக்கோ அது அருவருப்பான, இழிவான வேலைகளை ஒதுக்குகிறது; இதன் மூலம் இந்துக்களின் மீது கண்ணியத்தைப் பொழிந்து அவர்களைக் கௌரவிக்கிறது; அதேபோழ்து தீண்டப்படாதவர்கள் மீது இழிவை சுமத்தி அவர்களை அவமதிக்கிறது; அதாவது வேறுவிதமாகச் சொன்னால் ஒரு கண்ணில் வெண்ணெயும் இன்னொரு கண்ணில் சுண்ணாம்பும் வைக்கிறது. இந்தத் தீர்மானத்தை இந்து சமூக அமைப்பின் இப்பகுதிக்கு எதிராக நடைபெற்ற ஒரு பெரும் எழுச்சி, கிளர்ச்சி என்றுதான் சொல்ல வேண்டும். இனி இந்துக்கள் தங்களது இழிவான வேலைகளைத் தாங்களே செய்து கொள்ளும்படிச் செய்வதே இதன் நோக்கம்.

இந்துக்களின் பாசிபடிந்த, பத்தாம்பசலியான அமைப்புக்கு எதிரான, தீண்டத்தகாத மக்களின் எழுச்சி வரலாற்றின் ஒரு சுருக்கமான மணித்திரட்டே இது. பம்பாயில்தான் இந்த எழுச்சி முதலில் துவங்கிற்று. ஆனால் இந்தியா முழுவதிலும் அது இப்போது காட்டுத்தீ போல் பரவியிருக்கிறது.

□□□

# இயல் 22

# இக்கட்டான நிலையில்

**1. தீண்டப்படாதோரின் எழுச்சி இந்துக்களிடம் ஏற்படுத்திய பிரதிபலிப்பு. 1I. சட்ட மீறல் என்பது ஈவு இரக்கமற்ற கொடிய அடக்குமுறையைக் குறிக்கிறது. 1II. தீண்டப்படாதோர், ஒரு பலவீனமான சக்தி. 1V. மழுங்கடிக்கப்பட்ட ஆயுதம்.**

## 1

தீண்டப்படாத மக்களின் எழுச்சி வரலாறு, பழமை எவ்வாறு முக்காடிட்டுக் கொண்டு வெளியேறுகிறது என்பதையும், புதுமை எவ்வாறு தலை உயர்த்தி, நெஞ்சு நிமிர்த்தி உள்ளே நுழைகிறது என்பதையும் எடுத்துரைக்கிறது. இந்த எழுச்சிக்கு இந்துக்களின் பதில் என்ன? அவர்களது எதிரொலி என்ன? இது குறித்து ஏதேனும் தெரிந்தவர்களுக்கு இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பதில் எத்தகைய தயக்கமும் இருக்க முடியாது. ஏனென்றால் எதிர்ப்பே அவன் மேற்கொண்டுள்ள நிலை அல்லது போக்கு என்பது தெள்ளத் தெளிவு. இந்துக்கள் ஏன் எதிர்க்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கக் கூடும். ஆனால் அவன் எதிர்க்க முனைந்து விட்டான் என்பதில் எள்ளளவும் ஐயம் இருக்க முடியாது.

சாதி இந்துக்களுக்கும் தீண்டப்படாதோருக்கும் இடையே தற்போது நிலவிவரும் உறவின் சில முக்கியமான அம்சங்களைக் கருத்திற் கொண்டால், தீண்டப்படாதவர்கள் தங்கள் உரிமைகளுக்காக நடத்தும் இந்தப் போராட்டத்தை இந்துக்கள் ஏன் எதிர்க்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வதில் எத்தகைய சிரமமும் இருக்காது.

தீண்டத்தகாதவர்களுக்கும் தீண்டத்தக்கவர்களுக்கும் இடையே ஒரு கூர்மையான, கடுமையான பிளவு நிலவி வருகிறது என்ற மறுக்க

முடியாத உண்மையை நாம் முக்கியமாகவும் பிரதானமாகவும் கவனத்திற் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று தீண்டத்தக்கவர்களின் குடியிருப்புகள், மற்றொன்று தீண்டத்தகாதவர்களின் குடியிருப்புகள். பூகோள ரீதியில் இவை இரண்டும் தனித்தனியானவை. இவ்விரண்டு பகுதிகளுக்கும் இடையே எப்போதுமே கணிசமான இடைவெளி இருந்து வருவது வழக்கம். எது எப்படியிருந்தாலும் அவை ஒன்று அடுத்தோ அல்லது நெருங்கியோ இருப்பதில்லை. தீண்டத்தகாதவர்கள், தங்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு **மஹர்வாடா, மங்வாடா, சாம்ரோட்டி, காயக்கானா** என்பன போன்ற தங்களுக்கே உரிய பெயர்களைச் சூட்டியுள்ளார்கள். வருவாய்த்துறை நிர்வாகம் அல்லது அஞ்சல் துறைத் தகவல் போக்குவரத்து போன்ற காரியங்களைப் பொறுத்தவரையில், இவர்களது பகுதி, சட்டரீதியில் கிராமத்திற்குள்தான் இருக்கிறது. ஆனால் நடைமுறை ரீதியிலோ அது கிராமத்துக்கு வெளியே தனியாக இருக்கிறது. ஒரு கிராமத்தில் வசிக்கும் இந்து தனது கிராமத்தைப் பற்றிப் பேசும்போது அக்கிராமத்தில் வசிக்கும் சாதி இந்துக்களையும், அவர்கள் இருக்கும் பகுதியையும் மட்டும் மனத்தில் வைத்தே பேசுகிறான். அதே போன்று ஒரு தீண்டத்தகாதவன் தனது கிராமத்தைப் பற்றிப் பேசும்போது அங்கிருக்கும் தீண்டப்படாத மக்களையும் அவர்களது குடியிருப்புகளையும் மனத்தில் வைத்தே பேசுகிறான். இவ்வாறு, ஒவ்வொரு கிராமத்திலும் தீண்டத்தக்கவர்களும் தீண்டத்தகாதவர்களும் இரண்டு தனித்தனிப் பிரிவுகளாகக் காணப்படுகின்றனர். அவர்களிடையே பொதுவான அம்சங்கள் ஏதுமில்லை. அவர்கள் ஓர் இனமாக அமைந்திருப்பதில்லை. இது இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய முதல் விஷயமாகும்.

இவ்விதம், கிராமம் இரு பகுதிகளாகப் பிரிந்திருப்பது சம்பந்தமாக இரண்டாவதொரு அம்சத்தையும் இங்குக் குறிப்பிடுவது அவசியம். இவ்விரண்டு பகுதிகளும் ஒன்றுடன் ஒன்று எவ்வகையிலும் சம்பந்தப்படாத இரண்டு தனித்தனி அமைப்புகளாகவே காட்சியளிக்கின்றன. இவற்றில் ஏதேனும் ஒன்றில் இடம் பெறாமல் எவருமே தப்ப முடியாது. ஓர் அமெரிக்கனையோ, ஐரோப்பியனையோ எடுத்துக் கொள்ளுங்கள். அவன் ஏதோ ஒரு குடும்பத்தில் பிறக்கிறான். ஆனால் தனக்கு விருப்பமிருந்தாலொழிய வாழ்நாள் முழுவதும் அவன் அந்தக் குடும்பத்திலேயே இருப்பதில்லை. அவன் தனது சொந்தத் தொழிலை, இருப்பிடத்தை, மனைவியை, அரசியல் கட்சியைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான்; அவன் மற்றவர்களின் செயல்களுக்காக அன்றித் தன் செயல்களுக்காக மட்டுமே பொறுப்பேற்கிறான். அவன் ஒரு

''தனிநபர்''; ஏனென்றால் அவனது எல்லா உறவுகளும் அவனுக்காக அவனாலே தீர்மானிக்கப்படுகின்றன. ஆனால் தீண்டத்தக்கவர்கள் அல்லது தீண்டத்தகாதவர்கள் விஷயம் அப்படியல்ல; அவர்கள் எந்த அர்த்தத்திலும் தனிநபர்கள் அல்ல; ஏனென்றால், கிட்டத்தட்ட அவர்களுடைய சகல உறவுகளும் ஒரு குறிப்பிட்ட வகுப்பில், சாதியில் பிறக்கும்போதே தீர்மானிக்கப்பட்டு விடுகின்றன. அவர்களுடைய தொழில், அவர்களது இருப்பிடம், அவர்களுடைய கடவுள்கள், அவர்களுடைய அரசியல் இவை யாவும் அவர்கள் சார்ந்த வகுப்பால் அவர்களுக்காக முன்கூட்டியே நிச்சயிக்கப்பட்டு விடுகின்றன. தீண்டத்தக்கவர்களும், தீண்டப்படாதவர்களும் சந்திக்கும் போது மனிதனுக்கு மனிதனாகத், தனி நபருக்குத் தனி நபராகச் சந்திப்பதில்லை; அதற்கு மாறாக வகுப்புகளின் உறுப்பினர்களாக அல்லது இரண்டு வெவ்வேறு இனத்தினராகச் சந்திக்கிறார்கள்.

ஒரு கிராமத்திலுள்ள தீண்டத்தக்கவர்களுக்கும் தீண்டத்தகாதவர்களுக்கும் இடையே இது ஒரு முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அவர்களிடையேயான உறவு நாகரிக முதிர்ச்சியற்ற பழங்காலச் சமுதாயத்தைச் சேர்ந்த குலமரபு குழுக்களுக்கிடையே நிலவிவந்த உறவை ஒத்ததாக இருக்கிறது. பழங்காலச் சமுதாயத்தில் ஒரு மரபுக் குழுவைச் சேர்ந்த உறுப்பினருக்கு எதையும் கோரிப் பெறும் உரிமை இருக்கிறது. ஆனால் ஓர் அந்நியருக்கு அத்தகைய உரிமை இல்லை. அவன் ஒரு விருந்தாளியாக அன்போடு நடத்தப்படலாம்; ஆனால் தனது குழுவுக்கு அப்பால் வேறு எந்தக் குழுவிடமிருந்தும் அவன் ''நியாயம்'' கோர முடியாது. குழுவும் குழுவும் போர் அல்லது சமாதானம் பற்றிப் பேசிக் கொள்ளலாமே தவிர, சட்டத்தைப் பற்றிப் பேச முடியாது; அந்தக் குழுவைச் சேராத ஒருவன் சட்டத்திற்குப் புறம்பானவன்; எனவே அத்தகைய ஓர் அந்நியன் விஷயத்தில் சட்டத்திற்கு விரோதமாக நடந்து கொள்வது சட்டபூர்வமானதே. இதே போன்று தீண்டத்தக்கவர்களின் குழாத்தில் உறுப்பினனாக இல்லாத ஒரு தீண்டத்தகாதவன் அந்நியனாகிறான். அவன் குழு சம்பந்தமுடையவனல்ல. அவன் சட்டத்திற்குப் புறம்பானவன். தீண்டத்தக்கவன் மதிப்பதற்குக் கடமைப்பட்ட எந்த உரிமைகளையும் அவன் கோரமுடியாது; நீதி வேண்டுமென வற்புறுத்த முடியாது.

இங்குக் கவனத்திற்கொள்ள வேண்டிய மூன்றாவது விஷயம் ஒன்று உள்ளது. தீண்டத்தக்கவர்களுக்கும் தீண்டத்தகாதவர்களுக்கும் இடையேயான உறவு ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்ட, நிச்சயிக்கப்பட்ட உறவு ஆகும். இது, சமுதாய படிநிலை சம்பந்தப்பட்ட

விஷயமாகி விட்டது. தீண்டத்தக்கவர்களுடன் ஒப்பிடும்போது தீண்டத்தகாதவர்கள் சமுதாயத்தில் மிகவும் தாழ்ந்த, கீழான படி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தத் தாழ்நிலைக்குச் சமுதாய ஒழுங்குமுறை உருவம் கொடுக்கப்பட்டு அது தீண்டப்படாதோர் மீது திணிக்கப்பட்டிருக்கிறது; இதனை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படுகின்றனர். இந்த ஒழுங்குமுறையின் லட்சணம் என்ன என்பதை ஏற்கெனவே விவரித்திருக்கிறோம். இந்த ஒழுங்குமுறையை ஏற்கத் தீண்டத்தகாதவர்கள் தயாராக இல்லை. தீண்டத்தகாதவன் பொது உடன்பாட்டின் அடிப்படையில், பொதுக் கட்டுப்பாட்டின் அடிப்படையில் தீண்டத்தக்கவனோடு தனது உறவை நிறுவிக் கொள்ள விரும்புகிறான். ஆனால் தீண்டத் தக்கவனோ வேறுவிதமாக நினைக்கிறான்; சமுதாயப் படிநிலை விதிமுறைகளின்படி தீண்டப்படாதோர் வாழ வேண்டும், அந்தப் படிநிலைக்கு மேல் அவர்கள் உயரக் கூடாது என்று அவன் கருது கிறான். ஆக, இவ்வாறு, ஏற்கனவே நிரந்தரமாக இறுதி செய்யப் பட்டு விட்டதென தீண்டத்தக்கவர்கள் கருதும் ஏற்பாட்டை மாற்றி யமைக்கும் விஷயம் குறித்துத், தீண்டத்தக்கவர்களும் தீண்டத்தகாத வர்களும் இப்போது போராடிக் கொண்டிருக்கின்றனர். இந்தத் தகராறு ஒரு கேள்வியை மையமாகக் கொண்டு நடைபெற்று வருகிறது. அந்தக் கேள்வி இதுதான்: இந்த உறவுக்கான அடிப்படை என்ன? அது பொது உடன்பாடாக இருக்க வேண்டுமா அல்லது சமுதாயப் படிநிலையாக இருக்க வேண்டுமா?

இந்தக் கேள்விதான் இந்துக்களைக் கலக்கமடைய வைத்துள் ளது. தீண்டத்தகாதவர்களின் எழுச்சியை அவர்களது மக்களின் சமூக, பொருளாதார, மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சி யாக இந்து பார்க்கவில்லை. இதைத் தன்னைக் குறிஇலக்காகக் கொண்ட ஒரு முயற்சியாக அவன் நோக்குகிறான்; தன்னுடன் சரிசமத்துவம் கொண்டாடும் ஒரு முயற்சியாக இதனைக் கருதுகிறான். எனவேதான் தீண்டத்தக்கவன் தீண்டத்தகாதவர்களின் கிளர்ச்சியை எதிர்க்கிறான்.

## II

இந்துக்களின் எதிர்ப்பு, அசையாத தீர்மானமான எதிர்ப்பு; கிளர்ச்சியை எப்படியும் மிதித்துத் துவைத்து ஒடுக்கிவிட வேண்டும் என்ற மூர்க்கப் பிடிவாதமான எதிர்ப்பு. இதில் எந்தவிதமான உபாயங்களையும் கைக்கொள்ள அவர்கள் தயாராக இருக்கின்றனர்; எந்த அளவுக்கும் செல்லச் சித்தமாக இருக்கின்றனர். தீண்டத்

தகாதவர்களின் எழுச்சியை அதே அளவு முனைப்போடும் உக்கிரத் தோடும் எதிர்த்து வருகின்றனர். தீண்டத்தகாதோரின் கிளர்ச்சியை நசுக்குவதில் இந்துக்கள் எவ்வளவு குரூரமாக, ஈவு இரக்கமற்று நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை இங்குக் குறிப்பிட்டாலே போதும்.

பொது இடத்தில் தண்ணீர் எடுப்பதற்குத் தங்களுக்குள்ள அசைக்க, மறுக்க முடியாத உரிமையை நிலைநாட்டும் பொருட்டு, **மஹத்** குளம் நோக்கி ஊர்வலமாகச் சென்று அதில் பிரவேசிப்பது என்று **மஹத்தில்** நடைபெற்ற மாநாட்டில் முடிவு செய்யப்பட்டதை ஏற்கெனவே கூறியிருக்கிறேன். இதன் பிரகாரம், ஊர்வலம் சென்ற வர்கள் மீதும், குளத்தில் இறங்கியவர்கள் மீதும் இந்துக்கள் எத்தகைய மிருகத்தனமான, காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நடத்தினர் என்பதை பம்பாய் **'கிராணிக்கல்'** பத்திரிகை வருணித் துள்ளது. அதனை அப்படியே கீழே தந்திருக்கிறேன்.

''ஊர்வலம் மிக அமைதியாகவே நடைபெற்றது. எத்தகைய அசம்பாவித சம்பவங்களும் நிகழவில்லை. ஆனால் இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு, நகரத்தைச் சேர்ந்த கெடுபுத்தியுள்ள சில தலைவர்கள் ஒரு விஷமத்தனமான, பொய்யான வதந்தியைக் கிளப்பி விட்டனர்; தாழ்த்தப்பட்ட வகுப்பினர் **வீரேஷ்வரர் ஆலயத்தில்** பிரவேசிக்கத் திட்டமிட்டிருக்கின்றனர் என்று புரளி கட்டிவிட்டனர். இது நகரெங்கும் காட்டுத் தீபோல் பரவவே, சமூக விரோதிகள் மூங்கிற் கம்புகளுடன் பெருந்திரளாகக் கூடிவிட்டனர். கூட்டம் விரைவில் கட்டுக்கடங்காததாகி விட்டது. நகரம் முழுவதும் வன்னெஞ்ச, சற்றும் பழிபாவத்துக்கு அஞ்சாத ரவுடிகளின் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிட்டது; அவர்கள் சொல்லொண்ணா வெறியாட்டத்தில் இறங்கினர்; தாழ்த்தப்பட்ட மக்களின் இரத்தத்தைச் சிந்த வெறிபிடித்து அலைந்தனர்.

இச்சமயம் தாழ்த்தப்பட்ட மக்கள், தமது கிராமத்துக்குக் கலைந்து செல்லுவதற்கு முன்னர் உணவு உட்கொள்வதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். இவர்களில் பெரும்பாலோர் ஏற்கெனவே நகரை விட்டுச் சென்றுவிட்டனர். அப்போது, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உணவு அருந்திக் கொண்டிருந்த சமையல் கூடத்திற்குள் ரவுடிகள் அத்துமீறி நுழைந்தனர். இதனைத் தொடர்ந்து இரு தரப்பினரிடையே யும் மூர்க்கமான கைகலப்பு நடந்திருக்கும். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களை அவர்களுடைய தலைவர்கள் அமைதிப்படுத்தித் தடுத்து

நிறுத்திவிட்டனர். இதனால் ஒரு கோரமான கலகம் தவிர்க்கப் பட்டது. ஆத்திரமூட்டப்படுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படாமையால் போக்கிரிகள் பிரதான தெருவுக்கு வந்து அட்டகாசம் செய்ய ஆரம்பித்தனர்; தங்களது கிராமங்களுக்குச் சிறு சிறு குழுக்களாகச் சென்று கொண்டிருந்த தாழ்த்தப்பட்ட மக்கள்மீது வல்லூறுகள் போல் பாய்ந்து அவர்களைப் படுகாயப்படுத்தினர்; வழிநெடுகிலும் தாழ்த்தப் பட்ட மக்களின் வீடுகளுக்குள் அடாவடியாக நுழைந்து அங்கிருந் தவர்களைப் பேய்த்தனமாகத் தாக்கினர்; இத்தாக்குதலில் ஏறத்தாழ 20 பேர் காயமடைந்தனர். இதில், தாழ்த்தப்பட்ட மக்கள் நடந்து கொண்ட முறை மிகவும் பாராட்டுதற்குரியதாகும். அதே சமயம் மேல் தட்டு வகுப்பினர் பலர் கடைப்பிடித்த போக்கு மானக்கேடானதாகும். இத்தனைக்கும், மேல் சாதியினரின் எண்ணிக்கையைவிட அங்கு கூடியிருந்த தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை மிக அதிகம். அப்படியிருந்தும் எத்தகைய வன்முறைக்கும் இடம் கொடுக்காமல் முற்றிலும் சட்டரீதியான முறையில் எதையும் செய்வதிலேயே அவர்களுடைய தலைவர்கள் குறியாக இருந்தனர்; தாழ்த்தப்பட்ட மக்கள் வழிதவறிச் சென்று தகாத நடவடிக்கைகளில் ஈடுபடாதபடிப் பார்த்துக் கொண்டனர். எவ்வளவோ ஆத்திரமூட்டல்கள் இருந்த போதிலும் அவர்கள் சுயக்கட்டுப்பாட்டைக் காத்தனர். இவ்வகையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். பொது நீர்நிலைகளிலிருந்து தண்ணீர் எடுக்கும் சர்வ சாதாரணக் குடியுரிமை களைத் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுபவிப்பதற்குக்கூட அனுமதிக்க மேல் தட்டு வகுப்பினர் தயாராக இல்லை என்பதையே **மஹத் மாநாடு** எடுத்துக் காட்டியுள்ளது.

**மஹத்தையும் கொலாபா** மாவட்டத்தையும் சேர்ந்த உயர் சாதி இந்துக்கள் மிகவும் கண்டிக்கத்தக்க இன்னொரு காரியத்தையும் செய்தனர்; அதாவது மாநாட்டுப் பிரதிநிதிகள் தத்தம் கிராமங்களைச் சென்றடைந்ததும் அவர்களைத் தண்டிக்கும்படி உயர்சாதி மக்களைக் கேட்டுக் கொண்டு பல்வேறு கிராமங்களுக்கும் தகவல் அனுப்பினர். இந்த மேலிடக் கட்டளைகளுக்கு இணங்க ஆங்காங்கு ஏராளமான **மஹார்கள்** மீது கடுந்தாக்குதல்கள் நடைபெற்றன; அதிலும் உயர்சாதி இந்துக்கள் மிக அதிக எண்ணிக்கையில் வாழும் கிராமங்களில் மாநாட்டுப் பிரதிநிதிகள் தங்கள் கிராமங்களுக்கு வந்து சேர்ந்த உடனேயோஅல்லது அதற்கு முன்னரோ மிகக் கொடிய தாக்குதல்களுக்கு உள்ளாயினர். தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர்கள் பாதுகாப்புக் கோரி அதிகாரிகளுக்கு விண்ணப்பித்தனர். அதன்படி, மாவட்ட போலீஸ் உயர் மேலாளர் உட்பட மாவட்ட அதிகாரிகள் ஸ்தலத்திற்கு வந்து விசாரணை நடத்தினர். ரெஸிடெண்ட் மாஜிஸ்ட்ரேட் இடைப்பட்ட

இரண்டு மணி நேரத்தில் ஏதேனும் தகுந்த நடவடிக்கைகள் எடுத்திருந்தால், இந்தக் கலகத்தை அநேகமாகத் தவிர்த்திருக்கலாம் என்பதை இங்குச் சுட்டிக் காட்டியாக வேண்டும்.''

**காலா ராம் ஆலய சத்தியாக்கிரகத்தின்** போது தீண்டப்படாத மக்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதலும் கடுமையில் எவ்விதத்திலும் குறைந்ததல்ல.

மூன்றாவது சம்பவம் மிக அண்மையில் 1935 ஆம் ஆண்டு பம்பாய் ராஜதானி ஆமதாபாத் மாவட்டம் தோல்கா தாலுகாவைச் சேர்ந்த கவிதா என்ற கிராமத்தில் நடைபெற்றது.

பொதுப் பள்ளிக் கூடங்களில் தீண்டத்தகாதவர்களின் குழந்தை களை அனுமதிப்பது சம்பந்தமான உத்தரவுகளைப் பிறப்பித்த பம்பாய் அரசாங்கம் பின்வருமாறு குறிப்பிட்டது:

''1935 ஆகஸ்டு 8ஆம் தேதி கவிதா கிராமத்தைச் சேர்ந்த தீண்டத்தகாதோர் கிராமப் பள்ளியில் சேர்ப்பதற்காகத் தங்களுடைய நான்கு குழந்தைகளை அழைத்துச் சென்றனர். இதைக் காண்பதற் காக அக்கிராமத்தைச் சேர்ந்த சாதி இந்துக்கள் பலரும் பள்ளிக்கு அருகில் கூடியிருந்தனர். இந்த நிகழ்ச்சி அமைதியாகவே நடந் தேறியது. எத்தகைய விரும்பத்தகாத சம்பவங்களும் நடைபெற வில்லை.''

ஆனால் மறுதினமே கிராமத்தின் உயர்சாதி இந்துக்கள் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திலிருந்து அழைத்து வந்து விட்டனர். தங்களுடைய குழந்தைகள் தீண்டத்தகாதவர்களின் குழந்தைகளுடன் சேர்ந்து அமர்வதையும், இதன் மூலம் தீட்டுப் படுவதையும் அவர்கள் விரும்பவில்லை.

இதற்குச் சில நாள்களுக்குப் பிறகு அக்கிராமத்தைச் சேர்ந்த ஒரு தீண்டப்படாதவர், பிராமணர் ஒருவரால் தாக்கப்பட்டார். இது சம்பந்தமாக அந்தப் பிராமணர் மீது மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்வதற்காக கிராமத்தின் தீண்டத்தகாதவர்களில் ஆண்கள் அனைவரும் தோல்கா சென்று விட்டனர். தீண்டப் படாதவர்களில் வயது வந்தோர் எவரும் கிராமத்தில் இல்லை என்பதைத் தெரிந்து கொண்ட கிராம இந்துக்கள், தீண்டத்தகாதவர் களின் குடியிருப்புகள் மீது படையெடுத்தனர். கழிகள், ஈட்டிகள்,

வாட்கள் முதலியவற்றுடன் ஆயுதபாணிகளாக வந்தனர். இவர்களில் சாதி இந்துப் பெண்களும் இருந்தனர். தீண்டத்தகாதோரில் வயதான ஆண்களையும் பெண்களையும் அவர்கள் தாக்கத் தொடங்கினர். இந்தத் தாக்குதலுக்கு உள்ளானோரில் சிலர் பயந்து போய்க் காடுகளுக்கு ஓடிச் சென்று ஒளிந்து கொண்டனர். சிலர் கதவு களை மூடிக் கொண்டு என்ன நேருமோ என்ற பீதியோடு வீடு களுக்குள் இருந்தனர். தங்கள் குழந்தைகளைப் பள்ளிக் கூடத்தில் சேர்க்கும் விஷயத்தில் முன்னின்றவர்கள் என்று சந்தேகப்படு பவர்களின் மீது படையெடுப்பாளர்களின் கோபாவேசம் திரும்பிற்று. அவர்களுடைய வீட்டுக் கதவுகளை உடைத்து உள்ளே சென்றனர். அவர்கள் அங்கு இல்லாதது கண்டு மேலும் ஆத்திரமடைந்து வீட்டுக் கூரைகளின் விட்டங்களையும், ஓடுகளையும் உடைத்து நொறுக்கினர். கொடுமையாகத் தாக்கப்பட்டு அச்சமும் திகிலும் அடைந்திருந்த இந்தத் தீண்டத்தகாத மக்கள் ஆண்களும் பெண்களும் தோல்கா சென்றிருந்த தங்கள் உற்றார் உறவினர்களின் பந்தோபஸ்து பற்றிக் கவலைப்பட ஆரம்பித்தனர். அன்றிரவு அவர்கள் திரும்பு வார்கள் என்று எதிர்பார்த்திருந்தனர். தோல்காவுக்குச் சென்றுள்ள தீண்டத்தகாதோரின் தலைவர்கள் அன்று இரவு திரும்புவார்கள் என்பதைத் தெரிந்து கொண்ட சாதி இந்துக்கள், அவர்களைத் தாக்கு வதற்காக முழு ஆயுதபாணிகளாக கிராமத்திற்கு வெளியே சென்று புதர்களுக்கிடையே மறைந்து கொண்டனர். இதை அறிந்த தீண்டத் தகாத இனத்தைச் சேர்ந்த ஒரு வயதான பெண்மணி கிராமத்தைவிட்டு வெளியேறி இருட்டில் பதுங்கிப் பதுங்கிச் சென்று, தோல்காவிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த தலைவர்களைச் சந்தித்து, அவர்களை வழிமறித்துத் தாக்குவதற்காக ஆயுதந்தாங்கிய சாதி இந்துக்கள் கும்பல் புதர்களுக்குள்ளே மறைந்து கொண்டிருப்பதாகவும், ஆகவே கிராமத்திற்குள் வர வேண்டாம் என்றும் அவர்களிடம் கூறினாள். ஆனால், இதற்குச் செவிமடுக்க அவர்கள் மறுத்துவிட்டனர்; தாங்கள் இல்லாத சமயத்தில் சாதி இந்துக்கள் இன்னும் அதிக அட்டூழியங் களையும், கொடுமைகளையும் செய்யக் கூடும் என்று அஞ்சினர். அதே சமயம் கிராமத்திற்குள் நுழைந்தால் தாங்கள் தாக்கப்படக் கூடும் என்றும் பயந்தனர். எனவே, கிராமத்திற்கு வெளியே உள்ள வயல் களில் நள்ளிரவு கழியும்வரை காத்திருப்பது என்று தீர்மானித்தனர். இதற்கிடையே, தாக்குவதற்குத் தயாராக கிராமத்திற்கு வெளியே பதுங்கியிருந்த சாதி இந்துக்கள் நீண்ட நெடுநேரம் காத்திருந்துவிட்டு, இனி இங்கிருப்பது வீண் என்று கிராமத்துக்குத் திரும்பிவிட்டனர். தீண்டப்படாதோரின் தலைவர்கள் நள்ளிரவு கழிந்து அதிகாலை சுமார் 3 மணி அளவில் கிராமத்திற்குள் நுழைந்தனர். நல்லவேளை, அவர்கள்

இதற்குச்சற்று முன்னர்வந்திருந்தால் கொலைகாரக் கும்பல் அவர்களைக் கொன்று தீர்த்திருக்கும். கிராமத்திற்கு வந்து சேர்ந்ததும் தங்களைச் சேர்ந்தவர்களின் உயிருக்கும் உடைமைக்கும் ஏற்பட்டுள்ள பயங்கர சேதங்களைக் கண்டு பதறிப்போய் விட்டனர்; துடிதுடித்து விட்டனர். உடனே ஒரு கணமும் தாமதியாமல், ஆமதாபாத்திலுள்ள ஹரிஜன சேவா சங்கத்தின் செயலாளருக்குத் தகவல் கொடுப்பதற்காகப் பொழுது புலர்வதற்குள் அங்கிருந்து கிளம்பிவிட்டனர். இந்த ஹரிஜன சேவா சங்கம் தீண்டப்படாதவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக காந்தியால் அமைக்கப்பட்ட நிறுவனமாகும். எனினும், இந்த விஷயத்தில் சங்கச் செயலாளர் எவ்வகையிலும் உதவி செய்ய இயலாதவராக இருந்தார். இதற்கிடையே, கிராம சாதி இந்துக்கள் வன்முறையைப் பயன்படுத்தியதோடு நிற்கவில்லை. தீண்டப்படாதவர்களின் வாழ்க்கையை சகிக்க முடியாததாக்குவதற்கு சூழ்ச்சியில் ஈடுபட்டனர்; அவர்களைத் தொழிலாளர்களாக வேலைக்கமர்த்திக் கொள்ள மறுத்துவிட்டனர்; அவர்களுக்கு உணவுப் பொருள்களை விற்பனை செய்ய மறுத்துவிட்டனர்; அவர்களது ஆடுமாடுகள் மேய்வதற்கு அனுமதிக்க மறுத்துவிட்டனர்; இதல்லாமல் இங்குமங்குமாக தீண்டப்படாத சமூகத்தைச் சேர்ந்த ஆண்களையும் பெண்களையும் தாக்குவதிலும் ஈடுபட்டனர். அந்தக் கல் நெஞ்சர்கள் இத்துடன் நின்றார்களா? இன்னொரு படுபாதகச் செயலை அணுவளவும் ஈவு இரக்கமின்றி நெஞ்சறிந்து செய்தனர்; தீண்டப்படாதவர்கள் குடிநீர் பெறும் கிணற்றில் மண்ணெண்ணெயை ஊற்றினர். ஒரு நாள் இரண்டு நாள் அல்ல, பல நாள்கள் தொடர்ந்து இந்த அட்டூழியத்தைச் செய்து வந்தனர். இதன் விளைவாக அந்தக் கிராமத்தைச் சேர்ந்த தீண்டப்படாத சமூகத்தினருக்குக் குடிநீர் கிடைக்காமல் போய்விட்டது. பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டல்லவா? நிலைமை இந்த மோசமான கட்டத்தை அடைந்தபோது இனியும் பொறுப்பதில்லை என்று தீர்மானித்தனர். மாஜிஸ்டிரேட்டிடம் ஒரு கிரிமினல் முறையீட்டைத் தாக்கல் செய்வது பற்றி ஆலோசித்தனர். அவ்வாறே சில சாதி இந்துக்களைக் குற்றவாளிகளாக்கி, ஒரு முறையீடு அக்டோபர் 17 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டது.

இந்த விஷயத்தில் **காந்தியும்** அவருடைய சீடர் **சர்தார் வல்லபாய் பட்டேலும்** நடந்துகொண்ட முறை விந்தையிலும் விந்தையானது. கவிதா கிராமத்தின் சாதி இந்துக்கள் தீண்டப் படாத இனத்தினருக்கு எதிராக இழைத்த எல்லாக் கொடுமை களும், அக்கிரமங்களும், அநீதியும், அடக்குமுறைகளும் திருவாளர் காந்திக்கு நன்றாகவே தெரியும். அப்படியிருந்தும், அவர் என்ன

செய்தார் தெரியுமா? கிராமத்தை விட்டு வெளியேறும்படி தீண்டத் தகாத மக்களுக்கு ஆலோசனை கூறி அருளினார். போக்கிரிகள் நீதிமன்றத்தில் கொண்டுவந்து நிறுத்தப்பட வேண்டும் என்று கூடக் கூறவில்லை. அவருடைய நம்பிக்கைக்குரிய தோழர் திரு. **வல்லபாய் பட்டேலோ** இன்னும் ஒருபடி மேலே சென்றார்; இதில் அவர் ஆற்றிய பங்கு இன்னும் விசித்திரமானது. தீண்டத் தகாதவர்களுக்கு எவ்வகையிலும் தொல்லை கொடுக்க வேண்டாம் என்று சாதி இந்துக்களுக்கு நயமாக எடுத்துக்கூறி அவர்களை இணங்க வைப்பதற்காக கவிதா கிராமத்துக்குச் சென்றார். ஆனால் அவர் களோ அவரது பேச்சைக் காது கொடுத்தும் கேட்கவில்லை. இவர் களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி அவர்களுக்குத் தண்டனை வாங்கித் தரவேண்டும் என்று தீண்டப்படாத வகுப்பினர் கோரிய போது, இந்தப் புண்ணியவான்தான் அந்தக் கோரிக்கையைக் கடுமை யாக எதிர்த்தவர். அவருடைய எதிர்ப்பையும் மீறித் தீண்டத்தகாத இனத்தினர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். ஆனால், இனி தாங்கள் தீண்டப்படாத இனத்தினரை எவ்விதத்திலும் துன்புறுத்த மாட்டோம் என்று சாதி இந்துக்களிடமிருந்து ஏதோ வாக்குறுதி பெற்றதுபோல் ஒரு நாடகமாடி அவர்களை வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்ளச் செய்தார். இந்த வாக்குறுதி அவ்வளவுதான், காற்றோடு போய் விட்டது; தீண்டத்தகாதோரால் இந்த வாக் குறுதியை அமலுக்குக் கொண்டுவரும்படி ஒருபோதும் செய்ய முடியவில்லை. இதன் விளைவு என்ன? தீண்டப்படாதோரின் துன்ப துயரங்கள் தொடர்கதையாயின; திருவாளர் காந்தியின் நண்பர் திரு. **வல்லபபாய் பட்டேலின்** கருணையால் கொடுங்கோலர்கள் தப்பித்துவிட்டனர்.

நல்ல ஆடை உடுத்துதல், நகைகள் அணிதல் போன்ற சின்னஞ்சிறு விஷயங்களில்கூடத் தீண்டத்தகாத இனத்தினரை திட்டமிட்டுக் கொடுமைப்படுத்துவதில், அடக்கி ஒடுக்குவதில் சாதி இந்துக்கள் முனைந்து ஈடுபட்டனர். இத்தகைய இரண்டு நிகழ்ச்சிகளை இங்குக் கூறுவது உசிதமாக இருக்கும்.

## III

இந்தப் போராட்டத்தில் யார் இறுதியில் வெற்றி பெறுவார்கள் என்பது சுவையான ஊகத்துக்குரியதொரு விஷயமாகும்; தீண் டப் ப டாதோரின் இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தி வருபவர்கள்

நிலைமையை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றனர். இதன் இறுதி முடிவு என்னவாக இருப்பினும் ஒரு விஷயம் தெள்ளத் தெளிவு: அதாவது, இந்தப் போராட்டத்தில் தீண்டத்தகாதோர் மிகப்பெரும் இடர்ப்பாடுகளை, இன்னல் இடுக்கண்களை, துன்ப துயரங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

இந்துக்களுடனான இந்த மோதலில் தீண்டப்படாத இனத்தினர் எப்போதும் மிக இக்கட்டான நிலையிலேயே இருந்து வருகின்றனர். சாதி அராஜகத்துக்கு எதிராகச், சட்ட மீறலுக்கு எதிராகத் தீண்டத்தகாதவர்கள் நிராதரவான நிலையிலேயே இருந்து வருகின்றனர். இங்கு ஒரு கேள்வி எழுகிறது; தீண்டப்படாதோர் ஏன் எப்போதும் அடிவாங்குபவர்களாக இருக்கின்றனர்? எதற்காக எப்போதும் இக்கட்டான நிலையில் இருந்து வருகின்றனர்? இது ஒரு முக்கியமான கேள்வி, அவசியம் பதிலளிக்கப்பட வேண்டிய கேள்வி.

சாதி இந்துக்களுக்கு எதிரான இப்போராட்டத்தில் தீண்டப்படாத மக்கள் போக்கு முட்டிய நிலையில் இருப்பதற் கான காரணங்கள் தெள்ளத் தெளிவானவை. முதலாவது காரணம், எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் இருதரப்பினரும் சரி சமத்துவ நிலையில் இல்லை. எந்த ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் சாதி இந்துக்களுடன் ஒப்பிடும்போது தீண்டத்தகாத வகுப்பினர் கணிசமான எண்ணிக்கையில் இல்லை. பெரும்பாலும் அவர்கள் ஒரு சில குடும்பங்களைக் கொண்டவர்களாகவே இருக்கின்றனர்; அவர்களின் எண்ணிக்கையும் மிகவும் குறைவு. இதனால் சாதி இந்துக்களின் தாக்குதலை எதிர்த்து முறியடிக்கும் அளவுக்கு அவர் களுக்கு சக்தி இல்லை. இந்தியா முழுவதிலுமுள்ள தீண்டத்தகா தோரின் எண்ணிக்கை 5 கோடி; மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது இது மிகப் பெரும் எண்ணிக்கையாகத் தோன்றினாலும், உண்மையை நோக்கினோமானால் அவர்கள் இந்தியா முழுவதிலு முள்ள பல்லாயிரக்கணக்கான கிராமங்களில் பரவிக் கிடக்கின்றனர்; ஒவ்வொரு கிராமத்திலும் மிகப் பெரும்பான்மையினராக சாதி இந்துக்கள் இருக்கும்போது இவர்கள் மிகச் சிறுபான்மையினராகவே உள்ளனர். போர்த்திறன் அடிப்படையில் பேசுவோமானால், தீண்டப் படாதோர் படைகள் மிக மோசமான முறையில் சிதறிக் கிடக்கின்றன; இதனால் சாதி இந்துக்கள் படைகளின் கைமேலாங்கி யுள்ளது.

எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் முகமதியர்களும் சில

மாகாணங்களைச் சேர்ந்த கிராமங்களில் இதே நிலையில்தான் இருந்து வருகின்றனர். அவர்களும் எண்ணற்ற கிராமங்களில் சிதறிக் கிடக்கின்றனர்; சில கிராமங்களில் முகமதியர்கள் தீண்டப்படாதோரின் எண்ணிக்கையை விடக் குறைவாகவே உள்ளனர். எனினும் தீண்டத்தகாதவர்களைப் போன்று முகமதியர்கள் இந்துக்களின் அவமதிப்புகளுக்கும் இழிவுகளுக்கும் பழிப்புகளுக்கும் உள்ளாக்கப்படவில்லை. இந்துக்களுக்கும் தீண்டத்தகாதோருக்கும் இடையே எந்த அளவுக்குப் பகைமை உணர்வு நிலவுகிறதோ, அந்த அளவுக்கு முகமதியர்களுக்கும் இந்துக்களுக்கிடையேயும் பகைமை உணர்வு நிலவுகிறது; அப்படியிருக்கும்போது இது விந்தையானதாக இருக்கிறது. முஸ்லீம்களுக்குச் சில குறிப்பிட்ட அனுகூலங்கள் இருப்பதும், அத்தகைய அனுகூலங்கள் தீண்டத்தகாதவர்களுக்கு இல்லாதிருப்பதுமே இந்த வேறுபட்ட நடத்துமுறைக்குக் காரணம்.

ஓர் அந்நியனைத் தூய்மையானவனாகக் கருதுவது, அவனைக் கௌரவமாக நடத்துவது பண்டைச் சமுதாயங்கள் அனைத்திலும் ஒரு பொது மரபாக, விதியாக இருந்து வந்திருக்கிறது. அவன் எவ்வகையிலும் அவமதிக்கப்படக் கூடாது; அவனுக்கு எத்தகைய தீங்கும் இழைக்கப்படக்கூடாது; பண்டைய ரோமாபுரியினரின் விருந்தோம்பும் விதிகள் பிரசித்தி பெற்றவை; உறவினரை விட ஓர் அந்நியன் பெரிதும் கௌரவிக்கப்பட வேண்டும் என்று அவை கண்டிப்பான முறையில் கூறுகின்றன. ''முன்காப்புணர்வு'' என்னும் சுடர்ப்பொறியைத் தன்னுள் கொண்டவன், அந்நியனுக்கு எத்தகைய தீங்கும் இழைக்காமல் இந்த வாழ்க்கையைக் கழிப்பதற்கு மிகச் சிறந்த முயற்சி எடுத்துக் கொள்வான்'' என்கிறார் **பிளேட்டோ**. ஓர் அந்நியனது உயிருக்கு இவ்வளவு முக்கியத்துவம் அளிப்பது விந்தையாகத் தோன்றக்கூடும். அந்நியனிடம் காட்டப்படும் இந்த அபரிமிதமான பரிவு முற்றிலும் அன்பை, கருணையை அடிப்படையாகக் கொண்டது அல்ல. குழு வாழ்க்கை முறை தனது குழுவுக்கு வெளியே உள்ளவர்களை எல்லோரையும்போல் பொதுப்படையான முறையில் நடத்துவதை எதிர்க்கிறது. ஓர் அந்நியன் இவ்வாறு சிறப்பான முறையில் நடத்தப்படுவதற்கும் அவனது உயிருக்குப் பாதுகாப்பளிப்பதற்கும் ஓர் உண்மையான காரணம் இருக்கிறது. அவன் எதிர்க் குழுவைச் சேர்ந்தவனாக இருப்பதே அந்தக் காரணம். அவனுக்கு எத்தகைய தீங்கு இழைக்கப்பட்டாலும் நிச்சயமாக இரத்தக் களறியில்தான் முடியும். இரத்தத்தைச் சிந்த வைக்கும் குழுப் பகைமை பற்றிய அச்சம் தான் அந்நியனிடம் இத்தகைய போக்கைக் கடைப்பிடிப்பதற்குக் காரணமாகும்.

இதுதான், கிராமத்தில், முகமதியன் விஷயத்திலும் கைக்கொள்ளப் படுகிறது. இந்துக்களின் பார்வையில் அவன் ஓர் அந்நியன். இந்துக்கள் அவனுக்குத் தொந்தரவு கொடுக்கத் துணிய மாட்டார்கள். ஏனென்றால் அவனுக்குக் கேடு செய்தால் முஸ்லீம்கள் அதற்குப் பழி தீர்த்துக் கொள்வார்கள்; இது இந்துக்களுடனான இரத்தக் களறியில் போய் முடியும். இந்து-முஸ்லீம் வகுப்புக் கலவரங்கள் இத்தகையவைதான்; ஒரு முஸ்லீமுக்கோ அல்லது முஸ்லீம் நலன் களுக்கோ தீங்கு விளைவிக்கப்படுவதன் விளைவாகவே இந்தக் கலவரங்கள் வெடிக்கின்றன. பழிக்குப் பழிவாங்கும் ரத்தக் களறியைப் பற்றிய பயம்தான், ஓர் இந்து கிராமத்தில் முஸ்லீம் பாதுகாப்பாக இருப்பதைச் சாத்தியமாக்குகிறது.

ஆனால், அதே சமயம் தீண்டத்தகாதவனுக்கு இழைக்கப்படும் அநீதிக்குப் பழிக்குப் பழிவாங்க யாரும் இல்லை. இரத்தக் களறி ஏற்படும் என்ற அச்சமும் இல்லை. இதனால் தண்டனை கிடைக்கும் என்ற பயமில்லாமலேயே தீண்டப்படாத சமூகத்தினருக்கு எதிராக இந்துக்கள் எத்தகைய அநீதியையும் அக்கிரமத்தையும் கொடுமை யையும் செய்ய முடியும். இது ஏன்? ஏனென்றால் முஸ்லீம்கள் உறுதியான, கட்டுப்பாடான மக்கள் திரள்; ஆழமான உணர்வால் பலமாகப் பிணைக்கப்பட்டிருப்பவர்கள்; தங்கள் சமூகத்திற்கோ அல்லது சமூக உறுப்பினருக்கோ எத்தகைய தீங்கு விளைவிக்கப் பட்டாலும், அதை எதிர்த்து ஒரே மனிதனாக ஆர்த்தெழக்கூடிய வர்கள். ஆனால், தீண்டப்படாதவர்கள் அப்படியல்ல. அவர்கள் ஒற்றுமையின்றி, மூட்டை அவிழ்ந்து சிதறி ஓடும் நெல்லிக் காய் களைப் போன்றவர்கள்; இதல்லாமல் இந்துக்களைப் போன்றே இவர்களும் சாதிவெறி பிடித்தலைகிறார்கள். தீண்டப்படா தோரிடையே வேரூன்றிக் கொண்டிருக்கும் சாதி முறை பரஸ்பர போட்டியையும் பொறாமையையும் தோற்றுவிக்கிறது; இது, பொது நடவடிக்கை எடுத்துக் கொள்வதைச் சாத்தியமற்றதாக்குகிறது. முகமதியர் களிடையேயும் சாதி அமைப்பு உள்ளது. தீண்டப்படாதவர்களைப் போன்றே அவர்களும் நாடெங்கும் சிதறிக்கிடக்கின்றனர். ஆனால் அவர்களது சமயம், ஒற்றுமையைக் கட்டும் ஒரு வலுமிக்க சக்தியாக உள்ளது. அவர்கள் பற்பல பகுதியினராக இருந்தாலும் அப்பகுதிகள் யாவும் ஒரே முஸ்லீம் சமூகத்தின் பகுதிகளே என்ற உணர்வை அது அவர்களிடம் ஊட்டி வளர்க்கிறது. தீண்டப்படாத மக்களிடையே இத்தகைய உணர்வை ஊட்டி வளர்க்கக்கூடிய எதுவும் இல்லை. ஒன்றுபடுத்தும் சக்தி இல்லாத நிலைமையில் இணைக்கக்கூடிய எதுவும் இல்லாத தனித்தனிப் பாலங்களாகவே உள்ளனர்; இதனால்

அவர்களது எண்ணிக்கையால் அவர்களுக்கு எத்தகைய அனுகூலமுமில்லாத நிலையில் இருந்து வருகின்றனர்.

கிராமங்களிலுள்ள தீண்டப்படாதவர்களில் மிகப் பெரும் பாலோர் கிராம ஊழியர்களாகவோ அல்லது நிலமற்ற விவசாயக் கூலிகளாகவோ உள்ளனர். கிராம ஊழியர்கள் என்ற முறையில் அவர்கள் தங்கள் ஜீவனத்துக்கு இந்துக்களையே சார்ந்துள்ளனர்; இந்துக்களுக்கு வேண்டிய வழக்கமான எடுபிடி வேலைகளைச் செய்கின்றனர்; வீடு வீடாகச் சென்று இதற்குப் பிரதியாக இந்துக்களிடமிருந்து மிச்சம் மீதியுள்ள ரொட்டிகளையோ, சமைத்த உணவையோ பெற்றுத் தங்கள் வயிற்றைக் கழுவிக் கொள்கின்றனர். அவர்களுக்குச் சேர வேண்டிய கூலியில் ஒரு பகுதி இது. கூலியின் மற்றொரு பகுதியாக அறுவடைக் காலங்களில் அவர்களுக்குக் குறிப்பிட்ட அளவு தானியம் வழங்கப் படுகிறது. இந்துக்களுக்கும் தீண்டத்தகாதவர்களுக்கும் இடையே மனக்கசப்பும் பூசலும் நேரிடும் போதெல்லாம் இந்துக்கள் செய்யும் முதல் காரியம் அவர்களுக்கு ரொட்டியும் உணவும் தருவதை நிறுத்தி விடுகிறார்கள்; அறுவடைக் காலத்தில் தரப்படும் தானியத்தையும் நிறுத்தி விடுகிறார்கள்; அவர்களை வேலையிலிருந்து நீக்கி விடுகிறார்கள். இதன் விளைவாகத் தீண்டப்படாதவர்கள் பசி பட்டினியோடு போராட வேண்டியிருக்கிறது; குழந்தை குட்டிகளுடன் கவ்வும் குடலை இறுக்கிப் பிடித்துக்கொண்டு மரணத்துடன் போராட வேண்டியிருக்கிறது.

தீண்டப்படாதவர்கள் தங்களது வழக்கமான பணிகளைத் தவிர கிராமத்தில் வேறு எந்த வேலைகளையும் செய்ய இயலாது. பால், காய்கறிகளை விற்பனை செய்வது போன்ற தொழில்களை மேற்கொள்ள முடியாது. ஏனென்றால் அவன் தீண்டத்தகாதவன்; அவனிடமிருந்து யாரும் இந்தப் பொருள்களை வாங்க மாட்டார்கள். அவன் வேறு எந்தத் தொழிலைச் செய்வதற்கும் வழியில்லை; காரணம், எல்லாத் தொழில்களுமே பரம்பரை பரம்பரையாக குறிப்பிட்ட நபர்களால் செய்யப்பட்டு வரும் தொழில்கள்; எனவே இவனுடைய சேவையை எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பொருளாதார ரீதியில் அவன் முற்றிலும் இந்துக்களையே சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. இதனை, இந்து முழு அளவுக்குப் பயன்படுத்திக் கொள்கிறான்; அவன் வைத்ததே சட்டமாக இருக்கிறது; தீண்டத்தகாதவர்கள் அகம்பாவத்தோடும், கீழ்ப்படியாமலும் நடந்து கொண்டால் அவன் தனது விசுவரூபத்தைக் காட்டுகிறான்; அவர்களைச் சொல்லொண்ணா துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் உட்படுத்துகிறான்.

இவ்வாறு, தீண்டத்தகாதவர்கள் தங்கள் ஜீவனத்துக்குத் தீண்டத்தக்கவர்களைச் சார்ந்திருப்பது மட்டுமல்ல; தங்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியத் தேவையாக உள்ள பொருள்களை வாங்குவதற்குக்கூட அவர்கள் தீண்டத்தக்கவர்களை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. எந்த ஒரு கிராமமாயினும், அங்குள்ள கடைகள் எல்லாம் தீண்டத்தக்கவர்களுக்கே சொந்தம். வர்த்தகம் அவர்களது ஏகபோகம். இதனால், தீண்டத்தகாதவர்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்குத் தீண்டத்தக்க கடைக்காரர்களையே முற்றமுழுக்கச் சார்ந்திருக்க வேண்டியிருக்கிறது. தீண்டத்தக்கக் கடைக்காரன் மனது வைத்தால் தீண்டப்படாதோருக்குத் தேவையான பொருள்களை விற்கலாம்; அவன் மனது வைக்கவில்லை என்றால் தீண்டத்தகாதவர்கள் பணமிருந்தும் பொருள்களை வாங்க முடியாது; பட்டினி கிடக்க வேண்டியதுதான். சரி, இப்போது தீண்டத்தக்கவர்களுக்கும் தீண்டத்தகாதவர்களுக்கும் தகராறு எழும்போதெல்லாம் தீண்டத்தக்கவர்கள் செய்யும் முதல் காரியம் என்ன தெரியுமா? தீண்டப்படாதோருக்கு எந்தப் பொருள்களையும் விற்பனை செய்ய வேண்டாம் என்று அவர்கள் கடைக்காரர்களுக்கு உத்தரவு போட்டுவிடுகிறார்கள். தீண்டத்தகாதவர்களின் எல்லாப் பொருளாதாரத் தொடர்புகளையும் பிணைப்புகளையும் துண்டித்துவிடக்கூடிய சக்தி தீண்டத்தக்கவர்களுக்கு இருக்கிறது; தங்களுக்குள் கூடிப்பேசி, சதி செய்து தீண்டத்தகாதவர்களின் வாழ்க்கையையே முடக்கி விடுகிறார்கள். இரத்தினச் சுருக்கமாகச் சொன்னால் தீண்டப்படாதோர் இனத்தவர் மீது ஒரு யுத்தமே தொடுக்கப்படுகிறது. இதில் ''பகைவனை'' அடிபணிய வைப்பதற்கு அவர்கள் கையாளும் போர்த் தந்திரங்களில் ஒன்று, தீண்டப்படாதவர்களின் குடியிருப்புகளுக்குப் போக்கிரிகளின் கும்பலைத் ''தண்டப் பயணம்'' அனுப்புவதாகும். இந்தக் கயவர்கள் செய்யும் அட்டூழியங்களைச் சொல்லவும் வேண்டுமா? அவர்கள் தீண்டத்தகாதவர்களின் பகுதிகளுக்குள் புகுந்து சொல்லொண்ணா அட்டகாசங்கள் புரிகின்றனர்; எதிர்ப்பட்டதையெல்லாம் உடைத்து நொறுக்குகின்றனர்; அம்மக்களின் உடைமைகளை நாசப்படுத்துகின்றனர்; பெண்கள் பச்சிளம் குழந்தைகள் என்றுகூடப் பாராமல் அனைவரையும் அடித்து நொறுக்குகின்றனர்; சுருக்கமாகச் சொன்னால் அப்பகுதியையே சுடுகாடாக்கி விடுகின்றனர்.

இவற்றையெல்லாம்விட ஒரு வலுவான, கொடூரமான ஆயுதத்தையும் தீண்டத்தக்கவர்கள் தீண்டத்தகாதவர்களுக்கு எதிராகப் பயன்படுத்துகின்றனர்; அது, சமூக பகிஷ்காரம் என்பது. காந்தியின் ''ஒத்துழையாமை'' என்னும் போராட்ட ஆயுதத்தின் மறுபெயரே

இந்தப் பகிஷ்காரம். சமூக பகிஷ்காரம் என்ற பெயரால் நடத்தப்படும் பயங்கரங்கள் கொஞ்சநஞ்சமல்ல; அவற்றை விவரிப்பதற்கு வார்த்தை களே இல்லை. பிற்பட்ட வகுப்பினரின் துன்ப துயரங்களை விசாரணை செய்வதற்கென்று பம்பாய் அரசாங்கம் நியமித்த குழு இந்த சமூகப் பகிஷ்காரம் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது:

''அனைத்துப் பொதுவசதிகளையும் பயன்படுத்திக் கொள்வ தற்குத் தீண்டத்தகாத மக்களுக்குள்ள உரிமைகளை அவர்களுக்குப் பெற்றுத்தர நாங்கள் பல்வேறு வழிமுறைகளைப் பரிந்துரைத்திருந்த போதிலும் இவற்றை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள நீண்ட காலம் வரை சிரமங்கள் இருக்கும் என்று கருதுகிறோம். இவற்றில் முதல் சிரமம், வைதிக வகுப்பினர் தங்களுக்கு எதிராகப் பகிரங்கமாக வன்முறையைப் பயன்படுத்துவார்களோ என்று அவர்களுக்குள்ள அச்சம். ஒவ்வொரு கிராமத்திலும் தீண்டத்தகாதோர் மிகச் சிறு பான்மையினராகவே உள்ளனர்; அவர்களுக்கு எதிராக வைதிகர்கள் மிகப் பெரும் எண்ணிக்கையில் திரண்டுள்ளனர். தீண்டத்தகாதோ ரிடமிருந்து தங்கள் நலன்களுக்கும் கௌரவத்துக்கும் ஆபத்து நேரிட்டால் என்ன விலை கொடுத்தேனும் அவற்றைப் பாதுகாக்க அவர்கள் மிகவும் முனைப்போடு இருக்கிறார்கள். காவல் துறையினர் கடும் நடவடிக்கை எடுக்கக்கூடும் என்ற அச்சம் வைதிக வகுப்பினர் வன்முறையில் இறங்குவதைத் தடுத்து நிறுத்தி இருக்கிறது. இதன் விளைவாக வன்முறைச் செயல்கள் அரிதாகிவிட்டன.

தீண்டத்தகாதோரை எதிர்நோக்கும் இரண்டாவது இடர்ப்பாடு, இன்றைய அவர்களது பொருளாதார நிலையிலிருந்து உருவாகி இருக்கிறது. ராஜதானியின் மிகப் பெரும்பாலான பகுதிகளில் தீண்டத் தகாதோருக்குப் பொருளாதாரச் சுதந்திரம் ஏதுமில்லை. சிலர் வைதிக வகுப்பினரின் நிலங்களை அவர்களது குத்தகைக்காரர்களாக உழுது பயிரிட்டுச்சாகுபடி செய்து வருகின்றனர்; சிலர்வைதிக வகுப்பினரிடம் விவசாயத் தொழிலாளர்களாக வேலைக்கமர்ந்து கிடைக்கும் கூலியைக் கொண்டு ஜீவனம் செய்து வருகின்றனர்; வேறு சிலர் கிராம ஊழியர்களாகச் செய்யும் வேலைக்காக வைதிக வகுப்பினர் தரும் உணவையோ தானியத்தையோ கொண்டு உயிர் வாழ்ந்து வருகின்றனர். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட முற்படும்போது, வைதிக வகுப்பினர் தங்களது பொருளாதார வலிமையை ஒரு சக்தி வாய்ந்த ஆயுதமாகப் பிரயோகிக்கின்றனர்;

தாழ்த்தப்பட்ட இனத்தவரை தங்களது நிலங்களிலிருந்து வெளி யேற்றுகின்றனர்; அவர்களது வேலைவாய்ப்பைப் பறிக்கின்றனர்; கிராம ஊழியர்களாக அவர்கள் பெற்றுவரும் ஊதியத்தை நிறுத்து கின்றனர். பல சந்தர்ப்பங்களில் இந்த பகிஷ்காரம் திட்டமிட்ட முறையில் பரந்த அளவில் நடத்தப்படுகிறது; பொதுப் பாதைகளை தீண்டத் தகாதோர் பயன்படுத்தாதபடி தடுக்கப்படுகின்றனர்; கிராம பனியா அல்லது கடைக்காரர் அவர்களுக்குத் தேவையான பொருள்கள் விற்பனை செய்யப்படுவது தடை செய்யப்படுகிறது. மிக அற்ப காரணங்களுக்காகக் கூடத் தீண்டப்படாதோருக்கு எதிராக சமூகப் பகிஷ்காரம் கைக்கொள்ளப்படுவதாக எங்களுக்குத் தகவல் வந்திருக்கிறது. பொதுக் கிணற்றைப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தங்களுக்குள்ள உரிமையை நிலைநாட்டத் தீண்டத்தகாதவர்கள் முனையும் போது அடிக்கடி இத்தகைய சமூக பகிஷ்காரம் அறிவிக்கப் படுகிறது. இன்னும் சொல்லப்போனால், ஒரு தீண்டத்தகாதவன் பூணூல் அணிந்து கொண்டான், துண்டு துக்காணி நிலம் வாங்கிவிட்டான், நல்ல உடைகளையும் ஆபரணங்களையும் அணிந்து கொண்டான், மாப்பிள்ளையைக் குதிரை மீது உட்கார வைத்துப் பொதுத் தெரு வழியாக ஊர்வலம் நடத்தினான் என்பன போன்ற காரணங் களுக்காகக் கடுமையான சமூக பகிஷ்காரம் கைக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சிகளுக்கும் குறைவில்லை.

தீண்டத்தகாதவர்களை அடக்கி ஒடுக்குவதற்கு இந்தச் சமூக பகிஷ்காரத்தைவிட மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதம் வேறு எதுவும் இருக்க முடியுமா என்பதை நாங்கள் அறியோம். பகிரங்க வன்முறை கூட சமூக பகிஷ்காரத்தின் முன்னால் ஒன்றுமற்றதாகி விடுகிறது; முனை மழுங்கிப் போய் விடுகிறது; அந்த அளவுக்கு இது மிக பயங்கரமான, மிகக் கொடிய விளைவுகளை ஏற்படுத்துகிறது. மேலும், ஒப்பந்த சுதந்திரக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஒரு சட்டபூர்வமான முறையாக இருப்பதால் இது இன்னும் மிக அபாய கரமானதாக இருக்கிறது. தீண்டப்படாத மக்களின் உய்வுக்காக, உயர்வுக்காக அவர்களுக்குப் பேச்சு சுதந்திரத்தையும் செயல் சுதந் திரத்தையும் உத்தரவாதம் செய்ய வேண்டுமானால், பெரும்பான்மை யினரின் இந்தக் கொடுங்கோன்மை, வெறிச் செயல் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட வேண்டும் என்பதை நாங்கள் ஒப்புக் கொள்கிறோம்.''

தீண்டப்படாதவன் பிரதான சாலையைப் பார்த்தபடி வீடு கட்டிக் கொண்டால் இந்து அதை ஏன் எதிர்க்க வேண்டும்? இதனால் இந்துவுக்கு என்ன பாதகம்? ஒரு தீண்டப்படாதவன் எழுப்பும் ஒலி சில குறிப்பிட்ட நாள்களில் இந்துவின் செவிகளில் ஒலிப்பதை அவன் எதற்காக ஆட்சேபிக்க வேண்டும்? இதனால் அவனது காது செவிடாகி விடுமா? ஒரு தீண்டப்படாதவன் உத்தியோகம் பெறுகிறான், அதிகார அந்தஸ்தை அடைகிறான், நிலம் வாங்குகிறான், வணிகத்தில் ஈடுபடுகிறான், பொருளாதார ரீதியில் சுதந்திரமான வனாகிறான், போதிய வசதியுள்ளவர்களில் ஒருவனாக மதிக்கப் படுகிறான் என்கிறபோது இதற்காக இந்து ஏன் வன்மமும் சீற்றமும் கொள்ள வேண்டும்?. எல்லா இந்துக்களும் அவர்கள் அதிகாரத் தில் இருப்பவர்களாயினும் சரி, இல்லாதவர்களாயினும் சரி தீண்டப்படாதவர்களை ஒடுக்குவதில் ஏன் ஒன்றுபட்டு நிற்க வேண்டும்? தங்களுக்குள் பாம்பும் கீரியுமாகச் சண்டை போட்டுக் கொள்ளும் இதர சாதியினர் இந்து சமயத்தின் பெயரால் தீண்டப் தகாதவர்களைப் பழிதீர்த்துக் கொள்வதற்கு ஏன் சதி வேலைகளி லும் சூழ்ச்சிகளிலும் இறங்க வேண்டும்?

இவையெல்லாம் ஏதோ ஒரு புனை கதையைப் படிப்பது போல் தோன்றுகிறதல்லவா? ஆனால் சென்ற அத்தியாயத்தில் இந்துக்களின் கொடுங்கோன்மையை, அக்கிரமங்களைப் ப டி த் த வர்கள் இந்தக் கேள்விகளுக்கு அஸ்திவாரமாக, ஆதார **அடிப்படையாக சில உண்மைகள் இருக்கின்றன என்பதை அறிவார்கள்.** இந்த உண்மை கள் மர்மக் கதைகளை விட விந்தையானவை. ஆனால் இதில் விசித்திரத்திலும் மிக விசித்திரமானது என்னவென்றால், சில சமயங் களில் கோழைகள் என்று கூறுமளவுக்குக் கூட சாதாரணமாக எளிதில் மருளுகின்ற இந்துக்கள் இவ்வளவு அட்டகாசங்களையும், அடாத செயல்களையும் புரிகிறார்கள் என்பதுதான். இந்துக்கள் பொதுவாக மிகவும் மென்மையான, சாதுவான மக்கள். முஸ்லீம்களிடம் தென்படும் உக்கிரம், மூர்க்கத்தனம் இவற்றில் எந்தக் குணமும் இந்துக் களிடம் காணப்படுவதில்லை. அப்படியிருக்கும் போது, இவ்வளவு மென்மையான மக்கள் கூச்சநாச்சமின்றி, அகச் சான்றின் உறுத்தலின்றி கொள்ளியிலும் கொள்ளையிலும் ஈடுபடுகிறார்கள் என்றால், தாழ்த்தப்பட்ட ஆடவர்களையும் பெண்டிர்களையும் பால்மணம் மாறாத குழந்தைகளையும் ஈவு இரக்கமின்றிச் சித்திரவதை செய்வதிலும், சின்னா பின்னப்படுத்துவதிலும், இழிவுபடுத்துவதிலும் ஈடுபடு கிறார்கள் என்றால் அதற்கு ஓர் ஆழமான காரணம் இருக்க வேண்டும்; தீண்டப்படாத மக்களின் எழுச்சி கண்டு வெறியும் கோபா

வேசமுற்றும் இத்தகைய அராஜகச் செயல்களில் அவர்கள் இறங்கு கிறார்கள் என்றால் அதற்கு அடிப்படையான காரணம் இருக்க வேண்டும்.

இந்துக்கள் இவ்விதம் விபரீதமான முறையில், மனிதாபிமானமற்ற முறையில், நெஞ்சீரமற்ற முறையில் நடந்து கொள்கிறார்கள் என்றால் அதற்கு ஒரு பின்னணி இருக்க வேண்டும். அந்தப் பின்னணி என்ன?

ஓர் இந்துவிடம் நீ ஏன் இவ்விதம் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்கிறாய், கௌரவமான, கண்ணியமான முறையில் வாழ்க்கை நடத்துவதற்குத் தீண்டப்படாத மக்கள் செய்துவரும் முயற்சிகள் கண்டு நீ ஏதற்காகக் கோபாவேசம் கொள்கிறாய் என்று கேட்டால் இதற்கு அவனது பதில் வெளிப்படையானதாக இருக்கும். அவன் சொல்லுவான்: "தீண்டப்படாதவர்களைச் சீர்திருத்துகிறோம் என்று நீங்கள் கூறுவது ஒரு சீர்திருத்தமே அல்ல. அது எங்கள் தர்மத்தை அப்பட்டமாகப் பழிப்பதாகும், இழிவுபடுத்துவதாகும்." அவனை மேலும் சீண்டி உன்னுடைய தர்மம் எதில் பொதிந்துள்ளது என்று கேட்டால் இதற்கும் அவனது பதில் ஒளிவு மறைவதற்றதாக இருக்கும். அவன் கூறுவான்: "எங்கள் தர்மம் எங்கள் சாஸ்திரங்களில் அடங்கியுள்ளது." அடிப்படையிலேயே தவறான ஓர் அமைப்பை எதிர்த்துத் தீண்டப்படாதவர்கள் நடத்தும் நியாயமான கிளர்ச்சியை கொலை, கொள்ளை, கொள்ளி முதலிய வன்முறைகள் மூலம் இந்துக்கள் ஒடுக்க முற்படுவதைப் பாரபட்சமற்ற, நடுநிலையான ஒரு மனிதன் மிகக் கொடியதோர் செயலாக அல்லது இந்துக் களுக்குப் பழக்கமான பதத்தை உபயோகித்துக் கூறுவதானால் **அதர்மமாகக்** கருதுகிறான். ஆனால், இந்து இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டான். தீண்டப்படாதவர்கள்தான் தர்மத்தை மீறுகிறார்கள், அதர்மமாகத் தோன்றும் தனது நடவடிக்கைகள் தர்மத்தை நிலைநாட்டும் தனது புனிதக் கடமையைச் செய் வதை அடிப்படையாகக் கொண்டவை என்று அவன் கருதுகிறான். இந்துக்களின் மனோபாவத்தை நன்கு அறிந்தவர்கள் இந்தப் பதிலுக்குப் பின்னால் பொதிந்துள்ள உண்மையை அறிவார்கள். **ஆனால் இது மேலும் ஒரு கேள்வியை எழுப்புகிறது: சாஸ்திரங்கள்** வகுத்துத் தந்திருக்கும் இந்தத் தர்மம் என்ன? அது எத்தகைய சமூக உறவு விதிகளை நிர்ணயித்துக் கூறுகிறது?

## II

தர்மம் என்பது சமஸ்கிருதப் பதம். துல்லியமான பொருள் காணும் சகல முயற்சிகளையும் வியர்த்தமாக்கும் சமஸ்கிருத சொற்களில் இதுவும் ஒன்று. பண்டைக் காலத்தில் இந்தச் சொல் பல்வேறு அர்த்தங்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தர்மம் என்னும் சொல் அதன் பொருளில் பல்வேறு காலகட்டங்களில் எவ்விதம் பலதரப்பட்ட மாற்றங்களை அடைந்து வந்துள்ளது என்பது சுவையான ஆராய்ச்சிக் குரிய விஷயமாகும்.* ஆனால் அத்தகைய ஆராய்ச்சிக்கான இடம் இதுவல்ல. தர்மம் என்னும் சொல் எத்தகைய ஐயத்துக்கும் இடமில்லாத வகையில் ஒரு குறிப்பிட்ட பொருளைக் குறிக்கக் கூடியதாக விரைவிலேயே பரிணமித்தது. இதன்படி, தர்மம் என்னும் சொல் ஒரு மனிதனது உரிமைகளையும், கடமைகளையும், கட்டுப்பாடுகளையும் குறிக்கிறது; இந்து சமுதாயத்தின் ஓர் உறுப்பினன் என்ற முறையிலும், ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவன் என்ற முறையிலும், வாழ்க்கையின் ஒரு குறிப்பிட்ட கட்டத்துக்குரியவன் அவன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை வகுத்துரைக்கிறது.

தர்மத்திற்கு அடிப்படை ஆதாரமாக விளங்குபவை வேதங்களும், ஸ்மிருதிகளும், பழக்க வழக்கங்களும், சம்பிரதாயங்களும் தான் என்பதை எல்லா இந்துக்களுமே ஒப்புக்கொள்கின்றனர். தர்மத்தைப் பொறுத்தவரையில், வேதங்களுக்கும் ஸ்மிருதிகளுக்கும் இடையே ஒரு வேறுபாடு உண்டு. அந்த வேறுபாடு என்ன என்பதை இங்குப் பார்ப்போம். தர்மத்தின் விதிமுறைகள், அவற்றின் வளர்ச்சியடைந்த வடிவத்தில், வேதங்களில் வேர்கொண்டுள்ளன என்பதில் ஐயமில்லை; ஆதலால் வேதங்களைத் தர்மத்தின் அடிப்படை ஆதாரமாகக் கொள்வது நியாயமே. ஆனால் வேதங்களைத் தர்மங்கள் பற்றிக் கூறும் நூல்கள் என்று கருதமுடியாது. தர்மம் சம்பந்தமான கருத்துக்களை ஒருநிலைப்படுத்தி அவை கூறவில்லை; தர்மம் குறித்த சில விஷயங்கள் பற்றித் தொடர்பற்ற கருத்துக்களையே அவை வெளியிடுகின்றன. ஆனால் அதே சமயம் ஸ்மிருதிகள் தர்மம் குறித்த முறையான நூல்களாக அமைந்துள்ளன. அவற்றில் தர்மம் சம்பந்தப்பட்ட விதிகள் அடங்கியுள்ளன. அவை தர்மம் குறித்த சட்ட விதிகளை விளக்குகின்றன. எது தர்மம், எது அதர்மம் என்பது

---

★ காண்க. பி.வி. கானே, தர்ம சாஸ்திர வரலாறு, பக்கங்கள் 1-2.

ஸ்மிருதிகளை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப் படுகிறது. ஆதலால் இந்துக்கள் தர்மம் என்று கூறப்படுவதற்கு உண்மையான அடிப்படையாக, ஆதாரமாக ஸ்மிருதிகளே அமைந் துள்ளன என்பது தெளிவு. எது தர்மம், எது தர்மம் இல்லை என்பதை நிர்ணயிப்பதற்கு ஸ்மிருதிகளுக்கே அதிகாரமிருப்பதால் அவை தர்ம சாஸ்திரங்கள் எனப்படுகின்றன; இந்த தர்ம சாஸ்திரங்கள்தான் தர்மத்தின் விதிகளை வகுத்தளிக்கின்றன.

பண்டைக்காலம் முதல் இருந்துவரும் ஸ்மிருதிகளின் எண் ணிக்கை பலவாறாக மதிப்பிடப்படுகிறது. மிகக் குறைந்தபட்ச எண்ணிக்கை ஐந்து எனவும், அதிகப்பட்ச எண்ணிக்கை நூறு எனவும் கணிக்கப்படுகிறது. ஆனால் இந்த அனைத்து ஸ்மிருதிகளுமே சம அதிகாரம் படைத்தவை அல்ல என்பதை மனத்திற்கொள்வது அவசியம். இவற்றில் பெரும்பாலான ஸ்மிருதிகள் தெளிவற்றவை யாக உள்ளன. இவற்றில் ஒரு சில ஸ்மிருதிகளே விளக்க உரைகள் எழுதுவதற்குத் தகுதியானவைகளாகக் கருதப்படுகின்றன. இவ்வாறு விளக்க உரை எழுதப்பட்டிருப்பதை வைத்து ஒரு ஸ்மிருதியின் முக்கியத்துவத்தைத் தீர்மானிப்பதானால், இவ்வகையில் **மனு ஸ்மிருதி, யாக்ஞவல்கியர் ஸ்மிருதி, நாரத ஸ்மிருதி** ஆகியவற்றை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இவற்றில் **மனு ஸ்மிருதியே** தலையாய இடத்தை, உச்ச ஸ்தானத்தை வகிக்கிறது. இதனால் அனைத்து தர்மத்துக்கும் **மனு ஸ்மிருதியை** மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஆதாரமாகக் கொள்ளலாம்.

எந்தத் தர்மத்தின் பொருட்டு தீண்டத்தகாதவர்கள் மீது போர்த் தொடுப்பதற்கு இந்துக்கள் தயாராக இருக்கிறார்களோ அந்தத் தர்மம் என்பது என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஸ்மிருதி களில் அதிலும் குறிப்பாக **மனு ஸ்மிருதியில்** அடங்கியுள்ள விதி களைப் பற்றித் தெரிந்து கொள்வது அவசியம். இந்த விதிகளைப் பற்றி ஓரளவாவது தெரிந்து கொள்ளாமல் தீண்டப்படாதவர்களின் எழுச்சி இந்துக்களிடம் ஏற்படுத்தி இருக்கும் பிரதிபலிப்பைப் புரிந்து கொள்வது சாத்தியமல்ல. **ஸ்மிருதிகளில்** வகுத்துத் தந்துள்ளபடி தர்மத்தை அதன் எல்லாத் துறைகளிலும் விளக்குவது இங்கு அவசியமில்லை. ஒருவரது அந்தஸ்தின் அடிப்படையில் அவருக்குள்ள உரிமைகளையும் கடமைகளையும் விவரிக்கும் தர்மத்தின் அந்தப் பகுதியைப் பற்றி மட்டும் இங்குத் தெரிந்து கொள்வது போதும் என்று கருதுகிறேன்.

எனவே, **மனு** ஏற்றுக்கொண்டுள்ள சமூக அமைப்பு முறையையும், அந்த சமூக அமைப்பில் அடங்கியுள்ள வெவ்வேறு வகுப்பினருக்கும் அவர் நிர்ணயித்துக் கூறியிருக்கும் உரிமைகள், கடமைகள் முதலியவற்றையும் பற்றி ஒரு முழுப் படப்பிடிப்பை வழங்குவதற்குத் தேவையான வாசகங்களை மட்டும் **மனு ஸ்மிருதியிலிருந்து** இங்கு எடுத்துரைக்கலாம் என்றிருக்கிறேன்.

**மனு ஸ்மிருதி** கூறும் சமூக அமைப்பு சரியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை என்பது என் கருத்து. எனவே இதுபற்றி எவரும் தவறான அனுமானத்துக்கு வந்துவிடக் கூடாது என்று எச்சரிக்க விரும்புகிறேன். அனைவரையும் நான்கு வகுப்பினராகப் பிரிக்கும் **சதுர்வருண** அமைப்பு என்ற சமூக அமைப்பையே மனு வகுத்துத் தந்திருக்கிறார் என்று பொதுவாகக் கூறப்படுகிறது; இவ்வாறே பொதுவாக நம்பப்படுகிறது. மனு நிர்ணயித்துத் தந்திருக்கும் தர்மம் எனப்படுவது இதுதான் என்று பலரிடமும் ஒரு கருத்து நிலவுகிறது. இது மிகப் பெரிய தவறாகும். இந்தத் தவறு உரிய முறையில் திருத்தப்படவில்லை என்றால், மனு உண்மையில் என்ன வகுத்துத் தந்தார், அவர் கருத்தில் உருவான சமூக அமைப்பு எப்படிப்பட்டது என்பது குறித்து மிகக் கடுமையான தப்பெண்ணமே ஏற்படும்.

இது, மனு ஸ்மிருதி பற்றிய முற்றிலும் தவறான கணிப்பு என்றே கருதுகிறேன். சதுர்வருணமாக சமுதாயத்தை நான்கு வகுப்புகளுக்காகப் பிரிப்பது மனுவுக்குப் பிரதானமானதாக இருக்கவில்லை. ஓர் அர்த்தத்தில், இது, அவருக்கு இரண்டாம்பட்சமானதாகவே இருந்தது. சதுர்வருணத்திற்குள் இருப்போரிடையேயான ஓர் ஏற்பாடாகவே இதனை அவர் கருதினார். ஒருவன் பிராமணனா, சத்திரியனா, வைசியனா, அல்லது சூத்திரனா என்பது பலருக்கு முக்கியமானதல்ல. இது அவருக்கு முன்பே இருந்து வருகின்ற ஒரு பிரிவினை. இந்தப் பிரிவினையை மேலும் தீவிரப்படுத்தி அதற்கு மிகுந்த அழுத்தம் கொடுத்தார். இந்தப் பிரிவினை அவரிடமிருந்து தோன்றியதல்ல. மாறாக மனுவிடமிருந்து ஒரு புதிய பிரிவினை தோன்றிற்று: (1) சதுர்வருண அமைப்புக்குள் இருப்பவர்கள் (2) சதுர்வருண அமைப்புக்கு வெளியே இருப்பவர்கள் என்பதே அந்தப் பிரிவினை. இந்தப் புதிய சமூகப் பிரிவினை மனுவிடமிருந்து உதித்ததாகும். இந்துக்களின் பண்டை தர்மத்துக்கு அவரது புதிய சேர்ப்பு இது: இந்தப் பிரிவினை அவருக்கு அடிப்படையானதாக, மூலாதாரமானதாக, இன்றியமையாததாக இருந்தது. ஏனென்றால் அவர்தான் இந்தப் பிரிவினையை முதலில் உருவாக்கியவர்; அதற்குத் தனது அதிகார முத்திரை அளித்து அதனை அங்கீகரித்தவர்.

எனவே, இது விஷயம் சம்பந்தப்பட்ட விதிமுறைகளை பின்வரும் இரண்டு தலைப்புகளில் பிரிக்கலாம்: (1) சதுர்வருணத்திற்குள் இருப்போர் சம்பந்தப்பட்ட விதிகள், (2) சதுர்வருணத்திற்கு வெளியே இருப்போர் சம்பந்தப்பட்ட விதிகள்.

**1. சதுர்வருண கட்டமைப்புக்குள் இருப்பவர்கள். அவர்களது தோற்றமும் அவர்களது கடமைகளும் :***

(1) இந்தப் (பிரபஞ்சம்) புலன்களால் உணர முடியாததாகக், குறிப்பிட்ட சின்னங்கள் ஏதும் இல்லாதவையாக, மெய்யறிவுக்கு எட்டாதவையாக, அறியக்கூடாததாக, முற்றிலும் ஆழ்ந்த உறக்கத்தில் மூழ்கிப் போய் இருள் வடிவில் இருந்தது.

(2) பிறகு, சுயம்புவானவர் பெருவலிமைவாய்ந்த தமது சக்தியால் இருளை விலக்கிக்கொண்டுப் புலனாகாதவற்றையும், மூலதத்துவங்களான மாபெரும் பூதங்களையும், புலனாகக் கூடிய இதர யாவற்றையும் படைத்தார்.

(3) உலகங்களின் சேமத்தை முன்னிட்டுத் தம்முடைய வாய், தோள்கள், தொடைகள், பாதங்கள் இவற்றிலிருந்து முறையே பிராமணர்களையும், சத்திரியர்களையும், வைசியர்களையும், சூத்திரர்களையும் உருவாக்கினார்.

(4) இந்தப் பிரபஞ்சத்தைப் பாதுகாக்கும் பொருட்டு, மிகுந்த பிறங்கொளி உடைய அவர் தமது வாய், தோள்கள், தொடைகள், பாதங்கள் ஆகியவற்றிலிருந்து தோன்றியவர்களுக்குத் தனித்தனி தொழில்களை (கடமைகளை) வகுத்தளித்தார்.

(5) வேதங்களைக் கற்றல், கற்பித்தல், தமது சொந்த நலனுக்காகவும் பிறர் நலனுக்காகவும் யாக யக்ஞாதிகள் செய்தல், தானம் கொடுத்தல், பெற்றுக் கொள்ளுதல் முதலிய பணிகளை பிராமணர்களுக்கு ஒதுக்கினார்.

(6) மக்களைப் பாதுகாத்தல், தானங்கள் வழங்குதல், வேள்விகள் நடத்துதல், வேதம் படித்தல், புலனுணர்வு சுகங்களில்

★ மனு 1.5

மூழ்கிப் போயிருப்பதைத் தவிர்த்தல் முதலிய பணிகளைச் செய்யும்படி சத்திரியர்களுக்கு ஆணையிட்டார்.

(7) கால்நடைகளை வளர்த்தல், தானங்கள் வழங்குதல், வேள்விகள் செய்தல், வேதம் படித்தல், வாணிகம் செய்தல், வட்டிக்குப் பணம் கொடுத்தல், நிலத்தை உழுது சாகுபடி செய்தல் போன்ற பணிகளை வைசியர்களிடம் ஒப்படைத்தார்.

(8) ஒரே ஒரு பணியை மட்டும் பிரமன் சூத்திரர்களுக்கு வகுத்துத் தந்தார்; மற்ற மூன்று வகுப்பினர்களுக்கும் அடிபணிந்து தொண்டூழியம் புரிவதே அந்தப் பணி.

(9) மாணவன், தொழில் பயில்வோன், கூலிக்கு அமர்த்தப் பட்ட வேலைக்காரன், நான்காவதாக அதிகாரி. இவர்கள் எல்லோரும் உழைப்பாளிகளாகக் கருதப்பட வேண்டும். எசமான் வீட்டில் பிறந்தவர்களும் மற்றவர்களும் அடிமைகள்.

(10) ஞானிகள் விதிமுறைப்படி ஐந்து வகையான ஊழியர்களை இனம் பிரித்துக் காட்டியிருக்கின்றனர். இவர்களில் மேலே கூறிய நான்கு வகையான உழைப்பாளிகள் அடங்குவர். ஐந்தாவது வகையினர் அடிமைகள். இவர்களிலும் பதினைந்து பிரிவுகள் உண்டு.

(11) தனது எசமான் வீட்டில் பிறந்தவன்; விலை கொடுத்து வாங்கப்பட்டவன்; தானமாகத் தரப்பட்டவன்; பரம்பரையாகப் பெறப்பட்டவன்; பஞ்சத்தின்போது ஆதரித்துப் பராமரிக்கப்பட்டவன்; அவனுடைய சட்டபூர்வமான உரிமையாளரால் பிணையம் வைக்கப்பட்டவன்.

(12) மிகுந்த கடன் பளுவிலிருந்து விடுவிக்கப்பட்டவன்; போரின்போது கைது செய்யப்பட்டவன்; பந்தயத்தின் மூலம் பெறப்பட்டவன்; துறவு வாழ்க்கையைக் கைவிட்டு 'நான் உங்களவன்' என்று வந்தவன்; ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அடிமைப் படுத்தப்பட்டவன்.

(13) தன் பிழைப்புக்காக அடிமையானவன்; ஒரு பெண் அடிமையுடன் தனக்குள்ள தொடர்பின் பொருட்டு அடிமையானவன்;

*தன்னைத் தானே அடிமையாக விற்றுக் கொண்டவன். இவர்கள்தான் சட்டப்படி பிரகடனம் செய்யப்பட்ட பதினைந்து வகையான அடிமைகளாவர்.*

*(14) இவர்களில் முதலில் குறிப்பிடப்பட்ட நான்கு வகையினர் அவர்களுடைய எசமானர்களின் தயவு இருந்தாலன்றி அடிமைத்தனத்திலிருந்து விடுபட முடியாது; அவர்களது அடிமைத் தனம் தலைமுறைத் தலைமுறையானது.*

*(15) இவர்களின் சார்பு நிலை எல்லோருக்கும் பொது வானது; அவர்களது அந்தஸ்தும் வருமானமும் அவர்கள் எந்தக் குறிப்பிட்ட சாதியையும் தொழிலையும் சேர்ந்தவர்கள் என்பதைப் பொறுத்துள்ளன என்று ஞானிகள் அறிவித்துள்ளனர்.*

## 2. சதுர்வருணக் கட்டமைப்புக்கு வெளியே இருப்பவர்கள், அவர்களது தோற்றமும் அவர்களது கடமைகளும்

*அவர்களது பிறப்பையும் அவர்களது நிலையையும் பற்றி மனு கூறுவதாவது:*

*(1) பிரமனது வாயிலிருந்தும், தோள்களிலிருந்தும், தொடைகளிலிருந்தும், பாதங்களிலிருந்தும் பிறந்தவர்கள் தவிர உலகிலுள்ள மற்றெல்லோரும், அவர்கள் மிலேச்சர்களின் மொழியைப் பேசினாலும் சரி, அல்லது ஆரியர்களின் மொழியைப் பேசினாலும் சரி, தஷ்யூக்கள் என அழைக்கப்படுவர்.*

*(2) பிரசித்தி பெற்ற மரங்களுக்கும், இடுகாடுகளுக்கும் அருகிலும், மலைகளிலும், தோப்புகளிலும் இவர்கள் வசிக்க வேண்டும்; குறிப்பிட்ட சின்னங்களை அணிந்து தங்களை இனம் காட்டிக் கொள்ள வேண்டும்; தங்களுக்கே உரிய தொழில்கள் மூலம் வாழ்க்கை நடத்தி வரவேண்டும்.*

*(3) சண்டாளர்கள், ஷுவபாக்கள் போன்றோரின் குடியிருப்பு இடங்கள் கிராமத்திற்கு வெளியே இருக்க வேண்டும்; அவர்கள் சாதிப் பிரஷ்டம் செய்யப்பட வேண்டும்; நாய்களும் குரங்குகளும்தான் அவர்களது சொத்தாக இருக்க வேண்டும்.*

(4) இறந்தவர்களின் ஆடைகளையே அவர்கள் உடுத்த வேண்டும்; உடைந்துபோன தட்டுகளில்தான் அவர்கள் உணவு உண்ண வேண்டும்; இரும்பாலான அணிமணிகளைத்தான் அவர்கள் அணிய வேண்டும்; எப்போதும் அவர்கள் இடம்விட்டு இடம் பெயர்ந்து கொண்டிருக்க வேண்டும்.

(5) சமயக் கடமையைப் பூர்த்தி செய்யும் ஒருவர் இவர்களது உறவை நாடக்கூடாது; இவர்களது நடவடிக்கைகள் யாவும் அவர்களுக்குள்ளேயே இருக்க வேண்டும்; திருமணங்களையும் தங்களுக் குள்ளேயே செய்து கொள்ள வேண்டும்.

(6) உடைந்த தட்டில் மற்றவர்கள்தான் இவர்களுக்கு உணவு தர வேண்டும்; இரவு நேரத்தில் கிராமங்களிலோ, நகரங்களிலோ இவர்களது நடமாட்டம் கூடாது.

(7) பகலில் தமது வேலையின் நிமித்தம் வெளியே செல்ல வேண்டும்; மன்னர் ஆணையிட்டபடி தங்களை இனம் காண்பித்துக் கொள்வதற்கான அடையாளங்களைத் தரித்திருக்க வேண்டும்; உறவினர்கள் எவரும் இல்லாதவர்கள் இறந்துபோனால் அவர்களது பிரேதங்களை இவர்கள்தான் இடுகாட்டிற்குச் சுமந்துசெல்ல வேண்டும். இது நிர்ணயிக்கப்பட்ட விதியாகும்.

(8) அரசனின் ஆணையின்படி குற்றவாளிகளை இவர்கள் தான் எப்போதும் தூக்கிலிட வேண்டும்; இத்தகைய குற்றவாளிகளின் ஆடை ஆபரணங்கள், படுக்கைகள் முதலியவற்றை இவர்களே எடுத்துக் கொள்ள வேண்டும்.

(9) மிகக் கீழான சாதியைச் சேர்ந்த பெண்ணுடன் தொடர்பு கொண்டிருப்பவனுக்கு மரண தண்டனை விதிக்கப்படும்.

(10) சண்டாளர்களையோ அல்லது வேறு ஏதேனும் தாழ்ந்த சாதியையோ சேர்ந்த தீண்டப்படாத ஒருவன் ,இருபிறப்பு சாதியைச் சேர்ந்தவனால் மட்டுமே தீண்டப்படக்கூடிய இருபிறப்பு சாதியைச் சேர்ந்த ஒருவனை வேண்டுமென்றே தீட்டுப்படுத்தினால் அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

சதுர்வருண அமைப்பின் கட்டுக்கோப்புக்குள் இருப்பவர் களுக்கும் அதற்கு வெளியே இருப்பவர்களுக்கும் இடையேயான

பிரிவினைதான் மனுவைப் பொறுத்தவரையில் உண்மையான பிரிவினை என்பதை ஏற்கனவே நான் குறிப்பிட்டிருக்கிறேன். இவ்வாறு சதுர்வருண அமைப்புக்கு வெளியே இருப்பவர்களை **பஹயாக்கள்** என மனு அழைக்கிறார்; இதற்கு விலக்கப்பட்டவர்கள் அதாவது சதுர்வருண அமைப்புக்கு வெளியே இருப்பவர்கள் என்று பொருள். இந்தப் பிரிவினைக்கு மனு மிகுந்த முக்கியத் துவம் அளிக்கிறார். இந்தப் பிரிவினைதான் அந்தஸ்திலும் குடிமை யுரிமையிலும் வேறுபாட்டைத் தோற்றுவிக்கிறது. சதுர்வருண அமைப்பிற்குள் இருப்பவர்கள் அனைவருமே ஒரே படித்தரத்தில் இல்லை என்பது உண்மையே. சதுர்வருண அமைப்புக்குள் உள்ள பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள், அடிமைகள் ஆகிய அனைவருமே ஏற்றத்தாழ்வான அந்தஸ்தில் இருப்பவர்கள். எனினும் அவர்கள் சதுர்வருண அமைப்பிற்குள் இருந்து வருகின்றனர். சதுர்வருண அமைப்புக்குள் இருப்பவர்கள் மனு சட்டத்தின் பார்வையில் ஒரு சமுதாயப் படிநிலையைப் பெற்றிருக்கின்றனர்; பொதுமக்களின் கண்ணோட்டத்தில் ஒரு மதிப்பை, மரியாதையைப் பெற்றிருக்கின்றனர். இந்த அமைப்புக்கு வெளியே இருப்பவர்கள் அந்த சமுதாயத்தின் பார்வையில் எத்தகைய மதிப்புணர்ச்சியையும் பெற்றிருக்கவில்லை. குடியுரிமையிலும் இந்த வேறுபாடு பிரதி பலிக்கக் காணலாம். சதுர்வருண அமைப்புக்குள் இருப்பவர்கள் துய்த்து மகிழும் உரிமைகள் பெற்றிருக்கிறார்கள்; அந்த உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பரிகாரங்களையும் பெற்றிருக்கிறார்கள். சதுர்வருண அமைப்புக்கு வெளியே இருப்பவர்களுக்கோ இந்த உரிமைகளும் இல்லை; பரிகாரங்களும் இல்லை.

சதுர்வருண அமைப்புக்குள்ளே இருப்பவர்களுக்கும் வெளியே இருப்பவர்களுக்கும்இடையேயான இந்த வேறுபாடு பண்டை ரோமாபுரியினரின் சட்டத்தில் **சிவிக்ஸ்** அதாவது குடிஉரிமையாளர்களுக்கும் **பெரரஜெனிஸ்** அல்லது **ஹாஸ்டிஸ்** அதாவது குடிஉரிமை இல்லாதவர்களுக்கும் இடையே நிலவிய வேறுபாட்டை ஒத்ததாக இருக்கிறது. ஆதிகால ரோமானியர்களின் சட்டம் அடிப்படையில் நபர்கள் சம்பந்தப்பட்டதேயன்றிப் பிரதேசம் சம்பந்தப்பட்டது அல்ல. ஒருவன் அச்சட்டத்தின் பலன்களை அனுபவித்தான் என்றால், அதன் பாதுகாப்பைப் பெற்றிருந்தான் என்றால் அவன் ரோமாபுரியின் பிரதேசத்திற்குள் இருந்தான் என்பது அதற்குக் காரணமல்ல, மாறாக அவன் அதன் ஒரு குடிமகனாக இருந்ததே காரணம்; அவனைப் போன்ற குடிமக்களுக்காக அவனையொத்த குடிமக்களாலேயே இயற்றப்பட்டது தான் இந்தச் சட்டம். பண்டைக் காலத்தில் ஓர் அயல்நாட்டின் எல்லை களுக்குள் ஒருவன் சிறிதுகாலம் தங்கியிருக்க வேண்டுமென்றால்

அந்நாட்டு அரசினதும் குடிமக்களதும் தயவு இருக்க வேண்டும்; இல்லையென்றால் அவன் ஓர் அடிமையாக நடத்தப்படக்கூடும்; அவன் தனது உடைமைகளை எல்லாம் பறிகொடுக்கும்படி நேரிடக் கூடும். ஏனென்றால் அவன் சட்ட வரம்பிற்கு அப்பாற் பட்டவன். அந்நாள்களில் ஒரு ரோமானிய குடிமகன் அனுபவித்து வந்த தனிப் பட்ட உரிமைகள் **கனுபியம், கமர்சியம், ஆக்சியோ** எனும் மூன்று பதங்களில் தொகுத்துரைக்கப்பட்டுள்ளன. **கனுபியம்** என்பது திருமணத்தின் மூலம் சொத்துக்களைப் பெறும் உரிமையையும், விருப்பாவணம் எழுதாமல் இறந்து போனவரது சொத்துக்களுக்கு வாரிசு உரிமையையும், பாதுகாவலர் உரிமையையும் குறிக்கிறது. **கமர்சியம்** என்பது சொத்துக்களை வர்ங்குவதற்கோ, பராதீனம் செய்வதற்கோ உள்ள உரிமையைக் குறிக்கிறது. ஆக்சியோ என்பது கனுபியம் கமர்சியம் இவற்றின் மூலமோ அல்லது நேரடியாக சட்டத்தின் மூலமோ கிட்டும் உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் பாதுகாப்பதற்கும் நீதிமன்றத்தில் வழக்கு தொடரும் உரிமையைக் குறிக்கிறது. மூன்று தகுதிகளையும் ரோமாபுரி குடிமக்கள் மட்டுமே அனுபவித்து வந்தனர். ரோமாபுரி குடிமகன் அல்லாதவனுக்கு இந்த உரிமைகள் ஏதும் இல்லை.

## III

சதுர்வருண அமைப்புக்குள்ளேயும் வெளியேயும் உள்ள வகுப்புகளின் பிரிவினை என்பது உண்மையானதும், அடிப்படை யானதும் என்றாலும் அது வழக்கொழிந்துபோன ஒரு பதப் பிரயோகமாகும். சதுர்வருண அமைப்பு முறை என்பது இப்போது சட்டரீதியாக நடைமுறையில் இல்லை. ஆதலால் சதுர்வருண அமைப்புக்குள்ளேயும் வெளியேயும் உள்ள வகுப்புகளைப் பற்றிப் பேசுவது என்பது ஓரளவு கோட்பாட்டளவிலேதான் இருக்க முடியும். இங்கு ஒரு கேள்வி எழலாம்: இந்தப் பண்டைய வகுப்புகளை இன்று ஒத்திருக்கும் வகுப்புகள் யாவை என்று வினவலாம். இது முற்றிலும் நியாயமான கேள்வி. இந்துக்களின் இன்றைய அராஜகங்களுக்கெல்லாம் இந்த மனு தர்மமே ஆதார அடிப்படை என்பதால் இக்கேள்விக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளேன். நான் மிகப் பழமையான விஷயங்களைப் பற்றிப் பேசினாலும் இரண்டு உண்மைகள் என் வாதம் சரியானது என்பதை மெய்ப்பிக்கும். முதலாவதாக மனுவின் பண்டைய சமூகப் பிரிவினைகளை ஒத்த

பிரிவினைகள் தற்காலத்தில் இருந்து வரவே செய்கின்றன. பண்டையப் பிரிவினைகளை ஒத்திருக்கும் இன்றையப் பிரிவினைகள் இந்துக்களும் தீண்டத்தகாதவர்களுமே ஆவர். சதுர்வருண அமைப்பில் மனு சேர்த்திருந்த வகுப்புகளின் இன்றைய பிம்பங்கள் ஒன்றுகலந்த இந்துக்கள் எனலாம்; அதேபோன்று பாஹயாக்கள் (சதுர்வருண அமைப்புக்கு வெளியே உள்ளவர்கள்) என்று மனுவால் அழைக்கப் பட்டவர்களை இன்று ஒத்திருப்பவர்கள் தீண்டத்தகாதவர்களாவர். சதுர்வருணத்தில் அடங்கியுள்ள பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் ஆகிய நான்கு வகுப்பாரையும் பிரித்துக் காட்டும் எல்லைக்கோடு இன்று ஓரளவு தெளிவற்றதாகி விட்டது; அவர்கள் ஓரளவுக்குக் கலந்தும் போயுள்ளனர். ஆனால் சதுர்வருண அமைப்புக்குள் இருப்பவர்களையும் வெளியே இருப்பவர்களையும் பிரித்துக் காட்டுவதற்கு மனு வரைந்த கோடு இன்றும் அழிக்கப் படாமல் அப்படியே தெளிவாகவும், துல்லியமாகவும் இருந்து வருகிறது. அந்தக் கோடுதான் இப்போது இந்துக்களைத் தீண்டப் படாதவர்களிடமிருந்து பிரிக்கிறது. இதிலிருந்து ஒரு விஷயம் தெள்ளத் தெளிவாகிறது: அதாவது பண்டைய பிரிவுகள் இன்றளவும் வழி வழியாகத் தொடர்ந்து நீடித்து வருகின்றன. ஒரே ஒரு மாற்றம், பெயர்கள்தான் மாறியிருக்கின்றன.

இங்கு எழும் இரண்டாவது கேள்வி, பஹயாக்கள் சம்பந்தமாக மனு வகுத்துத் தந்த விதிமுறைகள் இந்துக்களுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் இடையேயான சமூக உறவில் இன்று நீடிக்கின்றனவா? இது விஷயத்தில் எவருக்கேனும் ஐயம் இருக்குமானால் பின்கண்ட சம்பவத்தை அவர்களது கவனத்துக்குக் கொண்டு வருகிறேன். இது, சென்னை மாகாணத்தைச் சேர்ந்த இராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற சம்பவமாகும்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளர்கள் 1930 டிசம்பரில் தீண்டப்படாதவர்களுக்கு எட்டுத் தடைகளை விதித்தனர். இந்தத் தடைகள் மீறப்பட்டதால் தீண்டப்படாதவர்களுக்கு எதிராக கள்ளர்கள் கடும் வன்முறையைப் பயன்படுத்தினர். தீண்டப் படாதவர்களின் குடிசைகள் தீவைத்து சுட்டெரிக்கப்பட்டன; அவர்களுடைய களஞ்சியங்களும் சொத்துகளும் நாசமாக்கப்பட்டன; அவர்களது கால்நடைகள் கொள்ளையடிக்கப்பட்டன. கள்ளர்கள் தீண்டப்படாதவர்களுக்கு எதிராக விதித்த எட்டுத் தடைகள் வருமாறு:

(i) ஆதி-திராவிடர்கள் தங்க நகைகளையோ வெள்ளி நகைகளையோ அணியக்கூடாது;

(ii) ஆண்கள் முழங்கால்களுக்குக் கீழேயோ, இடுப்புக்கு மேலேயோ எந்த ஆடைகளையும் அணியக்கூடாது;

(iii) ஆண்கள் கோட்டுகளையோ, சட்டைகளையோ, பனியன்களையோ உடுத்தக்கூடாது;

(iv) எந்த ஆதி-திராவிடரும் சிகை அலங்காரம் செய்துகொள்ளக் கூடாது;

(v) ஆதி-திராவிடர்கள் தங்கள் வீடுகளில் மண்பாண்டங்கள் தவிர வேறு எந்தப் பாத்திரங்களையும் பயன்படுத்தக் கூடாது;

(vi) பெண்கள் ரவிக்கைகளோ, தாவணிகளோ அணிந்து தங்கள் உடலின் மேற்பகுதியை மூடிக்கொள்ளக் கூடாது;

(vii) பெண்கள் தலையில் பூ வைத்துக் கொள்ளக்கூடாது; நெற்றியில் குங்குமப் பொட்டு இட்டுக்கொள்ளக் கூடாது;

(viii) ஆண்கள் வெயிலுக்கோ, மழைக்கோ குடைகளைப் பயன்படுத்தக்கூடாது; கால்களில் செருப்புகள் அணியக்கூடாது.

இந்த எட்டுத் தடைகளும் திருப்திகரமாக நிறைவேற்றப் படாததால் 1931 ஜூனில் கள்ளர்கள் ஒன்றுகூடி மேலும் பதினோரு தடைகளை விதித்தனர். இந்தத் தடைகளை அவர்கள் செயல்படுத்த முற்பட்டபோது வன்முறை முன்னிலும் கொடிய முறையில் தலை விரித்துத் தாண்டவமாடிற்று. இப்போது கள்ளர்கள் விதித்த பதினோரு தடைகள் வருமாறு:

"1. ஆதிதிராவிடர்களும் தேவேந்திரகுல வேளாளர்களும் முழங்கால்களுக்குக் கீழ் வேஷ்டி கட்டக்கூடாது.

2. மேலே கண்ட தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த ஆடவரும் பெண்டிரும் தங்க நகைகளை அணியக்கூடாது.

3. பெண்கள் மண்குடங்களில்தான் தண்ணீர் எடுத்து வர வேண்டும்; பித்தளை அல்லது வெண்கலப் பாத்திரங்களில் தண்ணீர் எடுத்துவரக் கூடாது. தண்ணீர்க் குடங்களைத் தலையில் வைத்துச் சுமந்து வருவதற்கு அவர்கள் வைக்கோல் சும்மாடைப்

பயன்படுத்த வேண்டுமே தவிர, துணி சும்மாடைப் பயன்படுத்தக் கூடாது.

4. அவர்களுடைய குழந்தைகள் எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ளக்கூடாது.

5. குழந்தைகளை மிராசுதார்களின் கால்நடைகளை மேய்க்கும்படிக் கூறவேண்டும்.

6. ஆண்களும் பெண்களும் மிராசுதார்களின் பண்ணைகளில் அடிமைகளாக வேலை செய்ய வேண்டும்.

7. அவர்கள் மிராசுதார்களுக்கு வாரத்துக்கோ குத்தகைக்கோ நிலத்தைச் சாகுபடி செய்யக்கூடாது.

8. அவர்கள் தங்கள் சொந்த நிலங்களை மிராசுதார்களுக்குக் குறைந்த விலைக்கு விற்றுவிட வேண்டும்; அவ்வாறு செய்யத் தவறினால் அவர்களது நிலங்களுக்குப் பாசனத்துக்குத் தண்ணீர் திறந்து விடப்பட மாட்டாது. மழை பெய்து ஏதோ சிறிது விளைந்திருந்தாலும் அது இரவோடு இரவாகக் களவாடப்படும்.

9. அவர்கள் மிராசுதார்களுக்கு காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை செய்ய வேண்டும்; ஆண்களுக்குத் தினம் 4 அணாவும், பெண்களுக்கு 2 அணாவும் கூலியாகத் தரப்படும்.

10. மேலே கூறிய வகுப்பினர் தங்கள் வீட்டுத் திருமணங்களின் போதும், வேறு விசேஷங்களின் போதும் மேளவாத்தியத்தைப் பயன்படுத்தக்கூடாது.

11. திருமணத்தில் தாலி கட்டுவதற்கு முன்னர் குதிரை மீது ஊர்வலம் வருவதை அவர்கள் நிறுத்த வேண்டும்; கல்யாண ஊர்வலங்களுக்கு தங்கள் வீட்டுக் கதவுகளையே பல்லக்குகளாகப் பயன்படுத்த வேண்டும்; எந்தக் காரியத்துக்கும் வாகனங்களை உபயோகிக்கக் கூடாது.''

இராமநாதபுரத்தைச் சேர்ந்த இந்துக்கள் விதித்த இந்தத் தடைகளை நான் ஏற்கெனவே குறிப்பிட்ட தீண்டப்படாதவர்களுக்கு மனு விதித்தத் தடைகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

பஹயாக்களுக்கு எதிராக மனு விதித்த தடைகளுக்கும் 1931-ல் தீண்டப்படாதவர்கள் மீது கள்ளர்கள் திணித்த தடைகளுக்கும் இடையே ஏதேனும் வேறுபாடு இருக்கிறதா? மனு விதித்த தர்மத்தைக் கடைப்பிடிக்கும்படி தீண்டப்படாதவர்களைப் பலவந்தப்படுத்தி

இந்துக்கள் எவ்வாறு அதர்மம் செய்கிறார்கள் என்பது குறித்து இந்த நிகழ்ச்சியைப் படித்த பிறகு எவருக்கேனும் ஐயம் எழ முடியுமா?

இது போகட்டும். மற்றொரு சம்பவத்தை எடுத்துக் கொள்வோம். மத்திய இந்தியாவைச் சேர்ந்த பலாய்கள் என்னும் மக்கள் சம்பந்தப்பட்டது இந்த சம்பவம். பலாய்கள் தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்தவர்கள். 1927 ஆம் ஆண்டுவாக்கில் பலாய்கள் தங்கள் சமூகத்தின் மேம்பாட்டிற்காக ஓர் இயக்கத்தை ஆரம்பித்தனர்; தங்கள் சமூகத்தினர் சில குறிப்பிட்ட இழிவான வேலைகளைச் செய்யக் கூடாது என்றும், ஒரு குறிப்பிட்ட வகையில் உடை உடுத்த வேண்டும் என்றும் விதிகளை வகுத்துத் தந்தனர். இந்த விதிகள், சாதி இந்துக்களை எவ்வகையிலும் பாதிக்கக் கூடியவை அல்ல. ஆனால் சாதி இந்துக்கள் இதனை ஒரு பெரிய குற்றமாக எடுத்துக் கொண்டனர்; சம்பிரதாயம் நிர்ணயித்துத் தந்துள்ள அந்தஸ்துக்கு மேலாக உயர்வதற்கு அவர்கள் முயற்சித்து வருவதைக் கண்டு வெகுண்டெழுந்தனர்; பலாய்கள் திமிராக நடந்து கொள்கின்றனர் என்று தீர்மானித்து அதற்கு மரண அடி கொடுக்க முடிவு செய்தனர். கிளர்ந்தெழுந்த பலாய்களுக்கு எதிராகச் சாதி இந்துக்கள் எத்தகைய நெஞ்சீரமற்ற, கொடூரமான, குரூரமான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டனர் என்பதைப் பின்கண்ட பத்திரிகைச் செய்திகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:*

## இந்துக்களின் கொடுங்கோன்மை

### பலாய்கள் மீது அக்கிரமமாக விதிகள் திணிப்பு

### இவ்வாறுதான் வாழவேண்டுமென்று நிர்ப்பந்தம்

''**இந்தூர் மாவட்டத்திலுள்ள கனராரியா, பிச்சோலி ஹாப்ஸி, மர்தானா** மற்றும் இதர சுமார் 15 கிராமங்களைச் சேர்ந்த **கலோதாக்கள், ராஜபுத்திரர்கள், பிராமணர்கள், பட்டேல்கள், பத்வாரிகள்** முதலான உயர்சாதி இந்துக்கள் சென்ற மே மாதம் (1937) தத்தமது கிராமங்களில் வாழும் பலாய்களுக்கு ஓர் அறிவிப்பு செய்தனர்; தங்களுடன் சேர்ந்து வாழ வேண்டுமென்றால் அவர்கள் பின்கண்ட விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்:

---

★ இந்தச் செய்தி 'டைம்ஸ் ஆப் இந்தியா' 10.2.38 மற்றும் 1.4.38 இதழ்களிலிருந்து எடுக்கப்பட்டது.

(1) பலாய்கள் கரையில் தங்க சரிகையிட்ட பக்ரிக்களை அணியக்கூடாது; (2) கவர்ச்சிகரமான அல்லது வண்ணக் கரைகள் கொண்ட வேட்டிகளை அவர்கள் உடுத்தலாகாது; (3) எந்த ஓர் இந்து காலமானாலும் அவருடைய உறவினர்களுக்கு அவர்கள் எவ்வளவு தொலைதூரத்தில் இருந்தாலும் இவர்கள் விரைந்து சென்று தகவல் தர வேண்டும்; (4) எல்லா இந்துத் திருமணங்களிலும் கல்யாண ஊர்வலங்களின் போதும், திருமணங்களின்போதும் பலாய்கள் வாத்திய விருந்தளிக்க வேண்டும்; (5) **பலாய் பெண்கள்** தங்க நகைகளோ, வெள்ளி நகைகளோ அணியலாகாது; கவர்ச்சிகரமான கவுன்களையோ அல்லது ஜாக்கெட்டுகளையோ அணியக்கூடாது; (6) **பலாய் பெண்கள்** எல்லா இந்துப் பெண்களின் பிரசவத்துக்கும் உதவ வேண்டும்; (7) பலாய்கள் தாங்கள் செய்யும் பணிக்காக எத்தகைய ஊதியத்தையும் கோரக்கூடாது; ஓர் இந்து மனமுவந்து அளிப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்; (8) பலாய்கள் இந்த விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க விரும்பவில்லை என்றால் கிராமங்களிலிருந்து வெளியேறி விடவேண்டும்.

## விதிகளை ஏற்க பலாய்கள் மறுப்பு

“பலாய்கள் இதற்கு இணங்க மறுத்துவிட்டனர்; இதன்பேரில் **இந்துக்கள் மிகக் கடுமையான, கொடுமையான நடவடிக்கைகள்** எடுத்துக் கொண்டனர். கிராமக் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்க பலாய்கள் அனுமதிக்கப்படவில்லை; அவர்கள் தங்கள் கால்நடைகளை மேய்க்கவும் அனுமதிக்கப்படவில்லை; ஒரு இந்துவுக்குச் சொந்தமான நிலத்தின் வழியாக பலாய்கள் செல்லக் கூடாது என்று தடை செய்யப்பட்டனர்; இதனால் பலாயின் வயலைச் சுற்றிலும் இந்துக்களின் வயல்கள் இருந்தால் பலாய் தனது சொந்த வயலுக்குச் செல்ல முடியாது. இந்துக்கள் வேண்டுமென்றே தங்கள் கால்நடைகளை பலாய்களின் வயல்களில் மேயவிட்டனர். இந்த அக்கிரமங்களையும் அநீதிகளையும் எதிர்த்து பலாய்கள் தர்பாரில் புகார் மனுக்கள் தாக்கல் செய்தனர். ஆனால் உரிய காலத்தில் அவர்களது கஷ்டங்களுக்கு நிவாரணம் ஏதும் கிடைக்கவில்லை. இதனால் தங்கள் மூதாதையர்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்துவந்த தங்கள் வீடுவாசல்களைத் துறந்து, தங்கள் மனைவி மக்களுடன் தார், திவாஸ், போபால், குவாலியர் போன்ற அண்டைச் சமஸ்தானங்களில் உள்ள கிராமங்களில் போய்ப் புகலிடம் தேட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

## கட்டாய ஒப்பந்தம்

"பிற கிராமங்களைச் சேர்ந்த இந்துக்கள் வகுத்தளித்த விதிகளடங்கிய ஒரு முத்திரைத் தாள் ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்படி இந்தூர் நகருக்கு வடக்கே சுமார் ஏழுமைல் தொலைவிலுள்ள ரியோதி கிராம இந்துக்கள் பலாய்களைப் பெரிதும் நிர்ப்பந்தித்தனர். ஆனால் பிலாய்கள் இதற்கு இணங்க மறுத்துவிட்டனர். இதனால் மிகுந்த சீற்றமடைந்த இந்துக்கள் பலாய்களில் சிலரைக் கடுமையாகத் தாக்கியதாகத் தெரிகிறது. ஒரு பலாய் கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டு மிருகத்தனமாக அடித்து உதைத்துச் சித்திரவதை செய்யப்பட்டார்; ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால்தான் விடுதலை செய்ய முடியும் என்று பிடிவாதமாகக் கூறிவிட்டனர். வேறுவழியின்றி அவர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டு விடுதலையடைந்தார். இந்தக் கிராமத்தைச் சேர்ந்த சில பலாய்கள் மறுநாள் அதாவது டிசம்பர் 20 ஆம் தேதி பிரதமரிடம் ஓடோடிச் சென்றனர்; ரியோதி கிராம்த்தைச் சேர்ந்த இந்துக்கள் தங்களை ஈவு இரக்கமின்றி மிகவும் கொடுமைப்படுத்திய விவரங்களைக் கூறி, முறையீடு செய்தனர். இதன்பேரில் அவர்கள் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த சுபாவிடம் அனுப்பப்பட்டனர். இந்த அதிகாரி போலீஸ் உதவியுடன் கிராமத்தில் விசாரணை நடத்தினார்.இ.பி.கோ. 342 மற்றும் 147 பிரிவின்படி இந்துக்கள் மீதும் 147 ஆவது பிரிவின்படி பலாய்கள் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி பரிந்துரைத்தார்.

## பலாய்கள் கிராமங்களை விட்டு வெளியேறுகின்றனர்
## சாதி வெறியாட்டம்
## சட்டம் பற்றிய அறியாமையால் இடர்ப்பாடு

"சில கிராமத்தைச் சேர்ந்த இந்துக்கள் பலாய்களை நடத்தும் முறையில் அபிவிருத்தி ஏதும் இல்லை. பலாய்கள் உயர்சாதி இந்துக்களால் மிகக் கொடூரமாக, மனிதாபிமானம் அணுவளவும் இல்லாமல் நடத்தப்பட்டிருப்பதை ஏற்கெனவே கூறியிருக்கிறோம். இந்தூர் மாவட்டம் தோபல்பூர் பர்கானாவிலிருந்து மட்டும் ஏராளமான பலாய்கள் வெளியேறி அண்டையிலுள்ள சமஸ்தானங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். பலாய்கள் வெளியேறிய கிராமங்களில் பதோலி, அஹிர்கரால், பிப்லலோதா, மோத்கெர், பாமல்பூர், கரோதா, சாத்வாதா, நெவ்ரி, பான், சனௌதா, அஜ்னோதி, கதேதி, சனவாதா ஆகியவற்றை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். பாமல்கூர் கிராமம் முற்றிலுமாக

காலியாகிவிட்டது. அங்கு எந்த ஒரு பலாய் ஆணையோ, பெண்ணையோ, குழந்தையையோ காணமுடியாது. நந்தாபலாய் என்பவர் மேற்கண்ட கிராமங்களில் ஒன்றைச் சேர்ந்தவர். கிராம இந்துக்களால் அவர் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஒரு கிராமத்தில் பலாய்களின் வீடு வாசல்கள் அனைத்தையுமே இந்துக்கள் சுட்டெரித்துச் சாம்பலாக்கி விட்டனர். ஆனால் குற்றவாளிகள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

''பலாய்கள் அறியாமையில் மூழ்கிப்போன அப்பாவி மக்கள்; சட்டமுறைகளைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது; சர்க்காருக்கு ஒரு விண்ணப்பத்தை அனுப்பிவிட்டால் தங்களுக்கு வேண்டிய எல்லாம் நடந்துவிடும் என்று நம்பிவிடுகிறார்கள். ஒரு முறையீட்டைக் கடைசிவரை எவ்விதம் கொண்டு செல்லுவது என்பது பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது, அதற்கான வாய்ப்பு வசதிகளும் அவர்களிடம் இல்லை; நடைமுறை அனுபவமும் பூஜ்யம். இதனால் சில வழக்குகளில் ஆஜராகவும், தங்களது குற்றச்சாட்டுகளுக்கு ஆதரவான சாட்சிகளைக் கொண்டுவரவும் தவறிவிட்டனர். இதன் காரணமாகக் குற்றவியல் நடுவர் அவர்களது முறையீட்டைத் தள்ளுபடி செய்வதைத் தவிர வேறு வழியில்லை.''

தர்மம், அதர்மம் என்ற கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது, தீண்டப்படாதவர்களின் எழுச்சியை இந்துக்கள் ஈவு இரக்கமின்றி, மிகக் கொடுமையாக ஒடுக்குவதன் மூலம் தங்கள் தர்மத்தைப் பாதுகாக்கும் புனிதமான பணியைத் தாங்கள் செய்கிறோம் என்ற நினைப்பு, எண்ணம் அவர்களுக்கு இருந்து வருகிறது என்று தெரிகிறதல்லவா?

## IV

மனு தர்மம் இன்று எந்த அளவுக்கு எஞ்சியுள்ளது என்ற கேள்வி இங்கு இயல்பாகவே எழுகிறது. தனி நபர்களைப் பாதிக்கும் திருமணம் போன்ற விஷயங்கள் தவிர, மற்றபடி மனுதர்மம் இன்று நடைமுறையில் செயல்படவில்லை. ஆனால், சட்டம் என்ற முறையில் அது செயலிழந்து போனாலும் மரபு வழக்கம், சம்பிரதாயம், ஆசாரம், அனுஷ்டானம் என்ற முறையில் அது நீடித்து நிலைத்திருந்து வரவே செய்கிறது.

சட்டத்துடன் ஒப்பிடும்போது வழக்கம் என்பது சாதாரண

விஷயமல்ல. ஆட்சியினரால் தங்களது காவல்துறை அதிகாரத்தைக் கொண்டு சட்டம் செயல்படுத்தப்படுகிறது, ஆனால் வழக்கம் அப்படி செயல்படுத்தப்படவில்லை என்பது உண்மையே. ஆனால் நடைமுறையில் இதில் அதிக வித்தியாசம் இல்லை. ஏனென்றால் சட்டத்தை அரசு செயல்படுத்துவதைவிட வழக்கத்தை மக்கள் அதிக வலுவோடு, உறுதியோடு செயல்படுத்தி வருகிறார்கள். ஒருங்கிணைந்த மக்களின் நிர்ப்பந்த சக்தி, அரசின் நிர்ப்பந்த சக்தியை விட அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம்.

மனு தர்மம் சட்டம் என்ற அந்தஸ்தை இழந்துவிட்ட போதிலும் அதன் செயல்பாட்டுக்கு இது எவ்வகையிலும் தடையாக இல்லை. அது மட்டுமல்ல, மனு தர்மத்தின் செயல்படும் திறன் எவ்வகையிலும் குன்றிவிடாதபடி பாதுகாக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைமைகள் பலவும் இருக்கின்றன.

இத்தகைய சந்தர்ப்ப சூழ்நிலைமைகளில் முதலாவது வழக்கத்தின் வலிமையாகும். ஒருவர் எவ்வாறு செயல்பட வேண்டும், உணரவேண்டும், எதையும் எவ்விதம் மதிப்பிட வேண்டும், அங்கீகரிக்க வேண்டும் அல்லது நிராகரிக்க வேண்டும் என்பது சம்பந்தப்பட்ட சில குறிப்பிட்ட பழக்க வழக்கங்கள் ஒவ்வொரு சமூகக் குழுவிலும் நடைமுறையில் இருந்து வருகின்றன. பிறப்பின் மூலமோ அல்லது தத்து எடுப்பதன் மூலமோ இக்குழுவில் புதிதாக வந்து சேரும் ஒவ்வொருவரிடமும் இந்தப் பழக்க வழக்கங்கள் ஊட்டி வளர்க்கப்பட்டு, அதற்கேற்ப அவனது மனோபாவங்கள் உருவாக்கப்படுகின்றன. அவன் சகலவற்றிலும் குழுவையே சார்ந்திருக்க வேண்டியிருப்பதால் வேறு வழியின்றி அதன் சட்ட திட்டங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் தன்னை உட்படுத்திக் கொள்கிறான்; தனது சமூகம் செயல்படும் வழியிலேயே தானும் செயல்படுகிறான். ஒரு தனிநபர் அவனைச் சேர்ந்த குழுவால் சமூகமயமாக்கப்படும் இந்த இயக்க நிகழ்வை குரேட்டே பின்வருமாறு தத்ரூபமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார்:

"எது உண்மை, எது பொய்; எது நம்பத் தகுந்தது, எது நம்பத் தகாதது; எது நியாயம், எது அநியாயம்; எது புனிதமானது, எது புனிதமற்றது; எது மதிக்கத்தக்கது, எது வெறுக்கத்தக்கது; எது தூய்மையானது, எது தூய்மைக்கேடானது; எது அழகானது, எது அவலட்சணமானது; எது நேர்மையானது, எது இழிவானது; எது பண்புமிக்கது, எது நயமற்றது; எது செய்யக் கூடியது, எது செய்யத்தகாதது எது ஏற்கத்தக்க பொழுதுபோக்கு ஆகிய இவற்றைப் பற்றி எல்லாம்

இக்குழுவில் புதிதாகப் பிறக்கும் உறுப்பினன் எவ்வாறு மதிப்பிடுகிறான்? சமுதாயத்தில் ஒவ்வொரு தனி நபரது அந்தஸ்தையும் அவனுடனான உறவுகளையும் எவ்விதம் கணிக்கிறான்? பழங்கால ஒட்டுமொத்த சமய, சமூக, அறநெறி, அழகியல் நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும், சம்பிரதாயங்களையும், அனுஷ்டானங் களையும், முற்சார்புகளையும் ஆதார அடிப்படையாகக் கொண்டே இவற்றை மதிப்பிடுவதற்கு, கணிப்பதற்குப் பழகிப் போய் விடுகிறான். இது, அவனது இயல்பின் பிரிக்க முடியாத ஓர் அம்சமாகி விடுகிறது; நிரந்தரமான மனப் பழக்கமாகி விடுகிறது; நிலைபெற்றுவிட்ட மனப்போக்காகி விடுகிறது. இதனை வைத்தே ஒரு குறிப்பிட்ட அனுபவத்துக்கு அவன் பொருள் காண்கிறான்; குறிப்பிட்ட நபர்களைச் சீர்தூக்கிப் பார்க்கிறான்... இத்தகைய நிலைமையில் ஒருவன் சமூகக் கோட்பாட்டிலிருந்து மாறுபடும்போது, அதனை ஏற்க மறுக்கும்போது சமூகம் அவனை வெறுக்கிறது, இகழ்கிறது, ஏளனம் செய்கிறது, எள்ளி நகையாடுகிறது... இந்த வன்மம், காழ்ப்பு பல வகைகளிலும் வெளிப்படுகிறது... சமூகம் அவன்மீது வைத்துள்ள நன்மதிப்பையும் நல்லெண்ணத்தையும் விலக்கிக் கொள்கிறது. இவை இல்லை என்றால் ஒருவனது வாழ்க்கை சகிக்க முடியாததாக, தாங்க முடியாததாகி விடும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.*

இவ்வாறு எந்த ஒரு சமூகத்திலும் செயல்படும், உணரும், நம்பும், மதிப்பிடும், ஏற்கும் அல்லது நிராகரிக்கும் வழிமுறைகள் பழக்க வழக்கங்களாகவும், சம்பிரதாயங்களாகவும், மரபுகளாக வும், வரன்முறைகளாகவும், ஆசார அனுஷ்டானங்களாகவும் உருப்பெற்றுவிடும்போது, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு எத்தகைய சட்ட அங்கீகாரமும் அவசியமில்லாமற் போய் விடுகிறது. குழு மிகப் பரந்த நடவடிக்கையின் மூலம் எப்போதும் தூண்டி ஊக்குவித்துக் கிளர்த்திவிடக் கூடிய மாபெரும் அதிகார வலிமையின் வீச்சு இந்தப் பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும் மீறப்படாமல், உடைக்கப்படாமல் பார்த்துக் கொள்கிறது.

இது, மனு தர்மத்திற்கும் பொருந்தும். பல நூற்றாண்டுக் காலமாக ஆட்டிப்படைக்கும், கட்டுப்படுத்தும் சக்தியாக இருந்து வந்திருப் பதன் காரணமாக மனு தர்மம் இந்துக்களது பழக்கவழக்கங் களின், சம்பிரதாயங்களின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக, ஜீவாதார பகுதியாக ஆகியுள்ளது. அது ஒரு காலத்தில் அவர்களது ரத்தத்தில்

* குரோட்டே: பிளேட்டோவும் சாக்ரட்டீசின் இதர தோழர்களும் தொகுதி 1, பக்கம் 249.

ஊறிப்போயுள்ளது. ஒரு சட்டம் என்ற முறையில் அது இந்துக்களின் செயல்களைக் கட்டுப்படுத்தி வந்தது. அது இப்போது ஒரு பழக்கமாக இருந்த போதிலும் அதன் ஆற்றல் ஒன்றும் குறைந்து போய் விடவில்லை. அது தலைமுறை தலைமுறையாக இந்துக்களின் குண இயல்பை உருவாக்கி வந்திருக்கிறது; அவர்களது கண்ணோட்டத்தை நிர்ணயித்து வந்திருக்கிறது.

மனுதர்மம் தளர்ந்து தேய்ந்து பட்டுப்போகாமல் தடுக்கும் இரண்டாவது அம்சம் அதன் பெருக்கத்தைச் சட்டம் தடை செய்யாததாகும். இத்தகைய ஒரு சூழ்நிலையைப் பலர் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. மனு ஸ்மிருதியை நாட்டின் சட்டம் என்ற உயர் பீடத்திலிருந்து இறக்கியது பிரிட்டிஷ் ஆட்சியின் நன்மைகளில் ஒன்று என்று கூறப்படுகிறது. மனு ஸ்மிருதியில் அடங்கியுள்ள விதிகளைச் சட்ட விதிகளாக ஏற்று நீதிமன்றங்கள் அவற்றை அமல்படுத்த வேண்டியதில்லை என்பது ஒரு பெரும் வரப்பிரசாதம் என்பதில் ஐயமில்லை; இந்த 'இகழார்ந்த' தர்மத்தின் கீழ் சிக்குண்டு நசுக்குண்டவர்களைத் தவிர, மற்றவர்கள் இதன் முக்கியத்துவத்தைப் போதுமான அளவு புரிந்து கொள்வது கடினம். ஐரோப்பிய மக்களுக்குக் கிறித்தவ சமய சீர்திருத்த இயக்கம் போன்று இந்த நடவடிக்கை தீண்டப்படாதவர்களுக்கு ஒரு மாபெரும் அருள்பாலிப்பாக இருந்தது. ஆனால் அதேசமயம், இதனைத் தொடர்ந்து புராடெஸ்டெண்ட் புரட்சி நடந்திருக்கவில்லை என்றால் இந்த இயக்கத்தால் நிரந்தரமான பலன் கிட்டியிருக்க முடியாது என்பதை மறந்து விடக்கூடாது. எனக்குத் தெரிந்தவரை புராடெஸ்டெண்ட் புரட்சியின் முக்கியமான அம்சங்கள் வருமாறு: (1) அரசுதான் உச்ச அதிகாரம் படைத்தது, திருச்சபை அரசுக்குக் கீழ்ப்பட்டதுதான். (2) அது போதிக்கும் சித்தாந்தம் அரசின் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். (3) திருச்சபை குருமார்கள் அரசின் தொண்டர்கள், நாட்டின் பொதுச் சட்டங்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படத்தக்கவர்கள்; அதேபோன்று, தீயொழுக்கத்துக்காகவும் அரசால் அங்கீகரிக்கப்படாத சித்தாந்தங்களைப் போதிப்பதற்காகவும் தண்டிக்கப்படக் கூடியவர்கள். ''சட்டப்படியான திருச்சபை'' என்ற கோட்பாட்டில் தனிப்பட்ட முறையில் நான் நம்பிக்கை கொண்டவன். சமய சித்தாந்தங்கள் என்ற பெயரால் யாரும், எவரும், எத்தகைய தவறான, பெரும்கேடு பயக்க வல்ல சித்தாந்தங்களைப் பரப்புவதற்கு எதிராக இத்தகைய அமைப்பு முறை பாதுகாப்பும் பந்தோபஸ்தும் அளிக்கிறது. ''சட்டப்படியான திருச்சபை'' முறையை எதிர்ப்பவர்கள் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆனால் ''சட்டப்படியான திருச்சபை'' அமைப்பு முறை

நல்லதாக இருந்தாலும் கெட்டதாக இருந்தாலும் மனுதர்மத்தைப் பிரசாரம் செய்வது சட்டப்படி தடுக்கப்படவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. நீதிமன்றங்கள் இந்த தர்மத்தைச் சட்டமாக ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால், சட்டம் அதை சட்டத்துக்கு விரோதமானதாக எடுத்துக் கொள்வதில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நாளும் பண்டிதர்கள் அதனைப் பெற்றோர்களுக்கும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கும்போது மனு ஸ்மிருதி எவ்வாறு மறைந்து போகும்? அதன் கருத்துகள் அனுதினமும் வலியுறுத்தப்படுகின்றன; தீண்டாமை என்பது தங்கள் தர்மத்தின் ஒரு பிரிக்க முடியாத பகுதி என்பதை மறந்துவிட எவரும் அனுமதிக்கப்படுவதில்லை.''

தினந்தோறும் போதிக்கப்படும் இந்த மனுதர்மம் ஆண், பெண், இளைஞர்கள், முதியவர்கள் என்ற பாகுபாடின்றி அனைவர் உள்ளங்களையும் தொற்றிக் கொண்டுள்ளது. இன்னும் சொல்லப் போனால் நீதிபதிகளையும் அது விட்டபாடில்லை; அவர்களது மனங்களையும் அது தொற்றிக் கொண்டுள்ளது. கல்கத்தாவில் நடைபெற்ற ஒரு வழக்கை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். **நோபின் தோம்** என்பவர் ஒரு தீண்டப்படாதவர். ஒரு வெள்ளாட்டைத் திருடி விட்டதாக அவர்மீது வழக்கு தொடரப் பட்டது. அவர் நிரபராதி என்று விடுதலை செய்யப்பட்டார். வழக்கு தொடர்ந்தவர் மீது அவர் மானநட்ட வழக்கு தொடர்ந்தார். ஆனால் அவர் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர் என்பதால் கௌரவமானவர் அல்ல என்று நீதிபதி அவரது மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார். இந்த நிலைமையில் உயர் நீதிமன்றம் தலையிட்டது; நீதிபதியின் கருத்து தவறானது, குற்றவியல் சட்டத்தின் முன் எல்லோருமே சமம் என்று அது கருத்துத் தெரிவித்தது. எனினும், புதிர் விடுவிக்கப் படாத ஒரு கேள்வி இங்கு எழுகிறது: தீண்டப்படாதவர்கள் கௌரவமானவர்கள் அல்ல என்ற கருத்து நீதிபதியின் மனத்தில் எப்படித் தோன்றிற்று? மனு ஸ்மிருதியின் போதனையிலிருந்துதான் இக்கருத்து நிச்சயமாக அவருக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

மனு தர்மம் என்பது வெறும் கடந்தகால விஷயமாக என்றும் இருந்ததில்லை. இன்றுதான் இயற்றப்பட்டது போன்று அது காட்சி யளித்து வருகிறது. எதிர்காலத்திலும் தனது செல்வாக்கை நிலைநாட்ட அது முயல்கிறது. இந்த செல்வாக்கு குறிப்பிட்ட காலம் மட்டுமே நிலவுமா அல்லது என்றென்றுமாக நீடித்து நிலைத்து நிற்குமா என்பதுதான் இங்குக் கேள்வி.

★★★

## இயல் 24

# திருவாளர் காந்தியின் சமுதாய நோக்கு

***I. விசித்தரமானதொரு வரவேற்பு. II. மாபெரும் மறுதலிப்பு. III. ஒரு குற்றப்பத்திரிக்கை. IV. குற்றப் பத்திரிக்கையின் அடிப்படை. V. காந்திக்கு நேர்ந்த அவலம் IV. இந்தியாவுக்கும், தீண்டப்படாதோர்க்கும் காந்தி விட்டுச் சென்ற மரபுகள்***

*வட்டமேசை மாநாட்டின் இரண்டாம் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளச் சென்ற காந்தியார், 1931 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதி இந்தியா திரும்பினார். ஓர் அரசியல்வாதி என்ற முறையிலும், செல்வாக்கு வாய்ந்த தனிமனிதர் என்ற முறை யிலும் வட்டமேசை மாநாட்டில் காந்தியாரின் பங்கு இழிவான முழுத்தோல்வியாகவே முடிந்தது. எனது இக்கருத்தை இந்துக்கள் ஏற்கமாட்டார்கள் என்பதை நான் நன்கறிவேன். ஆனால், காந்தியின் மிகச்சிறந்த நண்பர்களின் கருத்துகளும் எனது கருத்தோடு ஒத்துப் போவது உண்மை. சான்றாக, இருவரின் கருத்துகளைச் சுட்ட முனை கிறேன். வட்டமேசை மாநாட்டில் திரு.காந்தியுடன் மிக நெருங்கிப் பணியாற்றிய யூவர் கூறுவதாவது,*

*''தூய ஜேம்சு அரண்மனையில் காந்தியார் பங்குகொண்ட செயல்பான்மை, வட்டமேசை மாநாட்டில் அவர் மாபெரும் தாக்கத்தை விளைவித்து விடுவார் என ஒரு சாரார் கொண்டிருந்த நம்பிக்கைகளைப் பொய்ப்பித்துவிட்டது.*

*.... அவரோ தன்னையிழந்தவராய்க் காணப்பட்டார்.''*

★★★

*வட்ட மேசை மாநாட்டில் காந்தியின் பங்கு குறித்துத், திரு. போல்டன் விரிவாகவே கூறுவதைக் காண்போம்:*

*''வட்டமேசை மாநாட்டில் அவரது முதல் உரை, அளவுக்கு*

மீறிய அடக்கமும், ஊமைச்சனங்களாய் அல்லலுறும் கோடிக் கணக்கான மக்கள்திரள் மீது ஆழ்ந்த அக்கறையும் கொண்ட உணர்ச்சி நிறைந்த வேண்டுகோளாய் அமைந்தது; ஆனால் அது எடுபடவில்லை. அவரது நேர்மையில் எவரும் ஐயப்படவில்லை யென்றாலும், அவரது உரை மெய்ம்மை வாய்ந்ததாய்த் தோன்ற வில்லை. அவர் கூற்று சரியானதாயிருக்கலாம்; ஆனால் இடம் அறிந்து பேசப்படவில்லை. மாநாட்டில் பின்னர், அவர் குறுக்கிட்டு உரை களிலும் கூட வெற்றி பெற்றதாய் எண்ணுவதிற்கில்லை. இந்தியா வின் புதிய அரசிய லமைப்புச் சட்டத்திற்கான திட்டம் எதையும் ஆங்கில அரசாங்கம் தரவில்லையென்று ஒரு கட்டத்தில் காந்தி குறைபட்டுக்கொண்டபோது, அவரது கூட்டாளிகளிலேயே பலர் அதிர்ச்சியடைந்தனர்; அரசியலமைப்புச் சட்டத்திற்கு வழிகாட்டி முன்னிலையேற்குமாறு தேசிய காங்கிரசின் பிரதிநிதி ஒருவர் ஆங்கில அமைச்சர்களையா வேண்டுவ தென்று திகைத்தனர்! ரூபாயின் மதிப்பைப் பவுண்டின் மதிப்போடு இணைத்து நிர்ணயிப்பதற்கு அவர் தெரிவித்த எதிர்ப்பு, திகைப்பூட்டத்தக்க வகையில், தாக்கமேதும் ஏற்படுத்தாமல் போய்விட்டது. வாக்குரிமை பற்றியும் அது தொடர்பான பிற செய்திகள் பற்றியுமான விவாதங்களில் அவரது பங்கு குறிப்பிடத் தக்க அளவில் ஏதுமில்லை. மாறாக அவர் திரைமறைவில், இந்து-முஸ்லீம் பேச்சு வார்த்தைகளிலேயே மிகுந்த நாட்டம் செலுத்திவந்தார்; எனினும் இவ்வகையிலும் பயனுள்ள முடிவுகள் எதையும் அவரால் அடைய இயலவில்லை. எந்தவொரு கட்டத்திலும் முன்னிலை வகிக்கவோ, குழுக்களின் பணிகளில் உருப்படியான தாக்கம் எதையும் விளைவிக்கவோ அவரால் முடிய வில்லை. அவர் அங்குச் சிலபோது பேசியும், சிலபோது மௌனம் காத்தும் வந்தார். எனிலும், அங்கு நடந்த பணிகளில் அவரது சுவடுகள் சற்றேதும் காணப்படவில்லை.''

அரசியல் மேதை, அரசியல்வாதி என்ற நிலைகளில் காந்தியாரின் செயல்பான்மை எவ்வாறு அமைந்திருந்தது?

வட்டமேசை மாநாட்டின் முதல் சுற்று முடிவடைந்தநிலையில் மூன்று சிக்கல்கள் தீர்வுபெறாநிலையிலிருந்தன. அவை சிறுபான்மை யோர் நிலை, இந்தியாவின் கூட்டாட்சி அமைப்பு, பிரிட்டிஷ் பேரரசில் இந்தியாவின் நிலை ஆகியன. இவை குறித்த முரண்பட்ட, பிளவுபட்ட கருத்துக்கள் பல நிலவிவந்த நிலையில் இவற்றுக்கு உடனடித்தீர்வு காணுவது அவசியமும் அவசரமுமாய்த் தேவைப்பட்டது. இவற்றுக்குத் தக்க தீர்வு காண்பதற்கு அரசியல் விவேகம் தேவை. முதல் வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸ் கலந்து கொள்ளாததும், தனது விவேகத்தையும் செல்வாக்கையும் செலுத்தமுடியாமற்போனதுமே இப்பிரச்சினைக்குத்

தீர்வுகாண இயலாமல் போனதற்குக் காரணம் என்று பலர் கூறினர். இப்போது இக்குறைகளை நிறைவுசெய்யவே இரண்டாவது வட்ட மேசை மாநாட்டிற்கு காந்தியார் வந்திருந்தார். அவரால் இச்சிக்கல் களுக்குத் தீர்வு ஏதும் காணமுடிந்ததா? ஆனால் அங்கே புதிய குழப்பத்தையே அவர் விளைவித்தார் எனில் மிகையாகாது.

அவர் தொடக்கத்திலேயே, ஏனைய இந்தியப் பிரதிநிதிகள் ஒவ்வொருவரையும் சிறுமைப்படுத்தும் சிறுபிள்ளைத்தனமான போக்கில் இறங்கினார். அவர்களது நேர்மை குறித்தும், அவர்களது பிரதிநிதித்துவம் குறித்தும் ஐயம் தெரிவித்தார். மிதவாதிகளைச் சொகுசான அரசியல்வாதிகளென்றும், தொண்டர்படையற்ற தலைவர் களென்றும் சாடினார். முஸ்லீம் மக்களின் பிரதிநிதியாக, அங்கு வந்திருந்த முஸ்லீம் பிரதிநிதிகளைவிட முஸ்லீம்களின் சார்பில் பேசத் தாமே சிறந்த தகுதி படைத்தவர் என்றும் கூறிக்கொண்டார். இதை அவரது உரை, ஒவ்வொன்றின் முடிவிலும் ஏனையோருக்குக் குமட்டலூட்டும் வகையில் திரும்பத் திரும்ப வலிந்துரைத்துக் கொண்டிருந்தார். காந்தியாரின் அறியாமையும் ஆணவமும்மிக்க இப்போக்கினைச் சகித்துக் கொண்டும், அவரது பிழைகளால் நாட்டுக்கு ஊறுவிளைவித்ததைத் தவிர்க்கப் பொறுமை காட்டியும் அவரோடு மாநாட்டில் ஒத்துழைத்த காங்கிரஸ் அல்லாத பிரதிநிதிகள் நாணய முள்ள மக்கள் யாவரின் நன்றிக்குப் பாத்திரமாவர். உடன் வந்த இந்தியப் பிரதிநிதிகளுக்கு அவமதிப்பு விளைவித்தது ஒருபுறம் இருக்க, தாம் போராட வந்த நோக்கங்களிலாவது உறுதியாக நின்றாரா? இல்லை; இதிலும், அவர் மேற்கொண்ட நிலைகள் மானக்கேடானவை. சுதேச மன்னர்களுக்கு விட்டுக்கொடுத்தார்; கூட்டாட்சி அமைப்பிற்கு அந்தந்த சமஸ்தானத்தின் பிரதிநிதிகளை மக்களே தேர்ந்தெடுத்து அனுப்பு வதற்கு மாறாக மன்னர்களே நியமித்து அனுப்பலாமென ஒப்புக் கொண்டார். இதே போன்று மிதவாதிகளுக்கும் பணிந்துபோனார்; மத்திய ஆட்சிப் பொறுப்பு இந்தியர்களுக்குத் தரப்படவேண்டும் என்று இலட்சக்கணக்கான மக்கள் எந்த இலட்சியத்திற்காகச் சிறை சென்று போராடினார்களோ அதை வலியுறுத்தாமல் மாகாண சுயாட்சி யோடு திருப்தியடைய ஒப்புதல் தந்தார். இவ்வாறு போராடிப்பெற வேண்டிய உரிமைகளைப் பிற்போக்காளர்களுக்கு எளிதில் விட்டுக் கொடுத்த காந்தியார், சிறுபான்மையினர் விஷயத்தில் மட்டும் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை; நியாயமாக சிறுபான்மையினர் விஷயத்தில்தான் அவர் விட்டுக்கொடுத்து தமது கௌவரத்தையும் நாட்டின் நலனையும் நிலைநாட்டியிருக்க வேண்டும்.

காந்தியாருக்கு வட்டமேசை மாநாடு சென்றதனால் நிகழ்ந்த கௌவரக்குலைவைப்போல் வேறு ஒருபோதும் நிகழந்ததில்லை.

வட்டமேசை மாநாட்டில் காந்தியாரின் கோபம் அவரது நண்பர்களில் பலருக்குத் துன்பமூட்டும் வகையில் அமைந்திருந்தது. அங்குத் தாம் மேற்கொள்ளச் சென்ற பொறுப்புக்கு முற்றிலும் தகுதியற்றவர் என்பது வெளிப்பட்டது. எந்தவொரு நாடும் தனது அரசியலமைப்புச் சட்டத் தைத் திட்டமிட வேண்டுமெனில் அதற்குப்போதிய கல்வியும் பயிற்சியும் பெற்றிருக்கும் பிரதிநிதிகளையே தேர்ந்தெடுக்கும். ஆனால் காந்தியைப்போன்று பயிற்சியோ அனுபவமோ அற்ற ஒருவர் அனுப்பபட்ட விந்தை இங்குத்தான் நடந்தது. இத்தகைய வட்ட மேசை மாநாட்டுக்கு அரசியலமைப்புச் சட்டநூல் ஒன்றை எடுத்துச் சென்றிருப்பாராயின் பயனுள்ளதாய் இருந்திருக்கும்; அவரோ நார்சி மேத்தா அடிகளின் பாடல் ஒன்றை இசைத்துக் கொண்டு சென்றால் போதுமென்று எண்ணிவிட்டார்! தாம் மேற்கொண்ட பணிக்குத் தேவையான விவரங்கள் சற்றேதுமில்லாமையால், ஆங்கில அரசு முன்மொழிந்த கருத்துகளை எதிர்க்கவோ, அவற்றுக்கு மாற்றுக் கருத்துகள் எதையும் முன்மொழியவோ அவரால் இயலவில்லை. தமது பக்தர் கூட்டத்தை விட்டு வந்து அரசியல்வாதிகளுக்கிடையே செயல்பட முனைந்த காந்தியார் தண்ணீரைவிட்டுத் தரையில் விழுந்த மீனைப்போன்று தத்தளித்ததில் வியப்பில்லை. ஒவ்வொரு கட்டத் திலும், அவர் சமாளித்து நின்றதைவிட இடறி விழுந்த நிகழ்ச்சிகளே மிகுதி. அவர் தமது முயற்சியைக் கைவிட்டு இந்தியா திரும்பினார்.

படுதோல்வியோடு இந்தியா திரும்பிய காந்திக்கு எத்தகைய வரவேற்பு கிடைத்தது? அதனை நோக்கினால் பிறநாட்டவரும், காந்திய பக்தரல்லா இந்தியரும் பெரிதும் வியப்படைவர். லாய்டு திரெய்ஸ்தி னோவின் எஸ்.எஸ்.பில்சுனர் என்ற கப்பல் 1931 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் தேதி காலை 8 மணியளவில் பம்பாய்த் துறைமுகம் வந்து சேர்ந்தது. அதில் வந்த காந்தியாரை வரவேற்று தரிசிக்க, ஆடவர், மகளிர், குழந்தைகள் எனப் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டனர். அன்றைய வரவேற்பு நிகழ்ச்சிகளைப் பம்பாய் நாளிதழ்களான ''டைம்ஸ் ஆப் இந்தியாவும்'' ''ஈவினிங் நியூசும்'' வெளியிட்ட திலிருந்து சில பகுதிகளை நோக்கினால் நிலைமை தெளிவுற விளங்கும்.

''பில்சுனர் கரையை நெருங்கச் சற்றுமுன்னரே செங்காவி நிறச் சேலையணிந்த தேசசேவகிகள்(காங்கிரஸ் கட்சியின் பெண் தொண்டர் கள்) படகுகளில் ஏறிச்சென்று அக்கப்பலைச் சூழ்ந்து கரைக்கு அழைத்து வந்தனர்.

''கப்பல் இரேவு துறையை அடையும்போது அக்கப்ப லுக்குமேல் இரண்டொரு விமானங்களில் பறந்து வானிலிருந்து மலர் தூவி வரவேற்க வேண்டுமென்று காங்கிரஸ் கமிட்டி பம்பாய் விமான ஓட்டுநர் மன்றத்தைக் கேட்டுக் கொண்டது; ஆனால் விமான ஓட்டுநர் மன்றமோ அரசியலிலிருந்து ஒதுங்கி நிற்க விரும்பி விவேகமாய் அக்கோரிக்கையை மறுத்துவிட்டது.''

பாலார்டு துறையின் பரந்த மைய மண்டபம் தோரணங்களாலும் காங்கிரஸ் கட்சிக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது; மையத்தில் மாபெரும் மேடையொன்று அமைக்கப்பட்டிருந்தது. உள்ளூரிலிருந்தும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பற்பல நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு நுழைவுச் சீட்டு வழங்கப் பட்டு, அவர்களுக்காக மேடையைச் சூழ்ந்து எண்ணற்ற நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

நகரிலிருந்தும், துறைமுக மேடையிலிருந்தும் மண்டபத்திற்கு வரும் வழிநெடுகிலும், தேச சேவகிகள் அணிவகுத்து நின்று தேசியக் கொடிகளை அசைத்தவாறே கூட்டத்தை நெறிப்படுத்திக் கொண்டிருந் தனர். மேடையைச் சூழ்ந்து ஒழுங்கு காப்பதும் அவர்கள் பொறுப்பி லேயே விடப்பட்டிருந்தது.

''பெருத்த வாழ்த்தொலிகள் முழங்கக், காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் புடைசூழத் திருவாளர் காந்தி மேடையை அடைந்தார். அவர் மேடை மீது ஏறிய கணத்தில் ஏராளமான வாழ்த்துத் தந்திகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து குவிந்த வண்ணமிருந்தன.

''மேடையில் பல்வேறு பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் காந்தியார்க்கு வரிசையாக மாலையணிவித்தனர்; ஏராளமாகத் திரண்டிருந்த அந்தப் பிரதிநிதிகளின் பட்டியல் வரிசையிடப்பட்டு மாலையிட மேடைக்கு அழைக்கப்பட்டதோடு, அந்தப்பட்டியல் அச்சிடப்பட்டு முன்கூட்டியே விநியோகமும் செய்யப்பட்டது.

''வரவேற்பு மண்டப நிகழ்ச்சிகள் மாலையிடுவதுடன் முடிவடைந்தன. அடுத்து, ஒரு வரிசைக்கு நால்வர் வீதம் ஊர்வலம் புறப்படத் தயாரானது. இதற்கென ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அலங்கார மோட்டார் வாகனத்தில் திருவாளர் வல்லபாய் படேல் இடப்புறமும், திருவாளர் விட்டல்பாய் படேல் வலப்புறமும் சூழக் காந்தியார் அமர்த்தப்பட்டார். பம்பாய் மாகாண காங்கிரஸ் கட்சிக் குழுத் தலைவர் திரு. கே.எப். நாரிமன் முன்னிருக்கையில் அமர ஊர்வலம் தொடங்கியது.

''வழிகாட்டு வாகனம் முன்செல்லக் காங்கிரஸ் காரியக் கமிட்டி உறுப்பினர்கள் பிற வாகனங்களில் பின்தொடர, ஊர்வலம் பாலார்டு துறைச்சாலை, ஹார்ன்பி சாலை கல்பாதேவி ஆகிய பகுதிகள் வழியே காம்தேயிலுள்ள 'மணி புவனை' அடைந்தது. காங்கிரஸ் கட்சியின் வேண்டுகோளுக்கிணங்கத் திரண்டிருந்த பொதுமக்கள் வழிநெடுக வண்ணமிகு அலங்காரங்களை ஏற்பாடு செய்திருந்தனர்; ஐந்து முதல் பத்து வரிசைகளில் வழியெங்கும் கூட்டம் திரண்டிருந்து வாழ்த்தொலி முழங்கியது.''

இவ்வரவேற்பின் எந்தக் கட்டத்திலும், வாழ்த்துரைகளுக்குப் பதிலளிக்கும் முறையில் காந்தியார் வாய் திறந்தாரில்லை. இந்த

நோன்பு வீரர் அன்று ஞாயிற்றுக்கிழமையாதலால் பேசா நோன்பு மேற்கொண்டிருந்தார். இத்தனை பெருந்திரளாய்க் கூடிவாழ்த்திய பொதுமக்கள் கூட்டத்தை மதித்துப் பதிலளிக்கும் இணக்கமும் பண்பாடும் பெரிதாய்த் தோன்றவில்லை அவருக்கு. பண்பாடு கருதுவாராயின் பேசா நோன்பைச் சற்று முன்னதாக முடித்துக் கொண்டிருக்கலாம்.

காந்தியாருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பைக் காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வமான வரலாற்றாசிரியர் எவ்வாறு நோக்கு கிறார் என்று இனி பார்ப்போம்:★

''இந்திய மக்களின் உரிமைக் காவலருக்கு, தனிப்பெரும் தலைவருக்குத் தக்க வரவேற்பினை அளிப்பதற்கு, இந்தியாவின் மாகாணங்கள் அனைத்திலிருந்தும், அவற்றின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெருந் திரளான பிரதிநிதிகள் பம்பாயில் கூடினர். அவரைச் சந்திக்க கப்பலுக்கே வந்த நண்பர்களைக் காந்தியார் தட்டிக் கொடுத்தும் தலையசைத்தும் வாழ்த்தினார்; மதிப்புக்குரிய அப்பாஸ் தியாப்ஜியின் தாடியை வருடி நெகிழ்ந்தார். சுங்கத்துறை மண்டபமொன்றில் முறைப்படியான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர், பேரரசர்களும் பொறாமைப் படத்தக்க மாபெரும் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.''

இவ்வருணனைகளைப் படிக்கும்போது, இதேபோன்ற சூழ்நிலையில் பத்தாண்டுகளுக்கு முன்னர் நடந்த நிகழ்ச்சியொன்றையும் நினைவு கூரலாம். 1921 ஆம் ஆண்டில், அயர்லாந்து நாட்டின் தன்னாட்சியுரிமை சம்பந்தப்பட்ட பிரச்சினையை முடிவு செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு, ''சீன்பெய்ன்'' இயக்கத்தினருக்கு இங்கிலாந்துப் பிரதமர் திரு. லாயிடு ஜார்ஜ் அழைப்பு விடுத்திருந்தார். இவ்வழைப்பினை ஏற்று மாநாட்டில் கலந்து கொண்ட அயர்லாந்துப் பிரதிநிதிகள், இதுகுறித்து இங்கிலாந்து அமைச்சரவையுடன் உடன்படிக்கையொன்றை அடைவதில் வெற்றி கண்டனர் என்பதை நாம் நன்கறிவோம். இவ்வுடன்படிக்கை 1921 ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் தேதியன்று கையொப்பமானது. பின்னர் இவ்வுடன்படிக்கை, ''சீன்பெய்ன்'' கட்சியின் பாராளுமன்றமான தாயில் எனும் மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டு டிசம்பர் 14 ஆம் தேதி கூடிய இம்மன்றம், 1922 ஆம் ஆண்டு ஜனவரி 7 ஆம் தேதி நடைபெற்ற வாக்கெடுப்பில் உடன்படிக்கைக்கு ஆதரவாக 64 வாக்குகளும், எதிராக 57 வாக்குகளும் கிடைத்தன.

இவ்வுடன்படிக்கையை எய்தி வந்த பிரதிநிதிகளுக்கு, அயர்லாந்தில் எத்தகைய வரவேற்பு கிடைத்தது?

★ பட்டாபி சீதாராமய்யா - காங்கிரஸ் வரலாறு, பக்கம். 857

அயர்லாந்து பிரதிநிதிகள் குழுவின் தலைவராய் வட்டமேசை மாநாட்டில் பங்கேற்ற ஆர்தர் கிரிபித், 1922 ஆம் ஆண்டு ஆகஸ்டு 12 ஆம் தேதி "சீன் பெய்ன்" இயக்கத்தின் உடன்படிக்கை எதிர்ப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்; அவருடன் நெருங்கிப் பணியாற்றிய மைக்கேல் காலின்சும் ஆகஸ்டு 22 ஆம் தேதி எதிர்ப்பாளர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இத்தகைய பழிவெறிக்கு ஆளாக அவர்கள் செய்த குற்றம் என்ன? அல்ஸ்டர் பகுதியை அயர்லாந்துடன் சேர்க்கவும், அஃது உள்ளடங்கிய அயர்லாந்துக்குத் தன்னாட்சிக் குடியரசுரிமையை உறுதிசெய்யவும் உடன்படிக்கையில் வகைசெய்யப்படவில்லை என்பதே காரணம். உடன்படிக்கை இவற்றுக்கு வழிகோலவில்லையென்பது மெய்தான். ஆனால், வட்டமேசைப் பேச்சுகளில் இவ்விரு சிக்கல்களும் இடம் பெறமாட்டா என்பதையறிந்தே அயர்லாந்துப் பிரதிநிதிகள் மாநாட்டுக்கு அனுப்பப்பட்டனர்; எனவே உடன்படிக்கையில் இவை குறித்த கூறுகள் இடம்பெறவில்லையென்பதற்குப் பிரதிநிதிகள் பொறுப்பல்ல என்பதையும் கட்சி அறியும். எனவே சீன்பெய்ன் கட்சியின் உடன்படிக்கை எதிர்ப்பாளர்களின் கடுஞ்சினத்திற்கு நியாயமான அடிப்படைகள் எவையும் இல்லை என்பதிலும், இத்தகைய கொலை வெறிக்கு ஆளாகும் அளவுக்குக் குற்றம் எதையும் ஆர்தர் கிரிபித்தோ, மைக்கேல் காலின்சோ செய்துவிடவில்லையென்பதிலும் சற்றும் ஐயத்திற்கு இடமில்லை.

அயர்லாந்தின் இந்த அரசியல் விவகாரத்துடன் ஒப்பிடும்போது பம்பாயில் காந்தியார் பெற்ற வரவேற்பினை மிக விசித்திரமான நிகழ்ச்சியாகவே கருதவேண்டும். இரு குழுவினரும் தத்தம் நாட்டு விடுதலையுரிமைக்குக் குரல் கொடுக்கவே, வட்ட மேசை மாநாடு சென்றவர்கள். கிரிபித்தும், காலின்சும் அயர்லாந்து விடுதலைக்குக் குரல் கொடுக்கச் சென்றவர்கள்; காந்தியோ, இந்தியாவின் விடுதலைக்குக் குரல் கொடுக்கச் சென்றவர். கிரிபித்தும், காலின்சும் தங்கள் குறிக்கோளில் வெற்றியோடு திரும்பியவர்கள்; அவர்கள் ஏறத்தாழ முழு வெற்றியே பெற்றனர் எனலாம். காந்தியோ முழுத் தோல்வியோடு அவமதிப்பும் அடைந்து திரும்பியவர். கிரிபித்தையும், காலின்சையும் துப்பாக்கிக் குண்டுகள் வரவேற்றன. காந்தியாருக்கோ, பேரரசர்களும் பொறாமை கொள்ளத்தக்க மாபெரும் வரவேற்பு கிடைத்தது!! இந்த இரு வரவேற்புகளில்தான் எத்துணை பெரும் முரண்பாடு! இந்தியாவின் நாட்டுப் பற்றாளர்களுக்கும் அயர்லாந்தின் நாட்டுப் பற்றாளர்களுக்குமிடையே இவ்வளவு முரண்பட்ட கண்ணோட்டங்களா? வினாக்கள் சிந்தையைத் தொடுகின்றன. இந்தியப் பொதுமக்கள் இத்தனை சிறந்த வரவேற்பை நல்கியதற்கு அவர்களது குருட்டுத்தனமான தனி மனித வழிபாடுதான் காரணமா? அல்லது காந்தியாரின் அப்பட்டமான தோல்வியை மூடிமறைக்கும்

கைக்கூலிப் புத்திரிகைகளின் இருட்டடிப்புகள்தான் காரணமா? சிந்தையில் சுமையாய் மொய்க்கும் இத்தகைய வினாக்களுக்கு என்னால் விடையிறுக்க இயலவில்லை. விடைக்கு அப்பாற்பட்ட சிக்கல்கள் பல இவற்றிலே அடங்கியுள்ளன★.

## II

காந்தியவர்களுக்குக் கொடுக்கப்பட்ட இம்மாபெரும் வரவேற்புக்கிடையே, பம்பாயைச் சேர்ந்த தீண்டப்படாதோர் பலரும் காந்திக்குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க அங்கே திரண்டிருந்தனர். இவர்களது ஆர்ப்பாட்டம் குறித்துச் செய்தித் தாள்கள் கூறுவதாவது:

''பாலார்டு துறையின் வாயிலுக்கு வெளியே உணர்ச்சி நிறைந்த காட்சிகள் காணப்பட்டன. ஒருபுறம் ஒடுக்கப்பட்ட வகுப்பின் தொண்டர்கள் சீருடையணிந்தும், கருப்புக்கொடிகளையசைத்தும் காந்திக்கு எதிரான ஏளன மொழிகளையும், தங்கள் தலைவரைப் போற்றும் புகழ் உரைகளையும் முழங்கிக் கொண்டிருக்க, மறுபுறத்தில் காங்கிரஸ் கட்சித் தொண்டர்கள் எதிர் முழக்கங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர்.''

இவ் வார்ப்பாட்டங்களில் ஆயிரக்கணக்கான தீண்டப்படாதோர் ஆண்களும், பெண்களுமாய்க் கலந்து கொண்டு, கருப்புக் கொடிகளைக் காட்டி, காந்திக்குத் தங்கள் எதிர்ப்பினைத் தெரிவித்தனர். காந்தியை வரவேற்க வந்திருந்த, எண்ணிக்கையில் பன்மடங்கு மிகுந்திருந்த காங்கிரஸ் கட்சியினரின் அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது, காந்திக்குத் தங்கள் எதிர்ப்பைக் காட்டுவதில் அவர்கள் உறுதியாய் நின்றனர். இதன் விளைவாய்ப் பூசலும் இரத்தக் களரியும் விளைந்தன; அதனால் இருதரப்பிலும் தலா நாற்பது பேர் பலியாயினர்.

தமக்கும் கருப்புக்கொடி காட்டி எதிர்ப்பு தெரிவிக்கப்படலாம் என்று காந்தியை முதன்முதலாக உணரவைத்த நிகழ்ச்சி இதுவே. இது அவருக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும். பிற்பகலில் இந்நிகழ்ச்சி பற்றிக் கேள்வி கேட்கப்பட்டபோது, தாழ்த்தப்படாதோர் தமது எலும்பின் எலும்பாய், தசையின் தசையாய் தம்மோடு ஒன்றியவர் களேயாதலால், தாம் அவர்கள் மீது கோபப்படவில்லையென்று கூறினார். இது, உண்மையை மறைக்கும் வழக்கமான மகாத்மாத்தன மான சமாளிப்பு என்பதை அறிவோம். தலைவர் ஒருவர் பின்னே கூடும் உணர்ச்சிவயப்பட்ட கூட்டங்கள் எப்போதுமே அவருக்குக் கண்மூடித்தனமாக ஆதரவு தருமென நம்புவதற்கில்லை என்ற

★ திரு: காந்திக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு அவரது அரசியல் சாதனை காரணமாக ஏற்பாடு செய்யப்பட்டதாக நினைத்துக் கொண்டு காங்கிரசின் அதிகாரபூர்வமான வரலாற்றாசிரியர் இவ்வாறு கூறுகிறார் - (சீதாராமையாவின் அறிக்கை கையெழுத்துப் பிரதியில் இல்லை - பதிப்பு ஆசிரியர்).

உண்மையை உணர்ந்தோர், காந்தியின் வழக்கமான இப்பொய்மைச் சமாளிப்புகளைப் பொருட்படுத்த மாட்டார்கள். கிராம்வெல் ஒரு பெரும்போரில் வெற்றிபெற்றுத் திரும்பியிருந்தபோது அவரை வரவேற்கப் பெருந்திரளான கூட்டம் திரண்டிருந்தது. இதனைப் பெருமையுடன் சுட்டிக் காட்டிய நண்பர் ஒருவருக்கு ''மெய்தான்; இதுவே என்னைத் தூக்கிலிடும் நிகழ்ச்சியாக இருந்தால், இதனினும் பெரிய கூட்டம் திரண்டிருக்கும்'' என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறி அவரது புகழுரையை ஒதுக்கித் தள்ளிவிட்டார்.

ஆனால், காங்கிரஸ் கட்சியினர் எவருக்கும் கிராம்வெல்லைப் போன்று எதார்த்த உணர்வு கிடையாது என்பது வருந்தற்குரியது. மக்கள் எதிராய்த் திரண்டால் தாங்கள் கூடத் தூக்கில் இடப்படலாம் என்ற நினைவும் அவர்களுக்குக் கிடையாது. ''இந்திய மக்கள் ஆட்டுமந்தைக் கூட்டங்களே; சிந்திக்கும் திறன் பெற்ற மக்களாய் மாற மாட்டார்கள்'' என்ற உறுதியான நம்பிக்கையில் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் ஆழ்ந்துள்ளனர். (1931, டிசம்பர்) 28 ஆம் தேதி அங்குத் திரண்டிருந்து காந்திக்கு கருப்புக் கொடி காட்டி எதிர்ப்பு தெரிவித்த தீண்டப் படாதோர் பிரதிநிதிகள், இந்திய மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதியின ரேனும் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் என்பதற்குச் சான்றா யமைந்தனர்.

தீண்டப்படாதோர் மக்கள் காந்திக்கு ஏன் எதிர்ப்பு தெரிவித் தார்கள்? இதற்கு விடை காண்பதன் பொருட்டு, ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தோர் அச்சிட்டுப் பரப்பிய அறிக்கையின் சில பகுதிகளைக் காணுதல் சாலும்.

***''காந்திக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் எதிரான எங்கள் குற்றப் பத்திரிக்கை''***

***''உங்களது பாசாங்குத்தனமான ஆதரவுப் போக்கும், உதட் டளவிலான அனுதாபமும் எங்களுக்குத் தேவையில்லை; நீதியும் நியாயமுமே எங்கள் கோரிக்கை'' எனும் தலைப்புகளில் இரு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து சில பகுதிகள்:***

*1. தீண்டாமை ஒழிப்பு என்பது காங்கிரஸ் கட்சியின் நிர்மாணத் திட்டங்களில் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டு இருந்தபோதிலும், இக் குறிக்கோளை எய்துவதற்கு நடைமுறையில் எந்த முயற்சிகளையும் அக்கட்சியினர் செய்ய முனைவதில்லை; அதுமட்டுமன்றி, மஹத் திலும், நாசிக்கிலும் தீண்டாமைக்கு எதிரான எங்கள் போராட் டங்களுக்குக் காங்கிரஸ் கட்சியின் உள்ளூர்த் தொண்டர்களே கடும் எதிர்ப்பாளராய் விளங்கினர்.*

*2. இலண்டனில் நடத்த வட்டமேசை மாநாட்டில், ஒடுக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளை அம்மக்களின் ஒருமித்த, நம்பிக்கைக்குரிய*

தலைவர் டாக்டர் அம்பேத்கர் முன்வைத்தபோது காந்தியார் காரணமற்ற, விளக்கவியலாத மூர்க்கப்பிடிவாதமான எதிர்ப்பு மனப்பான்மையையே காட்டினார்.

3. முகமதியர்களுக்கும், சீக்கியர்களுக்கும் 'வரலாற்றுக் காரணங் களுக்காகத் தனிப் பிரதிநிதித்துவம் உட்படப் பல சலுகைகளை வழங்கத் தயாராகவிருந்த காந்தியார், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பொது வாக்காளர் தொகுதிகளில் தனித் தொகுதிகளைக் கூட வழங்க இசையவில்லை. சாதி இந்துக்களின் தயவில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டால், தாழ்த்தப்பட்ட மக்களின் கதி என்னவாகும் என்பது அவருக்கு நன்கு தெரிந்திருந்தும் இதனை மறுத்தார்.

★ ★ ★

9. இந்து சமுதாயத்தைத் தாம் கூறுபோட விரும்பவில்லை என்பதற்காகவே, தாழ்த்தப்பட்ட மக்களின் தனித்தொகுதிக் கோரிக்கை களைத் தாம் எதிர்ப்பதாகக் காந்தியார் கூறியுள்ளார். ஆனால் காங்கிரஸ் கட்சியோ, தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரு பிரிவினரை ஏனையோருக்கு எதிராகத் தூண்டிவிட்டுத் தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயத்தையே கூறுபோட முனைந்து செயல்படுகிறது. தாழ்த்தப் பட்ட மக்களின் நண்பராய் நடித்துக் கொண்டு காந்தியாரும் காங்கிரஸ் கட்சியினரும் நடத்தும் இந்த துரோக நாடகத்தை விட, வெளிப்படை யான எதிரிகளே மேல்.

10. சில கையாட்களையும் போலிகளையும் பக்கத் துணையாகக் கொண்டு, காந்தியாரும் காங்கிரஸ் கட்சியினருமே ஒடுக்கப்பட்ட மக்களின் உண்மையான பிரதிநிதி எனக் காட்டும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில், ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து உண்மை நிலை என்னவென்பதை உணர்த்துவது தாழ்த்தப்பட்ட மக்களாகிய எமது கடமையல்லவா? இதுவே, காந்தியாருக்கும் காங்கிரஸ் கட்சியினருக்கும் எதிராக நாங்கள் சாற்றும் குற்றப்பத்திரிக்கை.

குருட்டுத்தனமான வீரவழிபாட்டிலும், விழிமூடித்தனமான ஒருதலைப்போக்கிலும் தம்மையிழக்காத நடுநிலை மக்கள் சிந்தித்து நல்ல தீர்ப்பு வழங்கட்டும்.

**பொதுச் செயலாளர்,**
தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நிறுவனம்

இந்தக் குற்றப்பத்திரிக்கையில் உண்மையிருக்கிறதா? வெளி யுலகு காந்தியாரை இந்திய அரசியல் தலைவர்களில் ஒருவராக மட்டும்

கருதவில்லை; தீண்டாதோரின் நலனுக்குப் போராடும் தலைவராகவும் எண்ணி வருகிறது. காந்தி ஓர் வெறும் அரசியல் தலைவர் என்பதை விடத் தாழ்த்தப்பட்டோர் உரிமைக் காவலர் என்ற வகையில்தான் அவரது செயல்பாடுகளில் வெளியுலகின் கவனம் ஈர்க்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக அண்மையில் ''மான்செஸ்டர் கார்டியன்'' என்ற இதழ், காந்தியார் தாழ்த்தப்பட்டோர்களுக்காக ஆற்றிவரும் பணிகளைக் குறித்துத் தலையங்கம் ஒன்றினை எழுதியிருந்தது.

இத்தகைய சூழலில், குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை போன்று தோன்றக்கூடும். 'தீண்டாமையை நீக்குவோம் என்று தமது காங்கிரஸ் கட்சியை உறுதிமொழி எடுக்கச் செய்த காந்தியார்மீதா குற்றச்சாட்டு?' என எண்ணத் தோன்றும். காங்கிரஸ் கட்சி காந்தியாரின் பொறுப்புக்குள் வருவதற்கு முன்னர் சமுதாயச் சிக்கல்கள் ஏதும் கட்சியின் திட்டங்களில் இடம்பெற அனுமதிக்கப்பட்டதில்லை. அரசியல் கூறுகள், சமுதாயக் கூறுகள் இரண்டுக்குமிடையே தெளிவான வரம்பை வகுத்துக் கொண்டு, கட்சியின் நடவடிக்கைகளை அரசியல் வட்டத்திற்குள்ளேயே இருத்திக் கொள்ளக் கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பழைய காங்கிரஸ் கட்சி தீண்டாதோரின் சிக்கல்களைக் கண்ணெடுத்தும் பார்க்க மறுத்து வந்தது. முதன்முறையாக 1917★ ஆம் ஆண்டில்தான் மிகுந்த இடர்ப்பாடுகளுக்கு இடையே தீண்டப்படாதோரின் சிக்கல்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுப் பின்வரும் தீர்மானம் இயற்றப்பட்டது:

''காலங்காலமாக இந்திய சமுதாயத்தின் தாழ்த்தப்பட்ட பிரிவின் மீது கடுமையும் இன்னலும் நிறைந்த கட்டுப்பாடுகளும் அடக்கு முறைகளும் சுமத்தப்பட்டு வந்துள்ளன; இக்கட்டுப்பாடுகளையெல்லாம் அறவே நீக்குதலே நீதியும் நேர்மையும் கொண்ட சமுதாயக் கடமை என்று இந்திய மக்களுக்குக் காங்கிரஸ் கட்சி வலியுறுத்த விரும்புகிறது.''

1920 ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி காந்தியாரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அப்போது கட்சியின் நாகபுரி மாநாட்டில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

★ கையெழுத்துப் பிரதியில் வருடம் குறிப்பிடப்படவில்லை. - பதிப்பாசிரியர்

'இந்த மேற்கோள் இந்நூலாசிரியர் எழுதிய ''காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதோருக்கு சாதித்தது என்ன?'' என்ற நூலின் முதல் பக்கத்திலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் தட்டச்சுப் பிரதியில் இது காணப்படவில்லை. - பதிப்பாசிரியர்

## சமூகங்களுக்கிடையே ஒற்றுமை

*"இறுதியாக, கிலாபத், பஞ்சாப் கொடுமைகளுக்குப் பரிகாரம் காணவும், ஓராண்டுக்குள் இந்தியா சுயாட்சி பெறவும் அகிம்சையை வளர்ப்பதிலும் அரசாங்கத்துடன் ஒத்துழையாமையைக் கைக்கொள்வதிலும் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தும்படி காங்கிரசில் இணைந்துள்ள அல்லது இணையப்பெறாத அனைத்துப் பொதுநல அமைப்புகளையும் காங்கிரஸ் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. அரசுக்கு எதிரான ஒத்துழையாமை இயக்கம் வெற்றிபெறுதற்கு அடிப்படையாக மக்களிடையே முழு ஒத்துழைப்பு தேவை. இதனை எய்தும் பொருட்டு இந்து-முஸ்லீம் ஒற்றுமை பேணப்பட வேண்டும். எனவே, காங்கிரஸ் கட்சியின் இந்துப் பிரதிநிதிகள், இந்து-முஸ்லீம் ஒற்றுமை மேம்பாட்டுக்கு உழைப்பதுடன், இந்துக்களில் பார்ப்பனர் - பார்ப்பனரல்லா தோர்க்கிடையிலான பூசல்களுக்கு முடிவுகாண இந்துச்சமுதாய மக்களை வலியுறுத்துவதுடன், ஒடுக்கப்பட்ட மக்களை நடத்தும் முறைகளில் செம்மையான சீர்திருத்தங்களைக் கொண்டு வரவும், இந்து சமயத்திலிருந்து தீண்டாமை என்னும் பேரிழிவை அறவே அகற்றவும், இந்து சமயத் தலைவர்களைக் காங்கிரஸ் கட்சி பணிவோடு வேண்டிக் கொள்கிறது."*

மேலும் தீண்டாமை ஒழிப்பினை நாடு தன்னாட்சி பெறுதற்குரிய நிபந்தனைகளில் ஒன்றாக முன்வைத்தவர் காந்தியார் அல்லவோ? *"யங் இந்தியா"*வின் 1920, டிசம்பர் 21 இதழில் காந்தி எழுதுகிறார்:

*"அரசாங்கத்துக்கு எதிரான ஒத்துழையாமை வெற்றி பெற ஆளப்படுவோரிடையே ஒத்துழைப்பு அவசியத் தேவையாகும். தீண்டாமை என்னும் பாவம் ஒழிக்கப்படாவிட்டால், ஓராண்டு அல்ல, ஒரு நூற்றாண்டு ஆனாலும் தன்னாட்சி பெற இயலாது."*

மீண்டும் *"யங் இந்தியா"*வின் 1921, பிப்ரவரி 23 இதழில் அவர் எழுதுகிறார்:

*"நாடு, தன்னாட்சி பெறுவதற்குத் தேவையான நிபந்தனைகள் நம்பற்கரிய அளவுக்கு மிக எளியன என்பதுடன், அவற்றை விழைந்தேற்றுக் கொள்ளும் சூழல் இந்திய சமுதாயத்தில் நிலவுவதாகவும் எண்ணியதாலேயே, வரும் அக்டோபர் திங்களுக்குள் தன்னாட்சி*

(விடுதலை) பெற்றுவிட முடியுமென்று கடந்த செப்டம்பரில் கூறினேன். கடந்த ஐந்துமாத கால அனுபவம் எனது கருத்து மெய்யே என்பதை உறுதி செய்கிறது. முன்னெப்போதும் கண்டிராத அளவில் இந்நாடு, தற்போது விடுதலைக்குத் தயாராகியுள்ளதென்பதை உறுதியாக நம்புகிறேன்.''

''தன்னாட்சிக்குத் தேவையான நிபந்தனைகள் யாவையென் பதை இந்தக் கட்டத்தில் துல்லியமாக நினைவுறுத்திக் கொள்வது அவசியம். தலையாய, இன்றியமையா நிபந்தனை வன்முறை தவிர்ப்பைத் தொடர்ந்து கடைப்பிடித்தல்.''

''அடுத்த நிபந்தனை, சிற்றூர்கள் ஒவ்வொன்றிலும் காங்கிரஸ் கட்சிக் கிளைகளை நிறுவுதல்.''

''எல்லார்க்கும் பொதுவான சில கடமைகள். அவற்றுள் தலையாயது சுதேசி. ஒவ்வொரு வீட்டிலும் இராட்டை இருக்க வேண்டும்; ஒவ்வொரு ஊரிலும் தற்சார்புடைமை முழுமையாய் எய்துமாறு சமுதாய முறைமை திருத்தியமைக்கப்பட வேண்டும்.''

இத்திட்டங்களின் வெற்றிக்காகத் திலகர் தன்னாட்சி நிதிக்கு ஆடவர் பெண்டிர்ஒவ்வொருவரும் தம்மாலியன்ற அளவுக்கு ஒற்றைக் காசுதான் என்றாலும் கூட - கொடையளிக்க முன்வருவரேயானால், இயக்கத்தை நடத்துவதற்கு நிதிக் கவலை தடையாயிராது...''

''ஆனால், இந்து-முஸ்லீம் ஒற்றுமையை நிறுவத் தவறினாலோ, தீண்டாமையென்னும் பாம்பையடித்துக் கொல்லத் தவறினாலோ, நம்மால் இவை எதையும் சாதிக்க இயலாது.''

''இந்த எளிய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்வர, நேர்மையும், அக்கறையும், கடும் உழைப்பும், நாட்டுப்பற்றும் கொண்ட தொண்டர்கள் நம்மிடை உளரா? உளர் எனில் வரும் அக்டோபர் (1921) மாதத்திற்குள் இந்தியா விடுதலை பெற்றுத் தன்னாட்சியை நிறுவும்.''

தீண்டப்படாத மக்களுக்கு இதற்குமேல் வேறென்ன தேவை? இங்குத்தான் தீண்டப்படாத மக்களின் நண்பராகக் காந்தியார் தம்மைக் காட்டிக்கொள்ள முனைகிறார்; தாம் அவர்களின் ஊழியர் என்று பெருமிதம் கொள்கிறார்; தாமே அவர்களது பிரதிநிதி எனக்கூறி

அவ்வுரிமைக்காகப் போராடுகிறார். அப்படியிருக்கத் தீண்டப்படாத மக்கள் ஏன் காந்தியார் மீது நம்பிக்கையின்மை காட்ட வேண்டும்?

சொல்லளவில் பார்க்கும்போது, காந்தியார் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்பது போல் தோன்றலாம். ஆனால் செயலளவில் பார்த்தன்றோ உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்? காந்தியாரின் செயல்பாடுகளை ஆராய்ந்து பார்ப்போம்.

தீண்டப்படாத மக்களுக்காகக் காந்தியாரும், அவரது நண்பர்களும், காங்கிரஸ் கட்சியும் ஆற்றிய பணிகளைப் பூனா ஒப்பந்தத்திற்கு முந்தியவை, பூனா ஒப்பந்தத்திற்குப் பிந்தியவை என இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதியைப் பர்தோலி திட்டக்காலம் என்றும், இரண்டாம் பகுதியை ஹரிஜன சேவா சங்கக் காலமென்றும் குறிப்பிடலாம்.

## முதல் காலப்பகுதி

### 1

பர்தோலி திட்டக்காலப்பகுதியில் தொடங்குவோம். நிர்மாணத் திட்டம் அல்லது பர்தோலி திட்டம் என்று அழைக்கப்படும் இத்திட்டம், காங்கிரஸ்கட்சி தனது அரசியல் கோரிக்கைகளைப் பெறுவதற்காக மேற்கொள்ள முனைந்த புதிய செயல்முறையின் நேரடி விளைவேயெனலாம். 1920 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் நாகபுரி மாநாட்டு அறிக்கை கூறுவதாவது:

"இந்திய மக்கள் இன்றைய காலகட்டத்தில் சுயராஜ்யத்தை அடைந்தே தீருவோம் என்று உறுதி பூண்டிருப்பதாலும்,

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் கடைசியாக நடந்த சிறப்பு மாநாட்டுக்கு முன்னர் வரை இந்திய மக்கள் கடைப்பிடித்து வந்த போராட்ட முறைகள் யாவும், அவர்களது உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் அங்கீகாரம் பெற்றுத் தரத் தவறியதாலும், கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் சிறப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அகிம்சை, ஒத்துழையாமை குறித்த தீர்மானங்களை இந்த மாநாடு

மீண்டும் உறுதி செய்வதுடன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியோ, அதன் செயற்குழுவோ அழைப்பு விடுக்கும்போது இத் தீர்மானங்களை மிகத் தீவிரமாகச் செயல்படுத்தவும், இவ்வரசுடனான தனிப்பட்ட தொடர்புகள் எல்லாவற்றையும் துறக்கவும் வரிகொடாப் போராட்டத்தை நடத்தவும் கேட்டுக் கொள்வதுடன், அதற்காக இந்திய மக்களை இப்போதிருந்தே தயார்ப்படுத்தவும் உறுதிபூணுகிறது''.

1921இல் அகமதாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சி மாநாட்டில் பறைசாற்றப்பட்டதாவது:

''ஆயுதமேந்தியப் போராட்டத்திற்குச் சரியான மாற்று, சட்ட மறுப்புப் போராட்டமே என்பதில் காங்கிரஸ் கட்சி உறுதியான நம்பிக்கை கொள்வதால், கட்சித் தொண்டர்கள் அனைவரையும் ஏனையோரையும் தனித்தனியான சட்டமறுப்புப் போராட்டத்திற்கும், மக்கள் திரளாகப் பங்கு கொள்ளும் சட்டமறுப்பு இயக்கத்திற்கும் அணி திரட்டுமாறு அறிவுறுத்துகிறது.''

இந்த ஒத்துழையாமை, சட்டமறுப்புக் கொள்கைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கவும், இப்போராட்டங்களில் பங்குபெறப் பொதுமக்களைத் தயார்ப்படுத்தவும், 1922 பிப்ரவரியில் பர்தோலியில் கூடிய காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக்கூட்டத்தில் பின்வரும் செயல்திட்டம் உருவாக்கப்பட்டது:

''காங்கிரஸ் கட்சியின் அமைப்புகள் அனைத்தும் பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு கட்சியின் செயற்குழு அறிவுறுத்துகிறது''.

1. காங்கிரஸ் கட்சிக்கு ஒரு கோடி உறுப்பினர்களையாவது திரட்ட வேண்டும்.

2. இராட்டையைப் பரவலாகப் பிரபலப்படுத்தி கைநூற்பு, கைநெசவுவழிக் கதர் உற்பத்திக்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

3. தேசியப்பள்ளிகளைத் தொடங்க வேண்டும்.

4. தாழ்த்தப்பட்ட மக்களை மேம்பட்ட வாழ்வுக்கு இட்டு செல்லுமுகத்தான், அவர்களது சமுதாய, உள, தார்மீகப்பான்மை

களை மேம்படுத்தி அவர்களது குழந்தைகளை தேசியப் பள்ளிகளுக்கு அனுப்ப ஊக்குவிப்பதுடன், ஏனையோருக்குக் கிடைத்துவரும் அன்றாட வாழ்க்கை வசதிகளை அவர்களுக்கும் கிடைக்கப் பெறவும் முனையவேண்டும்.

குறிப்பு: தீண்டத்தகாவர்களுக்கெதிரானதான காழ்ப்புணர்வு மிகுந்து விளங்கும் பகுதிகளில் காங்கிரஸ் கட்சியின் செலவிலேயே புதிய பள்ளிகள் திறக்கவும், புதிய கிணறுகள் தோண்டிப் பராமரிக்கவும் மேற்கொண்டு, தீண்டாதோர் குழந்தைகளோடு ஏனைய குழந்தைகளும் இப்பள்ளிகளில் கலந்து படிக்குமாறு செய்யவும், புதிய கிணறுகளைப் பொதுக்கிணறுகளாய்ப் பயன்படுத்துவதை ஊக்கு விக்கவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5. குடிப்பழக்கத்திற்கு அடிமையான மக்கள் வாழும் பகுதிகளில் வீடுவீடாகச் சென்று, தீவிர மதுவிலக்குப் பிரசாரம் செய்தல் வேண்டும். மதுக்கடை மறியில்களைவிடக் குடிப்பழக்கத்திற்காளா னோரை இன்மொழி கூறித்திருத்தலில் மிகுந்த கவனம் செலுத்தல் வேண்டும்.

6. தனிப்பட்டோருக்கிடையேயான பூசல்களின் தீர்வுக்காக ஊரக, நகரப்பஞ்சாயத்துகள் நிறுவப்படவேண்டும். பஞ்சாயத்து முடிவுகளைப் பொதுமக்கள் அனைவரும் ஒருமித்து ஏற்றுக் கொள்ளும் வகையில் அம்முடிவுகளில் நியாயமும் உண்மையும் விளங்கவேண்டும்.

7. பல்வேறு வகுப்புகளுக்கும் இடையே ஒற்றுமையையும் ஒருவர்பால் ஒருவருக்கு நன்னம்பிக்கையையும் நிலைநாட்டுவதே ஒத்துழையாமை இயக்கத்தின் முக்கியக்குறிக்கோள் ஆதலால், அதை வலியுறுத்துவதற்கும் செயல்படுத்துவதற்கும் ஆங்காங்கே சமூகத் தொண்டு அமைப்புகளை நிறுவி உடல் நலக்குறைவுகள், விபத்துக் கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோர்க்கு எவ்வித வேறுபாடும் கருதாது உதவிபுரிய வேண்டும்.

8. காங்கிரஸ் கட்சித்தொண்டர்கள் ஆதரவாளர்கள் அனை வரையும், ஒருவர் விடாது அணுகி அவர்களது 1921 ஆம் ஆண்டின் வருவாயில் நூற்றிலொரு பங்கையாவது திலகர் சுயராஜ்ய நிதிக்கு நன்கொடையாய்த்திரட்டித் தொடர்ந்து நிதிபெருக உழைக்கவேண்டும்.

தேவைப்பட்டால் இத்தீர்மானம் திருத்தியமைக்கப்படுவதற்காக காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழுக்கூட்டத்தில் முன் வைக்கப்படும்.''

இச்செயல்திட்டம் 1922 பிப்ரவரி 20 ஆம் தேதி டில்லியில் கூடிய காங்கிரஸ் கட்சியின் பொதுக்குழுக்கூட்டத்தில் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. இது மிக விரிவான செயல்திட்டம்தான். இத்திட்டம் முழுமையும் என்னவாயிற்று என்பதைவிட இத்திட்டத்தின் ஒருபகுதி, அதாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கான திட்டங்கள் என்னவாயின என்பதை ஆய்வதிலேயே இப்போது கவனம் செலுத்த விழைகிறேன்.

செயல்திட்டத்திற்குப் பொதுக்குழுவின் ஒப்புதலையும் பெற்றபின்னர், 1922 ஜூன் மாதத்தில் லக்னோவில் கூடிய செயற்குழு பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியது:

''நாடெங்கும் வாழும் தீண்டப்படாதோர் எனப்படும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துதற்கு நடைமுறைசாத்தியமான நடவடிக்கைகளை உள்ளடக்கிய ஒரு திட்டத்தை உருவாக்கி அடுத்த செயற்குழுக்கூட்டத்தின் கலந்தாலோசனைக்குப் பரிந்துரைத்திடல் பொருட்டு, சிரத்தானந்த அடிகளார், திருமதி சரோஜினி நாயுடு, திருவாளர்கள் ஐ.கே.யாஜினிக், ஜி.பி.தேஷ்பாண்டே ஆகியோர் கொண்ட குழுவை நியமிக்கிறது. மேலும் இத்திட்டத்திற்காகத் தற்போதைக்கு 2 லட்ச ரூபாய் நிதி திரட்டவும் முடிவு செய்யப் படுகிறது.''

இத்தீர்மானம் 1922 ஜூன் மாதத்தில் லக்னோவில் கூடிய பொதுக்குழுக்கூட்டத்தில் வைக்கப்பட்டுத் திட்டத்திற்கான நிதித் தேவை ரூ 2 லட்சம் என்பதற்குப் பதிலாக ரூ. 5 லட்சம் திரட்டப்பட வேண்டுமென்ற திருத்தத்துடன் நிறைவேற்றப்பட்டது. இச்செயல் திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது. திட்டத்தினை வெற்றிகரமாய் நடத்தத் துணைக்குழு பரிந்துரைத்த நடைமுறைச்செயல்பாடுகள் யாவை? பரிந்துரைக்கப்பட்ட செயல்பாடுகள் எந்த அளவுக்குக் கடைப்பிடித்தொழுகப்பட்டன? இவை போன்ற வினாக்களுக்கு விடை தேடுவதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் காந்தியாரும் காங்கிரஸ் கட்சியும் ஆற்றிய தொண்டுகளைப் பற்றி மதிப்பிட முடியும்.

காங்கிரஸ் கட்சியின் செயற்குழு, துணைக்குழுவை

நியமிப்பதற்கு முன்னதாகவே, துணைக்குழு உறுப்பினர்களில் ஒருவரான சிரத்தானந்த அடிகள், பொறுப்பு விலக விழைவு தெரிவித்ததாகத் தெரிகிறது. துணைக்குழு நியமனம் செய்யப்பட்ட செயற்குழுக் கூட்டத்திலேயே நிறைவேற்றப்பட்ட மற்றொரு தீர்மானத்தை நோக்குவோம். அதுவருமாறு:

''சிரத்தானந்தர் 1922 ஆம் ஆண்டு ஜுன் 8 ஆம் தேதியிட்ட தமது கடிதத்தில், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் வகுக்கும் பணிகளுக்காக முன்பணம் கேட்டுள்ளதைக் கவனத்தில் கொண்டு, செயற்குழு திரு.கங்காதர ராவ் பி.தேஷ்பாண்டேயைத் துணைக் குழுவின் அமைப்பாளராக நியமிப்பதுடன், துணைக் குழுவை விரைவில் கூட்டி சிரத்தானந்தரின் கடிதத்தைப் பற்றி துணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு அவரைக் கேட்டுக் கொள்கிறது.''

மீண்டும் செயற்குழு 1922 ஜுலையில் பம்பாயில் கூடி இயற்றிய தீர்மானமாவது:

சிரத்தானந்தர், தமது பொறுப்பு விலகலைக் கருத்தில் கொண்டு, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மேம்பாட்டுத்துணைக்குழுவில் எஞ்சிய உறுப்பினர்கள் மட்டுமே பொறுப்பு ஏற்பார்கள் என்று செயற்குழு முடிவு செய்து, திரு.யாஜ்னிக்கை துணைக்குழுவின் அமைப்பாளராக நியமிக்கிறது.''

1923 பிப்ரவரியில் பம்பாயில் கூடிய அனைத்திந்திய காங்கிரஸ் கட்சிப் பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களில் ஒன்று வருமாறு:

''தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் குறித்த சிக்கல்கள் பரிசீலனைக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் செயற்குழுவின் பொறுப்பில் விடப்படுகின்றன.''

இப்பொறுப்பிற்குச் செயற்குழு எடுத்த நடவடிக்கை என்ன? அது 1923 ஏப்பரலில் பூனாவில் கூடி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது:

''காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளின் பயனாகத் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் நடத்தப்படும் முறைகளில் சிறிதளவு முன்னேற்றம்

எய்தப்பட்டுள்ளது என்பதையும், இந்தத் திசைவழியில் ஆற்றப் பட வேண்டிய பணிகள் இன்னும் ஏராளமாய் எதிர்நோக்கியுள்ளன என்பதையும் செயற்குழு கருத்தில் கொண்டு, இப்பணியை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு இந்து சமுதாயத்தினுடையதே என்பதை வலியுறுத்தி, இத்தீமையை இந்து சமுதாயத்திலிருந்து அறவே ஒழிப்பதற்காகக் கடுமையான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அனைத்திந்திய இந்து மகா சபையைக் கேட்டுக்கொள்வதெனத் தீர்மானிக்கிறது.''

தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்காகக் காந்தியாரும், காங்கிரஸ் கட்சியும் மேற்கொண்ட நிர்மாணத்திட்டம் இவ்வாறாக் முடிவுக்கு வந்தது. இத்தனைக்கும், அந்த பர்தோலித் திட்டத்தில் புரட்சிகரமன கூறுகள் ஏதுமில்லை. தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற பேச்சைத்தவிர, சாதிஒழிப்பு, கலப்புமணம், சமபந்தி விருந்து போன்ற கூறுகள் ஏதும் இடம் பெறவில்லை. தாழ்த்தப்பட்டோருக்காகத் தனிக் கிணறுகளும், தனிப் பள்ளிகளும் இருப்பது கூட ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. என்வே, இது சிறியதொரு துயர் துடைப்புத் திட்டம் மட்டுமேயெனலாம். எனினும் இத்தகைய தீங்கற்ற சிறு திட்டத்தைக் கூடக் காங்கிரஸ் கட்சியினரால் செயல்படுத்த இயலவில்லை.

இது, காங்கிரஸ் கட்சி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக் கெதிராகப் போர்க்கோலம் பூண்டு, சமுதாயத்தின் அனைத்துப்பகுதி மக்களின் ஆதரவையும் திரட்ட முனைந்து கொண்டிருந்த காலம் என்பதையும் நினைவில் கொள்ளவேண்டும். முஸ்லீம் மக்களுக்கு எத்தகைய பணிகளைக் காங்கிரஸ் கட்சி செய்ய முனைகிறதோ, அத்தகைய பணிகளைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் ஆற்றி உறுதுணையாய் நிற்போமென்று உறுதி தந்து அவர்களையும் அரவணைத்துக் கொண்டிருக்க வேண்டிய காலம் அது. தீண்டப்படாத மக்கள் பாலுள்ள காழ்ப்புணர்வுகளைக் களைந்து அவர்களின் மேம்பாட்டுக்குப் பாடுபடுமாறு இந்து சமுதாயத்தை வேண்டிக் கொள்வதற்கு இதைவிட வாய்ப்பான சூழல் கிடைப்பதரிது. இத்துணை உகந்ததொரு சூழல் வாய்க்கும்போது கூட, தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காகச் சிறியதொரு பணியைச் செய்யவும் காங்கிரஸ் கட்சியினர் ஊக்கம் பெற்றார்களில்லை. நாட்டு விடுதலை என்ற உயர்ந்ததொரு குறிக்கோளுக்காக மக்களனைவரையும் ஒன்று திரட்ட வேண்டிய வாய்ப்பான சூழலில் கூடத் தாழ்த்தப்பட்ட

மக்களுக்கெதிரான சமூகவிரோத உணர்வுகளை இந்துக்கள் கைவிட மாட்டார்களெனில், அவ்வுணர்வுகள் எவ்வளவு ஆழமாய் நிலை யூன்றி விட்டிருந்தன என்பதைப் புரிந்துகொள்ளலாம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தங்கள் செயல் திட்டத்தை காங்கிரஸ் கட்சி நிறைவேற்றத் தவறிவிட்ட வெட்கக்கேடான அவலத்தின் கீழ்மையை, எவ்வளவு வேண்டாவெறுப்பாக அத்திட்டம் புறக் கணித்தொதுக்கப்பட்டது என்பதை காட்டுகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களின் துயர்துடைப்புப் பணிகளை யார் பொறுப்பில் விட காங்கிரஸ் கட்சி முடிவுசெய்தது பார்த்தீர்களா? இப்பொறுப்புகளை ஏற்பதற்கு முற்றிலும் தகுதியற்றதோர் அமைப்பு இந்துமகாசபை. இந்துசமயத்தின் பழமை மரபுகள் அனைத்தை யும் கட்டிக்காக்கப்போராடுவதையே குறிக்கோளாய்க் கொண்ட சமய வெறியர் இயக்கம் அது. இந்துமகாசபை, ஒரு சமுதாயச் சீர்திருத்த இயக்கமன்று; இந்திய அரசியலில் இஸ்லாமியரின் செல்வாக்கினை எதிர்த்துப் போராடுவதையே முதன்மையான நோக்கமாகக் கொண்ட அரசியல் இயக்கம். தனது அரசியல் வலிமையைக் காத்துக் கொள்வதற் காகச் சமூகக் கட்டுக்கோப்பை நிலைநிறுத்த முனையுமுகத்தான் சாதிகளைப்பற்றியோ தீண்டாமை பற்றியோ பேசுவதைத் தவிர்த்து வரும் உத்தியை அவ்வியக்கம் பின்பற்றி வருகிறது. நண்டுக்கு நரியைக் காவல் வைப்பது போன்று, இத்தகையதோர் வெறியர் இயக்கத்தைத் தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டுப் பணிகளுக்காகக் காங்கிரஸ் கட்சி தேர்ந்தெடுத்தது எப்படியென்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதாவது, காங்கிரஸ் கட்சி வேண்டாவெறுப்பாக அறிவித்த கண்துடைப்புத் திட்டத்தை எப்படியாவது கைகழுவக் காத்துக் கொண்டிருந்தது என்பதையே இது காட்டுகிறது. காங்கிரஸ்கட்சி நிதி ஒதுக்கீடு ஏதுமின்றித் தம்பால் தள்ளிவிட முயன்ற இத்திட்டத்தை இந்துமகாசபையினர் ஏற்கமுன்வரவில்லை என்பது தெரிந்ததே. இவ்வாறாக, அத்திட்டம் தலைகுனிவுக்குரிய முறையில் முடி வெய்தியது, நிலைமை இப்படியிருக்க, தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக காங்கிரஸ் கட்சி போராடி வருகிறதென்று ஆயிரக்கணக்கான கட்சித்தொண்டர்கள் கூச்சமின்றிப் பீற்றி வருகின்றனர். காந்தியின் புகழை மேலைநாடுகளில் பரப்புவதையே தம் வாழ்வின் உயர்ந்த குறிக்கோளாய்க் கருதும் சார்லஸ் எப். ஆண்ரூஸ்* போன்ற காந்தியாரது அன்பர்களின் பொய்ப்பிரச்சாரத்தால் நூற்றுக்கணக்கான வெளிநாட்டவரும் இதனை மெய்யென்று நம்புகின்றனர்.

* ஆண்ரூஸ் ஒரு சமயம் சாதிமுறையை ஆதரித்தவராவார்.

பர்தோலி திட்டம் தோல்வியடைந்து கைவிடப்பட்டது என்பதை மட்டும் நாம் தெரிந்து கொண்டால் போதாது. சிரத்தானந்தர் துணைக்குழுவில் பணியாற்ற மறுத்துப் பொறுப்பு விலகல் கடிதம் கொடுத்தது ஏன் என்பதையும் ஆராய்வது அவசியம், அவர் பொறுப்பேற்க மறுத்ததற்குத் தக்க காரணம் இருக்க வேண்டும். அவர் மிகவும் கற்றுத்தேர்ந்த ஆரிய சமாஜ உறுப்பினர் என்பதையும், தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட வேண்டுமென்பதில் உள்ளார்ந்த நம்பிக்கை கொண்டவர் என்பதையும் நன்கறிவோம். எனவே, தீண்டாமை ஒழிப்பு பற்றிக் காங்கிரஸ் கட்சியினரின் உண்மையான மனப்பான்மையை அனைவரும் உணர்ந்து கொள்ள அவருக்கும் அனைத்திந்திய காங்கிரஸ் கட்சிப் பொதுச்செயலாளருக்கும் இடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்து மிகவும் உதவு மென்பதால் அவற்றை முழுமையாக இங்கே வெளியிடுவதில் எனக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை.

## சிரத்தானந்தரின் கடிதம்

பெறுநர்,
பொதுச் செயலாளர்,
அனைத்திந்திய காங்கிரஸ் கமிட்டி,
(தங்கல்) டில்லி

தீண்டாமை குறித்து அனைத்திந்திய காங்கிரஸ் கட்சியின் செயற்குழுத் தீர்மானங்களைக் கொண்ட தங்களுடைய 331,332 எண்ணிட்ட கடிதங்கள் கிடைக்கப்பெற்றேன் என்பதை நன்றியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். செயற்குழுத் தீர்மானத்தின் வாசகம், பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக எதிரொலிக்கவில்லை என்பதை மிக வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

உண்மை நிலையை விளக்க விரும்புகிறேன். 1922 மே மாதம் 23ஆம் தேதி காங்கிரஸ் கட்சியின் அப்போதைய பொதுச் செயலாளர் வித்தல்பாய் படேல் அவர்களுக்கு நான் எழுதிய கடிதம், நாட்டின் முக்கிய நாளேடுகளில் எல்லாம் வெளியிடப் பட்டிருந்தது; அதனைக் கீழே தருகிறேன்:

அன்பார்ந்த படேல் அவர்களுக்கு,

ஒருகாலத்தில் காந்தியடிகள் தீண்டாமை ஒழிப்பினைப் காங்கிரஸ் கட்சியின் முன்னணித் திட்டங்களில் ஒன்றாக வைத்திருந் தார் (''யங் இந்தியா''வின் 1921 மே 2ஆம் தேதி இதழை நோக்குக). ஆனால், தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டுப்பணி இப்போது மூலைமுடுக்குக்கு ஒதுக்கப்பட்டுவிட்டதனை உணர்கிறேன். நமது செயலாக்கம் மிக்க தொண்டர்கள் பலரது கவனம் காதித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளது; அதற்கெனப் பெருந்தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது. தேசியக்கல்வி மேம்பாட்டுக்கென ஒரு சீரிய துணைக்குழு நியமிக்கப் பட்டு அதற்கான நிதிதிரட்டுதற்கெனப் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தீண்டாமை ஒழிப்பு பின்னிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. இதற்கென அகமதாபாத், அகமதுநகர், சென்னை ஆகிய மூன்று நகரங்களுக்கு மட்டும் சிறு தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. நமது நாட்டில் வாழும் ஆறு கோடி தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலோரை அரசு எந்திரம் நமக்கெதிராகத் திருப்பமுனையும் போது காதித் திட்டம் கூட முழுமையாக வெற்றியடைய இயலாதென்றே கருதுகிறேன். வறுமை யில் வாடும் தாழ்த்தப்பட்டவர்களான இவ்வுடன்பிறப்புகள் காதிக்குப் பதிலாக மலிவான அன்னியத்துணிகளையே வாங்க முற்படுவர் என்பதை எப்படி செயற்குழு உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்கத் தவறிவிட்டனர்? எனவே வரும் ஜுன் மாதம் 7ஆம் தேதி லக்னோவில் கூடவிருக்கும் காங்கிரஸ் கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானத்தை முன்மொழியக் கருதுகிறேன் :

''தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டுப்பணிகளுக்காக, காங்கிரஸ் கட்சிப் பொதுக்குழு, மூன்று உறுப்பினர்கள் கொண்ட துணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும். குழுவின் பிரச்சாரப் பணிகளுக்காக ஐந்து லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதுடன், அந்நிதியின் பயன் குறித்து அனைத்துப் பொறுப்புகளும் துணைக்குழுவிடமே விடப்பட வேண்டும்.''

எனது தீர்மானத்தின் வாசகத்தைச் செயற்குழு பின் வருமாறு மாற்றியமைத்தது:

''தாழ்த்தப்பட்டோர் எனப்படும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துதற்கான நடைமுறைச் செயல் திட்டங்களை வகுப்பதற்காக சிரத்தானந்தர், திருமதி சரோஜினி நாயுடு, திருவாளர்கள் ஜி.பி. தேஷ் பாண்டே, ஐ.கே. யாஜ்னிக் ஆகிய நால்வர் கொண்ட துணைக்குழுவை, அனைத்திந்திய காங்கிரஸ்

கட்சியின் பொதுக்குழு நியமிக்கிறது. துணைக்குழு உருவாக்கும் திட்டம் அடுத்த செயற்குழுக்கூட்டத்தில் வைக்கப்படவேண்டு மென்றும், திட்டச் செயல்பாட்டுக்காக இப்போதைக்கு இரண்டு லட்சம் ரூபாய் நிதிதிரட்ட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்படுகிறது.''

செயற்குழுவின் திருத்தத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளுமாறு படேல் என்னிடம் கோரினார்; நான் மறுத்துவிட்டேன். பொதுக்குழு அடுத்த கூட்டத்திலேயே நிதி தேவையை இரண்டு லட்சம் ரூபாயி லிருந்து, ஐந்து லட்சம் ரூபாயாகத் திருத்தி, இதில் ஒரு லட்சம் கட்சியின் நிதியிலிருந்து கொடுக்கப்படவேண்டுமென்றும், எஞ்சிய தொகை நிதிதிரட்டல் வாயிலாக அளிக்கப்பட வேண்டுமென்றும் முடிவு செய்தது.

இம்முடிவுக்கு மாறாகத் திரு. இராஜகோபாலாச்சாரியார் செயற்குழுவின் சார்பாக மாற்று ஏற்பாடு ஒன்றைத் தெரிவித்தார். கட்சி நிதியிலிருந்து உடனடியாக ரூபாய் இரண்டு லட்சம் தருவதற்குப் பதிலாக, திட்டத்திற்குச்செயற்குழு இசைவு தரும்போது, அத்தருணத்தில் இத்திட்டத்திற்காக எவ்வளவு தொகை ஒதுக்க இயலுமோ அவ்வளவு தரலாம் என்பதே அவரது மாற்றுக்கருத்து. அவர் கூறிய சொற்கள் அப்படியே நினைவுக்கு வரவில்லையென்றாலும், அவரது கூற்றின் சாரம் இதுதான் என்பது உறுதி.

இச்சமயத்தில் அவையின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் எதிர்ப்பும் ஆரவாரமும் கட்சியின் நிதியிருப்பு எவ்வளவு என்பதை உடனடியாக அறிவிக்கவேண்டுமென்ற கோரிக்கையும் எழுந்தது. உடனே கட்சித்தலைவர் என்னைத் தனியாக அழைத்துக் கட்சியின் நிதியிருப்பு அப்போது குறைவாக இருப்பதால், அத்தகவல், கூட்டத்தில் வெளியிடுதல் இயக்கத்தையே பாதிக்கும் என்றும், கூட்டத்தில் காவல்துறை உளவாளிகள் உட்பட வெளியார் பலர் இருப்பதால் எனது திருத்தத்தை வற்புறுத்த வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். நானும் அதற்கிசைந்து, எனது தீர்மானத்தை வழிமொழிந்தோர் உள்ளிட்ட ஆதரவாளர் பலரின் எதிர்ப்பையும் மீறி, எனது திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டேன். ஆனால் மறுநாள் நாளேடுகளில் இராஜகோபாலச்சாரியாரின் திருத்த மின்றி வெளியிடப்பட்டிருந்த தீர்மான வாசகம் எனக்குப் பெரிதும் வியப்பூட்டியது.

பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது துணைக்குழுவிற்கு அமைப்பாளர் நியமிக்கப்படவேண்டுமெனச் சில

உறுப்பினர்கள் கூறப், பலர் எனது பெயரையே முன்மொழிந்தனர். அப்போது பொதுச்செயலாளர் திரு விட்டல்பாய் படேல் எழுந்து, ''துணைக்குழு உறுப்பினர் பட்டியலில் சுவாமிஜியின் பெயரே முதலில் இருப்பதால், அவரே துணைக்குழுவின் அமைப்பாளர் என்பது தெளிவு; இதற்கெனத் தனித் தீர்மானம் தேவையில்லை''என்றார்.

உடனே, நாட்டின் பல்வேறு மாகாணங்களிலிருந்தும் வந்திருந்த உறுப்பினர்கள் பலர் என்னிடம் வந்து தங்கள் மாகாணங்களில் நிலவும் தீண்டாமைக் கொடுமைகளைப் பற்றித்தகவல்கள் தந்து, அங்கு வந்து நேரடியாகப் பார்வையிடவேண்டுமென்று என்னை வேண்டினர். அலகாபத்திலிருந்து வெளியாகும்'' தி இன்டிபெண்டன்ட்'' என்ற இதழுக்கு ரூ 25000 நிதியுதவி செய்யச் செயற்குழு முடிவு செய் திருப்பதை யும், டெல்லியிலிருந்து வரும் ''காங்கிரஸ்'' எனும் உருது இதழுக்கு ரூ10,000/- நிதியுதவிகோரித் திருவாளர்கள் ஹக்கீம் அஜ்மால்கான், டாக்டர் அன்சாரி ஆகியோர் விடுத்த விண்ணப்பமும் செயற்குழுவின் பரிசீலனையில் இருப்பதையும் அறிந்து, கட்சியின் நிதிநிலை அப்படியொன்றும் தாழ்வான நிலையில் இருக்காதென்று கருதியதாலும், நேரடிப் பார்வையிடுதல் வாயிலாகத் தகவல் திரட்டுதலே திட்டத்தை நன்கு உருவாக்கத் தேவையான அடிப்படை களைத் தரும் என்பதாலும், தீண்டாமை ஒழிப்புத் துணைக்குழுவின் தொடக்கச் செயல்பாடுகளுக்கு முன்பணமாக ரூ. 10,000 நிதி யொதுக்கித் தருமாறு கட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதினேன்.

இவ்வளவு நிகழ்ச்சிகளுக்குப்பிறகு, செயற்குழுவின் தீர்மான மாகத் தங்கள் 331 எண்ணிட்ட கடிதத்தில் குறிப்பிட்டிருந்த வாசகமாவது:

''தாழ்த்தப்பட்ட மக்கள் நலப்பணிகளுக்கான திட்டம் வகுப் பதற்காக முன்பணம் கோரி சிரத்தானந்தர் 1922 ஜுன் 8 ஆம் தேதி எழுதிய கடிதத்தின் பேரில், துணைக்குழுவின் அமைப்பாளராகக் கங்காதர ராவ் பி.தேஷ்பாண்டே அவர்களைச் செயற்குழு நியமிப் பதுடன், குழுவை விரைவில் கூட்டுமாறு அவரைக் கேட்டுக் கொள்கிறது; சுவாமிஜியின் கடிதம் துணைக்குழுவின் கூட்டத்தில் வைக்கப்படலாம்.''

விளக்கப்படவியலாத கூறு ஒன்றும் இதில் அடங்கியிருப்பது சுட்டப்படவேண்டும். எனது முதல் கடிதம் கிடைக்கப்பெற்றதாய் பதில் கிடைத்தபின் 1922 ஜுன் 3ஆம் தேதி உடனடியாக மீண்டும் ஹரித்துவாரிலிருந்து எழுதினேன்.

" அன்பார்ந்த படேல் அவர்களுக்கு,

நான், நாளை மறுநாள் ஹரித்துவாரிலிருந்து புறப்பட்டு, ஜுன் 6 ஆம் தேதி லக்னோ வந்தடைவேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் குறித்த எனது ஆழ்ந்த அக்கறையை நீங்கள் அறிவீர்கள். இந்த நிர்மாணத் திட்டத்தில் பஞ்சாப்பில் கூடக் குறிப்பிடத்தக்க கவனம் ஏதும் செலுத்தப்படவில்லை என்பதை அறிந்து வருந்துகிறேன். உத்திரப்பிரதேசத்தில் இது மிகக்கடுமையான பணியாக இருக்கு மென்பதில் ஐயமில்லை. இதில் வேறொரு கடுமையான இடர்ப் பாட்டையும் எதிர்கொள்கிறோம்.

பர்தோலி திட்டத்தின் நான்காவது இனத்தின் கீழ் தரப்பட்டுள்ள குறிப்பில், தீண்டாமைக் கொடுமை மிகுதியாய் நிலவும் பகுதிகளில், அவ்வெளிய மக்களுக்கெனத் தனிக்கிணறுகளும், தனிப்பள்ளிகளும் காங்கிரஸ் கட்சியின் செலவில் நிறுவி நடத்தப்படவேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சிக்கு வலிமை குன்றிய பகுதிகளிலும், காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான உணர்வு கொண்டவர்களாய் விளங்கும் பகுதிகளிலும் இத்திட்டம் செயலற்றுநிற்கும்; பொதுக்கிணறுகளில் நீர் எடுக்கத் தாழ்த்தப்பட்ட மக்களையும் அனுமதிக்குமாறு அவர்கள் ஊர்ப்பொது மக்களிடையே கோருவார்கள் என நம்புதற்கில்லை. பீஜனூர் மாவட்டத்திலுள்ள பொதுக்கிணறுகளில் தாழ்த்தப்பட்ட மக்களும் தண்ணீர் எடுப்பதற்கு எவ்விதத் தடையுமில்லையென அறிகிறேன். ஆனால், பர்தோலித் தீர்மானத்தின் விளைவாகப் புதிய பகுதிகள் பலவற்றில் தாழ்த்தப் பட்டோருக்கெதிரான காழ்ப்புணர்வுகள் தூண்டப்பட்டு வருகின்றன. அண்மைச் சுற்றுப்பயணத்தில் நான் அம்பாலா படைக்குடியிருப்பு, லூதியானா, பாட்டியாலா, லாகூர், அமிர்தசரஸ், ஜாண்டியாலா ஆகிய இடங்களைப் பார்வையிட்டபோது அங்கு தாழ்த்தப்பட்டோர் துயர்துடைப்புப் பணிகள் முற்றிலும் புறக்கணிப்பட்டிருப்பதைக் கண்டேன். டில்லியிலும் அதைச் சூழ்ந்த பகுதிகளிலும் எனது தலைமையில் செயல்படும் 'தலித்தோதார் சபை' மட்டுமே இத்தகைய பணிகளில் ஈடுபட்டு வருகிறது; காங்கிரஸ் கட்சியினர் எதையும் செய்வதில்லை என்பதும் சுட்டப்படவேண்டும். பர்தோலித் திட்டத்தின் 4ஆம் பகுதியைத் தக்கவகையில் சீர்திருத்தியமைத்தாலன்றிக், காங்கிரஸ் கட்சியின் திட்டங்களிலேயே தலையாய தான இப்பணி மிகவும் பாதிக்கப்படுமென்று கருதுகிறேன்.

எனவே, காங்கிரஸ் கட்சித் தலைவரின் பார்வைக்கு

வைப்பதற்கும், அவர் அனுமதித்தால் கட்சியின் அடுத்த பொதுக் குழுக் கூட்டத்தில் முன்மொழிவதற்குமான தீர்மான வாசகம் ஒன்றினைக் கீழே தந்துள்ளேன். பர்தோலி தீர்மானத்தின் நான்காவது குறிப்பின் கீழ்காணப்படும் குறிப்புக்கு பதிலாகக் கீழ்வரும் குறிப்பினைப் புகுத்துவதாகத் தீர்மானம் இயற்றலாம் :

தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கைகளில் (அ) பொது இடங்களில் ஏனைய பொதுமக்கள் அமரும் கம்பளங்களில் தாழ்த்தப்பட்டோரும் அமர அனுமதித்தல் (ஆ) பொதுக்கிணறுகளிலிருந்து தாழ்த்தப்பட்டோரும் நீர் எடுக்க உரிமை தரல், (இ) தாழ்த்தப்பட்டோரின் பிள்ளைகளைத் தேசியப் பள்ளிகள், கல்லூரிகளில் சேர்ந்து படிக்க அனுமதிப்பதுடன், அங்கு மேல்சாதிப்பிள்ளைகளோடு வேறுபாடின்றிப் பழக அனுமதித்தல் ஆகியவற்றை உடனடியாக ஏற்றுச் செயல்படுத்தல் வேண்டும். இத்தகையதோர் தீர்மானத்தின் தேவையை நன்குணர்ந்து, அதனைப் பொதுக்குழு உறுப்பினர்களும் உணர வேண்டுமென விழைகிறேன். பல இடங்களில் தீண்டாமைக் கொடுமைகளுக்கெதிராகத் தாழ்த்தப்பட்ட மக்கள் வெளிப்படையாக போர்க்கொடி எழுப்பிவரும் இச்சூழலில், இக்கோரிக்கைகளை நாம் ஏற்க மறுத்தால், ஆட்சியாளரின் பிரித்தாளும் சூழ்ச்சிகளுக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் எளிதில் பலியாகி விடுவர்.'' 1922 ஜூன் 7 ஆம் தேதிய லக்னோ மாநாட்டில் எனது மூலத்தீர்மானங்கள் பொதுக் குழுவில் ஏற்று நிறைவேற்றப்பட்டபின், எனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தவாறு பர்தோலித் திட்டத்தின் நான்காம் பகுதியின் அடிக்குறிப்புக்கான திருத்தத்தினை அவை முன் வைக்குமாறு படேலை வேண்டினேன். எனது கடிதத்தைத் துணைக்குழுவுக்கு செயற்குழு அனுப்பவுள்ளது என்றும், பொதுக் குழுவில் அதை வைக்குமாறு வற்புறுத்தவேண்டாமென்றும் அவர் கூறியதை நான் ஏற்றுக் கொண்டேன். எனது முன்மொழிவு தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டுத் துணைக்குழுவிற்கு அனுப்பப்படுவதாகக் கூறும் தீர்மானம் எதுவும் எனக்கு இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

டில்லியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தீண்டாமைக் கொடுமைகள் மிகக்கடுமையாக நிலவுவதால், இதில் உடனடியான கவனம் செலுத்தப்படவேண்டுமென்பது எனது கருத்து. ஆனால் தீண்டாமையை வேரோடு களைவதற்கான காங்கிரஸ் கட்சியின் செயல்திட்டங்களைப்பற்றி ஆராய்ந்து முடிவு செய்வதைவிட முக்கியமான வேறுபல அரசியல் சிக்கல்களில் செயற்குழுவின் கவனம் மூழ்கியிருப்பதால் துணைக்குழு தனது பணியைத் தொடங்கவே இயலாத சூழலில் உள்ளது. இத்தகைய சூழலில் துணைக்குழு உறுப்

பினர் பொறுப்பிலிருந்து எந்த பயனுள்ள பணியையும் ஆற்றவியலாத வனாயிருப்பதால், அப்பொறுப்பிலிருந்து விலகிக்கொள்கிறேன் என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

டில்லி — தங்கள் உண்மையுள்ள,
ஜனவரி 30 — **சிரத்தானந்த சன்னியாசி**.

## செயலாளரின் பதில்

அன்பார்ந்த சுவாமிஜி அவர்களுக்கு,

1922 ஜூன் 30 ஆம் தேதிய தங்கள் கடிதம் கிடைத்தது. இம்மாதம் (ஜூலை) 18இல் கூடிய செயற்குழு ஒரு தீர்மானத்தின் வாயிலாக, தங்களுக்கு உண்மை விளக்கம் அளித்துத் தங்களது பொறுப்பு விலகலை மறுபரிசீலனை செய்து விலக்கிக் கொள்ளவேண்டுமாறு என்னைப் பணித்துள்ளது.

நான் சிறையிலிருந்து விடுதலையாவதற்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகள் பற்றிப் பிறர் வாயிலாகத்தான் அறியமுடியும் என்பதை அறிவீர்கள். ஆனால், 1922 ஜூன் 10ஆம் தேதி நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தேஷ்பாண்டேயைக் குழுவின் அமைப்பாளராக நியமிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது நான் இருந்தேன். துணைக்குழு வின் உறுப்பினர் எவரும் அதன் அமைப்பாளராகச் செயல்பட்டு வருவதாக எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. துணைக்குழுவுக்கு அமைப்பாளர் நியமிக்கப்பட்டாலன்றிச் செலவுத்தொகையேதும் அனுமதிக்கவியலாது என்பதற்காகச் சடங்குத் தீர்மானமாகவே தேஷ்பாண்டேயின் நியமனம் நிகழ்ந்து, தொடக்கச் செலவுத்தொகை யாக அமைப்பாளரிடம் ரூ500 வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. எனவே, ரூ.10,000/- க்கு பதிலாக ரூ500 எனத் தீர்மானிக்கப்பட்டது தற்செயல் நிகழ்வேயன்றிச் செயற்குழுவுக்கு விருப்பமின்மையாலன்று என்பதைத் தாங்கள் உணரவேண்டுகிறேன். எனவே, தீர்மானம் குறிப்பிட்ட வடிவில் நிறைவேற்றப்பட்டதற்கு நான் விளக்கியுள்ள காரணங்களே சரியானவையென்றும், தீண்டாமை நீக்கப்பணிகளுக்காக ரூ.10,000/- கூட ஒதுக்கச் செயற்குழுவிற்கு மனமில்லை என்று தாங்கள் கருதக்கூடாதென்றும் கேட்டுக்கொள்கிறேன். தாங்கள் துணைக்குழு பொறுப்பேற்றுக் கொண்டுள்ள பணிகள் எத்துணை முக்கியமானவை ன்பதையுணரும் செயற்குழு, தங்களது மேலான அறிவுரைகளை

ஒருபோதும் புறக்கணிக்காது என்றும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தங்கள் கடிதம் முந்தைய செயற்குழுவில் வைக்கப்பட்டபோது ரூ.500/- முன் பணமாக ஒதுக்கீடு செய்யாமல் விடுபட்டுப்போயிற்றென்பதைச் சுட்டிக்காட்டித் தற்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதென்பதையும் தங்களுக்குத் தெரிவிக்கச் செயற்குழு என்னைப் பணித்துள்ளது. தீண்டாமை ஒழிப்புப் பணியில் தங்களுக்குள்ள நீண்ட அனுபவமும், ஆழ்ந்த அறிவும் துணைக் குழுவின் பணிக்களுக்குக்கிடைக்காமல் போகுமெனில், இப்பணிகளுக்கு எத்துணை பேரிழப்பு என்பதைக் கருத்தில் கொண்டும், பொதுநலனை முன்நிறுத்தியும், துணைக்குழுவின் உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகுவதான தங்கள் முடிவினை மறுஆய்வு செய்து, பொறுப்பு விலகலைத் தாங்கள் திரும்பப் பெற்றுக் கொள்வதான நற்செய்தியை எனது அலகாபாத் முகவரிக்கு தந்தி வாயிலாகத் தெரிவிக்கவேண்டுகிறேன். தங்கள் துணைக்குழு கூடி முடிவு செய்யும் தீர்மானங்கள் அனைத்துக்கும் செயற்குழு உரிய மதிப்பளித்துப் பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதறிவீர்கள்.

தனியான கிணறுகள், பள்ளிகள் பற்றிய செயற்குழுவின் தீர்மானம் பற்றியும் குறிப்பிட்டுள்ளீர்கள். இது குறித்து முதலில் துணைக்குழு கூடி ஆலோசித்து முடிவு செய்யும் பரிந்துரைகளைச் செயற்குழுவிற்கு அனுப்ப, அவற்றினைச் செயற்குழு பரிசீலித்து ஏற்றுக் கொள்வதே தக்க வழியாகுமெனக் கருதுகிறேன்.

அலகாபாத்திலிருந்து வரும் ''தி இண்டிபென்டெண்ட்'', டெல்லியிலிருந்து வரும் ''காங்கிரஸ்'' ஆகிய இதழ்களுக்கான மானியங்கள் குறித்த தங்கள் தவறான கருத்தை அகற்றுவதும் எனது பொறுப்பாகும். ''தி இண்டிபென்டெண்ட்'' இதழைப் பொறுத்த மட்டில் உத்திரப்பிரதேச மாநிலக்குழுவிற்கு ஏற்கனவே அனுமதிக்கப் பட்ட நிதியிலிருந்து ரூ. 25,000/- கடனாகக் கொடுக்கலாம் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கு மேல் வேறெதும் நிகழவில்லை என்பதை யும், ''காங்கிரஸ்'' இதழ் சார்பான விண்ணப்பம் முற்றிலும் மறுக்கப்பட்டு விட்டது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பம்பாய்,                                   தங்கள் உண்மையுள்ள,

ஜூலை 23, 1922                                   **மோதிலால் நேரு**

பொதுச்செயலாளர்

## சுவாமிஜியின் மறுபதில்

அன்பார்ந்த பண்டித மோதிலால் அவர்களுக்கு ,

தாங்கள் பம்பாயிலிருந்து எழுதிய 1922 ஜூலை 23ஆம் தேதிய கடிதம் கிடைத்தது; எனது பொறுப்பு விலகலைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டியிருந்தீர்கள். எனது முந்தைய கடிதத்தில் நான் சுட்டிக் காட்டியிருந்த உண்மைகள் சில முற்றிலுமாகப் புறக்கணித்து ஒதுக்கப் பட்டிருப்பதால் எனது பொறுப்பு விலகலைத் திரும்பப் பெற்றுக் கொள்ளவியலாதிருக்கிறேன்.

1. துணைக்குழுவின் பணிகளுக்காகக் குறைந்தது 1 லட்சம் ரூபாயாவது கட்சியின் இருப்பு நிதியிலிருந்து வழங்கப்பட வேண்டுமென நான் முதலில் முன்மொழிந்தேன் என்பதும், இதற்குமாறாக, திரு.இராசகோபாலாச்சாரியார் துணைக்குழு, தனது திட்டங்களை உருவாக்கிச் செயற்குழுவின் முன் வைக்கும் சமயத்தில், தீண்டாமையொழிப்புக்காக அப்போது எவ்வளவு தொகை அளிக்க இயலுமோ அதையளிப்பதாக உறுதிமொழிதந்தால்போதுமெனத் திருத்தம் கொண்டு வந்தார் என்பதும், கட்சித்தலைவர் என்னைத் தனியே அழைத்துக்கட்சியின் அப்போதைய நிதிநிலைமை குறித்து விளக்கியதன் பேரில் அவரது திருத்தத்தை ஒப்புக்கொண்டேன் என்பதும் உண்மையா அல்லவா என்பதைத் திரு.இராசகோபாலாச்சாரியாரிடம் விசாரித்து அறிந்துகொள்ள வேண்டுகிறேன். இவை உண்மையெனில் தீர்மானத்தோடு திருத்தம் ஏன் இடம் பெறவில்லை என்பதற்கான விளக்கம் தேவை.

2. கட்சியின் பொதுக்குழுவின் உறுப்பினர்கள் துணைக்குழுவின் அமைப்பாளராக எனது பெயரையே முன்மொழிந்தார்கள் என்பதும் அப்போது விட்டல்பாய் ஜே. படேல், ''பட்டியலில் சுவாமிஜியின் பெயரே முதலில் இடம்பெற்றுள்ளதால், அவரே துணைக்குழுவின் அமைப்பாளர் என்பது தெளிவு; அதற்கெனத் தனித் தீர்மானம் தேவையில்லை'' எனக்கூறினார் என்பதும் மெய்யா எனப் படேல் அவர்களிடம் விசாரித்தீர்களா? நான் டாக்டர் அன்சாரியிடம் இதைப்பற்றி விசாரித்தபோது, அவர் நானே அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பதாக 1922 ஜூன் 17 இல் எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். திரு. அன்சாரி உங்களுடனேயே இருக்கிறார். இதன் உண்மையை அவரிடமே விசாரித்தறிந்து கொள்ளுங்கள். நடந்த நிகழ்ச்சிகளைப் படேல் அவர்கள் மறந்திருக்கமாட்டார் என்றே நம்புகிறேன்.

3. தாழ்த்தப்பட்டோர் மத்தியில் இங்கு எனது உடனடியான அவசரப்பணிகளை எக்காரணத்திற்காகவும் நான் ஒத்திப்போடுதற்கியலாது. எனவே, எனது பொறுப்புவிலகலை அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ள ஆவன செய்யவேண்டுகிறேன். இதனால், விடுதலையுணர்வுடன் தீண்டாமை ஒழிப்புக்கு எனது திட்டத்திற்கேற்பப் பணியாற்ற இயலும். கடந்த ஆண்டு ஜுலை மாதத்திலும் எனது நிலை இதுவே. அமிர்தசரஸ், மியான்வாலி சிறைகளில் நான் பெற்ற அனுபவமும், திரட்டிய தகவல்களும், ''பண்டை ஆரியர்'' வாழ்நெறியின் பிரம்மச்சரிய நெறியைக் கடைபிடித்தலின் வாயிலாகவும் தீண்டாமை என்னும் பாவத்தை நாட்டிலிருந்து அகற்றுவதன் வாயிலாகவும் தவிரப் பிறிதெந்த வழிகளாலும் காங்கிரஸ் கட்சியோ அதன் வழிவரும், துணைவரும் நாட்டுப்பற்று இயக்கங்களோ நாட்டுக்கு சுயராஜ்யம் பெற்றுத்தரல் இயலாது'' என்ற எனது நம்பிக்கைக்கு உறுதி சேர்க்கின்றன. தேசியத்தன்னிறைவும், உயிர்த்துடிப்புள்ளவாழ்வும் சுயராஜ்யமின்றி அடையவியலாதவை என்பதால், துறவியாகிய நான் எனது எஞ்சிய வாழ்க்கையைப் பிரம்மச்சரியத்தையும் மெய்யான நாட்டு ஒருமைப்பாட்டையும் பரப்புவதில் கழிக்க எண்ணுகிறேன்.

டில்லி,
ஜுலை 23 1922

தீண்டப்படாதோர் மேம்பாட்டில் காங்கிரஸ் கட்சியினரின் ஈடுபாடு எவ்வளவு என்பதை இவை தெளிவுற விளக்குகின்றன.

## 2

காங்கிரஸ் கட்சியினர் எந்த அளவுக்கு தாழ்த்தப்பட்டோருக்காகத் தொண்டு செய்ய ஈடுபாடு கொண்டிருந்தனர் என்பதைக் கண்டோம்; போகட்டும். தாழ்த்தப்பட்ட மக்களிலேயே தம் இனத்தின் மேம்பாட்டுக்காகப் பாடுபட்டு உழைத்துக்கொண்டிருந்தவர்களுக்கு காந்தியாரும் காங்கிரஸ் கட்சியினரும் எந்த அளவுக்கு உதவினார்கள் என்பதை இனிக் காண்போம். இது, தீண்டப்படாதோர் தமது முன்னேற்றத்திற்காகப் போராட்டப்பாதையில் இறங்க முனைந்துவிட்ட காலம். தம்முடைய குடியுரிமைகள், சமூக உரிமைகளுக்காக அவர்களும் இந்துக்களுக்கெதிராக ஒத்துழையாமைப் போராட்டத்தில் இறங்கியிருந்தனர். இந்தக்கால கட்டத்தில் தான் பம்பாய் மாகாணத்தி

லுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், மஹத்தில், பொது ஏரியிலிருந்து நீர் எடுப்பதற்கான தங்கள் உரிமைகளை நிலை நாட்டிக் கொள்ளவும், நாசிக்கில் ஓர் இந்துக் கோயிலில் நுழைவதற்கான தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளவும் அறப்போரில் இறங்கியிருந்தனர். உயர் சாதி இந்துக்களுக்கெதிராகத் தாழ்த்தப்பட்ட மக்கள் கடைப்பிடித்த அறப்போராட்ட இயக்கத்தினைக் காந்தியார் எவ்வாறு நோக்கினார்? சற்றுமென்மையான சொற்களில் உரைப்பதென்றால் இதைப்பற்றிய காந்தியாரின் மனப்பான்மை மிகவும் விசித்திரமானதென்று கூறலாம்.

முதலாவதாக, உயர்சாதி இந்துக்களுக்கெதிராகத் தாழ்த்தப்பட்ட மக்கள் கையாண்ட அறப்போராட்டத்திற்குக் கண்டனம் தெரிவித்தார் காந்தியார். அதனை ஆதரிக்கமுடியாதென மறுத்தார். இந்தப் போராட்டத்தில் காரணகாரிய நியாயங்கள் தீண்டப்படாதோர் பக்கமேயிருந்தன. உயர்சாதி இந்துக்கள் ஆங்கில அரசுக்கெதிராகத் தங்கள் விடுதலைப் போராட்டத்தில் நியாயமாகப் பயன்படுத்தலாமென்று காந்தியாரே கற்றுத்தந்த அறப்பேராட்டம், உயர்சாதி இந்துக்களிடமிருந்து தமது உரிமைகளைப் பெறுவதற்காகத் தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்தும் போது மட்டும் எப்படி நியாயமற்றதாக ஆகிவிடுமென்று அவர்கள் வாதிட்டனர். இவ்வாதத்திலுள்ள நியாயங்கள் மிகச் சரியானவை என்றாலும் அவற்றை ஏற்றுக்கொள்ளக் காந்தியார் தயாராகவில்லை. தாழ்த்தப்பட்டோரின் நியாயவாதங்களுக்கெதிராக காந்தியார் தமது வாதங்களை முன்வைத்தார். தீண்டாமை என்பது இந்துக்களின் பாவம்; எனவே அதற்குக் கழுவாயாக மேல்சாதி இந்துக்கள்தான் அறப்போரில் ஈடுபடவேண்டுமேயன்றிப் பாவப்பட்டவர்களான தீண்டப்படாதோர்கள் போராட்டத்தில் இறங்கக்கூடாதென வாதிட்டார். இது அரிஸ்டாட்டில் தர்க்கவாதமன்று; மாறாக, இது காந்தீயக்குதர்க்க வாதமேயென்பதைச் சிந்தனை வளம்படைத்தோர் உணராமலிரார். வேறுசொல்லில் கூறுவதெனில், இது அப்பட்டமான பித்தலாட்டமே. காந்தியக் குதர்க்க வாதத்தின் அறிவீனத்தை உணர்த்துவற்காக, குற்றம் செய்தவர்கள் மட்டுமே கழுவாய் தேட அறப்போரில் ஈடுபட வேண்டுமென்றால், இந்திய அடிமைத்தனமென்னும் குற்றத்திற்காகக் கழுவாயாக ஆங்கில ஆட்சியாளர்களன்றோ அறப்போரில் ஈடுபட வேண்டும்; மாறாக நீங்கள் ஏன் அறப்போரில் இறங்குகிறீர்களௌன அவர்கள் வாதிட்டு காந்தியாரின் குதர்க்கவாதத்தினை உடைத்தெறிந்தனர்; காந்தியாரின் இந்த மனப்பான்மை, ஒன்று, வாதப் பிழையினால் இருக்கவேண்டும்; அல்லது நாணயக் குறைவு காரணமாக இருக்க வேண்டும் என்பதையும் உணர்த்தினர். ஆனால் இந்த நியாய வாதங்களினாலெல்லாம், தாழ்த்தப்பட்டோரினால்

தங்களின் போராட்டத்திற் கெதிரான காந்தியாரின் பகைமை யுணர்வை மாற்றிவிட முடியவில்லை.

மேலும் நாசிக், மஹத் ஆகிய இடங்களில் நடைபெற்ற தாழ்த்தப்பட்ட மக்களின் அறப்போரை எதிர்த்த அதேவேளை, வைக்கம் மக்களின் அறப்போரை ஆதரித்த காந்தியாரின் மனப் பான்மையில் முரண்பாடுகளைத் தெளிவாகக் காணமுடிகிறது. வைக்கம் மக்களின் கோயில் நுழைவுப்போராட்டத்துக்கு ஆதரவு நல்கி ஆசிவழங்கிய காந்தியார், மஹத், நாசிக் மக்களின் அறப்போரை எதிர்த்தது ஏன்? இவ்விரண்டு போராட்டங்களுக்கும் ஏதாவது வேறுபாடு உண்டா? ஆம், ஒருவேறுபாடு உண்டு. வைக்கம் போராட்டம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவில் நடந்த போராட்டம்; ஆனால் மற்றவையிரண்டும் தாழ்த்தப்பட்ட மக்கள் தாங்களே முனைந்து நடத்திய போராட்டங்கள். இக்காரணத்தினால்தான், மஹத், நாசிக் மக்களின் போராட்டங்களுக்கு காந்தியார் எதிர்ப்பு தெரிவித்தாரா? இக்கேள்விகளுக்கு காந்தியார் விடையேதும் சொல்ல வில்லையாதலால், வாசகர்களே பதிலை ஊகித்துக்கொள்ளலாம். அதாவது, தம்மை மேய்ப்பராக ஏற்றுக் கொள்ளாத ஆடுகளுக்குப் பாதுகாப்பு தரக் காந்தியார் முன்வரமாட்டார். தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தர எப்போது காந்தியார் மறுத்துவிட்டாரோ, அப்போதே இப்போராட்டங்களில் ஈடுபட்டிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவ காங்கிரஸ் கட்சியினர் முன்வரமாட்டார்கள்; அது அவர்களால் இயலாதென்பதை தெளிவாக்கி விட்டது. காந்தியாரின் இத்தகைய போக்கினால் காங்கிரஸ் கட்சியின் மேல்சாதி இந்து உறுப்பினர்களும் தயக்கமின்றிப் பழைமைவாதி இந்துக்களோடு சேர்ந்துகொண்டு - உண்மையில் இருசாராருக்கும் அதிக - வேறு பாடில்லை. தாழ்த்தப்பட்டோரின் போராட்டங்களை ஒடுக்குவதில் ஈடுபட்டனர். காந்தியாரின் நியாயமற்ற விதண்டாவாதப் போக்கினால் விளைந்த தீங்கு, இத்துடன் முடிந்துவிடவில்லை. மேலும் அவர் இந்துக்கள் அல்லாத மற்றவர்களும் கூட உயர்சாதி இந்துக்களுக் கெதிரான போராட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உதவக் கூடாதெனத் தடைவிதித்தார். முகமதியர்கள், கிறித்தவர்கள், பார்சிகள், யூதர்கள் போன்ற பிறமதத்தினர் உதவக் கூடாதெனத் தடைவிதித்தது மட்டுமன்றி, இந்து சமயத்தை எதிர்த்துப் போராடி அதிலிருந்து கிளைத்த சீக்கிய மதத்தினர்கூடத் தாழ்த்தப்பட்டோர் போராட்டங்களுக்கு உதவக்கூடாதெனத் தடைவிதித்தார். இந்தப் போராட்டத்தினைத் தாழ்த்தப்பட்ட மக்களின் கண்ணோட்டத் திலிருந்து பார்க்க மறுத்தார் காந்தி. மேல்சாதியினரின் பாவம் என்று அவர் குறிப்பிட்டது தாழ்த்தப்பட்ட மக்களின் அடிமைத் தனமாகச் சுமத்தப்பட்டுள்ளது என்பதைக் காண மறுத்தார் அவர்.

கழுவாய் தேடுவது, பாவம் செய்தோரின் கடமையென்றால், அடிமைத் தளைகளை உடைத்தெறிந்து விடுதலைபெறல் பாவப்பட்டவரின் உரிமையென்பது, மானிட சுதந்திரத்தில் நம்பிக்கைகொண்டோர் அனைவரும் சாதிசமய வேறுபாடுகளைக் கடந்து அவர்களது போராட்டத்திற்கு உதவக் கடமைப்பட்டவர்கள் என்பதும் தெளிவு. காந்தியார் கிலாபத் இயக்கம் நடத்தியது இத்தகைய கண்ணோட்டத்தில் தானே? கிலாபத் வேண்டுமென்றும் துருக்கியின் பிரதேச ஒருமைப்பாடு காக்கப்படவேண்டுமென்றும் முகமதியர்கள் விரும்பினர். துருக்கியரின் பிரதேச ஒருமைப்பாடு காக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை முற்றிலும் காரியசாத்தியமற்றது. ஏனென்றால் இதன் விளைவாக அரபுமக்கள் துருக்கியரின் மேலாதிக்கத்திற்கு அடங்கி வாழநேரிடும். அப்படியிருந்தும் முகமதியர்கள் வற்புறுத்தினர். இருப்பினும் இந்த நியாமற்ற கோரிக்கைக்கு ஆதரவாகக் காங்கிரஸ் கட்சியையும் இந்துக்களில் பெரும்பாலோரையும் திரட்டினார் காந்தி. துருக்கியின் பிரதேச ஒருமைப்பாட்டுக்காகப் போராடுதல் முகமதியர்களின் சமயக் கடமையென்றால், அவர்கள் தம் கடமையை நிறைவேற்ற ஆதரவளிப்பது இந்துக்களின் கடமையென வாதிட்டவர் காந்தியார்★.

ஆனால் இத்தகைய வாதத்தின் பயனைத் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மறுத்தார் காந்தி. இந்துக்களுக்குப் பிற சமயத்தவர் உதவலாம்; பிற சமயத்தவர்களுக்கு இந்துக்கள் உதவலாம். ஆனால் தீண்டப்படாதோர்களுக்கு மட்டும் எவரும் உதவக்கூடாதென்பதில் உறுதியாக நின்றார் காந்தியார். காந்தியாரின் நண்பர்கள் அவர் வாதத்தின் கடுமையைச் சற்றுமட்டுப்படுத்த முனைந்து, தாழ்த்தப்பட்டோரின் துயரங்களை, சமயச்சார்புடையவை குடியுரிமை சார்ந்தவை என இரு வகைகளாகப் பிரித்துக் குடியுரிமைப் போராட்டங்களில் தாழ்த்தப் பட்டவர்களுக்குப் பிற மதத்தினர் கூட உதவலாம் எனத்தெரிவித்த ஆலோசனையை ஏற்க மறுத்தார் காந்தி. அவருடைய தடை எல்லா விதப் போராட்டங்களுக்கும் பொருந்துமென்று கூறித் தாழ்த்தப் பட்ட மக்களின் எந்தப் போராட்டத்திற்கும் எவரது ஆதரவும் தரக்

★ 1920ல் கல்கத்தாவில் நடைபெற்ற விசேட காங்கிரஸ் மாநாட்டில் இதுசம்பந்தமாக ஒரு தீர்மானம் நிறைவேறியுள்ளது. அதன் ஒரு பகுதி வருமாறு:

''கிலாபத் பிரச்சினையில் இந்திய அரசும் ஆங்கில அரசும் இந்திய முகமதியர்களுக்குத் தாங்கள் செய்யவேண்டிய கடமையைக் குறிப்பாகச் செய்யத்தவறவிட்டனர்; பிரதமரும், அளித்த உறுதிமொழியை திட்டமிட்டே மீறிவிட்டார்; இத்தகைய சூழ்நிலையில், இந்திய முகமதிய சகோதரன் தன் சமயத்துக்குஏற்பட்டுள்ள இடரைக் களைவதற்கு மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு இந்தியாவிலுள்ள முகமதியரால்லாத ஒவ்வொருவரும் சட்டரீதியான எல்லா வழிகளிலும் உதவ முன்வருவது அவர்களது கடமையாகும்.''

கூடாதென்று தடையாணை பிறப்பித்தார், இந்தத் தாழ்த்தப்பட்டோர் களின் தோழர்! இவரது தடையின் விளைவால் அவ்வெளிய மக்களுக்கு வேண்டிய தேவைப்பண்டங்கள் கூட முழுமையாக மறுக்கப்பட்டு அதன் விளைவாய் அவர்கள் தமது போராட்டத்தின் ஆதார வலிமைகளை இழக்க நேரிட்டது.

தாழ்த்தப்பட்டவர்களின் மேம்பாட்டு முயற்சிகளை எவ்வாறு காங்கிரஸ் கட்சியினர் எத்தகைய மனச்சான்றின் உறுத்தலுமின்றிக் கைவிட்டனர் என்பதை விளக்கினேன். அதை அவர்கள் எப்போது ஏற்றுக்கொண்டிருந்தார்கள்; இப்போது கைவிடுவதற்கு? அடுத்து, தீண்டப்படாதோர் தமது நியாயமான உரிமைகளுக்காக நடத்திய அறப்போராட்டங்களுக்கு காந்தியார் உதவத்தவறியதற்கும், ஏனையோ ரிடமிருந்து அவர்களுக்கு உதவி கிடைப்பதையும் தடுப்பதற்கும், எப்படித் தமது குதர்க்கவாதங்களைப் பயன்படுத்தினார் என விளக்கினேன். அடுத்து, இந்தக்காலகட்டத்தில் நிகழ்ந்த மூன்றாவது நிகழ்ச்சியைப் பற்றியும் விளக்க முற்படுகிறேன். காலத்தால் கடைசி நிகழ்ச்சியெனினும் முக்கியத்துவத்தால் முதன்மையான நிகழ்ச்சி யாகவும், காந்தியார் தம்மைத் தாழ்த்தப்பட்ட மக்களின் தோழன் என்று கூறிக் கொள்வது மெய்தானா என்பதை ஐயத்திற்கு இடமின்றிச் சோதிக்க உதவும் உரைகல்லாகவும் விளங்குவது அந்நிகழ்ச்சி.

அதாவது, இந்தியாவுக்குப் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை வரைவதற்கான வட்டமேசை மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்குச் சட்ட வழிப்பாதுகாப்புகள் உறுதிசெய்யப்பட வேண்டு மென்று அவர்களது பிரதிநிதிகள் எழுப்பிய கோரிக்கைகளின் பால் காந்தியார் எத்தகைய மனப்பான்மை காட்டினார் என்பதே அது. அக்கோரிக்கைகளில் மிகவும் முதன்மையானது சட்டமன்றங்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் தக்க அளவில் இடம்பெற வழிவகுத்தல் குறித்ததாகும். இதன் பொருட்டு தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கையின் வாசகம் பின்வருமாறு:-

## சட்டமன்றங்களில் போதிய அளவில் பிரதிநிதித்துவம் பெறச் செய்தல்:

தாழ்த்தப்பட்ட மக்களில் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டு மெனில் சட்டமன்றங்களிலும் ஆட்சியிலும் தங்கள் செல்வாக்கை உறுதிசெய்யத்தக்க அளவில் அவர்கள் அரசியல் அதிகாரம் பெற வேண்டும். இதன் பொருட்டுத், தேர்தல் சட்டங்களின் வாயிலாக அவர்களுக்குக் கீழ்க்காணும் உரிமைகள் உறுதி செய்யப்படவேண்டும்:

(1) மாநில, மத்தியச் சட்டமன்றங்களில் போதிய எண்ணிக்கையில் பிரதிநிதித்துவம் பெற உரிமை

(2) தம் இனத்தைச் சேர்ந்தவர்களையே தமது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கும் உரிமை; இதனை

(அ) வயதுவந்தோர் வாக்குரிமை மூலமாகவும்

(ஆ) முதல் பத்தாண்டுகளுக்குத் தனித்தொகுதி வாயிலாகவும், பின்னர் தனிஇடங்கள் ஒதுக்கப்பட்ட கூட்டுத்தொகுதி வாயிலாகவும் உறுதி செய்தல், கூட்டுத் தொகுதிகள் என்பன தாழ்த்தப்பட்ட மக்களின் மீது வலிந்து திணிக்கப்படாமல் வயது வந்தோர் வாக்குரிமை மூலமே முடிவு செய்யப்பட வேண்டுமென்ற அடிப்படையில் இவ்வொதுக்கீடுகள் அமைய வேண்டும்.''

தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் இக்கோரிக்கை விளைவித்த புயல் மிக வலிமையுடன் எழுந்தது; இந்திய அரசியல், இந்து சமுதாயம் ஆகியவற்றின் அடித்தளத்தயே ஆட்டி அசைக்கும் வேகத்துடன் வீசியது.

தாழ்த்தப்பட்ட மக்களின் இந்தக் கோரிக்கை சைமன் கமிஷன் பரிந்துரைகளின் அடிப்படையில் அமைந்ததாகும். தாழ்த்தப்பட்ட மக்களின் இன்னல்களைக் குறித்து விரிவான நேராய்வுக்குப் பின்னர், புதிய அரசியலமைப்புச்சட்டத்தில் அவர்களுக்கான இடம் குறித்து சைமன் கமிஷனின் அறிக்கை கூறுவதாவது:

''தாழ்த்தப்பட்ட இன மக்களுக்காகத் தனியான தொகுதிகளை உருவாக்கினாலன்றி, வாக்குரிமையை மேலும் கணிசமாகப் பரவலாக்கினாலும், பொதுத்தொகுதிகளிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்களென்று சற்றும் நம்புதற்கில்லை. பொதுத்தொகுதிகளிலிருந்து போட்டியிட்டே தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதி தகுந்த எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கப்படும் காலமும் வருமென்று நம்பிக்கை வைப்போம்.... ஆனால், நியமனம் வாயிலாகத் தான் சட்டமன்றங்களில் அவர்கள் இடம்பெற முடியும் என்ற நிலை இருக்குமெனில் அவர்களது அரசியல் பயிற்சிக்கு வாய்ப்பு ஏதும் கிடைப்பதில்லை. இப்போதைய, வரம்புக்குள்ளடக்கிய வாக்காளர் முறையின் மூலமாகக்கூடத் தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் அளவுக்குப் பெரிய எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட வகுப்பு வாக்காளர்கள் இருக்கக் காண்கிறோம்.

''ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் எனும் தகுதிச்சூழலில் தாழ்த்தப்பட்டோரும் இடம் பெறுதற்கான தொடக்க

முயற்சியாவது இப்போது எடுக்கப்படவேண்டும். இதனை எப்படிச் செய்வது? எமது கமிஷன் முன் கருத்தளிக்க வந்த தாழ்த்தப்பட்ட வகுப்பின் மன்றங்களில் பெரும்பாலனவை, மக்கள் தொகை அடிப் படையில் தனிவாக்காளர் தொகுதிகள் அவர்களுக்காக ஒதுக்கப்பட வேண்டுமென்று முறையிட்டனர். தாழ்த்தப்பட்டோரின் நம்பிக்கையைப்பெற்ற பிரதிநிதிகள் போதிய எண்ணிக்கையில் சட்டமன்றங்களில் இடம்பெறுதற்கு இதுவே மிகவும் பாதுகாப்பான வழி. ஆயினும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மேல்சாதி இந்துக்களுமிடையேயான வேற்றுமையுணர்வுகளை இது என்றென்றும் தொடரச்செய்து, இறுதியில் ஏனைய சமூகத்தோடு அவர்கள் அரசியல் ரீதியில் ஒன்றி விடுவதற்கான வாய்ப்புகளையும் போக்கிவிடுமென்பதால், இக்கருத்து எமக்கு உடன்பாடாக இருக்கவில்லை.

''எனவே, எட்டு மாநிலங்களிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க் காகத் தொகுதிகள் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் ஒதுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கின்றோம்.

''இத்திட்டத்தின் பயனாக ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள், பொதுமக்களின் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகச் சட்டமன்றங்களில் இடம் பெற முடியும்......

''எத்தனை தொகுதிகள் ஒரு மாநிலத்தில் தாழ்த்தப்பட் டோர்க்காக ஒதுக்கப்படவேண்டுமென்பது, அம்மாநிலத்தில் வாழும் தாழ்த்தப்பட்டோரின் மக்கள் தொகை விகிதத்திற்கேற்ப அமைந்திருக்க வேண்டும். எமது முன்மொழிவு என்னவெனில், ஒருமாநிலத்தில் எத்தனைவிழுக்காடு தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிறார்களோ அதில் முக்கால்பங்கு (உ.ம். 40% தாழ்த்தப்பட்டோர் வாழும் மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளில் 30% அவர்களுக்கு ஒதுக்கப்படவேண்டும்).★''

தங்கள் பிரதிநிதி தங்களால் தேர்ந்தெடுக்கப்படும் தங்கள் இனமக்களாக இருக்க வேண்டுமென்பது இயல்பானதே; ஆகவே இக்கோரிக்கையைச் சைமன் கமிஷன் ஏற்றுக்கொண்டதிலும் புதுமை ஏதுமில்லை.

1919 ஆம் ஆண்டின் சட்டங்களில் இடம்பெற்ற மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்த அறிக்கை உருவாகும் கட்டத்தில், அவர்கள்

★ சைமன் கமிஷன் அறிக்கை, தொகுதி II, பக்கங்கள் 65-66

தாழ்த்தப்பட்டோரின் இடர்ப்பாடுகளை நன்குணர்ந்து கொண்டு, புதிய திட்டத்தில் அவர்கள் சட்டமன்றங்களில் உரிய இடங்களைப் பெறத் தம்மாலியன்றன செய்வதாய் உறுதியளித்தனர். ஆனால் தேர்தல் முறையையும் வாக்குரிமையின் அடிப்படையையும் நிறுவுவதற்காக, சவுத்பரோ பிரபுவின் தலைமையில் நிர்ணயிக்கப் பட்ட குழு, இக்கருத்துரையை முற்றுமாய்ப் புறக்கணித்து விட்டது. இந்த மனப்பான்மையை ஏற்காத அரசு பின்வருமாறு தனது கருத்தை வெளியிட்டது.

''இந்திய மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கினரான தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் மிண்டோ-மார்லி குழுக்களில் இடம்பெறவில்லை. அவர்களைப் பற்றிக் குழுவின் அறிக்கையில் இரண்டு இடங்களில் தான் பேசப்படுகிறது. எனினும், அவர்களுக்குத் தகுந்த வாக்காளர் தொகுதிகள் இல்லாத நிலையில், நியமன வாயிலாகச் சில பிரதிநிதிகள் இடம் பெறலாமெனக் குறிப்பிடுவதோடு அறிக்கை நின்றுவிடுகிறது. அவர்களது நிலைமை, தங்கள் நலனைத் தாமே பேணிக்கொள்ளும் திறன் ஆகியன பற்றி இக்குழு சிந்தித்துப் பார்த்த தற்கான அடையாளமேதும் அறிக்கையில் காணப்படவில்லை. ஏறத்தாழ எண்ணூறு உறுப்பினர் கொண்டு அமையவிருக்கும் இந்தியச் சட்டமன்றத்தில், இந்திய மக்கள் தொகையில் ஐந்தில் ஒருபங்கு மக்களான தாழ்த்தப்பட்டோருக்குப் பிரதிநிதிகளாக ஏழு நியமன உறுப்பினர்கள் போதுமென்ற பரிந்துரைக்கான காரண விளக்கமும் அறிக்கையில் இடம்பெறவில்லை; உறுப்பினர்களில் ஆறில் ஒரு பங்கான எண்ணிக்கையில் இடம் பெறும் அரசு அலுவலர்கள் தாழ்த்தப் பட்ட மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்படுவார்கள் எனச் சொல்லப்படுகிறது; ஆனால், சீர்திருத்தங்கள் பற்றிய அறிக்கை யின் நோக்கம் இவ்வேற்பாட்டினால் நிறைவேறாதென்றே நாம் கருதுகிறோம். தாழ்த்தப்பட்டோர் தம் நலன்களைத் தாமே காத்துக் கொள்ளப் பயில வேண்டுமெனச் சீர்திருத்த அறிக்கை கூறுகிறது. ஆனால், எழுபது மேல்சாதி இந்துக்களுக்கு ஒருவர் என்ற வீதத்தில் தாழ்த்தப்பட்டோர் நியமன உறுப்பினராய் இடம்பெறுவதன் மூலமாக இதனைச் சாதிக்கமுடியும் என்று கருதுவதுதான் விந்தையிலும் விந்தை. அறிக்கையின் கோட்பாடுகள் நடைமுறையில் செயல் வடிவம் பெறவேண்டுமெனில், தாழ்த்தப்பட்டோருக்கு மேலும் தாராளமான வாய்ப்புகள் தந்தாக வேண்டும்.''

குழு பரிந்துரைத்ததைப் போன்று இருமடங்கு இடங்கள் தாழ்த்தப்பட்டோர்க்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று, அரசு பரிந்துரைத்ததையொட்டி, ஏழுக்கு மாறாகப் பதினான்கு இடங்கள்

ஒதுக்கப்பட்டன. 1919ஆம் ஆண்டுச் சட்டப்படி நிறுவப்பட்ட அரசியலமைப்புத் திட்டத்தை, அச்சட்டத்தைத் திருத்தாமல், அதிலுள்ள (சில) விதிகளை மட்டும் மாற்றி விரிவாக்குதல் எவ்வாறு என்பதைக் காணுதற்காக, உள்துறைஅமைச்சர், மீண்டும் 1923 இல் முடிமான் குழு என்றழைக்கப்படும் குழு ஒன்றினை நியமித்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சட்ட மன்றங்களில் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை மிகுதியாக்க வேண்டிய தேவையைச் சுட்டிக்காட்டிய இந்தக் குழு ஒரு பரிந்துரையை வழங்கியது. இப்பரிந்துரையை ஏற்ற உள்துறை அமைச்சர் தாழ்த்தப் பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கையை இருமடங்காக உயர்த்தினார்.

இவ்வாறாக, சட்டமன்றப்பிரதிநிதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தனி ஒதுக்கீடு என்பது, கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டதோடு நின்று விடாமல் அரசியலமைப்புச்சட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு நிலைபெற்று விட்ட கோட்பாடாகவும் மாறியது. இக்கோட்பாடு பரவலாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மாவட்ட ஆட்சிக்கழகங்கள், பள்ளிநிர்வாக மன்றங்கள், நகராண்மைக் கழகங்கள் ஆகியவற்றிலும் தனி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன.

1919 ஆம் ஆண்டிலேயே சட்டவாயிலாக ஏற்கப்பட்ட உரிமையாய் நிலைபெற்றுத், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் பங்கேற்பின் வாயிலாக உறுதிசெய்யப்பட்ட உரிமையை இல்லையென எவராலும் மறுக்கவியலாது. அதிலும் இவ்வுரிமையைத் தீவிரமாய் எதிர்க்கக் காங்கிரஸ்கட்சி முன்வருமென அஞ்சுதற்குக் காரணமேது மில்லாதிருந்தது. எனவே, இந்நிலையில் 1929இல் தன்னாட்சி அரசிய லமைப்பை உருவாக்கும் பொறுப்பை மேற்கொண்ட நேரு குழு, இவ்வுரிமையை மறுக்கும் பான்மையில் பரிந்துரைத்ததனாலேயே காங்கிரஸ் கட்சி அதனை ஏற்கவேண்டுமென்ற கட்டாயம் ஏதுமில்லை. கட்சியின் 1920ஆம் ஆண்டு மாநாட்டில் சீக்கிய மக்களின் அச்சங் களையும் நோக்கில், சிறுபான்மையோர்க்கு சட்டமன்ற இடங்கள் ஒதுக்கு வதில் சிறுபான்மை இனத்தவர் அனைவருக்கும் வேறுபாடற்ற நீதிகிடைக்குமென்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தவிர வேறெதற்கும் காங்கிரஸ் கட்சி கட்டுப்பட்டதன்று.*

---

★ அத்தீர்மானத்தின் வாசகம் வருமாறு:

**சீக்கியர்கள்**

'' இந்தியாவின் வருங்காலக் கொள்கையில் தங்களது சமூகத்தின் நிலை குறித்து சீக்கியர்களிடையே தவறான கருத்து நிலவுவதைக் கருத்தில் கொண்டு, இந்த காங்கிரஸ் அவர்களுக்குக் கீழ்க்கண்டவாறு உறுதி கூறுகிறது; பஞ்சாபுக்கு வெளியே இதர மாகாணங் களிலுள்ள முகமதியர்கள் மற்றும் ஏனைய சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்டிருப்பது போன்ற அதே பாதுகாப்பை சுதந்திர இந்தியாவின் எந்தத் திட்டத்திலும் சீக்கியர்கள் பெறுவார்கள்.

எனவே, தாழ்த்தப்பட்ட மக்கள் தமது கோரிக்கைகள் எவ்வித சாராரின் எதிர்ப்புமின்றி ஒருசார ஏற்கப்படுமென்று எதிர்பார்த்தது இயல்பே.

முதலாம் வட்டமேசை மாநாட்டில் நல்லிணக்க முறையிலேயே நிகழ்வுகள் அமைந்திருந்தன. சிறுபான்மையோர் நிலை குறித்துக் கருத்தொற்றுமை உருவாகவில்லையென்றாலும், வட்டமேசை மாநாட்டுக்கு வந்திருந்த அனைத்துத் தரப்புப் பிரதிநிதிகளும் தாழ்த்தப்பட்டோர்க்குத் தனி ஒதுக்கீடு பெறும் உரிமையை ஒப்புக் கொண்டார்கள். சிறுபான்மையோர் துணைக்குழுவின் முடிவுகள் மாநாட்டுக்கு அறிக்கையாக முன்வைக்கப்பட்டன. அவ்வறிக்கையின் சில முக்கிய பகுதிகளாவன:

''துணைக்குழு II (மாகாண அரசியலமைப்புத்திட்டம்), புதிய அரசியலமைப்புத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படவேண்டுமெனில் மாகாண ஆட்சிக்குழுக்களில் முக்கியமான சிறுபான்மையினத்தவர்களுக்கு உரிய பங்களிப்பது தேவையென்று கூறும் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படுவதுடன், கூட்டாட்சிக்குழுவில் முகமதியர்களுக்கும் தகுந்த பங்கு தேவையென்பதும், இதே காரணத்திற்காக ஒப்புக் கொள்ளப்படுகிறது. மாநில, மைய அரசுகளில் ஏனைய சிறுபான்மையினருக்கும் தகுந்த பங்குவேண்டுமென்றும், இக்கோரிக்கை ஏற்கப் படவியலாத நிலையிருப்பின், ஒவ்வொரு அமைச்சரவையிலும் சிறுபான்மையோர் நலன்களைப் பாதுகாக்கும் பொறுப்புடைய அமைச்சர் ஒருவர் இடம்பெறவேண்டுமெனச் சிறுபான்மையோர் பிரதிநிதிகள் தனித்தனியாகவும், கூட்டாகவும் கோரிக்கையை முன்வைத்தனர். (டாக்டர் அம்பேத்கர், சர்தார் உஜ்ஜல்சிங் ஆகியோர், ஆறாம் வரியில் முகமதியர் என்பதற்குப் பதில் 'முகமதியர்களும் பிறமுக்கிய சிறுபான்மையினத்தவரும்' என்று திருத்தக் கோரினார்கள்).

கூட்டுப்பொறுப்பு வாய்ந்த அமைச்சரவைகள் அத்தகைய ஏற்பாட்டின் கீழ்ச் செயல்படுவதிலுள்ள இடர்ப்பாடுகள் அவர்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்டன.''

''துணைக்குழுவில் நடைபெற்ற விவாதங்கள், முன்மொழியப் பட்டுள்ள திட்டத்திலுள்ள குறைகளையும் தடைகளையும் பிரதிநிதி

களுக்கு நன்குணர்த்தின. இது குறித்தபொதுஉடன்பாடு ஏதும் எட்டப்படவில்லையெனினும், தனி ஒதுக்கீட்டின் தேவை முன்னிலும் தெற்றென விளங்கலாயிற்று.''

''வருங்காலத்தில் ஏதாவது ஒருகட்டத்தில் சம்பந்தப்பட்ட சமூகங்களின் எதிர்ப்புக்கு இலக்காகக் கூடிய எவ்விதத் தேர்தல் கோட்பாட்டையும், பிரிட்டிஷ் அரசு அந்தச் சமூகங்களின் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கவியலாது என்பதும் தெளிவுறுத்தப் பட்டது. ஆகவே பரவலான உடன்பாடு ஏதும் எட்டப்படாத நிலையில், தனிவாக்காளர் தொகுதிகளின் ஒதுக்கீட்டு அடிப்படையில் தேர்தல் முறையை நிறுவதில் குறைகளும் இடர்ப்பாடுகளும் இருந்த போதிலும், அத்தகைய ஒதுக்கீட்டு முறையைத் தொடர்ந்து பின்பற்றுதல் அவசியம் என்பது தெளிவாகிறது. இதிலிருந்து ஒதுக்கீடுகள் எந்த விகிதத்தில் செய்யப்படவேண்டுமென்ற வினா எழுகிறது. எனவே, இச்சூழ்நிலையில், தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கைகள் தகுந்த அளவில் கவனிக்கப்படுதல் அவசியமாகிறது.

''ஆகவே, துணைக்குழுவின் முன்னர் வைக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்துக் கருத்தொற்றுமை உருவாகுதல் உகந்தது என்னும் தமது கருத்தை மாநாடு பதியவேண்டுமென்று துணைக் குழு பரிந்துரைக்கிறது. அதனையொட்டிப் பொதுவான உடன் பாட்டினை அடையும் நோக்கில் பல்வேறு தரப்பினரின் பிரதி நிதிகள் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டுமென்றும் வலியுறுத்துவதுடன், அடுத்த கட்டப்பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் பிரதிநிதிகளின் தகவலுக்காக அறிக்கையாகத் தரவேண்டுமென்ற வேண்டுகோளும் விடப்படவேண்டும்.''

முதலாவது வட்டமேசை மாநாட்டை காங்கிரஸ் கட்சி புறக்கணித்திருந்தது. ஆகவே, அம்மாநாட்டில் பங்குபெறவில்லை. இரண்டாவது வட்டமேசை மாநாட்டுக்கு காந்தியார் வந்து கலந்து கொண்டார். வந்தவர், அம்மாநாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்கோரிக்கைகள் குறித்து எவ்விதமான மனப்பான்மையைக் காட்டினார் என்பதை இனி நோக்குவோம்.

இரண்டாம் வட்டமேசை மாநாட்டு நிகழ்ச்சிகளிலும், பேச்சு

வார்த்தைகளிலும் கலந்து கொள்ளவந்த காந்தியார்* இந்தியாவுக்கு முழுமையான விடுதலை (பூரண சுயராஜ்யம்) தரக்கூடிய அரசியலமைப்புத் திட்டம் ஒன்று இம்மாநாட்டின் விளைவாக உருவாதலிலேயே அக்கறை செலுத்துவார் என்றே அனைவரும் எதிர்பார்த்தோம்; வெவ்வேறு வகைச் சிறுபான்மையினங்களுக்கு எத்தனை இடங்கள் ஒதுக்கப்படவேண்டுமென்று சிறுவிவரங்களில் மிகுந்த அக்கறை செலுத்துவார் என எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நடந்த நிகழ்ச்சிகள் இந்நம்பிக்கைகளைப் பொய்ப்பித்துவிட்டன. முழுவிடுதலைக்கு அடித்தளம் அமைக்கும் அரசியலமைப்புத் திட்டத்தை இந்தியாவுக்காகப் பெற்றுத்திரும்புதற்காகத்தான் தாம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அங்கு அனுப்பிவைக்கப்பட்டதை மறந்தவராய்ச் செயல்பட்டார் காந்தியார். ஏற்றுவந்தபொறுப்பை மறந்துவிட்டு, அங்கே சிறுபான்மையினர் உரிமைகளுக்கெதிராகப் போராடத் தொடங்கினார்; அதிலும் விந்தையென்னவெனில், தாழ்த்தப் பட்டோர்க்குத் தனிஒதுக்கீடு தேவையென்று கோரிக்கையெழுப்பத் துணிந்ததற்காக, அவர்களது பிரதிநிதிகளின் மீது கடுமையான தாக்குதலில் இறங்கினார். அவர்களது உரிமைகள் பற்றிக் கண்ணெடுத்துப் பார்க்கவும் அவர் தயராகவில்லை. தமது உரிமைகளைக் கோரவும் அவர்கள் துணிவு பெற்றமை கண்டே அவர் சினமுற்றது கண்டு மாநாட்டு உறுப்பினர்கள் அனைவருமே அதிர்ச்சியடைந்தனர். தாழ்த்தப்பட்ட மக்களின் அருந்தோழராய்த் தம்மைப்பற்றிப் பீற்றிக் கொள்ளும் காந்தியார், அவர்களின் நலன்களுக்கெதிரான கடும்

---

* காந்தியாரை வட்டமேசை மாநாட்டிற்குத் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத் தனுப்பிய காங்கிரஸ் கட்சியினர் அவருக்குப் பணித்த கடப்பாடு என்னவென்பதைக் கீழே கொடுக்கப் பட்டுள்ள தீர்மானம் காட்டுகிறது (இத் தீர்மானம் கட்சியின் கராச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது)

காங்கிரஸ் கட்சியின் செயற்குழு இந்திய அரசுடன் செய்துகொண்ட தற்காலிக ஏற்பாட்டினைக் கட்சி தீர ஆய்ந்து அதற்கு ஒப்புதல் அளிப்பதுடன் முழுமையான விடுதலையே (பூரண சுயராஜ்யம்) கட்சியின் குறிக்கோள் என்ற நிலையில் மாற்றம் இல்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறது. பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்புள்ள மாநாடுகள் எதிலேனும் கட்சிப் பிரதிநிதிகள் இடம்பெற்றால், அங்கு இக்குறிக்கோளுக்காகப் பாடுபடவேண்டும்; குறிப்பாகப் படைகள், வெளிநாட்டுறவு, நிதி, பொருளாதாரக்கொள்கை ஆகியவற்றின் மீது இந்தியர்களின் கட்டுப்பாட்டை வலியுறுத்துவதுடன், இந்தியாவில் ஆங்கில அரசு செய்த நிதி விவகாரங்களை நடுநிலையான நடுவர் மன்றத்தின் தணிக்கைக்குட்படுத்தக் கோருவதும், இந்திய-பிரிட்டிஷ் உறவில் இருதரப்பினருக்குமான கடப்பாடுகளை மதிப்பிட்டு எந்தவொரு தரப்பும் விருப்பமில்லாதபோது உறவை முறித்துக் கொள்ளும் உரிமையை வலியுறுத்துவதும் பிரதிநிதிகளின் பொறுப்பாகும். இந்திய மக்களின் நலன்களைப்பேணுதற்குத் தேவையான வகையில் சிற்சில மாறுபாடுகளுக்கு இசைவளிக்கவும் பிரதிநிதிகளுக்குச் சுதந்திரம் உண்டு''.

பகைவராய்ப் போராடிய இரட்டை வேடத்தை எளிதில் செரித்துக் கொள்ளப் பலரால் இயலவில்லை. அவரது நண்பர்களும் கூட முற்றிலும் திகைப்படைந்தனர். இதேபோன்ற உரிமையை இஸ்லாமியர்களும் சீக்கியரும் பெற இசையும் காந்தியார், கிறித்தவர்கள், ஐரோப்பியர்கள், ஆங்கிலோ-இந்தியர்களுக்கு இவ்வுரிமைகள் தரத் தமக்கு இசைவில்லையெனினும் எதிர்க்கத் துணியாத காந்தியார், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இத்தகைய உரிமைகள் தரப்படுவதை மட்டும் கடுமையாக எதிர்ப்பது ஏன் என அவரது நண்பர்களாலும் புரிந்து கொள்ள இயலவில்லை. இத்தனைக்கும் முகமதியர்கள், சீக்கியர்கள், கிறித்தவர்கள், ஆங்கிலோ இந்தியர்கள் ஆகியோர் ஏழ்மையிலும் ஏழ்மையராய்வாடும் தாழ்த்தப் பட்ட மக்களைவிடச் சமுதாயச் செல்வாக்கிலும், பொருளாதார வசதி களிலும் மிகவும் மேம்பட்ட நிலையில் வாழும் சிறுபான்மையினத் தவர்கள்; சமூகத்தின் நன்கு மதிக்கப்படுபவர்கள்; கல்வியிலும் ஏனையோரைவிட மேம்பட்ட நிலையில் இருப்பவர்கள்; சமூகத்தில் சுதந்திர மக்களாய் வாழ்பவர்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களோ சமுதாய அடக்கு முறை, கொத்தடிமைத்தனம், போதிய கல்வியறி வின்மை, சமுதாயப் புறக்கணிப்பு முதலான அன்றாட இன்னல்கள் பலவற்றுக்கு இடையே உழல்பவர்கள். இவற்றையெல்லாம் ஒப்பிட்டுக்காணுங்கால் இந்திய மக்களிலேயே அன்பான அரவணைப் புடன் தனிப்பாதுகாப்பு தரப்பட வேண்டியவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களே என்பது தெளிவாகும். இக்காரணங்களையெல்லாம் காந்தி யாரின் சிறந்த ஐரோப்பிய நண்பர்களில் இருவர் சுட்டிக்காட்டியதன் பலன், நானறிந்தவரையில், காந்தியாரின் சினத்தைக் கிளப்பி அவருடனான நட்புறவில் விரிசலை ஏற்படுத்திக்கொண்டதுதான்.

காந்தியாரின் இந்தச் சினத்திற்கு முதன்மையான காரணங்கள் இரண்டு. அவை, தாழ்த்தப்பட்டோரின் உரிமைகளைத் தாம் கடுமையாக எதிர்ப்பதற்கு அறிவுக்குப்பொருத்தமானவிளக்கம் ஏதும் தரஇயலாமை யையும், தமது எதிர்ப்பு நாணயமானது, தாழ்த்தப்பட்டோரின் நலன்களைப்பேணும் அக்கறையின் அடிப்படையில்தான் உருவானது என்று அவரது எதிர்பார்ப்புகளை நம்பவைக்க இயலாமையுமே. தாழ்த்தப்பட்டோரின் கோரிக்கைளைத் தாம் எதிர்ப்பதற்கான விளக் கத்தை முன்னுக்குப்பின் முரணின்றி ஒருபோதும் அவர் அளித்ததில்லை. இலண்டனில் அவர் நிகழ்த்திய உரைகளைப் படிக்கும்போது, அவரது நிலை விளக்கமாக, மூன்று வாதங்களை முன்வைப்பதைக்காணலாம். வட்டமேசை மாநாட்டின் கூட்டாட்சிக்குழு உறுப்பினர் என்ற பொறுப்பில் காந்தியார் உரையாற்றும்போது பின்கண்டவாறு குறிப்பிட்டார் :

''காங்கிரஸ் கட்சி, அது தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே, தீண்டப்படாதோர் எனப்படும் மக்களின் நலன்களுக்காகப் பாடுபட்டு வந்துள்ளது. ஒரு காலத்தில் காங்கிரஸ் கட்சியின் ஆண்டுக்கூட்டம் ஒவ்வொன்றின் போதும் கூடவே சமுதாய மாநாடும் நடத்தப்பட்டு வந்தது. காலஞ்சென்ற இராணடே தமது பற்பல பணிகளுக்கிடையே இம்மாநாட்டிற்காகவும் தமது ஆற்றலைச் செலவிட்டு உழைத்தார். அவரது தலைமையில் நடைபெற்ற மாநாட்டு நிகழ்ச்சிகளில், தாழ்த்தப்பட்ட மக்கள் குறித்த சீர்திருத்தங்கள் முதன்மையிடம் பெற்றிருந்ததைக் காணலாம். ஆனால், 1920 ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சி முன்னேற்றப் படியொன்றில் அடியெடுத்து வைத்தது. அதாவது, தீண்டாமை ஒழிப்பினைக் கட்சியின் அரசியல் அரங்குக்கே கொண்டுவந்து அதனைக் கட்சியின் முதன்மையான திட்டங்களில் ஒன்றாக ஆக்கிக்கொண்டது. காங்கிரஸ்கட்சி, இந்து-முஸ்லீம் ஒற்றுமையை (அதாவது பல்வேறு வகுப்பினரிடையே ஒற்றுமை) சுயராஜ்யம் அடைதற்கான இன்றியமையாத் தேவைகளில் ஒன்றாக எவ்வாறு கருதுகிறதோ, அவ்வாறே தீண்டாமை என்னும் தீங்கினை அறவே அகற்றுவதே முழுமையான விடுதலைக்கு இன்றியாமைத் தேவையாகவும் கருதுகிறது.''

வட்டமேசை மாநாட்டின் சிறுபான்மையோர் குறித்த துணைக்குழுவில் பேசும்போது வேறொரு வாதத்தை முன்வைக்கிறார். அங்கு அவர் பேசியாதவது:

''ஏனைய சிறுபான்மையினர் தனிஉரிமைகள் கோருவதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது; ஆனால் தீண்டப்படாதோர் சார்பில் எழுப்பப்படும் கோரிக்கையை முதுகிலே குத்துகின்ற துரோகமாகவே நான் கருதுகிறேன். அம்மக்களைக் காலகாலத்திற்கும் சோரப் பிள்ளைகளாய் இருத்த முயல்வதையே இது குறிக்கிறது. இந்தியாவின் விடுதலையைப் பெறுவதற்காகக் கூடத் தாழ்த்தப்பட்ட மக்களின் உயிர்க்குயிரான நலன்களை விட்டுக்கொடுக்க நான் ஒருபோதும் உடன்படமாட்டேன். விரிந்து பரந்த தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயத்திற்கு நானே மெய்யான பிரதிநிதி என்று உரிமை கொண்டாடுகிறேன். அந்த மக்கள் சமூகம் யாரைத் தனது பிரதிநிதியாக நம்புகிறது என்று அவ்வினப் பொதுமக்களிடையே கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடைபெற்றால் நானே அதில் மாபெரும் வெற்றிபெறுவேன் என்பதை காங்கிரஸ்கட்சியின் சார்பில் மட்டுமின்றி எனது சொந்தச்சார்பிலும் வலியுறுத்திக் கூறுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களின் கீழ்மையான அடிமை நிலைக்காக அவமானப் படவேண்டியவர்கள் மேல்சாதி

இந்துக்களேயன்றித் தாழ்த்தப்பட்ட மக்களல்ல என்பதையும் இவ்விழி நிலையைப் போக்குவதற்கான வழி தனித்தொகுதிகளும், தனி இட ஒதுக்கீடுகளும் அல்லவென்பதையும் அவர்களுக்குணர்த்த நாட்டின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிவரை மூலைமுடுக்கெல்லாம் சென்று பணியாற்றத் தயங்கமாட்டேன். தீண்டாமை என்னும் இக்களங்கத்தை அறவே அகற்றச் சூளுரை பூண்ட இந்துச் சமயச் சீர்திருத்தவாதிகள் பலர் உள்ளோம் என்பதை இந்தக்குழு மட்டுமல்ல உலகமே இன்று அறிந்துகொள்ளட்டும். எங்கள் பதிவேடுகளிலும், மக்கட்தொகைக் கணிப்பிலும் தாழ்த்தப்பட்டோர் என்பதோர் வகுப்பினரே இடம் பெறுவதை நாங்கள் ஏற்கவில்லை. சீக்கியர்கள் என்றைக்கும் தொடர்ந்து சீக்கியர்களாக இருக்கலாம். அவ்வாறே முகமதியர்களும், கிறித்தவர்களும், ஐரோப்பியரும் தொடர்ந்து என்றைக்கும் தனிஇன மாகவே இருக்கலாம்; தவறில்லை. ஆனால் தாழ்த்தப்பட்டவர்கள் என்றைக்கும் தொடர்ந்து தாழ்த்தப்பட்டவர்களாகவே இருக்க விரும்புகிறார்களா? தீண்டாமை தொடர்ந்து நிலைத்திருப்பதைவிட இந்து சமயமே அழிந்தொழிவது மேல் எனக் கருதுகிறேன். எனவேதான், டாக்டர் அம்பேத்கர் மீதும், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வு மேம்பட வேண்டுமென்று அவர் பூண்டுள்ள ஆவலின் மீதும், அவருடைய அறிவாற்றல்மீதும் நான் பெருமதிப்பு கொண் டிருக்கும் அதேசமயத்தில், அவர் தமக்குத் தனிப்பட்ட முறையில் நேர்ந்த கசப்பான அனுபவங்களினால் தற்போது பிறழ்ச்சியான சிந்தனைகளின் வயப்பட்டுத் தவறான பாதையில் தீவிரமாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார் எனப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படியுரைப்பது எனக்கு மனத்துன்பத்தைத் தருகிறதெனினும், இதை நான் சுட்டத்தவறினால், எனது உயிருக்கு மேலாக நான் மதிக்கும் தாழ்த்தப்பட்டோரின் நலன்களுக்கே மெய்யாக நடக்கத் தவறியவனாவேன். இந்த முழுஉலகின் அரசே கிடைப்பதாயினும், தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களை அதற்காகவும் விட்டுக்கொடுக்க இசைய மாட்டேன். தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயமுழுமைக்கும் பிரதிநிதியாக, டாக்டர் அம்பேத்கர் பேச முனைவதற்கு அவர் நியாயமான உரிமையேதும் பெற்றிருக்க வில்லை என்பதை மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு உரைக்கிறேன். அவருடைய கோரிக்கை ஏற்கப்பட்டால், அது இந்து சமயத்தில் ஒரு பிளவையே ஏற்படுத்தும்; இதை என் போன்றோர் எப்படி மனநிறைவோடு எதிர்நோக்க இயலும்? இதற்குப் பதிலாகத் தாழ்த்தப் பட்டவர்கள் இஸ்லாமியர்களாகவோ, கிறித்தவர்களாகவோ மாறுவதைப் பொறுத்துக் கொள்ளாலாம்; ஆனால் ஒவ்வொரு சிற்றூரிலும் இருவேறு பிளவுபட்ட சமூகங்கள் இருப்பின் இந்து

சமயத்தின் கதி என்னவாகும் என்பது பொறுத்துக்கொள்ள இயலாதது. தீண்டப்படா மக்களின் அரசியல் உரிமைகளைப் பற்றிப் பேசுவோர் இந்தியாவைப் பற்றியும், இந்திய சமுதாய அமைப்பு இன்று எவ்வாறு நிலவுகிறது என்பதைப் பற்றியும் அறியாத வர்களாயிருக்க வேண்டும். எனவே, தீண்டப்படாதோரின் அரசியல் உரிமைக்கோரிக்கையை எதிர்ப்பதில் நான் தன்னந்தனியாக நிற்க நேரினும், எனது உயிரையும் தந்து எதிர்க்கத் தயங்க மாட்டேன் என்பதை மிகமிக வலியுறுத்திக்கூற விரும்புகிறேன்.''

இலண்டனில் நண்பர்கள் இல்லத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் வேறொருவிதமான வாதத்தில் இறங்கியிருக்கிறார் காந்தியார். அவர் கூறியதாக வெளிவந்த இதழ்ச் செய்தி.*

''எனது உள்ளத்தில் அலைமோதிக்கொண்டிருக்கும் போராட் டங்களைப்பற்றிக் கூறியிருக்கிறேன். சிறுபான்மையோர் உரிமைகளை விட்டுக்கொடுக்கும் பேரத்தில் ஈடுபடக் காங்கிரஸ் கட்சியால் ஒருபோதும் இயலாது. தீண்டப்படாதவர்களின் சிக்கல்களைப்பற்றி முழுமையாக வேறொருவரையும் விட நான் நன்கறிவேன். அவர் களுக்கெனத் தனித்தொகுதிகளை ஒதுக்குவது அம்மக்களைக் கொலை செய்வதற்கு ஒப்பாகும். இன்றைய நிலையில் அவர்கள் மேல்சாதி மக்களின் தயவில்தான் வாழ்ந்துகொண்டுள்ளனர். தீண்டப்படாத மக்களுக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கப்படின், மேல்சாதியார் அவர் களை முழுமையாக நசுக்கி அவர்கள் மீது பழிதீர்த்துக்கொள்ளமுடியும்; எனவே அக்கொடுமை நிகழாமல் தடுப்பதற்காகவே தீண்டப்படா தோர்க்குத் தனித்தொகுதி ஒதுக்கப்படுவதை எதிர்க்கிறேன். இப்படி யொப்புக்கொள்வதற்கு நான் வெட்கப்பட வேண்டுமென்றாலும் உண்மைநிலை அதுதான். இத்தகைய நிலையில் அவர்களுக்கு அழிவு தரும் திட்டத்தை நான் ஏற்கமுடியுமா? அக்குற்றத்தை நான் ஒருபோதும் செய்ய இசையேன்**. டாக்டர் அம்பேத்கர் எவ்வளவு திறமை படைத்த

---

★ 'யங் இந்தியா' 1931 நவம்பர் 19.

★★ இதிலிருந்து காந்தியார் தீண்டப்படாத மக்களுக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கு வதைத்தான் எதிர்க்கிறாரென்றும், கூட்டுத்தொகுதிகள் அமைத்து அவற்றில் தீண்டப்படா தோர்க்கு இடஒதுக்கீடு தரத் தயாராக இருப்பதாக வட்டமேசை மாநாட்டில் ஏற்றுக் கொண்டது போலக் கருதத்தோன்றும். இது மெய்யல்லவென்பதைக்காட்ட சிறுபான்மையோர் துணைக்குழுவில் அவர் ஆற்றிய உரையின் ஒரு பகுதியைத் தருகிறேன் :.

''இந்துக்கள் முகம்மதியர்கள் சீக்கியர்கள் ஆகியோர் அனைவருக்கும் இசைவான தீர்வு எதனையும் ஒப்புக்கொள்ள காங்கிரஸ் கட்சி எப்போதுமே தயாராக இருக்கிற தென்பதைத் தெரிவித்துக்கொள்வதுடன், வேறெந்தச் சிறுபான்மையினத்தவரும் தனித் தொகுதிகளோ இடஒதுக்கீடோ கோருவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது என்பதை மீண்டும் அழுந்தத்திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்''.

வராக இருக்கட்டும். ஆனால் இக்கோரிக்கையைச் சரியான சிந்தனையின்றி எழுப்பியுள்ளார். தீண்டப்படாத மக்களின் பிரதிநிதி என்று அவர் உரிமை கோருவதை நான் மறுக்கிறேன்.''

காந்தியாரின் வாதங்கள் எவையுமே ஏற்றுக்கொள்ளத்தக்கன அல்ல; அவையாவும் வலிந்து திணிக்கமுயலும் தொனி கொண்ட ஓட்டைகள் நிறைந்த வாதங்கள் என்பதைத் தெளிவுபடுத்துவோம்.

அவருடைய முதலாவது வாதம், காங்கிரஸ் கட்சி தீண்டப் படாதோர் நலன்களைப் பேணவும், தீண்டாமையை அறவே அகற்றவும் உறுதி பூண்ட கட்சி என்பதாகும். இக்கூற்று உண்மையை அடிப்படை யாய்க் கொண்டுள்ளதா? காங்கிரஸ் கட்சியினர் அனைவருமே தீண்டாமை ஒழிப்பில் உறுதிபூண்டவர்கள் என்று காந்தியார் வெளி யுலகு முழுவதற்குமே பறைசாற்றி வருகிறார்என்பதுடன், காந்தியாரின் நண்பர்கள், வேறு, இதுவரைகாங்கிரஸ்கட்சி ஏற்க முன்வராத பணியில் கட்சியை ஈடுபடுத்தினார் அவர் என்று அவரது புகழ்பாடி வருகின்றனர். இத்தனை அப்பட்டமான பொய்யினை எவ்வளவு பரவலாகப் பரப்ப முடிந்துள்ளது என்பதை எண்ணி மிக வியப்படைகிறேன். 1920 ஆம் ஆண்டு நாகபுரியில் நடந்த காங்கிரஸ் கட்சி மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம் ஒன்றின் அடிப்படையில்தான் காந்தியாரும் அவரது நண்பர்களும் இவ்வாறு தம் புகழ் பரப்பி வருகின்றனர். நான் அத் தீர்மானத்தை மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தேன். அத்தீர்மானத் தைப் படித்துப்பார்க்கும் எவருமே அக்கட்சியினர் பீற்றிக்கொள்ளும் பிரசாரத்திற்கு அடிப்படை ஏதும் அத்தீர்மானத்தில் இல்லையென்பதை ஒப்புக்கொள்வார்கள். காந்தியத் தந்திரமுறைக்கு ஒரு சாதுரியமான எடுத்துக்காட்டாகவே அத்தீர்மானம் விளங்குகிறது. காந்தியார் தொடக்கத்திலிருந்தே தீண்டப்படாத மக்களை மேல்சாதி மக்களின் நெருங்கிய அடிவருடிகளாக இருத்திக்கொள்வதில் மிக அக்கறை பூண்டுவந்திருக்கிறார். பிரிட்டிஷாரின் கீழ் அடிமைகளாக விளங்கும் தீண்டப்படாத மக்கள், மேல்சாதி இந்துக்களின் அடிமைகளாக மாறவேண்டு மென்றே அவர் விரும்புகிறார். அவர்களது நலனில் முஸ்லீம்களோ கிறித்துவர்களோ அக்கறை காட்டுவதை அவர் விரும்ப வில்லை. காங்கிரஸ் கட்சி மாநாட்டில் தீண்டாமை ஒழிப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால்தான் இந்நோக்கம் நிறைவேற மறைமுகமான வழிபிறக்கும் என்பதை எண்ணியே தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. எனவே, தீண்டாமை ஒழிப்பு மேல்சாதி மக்கள்

மட்டுமே மேற்கொள்ள வேண்டிய பணியாக இத்தீர்மானம் விதிக்கிறது. ஆக, வஞ்சனை நிறைந்த அரசியல்வாதிகளின் சாதுரியமான திட்டமே இத்தீர்மானம் என உணரலாம். இத்தீர்மானம் காங்கிரஸ் கட்சியினர் அனைவரையும் கட்டுப்படுத்தவில்லை; எவர் மீது எந்தக் கடமையையும் விதிக்கவுமில்லை; உறுதிமொழி, நோன்பு எதனையும் தீர்மானம் பரிந்துரைக்க வில்லை. அஃதொரு பொதுப்படையான வேண்டுகோள்தான். தீண்டாமையை அகற்றுமாறு மேல்சாதி இந்துக்களுக்குப் பரிந்துரைப்பதன்றி வேறெதுவும் அத்தீர்மானத்தில் இல்லை. ஒரு முறை, காந்தியார் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராய் சேருவதற்கான நிபந்தனைகளில் சிறு மாறுதல்களைப் புகுத்த விரும்பினார். அதாவது, கட்சிக்கு உறுப்பினர் கட்டணமாக ஆண்டொன்றுக்கு கால் ரூபாய் செலுத்ததற்கு பதிலாக, இராட்டையில் நூற்றல், தம் தனி வாழ்வில் தீண்டாமையைக் கைவிடல் ஆகிய இரண்டு கட்டுப்பாடுகளை விதிக்கலாமெனக் கருத்துத் தெரிவித்தார். காங்கிரஸ் கட்சியினர் நூல் நூற்க வேண்டுமானால் தயாராக இருந்தார்களேயன்றித் தீண்டாமையைக் கைவிடத் தயாராக இல்லை. தீண்டாமையைக் கைவிடுமாறு வற்புறுத்தப்பட்டால் காங்கிரஸ் கட்சியையே கலைத்துவிடநேருமென்று கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தனர். எதிர்ப்பின் கடுமை கண்டு காந்தியார், வட்டமேசை மாநாட்டு உறுப்பினர்களுக்கிடையே, தீண்டாமையை ஒழிக்கக் காங்கிரஸ் கட்சி உறுதிபூண்டிருக்கிறதென்றும், தீண்டப்படாதவர்களின் நலன்களைப் பேணிக்காக்கும் பணியை மேல்சாதி இந்துக்களிடமே நம்பகமாக ஒப்படைக்கலாமென்றும் வலியுறுத்திக் கூறத் துணிவாராயின், உண்மையை மிகச் சிக்கனமாகப் பயன்படுத்துவதின் உச்ச எல்லைக்கே (அறவே தவிர்க்கும் நிலைக்கே) சென்றுவிடவும் அவர் தயங்க மாட்டார் என்பது தெளிவாக வில்லையா?

காந்தியாரின் அடுத்தவாதம், இந்திய விடுதலைக்கு இன்றியமையா முதற்தேவைகளில் ஒன்றாகக் காங்கிரஸ் கட்சி தீண்டாமை ஒழிப்பை வலியுறுத்தி வருகிறது என்பதாகும். இந்தச் சிக்கலில் காந்தியாரிடமும், காங்கிரஸ் கட்சியிடமும் நாணயமற்ற போக்கையே கண்டு பழகிவிட்ட நாம், இந்தக்கூற்றையும் உரைத்துப் பார்க்காமல் ஏற்றுக்கொள்வதற்கில்லை. நாட்டில் தீண்டாமையின் கடுமை சற்றும் குறையாமல் நிலவும்போது, காந்தியாரும் காங்கிரஸ் கட்சியினரும் எந்த முகத்தைக் கொண்டு இந்திய விடுதலை கோர

வந்தார்கள்? காந்தியாரின் வாதத்தில் நம்பிக்கையில்லை என்பதை யல்லவா இது காட்டுகிறது? தீண்டாமை ஒழிப்பை இந்திய விடுதலைக்கான முதற்தேவையாகக் காந்தியாரும் காங்கிரஸ் கட்சி யினரும் ஏற்றுக் கொண்டுள்ளதாக இந்திய மக்கள் எவரும், குறிப்பாகத் தீண்டப்படாத மக்கள் எவரும் நம்பவில்லை. வட்டமேசை மாநாட்டுக்கு நெடுநாள்களுக்கு முன்னரே இரண்டு சமயங்களில் தீண்டாமை ஒழிப்பில் அவருக்கு உண்மையிலேயே நம்பிக்கை எவ்வளவிருக்கிற தென்பதைச் சோதிக்கக் கேள்விகள் கேட்கப்பட்டன. இருசமயங்களிலும் அவர் அளித்த பதில்கள், தீண்டாமை ஒழிப்பில் அவருக்கு நம்பிக்கையில்லை என்பதைத் தெளிவாய்ப் புலப்படுத்து கின்றன.

1920இல் நிருபர் ஒருவர் காந்தியிடம் கேட்ட கேள்வி★ :

''ஆங்கிலேயர்கள் தங்கள் குருதிபடிந்த கைகளைக் கழுவ வேண்டுமென நாம் கோருமுன், இந்து மேல்சாதி மக்கள் குருதி படிந்த தங்கள் கரங்களைக் கழுவிக் கொள்ள வேண்டாமா?''

இதற்குக் காந்தியாரின் பதில் :

''நிருபர் ஒருவர், 'ஆங்கிலேயர்கள் தங்கள் குருதி படிந்த கைகளைக் கழுவவேண்டுமென நாம் கோருமுன், இந்து மேல்சாதி மக்கள் குருதி படிந்த தங்கள் கரங்களைக் கழுவிக்கொள்ள வேண் டாமா?' என்ற தலைப்பில், தீண்டப்படாத மக்களின் மேம்பாட்டுக் காக நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் எனக் கேட்டுக் கொதிப்பான கடிதம் ஒன்றினை எழுதியுள்ளார். இது, முறையாகக் கேட்கப்பட்ட நல்ல கேள்விதான். ஆனால் அடிமைப்பட்டுள்ளதொரு நாட்டின் குடிமகன் எவராவது, முதலில் தமக்கு விடுதலை தேடிக் கொள்ளாமல், தமது சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு விடுதலைப் பெற்றுத் தரக்கூடுமெனில் என்னாலும் அதைச் செய்ய முடியும். ஆனால் அது செய்வதற்கியலாத அருஞ்செயல்....''

காந்தியாரும் காங்கிரஸ் கட்சியினரும் நாட்டு விடுதலைக்கு இன்றியமையாத முதற்தேவையாகத் தீண்டாமை ஒழிப்பைக்

★ ''யங் இந்தியா'' 1920, அக்டோபர், 27.

கருதுவதாகக் கூறுவது உளமாரக் கூறப்படும் உண்மையல்ல என்பதற்கு இதனினும் சான்று தேவையா? காந்தியார் முன்வைக்கும் வாதமுறை நாணயமானதோர் மனிதரின் போக்குக்கு இசைவான தன்று என்பதைக் காட்டும் பிறிதொரு நிகழ்ச்சியும் பின்னர் நிகழ்ந்தது; "அப்படியானால், இந்துக்கள் இந்திய விடுதலையை அடையும் வரை, தீண்டாமை குறித்துப் பேசுதலையும் நிறுத்தி வைக்கலாமே?" என்று கேட்ட நிருபர் ஒருவரைக் காந்தியார் எள்ளி நையாண்டி செய்துள்ளார்.

அடுத்து, 1930 ஆம் ஆண்டு, மார்ச் மாதத்தில், சட்டத்தை மீறி உப்பெடுப்புப் போராட்டத்திற்காகக் காந்தியார் தண்டிக்குச் சென்றபோது, தீண்டப்படாத மக்கள் சிலர் அவரைச் சந்தித்து, "தீண்டாமை ஒழிப்பினை எய்திய பின்னர்தான் நாட்டு விடுதலையை எய்த முடியுமென்று நீங்கள் கூறிக்கொண்டிருந்தது என்னவாயிற்று?" எனக் கேட்டதற்கு அவரளித்த பதில் :

"தீண்டப்படாத மக்கள் ஒருமித்த முழுமையான சமுதாயத்தின் ஒரு பகுதியினரே. இப்போது நான் சமுதாயம் முழுமைக்குமான விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறேன். ஆகவே அம்முழுச் சமுதாயத்தின் ஒரு பகுதியினரான தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக் காகவும் தான் போராடிக் கொண்டிருப்பதாக மெய்யாகவே நம்புகிறேன்."

காந்தியைச் சந்திப்பதற்காகத் தண்டிக்குச் சென்றிருந்த சிலர் வாயிலாகக் கூறக் கேட்டதன்றி, இந்நிகழ்ச்சிக்கு வேறுசான்று ஏதுமில்லை. எனினும் காந்தியார் இவ்வாறு பேசக்கூடியவர்தான் என்பதில் எனக்கு ஐயம் ஏதுமில்லை. மேலும் அதே நிருபரின் பிறிதொரு வினாவுக்கு 'யங் இந்தியா'வில் அவர் அளித்த பதிலும் இத்தன்மை யதாகவே இருக்கக் காணலாம்.

"...... பஞ்சமர் மேம்பாடு என்பது எனக்கு உயிருக்கொப்பானது என்ற போதிலும், இப்போதைக்கு ஒத்துழையாமை இயக்கத்தில் எனது முழுக் கவனத்தையும் செலுத்துவதில் மனநிறைவு காண்கிறேன்; ஏனெனில், பெரிதாம் முழுமையான சிக்கலின் தீர்வில் அதன் பகுதியான சிறு சிக்கல்களின் தீர்வும் அடங்குமென நம்புகிறேன்."

இவையெல்லாம் நாணயமான மனிதரின் பதில்களா? தீண்டப் படாதோர் என்போர் சிக்கல் முழுமையின் ஒரு பகுதிதான் என்று எந்த நாணயமான மனிதராவது நம்புவாரா?

தீண்டப்படாத மக்களுக்கு விசேடப் பிரதிநிதித்துவம் வழங் குவது, மேல்சாதியாருக்கும் தீண்டப்படாதோர்க்கும் இடையிலான வேற்றுமை காலகாலத்திற்கும் தொடர்ந்து நீடிக்கவே வழிவகுக்கு மென்ற வாதமும் சற்றும் சாரமில்லாததென்பதைக் காண்போம். தீண்டாமையை அகற்றுவதற்கான வழி, கலப்புத் திருமணங் களையும் சமபந்தி விருந்துகளையும் ஊக்குவித்தலே. தீண்டப்படா தோரின் இடர் களைவதற்கான வழி, பொதுக் கிணறுகளில் நீரெடுக் கவும், பொதுப் பள்ளிகளில் சேர்ந்து கல்வி பயிலவும் அம்மக்களுக்கு அனுமதி வழங்குதலே. கலப்பு மணம், சமபந்தி விருந்து ஆகிய திட்டங்களுக்கும் பொதுக்கிணறு, பொதுப் பள்ளிகள் ஆகியவற்றில் தீண்டப்படாதோரை அனுமதிப்பதற்கும், அவர்களுக்கான தனியிட ஒதுக்கீடு எவ்வாறு தடையாகக் குறுக்கிடும் என்பது விளங்க வில்லை. அத்திட்டங்களைப் பரவலாகச் செயல்படுத்துவதன் வாயிலாகத் தான், தனி ஒதுக்கீட்டுக்கான தேவை குறைய வழி பிறக்கும். இந்த வகையில் காந்தியாரும் காங்கிரஸ் கட்சியினரும் உருப்படியாக ஏதாவது செய்துள்ளார்களா? இத்தகைய பணிகளில் காந்தியாருக்கும் காங்கிரஸ் கட்சியினருக்கும் எந்த அளவுக்கு ஈடுபாடு உள்ளதென்பதை பர்தோலி தீர்மானத்திற்கான விளக்கக் குறிப்பு காட்டுகிறது. அக்குறிப்பு கூறுவதாவது:

''தீண்டப்படாதோர்க்கெதிரான காழ்ப்புணர்வுகள் கடுமையாக நிலவும் பகுதிகளில், தீண்டப்படாதோர்க்கெனத் தனியான கிணறு களும், பள்ளிகளும் காங்கிரஸ் கட்சியின் செலவிலேயே நிறுவி நடத்தப் படுவதுடன், பொதுக் கிணறுகளையும், தேசியப் பள்ளிகளையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுமதிக்குமாறு பொதுமக்களை இசை வுறச் செய்வதற்கும் இயன்ற முயற்சிகள் அனைத்தும் செய்யப்பட வேண்டும்.

தனித்த கிணறுகளையும், பள்ளிகளையும் நிறுவி நடத்த விரும்புவோர், அதே வாயால் தனிப் பிரதிநிதித்துவத்தினால் பிரிவினை விளையுமென்பதால் அதனை எதிர்க்கிறோமென்று கூறுதல் எங்ஙனம்? சமூகங்களுக்கிடையிலான திரைகளையும் சுவர்களையும் ஒழித்துக் கட்டுவதற்காக உளமாரப் பாடுபடுபவர்கள், ஒருவேளை தனிப்

பிரதிநிதித்துவத்தை எதிர்ப்பதாகக் கூறினார்களென்றால் அவர்களது வாதம் நியாயமற்றதென்றாலும், நாணயமானது என்று ஒப்புக் கொள்ளலாம்.

காந்தியாரின் இறுதியான வாதம் விந்தையிலும் விந்தை யானது. தீண்டப்படாத மக்களை அடக்கியொடுக்கி அவர்கள் மீது பழி தீர்த்துக்கொள்ள இயலும் நிலையில் மேல் சாதியினர் இருப்பாரெனில், அத்தகைய மேல்சாதியினர் கொடுமைகளினின்று தம்மைக் க்காத்துக் கொள்ளத் தனிப்பிரதிநிதித்துவத்தின் தேவை பெருகுமேயன்றி அகன்றுவிடாது. நம்பிக்கையற்ற நிலையின் வரம்பில் நின்று, தமது நிதானத்தையும் சமநிலையையும் இழந்த காந்தியார் தமது வாதங்கள் என்ன முடிவுகளுக்கு இட்டுச் செல்கின்றன என்பதையும் அறியாத வராயினார். தீண்டப்படாதவர்களை என்றென்றும் மேல்சாதி இந்துக் களின் அடிமையராய் வைத்திருக்கவே அவர் வாதாடி வருகிறார் என்பதை இக்கூற்று காட்டிக் கொடுத்து விடுமென்பதையும் அவர் மறந்து விட்டார். காந்தியாருடைய வாதத்தின் சாரம், ''விடுதலை கேட்காதீர்கள், அதனால் உங்கள் ஆண்டைகள் சினமுற்று உங்களைக் கொடுமைப்படுத்துவார்கள்'' என்பதுதான். இத்தகைய வாதத்தை வேறு எவராவது முன்வைத்திருப்பர் எனில் அவரை நாணய மற்றவர் என்றும் ஒன்றுக்கும் உதவாதவர் என்றும் சாடியிருப்பார்கள்.

தீண்டப்படாதோர் கோரிக்கையின் நியாயத்தை மறுக்கமுயன்று தோல்வியுற்ற காந்தியார், தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிகளைத் தனிமைப்படுத்திப் பிற சிறுபான்மையினத்தோரது பிரதிநிதிகளின் ஆதரவு அவர்களுக்குக் கிடைக்காமல் தடுக்கும் முயற்சிகளில் இறங்கினார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையே உருவாகிவந்த ஒப்பந்தத்தை உடைக்கத் திட்டமிட்டார். இதற்கு முஸ்லீம்களின் ஆதரவைத் திரட்டுவதற்காக அவர்களோடு ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளத் தயாரானார். முஸ்லீம் பிரதிநிதிகளுக் கிடையே சுற்றறிக்கையாக அனுப்பப்பட்ட இவ்வொப்பந்த வரைவின் நகல் ஒன்று எனக்குக் கிடைக்கப்பெற்றது. அதனை அப்படியே கீழே தந்துள்ளேன்: (கீழே கொடுக்கப்பட்டுள்ள உரைப்பகுதி, டாக்டர் அம்பேத்கரின், ''காந்தியும் காங்கிரசும் தீண்டப்படாதோருக்குச் சாதித்தது என்ன?'' என்ற நூலின் 72-73ஆவது அச்சுப் பக்கங்களி லிருந்து எடுக்கப்பட்டது; இப்பகுதி மூலக்கையெழுத்துப் படியில் காணப் படவில்லை - பதிப்பாசிரியர்).

## "காந்தி - முஸ்லீம் ஒப்பந்தத்தின் வரைவு"

### வட்டமேசை மாநாட்டில் முஸ்லீம் பிரதிநிதிகள்*

தொலைபேசி: விக்டோரியா 2360
தந்தி: "கோர்ட்லைக்"
இலண்டன்

அரசியார் இல்லம்
57, தூயஜேம்ஸ் வளாகம்,
பக்கிங்காம் வாயில்,
இலண்டன் தெ.மே. 1
அக்டோபர் 6, 1931

இவற்றைத் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் முஸ்லீம் பிரதிநிதிகளின் முன்மொழிவுகள், காங்கிரஸ் கட்சிக் கொள்கைகளின் அடிப்படையில் காந்தியார் எடுத்துரைத்த முன் மொழிவுகள் என இருவகையாய்ப் பிரிக்கலாம். அவை காந்தியாரின் ஒப்புதல் பெற்று முஸ்லீம் பிரதிநிதிகளின் கருத்தறிதலுக்கு அனுப்பப் பெற்றன. அவ் வரைவு வருமாறு:**

| முஸ்லீம் முன்மொழிவுகள் | காந்தியார் முன்மொழிவுகள் |
|---|---|
| 1. பஞ்சாபிலும் வங்காளத்திலும் முஸ்லீம்கள் மொத்த மக்கட் தொகையில் 1 சதவீதமே கூடுதலாகப் பெற்று பெரும்பான்மையினராக உள்ளனர். இந்நிலைமையில் அவையில் அவர்களுக்கு 51 சதவிகித இடங்கள் ஒதுக்கப்பட்டு அவற்றிற்கான தேர்தல்கள் கூட்டு வாக்காளர் தொகுதிகள் மூலம் | 1. வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில்தான் வாக்கெடுப்பு நடைபெற வேண்டும். |

★ இவ் ஆவணம் எனது "பாகிஸ்தான் குறித்த சிந்தனைகள்" (1939) என்ற நூலின் பிற்சேர்க்கையாக அச்சிடப்பட்டுள்ளது. அப்போதுதான் அது முதன் முறையாக அச்சில் வந்தது. அதன் மெய்ம்மை ஒருபோதும் ஐயுறவுக்காளானதில்லை. முஸ்லீம் பிரதிநிதிகளிடமிருந்து இந்துப் பிரதிநிதி ஒருவர் இரகசியமாகப் பெற்ற இவ் ஆவணத்தின் நகல் ஒன்றை அவரிடமிருந்து பெற்றேன்.

★★ முஸ்லீம் லீக் பிரதிநிதிகள் அலுவலகத் தாளில் இவ் ஆவணம் தட்டச்சு செய்யப் பட்டிருந்ததென்பதை இது காட்டுகிறது.

நடைபெற வேண்டுமா என்பதைப் புதிய அரசியலமைப்புத் திட்டம் நடை முறைக்கு வருவதற்கு முன்னரே முஸ்லீம் வாக்காள ரிடையே வாக்கெடுப்புக்கு விடப் பட்டு, வாக்கெடுப்பின் முடிவுகள் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

2. முஸ்லீம்கள் சிறுபான்மை யினராய் வாழும் பிற மாகாணங் களில் தற்போது நிலவிவரும் விகிதங்களிலேயே இட ஒதுக்கீடு தொடர்ந்து அளிக்கப்பட வேண் டும். ஒதுக்கீடு கூட்டுத் தொகுதி முறையிலா, தனித்தொகுதி முறை யிலா என்பது புதிய அரசிய லமைப்புத் திட்டத்தின் கீழ், முஸ்லீம் வாக்காளர்களின் கருத்துக் கணிப்புக்கு விடப்பட்டு அதில் கிடைக்கும் முடிவு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

3. பிரிட்டிஷ் இந்திய மையச் சட்ட மன்றத்தின் இரு அவை களிலும் முஸ்லீம்களுக்கு 26% பிரதிநிதித்துவம் தேவை. இந்தியச் சிற்றரசர்களின் சமஸ்தானங்களின் வாயிலாக மேலும் 7%. ஆக மொத்த உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கு முஸ்லீம்கள் இருக்க வேண்டும்.

4. எச்ச அதிகாரங்கள் அனைத் தும் கூட்டாட்சியமைப்பில் சேரும் மாகாணங்களுக்கே இருக்க வேண்டும்.

2. சீக்கிய, முஸ்லீம் இனத் தவர் அன்றிப் பிறிதெந்தச் சிறு பான்மையினர்க்கும் தனி ஒதுக்கீடு கூடாது.

காங்கிரஸ் கட்சியின் கோரிக்கைகளாவன:

அ) முழுமையான விடுதலை.

ஆ) நாட்டுப் பாதுகாப்பின் மீது உடனடியான கட்டுப்பாடு.

இ) வெளிநாட்டுறவு மீது முழுக் கட்டுப்பாடு.

ஈ) நிதியின் மீது முழுக் கட்டுப் பாடு.

உ) பொதுக் கடன்கள், பிற கடப் பாடுகள் குறித்து கட்டற்ற நடுவர் மன்றத்தின் ஆய்வு.

ஊ) பங்குதாரர் போன்று எத்தரப் பிற்கும் பிரிந்துபோக உரிமை

5. கீழ்க்கண்ட சிக்கல்கள் குறித்தும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்படுகின்றன.

i) சிந்து*
ii) வடமேற்கு எல்லைப்புற மாகாணம் **
iii) பாதுகாப்பு படைப்பாளிகள்***
iv) அமைச்சரவை****
v) அடிப்படை உரிமைகளுக்கும், சமய, பண்பாட்டு உரிமைகளுக்கும் பாதுகாப்பு
vi) எந்தவொரு இனத்தையும் பாதிக்கும் சட்டமியற்றலுக்கெதிரான பாதுகாப்பு

முஸ்லீம் பிரதிநிதிகளுடன் காந்தியார் செய்துகொள்ள உடன்பட்ட ஒப்பந்தம் இதுதான். இவ்வொப்பந்தத்தின் வாயிலாக, முஸ்லீம் பிரதிநிதிகள் எழுப்பிய பதினான்கு கோரிக்கைகளுக்கும் இணங்கத் தயாராக இருந்தார். இதற்கு பதிலுதவியாக தனி ஒதுக்கீடு கோட்பாட்டின் பயன் இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள் ஆகிய மூன்று சமயத்தவருக்கும் தொடருவதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று கேட்டார். இப்படியொரு உடன்பாடு செய்து கொள்வதில் என்ன தவறு எனச்சிலர் நினைக்கலாம். இம்மூன்று சமயங்களைச்சேர்ந்த மக்களைத் தவிர வேறெவர்க்கும் தனி ஒதுக்கீடு தர இணங்க மாட்டோம் என்றுதானே காங்கிரஸ் கட்சியும் கூறி வந்துள்ளது என்றும் எண்ணலாம். ஆனால் இக்கண்ணோட்டத்தைப் பற்றி மேலோட்டமாகக் கருதி முடிவு செய்துவிட முடியாது. காந்தியாரின் போக்கு சரியெனக் கருதுவோர் இரு வினாக்களைக் கேட்டுப் பார்க்க வேண்டும். பிற சிறுபான்மையினருக்கும், தீண்டப்படாதவர்களுக்கும் விசேடப் பிரதிநிதித்துவத்தை மறுக்கும்

---

* சிந்து மாநிலம் தனியாகப் பிரிக்கப்படலைக் குறிக்கிறது.

** வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் மாகாண சுயாட்சியும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசும்

*** படைப்பணிகளில் ஒதுக்கீடு கோரல்

**** அமைச்சரவையில் பங்கு.

காங்கிரஸ் கட்சியின் கொள்கை முடிவுக்கு முஸ்லீம்களை இணங்கச் செய்ய வேண்டிய தேவை என்ன? காந்தியார் மற்ற சிறுபான்மை யினருக்கு விசேடப் பிரதிநிதித்துவம் தர இணங்க மாட்டோம் என்று நேரடியாகவே அவர்களிடம் கூறியிருக்கலாமே. ஏனைய சிறுபான்மை யினர் உரிமைகளை எதிர்ப்பதில் அவர் ஏன் முஸ்லீம்களின் துணையை நாடினார்? சிறுபான்மையினர் உரிமைகளை மறுப்பது அவர் நோக்க மல்லவெனில், முஸ்லீம்களுக்குப் பெருஞ்சலுகைகளைக் காட்டித் தம்முடன் இத்தகைய ஒப்பந்தத்துக்கு இணங்க முன்வந்தது எதற்காக?

இரண்டாவது கேள்வி, முஸ்லீம்களின் பதினான்கு கோரிக்கை களை இந்தக் கட்டத்தில் காந்தியார் ஒப்புக்கொள்ள முன்வந்தது எதனால்? சரியோ, தவறோ, முஸ்லீம்களின் இந்தப் பதினான்கு கோரிக்கைகளை வேறெவருமே ஏற்கத் தயாராக இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் காந்தியார் மட்டும் அவற்றுக்கிணங்கத் தயாரானது, அதற்கு விலையாகப் பிற சிறுபான்மையினரையும் தீண்டப்படாதோரை யும் எதிர்ப்பதற்கு முஸ்லீம்களின் ஆதரவையும் திரட்டிக் கொள் வதற்காகத் தானே?

ஈங்கு, காந்தியார் உளமார்ந்த ஒப்பந்தம் எதனையும் செய்து கொள்ளும் நோக்குடன் செயல்படவில்லையென்றே கருதுகிறேன். ஏனைய சிறுபான்மையினர் தாழ்த்தப்பட்டோரின் உரிமைகளை மறுக்கும் சூழ்ச்சியில் கூட்டுச்சேரவே முஸ்லீம்களுக்கு வலைபோட்டுக் கொண்டிருக்கிறார் காந்தியார். எனவே, காந்தியாரின் திட்டம் முஸ்லீம் களோடு உடன்பாடு அல்ல; தீண்டப்படாதவர்களுக்கெதிரான சதியே. சதி என்று சொல்வதை விடவும் தாழ்த்தப்பட்டவர்களின் முதுகிலே குத்துதல் என்பதே பொருத்தமாயிருக்கும். இவ்வொப்பந்த முயற்சி வெற்றிபெறவில்லை. இதற்கான பல காரணங்களில் ஒன்று விசேடப் பிரதிநிதித்துவத்தின் பயன் தீண்டப்படாத மக்களுக்கு மட்டும் எதற்காக மறுக்கப்பட வேண்டுமென்பதை முஸ்லீம் பிரதிநிதிகளால் செரித்துக் கொள்ள இயலாமையே. முஸ்லீம்களோ, தங்களுக்குத் தனிப் பிரதி நிதித்துவம் வேண்டுமென்று போராடிக் கொண்டிருந்தனர். அத்துடன் பிரதிநிதித்துவ அளவும் தகுந்தவாறு இருக்க வேண்டு மென்றும் போராடிக் கொண்டிருந்தனர். முஸ்லீம்களுக்குத் தாம் ஒருகாலத்தில் இந்திய நாட்டை ஆண்டு கொண்டிருந்தவர்கள் என்ற அடிப்படையில் அரசியலில் முன்னுரிமைக்குத் தகுதி பெற்றவர்கள் என்ற எண்ண மிருந்தது; அத்துடன் நேரடியான தேர்தல்களில் போட்டியிட்டால் இந்துக்களே பெருவாரியான உறுப்பினர் பதவிகளை வென்று, அரசியலில் முஸ்லீம்களின் செல்வாக்கைப் போக்கடித்து விடுவார்கள்

என்ற அச்சமுமிருந்தது; அதனைத் தடுப்பதற்காகத்தான் தங்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் பெறுவதில் முனைப்பாக இருந்தனர். முஸ்லீம்கள் தனிப்பிரதிநிதித்துவம் கோருவதற்கான காரணங்களை விடத் தீண்டப்படாதோர் கோரிக்கைக்கு நூறுமடங்கு காரணங்கள் இருந்தன. எனவே முஸ்லீம்கள் எந்தமுகத்தோடு தீண்டப்படாத மக்களின் கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்க முடியும்?

இந்தக்கட்டத்தில் முஸ்லீம்கள் நிதானத்தையோ, நாண உணர்வையோ இழந்துவிடாமல் செயல்பட்டனர். நியாயமென்று நிறுவவோ ஏற்கவோ இயலாதவொரு செயல்பட்டில் பங்கேற்க மறுத்துவிட்டனர். இருப்பினும் உடன்பாட்டுக்காகக் காந்தியார் மூஸ்லீம்களை நச்சரித்துக்கொண்டிருந்தார். தமது உடன்பாட்டுக்கு பதிலாக அவர்களுக்குக் காந்தியார் விட்டுக்கொடுக்க முன்வந்த பதினான்கு கோரிக்கைகளையும் இவ்வழிப்பெறுதல் உடன்படிக்கையின் விலையாக அல்லாமல் பாவத்தின் சம்பளமாகவே உலகம் பழி தூற்றும் என்பதால் காந்தியாரின் வலையில் சிக்க அவர்கள் மறுத்துவிட்டனர். காந்தியார் முஸ்லீம்களின் மத உணர்வுகளைத் தூண்டியாவது தம்முயற்சியில் வெற்றிகாண முனைந்தார். வட்டமேசை மாநாட்டின் சிறுபான்மையோர் துணைக்குழுவின் முன்னர், சிறு பான்மையோர் ஒப்பந்தம்* வைக்கப்பட்ட, 1931 நவம்பர் 13ஆம் தேதிக்கு** முந்தையநாள் பிகாடிலியிலுள்ள ரிட்ஸ் ஓட்டலில் ரைட் ஆனரபிள் எச்.எச்.ஆகாகான் தங்கியிருந்த அறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த முஸ்லீம் பிரதிநிதிகளின் கூட்டத்திற்குக் காந்தியார் கையில் திருக்குரானின் படியொன்றை எடுத்துக்கொண்டு சென்றிருந் தார். அங்குக் குழுமியிருந்த முஸ்லீம் பிரதிநிதிகளைநோக்கி, ''தீண்டப் படாதவர்களின் தனிப்பிரதிநிதித்துவத்தை ஆதரிப்பதன் மூலம், நீங்கள் ஏன் இந்து சமுதாயத்தைப் பிளவுபடுத்த முனைகிறீர்கள்? இத்தகைய செயலைத் திருக்குரான் அனுமதிக்கிறதா? எந்தப்பகுதியில் அது அனுமதிக்கிறது என்று காட்டமுடியுமா? காட்ட முடியவில்லை யென்றால், உங்கள் உடன்பிறப்புகளாம் இந்து சமூகத்திற்கெதிரான கொடுங்குற்றத்தைக் கைவிட்டு விடுவீர்களா?'' என்று மன்றாடி னார். காந்தியாரின் இந்த வினாவிற்கு முஸ்லீம் பிரதிநிதிகள் என்ன பதிலளித்தார்கள் எனத் தெரியவில்லை. ஒருவேளை பதிலுக்காக

---

★ பி.ஆர்.அம்பேத்கரின், ''காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதோருக்கு சாதித்தது என்ன '' என்ற நூலின் பிற்சேர்க்கை III அச்சுப்பக்கங்கள் 307-11

★★ அதே நூலின் அச்சுப் பக்கம் 67

அவர்கள் திணறியும் இருக்கலாம். அவர்களது திருத்தூதர் நபியவர்கள் இத்தகையதோர் வினாவை எதிர்கொண்டிரார், ஆதலின் இத்தகையதொரு வினாவுக்குத் திருக்குரானில் விடையில்லாமலிருக்கலாம். இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலைகள் எழலாம் என்பதை அறிந்த நபியின் சீடர்கள், அச்சமயங்களில் என்ன செய்வது என்று நபி அவர்களைக் கேட்டனர். அதற்கு நபி அவர்கள், ''அது போன்ற சூழ்நிலைகளில் இஸ்லாத்துக்கு எதிரானவர்கள் (காபிர்கள்) என்ன செய்கிறார்கள் என்பதைப்பார்த்து அதற்கு நேர்முரணான வழியில் செயல்படுங்கள்'' என்று பதிலளித்தார்*. காந்தியாரின் வினாக்களுக்கு முஸ்லீம் பிரதிநிதிகள் இம்மாதிரியான அடிப்படையில் பதில் சொல்லியிருப்பார்களா என்பது என்னால் கூறஇயலாததவொன்று. நான் கேள்விப்பட்டதை மட்டுமே இங்கு எழுதுகிறேன்; ஆனால் எனக்குக் கிடைத்த தகவல் நம்பகமான இடத்திலிருந்து வந்தது என்பதை மட்டும் உறுதியாகக் கூறவியலும். மறுநாள் துணைக் குழுக் கூட்டத்தில் காந்தியார் தமது சினமுழுதும் திரட்டித் தீண்டப் படாதோரைக் கடுமையாகச் சாடிக்கொண்டிருந்தபோது, முஸ்லீம் பிரதிநிதிகள் அமைதி காத்ததிலிருந்து, அவரது உடன்பாட்டு முயற்சி தோல்வியுற்றதென்பதைப் புரிந்து கொண்டேன்.

பிரிட்டிஷ்காரர்கள் எதைச்செய்தாலும் கொள்கைவழி நின்றுதான் செயல்படுவார்கள் என்று பெர்னார்டு ஷா நையாண்டி செய்வார். காந்தியாரும் தமது செயல்கள் அனைத்தையும், நல்லொழுக்கம் நன்னம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலேயே செய்வதாகக் கூறிக்கொள்பவர்தாம். ஆனால் வட்டமேசை மாநாட்டில் காந்தியாரின் செயல்களில் நீதியும், நம்பிக்கையைக்காக்கும் பான்மையும் உளவா என்பதை எண்ணினால் வியக்கவேண்டியுள்ளது. இங்குச் சில உண்மைகளைக் கூறியாக வேண்டும்.

முதலாம் வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள இலண்டனுக்குப்புறப்படுமுன், நான் காந்தியாரைப் பம்பாயில் சந்தித்தேன். அப்போது வட்டமேசை மாநாட்டில் தீண்டப்படாதோர்க்காகத் தனிப்பிரதிநிதித்துவம் கோரப்போவதாக அவரிடம் தெரிவித்தேன். அதற்கு அவர் ஒப்புதல் அளிக்கவில்லையென்று கூறியதால், இது வெறும் கருத்து வேறுபாடு என்றுதான் கருதினேன். இரண்டாம் வட்டமேசை மாநாட்டில் ஒருமுறை தனியாகவும், ஒருமுறைச்

* திருக்குரானைக் காணுக

சிறுபான்மையினப் பிரதிநிதிகள் சிலருடனும் ஆக இருமுறை அவரைச் சந்தித்தேன்.

இரண்டாவது சந்திப்பின்போது, நானும் என்னுடன் வந்த சிறுபான்மையினத்தவர் பிரதிநிதிகளும் கூறியவற்றைக் கேட்டு விட்டு, தீண்டப்படாதவர்களின் சார்பாக நான் எழுப்பிய கோரிக்கை களைத்தாம் ஒப்புக்கொள்ளத் தயாரில்லை என்று கூறினார். பின்னர் 1931 செப்டெம்பர் 28ஆம் தேதி சிறுபான்மையினர் துணைக்குழு கூட்டப்பட்டது. கூட்டத்தின் அக்டோபர்(1931) முதல் தேதியமர்வில் காந்தியார் பின்வரும் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்:

★ ''பிரதம அமைச்சர், மேன்மை தங்கிய ஆகாகானுடனும், பிற முஸ்லீம் நண்பர்களுடனும், நேற்றிரவு நடத்திய கலந்தாலோசனையில், இக்குழு கூட்டப்பட்டதன் நோக்கம், செம்மையாக நிறைவேறும் பொருட்டு இக்கூட்டத்தை ஒருவார காலத்திற்குப் பின்னர் நடத்தவேண்டிருக்குமென முடிவுசெய்தோம். என்னுடைய கட்சியினரைக் கலந்தாலோசிக்க வாய்ப்பில்லாமல் போய்விட்ட தெனினும், அவர்களும் இவ்வேண்டுகோளுக்கு உடன்படுவார்களென நம்புகிறேன்''.

ஆகாகான் இதனை வழிமொழிந்தார். உடனே நான் எழுந்து நின்று அத்தீர்மானத்தை எதிர்த்துக் கீழே கண்டவாறு பேசினேன். ★

★ ''**டாக்டர் அம்பேத்கர்:** இக்குழு எடுத்துகொண்டிருக்கும் பணியில் வெற்றிகரமான தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சிக்கும் நான் தடையாக இருக்கமாட்டேன். காந்தியார் முன்மொழிந்தவாறு ஒருவாரம் தள்ளிப்போடுவது நல்ல தீர்வுக்கு வழிவகுக்குமெனில், அதற்கும் நான் மறுப்பு தெரிவிக்கமாட்டேன்.

ஆனால், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதியாய் இங்கு வந்துள்ள எனக்கு ஒரேயொரு இடர்பாடு குறுக்கிடுகின்றது. இந்த ஒருவார காலத்தில் காந்தியார் எத்தகைய குழு அமைத்து இச்சிக்கல் களைப்பற்றி ஆராயப்போகிறார் என்பது எனக்குத் தெரியவில்லை.

---

★ இங்குச் சுட்டப்படும் நிகழ்ச்சிப் பதிவுகள் அம்பேத்கரின் ''காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதோருக்கு சாதித்தது என்ன'' என்ற நூலிருந்து எடுக்கப்பட்டவை; அச்சுப் பக்கங்கள் 60-62.

எனினும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கும் அக்குழுவில் இடமிருக்குமென்று நம்புகிறேன்.''

**காந்தியார்:** அதிலொன்றும் ஐயமில்லை''

**டாக்டர் அம்பேத்கர்:** நன்றி. ஆனால் இன்றுள்ள எனது சூழ்நிலையில் நான் அக்குழுவில் இணைந்து பணியாற்றுவதில் பயனேதும் இருக்குமா என்று தெரியவில்லை. மகாத்மா காந்தி கூட்டாட்சி அமைப்புக்குழுவின் முதல்நாள் கூட்டத்திலேயே காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதி என்ற முறையில் தாம், முஸ்லீம் களையும் சீக்கியர்களையும் தவிரப் பிறிதெந்த சமுதாயத்தினருக்கும் அரசியல் அங்கீகாரம் தர தயாராயில்லை என்று கூறியுள்ளமை யாலேயே இவ்ஐயம் எழுகிறது. ஆங்கிலோ இந்தியர்கள் தாழ்த்தப் பட்ட வகுப்பினர், இந்தியக் கிறித்தவர் ஆகிய எவருக்கும் அங்கீகாரம் தர அவர் தயாராயில்லை. மற்றொரு செய்தியையும் இவ்வவையில் கவனத்திற்குக் கொணர்வதில் பண்பாட்டுக் குறை வேதும் இல்லை யென நம்புவதால் இங்கு அதனைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒருவாரகாலத்திற்குமுன்னர் நான் மகாத்மா காந்தி அவர்களைச் சந்தித்தபோதும், நேற்று வேறுசில சிறுபான்மை இனப்பிரதிநிதி களுடன் அவரைச் சந்தித்தபோதும், காந்தியார் கூட்டாட்சி அமைப்புக் கூட்டத்தில் தாம் கூறிய கருத்துக்களில் இன்னமும் உறுதியாக இருப்பதாகவும், அதில் மாற்றம் என்பதற்கே இடமேதும் இல்லை என்பதாகவும் தெரிவித்தார். இங்கு நான் குறிப்பாகக் கூற விரும்புவ தென்னவெனில், உருவாகிக் கொண்டிருக்கும் இந்திய அரசிய லமைப்புச் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களையும் ஓர் அரசியல் உறுப்பாக ஒப்புக்கொள்வதா யிருந்தாலன்றி, மகாத்மா காந்தியவர்கள் அமைக்கவிருக்கும் குழுவில் நான் சேர்ந்து பணியாற்றுவதால் எவ்விதப் பயனும் விளையப் போவதில்லையென்றே நம்புகிறேன். ஆகவே, கடந்த ஆண்டில் சிறுபான்மையோர் துணைக் குழுவால் அரசியல் அங்கீகாரத்துக்குத் தகுதி வாய்ந்தவை எனப் பரிந்துரைக்கப் பட்ட சிறுபான்மையினத்தவர் அனைத்தும் குழுவின் கருத்துவரம்பில் அடங்குமென்று உறுதிமொழி தரப்பட்டாலன்றி இந்த ஒத்திவைப்பு ஆலோசனைக்கு என்னால் முழுமனத்தோடு சம்மதிக்க இயலாது; அமைக்கப்படவுள்ள துணைக் குழுவோடு உளமார ஒத்துழைக்கவும் இயலாது என்பதை மிகவும் தெளிவாக உரைக்க விரும்புகிறேன்.

★ ★ ★ ★

''**டாக்டர் அம்பேத்கர்:** என்னுடைய நிலையை நான் மேலும் தெளிவாக்க விரும்புகிறேன். நான் இங்குக் கூறியதைப் பற்றி ஏற்பட் டுள்ள தவறான கருத்துகளைத் திருத்த விரும்புகிறேன். நான் குழுக்

கூட்டத்தை ஒத்திவைப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவுமில்லை; அமைக்கப்படவுள்ள துணைக்குழுவில் இணைந்து பணியாற்ற மறுப்புத் தெரிவிக்கவுமில்லை. இக்குழுவில் பணியாற்றும் சிறப்பான பொறுப்பு எனக்குக் கொடுக்கப்பட்டால், அப்பொறுப்பினை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக, ''குழு எதைப்பற்றி ஆராயப்போகிறது? இந்துக்கள்-முஸ்லீம்களுக்கிடையிலான சிக்கல்களைப்பற்றி மட்டுமே ஆராயப்போகிறதா? பஞ்சாபில் சீக்கியர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையேயான சிக்கல்களைக் குறித்து ஆராயப்போகிறதா? அல்லது கிறித்தவர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் - ஆகிய சிறுபான்மையினத்தினர் அனைவரின் சிக்கல்களையும் குறித்து ஆராயப்போகிறதா?'' என்பன போன்ற ஐயங்களுக்குத் தெளிவான பதிலை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

''அமைக்கப்படவிருக்கும் துணைக்குழு, இந்து-முஸ்லீம் சிக்கல்களையும், முஸ்லீம்-சீக்கியர் சிக்கல்களையும் பற்றி மட்டும் ஆய்வதுடன் நின்றுவிடாமல், தாழ்த்தப்பட்ட மக்கள், ஆங்கிலோ-இந்தியர்கள், கிறித்தவர்கள் ஆகியோர் சிக்கல்களைப் பற்றியும் ஆய்ந்து தீர்வு பரிந்துரைக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்கிறது என்னும் உறுதி மொழி இங்கு தெரிவிக்கப்பட்டால்தான், வேறெந்த மறுப்பின்றி ஒத்திவைப்பு ஆலோசனைக்கு இணக்கம் தெரிவிக்க இயலும். என்னைப் புறக்கணித்துவிட்டுத், தாழ்த்தப்பட்டோர் நலன்களையும் புறக்கணித்து விட்டு, இந்து-முஸ்லீம் சிக்கல்களில் உடன்பாடு எய்துவதற்காக ஒருவார கால இடைவெளி பயன்படுத்தப் படுமெனில், முதன்மைக் குழுவே தாழ்த்தப்பட்டோர் நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்கான தீர்வுகளை ஆராய வேறொரு துணைக்குழு அமைத்துப் பொறுப்பளிக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன்.

குழுத் தலைவரான பிரதம அமைச்சர் இதற்கு விளக்கம் அளிக்குமாறு காந்தியாரைக் கேட்டுக்கொள்ளக் காந்தியார் அளித்த விளக்கம் வருமாறு:*

''பிரதம அமைச்சர் அவர்களே! நண்பர்களே! எங்களில் சிலர் எடுத்துக் கொண்டுள்ள நிலை குறித்துத் தவறாகப் புரிந்து கொள்ளப் பட்டுள்ளது என்பதை உணர்கிறேன். என்ன நடக்கிறது என்பதைப் பற்றி டாக்டர் அம்பேத்கர், கர்னல் கிட்னே உள்ளிட்ட பல நண்பர்கள்

---

★ ''காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதோருக்குச் சாதித்தது என்ன'' என்ற நூலின் அச்சுப் பக்கம் 62.

தேவையற்ற வகையில் உணர்ச்சிவயப்பட்டுள்ளார்களோவென அஞ்சுகிறேன். இந்தியாவில் எந்தவொரு குழுவுக்கோ, வகுப்புக்கோ, ஏன் தனியொரு மனிதருக்கோ அரசியல் தகுதியை மறுப்பதற்கு நான் யார்? எந்த வகையிலான நாட்டு நலனையும் பலியிடும் குற்றத்தில் நான் ஈடுபடுவேனாயின் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதி என்ற முறையில் என்மீது வைக்கப்பட்ட நம்பிக்கைக்கே கேடு சூழ்ந்தவனாவேன். ஆனால் இங்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள சிக்கல்களைப்பற்றி எனது கருத்துகளையே அழுத்தந்திருத்தமாக எடுத்துரைத்துள்ளேன். அதற்கு எனக்கு உரிமை உண்டு அல்லவா? இக்கருத்துக்களை நான் வலிமையாகப் பற்றியுள்ளேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஒவ்வொரு தனித்த நலனையும் பாதுகாக்க வேறுபல வழிவகைகள் உண்டு. இவற்றை எய்துவதற்கான திட்டங்களை வகுக்க இங்குக் கூடியுள்ள நாமனைவரும் கூடிக்கலந்து முயலுதல் நமது கடமையாகும். இம்மாநாட்டிலும், வெளியில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டங் களிலும் தத்தம் கருத்தை அழுத்தந்திருத்தமாக எடுத்துரைக்க ஏனைய உறுப்பினர்களுக்கும் உரிமையுண்டு.''

''ஆகையால், தமது கருத்துகளைத் தெள்ளத் தெளிவாக அவையில் எடுத்துரைக்கவும், அவையோரை ஏற்கச்செய்யவும் வாய்ப்பு கிட்டாமல் போய்விடுமென்று எந்தவொரு உறுப்பினரும் அஞ்சத் தேவையில்லையென்றே கருதுகிறேன். இவ்வாறு ஒவ்வொரு உறுப் பினருக்கும் உள்ள உரிமையைத்தான் நானும் எடுத்துக் கொண்டேன்; ஏனைய உறுப்பினர்களின் கருத்துகளைவிட எனது கருத்துக்கு மதிப்பு மிகுதியாகக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் நான் எதிர்பார்க்க வில்லை. மற்றொருவரின் கருத்தைவிட மேலாக எனது கருத் துக்கு முதன்மை தரப்பட வேண்டுமென்று கோரும் செல்வாக்கும் எனக்கில்லை. நாட்டு நலனுக்கு உகந்தது என்று எனக்குத் தோன்று வதையே நான் எடுத்துரைக்கிறேன்; எங்கெங்கு வாய்ப்புக் கிடைக் கிறதோ, அங்கெல்லாம் எனது கருத்துக்களை அழுத்தமாகக் கூறிக் கொண்டுதான் இருப்பேன். அக்கருத்துகளை ஏற்றுக் கொள்வதோ, தள்ளிவிடுவதோ உங்கள் விருப்பம். எனது முன்முயற்சி யின்பேரில் நடைபெறும் துணைக்குழுக்கூட்டங்களில் எவரது கருத்தும் நசுக்கியொடுக்கப்படும் என்ற அச்சத்தைப் போக்கிக் கொள்ளுமாறு நம்மில் ஒவ்வொருவரையும் கேட்டுக்கொள்கிறேன். மாநாட்டு மேசையில் விறைப்பாக அமர்ந்து நடத்தும் உரத்த சிந்தனையை விடத் தளர்ந்த சூழலில் நெருங்கியமர்ந்து கூட்டாகச் சிந்திப்பது நல்லதொரு மாற்றுவழி என்பதை ஏற்றுக் கொள்வீர்களாயின், இவ்வொத்திவைப்புத் தீர்மானத்தை நீங்கள் நிறைவேற்றாவிட்டாலும், துணைக்குழுக் கூட்டங்களைப்

பற்றி நான் தெரிவித்த ஆலோசனைக்கு உங்கள் உளமார்ந்த ஒத்துழைப்பைத் தருமாறு அனைவரையும் வேண்டுகிறேன்''.

★★★

இந்த விளக்கத்திற்குப் பிறகு நான் எனது மறுப்பை விலக்கிக் கொண்டேன்.

இவ்வாறாக தீண்டப்படாதோரின் கோரிக்கைகளை ஏனையோர் அனைவரும் ஏற்றுக்கொண்டால் தாம் தடையாயிருக்கப் போவதில்லை என மாநாட்டு உறுப்பினர்கள் நடுவே வெளிப் படையாக வாக்குறுதி கொடுத்தார் காந்தியார். ஆனால் இவ் வாக்குறுதியைக் கொடுத்த கையோடு தாழ்த்தப்பட்டோரின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டாமென முஸ்லீம்களைத் தூண்டுவதில் ஈடுபட்டதன்றியும், முஸ்லீம்களை அவர்கள் அளித்த வாக்குறுதியிலிருந்து பின்வாங்கச் செய்வதற்காக (சலுகைகள் வடிவில்) கையூட்டளிக்கவும் முனைந்தார். இது தன்னம்பிக்கையைக் காப்பாற்றும் செயலா? அல்லது நம்பிக்கைத் துரோகமா? இது நம்பிக்கைத் துரோகம் இல்லையெனில் நம்பிக்கைத் துரோகம் என்பதற்குப் பொருள்தான் என்னவென எண்ணி வியக்கிறேன்.

சிறுபான்மையோர் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதற்காக மிகக் காட்டமாகப் பழிதூற்றப்பட்டேன்; அவ்வொப்பந்தத்தில் கையொப்ப மிட்டதற்காக நான் ஒருபோதும் வெட்கமுற்றதில்லை; மாறாக என்னைச் சாடியவர்களின் அறியாமையை எண்ணி இரக்கம்தான் கொண்டேன். அயர்லாந்து நாட்டு தன்னாட்சியுரிமை (ஹோம் ரூல்) இயக்கத்தின்போது, அல்ஸ்டர் மக்கள் (அயர்லாந்துச் சிறுபான்மை யினர்) தனியே பிரிந்துபோகாமலிருக்க, தன்னாட்சி இயக்கத்தின் சார்பில் ரெட்மாண்டு என்பவர் அல்ஸ்டர் மக்களின் நலன் காக்க அனைத்துப் பாதுகாப்புகளும் உறுதிசெய்யப்படுமென்று கூறியபோது, அல்ஸ்டர் மக்கள், ''உங்கள் பாதுகாப்புகளைக் குப்பையில் போடுங்கள்; உங்கள் ஆளுகையின் கீழ் வாழ நாங்கள் விரும்பவில்லை'' என்று பதிலளித்தனர். சிறுபான்மையினத்தவரின் கண்ணோட்டம் இதே தன்மையில் தான் அமையவியலும் என்பதை என்னைச் சாடியவர்கள் மறந்துவிட்டனர். ஆனால் இந்தியச் சிறுபான்மையினத்தவர்கள் இத்தகைய மனப்பான்மை எதையும் காட்டமலிருப்பதற்காக இந்துக்கள் தான் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள். அவ்வொப்பந்தத்தில் காணப்படுவதெல்லாம் நலன்காப்பு வாக்குறுதி களன்றிப் பிறிதேதும் இல்லை. இதற்காகச் சிறுபான்மையோருக்கு நன்றி செலுத்துதற்கு மாறாகக் காந்தியார் தமது சினத்தை எல்லாம்

ஒரு சேரத் திரட்டி ஒப்பந்தத்தையும், ஒப்பந்தத்தை உருவாக்கியவர்களையும் பின்வருமாறு சாடினார்:

"இவ்வொப்பந்தம்* குறித்துப்பேசுங்கால், சர் ஹியூபர்ட் கார் தெரிவித்த நன்றியை ஏற்றுக்கொள்கிறேன். துணைக்குழு அமைக்கும் தறுவாயில் நான் அளித்த வாக்குறுதியும், சிறுபான்மையோர் நலன் குறித்துத் தீர்வு காண்பதில் நான் முழுமையாகத் தோல்வியடைந்ததுமே, இத்தகைய அருமையானதோர் ஒப்பந்தந்தத்தைத் தாங்கள் ஏனைய சிறுபான்மையரோடு சேர்ந்து உருவாக்க வழி வகுத்தது என்று சர் ஹியூபர்ட் கார் பெருமைப்பட்டுக் கொண்டு குழுவின் ஒப்புதலுக்காக வும், தொடர்ந்து இறுதியாக ஆங்கில அரசின் பரிவுக்கும் ஒப்புதலுக்கும் முன் வைத்துள்ளனர்."

"சர் ஹியூபர்ட் காரும் அவருடன் கூடி ஒப்பந்தத்தை உருவாக்கிய துணைவர்களும் இவ்வாறு பெருமைப்பட்டுக்கொண்டு மனநிறைவு காண்பதில் எனக்கு வருத்தமில்லை. ஆனால் அவர்கள் சாதித்துள்ளது என்னவென்றால், வீழ்ந்துகிடக்கும் பிணத்தைச் சுற்றிச்சூழ்ந்து அதனைக் கூறுபோட்டு பங்கெடுத்துக்கொள்ளும் அருஞ்செயல்தான்."

காந்தியார் இவ்வாறு கொதிப்படைவதற்கு அவருக்கு உரிமை ஏதேனும் உண்டா?; தாம் அறம் தவறிய வழியில் பாதிக்கப்பட்டதாக எண்ணுதற்கு இடமுண்டா? சிறுபான்மையோர் மீது கல்வீசுதற்கு அவர் எந்தவிதத்தில் தகுதி பெற்றுள்ளார்? சிறுபான்மையோர் குற்றவாளிகள் என்றால் காந்தியார் நீதிஉணர்வை நீத்துப்பழி புரிந்தமையால் அவர்களினும் கொடிய குற்றவாளியன்றோ? சிறுபான்மையோரின் செயல், பிணத்தின் மீது விழுந்து பிடுங்கித் தின்பதற்கொப்பானதென்றால், காந்தியார் மட்டும் வேறு என்ன விதமான செயலில் ஈடுபட்டிருப்பதாக எண்ணிக்கொண்டிருக்கிறார்? காந்தியாரும் பிணத்தின் மீதும் விழுந்து பிடுங்கித் தின்னும் செயலில்தான் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார். ஆனால் காந்தியாருக்கும் சிறுபான்ளையினருக்குமிடையேயான ஒரே வேறுபாடு இதுதான். பிணத்தைப் பிடுங்கித் தின்பதில் இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள் ஆகிய மூன்று குழுக்களுக்கு மட்டும் பங்கு கிடைத்தால் போதுமென காந்தியார் விரும்புகிறார்; சிறுபான்மையினரோ

★ சிறுபான்மையோர் ஒப்பந்தம்

மற்றவர்களுக்கும் அதில் கொஞ்சம் பங்கு தரவேண்டுமென்று கேட்கின்றனர். இவ்விருதரப்பினரில் எவர் தமது கோரிக்கை நியாயத்தின் பக்கம் இருப்பதாகக் கருதத் தகுதியுள்ளவர்? நன்கு தின்று கொழுத்த வலிமை வாய்ந்த ஓநாய்களுக்கிடையே மட்டும் பிணத்தைப் பங்குபோட்டால் போதுமென்று கருதும் காந்தியாரா? பசித்து மெலிந்து வாழும் சிறுவிலங்குகளுக்கும் சிறிதளவு பங்கு வேண்டுமெனக் கோரிடும் சிறுபான்மையினரா? இந்த முரண்பாட்டில் காந்தியாரின் தரப்பில்தான் நீதி இல்லை எனத் துணிந்து கூற முடியும்.

தீண்டப்படாத மக்களின் நலன்களுக்குத் தீண்டப் படாத மக்களைவிடவும் தாமே சிறந்த காவலர் என்று உரிமை கொண்டாடு கிறார் காந்தியார். அப்படிக் கூறிக்கொள்ளும் இந்த பாதுகாவலர்தான் நேர்மை, நீதி, தேவை ஆகிய அடிப்படை களுக்கெல்லாம் புறம்பாக, அவர்களது பிரதிநிதித்துவக் கோரிக்கையை எதிர்க்கிறார். சமூகக் கொடுங்கோன்மை, சமுதாய ஒடுக்குமுறை ஆகியவற்றுக்கெதிரான பாதுகாப்புக்கு தனிப்பிரதிநிதித்துவம் ஒன்றுதான் உகந்த வழியென்ற நிலையில் அதைத் தடுப்பதற்காகச் சீக்கியர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் அரசியல் அதிகாரத்தில் பெரும் பங்கினையளிக்க முன்வந்தார். நல்லவசதியான வாழ்க்கைநிலை பெற்றவர்களுக்கெல்லாம் அரசியல் அதிகாரத்தில் பங்கிருக்க ஏழ்மையிலும் தாழ்மையிலும் வாடும் தீண்டப்படாதோர் மட்டும் தமது காங்கிரஸ் கட்சியின் பாதுகாப்பின்கீழ், தமது வாழ்வுக்கும் உரிமைக்கும் பாதுகாப்பு ஏதுமின்றி மேல்சாதி இந்துக்கள் இழைக்கும் கொடுமைகளையும் அவமானங்களையும் பொறுத்துக் கொண்டு ஒவ்வொரு கணமும் அடக்கு வன்முறையை எதிர்நோக்கும் அச்சத்தில் வாழ்ந்துகொண்டிருக்க நேரிடும் என்பதுதான் காந்தியார் திட்டத்தின் நோக்கமும் பயனுமாகும். இவற்றில் இருந்து தப்பி உய்வதற்காகத் தீண்டப்படாத மக்கள், வெளியார் உதவியை நாடமுற்பட்டபோதுதான் இந்தக்கொடுமையான துரோகச்செயலில் காந்தியார் ஈடுபட்டார். எனவே காந்தியார் வட்டமேசை மாநாட்டி லிருந்து திரும்பியபோது உலகறிய அவர்மீது குற்றப்பத்திரிக்கை அறிவித்தது தவறாகுமா?

□□□

## இயல் 25

# காந்தியும் அவரது உண்ணாவிரதமும்

### I. புனா ஒப்பந்தம். II. ஹரிஜன சேவா சங்கம் III. ஆலயங்களும் தீண்டப்படாதோரும் IV. காந்திவழி

வகுப்புப்பிரச்சினை என்னும் பாறை மீது மோதிதான் இந்திய வட்டமேசை மாநாடு என்னும் கப்பல் உடைந்து நொறுங்கியது. பெரும் பான்மை சமூகத்தினருக்கும் சிறுபான்மை சமூகத்தினருக்கும் இடையே உடன்பாடு ஏற்படாததன் காரணமாகவே இம்மாநாடு தோல்வி அடைந்தது. சுதந்திர இந்தியாவின் சட்டமன்றங்களில் தங்களுக்கு விசேடப் பிரதிநிதித்துவம் அளித்து, தங்கள் நிலை பாதுக்கப்பட வேண்டும் என்று இந்தியாவின் சிறுபான்மை சமூகத்தினர் வலியுறுத் தினர். முஸ்லீம்கள், சீக்கியர்கள் விஷயத்தில் தவிர இத்தகைய ஒரு கோரிக்கையை ஏற்றுக்கொள்ள காங்கிரசின் பிரதிநிதியான திரு.காந்தி தயாராக இல்லை. முஸ்லீம்கள், சீக்கியர்கள் விஷயத்திலும்கூட சட்டமன்றங்களில் இச்சமூகத்தினருக்கு ஒதுக்கும் இடங்களின் எண் ணிக்கை சம்பந்தமாகவும், சட்டமன்றங்களின் இயைபு அல்லது அமைப்பு குறித்தும் உடன்பாடு ஏற்படவில்லை.

இவ்வாறு முழுமையான ஒரு முட்டுக்கட்டை நிலைமை உரு வாயிற்று. உடன்பாடு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு ஏதும் தென்பட வில்லை. இந்நிலைமையில் வேறுவழியின்றி இயல்பாகவே மத்திய ஸ்தத்தின் மீது நம்பிக்கை வைக்கப்பட்டது. இதனை எல்லோருமே ஏற்றுக் கொண்டனர்; ஆனால் நான் மட்டும் ஒப்பவில்லை. எனவே இறுதியில் இப்பிரச்சினை பிரிட்டிஷ் பிரதமர் திரு.ராம்ஸே மக்டொனால்டுவின் முடிவுக்கு விடப் பட்டது.

முதல் வட்டமேசை மாநாடு லண்டன் மாநாகரில் நடைபெற்றது. இம்மாநாட்டில் பங்குகொண்ட பிரதிநிதிகளால் வகுப்புப் பிரச்சினைக்கு ஓர் உடன்பாடான தீர்வு காண இயல வில்லை. திரு.காந்தியின் ஆதரவாளர்கள் இந்தப் பிரதிநிதிகளைக் கடுமையாக சாடினர்; இவர்கள் பிரதிநிதித்துவமற்றவர்கள், எவருக்கும் பொறுப்புக் கூறக் கடமைப்படாதவர்கள், பிரிட்டிஷாரின்

கைக்கூலிகள், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்ட வர்கள், அவர்களது கைப்பொம்மைகளாக இருந்து திட்டமிட்டே ஒற்றுமையைக் குலைத்து வருகிறார்கள். ஐக்கியத்தைக் குழி தோண்டிப் புதைத்து வருகிறார்கள், இத்தகையவர்களிடமிருந்து நல்லது எதுவும் எதிர்பாக்க முடியாது என்று குற்றம்சாட்டினர்; பழிசுமத்தினர். அதுமட்டுமல்ல, திரு.காந்தி வரப்போகிறார் என்றும், அவரது அரசியல் மேதைமை, நயத்திறம் இந்தப்பிரச்சினைக்கு ஏற்புடையதோர் தீர்வு காணப்போகிறது என்றும் அவர்கள் உலகுக்கு பறை சாட்டினர்; மார்தட்டினர். ஆனால் நடந்தது என்ன? இந்தப் பிரச்சினையில் திரு.காந்தி தமது கையலாகாத்தனத்தைப் பகிரங்க மாகவே ஒப்புக்கொண்டார்; பிரதமர் தலையிட்டு மத்தியஸ்தம் செய்ய வேண்டுமென்று முன்வைக்கப்பட்ட வேண்டுகோளில் சேர்ந்துகொண்டார். இது அவருடைய நண்பர்களுக்குப் பெருத்த அவமானமாக ஆயிற்று; தலைக்குனிவாயிற்று.

இது எப்படியிருப்பினும், இந்த மாநாடு தோல்வியடைந்தது என்றால் அதற்கு முற்றிலும் திரு.காந்தியின் தவறே காரணம். இது மிக முக்கியமான மாநாடு; இந்தியாவின் பலதரப்பட்ட நலன்களை இணங்கவைக்கும், பல்வேறு இனமக்களின் ஆர்வ விருப்பங்களை, அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் ஒரு சிறந்த, உகந்த அரசியல் சட்டத்தை உருவாக்குவதெற்கென்று, வகுப்பதற்கென்று, கூட்டப்பட்ட மாநாடு இது. இத்தகைய சிறப்புமிக்க ஒரு மாநாட்டுக்கு திரு.காந்தியை விட மிகவும் அறியாமையில் மூழ்கிப்போன, பெரிதும் நயநிறமற்ற வேறொரு பிரதிநிதியை அனுப்பியிருக்க முடியாது. அந்த அளவுக்கு திரு.காந்தி அரசியல் சட்டத்தைப் பற்றியோ, நிதி விவகாரங் களைப்பற்றியோ அறவே அறியாதவர்; புரியாதவர். அவர் விவேகத்தின் ஆற்றலில் நம்பிக்கை இல்லாதவர்; உண்மையைக் கூறுவதாயின் அவர் அதனைப் பெரிதும் வெறுப்பவர்; எனவே, நாட்டின், மக்களின், சமுதாயத்தின் இடர்ப்பாடுகளுக்கு இக்கட்டுகளுக்கு, இன்னல் களுக்குத் தீர்வு காணுவதில் அவரது பங்கு பூஜ்யமாகவே இருந்து வந்திருக்கிறது. அவர் இங்கிதம் தெரியாதவர். இதனால்தான் மற்றவர்கள் எல்லாம் வெறும் செல்லாக்காசுகள், தான் ஒருவன் மட்டுமே கணக்கி லெடுத்துக் கொள்ளத்தக்கவன், காரியங்களை வெற்றிகரமாக்ச் சாதிக்க வல்லவன் என்றெல்லாம் அடிக்கடி பெருமைபேசிக் கிட்டத்திட்ட அனைத்துப் பிரதிநிதிகளின் மனத்தையும் நோகடித்து விட்டார்; முதல் வட்டமேசைமாநாட்டில் வகுப்புப் பிரச்சினைக்குறித்து பிரதிநிதிகளால் ஓர் உடன்பாட்டிற்கு வரஇயலவில்லை. ஆனால் ஏறத்தாழ ஓர் உடன்பாட்டிற்கு வரும் கட்டத்தை அவர்கள் எட்டிவிட்டார்கள்

என்பதில் ஐயமில்லை. இதனால்தான் மாநாட்டில் கலந்து கொண்டு விட்டுச் செல்லும்போது, இப்பிரச்சினைக்கு ஓர் இணக்கமான தீர்வு காணும் நம்பிக்கையை அவர்கள் இழந்துவிடவில்லை. ஆனால் இரண்டாவது மாநாட்டில் இந்நம்பிக்கையைத் திரு.காந்தி தூள் தூளாக்கிவிட்டார்; மாநாட்டில் மிகுந்த மனக்கசப்பை உண்டு பண்ணி விட்டார்; இதனால் சமரசத்துக்கு இடமில்லாமல் போயிற்று; இந்நிலையில் மத்தியஸ்தத்தை நாடுவதை தவிர வேறுவழியில்லை.

வட்டமேசை மாநாட்டின் வேண்டுகோளுக்கு இணங்க பிரதமரும் மத்தியஸ்தம் செய்யமுன்வந்தார்; வகுப்புப்பிரச்சினையைத் தீர்க்கமாக ஆராய்ந்து, 1932 ஆகஸ்டு 17ஆம் நாளன்று தமது முடிவை வெளியிட்டார். தீண்டப்படாதோரைப் பொறுத்தவரையில் அவரது தீர்ப்பின் விவரம் வருமாறு:*

## மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கம் வழங்கிய வகுப்புவாரித் தீர்ப்பு 1932

வட்டமேசை மாநாட்டின் இரண்டாவது கூட்டத்தொடரின் இறுதியில் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசின் சார்பில் கடந்த டிசம்பர் முதல் தேதியன்று பிரதமர் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அந்த அறிக்கை உடனடியாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வகுப்புப் பிரச்சினைகள் குறித்து அனைத்துக் கட்சிகளுக்கும் ஏற்புடையதான ஓர் உடன்பாட்டைக்காண மாநாடு தவறிவிட்டது; இதன் காரணமாக இந்தியாவின் அரசியல் சட்ட முன்னேற்றம் எவ்வகையிலும் தடைபடக்கூடாது என்பதிலும் பிரச்சினையை நுணுகி ஆராய்ந்து, ஓர் இடைக்காலத் திட்டத்தை வகுத்து, இத்தடையை அகற்ற வேண்டும் என்பதிலும் மாட்சிமை தங்கிய மன்னர்பிரான் அரசாங்கம் உறுதி கொண்டுள்ளது. இவ்வாறு அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

2. இந்தியாவின் பல்வேறு சமூகத்தினர் இப்பிரச்சினையில் ஓர் உடன்பாட்டுக்கு வர தொடர்ந்து தவறிவருவதால், ஒரு புதிய

* வகுப்புவாரித் தீர்ப்பின் பின்வரும் விவரம் கையெழுத்துப் படியில் இல்லை. ஆசிரியர் எழுதிய ''தீண்டப்படாதோருக்கு காங்கிரசும் காந்தியும் சாதித்தது என்ன'' என்னும் நூலிலிருந்து இப்பகுதி இங்கு வெளியிடப்பட்டிருக்கிறது (தாக்கர் அண்ட் கோ லிமிடெட், முதல்பதிப்பு, ஜுன் 1945, பக்கங்கள் 80-82.) - பதிப்பாசிரியர்.

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் திட்டங்களின் முன்னேற்றம் பெரிதும் தடைபடுகிறது என்று தெரிவிக்கப் பட்டதைத் தொடர்ந்து, மிகவும் சிறக்கலான, கடினமான, பெரும் சர்ச்சைக்குரிய இப் பிரச்சினையைத் தாங்கள் மீண்டும் மிகக் கவனமாகப் பரிசீலித்து ஆராய்ந்து வருவதாக கடந்த மார்ச் 13ஆம் தேதி அன்று மன்னர் பிரான் அரசாங்கம் அறிவித்தது. புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் சிறுபான்மை யினரின் நிலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் குறைந்தபட்சம் சில அம்சங் களைப்பற்றியாவது ஒரு முடிவுக்கு வரவில்லை என்றால் அரசிய லமைப்புச் சட்டத்தை வகுக்கும் பணியில் மேற்கொண்டு முன்னேற முடியாது என்பதை அரசாங்கம் இப்போது நன்கு உணர்ந்துள்ளது.

3. இதன்படி, கீழே தெரிவிக்கப்பட்டிருக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான வழிவகை ஏற்பாடுகளை இந்திய அரசிய லமைப்புச் சட்டம் சம்பந்தமாக விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பிரேரணைகளில் சேர்ப்பது என மன்னர் பிரான் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. அரசியலமைப்புச்சட்டம் வகுக்கப்படும் காலத்தில் சிறுபான்மையினருக்கு மிகுந்த முக்கியத் துவம் வாய்ந்த இதர ஏராளமான பிரச்சினைகள் குறித்து முடிவெடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும் என்பதை அரசு உணரத் தவறவில்லை என்பதனையே இத்திட்டத்தை வரை யறைக்குட்படுத்தும் முடிவு குறிக்கிறது. மேலும், பிரதிநிதித் துவத்தின் வழிமுறை, விகிதாசாரங்கள் போன்றவற்றை அறிவித்து விட்டால், இன்னமும் பரிசீலிக்கப் படாத இதர வகுப்புப் பிரச் சினைகளுக்குச் சம்பந்தப்பட்ட சமூகத்தினரே ஒரு சமரச முடிவு காண்பது சாத்தியமாகும் என்ற நம்பிக்கையின் அடிப்படை யிலேயே இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

4. மன்னர்பிரான் அரசு பின்கண்டவற்றை மிகவும் தெளிவு படுத்த விரும்புகிறது: தான் எடுத்த முடிவைத் திருத்தும் நோக்கத் தோடு மேற்கொள்ளப்படும் எந்தப் பேச்சு வார்த்தைகளிலும் அது தானாகவே முன்வந்து கலந்து கொள்ளாது; சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரின் ஆதரவைப்பெறாமல் இந்த முடிவை மாற்றுவதற்கு வைக்கப்படும் எந்த கோரிக்கையையும் அது பரிசீலிக்காது. ஆனால் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் ஓர் உடன்பாட்டை அது மகிழ்ச்சியோடு வரவேற்கும்; இத்தகைய முயற்சிக்கு அது எவ்வகையிலும் தனது கதவுகளை மூடாது. எனவே, ஒரு புதிய இந்திய அரசாங்க மசோதா சட்டமாக்கப் படுவதற்கு முன்னர், கவர்னர்களது ஆளுகையின் கீழ் உள்ள ஒன்று

அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்கள் குறித்தோ, அல்லது பிரிட்டிஷ் இந்தியா முழுவதும் குறித்தோ, நடைமுறை சாத்திய மான ஒரு மாற்றுத் திட்டத்தை சம்பந்தப்பட்ட சமூகத்தினர் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்று மன்னர் பிரான் அரசு மனநிறைவு அடையும் பட்சத்தில், தற்போது அறிவிக்கப்பட்டிருக்கும் திட்டத் திற்குப் பதிலாக இந்த மாற்றுத் திட்டத்தை ஏற்கும்படி நாடாளு மன்றத்திற்குப் பரிந்துரை செய்ய அது தயராக உள்ளது.

5 ★ ★ ★ ★

6 ★ ★ ★ ★

7 ★ ★ ★ ★

8 ★ ★ ★ ★

9. வாக்களிக்கத் தகுதி பெற்ற ''தாழ்த்தப்பட்ட வகுப்பினர்'' ஒரு பொதுத் தொகுதியில் வாக்களிப்பர். இந்த வகுப்பினர் இந்த முறையால் மட்டும் சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறுவது சாத்தியமில்லை என்பதால், அட்டவணையில் காட்டியுள்ளபடி அநேகத் தனி இடங்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படும். தேர்தல் விதிமுறைப்படி 'தாழ்த்தப்பட்ட வகுப்பினர்' மட்டுமே வாக்களிக் கும் தனித் தொகுதிகளில் நடைபெறும் தேர்தல்கள் மூலம் இந்த இடங்கள்நிரப்பப்படும். மேலே குறிப்பிட்டுள்ளவாறு, இத்தகைய ஒரு தனித் தொகுதியில் வாக்களிக்கும் ஒருவர் பொதுத் தொகுதியில் வாக்களிக்கவும் உரிமை பெற்றிருக்கிறார். தாழ்த்தப்பட்ட வகுப் பினர் மிகப்பெரும் எண்ணிக்கையில் இருக்கும் குறிப்பிட்ட பகுதிகளில் இத்தொகுதிகள் அமைக்கப்படும்; ஆனால் சென்னை யைத் தவிர அவை மாகாணம் முழுமையும் உள்ளடக்கியவையாக இருக்க மாட்டா.

வங்காளத்தைப் பொறுத்தவரையில் சில பொதுத் தொகுதிகளில் பெரும்பான்மையான வாக்காளர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடும் எனத் தோன்றுகிறது. எனவே, மேற்கொண்டு ஆராய்ந்து முடிவு செய்யும்வரை அந்த மாகாணத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான தனித் தொகுதிகளிலிருந்து எத்தனை பேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்பது இன்னும் நிர்ணயிக்கப்பட வில்லை. வங்காள சட்டமன்றத்தில் தாழ்த்தப் பட்டவகுப்பினர் 10க்கும் குறையாமல் இடங்கள் பெறவேண்டும் என்று உத்தேசிக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு மாகாணத்திலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான தனித் தொகுதிகளில் வாக்களிக்க உரிமை பெற்றவர்கள் யார் என்பது இன்னமும் திட்டவட்டமாக, இறுதியாக முடிவு செய்யப்பட வில்லை. வாக்குரிமைக் குழு அறிக்கையில் பரிந்துரைக்கப் பட்டுள்ள பொதுக் கோட்பாடுகளின் அடிப்படையில் இது பொதுவாகத் தீர்மானிக்கப் படும். ஆனால் வட இந்தியாவில் சில மாகாணங்களில் தீண்டாமை குறித்த பொதுவிதியைப் பயன் படுத்துவது அங்குள்ள விசேட நிலைமைகளுக்கு பொருந்தாத வகையில் சில சந்தர்ப்பங்களில் பொருள் கொள்வதில் போய் முடியக்கூடும்; எனவே இத்தகைய மாகாணத்தில் இது விஷ யத்தில் மாற்றம் காண்பது அவசியமாக இருக்கக்கூடும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான இந்தத் தனித் தொகுதிகள் குறிப்பிட்ட காலத்திற்கும் அதிகமாகத் தேவைப்படும் என்று மன்னர் பிரான் அரசு கருதவில்லை. 6 ஆவது பத்தியில் குறிப்பிடப் பட்டிருக்கும் தேர்தல் திருத்தப் பொது அதிகாரங்களின்படி இந்தத் தொகுதிகள் ஏற்கனவே ஒழிக்கப்படாத பட்சத்தில், இவற்றை 20 ஆண்டுகளுக்குப் பிறகு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் வகை செய்ய அரசு உத்தேசித் துள்ளது.

ஏனைய சிறுபான்மை வகுப்பினரைப் பொறுத்த வரையில், வகுப்புத் தீர்ப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒற்றுமையின்மையும் பூசலும் பிணக்கும் முரண்பாடுகளும் ஒழித்துக் கட்டப்பட்டு விட்டன. ஆனால் தீண்டத்தகாதோரைப் பொறுத்தவரையில் இந்தப் புண் ஆறாமல் அப்படியே இருக்கிறது; திரு. காந்தி இந்தக் காயத்தை ஆற்றப், புண்ணைக் குணப் படுத்த விடமாட்டார். திரு. காந்தி வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு இந்தியா திரும்பியதும் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். எரவடா சிறைக்கு வந்த பிறகும் கூட அவர் ஒரு விஷயத்தை மறந்துவிடவில்லை: அதாவது பிரிட்டிஷ் அரசு ஒப்புக் கொண்ட தனிப்பிரதிநிதித்துவ உரிமை தீண்டப்படாதோர்களுக்குக் கிடைத்து விடாதபடி தடுக்க அவர் மறந்து விடவில்லை. வட்டமேசை மாநாட்டிலேயே அவர் இந்தப் பிரச்சினையை எழுப்பினார். என் உயிரைக் கொடுத்தேனும் இதை எதிர்ப்பேன் என்று அப்போது சூளுரைத்தார். இத்தனைக்குப் பிறகும் பிரிட்டிஷ் அரசு இந்த உரிமையை தீண்டப்படாதோர்களுக்கு வழங்கிவிடுமோ என்று அஞ்சினார். எனவே, தன்னைக் கைது செய்த அதே பிரிட்டிஷ் அரசாங்கத்தை இது விஷயமாக உடனடியாகத் தொடர்பு கொண்டார்.

அப்போது இந்தியா மந்திரியாக இருந்த சர் சாமுவல் ஹோருக்கு 1932 மார்ச் 11ஆம் தேதி அவர் பின்வரும் கடிதத்தை எழுதினார்:

அன்புள்ள சர். சாமுவல் அவர்களுக்கு,

இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் சிறுபான்மையினரின் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது நான் நிகழ்த்திய உரையின் இறுதியில், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித்தொகுதி உரிமை அளிக்கப்படுமானால் என் உயிரைக் கொடுத்தேனும் அதனை எதிர்ப்பேன் என்று நான் கூறியது உங்களுக்கு நினைவிருக்கலாம். இது மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் ஏதோ உணர்ச்சிவசப்பட்டுக் கூறியதல்ல. மாறாக, இது ஆழ்ந்த அர்த்த பாவமிக்க கூற்றாகும், கருத்தாகும். இந்தியாவுக்குத் திரும்பியதும் இந்தக் கருத்தை அனுசரித்து, அடியொட்டி, தனித்தொகுதி யோசனைக்கு, அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித்தொகுதி உரிமை அளிக்கும் திட்டத்திற்கு எதிராக பொதுமக்களின் கருத்தைத் திரட்ட வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால் நான் இந்திய மண்ணில் அடியெடுத்து வைத்ததும் சிறை வைக்கப்பட்டதால் இந்த எண்ணம் நிறைவேறவில்லை.

நான் சிறையில் படிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கும் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கும் செய்திகளிலிருந்து மன்னர்பிரான் அரசாங்கம் எந்தக் கணத்திலும் தனது முடிவை அறிவிக்கலாம் என்பதைத் தெரிந்து கொண்டேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித் தொகுதிகளைத் தோற்றுவிப்பது இந்த முடிவின் நோக்கம் என்றால், எனது சூளுரையைச் செயல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால் பிரிட்டிஷ் அரசுக்கு இதுபற்றி முன்கூட்டியே தெரிவிக்காமல் நடவடிக்கை எடுப்பது நியாயமல்ல, உசிதமல்ல என்று கருதுகிறேன். என் கருத்துக்கு நான் அளிக்கும் முக்கியத்துவத்தை அவர்கள் அளிக்க மாட்டார்கள் என்பது இயல்பே.

## தனித் தொகுதிகள் முறை, தீங்கு பயப்பதாகும்

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு தனித் தொகுதிகள் உருவாக்கப்படுவதற்கு நான் காட்டிவந்த கடுமையான எதிர்ப்பையும், தெரிவித்து வந்த எல்லா ஆட்சேபங்களையும் இங்கு மீண்டும் உறுதிப்படுத்த வேண்டிய அவசியமில்லை. என்னை அவர்களில்

ஒருவனாக நான் கருதுகிறேன். அவர்கள் விஷயம் மற்றவர்களின் விஷயத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது. சட்டமன்றங்களில் அவர்கள் பிரதிநிதித்துவம் பெறுவதை நான் எதிர்க்கவில்லை. மாறாக, பிறர் விஷயத்தில் தேர்தல் விதிகள் கடுமையாக இருந்தாலும், கல்வித்தகுதி, சொத்துரிமை முதலிய எந்தப் பாகு பாடுமின்றி, இவர்களில் வயதுவந்த ஆண், பெண் அனைவரும் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளப் படுவதை நான் உறுதியாக ஆதரிக்கிறேன், அவாவுகிறேன. ஆனால் எந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும், முற்றிலும் அரசியல் நோக்கிலிருந்து பார்த்தாலும் தனித் தொகுதி முறை அவர் களுக்கும், இந்து சமயத்திற்கும் தீங்கு விளைவிக்கக் கூடியது, கேடு பயப்பது என்று கருதுகிறேன். தனித் தொகுதிகளினால் அவர் களுக்கு ஏற்படக்கூடிய இன்னல் இடுக்கண்களை, துன்ப துயரங் களைப் புரிந்து கொள்வதற்கு, மதிப்பிடுவதற்கு சாதி இந்துக்கள் எனப்படுவோரிடையே அவர்கள் எவ்வாறு பரவியிருக்கிறார்கள், எவ்விதம் அவர் களைச் சார்ந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இது இப்படியென்றால் இந்து சமயத்தைப் பொறுத்த வரையில் தனித்தொகுதி முறை அதனை உடைத்துத் தகர்த்துக் கூறுபோட்டுவிடும்.

எனக்கு இந்த வகுப்பாரின் பிரச்சினை பிரதானமாக தார்மிக சார்புடையது, சமயத் தொடர்புடையது. இதன் அரசியல் முக்கியத் துவம் முக்கியமானதே என்றாலும் தார்மிக, சமயப் பிரச்சினை யுடன் ஒப்பிடும் போது அந்த முக்கியத்துவம் ஒடுங்கி, சுருங்கி, குன்றி விடுகிறது.

இந்த விஷயத்தில் என் உணர்வுகளை நீங்கள் மதிப்பிட வேண்டும்; சிறு வயது முதலே இந்த வகுப்பாரின் நலனில் நான் எவ்வாறு ஆழ்ந்த அக்கறை காட்டி வந்திருக்கிறேன், எனக்குள்ள அனைத்தையும் எவ்விதம் பணயம் வைத்து வந்துள்ளேன் என்பதை நீங்கள் மனத்தில் கொள்ள வேண்டும். எவ்வகையிலும் என்னைப் பெருமைப்படுத்திக் கொள்ள இதைச் சொல்லவில்லை. திட்ட மிட்டு நூற்றாண்டுகள் காலமாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இழைக்கப்பட்டு வந்த கொடுமைகளுக்கு, இழிவுகளுக்கு, அவ மதிப்புகளுக்கு இந்துக்கள் என்னதான் பிராயச்சித்தம் செய்தாலும், கழுவாய் தேடினாலும் அதனை ஈடுகட்ட முடியாது என்பதை உணர்கிறேன்.

### ''சாகும்வரை உண்ணாவிரதம்''

ஆனால் இம்மக்கள் கசக்கிப் பிழியப்பட்டு, அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அல்லல்பட்டு ஆற்றாது விடும் கண்ணீருக்குத் தனித்

தொகுதி முறை ஒரு பரிகாரமாகவோ, நோய்தீர்க்கும் மருந்தாகவோ இருக்க முடியாது என்பதை அறிவேன். எனவே, தாழ்த்தப்பட்ட இனத்தாருக்குத் தனித் தொகுதிகள் அமைப்பதென அரசு முடிவு செய்யும் பட்சத்தில் அதனை எதிர்த்து நான் சாகும்வரை உண்ணா விரதம் இருப்பேன் என்பதை மன்னர் பிரான் அரசாங்கத்துக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சிறைக் கைதியாக இருக்கும்போது இத்தகைய ஒரு நடவடிக்கையை மேற்கொள்வது மன்னர் பிரான் அரசாங்கத்துக்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தும் என்பதை வேதனையோடு உணர்கிறேன்; அதுமட்டுமல்ல, மிக மோசமானவை என்று இல்லாவிட்டாலும், பெரிதும் உணர்ச்சிவயப்பட்டவை என்று அநேகரால் கருதப்படக்கூடிய முறைகளை என்போன்ற நிலையில் உள்ளவன் இவ்வாறு அரசியல் துறையில் அறிமுகம் செய்வது முற்றிலும் நேர்மையற்ற செயல் என்று பலர் எண்ணக் கூடும் என்பதையும் நான் மனத்துயரோடு அறிந்தே இருக்கிறேன். இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு நான் அளிக்கக்கூடிய பதிலெல்லாம், எனது நிலைக்கு ஆதரவாக நான் கூற விரும்புவதெல்லாம் இதுதான்: என்னைப் பொறுத்தவரையில் உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கை, ஒரு முறைமை அல்ல, மாறாக அது என்னுள் ஒரு பகுதியாகும், உயிருக்கு உயிராகும், மூச்சில் மூச்சாகும். மனச்சான்றின் அறைகூவலை, கட்டளையை என்னால் புறக்கணிக்க முடியாது, உதறித்தள்ள முடியாது; நேர்மையானவன் என்று நான் பெற்றுள்ள புகழுக்குப் பங்கம் ஏற்படுவதாக இருந்தாலும் மனச்சான்றை என்னால் அலட்சியம் செய்ய இயலாது. இப்போதுள்ள நிலைமையில், நான் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டாலும், உண்ணாவிரதம் இருக்கும் என் கடமையின் முக்கியத்துவத்தை அது எவ்வகையிலும் குறைத்துவிடாது; உண்ணாவிரதத்தைத் தவிர்க்கக் கூடியதாக ஆக்கிவிடாது. எனினும் எனது இந்த அச்சங்கள் எல்லாம் முற்றிலும் ஆதாரமற்றவை என்றும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு தனித் தொகுதிகளை உருவாக்கும் உத்தேசம் ஏதும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் நம்பவே விரும்புகிறேன்.

இந்தியா மந்திரி பின்கண்ட பதிலை திரு. காந்திக்கு அனுப்பினார்:

**இந்தியா அலுவலகம், ஒயிட்ஹால்**

*ஏப்ரல் 13, 1932*

அன்புள்ள திரு. காந்தி அவர்களுக்கு,

மார்ச் 11 ஆம் தேதியிட்ட உங்களின் கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையில் இதனை எழுதுகிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித்தொகுதிகள் ஏற்படுத்தும் பிரச்சினையில் உங்கள் உணர்வு களை நான் முற்றிலுமாகப் புரிந்துகொண்டேன். எந்த ஒரு விஷய மாயினும் முற்றிலும் அதன் தகுதிகளின் அடிப்படையில் மட்டுமேதான் எத்தகைய முடிவும் மேற்கொள்ள நாங்கள் உத்தேசித் திருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். லோதியன் பிரபுவின் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கும் குழு இன்னமும் தனது சுற்றுப்பயணத்தைப் பூர்த்தி செய்யவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். அது எடுக்கும் முடிவுகள் எங்களிடம் வந்து சேருவதற்கு மேலும் சில வாரங்கள் ஆகும். குழுவின் அறிக்கை எங்களுக்கு வந்து சேர்ந்ததும் அதன் பரிந் துரைகளை நாங்கள் மிகக் கவனமாகப் பரிசீலிப்போம்; குழு தெரிவிக்கும் கருத்துகளையும், அத்தோடு நீங்களும் உங்களைப் போன்றோரும் ஆழமாகவும் மனத்திற் பதியும்படியாகவும் கூறியிருக்கும் அபிப்பிராயங்களையும் கணக்கி லெடுத்துக் கொள்ளாமல் எந்த முடிவையும் எடுக்க மாட்டோம். நீங்கள் எங்கள் நிலையில் இருந்தால் நாங்கள் எடுக்க நினைக்கும் அதே நட வடிக்கையைத்தான் நீங்களும் எடுப்பீர்கள் என்பதில் எனக்கு எத்தகைய ஐயப்பாடும் இல்லை. குழுவின் அறிக்கை வரட்டும். அதனை நீங்கள் கருத்தூன்றி, ஆழமாக, முற்றிலுமாகப் பரிசீலனை செய்யுங்கள். இது சம்பந்தமாக நீங்கள் ஓர் இறுதி முடிவுக்கு வருவதற்கு முன்னர், இந்த சர்ச்சைக்குரிய பிரச்சினை குறித்து இருதரப்புகளும் தெரிவித்திருக்கும் கருத்துக்களை நீங்கள் கணக்கி லெடுத்துக் கொள்வது அவசியம். இதற்கு மேல் நான் எதுவும் சொல்லுவதற்கில்லை. மேலும் அதிகமாகக் கூற வேண்டுமென்று நீங்கள் எதிர் பார்ப்பீர்கள் என்று நானும் நினைக்கவில்லை.

★ ★ ★

திரு. காந்தி இந்த எச்சரிக்கையை விடுத்த பிறகு விஷயத்தைச் சற்று ஆறப்போட்டார்; சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக மீண்டும் தாம் அச்சுறுத்தி இருப்பது பிரிட்டிஷ் அரசாங்கத்தை நிலைகுலையச் செய்துவிடும் என்றும், தீண்டாதார்களுக்குத் தனிப்பிரதி நிதித்துவம் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ளாதபடி தடுத்துவிடும் என்றும் அவர் எண்ணினார். ஆனால் அவர் நினைத்தபடி எதுவும் நடைபெறவில்லை. அதற்கு மாறாக, 1932 ஆகஸ்டு 17ஆம் தேதி வகுப்புத் தீர்ப்பின் விவரங்கள்

அறிவிக்கப்பட்டன. இதைக் கண்ணுற்ற திரு. காந்தி தனது அச்சுறுத்தலுக்கு எந்தப் பலனும் கிட்டவில்லை என்பதைப் புரிந்து கொண்டார். வகுப்புத் தீர்ப்பின் ஷரத்துக்களை மாற்றச் செய்வதற்கு முதலில் முயன்றார். இதன்படி பிரதமருக்குப் பின்கண்ட கடிதத்தை எழுதினார்:

எரவாடா மத்திய சிறைச்சாலை,
ஆகஸ்டு 18, 1932

அன்புள்ள நண்பர் அவர்களுக்கு,

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் பிரச்சினை சம்பந்தமாக மார்ச் 11 ஆம் தேதி சர் சாமுவல் ஹோருக்கு நான் எழுதிய கடிதத்தை உங்களிடமும் அமைச்சரவையிடமும் அவர் காண்பித்திருப்பார் என்பதில் ஐயமில்லை. அந்தக் கடிதத்தை இக்கடிதத்தின் ஒரு பகுதியாகப் பாவித்து, அதனுடன் சேர்த்து இதனைப் படிக்குமாறு வேண்டுகிறேன்.

## உண்ணாவிரத முடிவு

சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பது சம்பந்தமான பிரிட்டிஷ் முடிவைப் படித்தேன். சர் சாமுவல் ஹோருக்கு நான் எழுதிய கடிதத்தின் பிரகாரமும், வட்டமேசை மாநாட்டின் சிறுபான்மையினர் குழுவின் கூட்டம் செயிண்ட் ஜேம்ஸ் மாளிகையில் 1931 நவம்பர் 13 ஆம் தேதி நடைபெற்றபோது, நான் திட்டவட்டமாக அறிவித்தபடியும் என் உயிரைப் பணயம் வைத்து உங்கள் முடிவை எதிர்க்க வேண்டியவனாக இருக்கிறேன். இதைச் செய்வதற்கு எனக்குள்ள ஒரே வழி சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதே ஆகும். உப்பு கலந்த அல்லது உப்பு இல்லாத தண்ணீரையும் சோடாவையும் தவிர உண்ணாவிரதத்தின் போது வேறு எந்த ஆகாரத்தையும் உட்கொள்ள மாட்டேன். இதற்கு மத்தியில் பிரிட்டிஷ் அரசாங்கம் தானே முன்வந்தோ அல்லது பொதுமக்கள் கருத்தின் நிர்ப்பந்தத்தாலோ தனது முடிவை மாற்றிக் கொள்ளுமானால், தாழ்த்தப்பட்ட சமூகத்தினருக்குத் தனித் தொகுதிகளை ஒதுக்கும் தனது திட்டத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமானால் என் உண்ணாவிரதத்தை நிறுத்திவிடுவேன். வழக்கமான தேர்தல் விதிகளின்படி அமைந்த பொதுத் தொகுதியிலிருந்து - அது எவ்வளவு விரிந்து பரந்ததாயினும் - தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதையே நான் விரும்புகிறேன்.

அரசின் முடிவு மேலே தெரிவித்தபடி மாற்றப்படவில்லையாயின் எனது உண்ணாவிரதம் அடுத்த செப்டம்பர் 20 ஆம் தேதி நண்பகலிலிருந்து தொடங்கும்.

உங்களுக்குப் போதிய முன்னறிவிப்பு தரவேண்டும் என்ற எண்ணத்தில் இந்தக் கடிதத்தின் வாசகத்தை உங்களுக்குத் தந்தி மூலம் தெரிவிக்கும்படி இங்குள்ள அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். எத்தகைய மிகத் தாமதமான மார்க்கத்திலும் கூட இந்தக் கடிதம் உங்களுக்கு உரிய சமயத்தில் கிடைக்க வேண்டும் என்பதற்காக நிறைய அவகாசம் தந்திருக்கிறேன்.

இந்தக் கடிதமும் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட சர். சாமுவல் ஹோருக்கு எழுதப்பட்ட என் கடிதமும் கூடிய விரைவில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறேன். என்னைப் பொறுத்த வரையில், சிறை விதிகளை இம்மியும் பிசகாதபடி, மிகக் கண்டிப்பாகக் கடைப்பிடித்திருக்கிறேன். என் விருப்பத்தையோ அல்லது இவ்விரு கடிதங்களின் உள்ளடக்கத்தையோ என்னுடைய தோழர்களான சர்தார் வல்லபாய் பட்டேலையும் திரு. மகாதேவ தேசாயையும் தவிர வேறு எவருக்கும் தெரிவிக்கவில்லை. எனினும் என் கடிதங்கள் குறித்துப் பொது மக்களின் அபிப்பிராயத்தை அறிய விரும்புகிறேன். எனவே அவற்றை விரைவில் பிரசுரிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## விடுதலை பெறத் திட்டமிடவில்லை

நான் மேற்கொண்டுள்ள முடிவுக்காக வருந்துகிறேன். சமய ஈடுபாடுள்ளவன் என்ற முறையில், மனச்சான்றினை மீறாப் பண்புடையவன் என்ற வகையில், இதைத் தவிர எனக்கு வேறு எந்த மார்க்கமும் இல்லை. சர் சாமுவல் ஹோருக்கு நான் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடி, சங்கடமான நிலையிலிருந்து தப்பித்துக் கொள்ளும் பொருட்டு மன்னர்பிரான் அரசாங்கம் என்னை விடுதலை செய்ய முடிவு செய்தால் கூட என் உண்ணாவிரதம் நிற்காது; தொடர்ந்து நடைபெறும். ஏனென்றால் வேறு எந்த வழிகளிலும் உங்கள் முடிவை எதிர்த்து நிற்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கில்லை; கௌரவமான முறையில் தவிர வேறு எந்த வழிகளிலும் என் விடுதலைக்குத் திட்டமிடவும் நான் விரும்பவில்லை.

ஒருக்கால் எனது கருத்து ஏறுமாறானதாக இருக்கலாம்;

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித்தொகுதிகள் ஏற்படுத்துவது அவர்களுக்கும் இந்து சமயத்திற்கும் தீங்கானது என்ற என் கணிப்பு முற்றிலும் தவறானதாகவும் இருக்கலாம். இது உண்மையானால் என் வாழ்க்கைத் தத்துவத்தின் இதர அம்சங்களிலும் நான் தவறு இழைத்தவன் ஆகிறேன்; இச்சூழ்நிலையில் உண்ணாவிரதத்தில் எனக்கு நேரிடக்கூடிய மரணம் என் தவறுக்கெல்லாம் ஒரு பிராயச் சித்தமாக இருக்கும்; மேலும், என்னுடைய விவேகத்தில், அறிவு நுட்பத்தில் எண்ணற்ற ஆடவரும் பெண்டிரும் குழந்தைகள் போல் வேறுபாடின்றி வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையின், பாசத்தின், அன்பின் சுமையை இறக்கி விட்டதாகவும் இருக்கும். ஆனால், அதேசமயம் எனது நிர்ணயிப்புச் சரியாக இருக்கும் பட்சத்தில் - இதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை - நான் மேற்கொள்ள உத்தேசித்திக்கும் நடவடிக்கை நிச்சயம் வெற்றி பெறவே செய்யும்; வாழ்க்கைத் தத்துவத்தை நிறைவேற்ற கால் நூற்றாண்டுக்கும் மேலாக அயராது, சோராது நான் மேற்கொண்டு வந்துள்ள முயற்சி இதற்கு உறுதுணை புரியும்.

என்றும்,
உங்கள் நம்பிக்கைக்குரிய நண்பன்,
**எம்.கே. காந்தி.**

★★★

இக்கடிதத்திற்குப் பிரதமர் பின்வருமாறு பதில் எழுதினார்:

10, டவுனிங் தெரு,
செப்டம்பர் 8, 1932

அன்புள்ள திரு. காந்தி அவர்களுக்கு,

உங்கள் கடிதம் கண்டு மிகுந்த வியப்பும் வருத்தமும் அடைந்தேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்பந்தமாக மன்னர் பிரான் அரசாங்கம் எடுத்துள்ள முடிவு உண்மையில் எதைக் குறிக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளாமல் இக்கடிதத்தை நீங்கள் எழுதியிருப்பதாகவே கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினரை இந்து சமூகத்திலிருந்து நிரந்தரமாகப் பிரித்து வைப்பதை, தனிமைப்படுத்தி வைப்பதை நீங்கள் சற்றும் விட்டுக் கொடுக்காமல் உறுதியாக எதிர்த்து வந்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் எப்போதுமே புரிந்து வந்திருக்கிறோம். வட்டமேசை மாநாட்டின் சிறுபான்மையினர்

குழுவில் உங்கள் நிலையை மிகத்தெளிவாக எடுத்துரைத்திருக்கிறீர்கள்; மார்ச் 11ஆம் தேதி சர் சாமுவல் ஹோருக்கு எழுதிய கடிதத்தில் இதனைத் திரும்பவும் வலியுறுத்தியிருக்கிறீர்கள். இந்து சமூகத்தில் மிகப்பெரும் பகுதியினர் உங்கள் கருத்தை ஆதரிக்கின்றனர் என்பதையும் நாங்கள் அறிவோம். எனவே தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதிநிதித்துவப் பிரச்சினையைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டபோது, இவற்றையும் மிகக் கவனமாகக் கருத்தில் கொண்டோம்.

## அரசின் முடிவு குறித்து விளக்கம்

தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் அமைப்புகளிலிருந்து எங்களுக்கு எண்ணற்ற முறையீடுகள் வந்தன; அவர்கள் எத்தகைய கொடிய சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு உள்ளாகி வேதனையும் வாதனையும் பட்டு வருகிறார்கள் என்பது பொதுவாக அனைவரும் அறிந்த உண்மை; இதனை நீங்களும் மிகப்பல சந்தர்ப்பங்களில் ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு, சட்டமன்றங்களில் நியாயமான சதவிகிதத்தில் பிரதிநிதித்துவம் பெறுவதற்குத் தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்குள்ள உரிமைகளைப் பாதுக்கப்பது எங்கள் கடமை என உணர்ந்தோம். அதேசமயம் தாழ்த்தப்பட்ட சமூகத்தினை இந்து சமுதாயத்திலிருந்து பிரிக்கக்கூடிய எதையும் செய்துவிடக்கூடாது என்பதிலும் மிகவும் கவனமாக இருந்தோம். சட்டமன்றங்களில் இவர்கள் பிரதிநித் துவம் பெறுவதை எதிர்க்கவில்லை என்று நீங்களே உங்கள் மார்ச் 11ஆம் தேதி கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

அரசாங்கத் திட்டத்தின்படி தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இந்து சமூகத்தின் ஒரு பிரிக்கமுடியாத பகுதியினராகத் தொடர்ந்து நீடித்து வருவர்; இந்து வாக்காளர்களுடன் சேர்ந்து சரிசமத்துவ அடிப் படையில் வாக்களிப்பர்; ஆனால் அடுத்த முதல் இருபது ஆண்டுக் காலத்தில் அவர்கள் வாக்களர்கள் ரீதியில் இந்து சமூகத்தின் ஒரு பகுதியினராகத் தொடர்ந்து நீடித்தவாறே சில குறிப்பிட்ட எண்ணிக்கை உள்ள தனித் தொகுதிகளைப் பெறுவர்; இத்தொகுதிகள் அவர்களது உரிமைகளையும் நலன்களையும் பாதுகாக்கக்கூடிய சாதனங்களாக அமைந்திருக்கும்; தற்போதைய நிலைமையில் இத்தகைய தனித் தொகுதிகளை உருவாக்குவது அவசியம் என்று நாங்கள் திடமாக நம்புகிறோம்.

இந்தத் தனித்தொகுதிகள் உருவாக்கப்பட்டுள்ள பகுதிகளில் தாழ்த்தப்பட்ட வகுப்பு உறுப்பினர்கள் பொது இந்துத் தொகுதிகளில்

தங்களுக்கு இருக்கும் வாக்குரிமையை இழந்துவிடமாட்டார்கள்; அதற்குப் பதில் இந்து சமூகத்தில் அவர்கள் அங்கம் வகிப்பது பாதிக்கப் படாமல் இருக்கும் பொருட்டு அவர்களுக்கு இரண்டு வாக்குகள் அளிக்கப்படும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித்தொகுதி அமைத்து, எல்லாத் தாழ்த்தப்பட்ட இன வாக்குகளையும் பொதுத் தொகுதிகளில் அல்லது இந்து தொகுதிகளில் சேர்க்கலாம் என்றும், இவ்வாறு செய்தால் உயர்ஜாதி வேட்பாளர்கள் தாழ்த்தப்பட்டோர் வாக்குகளையும் நாடிப்பெற வேண்டிவரும் என்றும், இதன் மூலம் இந்து சமுதாயத்தின் ஒற்றுமையைப் பாதுகாக்கமுடியும் என்றும் நீங்கள் தெரிவிக்கும் கருத்து எங்களுக்கு ஏற்புடையதல்ல.

## பாதுகாப்பு தற்காலிகமானதே

மாகாணங்களில் தேர்தல்கள் நடைபெற்று அவற்றின் மூலம் சட்டமன்றங்களில் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றுவோர்க்கு அதிகாரம் மாறி பொறுப்பாட்சி மலரும்; அப்போது தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை என்ன? சாதி இந்துக்களால் பல நூற்றாண்டுக் காலமாக குரூரமாகக் கொடுமைப்படுத்தப்பட்டு வந்தவர்கள், இழிவுபடுத்தப் பட்டு வந்தவர்கள், அலட்சியப்படுத்தப்பட்டு வந்தவர்கள் என்று சர் சாமுவல் ஹோருக்கு எழுதிய உங்கள் கடிதத்தில் நீங்களே தாழ்த்தப் பட்ட வகுப்பினரைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். பொறுப்பாட்சி யின் போது ஒன்பது மாகாணங்களில் ஏழு மாகாணங்களில் இப் போதைய தாழ்த்தப்பட்ட மக்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பிரதிநிதிகளை அவர்கள் தாங்களே தேர்ந்தெடுத்து சட்டமன்றங்களுக்கு அனுப்புவது அவசியம் என்று நாங்கள் உணர்ந்தோம். அப்போதுதான் அவர்கள் தங்கள் மனக்குறைகளையும் லட்சியங்களையும் எடுத்துரைக்க முடியும், அவற்றை ஆதரித்துக் குரல் எழுப்பமுடியும், சட்டமன்றத்திற்கு வெளியே தங்களுக்கு எதிராக முடிவுகள் எடுப்பதைத் தடுக்க முடியும், தங்களது நிலையை அரசின் கவனத்துக்குக் கொண்டுவரமுடியும் - சுருக்கமாகக் கூறினால் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தாழ்த்தப்பட்ட மக்களே பேசும்படியான நிலையில் அவர்களை வைக்கமுடியும் என்று கருதினோம். நியாய உணர்வு படைத்த எவருமே இதனை ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை. சில குறிப்பிட்ட இடங்களை ஒதுக்கி அவற்றுக்கு விசேடப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறை இன்றைய நிலைமைகளில் எந்த வாக்குரிமைத் திட்டத்தின் அடிப்படை யிலும் காரியசாத்தியமானதென்று நாங்கள் கருதவில்லை; இவ்வாறு

அல்லாமல், இந்த முடிவை அரசு எவ்வகையிலும் மாற்றும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே, அரசின் முடிவு நீடிக்கும், அதில் எந்தமாற்றமும் இருக்காது என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பல்வேறு சமுதாயத்தினரின் பலதரப்பட்ட முரண்பாடான கோரிக்கைகளையும் அவற்றின் தகுதிகளையும் உள்ளார்ந்த முறையில் சீர்தூக்கிப் பார்த்தே அரசு இந்த ஏற்பாடுகளை வகுத்துத் தந்திருக்கிறது; சிலவற்றிற்குப் பதிலாக வேறு இந்த ஏற்பாடுகளை வகுத்துத் தந்துள்ளது; இவற்றிற்குப் பதிலாக வேறு தேர்தல் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமானால் சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரின் உடன்பாட்டுடனேயே அதைச் செய்ய முடியும் என்பதையும் கூறிக்கொள்கிறேன்.

மார்ச் 11 ஆம் தேதி சர் சாமுவல் ஹோருக்கு நீங்கள் எழுதிய கடிதம் உட்பட இந்தக் கடிதப் போக்குவரத்து முழுவதையும் பிரசுரிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள். உபவாசம் மேற்கொள்ளுவதற்கு நீங்கள் எடுத்த முடிவுக்கான காரணத்தைப் பொதுமக்களுக்குத் தாங்கள் விளக்கிக்கூறும் வாய்ப்பினைத் தற்சமயம் தாங்கள் சிறையில் இருக்கும் காரணத்தால் மறுப்பது நியாமற்றது என்று எனக்குத் தோன்றுகிறது; எனவே மறுபரிசீலனை செய்து இந்த வேண்டுகோளை தாங்கள் மீண்டும் முன்வைத்தால் அதனை தடையின்றி ஏற்பேன். எனினும், அரசு இந்த முடிவை எடுத்ததற்கான உண்மையான விவரங்களையும் சந்தர்ப்பங்களையும் ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்கு மாறும், நீங்கள் உத்தேசித்துள்ள நடவடிக்கையை மேற்கொள்வது உண்மை யிலேயே நியாயமானதுதானா என்பதை உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுமாறும் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

தங்களது உள்ளார்ந்த,
**ஜே. ராம்ஸே மக்டொனால்டு**

பிரதமர் இறங்கி வர மாட்டார் என்பதைக் கண்ணுற்று திரு.காந்தி தாம் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய் திருப்பதைப் பின்கண்ட கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தினார் :

எரவாடா மத்திய சிறைச்சாலை,
செப்டம்பர் 9, 1932

அன்பார்ந்த நண்பர் அவர்களுக்கு,

தாங்கள் மனம் விட்டு எழுதிய முழுக் கடிதத்தையும் தந்தி வாயிலாக இன்று கிடைக்கப்பெற்றேன். இதற்காக என் நன்றியைத்

தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் எனது உத்தேச நடவடிக்கைக்கு நான் ஒருபோதும்நினைத்துப் பார்க்கமுடியாத வியாக்கியானத்தைத் தாங்கள் தந்திருப்பதற்கு வருந்துகிறேன். நான் எந்த சமூகத்தினருக்கு ஆதரவாக பேசுகிறேனோ, அந்த சமூகத்தினர் நலன்களைப் பலியிடு வதற்கே சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க நான் விரும்புவதாக என்மீது குற்றம் சாட்டியிருக்கிறீர்கள். இது குறித்து நான் எத்தகைய எதிர்வாதமும் செய்யப்போவதில்லை, நான் மேற்கொள்ளவிருக்கும் தீவிர நடவடிக்கையே இத்தகைய சுயநலமிக்க வியாக்கியானத்திற்கு முற்றுப்புள்ளிவைக்கும் என்று நம்புகிறேன். என்னைப் பொறுத்த வரையில் இது முற்றிலும் சமயச் சார்புடைய பிரச்சினை என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இரண்டு வாக்குகள் பெறுவதற்கு உரிமைபெறுவார்கள் என்றுகூறியிருக்கிறீர்கள். ஆனால் இந்த உரிமை அவர்களையோ, பிளவுபடுவதிலிருந்து இந்து சமுதாயத்தையோ காப்பாற்றப்போவதில்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனித்தொகுதிகளை உருவாக்கும் ஏற்பாட்டில் இந்து தர்மத்தைத் திட்டமிட்டு அழிப்பதற்கு விஷம் வைக்கப்பட் டிருப்பதைக் காண்கிறேன். இந்த ஏற்பாட்டால் மக்களுக்கு எத்தகைய நன்மையும் கிடடாது. நீங்கள் தாழ்த்தப்பட்டவர்கள்பால் என்னதான் பரிவிரக்கம் கொண்டவராக இருந்தாலும், சம்பந்தப்பட்ட தரப்பின ருக்கு ஜீவாதரமான, சமய முக்கியத்துவம் வாய்ந்த இத்தகைய ஒரு விஷயத்தில் சரியான முடிவெடுக்க முடியாது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அளவுக்கு அதிகமாகப் பிரதிநிதித்துவம் கொடுப்பதைக்கூட நான் எதிர்க்கவில்லை. இந்துக் களாக நீடிப்பதற்கு அவர்கள் விரும்பும்வரை, ஒருவரம்புக்குட் பட்ட அளவில்கூடசட்டரீதியாக இந்துமத அரவணைப்பிலிருந்து அவர்கள் பிரிக்கப்படுவதைத்தான் எதிர்க்கிறேன். உங்கள் முடிவு மாறாது என்றால் அந்த அடிப்படையில் அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படுகிறது என்றால் அதன் பொருள் என்ன? வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் அடக்கப்பட்டு ஒடுக்கப் பட்டுத் தாழ்ந்து கிடக்கும், வீழ்ந்து கிடக்கும் தங்கள் சகோதரர்களைக் கைதூக்கிவிடு வதற்கு, அவர்கள் உய்வும் உயர்வும் பெறுவதற்கு இந்து சமூக சீர்திருத்தச் செம்மல்கள் தங்களைத் தன்னலமற்று அர்ப் பணித்துக் கொண்டு எத்தனை எத்தனையோ அரும்பெரும் பணியாற்றி இருக்கிறார்கள். அந்த மகான்களின் இத்தகைய சீரிய சேவையின், அற்புதப் பணியின் வளர்ச்சியை, முன்னேற்றத்தை உங்களது இந்த நடவடிக்கையின் மூலம் தடுத்து நிறுத்துகிறீர்கள் என்பதை நீங்கள் உணர்கிறீர்களா?

## முடிவு மாறாது

எனவே, உங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட முடிவைச் செயல் படுத்தும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியுள்ளேன்; இதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

உங்கள் கடிதம் வேறொரு தப்பிப்பிராயத்தையும் தோற்று விக்கக் கூடும் என்று கருதுவதால், அதையும் இங்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சினையை உங்களது முடிவின் இதர பகுதிகளிலிருந்து பிரித்து அதற்கு நான் தனி முக்கியத்துவம் அளித்திருப்பதைக் கொண்டு உங்கள் முடிவின் இதர அம்சங்களை நான் ஏற்றுக்கொண்டு விட்டதாக எவ்வகையிலும் பொருள் கொள்ள லாகாது. உங்கள் தீர்ப்பின் இதர பல பகுதிகளும் கடும் ஆட்சேபத்துக்குரியவை என்பதே எனக் கருத்து. தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரச்சினையில் என் மனச்சான்றின் தூண்டுதலின் பேரில் உயிர்த் தியாகம் செய்ய எடுத்துள்ள முடிவைப்போன்று இவற்றின் விஷயத்திலும் அத்தகைய முடிவை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகிறேன்.

உங்கள் நம்பிக்கைக்குரிய நண்பன்,

எம்.கே. காந்தி

ஆகவே, தீண்டாதோருக்குத் தனித்தொகுதிகள் ஒதுக்கப்படு வதை ஆட்சேபித்துத் திட்டமிட்டபடி திரு.காந்தி தமது "சாகும்வரை உண்ணாவிரதத்தை" 1932 செப்டம்பர் 20 ஆம் நாளன்று தொடங் கினார். "காவியப் புகழ்பெற்ற உண்ணாநோன்பு" எனும் கண்ணையும் கருத்தையும் கவரும் தலைப்பு கொண்ட ஒரு தொகுதியில் திரு.பியாரி லால் இந்த உண்ணாவிரதத்தை வருணித்திருக்கிறார். வெறியும் உணர்ச்சி வளர்ச்சிக் கொந்தளிப்பும் மிகுந்த இந்த நாள்களில் இந்தியா வில் என்ன நடைபெற்றது என்பதை இந்த நூலிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இங்கு இது குறித்து நான் மேற்கொண்டு ஏதும் கூறத்தேவையில்லை. திரு.காந்தி சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டாலும், அவர் இறக்க விரும்பவில்லை என்பதை மட்டும் இங்குக் கூறினால் போதும், உயிரோடிருக்கவே அவர் பெரிதும் விரும்பினார்.

எனவே இந்த உண்ணாவிரதம் ஒரு பிரச்சினையைத் தோற்றுவித்தது; திரு.காந்தியின் உயிரை எப்படிக் காப்பாற்றுவது என்பதே அந்தப் பிரச்சினை. அவரது உயிரைக் காப்பாற்றுவதற்கு ஒரே வழி அவரது மனச்சான்றுக்கு ஊறுவிளைவிக்காத வகையில் வகுப்புத் தீர்ப்பை மாற்றுவதுதான். இந்தச் சந்தர்ப்பத்தில் பிரதமர் ஒரு விஷயத்தை மிகவும் தெளிவுபடுத்தினார்; அதாவது பிரிட்டிஷ் அமைச்சரவை தானாகவே முன்வந்து இந்தத் தீர்ப்பை திரும்பப் பெறவோ, மாற்றவோ செய்யாது; ஆனால் இதற்குப் பதிலாக சாதி இந்துக்களும் தாழ்த்தப்பட்டோர்களும் இசைந்து, இணங்கி முன்வைக்கும் திட்டத்தை அது தட்டாது ஏற்கும் என்று அறிவித்தார். வட்டமேசை மாநாட்டில், தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதியாக நான் பங்கேற்றதால் எனது ஆதரவை பெறாத எந்த மாற்றுத் திட்டத்தையும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பது தெள்ளத்தெளிவாயிற்று. அச்சமயம் இந்தியாவின் தாழ்த்தப்பட்ட மக்களது பிரதிநிதி என்ற எனது தகுதி குறித்து எத்தகைய ஐயப்பாடு எழுப்பப்படாதோடு, இது எதார்த்த உண்மை என்பதும் ஒப்புக் கொள்ளப் பட்டது. எனவே, இயல்பாகவே இந்திய மக்கள் அனைவரின் பார்வையும் என்மீதே பதிந்திருந்தது. திரு.காந்தியே கூறியதுபோல் அவரது உயிர் என் கையில்தான் இருந்தது.

இத்தகைய மிகவும் தர்மசங்கடமான நிலைக்கு, இருதலைக் கொள்ளி எறும்பு போன்ற நிலைக்கு என்னைப் போன்று வேறு எவருமே ஆளாகியிருக்க மாட்டார்கள் என்று கூறினால், அது மிகையல்ல. அது பெரிதும் திகைப்பூட்டும், திணறவைக்கும், குழப்பமூட்டும் நிலைமை. என் முன்னால் இரண்டு வெவ்வேறான பணிகள், கடமை சார் பிரச்சினைகள் இருந்தன. மனிதத்தன்மையுடன், வேறான பணிகள், கடமைகள் பிரச்சினைகள் இருந்தன. மனிதத் தன்மையுடன், மனிதப் பண்புடன் மரணத்திலிருந்து காந்தியைக் காப்பாற்றும் கடமை ஒருபுறம், பிரதமர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்க முன்வந்துள்ள அரசியல் உரிமைகளை அவர்களுக்குக் காப்பாற்றித்தரும் கடமை மற்றொருபுறம். இந்நிலைமையில் மனிதநேயத்தின், மனிதாபிமானத்தின் கட்டளையை, அறைகூவலை ஏற்க முன்வந்தேன். திரு.காந்தி மன நிறைவை அடையும் வகையில் வகுப்புத் தீர்ப்பு மாற்றப்படுவதற்கு இணங்கினேன். இவ்வாறு உருவான உடன்பாடே புனா ஒப்பந்தம் எனப்படுவது.

இந்தப் புனா ஒப்பந்தத்தின் வாசகம், விதிமுறைகள் வருமாறு:

1. பொதுத் தொகுதிகளிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையில் இடங்கள் ஒதுக்கப்படும். இந்த இடங்கள் மாகாண சட்டமன்றங்களில் பின்வருமாறு அமைந்திருக்கும்:

| | |
|---|---|
| சென்னை | 30 |
| சிந்துடன் கூடிய பம்பாய் | 15 |
| பஞ்சாப் | 8 |
| பீகாரும் ஒரிசாவும் | 18 |
| மத்திய மாகாணங்கள் | 20 |
| அசாம் | 7 |
| வங்காளம் | 30 |
| ஐக்கிய மாகாணங்கள் | 20 |
| மொத்தம் | 148 ★ |

பிரதமரின் முடிவில் அறிவிக்கப்பட்ட மாகாண சட்ட மன்றங்களின் மூலம் மொத்த பலத்தின் அடிப்படையில் அமைந்ததே இந்த எண்ணிக்கை.

2. இந்த இடங்களுக்கான தேர்தல் கூட்டு வாக்காளர் தொகுதிகள் மூலம் நடைபெறும். இதில் பின்கண்ட நடைமுறை பின்பற்றப்படும். ஒரு தொகுதியின் பொதுவாக்காளர் பட்டியலில் பதிவு செய்துகொண்ட தாழ்த்தப்பட்ட இன உறுப்பினர்கள் அனைவரும் ஒரு வாக்காளர் குழுமமாக அமைவார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கு இருக்கும்; இத்தகைய தனித் தொகுதி ஒவ்வொன்றுக்கும் நான்கு பேர் அடங்கிய ஒருபட்டியலை இந்த வாக்காளர்கள் வாக்களித்துத் தேர்ந்தெடுப்பார்கள்; இவ்வாறு நடைபெறும் பூர்வாங்கத் தேர்தலில் மிக அதிக வாக்குகள் பெற்ற நான்குபேர் பொதுவாக்காளர் பட்டியலைக் கொண்டு நடைபெறும் தேர்தலில் வேட்பாளர்களாக நிற்பார்கள்.

3. மத்திய சட்டமன்றத்துக்குத் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதிலும் மேலே 2ஆவது விதியில் கூறப்பட்டிருக்கும் அதே நடைமுறையே பின்பற்றப்படும்; கூட்டு வாக்காளர் கோட்பாடும் பூர்வாங்கத் தேர்தல் முறையும் கடைப் பிடிக்கப்படும்.

★ பீகாருக்கும் ஒரிசாவுக்குமான இடங்களை முறைப்படுத்தி இந்த 148 இடங்கள் 152 இடங்களாகப் பிறகு உயர்த்தப்பட்டன.

4. மத்திய சட்டமன்றத்தில் பிரிட்டிஷ் இந்தியாவுக்காக ஒதுக்கப்பட்ட பொதுத்தொகுதிகளில் 18 சதவீத இடங்கள் மேற்கண்ட சட்டமன்றத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளுக்காக ஒதுக்கப்படும்.

5. இதுவரை கூறப்பட்டுவந்துள்ளபடி. மத்திய, மாகாண சட்டமன்றங்களுக்கான தேர்தல்களில் நிற்கும் தாழ்த்தப்பட்ட இனமக்களின் வேட்பாளர் பட்டியலை முடிவு செய்யும் பூர்வாங்க தேர்தல் முறையை கீழே உள்ள 6 ஆவது விதியின் பிரகாரம் பரஸ்பர உடன்பாட்டின் பேரில் எப்போது வேண்டுமானாலும் ரத்து செய்யலாம்; அவ்வாறு செய்யாத பட்சத்தில் இந்தத் தேர்தல் முறை பத்தாண்டு களுக்குப்பிறகு முடிவுக்குவரும்.

6. விதி 1 மற்றும் விதி 4ல் கண்டுள்ளபடி மாகாண சட்ட மன்றங்களிலும் மத்திய சட்டமன்றத்திலும் தாழ்த்தப்பட்ட மக்க ளுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும் முறையானது இந்த ஒப்பந் தத்தில் சம்பந்தப்பட்ட சமூகங்களுக்கிடையே பரஸ்பர உடன் பாட்டின் மூலம் தீர்மானிக்கப்படும் வரை தொடர்ந்து நீடிக்கும்.

7. மத்திய, மாகாண சட்டமன்றங்களுக்கான தேர்தல்களில் தாழ்த்தப்பட்ட இன மக்கள் வாக்களிப்பதற்கான தகுதி லோதியன் குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டியபடி அமையும்.

8. ஒருவர் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவராக இருக்கும் காரணத்துக்காக எந்த ஊராட்சித் தேர்தல்களிலும் வாக்களிக்கவோ, வேட்பாளராகப் போட்டியிடவோ அல்லது எந்த அரசு உத்தி யோகங்களிலும் நியமிக்கப்படவோ எத்தகைய தடையும் இருக்காது.

அரசு உத்தியோகங்களில் நியமனம் செய்யப்படுவ தற்குத் தேவையான கல்வித்தகுதிகள் இருக்குமானால் இத்தகைய நியமனங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நியாயமான பிரதிநிதித் துவம் பெற்றுத் தருவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

9. ஒவ்வொரு மாகாணத்திலும் தாழ்த்தப்பட்ட இனத்தவர் களுக்குக் கல்வி வசதிகள் செய்து தரக் கல்வி மானியத்திலிருந்து கணிசமான தொகை ஒதுக்கப்படும்.

இந்த ஒப்பந்தத்தின் விதிகளை, திரு. காந்தி ஏற்றுக் கொண்டார். அரசும் இதனை இந்திய அரசாங்கச் சட்டத்தில் இணைத்து தனது ஒப்புதலை அளித்தது.

திரு. காந்தியின் இந்த உண்ணாவிரதம் ஒரு பெரிய சூதாட்ட மாகும். சாகும்வரை உண்ணவிரதம் இருக்கப்போவதாக அறிவித்த உடனேயே நானும் என்னைச் சேர்ந்த ஏனைய தாழ்த்தப்பட்ட சமூகத்தினரும் பயந்து நடுங்கிப்போய், உதறலெடுத்தப்போய்க் கீழே இறங்கிவந்துவிடுவோம், பணிந்து வந்து விடுவோம் என அவர் மனப்பால் குடித்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் இது எவ்வளவு தவறானது என்பதை விரைவிலேயே அவர் உணர்ந்து கொண்டு விட்டார்; தங்களது இறுதி மூச்சுவரை தங்கள் உரிமைகளுக்காகத் தீரத்தோடு போராடத் தாழ்த்தப்பட்ட மக்கள் உறுதி கொண்டிருப் பதையும் அவர் தெரிந்து கொண்டார். திரு.காந்தியின் உண்ணா விரதத்துக்கு எத்தகைய தார்மிக அடிப்படையும் இருப்பதாக அவரது சொந்த ஆதரவாளர் தவிர வேறு எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் மரணத்தின் கோரப்பிடியிலிருந்து மீண்டார் என்றால், அவர் மறுபிறவி யெடுத்தார் என்றால் தாழ்த்தப்பட்ட மக்கள் அவர்பால் காட்டிய நல்லெண்ணமும், பெருந் தன்மையும், தாராளமனப்பான்மையுமே முழுக்க முழுக்கக் காரணம் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

எனினும் இங்கு ஒரு கேள்வி எழுகிறது: புனா ஒப்பந்தத்தைச் செய்தகொண்டதன் மூலம் தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் என்ன அனுகூலம் அடைந்தார்கள், என்ன நன்மை பெற்றார்கள் என்று கேட்கக்கூடும். இதனைப் புரிந்து கொள்ளச் சட்டமன்றங்களுக்கு நடைபெற்ற தேர்தல் முடிவுகளை நுணுகி ஆராயவேண்டும். இந்திய அரசாங்கச் சட்டம் 1937 ஏப்ரல் முதல் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது. அந்தச் சட்டத்தில் நிர்ணயித்துக் கூறியிருந்தபடி 1937 பிப்ரவரியில் புதிய சட்டமன்றங்களுக்குத் தேர்தல்கள் நடை பெற்றன. தாழ்த்தப்பட்டோரைப்பொறுத்தவரையில், 1937 பிப்ரவரியில் நடைபெற்ற தேர்தல்கள் புனா ஒப்பந்தப்படி நடைபெற்ற தேர்தல் களாகும். பல்வேறு சட்டசபைகளில், தீண்டப்படாதோருக்கு ஒதுக்கப் பட்ட இடங்களுக்கு நடைபெற்ற தேர்தல் முடிவுகள் கீழே தரப்பட் டுள்ளன.

**அட்டவணை★**

| மாகாணம் | தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மொத்த இடங்கள் | காங்கிரஸ் கைப்பற்றிய மொத்த இடங்கள் |
|---|---|---|
| ஐக்கிய மாகாணங்கள் | 20 | 16 |
| சென்னை | 30 | 26 |

★ "காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதோருக்குச் சாதித்தது என்ன" என்ற டாக்டர் அம்பேத்கரின் நூலிலிருந்து இந்த அட்டவணை இங்குப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கையெழுத்துப்பிரதியில் இந்த அட்டவணை தட்டச்சு செய்யப்படவில்லை

- பதிப்பாசிரியர்.

| | | |
|---|---|---|
| வங்காளம் | 30 | 6 |
| மத்திய மாகாணங்கள் | 20 | 7 |
| பம்பாய் | 15 | 4 |
| பீகார் | 15 | 11 |
| பஞ்சாப் | 8 | இல்லை |
| அசாம் | 7 | 4 |
| ஒரிசா | 6 | 6 |
| மொத்தம் | 151 | 78 |

இந்த அட்டவணை சில உண்மைகளை வெளிப்படுத்துகிறது. புனா ஒப்பந்தத்தைச் செய்து கொண்டதன் மூலமும், திரு.காந்தியின் உயிரைக் காப்பாற்றியதன் மூலமும் தீண்டப்படாதோர் ஏதேனும் உருப்படியான பலனைக் கண்டிருக்கின்றார்களா, அவர்கள் சாதி இந்துக்களின் அடிமைகளாகவில்லையா என்பன போன்ற கேள்வி களைக் கேட்க இந்த உண்மைகள் தூண்டுகின்றன.

தாழ்த்தப்பட்டோரில் பெரும்பாலோர் காங்கிரஸ்காரர் களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தேர்தல் முடிவுகள் பற்றிய ஆய்வு காட்டுகிறது. அவர்கள் காங்கிரசிலோ அல்லது வேறு எந்தப் பிரதான அரசியல் கட்சியிலோ இணைவது மிகவும் ஆபத்தானது, மரணத்தைத் தழுவுவது போன்றது என்பது எனது உறுதியான, தீர்க்கமான கருத்து. முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் ஒரு தீவிரவாத இந்து அமைப்பாக இல்லாதிருக்கலாம். ஆனால், அது சாதி இந்துக்களைக் கொண்டிருப்பதால் அது உயர் சாதி வெறிகொண்ட ஓர் இந்து அமைப்பே என்பதில் ஐயமில்லை. தாழ்த்தப்பட்ட மக்களின் இயக்கம் என்பது சாதி இந்துக்கள் மீது பகிரங்கப் போர் தொடுப்பதையே குறிக்கும். காங்கிரசுக்குள் தாழ்த்தப் பட்டோரின் இயக்கம் செயல்படுவது முற்றிலும் சாத்திய மில்லை. அது கட்சிக்குள் ஒருவரையொருவர் அடித்துக்கொள்கிற உட்பகையையே குறிக்கும். காங்கிரஸ் தனது சொந்தப் பாதுகாப்பின் பொருட்டு இதனை அனுமதிக்காது. காங்கிரசில் சேர்ந்திருக்கும் தாழ்த்தப்பட்ட வர்கள் மேலிடத்தின் ஒப்புதல் இல்லாமல் தங்களது சமூகத்தின்

மேம்பாட்டிற்காக எத்தகைய இயக்கத்தையும் தமது விருப்பம்போல் முன்னின்று நடத்தமுடியாது; இது கண்டிப்பான முறையில் தடை செய்யப்பட்டுள்ளது. இதன் விளைவு என்ன? தாழ்த்தப்பட்டோர் காங்கிரஸ் கட்சியில் இணைந்த மாநிலங்களில் அவர்களது இயக்கம் செத்துவிட்டது.

தீண்டப்படாதோர் தங்களது மனக்குறைகளை வெளியிட்டு, தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு அரசியல் ரீதியில் பரிகாரம் தேடவேண்டுமென்றால் சட்டமன்றத்தில் அவர்கள் தங்களது பேச்சு சுதந்திரத்தையும் செயல் சுதந்திரத்தையும் நிலைநாட்ட வேண்டும். ஆனால் காங்கிரசில் சேர்ந்துள்ள தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதிகள் இந்தப் பேச்சு சுதந்திரத்தையும் செயல் சுதந்திரத்தையும் இழந்து விட்டனர். அவர்கள் தங்களது விருப்பம்போல் வாக்களிக்க முடியாது; தாங்கள் நினைத்ததை, எண்ணியதைப் பேசமுடியாது; அவர்கள் எந்தக் கேள்வியும் கேட்க முடியாது; எத்தகைய மசோதாவை யும் கொண்டுவர முடியாது. அவர்கள் முற்றிலும் நிர்வாகக் குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கின்றனர். காங்கிரஸ் நிர்வாகக் குழு அனுமதிக்கும் சுதந்திரத்தைத் தான் அவர்கள் பேணமுடியும். இதன் விளைவாக என்ன காண்கிறோம்? தாழ்த்தப்பட்ட மக்களின் அல்லல்கள், வேதனைகள், துன்ப துயரங்கள் தொடர்கதையாக நீடித்துக் கொண்டு போகும்போது சட்டமன்றத்தி லுள்ள தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிகள் இவற்றைப் பற்றி ஒரு கேள்விகூடக் கேட்க முடியாது. சில சமயங்களில் அவர்களது நிலைமை இன்னும் மிகவும் பரிதாபத்துக் குரியதாக இருக்கும். சட்டமன்றத்தில் கொண்டுவரப்படும் ஒரு தீர்மானம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனுகூலம் பயப்பதாக இருக்கும்; இதனை ஆதரித்து வாக்களிக்க அம்மக்களின் சட்டமன்ற பிரதிநிதிகள் விரும்புகிறார்கள்; ஆனால் காங்கிரஸ் கட்சி அத்தீர்மானத்தை எதிர்த்து வாக்களிக்கும்படி அவர்களுக்கு ஆணையிடும். இத்தகைய ஒரு நிகழ்ச்சி அண்மையில் சென்னையில் நடைபெற்றது. சென்னை மாகாணத்தில் உள்ள இந்துக் கோவில்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் சென்று வழிபடு வதற்கு வகைசெய்யும் ஒரு மசோதாவை சென்னைச் சட்டமன்ற உறுப்பினரான ராவ் பகதூர் ராஜா என்பவர் கொண்டு வந்தார். இதனை ஆதரிப்பதாகக் காங்கிரஸ் அரசு முதலில் உறுதியளித்தது. ஆனால் பின்னர் சென்னையிலுள்ள காங்கிரஸ் அரசாங்கம் தனது கருத்தை மாற்றிக் கொண்டு மசோதாவை எதிர்த்தது. சென்னைச் சட்டமன்றத் தாழ்த்தப்பட்ட இன உறுப்பினர்களுக்கு இதனால் மிகவும் சங்கடமான நிலைமை ஏற்பட்டது. அவர்களுக்கு வேறு வழியில்லை. மசோதாவை எதிர்க்கும்படி சட்டசபை காங்கிரஸ் கட்சி கொறடா மூலம் ஆணை

பிறப்பிக்கப்பட்டது. இதன் பேரில் அவர்கள் எல்லோரும் ஒருமித்து மசோதாவை எதிர்த்து வாக்களித்தனர். தாழ்த்தப்பட்டோரின் பிரதி நிதிகள், அந்த இன மக்களது நலன்களின் பாதுகாவலர்கள் என்று கருதப் படுகின்றனர். ஆனால் காங்கிரசில் தங்களை இணைத்துக் கொண்டதன் காரணமாக அவர்கள் வாய் கட்டப்பட்ட நாய்கள் போல் ஆகிவிட்டனர். அவர்களால் கடிக்க முடியாவிட்டாலும் குலைக்க வாவது செய்யலாம், அதுவும் முடியவில்லை. தாழ்த்தப் பட்ட இனத் தைச் சேர்ந்த இந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது பேச்சு சுதந்திரத்தையும் செயல் சுதந்திரத்தையும் இழந்து நின்றார்கள் என்றால் அவர்கள் காங்கிரசில் சேர்ந்ததும், காங்கிரசின் கட்டுப் பாட்டுக்குத் தங்களை உட்படுத்திக் கொண்டதுமே இதற்கு முழு முதல் காரணம்.

தாழ்த்தப்பட்ட இனப் பிரதிநிதிகள் தங்கள் இன மக்களுக்கு உண்மையிலேயே எத்தகைய நன்மையும் செய்ய இயலாமற்போனது அவர்கள் காங்கிரசில் இணைந்ததால் நேர்ந்த மூன்றாவது பிரதிகூல மாகும். இதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம். முதலாவதாக, காங்கிரசானது அடிப்படையான மாற்றம் விழையும் ஒரு முற்போக்குக் கட்சி அல்ல. புரட்சி அமைப்பு என்ற புகழை அது பெற்றுள்ளது. பரிபூரண சுதந்திரக் கோரிக்கையை முன்வைத்ததாலும், சட்ட மறுப்பு இயக்கம், வரிகொடா இயக்கம் போன்றவற்றை ஒருசமயம் அது நடத்தியதாலும் அக்கட்சிக்கு இப்புகழ் கிடைத்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் ஒரு புரட்சிக் கட்சி ஒரு முற்போக்குக் கட்சியாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதைப் பலர் மறந்து விடுகிறார்கள். ஒரு புரட்சிக்கட்சி ஒரு முற்போக்குக் கட்சியாகவும் இருக்க முடியுமா என்பது அதனை புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டும் சமூக எதார்த்தங்களையும், உணர்ச்சி வேகங்களையும் பொறுத்துள்ளது. உதாரணமாக இங்கிலாந்தின் பரோன் எனப்படும் பண்ணை நிலக் கோமான்களை எடுத்துக் கொள்வோம். இவர்கள் சைமன் டி மாண்ட்போர்ட் என்பவர் தலைமையில் ஜான் மன்னரை எதிர்த்து 1215ல் கிளர்ந்தெழுந்தனர்; அவரை நிர்ப்பந்தித்து மாக்னா கார்ட்டா எனும் அரசியல் உரிமை சாசனத்தில் கையெழுத்திட வைத்தனர். இதேபோன்று இங்கிலாந்தின் விவசாயிகள் 1381-ல் வாட் டைலர் தலைமையில் தங்களை ஆண்டைகளை எதிர்த்துக் கலகக் கொடி உயர்த்தினர்; இவர்கள் அனைவரும் பின்னர் அவர்களது கிளர்ச்சி நடவடிக்கைகளுக்காகத் தூக்கிலிடப்பட்டனர். இந்த இரு சாராருமே புரட்சியாளர்கள் பிரிவில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஒன்று. இங்கிலாந்தின் பண்ணை நிலக் கோமான்கள் புரட்சியாளர்களாக இருந்த காரணத்திற்காக

நான்குபேர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமா, அல்லது குறைந்தபட்சம் நான்குபேர் தேர்ந்தெடுக்க வேண்டுமா? இங்கு 'நான்கு' என்பது எதைக் குறிக்கிறது? (2) இந்துக்களுடனான இறுதி வாக்கெடுப்பில் எத்தகைய வாக்குரிமை முறையைக் கைக்கொள்ள வேண்டும்? இத்தகைய பிரச்சினைகள் குறித்துத் தீர்மானிப்பதற்காக நியமிக்கப் பட்ட ஹேம்மாண்ட் குழு, இந்த இரு பிரச்சினையிலும் முற்றிலும் நேரெதிரான இரண்டு கருத்துக்கள் நிலவுவதைக் கொண்டது; ஒன்று சாதி இந்துக்களின் கருத்து, மற்றொன்று தாழ்த்தப் பட்ட மக்களின் கருத்து, ஒப்பந்தத்தில் காணப்படும் 'நான்குபேர்' என்பது குறைந்த பட்சம் நான்குபேர் போட்டியிடவேண்டும் என்பதையே குறிக்கிறது என்று சாதி இந்துக்கள் சார்பில் வாதிடப் பட்டது. அவ்வாறு நான்குபேர் போட்டியிட முன்வராவிட்டால் பூர்வாங்கத்தேர்தல் இருக்காது. இதனால் தனி இடத்துக்குத் தேர்தல் நடைபெறாமல் அது காலியாகவே இருக்கும். தாழ்த்தப்பட்ட மக்கள் பிரதிநிதித்துவம் பெறாமல் போக வேண்டியது தான் என்றும் சாதி இந்துக்கள் குதர்க்கவாதம் பேசினர். ஆனால் தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் வேறுவிதமாக வாதிட்டனர்; நான்கு என்பது அதிகப்பட்சம் நான்கு பேர் என்பதையே குறிக்கும் என்று அவர்கள் கூறினர். புனா ஒப்பந்தத்தில் காணப்படும் நான்கு என்பதற்கு ''நான்கு பேருக்கு அதிகப்படாமல்'' என்று பொருள் கொள்ள வேண்டுமேயன்றி, 'நான்கு பேருக்குக் குறையாமல்' என்று பொருள் கொள்ளக்கூடாது என்றும் அவர்கள் வாதிட்டனர். வாக்களிப்புப் பிரச்சினையைப் பொறுத்தவரை கட்டாயப் பகிர்ந் தளிப்பு வாக்களிப்பு முறையே மிகவும் உகந்தது முறையே என்று இந்துக்கள் வாதிட்டனர். ஆனால் தாழ்த்தப்பட்ட இனத்தவரோ குவிப்பு முறை வாக்களிப்பே தேர்தலில் கைக்கொள்ளப்படுவதற்கு மிகச் சிறந்த, உசிதமான முறை என்று வலியுறுத்திக் கூறினார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் தெரிவித்த இக்கருத்தை ஹேம்மாண்ட் குழு ஏற்றுக்கொண்ட இது ஒருபுறமிருக்க, சாதி இந்துக்களின் வாதங்களுக்கான காரணத்தைத் தெரிந்து கொள்வது இங்கு சுவையாக இருக்கும்.

பூர்வாங்கத் தேர்தலுக்கான பட்டியலில் நான்குபேர் இடம்பெற வேண்டும், அதற்குக் குறைவாகக்கூடாது என்று இந்துக்கள் ஏன் விரும்பினார்கள் என்பது தெள்ளத்தெளிவு. இந்துக்களுடனும் இந்து சமயத்துடனும் பெரிதும் ஒத்துப்போகிற, இணங்கிப்போகிற தாழ்த்தப் பட்ட பிரதிநிதி ஒருவரை இறுதிவாக்கெடுப்பில் தேர்ந்தெடுக்கப்படச்

செய்யவேண்டும் என்பதே இந்துக்களின் நோக்கம். அப்படிப்பட்ட ஒருவர் இறுதிவாக்கெடுப்பில் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமாயின் அவர் பூர்வாங்கப்பட்டியலில் முதலில் இடம்பெறவேண்டும். பட்டியல் பெரிதாக இருந்தால்தான் மிகவும் சமரச இணக்கமுள்ள தாழ்த்தப்பட்டவர் ஒருவர் அதில் இடம் பெறமுடியும்.

பட்டியலில் ஒரே ஒரு வேட்பாளர் மட்டுமே இருந்தால் அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் மிகவும் உருக்கு உறுதிபடைத்த பிரதிநிதியாக, மலைகுலைந்தாலும் நிலைகுலையாதவராக, எதற்கும் விட்டுக் கொடுக்காதவராக இருப்பார்; இந்துக்களின் கண்ணோட்டத்தில் இப்படிப்பட்டவர் மிகவும் மோசமானவர் ஆவார். பட்டியலில் இரண்டுபேர் இருந்தால் இரண்டாவது நபர் முதல் நபரைவிட உறுதி குறைந்தவராக இருப்பார்; எனவே இப்படிப்பட்டவர் இந்துக் களின் பார்வையில் நல்லவராகக் கருதப்படுவார். பட்டியலில் மூன்று பேர் இருந்தால், மூன்றாவது நபர் இரண்டாவது நபரைவிட பற்றுறுதி குன்றியவராக இருப்பார், அதனால் இந்துக்களின் நோக்கில் மேம்பட்டவராக எண்ணப்படுவார். ஆக, நான்குபேர் கொண்ட பட்டியல் இந்துக்களிடமும் இந்து மதத்திடமும் மிகவும் இணக்கமான, பெரிதும் விட்டுக் கொடுக்கும் போக்கினைக் கடைப்பிடிக்கக் கூடிய தாழ்த்தப் பட்டோர் பிரதிநிதியை பட்டியலில் இடம்பெறச் செய்யும் மிகச் சிறந்த வாய்ப்பை இந்துக்களுக்கு வழங்குகிறது; எனவேதான் பட்டியல் குறைந்தபட்சம் நான்குபேரைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்று அவர்கள் உடும்புப் பிடிவாதம் பிடிக்கின்றனர்.

இந்துக்கள் கட்டாயப் பகிர்ந்தளிப்பு வாக்களிக்கும் முறையை வலியுறுத்துவதன் நோக்கமே பூர்வாங்க வேட்பாளர் பட்டியல் நான்குபேருக்குக் குறைந்ததாக இருக்கக்கூடாது என்னும் கோரிக்கைக்கு வலுவூட்டுவதே ஆகும். மொத்தம் எத்தனை இடங்கள் இருக்கின் றனவோ அத்தனை வாக்குகள் குவிப்புமுறை வாக்களிப்பு ஏற்பாட்டில் வாக்காளருக்கு இருக்கும்; அந்த வாக்குகள் அனைத்தையும் அவர் ஒரே வேட்பாளருக்கு அளிக்கலாம் அல்லது தம் விருப்பம்போல் இரண்டு அல்லது மூன்று வேட்பாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கலாம். பகிர்ந்தளிப்பு வாக்களிக்கும் முறையிலும் எத்தனை இடங்கள் இருக்கின்றனவோ அத்தனை வாக்குகள் வாக்காளருக்கு இருக்கும்; ஆனால் அவர் ஏதேனும் ஒரு வேட்பாளருக்கு ஒரு வாக்கை மட்டுமே அளிக்கமுடியும். இந்த இரண்டு முறைகளும் வேறுபட்டவையாகத்

தோன்றினாலும் நடை முறையில் வேறுபாடு ஏதும் இல்லை; ஏனென்றால் குவிப்புமுறை வாக்களிப்பில் கூட ஒருவேட்பாளர் தனது வாக்குகளைப் பகிர்ந்தளிப்பது தடை செய்யப்படவில்லை. அவர் ஒரு வேட்பாளருக்கு ஒரு வாக்குவீதம் அளிக்கலாம். ஆனால் இந்துக்கள் வாய்ப்பை நழுவ விட விரும்பவில்லை. கூட்டுவாக்காளர் தொகுதியில் தாழ்த்தப் பட்டோருக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தனி இடத்துக்குத் தங்கள் சார்பில் நிறுத்தப்பட்டுள்ள தாழ்த்தப்பட்ட வேட்பாளருக்கு ஆதரவாக தங்களது உபரிவாக்குளைக் கொண்டு போய் குவிப்பது அவர்களது பிரதான நோக்கம். சாதி இந்து வாக்காளர்களின் உபரி வாக்குகள் சாதி இந்து வேட்பாளரிடமிருந்து தாழ்த்தப்பட்ட வேட்பாளர்களுக்குத் திசை மாற்றப்பட்டாலொழிய இவ்வாறு செய்வது சாத்தியமில்லை. குவிப்பு முறை தேர்தல் ஏற்பாட்டில் விடவும், பங்களிப்பு முறைத் தேர்தல் ஏற்பாட்டில் இந்த உபரிவாக்குகளை திசை மாற்றுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. முதலில் குறிப்பிடப்பட்ட வாக்களிப்பு முறையில் சாதி இந்துவாக்களர் சாதி இந்து வேட்பாளருக்கு ஒரு வாக்கை மட்டும்தான் அளிக்கமுடியும். சாதிஇந்து வேட்பாளருக்கு பயன்படுத்தப்படாத மற்ற வாக்கை தாழ்த்தப்பட்ட வேட்பாளருக்கு மட்டுமே பயன்படுத்த முடியும். பகிர்ந்தளிப்பு முறையில் தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட இடத்திற்கான தேர்தலில் வாக்குகளைக் கொண்டுபோய்க் குவிப்பதற்கு அதிக வாய்ப்பிருக்கிறது. இதனால்தான், குவிப்பு முறையைவிடவும் இந்த முறையை அவர்கள் விரும்பினர். எனினும் அவர்களது கண்ணோட்டத்தில் பகிர்ந்தளிப்புமுறைகூட குறைபாடுகளற்ற தல்ல. பகிர்ந்தளிப்பு முறையின்கீழ் ஒரு வாக்காளர் தனது அனைத்து வாக்குகளையும் பயன்படுத்த வேண்டுமென்ற கட்டாயம் ஏதுமில்லை. அவர் ஒரு வாக்கை சாதி இந்து வேட்பாளருக்கு அளித்துவிட்டு மற்ற வாக்குகளைப் பயன்படுத்தாதிருக்கலாம். இவ்வாறு நிகழுமானால் தங்களது தாழ்த்தப்பட்ட பிரதிநிதியை வெற்றிபெறச் செய்யும் நோக்கம் தோல்வியடையும். எனவே, தாங்கள் வைத்த குறி தவறா திருக்க அவர்கள் விரும்பினர்; பகிர்ந்தளிப்பு வாக்களிப்பு முறை கட்டாயமாக்கப்பட வேண்டும் என்று வலி யுறுத்தினர்; அப்போதுதான் ஓர் இந்து வாக்காளர் அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இந்துக்களால் நியமிக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட இன வேட்பாளருக்கு வாக்களிப்பதைத் தவிர அவருக்கு வேறு வழி யில்லாதுபோகும்.

ஆக, இவ்வாறு இந்த இரண்டு யோசனைகளும் இந்துக்கள் தீட்டிய மிக ஆழமான சதியின் ஒரு பகுதியாக அமைந்திருந்தன.

ஹேம்மாண்ட் குழுவால் இவை நிராகரிக்கப்பட்டன. ஆனால் தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டிருக்கும் விசேடப் பிரதிநிதித்துவ உரிமைகளைப் பயனற்றதாக்குவதற்கு இந்துக்களுக்கு இருக்கும் அதிகாரத்தை இந்த யோசனைகளின் நிராகரிப்பு எவ்விதத்திலும் பலவீனப்படுத்திவிடாதிருப்பதற்குத் துணைபுரியும் சில விஷமத் தனமான அம்சங்கள் புனா ஒப்பந்தத்திலேயே அடங்கியிருந்தன.

இவ்வாறு, புனா ஒப்பந்தத்தின் காரணமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஓர் அரசியல் அவலநிலை, ஆபத்து நேரிட்ட போதிலும் புனா ஒப்பந்தத்தைத் தாழ்த்தப்பட்ட இனத்தோருக்கு கிட்டிய ஓர் அரிய வரப்பிரசாதமாக ஏற்றிப்போற்றிப் புகழும் நண்பர்கள் திரு. காந்திக்கு கிடைக்காமல் போகவில்லை.

முதலாவதாக, வகுப்புத் தீர்ப்பு வழங்கியதைவிடவும் அதிக மான இடங்களை புனா ஒப்பந்தம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெற்றுத்தந்துள்ளது என்று கூறப்படுகிறது. வகுப்புத்தீர்ப்பு 78 இடங் களை மட்டுமே வழங்கியிருந்தபோது 151 இடங்கள் கிடைக்கச் செய்துள்ளது என்பது உண்மையே. ஆனால் இதை வைத்து வகுப்புத் தீர்ப்பு வழங்கியதைக் காட்டிலும் புனா ஒப்பந்தம் அவர்களுக்கு அதிகமாக வழங்கியுள்ளது என்ற முடிவுகட்கு வருவது வகுப்புத் தீர்ப்பு உண்மையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன அளித்துள்ளது என்பதை உதாசீனம் செய்வதாகவே இருக்கும்.

வகுப்புத்தீர்ப்பு தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு இரண்டு அனுகூலங்கள் கிடைக்கச் செய்வது : (i) தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சில குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப்பட்டன; இவற்றிற்கு வாக்காளர் பட்டியல் மூலமே தேர்தல் நடைபெறும்; தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களே இந்த இடங்களை நிரப்பமுடியும்; (ii) தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரண்டு வாக்குச்சீட்டு ஒன்றைத் தனித்தொகுதியிலும் மற்றொன்றை பொதுத் தொகுதியிலும் அவர்கள் பயன்படுத்தலாம்.

ஆனால் புனா ஒப்பந்தம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இடங்களின் எண்ணிக்கை அதிகரித்த அதேசமயம் இரட்டை வாக்குரிமையைப் பறித்துவிட்டது. இடங்கள் அதிகரிப்பு இரட்டை வாக்குரிமை இழப்பை ஒருபோதும் ஈடுசெய்ய முடியாது. வகுப்புத் தீர்ப்பு வழங்கிய இரண்டாவது வாக்கு விலை மதிப்பற்ற தனிச் சலுகை யாகும். ஓர் அரசியல் ஆயுதம் என்ற முறையில் அதன் மதிப்பு

கணக்கிடற்கரியது. ஒவ்வொரு தொகுதியிலும் தாழ்த்தப்பட்ட இனத்தவரின் வாக்குரிமை பலம் பத்துக்கு ஒன்றாக இருக்கிறது. இந்த வாக்குரிமைப் பலத்தைக் கொண்டு அவர்கள் பொதுத்தேர்தல் பிரச்சினையை ஆணையிட்டு ஆட்டிப் படைக்கக்கூடியவர்களாக அல்லாவிட்டாலும் அதனை நிர்ணயிக்கக் கூடிய நிலைமையிலாவது இருப்பார்கள். ஒரு சாதி இந்துவேட்பாளர் தாழ்த்தப்பட்ட மக்களது வாக்குகளைச் சார்ந்திருக்கும்படிச் செய்யப் பட்டால் அந்த வேட்பாளர் தமது தொகுதியில் தாழ்த்தப்பட்ட இனத்தோரை உதாசீனம் செய்யவோ அல்லது அவர்களது நலன்களுக்கு எதிராக செயல்படவோ துணியமாட்டார். ஆனால் இன்று அவர்களது நிலைமை என்ன? வகுப்புத் தீர்ப்பு வழங்கியதைவிட அவர்களுக்கு ஒரு சில இடங்கள் அதிகமாகக் கிடைத்துள்ளன. அவ்வளவுதான், ஆனால் அதேசமயம் ஏனைய உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களிடம் விநோத பாவமாக நடந்து கொள்ளாவிட்டாலும் அலட்சிய பாவமாக நடந்து கொள்வதைக் கண்கூடாகக் காண்கிறோம். இரட்டை வாக்குரிமையுடன் கூடிய வகுப்புத்தீர்ப்பு நீடித்திருக்குமானால் தாழ்த்தப்பட்ட வகுப்பின ருக்கு ஒரு சில இடங்கள் குறைவாகத் கிடைப்பினும் இதர உறுப்பினர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான பிரதிநிதிகள் போலவே நடந்துகொண்டிருப்பார்கள். ஆதலால் தாழ்த்தப்பட்டோர் இனத் துக்கான இடங்கள் அதிகரிப்பு, உண்மையில் அதிகரிப்பே ஆகாது.

புனா ஒப்பந்தத்தின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிக இடங்கள் கிடைத்திருக்கவே செய்கின்றன என்பதை வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும், இந்தக்கூடுதல் இடங்களால் அம்மக்களுக்கு என்ன நன்மை என்ற கேள்வி இயல்பாக எழவே செய்யும். வாக்களிக்கும் உரிமை என்பது அரசியல் பாதுகாப்புக்குப் போதுமான ஒரு சாதனம் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரையில் வெறும் வாக்களிக்கும் உரிமை மட்டுமே போதாது என்று கருதப்பட்டது. தாழ்த்தப்பட்டோரின் வாக்குகளைப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினர் அவரே தாழ்த்தப்பட்டவராக இல்லையென்றால், அவர் பாசாங்கு காரராகவும், நாணயமற்றவராகவும் நடந்து கொண்டு, அவர்களது நலனில் எத்தகைய அக்கறையும் காட்டாதிருக்கக்கூடும் என்று அச்சம் தெரி விக்கப்பட்டது. எனவே, தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கைகளும், குறைபாடு கருத்துகளும், ஆர்வவிருப்பங்களும் சட்டமன்றத்தில் எதிரொலிக்க வேண்டுமானால் அதற்கு ஒரேஒரு நிச்சயமான வழிதான் இருக்கிறது. சில குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள இடங்களை அவர்

களுக்கு ஒதுக்குவதும், சட்டமன்றத்தில் தாழ்த்தப்பட்டோரைத் தாழ்த்தப்பட்டோரே பிரதிநிதித்துவப்படுத்துவதும்தான் அந்த ஒரே வழியாகும் என்று கூறப்பட்டது. ஆனால் இந்த நம்பிக்கை இப்போது பொய்த்துவிட்டது என்பது கண்கூடு. வகுப்புத்தீர்ப்பு குறைந்த இடங்களையே ஒதுக்கியது உண்மையே. ஆனால் இதன் மூலம் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அனைவரும் சுதந்திரமானவர்களாக இருந்திருப்பார்கள். புனா ஒப்பந்தம் அதிக இடங்களை வழங்கியது. ஆனால் இந்த இடங்களை எல்லாம் அடிமைகள்தான் நிரப்பு வார்கள். அடிமைகளின் படைப்பிரிவு ஒன்றைப் பெற்றிருப்பது நலம் பயப்பது என்றுதான் கூறவேண்டியிருக்கிறது!

புனா ஒப்பந்தத்திற்கு ஆதரவாக முன்வைக்கப்படும் இரண் டாவது வாதத்தை இனிப் பார்ப்போம்: இந்த ஒப்பந்தப்படி தனி வாக்காளர் தொகுதிகள் ஒழித்துக்கட்டப்பட்டதானது தீண்டப்படா தார்கள் என்றென்றும் தீண்டப்படாதார்களாக முத்திரை குத்தப் படுவதிலிருந்து காப்பாற்றி யுள்ளது என்று வாதிக்கப்படுறகிறது. லண்டனில் நிகழ்த்திய உரை ஒன்றில் திரு. காந்தி பின்வருமாறு குறிப்பிட்டார்:

''முஸ்லீம்களும் சீக்கியர்களும் ஸ்தாதபன ரீதியில் நன்கு ஒருங்குதிரண்டுள்ளனர். 'தீண்டப்படாதோர்' அவ்வாறில்லை. அவர் களிடையே அரசியல் உணர்வு மிகவும் குறைவு. அவர்கள் மிகவும் குரூரமான முறையில் நடத்தப்படுகின்றனர். அவர்களைக் காப்பாற்ற விரும்புகிறேன். அவர்கள் தனிவாக்காளர் தொகுதிகளைப் பெறுவார் களேயானால் இந்து வைதிகத்தின் கொத்தளங்களாக உள்ள கிராமங் களில் அவர்களது வாழ்க்கை துயர்மிகுந்ததாக, இழிவினும் இழிந்ததாக, வேதனை மிக்கதாக இருக்கும். தொன்றுதொட்டு, காலம் காலமாக தாழ்த்தப்பட்ட மக்களைப் புறக்கணித்தமைக்காக, உதாசீனம் செய்தமைக்காக இந்துக்களில் உயர் சாதியினர்தான் பிராயச்சித்தம் செய்யவேண்டும். தாழ்த்தப்பட்டோருக்குத் தனி வாக்காளர் தொகுதி வேண்டுமென்று கோராமல், தீவிர சமூக சீர்திருத் தங்களை முன்னின்று செல்வதன் மூலமும், சேவா நடவடிக்கைகள் வாயிலாக அவர்களது நிலைமையை மேம்படுத்துவதன் மூலமும் இத்தகைய கழுவாயைத் தேடலாம். இவ்வாறில்லாமல், அவர் களுக்குத் தனி வாக்களர் தொகுதி கொடுத்தால், 'தீண்டப் படாதோருக்கும்' வைதிகவாதிகளுக்கும் இடையே போட்டியும் பொறாமையும், பூசலும் பிணக்கும்தான் அதிகரிக்கும். முசல்மான்

களுக்கும் சீக்கியர்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும் என்னும் யோசனையைத் தவிர்க்கமுடியாத தீமை என்ற அளவில் என்னால் சாதித்துக் கொள்ள முடியும். ஆனால் 'தீண்டாதோர்' தனி வாக்காளர் தொகுதி அளிப்பது என்பது அரசாங்கம் உற்பத்தி செய்த ஒரு நவீன சாக்கு என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இப்போது நாம் செய்யவேண்டியதெல்லாம் அவர்களது பெயர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதும், அரசியலமைப்புச் சட்டத்தில் அவர்களுக்கு அடிப்படை உரிமைகளை உத்தரவாதம் செய்வதும்தான். அவர்கள் நேர்மையற்ற முறையில், கீழ்த்தரமான முறையில்நடத்தப்படவோ அல்லது அவர்களது பிரதிநிதி திட்டமிட்டு வேண்டுமென்றெ விலக்கப்பட்டாலோ விசேட தேர்தல் முறைமன்றம் அமைக்க வேண்டு மெனக் கோர அவர்களுக்கு உரிமை உண்டு. அம்மன்றம் அவர்களுக்குப் பரிபூரண பாதுகாப்பு அளிக்கும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவரின் தேர்தலைச் செல்லாது என்று கூறவும், தேர்தலில் நிற்க விடாமல் விலக்கப்பட்டவரைத் தேர்ந்தெடுக்கப் பட்டவராக அறிவிக்கவும் இந்த விசேடத் தேர்தல் முறை மன்றத்துக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

'தீண்டப்படாதோருக்குத் தனிவாக்காளர் தொகுதி வழங்குவது அவர்களது அடிமைத்தனத்தை சாசுவதமாக்கவே செய்யும். தனி வாக்காளர் தொகுதிகள் வழங்குவதன் மூலம் முசல்மான்கள் ஒருபோதும் முசல்மான்களாக இல்லாதிருக்கப்போவதில்லை. 'தாழ்த்தப்பட்ட மக்கள் என்றென்றைக்கும் 'தாழ்த்தப்பட்டவர் களாகவே' இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா? எது எப்படியிருப்பினும், தனி வாக்காளர் தொகுதிகள் இந்து சமூகத்தின் இந்தக்கறையை, வடுவை, இழுக்கை நிரந்தமாக்கவே செய்யும். எனவே இப்போது செய்ய வேண்டியதெல்லாம் தீண்டாமையை ஆழக் குழிதோண்டி புதைப்பதுதான், அதனை அடியோடு அழித் தொழிப்பதுதான். இதனைச் செய்துவிட்டால், அகம்பாவமும் இறுமாப்பும் கொண்ட 'மேல்' சாதியினர் 'கீழ்' சாதியினருக்குச் சூட்டியுள்ள 'இழிந்தவர்கள்' என்ற அவப்பெயர் துடைத்தெறியப் பட்டுவிடும். இந்த இழுக்கை, அழுக்கை அகற்றிவிட்ட பிறகு யாருக்கு நீங்கள் தனி வாக்காளர் தொகுதிகளை அளிப்பீர்கள்? ஐரோப்பாவின் வரலாற்றை எடுத்துக்கொள்ளுங்கள். அங்குத் தொழிலாளி வர்க்கத்துக்கு என்று அல்லது பெண்களுக்கென்று தனிவாக்காளர் தொகுதிகள் இருக்கின்றனவா? வயதுவந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்படும்போது 'தீண்டப்படாதோர்' முழுப்

பாதுகாப்பு பெறுகின்றனர். அப்போது கடைந்தெடுத்த வைதிக தீயவர்கள்கூட வாக்குகளுக்காக அவர்களைத் தேடிவருவார்கள், நாடிவருவார்கள்.

''அவ்வாறாயின், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியான டாக்டர் அம்பேத்கர் அவர்களுக்குத் தனிவாக்களர் தொகுதி வேண்டும் என்று ஏன் கேட்கிறார் என நீங்கள் வினவலாம். டாக்டர் அம்பேத்கரிடம் எனக்கு மிகுந்த மதிப்பு உண்டு. அவர் மனக்கசப்பு அடைய எல்லா நியாயமும் இருக்கிறது. இதுவரை அவர் நம் மண்டைகளை உடைக்கவில்லை என்றால் அது அவரது சுயக் கட்டுப்பாட்டையே காட்டுகிறது. இன்று சந்தேகம் அவரை முற்றிலும் ஆட்கொண்டிருக் கிறது; இதனால் அவரால் வேறு எதையும் பார்க்க முடியவில்லை. ஒவ்வொரு இந்துவையும் அவர் தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரு பரம வைரியாக காண்கிறார்; இது முற்றிலும் இயல்பே. என் இளமைப்பருவத்தில் தென்னாப்பிரிக்காவில் எனக்கு இதே நிலைதான் ஏற்பட்டது. சென்றவிடமெல்லாம் ஐரோப்பியர்கள் என்னை வேட்டைநாய்போல் துரத்தினர். ஆதலால் அவர் மனக் கொதிப்பு கொள்வது இயற்கையே. ஆனால் அவர் கோரும் தனிவாக்காளர் தொகுதி, சமூக சீர்திருத்தத்தைக் கொண்டுவராது. வேண்டுமானால் அவரே ஆட்சிக்கும் அதிகாரத்துக்கும் வரலாம். ஆனால் 'தீண்டப் படாதோருக்கு' இதனால் எந்த நன்மையும் கிட்டாது. இத்தனை ஆண்டுகளாக அவர்களோடு ரத்தத் தோடு ரத்தமாக, மூச்சோடுமூச்சாக நெருங்கிப் பழகியவன், அவர்களில் ஒருவனாக வாழ்த்தவன், அவர்களது இன்பதுன்பங்களில் பங்கு கொண்டவன் என்ற முறையில் இதனை உரிமையோடு கூறுகிறேன்.'' அவரது வாதத்துக்குச் சைமன் கமிஷன் ஓரளவு ஆதரவளித்தது என்பது உண்மையே; (பின்வரும் பகுதிகள் கையெழுத்துப்பிரதியில் இடம்பெற வில்லை. டாக்டர் அம்பேத்கர் எழுதிய 'காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதோருக்கு சாதித்து என்ன' என்ற நூலிலிருந்து இங்கு தரப்பட்டுள்ளன, பிற்சேர்க்கை IV, பக்கம் 327- பதிப்பாசிரியர்).

## (சைமன் கமிஷன் அறிக்கையின் சில பகுதிகள், தொகுதி II)

78............ எந்த மாகாணத்திலும் வாக்களிக்கத் தகுதிபெற்ற தாழ்த்தப்பட்ட இனத்தோரின் எண்ணிக்கையை மதிப்பிடுவது சாத்திய மாக இல்லை. வாக்களிக்கும் தகுதி கணிசமாகக் குறைக்கப்படும் பட்சத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பு வாக்காளர்களின் வீதாசாரம் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. எனினும் இவ்வாறு வாக்களிக்கும் தகுதியைக் குறைத்தாலும்கூட ஏதேனும் விசேடவழிவகை ஏற்பாடு செய்யாமல் பொதுத்தொகுதிகளில் தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் தங்கள் சொந்தப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கச்செய்வதற்கு வாய்ப்பில்லை என்பது தெளிவு. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தங்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தித்தான் முன்னேறமுடியும். எனவே, இந்த நிலைமையில், இதர சக்திகள் அவர்களது ஆதரவை நாடிப் பெறும் அளவுக்கும், அவர்களது தேவைகளை ஆழ்ந்து கவனிக்கும் அளவுக்கும் அவர்கள் போதிய முக்கியத்துவம் ஈட்டுவதைப் பொறுத்துத்தான் இந்த முன்னேற்றம் அமைந்திருக்கும் என்பது கண்கூடு.

★★★

80... ... ஆகவே, தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மொத்த மக்கட்தொகை விகிதாசார அடிப்படையில் அவர்களுக்கு இடங்களை ஒதுக்கிடு செய்ய நாங்கள் பரிந்துரைக்கவில்லை என்பதை இங்கு கவனிக்க வேண்டும். எனினும் இப்போது நாங்கள் பரிந்துரைத் துள்ள இடஒதுக்கீட்டு விகிதாசாரம் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணிசமாக அதிகப்படுத்துவதற்கு வகை செய்யும். வறுமையும் படிப்பின்மையும் அவர்களிடையே மிகப் பரவலாக இருப்பதைக் காண்கிறோம். இப்படிப்பட்ட நிலைமையில், போதிய தகுதி வாய்ந்த உறுப்பினர்கள் பெரும் எண்ணிக்கையில் உடனடியாகக் கிடைப்பார்களா என்பது மிகுந்த ஐயத்துக்கிடமானதாக இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு திறமையற்றவர்களும், நேர்மையற்றவர்களும், மேல் சாதியினருக்கு அடிவருடிகளாக இருக்கக் கூடியவர்களும் பெரும் எண்ணிக்கையில் சட்டமன்றத்தை நிரப்புவதைக் காட்டிலும் மிகவும் தகுதிவாய்ந்த, பொறுக்கியெடுத்த, மணிமணியாக உறுப்பினர்கள் அம்மக்களின் பிரதிநிதிகளாக வருவது

எவ்வளவோ மேல். பல்வேறு வகையான பிரதிநிதிகளிடையே இடங்களை மறு-விநியோகம் செய்வதற்கு தற்போது முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் இந்த மறுவிநியோகம் நிரந்தரமானதாக இருக்கமுடியாது; இதை மாற்றுவதற்கு வழிவகை செய்யப்படவேண்டும். ஆனால் நாங்கள் தெரிவித்துள்ள யோசனை இப்போதைக்குப் போதும் என்று நினைக்கிறோம். அதிலும் குறிப்பாக இட ஒதுக்கீட்டின் மூலம் தமது கருத்தைப் பிரதிபலிப்பது என்பது அவ்வாறு ஒதுக்கப்படாத இதர இடங்களைக் கைப்பற்றும் சாத்தியக் கூறை விலக்கிவிடவில்லை என்பதை இங்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

★★★

ஆனால் திரு.காந்தியின் மேலே கூறிய வாதம் சிறுபிள்ளைத் தனமானது; இதில் சந்தேகமே இல்லை. ஒருவரை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்தி ஒரு தனிப்பிரிவில் சேர்ப்பது தீமையாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. எவரையும் இனவாரியாகப் பிரித்து ஒதுக்கிக் குறிப்பிடுவது நன்மை பயக்குமா அல்லது தீமை விளைவிக்குமா, விரும்பத்தக்கதா அல்லது விரும்பத்தகாததா என்பது அதன் அடிப் படையான நோக்கத்தைப் பொறுத்திருக்கிறது. இந்த நோக்கம் அவரது உரிமைகளைப் பாதிப்பதாக இருக்குமாயின் செயல் மிகவும் தவறானது என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்த நோக்கம் ஒருவருக்கு அனுகூலம் தருவதாக இருக்குமானால் அது தவறானதாக இல்லாமல், மிகவும் நன்மை செய்யும் நடவடிக்கையாகவே இருக்கும். தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவரை தனி வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதன் குறிக்கோள் அவருக்குள்ள வாக்குரிமையைப் பறிப்பதாக இருக்குமானால் அது மிகுந்த ஆட்சேபத்துக்குரியது. இதற்குமாறாக, அவரை ஒரு தனிவாக்காளர் பட்டியலில் சேர்ப்பது அவருக்குத் தனிப்பிரதிநிதித்துவ உரிமையை அளிப்பதற்காக என்றால் அது நிச்சயமாக அவருக்கு நன்மையே செய்யும். முடிவான நோக்கம் என்ற கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனி வாக்காளர் தொகுதிகள் ஒதுக்கப்படுவதை அவர்களுடைய நண்பர்கள் என்று கூறிக்கொள்ளும் எவரும் எப்படி ஆட்சேபிக்கமுடியும் என்பது புரியாத புதிராக இருக்கிறது. எனவே, தனிவாக்காளர் தொகுதிக்கு எதிராக காந்தி முன்வைக்கும் வாதம் சிறுபிள்ளைத் தனமானது மட்டுமல்ல, உள்ளொன்றும் புறமொன்றுமான நயவஞ்சகப் போக்குமாகும். தனிவாக்காளர் தொகுதிகளை காந்தி எதிர்ப்பதற்குக்

காரணம் அவை தாழ்த்தப்பட்ட மக்களைத் தனியாகப் பிரித்து ஒதுக்குகின்றன என்பதேயாகும். ஆனால் இவ்வாறு செய்வதை கூட்டு வாக்காளர் தொகுதிகளில் எவ்வாறு தவிர்க்க முடியும் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. கூட்டுத் தொகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஓர் இடத்தை ஒதுக்க வேண்டுமானால் அத்தகைய உரிமை கோரும் வேட்பாளர் தான் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் என்று தன்னைப் பிரித்துக் காட்டியே ஆக வேண்டும். அந்த அளவுக்கு கூட்டுத்தொகுதியிலும் ஒருவர் தன்னை இனவாரியாகப் பிரித்து ஒதுக்கிக் குறிப்பிடுவது அவசியமாகிறது. எனவே, திரு.காந்தி தனி வாக்காளர் தொகுதிக்கு எவ்வாறு கடும் எதிர்ப்புக் காட்டி வந்திருக் கிறாரோ அவ்வாறே கூட்டுத் தொகுதியையும் வன்மையாக எதிர்த்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யாததிலிருந்து ஒன்று அவர் நேர்மை யற்றவராக இருக்க வேண்டும் அல்லது தாம் என்ன பேசுகிறோம் என்பதையே அறியாதவராக இருக்க வேண்டும்.

புனா ஒப்பந்தத்தின்படி தாழ்த்தப்பட்ட மக்கள் சுதந்திர மனோ பாவமுள்ளவர்களை சட்டமன்றத்தில் தங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவற்கு எந்த அளவுக்கு அனுப்ப முடிந்திருக்கிறது, இந்தப் பிரதிநிதிகள் அங்கு ஏதேனும் போராட்டம் நடத்துகிறார்களா, அதில் அவர்கள் எந்த அளவுக்கு வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்பதை யெல்லாம் திரு.காந்தியின் நண்பர்கள் எண்ணிப் பார்ப்பதில்லை; அவ்வாறு எண்ணிப் பார்ப்பாராயின் கூட்டுவாக்காளர் தொகுதிகளையும் புனா ஒப்பந்தத்தையும் தலைமேல் தூக்கி வைத்துக்கொண்டு கொண்டாடியதற்காக, அவற்றிற்கு திரு. அகவல் பாடியதற்காக வெட்கித் தலைகுனிந்திருப்பார்கள். காங்கிரசும் இந்துக்களும் பெரும்பான்மை சமூகத்தினர் என்ற ரீதியில் வெட்கக்கேடான முறையில் தங்கள் அதிகாரத்தையும் தவறான வழியில் பயன்படுத்தி இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட இனத்தோர் தங்களுக்கு விருப்பமான வர்களைத் தேர்ந்தெடுப்பதை இவர்கள் தடுத்ததோடு நில்லாமல், தங்கள் உபரிவாக்குகளைப் பயன்படுத்தி தங்களது 'ஆமாம்' ஆசாமிகளைத் தேர்ந்தெடுக்கச் செய்ததோடு நில்லாமல், உலகில் எந்தப் பகுதி யிலும் பண்பும் தரமுள்ள எக்கட்சியும் செய்வதற்கு வெட்கித் தலைகுனியக் கூடிய ஒரு காரியத்தையும் செய்திருக்கிறார்கள்; அதாவது தாழ்த்தப்பட்ட இன மக்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களை நிரப்புவதற்கு அம்மக்களிடமிருந்து வேட்பாளர்களை காங்கிரஸ் பொறுக்கியெடுத்திருப்பது மிகவும் கோழைத்தனமான, இழிவினும் இழிவான, கயமைத்தனமான செயலாகும்.

காங்கிரஸ் என்பது இந்துக்கள் தங்களுக்குச் சூட்டிக்கொண்ட ஓர் அரசியல் பெயரே தவிர வேறன்று; புனா ஒப்பந்தம் நிர்ணயித்துத் தந்திருப்பதைவிட அதிக இடங்களைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெற்றுத்தருவதற்குக் காங்கிரசுக்கு நிறைய வாய்ப்பிருந்தது. பொது இடங்களுக்குப் போட்டியிட தாழ்த்தப்பட்ட இனத்தோரின் வேட்பாளர் களை வரித்துக்கொள்வதன் மூலம் அவர்கள் இதனைச் செய் திருக்கலாம். இவ்வாறு செய்வதிலிருந்து அவர்களைத் தடுக்க சட்டத் தில் எந்த விதிமுறைகளும் இல்லை. ஆனால் காங்கிரஸ் இவ்விதம் எதுவும் செய்யவில்லை. இது எதைக் காட்டுகிறது? தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்த இடமுமே ஒதுக்கப்பட்டிருக்கவில்லை என்றால், தாழ்த்தப்பட்ட இனத்தவர் ஒருவர் சட்டமன்றத்தில் இடம் பெறுவதற்கு இந்துக்கள் ஒருபோதும் அக்கறை எடுத்துக் கொண் டிருக்க மாட்டார்கள். ஆனால் மறுபுறத்தில், தாழ்த்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு செய்யப்பட்டபோது இந்துக்கள் என்ன செய்தார்கள்? தங்களுக்குக் கைக்கூலிகளாக அடிமைகளாக இருக்க இணங்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்த இடங்கள் கிடைக்கும்படியாகப் பார்த்துக்கொண்டு, 'எடுத்தோம் கவிழ்த்தோம்'என்ற ரீதியில் இடஒதுக்கீட்டுச் சித்தாந்தத்தின் பலன்களையே நசித்து நாசமாக்கு வதில் முனைந்து ஈடுபட்டார்கள்.

இவ்வாறு, அரசியல் உரிமைகளைப் பெறுவதற்காக தாழ்த்தப் பட்டோர் நடத்திய இந்தப் போராட்டம் சோகமுடிவை எய்தியது, இந்த அவல முடிவுக்கு திரு.காந்தியே முழுக்க முழுக்க பொறுப்பு என்று கூறுவதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

வகுப்புத்தீர்ப்பு தனி வாக்காளர்கள் தொகுதிகளை உருவாக்க வழிசெய்கிறது என்ற காரணத்திற்காக அதனை எதிர்த்து திரு.காந்தி ஏகமாக கூக்குரலும் ஆர்ப்பாட்டமும் செய்தது முற்றிலும் தவறாகும்; இந்துக்கள் அவரது உண்ணாவிரதத்தால் பெரிதும் உணர்ச்சிவசப் பட்டு வெறிபிடித்தவர்களாக ஆகியிருக்கவில்லை என்றால் இந்த உண்மையை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். தனி வாக்காளர் தொகுதிகளைத் தவிர கூட்டு வாக்காளர் தொகுதிகளுக்கும் வகுப்பத் தீர்ப்பு வழிசெய்துள்ளது என்பதை இங்கு மறந்துவிடக்கூடாது தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் இரண்டாவது வாக்கு பொதுத் தொகுதியில் ஒரு சாதி இந்து வேட்பாளரின் தேர்தலில் பயன்படுத்தற்குரியதாகும். இது சந்தேகமில்லாமல் ஒரு கூட்டுத் தொகுதி முறையாகும். வகுப்புத் தீர்ப்புக்கும் புனா ஒப்பந்தத்துக்கும் உள்ள வேறுபாடு, வாக்காளர் தொகுதியின்

இயல்பில்தான் பொதிந்துள்ளது. இவ்விரண்டுமே கூட்டுவாக்காளர் தொகுதிகள் ஏற்பட வகை செய்கின்றன. இவ்விரண்டுக்குமுள்ள வேறுபாடு என்ன என்று பார்ப்போம்: சாதி இந்து வேட்பாளரின் தேர்தலில் தாழ்த்தப்பட்டோர் பங்கு கொள்ளவும் அதில் செல்வாக்குச் செலுத்தவும் வகை செய்கிறது வகுப்புத்தீர்ப்பு கூறும் கூட்டு வாக்காளர் தொகுதி; ஆனால் இதற்கு நேர்மாறாக அமைந்திருக்கிறது புனா ஒப்பந்தம்; தாழ்த்தப்பட்ட வேட்பாளர்களின் தேர்தலில் சாதி இந்துக்கள் பங்கெடுத்துக் கொள்ளவும், அத்தேர்தலில் அவர்கள் செல்வாக்கு செலுத்தவும் வகை செய்கிறது புனா ஒப்பந்தம் குறிப்பிடும் கூட்டுத் தொகுதிமுறை. இதுதான் இவ்விரண்டுக்கு முள்ள உண்மையான வேறுபாடு.

தாழ்த்தப்பட்ட இன மக்களின் உண்மையான நண்பர் என்ன செய்வார்? வகுப்புத்தீர்ப்பு கூறும் பொதுவாக்காளர் தொகுதிகளை அவர் ஆதரிப்பாரா? தாழ்த்தப்பட்டோரின் வாக்குகளை இந்துக்கள் சார்ந்திருக்கும்படிச் செய்வதில்தான் தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மை யான விமோசனம் அடங்கியுள்ளது என்பதில் ஐயமில்லை. இதைத்தான் வகுப்புத்தீர்ப்பு செய்துள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களை இந்துக் களின் வாக்குகளைச் சார்ந்திருக்கும்படி செய்வது ஏற்கனவே இந்துக் களின் அடிமைகளாக இருக்கும் அவர்களை மேலும் அடிமைகளாக்கு வதிலேயே போய்முடியும். இதைத்தான் புனா ஒப்பந்தம் செய் திருக்கிறது. தாழ்த்தப்பட்ட இனத்தோரை இந்துக்களின் அடிமை நுகத்தடியிலிருந்து, தொழும்பர் நிலையிலிருந்து விடுவிப்பதே வகுப்புத் தீர்ப்பின் நோக்கம். ஆனால் புனா ஒப்பந்தம் இதற்கு மாறாக அவர்களை இந்துக்களின் ஆதிக்கத்தில் வைத்திருக்கும் திட்டம் கொண்டது.

திரு.காந்தியின் 'சாகும்வரையான உண்ணாவிரதத்தை' இந்தியா விலும் வெளிநாடுகளிலும அவருடைய நண்பர்களும் ஆர்வலர்களும் வானளாவப் புகழ்ந்துள்ளனர். 'இரண்டாவது சிலுவையேற்றம்', 'புனிதமான உயிர்த்தியாகம்', 'வெற்றிவாகை சூடும் போராட்டம்' என்றெல்லாம் ஏற்றிப் போற்றி வருணித்துள்ளனர். தமது இன்னுயிரைத் தியாகம் செய்ய முன்வந்திருக்கும் திரு. காந்தி ஏமாற்றுக்காரரோ, மக்கள் உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு அதில் குளிர்காய்பவரோ அல்ல என்று அவரது ஓர் அமெரிக்க நண்பர் தம் நாட்டவருக்கு உறுதி கூறியுள்ளார். மற்றொரு அமெரிக்கரோ மிகவும் மெய்ம்மறந்த நிலையில், ஆனந்த பரவச நிலையில் அவரை 'உலகை ரட்சிக்க வந்த' அவதாரபுருஷர் என்று புகழ்மாலை சூடும் அளவுக்குச்

சென்றுள்ளார். காந்தியின் உண்ணாவிரதம் பற்றி எனக்கென ஒரு சொந்தக் கருத்து இருக்கிறது. அதனை ஓர் அரசியல் செப்படிவித்தை என்று வருணித்துள்ளேன். அவருடைய பேச்சுக்களில் எப்போதுமே பொய்ம்மையின், நேர்மையின்மையின் ஒலியைத்தான் கேட்கிறேன்.

காந்தி உண்ணாவிரதம் மேற்கொண்டது இந்து சமூகம் உடைந்து போவதிலிருந்து, பிளவுபடுத்துவதிலிருந்து அதனைக் காப்பாற்றுவதற்காகவே அன்றி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலை தேடித்தருவதற்காக அல்ல என்ற எண்ணம் எனக்கு எப்போதுமே இருந்து வந்திருக்கிறது. என்ன விலை கொடுத்தாலும், இன்னும் சொல்லப்போனால் தாழ்த்தப்பட்ட மக்களை அரசியல் ரீதியில் அடிமைப்படுத்த நேரிடினும் இதைச்செய்ய அவர் தயாராக இருந்தார்.

அச்சமயம், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த சில பிரமுகர் கள்கூட காந்தியை ஆதரித்தனர். இத்தகையவர்களில் திரு.ராஜாவை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். அவர் மத்திய சட்ட மன்றத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தவரின் நியமன உறுப்பினராக இருந்தபோதிலும் தம்மை வட்டமேசை மாநாட்டுக்கு ஒரு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்காதது அவருக்கு மனக்குறை. நீண்டகாலம் அவர் தனிவாக்காளர் தொகுதிக்காகப் போராடிவந்தவர். திடீரென்று அவர் கட்சி மாறினார்; கச்சைகட்டிக்கொண்டு திரு.காந்தியை ஆதரித்தார்; தனிவாக்காளர் தொகுதி வழங்கவேண்டும் என்று கோரியதற்காக என்னைச் சாடினார்; அவ்வாறு தனித்தொகுதிகள் அளித்தமைக்காகப் பிரிட்டிஷ் அரசாங் கத்தையும் ஒரு பிடிபிடித்தார். அவர் வெறும் ஒரு கையாளன் பணியைத்தான் செய்து வருகிறார் என்று எவரும் ஐயம்கொள்ளாத அளவுக்கு திரு.காந்தியிடம் அபாரபாசம் காட்டினார்; இந்துக்களின் மீது மிகுந்த நேசம் கொண்டார். காந்தியின் உண்ணாவிரதம் குறித்து 1932 செப்டம்பர் 13 ஆம் தேதி யன்று கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது அவர் நிகழ்த்திய சொற்பொழிவில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரச்சினை இன்று எய்தியுள்ள முக்கியத்துவத்தைப் போல் இந்தியாவின் வரலாற்று ஏடுகளில் என்றும் பெற்றதில்லை; இதற்காக மகாத்மா காந்திக்குத் தாழ்த்தப்பட்ட வகுப்பினராகிய நாங்கள் என்றென்றும் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறோம். எங்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதே தமது வாழ்க்கையின் அடிப்படை லட்சியம் என்று மிகவும் தெளிவுபடக் கூறியுள்ளார். தாழ்த்தப்பட்ட மக்களின் அவலநிலையை, பரிதாப

நிலையை உணரும்படி உலகின் மனச்சான்றை இப்போதாதவது தட்டியெழுப்பவில்லையென்றால், மனிதகுலத்தின் தார்மிக முடிவுக்கே நாங்கள் வரவேண்டியிருக்கும்.''

★★★

''தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தனி வகுப்புவாரித் தொகுதிகள் ஒதுக்கப்படுவதை மகாத்மா காந்தி எதிர்க்கிறார்; இதனால் ஏற்பட்டுள்ள நிலைமையே தற்போது அவையின் முன்னுள்ள பிரச்சினை. இத்தகைய ஒரு மாமனிதர். தமது உயிரைப் பணயம் வைக்கும் அளவுக்கு சந்தர்ப்பச் சூழ்நிலைகள் நிர்ப்பந்திக்கப் பட்டது குறித்து வருத்தமும் வேதனையும் அடையாத மதிப்பிற்குரிய எந்தஉறுப்பினரும் இந்த அவையில் இருக்கமாட்டார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால் ஐயா, இந்த நிலை குறித்து அரசாங் கத்துக்கு முன்கூட்டியே போதிய முன்னெச்சரிக்கை தரப்பட்டிருக்கிறது என்பதை கடிதப் போக்குவரத்து தெளிவாகக் காட்டுகிறது. எங்கள் மாநாடுகளிலும் இந்து மகாசபை தலைவருடன் நான் கையெழுத் திட்டுள்ள ராஜா-மூஞ்சே ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் எங்கள் ஆழ்ந்த கருத்துகளுக்கு அவர்கள் முழு முக்கியத்துவம் அளிக்காவிட்டாலும் மகாத்மா காந்தி தந்துள்ள கடுமையான எச்சரிக்கையையாவது குறைந்தபட்சம் அவர்கள் கணக்கிலெடுத்துக் கொண்டிருக்க வேண்டும்; தனி வாக்காளர் தொகுதிகள் அமைக்கும் ஏற்பாட்டை தவிர்த்திருக்க வேண்டும்.''

★★★

''மகாத்மா காந்திக்குப் பிரதமர் எழுதிய கடிதம் குறித்த எனது முக்கியமான தாக்குதல் இதுதான். அரசிடமும் சட்டமன்றத்திடமும் எங்கள் கருத்துக்களை வெளியிட இருபதாண்டுக் காலத்திற்கு குறைந்த பட்ச இடங்களை எங்களுக்கு ஒதுக்குவதற்கு வழிசெய்யும் வகையில் தனி வாக்காளர் தொகுதிகளைத் தாம் அளித்திருப்பதாக பிரதமர் கூறினார். ஆனால் இதில் ஒன்றும் விசேடமில்லை. ஏனென்றால், மாண்ட்போர்டு சீர்திருத்தத்தின் மூலம் நாங்கள் ஏற்கனவே அனுபவித்து வரும் விசேட சலுகை எண்ணற்ற ஊராட்சி அமைப்பு களிலும் மாகாண சட்டமன்றங்களிலும் மத்திய சட்டமன்றத்திலும் நாங்கள் பிரதிநிதித் துவம் பெறுவதற்கு வகை செய்துள்ளது என்பதை இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதன் பொருட்டு நாங்கள் போதிய அளவு ஸ்தாபனரீதியாக ஒன்று திரண்டுள்ளோம்; இது விஷயத்தில் எங்களுக்குத் தனிக் கவனிப்போ, விசேட ஆதரவோ,

உதவியோ தேவையில்லை. எதிர் காலத்தில் நாங்கள் மேம்பாடடைவதற்கு, முன்னேற்றம் காண்பதற்கு, வள ஆக்கம் பெறுவதற்கு உண்மையான பரிகாரமாக நாங்கள் வேண்டுவதெல்லாம் பொதுத் தொகுதிகளிலிருந்து எங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க அதிகாரம் பெற்றிருக்கவேண்டும், அவர்களது செயல் பாடுகளுக்காக அவர்கள் எங்களுக்குப் பொறுப்புகூறக் கடமைப் பட்டிருக்க வேண்டும் என்பதே ஆகும். இடங்கள் ஒதுக்கீட்டுடன்கூடிய கூட்டுவாக்காளர் தொகுதிகள் திட்டம் நடைமுறை சாத்தியமற்றது என்று பிரதமர் ஏன் கூறுகிறார் என்று தெரியவில்லை. இந்தத் திட்டம் சென்னையிலும் வேறு சில மாகாணங்களில் ஊராட்சி அமைப்புகளிலும் ஏற்கனவே அமுலில் இருந்துவருவதுடன், திருப்திகரமாகச் செயல் பட்டும் வருகிறது. ஐயா, வகுப்புத்தீர்ப்பில் அறிவிக்கப்பட்டிருக்கும் திட்டம் எங்களைத் தனிமைப்படுத்துகிறது என்பதையும், அரசியல் ரீதியில் தீண்டப்படாதவர்களாக ஆக்குகிறது என்பனவையும் இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இதில் தனிமைப்படும் பிரச்சினைக்கே இடமில்லை என்றும், ஏனென்றால் எங்களைத் தேடிவந்து, நாடிவந்து எங்கள் வாக்குகளை, வேண்டும் சாதி இந்துக் களுக்கு நாங்கள் வாக்களிக் கலாம் என்றும் பிரதமர் வாதம் செய்கிறார். இந்த வாதம் வியப்பான தாகவும் விசித்திரமானதாகவும் இருக்கிறது. ஆனால் ஐயா, உங்களை ஒன்று கேட்கிறேன்; தாழ்த்தப்பட்ட இனப் பிரதிநிதிகள் மேல்சாதி வாக்குகளை நாடவேண்டிய அவசிய மில்லாதபோது குடிஉரிமை என்னும் பொது லட்சியத்தை எவ்வாறு செயல்படுத்த முடியும்?

★ ★ ★

''சாதி இந்துக்களிடம் எங்கள் சமூகம் எத்தனை எத்தனையோ கோரக்கொடுமைகளை, துன்ப துயரங்களை, வாதனைகளை வேதனைகளை அனுபவித்து வருகிறது என்பதை சாதி இந்துக்களே ஒப்புக்கொள்கின்றனர்; அது மட்டுமன்றி அவர்களிடையே இருந்து ஏராளமான சீர்திருத்தவாதிகள் தோன்றி எங்கள் அந்தஸ்தையும் நிலையையும் மேம்படுத்த தங்களால் முடிந்த அனைத்தையும் செய்துவருகிறார்கள் என்பதையும் இங்கு நான் கூறியாக வேண்டும். சாதி இந்துக்களிடம் ஒரு மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது, அவர்களது கண்ணோட்டத்தில் ஒரு திருப்பம் உண்டாகியிருக்கிறது என்று நான் திடமாக நம்புகிறேன். தாழ்த்தப்பட்ட இனத்தவராகிய நாங்கள் வேறு எந்த சாதி இந்துக்களையும் போன்றே உண்மையான இந்துக்களாக எங்களைக் கருதுகிறோம்; சாதி இந்துக்களைப் போன்றே நாங்களும் இந்துக்கள் என்பதை உணர்கிறோம். இந்துக்களின் தார்மிக மனச்சான்று பெருமளவுக்கு விழிப்படைந்திருப்பதையும், எழுச்சி கொண்டிருப்

பதையும் காண்கிறோம்; எனவே, இந்து சமூகத்தின் பிரதான அமைப்பிற்குள்ளேயே மாற்றம் ஏற்படுவதுதான் எங்களது விமோசனமும், விடுதலையும், நற்கதியும் அமைந்திருப்பதைத் திட்டவட்டமாகப் பார்க்கிறோம். இந்நிலைமையில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை போற்றிப் பாராட்டத்தக்க இந்த இயக்கத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து, நிறுத்தவே செய்யும் என்று எண்ணு கிறோம். எனவே, ஐயா, பிரதமரது கடிதத்தின் முழு உள்ளடக்கமும், அதில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களும் எனக்கு மிகுந்த ஏமாற்றத்தையே அளிக்கின்றன என்பதை நான் கூறியாக வேண்டும்.

★★★

''இன்று நம்மை எதிர்நோக்கும் நெருக்கடி மிகக் கடுமை யானது. நம் காலத்தின் மிகப்பெரிய இந்திய மகானின் உயிர் இதில் ஊசலாடு கிறது; இந்த நாட்டின் அடக்கிஒடுக்கிக் கொடுமைப் படுத்தப்பட்ட, சிறுமைப்படுத்தப்பட்ட கோடானுகோடி மக்களின் எதிர்காலம் இதில் தொக்கிநிற்கிறது. ஒரு மனிதரைக் கொல்வதற்கும் இன்னொருவரைக் என்றென்றைக்கும் அடிமைத்தனத்தில் ஆழ்த்தி அமுக்கி வைத்திருப்பதற்குமான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளப் போகிறதா? அது நன்கு சிந்தித்து விவேகமான முடிவை எடுக்கட்டும்.''

திரு.ராஜா புனா ஒப்பந்தத்தை ஆதரித்தது மட்டுமன்றி பகிர்ந்தளிப்பு வாக்களிப்பு முறைக்காகவும் போராடினார். தாழ்த்தப் பட்ட மக்களை அரசியல் ரீதியில் அடிமைப்படுத்துவதற்கு இந்துக்கள் செய்துவரும் சூழ்ச்சியின் ஒரு பகுதியே இது என்பதை நான் சுட்டிக் காட்டினேன். காந்தியிடமும் இந்துக்களிடமும் இப்போது திரு.ராஜா வுக்குப் புதிதாக ஏற்பட்டிருந்த விசுவாசம் காரணமாக ஹேமாண்ட் குழு இவ்விஷயத்தைக் கையாண்டவிதம் அவருக்கு அதிருப்தி யளித்தது. எனவே, தேர்தலுக்குப்பிறகு சென்னை சட்டமன்றத்தில் இப்பிரச்சினையை மீண்டும் எழுப்பி, பகிர்ந்தளிப்பு வாக்கெடுப்பு முறைக்கு ஆதரவாக ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.*

ஆனால் இன்று திரு.ராஜா புனா ஒப்பந்தத்தின் விளைவு களைக் கண்கூடாகப் பார்த்த பிறகு, மாயையிலிருந்து மீண்டு விட்டதாகத் தோன்றுகிறது. அனுபவ ரீதியாகத் தாம் கண்டறிந்த உண்மையிடம் அவர் எவ்வளவு காலம் விசுவாசமாக இருப்பார்

* சென்னை சட்டமன்ற விவாதங்கள்

என்பதை என்னால் சொல்லமுடியாது. ஆனால் தாம் புனா ஒப்பந் தத்தின் பரமவைரி என்பதை பகிங்கிரமாகவே அவர் பிரகடனம் செய்துள்ளார். 1938 ஆகஸ்டு 25 ஆம் தேதியிட்டு திரு.காந்திக்கு எழுதிய ஒரு கடிதத்தில் அவர் பின்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:

''தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மையான குரல் சட்ட மன்றங்களில் உறுதியாக ஒலிக்கவேண்டும் என்பதற்காக எங்களில் பலர் தனிவாக்காளர் தொகுதிகளை ஆதரித்து வந்தபோது, அவர்களை அரசியல் ரீதியில் மட்டுமன்றி, சமூக ரீதியிலும் சமய ரீதியிலும் இந்து அவரணைப்பில் கொண்டுவர வேண்டும் என்பதற்காக நீங்கள் எவ்வாறு உங்கள் உயிரைப் பணயம் வைத்தீர்கள் என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். சட்டமன்றங்களில் எங்கள் கோரிக்கைகளையும் குறைபாடுகளையும், ஆர்வ விருப்பங்களையும் அபிலாஷைகளையும் கடமை உணர்ச்சியோடும், பற்றுறுதியோடும் பிரதிபலிக்கக் கூடிய எங்கள் பிரதிநிதிகளை நாங்கள் தேர்ந்தெடுப்பதில் எந்தக் குறுக்கீடும் இருக்கக் கூடாது என்ற நிபந்தனையின்பேரில் இந்துக்களுடன் சேர்ந்து கூட்டு வாக்காளர் தொகுதியை எங்கள் மக்களை ஏற்கச் செய்ததில் எனக்கும் ஓரளவு பங்குண்டு. இந்த இணக்கத்துடன்தான் வேட்பாளர் பட்டியல் தேர்தல் ஏற்பாடு செய்யப்பட்டது.

''இவற்றை எல்லாம் என்னைப் போலவே நீங்களும் அறிவீர்கள். ஆனால் இவை யாவற்றையும் நான் ஏன் நினைவு படுத்துகிறேன் என்பதற்குக் காரணம் இருக்கிறது; இங்கு ஒரு முக்கிய விஷயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்: எங்களைப் பொறுத்த வரையில் புனா ஒப்பந்தத்தை உளமாரக் கடைபிடித்தோம்; தனிவாக்காளர் தொகுதிக்கான கிளர்ச்சி யையும் கைவிட்டோம். ஆனால் அப்படியிருக்கும்போது சாதி இந்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சென்னையிலுள்ள காங்கிரஸ் காரர்கள் ஒப்பந்தத்திலிருந்து விலகிச் சென்று வருகிறார்கள், அதற்கு மாறாக நடந்துகொண்டு வருகிறார்கள்; இதனால் சட்டமன்றத்திலுள்ள எங்கள் சமூகத்தினர் அமைச்சரவை விஷயங்களிலும்கூட சாதி இந்துக்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றிச் சென்று அவர்களுடன் சேர்ந்து வாக்களிக்க வேண்டியிருக்கிறது.

''தேர்தல்களின் ஆரம்பக்கட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களிடையேயான பூர்வாங்கத் தேர்தலுக்கு காங்கிரஸ் கமிட்டி

சபாநாயகர் கூறினார். எனக்குப் பிறகு பேசும் வாய்ப்பு அளிக்கப் பட்ட போதிலும், அவர் இந்தக் கேள்வியைத் தவிர்த்துவிட்டு எதுவுமே பதிலளிக்கவில்லை.''

''ஹரிஜன முன்னேற்றம் குறித்து அதிலும் குறிப்பாக ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக சென்னை காங்கிரஸ் அமைச்சரவை கடைப்பிடித்துவரும் இந்தப் போக்கு விஷயத்தில் உங்களது ஆழ்ந்த கவனத்தைச் செலுத்துவீர்கள் என்று நம்புகிறேன். எங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்தப் பிரச்சினையில் மிகுந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்திருக்கிறார்கள்; புனா ஒப்பந்தத்தை நிராகரிப்பது குறித்தும், தனி வாக்காளர் தொகுதி பெறுவதற்கு கிளர்ச்சி செய்வது குறித்தும், இதன் பொருட்டு ஏதேனும் ஒருவகையான அதிரடி நடவடிக்கை எடுப்பது குறித்தும் யோசித்துவருகிறார்கள்; அவர்களை அழைத்து நான் பேசுவதற்குமுன் உங்களது கருத்தை அறிய விரும்புகிறேன்.''

இதனைத் தொடர்ந்து திரு.ராஜா வார்தா முகவரிக்கு மகாத்மா காந்திக்கு 1938 செப்டம்பர் 12ல் ஒரு தந்தி அனுப்பினார். அதன் வாசகம் வருமாறு:

'' அமைச்சரவை என் மசோதாவை நிராகரித்ததை எதிர்த்து கிளர்ச்சி தொடங்கும்படி என் சமூகத்தினர் என்னை நிர்ப்பந்தித்து வருகிறார்கள்; அதனைச் சமாளிப்பது எனக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது; தங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.''

திரு.காந்தி 1938 செப்டம்பர் 14ல் திரு.ராஜாவுக்குப் பின்கண்டவாறு பதிலளித்தார்:

''அன்பார்ந்த நண்பரே,

உங்கள் கடிதத்திற்குப் பதிலளிப்பதில் ஏற்பட்ட தாமதத் திற்கு மன்னிக்க வேண்டுகிறேன். எனக்குச் சமாளிக்கமுடியாத அளவுக்கு வேலை, உங்கள் தந்தி கிடைக்கப் பெற்றேன்.

திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் தமக்குச் சிறந்தது எனப் பட்டதைச் செய்வார்; அவரை நீங்கள் நம்பவேண்டும் என்று விரும்பு கிறேன். அவர் தமது சொந்த வழியில் காரியங்களைச் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். அவரை நம்பஇயலாது என்றால்

உங்களுக்குச் சரியானது என்று தோன்றுவதைச் செய்யலாம். எனக்குத் தெரிந்த எல்லாம் ஹரிஜனங்களுக்கு அவரைவிட ஒரு சிறந்த நண்பர் இருக்க முடியாது என்பதுதான். அவரைப் போய்ப் பாருங்கள்; அவருடன் விவாதியுங்கள்; அவரை உங்கள் வழிக்குத் திருப்ப இயலவில்லை என்றால் அவரைப் பொறுத்துக் கொள்ளுங்கள்; இதுதான் எனது அறிவுரை.''

இதற்குப்பிறகு 1938 செப்டம்பர் 21 ஆம் தேதி திரு.காந்திக்கு திரு.ராஜா ஒரு கடிதம் எழுதினார். அதில் அவர் குறிப்பிட்டிருந்ததாவது:

''எரவாடா உண்ணாவிரதத்தின்போது எனது சமூக மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் குறித்தும், சென்னையிலுள்ள உங்கள் பிரதிநிதியால் அவை எந்த அளவுக்குச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பது பற்றியும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும்படி உங்களை வேண்டுகிறேன். என் மக்களுக்குத் தனிவாக்காளர்கள் தொகுதிகளை வழங்கவகைசெய்யும் வகுப்புத் தீர்ப்பை மாற்றிக், கூட்டு வாக்காளர் தொகுதியில் சாதி இந்துக்களுடன் அவர்களை இணைக்கும் பொருட்டே இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப் பட்டது; தீண்டாமையை அறவே ஒழித்துக்கட்டுவதற்கு எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அப்போது உறுதி கூறப்பட்டது. ஆலயப்பிரவேசம் என்பது தீண்டாமை ஒழிப்பின் சாராம்சம், அதன் இன்றியமையாத ஒரு பகுதி என்று நீங்களே பல சந்தர்ப்பங்களில் கூறியிருக்கிறீர்கள்.

''ஆக சாதி இந்துக்களுடன் கூட்டுவாக்காளர் தொகுதி களில் நாங்கள் இடம் பெறுவதும் எங்கள் சமூக, மத அந்தஸ்தை உயர்த்துவது சம்பந்தமான பிரச்சினையில் காங்கிரஸ் அமைச்சரவை கடைப்பிடிக்கும் போக்கும் ஜீவாதாரமான முறையில் பரஸ்பரம் பின்னிப் பிணைந்தவை என்பது தெளிவு.''

''இந்நிலைமையில் இந்து கோவில்களில் பிரவேசிக்க எங்களுக்குச் சுதந்திரம் இல்லை என்றால் நாங்கள் இந்துக்கள் அல்ல என்றாகிறது; நாங்கள் இந்துக்கள் அல்ல என்றால் இவர்களுடன் சேர்ந்து கூட்டு வாக்காளர் தொகுதிகளில் நாங்கள் ஏன் இடம்பெற வேண்டும்? முஸ்லீம்களுக்கும் ஏனைய சமூகத் தினருக்கும் எதிராக இவர்களது எண்ணிக்கையைப் பெருக்குவதற் காகவா?

''சென்னையிலுள்ள நிலைமையை இந்தக் கண்ணோட் டத்திலிருந்து பார்த்தால், ஆலயப்பிரவேச மசோதா நிராகரிக்கப்

பட்டதைச் சென்னைக் காங்கிரஸ் அரசாங்கம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இழைத்த பச்சையான, அப்பட்டமான துரோகம் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

''எனது சமூகத்தின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்காக பொது நிதியிலிருந்தோ அல்லது தனியார் நிதி வளங்களிலிருந்தோகூட எவ்வளவுதான் பணம் செலவிட்டாலும் ஆலயப் பிரசேவத்தின் மூலம் தீண்டாமையை அகற்றுவதற்கு அது ஈடாகாது. தாழ்த்தப்பட்ட இன மக்களின் நலனைப் பேணுவதில், அவர்களது உய்வுக்கும் உயர்வுக்கும் செய்வதில் சாதி இந்துக்களுக்குள்ள நேர்மைக்கு, வாய்மைக்கு ஆலயப்பிரவேசம் ஓர் உரைகல் என்று நீங்களே ஒருமுறை கூறியிருக்கிறீர்கள்.

''திரு.ராஜாகோபாலாச்சாரியாரின் ஆலயப்பிரவேச மசோதா ஒரு கடினமான மாவட்டத்தைச் சாமர்த்தியமாகத் தேர்ந்தெடுத்திருப்பதோடு, சாதி இந்துக்களின் சித்தத்துக்கு, விருப்பத்துக்கு எங்கள் சமூகத்தை அடிபணிந்து போகும்படியும் செய்துள்ளது. தொழிலாளர் ஆணையருக்கு உதவுவதற்கான ஆலோசனைக் குழுமங்களின் நியமனவிஷயத்திலும் இதே கொள்கை மேலும் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. எங்களது மக்களின் எதிர்காலத்துக்கு வழிகாட்டுவதற்கு இம்மாகாணத்திலுள்ள ஹரிஜன சேவா சங்கங்களைச் சேர்ந்த சாதி இந்துக்களுக்கு ஏராளமான அரசாங்க வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. சென்னை ஆலயப் பிரவேச மசோதாவை நிராகரித்தபிறகு அண்மையில் திரு.ராஜகோபாலாச்சாரியார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் குறித்து எனது கருத்துகள் தங்களுக்கு உடன்பாடானவையாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை; ஆனால் மறக்க முடியாத உங்கள் உண்ணாவிரதத்தின்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட பின்னணியில், தாழ்த்தப்பட்டோரின் நிலை சம்பந்தமாகச் சென்னையிலுள்ள நிலவரம் குறித்து நீங்கள் முழுக்கவனம் செலுத்துவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

'' இதனை வெறும் அரசியல் தந்திரமாக அல்லாமல் மனச்சான்று சம்பந்தப்பட்ட விஷயமாக எடுத்துக் கொள்ள தார்மீக ரீதியில் நீங்கள் கட்டுப்பட்டிருக்கிறீர்கள், கடமைப்பட்டிருக்கிறீர்கள். தீண்டாமை மற்றும் ஆலயப்பிரவேசம் சம்பந்தப்பட்ட இந்தப் பிரச்சினையில் தங்களது ''உள் ஒளியை'' நாடினால் நீங்கள்

இன்னும் அதிகம் மனம் திறந்து, ஒளிவுமறைவற்றுப் பேசுவீர்கள் என்றும், உங்களைப் பின்பற்றுபவர்களிடம் மனப்பண்புகளை வளர்ப்பதற்கு அவசியமான தியாகங்களைச் செய்வீர்கள் என்றும் திடமாக நம்புகிறேன்.

''இந்தக் கடிதப்போக்குவரத்தைப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு அனுப்பலாம் என்றிருக்கிறேன்; ஆனால் இம்மாத இறுதிக்குள் தங்களிடமிருந்து மேற்கொண்டு தகவல் வரும்வரைக் காத்திருப்பேன்.''

மேற்கண்ட கடிதத்திற்கு திரு. காந்தி 1938 அக்டோபர் 5 ஆம் தேதி பின்கண்டவாறு பதிலளித்தார்:

''அன்பார்ந்த நண்பரே,

மிகுந்த சிரமத்திற்கிடையே என் அலுவல்களைச் செய்து வருகிறேன். இந்தக் கடிதத்தைக்கூட பெஷாவருக்குச் செல்லும் வழியில் ரயிலில்தான் எழுதுகிறேன். நம்மிடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்தை எப்போது அவசியம் என்று நினைக்கிறீர்களோ அப்போது நீங்கள் பிரசுரிக்கலாம்.

''நீங்கள் தவறான எண்ணத்தில் இருக்கிறீர்கள் என்பதையே உங்கள் கடைசிக்கடிதம் காட்டுகிறது. ஒருசார்புடன் ராஜாஜிக்குச் சாதகமாக நான் நடந்து கொள்ளவில்லை. தீண்டாமை விஷயத்தில் நான் எவ்வளவு உறுதியாக இருக்கிறானோ, அவ்வளவு உறுதியாக அவரும் இருக்கிறார் என்பதை நான் அறிவேன். ஆதலால் எவ்வாறு காரியம் ஆற்றவேண்டும் என்று அவர் எடுத்துள்ள முடிவை நான் மதிக்க வேண்டும். இவ்வளவு தொலைவில் இருந்து கொண்டு அவரது செயலை மதிப்பிடுவது சாத்தியமல்ல, சனாதனிகளின் மனத்தை மாற்றுவதே இந்த முழு இயக்கத்தின் நோக்கம் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். சீர்திருத்தங்களே பலியாகிவிடும் அளவுக்கு நாம் அளவுக்கு அதிகமாக வேகம் காட்டக்கூடாது. நமது இயக்கம் விறுவிறுப்புடனேயே நடைபெற்று வருகிறது.

'' இந்த ஆலயப் பிரவேசப் பிரச்சினையை ஒரு மாபெரும் சமயச் சீர்திருத்தம் எனக்கூறவேண்டும். சமயப்பற்றுக் கொண்ட உங்கள் மனத்தை இதில் செலுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.

அவ்வாறு செய்வீர்களானால் உங்கள் மனப்பூர்வமான ஆதரவை ராஜாஜிக்கு அளித்து அவரது முயற்சி வெற்றிபெறச் செய்ய வேண்டும்.''

ஐக்கிய மாகாணங்களைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களும் புனா ஒப்பந்தத்திற்குத் தங்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றனர். துணை இந்தியா மந்திரியான கர்னல் முயர்ஹட்டுக்கு சமர்ப்பித்த தங்களது மகஜரில் பின்வருமாறு அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்: (அச்சடிப்பதற்குத் தரவேண்டிய தட்டச்சுப் பிரதியில் இந்த மகஜர் தட்டச்சு காணப்படவில்லை - ஆசிரியர்.)

புனா ஒப்பந்தம் ஒரு சூழ்ச்சிப்பொறி என்பதையும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வகுப்புத் தீர்ப்பில் காந்தியின் புனா ஒப்பந்தம் செய்த மாற்றம் உண்மையில் சுதந்திரத்திலிருந்து அடிமைத்தனத்துக்குச் செய்யப்பட்ட மாற்றமே என்பதையும் இந்தியா முழுவதுமுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் உணர்ந்து கொண்டனர்.

புனா ஒப்பந்தம் 1932 செப்டம்பர் 24ஆம் தேதியன்று கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்திற்கு தங்கள் ஆதரவைத் தெரிவிக்கும் பொருட்டு அதே ஆண்டு செப்டம்பர் 25ல் பம்பாயில் ஒரு பொதுக்கூட்டத்தை இந்துக்கள் ஏற்பாடு செய்தனர். அந்தக் கூட்டத்தில் பின்கண்ட தீர்மானம் ஏற்கப்பட்டது :

'' 1932 செப்டம்பர் 24ஆம் தேதி சாதி இந்துத் தலைவர்களுக்கும் தாழ்த்தப்பட்ட இனத்தவரின் தலைவர்களுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புனா ஒப்பந்தத்தை இந்த மாநாடு ஊர்ஜிதம் செய்கிறது; இந்து சமூகத்திற்குள் தனிவாக்காளர் தொகுதிகளை அமைக்கும் தனது முடிவை பிரிட்டிஷ் அரசாங்கம் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த ஒப்பந்தத்தை முழுமையாக ஆதரிக்கும் என்று நம்புகிறது. மகாத்மா காந்தி எடுத்துக்கொண்ட சபதத்தை நிறைவேற்றும் வகையில் இனியும் காலம் தாழ்த்தாமல் அவரது உண்ணாவிரதத்தைப் முடிவுக்குகொண்டுவருவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி அரசாங்கத்தை இம்மாநாடு வலியுறுத்துகிறது. புனா ஒப்பந்தத்தின் மற்றும் இத்தீர்மானத்தின் முக்கிய அம்சங்களைப் புரிந்து கொள்ளும்படியும், அவற்றை நிறைவேற்ற மெய்யார்வத்துடனும், மிகுந்த அக்கறையுடனும் முயற்சி

மேற்கொள்ளும்படியும் சம்பந்தப் பட்ட சமூகங்களுக்கு இம்மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது.

இனிமேல் பிறப்பு காரணமாக இந்துக்களிடையே எவரும் தீண்டத்தகாதவராகக் கருதப்படக்கூடாது என்றும், இதுவரை அவ்வாறு கருதப்பட்டவர்களுக்குப் பொதுக்கிணறுகள், பொதுப் பள்ளிக்கூடங்கள், பொதுசாலைகள், மற்றும் இதர எல்லா பொது நிறுவனங்களையும் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்துக்களுக்குள்ள அதே உரிமை அளிக்கப்பட்ட வேண்டும் என்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது. இந்த உரிமை முதல் வாய்ப்பிலேயே சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட வேண்டும், சுயராஜ்ய நாடாளுமன்றம் அமைக்கப்படுவதற்கு முன்னர் இத்தகைய அங்கீகாரம் கிடைக்கப் பெறவில்லை என்றால், அந்த நாடாளுமன்றம் நிறுவப்பட்ட உடனேயே அதன் முதல் நடவடிக்கையில் ஒன்றாக இது இருக்க வேண்டும்.

ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக உள்ள தடை உட்பட தீண்டத்தகாதவர்கள் எனப்படுவோர் மீது மரபுவழி ஆசாரங் களும் பழக்க வழக்கங்களும் இப்போது திணித்துள்ள சகலவிதமான சமூகத் தடைகளையும் சட்டரீதியான முறையிலும் அமைதியான வழிகளிலும் வெகுவிரைவிலேயே அகற்றுவதற்கு உறுதியாகப் பாடுபடுவது எல்லா இந்துத் தலைவர்களது கடமையாகும் என்பதும் ஒப்புக் கொள்ளப் படுகிறது''.

தாழ்த்தப்பட்டோரின் பிரச்சினையில் தனிக்கவனமும் முழு முதல் அக்கறையும் செலுத்தக்கூடிய ஓர் அமைப்பு உருவாவது அவசியம் என்று திரு. காந்தி உணர்ந்தார். இதன்படி 1932 செப்டம்பர் 28ல் அகில இந்திய தீண்டாமை எதிர்ப்புக் கழகம் அமைக்கப் பட்டது. ஆனால் இந்தப் பெயர் திரு.காந்திக்கு உசிதமானதாகப் படவில்லை. எனவே, 1932 டிசம்பரில் ''தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் தொண்டர்கள்'' என்ற புதிய பெயர் சூட்டப்பட்டது. ஆனால் இந்தப் பெயரும் திரு.காந்தி விரும்பியது போல் அத்தனை இனிமையாக ஒலிக்கவில்லை. எனவே அப்பெயரை மாற்றி ஹரிஜன சேவா சங்கம் என அழைத்தார்.

திரு. காந்தி கொண்டுவந்த முதல் மாற்றம் இந்தப் பெயர் மாற்றமே ஆகும். தீண்டப்படாதோர் என அழைக்கப்படு

வதற்குப் பதிலாக இப்போது ஹரிஜனங்கள் என அழைக்கப் பட்டனர். இதிலும் திரு. காந்தி சுயநலத்தோடு நடந்து கொண்டிருக்கிறார். வைணவத்தை முட்டுக்கொடுத்து நிறுத்தவே தீண்டப்படாதோருக்கு ஹரிஜனங்கள் என்ற பெயரை அவர் சூட்டி யிருக்கிறார் என்பது தீண்டப்படாதவர்களின் குற்றச்சாட்டு. இதற்குப் பதிலாக தங்களை ஹரஜனங்கள் அதாவது சிவனின் பக்தர்கள் என்றும் அவர்கள் வாதிட்டனர். இந்தப் பதம் கடவுளைக் குறிக்கிறதே அன்றி விஷ்ணுவை அல்ல, ஹரிஜனங்கள் என்றால் 'கடவுளின் குழந்தைகள்' என்றுதான் பொருள் என இதற்கு திரு. காந்தி சமாதானம் கூறினார்.

ஆனால் உண்மையை சொல்வதனால், ஹரிஜனம் என்ற பெயரைத் தாழ்த்தப்பட்ட மக்கள் அறவே வெறுக்கின்றனர். இந்தப் பெயருக்கு ஆட்சேபம் தெரிவித்துப் பல்வேறு காரணங்கள் கூறப் படுகின்றன. முதலாவதாக இந்தப் பெயர் சூட்டப்பட்டதால் அவர்கள் நிலைமை ஒன்றும் மேம்பட்டுவிடவில்லை; இந்துக் களின் மதிப்பில், பார்வையில் அவர்களை உயர்த்தி விடவில்லை; பழைய மொந்தையில் புதிய கள் என்றே இப்புதிய பெயரை அவர்கள் கருதுகின்றனர். ஹரிஜனங்கள் என்பது பழைய தீண்டப்படாதோரைக் குறிக்கிறது என்பது எல்லோருக்குமே தெரியும். இந்தப் புதிய பெயர் தீண்டாமை எனும் சாபத்திலிருந்து, சாபத் தீட்டிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் விடுபடுவதற்கு எந்த வழியையும் காட்டவில்லை. தாழ்த்தப்பட்ட இனத்தோர் பழைய பெயருடன் எவ்விதம் பழிக்கப்பட்டார்ளோ அவ்விதமே புதிய பெயருடன் இழிவுபடுத்தப்படுகிறார்கள்; இதில் எந்த வித்தியாசமும் இல்லை. இரண்டாவதாக, தீண்டப்படாதவர்கள் என்று அழைக்கப் படுவதையே தாங்கள் விரும்புவதாக அவர்கள் கூறுகிறார்கள், எங்களுக்கு இழைக்கப்பட்ட தீங்கை, கொடுமையை அதன் சொந்தப் பெயரால் அழைப்பதுதான் மேல் என்பது அவர்களது வாதம். மேலும், நோயாளிக்குதான் எந்த நோயால் அவதிப்படுகிறோம் என்று தெரிந்திருப்பது நல்லது. அதுமட்டுமல்ல, தீங்கு இழைத்தவருக்கு அந்தத் தீங்கு அகற்றப்படாமல் அப்படியே நீடிக்கிறது என்பது தெரிந்திருப்பதும் அவசியம். எதையும் மூடிமறைப்பது இப்போதுள்ள உண்மைகளைப் பற்றித் தவறான எண்ணத்தையே தோற்றுவிக்கும். பழைய பெயரை மூடிமறைப்பதற்குக் கொண்டுவரப்பட்ட இந்தப் புதியபெயர் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட மோசடியையும் இந்துக்களுக்கு தவறானமுறையில் அளிக்கப்பட்ட

மன்னிப்பையுமே குறிக்கும். மூன்றாவதாக, ஹரிஜனம் என்னும் பெயர் பரிதாபத்தைக் குறிப்பதாகத் தோன்றுகிறது என்ற எண்ணமும் நிலவுகிறது. இந்தப்பெயர் யூதர்கள் தங்களைக் கூறிக்கொள்வது போல் 'கடவுளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்' என்பதைக் குறிப்ப தாயின் அது வேறுவிஷயம். ஆனால் அதற்கு மாறாக தாழ்த்தப்பட்ட மக்களைக் 'கடவுளின் குழந்தைகள்' என்று கூறுவது அம்மக்கள் தங்களை அடக்கி ஒடுக்கி இழிவும் ஏளனமும் செய்யும் கல்நெஞ்சக் கொடுங்கோலரிடமே சென்று தங்களது ஆதரவற்ற நிலையையும், பிறரைச் சார்ந்திருக்க வேண்டிய அவலநிலையையும் எடுத்துக் கூறி தங்களிடம் இரக்கம் காட்டும்படி அடிபணிந்து மன்றாடுவது போல் இருக்கிறது. தாழ்த்தப்பட்டோரில் வீறுமிக்கவர்கள் இந்தப் பெயர் மிகுந்த தரக்குறைவை, இழிவை, தாழ்வை குறிக்கிறது என்பதை உணர்ந்து வெகுண்டெழுந்தனர். இதனால், ஹரிஜன் என்னும் பெயரைச் சட்டரீதியாக்குவதற்கு காங்கிரஸ் அரசாங்கம் பம்பாய் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவந்தபோது தாழ்த்தப் பட்டோர் அனைவரும் கோபாவேசம் கொண்டு ஒரே மனதாக வெளிநடப்புச் செய்தனர்.

திரு. காந்தி வீழ்ச்சியடையும்வரை, அவரது படைப்புக் களான காங்கிரஸ் அரசாங்கங்கள் மண் கவ்வும்வரை ஹரிஜன் எனும் இந்தப் புதிய பெயர் நீட்டிக்கவே செய்யும். எனினும் இது தாழ்த்தப்பட்ட மக்கள்மீது திணிக்கப்பட்ட ஒன்று என்பதும், அது அவர்களுக்கு எத்தகைய நன்மையையும் செய்யவில்லை என்பதும் மறுக்கமுடியாத, அசைக்கமுடியாத உண்மைகள்.

இதுவரை இந்தப் புதிய பெயர் 'தாழ்த்தப்பட்டோருக்குப் புரிந்த நன்மைகளின்' லட்சணத்தைப் பார்த்தோம். இனி ஹரிஜன சேவா சங்கத்தின் பணியினைப் பற்றி ஆராய்வோம். இந்த சங்கம் தீண்டாதோரின் நலனுக்கு காந்தி ஆற்றிய தொண்டின் ஒரு நினைவுச் சின்னம் என்று கூறப்படுகிறது. இந்த சங்கம் புரிந்த சாதனைகள் என்ன?

ஹரிஜன சேவா சங்கம் ஓர் அகில இந்திய நிறுவனம். இதற்கு ஒரு மத்தியக் குழுமம் இருக்கிறது. அடுத்த வரிசையில் மாகாணக் குழுமங்கள் உள்ளன; மாகாணக் குழுமங்களின் கீழ் மாவட்ட, ஸ்தலக் குழுக்கள் இருக்கின்றன. மாகாண குழுமங்கள் மற்றும் ஸ்தல குழுக் களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டிருக்கிறது :

மேம்பாட்டின் பொருட்டு இந்துக்களால் இந்துக்களின் அறக்கொடை கொண்டு நடத்தப்பட்டு வந்த நிறுவனமாக இப்போது சங்கம் இல்லை; அந்தக் காலம் மலையேறி விட்டது.

திரு.காந்தியின் உண்ணாவிரதம் தோற்றுவித்த பேரொலியும் இரைச்சலும் காது செவிடுபடும்படியாக இருந்தது. அவரது உயிரைக் காப்பாற்றுவதற்கு எந்தத் தியாகமும் செய்யத் தயராக இருக்கும் உணர்வு மகத்தானதாக இருந்தது. அதே போன்று, தாழ்த்தப் பட்ட மக்களுடன் நேசம் கொள்ள வேண்டும், அவர்களுடன் கைகோர்க்க வேண்டும் என்ற ஆர்வமும் மிகவும் வியக்கத் தக்கதாக் இருந்தது. இவையெல்லாம் காற்றோடு போல், கடந்தகால கனவாகி, தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று ஏமாற்றத்தின் விளிம்புக்கே சென்று விட்டனர். தாழ்த்தப்பட்ட மக்கள்பால் தங்களுக்குள்ள கடமைப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக இந்துக்களால் நிறுவப்பெற்ற ஹரிஜன சேவா சங்கத்தைப் பராமரிப் பதற்குத் தங்கள் பங்கினை வழங்க அவர்கள் காட்டிய ஆர்வம் உண்மையிலேயே எவ்விதத்திலேனும் அவர்களது மனமாற்றத்தைக் குறிப்பதாக இருந்தால் அதற்குக் காரணமான சந்தர்ப்பசூழ்நிலை யுடன் சேர்ந்து இந்த மாற்றமும் மடிந்துவிட்டது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். காந்தி எப்போது தமது உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டாரோ அப்போதோ தாழ்த்தப்பட்ட மக்களிடம் இந்துக்களுக்குப் புதிதாக ஏற்பட்டிருந்த பாசமும் முடிவுக்கு வந்துவிட்டது.

சங்கம் நசிந்து சிதைந்துகொண்டிருக்கும்போது, அது ஆற்றிய பணியை ஆராய்வது அவசியமற்றதாக எனக்குத் தோன்றுகிறது. ஆனால் சங்கம் திரு.காந்திக்கு ஒரு மாபெரும் நினைவுச் சின்னமாகக் கருதப் படுகிறது. எனவே, சங்கம் புரிந்த பணியையும், அப்பணிக்கு அடிப் படையாக அமைந்திருந்த கொள்கையையும் ஆய்வு செய்வதே முறையாகும்.

சங்கத்தின் பணி ஓரளவு நன்கு வரையறுக்கப்பட்ட வழிகளில் அமைந்துள்ளது.

கல்வித்துறையில் இளங்கலை, தொழில்நுட்பம், தொழில் பயிற்சி முதலான வகுப்புகளுக்கு உபகரணச் சம்பளங்கள் ஏற்படுத்தித் தாழ்த்தப்பட்ட மக்களிடையே உயர் கல்வியை ஊக்குவிக்க சங்கம் முயற்சி எடுத்துள்ளது. உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும்

உபகாரச் சம்பளங்கள் அளிக்கிறது. கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பயிலும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு சங்கம் மாணவர் இல்லங்களையும் அமைத்துத் தந்திருக்கிறது. மேலும், சுற்றுப்புறங்களில் பொதுப்பள்ளிக்கூடங்கள் இல்லாத இடங்களிலும் தீண்டாதோர் குழந்தைகளுக்கு இடம் அளிக்க மறுக்கும் பொதுப்பள்ளிக்கூடங்கள் இருக்கும் இடங்களிலும் தாழ்த்தப்பட்ட இனக் குழந்தைகளுக்குத் தனியாகத் தொடக்கக் கல்விப் பள்ளிக் கூடங்களை அது அமைத்துத் தந்திருக்கிறது. சங்கத்தின் கல்வித் துறை நடவடிக்கைகளில் இது மிக முக்கியமான பகுதியாகும்.

அடுத்ததாகச் சங்கத்தின் ஆக்கநல நடவடிக்கைகளைக் குறிப்பிட வேண்டும். தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு வழங்கப்படும் மருத்துவ உதவி இந்தப்பிரிவில் வருகிறது. சங்கத்தைச் சேர்ந்த தீவிர ஊழியர்களால் இப்பணிமேற்கொள்ளப்படுகிறது; அவர்கள் ஹரிஜனக் குடியிருப்புகளுக்குச் சென்று தாழ்த்தப்பட்டோரிடையே உள்ள நோயாளிகளுக்கும் உடல் நலிவுற்றோர்க்கும் மருத்துவ உதவி அளிக்கின்றனர். தீண்டாதோர்களுக்கென சில மருந்தகங் களையும் சங்கம் நடத்துகிறது. இது சங்கத்தின் ஒரு சிறு நடவடிக்கையே ஆகும்.

சங்கத்தின் ஆக்கநல நடவடிக்கைகளில் மிகவும் முக்கியமானது தண்ணீர் சப்ளை சம்பந்தப்பட்டது எனலாம். (1) தாழ்த்தப்பட்டோர் பயன்படுத்திக் கொள்வதற்காக புதிய கிணறுகளை அகழ்வதன் மூலமும் அல்லது குழாய்க்கிணறுகளை அமைப்பதன் மூலமும் (2) பழைய கிணறுகளைத் தூர்வாரி பழுதுபார்ப்பதன் மூலமும் (3) தீண்டாதோருக் கான கிணறுகளை வெட்டச்செய்வது அல்லது பழுதுபார்க்கச்செய்வதன் மூலமும் சங்கம் இப்பணியைச் செய்கிறது.

சங்கம் மேற்கொண்டுள்ள மூன்றாவது நடவடிக்கை பொருளாதாரம் சம்பந்தப்பட்டது. சட்டம் சில தொழில்பயிற்சிக் கூடங்களை நடத்துவதாகத் தெரிகிறது. இங்கு பயிற்சி பெற்ற அநேக கைவினைஞர்கள் சொந்தமாகத் தொழில் நடத்திவருவதாகக் கூறப்படுகிறது. எனினும் தீண்டாதோர்களிடையே வெற்றிகரமாக கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அவற்றைக் கண்காணித்து வருவதில் சங்கம் கணிசமான பணி ஆற்றியுள்ளது என்று அரசாங்க அறிக்கை கூறுகிறது.

இது சங்கம் ஆற்றியுள்ள பணியின் ஒரு சுருக்கமான தொகுப் பாகும். சங்கம் பெரும்பாலும் சாதி இந்துக்களாலேயே வழி நடத்தப்

படுகிறது. சங்க நடவடிக்கைகளை முன்னின்று நடத்திச் செல்லு வதில் ஓரளவு செல்வாக்கு செலுத்தக்கூடியவர்களில் தாழ்த்தப்பட்ட இனத்தோர் ஒரு சிலரே உள்ளனர். சங்கத்துடன் எனக்கு எத்தகைய தொடர்பும் இல்லை. ஆனால் சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோது அதில் சேருமாறு எனக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். தீண்டாமை என்னும் விஷவிருட்சத்தை வேரோடு வேரடி மண்ணோடு வெட்டி யெறிவதற்கு இந்துக்களுடன் ஒத்துழைப்பதில் எனக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. இந்தப் பணியை வெற்றிகரமாகச் செய்து முடிப் பதற்கு எத்தகைய கொள்கையையும் திட்டத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதில் எனக்கெனச் சில சொந்தக் கருத்துக்கள் உண்டு. சங்கம் நிறுவப்பட்ட உடனேயே இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நான் லண்டன் செல்ல வேண்டியிருந்தது. எனவே, இந்த விஷயம் குறித்து சங்கத்தின் இதர உறுப்பினர்களுடன் கலந்துரையாட எனக்கு வாய்ப்புக் கிட்டவில்லை. எனினும் எம்.வி.''விக்டோரியா'' என்னும் கப்பலில் இருந்தபடியே சங்கத்தின் செயலாளர் திரு.காந்திக்கு 1932 நவம்பர் 14 ஆம்தேதி ஒரு கடிதம் எழுதினேன். ஒரு சுருக்கமான அறிமுகப் பத்தியை மட்டும் விட்டுவிட்டு முழு வாசகத்தையும் இங்கு தந்துள்ளேன்.

''தாழ்த்தப்பட்ட வகுப்பினரை மேம்பாடடையச் செய்யும் பணியை அணுகுவதில் இரண்டு வேறுபட்ட முறைகள் இருக்கமுடியும் என்பது என் கருத்து. தாழ்த்தப்பட் இனத்தவரான ஒரு தனிநபரின் கதிப்போக்கு அவரது சொந்த நடத்தையாலேயே நிர்ணயிக்கப்படுகிறது; அவர் வறுமையிலும் வெறுமையிலும் வாடுகிறார் என்றால், துன்ப துயரங்களில் உழல்கிறார் என்றால், அவர் தீயொழுக்க ஈடுபாடுடைய வராகவும், பாவம் செய்யாதவராகவும் இருந்திருக்க வேண்டும் என்பது ஒரு சாராரின் கருத்து. இத்தகைய கருத்துடைய பிரிவினரைச் சேர்ந்த சமூக ஊழியர்கள் என்ன செய்கிறார்கள்? குடிஒழிப்பு இயக்கம், உடற்பயிற்சிக்கூடம், நூலகங்கள், பள்ளிக்கூடங்கள் போன்றவற்றின் மூலம் தனிநபர்களை ஒழுக்கச்சீலராக, சிறந்த பண்புடையோராக ஆக்கும் திட்டத்தை கைக்கொண்டு அதில் தங்கள் சகல முயற்சிகளையும் வாய்ப்புவளங்களையும் ஈடுபடுத்திப் பாடுபட்டு வருகிறார்கள். ஆனால் இந்தப் பிரச்சினையினை வேறொரு முறையிலும் அணுகலாம் என்பது என் கருத்து. ஒரு தனிநபரின் கதிப்போக்கு அவனது சுற்றுச்சூழலாலும், அவன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள சந்தர்ப்பச் சூழ்நிலைமைகளினாலுமே நிர்ணயிக்கப்படுகிறது; அவன் இல்லாமையிலும் கல்லாமையிலும் ஆழ்துயர்நிலையிலும் அல்லலுருகிறான் என்றால் அவனது சுற்றுச்சூழல் உகந்ததாக,

நல்லிணக்கமுடையதாக இல்லாததே அதற்குக் காரணம் என்பது என் சித்தாந்தம்.

''மேற்கூறிய இரண்டு கருத்துக்களில் இரண்டாவதாகத் தெரிவிக்கப்பட்ட கருத்து மிகச் சரியானது என்பதில் எனக்கு எள்ளவும் ஐயமில்லை. முதலில் தெரிவிக்கப்பட்ட கருத்துப்படி இங்கொருவரும் அங்கொருவருமாக ஒரு சில தனி நபர்களை வேண்டு மானால் அவர்கள் சார்ந்துள்ள இனத்தவரின் தரத்துக்கு மேலே உயர்த்தலாம், ஆனால் அந்த இனம் முழுவதையுமே உயர்த்தமுடியாது. எனது அபிப்பிராயத்தில் தீண்டாமை ஒழிப்புக்கழகம் தோற்றுவிக்கப் பட்டதன் நோக்கம் அங்குமிங்குமாக ஒரு சில தனிநபர்களுக்கோ அல்லது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த குறிப்பிட்ட இளைஞர் களுக்கோ உதவுவதற்காக அல்ல, அதற்கு மாறாக, அந்த இனம் முழுவதையும் உயர்மட்டத்திற்கு உயர்த்துவதே அதன் லட்சியம். எனவே, தனிநபர் நல்லொழுக்கத்தை, நற்பண்பை ஊட்டிவளர்க்கும் ஒரு திட்டத்தில் கழகம் தனது சக்தியைச் சிதறடிப்பதை நான் விரும்ப வில்லை. தாழ்த்தப்பட்ட இனத்தவரின் சமூக சூழ்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு திட்டத்தில் குழுமம் தனது சக்தி முழுவதையும் ஒருமுகப்படுத்த வேண்டும் என்றே விரும்புகிறேன். பொதுப்படையான முறையில் என் கருத்துக்களைக் கூறிவிட்ட பிறகு, கழகம் மேற்கொள்ளவேண்டிய பணிகுறித்து சில உருப்படியான யோசனைகளை இப்போது முன்வைக்க விழைகிறேன்.

''கிராமக் கிணறுகளில் தண்ணீர் எடுத்தல், கிராமப் பள்ளிக் கூடங்களில் தங்கள் குழந்தைகளைச் சேர்த்தல், கிராமச் சாவடியில் பிரவேசித்தல், பொதுஜனப் போக்குவரத்து வசதிகளைப் பயன் படுத்துதல் போன்ற பல்வேறு சிவில் உரிமைகளை தாழ்த்தப்பட்ட இன மக்களுக்குப் பெற்றுத்தரக் கழகம் முதல் காரியமாக அகில இந்தியாவிலும் ஓர் இயக்கத்தை மேற்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன்.

''கிராம அளவில் இத்தகைய ஒரு திட்டத்தை நிறை வேற்றினால் இந்து சமுதாயத்தில் தேவையான சமூகப்புரட்சியை அது தோற்று விக்கும்; இத்தகைய சமூகப்புரட்சி ஏற்படவில்லையேல் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சமத்துவ சமூக அந்தஸ்தைப் பெறுவது ஒருபோதும் சாத்தியமாகாது. சிவில் உரிமைகளுக்கான இந்த இயக்கம் நடத்தப்படும்போது எத்தகைய இன்னல் இடுக்கண்களை சோதனை களை வேதனைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பதை

குழுமம் அறிந்திருக்க வேண்டும். இங்கு அனுபவ ரீதியாக என்னால் பேச முடியும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கழகமும், சமூக சமத்துவக் கழகமும் பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த கொலாபா, நாசிக் மாவட்டங்களில் இத்தகைய திட்டத்தைச் செயல்படுத்த முற்பட்டபோது என்ன நடந்தது என்பதை அந்த அமைப்புகளின் தலைவனாகிய நான் அறிவேன்.

''முதலாவதாக, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் சாதி இந்துக் களுக்கும் இடையே சண்டைகள் மூளும்; மண்டைகள் உடையும்; இரத்த ஆறு பெருக்கெடுத்தோடும்; பரஸ்பரம் கிரிமினல் வழக்குகள் தொடரப்படும். இந்தப் போராட்டத்தில் தாழ்த்தப்பட்ட இனத் தவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். இந்த இரு மாவட்டங் களிலும் நடைபெற்ற சமூகப்போராட்ட வரலாறு இதை நிரூபிக்கிறது; நியாயம் வகுப்பினர் பக்கம் இருந்தபோதிலும், போலீசும் மாஜிஸ்ரேட்டும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவர்களது உதவிக்கு வந்ததில்லை. இரண் டாவதாக, தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்கு இணையான அந்தஸ்தைப் பெற முயல்கிறார்கள் என்பதைக் காணும் மறுகணமே கிராமங்கள் முழு ஊர்க் கட்டுப்பாட்டைக் கூட, பகிஷ்காரத்தைப் பிரகடனம் செய்யும்.

''சிவில் உரிமைகளுக்கான இந்தப் போராட்டம் வெற்றி பெற வேண்டுமாயின் கழகம் எதிர்ப்பட வேண்டியிருக்கும் எத்தனை எத்தனையோ இக்கட்டுகளில், இடர்களில் இரண்டை மட்டுமே இங்கு கூறினேன். தங்களது உரிமைகளுக்காகப் போராடுவதற்குத் தாழ்த்தப் பட்ட வகுப்பினரைத் தூண்டி ஊக்குவிக்கக்கூடிய, அவர்களுக்கு ஆக்கமும் வலிவும் அளிக்கக்கூடிய, இப்போராட்டத்தினின்று எழும் சட்டப்பிரச்சினைக்கு வெற்றிகரமாகத் தீர்வு காணுவதற்கு உதவக்கூடிய சக்திவாய்ந்த ஒரு தொண்டர் படையை கிராமப்புறங்களில் கழகம் உருவாக்கி வளர்த்து வலுப்படுத்துவது அவசியம். இந்தப் போராட்டத் திட்டம் சமூகக் கொந்தப்பளிப்புகளையும் குழப்பங்களையும் வன்முறைக் கலவரங்களையும் கொண்டதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை, இதனைத் தவிர்க்க முடியும் என்று நான் கருதவில்லை. குறைந்த முயற்சியுள்ள மற்றொரு வழி ஒன்றிருப்பதையும் நான் அறிவேன். ஆனால் தீண்டாமையை வேரோடு அடி சாய்ப்பதற்கு அது உதவாது.

''சாதி இந்துக்கள் பெரும்பாலோரிடம் பகுத்தறிவாதக் கருத்துக் கள் சந்தடியின்றி சிறிது சிறிதாக ஊடுருவதற்கு வழிசெய்வதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விமோசனம் ஏதும் கிட்டிவிடாது.

ஏனென்றால் முதலாவதாக, எல்லா மனித ஜீவன்களையும் போலவே சாதி இந்துவும் தாழ்த்தப்பட்ட இனத்தவரிடம் தீண்டாமையைக் கடைப்பிடிப்பதில் தனது மரபுவழிவந்த பழக்கத்தையே பின்பற்று கிறான். யாரோ தீண்டாமையை எதிர்த்து உபதேசம் செய்கிறார் என்பதற்காக சாதாரணமாக மக்கள் தமது இரத்தத்தில் ஊறிப்போன தமது வழக்கமான போக்கை விட்டுவிட மாட்டார்கள்.

'' தனது வழிகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று சாதி இந்துவை நினைக்கும்படி செய்தால்தான், உணரும்படி நிர்ப்பந்தித் தால்தான் தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு விடுதலை கிட்டும்; விமோசனம் கைக்கூடும். இதற்கு என்ன செய்ய வேண்டும்? தொன்று தொட்டு அவன் கைக்கொண்டுவரும் நீதிநெறியற்ற போக்குக்கு எதிராக, வாழையடி வாழையாக அவன் பின்பற்றிவரும் நயப்பண்பற்ற நடத்தைக்கு எதிராக நேரடி நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஒரு நெருக்கடியைத் தோற்றுவிக்க வேண்டும். இந்த நெருக்கடி அவனைச் சிந்திக்க வைக்கும். எப்போது அவன் சிந்திக்க ஆரம்பிக்கிறானோ அப்போது அவன் தன்னை மாற்றிக் கொள்ள தயாராக இருப்பான்.

''பகுத்தறிவுவாதக் கருத்துகளை ஓசையின்றி, ஆடம்பர ஆர்ப்பாட்டமின்றி சாதி இந்துக்களிடம் ஊடுருவச் செய்வது போன்ற இதர வழிகளிலுள்ள பெருங்குறைபாடு என்னவென்றால், அவை 'நிர்ப்பந்தப்'படுத்துவதோ அல்லது நெருக்கடியைத் தோற்று விப்பதோ இல்லை என்பதுதான். மஹத்தில் சௌதார் குளம், நாசிக்கில் காலாராம் கோவில், மலபாரில் குருவாயூர் கோவில் ஆகியவை சம்பந்தமாக எடுத்துக்கொள்ளப்பட்ட நேரடி நடவடிக்கைகள் சீர்திருத்தவாதிகள் லட்சக்கணக்கான நாள் உபதேசம் செய்தும் ஒருபோதும் செய்ய முடியாதவற்றை ஒரு சில நாள்களிலேயே சாதித்துள்ளன.

''தீண்டாமை எதிர்ப்புக் கழகம் செய்ய வேண்டும் என்று நான் விரும்பும் இரண்டாவது பணி தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சமத்துவ வாய்ப்புரிமையைப் பெற்றுத்தர அது பாடுபட வேண்டும் என்பதாகும். தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் ஏழ்மைக்கும் துன்ப துயரங்களுக்கும் சமத்துவ வாய்ப்பின்மையே பெரும்பாலும் காரணம்; அதேசமயம் சமத்துவ வாய்ப்பு இல்லாததற்கு தீண்டாமையே காரணம். காய்கறிகள், பால், வெண்ணெய் போன்றவற்றை விற்பனை செய்வது போன்றவை சாதாரணமாக எல்லோரும் செய்யக்கூடிய ஜீவனோபாயத் தொழில் களாகும். ஆனால் தாழ்த்தப்பட்டவர்கள் இந்தத் தொழில்களைக்

கிராமங்களிலும் இன்னும் சொல்லப்போனால் நகரங்களிலும் கூட செய்ய முடியாது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒரு சாதி இந்து இப்பொருள்களை இந்து அல்லாதவனிடமிருந்து வாங்குவான்; ஆனால் தாழ்த்தப்பட்டவரிடமிருந்து வாங்க மாட்டான். வேலை வாய்ப்புத் துறையில் அவனது நிலைமை இன்னும் மிகவும் மோசம்.

''அமெரிக்காவில் நீக்ரோவைப் போன்று இந்தியாவில் தாழ்த்தப் பட்ட இனத்தவன் சுபிட்ச காலத்தில் கடைசியில் வேலைக்கமர்த்தப் படுகிறான்; அல்லற் காலத்திலோ முதலில் வேலைநீக்கம் செய்யப் படுகிறான். அப்படியே ஒருக்கால் அவனுக்கு வேலை கிடைத்தால்கூட அவனது வருங்கால வாய்ப்பு வசதிகள் என்ன? பம்பாயிலும் ஆமதா பாத்திலுமுள்ள பஞ்சாலைகளில் மிகக் குறைந்த ஊதியம் தரப்படும் பிரிவுகளில்தான் அவனுக்கு வேலை தரப்படுகின்றது. அங்கு அவன் மாதம் 25 ரூபாய்தான் ஊதியம் பெறுகிறான். அதிக ஊதியம் கிடைக்கக்கூடிய நெசவுப் பிரிவு போன்ற பிரிவுகளின் கதவுகள் அவனுக்கு நிரந்தரமாக மூடப்பட்டுள்ளன. ஆலையிலுள்ள எந்த ஒரு பிரிவின் தலைவர் பதவியும் சாதி இந்துக்கே ஒதுக்கப்பட்டுள்ளது; தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த தொழிலாளியோ அவன் எவ்வளவு நீண்டகாலம் சேவை செய்திருந்தாலும், மிகுந்த அனுபவம் கொண்ட வனாக இருந்தாலும், சிறந்த திறமை வாய்ந்தவனாக இருந்தாலும் சாதி இந்துக்கு ஓர் அடிமைபோல் தான் அவனுக்குக் கீழ் பணியாற்ற வேண்டும். நூல் சுற்றும் அல்லது முறுக்கேற்றும் பிரிவுகளைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட இன மக்கள் நூற்றுக்கணக்கானோர் என்னிடம் வந்து ஒரு புகாரை தெரிவித்தனர்; அதாவது மேஸ்திரிகள் மூலப்பொருள்களை எல்லாப் பெண்களுக்கும் சமத்துவமான முறையில் அல்லது நியாயமான விகிதாசார முறையில் விநியோகிப்பதற்குப் பதிலாக எல்லாவற்றையும் சாதி இந்துப் பெண்களுக்கே கொடுத்துவிட்டுத் தங்களைக் கண்டு கொள்வதே இல்லை என்று குற்றம் சாட்டினர்.

''தீண்டாமை எதிர்ப்புக் கழகம் இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்வது உகந்ததும் உசிதமானதும் என்று கருதுகிறேன்; இதற்கு எதிராகப் பொதுமக்கள் கருத்தைத் திரட்டுவதும், இத்தகைய பாரபட்சப் போக்குகளைக் கடைப்பிடிப்போர் மீது தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்குக் குழுக்களை அமைப்பதும் அவசியம் என்றும் எண்ணுகிறேன்.

''இறுதியாக, சாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்பால் காட்டும் அருவருப்பை அகற்றிடக் கழகம் தீவிர முயற்சி மேற்கொள்ள

வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்; ஏனென்றால் இவ்விரு பிரிவினரும் முற்றிலும் வேறுபட்ட, மாறுபட்ட, தனித்தனி அமைவுகளாக இவ்வளவு தூரம் பிரிந்து நிற்பதற்கு, விலகி இருப்பதற்கு இதுவே காரணம். இவ்விரு பகுதியினரிடையேயும் நெருங்கிய தொடர்பை வளர்ப்பதுதான் இக்குறிக்கோளை எய்துவதற்கு சிறந்த மார்க்கம் என்பது என் கருத்து. தொடர்ந்த நீடித்த பங்கெடுப்புதான் ஒருவர் மற்றொருவருடன் தொடர்பு கொள்ள முற்படும்போது ஏற்படும் இந்த அந்நிய உணர்வை வெற்றி கொள்ளத் துணைபுரியும். தாழ்த்தப்பட்ட இனத்தவரை விருந்தாளிகளாக அல்லது பணியாளர்களாக சாதி இந்துக்களின் இல்லங்களில் அனுமதிப்பதைப்போல் இக்காரியத்தை மிகவும் பயனுள்ள முறையில் செய்யக் கூடியது வேறு எதுவும் இல்லை என்பது என் அபிப்பிராயம்.

''இவ்விதம் உருவாக்கப்படும் உயிர்த் துடிப்பு மிக்க தொடர்பு பொதுவான, தோழமை நிறைந்த வாழ்வைப் பழக்கப்படுத்தும்; நாம் அனைவரும் எதற்காக அயராது பாடுபட்டு வருகிறோமோ அந்த ஒற்றுமை ஏற்பட இது வழிவகுக்கும். ஆனால் வளைந்து கொடுக்கும் பாங்குடைய அநேக சாதி இந்துக்கள் இதற்குத் தயாராக இல்லாதது எனக்கு வருத்தத்தையும் வேதனையையும் அளிக்கின்றது.

''இந்திய நாட்டையும் உலகையும் குலுக்கிய மகாத்மாவின் பத்துநாள் உண்ணாவிரதத்தின்போது ஒரு வினோதமான வேலை நிறுத்தம் நடைபெற்றது. வில்லே பாரியிலும் மஹத்திலும் தங்கள் எசமானர்கள் தீண்டாமை விதிகளைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு தீண்டாதோருடன் கூடிக் குலாவுகிறார்கள் என்று குற்றஞ்சாட்டி அவர்களுடைய சாதி இந்து வேலைக்காரர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்த நிலைமையில் இந்தப் பிரமுகர்கள் தங்களது பணியாட்களுக்குப் பதில் தாழ்த்தப்பட்ட இனத்தவரை அவர்களது இடங்களில் வேலைக்கமர்த்தி வேலை நிறுத்தத்துக்கு முற்றுப்புள்ளி வைப்பார்கள், அவர்களுக்கு நல்ல பாடம் கற்பிப்பார்கள் என்றே நான் எதிர்பார்த்தேன். ஆனால் இவ்வாறு செய்வதற்குப் பதிலாக அவர்கள் சனாதன சக்திகளிடம் சரணடைந்து, அவர்களது கரங்களை வலுப்படுத்தினர். தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் இத்தகைய சந்தர்ப்பவாத நண்பர்கள் எந்த அளவுக்கு உதவியாக இருப்பார்கள் என்பதை நான் அறியேன்.

''நாம் கஷ்ட காலத்தில் அவதிப்படும்போது, சிரம தசையில்

உழலும்போது நம்மிடம் ஏராளமானோர் அனுதாபம் காட்டலாம். ஆனால் அந்த அனுதாபத்தை அவர்கள் உதட்டளவில் நிறுத்திக் கொண்டு, வேறு எதுவும் செய்யவில்லை என்றால் அந்த அனுதாபத்துக்கு அர்த்தமே இல்லை, அது குறித்து நாம் ஆறுதல் அடைவதற்கு எதுவும் இல்லை. இதைத்தான் தீண்டாமை எதிர்ப்புக் கழகத்துக்கும் சொல்ல விரும்புகிறேன். அமெரிக்காவில் நீக்ரோக்களின் விடுதலைக்காக வடபகுதி வெள்ளையர்கள் தங்களது உற்றார் உறவினர்களான தென் பகுதி வெள்ளையர்களையே எதிர்த்துப் போராடினார்கள். இவ்வாறே, தாழ்த்தப்பட்ட இன மக்களின் அனுதாபிகள் எனத் தங்களைக் கூறிக் கொள்ளும் சாதி இந்துக்களும் நீக்ரோக்களுக்காகப் போராடிய அமெரிக்க வடபகுதி வெள்ளையர்களைப் போல், தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்காக தங்களுடைய சொந்த உற்றார் உறவினர்களையும் எதிர்த்து நேரடியாகக் களத்தில் இறங்கிப் போராடச் சித்தமாக இருக்க வேண்டும்; அதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பது நிரூபிக்கப்படும் வரை அவர்களது நேர்மை குறித்துத் தாழ்த்தப்பட்ட மக்கள் மனநிறைவு அடைய மாட்டார்கள்.

''தீண்டாமை எதிர்ப்புக் கழகம் தனது திட்டத்தைச் செயல் படுத்துவதற்கு மிகப்பெரிய ஊழியர் படை ஒன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டியிருக்கும். சமூக ஊழியர்கள் நியமனம் என்பது ஒரு சின்ன விஷயமாகக் கருதப்படக்கூடும். என்னைப் பொறுத்தவரையில், இப்பணியில் ஈடுபடுத்துவதற்கு ஒரு சரியான அமைப்பினைத் தெரிந்தெடுப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறேன். பணம் தருவதாக இருந்தால் எந்த ஒரு குறிப்பிட்ட பணியையும் செய்வதற்கு எப்போதும் ஆட்கள் கிடைப்பார்கள். ஆனால் கழகத்தின் லட்சியம் நிறைவேறுவதற்கு இந்தக் கூலிப்படையினர் பயன்பட மாட்டார்கள். இது எனது உறுதியான கருத்து. அன்பு காட்டுபவர்களே சேவை செய்ய முடியும் என்பது டால்ஸ்டாயின் அருள் வாக்கு. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஊழியர்கள் இத்தகைய சோதனையில் தேறக் கூடியவர்கள் என்பது என் அபிப்பிராயம். எனவே, யாரைத் தேர்ந்தெடுப்பது, யாரைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்பதைத் தீர்மானிக்கும் போது கழகம் இந்த அம்சத்தைக் கருத்திற்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன். சமூக சேவையைக் கடைசிப் புகலிடமாகக் கொள்ளாத தாழ்த்தப்பட்டோரிடையே சில கடைந்தெடுத்த கயவர்கள் இருக்கிறார்கள் என்று இங்கு நான் சொல்ல வரவில்லை. ஆனால் பொதுவாகக் கூறுமிடத்துத் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஊழியர் தமது பணியை அன்பின் உழைப்பாகக்

கருதுவார் என்பதை நிச்சயமாக நம்பலாம்; இத்தகைய நேரிய மனோபாவம் கழகத்தின் வெற்றிக்கு இன்றியமையாதது.

''இரண்டாவதாக, இனம் அல்லது நோக்கம் போன்ற கட்டுப் பாடுகள் ஏதுமின்றி ஏதேனும் ஒருவகையான சமூக சேவையில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள சில அமைப்புகள் இருக்கின்றன; இத்தகைய அமைப்புகள் குறிப்பிட்ட உதவித் தொகையைப் பெற்றுக் கொண்டு தீண்டாமை எதிர்ப்புக் கழகத்தின் பணியையும் தனது பணிகளுடன் சேர்த்துச் செய்ய முன்வரக் கூடும். இத்தகைய 'தவணைமுறை' சேவையானது விரும்பும் பலனைத் தராது என்பதில் எனக்கு எத்தகைய ஐயப்பாடும் இல்லை. ஒரு குறிப்பிட்ட பணியில் மட்டும் முழுக் கவனத்தையும் செலுத்தக்கூடிய அமைப்புதான் நமக்குத் தேவை. தாம் மேற்கொண்ட லட்சியத்தில் முழு ஆர்வ ஈடுபாடு கொள்ளும் பொருட்டு வேண்டுமென்றே தம்மைக் குறுகிய நோக்குடை யவையாக ஆக்கிக் கொள்ளும் அமைப்புகளும் நிறுவனங்களும் தான் நமக்கு வேண்டும். இவ்வகையில் யாருக்கேனும் பணி ஒதுக்கப்பட வேண்டியிருப்பின் தாழ்த்தப்பட்ட இன மக்களின் சேவைக்குத் தம்மை முழுக்க முழுக்க அர்ப்பணித்துக் கொள்ள முன்வருபவர்களுக்கே அப்பணி ஒதுக்கப்பட வேண்டும்.

''இக்கடிதத்தை முடிக்கும் முன் ஒன்றை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை ஒன்றாக இணைத்துப் பிணைக்கக்கூடியது அன்பே தவிர சட்டமல்ல என்று பால்போர்தான் கூறினார் என்று நினைக்கிறேன். இந்தக் கருத்து இந்து சமுதாயத்துக்கு அப்படியே அட்சரம் பிசகாது பொருந்தும் என்று கருதுகிறேன்.

''சாதி இந்துக்களையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் சட்டத்தால் பிணைக்க முடியாது; அதிலும் குறிப்பாக தனி வாக்காளர் தொகுதிகளுக்குப் பதிலாக கூட்டு வாக்காளர் தொகுதிகளை உருவாக்க வகை செய்யும் எந்தத் தேர்தல் சட்டத் தாலும் அவர்களை ஒன்றுபடுத்த முடியாது, பின்னிப் பிணைக்க முடியாது. அவர்களைப் பிணைக்கக் கூடிய சக்தி ஒன்றே ஒன்றுக்குத்தான் உண்டு. அதுதான் அன்பு.

''எனது அபிப்பிராயத்தில் குடும்ப எல்லைகளுக்கு அப்பால் நியாயத்தால், நீதியால் மட்டுமே அன்பின் கதவுகளைத் திறந்து விட முடியும்; ஆகையால் சாதி இந்துக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள்பால்

நியாயப் போக்கோடு, நேர்மை உணர்வோடு நடந்து கொள்ளும்படிப் பார்த்துக் கொள்வதும், தவறினால் அவ்வாறு நடந்து கொள்ளுமாறு அவர்களை நிர்ப்பந்திப்பதும் தீண்டாமை எதிர்ப்புக் கழகத்தின் அசைக்க, மறுக்க முடியாத கடமையாக இருத்தல் வேண்டும்.''

இந்தக் கடிதம் கிடைக்கப் பெற்றதாகக் கூட செயலாளரிடமிருந்து பதில் இல்லை. நான் தெரிவித்த யோசனைகளில் ஒன்றுகூட ஏற்கப்படவில்லை என்பதைக் கூறத் தேவையில்லை. சங்கத்தின் ஊழியர்கள் பெரும்பாலும் தாழ்த்தப்பட்டோரிடமிருந்தே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற எனது யோசனையும்கூட ஏற்கப்படவில்லை. ஹரிஜன சேவா சங்கம் இந்துக் கூலிப்படையினரின் கூடாரமாகிவிட்டது என்பதை திரு. காந்தியின் கவனத்துக்குக் கொண்டு வந்தபோது, அதனை அவர் ஆதரித்தது அவருடைய சாணக்கியத்தைக் காட்டுவதாக இருந்ததே அன்றி, அவரது நேர்மையைக் காட்டுவதாக இல்லை.

*தாழ்த்தப்பட்டோரின் தூதுக் குழுவினரிடம் அவர் பின்வருமாறு கூறினார் :

''தாழ்த்தப்பட்டோருக்கான நல்வாழ்வுப் பணி என்பது தீண்டாமை பாபத்திற்கு இந்துக்கள் செய்ய வேண்டிய பிராயச்சித்தமாகும். மேலும் சங்கத்துக்கு வசூலிக்கப்பட்ட பணமும் இந்துக்கள் தந்ததே ஆகும். இந்த இரண்டு கண்ணோட்டங்களிலிருந்தும் பார்க்கும் போது இந்துக்கள் மட்டுமே சங்கத்தை நிர்வகிக்க வேண்டும் என்பது தெளிவு. தார்மீக ரீதியிலும் சரி, உரிமை அடிப்படையிலும் சரி, சங்க நிர்வாகக் குழுவில் தீண்டப்படாதோர் இடம் கோரமுடியாது.''

திரு. காந்தியும் அவருடைய ஆலோசகர்களும் என் யோசனைகள் அனைத்தையும் நிராகரித்ததோடு நிற்கவில்லை. நான் பரிந்துரைத்ததற்கு முற்றிலும் நேர்மாறான முறையில் சங்கத்தின் சட்டதிட்டங்களையும், நோக்கங்களையும், குறிக்கோள்களையும் வகுத்துக் கொண்டுள்ளனர்.[1] 1932 செப்டம்பர் 30 ஆம் தேதி பம்பாய் கவாஸ்கி ஜிஹாங்கிர் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் சங்கத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு விவரிக்கப்பட்டன:

---

★ இந்த மேற்கோள் ''தீண்டப்படாதோருக்கு காங்கிரசும் காந்தியும் சாதித்தது என்ன'' என்ற தலைப்பில் டாக்டர் அம்பேத்கர் எழுதிய நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும், பக்கம் 142. (இந்தப் பகுதி கையெழுத்துப் பிரதியில் இடம் பெறவில்லை - பதிப்பாசிரியர்).

''தீண்டாமையை எதிர்த்துப் பிரசாரம் செய்வதிலும், எல்லாப் பொதுக் கிணறுகளையும், தர்ம சத்திரங்களையும், சாலைகளையும், பள்ளிக்கூடங்களையும், சுடுகாடுகளையும், இடுகாடுகளையும், சகல பொதுக் கோவில்களையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடுவதற்கு கூடிய விரைவில் நடவடிக்கை எடுப்பதிலும் எத்தகைய நிர்ப்பந்தத்தையோ, வன்முறையையோ பயன்படுத்தக்கூடாது; இந்தக் குறிக்கோளை அடைவதற்கு அமைதி வழியில் இணங்க வைக்கும் முறையையே கைக்கொள்ள வேண்டும்.''

ஆனால் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட இரண்டு மாதங்களுக்குப் பிறகு நவம்பர் 3 ஆம் தேதி திரு. ஜி.டி. பிர்லாவும் திரு. ஏ.வி. தாக்கரும் வெளியிட்ட ஓர் அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தனர்:*

''சனாதனிகளில் நியாய உணர்வு படைத்தவர்கள் சமபந்தி போஜனங்களையும் கலப்புத் திருமணங்களையும் எதிர்க்கும் அளவுக்கு தீண்டாமை அகற்றப்படுவதை எதிர்க்கவில்லை என்று கழகம் கருதுகிறது. குறியிலக்கு எல்லைக்கு அப்பாற் சென்று சீர்திருத் தங்களை மேற்கொள்வது கழகத்தின் நோக்கம் இல்லையென்பதால் இங்கு ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தி விடுவது விரும்பத் தக்கதாக இருக்கும்: அதாவது, தீண்டாமையின் ஒவ்வொரு எச்ச மிச்சத்தையும் அகற்றுவதற்கு இணங்குவிப்பு முறையைக் கைக் கொண்டு சாதி இந்துக்களிடையே கழகம் பாடுபடும்; அதிலும் முக்கியமாக தாழ்த்தப்பட்ட இன மக்களை கல்வி, பொருளாதார, சமூக ரீதியில் கைதூக்கிவிடுவது போன்ற ஆக்கபூர்வமான நோக்கமே அதன் பணியின் பிரதான திசைவழியாக இருக்கும்; தீண்டாமையை ஒழித்துக் கட்டுவதற்கு இதுவே பெரும் பங்குப்பணி ஆற்ற முடியும். இத்தகைய பணி ஆற்றப்படும்போது மிகவும் தீவிரமான சனாதனி கூட அதன்பால் பரிவும் ஒத்துணர்வும் காட்டாமல் இருக்க முடியாது. இப்படிப்பட்ட பணிகளை மேற்கொள் வதற்காகத்தான் பிரதானமாக கழகம் அமைக்கப்பட்டது. சாதிமுறையை ஒழித்துக்கட்டுதல், சமபந்தி விருந்து போன்ற சமூக சீர்திருத்தங்கள் கழகத்தின் செயற்பாட்டு எல்லைக்கு அப்பாற்பட்டவை.''

---

★ ''தீண்டப்படாதோருக்கு காங்கிரசும் காந்தியும் சாதித்தது என்ன'' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது, பக்கங்கள் 140-141. கையெழுத்துப் பிரதியில் இந்தப் பக்கம் காலியாக விடப்பட்டிருக்கிறது.
- பதிப்பாசிரியர்.

இந்த நோக்கங்களும் குறிக்கோள்களும் சங்கத்தின் வருடாந்திர அறிக்கை ஒன்றில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன.*

''பிறப்பின் காரணமாகக் கடைப்பிடிக்கப்படும் தீண்டாமையை ஒழித்துக் கட்டுவதும், பொதுக் கோவில்கள், கிணறுகள், பள்ளிக் கூடங்கள், மற்றும் இதர பொது நிறுவனங்கள் முதலியவற்றைப் பயன் படுத்துவதில் ஏனைய இந்துக்களுக்குள்ள அதே சமத்துவ உரிமை களை ஹரிஜனங்களுக்குப் பெற்றுத் தருவதுமே கழகத்தின் சட்ட திட்டங் களின்படி அதன் குறிக்கோளும் நோக்கமுமாகும்.

இந்த நோக்கம் நிறைவேற்றப்பட்ட பிறகு கழகம் மேற்கொள்ள வேண்டிய பணி இருவகைப்பட்டதாக இருக்கும். முதலாவதாக, எல்லாவிதமான குடியுரிமைகளையும் ஹரிஜனங்கள் அனுபவிப்ப தற்குத் தாங்களே முன்வந்து அனுமதிக்கும் வகையில் சாதி இந்துக் களின் உணர்வுகளிலும் கருத்துக்களிலும் ஒரு தீவிர மாற்றத்தை கழகம் கொண்டுவர வேண்டும். இரண்டாவதாக, ஹரிஜனங்களின் கல்வி, பொருளாதார, சமூக மேம்பாட்டிற்காக கழகம் தீவிர முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதோடு, தன் நிதியையும் அதன் பொருட்டுச் செலவிட வேண்டும்.''

கழகம் செய்துள்ள பணிகளையும் அது வகுத்துக் கொண் டிருக்கும் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அருகருகே வைத்துப் பரிசீலித்துப் பார்க்கும்போது இரண்டு கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன: முதலாவதாக, இந்த சாதனை சங்கம் உண்மையிலேயே பெருமிதம் கொள்வதற்குரியதா? இரண்டாவதாக, சங்கத்தின் பணி அதன் நோக்கங்களுக்கு இசைவானதாக இருக் கின்றதா? அப்படிப் பார்க்கும்போது சங்கத்தின் சாதனைப் பட்டியல் மிகவும் ஏமாற்றமளிப்பதாக, பயனற்ற வீண்ஆர்ப்பாட்டமாக, மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாக உள்ளது. கிறிஸ்துவ தொண்டு நிறுவனங் களின் சாதனைகளுடன் ஒப்பிடும்போது ஹரிஜன சேவா சங்கத்தின் சாதனைகள் அது பெருமைப்படத்தக்கதாக இல்லை. இது வருந்தத்தக்க விஷயமே தவிர வேறல்ல. இரண்டாவது கேள்வி அடிப்படையானது. அதனால் ஆழமான பரிசீலனைக்கு உரியது. தீண்டப்படாதோரின் நலன்களுக்காக சங்கம் உழைப்பதும்

* *1932 - 33க்கான அறிக்கை, பக்கம் - 1.*

பாடுபடுவதும் சரிதான். ஆனால் தீண்டாமை அழித்தொழிக்கப்படும் வகையில் அதன் உழைப்பு முறையாக, சரியாக திட்டமிட வேண்டும்.

இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் சங்கம் செய்துவரும் பணிகுறித்து என்ன சொல்ல முடியும்? தீண்டப் படாதோருக்காக **தனிப்** பள்ளிக்கூடங்கள், **தனி** மாணவர் இல்லங்கள், **தனி** மருந்தகங்கள், **தனி** கிணறுகள் அமைக்கப்படுவதை சங்கம் பகிரங்கமாகவே, அணுவளவும் வெட்கப்படாமல் ஆதரித்து வருகிறது. இதைப் பார்த்தால் தீண் டாமையை நிரந்தரமாக்குவதற்கு, சாசுவத மாக்குவதற்கு இதைத்தவிர நிச்சயமான வழி வேறு எதுவுமில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. தனி வாக்காளர் தொகுதி ஏற்பாடு தீண்டாதோரைப் பிரித்து வைக்கிறது என்று கூறி அதை எதிர்த்து சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முன்வந்த அதே திரு. காந்தி இந்தத் தனிமைப்படுத்தலை நிரந்தரமாக்கும் செயற்பாட்டிற்கு ஒப்புதல் அளித்திருப்பது வியப்பினும் வியப்பாக இருக்கிறது. தாழ்த்தப் பட்ட மக்களுக்கு சேவை செய்ய முன்வந்துள்ள திரு. காந்தியும் அவருடைய ஹரிஜன சேவா சங்கமும் அந்த மக்கள் விரும்புவது என்ன என்பதை மறந்துவிட்டார்கள். தீண்டப்படாதோர் கேட்பது கல்வியை அல்ல, மாறாக பொதுப் பள்ளிக்கூடங்களில் தாங்கள் அனுமதிக்கப்படும் உரிமையையே அவர்கள் கேட்கிறார்கள். தீண்டப்படாதோர் கேட்பது மருத்துவ உதவியை அல்ல; மாறாக, பொது மருத்துவமனைகளில் சமத்துவ அடிப்படையில் தாங்கள் அனுமதிக்கப் படும் உரிமையையே அவர்கள் கோருகிறார்கள். தாழ்த்தப்பட்டவன் கேட்பது தண்ணீரை அல்ல; மாறாக, பொதுக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொள்ளும் உரிமையையே அவன் வலியுறுத்துகிறான். தீண்டப்படாதோர் தங்கள் துன்ப துயரங்களுக்கு விடிவுகாலம் ஏற்பட வேண்டுமென்று கோரவில்லை; மாறாக, தங்களது ஆளுமை மதிக்கப் பட வேண்டும், தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள கறை, மாசு, இழுக்கு அகற்றப்பட வேண்டும் என்று வாதாடுகிறார்கள். அவர்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் கறை நீங்கும்போது அவர்களது அவதிகளும் அல்லல்களும் அகன்றுவிடும்; அவர்களது கண்ணீர்க் கதை ஒரு முடிவுக்கு வந்துவிடும். இந்த உண்மையை ஹரிஜன சேவா சங்கம் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. சங்கம் தீண்டாதோரின் நண்பன் என்றும், வைதிக இந்து தான் தீண்டப் படாதோரின் பகைவன் என்றும் கூறப்படுகிறது. பகைவன் செய்யாத எதை நண்பன் செய்துவிட்டான் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. தீண்டப்படாதோருக்குத் **தனிப்** பள்ளிக்

கூடங்கள், **தனி** மருந்தகங்கள், **தனிக்** கிணறுகள் இருக்க வேண்டும் என்று வைதிகர்கள் விரும்புகிறார்கள்; அவ்வாறே செய்யப் படும் என்று சங்கம் கூறுகிறது. அவ்வாறானால் வைதிக இந்து தீண்டாமையில் நம்பிக்கை வைத்திருக்கிறான், ஹரிஜன சேவா சங்கம் அவ்விதம் நம்பிக்கை வைக்கவில்லை என்பதைத் தவிர நடைமுறையில் நண்பனுக்கும் பகைவனுக்கும் இடையே என்ன வேறுபாடு இருக்கிறது? இவ்விரண்டிலும் தீண்டப்படாதோன் தனிப் பள்ளிக் கூடங்கள், தனி மாணவர் இல்லங்கள், தனிக் கிணறுகள் என்ற பரிதாப நிலைக்கே தள்ளப்படுகிறான். இவ்வாறிருக்கும்போது, தீவிரமாக பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தயாராக இல்லாத திரு. காந்தியும் அவருடைய சங்கமும் வைதிக இந்துக்களுடன் ஏன் சச்சரவிட்டுக் கொள்ள வேண்டும் என்று புரியவில்லை. இந்து சாஸ்திரங்கள் தீண்டாமையை ஏற்றுக் கொள்கின்றனவா, இல்லையா என்பது வெறும் கோட்பாட்டளவிலான சண்டைதான். நடைமுறையில் இது எத்தகைய நன்மையையும் செய்யாது. அதற்குமாறாக அது தீண்டப்படாதோருக்கு நிச்சயமாகத் தீமையே செய்திருக்கிறது என்பதை துணிந்து கூறுவேன். முதலாவதாக, தீண்டப்படாதோருக்கும் வைதிக இந்துக்களுக்கும் இடையே அது பகைமையைத் தோற்று வித்துள்ளது. திரு. காந்தி இந்தத் தேவையற்ற சச்சரவில் இறங்கு வதற்கு முன்னர் தீண்டப்படாதோருக்கும் இந்துக்களுக்கும் இடையே யான உறவுகள் சமூக சார்பற்றவையாகவே இருந்தன. இந்தச் சண்டை அவற்றை சமூக விரோதமானவையாக மாற்றிவிட்டது. இரண் டாவதாக, இத்தகைய சச்சரவு ஏதும் நேராமல் அதற்குப் பதிலாக தீண்டாமைப் பிரச்சினையை எடுத்துக் கொண்டிருந்தால் - இது சம்பந்தமாகப் போராடும் உத்தேசம் திரு. காந்திக்கு இல்லை - தீண்டப்படாதோரின் துயர் துடைக்கும்படி வைதிக இந்துக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்க முடியும்; அப்போது பல வைதிக இந்துக்கள் தாழ்த்தப்பட்டோரின் வேதனையை அகற்ற உதவுவதற்கு முன்வந்திருப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். ஹரிஜன சேவா சங்கத்தை நிறுவியதற்கான பெருமையை திரு. காந்தி அறுவடை செய்து விட்டார். ஆனால் அந்த சங்கம் தீண்டாமையை ஒழித்துக்கட்ட முயலவில்லை; தீண்டப்படாதோரின் துன்பத்தைத் தணிக்க உதவவும் இல்லை.

சங்கம் ஏன் தோல்வியடைந்தது? இக்கேள்விக்கு என்னால் திட்டவட்டமாகப் பதிலளிக்க முடியும். சங்கம் கைக்கொண்ட தவறான அரசியல் காரணமாகவே அது தோல்வியடைந்தது என்று கூறுகிறேன.

ஹரிஜன சேவா சங்கம் ஓர் அரசியல் நிறுவனம் எனப் பல சந்தர்ப்பங்களில் கூறப்பட்டது. இத்தகைய கூற்றை திரு. காந்தி எப்போதுமே கடுமையாக சாடி வந்திருக்கிறார்; இது தவறான கருத்து என்று மறுத்து வந்திருக்கிறார். சங்கத்தின் பொதுச் செயலாளரும் இதை ஆட்சேபித்திருக்கிறார். அவருடைய சொந்த வார்த்தைகளிலே கூறுவதானால் ''சங்கம் ஓர் அரசியல் ஒப்பந்தத்தின் விளைவாகத் தோன்றிய போதிலும் அது அரசியல் சார்புடையதல்ல.''

திரு. காந்தியின் சீற்றத்திற்கோ, அவருடைய செயலாளரின் ஆட்சேபங்களுக்கோ எந்த முகாந்திரத்தையும் என்னால் காண முடியவில்லை. சங்கம் ஓர் அரசியல் நிறுவனமாக இருக்க வேண்டும் என்றே நான் பெரிதும் விரும்புகிறேன். தீண்டப்படாதோர் அரசியல் அதிகாரத்தில் ஒரு பங்கினைப் பெற்றுள்ளனர். ஆனால் தன்னைப் பற்றிய உணர்வு இல்லாத அதிகாரம் அதிகாரமே அல்ல. அதேபோன்று ஒழுங்கமைக்கப்படாத அதிகாரமும் அதிகாரமன்று. தேர்தலில் பங்கு கொள்ளவும் தங்களது அரசியல் அதிகாரத்தைப் பயனுறுதியுடைய தாக்கிக் கொள்ளவும் தாழ்த்தப்பட்ட மக்கள் சுதந்திரமான அரசியல் கட்சிகளை அமைத்துக் கொள்வதற்கு ஹரிஜன சேவா சங்கம் உதவியிருந்தால் அது மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்கும். சங்கம் அரசியல் சார்பற்றது என்று திரு. காந்தியும் அவருடைய செயலாளரும் தெரிவித்துள்ள கருத்தை என்னால் ஏற்க இயலாது. அதற்கு மாறாக, சங்கத்துக்கு ஒரு திட்டவட்டமான அரசியல் திசைவழி இருக்கிறது என்பதையும், தீண்டாதோரின் நலன்களுக்குப் பாதகமாக இருப்பதால் அது தவறான அரசியல் திசைவழியாக அமைந்துள்ளது என்பதையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

சங்கம் அரசியல் சார்புடையது என்பதைத் திரு. காந்தி ஏற்க மறுப்பதால், சூழ்நிலைச் சான்றுகளை நாடுவது அவசியமாகிறது. வாய்மொழிச் சான்றைவிடச் சூழ்நிலைச் சான்று எப்போதுமே சாலச் சிறந்தது; ஏனென்றால், மனிதன் வேண்டுமானால் பொய் சொல்லக் கூடும். ஆனால் சூழ்நிலைச் சான்று பொய்பேசாது, சங்கத்தின் சட்ட திட்டங்களில் காணப்படும் ஒரு விதியை இங்கு என் வாதத்திற்கு ஆதாரமாகக் கொள்ள விரும்புகிறேன். தீண்டாமையை அகற்றுவதற்கும், சாதி இந்துக்களுக்கு இணையாக தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சமத்துவ உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கும் சங்கம் கைக்கொள்ள வேண்டிய வழிமுறையைப் பற்றியது இந்த ஷரத்து. அது கூறுவதாவது:

"உரிமைகளைப் பெறுவதற்கு எத்தகைய நிர்ப்பந்தத்தையும் பயன்படுத்தக்கூடாது; அதற்குப் பதில் அமைதியான முறையில் இணங்கச் செய்யும் வழியை **மட்டுமே** கைக்கொள்ள வேண்டும்."

இது சங்கத்தின் அடிப்படையான கோட்பாடு. இந்தக் கோட்பாடு எனக்கு விந்தையானதாக இருந்தது. இதேபோல் மற்றவர்களுக்கும் அது விந்தையானதாக இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இங்கு ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்: தீண்டாமையை ஒழித்துக் கட்டுவதற்கு சாதி இந்துக்களை அமைதியான முறையில் இணக்கு விக்கும் ஒரே வழியை **மட்டுமே** பின்பற்றுவதற்கு சங்கம் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டது ஏன்?

பெரும்பாலான சீர்திருத்தவாதிகள், அவர்கள் சமய சீர்திருத்த வாதிகளாக இருந்தாலும் சரி, பகுத்தறிவுவாதிகளாக இருந்தாலும் சரி, ஒருவிதமான கற்பனையில் மிதக்கிறார்கள். அதாவது, அதிகார பலம் படைத்தவர்களிடம் சென்று, உங்களுடைய செயற்பாடுகளும் போக்குகளும் சமூக விரோதமானவையாக இருக்கின்றன என்று எடுத்துக் கூறிய உடனேயே அவர்கள் தங்களுடைய மோசடிகள், பாசாங்குகள், பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடித்தல் போன்ற அட்டூழியங்களை எல்லாம் மூட்டைக்கட்டி வைத்துவிடுவதாக இந்த சீர்திருத்தவாதிகள் மனப்பால் குடிக்கிறார்கள். ஆனால் பேராசிரியர் நெய்புர் இதற்கு மாறுபட்ட கருத்தினை வெளியிட் டிருக்கிறார். அவர் கூறுவதாவது: சகல மனித இனப் பிரிவுகளது நடத்தையின் இரக்கமற்ற தன்மையையும், சுயநலத்தின் வலிமை யையும், அனைத்துப் பிரிவுகளின் உறவுகளில் ஆதிக்கம் செலுத்தும் அகங்காரத்தின் சக்தியையும் இந்தச் சீர்திருத்த வாதிகள் புரிந்து கொள்ளத் தவறி விடுகிறார்கள். மேலும் தார்மிக நெறிகளைக் கடைப்பிடிப்பதில் வருண இனங்களும், தேசங்களும், வர்க்கங்களும் அவற்றில் இணைந்துள்ள தனிநபர்களை விடக் கீழ்மட்டத் திலேயே இருக்கின்றன என்பதையும், கல்வி வாயிலாக மட்டுமே பல்வேறு பிரிவினரிடையே நீதியையும் நியாயத்தையும் நிலை நாட்ட முடியாது என்பதையும் அவர்கள் மறந்து விடுகிறார்கள். மனச்சான்று, தர்க்க நியாயம் போன்றவற்றைப் போராட்டத்தில் நயமாக புகுத்தினால் அவை அநீதியை ஏதோ சிறிதளவு மட்டுப்படுத்துமே யன்றி, அதனை முற்றிலுமாக அழித்திட முடியாது. அநீதியைத் துடைத்தெறிய வேண்டுமென்றால் அதனை எதிர்த்துக் கடுமையாகப்

போராட வேண்டும். அநீதி ஏகாதிபத்திய வடிவிலோ அல்லது வர்க்க ஆதிக்க வடிவிலோ கூட்டு அதிகாரத்திலிருந்து செயல்படுமாயின், அதனை அதிகாரத்தைக் கொண்டே எதிர்த்துச் சாடிடல் வேண்டும். நிலைநாட்டப்பெற்ற அதி காரத்துக்குப் பின்னால் அரணமைத்துக் கொண்டுள்ள ஓர் இனத்தை அதற்கு எதிராக அதிகாரத்தைப் பிரயோகித்தாலன்றி அகற்றிவிட முடியாது. வலியோர் எளியோரைச் சுரண்டும் கொடுமையைத் தடுத்து நிறுத்துவதற்கு இது ஒன்றே வழியாகும்.

சாதி இந்து ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கு அமைதி வழியில் இணங்கவைக்கும் முறையைத்தான் கைக்கொள்வோம் என்று திரு.காந்தியும் ஹரிஜன சேவா சங்கமும் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்வது ஏன்? சாதி இந்துக்கள் இழைத்துவரும் கொடுமைகளை நேரடி நடவடிக்கை மூலம் அவர்கள் ஏன் எதிர்க்கக்கூடாது? அநீதியை எதிர்க்க முற்படும் போது, விவேகமாகவும் நியாயமாகவும் செயல் படுவதற்கு தரப்புகளுக்கு மிகவும் குறைவாகவே உள்ள சாத்தியக் கூறுகளை அழித்திடாத எதிர்ப்பு முறைகளைக் கண்டறியும் பிரச்சினை எழக்கூடும் என்பது எனக்குப் புரிகிறது. ஆனால் இதன் காரணமாக சிக்கல் ஏதும் ஏற்படாது. ஏனென் றால் ஓர் எதிர்ப்பு வடிவம் என்ற முறையில் திரு.காந்தி சத்தியாக்கிரகம் அல்லது சாத்விக எதிர்ப்பு முறையை உருவாக்கி இருக்கிறார்; தார்மீகரீதியில் இதற்கு எத்தகைய ஆட்சேபமும் இருக்கமுடியாது. எனவே அப்படியிருக்கும் போது, தீண்டப்படாதோருக்கு எதிரான அநீதிக்கு முடிவுகட்டு வதற்குச் சாதி இந்துக்களுக்கெதிராக சத்தியாக்கிரகம் செய்யும்படி தாழ்த்தப்பட்ட மக்களை ஏன் திரு.காந்தி கேட்கக்கூடாது? பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சத்தியாக்கிரகம் மேற்கொள்ளும் படி அவர் இந்திய மக்களைக் கேட்டுக்கொண்டார். தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்காக இதே ஆயுதத்தை சாதி இந்துக்களுக்கு எதிராகப் பயன்படுத்த அவர் ஏன் விரும்பவில்லை?

இந்தக் கேள்விக்குத் திரு.காந்தியின் பதில் என்ன? இது **அவரது** அரசியலுக்கு இடையூறாக இருக்கும் என்பதுதான் இதற்கு ஒரே பதிலாக இருக்க முடியும். திரு.காந்தி தேசத்தின் தலைவராக நீட்டிக்க விரும்புகிறார். ஏதேனும் காரணத்திற்காக அவர் தேசத்தின் தலைவ்ராக இருக்கமுடியவில்லையென்றால் அவரது வாழ்க்கை அவருக்கு அர்த்தமற்றதாகிவிடும். அவரை மிகவும் பேராசை கொண்ட அரசியல் வாதியாகவே பார்க்கிறேன். அவர் நண்பர்கள் என்று அழைப்ப வர்களை எல்லாம் தமது போட்டியாளர்களாகவே கருதுகிறார்

என்பதை நான் அறிவேன். தேசத்தின் தலைவராக இருக்க வேண்டுமென்றால் காங்கிரசின் ஒற்றுமையை அவர் பாதுகாத்தாக வேண்டும். காங்கிரஸ் தொண்ணூற்று ஒன்பது சதவீதம் இந்துக்களைக் கொண்ட அமைப்பாக இருந்துவருகிறது. அப்படியிருக்கும்போது தாழ்த்தப்பட்டோர் நலன்களுக்காக இந்துக்களுக்கு எதிராக சத்தியாக்கிரகம் மேற்கொள்ளும்படி திரு.காந்தி சங்கத்துக்கு ஆணையிட்டால் காங்கிரசின் ஒற்றுமையை நிலைநாட்டுவதில் அவர் எப்படி வெற்றி பெற முடியும், இந்துக்கள் காங்கிரசிலிருந்து வெளியேறிவிடுவார்கள்; காங்கிரஸ் உடைந்து தகர்ந்து போகும். இது திரு.காந்தியின் நலன்களுக்குப் பாதகம் ஏற்படுத்தும். தீண்டாமையை அகற்றுவதற்கு அமைதி வழியில் இணங்கவைக்கும் முறை மட்டுமே திரு.காந்தியும் சங்கமும் கைக்கொண்டதன் இரகசியம் இதுதான். இந்துக்களையும் காங்கிரசையும் கிட்டத்தட்ட புண்படுத்தாத வழிமுறை இது. பெரிய விஷயங்களில் மட்டுமன்றி, மிக அற்பமான விஷயங்களில்கூட இந்துக்களின் மனம் நோகாதபடி, அவர்களுக்கு எரிச்சலூட்டாதபடி நடந்துக்கொள்வதில் சங்கம் மிகவும் கவனமாக இருக்கிறது. உதாரணமாக உபகாரச் சம்பளங்கள் வழங்குவதில் மனுதாரரின் அரசியல் தொடர்பு குறித்து ஆழமாக விசாரிக்கப்படுகிறது என்றும், மனுதாரர் காங்கிரசுக்கோ, இந்துக்களுக்கோ எதிரான சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தால் சங்க நிதியிலிருந்து எந்த உதவியும் அளிக்கப்படுவதில்லை என்றும் என்னிடம் வந்து பலர் கூறினார்கள்.

ஆக, இந்துக்களின் மனம் நோகும்படிச் செய்யக்கூடாது, காங்கிரசையும் சிதைய விடக்கூடாது என்ற அடிப்படை அரசியல் நோக்கங்களுக்காகவே அமைதி வழியிலான இணக்குவிக்கும் முறையை தீண்டாமையை ஒழிப்பதற்கான ஒரே சாதனமாக திரு.காந்தியும் சங்கமும் கைக்கொண்டார்கள் என்பது குறித்து இதற்குமேலும் எவருக்கும் ஐயம் இருக்க நியாயமில்லை. சங்கம் அரசியல் பாதையில் செல்லுகிறது என்றும், அதன் தோல்விக்கு அதன் தவறான அரசியலே காரணம் என்றும் ஏற்கனவே நான் கூறியதன் அர்த்தம் இதுதான். தவறான அரசியல் என்று மிகவும் மிதமான சொற்பிரயோகத்தைத்தான் இங்கு கையாண்டிருக்கிறேன். தன்னிடம் ஒப்படைக்கப்பட்டவரது நலன்களை ஒரு பாதுகாவலர் பலியிடுவதற்குப் பெயர் துரோகம் என்றால் இதனையும் துரோகம் என்றுதான் கூறவேண்டும்.

திரு. காந்தியின் இந்திய நண்பர்களும் அயல்நாட்டு நண்பர்களும் அவரை அடிக்கடி ஏசு கிறிஸ்துவுடன் ஒப்பிடுகின்றனர். இந்த

விந்தையான ஒப்புமையை எவ்வாறு நியாயப்படுத்தமுடியும்? ஒரு விஷயத்தில் இருவருக்கும் இடையே முழு வேறுபாடு இருப்பதைக் காண்கிறேன். தாழ்ந்த நிலையில் உள்ளவர்களுக்கு ஏசு கிறிஸ்து, காந்தி இருவருமே சேவை செய்தார்கள் என்று சொல்லப் படுகிறது. கீழ்த்தட்டு வர்க்கத்தினரிடம் காட்டப்பட்ட இந்த நேசப்போக்கு கண்டு மேல்தட்டு வர்க்கத்தினர் வெகுண்டனர். இது விஷயத்தில் இவ்விருவரும் எவ்வாறு நடந்து கொண்டனர்? பரிசேயர்கள் தம்மைக் குற்றம் கூறிப் பேசியபோது, ஏசுகிறிஸ்து அவர்களுக்கும் பின்வருமாறு சுடசுடப் பதிலளித்தார்: ''பிணியாளர் களுக்கு வைத்தியன் வேண்டியதே அல்லாமல் சுகமுள்ளவர்க்கு வேண்டியதில்லை.'' ஏசுவின் இந்தப் போக்குக்கும் திரு.காந்தியின் போக்குக்கும் இடையே ஏவ்வளவு கூர்மையான வேறுபாடு காணப்படுகிறது! 'சுகவாசி'களைப் பற்றி ஏசு கிறிஸ்து கவலைப் படவில்லை. ஆனால் திரு. காந்தி அவ்வாறில்லை: 'சுகவாசி' களிடமும், பிணியாளர்களுக்குத் தீங்கிழைத்தவர்களிடமும் அவர் நேசம் காட்டினார். காந்தி, தாழ்த்தப்பட்டவர்களுக்கு வைத்தியர் அல்ல; அதிகபட்சம் அவரை ஓர் அனுதாபி என்று கூறலாம், அவ்வளவுதான்.

தாழ்த்தப்பட்ட மக்களின் அனுதாபி என்ற முறையில் கூட அவரது அனுதாபம் இரண்டு நோக்கங்களின் வரம்புக்குட்பட்டது. முதலாவதாக, அது அவரது சமூகக் குறிக்கோள்களின் எல்லைக் குட்பட்டது. இரண்டாவதாக அது அவரது அரசியலின் வரை யறைக்கும் உட்பட்டது. எனது இந்தக் கூற்று குறித்து எவரும் ஐயம் கொள்ளாதிருக்கும் பொருட்டு இங்கு இரண்டு நிகழ்ச்சிகளைப் பற்றி கூறுகிறேன். இவற்றில் ஒன்று மத்திய மாகாணங்களில் திரு.காந்தி தங்கியிருக்கும் ஷிகானுக்கு அருகில் நடைபெற்றது.

முதலாவதாக நான் குறிப்பிடும் நிகழ்ச்சி இந்தியாவில் காரே சம்பவம் எனப்படுகிறது. மத்திய மாகாணங்களில் காங்கிரஸ் அமைச்சரவை பதவியில் இருந்தது. அங்கு 1938 இறுதியில் ஒரு மந்திரிசபை நெருக்கடி ஏற்பட்டது. பிரதம அமைச்சர் டாக்டர் காரேக்கும் அவ ருடைய மந்திரிசபை சகாக்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு தோன்றியது. பிரதமர் என்ற முறையில் அவர் அவர் களுடைய ராஜினாமாவைக் கோரினார். காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுவின் ஒப்புதல் இல்லாமல் ராஜினிமா செய்ய அமைச்சர்கள் தயாராக இல்லை. எனினும் டாக்டர் காரே அவர்களைப் பதவி விலகும்படி நிர்ப்பந்தித்தார். அவர்களும் முடிவில் அவ்வாறே பதவி விலகினார்கள்.

இதன்பேரில் டாக்டர் காரே மற்றொரு காங்கிரஸ் மந்திரிசபை அமைத்தார்; தமக்கு விருப்பமானவர்களை அமைச்சர் பீடங்களில் அமர்த்தினார்; அதுமட்டு மல்லாமல், தமது புதிய மந்திரிசபையில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவரையும் அமைச்சராக்கினார். இவ்வாறு, காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுவைக் கலந்தோசிக்காமல் பழைய அமைச்சரவையைக் கலைத்துப் புதிய அமைச்சரவையை உருவாக்கிய செயல் காங்கிரஸ் நிர்வாகக் குழுவில் விசாரணைக்கு வந்தது. டாக்டர் காரே கட்சிக் கட்டுப்பாட்டை மீறினார் என்று தீர்மானிக்கப்பட்டு, அவர் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். டாக்டர் காரேக்கு எதிராக திரு. காந்தி சுமத்திய குற்றச்சாட்டுகளில் தாழ்த்தப்பட்ட இனத்தவர் ஒருவரை தமது புதிய அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டதும் ஒன்றாகும். இது விஷயமாக டாக்டர் காரேயிடம் திரு.காந்தி கூறியதன் முழு வாசகமும் இங்கே தரப்படுகிறது; இது டாக்டர் காரேயே என்னிடம் எழுதிக்கொடுத்ததாகும் :

''எனது இரண்டாவது அமைச்சரவையில் ஒரு ஹரிஜனைச் சேர்த்துக்கொண்டமைக்காக மகாத்மா காந்தி என்னைக் கண்டித்தார். இது ஹரிஜனங்களின் மேம்பாட்டிற்காக காங்கிரசே வகுத்தளித்த திட்டம், இதன் பொருட்டு மகாத்மாஜி சாகும்வரை உண்ணாவிரத மிருந்தார். இத்தகைய திட்டத்தைச் செயல்படுவதற்குச் சந்தர்ப்பம் வாய்த்தபோது என்னால் முடிந்ததைச் செய்தேன், இவ்வாறு செய்ததில் நான் தவறும் ஒன்றும் இழைத்திடவில்லை என்று உறுதிப்பட பதில் கூறினேன். என் சுயநல நோக்கத்திற்காகவே இதை நான் செய்ததாக மகாத்மாஜி என்மீது குற்றம் சாட்டினார்..இந்தக் குற்றச்சாட்டை நான் வன்மையாக மறுத்தேன்; எனக்கு எந்த சுயநல நோக்கமும் இல்லை என்பன என் ராஜினாமாவே மெய்ப்பிக்கும் என்று கூறினேன். பிறகு, என் செயல்மூலம் அந்த அப்பாவி சமூகத்தின் உறுப்பினர்களிடையே வேற்றுமை வித்தைத் தூவி விட்டாதாவும், இதன் மூலம் காங்கிரசுக்கு நான் தீங்கிழைத்து விட்டதாவும் மகாத்மாஜி வருத்தப்பட்டார்.''*

இங்கு ஒரு விஷயத்தைக் குறிப்பிடவேண்டும்: இதே மத்திய மாகாணங்களில் விரைவில் புதிய அமைச்சரவை அமைக்கப்பட்ட போது, முந்திய அமைச்சரவையில் ஒரே ஒரு நாள் அமைச்சராகப் பணியாற்றிய தாழ்த்தப்பட்ட உறுப்பினர் அதில் சேர்த்துக்கொள்ளப் படவில்லை. ஒரு சம்பிரதாயத்துக்காவது அவர் சேர்த்துக்கொள்ளப்

---

★ பம்பாய் இந்திய ஊழியர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் டாக்டர் காரே பேசும்போது தாம் மேற்கொண்ட நிலைக்கு ஆதரவாக இதையே மீண்டும் திருப்பிக் கூறினார்.

பட்டிருக்க வேண்டும். அவ்வாறு சேர்க்கப்படாததிலிருந்து அமைச்சரவையில் அவர் சேர்க்கப்படுவதை காந்தி கொள்கை அளவில் எதிர்க்கிறார் என்பது தெளிவாகிறது.

இத்தனைக்கும் டாக்டர் காரே அமைச்சராக நியமித்தவர் மத்திய மாகாணங்களின் சட்டமன்றத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட இன உறுப்பினர்; ஒரு பட்டதாரி; காங்கிரஸ்காரர்; தீவிர கட்சிக்காரர். அப்படியிருக்கும்போது இத்தகைய ஒரு நபர் அமைச்சரவையில் இடம் பெறுவதைத் திரு.காந்தி ஆட்சேபிப்பதற்குக் காரணம் என்ன? தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி அவர் உள்ளம் உருக பேசுவதெல்லாம் உண்மையானவையாக இருந்தால், அவரது உள்ளத்தின் அடி ஆழத்திலிருந்து வருபவையாக இருந்தால் நியாயமாக அவர் என்ன செய்திருக்க வேண்டும்? தங்கள் அமைச்சரவையில் ஒரு தாழ்த்தப் பட்டோரையாவது சேர்த்துக் கொள்ளும்படி அவர் எல்லாக் காங்கிரஸ் பிரதம மந்திரிகளுக்கும் ஆணை பிறப்பித்திருக்க வேண்டும்; வேறு எதற்காக இல்லாவிட்டாலும் தாழ்த்தப்பட்டோரிடையேயும் இந்துக்களிடையேயும் ஒரு மனோதத்துவத் தாக்கத்தை ஏற்படுத்துவதற் காகவாவது இதைச் செய்திருக்க வேண்டும். இதனை அவர் கட்சி பாகுபடின்றிச் செய்திருக்க வேண்டும். ஏனென்றால், ஆட்சிக்கு வரும் அளவுக்கு பெரும்பான்மை இடங்களைப் பெறாத மாகாணங்களில் காங்கிரசல்லாத இதர கட்சிகளுடன் காங்கிரஸ் கூட்டு சேருவதை காந்தி எதிர்க்கவில்லை, ஆதரிக்கவே செய்தார். இத்தகைய கூட்டுகளில் காங்கிரஸ்காரர்கள் காங்கிரசல்லாதோரைத் தங்கள் மந்திரிசபைகளில் அமைச்சர்களாகச் சேர்த்துக் கொள்வதையும் அனுமதித்தார். சாதி, மத வேறுபாடின்றி இதை அனுமதித்த காந்தி தீண்டப்படாதவர்களையும் தங்கள் மந்திரி தாழ்த்தப்பட்ட மக்களை உயிரினும் மேலாக நேசிப்பதாகக் கூறும் அவர் இதை ஏன் செய்யவில்லை? அதிலும் மத்திய மாகாணங்கள் விஷயம் முற்றிலும் வேறுபட்டதொன்று. இங்கு அமைச்சராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர் ஒரு காங்கிரஸ்காரர்; பட்டதாரி. எனவே, கல்வித்தகுதி இல்லாதவர் என்றோ அரசியல் தகுதி இல்லாதவர் என்றோ அவர் விஷயத்தில் எந்த ஆட்சேபம் கூற முடியாது. அப்படியிருந்தும் அமைச்சரவையில் அவர் சேர்த்துக் கொள்ளப்படுவதை காந்தி ஏன் எதிர்த்தார்? இதற்கு விளக்கம் கேட்கும் பொருட்டு ஏராளமான தாழ்த்தப்பட்ட மக்கள் ஷெகானுக்குச் சென்றனர். இதனை எதிர்பார்த்த திரு.காந்தி உடனே மௌனவிரதம் அனுஷ்டிக்க ஆரம்பித்துவிட்டார்; இதனால் அவரிடமிருந்து எத்தகைய விளக்கமும் பெற இயலவில்லை; பிறகு, மத்திய மாகாணங்களின் காங்கிரஸ் அமைச்சரவையில் தீண்டப்படாதோர் ஒருவரை சேர்த்துக் கொள்ளாததற்காக திரு.காந்திக்கு எதிராக அவர்கள் சத்தியாக்கிரகம் செய்ய

ஆரம்பித்தனர். இந்த சங்கடத்திலிருந்து மீள திரு.காந்தி ஷெகானை விட்டுக்கிளம்பி, பாட்டாணியர்களுக்கு அகிம்சையைப் போதிப்பதற்காக வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் சுற்றுப்பயணம் செய்யக் கிளம்பிவிட்டார். இந்த சந்தர்ப்பத்தில் திரு. காந்தி மௌன விரதம் மேற்கொண்டது தன்னுடைய அந்தராத்மாவுடன் பேசுவதற்காக அல்ல என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும். சரமாரியாகப் பாய்ந்துவரும் கேள்விக்கணைகளுக்கு மத்தியில் தாழ்த்தப்பட்டோர் குறித்து தமது உள்ளத்தின் அடியாழத்தில் பொதிந்து கிடக்கும் கருத்துக்கள், எண்ணங்கள் எங்கே அம்பலமாகிவிடுமோ என்று அஞ்சியே மௌனவிரதத்தை ஒரு வசதியான சாக்காக அவர் பயன்படுத்திக் கொண்டார் என்பதில் ஐய மில்லை. அவர் வாய்திறந்து பேசியிருந்தால்கூட அவரால் நியாயமான சமாதானம் கூறியிருக்க முடியாது. இது ஏன்? இந்தக் கேள்விக்கு என் மனதில் ஒரே ஒரு பதில்தான் புலப்பட்டது. அந்தப்பதில் இதுதான்: தீண்டப்படாதோர் விஷயத்தில் திரு.காந்தியின் லட்சியம் மிகக் கீழான லட்சியம். ஒரு தீண்டப்படாதோர் தொடப்படவேண்டும்; அப்படித் தொட்டவர்கள் எவரும் குளிக்காமல் இருக்கவேண்டும்; இதுபோதும்; இதற்கு மேல் அவர்கள் விஷயத்தில் ஏதுவும் செய்ய வேண்டியதில்லை. இதுவே தீண்டப்படாதோரிடம் அவர் காட்டும் அக்கறை எல்லாம்! திரு.காந்தி வாயிலிருந்து விளக்கம்கூற முயற்சித்து அதில் தோல்வியடைந்திருந்தால் அவர் மன்னிக்கப்பட்டிருப்பார். ஆனால் இவ்வளவு கீழ்த்தரமான லட்சியத்தை மனத்தில் கொண்டிருப்பவருக்கு மன்னிப்பு ஏது? இங்கு அவர் வாய் திறந்து பேசாதது குற்றமல்ல; மிகவும் மோசமான குறிக்கோளைக் கொண்டிருப்பதுதான் குற்றம்.

நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் இனி இரண்டாவது நிகழ்ச்சிக்கு வருகிறேன். இது பச்சுமா சம்பவம் எனப்படுகிறது. முதல் நிகழ்ச்சி குழப்பத்தையும் திகைப்பையும் உண்டாக்கியது என்றால் இரண்டாவது நிகழ்ச்சியோ மிகவும் அருவருப்பானது, அறவே வெறுக்கத்தக்கது. இது எவ்வளவு கோரமானது, குரூரமானது என்பதை நான் கீழே தரப்போகும் விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். பச்சுமா ஒரு சிறுமி; பன்னிரண்டே வயதானவள்; தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச்சேர்ந்தவள்; அந்தக் குடும்பம் வார்தாவில் வசித்து வந்தது. (இந்தப் பெயர் கையெழுத்துப் பிரதியில் இல்லாததால் இங்கு சேர்க்கப்பட்டிருக்கிறது- ஆசிரியர்). ஒருநாள் மாலை அந்தச் சிறுமி ஒரு முஸ்லீமின் வீட்டிற்கு ஏமாற்றி அழைத்துவரப்பட்டாள். அந்த முஸ்லீம் காவல்துறை உதவி மேற்பார்வையாளர் அதாவது போலீஸ் சப்இன்ஸ்பெக்டர். அவரது வீட்டில் அவள் தங்கவைக்கப்பட்டாள். சூரியன்

மறைந்து இருள் சூழ்ந்த வேளையில் அந்த அபலைச்சிறுமி, பால் மணம் மாறாத பச்சிளம்பெண் மூன்று கயவர்களால், கொடியவர்களால் கதறக் கதறக் கற்பழிக்கப்பட்டாள். மலர்ந்தும் மலராத அந்த மலரை அவர்கள் கசக்கிப் பிழிந்தனர்; ஒரு பாவமும் அறியாத அந்தபுள்ளி மானை மனித உருவங்களிலிருந்த அந்த ஓநாய்கள் குரூரமான முறையில் வேட்டையாடித் தீர்த்தனர். இந்த அட்டூழியம் புரிந்த மூவரும் முஸ்லீம்கள்; ஒருவன் காவல்துறைக் கண்காணிப்பாளன் (போலீஸ் சூப்பிரணடெண்ட்), மற்றொருவன் கல்வித்துறை மேலாளன், மூன்றாமவன் வழக்குரைஞன். இந்த மூன்று முஸ்லீம்களும் குற்றக் கூண்டில் நிறுத்தப்பட்டனர். அவர்கள்மீது நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. இவர்களில் இருவருக்கு இரண்டு வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. மூன்றாவது நபரான வக்கீலைச் சிறுமியால் அடையாளம் காட்டமுடியாததால் அவன் விடுதலை செய்யப் பட்டான். தண்டனைக் குள்ளான இருவரும் உயர்நீதிமன்றத்துக்கு மேல் முறையீடு செய்தனர். ஆனால் உயர்நீதி மன்றம் அவர்களது மேல் முறையீட்டை நிராகரித்துத் தண்டனையை உறுதி செய்தது. சிறையில் இருந்தவாறே அவர்கள் கவர்னர்ஜெனரலுக்குக் கருணை மனுக்களை அனுப்பினர். அவையும் நிராகரிக்கப்பட்டன. இது நிகழ்ந்தது காங்கிரஸ் பதவியேற்பதற்கு முன்னர். காங்கிரஸ் ஆட்சிபீடம் ஏறியதும் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் அவர்கள் மீண்டும் கருணை மனுக்களைத் தாக்கல் செய்தனர். அந்த அமைச்சர் ஒரு முஸ்லீம். தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒரு சிறுமியை முஸ்லீமகள் கற்பழித்ததில் தவறு ஏதும் இல்லை என்ற புண்ணியவான் நினைத்தார் போலும். எனவே அவர் குற்றவாளிகளை விடுதலை செய்யத் தீர்மானித்து விட்டார். முதலில் ஒருவரது மனுவை ஏற்றுக்கொண்டார்; அவர் கல்வி இலாகா மேலாளர்; அவர் இப்போது சுதந்திர மனிதனாக தலைநிமிர்ந்து வெளியே வந்து ஒரு முஸ்லீம் சமஸ்தானத்தில் உயர்கல்வி அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டார். நமது மேன்மை தங்கிய முஸ்லீம் அமைச்சர் இரண்டாவது குற்றவாளியையும் இப்போது விடுதலை செய்வதற்கு இருந்தார். ஆனால் அச்சமயம் இந்தக் குரூர சம்பவத்துக்கு எதிராகப் பெரும் கிளர்ச்சி வெடித்தது; மக்கள் ஆக்ரோஷமாக ஆர்ப்பரித்து எழுந்தனர். ஜனசக்தியின் இந்தக் கோபாவேசத்தின் முன் அமைச்சர் என்ன செய்யமுடியும்? வேறு வழியின்றி பதவியை ராஜினாமா செய்துவிட்டார். இதில் வேதனை யூட்டும் விந்தை என்னவென்றால் இந்த வெட்கக்கேடான சம்பவம் குறித்து எல்லோருமே கடும் கண்டனம் தெரிவித்தனர்; ஆட்சேபக் குரல் எழுப்பினர்; ஆனால் திரு.காந்தி மட்டும் வாயே திறக்க வில்லை; அடியோடு மௌனம் சாதித்தார்; எத்தகைய கண்டனமும்

அவரது திருவாயிலிருந்து வெளிவரவில்லை. அதுமட்டுமல்ல, பதவி நீக்கம் செய்யப்பட்ட இந்த அமைச்சரை மீண்டும் பதவியிலமர்த்து வதற்கு இப்போதுகூட அவர் திறைமறைவில் காரியங்கள் செய்து வருகிறார்; அந்த நபருக்காக அமைச்சர் பதவி இன்னமும் காலியாக வைக்கப்பட்டிருக்கிறது. இங்கு ஒரு கேள்வி எழுகிறது: மூன்று முஸ்லீம் களால் ஈவு இரக்கமின்றி கற்பழிக்கப்பட்ட அந்தச் சின்னஞ்சிறு அபலைப்பெண் பச்சுமா ஒரு தாழ்த்தப்பட்டவரின் புதல்வியாக இல்லாமல் திரு.காந்தியின் சொந்த மகளாக இருந்திருந்தால் இவ்வாறு மௌனமாக இருந்திருப்பாரா? கதிகலங்காது இருந் திருப்பாரா? கண்கலங்காது இருந்திருப்பாரா? பச்சுமாவுக்கு நேர்ந்த அநீதியைத் திரு.காந்தி தமது மகளுக்கு நேர்ந்த கதியாக ஏன் எடுத்துக் கொள்ள முடியவில்லை? இதற்கு இரண்டு பதில்களைக் கூறலாம். முதலாவதாக, காந்தி தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவரல்ல. இதை அவசியம் மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இரண்டாவதாக, பச்சுமாவின் பொருட்டு முஸ்லீம் அமைச்சரைக் கண்டித்தால், காங்கிரஸ் அரசியலின் அடிப்படைக்கோட்பாடாக விளங்கும் இந்து-முஸ்லீம் ஒற்றுமையை அந்த அமைச்சர் சீர்குலைத்துவிடக்கூடும் என்று திரு.காந்தி உணர்கிறார், அஞ்சுகிறார். ஆக, இதிலிருந்து என்ன தெரிகிறது? தாழ்த்தப்பட்ட மக்களிடம் திரு.காந்தி காட்டும் பாசம், நேசம், அனுதாபமெல்லாம் அவரது அரசியல் சூதாட்டத்துக்கு உட்பட்டதுதான் என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிகிற தல்லவா?

தமது மனச்சான்றின்படி அனுதாபம் காட்டுவதற்கும் கூட சுதந்திரமில்லாத ஒரு மனிதர் என்ன நன்னடத்தையுடைய மனிதர்!

## III

இனி ஆலயப்பிரவேசம் பற்றிய விஷயத்துக்கு வருவோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திரு.காந்தி அளித்த வரப்பிரசாதங்களில் இதுவும் ஒன்று என ஏகபடாடோபமாகப் பிரசாரம் செய்யப்படுகிறது.

1932 செப்டம்பர் 25 ஆம் தேதி நடைபெற்ற இந்துக்களின் பொதுக்கூட்டம் ஒன்றில் ஆலயப் பிரவேசப் பிரச்சினை குறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது; இதே கூட்டத்தில்தான் ஹரிஜன சேவா சங்கத்தைத் தொடங்குவதென முடிவு செய்யப்பட்டது. தாழ்த்தப் பட்ட மக்கள்பால் இந்துக்களுக்குள்ள சில கடமைப் பொறுப்புக்கள் இத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன. இந்துக் கோவில்களில்

தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் பிரவேசிப்பதற்கு இருந்துவரும் தடை நீக்கப்பட வேண்டும் என்பதும் இவற்றில் ஒன்று.

தீர்மானத்தில் ஆலயப் பிரவேசம் பற்றிய வாக்குறுதி இடம் பெற்றிருந்தபோதிலும், இந்த வாக்குறுதி உடனடியாக நிறைவேற்றப் பட வேண்டும் என்று தாழ்த்தப்பட்ட மக்கள் வற்புறுத்தவில்லை. எது எப்படியிருந்தபோதிலும், தாழ்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலோர் ஆலயப் பிரவேசத்தில் அத்தனை ஆர்வம் காட்டவில்லை. ஆலயப் பிரவேசத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று திரு.காந்தி என்னிடம் கேட்டார். எனது கருத்தை ஓர் அறிக்கை வடிவத்தில் 1933 பிப்ரவரி 10 ஆம் தேதி* பத்திரிகைகளில் வெளியிட்டேன். அந்த அறிக்கையில் கீழே தருகிறேன்.

## ஆலயப் பிரவேசம் பற்றிய அறிக்கை

ஆலயப் பிரவேசப் பிரச்சினை சம்பந்தமான சர்ச்சை முக்கியமாக தற்போது சனாதனிகளுக்கும் மகாத்மா காந்திக்கும் இடையே நடை பெற்றுவந்த போதிலும், இதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஒரு முக்கியமான பங்காற்ற வேண்டியிருக்கிறது என்பதில் ஐயமில்லை; பிரச்சினைக்கு இறுதி முடிவு எடுக்கும்போது, அவர்கள் மேற்கொள்ளும் நிலை துலாக்கோலின் முள்ளை இந்தப்பக்கமோ அல்லது அந்தப் பக்கமோ சாய்ப்பப்பதாக இருக்கலாம். ஆதலால் அவர்களது கண்ணோட்டத்தை திட்டவட்டமாக, தெள்ளத்தெளிவாக ஐயத்துகிடமின்றி வரையறுத்துக்கூறுவது அவசியமாகிறது.

திரு. ரங்க அய்யரின் ஆலயப்பிரவேச மசோதாவுக்கு இப்போதைய அதன் அதன் வடிவத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆதரவு அளிப்பது சாத்தியமில்லை, ஒரு குறிப்பிட்டகோவில் எந்த நகராட்சி, அல்லது பேரூராட்சி. எல்லைக்குட்பட்டிருக்கிறதோ அவற்றின் வாக்காளர்களிடையே கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நடத்தித், தாழ்த்தப்பட்ட மக்களைக் கோவிலுக்குள் அனுமதிக்கலாம் என்று பெரும்பாலோர் தீர்ப்பளித்தால் கோவலின் தர்மகர்த்தாக்கள் அல்லது நிர்வாகி அந்த முடிவைச் செயல்படுத்தவேண்டும். இதுவே திரு.ரங்க அய்யரது ஆலயப்பிரவேச மசோதாவின் சாராம்சம், இதில்

---

★ இந்த அறிக்கை 1933 பிப்ரவரி14 ஆம் தேதி வெளியிடப்பட்டதாக டாக்டர் அம்பேத்கர் எழுதிய ''தாழ்த்தப்பட்டோருக்கு காங்கிரசும் காந்தியும் செய்தது என்ன'' என்னும் நூலில் குறிப்பிடப்பட்டிருந்தது. பக்கங்கள் 108-113. - பதிப்பாசிரியர்.

கூறப்பட்டுள்ள கோட்பாடு வழக்கமான சாராம்சம், இதில் கூறப்பட்டுள்ள கோட்பாடு வழக்கமான பெரும்பான்மை முடிவு குறித்த கோட்பாடேயாகும்; ஆகவே, இந்த மசோதா புரட்சிகரமானதோ, தீவிரமானதோ அல்ல; சனாதனிகன் புத்திசலிகளாக இருந்தால் எந்த முணுமுணுப்பும் இன்றி இதைத் தாராளமாக ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

ஆனால் இந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஒரு மசோதாவை தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் ஏற்கமுடியாது; இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒரு காரணம் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயப்பிரவேசம் செய்யும் நாளை இந்த மசோதா வெகு அருகில் கொண்டுவந்துவிட முடியாது. தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தர்மகர்த் தாவோ, நிர்வாகியோ ஆலயத்தைத் திறந்துவிடும்போது அதற்கு எதிராகத் தடைஉத்தரவு வாங்குவதற்கு இந்த மசோதாவின்படி சிறுபான்மையினருக்கு உரிமை இல்லை என்பது உண்மையே. ஆனால் இந்த ஷரத்துபற்றி மனநிறைவு அடைந்து, மசோதாவைத் தயாரித்த வரைப் பாராட்டுவதற்கு முன்னர் முதலாவதாக, வாக்கெடுப்பில் ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவாக பெரும்பாலோர் வாக்களிப்பார்களா என்பதை நிச்சயித்துக்கொள்ளவேண்டும். எத்தகைய போலி நம்பிக்கை யும் இல்லாத எவரும் ஆலயப்பிரவேச மசோதாவுக்குப் பெரும் பான்மை வாக்குகள் கிடைப்பது அரிதே என்பதை ஒப்புக்கொள்ளவே செய்வர். மசோதாவைத் தயாரித்தவரே சங்கராச்சாரியாருடன் நடத்திய கடிதப் போக்குவரத்தில் இந்த உண்மையை ஒப்புக்கொண்டுள்ளார். மசோதா நிறைவேறிய பிறகு பெரும்பான்மையினர் வேறுவிதமாக நடத்துகொள்ளப்போகிறீர்களா? அத்தகைய நம்பிக்கை ஏதும் எனக்கு இல்லை. குருவாயூர் கோவில் சம்பந்தமாக நடத்தப்பட்ட வாக்கெடுப் பின் முடிவுகளை நான் ஒன்றும் மறந்துவிடவில்லை. ஒரு பொது மக்கள் வாக்கெடுப்புக்கு வழக்கமாக அளிக்கப்படும் மதிப்பைவிட இந்த வாக்கெடுப்புடன் ஏதோ மகாத்மா காந்தியின் வாழ்க்கையே சம்பந்தப்பட்டிருப்பதுபோல் இதற்கு அளவுக்கு மீறி மதிப்பளித்து அதனை ஏற்க நான் தயாராக இல்லை. இத்தகைய எந்த மதிப்பீடுகளிலும் மகாத்மா காந்தியின் வாழ்க்கையைக் கழித்துவிடவேண்டும். இரண் டாவதாக, கோவில்களில் கடைப்பிடிக்கப்படும் தீண்டாமையை ஒரு தீய வழக்கமாக இந்த மசோதா கருதவில்லை. மாறாக இதனை ஒரு வெறும் சமூகத் தீமையாக, அதிலும் மற்ற எத்தனையோ வகையான சமூகத்தீமையைப்போல் அவ்வளவு மோசமில்லாத தீமையாகவே இதனை அது கருதுகிறது. தீண்டாமையைச் சட்டவிரோதமானதாக அது அறிவிக்கவில்லை. 'பெரும்பான்மையோர் முடிவுசெய்தால் மட்டுமே என்னும் நிபந்தனை விதிக்கப்படுவதால் மசோதாவின் ஜீவனே

பறிக்கப்பட்டு விடுகிறது; அதன் கட்டுப்படுத்தும் ஆற்றல் சிதைக்கப் படுகிறது. பிறருக்குத் தீங்கிழைத்தல், ஒழுக்கக்கேடாக நடத்து கொள்ளுதல் போன்ற கெட்டப்பழக்கங்களுக்குப் பெரும்பான்மையினர் அடிமையாகிவிடுவதால் அல்லது பெரும்பான்மையினர் அவற்றைக் கைக்கொள்வதால் அந்தத் தீய பழக்கங்கள் சகிக்கக் கூடியவை யாகிவிடமுடியாது. தீண்டாமை என்பது நெறியற்ற தீயப்பழக்கம் என்றால், அப்போது என்ன செய்யவேண்டும்? தீண்டாமை பெரும்பான்மை இனத்தினருக்கு ஏற்புடையதாக இருந்தாலும் அதனை எத்தகைய தயக்க மயக்கமுமின்றி அழித்தொழிப்பதுதானே முறை; நியாயம் என்று தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வாதிடுகின்றனர். இவ்வாறு தான் நீதிமன்றங்கள் நடந்துகொள்கின்றன; ஏதேனும் பழக்கவழக்கங்கள் நெறிகெட்டவையாக, பொதுமக்களின் கொள்கைக்கு முரணானவை இருக்குமாயின் அவற்றைக் கண்டிக்கின்றன; தண்டிக்கின்றன. இதைத் தான் இந்த மசோதா செய்யத்தவறிவிட்டது. குடிப்பழக்கம் எப்படி ஒரு தீமையாகக் கருதப்படுகிறதோ, அதேபோன்றுதான் இம்மசோதாவின் கர்த்தா தீண்டாமையையும் கருதுகிறார்; இதற்குமேல் தீண்டாமையின் பால் அவர் ஆழ்ந்த கவனம் எதுவும் செலுத்தவில்லை. அது மட்டுமல்ல, அவர் இரண்டு தீமைகளையும் ஏறத்தாழ சமமாகப் பாவிப் பதோடு, குடிப்பழக்கத்தை ஒழிப்பதற்கு ஸ்தலமக்களின் விருப்பத்தை அனுசரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற குடிப்பழக்க எதிர்ப்பு இயக்கத்தினர் கூறும் வழிமுறையையும் அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். குடிப்பழக்கத்தைவிடத் தீண்டாமை அப்படி ஒன்றும் மோசமானதல்ல என்று தாழ்த்தப்பட்ட மக்களின் நண்பர் எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் திரு.ரங்க அய்யர் கருதுவது விசித்தரமாக இருக்கிறது. தீண்டாமை ஒழிக்கப்படவில்லை என்றால் தாம் சாகும்வரை உண்ணா விரதம் இருக்கப்போவதாக சிலமாதங்களுக்கு முன்னர் மகாத்மா காந்தி அறிவித்ததை திரு.ரங்க அய்யர் மறந்திருக்க மாட்டார்; அப்படி மறந்திருக்கவில்லை என்றால் இந்த சாபத்தீட்டைப் பற்றி, சாபக்கோட் பாட்டைப் பற்றி மிக ஆழமாக சிந்தித்திருப்பார்; அந்தக் கோரக் கொடுமையை அடியோடு, ஆணிவேர் சல்லிவேரோடு வெட்டி யெறிவதற்கு வகை செய்யும் மிக உறுதியான திட்டத்தை முன் வைத்திருப்பார். பலனளிக்கும் விஷயத்தில் பல குறைபாடுகளைக் கொண்டாதாயினும் தீண்டாமை ஒரு கொடியதீமை என்பதைக் குறைந்த பட்சம் கொள்கை அளவிலாவது மசோதா ஏற்றிருக்க வேண்டும் என்பது தாழ்த்தப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பு, கருத்து. தீண்டாமை ஒரு சாபக்கேடு என்று நெடுகிலும் வலியுறுத்திவரும் மகாத்மா காந்திக்கு இந்த மசோதா எவ்விதம் மனநிறைவு அளிக்கிறது என்பதை என்னால் உண்மையிலேயே புரிந்துகொள்ள முடிய வில்லை; இது எப்படியிருப்பினும் இம்மசோதா தாழ்த்தப்பட்ட

மக்களுக்குத் திருப்தி அளிக்க வில்லை என்பதைத் திட்டவட்டமாக, அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியும். இந்த மசோதா நல்லதா, கெட்டதா, போதுமானதா இல்லையா என்பது இரண்டாந்தரப் பிரச்சினை. இங்கு பிரதானமான பிரச்சினை தாழ்த்தப்பட்ட இனத்தினர் ஆலயப்பிரவேசத்தை விரும்புகிறார்களா, விரும்பவில்லையா என்பதே ஆகும். இந்தப் பிரதான பிரச்சினையைத் தாழ்த்தப்பட்ட மக்கள் இரண்டு கண்ணோட்டங்களிலிருந்து பார்க்கிறார்கள். ஒன்று பொருளாதாரக் கண்ணோட்டம். இந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் சிந்திக்கத் தொடங்கும் அவர்கள் தங்களது மேம்பாட்டிற்கான நிச்சயமான மார்க்கம் உயர்கல்வி, அதிகவேலைவாய்ப்பு, சிறந்த வாழ்க்கைத் தொழில் ஆகிய இவற்றில் தான் அடங்கியிருக்கிறது என்று கருது கிறார்கள். சமூக வாழ்க்கைப் படிகளில் அவர்கள் தகுந்த, உகந்த இடத்தைப் பெற்று விட்டால், மதிப்புமிக்கவர்களாகிவிடுவார்கள்; மதிப்புடையராகிவிடும்போது சனாதனியர் அவர்கள்பால் கொள்ளும் சமய மனநிலைச்சார்பு நிச்சயமாக மாற்றமடையும்; இவ்வாறு நிகழாதுபோயினும் அதனால் அவர்களது பொருளாதார நலன்களுக்கு எத்தகைய தீங்கும் நேரிடாது. இந்த அடிப்படையில் சிந்திக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயப்பிரவேசம் போன்ற ஒன்றுக்கும் உதவாத விஷயத்தில் தங்கள் சக்தியை வீண்விரயம் செய்ய விரும்பவில்லை என்று கூறுகிறார்கள். ஆலயப் பிரவேசத் திற்காகப் போராடுவதில் அவர்கள் அக்கறை காட்டாததற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது. அதுதான் சுயமரியாதை. இந்தியாவில் ஐரோப்பியர்கள் நடத்திவரும் பொழுதுபோக்குக் கூடங்களிலும் ஆரோக்கிய நிலையங்களிலும் சிலகாலத்திற்கு முன்னர்வரை ஓர் அறிவிப்புப் பலகைக் காணப்படும்; ‘நாய்களும் இந்தியர்களும் அனுமதிக்கப்படமாட்டார்கள்’ என்று அதில் எழுதப்பட்டிருக்கும். இந்து கோவில்களிலும் இதேபோன்ற அறிவிப்புப் பலகைகள் இன்று காணப்படுகின்றன. ஒரே வித்தியாசம் இந்துக்கோவில்களின் பலகைகளில் காணப்படும் வாசகம் சற்று மாறுபட்டது. அதுகூறுவதாவது: ‘‘நாய்கள் உட்பட எல்லா விலங்கு களுடன் அனைத்து இந்துக்களும் அனுமதிக்கப்படுவார்கள். தாழ்த்தப் பட்ட மக்கள் மட்டும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.’’ இவை இரண்டிலும் நிலைமை ஒன்றுதான். ஆனால் ஒருவிஷயம்: இந்தியர் களுக்கு அனுமதியில்லை என்று ஐரோப்பியர்கள் அகம்பாவத்தோடு ஒதுக்கியுள்ள இடங்களில் தங்களை அனுமதிக்க வேண்டும் என்று இந்துக்கள் மன்றாடிக் கேட்டுக்கொண்டதில்லை. அப்படியிருக்கும் போது இந்துக்கள் அகந்தையோடு, திமிரோடு ஒதுக்கியிருக்கும் இடங்களில் தங்களை அனுமதிக்கவேண்டும் என்று தாழ்த்தப்பட்ட மக்கள் ஏன் இறைஞ்சிக் கேட்கவேண்டும்? தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள் ஆலயப்பிரவேசத்தைப் பற்றிக் கவலைப்படாமல்

தங்களது பொருளாதார சுபிட்ச நலனில் அக்கறை காட்டுவதற்கு, கண்ணும் கருத்துமாக இருப்பதற்கு இதுவே காரணம். அவர்கள் இந்துக்களிடம் பின்வருமாறு கூறவும் தயாராக இருக்கிறார்கள்: "உங்கள் கோவில்களைத் திறப்பதோ திறக்காமலிருப்பதோ உங்கள் இஷ்டம்; அது நீங்களே தீர்மானத்துக்கொள்ள வேண்டிய விஷயம்; அதற்காக நாங்கள் கிளர்ச்சி எதுவும் செய்யப் போவதில்லை. மனித ஆளுமையின் புனிதத்தை, தூய்மையை மதிக்காதிருப்பது சரியல்ல, முறையல்ல என்று நீங்கள் கருதினால் உங்கள் கோவில்களைத் திறந்துவிட்டுப் பண் பாளர்களாக, பொறுப்புணர்ச்சிமிக்கவர்களாக, பெருந்தன்மையுடை யோராக நடந்து கொள்ளுங்கள். அப்படியில்லை நாங்கள் பண்பாளர் களாக இருப்பதைவிட இந்துக்களாகத்தான் இருப்போம் என்றால் கதவுகளை அடைத்துவிட்டு எக்கேடாவது கெட்டுப்போங்கள். ஏனென்றால் கோவில்களுக்கு வரவேண்டும் என்று நாங்கள் ஒன்றும் துடித்துக்கொண்டிருக்கவில்லை."

"சாதி இந்துக்களின் ஆதரவைத் தாழ்த்தப்பட்ட மக்கள் மிகவும் ஆவலோடு எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பண்டித மதன் மோகன் மாளவியா போன்றோர் கொண்டிருக்கும் தவறான எண்ணத் தைப் போக்கும் பொருட்டே எங்கள் வாதத்தை மேற்கண்ட வடிவில் தருவது அவசியமாயிற்று. அடுத்து, இரண்டாவது கண்ணோட்டம் ஆன்மிகம் சம்மந்தப்பட்டது. சமயநோக்கு கொண்ட வர்கள் என்ற முறையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆலயப் பிரவேசத்தை விரும்புகிறார்களா? அல்லது விரும்பவில்லையா? இதுதான் கேள்வி. ஆன்மீகக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, பொருளாதயக் கண்ணோட்டம் மட்டுமே மேலோங்கி அவர்கள் ஆலயப்பிரவேச விஷயத்தில் அவ்வளவாக அக்கறை இல்லாமல் அலட்சியமாக இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் இதில் அவர்களது இறுதிமுடிவு பின்கண்ட கேள்விகளுக்கு மகாத்மா காந்தியும் இந்துக்களும் அளிக்கும் பதிலையே பொறுத்திருக்கிறது :

இந்த ஆலயப்பிரவேச நடவடிக்கைக்குப் பின்னாலுள்ள தூண்டுதல் என்ன? ஆலயப்பிரவேசம் என்பது இந்துக்களின் அரவணைப்பில் தாழ்த்தப்பட்ட மக்களது சமூக அந்தஸ்து மேம் பாட்டின் இறுதிக் குறிக்கோளாக இருக்கப்போகிறதா? அல்லது இது இத்திசை வழியில் மேற்கொள்ளப்படும் முதல் நடவடிக்கையா? இது முதல் நட வடிக்கையாக இருக்குமாயின் இறுதி குறிக்கோள் யாது? ஆலயப் பிரவேசம்தான் இறுதிக்குறிக்கோள் என்றால் தாழ்த்தப்பட்ட இனத்தோர் அதனை ஒருபோதும் ஆதரிக்கமாட்டார்கள். அதனை அவர்கள் நிராகரிப்பார்கள்; அதுமட்டுமல்ல, இந்து சமுதாயத்தால்

நிராகரிக்கப்பட்டவர்கள் என்று தங்களைக் கருதிக்கொள்வார்கள்; தங்கள் எதிர் காலத்தை வேறு எங்கேனும் நிர்ணயித்துக்கொள்ள உரிமை பெற்றிருப்பார்கள். அதேசமயம் ஆலயப்பிரவேசம் என்பது தாழ்த்தப் பட்ட மக்களது முன்னேற்றம் என்னும் திசை வழியில் எடுத்துக் கொள்ளப்படும் முதல் நடவடிக்கைதான் என்றால் அதை வரவேற் பார்கள். அப்போது இது இந்திய அரசியல் தற்போது நடைபெற்று வரும் நிகழ்ச்சிப் போக்கினை ஒத்ததாக இருக்கும்; இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்து வேண்டும் என்று இந்தியர்கள் கோரு கிறார்கள். இந்தக் கோரிக்கையை பிரிட்டிஷார் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு இப்போது சில சீர்திருத்தங்களை வழங்க முன் வந்தால் பல இந்தியர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். ஏன்? ஏனென்றால் குறிக்கோள் நிர்ணயிக்கப்பட்டுவிட்ட பிறகு அக்குறிக் கோளை ஒரே பாய்ச்சலில் அடையாமல் படிப்படியாக அடைவதில் தவறேதும் இல்லை. ஆனால் குடியேற்ற நாட்டு அந்தஸ்து குறிக் கோளை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை என்றால் நிலைமை என்னவாகியிருக்கும்? ஓரளவிலான சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்ள இப்போது தயாராக இருப்பவர்களே அப்போது அவற்றை ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள். இதேபோன்று இந்து அரவணைப்பின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக நிலைமையை மேம்படுத்துவதற்கு எத்தகைய குறிக்கோளை வகுத்திருக்கிறார்கள் என்பதை மகாத்மா காந்தியும் ஏனைய சீர்திருத்தவாதிகளும் அறிவித்தால் ஆலயப்பிரவேச விஷயத்தில் தங்கள் நிலையை நிர்ணயித்துக்கொள்வது தாழ்த்தப் பட்ட மக்களுக்கு எளிதாக இருக்கும். அதேசமயம், சம்பந்தப்பட்ட அனைவரும் தங்கள் குறிக் கோளை திட்டவட்டமாக, தெளிவாக அறிவிப்பது அவசியம். தங்களுக்குச் சமத்துவ அந்தஸ்தை வழங்கக் கூடிய ஒரு சமயத்தையே தாழ்த்தப்பட்ட மக்கள் விரும்புகின்றனர். தப்பெண்ணத்தைத் தவிர்க்கும் பொருட்டு இந்த விஷயத்தை மேலும் விளக்கும் வகையில், சமயச் சார்பற்ற காரணங்களினால் விளையக் கூடிய சமூகத் தீமைகளையும் சமய சித்தாந்தங்களின் அடிப்படையில் எழக் கூடிய சமூகத் தீமைகளையும் இங்கு வேறுபடுத்திக்காட்ட விரும்புகிறேன். எத்தகைய சமூகத் தீமை களாயினும் அவற்றை ஒரு நாகரிக சமுதாயத்தில் எவ்வகையிலும் நியாயப்படுத்தமுடியாது. அதிலும் இன்று நிலவும் எந்தச் சமூகத் தீமைகளையும் சமய அடிப் படையில் நியாயப்படுத்த முயல்வது மிகமிக இழிவானது, அறவே வெறுக்கத்தக்கது, முற்றிலும் அருவருக்கத்தக்கது. தங்களுக்கு இழைக்கப் படும் கோரக் கொடுமைகளை, அவலங்களை, அக்கிரமங்களைத் தாழ்த்தப்பட்டோர் வீழ்த்த முடியாதிருக்கலாம். ஆனால் இந்தக் கொடுமைகள் தொடர்வதற்கு ஆதரவளிக்கும் ஒரு மதத்தைப்

பொறுத்துக் கொள்வதில்லை,சகித்துக்கொள்வதில்லை என அவர்கள் திட உறுதிபூண்டுள்ளனர். இந்து மதம் அவர்களது மதமாக இருக்க வேண்டும். எல்லோரையும் கோவிலுக்குள் அனுமதிப்பதற்கு வகை செய்யும் ஒரு ஷரத்தை இந்து சட்டத்தொகுப்பில் சேர்த்து விடுவதால் மட்டும் இந்து மதம் சமத்துவ சமூக அந்தஸ்தை வழங்கும் மதமாகி விடாது. தற்போது அரசியலில் சர்வசாதாரணமாகப் பயன் படுத்தப்படும் பதங்களைப் பிரயோகித்துக் கூறுவதனால் அது செய்யக்கூடிய எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களை அந்நியர்களாக அன்றி இந்நாட்டவராக அங்கீகரிப்பதே ஆகும். ஆனால் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடின்றி சுதந்திரமும் சமத்துவமுமிக்க ஒரு நிலையை அவர்கள் அடைந்துவிடுவார்கள் என்று இதற்குப் பொருள் அல்ல; ஏனென்றால் இந்து சமயம் சமத்துவ சமூக அந்தஸ்து கோட்பாட்டை ஏற்கவில்லை; அதற்குமாறாக, மக்களை பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் என வகைப்படுத்தி ஏற்றத்தாழ்வை ஊட்டி வளர்க்கிறது; இவை தற்போது ஒன்றுக்கொன்று பகைமை ஏறுபடியிலும், அவமதிப்பு இறங்குபடியிலும் நிற்கின்றன. இந்து சமயம் சமூக சமத்துவமுள்ள சமயமாக இருக்க வேண்டுமென்றால், ஆலயப்பிரவேசத்திற்கு வழிவகுக்கும் ஒரு திருத்தத்தை அதன் சட்டத்தொகுப்பில் இடம் பெறச்செய்வது மட்டும் போதாது. இப்போது செய்யவேண்டிய தெல்லாம் சதுர்வருண சித்தாந்தத்தை இந்து சமயத்திலிருந்து அகற்றி அதனைத் தூய்மைப்படுத்துவதே ஆகும்; ஏனென்றால் இந்த சதுர் வருண சம்பிராயதம்தான் சகல விதமான ஏற்றத் தாழ்வுகளுக்கும் ஆணிவேர்; சாதி அமைப்பின் தோற்றுவாய்; இவையெல்லாம் ஏற்றத்தாழ்வின் வெவ்வேறு வடிவங்களாகும். இதைச் செய்யவில்லை என்றால் தாழ்த்தப்பட்ட இனத்தினர் ஆலயப் பிரவேசத்தை நிராகரிப் பார்கள்; இந்து தர்மத்தையும் புறக்கணிப்பார்கள். சதுர்வருண சித்தாந் தமும் சாதிமுறையும் தாழ்த்தப்பட்ட மக்களின் சுயமரியாதைக்கு ஒவ்வாதவை, முரண்பாடானவை. இந்த சித்தாந்தம் இந்து சமயத்தின் அச்சாணியாக, ஆதார அடிப்படையாக நீடிக்கும்வரை தாழ்த்தப்பட்ட இனத்தினர் தொடர்ந்து தாழ்ந்தவர்களாகவே, கீழானவர்களாகவே கருதப்பட்டு வருவார்கள். தாங்கள் இந்துக்கள் என்று தாழ்த்தப்பட்ட மக்கள் கூறுவது தங்களது தாழ்ந்த அந்தஸ்தை, நிலையை தங்கள் வாயாலேயே ஒப்புக்கொள்வதாகும். சதுர்வருண, சாதிக்கோட்பாடு கைவிடப்படவேண்டும்; சாஸ்திரங்களிலிருந்து அது அகற்றப்பட வேண்டும்; அப்போதுதான் தாழ்த்தப்பட்ட இனத்தோர் தங்களை இந்துக்கள் என்று கூறிக்கொள்ள முடியும். மகாத்மாவும் இந்து சீர்திருத்தவாதிகளும் இதனைத் தங்கள் குறிக்கோளாக ஏற்றுக்

கொள்வார்களா? இதன் பொருட்டுத் துணிந்து போராட அவர்கள் முன்வருவார்களா? மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு இதனை நான் கூறியிருப்பதால், இவ்விஷயத்தில் அவர்களது கருத்துக்களை ஆவலோடு எதிர்பார்க்கிறேன். ஆனால் மகாத்மா காந்தியும் இந்துக்களும் இதற்குத் தயாராக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இதற்குத் குறைந்த எதுவும் தாழ்த்தப்பட்ட மக்களைக் திருப்திப்படுத்தாது, அவர்களை ஆலயப்பிரவேசத்தை ஏற்கும்படிச் செய்யாது என்பதை உறுதியாக, முடிவுாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆலயப்பிரவேசத்தை ஏற்றுக்கொண்டு அத்துடன் திருப்தியடைவது என்பது தீமையுடன் சமரசம் செய்துகொள்வதையும், மனித ஆளுமையின் புனிதத்தைப் பலிகொடுப்பதையுமே குறிக்கும்.

நான் எடுத்துள்ள இந்த நிலைக்கு எதிராக மகாத்மா காந்தியும் இந்து சீர்திருத்தவாதிகளும் ஒரு வாதத்தை முன்வைக்கலாம்: அதாவது ''ஆலயப்பிரவேசத்தை தாழ்த்தப்பட்ட மக்கள் இப்போது ஏற்றுக் கொள்வது சதுர்வருண, சாதிமுறையை ஒழித்துக்கட்டுவதற்காக இனிமேல் அவர்கள் கிளர்ச்சி செய்வதை எவ்வகையிலும் தடுக்காது'' என்று அவர்கள் கூறக்கூடும். இதுதான் அவர்களது குறிக்கோள் என்றால், இப்பிரச்சினைக்கு முடிவான தீர்வு காணும், எதிர்கால வளர்ச்சிக்குப் பாதை திறந்துவிடும் நோக்கத்தோடு இந்தக் கட்டத்திலேயே இந்த வாதத்தை எதிர்கொள்ள விரும்புகிறேன். இப்போது ஆலயப் பிரவேசத்தை ஏற்றுக் கொள்வதால் சதுர் வருண, சாதி முறையை ஒழித்துக்கட்டப் போராடுவதற்கு எனக்குள்ள உரிமையை நான் இழக்கமாட்டேன் என்பது உண்மையே. ஆனால் இந்தப் பிரச்சினை வரும்போது மகாத்மா காந்தி எந்தப் பக்கம் இருப்பார் என்பதுதான் இங்கு கேள்வி. என்னுடைய எதிராளிகளின் முகாமில் இருப்பாரானால் இப்போது அவருடைய முகாமில் நான் இருக்கமுடியாது என்பதை நான் அவருக்குக் கூறியாக வேண்டும். என்னுடைய முகாமில் இருப்பாரானால் இப்போதே அதில் அவர் இருக்கவேண்டும்.''

ஆலயப்பிரவேசப் பிரச்சினை குறித்து என்னுடைய நண்பர் திவான் பகதூர் ஆர்.சீனிவாசன் கிட்டத்தட்ட இதே கருத்தை வெளியிட்டுள்ளார். அவர் கூறியுள்ளதாவது:

''தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர் சாதி இந்துக்களின் கோவில்களில் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படும்போது, அவர் நால்வகை வருணங்களில் ஏதேனும் ஒன்றைச் சேர்ந்தவராகக் கருதப்பட மாட்டார்; அதற்கு மாறாக அவர் ஐந்தாவது வருணத்தைச்

சேர்ந்தவராக அல்லது கடைசி வருணத்தைச் சேர்ந்தவராக, இன்னும் சொல்லப் போனால் தாழ்வினும் தாழ்வான சாதியைச் சேர்ந்தவராக நடத்தப் படுவார்; இது தீண்டப்படாதோர் என அழைக்கப்படும் கொடுமையிலும் மிகக் கொடிய இழுக்காகும். அதேசமயம் அவர் எத்தனை எத்தனையோ விதச் சாதிக்கட்டுப்பாடுகளுக்கும் அவமதிப்பு களுக்கும் ஆளாக்கப்படுவார். அதுமட்டுமல்ல, இவ்வாறு சாதி இந்துக் களின் கோவில்களுக்குள் பிரவேசிப்பவரைத் தாழ்த்தப்பட்ட இன மக்களும் வெறுத்தொதுக்குவார்கள்; கோடானுகோடியான தாழ்த்தப் பட்ட மக்கள் தங்களுக்குள் வேண்டுமானால் பல பிரிவுகளாகப் பிரிந்திருப்பார்களே அன்றிச் சாதிக் கட்டுப்பாடுகளுக்கு ஒருபோதும் உடன்படமாட்டார்கள்.

ஆலயப்பிரவேசத்தைச் சட்டத்தின் மூலம் நிர்ப்பந்திக்க முடியாது. கிராம இந்துக்கள் பகிங்கரமாக அல்லது மறைமுகமாக சட்டத்தை மீறுவார்கள். கிராமத்தின் தாழ்த்தப்பட்டவனுக்கு இது 'சர்க்கரை' என்று எழுதிச் சுவைத்துப் பார்க்கும்படி அவன் கையில் கொடுக்கப் படும் ஒரு துண்டுக் காகிதமே தவிர வேறல்ல.

நாட்டில் குழப்பத்தையும் கொந்தளிப்பையும் தவிர்ப்பதற்காக இந்த உண்மைகள் எல்லாம் பொதுமக்கள் முன் உரிய சமயத்தில் வைக்கப்பட்டுள்ளன.''

ஆனால் திரு.காந்தி வேறுவிதமாகக் கருதினார்; தீண்டா தோருக்கு ஆலயப்பிரவேச உரிமையைப்பெற்றுத்தருவது இந்துக் களின் கடமைப்பொறுப்பு, அதனை அவர்கள் முதலில் செய்து தீர வேண்டும் என்று எண்ணினார். எனவே புனா ஒப்பந்தம் கையெழுத் தானதுமே தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தங்கள் கோவில்களின் கதவுகளைத் திறந்துவிடும்படி இந்துக்களிடையே பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்.

இந்த விஷயத்தில் திரு.காந்தி எந்த அளவுக்கு வெற்றி பெற்றுள்ளார் என்ற கேள்வி இங்கு நியாயமாகவே எழுகிறது. ஆனால் உண்மையை அறிவது கடினமாவே உள்ளது. உண்ணாவிரதத்தின் விளைவாக இந்துக்கள் பல கோவில்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்துவிட்டுவிட்டனர் என்று கூறப்படுகிறது. இது எவ்வளவு தூரம் உண்மை, பிரசாரக் கலையில் கைதேர்ந்தவர்களான காங்கிரஸ்காரர்களது பொய்ப்பிரசாரத்தின் பங்கு இதில் எந்த அளவுக்கு இருக்கிறது

நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கோவில்கள் இந்நாட்டில் உள்ளன. அங்குக் கழுதைகள் குடியிருக்கின்றன. நாஸிக், வை போன்ற யாத்திரை தலங்களிலேயே இத்தகைய கோவில்கள் பலவற்றைப் பார்க்கலாம். இப்படிப்பட்ட ஒரு கோவிலைத் திறந்து விடுவது அர்த்தமற்ற செயல் மட்டுமல்ல, தாழ்த்தப்பட்ட மக்களை அவமதிக்கும் செயலுமாகும். சரி, ஒரு கோவில் தாழ்த்தப்பட்டோருக்குத் திறந்துவிடப் படுவதாகவே வைத்துக் கொள்வோம். ஆனால் இந்துக்கள் அதனை வழிபாட்டுத் தலமாக இனியும் கருதாமல் கைவிட்டுவிட்டுப் போய் விட்டால் என்னவாகும்? அப்போது இந்துக்களின் ஆதரவோடு இந்தக் கோவில் தாழ்த்தப்பட்டோருக்குத் திறந்துவிடப்பட்டது என்று கூறமுடியுமா? உண்மையைக் கண்டறிவதற்கு மற்றொரு சாத்தியக் கூற்றையும் இங்கு கணக்கிலெடுத்துக் கொண்டு பார்ப்போம். லண்டனில் ரிட்ஸ் என்னும் பிரபல ஓட்டல் இருக்கிறது. அங்கு யார் வேண்டுமானாலும் செல்லலாம். அதேபோன்று ஒரு கோவிலையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விட்டுவிடலாம். இதில் சிரமம் ஏதுமில்லை. ஆனால் உண்மையில் ரிட்ஸ் ஓட்டலுக்கு எல்லோருமே சென்றுவிடமுடியாது. வசதி உள்ளவர்கள் மட்டுமே அங்குச் செல்ல முடியும். இதேபோன்றதுதான் கோவிலின் விஷயமும். அதை தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விட்டுவிடலாம். எனினும் உண்மை யில், தாழ்த்தப்பட்ட சாதியினர் எல்லோருமே அங்கு சென்றுவிட முடியாது. அடி, உதை, வசவு, பழிப்பு, தாக்குதல், சமூக பகிஷ்காரம் முதலியவற்றிற்கெல்லாம் துணிந்த தாழ்த்தப்பட்ட மக்கள்தான் அங்கு செல்ல முடியும். அதாவது அவர்களைப் பொறுத்தவரையில் ஆலயப் பிரவேசத்திற்கான 'விலை' தாங்க முடியாதது. எனவே, ஒரு கோவில் பெயரளவுக்குத் திறந்து வைக்கப்பட்டாலும் நடைமுறையில் அது மூடப்பட்ட ஒன்றேயாகும். தாக்குதல், சமூக பகிஷ்காரம் என்பன வெல்லாம் இந்துக்களைப் பொறுத்தவரையில் சர்வ சாதாரணம். ஆனால் இந்துக்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே இவ்வாறு நடந்து கொள்வார் கள் என்று கருதிவிடலாகாது; சில சமயங்களில் இத்தகைய நடவடிக்கை களில் இறங்காமல் வேறொரு நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். அதாவது நாம் ஏற்கனவே கூறியது போன்று சம்பந்தப்பட்ட கோவிலுக்கே தலை முழுக்குப் போட்டு விடுவார்கள்.

இந்த இரண்டு வகையான முறைகளில் எது எண்ணிக்கையில் அதிகம் என்று துல்லியமாகக் கூற இயலாது. எனினும் சில எதார்த்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு ஓர் ஊகத்துக்கு வேண்டுமானால் வரலாம். இந்தியாவில் இன்றுள்ள இந்துக்களில் இரண்டு வகையினர் உள்ளனர். ஒருவகையினர் சனாதன இந்துக்கள்;

அரசியலைவிட மதத்துக்கு மிகுந்த முக்கியத்துவம் தருபவர்கள் இவர்கள். இரண்டாவது வகையினர் காங்கிரஸ் இந்துக்கள்; அரசியலில் அதிக அக்கறையும் மதத்திடம் குறைந்த கவனமும் செலுத்துபவர்கள் இவர்கள். முதலில் குறிப்பிடப்பட்டவர்கள் தங்களுக்கென அரசியல் குறிக்கோள் ஏதுமில்லாதவர்கள்; ஆனால் தங்களது மத நம்பிக்கைகள் தவறானவையாக இருந்தாலும் அவற்றின் பால் ஆழ்ந்த பற்றுதல் கொண்டவர்கள்; மிகுந்த விசுவாசம் வைத்திருப்பவர்கள். இரண்டாவதாக குறிப்பிடப்பட்டவர்கள் அப்படியல்ல; அவர்கள் அரசியல் நோக்கங்களுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்; எப்போதுமே அவர்கள் ஒரு நேர்மையான கண்ணோட்டத்தை மேற்கொள்ள முடியாது; அதற்கு மாறாக, நேர்மையற்ற விதிகளைக் கைக்கொள்ளும் மனநிலை படைத்தவர்கள் அவர்கள். தாழ்த்தப்பட்டவர்கள் ஆலயப் பிரவேசம் செய்துவிட்டார்கள் என்பதற்காக தங்களது கோவில்களை கைவிட்டுவிடும் முதலாவது வழிமுறை உலகத்தார் பார்வையில் இந்து சமூகத்துக்குக் கெட்ட பெயரையே ஏற்படுத்தும்; இதனால் அது அரசியல் ரீதியில் ஒவ்வாதது; பொருத்தமற்றது. பெயரளவில் கோவில்களைத் திறந்துவிட்டு உண்மையில் **இந்துக்களால்** அது மூடப்பட்டுவிடும். இரண்டாவது வழிமுறை (கையெழுத்துப் பிரதியில் காலியாக உள்ள இடத்தில் 'இந்துக்கள்' என்ற சொல்லை நாம் நிரப்பியுள்ளோம் - ஆசிரியர்) அரசியல் ரீதியில் பெரிதும் ஆதாயம் தரக்கூடியது. இதற்குப் பிரசார மதிப்பு அதிகம். ஆனால் நயவஞ்சகமானது. இதற்கு இங்கு ஓர் உதாரணம் கூறுவோம். ஒருவர் பெயரில் கணக்கேட்டில் உலகம் அறிய ஒரு குறிப்பிட்ட தொகை வரவு வைக்கப்படுவதாக வைத்துக் கொள்வோம்; ஆனால் யார் பெயரால் பணம் வரவு வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறதோ அவரே அந்தப் பணத்தைப் பெற முடியாதபடி இரகசியமாக, உலகம் அறியாதபடி தடுக்கப்பட்டால் எப்படி இருக்கும்? அதே போன்றதுதான் மேலே கூறிய இரண்டாவது வழிமுறை. எண்ணிக்கை அளவில் பார்க்குமிடத்து சனாதன இந்துக்களைவிட காங்கிரஸ் இந்துக்களே அதிகம். ஆக, இரண்டாவது வகையான முறைதான் முதல் வகையைச் சேர்ந்த முறையைவிட அதிக அளவில் கைக்கொள்ளப்படுகிறது என்ற முடிவுக்கே வர வேண்டியிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கோவில்களை உண்மையிலேயே திறந்துவிடும் சம்பவங்கள் மிகமிகக் குறைவு; கோவில்கள் திறந்துவிடப்பட்டதாகப் பிரசுரிக்கப்படும் பெரும்பாலான செய்திகள் பொய்ப் பிரசாரமே தவிர வேறு அல்ல; 1934ல் மத்திய சட்டமன்றத்தில் திரு. ரங்க அய்யரின் ஆலயப் பிரவேச மசோதாவுக்கு நேர்ந்த கதியிலிருந்து இதைத்

தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். இந்த மசோதா பற்றி பின்னுமொரு சந்தர்ப்பத்தில் கூறுவேன்.

இத்துடன் இவ்விஷயம் குறித்த வாதத்தை நான் முடித்திருப்பேன். ஆனால் திரு. காந்தி இந்துக்களிடையே ஓர் ஆன்மீக விழிப்பு ஏற்பட்டிருப்பதாக முயலுக்கு மூன்றே கால் என்று சாதிக்கிறார்; திருவாங்கூர் ஆலயப் பிரவேசப் பிரகடனத்தை இதற்கு ஆதாரமாகக் காட்டுகிறார். ஆதலால் அவரது இந்தக் கூற்றைப் பற்றி இங்கு விமர்சிப்பது அவசியமாகிறது.

ஆலயப் பிரவேசத்தின் வெற்றியைத் திறக்கப்பட்ட கோவில்களின் எண்ணிக்கையைக் கொண்டு நிர்ணயிக்க முடியாது. அது எந்த நோக்கத்துடன் செய்யப்பட்டது என்பதைக் கொண்டுதான் அதன் வெற்றியை நிச்சயிக்க முடியும். அந்த நோக்கம் ஆன்மீக ரீதியானதா? இதுதான் உண்மையான உரைகல்லாக, புடமெடுக்கும் மூசையாக இருக்க முடியும்.

ஆனால் இன்று ஆலயப் பிரவேசம் என்பது ஓர் ஆன்மீகச் செயலாக இல்லை; மாறாக, ஓர் அரசியல் சாணக்கியமாகவே, ஓர் அரசியல் சூழ்ச்சியாகவே இருக்கிறது.

இங்கு திரு. காந்தி ஆன்மீக நோக்கத்திலிருந்து செயல்படுகிறாரா? இந்துக்களுக்கு விடுக்கப்பட்ட ஒரு வேண்டுகோளில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:

''எனது ஆன்மாவின் ஆழ்ந்த மனவேதனையிலிருந்து இந்த வேண்டுகோளை உங்களுக்கு விடுக்கிறேன். எனது வேதனையையும் குற்ற உணர்வையும் என்னுடன் பகிர்ந்து கொள்ளும்படி உங்களை வேண்டுகிறேன்; என்னுடன் ஒத்துழைக்கும்படி விழைகிறேன். **சனாதன தர்மம்** மீண்டும் புத்துயிர் பெற்றுப், புத்தெழுச்சி பெற்று கோடானு கோடி மக்களின் வாழ்க்கையில் அது கண்கண்ட எதார்த்தமாக நிலை பெறுவதை, வாழ்வதைக் காணுவதைத் தவிர எனக்கு வேறு எந்தக் குறிக்கோளும் இல்லை; இன்று நம் மக்கள் அந்த தர்மத்தை மறுப்பதாக எனக்குத் தோன்றுகிறது''.

இந்த ஆன்ம வேதனை புனா ஒப்பந்தத்திற்குப் பிறகுதான் பிறந்தது. புனா ஒப்பந்தத்திற்கு முன்னர் ஆலயப் பிரவேசப் பிரச்சினை குறித்து திரு. காந்தி என்ன கருதினார்? புனா ஒப்பந்தத்திற்கு முன்னர்

அவருக்கு முற்றிலும் வேறுபட்டதொரு கருத்து இருந்தது. அந்தக் கருத்து புனா ஒப்பந்தம் கையெழுத்தானதற்கு நீண்ட காலத்திற்கு முன்னர் வெளியிடப்பட்டது அல்ல; இந்துக்களுக்கு இப்போது அவர் விடுத்துள்ள வேண்டுகோளுக்கு நீண்ட காலத்திற்கு முன்னர் வெளியிடப் பட்டதும் அல்ல.... அது காந்தி சிக்ஷன், தொகுதி 2, பக்கம் 132ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று தனிக் கோவில்கள் கட்டப்பட வேண்டும் என்பது அப்போது அவரது கருத்தாக இருந்தது.

அச்சமயம் காந்தி இவ்வாறு சொன்னார்:*

''தற்போதுள்ள எல்லாக் கோவில்களிலும் அந்தியஜாக்கள் (தீண்டப்படாதோர்) பிரவேசிப்பதற்கு உரிமை வழங்குவது எவ்வாறு சாத்தியம்? சாதி மற்றும் ஆசிரம விதிமுறைகள் இந்து சமயத்தில் பிரதான இடம் பெற்றிருக்கும் வரை ஒவ்வொரு இந்துவும் ஒவ்வொரு கோவிலுக்குள்ளும் நுழையலாம் என்று கூறுவது இன்றைக்குச் சாத்தியமல்ல.''

எனவே, ஆலயப் பிரவேசம் என்பது அவரிடம் தொடக்கம் முதலே இருந்துவருகிற குறிக்கோள் அல்ல என்பதும், அதனால் அது ஆன்மீக சார்புடையதல்ல என்பதும் இதிலிருந்து தெள்ளத் தெளிவாகிறது. அவர் கூறும் வேதனை தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்குத் தனி வாக்காளர் தொகுதிகள் வேண்டுமென முன்வைத்த கோரிக்கை எதிர்பாராதவிதமாக ஏற்படுத்திய ஆத்திரத்தால் தோற்றுவிக்கப்பட்டதே அன்றி வேறல்ல. தனிவாக்காளர் தொகுதி கோரிக்கைக்கு அடிப்படையாக அமைந்துள்ள கோட்பாடு அவரை அச்சம் கொள்ளச் செய்தது. இந்தக் கோட்பாடு மேலும் விரிவுபடுத்தப்பட்டு, முடிவில் தாழ்த்தப்பட்ட இனத்தினர் இந்து அரவணைப்பிலிருந்து விலகிப் பிரிந்து செல்ல வழிவகுக்கும் என்று அவர் கருதினார். இந்தத் திட்டத்தை முறியடிப்பதற்காகவே அவர் தமது கருத்தை மாற்றிக் கொண்டு, ஆலயப் பிரவேச இயக்கத்தை ஆரம்பித்தார். இதில் திரு. காந்தியின் நோக்கம் அரசியல் சார்புடையதே அன்றி, ஆன்மீகச் சார்புடையதன்று.

இந்த முடிவை நான் மேற்கொண்டதற்கு திரு. காந்தியின் மனமாற்றத்தை மட்டுமே ஆதாரமாகக் கொள்ளவில்லை. இதற்கு ஆதாரமாக இன்னும் எத்தனை எத்தனையோ சான்றுகள் உள்ளன.

---

* 'தீண்டப்படாதோருக்கு காங்கிரசும் காந்தியும் சாதித்தது என்ன?' என்ற நூலிலிருந்து எடுத்து இங்கு கையாளப்படுகிறது. பக்கம் 107. (கையெழுத்துப் பிரதியில் இந்தப் பகுதி இடம்பெறவில்லை).

இது சம்பந்தமாக குருவாயூர் கோவில் சத்தியாக்கிரகத்தை முதலாவதாகக் குறிப்பிட விரும்புகிறேன். குருவாயூர் கோவிலுக்குள் தாழ்த்தப்பட்ட மக்களை அனுமதிக்கக் கோரி கேளப்பன் என்ற சாதி இந்து தொடங்கியதே இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம். இந்த நிகழ்ச்சி குறித்த சில விவரங்களைக் கூறுவது இங்கு சுவையானதாக இருக்கும்.

சனாதன இந்துத் தலைவர்கள் கடுமையாக எதிர்ப்புக் காட்ட ஆரம்பித்ததும் இந்த விஷயத்தில் திரு. காந்தி இறுதியில் மேற்கொண்ட போக்கை இங்கு குறிப்பிடுவது அவசியம். சனாதனிகளுடன் சமரசம் செய்து கொள்ள அவர் தயாரானார். இந்த சமரச உடன்பாட்டின் வாசகம் வருமாறு: பத்திரிகைகளில் பிரசுரமானபடி இதனை அவரது சொற்களிலேயே இங்கு தந்திருக்கிறேன் :*

''ஒரு நாளில் குறிப்பிட்ட சில மணி நேரங்களில் குருவாயூர் கோவிலை ஹரிஜனங்களுக்கும், அவர்களது வருகையை ஆட்சேபிக்காத இந்துக்களுக்கும் திறந்து விடலாம்; வேறு சில மணி நேரங்களை ஹரிஜனங்கள் பிரவேசத்தை விரும்பாதவர்களுக்கென ஒதுக்கித் தரலாம். குருவாயூரில் கிருத்திகை ஏகாதசி திருவிழா சந்தர்ப்பத்தில் இந்துக்களுடன் சேர்ந்து ஹரிஜனங்கள் செல்ல அனுமதிக்கப்படுவதையும், அதன் பின்னர் கோவில் அல்லது விக்கிரகம் சுத்திகரிக்கப்படுவதையும் பார்க்கும்போது, இந்த யோசனையை ஏற்பதில் எத்தகைய சிரமமும் இருக்காது என்றே தோன்றுகிறது.''

ஹரிஜனங்கள் ஆலயப் பிரவேசம் செய்த பின்னர் நாள்தோறும் கோவிலைத் தூய்மைப்படுத்த வேண்டுமா என்று கேட்கப்பட்டபோது அவர் பதிலளித்ததாவது:

''என்னைப் பொறுத்தவரை தூய்மைப்படுத்தும் சடங்கையே எதிர்க்கிறேன். ஆனால் தூய்மைப்படுத்துவது ஹரிஜனங்களின் ஆலயப் பிரவேசத்தை எதிர்ப்பவர்களின் மனச் சான்றை திருப்திபடுத்துமானால் இந்த விஷயத்தில் தனிப்பட்ட முறையில் நான் எந்த ஆட்சேபமும் தெரிவிக்க மாட்டேன். ஆனால் ஹரிஜனங்கள் அனுமதிக்கப்பட்டாலும் சரி, அனுமதிக்கப்படாவிட்டாலும் சரி சாஸ்திரங்களில் குறிப்பிடப் பட்டிருப்பதுபோல் பல்வேறு காரணங்களால் கோவில்களின் புனிதத் தன்மை தினமும் கெடுவதற்கு எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன; இந்நிலைமையில் நாள்தோறும் அவற்றைத் தூய்மைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படலாம்.''

★ 'டைம்ஸ் ஆப் இந்தியா', ஜுன் 3, 1933.

இந்தப் போக்கை ஆன்மீகமானது என்று கூறமுடியாது. முற்றிலும் வியாபார ரீதியானது என்றுதான் சொல்லவேண்டும். இதனை திரு. காந்தியே கிட்டத்தட்ட ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் தெரிவித்திருக்கும் சமரச யோசனை சாதி இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையே உள்ள வேற்றுமையைக் களையாமல் மேலும் நிலைநாட்டத் தானே செய்கிறது என்று கேட்டபோது அதற்கு திரு. காந்தி பின்வருமாறு பதிலளித்தார்:

''ஹரிஜனங்களின் மனநிலை இவ்விதம் இருக்க வேண்டும்: 'எனது ஆலயப் பிரவேசத்தை ஆட்சேபிக்கும் எவரேனும் இருப்பாரே யானால் அவர் (அந்த ஆட்சேபனையாளர்) எனக்குள்ள உரிமையைப் பறிக்காதவரை அவரது ஆட்சேபத்துக்கு மதிப்பு கொடுக்கவே செய்வேன்; அதே சமயம் எனது ஆலயப் பிரவேசத்தை ஆட்சேபிக்காதவர்களுடன் சேர்ந்து வழிபாடு செய்வதற்கு எனக்குள்ள நியாயமான உரிமை அனுமதிக்கப்படும்வரை நான் திருப்தியடையவே செய்வேன்'.

சுயமரியாதை உள்ள எந்தத் தீண்டப்படாதவனும் திரு. காந்தியின் இந்தப் போக்கை ஏற்பானா என்பது எனக்குத் தெரியாது. கோவில்களில் மனிதர்கள் யாரும் இல்லாதபோது இந்த அடிப்படையில் நாய்களும் பூனைகளும் கூடத்தான் அனுமதிக்கப்படுகின்றன. இரு நேரெதிரான இனத்தவர்களின் வேறுபட்ட கோரிக்கைகளை இணக்குவிக்கும் பொருட்டு இவ்விதம் ஆண்டவனின் திருச்சந்நிதியை வழிபாட்டுக்காக காலம், இடம் என்ற அடிப்படையில் பிரிப்பதே ஒரு விசித்திரமான, கோமாளித்தனமான, நகைப்பிடமான ஏற்பாடாகும். ஒரே கோவிலில் வழிபடுவது என்பதும், அனைவருடன் சேர்ந்து வழிபடுவது என்பதும் முற்றிலும் வெவ்வேறானது என்பதை திரு. காந்தி மறந்து விட்டார் போலும். ஆலயப் பிரவேசம் என்பது ஆன்மீக சார்புடையதாய் இருக்க வேண்டுமாயின் இரண்டாவதாக குறிப்பிடப்பட்ட வழிபாடு வகையைச் சேர்ந்ததாகத்தான் இருக்க வேண்டும். முதல்வகை வழிபாடு வழிபாட்டின்போது ஒரு வகுப்பினர் உடனிருப்பதை இன்னொரு வகுப்பினர் வெறுக்கின்றனர் என்பதை ஏற்றுக்கொண்டு, இவ்விரு வகுப்பினரின் நலன்களையும் இணக்குவிக்க முற்படுகிறது. ஆனால் இரண்டாவது வகை வழிபாடு அப்படியல்ல. இரு இனத்தாரிடையே எத்தகைய பகைமை உணர்வும் இல்லை என்பதையும், தம்முள் பொதுவான மனித நேயம் பொதிந்திருப்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதையும் அது புலப்படுத்துகிறது.

ஆன்மீக நோக்கங்களின் அடிப்படையில் திரு. காந்தி

செயல்படவில்லை என்பதையே இது காட்டுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் இந்துக்களின் பிடியிலிருந்து தப்பிவிடாதபடி அவர்களை இந்து தொழுவத்தில் கொண்டுவந்து கட்டுவதற்கு அவர் துடிக்கிறார், அவசரப்படுகிறார். இதுதான் உண்மை.

திரு. ரங்க அய்யரின் 'ஆலயப் பிரவேச மசோதா' விஷயத்தில் திரு. காந்தி கைக்கொண்ட போக்கு தாம் ஆன்மீக நோக்கங்களின் அடிப்படையில்தான் செயல்பட்டு வருவதாக அவர் கூறிவருவது தவறு என்பதை காண்பிக்கிறது. அவர் கூறும் ஆத்மாவின் வேதனை என்பதெல்லாம் உள்ளத்தைத் தொடும் ஓர் அலங்காரமான சொற்றொடரே தவிர உண்மை அதுவல்ல என்பதை இது காட்டுகிறது.

இந்த மசோதாவைத் தயாரித்தவருக்கு இறுதியில் என்ன நேர்ந்தது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு அதன் வரலாற்றை ஓரளவாவது அறிந்து கொள்வது அவசியம்.

புரிய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து இரண்டு மாகாணங்களில் காங்கிரஸ் அரசாங்கங்களால் இரு சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஒன்று பம்பாயில், மற்றொன்று சென்னையில். இந்த சட்டங்களில் சாரமே இல்லை. கோவில்கள் திறக்கப்பட வேண்டும் என்று அவை உறுதியாகக் கூறவில்லை. கோவில்களின் தர்மகர்த்தாக்கள் தங்கள் நிர்வாகத்திலுள்ள ஆலயங்களை அவர்கள் விரும்பினால் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்துவிட இம்மசோதாக்கள் அனுமதிக்கின்றன. ஆனால் இவ்வாறு செய்ய வேண்டுமென்று தர்மகர்த்தாக்களை எவ்வகையிலும் நிர்ப்பந்தப்படுத்தாதலால் இம் மசோதாக்கள் கவைக்குதவாத வெறும் காகிதங்களே தவிர வேறல்ல. ஆனால் சென்னை சட்டத்திற்கு ஓரளவு புதிரான வரலாறு உண்டு. சென்னையின் பிரதமரான திரு. ராஜகோபாலச்சாரியார்தான் இந்த சட்டத்தை இயற்றியவர். காங்கிரசில் அவர் மிக உயர்ந்த ஓர் இடத்தை வகிக்கிறார். அதாவது, 'துணை மகாத்மா' என்று அழைக்கப்படும் அளவுக்கு உயர்நிலையில் இருக்கிறார். இந்தப் புதிரை ஒருவர் விடுவிக்க முடியுமானால் இம்மசோதாவினது கர்த்தாவின் மனநிலையையும் அதன்மூலம் இவையெல்லாவற்றுக்கும் பின்னால் உயிர்நாடியாக இருக்கும் திரு. காந்தியின் மனநிலையையும் தெரிந்து கொள்ள முடியும்.

திருவாங்கூர் ஆலயப் பிரவேசத்தைப் பற்றி இப்போது பார்ப்போம். திருவாங்கூர் ஆலயத்தைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்

திறந்துவிட்டு 1936 நவம்பர் 12ஆம் தேதி மகாராஜா வெளியிட்ட பிரகடனம் ஒரு படாடோபமான ஆவணமாகும். அது கூறுவதாவது:

''நமது சமயத்தின் மெய்ம்மையிலும் வாய்மையிலும் ஆழ்ந்த பற்றுறுதி கொண்டும், அது தெய்வீக வழிகாட்டுதலையும் அனைத்து மடங்கிய சகிப்புத் தன்மையையும் அடிப்படையாகக் கொண்டது என்ற அசைக்க முடியாத உண்மையை ஏற்றுக் கொண்டும், மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப நடைமுறையில் அது நூற்றாண்டுக் காலமாகத் தன்னை தகவமைத்துக் கொண்டு வந்திருக்கிறது என்பதை ஐயமற உணர்ந்தும், நமது இந்துப் பிரஜைகளில் எவருக்கும் அவர்களது பிறப்பு, சாதி அல்லது சமூகம் இவற்றின் காரணமாக இந்து தர்மத்தின் ஆதரவும் அரவணைப்பும் எவ்வகையிலும் மறுக்கப்படலாகாது என்பதில் ஆழ்ந்த அக்கறை கொண்டும், உகந்த சூழ்நிலைமைகளைப் பராமரிப் பதற்காகவும் சமய வினை முறைகளும் பழக்க வழக்கங்களும் முறையே கடைப்பிடிக்கப்படுவதற்காகவும் எம்மால் விதிக்கப்படும் நிபந்தனை களுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டு, எங்களதும் அரசாங்கத் தினதும் ஆதிக்கத்திற்கு உட்பட்ட கோவில்களில் பிரவேசிக்கவோ, வழிபடவோ பிறப்பு அல்லது மதம் காரணமாக எந்த இந்துவுக்கும் இப்போது முதல் எத்தகைய தடையும் இருக்காது என்பதை இதன் மூலம் அறிவிக்கிறோம், ஆணையிடுகிறோம்.''

இந்தப் பிரகடனம் எத்தகைய ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டது?

இந்தப் பிரகடனம் திருவாங்கூர் மகாராஜாவால் அவரது பெயரில் வெளியிடப்பட்டது. ஆனால் திரைமறைவில் இதன் இயக்கு சக்தியாக இருந்தவர் திருவாங்கூர் பிரதமர் சர். சி.பி. ராமசாமி அய்யரே ஆவார். இந்தப் பிரகடனத்திற்குப் பின்னாலுள்ள அவரது செயல் நோக்கங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். 1933லும் சர். சி.பி. ராமசாமி அய்யர் திருவாங்கூரின் பிரதமராக இருந்துவந்தார். இதே 1933ல் தான் குருவாயூர் கோவிலை அனைத்துத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் திறந்துவிடச் செய்வதற்கு திரு. காந்தி பாடுபட்டு வந்தார். ஆலயப் பிரவேசப் பிரச்சினை சம்பந்தப்பட்ட சர்ச்சையில் பங்குகொண்ட பலரில் சர். சி.பி. ராமசாமி அய்யரும் ஒருவர். இந்த உண்மையை இப்போது யாரும் நினைவு கூர்வதாகத் தெரியவில்லை. ஆனால் இதனை இங்கு நினைவு கூர்வது முக்கியம்; ஏனென்றால் இந்தப் பிரகடனத்தை வெளியிடும்படி அவர் மகாராஜாவைத் தூண்டியதற்கான நோக்கங்களைப் புரிந்துகொள்ள இது உதவும். இந்தப் பிரச்சினையில்

1933ல் அவர் எத்தகைய போக்கினை கடைப்பிடித்தார்? அச்சமயம் அவர் பத்திரிகைகளுக்கு விடுத்த பின்கண்ட அறிக்கையிலிருந்து இதனைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம்:*

''என்னைப் பொறுத்தவரையில் சாதி விதிமுறைகளை நான் கடைப்பிடிப்பதில்லை. எனினும், இப்போதைய ஆலய வழிபாட்டு முறையும் அதன் விவரங்களும் தெய்வீகக் கட்டளைகளை ஆதார அடிப்படையாகக் கொண்டவை என்று நம்புவோர் மனத்தில் இந்த விஷயம் வலுவான, ஆனால் அத்தனை தெளிவற்ற உணர்வுகளைக் கிளர்த்தி விட்டிருக்கிறது என்பதை உணர்கிறேன். சம்பந்தப்பட்ட தரப்பினர் பரஸ்பரம் அனுசரித்துச் செல்வதன் மூலமும், இன்றைய நிலைமையின் எதார்த்தங்களையும் இந்து சமூகத்தின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும் இந்து சமுதாயத்தைச் சேர்ந்த சமயத் தலைவர்களையும் சமூகத் தலைவர்களையும் உணரச் செய்வதன் மூலமும் மட்டுமே இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமாகத் தீர்வு காணமுடியும்.

''அதிரடி முறைகள் இந்த நோக்கத்துக்குப் பயன்பட மாட்டா, உதவ மாட்டா; வேறு எந்த நேரடி நடவடிக்கையும் அரசியல் துறையைவிட இத்துறையில் மிகுந்த தீமையையே விளைவிக்கும். ஆலயப் பிரவேசப் பிரச்சினையை சமபந்தி விருந்து போன்ற பிரச்சினைகளிலிருந்து ஒதுக்கிவிட்டுப் பார்க்கலாம் என்று திரு. காந்தி கூறும் கருத்திலிருந்து மாறுபட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எனக்கு ஏற்பட்டுள்ளது. ஆனால் அதேசமயம், தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார மேம்பாடும் முன்னேற்றமும் நமது உடனடியான, அவசரமான வேலைத் திட்டமாக இருக்க வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கர் கூறுவது எனக்கு உடன்பாடானதாக இருக்கிறது.''

1933ல் ஆன்மீக நோக்கங்கள் சர்.சி.பி. ராமசாமி அய்யரின் மனத்தைத் தொடவில்லை என்பதை இந்த அறிக்கை காட்டுகிறது. 1933க்குப் பிறகுதான் ஆன்மீக நோக்கங்கள் முன்னணிக்கு வருகின்றன. இந்த ஆன்மீக நோக்கங்கள் 1936ல் அவரது சிந்தனையில் இடம் பெறுவதற்கு ஏதேனும் பிரத்தியேகக் காரணம் உண்டா?

1936ல் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை மனத்திற் கொண்டால்தான்

---

★ 'தீண்டப்படாதோருக்கு காங்கிரசும் காந்தியும் சாதித்தது என்ன?' என்ற டாக்டர் அம்பேத்கரின் நூலிலிருந்து இந்த அறிக்கை இங்கு தரப்பட்டிருக்கிறது, பக்கம். 318. கையெழுத்துப் பிரதியில் இது காணப்படவில்லை.

இக்கேள்விக்குப் பதிலளிக்க முடியும். அந்த ஆண்டில் ஈழவ சமூகத்தினரின் மாநாடு ஒன்று திருவாங்கூரில் நடைபெற்றது. 1935ல் இயோலாவில் நான் எழுப்பிய மதமாற்றப் பிரச்சினை குறித்துப் பரிசீலிப்பதற்காகவே இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது. ஈழவர்கள் என்பவர்கள் மலபார் எங்கும் பரவியிருக்கும் தீண்டப்படாத சமூகத்தினர். அவர்கள் நன்கு படித்த சமூகத்தினர்; பொருளாதார ரீதியில் வலுவான நிலையில் இருப்பவர்கள். அத்தோடு அவர்கள் உரிமைக்குக் குரல் கொடுக்கும் சமூகத்தினரும் ஆவர். தங்களது சமூக, மத, அரசியல் உரிமைக்காக அவர்கள் மலபாரில் தொடர்ந்து போராடி வந்திருக்கிறார்கள். ஈழவர்கள் ஒரு மிகப்பெரிய சமூகமாக அமைந்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய சமூகத்தினர் இந்துக்களின் அரவணைப்பிலிருந்து பிரிந்து சென்றால் அது இந்து சமூகத்திற்குச் சாவுமணி அடிப்பதற்கு ஒப்பாகும். இத்தகைய நிலைமையில், இந்த மாநாடு இந்த அபாயத்தை உடனடியாக எதார்த்தமாக்கும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. இதுதான் சர். சி.பி. ராமசாமி அய்யரின் மனப்போக்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆன்மீக நோக்கங்கள் என்பதெல்லாம் வெறும் சாக்குப் போக்கு, சப்பைக் கட்டு. அவை செயல் புரியத் தூண்டும் சக்திகளாக அமைந்திருக்கவில்லை.

இந்தப் பிரகடனம் எந்த அளவுக்கு மெய்ந்நிகழ்வுகளை மாற்றியுள்ளது? அது எந்த அளவுக்கு ஒரு பகட்டாரவார நடவடிக்கையாக நீட்டித்தது? திருவாங்கூரில் அப்போது நிலவிய உண்மை நிலவரங்களை அறிந்து கொள்வது சாத்தியமில்லையா? சென்னை சட்டமன்றத்தில் மலபார் **ஆலயப் பிரவேச மசோதா** பற்றி நடைபெற்ற விவாதத்தின்போது, திருவாங்கூர் சம்பந்தப்பட்ட சில உண்மை விவரங்களை சர்.டி. பன்னீர்செல்வம் தெரிவித்தார். அவை உண்மையாயின், இவை எல்லாம் ஒரு நாடகம் என்பதையே காட்டும்.

சர். டி. பன்னீர் செல்வம் கூறியதாவது:

''இந்த நடவடிக்கைக்கு ஆதரவாகப் பிரதமர் முன்வைத்த வாதங்களில் ஒன்று திருவாங்கூரில் ஆலயங்கள் யாவும் 'தீண்டப்படாதோருக்கு' திறந்துவிடப்பட்டு விட்டன என்பதாகும். எதையும் தன் விருப்பப்படிச் செய்யும் யதேச்சாதிகாரம் கொண்ட மகாராஜா ஓர் உத்தரவின் மூலம் இதனைச் செய்துள்ளார். ஆனால் இந்த உத்தரவு அங்கு எந்த லட்சணத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது? எனக்கு வந்த தகவல்களின்படி, ஆரம்பத்தில் கரைபுரண்டோடிய உற்சாகத்திற்குப் பிறகு இப்போது ஹரிஜனங்கள் கோவில்களுக்குப் போவதை

நிறுத்திவிட்டார்கள்; இதேபோல், கோவில்களுக்குள் ஹரிஜனங்கள் அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் வழக்கமாக வழிபாடு செய்து வந்த மக்கள் இப்போது கோவில்களுக்கு வந்து வழிபடுவதையே அடியோடு நிறுத்தி விட்டார்கள். ஆலயப் பிரவேச நடவடிக்கை திருவாங்கூரில் உண்மையிலேயே வெற்றி பெற்றுள்ளதா என்பதை அரசாங்கம்தான் தெரிவிக்க வேண்டும்.''

சட்டமன்ற ஒப்புதலுக்காக மசோதா மூன்றாவது முறை கொண்டுவரப்பட்டபோது பலரையும் திடுக்கிட வைக்கும் ஓர் அறிக்கையை சர்.டி. பன்னீர் செல்வம் வெளியிட்டார். அவர் கூறியதாவது:

''மூத்த மகாராணிக்குத் தனிப்பட்ட முறையில் சொந்தமான கோவில்கள் இந்தப் பிரகடனத்திலிருந்து விலக்கப்பட்டன என்பது உண்மையா என அறிய விரும்புகிறேன். அவ்வாறு செய்யப்பட்டிருந்தால் அதற்குக் காரணம் என்ன? மேலும், மூத்த மகாராணியின் மகளது திருமணத்தின்போது கோவிலைத் தூய்மைப்படுத்தும் சடங்கை நடத்துவது அவசியமாயிற்று என்று என்னிடம் கூறப்பட்டது. கோவில்களைத் தூய்மைப்படுத்தும் இத்தகைய சடங்குகள் நடந்திருந்தால் ஆலயப் பிரவேசப் பிரகடனத்தின் கதி என்னவாயிற்று?''

இந்த விவரங்களை எல்லாம் பிரதமர் மறுக்கவில்லை; மறுக்கவும் முடியாது என்பது தெளிவு. இவை சர்ச்சைக்கிடமற்றவை என்றால், மலபார் ஆலயப் பிரவேசப் பிரகடனத்தை ஒரு மகத்தான ஆன்மீக சாசனம் என்று வீண்பெருமையடித்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

இந்த ஆலயப் பிரவேச இயக்கம் பற்றித் தாழ்த்தப்பட்ட இன மக்கள் சிலர் கொண்டுள்ள அச்சத்தைப் பற்றி இங்கு குறிப்பிடாமல் இந்த விவாதத்தை முடித்துக் கொள்வது முறையாக இருக்காது. இது முற்றிலும் ஒரு சமூக சீர்திருத்த இயக்கமா அல்லது ஏதேனும் நடைமுறைத் தந்திரமா?

அரசியல் துறையிலும், கல்வித் துறையிலும், ஊதியத் துறையிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் பெற்றுவரும் விசேட சலுகைகள் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களாக இருப்பதன் காரணமாக வழங்கப்படுபவையாகும். அவர்கள் தீண்டப்படாதோராக இல்லாது போனால் இந்த விசேட சலுகைகள் சம்பந்தமாக அவர்கள் முன்வைக்கும்

உரிமைக் கோரிக்கை உடனே மறுதலிக்கப்படும். தீண்டாமை ஒழிந்தாலும் அவர்கள் எப்போதும்போல் ஏழைகளாகவும் பிற்பட்டவர்களுமாகவே இருப்பர். ஆனால் தீண்டப்படாதோர் என்ற முறையில் அவர்களுக்குள்ள விசேட சலுகைகளை ஏழைகள், பின்தங்கியவர்கள் என்ற முறையில் அவர்கள் பெற முடியாது. அப்படியானால் இந்த ஆலயப் பிரவேச ஆர்வலர்களின், ஆதரவாளர்களின் திட்டம்தான் என்ன? இது கோவில்களைத் திறந்துவிடும் திட்டம் மட்டும்தானா அல்லது முடிவாக இந்தச் சலுகைகளைப் பறிக்கும் நோக்கம் கொண்ட திட்டமா? தாழ்த்தப்பட்டோர்களில் சிந்திக்கும் ஆற்றல் படைத்த பலரது மனத்தில் இந்த அச்சம் வேர்கொண்டிருக்கிறது. இந்த அச்சம் உண்மையான அச்சம் என்பதை திருவாங்கூரிலேயே நடைபெற்றுவரும் சம்பவங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அகில திருவாங்கூர் புலையர் சேரமர் ஐக்கிய மகாசங்கத்தின் தலைவர்களில் ஒருவர் 1938 நவம்பர் 24 ஆம் தேதியிட்ட கடிதம் ஒன்றில் எனக்குப் பின்வருமாறு எழுதுகிறார். அவர் எனக்கு எழுதிய கடிதத்தின் முழு வாசகத்தையும் கீழே தந்திருக்கிறேன் :

பெறுநர்
டாக்டர் அம்பேத்கர்,
பம்பாய்

முகாம் மைய நாடு, 24-11-1938
கொல்லம்

மதிப்பிற்குரிய ஐயா,

உங்களது மேலான ஆலோசனையைப் பெறுவதற்காகப் பின்கண்ட விவரங்களை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சமஸ்தானத்தைச் சேர்ந்த ஹரிஜன மக்கள் ஏற்றுவரும் எல்லாத் துன்ப துயரங்களையும் திட்டவட்டமான முறையில் தங்களிடம் தெரிவிப்பது எனது தலையாயக் கடமையாகக் கருதுகிறேன்.

1. மாட்சிமை தங்கிய மகாராஜா வெளியிட்ட ஆலயப் பிரவேசப் பிரகடனம் ஹரிஜனங்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்பதில் ஐயமில்லை. ஆனால் இந்த ஆலயப் பிரவேசத்தைத் தவிர்த்து இதர எல்லா சமூகக் கொடுமைகளுக்கும், அநீதிகளுக்கும் ஹரிஜனங்கள் ஆளாகி வருகிறார்கள். இந்தப் பிரகடனம் எங்களுக்கு மேற்கொண்டு சலுகைகள் அளிக்கப்படுவதற்கு ஒரு தடையாக இருந்து வருகிறது

என்றே கூறவேண்டும். ஹரிஜனங்களின் நிலையை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்வதில்லை.

2. இங்குள்ள 15 லட்சம் ஹரிஜனங்களில் மிகச் சிலர் பட்டதாரிகள், அரை டஜன் பேர் பட்ட மேற்படிப்புப் படித்தவர்கள், 50 பேர் பள்ளி இறுதிப் படிப்பைப் பூர்த்தி செய்தவர்கள், சுமார் 200 பேர் தாய்மொழிச் சான்று பெற்றவர்கள். அரசாங்கம் பொதுப் பணியாளர் ஆணையத்தை அமைத்திருந்த போதிலும் ஹரிஜனங்கள் நியமிக்கப் படுவது மிகவும் குறைவு. எல்லா நியமனங்களும் சவர்ணர்களுக்கு அளிக்கப்படுகின்றன. ஒரு ஹரிஜன் ஒன்று அல்லது இரண்டு வாரங் களுக்குத்தான் நியமிக்கப்படுகிறான். பொதுப் பணியாளர் விதிகளின் படி மனுதாரர் மீண்டு ஒரு வருடத்திற்குப் பிறகுதான் விண்ணப்பித்துக் கொள்ள முடியும். ஆனால் அதேசமயம் ஒரு சவர்ணர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு நியமிக்கப்படுகிறான். நியமனங் களின் பட்டியல் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது, நியமனங் களின் எண்ணிக்கை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின்படி காட்டப் பட்டிருக்கும்; ஆனால் எல்லா ஹரிஜனங்களின் ஒட்டுமொத்தப் பதவிக் காலமும் ஒரு சவர்ணரின் பதவி காலத்துக்கு இணையாக இருக்கும். இந்த மோசடியில் அதிகாரிகளுக்கும் பெரும் பங்குண்டு. இவ்வாறு பொதுப் பணியாளர்துறை சவர்ண்ர்களின் பொதுச் சொத்தாகி விட்டது. எந்த ஹரிஜனும் இதனால் பலன் அடைவதில்லை.

3. ஒவ்வொரு ஹரிஜனுக்கும் மூன்று ஏக்கர் நிலம் தரப்பட வேண்டும் என்று ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் மகாராஜா உத்தரவிட்டார், ஆனால் அதிகாரிகள் சவர்ணர்களாக இருப்பதால் இத்தகைய ஆணைகளை நிறைவேற்ற அவர்கள் எப்போதுமே விரும்பு வதில்லை. நகரங்களுக்குப் பக்கத்தில் மேய்ச்சலுக்காக பரந்த அளவில் நிலம் வழங்க அரசு தயாராக இருந்தும் ஹரிஜனங்களுக்கு ஒரு துண்டு நிலம் கூடக் கிடைக்கவில்லை. ஹரிஜனங்கள் இன்னமும் சவர்ணர் களின் வளாகங்களுக்குள்தான் வசித்து வருகின்றனர்; அங்கு எண்ணற்ற துன்ப துயரங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். ஏராளமான நிலம் 'ரிசர்வ்' நிலமாக அதாவது தனித்து ஒதுக்கி வைக்கப்பட்ட நிலமாக இருந்தும், அவற்றிலிருந்து தங்களுக்கு நிலம் வழங்கக் கோரும் ஹரிஜனங்களின் விண்ணப்பங்களுக்கு எந்த முக்கியத்துவமும் தரப்படுவதில்லை, அவற்றை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. பெரும்பான்மையான நிலங் களை சவர்ணர்களே கவர்ந்து கொள்கின்றனர்.

4. ஒவ்வோர் ஆண்டும் சட்டமன்ற உறுப்பினர் தேர்தலின்

போது, ஒவ்வொரு ஹரிஜன சமூகத்திற்கும் ஓர் உறுப்பினர் வீதம் சட்டமன்றத்திற்கு அரசாங்கம் சட்டமன்ற உறுப்பினர்களை நியமிக்கிறது. ஹரிஜனங்களுக்குள்ள தேவைகளையும் குறைகளையும் கோரிக்கைகளையும் ஆர்வ விருப்பங்களையும் முன்வைப்பதற்காக இந்த உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவர்கள் அரசாங்க இயந்திரத்தோடு இயந்திரமாகி, அதாவது சவர்ணர் அதிகாரிகளின் கைப்பொம்மைகளாகி அவர்களுக்குத்தான் ஆதாயம் தேடித் தருகின்றனர். இவ்வாறு ஹரிஜனங்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு எந்த வழியும் இல்லாமற் போகிறது.

5. திருவாங்கூரிலுள்ள எல்லா ஹரிஜனங்களும் வயல்களிலும் வளாகங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்களே ஆவர். அவர்கள் சவர்ணர்களின் ஏவலர்கள், வேலையாட்கள்; அவர்கள் மிருகங்களைப் போல் நடத்தப்படுகிறார்கள்; அவர்களை ஆதரிப்பதற்கு, அரவணைத்துக் கொள்வதற்கு, பேணுவதற்கு, பாதுகாப்பதற்கு யாரும் இல்லை. சமஸ்தானத்தின் பெரும்பாலான பகுதிகளில் ஒவ்வொரு ஹரிஜனுக்கும் நாள் ஒன்றுக்கு ஓரணாதான் கூலியாகத் தரப்படுகிறது. திருவாங்கூர் சமஸ்தானத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களும் சரி, அரசு அதிகாரிகளும் சரி எல்லோருமே சவணர்கள்தான்; தற்போது அவர்கள் பொறுப்பாட்சிக்காகப் போராடி வருகிறார்கள். அரசாங்கத்திலும் ஆலைகளிலும் தங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று தற்போது நாடெங்கும் ஹரிஜனங்கள் கோரி வருகிறார்கள். ஆனால் திருவாங்கூரில் நடைபெறும் கிளர்ச்சியே சவர்ணர்களின் கிளர்ச்சியாக இருக்கிறது; அரசு உத்தியோகங்களிலிருந்தும் தொழிற்சாலைகளிலிருந்தும் ஹரிஜனங் களை விரட்டியடிக்க அவர்கள் சதிசெய்து வருகிறார்கள். தங்களுக்கு அதிக ஊதியமும் கூடுதல் சலுகைகளும் தரப்பட வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள். ஆலைத் தொழிலாளர்களின் கிளர்ச்சியால் திருவாங்கூர் மக்கள் எரிச்சலடைந்திருக்கும்போது, ஹரிஜனத் தொழிலாளர்கள் விஷயத்தில் அவர்கள் அணுவளவும் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. ஹரிஜனத் தொழிலாளிக்கு மிகமிகக் குறைந்த ஊதியமே தரப்படுகிறது; அதேசமயம் ஆலைத் தொழிலாளர்களோ இவர்களைப் போல் மும்மடங்கு அதிக ஊதியம் பெறுகிறார்கள்.

6. பசி பட்டினியாலும் போதிய வாழ்க்கை வசதியின்மையாலும் உடலும் உள்ளமும் மெலிந்து நலிந்து போன ஹரிஜனக் குழந்தைகள் சரிவரப் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் தேர்வுகளில் தோல்வியைத் தழுவ வேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

இத்தகையதுதான் இந்த சமஸ்தானத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் அவலநிலை, துயரநிலை, வேதனை நிலை. இங்கு எங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்கான வழிவகைகள் என்ன? இந்த சந்தர்ப்பத்தில் தாங்கள் மனமுவந்து தங்களது மேலான ஆலோசனையைக் கூறி உதவ வேண்டுகிறேன். உங்கள் பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

உங்கள் உண்மையான,
**ஸ்ரீ நாராயணசுவாமி.**

ஆலயப்பிரவேசத் திட்டத்தின் நோக்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சட்டரீதியாக உள்ள உரிமைகளை முடிவாகப் பறிப்பதுதான் என்றால், அப்போது இந்த இயக்கம் ஆன்மீகமானதல்ல என்பது மட்டுமல்ல, மிகவும் விஷமத்தனமானதுமாகும் என்பதும் தெள்ளத் தெளிவு. எனவே, தாழ்த்தப்பட்ட மக்களை பின்வருமாறு எச்சரிப்பது நேர்மை உள்ளம் படைத்த அனைவரது உறுதியான கடமையாகும்: 'காந்தியைப் பற்றி உஷாராக இருங்கள்!''

இயல் 26

# தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஓர் எச்சரிக்கை

உலகில் எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் ஆட்சியதிகார அமைப்பை எதிர்த்து அடலேறுகள் போல் வீறுகொண்டெழுவது என்பது, அண்டம் அதிர, எண்திக்குகள் குலுங்க பேரெழுச்சி கொள்வது என்பது எப்போதுமே ஏழை மக்களின் வரலாற்றில் ஓர் இயல்பான, பிரிக்க முடியாத பகுதியாக இருந்து வந்திருப்பதைப் பார்க்கலாம். அவர்களது இந்த வீர வரலாற்றைப் பயிலும் மாணவன் அவர்களை ஆட்கொண்ட உன்னத எண்ணப் போக்கையும், வெற்றியில் அவர்களுக்கு இருந்த அசைக்க மறுக்க முடியாத நம்பிக்கையையும் கண்டு வியக்காமல் இருக்க முடியாது. இறைமை இயல் சகாப்தத்தில், சமுதாயப் படியில் அடிமட்டத்திலிருப்பவர்களுக்கு ஆன்மீக சக்திகள் முடிவாக இந்த உலகைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையுடன் ஏழை மக்கள் வாழ்ந்து வந்தார்கள். சமய சார்பற்ற சித்தாந்த சகாப்தத்திலோ, அதாவது வேறுவிதமாகக் கூறின், இன்றைய நவீன சகாப்தத்திலோ வரலாற்று ரீதியான உலோகாயத் சக்திகள் வலியோரின் வல்லமையைத் தாமாகவே பறித்து இறுதியில் எளியோருக்கு அவர்களுக்குரிய உன்னத இடத்தைப் பெற்றுத் தரும், வென்று தரும் என்ற ஆர்வ நம்பிக்கையில் வறியவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

இத்தகைய மனோதத்துவப் பகைப்புலனில் எண்ணிப் பார்க்கும் போது, இந்து சமூக அமைப்புக்கு எதிரான போராட்டக் களத்தின் நாயகர்கள் என்ற பாத்திரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி எண்ணிப் பார்க்கும்போது, அவர்கள் எதிர்பார்க்கும் பொற்காலத்தை, புதுமை யுகத்தை ஆன்மீக சக்திகளோ, வரலாற்றுச் சக்திகளோ கொண்டு வரப் போவதில்லை என்று அம்மக்கள் ஆழ்ந்து உணர்ந்திருப்பதை எவரும் மனமொப்பிப் பாராட்டாமல் இருக்கமுடியாது. இந்து சமூக அமைப்பு அடிசாய்ந்து மண்ணிலே விழவேண்டுமென்றால், அது இரண்டு நிலைமைகளில்தான் நிகழமுடியும் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். முதலாவதாக, அந்த அமைப்பு இடையறாத கடும் தாக்குதலுக்கு உள்ளாக வேண்டும்; அதன் மீது நெருப்புமழை பொழிய வேண்டும். இரண்டாவதாக, சிந்தனையிலும் செயலிலும் அவர்கள்

இந்துக்களிடமிருந்து சுதந்திரமானவர்களாக, வேறுபட்டவர்களாக இருந்தாலன்றி அதனை இடையறாத, நீடித்த தாக்குதலுக்கு உட்படுத்த முடியாது. இதனால்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் தனி வாக்காளர் தொகுதிகளும் தனிக் குடியேற்றங்களும் வேண்டுமென்று நெடுகிலும் வலியுறுத்தி வருகிறார்கள்.

ஆனால், மறுபுறம் இந்துக்கள் என்ன சொல்கிறார்கள்? தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் விமோசனத்திற்கு, விடுதலைக்கு இந்துக் களைச் சார்ந்திருக்கும்படி, நம்பியிருக்கும்படி அவர்கள் உபதேசம் செய்து வருகிறார்கள். அதுமட்டுமல்ல, பொதுக்கல்வி அறிவு பரவுவது இந்துக்களை நேர்மையாக, விவேகமாக நடந்து கொள்ளச் செய்யும் என்று தாழ்த்தப்பட்ட மக்களிடம் கூறப்படுகிறது. சீர்திருத்த வாதிகள் கச்சை கட்டிக் கொண்டு தீண்டாமைக்கு எதிராக விடாது தொடர்ந்து பிரசாரம் செய்வது இந்துக்களிடம் நிச்சயமாக ஒரு தார்மீக மாற்றத்தை உண்டுபண்ணும், அவர்களது மனச்சான்றைத் தட்டி யெழுப்பும் என்று தாழ்த்தப்பட்ட இனத்தவர்களிடம் எடுத்துரைக்கப் படுகிறது. ஆதலால் இந்துக்களின் நல்லெண்ணத்திலும், கடமை உணர்விலும் தீண்டப்படாதோர் நம்பிக்கை வைக்கவேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது. ஆனால் இந்த வறட்டுச் சிந்தாத்தத்தை கவைக்குவாத தத்துவத்தை எந்தத் தாழ்த்தப்பட்டோனுமே நம்பு வதில்லை. அவ்வாறு நம்புபவர்கள் எவரேனும் இருந்தால், அவர்கள் இந்துக்கள் சொல்லுவதற்கெல்லாம் தலையாட்டும் கபடவேடதாரி களாகத்தான் இருப்பார்கள். இந்துக்கள் வாரி இறைக்கும் துண்டுகளுக்கு நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டிருப்பவர்கள் இவர்கள்; தாழ்த்தப்பட்டோருக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் இந்துக்களின் கருணாகடாட்சத்தால் தாங்கள் நியமிக்கப்பட மாட்டோமா என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருப்பவர்கள் இவர்கள்! தாழ்த்தப் பட்டோரிடையே இங்குமங்குமாக முளைத்திருக்கும் இந்தப்பதர்கள், புல்லுருவிகள் எத்தகைய பச்சைத் துரோகம் செய்தேனும் தங்களது சுயநல நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளத் துடிக்கும் கொள்ளைக்கார மனம் படைத்தவர்கள்; அடுத்தவன் வீடு பற்றி எரியும்போது அதில் குளிர்காய நினைக்கும் கயவர்கள்!

எனினும் தாழ்த்தப்பட்ட மக்கள் எத்தகைய பொய்ப்பிரசாரத்தை யும் கேட்டு ஏமாறமாட்டார்கள்; மாய்மால வார்த்தைகளில் மயங்கிட மாட்டார்கள். எனவே, இது குறித்து இங்கு விரிவாக கருத்துக்கூற வேண்டிய அவசியம் இல்லை. எனினும் அதேசமயம் பிரசாரம் ஆடம்பர ஆர்ப்பாட்டமானதாக, மிகவும் கவர்ச்சிகரமானதாக இருப் பதால் தாழ்த்தப்பட்ட மக்களில் அத்தனை விழிப்புணர்ச்சி இல்லாத

வர்கள் வழிதவறிச்சென்று மாற்றார் விரித்திருக்கும் வலையில் விழக்கூடிய அபாயம் இருந்துவரவே செய்கிறது.

சமூக நீதியை நிலைநாட்டுவதற்குச் சமூக சிந்தனையாளர்கள் பொதுவாக இரண்டு செயற்பாடுகளில் நம்பிக்கைவைத்திருக்கிறார்கள்: ஒன்று விவேகம், மற்றொன்று மதம்.

விவேகத்தை ஆதரித்து நிற்கும் பகுத்தறிவுவாதி அறிவுத் திறத்தை மேம்படுத்தினால் அநீதியை ஒழித்துக்கட்டமுடியும் என்று நம்புகிறான். மத்தியக் காலத்தில் சமூக அநீதியும் மூடநம்பிக்கையும் பிரிக்கமுடியாதபடி பரஸ்பரம் பின்னிப்பிணைந்திருந்தன. எனவே, மூடநம்பிக்கைகளை ஒழித்துக்கட்டினால் அநீதி செத்து மடிந்துவிடும் என்று பகுத்தறிவாளர்கள் இயல்பாகவே கருதினார்கள். பலன்களும் இந்த நம்பிக்கையை ஊக்குவிப்பதாக இருந்தன. இன்று இது கல்வி யாளர்கள், தத்துவவாதிகள், மனோதத்துவ நிபுணர்கள், சமூக விஞ்ஞானிகள் போன்றோரின் ஒரு கோட்பாடாகவே ஆகிவிட்டது; சர்வஜனக் கல்வி, அச்சகங்கள் பத்திரிகைகளின் வளர்ச்சி போன்ற வற்றால் ஓர் லட்சிய சமுதாயம் மலரும் என்றும், இந்த சமுதாயத்தில் ஒவ்வொரு வரும் அறிவொளி பெற்றவர்களாக இருப்பதால், சமூக அநீதிக்கு இந்த சமுதாயத்தில் இடமில்லை என்றும் இவர்கள் கருது கிறார்கள்.

இந்திய வரலாறும் சரி, ஐரோப்பிய வரலாறும் சரி இந்தக் கோட்பாட்டை அப்படியே முழுக்க முழுக்க ஆதரிப்பதாகக் கூற முடியாது. ஐரோப்பாவில், பதினெட்டாம் நூற்றாண்டில் நிலவிய அநீதிக்கு ஆணிவேர்கள் என்று கருதப்பட்டுவந்த பழைய சம்பிரதாயங் களும் மூடநம்பிக்கைகளும் அழித்தொழிக்கப்பட்டுவிட்டன. அப்படி யிருந்தும் அங்கு சமூக அநீதி புதுவலிவுபெற்று மேன்மேலும் அதிகரித்து வரவே செய்கிறது; இங்கெங்கெனாதபடி எங்கெங்கும் கொட்ட மடித்து வரவே செய்கிறது. இந்தியாவையே எடுத்துக் கொள்வோம். இங்கு என்ன பார்க்கிறோம்? பிராமண சமுதாயம் முழுவதுமே ஆண், பெண், குழந்தைகள் அடங்கலாக கல்வி கற்றிருக் கிறது. ஆனால் எத்தனை பிராமணர்கள் தீண்டாமை குறித்துத் தங்கள் நம்பிக்கையிலிருந்து, கருத்திலிருந்து விடுபட்டிருக்கிறார்கள்? இவர் களில் எத்தனைபேர் தீண்டாமைக்கு எதிராக ஒரு தர்ம யுத்தம் நடத்த முன்வந்திருக்கிறார்கள்? சுருக்கமாகக் கூறினால், தாழ்த்தப்பட்ட மக்களின் லட்சியத்தைத் தங்கள் சொந்த லட்சியமாக வரித்துக் கொள்ள எத்தனை பேர் சித்தமாக இருக்கிறார்கள்? இந்த எண்ணிக்கை திகைக்க வைக்கிற அளவுக்கு அணுவினும் அணுவாகவே இருக்கும்.

சமூக நீதியை நிலைநாட்ட விவேகத்தால் ஏன் முடியவில்லை? ஒருவரது சுயநலத்துடன் முரண்படாதவரையில் விவேகம் தனது பணியைச் செய்கிறது. சுயநல சக்திகளுடன் மோத நேரிடும்போது அது தோல்வியடைகிறது. பல இந்துக்கள் தீண்டாமையில் தங்கள் சுய நலத்தைக் காண்கின்றனர். இந்த சுயநலம் சமூக மேம்பாட்டு அகம் பாவமாகவோ, கட்டாய உழைப்பு போன்ற பொருளாதாரச் சுரண்ட லாகவோ அல்லது மலிவான உழைப்பாகவோ வடிவெடுக்கலாம். எது எப்படியிருப்பினும் தீண்டாமையில் இந்துக்களின் சுயநலம் பொதிந் திருக்கிறது என்பது மட்டும் உண்மை. எனவே, விவேகத்தின் ஆணை களுக்கு சுயநலம் பணிந்து போகாதது முற்றிலும் இயல்பே. ஆதலால் விவேகத்தால் என்ன செய்யமுடியும் என்பதற்குச் சில வரம்புகள் உண்டு என்பதைத் தாழ்த்தப்பட்ட மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்; புரிந்து கொள்ள வேண்டும்.

மதம் மனிதனுள் பாய்ச்சும் உள்ளொளி ஒருவன் சுயநலத் திலேயே முழுக்க முழுக்க குறியாக இருப்பது பாவம் என்பதையும், தனது சக மனிதர்களிடம் நீதியுடனும் நேர்மையுடனும் நடந்துகொள்வது அவனுடைய கடமை என்பதையும் அவனை உணரும்படிச் செய்கிறது; இவ்வாறு, மதத்தின் செயற்திறனில் நம்பிக்கை கொண்ட சமய நெறியாளர்கள் கருதுகின்றனர். இதுதான் மதத்தின் பணி என்பதையும், அதில் அது ஓரளவு வெற்றிபெறவும் கூடும் என்பதையும் யாரும் மறுக்கவில்லை. ஆனால் மதத்தால் என்ன செய்ய இயலும் என்பதற்கு சில வரையறைகளும் உண்டு. **ஒரு சமூகத்திற்குள்** நீதியை நிலைநாட்ட மதம் உதவமுடியும். ஆனால் **பல்வேறு சமூகங்களுக்கு** இடையே நீதியை நிலைபெறச்செய்ய அதால் இயலாது. எது எப்படியிருப்பினும் அமெரிக்காவில் நீக்ரோக்களுக்கும் வெள்ளையர்களுக்கும் இடையே நீதியை உருவாக்க மதம் தவறிவிட்டது. அதேபோல் ஜெர்மனி யர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும், அவர்களுக்கும் ஏனைய தேசங்களுக்கும் இடையேயும் நீதியை நிலைகொள்ளச் செய்ய அது தவறிவிட்டது. நீதிக்காக மதம் விடுக்கும் அறைகூவலை விட தேசத்தின் அறைகூவலும், சமூகத்தின் அறைகூவலும் மிகவும் சக்தி வாய்ந்தவை என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மக்கள் இரண்டு விஷயங்களை மனத்தில் கொள்ளவேண்டும். முதலாவதாகச், சமூக நீதியை நிலைநாட்டும் பணியை இந்துமதம் செய்து முடிக்கும் என்று எதிர்பார்ப்பது வீண். இத்தகைய பணியை இஸ்லாமோ, கிறித்துவமோ, புத்தமதமோ வேண்டுமானால் நிறைவேற்றலாம். ஆனால், இந்து மதத்தால் அது சாத்தியமில்லை. ஏனென்றால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்

படும் அநீதியின், கொடுமையின், அக்கிரமத்தின், நேர்மையின்மையின் உருவகமாக அது காட்சியளிக்கிறது. நீதி எனும் உயிர்த் தத்துவத்தைப் போதிப்பது அதன் அமைப்புமுறைக்கே முரணானது. எனவே, அநீதியை ஒழித்துக்கட்டும் பணியை அது செய்யும் என்று எதிர் பார்ப்பது ஓர் அதியற்புதம் நிகழும் என்பதை எதிர்பார்ப்பதற்கு ஒப்பாகும். இரண்டாவதாக, இந்துமதம் செய்தற்குரிய பணி என்று இதனைக் கற்பனை செய்து கொண்டாலும்கூட இப்பணியை அது நிறைவேற்றுவது சாத்தியமல்ல. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இந்துக் களுக்கும் இடையே உள்ள இடைவெளி இந்துக்களும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைவிட மிக ஆழமானது, மிகப்பரந்தது, படுபாதளமானது. ஒரு சமூகத்தினுள் அல்லது தேசத்தினுள் மதம் எவ்வளவு செயற்திறன் படைத்ததாயினும், இந்தத் தடையரண்களைத் தகர்த்து அவற்றை ஒரே முழுமை யாக்குவதற்கு அது முற்றிலும் சக்தியற்றது.

விவேகம், மதம் போன்றவற்றில் மட்டுமன்றி, இந்துக்களில் சலுகை பெற்றவர்களின் முற்போக்கு எண்ணங்களிலும், அதே போன்று பாட்டாளி வர்க்கத்தின் சகோதரத்துவத்தினும் நம்பிக்கை வைக்கும்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கூறப்படுகிறது.

சலுகை பெற்ற வர்க்கங்களைப் பொறுத்தவரையில், ஓரளவு இரக்கஉள்ளம் கொண்ட வல்லோர்களாக இருக்க அவர்கள் இணங்கு வார்களேயன்றி, மற்றபடி வேறு எதற்கும் அவர்களை நம்புவது தவறு. அவர்களுக்கு அவர்களது சொந்த வர்க்க நலன்கள் உள்ளன; பொது நலன்களுக்காக அவர்கள் அவற்றை தியாகம் செய்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அதேசமயம் தங்களது வர்க்க நலன்களும் பொதுநலன்களும் ஒன்றெனக் கருதவும், தாங்கள் அனுபவித்து வரும் சலுகைகள் தங்களது பயனுள்ள, மதிப்பு வாய்ந்த பணிகளுக்காக சமுதாயம் வழங்கும் நன்கொடையே தவிர வேறல்ல என்று கற்பிதம் செய்து கொள்ளவும் அவர்கள் இடையறாது முயல்வார்கள். இந்துக்களுடனான மோதலில் இவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் மோசமான கூட்டங்களாகவே, சமயம் வரும்போது காலை வாரிவிடும் கூட்டாளிகளாகவே இருப்பார்கள்.

தாழ்த்தப்பட்ட இனத்தவரைப் பொறுத்தவரையில், இந்துக்களில் பாட்டாளி வர்க்கத்தினரிடமிருந்து உதவி எதிர்பார்ப்பதும் வீண் நம்பிக்கையாகும். இந்துப் பாட்டாளி வர்க்கத்துடன் ஒருமைப்பாடு கொள்ளும்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்டுகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்; மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளத்

தயாராக இல்லாத எந்த அனுகூலங்களையும் பாட்டாளி தனக்கு மட்டுமே விரும்பமாட்டான் என்ற ஊகத்தின் அடிப்படையில் அமைந்ததே இந்த வேண்டுகோள். இது உண்மைதானா? ஐரோப்பாவில் கூட பாட்டாளிகள், ஒரு சீரான வர்க்கமாக இல்லை. இது வர்க்க இயைபில் பிரதிபலிக்கக் காணலாம். பாட்டாளிகளே மேல்தட்டினர், கீழ்த்தட்டினர் என்று இரு வகைகளாக உள்ளனர். மேல்தட்டினர் சீர்திருத்தவாதிகளாகவும் கீழ்த்தட்டினர் புரட்சியாளர்களாகவும் காணப்படுகின்றனர். இதிலிருந்து பாட்டாளி வர்க்கத்தைப் பற்றிய ஊகம் சரியல்ல என்பது கண்கூடு. அதிலும் இந்தியாவைப் பொறுத்த வரையில் இந்த ஊகம் நிச்சயமாகப் பொய்யானது. ஆதலால் இந்துப் பாட்டளிகளுடன் கூட்டணி அமைத்துக்கொள்வதற்கு வாய்ப்பு மிகவும் குறைவு. பொருளாதார ரீதியிலும் அவர்களிடையே உடன்பாடு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறு அதிகமில்லை.

தாழ்த்தப்பட்ட மக்கள் எதன்பொருட்டுபாடுபடவேண்டும்? கல்வி வளர்ச்சிக்காகவும் உண்மைத் தகவல்களைப் பரப்புவதற்காகவும் அவர்கள் பாடுபடவேண்டும். சலுகைபெற்ற சமுதாயப்பிரிவினரின் அதிகாரம் என்பது பொதுமக்களிடையே திட்டமிட்டு, விடாது, ஓயாது பரப்பப்படும் அப்பட்டமான பொய்களையே ஆதார பீடமாக அடித் தளமாகக் கொண்டுள்ளது. இந்த அதிகாரம் முறைப்படி அமைந்த, முற்றிலும் செல்லத்தக்க அதிகாரம் என்று இந்தப் பொய்கள் நியாயப் படுத்தி விடாப்பிடியாகப் பிரசாரம் செய்து வரும்போது, அதனை எதிர்த்துப் போராடுவது சாத்தியமில்லை. பொய் எனும் அதன் பிரதான பாதுகாப்பு அரண் உடைத்து நொறுக்கப்பபடாதவரை எழுச்சி ஏற்பட முடியாது. எந்த ஓர் அநீதியும், அவதூறும், மோசடியும், ஒடுக்கு முறையும் எதிர்க்கப்படுவதற்கு முன்னர் இவற்றுக்கு ஆதார அடிப் படையாக, அஸ்திவாரமாக இருக்கும் பொய்யைத் தோலுரித்துக் காட்ட வேண்டும்; அதன் முகமூடியைக் கிழித்தெறிய வேண்டும்; அதன் வேடத்தைக் களைந்தெறிய வேண்டும். இத்தகைய பொய்கள் ஏன் கட்டவிழ்த்துவிடப்படுகின்றன என்பதைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். கல்வி அறிவின் மூலம்தான் இதனைச் சாதிக்க முடியும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் போராட வேண்டிய, பாடுபடவேண்டிய இரண்டாவது விஷயம் அதிகாரம். நலன்களைப் பொறுத்தவரையில் இந்துக்களுக்கும் தாழ்த்தப்பட்டோருக்குமிடையே உண்மையிலேயே பெருமளவில் முரண்பாடு நிலவுகிறது என்பதை மறந்துவிடக்கூடாது. விவேகமான அணுகுமுறை இந்த முரண்பாட்டை ஓரளவுக்கு மட்டுப்படுத்தக்கூடுமாயினும் இத்தகைய ஒரு முரண்பாட்டின் அவ சியத்தை அது ஒருபோதும் அகற்றாது. ஒருவர் மற்றவர்மீது ஆதிக்கம் செலுத்தும்படிச் செய்வது அதிகாரம்தான். அவ்வாறிருப்பதால்

அதிகாரத்தை ஒழித்துக்கட்ட அதிகாரம் தேவை. அதிகாரத்தை எவ்வாறு நெறிமுறையோடு பயன்படுத்துவது என்ற பிரச்சினை இருக்கலாம். ஆனால் ஒரு தரப்பில் அதிகாரம் இல்லாதபோது இன்னொரு தரப்பில் உள்ள அதிகாரத்தை ஒழிப்பது சாத்தியமல்ல என்பதில் எத்தகைய ஐயப்பாடும் இருக்கமுடியாது. அதிகாரம் என்கிறபோது அது பொருளாதார அதிகாரமாகவும் அரசியல் அதிகாரமாகவும் இருக்கலாம். ராணுவ அதிகாரம் இன்று ஓர் அதிகாரமல்ல. ஏனென்றால் அது சுதந்திரமான அதிகாரமல்ல. தொழிலாளி வர்க்கத்தின் பொருளாதார அதிகாரம் என்பது வேலை நிறுத்தத்தில் உள்ளார்ந்து பொதிந்துள்ள அதி காரமே ஆகும். தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியாக உள்ள தாழ்த்தப் பட்டோருக்கு வேறு எந்தப் பொருளாதார அதிகாரமும் இருக்க முடியாது. இப்போதுள்ள நிலைமையில், இந்த அதிகாரம் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாப்பதற்குப் போதுமானதாக இல்லை. அது சட்டத்தால் முடமாக்கப்பட்டிருக்கிறது; பல்வேறு வகையான தடைகள், மத்தியஸ்தங்கள், நடுவர் தீர்ப்புகள், ராணுவச் சட்டம், துருப்புகளைப் பயன்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கு உள்ளாகி இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்கள் வேலைநிறுத்தம் செய் வதற்கான அதிகாரம் மிகவும் தேவைக்குக் குறைவாகவே இருக்கிறது.

எனவே, கூடிய அளவுக்கு அரசியல் அதிகாரத்தைப் பெற வேண்டிய முழுக்கட்டாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் இன்று இருக்கின்றனர். சமூக, பொருளாதாரத் துறைகளில் போதிய அளவு அதிகாரம் பெற்றிராத நிலைமையில், தாழ்த்தப்பட்ட மக்கள் மிக அதிகமான அரசியல் அதிகாரத்தை ஒருபோதும் பெறஇயலாது. தாழ்த்தப்பட்ட இன மக்கள் எந்த அளவுக்கு அரசியல் அதிகாரத்தைப் பெற்றபோதிலும் இந்துக்கள் பெற்றிருக்கும் மிகப் பரந்த, விரிந்த சமூக, பொருளாதார, அரசியல் அதிகாரத்துடன் ஒப்படும்போது அது மிகச் சிறிய அளவே இருக்கும்.

இன்று இந்துக்களின் அரசியல் வாழ்க்கைத் தாழ்த்தப்பட்டோர் களின் சமூக, பொருளாதார நலன்களுக்கு நேரெதிரான சமூக, பொருளாதார நலன்களின் அடிப்படையில் அமைந்துள்ளது; எனவே, இத்தகைய நிலைமையில், தாழ்த்தப்பட்ட மக்களின் அரசியல் அதிகாரம் எவ்வளவு பரந்ததாக, விரிந்ததாக இருந்தாலும் அவர்கள் சட்டமன்றத்தில் பிரநிதித்துவம் பெறுவதற்கு இந்துக்களைச் சார்ந் திருக்க வேண்டியிருந்தால், அவர்கள் ஆதரவை நம்பியிருக்க வேண்டி யிருந்தால் அந்த அதிகாரத்தால் எந்தப் பயனும் இருக்காது என்பதைத் தாழ்த்தப்பட்ட மக்கள் அவசியம் நினைவிற் கொள்ள வேண்டும்.

□□□

# இயல் 27

# இந்துக்களிடமிருந்து விலகிச் செல்லுதல்

தங்களுடைய பிரச்சினை குறித்து சிந்திக்கும் திறன்பெற்ற தாழ்த்தப்பட்டவர்களில் மிகப்பெரும்பான்மையோர், தாழ்த்தப்பட்டவர்கள் பிரச்சினை தீர்க்கப்பட்ட வேண்டுமென்றால் இந்து மதத்தைக் கைவிட்டு வேறு ஏதாவொரு மதத்திற்கு மதமாற்றம் செய்து கொள்ள வேண்டும் என்று நம்புகிறார்கள். 1936 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதியன்று பம்பாய் நகரில் நடைபெற்ற மகர்களின் மாநாட்டில் இது குறித்து ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்த மாநாடு* மகர்களின் மாநாடு என்ற போதிலுங்கூட இந்தத் தீர்மானமானது இந்தியா முழுமையிலும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களில் மிகப்பெரும் பகுதியினருடைய ஆதரவைப் பெற்றதாகும். வேறெந்த தீர்மானமும் இத்தகையதொரு உத்வேகத்தை உருவாக்கியதில்லை. இந்து சமூகம் அதன் அடித்தளம் வரை உலுக்கப்பட்டது; இந்த முயற்சியினை மேற்கொண்ட தாழ்த்தப்பட்டவர்களுக்கெதிராக சாபங்கள், நிந்தனைகள், அச்சுறுத் தல்கள் அள்ளி வீசப்பட்டன.

தாழ்த்தப்பட்டவர்கள் மதமாற்றம் செய்வதை எதிர்ப்பவர்கள் நான்கு பிரதானஆட்சேபனைகளை கிளப்புகிறார்கள்:

1. மதமாற்றம் செய்வதன் மூலமாக தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்ன ஆதாயம் கிடைக்கப்போகிறது? மதமாற்றமானது தாழ்த்தப்பட்டவர்களின் அந்தஸ்தில் எந்த மாற்றத்தையும் செய்யப் போவதில்லை.
2. அனைத்து மதங்களும் உண்மையானவை, அனைத்து மதங்களும் நல்லவை. மதத்தை மாற்றுவது என்பது பயனற்றது.

---

★ இந்த மாநாடு மகர்களுக்காக மட்டுமே நடத்தப்பட்டது. ஒவ்வொரு சமூகவாரியாக அதன் உள்ளார்ந்த உணர்வுகளின் ஆழத்தைப் பரிசோதித்து ஒவ்வொரு சமூகத்தின் மன ஓட்டங்களை கணக்கிலெடுப்பதே இதன் நோக்கமாகும்.

---

*279 முதல் 342 வரையிலான பக்கங்கள் இந்தக் கையெழுத்துப் பிரதியில் காணப்படுகின்றன; இது 20 ஆவது இயலாக ''இந்துக்களிடமிருந்து விலகிச் செல்லுதல்'' என்று தலைப்பிடப்பட்டுள்ளது. இது மொத்தம் 64 பக்கங்களைக் கொண்டது.*

*- பதிப்பாசிரியர்.*

3. தாழ்த்தப்பட்டவர்கள் மதம் மாறுவது என்பது அதன் இயல்பில் அரசியல் தன்மை வாய்ந்ததாகும்.

4. தாழ்த்தப்பட்டவர்கள் மதம்மாறுவது உண்மையானதல்ல; ஏனென்றால் அது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

இந்த ஆட்சேபனைகள் அனைத்தும் சிறுபிள்ளைத்தனமானவை, வீணானவை, பயனற்றவை என்பதை நிலைநாட்டுவதற்கு நீண்டவிவாதம் ஏதும் தேவையில்லை.

கடைசியாகச் சொல்லப்பட்ட ஆட்சேபனையை முதலில் எடுத்துக்கொள்வோம். எவ்வித மத உள்நோக்கமும் இல்லாமலேயே மதமாற்றம் நடைபெற்றுள்ள சம்பவங்கள் வரலாற்றில் ஏராளமாகப் பொதிந்துள்ளன. கிளோவிசும் அவருடைய குடிமக்களும் கிறித்துவத்திற்கு மதமாறினார்களே, அதன் தன்மை என்ன? ஏதெல்லாம் பெர்டும் அவருடைய கெண்ட் குடிமக்களும் எவ்வாறு கிறித்துவர்களானார்கள்? புதிய சமயத்தை அவர்கள் ஏற்கும்படிச் செய்ததில் ஏதாவது மத உள்நோக்கம் இருந்ததா? மத்திய காலத்தில், கிறித்தவ மதத்தை நோக்கி நடைபெற்ற மதமாற்றங்களைக் குறித்து பேசும்பொழுது ரெவரண்ட் ரெய்செல் பின்வருமாறு கூறுகிறார்: ★

"ஐரோப்பிய தேசங்கள் ஒன்றன்பின் ஒன்றாக இந்த மதத்திற்கு மாறின; இந்நாடுகளின் மத்மாற்றமானது எப்பொழுதுமே மேலிருந்து தொடங்கியதாக இருந்தது, ஒருபோதும் கீழிருந்து இல்லை. கிளோவிஸ், பிஷப் ரெமிஜியல் கூறியதை ஏற்றார்; உடனே அவரைத் தொடர்ந்து 3 ஆயிரம் பிராங்கியர்கள் ஞானஸ்நானம் பெற்றனர். அகஸ்டைனின் மதப்பிரச்சாரத் தினால் ஏதெல்பெர்ட் ஈர்க்கப்பட்டார்; உடனே அந்த முன்னுதாரனத்தை அவருடைய கென்ட் குடிமக்களும் பின்பற்றினார். அவருடைய மகன் எட்பால்ட் கிறித்தவ மதத்தைத் தழுவியபோது கென்ட் குடிமக்களும் அவரோடு சேர்ந்து கிறித்தவ மதத்தைத் தழுவினார்கள். மன்னர் சிஜ்பெர்ட் மதமாற்றம் பெற்றதால் எஸ்ஸெக்ஸ் இறுதியில் வெல்லப்பட்டது; அவர், ஆஸ்வி என்ற மற்றொரு மன்னரின் தாக்கத்தினால் தன்னை மதம் மாற்றிக்கொண்டார். நார்த்தம்பர்லேண்ட் என்ற பகுதியானது அதன் மன்னர் எட்வின் மதமாற்றம் செய்து கொண்டதால் தற்காலிகமாக பெறப்பட்டது; ஆனால் எட்வின் இறந் ததும் விலகிச் சென்றுவிட்டது. மற்றொரு மன்னர் ஆஸ்வால்ட் அந்தப் பகுதியை இணைத்துக்கொண்டபோது, அது மீண்டும் கிறித்துவ மதத்தை

★ ரோமாபுரி கடல், பக்கங்கள் 143-45

ஏற்றுக்கொண்டது. ஜெர்மனியின் மதமாற்றம் சம்பந்தப்பட்டமட்டில் போனி பேஸ் என்ற பிஷப் அந்நாட்டின் இளவரசர்களான சார்லஸ் மார்டெல் மற்றும் பெபின் ஆகியோருடன் நெருக்கமான தொடர்பு கொண்டு பிரதான பங்காற்றினார். பெபின், வன்முறை மூலம் தவறாக கைப்பற்றியதை சாய்ஸென்ஸ் என்ற இடத்தின் கிறித்துவ திருச்சபை அங்கீகரித்தது; அதற்குப் பிரதி உபகாரமாக அவர் மதமாற்றத்திகு ஆதரவு தந்தார். டென்மார்க் நாடானது அதனுடைய மன்னர்களான ஹெரால்ட் கிராக், ஹெரால்ட் பிளாஸ்டண்ட் மற்றும் கன்யூட் ஆகியவர்கள் மதமாற்றம் செய்துகொண்டதால் அடையப்பெற்றது. ஸ்வீடன் நாடானது இரண்டு ஒலோப் மன்னர்களால் பெறப்பட்டது. ரஷ்யா அதன் முடிமன்னரான விளாதிமீர் மதமாற்றம் செய்து கொண்டதால் பெறப்பட்டது. அனைத்து இடங்களிலும் கிறித்துவ மதமானது முதலில் மன்னர்களையும், இளவரசர்களையும் ஈர்ப்பதையே தனது இலக்காகக் கொண்டிருந்தது; அனைத்து இடங்களிலும் பிஷப்பு களும், மடாலயங் களும் அதனுடைய ஒரே பிரதிநிதிகளாக விளங்கினர்.

இதுமட்டுமல்ல, ஒரு மன்னர் கிறித்துவசமயத்திற்கு ஈர்க்கப் பட்டதும் அவருடைய குடிமக்களைச் சகட்டுமேனிக்கு ஞானஸ்நானம் கொடுத்து கிறிஸ்தவ மதத்தில் சேர்ப்பதில் மத்தியகால கிறித்தவப் பிரசாரகர்களுக்கு எவ்வித இடையூறும் இருக்கவில்லை. கிளோவிஸின் மூன்று ஆயிரம் போர்வீரர்களும் தங்களுடைய மன்னரின் முன்னுதா ரணத்தைப் பின்பற்றினர்; அவர்களுக்கு உடனே புனிதச் சடங்கு செய்யப்பட்டது. ஏதெல்பெர்ட் இளவரசர் மதம்மாறிய பின் அவருடைய குடிமக்கள் எவ்வித தயாரிப்புமின்றி, எவ்வித கட்டளை யுமின்றி ஏராளமான எண்ணிக்கையில் மதமாற்றம் பெற்றனர். ஜெர்மானியரைப் பொறுத்தமட்டில் இதரர்களுடைய முன்னுதாரணத் தைப் பின்பற்று வதில் அவர்கள் வேகம் சற்றுக்குறைவாக இருந்தது. ரஷ்யாவில் விளாதிமிர் ஞானஸ்நானம் பெற்றபின், தாங்களும் ஞானஸ்நானம் பெறுவதற்காக மிகப்பெரும் எண்ணிக்கையில் மக்கள் திரண்டு விட்டனர். அதன் காரணமாக புனித மதச் சடங்கு என்பது ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கானோருக்கு செய்யப்பட வேண்டியிருந்தது.''

நிர்ப்பந்தம் அல்லது ஏமாற்றுதல் மூலமாக மதமாற்றம் நடைபெற்றுள்ளதையும் வரலாறு பதிவு செய்துள்ளது.

மதம் என்பது இன்று மூதாதையர் சொத்தின் ஒரு பகுதியாகிவிட்டது. வாரிசுரிமை போல அது தந்தையிடமிருந்து மகனுக்கு வந்துகொண்டிருக்கின்றது. இத்தகைய மதமாற்றங்களில்

என்ன உண்மைத் தன்மை இருக்க முடியும்? தாழ்த்தப்பட்டவர்களின் மதமாற்றம் நடைபெறுவதானால் அவர்கள் இணையவிருக்கும் மதத்தின் தன்மை, இதர பல்வேறு மதங்களின் நல்ல அம்சங்கள் முதலானவை யாவும் முழுமையாக ஆராய்ந்தபின்னரே நடைபெறும். அத்தகைய மதமாற்றம் உண்மையான மதமாற்றமில்லை என்று எவ்வாறு கூறமுடியும்? மறுபுறத்தில், அது, வரலாற்றில் முதலாவது உண்மையான மதமாற்றமாகவும் இருக்கும். ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களுடைய மதமாற்றத்தின் உண்மைத்தன்மையை எவரொருவரும் ஏன் சந்தேகிக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்வது சிரமமாக உள்ளது.

மூன்றாவது ஆட்சேபனையானது, ஆழ்ந்து ஆராயாது தெரிவிக்கப் படும் ஆட்சேபனையாகும். மதமாற்றம் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன அரசியல் ஆதாயம் அதிகரிக்கப்போகிறது என்பதை யாரும் விளக்கவில்லை. ஏதாவது அரசியல் ஆதாயம் இருக்குமானால் அது மதமாற்றத்திற்கான நேரடித்தூண்டுதல் என்று யாரும் நிரூபிக்கவில்லை. மதமாற்றத்தை எதிர்ப்பவர்கள் ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ளவில்லை; அதாவது மதமாற்றத்திற்கான நேரடித்தூண்டல் மூலம் கிடைக்கும் ஆதாயத்திற்கும், மதம் மாறுவதால் தற்செயலாகக் கிட்டும் பலனுக்குமுள்ள வித்தியாசத்தை அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை. இவ்விரண்டுக்கும் இடையே மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. மதம்மாறுவது என்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு அரசியல் ஆதாயம் கிடைப்பதில் போய் முடியலாம். ஆனால் இம்மாதிரியான ஆதாயம் மதம் மாறுவதற்கான நேரடித்தூண்டுதலாக அமையும்போதுதான் அது ஒழுங்கீனமானது, நெறியற்றது எனக் கண்டிக்கப்படமுடியும். ஆகையால், தாழ்த்தப்பட்டவர்கள் மதம் மாறவிரும்புவது அரசியல் ஆதாயத்திற்குத்தான் வேறு எதற்காகவும் அல்ல என்று அதை எதிர்ப்பவர்கள் நிரூபித்தாலொழிய அவர்களுடைய குற்றச்சாட்டு ஆதாரமற்றதாகும். அரசியல் ஆதாயம் கிட்டுவது ஒரு தற்செயலான நிகழ்ச்சி என்றாகும்போது, மதம் மாறுவதில் எந்த ஒழுக்கக் கேடும் இல்லை. எனினும் உண்மை என்னவென்றால் மதமாற்றம் என்பது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வித புதிய அரசியல் ஆதாயத்தையும் அளிக்கமுடியாது என்பதேயாகும். இந்தியாவின் அரசியலமைப்புச்சட்டத்தின்படி ஒவ்வொரு மதவழிப்பட்ட சமூகமும் தனக்கே உரிய அரசியல் பாதுகாப்புரிமைகளைப் பெற உரிமை பெற்றுள்ளது. தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களது இன்றைய நிலைமையின் காரணமாக முஸ்லீம்களும், கிறித்தவர்களும் அனுபவிக்கும் அரசியல் உரிமைகள் போன்றவற்றை அனுபவித்து வருகின்றனர். தங்களது சமய நம்பிக்கைகளை அவர்கள் மாற்றிக்கொண்டால், அந்த

மாற்றமானது இதுவரை இல்லாத எந்தவொரு அரசியல் உரிமைகளையும் அவர்களுக்கு பெற்றுத்தரப்போவதில்லை. அவர்கள் மதம் மாறவில்லையென்றால், ஏற்கனவே பெற்றிருக்கும் அரசியல் உரிமைகளை அவர்கள் தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளமுடியும். ஆதலால் அரசியல் ஆதாயத்திற்கும் மதமாற்றத்திற்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. இந்தக் குற்றச்சாட்டானது உண்மையைப் புரிந்து கொள்ளாமல் வீசப்பட்ட மோசமான குற்றச்சாட்டாகும்.

இரண்டாவது ஆட்சேபனையானது அனைத்து மதங்களும் ஒரே விஷயத்தையே போதிக்கின்றன என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தக் கோட்பாட்டிலிருந்து ஒரு முடிவுக்கு வரப்படுகிறது: அதாவது அனைத்து மதங்களும் ஒரே விஷயத்தைப் போதிப்பதால் ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்குச் செல்ல விரும்புவதற்கு எவ்விதக் காரணமும் கிடையாது என்று வாதிக்கப் படுகிறது. வாழ்வின் பொருள் என்பது ''நல்லதை''க் கடைப்பிடிப் பதில்தான் அடங்கியுள்ளது என்று அனைத்து மதங்களும் கருதுவதை ஏற்றுக்கொள்ளலாம். இந்த அம்சம் வரை இந்தக்கோட்பாட்டுக்கு நம்பகத் தன்மையுண்டு என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் இந்தக்கோட்பாடு இதற்கு அப்பாலும் சென்று, இந்தக்காரணத் தினால் ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்குச் செல்ல விரும்பு வதற்குக் காரணம் இல்லை என்று அழுத்தமாகக் கூறும் பொழுது அது தவறான கோட்பாடு ஆகிவிடுகின்றது.

வாழ்வின் பொருள் என்பது நல்லதைக் கடைப்பிடிப்பதுதான் என்று போதிக்கும்பொழுது அனைத்து மதங்களும் ஒரே மாதிரியாகத் தோன்றும். ஆனால், ''நல்லது என்பது எது'' என்ற கேள்விக்கு விடையளிக்கும்பொழுதுதான் மதங்கள் ஒரே மாதிரியான பதிலை அளிப்பதில்லை. இதில் அவைகள் நிச்சயமாக மாறுபடுகின்றன. சகோதரத்துவம்தான் நல்லது என்று ஒரு மதம் கருதுகின்றது; மற்றொரு மதமோ சாதியும் தீண்டாமையும் நல்லவை என்று கூறுகின்றது.

> மற்றொரு அம்சத்திலும் அனைத்து மதங்களும் ஒரே மாதிரியாக இல்லை. நல்லது எது என்பதை மதம் விளக்கமுடியும் என்பதோடு 'நல்லதை' மேலும் மேம்பாடடையச் செய்து பரப்புவதற்கான இயக்கு சக்தியாகவும் மதம் உள்ளது. நல்லது என்பதை மேலும் வளர்த்து விரிவுபடுத்துவதற்காக தாம் சொல்லக்கூடிய வழிகள் மற்றும் முறைகள் குறித்து அனைத்து மதங்களும் ஒன்றுபட்ட கருத்து கொண்டிருக்கின்றனவா? பேராசிரியர் டியலே,* சுட்டிக் காட்டுவது போல்,

★ கிரௌலியின் மேற்கோள், ''வாழ்க்கை விருட்சம்'', பக்கம் 5.

''மதம் என்பது மனித குல வரலாற்றில் வலிமைமிக்க இயக்கு சக்திகளில் ஒன்றாகும்; அது நாடுகளை உருவாக்கியிருக்கிறது; அதேபோன்று துண்டுதுண்டாக்கியும் இருக்கிறது; சாம்ராஜ்யங் களை ஒன்றுபடுத்தியும் இருக்கிறது; சின்னாபின்னாமாக்கியும் இருக்கிறது; சொல்லொண்ணா அட்டூழியங்களை, காட்டு மிராண்டித்தனமான செயல்களை, மிகவும் மோசமான பழக்க வழக்கங்களை அனுமதித்துள்ளது; அதேசமயம் வீரச்செயல்கள், தன்னலம் துறப்பு மற்றும் பக்தி போன்ற மிகவும் போற்றத்தக்க நடவடிக்கைகளுக்கும் ஆதர்சமூட்டியுள்ளது; கொடூரமான யுத்தங்களுக்கும், எழுச்சிகளுக்கும், துன்புறுத்தல்களுக்கும் காரணமாக இருந்துள்ளது; அதே வேளையில் நாடுகளுக்குச் சுதந்திரத்தையும் நல்வாழ்வையும் அமைதியையும் பெற்றுத் தந்துள்ளது. ஒரு சமயத்தில் கொடுங்கோன்மைக்கு பச்சைக் கொடி காட்டிவந்துள்ளது; மறுசமயம் கொடுங்கோன்மையின் விலங்கு களை உடைத்துள்ளது. தற்பொழுது ஒரு புதிய மற்றும் அற்புத மான நாகரிகத்தை உருவாக்கிப் பாதுகாக்க விரும்புகிறது; முன்பு அது முன்னேற்றம், விஞ்ஞானம் மற்றும் கலை என்பனவற்றின் கடுமையான விரோதியாக இருந்தது.''

இத்தகைய ஊசலாட்டங்கள் தவிர, நல்லது என்று தாம் நினைப்பவற்றை மேலும் வளரச் செய்வதற்கான வழிமுறைகள் குறித்தும் மதங்களிடையே கருத்து வித்தியாசங்கள் உள்ளன. வன்முறையை வலியுறுத்தக்கூடிய மதங்கள் இல்லையா? அகிம்சையை வலியுறுத்தக்கூடிய மதங்கள் இல்லையா? இந்த அம்சங்களை எல்லாம் வைத்துப் பார்க்கும்பொழுது அனைத்து மதங்களும் ஒரே மாதிரியானவை என்றும், ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்குப் போக விரும்புவதற்கு எவ்விதக் காரணமும் இல்லையென்றும் எவ்விதம் கூறமுடியும்?

இரண்டாவது ஆட்சேபனையைக் கிளப்புவதன் மூலம் இந்துவானவர், இந்துமதக் கோட்பாடுகளின் தகுதிகள் எவ்வாறானவை என்று பரிசீலிப்பதை தவிர்க்கவே முயற்சி செய்கிறார். மதம் மாறுவது சம்பந்தமான கருத்துமோதலில், இந்து கோட்பாடுகளில் என்ன தவறு இருக்கின்றது என்று கூறும்படி கேட்டுத் தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சவால் விடுவதற்கு இந்துவிற்கும் துணிச்சல் இல்லை.

இந்து எனப்படுபவர் மதங்களை ஒப்புநோக்கிப் பார்க்கும் விஞ்ஞான அறிவின்கீழ் தஞ்சம் புகவே செய்கிறார். மதங்களை

ஒப்புநோக்கிப்பார்க்கும் விஞ்ஞானம் என்பது திருத்தூதுவர்களால் வெளிப்படுத்தப்பட்ட மதங்கள் என்பனவற்றின் அகந்தையான கூற்றுக்களை உடைத்தெறிந்துவிட்டது; திருத்தூதுவர்களால் வெளிப் படுத்தப்பட்ட தங்கள் மதங்கள் மட்டுமே உண்மையானவை என்றும், அவ்வாறு திருத்தூதுவர்களால் வெளிப்படுத்தப்படாத இதர மதங்கள் அனைத்தும் பொய்யானவை என்றும் அவை உரிமை கொண்டாடுவதை அது தகர்தெறிந்துவிட்டது. ஒரு உண்மையான மதத்தைப் போலியான மதத்திலிருந்துப் பிரித்துப் பார்க்கத் திருத்தூதுவர்களால் வெளிப் படுத்தப்பட்ட மதத்தைக் கொண்டுதான் தீர்மானிக்க வேண்டுமென்பது மிகவும் ஒருதலைபட்சமானது மிகவும் தான்தோன்றித்தனமானது என்பதைக் கூறியதன் மூலம் மதங்களை ஒப்புநோக்கிப் பார்க்கும் விஞ்ஞானம், மதத்தின் லட்சியத்திற்கு ஒருமகத்தான சேவை புரிந் துள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால் அந்த விஞ்ஞானமானது அனைத்து மதங்களும் நல்லவைதான் என்றும், அவற்றை ஒன்றுக் கெதிராக மற்றொன்றை வேறுபடுத்திக் காண்பதில் பயன் இல்லை என்றும் கூறுவதன் மூலம் தனது நற்பெயருக்கு அது இழுக்கு தேடிக் கொண்டுவிட்டது.

முதலாவது சொல்லப்பட்ட ஆட்சேபனை மட்டுமே மிகுந்த கவனத்துடன் ஆராயப்பட வேண்டிய தகுதியைப் பெறுகின்ற ஒரே ஆட்சேபனையாகும். இந்த ஆட்சேபனையானது, மதம் என்பது மனிதனுக்கும் கடவுளுக்குமிடையிலான முற்றிலும் தனிப்பட்ட பிரச்சினை என்ற எண்ணத்திலிருந்து தொடங்குகிறது. அது இயற்கைக் கும் அப்பாற்பட்டது. சமூகத்துடன் அதற்கு எவ்விதம சம்பந்தமும் கிடையாது. இந்த வாதமானது ஐயத்திற்கிடமின்றி அறிவுப்பூர்வமான தாகும். ஆனால் அதனுடைய அடித்தளங்கள் முற்றிலும் தவறானவை. எவ்வாறாயினும் அது மதத்தைக் குறித்த ஒருதலைப்பட்சமான பார்வையாகும் என்பதுடன் அது மதத்தின் முற்றிலும் வரலாற்றுப்பூர்வ அம்சங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது; மதத்தின் அடிப்படையான அம்சங்களை ஆதரமாகக் கொண்டிருக்கவில்லை என்பது தெளிவு.

மதத்தின் செயல்பாட்டையும், நோக்கங்களையும் புரிந்து கொள்ளவேண்டுமென்றால் இறையியலிலிருந்து மதத்தைப் பிரிக்க வேண்டியது அவசியமாகும். மதத்தின் முதன்மையான அம்சங்கள் எனப்படுபவை அதன் வழிமுறைகள், நடைமுறைகள், அனுஷ் டானங்கள், ஆசாரங்கள், சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள் ஆகியவையாகும். இறையியல் என்பது இரண்டாம்பட்சமானது. அதனுடைய இலக்கு என்பது அவைகளை மதத்தோடு இணைத்தல்

என்பதாகும். இதுபற்றி பேராசிரியர் ராபர்ட்சன் ஸ்மித் * பின்வருமாறு கூறுகிறார்.

''சடங்குகள் மற்றும் ஆசார அனுஷ்டானங்கள் என்பவை குறித்துத் திட்டவட்டமாகச் சொல்வதென்றால் அவை பண்டைக்கால மதங்களின் ஒட்டுமொத்த சாரமாகும். பண்டைக்காலத்தில் மதம் என்பது நடைமுறை அனுஷ்டானத்துடன் கூடிய நம்பிக்கை என்ற ஒருமுறையாக இல்லை; அது திட்டவட்டமான பாரம்பரிய நடைமுறைகளைக் கொண்ட அமைப்பாகவே இருந்தது; சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் அதற்குக் கட்டுப்பட்டிருந்தனர். தங்களுடைய செயலுக்கு எந்தவொரு காரணமுமின்றி சில காரியங்களைச் செய்ய மனிதர்கள் சம்மதிப்பார்களேயானால் அவர்கள் மனிதர்களே அல்ல; ஆனால், பண்டைக்கால மதத்தில் முதலில் காரணம் என்பது ஒரு கோட்பாடாக உருவாக்கப்பட்டு நடைமுறையில் வெளிப்படுத்தப்படவில்லை; மாறாக நடைமுறை என்பது கோட்பாட்டுக் கொள்கை உருவாவதற்கு முன்பே வந்துவிட்டது.''

மதம் என்பது இயற்கைக்கு அப்பாற்பட்டது என்று நினைக்காதிருப்பதும் அதேபோன்று அவசியமாகிறது. மதத்தின் பிரதான உள்ளடக்கம் சமூகரீதியானது என்ற அம்சத்தைக் காணத்தவறுவது மதத்தை அர்த்தமற்றதாக்கி விடுகிறது. காட்டுமிராண்டி சமுதாயமானது வாழ்க்கையையும், அதைக் காப்பதையும் குறித்தே அக்கறை கொண்டிருந்தது; இத்தகைய வாழ்க்கை வளர்ச்சிப் போக்குகள் தாம் காட்டுமிராண்டி சமுதாயத்தில் மதத்தினுடைய உள்ளடக்கமாகவும், ஆதாரமாகவும் இருந்தன. வாழ்க்கையையும், அதைக் காப்பதற்குமான அக்கறை காட்டுமிராண்டி சமுதாயத்திற்கு மிக அதிகமாக இருந்தது; அந்தச் சமுதாயமானது, அவற்றை, அதனுடைய மதத்திற்கான அடித்தளமாகவே கொண்டது. காட்டுமிராண்டி சமுதாயத்தினரின் மதத்தில் வாழ்க்கை வளர்ச்சிப் போக்குகள் என்பவை பிரதானமாக விருந்தன; அவர்களைப்பாதித்த ஒவ்வொன்றும் அதனுடைய மதத்தின் பகுதியாகியது. காட்டுமிராண்டி சமுதாயத்தில் வினைமுறைச்சடங்குகள் என்பவை பிறப்பு, முழுவளர்ச்சிப் பருவம் எய்துதல், பூப்பினமடைதல், திருமணம், நோய் மரணம் மற்றும் யுத்தம் போன்றவற்றுடன் மட்டுமே சம்பந்தப்பட்டிருக்கவில்லை; அது உணவுடனும் சம்பந்தப்பட்டிருந்தது.

* செமிட்டிக் இனத்தவரின் 'சமயம்', பக்கம்

மேய்ச்சல் நில மக்களிடையே ஆட்டுமந்தையும், மாட்டு மந்தையும் புனிதமானவையாக இருந்தன. விவசாய மக்களிடையே விதைப்பு நேரமும், அறுவடையும் சடங்குகளோடு நடத்தப்பட்டன; இந்தச்சடங்குகள் பயிர்களின் வளர்ச்சி மற்றும் அவற்றைப் பாதுகாப்பது குறித்ததோடு சம்பந்தப்பட்டிருந்தன. அதேபோன்று வறட்சி, பூச்சி களினால் ஏற்படும் நாசம் மற்றுமிதர விநோதமான வழக்கத்திற்கு மாறான இயற்கை தோற்றப் போக்குகள் ஏற்படும் நேரத்திலும் இத்தகைய சடங்குகள் நடத்தப்பட்டன. பேராசிரியர் கிரௌலி குறிப் பிட்டதைப் போல காட்டுமிராண்டி கால மக்களின் மதம் என்பது ஆரம்பத்திலும், முடிவிலும் வாழ்வைப் புனிதப்படுத்துவது என்பதில் உறுதியாக யிருந்தது.

ஆகையால், வாழ்க்கை என்பதிலும் வாழ்க்கையைப் பாதுகாப்பது என்பதிலும்தான் காட்டுமிராண்டிக் கால மக்களின் மதம் என்பது அடங்கியிருந்தது. காட்டு மிராண்டிகால மக்களின் மதத்தைப் பற்றிய உண்மை என்னவோ அதுவே அனைத்து மதங்களுக்கும் அவை எங்கெங்கு இருந்தாலும் பொருந்தும்; காரணம் என்னவென்றால் வாழ்க்கையையும் அதைப் பாதுகாப்பதும் என்பதுதான் மதத்தின் சாராம்சமாக இருந்தது. தற்கால சமுதாயத்தில் இறையியல் பண்படுத்தப்பட்டதன் காரணமாக மதத்தின் சாராம்சம் என்பது பார்வையிலிருந்து மறைக்கப்பட்டுள்ளதோடு சொல்லப் போனால் மறக்கப்பட்டும்விட்டது. ஆனால் வாழ்க்கை என்பதும் அதைப் பாதுகாப்பது என்பதும் இன்றைய சமூகத்திலும் கூட மதத்தின் சாராம்சமாக விளங்குகிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இது பேராசிரியர் கிரௌலியால் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளது; இன்றைய சமூகத்தில் மனிதனுடைய சமய வாழ்க்கை என்பது குறித்துப் பேசும்பொழுது அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

“மனிதனுடைய மதம் என்பது அவனுடைய தொழில் நேரத்தி லேயோ அல்லது சமூக வாழ்க்கை நேரத்திலேயோ நுழைவதில்லை; அவனுடைய விஞ்ஞானப்பணியிலோ அல்லது கலைநுணுக்கப் பணியிலோ குறிக்கிடுவதில்லை; நடைமுறையில், மதத்திற்காகச் செய்யவேண்டியதனைத்தும் வாரத்தில் ஒரு நாளில் செய்யப்பட்டு விடுகின்றன; அந்நாளில் இதர சாதாரண லௌகீக விஷயங்களில் அவன் ஈடுபடுவதில்லை. உண்மையில், அவனுடைய வாழ்க்கை என்பது இரண்டு பகுதிகளாக உள்ளது; மதம் சம்பந்தப்பட்ட பகுதி இதில் மகத்தானது. மேலெழுந்த வாரியாகச் சொல்வதென்றால் ஞாயிற்றுக்கிழமை வழிபாடென்பதன் சாராம்ச மானது வாழ்வுமற்றும்

மரணம் குறித்த இறுதியான பிரச்சினைகள் பற்றி ஆழமாக சிந்திப்ப தாகும்; இதனோடு சேர்த்து பிரார்த்தனை செய்யும் வழக்கம், உணவருந்தும்பொழுது கடவுளுக்கு நன்றிகூறுவது, பிறப்பு இறப்பு, உயிர் வாழ்தல், திருமணம் போன்றவை மதத்தினால் அங்கீகரிக்கப் பட்டவை என்ற உள்மன உணர்வு, அதேசமயத்தில் வர்த்தகமும், மகிழ்ச்சியும் புனிதமானதாக இருக்கக்கூடும், ஆனால் அது உருவகத் தோடு சொல்வதற்காகவோ அல்லது மத உணர்வுகள் மேலிட்ட தாலோ இருக்கும்.''

மதத்தின் தோற்றுவாய் மற்றும் வரலாறு குறித்து ஆராயும் மாணவர்கள், காட்டுமிராண்டி சமுதாயம் குறித்த தங்கள் ஆய்வைத் தொடங்கும்பொழுது அம்மக்களும் மந்திர தந்திரஜாலம், குலமரபுச் சின்னங்கள், அவற்றோடு சேர்த்து காட்டுமிராண்டிகால சமூகத்தில் காணப்படும் சடங்குகள் மற்றும் அனுஷ்டானங்கள் போன்றவற்றில் மூழ்கிவிடுகின்றார்கள்; அவர்கள், காட்டுமிராண்டிகளின் சமூக வளர்ச்சிப் போக்கை மதத்தின் முதன்மையான உள்ளடக்கமாகக் காணத்தவறுகிறார்கள் என்பது மட்டுமல்ல, மந்திரம் தந்திரம் மற்றும் இதர அமானுஷ்ய நிகழ்ச்சிப் போக்குகள் போன்றவற்றில் பணிகளை உணர்ந்து கொள்ளவும் தவறிவிடுகிறார்கள். இது ஒரு மிகப்பெரும் தவறாகும் என்பதுடன் மதத்தில் அக்கறை கொண்டுள்ளவர்களை மிகவும் பாதிக்கும். ஏனென்றால்,பெரும்பாலான மக்களிடையே இன்று மதத்தைக்* குறித்து தவறான கருத்து ஆழமாகியிருப்பதற்கு இது காரண மாகிறது. மதம் என்பது மாயாஜாலத்திலிருந்து தோன்றியது அல்லது மாயாஜாலத்தின் பொருட்டு மாயாஜாலத்திலேயே அது அக்கறை கொண்டுள்ளது என்று கருதுவதைப் போன்ற பெரியதவறு வேறெதுவும் இருக்கமுடியாது. காட்டுமிராண்டி சமுதாயம் மாயாஜாலத்தைக் கடைப்பிடிக்கிறது, அமானுஷ்ய சக்தி என்பதில் நம்பிக்கை வைக்கின்றது, குலமரபுச்சின்னங்களை வணங்குகிறது என்பது உண்மையே. ஆனால் இவைகள்தாம் மதம் என்பதில் உள்ளடங்கியுள்ளன என்றோ அல்லது மதத்தின் ஆதாரமாக அமைந்துள்ளன என்றோ எண்ணுவது தவறான தாகும். அத்தகைய கண்ணோட்டத்தைக் கொள்வதென்பது தற்செயலான ஒன்றை கோட்பாடு என்ற நிலைக்கு உயர்த்துவதாகும். காட்டுமிராண்டி மதத்தின் பிரதான அம்சமானது வாழ்க்கை, மரணம், பிறப்பு, திருமணம் போன்ற மனித வாழ்வின் அடிப்படை அம்சங்களாகும். மந்திர தந்திரம், அமானுஷ்ய சக்தி, குலமரபுச்சின்னம் போன்றவை இறுதியானவை அல்ல. அவை வழிமுறை மட்டுமே. வாழ்க்கை, வாழ்க்கையைப் பாதுகாப்பது என்பவை மட்டுமே முடிவானவையாகும். காட்டு

★ இங்கு கையாளப்பட்டிருக்கும் மதம் சொல் கையெழுத்துப் பிரதியில் இல்லை.

மிராண்டி சமுதாயமானது மந்திர தந்திரம், அமானுஷ்யசக்தி போன்ற வற்றை கடைப்பிடித்தது அதனுடைய நலன்பொருட்டு செய்யப்பட்ட தல்ல, ஆனால் வாழ்வைப்பாதுகாக்கவும், தீயசக்திகள், வாழ்விற்கு தீங்கிழைத்துவிடாமல் அவற்றை விரட்டுவதற்காகவும்தான். அறுவடை, பஞ்சம் போன்றவற்றைத் தொடர்ந்து மதச்சடங்குகள் போன்றவை நடத்தப்படுவது ஏன்? காட்டுமிராண்டிக்கு தந்திரம், அமானுஷ்யசக்தி, குலமரபுச்சின்னங்கள் ஏன் முக்கியத்துவம் வாய்ந்த தாக இருக்கின்றன? அவை அனைத்தும் வாழ்க்கையைப் பாதுகாப்பதை பாதிக்கின்றன என்பதுவே ஒரே விடையாகும். வாழ்க்கைப்போக்கும் அதைப் பாதுகாப்பது என்பதுமே பிரதான நோக்கமாக அமைகின்றன. வாழ்வு என்பதும் அதைப் பாதுகாப்பது என்பதும்தான் காட்டுமிராண்டி சமூகத்திலிருந்த மதத்தின் பிரதான அம்சமும், மையக்கருத்துமாகும். மந்திரதந்திரம் இருந்த இடத்தை இன்று கடவுள் எடுத்துக்கொண்டதால் அது, மதத்தில் கடவுளுக்குள்ள இடமானது வாழ்வைப் பாதுகாப் பதற்கானவழி என்ற அம்சத்தையும், மதத்தின் குறிக்கோள் மற்றும் அதற்காகவே அர்ப்பணித்துக்கொள்வது என்ற அம்சத்தையும் மாற்றி விடாது. மதத்தை தனிநபருடைய தனிப்பட்ட விஷயம் என்றோ, தனிநபர்மட்டுமே சம்பந்தப்பட்டதென்றோ கருதுவது தவறானதாகும் என்ற அம்சத்தைக் குறித்து கவனத்தை ஈர்ப்பது அவசியம்; முன் சொன்ன விவாதங்களும் இதற்கு முழுஆதரவு அளிக்கின்றன. சொல்லப்போனால் பின்னற் குறிப்பிடுவது போல மதம் என்பது தனிநபருடைய, தனிப்பட்ட, தனிநபர் மட்டுமே சம்பந்தப்பட்டதாக மட்டுமே இருந்தால் அது ஆபத்தாக கருதப்படாவிட்டாலும் உண்மையிலேயே கெடுதல் செய்வதாகும்.

மதம் என்பது தனிநபருடைய இயல்பான தன்மையில் உள்ளடங்கியுள்ள விசேஷமான மத உள்ளுணர்வை மலரச் செய்வது தான் என்று கருதுவதும் அதேபோன்று தவறானதுதான். மதம் என்பது மொழியைப் போன்று சமூகத்தன்மை வாய்ந்தாகும் என்பதுதான் சரியான கண்ணோட்டமாகும்; ஏனென்றால் இவ்விரண்டுமே சமூக வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை; தனிநபர் அதை பெற்றிருக்க வேண்டும்; அதில்லாமல் அவன் சமுதாய வாழ்வில் பங்கேற்கமுடியாது.

மதம் என்பது பிரதானமாக சமுதாயம் சம்பந்தப்பட்டதால் அது சமூகத்தன்மை கொண்டது என்று சொல்லும்போது இயல்பாகவே ஒரு கேள்வி கேட்கத் தோன்றும்; மதத்தின் நோக்கம் என்ன, அதன் செயல்பாடு என்ன என்ற கேள்வி எழும்.

நான் படித்தவைகளில் மதத்தின் நோக்கம்குறித்து சிறப்பாகச் சொல்லியிருப்பவர் பேராசிரியர் சார்லஸ் ஏ.எல்உட்* என்பவராகும். அவர் கூறுகிறார்:

''மதம் என்பது மனித ஆளுமை மற்றும் மனித சமுதாயத்தின் முக்கியமான சீரிய தன்மைகளை ஒட்டுமொத்தமாக பிரபஞ்சத்தில் வெளிப்படுத்துகிறது. இந்தப் பிரபஞ்சமானது அவனுக்கு எந்தளவு சிறிதாக தோன்றியபோதிலும், அற்பமாகத் தோன்றியபோதிலும் அதை மதிப்பிடும் அணுகுமுறையை மேற்கொள்ள அவன் முயற்சிக்கும்பொழுதே அது தவிர்க்க இயலாதவாறு தோன்று கிறது. மனித, சமூக மற்றும் சிந்தனைவாழ்வில் உள்ள விசேஷ மான விஷயங்களைப் போன்று சொல்லப் போனால் அது மனிதனுடைய உயர் அறிவுப்பூர்வ ஆற்றலைச் சார்ந்துள்ளது. மனிதன் மட்டுமே மதப்பிராணி; ஏனென்றால் சிந்தனை மற்றும் பகுத்தறிவு என்ற சக்தியின் மூலம் தன்னறிவு என்ற சொல்லுக்குரிய முழு அர்த்தத்திற்கு அவன் மட்டுமே உரியவனாக உள்ளான். எனவே அவனுடைய சீரிய தன்மைகளை பிரபஞ்சத்தில் அவன் மட்டுமே வெளிப்படுத்தமுடியும்; அவ்வாறு செய்யவேண்டியதன் தேவையையும் அவன் தெரிந்துள்ளான். வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் மனிதனுடைய அறிவுத்திறன் என்பது, சிந்தனை என்பது தன்னுடைய சீரிய தன்மைகளையும் அதைப் போன்றே அதனுடைய கருத்துகளையும் உடனே பிரபஞ்ச மயமாக்க முயல்கிறது. பகுத்தறியும் போக்குகள் மனிதனுக்கு பொதுப்படையான கருத்துகளைக் கொடுப்பதுபோல், மதவழிப் பட்ட முறைப்போக்குகள் பொதுப்படையான மதிப்புகளை வழங்கு கின்றன். சொல்லப்போனால் இந்த மதவழிப்பட்ட முறைப்போக்குகள் என்பவை அறிவுரை போதனையைவிட அவனுடைய உந்துதல் மற்றும் உணர் வெழுச்சிகள் மீது செயல்படும் பகுத்தறியும் முறைப்போக்குகளே தவிர வேறல்ல எனலாம். கருத்துகளுக்காக பகுத்தறிவு என்ன செய்கிறதோ அதை உணர்வுகளுக்காக மதம் செய்கிறது. அது அவற்றைப் பொதுப்படை யானதாக்குகிறது; அவற்றை இவ்வாறு பொதுப்படையானதாக ஆக்கும்பொழுது அது அவற்றை யதார்த்தம் முழுவதோடும் இணக்கம் கொள்ளச் செய்கிறது.

மதமானது சமூகத்தின் மதிப்புகளை வலியுறுத்துகிறது; அவற்றைப் பொதுப்படையானாதாக்குகிறது; இத்தகைய மதிப்புகளை

---

★ ''சமயப்புனருத்தாரணம்'' பக்கம் 39-40

அவனுடைய அனைத்துச் செயல்பாடுகளிலும் காணச்செய்கிறது; சமுதாயத்தின் அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினனாக அவன் செயல் படுவதற்கு இது துணைபுரிகிறது. ஆனால் மதத்தின் நோக்கமானது இதைவிடவும் அதிகமானது. அது அம்மதிப்புகளை ஆன்மீகத்தன்மை கொண்டவைகளாக்குகிறது. இதுகுறித்துப் பேராசிரியர் எல்உட் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:*

"தற்பொழுது மதம் கையாண்டுவரும் இத்தகைய, மனம் சார்ந்த மற்றும் சமூகம் சார்ந்த மதிப்புகள் 'ஆன்மீகம்' என்று மனிதர்களால் அழைக்கப்படுகின்றன. இவற்றை ஆன்மீக மதிப்புகள் அதாவது தனிமனித மற்றும் சமூக வாழ்வு சம்பந்தப்பட்ட மதிப்புகள் எனக் கூறலாம். இத்தகைய மதிப்புகளை அது பிரபஞ்ச எதார்த்தத்தில் வெளிப்படுத்துகிறது. பிரபஞ்சமென்பது கண்மூடித்தனமான சக்தி களின், எத்தகைய நோக்கமுமில்லாத சக்திகளின் விளையாட்டுத்திடல் என்று இயந்திர கதியில் கூறுவதைவிட பிரபஞ்சத்தைக் குறித்த ஒரு சமூக மற்றும் தார்மீக கருத்தை அது மனிதனுக்குக் கொடுக்கிறது. அடிக்கடி கூறப்படுகிறதுபோல் மதம் என்பது பிரதானமாக ஓர் ஆன்மீகத் தத்துவமாக இல்லையென்றபோதிலும் அது, மனது, ஆன்மா, வாழ்க்கை போன்றவற்றை அனைத்து விஷயங்களிலும் வெளிப்படுத்துகின்றது. மிகவும் பண்டைக்கால மதம்கூட இதைச் செய்கிறது; ஆரம்பகால இயலாற்றல் மூலக்கோட்பாட்டில்கூட இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியில், மாயமந்திர சக்தியில் நம்பிக்கைக் கொண்ட தத்துவங்கள் போன்றவற்றில் ஆன்மீக உணர்வு காணப்பட்டது. அவை தனிநபர் களோடு நெருக்கமாக இணைக்கப்பட்டிருந்தன; அவை நபர்களிலிருந்து துவங்கின அல்லது தனிப்பட்ட வகைப்பட்டது என்று கருதப்பட்ட பொருளிலிருந்து துவங்கின. எனவே மதம் என்பது ஆன்மீக மதிப்பு களின் யதார்த்தத்தில் கொண்ட நம்பிக்கையைக் குறிக்கிறது; நாம் ஏற்கனவே கூறியதுபோல அவைகளை பிரபஞ்சம் முழுவதிலும் வெளிப்படுத்துகிறது. அனைத்து மதங்களும் நாத்தீக மதங்கள் என்று கூறப்படுபவையும் ஆன்மீகத்தை வலியுறுத்துகின்றன; அதன் ஆதிக்கத்தை நம்புகின்றன; அதனுடைய இறுதி வெற்றியை எதிர்நோக்குகின்றன.

சமுதாயத்தில் மதத்தின் செயல்பாடு என்பதும் அதைப் போன்றே தெளிவானதுதான். பேராசிரியர் எல்உட் மதத்தின் செயல்பாடு குறித்துப் பின்வருமாறு கூறுகிறார்.

---

* முன்சொன்ன அதே நூல் பக்கம் 45-46

''சமூகக் கட்டுப்பாட்டு என்பதன் ஒரு அமைப்பாக அதாவது தனிநபர் வாழ்வை கட்டுப்படுத்தக்கூடிய ஒரு அமைப்பாக மதம் செயல்படுகிறது; இத்தகைய கட்டுப்பாடு பெரும்பாலான மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியது என்று நம்பப்படுகிறது. நாம் ஏற்கனவே கண்டதுபோல ஆரம்பகாலத்தில் மக்கட்குழு அங்கீகரிக்காத தனிமனித உணர்வுகளுக்கும், மதிப்புகளுக்கும் வடிவம் கொடுத்த எந்த நம்பிக்கைகளும், நடைமுறைகளும் பில்லி சூனியம் அல்லது தீமை பயக்கும் மூட நம்பிக்கைகள் என்று வருணிக்கப்பட்டன; இதைச் செய்திருக்கவில்லையென்றால் மக்கட்குழுவின் வாழ்க்கை ஒற்றுமை மிகக்கடுமையாக பலவீனப் பட்டிருக்கும் என்பது தெளிவு. இவ்வாறு மதத்தின் ஏறத்தாழ அவசியமான சமூகத்தன்மையானது வெளிப்பட்டுள்ளது. சமூகத் தன்மை கொண்டிராமல் முற்றிலும் தனிப்பட்ட மதமென்றோ அல்லது தனிநபர் மதமென்றோ எதையும் நாம் பெற்றிருப்பது எத்தகைய நன்மையையும் செய்திருக்கமுடியாது; காரணம் என்னவென்றால் நாம் ஒரு சமூக வாழ்க்கையைக் கொண்டிருக் கிறோம்; சொல்லப் போனால் மக்கட்குழுவின் நலன் என்பதுதான் பிராதனமாக கவலைப்பட வேண்டிய அம்சம்.''

மற்றொரு இடத்தில் இதே பிரச்சினையைக் குறித்து ஆராயும்பொழுது அவர் கூறுகிறார்: *

''மதத்தின் செயல்பாடு என்பது சட்டம் மற்றும் அரசாங்கத்தின் செயல்பாட்டைப் போன்றதுதான். சமூக அமைப்பைப் பராமரிக் கும் பொருட்டு தனிநபருடைய நடத்தையை சமூகம் அதைக் கொண்டுதான் கட்டுப்படுத்துகிறது. தனிநபர் மீது சமூகக் கட்டுப்பாட்டிற்கான ஒரு முறை என்று அது உணர்வுபூர்வமாக பயன்படுத்தாமலிருக்கலாம். இருந்தபோதிலும் மதம் என்பது சமூகக் கட்டுப்பாட்டிற்கான ஒரு கருவியாகச் செயல்படுகிறது என்பது உண்மை. மதத்தோடு ஒப்பிடும்பொழுது அரசாங்கமும், சட்டமும் சமூகக்கட்டுப்பாட்டிற்கான போதுமான கருவிகளல்ல. சமூக அமைப்பின் ஸ்திரத்தன்மையை உறுதிசெய்ய சட்டம் மற்றும் ஒழுங்கு போதுமான அளவிற்குப் பயன்படாது. மறுபுறத்தில் அனைத்திற்கும் மேம்பட்டது என்ற வகையில் மத தண்டனை என்பது சமூகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான மிக சக்திவாய்ந்த கருவியாகும்; இது சட்டமும் அரசாங்கமும் கொண்டிருக்கக்கூடிய, கொண்டிருக்க முடிகிற கட்டுப்பாட்டை விட மிகவும் சக்தி வாய்ந்ததாகும். மதத்தின் ஆதரவில்லை

★ அகநிலை உணர்ந்த அச் சட்டங்களில் சமுதாயம், (1914) பக். 356-57

யென்றால் சட்டமும், அரசாங்கமும் சமூகக்கட்டுப்பாட்டைச் செயல்படுத்துவதற்கு மிகவும் போதாக் குறைவான கருவி களாகவே இருந்து தீரும். மதம் என்பது மிகவும் சக்திவாய்ந்த சமூக ஈர்ப்புவிசையாகும்; அதில்லாமல் சமூக அமைப்பு என்பதை அதன் வட்டத்திற்குள் நிறுத்திவைப்பது சாத்தியமற்ற தாகிவிடும்.''

முன்சொன்ன விவாதமானது மதம் என்பது ஒரு சமூக அம்சம் என்பதை சுட்டிக்காட்டுவதற்காக நடத்தப்பட்டபோதிலும் மதம் என்பது ஒரு திட்டவட்டமான சமூக நோக்கத்தையும், அதே போன்று திட்டவட்டமான சமூக செயல்பாட்டையும் கொண்டுள்ளது; அது ஒரு விஷயத்தை நிரூபிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது; ஒரு நபர் ஒரு மதத்தை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் அந்த மதம் ஏற்கனவேயே ஏற்றுக்கொண்ட நோக்கங்களை எந்த அளவிற்கு நிறைவேற்றியுள்ளது என்று கேள்விகேட்கும் உரிமை முறையானது என்று கூறுகின்றது. இக்காரணத்தினால்தான் கிறித்துவ மதத்தைவிட மெய்விளக்கக் கோட்பாடு என்ற கருத்து உயர்வானது என்று அதை ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் அந்தக் கருத்தைக் கொண்டிருந்தவர்களிடம் பெல்போர்டு பிரபு கேட்ட கேள்வி நியாயமானது. அவர் சுருக்கென்று இவ்வாறு கேட்டார்:

''அன்றாட வாழ்க்கைத் தேவைகளுக்காக அல்லல்பட்டு போராடிக் கொண்டிருக்கின்ற தெளிவற்ற மக்கட்கூட்டத்திற்கு மெய்விளக்கக் கோட்பாடு என்ன சொல்லவிருக்கிறது? 'மனிதசமூகம்' என்ற மகத்தான நாடகத்தில் அவர் களுக்குரிய பங்கை யோசிப்பதற்குக் கூட ஓய்வோ, விருப்பமோ இல்லாத, ஆனால் தன்னுடைய நலனையும், முக்கியத்துவத்தை யும் காண வியப்படையும் அவர்களுக்கு என்ன சொல்ல விருக்கிறது? இந்தப்பிரபஞ்சத்தைப் படைத்த அவனது பார்வையில் எந்த மதிப்பையும் பெறமுடியாத அல்லது இந்த உலகியல் அமைப்புமுறை ஒன்றுமில்லாததாக நொறுங்கிவிழுந்தபிறகு தனது செயற்பாட்டால் எத்தகைய விளைவுகளையும் ஏற்படுத்த இயலாத அற்பமான எந்த மனித ஜீவனுமே இல்லை என்று அது அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்குமா? இழப்பு ஏற்பட்ட வர்களுக்கு அது ஆறுதல் கூறுமா? பலவீனமானவர்களுக்கு பலம் தருமா? பாவச் செயலைப் புரிந்தோருக்கு மன்னிப்பு தருமா? கடுஞ்சுமையால் களைத்துப்போனவர்களுக்கு ஓய்வு தருமா?''

நல்லதே நடக்கும் என்று எண்ணுபவர்களைப் பார்த்து பெல்போர் பிரபு கேட்ட கேள்விகளை இந்துமத கோட்பாட்டின்

ஆதரவாளர்களைப் பார்த்து தாழ்த்தப்பட்ட மக்கள் கேட்கமுடியும். இல்லை, இன்னும் சொல்லப்போனால் தாழ்த்தப்பட்ட மக்கள் அதைவிடவும் அதிகமாகக் கேட்கமுடியும். அவர்கள் பின்வரும் கேள்விகளைக் கேட்கமுடியும்: இந்துமதக்கோட்பாடு அவர்களை மனிதர்கள் என்று மதித்து அங்கீகரிக்கிறதா? அவர்களுடைய சமத் துவத்திற்காக நிற்கிறதா? சுதந்திரம் என்பதன் பலனை அவர்களுக்கு விஸ்தரிக்குமா? குறைந்தபட்சம் அவர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையே சகோதர பந்தத்தை உருவாக்க அது முயற்சி செய்யுமா? தாழ்த்தப்பட்டவர்கள் அவர்களுடைய சகோதரர்கள் என்று இந்துக் களுக்கு போதிக்கிறதா? தாழ்த்தப்பட்டவர்களை மனிதனாக இல்லாமலும், மிருகமாக இல்லாமலும் கருதும் போக்கு பாவம் என்று இந்துக்களுக்கு சொல்கிறதா? தாழ்த்தப்பட்டவர்களிடம் கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டும் என்று இந்துக்களிடம் அது கூறுமா? அவர்களிடம் நியாயமாகவும், மனிதாபிமானத்துடனும் நடந்து கொள்ளவேண்டும் என்று இந்துக்களிடம் போதிக்குமா? அவர்களுடன் நட்புறவாக இருக்க வேண்டியதன் அவசியத்தை இந்துக்களின் உணர்வில் புகுத்துமா? அவர்களை நேசிக்கும்படியும். அவர்களை மதிக்கும்படியும் அவர்களுக்கு தீங்கு விளைவிக்காமல் இருக்கும் படியும் இந்துக்களுக்கு அது சொல்லுமா? இறுதியாக எவ்வித பாகுபாடுமின்றி வாழ்வின் மதிப்பை இந்துமதக் கோட்பாடுகள் அனைவருக்கும் பொதுவாக்குமா?

இத்தகைய கேள்விகளுக்கு எந்த ஒரு இந்துவும் சாதகமான பதிலைக்கூறமுடியாது? மாறாக, இந்துக்களினால் தாழ்த்தப்பட்டவர்கள் அனுபவிக்க நேரிட்ட தீமைகள், இந்து மதத்தினால் அனுமதிக்கப்பட்ட சட்டங்களே ஆகும். அவை இந்துமதக்கோட்பாடு என்ற பெயரில் செய்யப்பட்டதுடன், இந்துமதக்கோட்பாடு என்ற பெயரில் நியாயப் படுத்தப்பட்டும் உள்ளன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்துக்கள் இழைத்த சட்டபூர்வமற்ற நடவடிக்கைகள் சட்டபூர்வமாக்கிய உணர்வும், பாரம்பாரியமும் அப்படியிருக்கும்போது இந்துமதக் கோட்பாடுகளில் காணப்படுகின்றன. அவை ஆதரிக்கவும்படுகின்றன. இந்து மதக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டு அதிலேயே இருக்கும்படி தாழ்த்தப்பட்ட மக்களை - இந்துக்கள் எவ்வாறு கேட்க முடியும்? தங்களுடைய தாழ்ச்சிக்கு முற்றிலும் பொறுப்பான இந்துமதக் கோட்பாடுகளை தாழ்த்தப்பட்ட மக்கள் ஏன் கடைப்பிடிக்க வேண்டும்? தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வாறு இந்துமதத்தில் இருக்க முடியும்? தீண்டாமை என்பதுதான் ஒரு மனிதனின் தாழ்ச்சிக்கு அடி ஆழம். ஏழையாய் இருப்பது மோசமானதுதான். ஆனால் தாழ்த்தப் பட்டவராக

இருப்பதைப்போல அவ்வளவு மோசமானது அல்ல. ஏழையாய் இருப்பவர் பெருமைகொள்ளமுடியும். ஆனால் தாழ்த்தப்பட்டவர் அவ்வாறு செய்யஇயலாது. கீழ்மட்டத்தில் இருக்கிறோம் என்று கருதுவது மோசமானது. ஆனால் தாழ்த்தப் பட்டவராய் இருப்பது போல அவ்வளவு மோசமானது அல்ல. கீழே இருப்பவர் அவருடைய அந்தஸ்தை விட உயரமுடியும். தாழ்த்தப் பட்டவர் உயரமுடியாது. வேதனைப்படுவது மோசமானது. ஆனால் தாழ்த்தப்பட்டவராய் இருப்பதைப்போல அது அவ்வளவு மோசமானது அல்ல. இந்த வேதனைகள் என்றாவது ஒருநாள் மறையும். ஆனால் தாழ்த்தப் பட்டவர் இதையும் எதிர்பார்க்கமுடியாது. சாதுவாக இருப்பது மோசமானது. ஆனால் தாழ்த்தப்பட்டவராய் இருப்பதைப்போல அவ்வளவு மோசமானது அல்ல. சாதுவானவர்கள் இந்த உலகைக் கட்டியாள முடியாவிட்டாலும் குறைந்தபட்சம் சற்றுப் பலமானவர் களாக இருக்கமுடியும். தாழ்த்தப்பட்டவர்களுக்கு இந்த நம்பிக்கைகூட இருக்கமுடியாது.

இந்துமதக் கோட்பாடுகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு நம்பிக்கை அளிக்கக்கூடிய எதுவும் இல்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் இந்துமதக் கோட்பாடுகளில் இருந்து வெளியேறிச் செல்ல விரும்பு வதற்கு இது ஒன்றுமட்டுமே காரணம் அல்ல. மற்றொரு காரணம் இருக்கிறது. அது இந்துமதக் கோட்பாட்டில் இருந்து அவர்கள் வெளியேறுவதை அவசியம் ஆக்குகிறது. தீண்டாமை என்பது இந்துமதக் கோட்பாடுகளின் ஒரு பகுதியாகும். கற்றறிந்த சீர்திருத்த வாதிகள் என்று தங்களைக் காண்பித்துக் கொள்வதற்காக சிலர் தீண்டாமை என்பது இந்துமதக் கோட்பாடுகளின் ஒருபகுதி என்பதை மறுக்கிறார்கள்; இவர்களும் தீண்டாமையை கடைப்பிடிக்கிறார்கள்; ஒரு இந்து, இந்துமதக் கோட்பாடுகளில் நம்பிக்கை வைப்பது ஒன்றும் பெரிய விஷயமல்ல. தனக்குக் கீழே லட்சோபலட்சக் கணக்கான தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்ற உணர்வு பிறரைவிடத் தான் உயர்ந்தவன் என்ற மனோபாவத்தை அதிகரிக்கிறது. ஆனால், தான் இந்துமதக் கோட்பாடுகளில் நம்பிக்கை உள்ளவன் என்று தாழ்த்தப்பட்டவர் கூறுவதற்கு என்ன பொருள் இருக்கும்? அதன் பொருள் என்னவென்றால் தான் தாழ்த்தப்பட்டவன் என்பதையும், தெய்வத்தின் முடிவுப்படி தாழ்த்தப்பட்டவனாக இருப்பதையும் அவர் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றாகிறது. ஏனென்றால், இந்துமதக் கோட்பாடுகள் என்பவை கடவுளால் உருவாக்கப்பட்டவை. ஒரு இந்துவின் கழுத்தைத் தாழ்த்தப்பட்டவர் வெட்டமாட்டார். ஆனால் தான் தாழ்த்தப்பட்டவன் என்றும், அவ்வாறு இருப்பது சரியே என்றும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க அவர் சம்மதிப்பார் என்று

எதிர்பார்க்கமுடியாது. இந்துமதத்தில் இருந்துகொண்டு இவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் தரும் அளவுக்கு அந்தத் தாழ்த்தப்பட்டவரின் ஆன்மா செத்துப்போயிருக்கிறது. இந்துமதக் கோட்பாடுகள் தாழ்த்தப் பட்டவர்களுடைய சுயமரியாதைக்கும், கௌரவத்திற்கும் முரணானவை; தாழ்த்தப்பட்டவர்கள் மற்றொரு கண்ணியமான மதத்துக்கு மாறிக்கொள்வதை நியாயப்படுத்துவதற்கான பலமான ஆதாரம் இது.

மதமாற்றம் என்பது தர்க்கரீதியாக மறுக்கப்பட முடியாதது என்றபோதிலும், மதமாற்றத்தின் எதிர்ப்பாளர்கள் இத்துடன் திருப்தி யடைந்துவிடாதிருக்க உறுதிபூண்டிருக்கிறார்கள். மேற்கொண்டும் கேள்விகள் கேட்பதிலேயே குறியாக இருக்கிறார்கள். ஒரு கேள்வியைக் கேட்பதில் மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள்; ஏனென்றால் அது பலமான, பதிலளிக்கமுடியாத கேள்வி என்று அவர்கள் கருதுகிறார்கள்; மதம் மாறுவதன் மூலம் பொருளாயதரீதியில் தாழ்த்தப்பட்ட மக்கள் அப்படி என்ன ஆதாயம் பெறப்போகிறார்கள்? இதுதான் அந்தக் கேள்வி. இந்தக்கேள்வி பலமான கேள்வியே அல்ல. இதற்கு பதிலளிப்பது சுலபம். மதமாற்றம் என்பதை பொருளாதார ஆதாயத்துக்கான வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்வது தாழ்த்தப்பட்டவர்களின் நோக்கம் அல்ல. தாழ்த்தப்பட்ட மக்கள் மதமாற்றம் மூலம் செல்வத்தை அடைய முடியாது என்பதே உண்மை. அதேசமயம் இதுஒன்றும் அவர்களுக்கு எத்தகைய இழப்பையும் ஏற்படுத்திவிடாது. ஏனென்றால் அவர்கள் இந்துக்களாக இருக்கும்வரை ஏழையாகவே இருக்கும்படி விதிக்கப் பட்டிருக்கிறார்கள். அரசியல் ரீதியாகப் பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரசியல் உரிமைகளை இழப்பார்கள். எனினும், இது உண்மையான இழப்பு அல்ல. எவ்வாறென்றால் மதமாற்றம் மூலம் அவர்கள் இணையக்கூடிய சமூகத்திற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள அரசியல் உரிமைகளின் நலன் அவர்களுக்குக் கிடைக்கும். அரசியல் ரீதியாகப் பார்த்தால் லாபமும் கிடையாது, நஷ்டமும் கிடையாது. சமூக ரீதியாகப் பார்த்தால் தாழ்த்தப்பட்ட மக்கள் முற்றிலும் அனுகூலம் அடைவார்கள்; ஏராளமாக ஆதாயம் பெறுவார்கள்; எவ்வாறென்றால், தாழ்த்தப்பட்ட மக்கள், தங்களை உறுப்பினர்களாக்கிக் கொண்டு இணைத்துக் கொள்ளப் போகும் சமூகத்தின் மதம் வாழ்க்கையின் அனைத்து மதிப்புகளை யும் பொதுமைப்படுத்தியுள்ள, சமத்துவமாக்கியுள்ள மதம். இதன் மூலம் அவர்களுக்கு இந்த ஆதாயம் கிடைக்கும். இந்து மதத்தின் பிடியில் அவர்கள் இருக்கும் பொழுது இத்தகையதொரு நன்மையை நினைத்துக்கூட பார்க்கமுடியாது.

இவ்வாறு நாம் முழுமையாக, திட்டவட்டமாக பதிலளித்து

விட்டோம். எனினும் பதில் சுருக்கமாக இருப்பது மதமாற்ற எதிர்ப்பாளர்களுக்கு திருப்தி அளித்திருக்காது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு மூன்று விஷயங்கள் தேவைப்படுகின்றன. முதலாவதாக அவர்களுக்கு தேவைப்படுவது, அவர்களுடைய சமூகத் தனிமைப்படுத்தலுக்கு முடிவு கட்டவேண்டும். அவர்களுக்குத் தேவைப்படும் இரண்டாவது விஷயம் அவர்களுடைய தாழ்வு மனப்பான்மைக்கு முற்றுபுள்ளி வைக்க வேண்டும். மதமாற்றம் என்பது அவர்களுடைய தேவைகளை நிறை வேற்றுமா? மதமாற்றத்தின் ஆதரவாளர்களின் வாதத்தில் அத்தனை வலுவில்லையென்று மதமாற்றத்தை எதிர்ப்பவர்கள் கற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் அவர்கள் கேள்விகளை எழுப்பிக் கொண்டே இருக்கிறார்கள். உண்மையில் மதமாறுதலுக்கு ஆதரவான காரணம் வலுவினும் வலுவானதாகவே இருக்கிறது. ஆயினும் இந்தத் தெள்ளத்தெளிவான, கண்கண்ட உண்மையை நிலைநாட்டுவதற்குச் சில நீண்ட வாதங்களை முன்வைக்க வேண்டியிருக்கிறது. எனவே, அனைத்து ஐயப்பாடுகளுக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது அவசியம் என்பதால் இந்தப் பணியை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஒவ்வொரு அம்சத்தையும் தனித்தனியாக அலசுவோம்.

தீண்டப்படாத மக்கள் தங்களுடைய சமூகத் தனிமைப் படுத்தலுக்கு எவ்வாறு முடிவுகட்ட முடியும்? தங்களுடைய சமூக தனிமைப்படுத்தலுக்கு ஒரு முடிவுகட்ட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உள்ள ஒரேவொரு வழி சாதிய உணர் விலிருந்து விடுபட்டு இருக்கிற மற்றொரு சமூகத்துடன் உறவுகொண்டு அதிலேயே கலந்துவிடுவது என்பதுதான். இந்த விடையானது மிகவும் சுலபமானது என்றபோதிலும் அதனுடைய செல்லுபடியாகும் தன்மையை இன்னும் பலரும் ஏற்றுக்கொள்ளவில்லை. உறவு என்பதன் மதிப்பையும், முக்கியத்துவத்தையும் ஒருசிலரே உணர்ந்து உள்ளனர் என்பது இதற்குக் காரணம் ஆகும். எவ்வாறு இருந்தபோதிலும் அதனுடைய மதிப்பும், முக்கியத்துவமும் மிகவும் மகத்தானவை ஆகும். உறவுமுறை என்பதும், அதில் என்ன தொக்கியுள்ளது என்பதும் பின்வரும்-வார்த்தைகளில் பேராசிரியர் ராபர்ட்சன் சுமித்தால் விவரிக்கப்படுகிறது:* ''ஒரு உறவுமுறை குழு என்பது வாழ்வில் ஒன்றாகப் பின்னிப் பிணைக்கப் பட்டிருக்கிற நபர்களின் குழுவாகும்; இதை இயற்பியல் ஒற்றுமை என்றும் கூறலாம்; அவர்கள் ஒரே பொதுவான வாழ்க்கையின்

★ செமிட்டுகளின் சமயம் - பக். 273.

பகுதிகளாகக் கருதப்படலாம். ஒரு உறவுமுறை குழுவின் உறுப்பினர்கள் ஒன்றாக வாழக்கூடிய ஒருவராகவே தங்களைக் காண்கின்றனர்; ரத்தம், சதை, எலும்புகளைக் கொண்ட ஒரு உயிருள்ள மனிதத் திரளாகவே காண்கின்றனர்; இதில் அனைத்து உறுப்பினர்களையும் பாதிக்காமல், எந்த உறுப்பினரையும் தொடமுடியாது.''

இந்த விஷயத்தை தனிநபர் என்ற நோக்குநிலையிலிருந்தும் அதைப் போன்றே குழுவின் கண்ணோட்டம் என்ற நோக்குநிலை யிலிருந்தும் காணமுடியும். குழுவின் கண்ணோட்டம் என்ற நிலை யிலிருந்து காணும்பொழுது உறவுமுறை குழு என்பது ஒருவரை வெறும் தனிநபராகப் பார்க்காமல் அவர் முதலாவதாகவும், முதன்மையாகவும் ஒரு குழுவின் உறுப்பினர் என்றே உணர்கிறது. தனிநபர் நோக்கு நிலையிலிருந்து காணும்பொழுது அந்தக்குழுவுடன் அவருக்குள்ள உறவால் கிடைக்கும் நன்மையானது ஒரு குடும்பத்தின் உறுப்பினர் என்ற முறையில் அந்த உறுப்பினருக்கு என்னென்ன நன்மைகள் கிட்டுகின்றனவோ அவற்றைவிடக் குறையாத, அவற்றிலிருந்து வித்தியாசப்படாத அளவுக்கு குழுவிடமிருந்தும் கிடைக்கின்றன. குடும்ப வாழ்க்கையானது பெற்றோருடைய பாசம் மற்றும் பரிவினால் குணாம்சப்படுத்தப்படுகிறது. பேராசிரியர் மக்டோகல்* குறிப்பிடுவது போல

> ''இந்த உணர்வெழுச்சியும் (பெற்றோரின் பரிவும் பாசமும்) அதனுடைய உந்துதலும் போற்றிப் பாதுகாக்கப்பட்ட வேண்டி யவை; ஏனென்றால் அதிலிருந்துதான் பெருந்தன்மை, நன்றி, அன்பு, இரக்கம், உண்மையான உதவிசெய்யும்போக்கு மற்றும் அனைத்து உண்மையான நடவடிக்கைகளும் தோன்றுகின்றன; அதில் அவை தம்முடைய பிரதானமான, முற்றிலும் அத்தியா வசியமான வேரைக் கொண்டுள்ளன; அதில்லாமல் அவர்கள் இருக்கமுடியாது.''

சமுதாயம் என்பதிலிருந்து சமூகம் என்பதைத் தனித்து வைத்துப் பார்த்தால் அது ஒரு விரிவடைந்த குடும்பமாகவே இருக்கும். அவ்வாறான நிலையில், ஒரு குடும்பத்தில் காணப்படும் அனைத்து நல்ல குணங்களையும் கொண்டதாகவே அந்த சமூகக்குழு குணாம்சப்படுத்தப்படும்; அது பேராசிரியர் மக்டோகலினால் நன்கு விவாதிக்கப்படுகின்றது. ஒரு சமூகக் குழுவினுள் உறவுமுறை

★ சமூக உளவியலுக்கு அறிமுகம்

காரணமாக உறவினர்கள் என்று அங்கீகரிக்கப்பட்டவர்களிடையே எவ்விதப்பாகுபாடும் கிடையாது. அதற்குள் இருக்கிற ஒவ்வொருவரும் இதரர்களுக்கு உள்ளதைப் போன்றே அனைத்து உரிமைகளிலும் சரி சமமானவர்கள் என்று சமூகக்குழு அங்கீகரிக்கிறது. பேராசிரியர்கள் திவே மற்றும் டஃப்ட்ஸ் குறிப்பிடுவது போல: ''ஒரு அரசாங்கமானது அடுத்த நாட்டைச் சேர்ந்த ஒரு பிரஜை சொந்தமாக நிலம் வைத்துக் கொள்ளவும், அதனுடைய நீதிமன்றங்களில் வழக்குத் தொடரவும் அனுமதியளித்துள்ளது; வழக்கமாக அவருக்கு ஓரளவு பாதுகாப்பு கொடுக்கப்படும்; ஆனால் முதலில் சொல்லப்பட்ட உரிமைகள் ஒரு வரம்புக்கு உட்பட்டவை; ஒருசில வருடங்களுக்கு முன்பு பிரதம நீதிபதி டேனே கூறிய தீர்ப்புப்படி நடப்பில் உள்ள அமெரிக்க சட்டபூர்வ கோட்பாடுகள் பிரகாரம் வெள்ளை மனிதர்கள் கட்டாயம் மதிக்க வேண்டிய உரிமைகள் எதுவும் நீக்ரோவுக்கு கிடையாது. இனம் அல்லது இதர தனித்தன்மைகளை சட்டக்கோட்பாடுகள் அங்கீகரிக்காத இடங்களில் கூட ஒரு அன்னியனுக்கு நீதிகிடைப்பது நடைமுறையில் மிகவும் கடினமாகும். புராதனகால இனக்குழுக்களிலும் அல்லது குடும்பக் குழுக்களிலும் இந்த கோட்பாடு முற்றிலும் செயல்படுத்தப் பட்டது. நீதி என்பது வேறு குழுவில் உள்ளவர்களைப் போன்றே ஒரு மனிதனுக்கு கிடைக்கும் விசேஷ உரிமையாகும். அது வேறுவிதமாக இல்லை. இனக்குழுவைச் சேர்ந்த அல்லது குடும்பத்தைச் சேர்ந்த அல்லது கிராம சமூகக் குழுவைச் சேர்ந்த உறுப்பினருக்கு கோருவதற்கு உரிமை உண்டு; ஆனால் அன்னியருக்கு என்று எதுவும் கிடையாது. ஒரு விருந்தாளி என்ற முறையில் அவர் தன்னுடைய சமூகக்குழுவினரைத் தவிர வேறெந்த குழுவிலும் அவர் 'நீதி'யைக் கோரமுடியாது. சமூகக் குழுவினுள் உரிமைகள் குறித்த முன்னோடி மாதிரியை நாம் கொண்டுள் ளோம். ஒரு இனக்குழு மற்றொரு இனக்குழுவுடன் கொண்டுள்ள அணுகுமுறையானது யுத்தம் அல்லது பேச்சுவார்த்தை சம்பந்தப் பட்டதாகும்; சட்டத்தோடு சம்பந்தப்பட்டது அல்ல; இனக்குழு அற்ற மனிதன் உண்மையில் சட்ட விரோதமானவன்; அதைப்போன்றே பெயரிலும் சட்டவிரோதமானவன்.

உறவுமுறையானது ஒரு உறுப்பினருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகப் பழிவாங்கும் பொறுப்பை சமூகக்குழுவை ஏற்கச் செய்கிறது. ஒரு உறுப்பினருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக ரத்தப்பழிதீர்ப்பது என்பது எதார்த்தத்தில் ஒரு காட்டுமிராண்டித் தனமான முறையாகத் தோன்றுகிறது; ஆனால் அகநிலை உணர்வுப்படி பார்த்தால் அது தங்களது சக உறுப்பினருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக ஒரு சமூகக் குழு உறுப்பினர்களின் அனுதாபமான

சீற்றமாகவே வெளிப்படுகிறது. இந்த அனுதாபச் சீற்றமானது தங்களுடைய குழந்தைக்கு ஏற்படும் ஆபத்தை நேருக்கு நேராகக் காணும்பொழுது பெற்றோரின் பரிவு உணர்வுகள் எவ்வாறு வெளிப் படுமோ, அதைப்போன்றே பரிவு உணர்வு மற்றும் கோபத்தின் கலவையாகவே இது உள்ளது. ஒரு தனிநபருக்கு இதுஒன்றும் குறைந்த முக்கியத்துவம் உடையது அல்ல. பேராசிரியர் மக்கோடகல் இதுபற்றிக் கூறுவதாவது:

''பரிவுஉணர்வுக்கும் கோபத்திற்குமிடையே உள்ள இந்த மிக நெருக்கமான உறவானது மனிதனுடைய சமூக வாழ்க்கைக்கு மிகுந்த முக்கியத்துவமுடையதாகும்; அதை சரியாகப் புரிந்து கொள்வது என்பது தார்மீக உணர்வுகளின் அடிப்படை ஆகும்; ஏனென்றால் இவ்வாறு எழும் கோபமானது அனைத்து நேர்மையான சீற்றத்திற்கும் விதைக் கருவாகிறது; இந்த தார்மீக சீற்றத்தின்மீதுதான் நீதி என்பதும் பொதுச்சட்டம் என்பதன் மிகப்பெரும் பகுதியும் பிரதானமாக உருவாக்கப்பட்டுள்ளது.''

இந்த உறவுமுறை என்பதுதான் தாராள மனப்பான்மையை உருவாக்குகிறது என்பதுடன் ஒரு தவறை நிவர்த்தி செய்வதற்கு தேவையான தார்மீக சீற்றத்தை எழச்செய்கிறது. உறவுமுறை என்பது இன்று தாழ்த்தப்பட்டவர்கள் தன்னந்தனியாக அனுபவிக்க வேண்டி யுள்ள இந்துக்களின் கொடுங்கோன்மையையும் ஒடுக்குமுறைகளையும் சந்திப்பதற்காக உறவுமுறைப்பட்ட சமூகக்குழுவின் ஆதரவைப் பெறத் துணைபுரிகிறது; மற்றொரு சமூகக்குழுவுடன் உறவு என்பது சிறந்த பாதுகாப்பு ஆகும்; தாழ்த்தப்பட்டவர்கள் இந்து கொடுங் கோன்மை மற்றும் இந்து ஒடுக்குமுறைக்கு எதிராக இந்த உறவை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உறவுமுறை என்பதன் பொருள் என்ன, அது என்ன செய்கிறது என்று மேலே தரப்பட்டுள்ள விளக்கத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும் எவரொருவரும் இந்தக் கருத்துரையை ஏற்றுக்கொள்ளு வதற்கு எவ்விதச் சிரமும் இருக்காது. அதாவது தாழ்த்தப்பட்டவர்கள் தங்களுடைய தனிமைக்கு முடிவு கட்ட வேண்டுமென்றால் சாதியை அங்கீகரிக்காத மற்றொரு சமூகக் குழுவுடன் சேர்ந்தாக வேண்டும் என்பதே அந்தக்கருத்துரை.

உறவுமுறை என்பது தனிமைப்படுத்தலுக்கு நேர்எதிரானது. மற்றொரு சமூகக்குழுவுடன் தாழ்த்தப்பட்டவர் உறவுமுறையை நிறுவிக்கொள்வது என்பது தங்களுடைய தற்சமய தனிமைக்கு முடிவு

கட்டுவது என்பதையே குறிக்கும். அவர்கள் இந்துக்களாக இருக்கும் வரை அவர்களுடைய தனிமைப்படுதல் என்பது ஒருபோதும் முடிவடையாது. இந்துக்கள் என்ற முறையில் அவர்களுடைய தனிமைப் படுத்தலானது அவர்களை முன்னாலும் தாக்குகிறது; பின்னாலும் தாக்குகிறது. அவர்கள் இந்துக்கள் என்றபோதிலும்கூட அவர்கள் முஸ்லீம்களிடம் இருந்தும் கிறித்தவர்களிடம் இருந்தும் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்; ஏனென்றால் இந்துக்கள் என்ற முறையில் அவர்கள் இந்துக்களுக்கும் அதைப்போன்றே இந்துக்கள் அல்லாத வர்களுக்கும் அன்னியமானவராகி விடுகின்றனர். இந்தத் தனிமைப் படுத்தலுக்கு முடிவுகட்ட ஒரேயோரு வழிதான் உள்ளது: இதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. இந்து அல்லாத ஏதாவதொரு சமூகக்குழுவுடன் சேர்ந்து அதனுடைய உறவுமுறையாக ஆகிவிடுவது என்பதுதான் அந்தவழி.

தனிமைப்படுதல் என்பதன் சாதகமற்ற தன்மைகளையும், உறவுமுறை என்பதன் சாதகத் தன்மைகளையும் புரிந்துள்ள அனைவரும் இந்த முயற்சி ஒரு பொருளற்ற முயற்சி அல்ல என்பதை ஏற்றுக் கொள்வார்கள். தனிமைப்படுதலின் விளைவுகள் என்ன? தனிமைப் படுதல் என்பது சமூக இன ஒதுக்கல், சமூக அவமரியாதை, சமூக பாரபட்சம் மற்றும் சமூக அநீதி என்றே பொருள்படும். தனிமைப் படுதல் என்பது பாதுகாப்பு மறுப்பு, நீதிமறுப்பு, வாய்ப்பு மறுப்பு என்றே பொருள்படும்.தனிமைப்படுதல் என்பது அனுதாபமின்மை, நட்புறவின்மை, கவனிப்பின்மை என்றே பொருள்படும். இன்னும் சொல்லப்போனால் தனிமைப்படுதல் என்பது இந்துக்களின் இயல்பான வெறுப்பு மற்றும் விரோதம் என்றே பொருள்படும். மறுபுறத்தில் இதர சமூகக் குழுவுடன் உறவுகொள்வதன் மூலம் அந்த சமூகக் குழுவிற்குள் சம அந்தஸ்து, சமப் பாதுகாப்பு மற்றும் சமநீதி யைப் பெறமுடியும் என்பதோடு, அதனுடைய அனுதாபத்தையும், நல்லெண் ணத்தையும் ஈட்டமுடியும்.

எதிர்ப்பாளர்கள் எழுப்பிய கேள்விக்கு இது முழுமையான விடை என்று நான் துணிந்து கூறுகிறேன். மதமாற்றம் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் என்ன பலன் பெறமுடியும் என்பதை அது காண்பிக்கிறது. இந்த விஷயத்தை மேலும் முன்கொண்டு சென்று மதம் மாறுவதை எதிர்ப்பவர்கள் இதுவரை எழுப்பி இராத, ஆனால் எழுப்பப்படக்கூடிய கேள்விக்கும் பதிலளித்துவிடுவது விரும்பத் தக்கது. கேள்வி இதுதான்: உறவுமுறையை உருவாக்க மதமாற்றம்

தேவைதானா? ஒரு சமூகக் குழுவிற்கும், ஒரு சமுதாயத்திற்கும் அதே போன்று உறவுமுறைக்கும், குடியுரிமைக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது என்பதை மனத்தில் கொண்டால் இந்தக் கேள்விக்கான விடை வெளிப்படும்.

ஒரு சமூகம் என்று சொன்னால் அது உறவுமுறைகளின் ஓர் அமைப்பு என்றே திட்டவட்டமாகப் பொருள்படும். ஒரு சமுதாயம என்பது பல சமூகக் குழுக்களின் ஒரு தொகுப்பு ஆகும், அல்லது பல்வேறு உறவு வகைப்பட்ட அமைப்புகளாகும். ஒரு சமூகத்தை ஒன்றாக வைத்திருக்கும் பந்தத்தை உறவுமுறை என்கிறோம்; அதேசமயத்தில் ஒரு சமுதாயத்தை ஒன்றாக வைத்திருக்கும் பந்தத்தை குடியுரிமை என்கிறோம்.

ஒரு சமுதாயத்தில் குடியுரிமையைப் பெறுவதற்கான வழி வகைகள் என்பது ஒரு சமூகக் குழுவினுள் உறவுமுறையைப் பெறுவதற்கான வழிவகைகளில் இருந்து முற்றிலும் மாறுபட்டது. குடியுரிமை என்பது அங்கேயே வசித்துவரும் தன்மையினால் பெறப்படுவது ஆகும். குடியுரிமையைப் பெறுவதற்கான முன்நிபந் தனையானது அரசாங்கத்திற்கு அரசியல் விசுவாசம் செலுத்தவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வதாகும். உறவுமுறையைப் பெறுவதற்கான முன்நிபந்தனையானது முற்றிலும் வேறுபட்டது. மனிதனுடைய பரிணாம வளர்ச்சியில் ஒரு கட்டத்தில் ரத்த ஒற்றுமை என்பது உறவுமுறையாக ஏற்றுக் கொள்வதற்கான முன் நிபந்தனையாக இருந்தது. ஏனென்றால் உறவுமுறை என்பது ஒரே மூதாதையரில் இருந்து தோன்றியுள்ளவர்கள் என்றும் அதனால் தங்களது இரத்த நாளங்களில் ஒரே இரத்தத்தை கொண்டிருப்பதாகவும் கருதும் நபர் களைக் கொண்ட அமைப்பு. ஒவ்வொரு குழுவும் உண்மையிலேயே ஒரே மூதாதையரில் இருந்து தோன்றியுள்ளதா என்பதைப்பற்றி பொருட்படுத்த வேண்டியதில்லை. உண்மையில் ஒரு குழுவானது ஒரு அயலவர் அதே மூதாதையில் இருந்து தோன்றியிருக்கவில்லை என்றபோதிலும் கூட அவரைத் தங்கள் உறவுமுறைக்குள் சேர்த்துக் கொள்வதுண்டு. ஒரு அயலவர் ஏழு தலைமுறைகளாக ஒரு குழுவுடன் திருமண உறவு கொண்டிருந்தால் அவர் இந்த உறவுமுறையின் உறுப்பினராகிவிடுவார் என்று ஒரு விதி இருந்தது என்பது ஒரு சுவாரஸ்யமான விஷயமாகும். இது கற்பனைக்கதை என்றபோதிலும் உறவுமுறைகள் சேர ரத்த ஒற்றுமை இருக்கவேண்டும் என்ற முன்நிபந்தனை தேவையாய் இருந்திருக்கின்றது.

மனிதனுடைய பரிணாம வளர்ச்சியின் பிந்தையகட்டத்தில் ரத்த ஒற்றுமைக்குப்பதிலாக பொதுவான மதம் என்பது உறவு என்பதற்கான முன்நிபந்தனையாக ஆயிற்று. இது சம்பந்தமாக பேராசிரியர் ராபர்ட்ன் ஸ்மித்* சுட்டிக்காட்டிய முக்கியமான அம்சத்தை நினைவிற் கொள்வது அவசியமாகிறது; ஒரு சமுதாயத்தில் சமூக அமைப்பு என்பது மனிதர்களைக் கொண்டு மட்டும் உருவாக்கப்பட்டதல்ல, கடவுள் களையும், மனிதர்களையும் கொண்டு உருவாக்கப்பட்டது. ஆகையால் ஒரு சமூகக் குழுவில் நுழைந்து உறவுமுறை பந்தத்தை உருவாக்கிக் கொள்ள விரும்புகின்ற எவர் ஒருவரும் அந்த சமூகக் குழுவின் கடவுளையோ அல்லது கடவுள்களையோ ஏற்றுக்கொள்வதன் மூலம் மட்டுமே அதில் நுழையமுடியும். பழைய ஏற்பாட்டில் நவோமிரூத் திடம் பின்வருமாறு கூறும் ஒரு வாசகம் காணப்படுகிறது. ''உன்னுடைய சகோதரி அவளுடைய மக்களிடமும், அவளுடைய கடவுள்களிடமும் திரும்பிச் சென்றுவிட்டாள். '' அதற்கு ரூத்தினுடைய பதிலாவது: ''உன்னுடைய கடவுள் என்னுடைய கடவுள்.'' இதுவும் மொபைட்டு களைச் செமோஸினுடைய மகன்கள் என்றும் மகள்கள் என்றும் அழைப்பதும் ஒரு சமுதாயத்தில் உறவுமுறை என்ற பந்தமானது ஒரு பொதுவான மதத்தின்பால் அவர்கள் வைத்துள்ள விசுவாசத்தின் விளைவாகவே ஏற்படுகிறது என்பதைக் காண்பிக்கும் சாட்சியங்களாக அமைந்துள்ளன. பொதுவான மதம் இல்லாமல் எந்தவொரு உறவும் இருக்கமுடியாது.

மதம் மாறுவதற்குச் சாதகமான வாதங்களில் குற்றம் குறை காண்பதற்காக பலர் காத்திருக்கும்போது சந்தேகத்தையோ அல்லது தவறான நிர்ணயிப்பையோ உருவாக்கிவிட எந்தவொரு வாய்ப்பையும் தராதிருப்பது உசிதமானது, ஆகையால் உறவு என்ற பந்த்த்தை மதம் எவ்வாறு, எந்த முறையில் உருவாக்குகிறது என்பதை விளக்குவது நல்லது. இதற்கான விடை மிகச் சுலபமானது. அது, ஒன்றாக உண்பதன் மூலமும், குடிப்பதன் மூலமும் அதைச் செய்கிறது.** இந்துக்கள் தங்க ளுடைய சாதிய அமைப்புகளுக்கு ஆதரவாக வாதாடும்பொழுது சமபந்தி போஜனம் என்பதை கேலி செய்கிறார்கள். அவர்கள்

* செமிட்டுகளின் சமயம் வரை II பழைய மற்றும் நவீன சமுதாயங்களை வேறுபடுத்திக்காட்டுவதுபோல் பேராசிரியர் ஸ்மித் இதை வேறுபடுத்திக்காட்டு கிறார். இதற்கு அதிக முக்கியத்துவமுண்டு. யதார்த்தத்தில் அது ஒரு சமூகக் குழுவிற்கும், சமுதாயத்திற்குமுள்ள வேறுபடும் தன்மையைக் குறிக்கிறது.

** இந்த விஷயம் குறித்து ஸ்மித் எழுதியுள்ள ''செமிட்டுகளின் சமயம் ''என்னும் நூலைப்பார்க்க, பக்கம் 270-271.

கேட்கிறார்கள்: சமபந்தி போஜனத்தில் என்ன இருக்கின்றது? அதில் அனைத்தும் இருக்கிறது என்பதுதான் சமூகவியல் கண்ணோட்டத்தில் இதற்குக் கூறப்படும் பதிலாகும். உறவு என்பது சகோதரத்துவம் என்பதன் சமூக ஒப்பந்தமாகும். அனைத்து ஆவணங்களையும் போல அது அனை வரையும் கட்டுப்படுத்துவதற்கு முன்பு கையொப்பம் இடப்பட்டு, முத்திரையிடப்பட்டு வெளியிடப்பட வேண்டும். கையொப்பமிடல், முத்திரையிடல் மற்றும் வெளியிடல் ஆகியவற்றுக்கான முறையானது மதத்தினால் வகுக்கப்பட்டுள்ள முறையாகும்; அந்த முறையானது என்னவென்றால் பலிதான உணவில் பங்கேற்பதாகும். பேராசிரியர் ஸ்மித் கூறியது போல,*

''மனிதர்கள் ஒன்றாக உண்பதையும், குடிப்பதையும் உள்ளடக்கிய கூட்டிணைக்க வாழ்வு என்பதன் இறுதியான தன்மை என்ன? நம்முடைய சிக்கலான சமுதாயத்தில் கூட்டிணைவு வாழ்வு என்பது பலவகைப்பட்டதாகவும், பல்வேறு அளவுகளிலும் அமைந்துள்ளது: சில காரணங்களுக்காக கடமை கௌரவம் போன்ற பந்தங்களினால் மனிதர்கள் ஒன்றாக இருக்கலாம்; இதர அனைத்து விசயங்களிலும் வெவ்வேறான நிலை எடுத்திருக்கலாம். பண்டைக் காலங்களில்கூட — உதாரணத்திற்குச் சொல்வதென்றால் பழைய ஏற்பாட்டில் கூட — பல்வேறு வகையான செயற்பாடுகளுக்கு முத்தாய்ப்பாக பொதுவான உணவு என்ற புனித மதச்சடங்கு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதை காண்கிறோம். ஆனால் ஒவ்வொரு விசயத்திலும் இத்தகைய செயற்பாடு என்பது முழுமையானது, மீற முடியாதது; அது ஒழுக்கவியல் மொழியில் முழுமையாக அவசியம் செய்ய வேண்டிய கடமையைக் குறிக்கிறது. தற்பொழுது, மிகவும் புராதனமான சமுதாயத்தில் முழுமையான, மீறமுடியாத ஒரேயொரு வகைப்பட்ட கூட்டிணைவு வாழ்க்கைதான் உள்ளது. புராதன மனிதனுக்கு இதர அனைத்து மனிதர்களும் இரண்டு பிரிவுகளின் கீழ் வருபவர்களாகக் காணப்பட்டனர். முதல் பிரிவினருக்கு அவனது வாழ்க்கை புனிதமானது; இரண்டாவது பிரிவினருக்கு அவனது வாழ்க்கை அவ்வாறு புனிதனமானதல்ல. முதலில் சொல்லப்பட்டவர்கள் கூட்டிணைவு வாழ்வில் சக உறுப்பினர்கள்; இரண்டாவது சொல்லப்பட்டவர்கள் அன்னியர்கள், மற்றும் அவனுக்கு எதிரியாகக் கூடியவர்கள்; ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் அவனுடைய அனைத்துத்

---

* அதே புத்தகம் பக் 271-272

தோழர்களுக்கும் புனிதமானது என்ற வட்டத்திற்குள் முதலில் அவர்கள் கொண்டுவரப்பட்டால் ஒழிய அவர்களுடன் எத்தகைய மீறமுடியாத இணைப்பையும் உருவாக்குவது குறித்துச் சிந்திப்பது முட்டாள்தனமாகும்.''

தங்களுடைய தனிமைப்படுத்தலுக்கும் அதிலிருந்து வரும் இடையூறுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வெறும் குடியுரிமை மட்டும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு போதாதென்றால், உறவுமுறை என்பதுதான் ஒரே தீர்வாக இருக்குமென்றால், யாருடைய உறவு முறையை அவர்கள் விரும்புகிறார்களோ அந்த சமூகக்குழுவின் மதத்தை தழுவுவதைத் தவிர வேறெந்த வழியும் கிடையாது.

இதுவரை முன்வைக்கப்பட்ட வாதங்கள் அனைத்தும் தாழ்த்தப்பட்டவர்கள் தனிமைப்படுதல் என்ற பிரச்சினைக்கு மதமாற்றம் எவ்வாறு முடிவுகட்டமுடியும் என்பதைக் காண்பிப்பதற் காகச் சொல்லப்பட்டது. ஆராய வேண்டிய வேறு இரண்டு கேள்விகளும் உள்ளன. முதலாவது கேள்வி மதமாற்றம் அவர்களுடைய தாழ்வு மனப்பான்மையைப் போக்குமா? இந்தக் கேள்விக்கு 'ஆம்' என்ற பதிலைச் சொல்வதற்கு எவரும் தயங்க வேண்டியதில்லை. தாழ்த்தப் பட்டவர்களின் தாழ்வுமனப்பான்மையானது, அவர்கள் தனிமைப் படுத்தப்படுவது, அவர்களுக்கெதிராக பாரபட்சம் காண்பிக்கப்படுவது, நட்புறவற்ற சூழ்நிலை நிலவுவது போன்ற சமூக சூழ்நிலைகளின் விளைவாகும். இவைதாம், தான் உதவியற்றவன் என்ற உணர்வை தாழ்த்தப்பட்டவருக்கு ஏற்படுத்தி தாழ்வுமனப்பான்மைக்கு காரண மாகியுள்ளது; அது தன்னை நிலைநிறுத்திக்கொள்ளும் சக்தியை அவருக்கு இல்லாது செய்துவிடுகின்றது.

தாழ்த்தப்பட்டவர்களின் இந்த மனோபாவத்தை மதம் மாற்றமுடியுமா? மனோவியலாளர்கள் கருத்துப்படி, மதம் சரியான வகைபட்டாதாயிருந்தால் இதைக் குணப்படுத்த முடியும் என்று கருதுகிறார்கள்; அந்த மதமானது அந்த தனிநபரை தரந்தாழ்ந்த, பயனற்ற தாழ்த்தப்பட்டவர் என்று அணுகாமல் சம மனிதன் என்று அணுகினால் தான் இதைக் குணப்படுத்தமுடியும்; இதர மனிதர்களைப்போல தானும் சமஉரிமைபெற்ற மனிதன்தான் என்று அவர் உணர்வதற்கான சாத்தியப்பாடுகளை கொண்டுள்ள ஒரு சூழ்நிலைமையை மதம் அளிக்க வேண்டும்; அவ்வாறானால், தாழ்த்தப்பட்டவர்கள் அத்தகையதொரு மதத்திற்கு மதம் மாறுவது என்பது அவர்களுடைய தாழ்வு மனப் பான்மைக்குக் காரணமான மிக நீண்டகாலத்திய நம்பிக்கையின்மையை ஏன் அகற்றமுடியாது. பேராசிரியர் எல்உட்* இவ்வாறு கூறுகிறார்:

* சமயப் புனருத்தாரணம். பக்கம் 40-41

''மதம் என்பது பிரதானமாக மதிப்பிடும் அணுகுமுறையைக் கொண்டது; மனிதனுடைய கருத்துகளைவிட அவனது விருப்பம் மற்றும் உணர்வை பொதுமைப்படுத்துகிறது. இவ்வாறு விருப்பம் மற்றும் உணர்வை அவனுடைய உலகத்தோடு இணக்கம் கொள்ளச் செய்கிறது. எனவே அது நம்பிக்கையின்மைக்கும் விரக்திக்கும் அளிக்கப்படும் தண்டனையாகும். அது காட்டு மிராண்டிக்கும் அதைப் போன்றே நாகரீகமானவனுக்கும் துணிவூட்டுகின்றது, வாழ்விற்கான போராட்டத்தில் நம்பிக்கை அளிக்கின்றது. நாம் கூறியதுபோல அது அவ்வாறு செய்கிறது; ஏனென்றால் அது ஜீவாதாரமான உணர்வுகளை இணைத்துக் கொள்கிறது. மனோதத்துவவியலாளர்கள் அதற்கான காரணத்தை நமக்குக் கூறுகிறார்கள்; எவ்வாறென்றால் வாழ்வின் அடிமட்ட உணர்வு மையங்கள் அனைத்தும் உயர்மட்ட மையங்களைப் பலப்படுத்தும் பொருட்டு, எதையும் ஏற்கும்பொருட்டு அது ஜீவதாரமான உணர்வுகளை இணைத்துக்கொள்கிறது. மனித மாண்புகளை பிரபஞ்சமாக்குவதென்பதை வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால் உளவியல் - பௌதீகவியல் சொற்களில் கூறுவதென்றால் - அடிமட்ட நரம்பு மையங்கள் அவற்றின் சக்தி அனைத்தையும் உயர்மட்ட நரம்பு மையங்களுக்கு அளிக்கின்றன என்பதாகும்; இவ்வாறு அதனுடைய உட்புறத்தில் வாழ்வின் உயர்ந்த ஜீவதாரத் தன்மையைக் கொண்டு வருகிறது. இவ்விதம் வாழ்வின் நெருக்கடியைச் சந்திக்க மதம் என்பது சக்தியின் புதிய மட்டங்களைப் பயன்படுத்திக்கொள்கிறது; அதேசமயம் உட்புறத்திற்கும் வெளிப்புறத்திற்குமிடையே ஆழமான இணக்கத்தை அது கொண்டு வருகின்றது.''

மதமாற்றம் என்பது தாழ்த்தப்பட்டவர்களின் பொதுவான சமூக அந்தஸ்தை உயர்த்துமா? இந்தக் கேள்வி விஷயத்தில் இண்டு வகை கருத்துகள் இருக்கமுடியும் என்பதைக் காண்பது கடினம்.

ஒரு பெயரில் என்ன இருக்கிறது என்று கேட்ட கேள்விக்கு ஷேக்ஸ்பியரின் அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் விடையானது பெயர் சம்பந்தப்பட்ட பிரச்சினை போதுமான அளவு புரிந்துகொள்ளப் படவில்லை என்பதையே காட்டுகிறது. ஒரு ரோஜாவை மற்றொரு பெயரில் அழைத்தாலும் அது மணக்கும் என்று கூறுவது எப்பொழுது உண்மையாகும் என்றால் பெயர்களுக்கு எவ்வித நோக்கமும் இல்லாமல் மக்கள் பெயர்களை மட்டும் சார்ந்திராமல் ஒவ்வொரு விஷயத்தையும் ஆராயும் சிரமத்தை எடுத்துக்கொண்டு தங்களுடைய பரிசோதனையின் அடிப் படையில் தங்களுடைய கருத்துகளையும், அணுகுமுறைகளையும் உருவாக்கிக் கொள்ளும்போதுதான் அது

உண்மையாகும். துரதிருஷ்ட வசமாக பெயர்கள் ஒரு முக்கியமான நோக்கத்தைக் கொண்டுள்ளன. அவை சமூக பொருளாதாரத்தில் ஒரு மகத்தான பங்கை வகிக்கின்றன. பெயர்கள் என்பவை அடையாளக் குறிகள். ஒவ்வொரு பெயரும் ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றிய குறிப்பிட்ட கருத்துகளையும் எண்ணப்போக்கையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. அது ஒரு 'லேபிள்' அடையாளச் சீட்டு. இந்த அடையாளச் சீட்டிலிருந்து அது என்ன என்பதை மக்கள் தெரிந்து கொள்கிறார்கள். தனித்தனியாக ஒவ்வொன்றையும் ஆராய்ந்து ஒரு குறிப்பிட்ட பொருளுடன் தொடர்புப்படுத்திக் கூறப்படும் கருத்து களும், எண்ணப்போக்குகளும் உண்மையானவைதானா என்று தங்களுக்குத் தாங்களே தீர்மானிக்கும் சிரமத்திலிருந்து அது அவர்களை காக்கின்றது. சமுதாயத் திலுள்ள மக்கள் எத்தனையோ விஷயங்களை ஆராய வேண்டியுள்ளது; எனவே ஒவ்வொரு விஷயமாக ஆராய்வது அவர்களுக்கு சாத்தியப் படாது. அவர்கள் பெயரை வைத்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது; எனவேதான் அனைத்து விளம்பர தாரர்களும் ஒரு நல்ல பெயரைத் தேர்ந்தெடுப்பதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள். பெயர் கவர்ச்சிகரமாக இல்லையென்றால் அந்தப் பொருள் மக்களிடம் விற்பனையாகாது.

'தீண்டப்படாதவர்' என்ற பெயரானது ஒரு கெட்ட பெயராகும். அது அருவருப்பூட்டுகிறது; பயமுறுத்துகிறது; முடைநாற்றம் வீசுகிறது. 'தீண்டப்படாதவர்' என்ற பெயரிலிருந்தே தீண்டப் படாதவர் குறித்து இந்துவின் சமூக அணுகுமுறை தீர்மானிக்கப்பட்டு விடுகிறது. 'தீண்டப்படாதவர்' எவ்வளவு தகுதி பெற்றிருந்த போதிலும் கூட, மக்கள் தீண்டத்தகாதவர் ஒவ்வொருவரின் தனிப்பட்ட தகுதிகள் குறித்து ஆராய விரும்புவதில்லை. தீண்டப்படாதோர் அனைவரும் இதை உணர்கிறார் கள். 'தீண்டப்படாதவர்கள்' என்பதைத் தவிர வேறுசில பெயர்களிலும் அவர்களை அழைக்க முயற்சி நடக்கிறது. சமார்கள் தங்களை ரவிதாஸ் அல்லது ' ஜாதவர்கள்' என்றழைத்துக் கொள்கிறார் கள். தோம்கள் தங்களைச் சில்பக்காரர்கள் என்றழைத்துக் கொள்கின்றனர். பறையர்கள் தங்களை ஆதி-திராவிடர்கள் என்றழைத்துக் கொள்கின்றனர்; மாதிகர்கள் தங்களை அருந்ததியர்கள் என்றழைத்துக் கொள்கின்றனர்; மகர்கள் தங்களைச் சொக்கமேளா அல்லது சோமவம்ஷி என்றும், பங்கிகள் தங்களை வால்மீகிகள் என்றும், வால்மீகிகள் என்றும் அழைத்துக் கொள்கின் றனர். இவர்கள் எல்லாம் தங்கள் பகுதிகளைவிட்டு வேறு இடங்களுக்குச் சென்றி ருக்கும்போது தங்களைக் கிறித்தவர்கள் என்று கூறிக் கொள்கிறார்கள்.

தங்களை தீண்டப்படாதவர்கள் என்று அழைத்துக்கொண்டால் அது உடனே இந்துவின் ஆத்திரம் மற்றும் வெறுப்பிற்குத் தங்களை

ஆட்படுத்திவிடுமென்பதைத் தீண்டப்படாதவர்கள் அறிவார்கள். எனவேதான், அவர்கள் தங்களுக்கு வேறு பெயர்கள் கொடுத்துக் கொள்கிறார்கள்; இதன் மூலம் தங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியாதென்று நினைக்கிறார்கள்.

ஆனால் இது, பெரும்பாலும் இந்த நோக்கத்தில் முற்றிலும் தோல்வியடைந்துவிடுகின்றது. ஏனென்றால் இந்துக்களுக்கு, இந்துவாக இருப்பதென்பதே இறுதியான சமூக வகைப்பிரிவு அல்ல. இறுதியான வகைப்பிரிவு என்பது சாதி, உபசாதி இருக்குமானால் உப-சாதி. இந்துக்கள் ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்ளும்பொழுது 'நீங்கள் யாரென்று நான் தெரிந்து கொள்ளலாமா' என்ற கேள்வி நிச்சயம் கேட்கப்படும். 'நான் ஒரு இந்து' என்பதுமட்டும் இந்தக் கேள்விக்கு திருப்திகரமான பதில் ஆகாது. இறுதியானவிடையாகவும் அது நிச்சயம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அந்தக் கேள்வியானது மேலும் தொடரவே செய்யும். 'இந்து' என்ற விடையைத் தொடர்ந்து அடுத்த கேள்வி வருவது நிச்சயம்: ''என்ன சாதி?'' அதற்கான பதிலைத் தொடர்ந்து வேறொரு கேள்வி எழும்: ''என்ன உப-சாதி'' கேள்வி கேட்கப்பட்டவருடைய இறுதியான சமூக வகைப்பிரிவை - அது சாதியாக இருக்கலாம் அல்லது உப-சாதியாக இருக்கலாம்- தெரிந்த பின்னர்தான் கேள்வி கேட்பவர் நிறுத்துவார்.

புதிய பெயரைத் தனக்குச் சூடிக்கொள்ளும் தீண்டப்படாதவர் தன்னை இனங்கண்டு கூடாதென்பதற்காக அவ்வாறு செய்கிறார்; ஆனால் இடைவிடாமல் துளைத்துத் துளைத்து கேள்வி கேட்கப் படும்பொழுது புதிய பெயர் தனக்கு உதவவில்லை என்பதை கண்டு கொள்கிறார்; அவ்வாறு கேட்கப்படும்பொழுது வேறு வழியின்றி தான் ஒரு தீண்டப்படாதவர் என்பதை அறிவிக்கும்படி நேரிடுகிறது. தானாகவே தனது உண்மையான பெயரைச் சொன்னால் கேட்பவருக்கு ஏற்படும் கோபத்தைவிடத் தனது பெயரை மறைப்பதால் அதிக கோபத்திற்கு அவர் ஆளாகிறார்.

இந்த விவாதத்திலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றன: ஒன்று, தீண்டப்படாதவர்களின் தாழ்ந்த அந்தஸ்து என்பது நாற்றமெடுக்கும் ஒருபெயருடன் இணைந்தே தீரும். இந்தப் பெயர் மாற்றப்பட்டாலொழிய அவர்களுடைய சமூக அந்தஸ்தில் உயர்வதற்கான சாத்தியப்பாடே இல்லை. இரண்டாவது விஷயம் என்னவென்றால் இந்துமத அரவணைப்புக்குள் இருந்து கொண்டு பெயரை மாற்றிக் கொள்வது பயன்தராது. அத்தகைய பெயருக்குள் ஊடுருவிப் பார்க்க இந்து தவறமாட்டார் என்பதுடன் தீண்டப் படாதவர் என்று கூறும்படிச் செய்துவிடுவார்.

பெயரில் பல விஷயங்கள் அடங்கியுள்ளன; அது பலவற்றைச் செய்யும். ஏனென்றால், பெயர் என்பது தாழ்த்தப்பட்டவர்களின் அந்தஸ்தில் ஒரு புரட்சியையே உண்டாக்க முடியும். ஆனால் அந்தப் பெயரானது இந்துமதக்கோட்பாடுகளுக்கு வெளியே உள்ளதும், அதனால் களங்கப்படுத்தி, தாழ்வடையச் செய்ய முடியாததுமான ஒரு சமூகக்குழுவின் பெயராக இருக்க வேண்டும். அந்தப்பெயர் தீண்டப் படாதவர்கள் மதமாற்றத்தை ஏற்றுக்கொண்டால் மட்டுமே அவர் களுடைய சொத்தாகமுடியும். இந்துமதக் கோட்பாடுகளுக்குள் பெயர் மாற்றம் செய்வதென்பது ஒரு கள்ளத்தனமான மாற்றமாகும் என்பதுடன் அதனால் எவ்விதப் பயனும் இல்லை.

மதமாற்றம் குறித்த இந்த விவாதமானது ஓரளவு பொருளற்ற தாகத் தோன்றக்கூடும். அது அவ்வாறுதான் இருக்கும். எந்த மதத்தை தீண்டப்படாதவர்கள் ஏற்க விரும்புகிறார்கள் என்று தெரியும்வரை அது பொருளற்றதாகவே இருக்கும். மதமாற்றத்தினால் என்ன குறிப்பிட்ட நன்மை கிடைக்கும் என்பது தேர்ந்தெடுக்கப்படும் மதத்தையும், அந்த மதத்தினுடைய ஆதரவாளர்களின் சமூகத்தன்மையையும் பொறுத்துள்ளது. மதமாற்றத்தில், ஒருமதம் அவர்களுக்கு அனைத்து மூன்று பலன்களையும் அளிக்கலாம்; மற்றொன்று இரண்டு பலன்களை அளிக்கலாம். மூன்றாவது ஒரே ஒரு பலனை மட்டும் அளிக்கலாம். இந்த அத்தியாயத்தின் ஆய்வுப்பொருளானது தீண்டாமை என்ற பிரச்னையை மதமாற்றம் தீர்க்கமுடியுமா என்பதுதான்.

சொல்லப்போனால் இந்த விவாதத்தின் வலிமையானது மதத்தைக் குறித்த கண்ணோட்டத்தைச் சார்ந்துள்ளது; அது ஒரு வகையில் சாதாரண கண்ணோட்டத்திலிருந்து மாறுபட்டது; சாதாரண கண் ணோட்டம் என்பது கடவுளுடனான மனிதனின் உறவு போன்றவை சம்பந்தப்பட்டதாகும். இந்தக் கண்ணோட்டப்படி, மதம் இருந்து வருவது உயிர்களைக் காக்க அல்ல; மாறாக, சமுதாயத்தையும், தனி நபருடை நலனையும பாதுகாப்பதற்காகத்தான். மதமாற்றம் குறித்து முதலில் சொல்லப்பட்ட கண்ணோட்டத்தை ஏற்றுக் கொள்பவர்கள், மதமாற்றம் என்பது தீண்டாமை என்ற பிரச்சினையை எவ்வாறு தீர்க்கமுடியும் என்பதைப் புரிந்து கொள்ள சிரமப்படுவார்கள். மதத்தைக் குறித்து இந்த அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ள கண்ணோட் டத்தை ஏற்றுக்கொள்பவர்களுக்கு இந்த முடிவின் சரியான தன்மையை ஏற்றுக்கொள்வது சிரமமாக இருக்காது.

□□□

# இயல் 28

# சாதியும் மதமாற்றமும்

சுய-பாதுகாப்பு என்ற உள்ளுணர்வுதான் தற்பொழுது இந்து சமூகத்தில் ஒரு கிளர்ச்சிக்குக் காரணமாகியுள்ளது. ஒரு காலத்தில் அந்த சமூகத்தைச் சேர்ந்த மேல்தட்டுப் பகுதியினர் அதைப் பாதுகாப்பது குறித்து எவ்விதப் பயமுமின்றி இருந்தார்கள். அவர்களுடைய வாதமெல்லாம் இந்து சமூகமானது மிகப்பழைய சமூகங்களில் ஒன்று; அது பல விரோத சக்திகளின் தாக்குதலைத் தாங்கியுள்ளது; எனவே அதனுடைய கலாசாரத்திலும், நாகரிகத்திலும் அதை வாழச் செய்வதற்கான உள் பலமும், திறனும் உள்ளது என்பதாகும். ஆகவே, அவர்களுடைய சமூகம் என்றும் வாழ்ந்தே தீரும் என்ற நம்பிக்கையில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். சமீபத்திய நிகழ்ச்சிகள் இந்த நம்பிக்கையை உலுக்கி விட்டதாகத் தெரிகிறது. சமீபகாலத்தில் நாடு முழுவதிலும் நடைபெற்ற இந்து-முஸ்லீம் கலவரங்களில் ஒரு சிறு குழு எண்ணிக்கையிலான முஸ்லீம்கள், இந்துக்களைத் தாக்கியுள்ளனர் என்பதும் அதுவும் மிகக் கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்பதும் காணப்படுகின்றது. உயிர்வாழ்வதற்கான போராட்டத்தில் இத்தகைய வாழ்வு வாழ்வதில் ஏதாவது மதிப்பு உண்டா என்ற கேள்வி இந்துக்களின் உயர்தட்டுப் பகுதியினரின் சிந்தனையில் பிரதிபலிக்கிறது. பெருமைப்பட்டுக் கொள்ளும் இந்து, உயிர்வாழ்ந்து கொண்டிருப்பது என்பதே தான் உயிர் வாழத் தகுதியுள்ளவர் என்பதை நிரூபிக்கிறது என்று தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கிறார்; அவர், உயிர்வாழ்வது என்பது பலவகைப்பட்டதென்றும், அவை அனைத்தும் சமமான மதிப்பு உள்ளவை அல்ல என்றும் சிந்திப்பதை ஒருபோதும் நிறுத்திய தில்லை. எதிரியை எதிர்த்து முன்னேற்றிச் சென்று அவரை வெற்றி கொள்வதன் மூலம் ஒருவர் வாழமுடியும் அல்லது பின்வாங்கிச் சென்று, பாதுகாப்பான இடத்தில் ஒளிந்து கொள்வதன் மூலம் ஒருவர் வாழ முடியும். ஏதாவதொன்று மூலம் வாழலாம். ஆனால், இவ்விரண்டு முறையில் வாழ்வின் மதிப்பு நிச்சயமாக பெரிதும் வேறுபடுகின்றது. வாழ்வதென்பது முக்கியமானது அல்ல, ஆனால் எவ்வாறு வாழ்வது என்பதுதான் முக்கியமானது. இந்துக்கள், உயிர்வாழலாம், ஆனால் சுதந்திர மனிதர்களாகவா அல்லது அடிமைகளாகவா என்பதுதான் பிரச்சினை. அவர்கள் அடிமைகளாகயிருந்து வாழ்கிறார்களென்று வைத்துக்கொள்வோம்; ஆனால் அவர்கள் **இந்துக்களாக** வாழமுடியுமா

என்பது நிச்சயமற்ற நிலையாக உள்ளது. ஏனென்றால் அவர்கள் முஸ்லீம்களுடனான நேரடிப் போராட்டத்தில் தாக்கப்பட்டது மட்டு மல்ல, **கலாச்சாரப் போராட்டத்திலும்** தாக்கப்பட்டுள்ளனர். சமீப காலத்தில் இஸ்லாமிய கலாச்சாரத்தைப் பரப்புவதற்காக முஸ்லீம்கள் தொடர்ந்து பிரசாரத்தைக் கடுமையாக நடத்தி வருகின்றனர்; அவர்களுடைய மதமாற்ற இயக்கத்தின் மூலம் இந்துக்களிலிருந்து பலரை ஈர்த்து தங்கள் எண்ணிக்கையை அதிகரித்துள்ளனர். அதிர்ஷ்ட வசமாக, முஸ்லீம்களுக்குத் தங்கள் பக்கம் ஈர்க்கக்கூடிய ஏழுகோடி மக்கள் இருக்கிறார்கள்; அவர்கள் இந்துக்கள் என்று வகைப்படுத்தப் பட்ட போதும், அவர்களுக்கு இந்துமதக் கோட்பாடுகளில் திட்டவட்ட மான உறவு கிடையாது; அந்தக் கோட்பாடுகள் காரணமாக அவர் களுடைய நிலைமை சகிக்க இயலாததாகி விட்டது; அவர்களை, இஸ்லாமிய மதத்தில் சேருவதற்குத் தூண்டமுடியும். இவர்களில் சிலர் இஸ்லாமிய மதத்திற்குச் செல்கின்றனர்; மேலும் பலர் செல்லக்கூடும்.

இந்து மேல்தட்டுப்பகுதியினரிடையே ஒரு கலக்கத்தை ஏற்படுத்துவதற்கு இது போதுமானது. மிக அதிக எண்ணிக்கையில் இருக்கும்போதே இந்துக்கள், முஸ்லீம்களை எதிர்க்க இயலவில்லை யென்றால், அதைப் பின்பற்றுபவர்கள் இஸ்லாமிய மதத்திற்கு மாறி இந்துமதத்தின் எண்ணிக்கையைக் குறைக்கும்போது அவர்களுடைய நிலைமை என்னவாகும்? தங்களுடைய மக்களை அவர்களுக்கும், அவர்களுடைய கலாச்சாரத்திற்கும் இழந்து விடுவதினின்று அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று இந்துக்கள் நினைக் கிறார்கள்.

சுத்தி இயக்கம் அல்லது மக்களை இந்துமத கோட்பாடுகளுக்கு மீட்பதென்ற இயக்கத்தின் துவக்கம் இதில்தான் அடங்கியுள்ளது.

பழமைவாதக் கண்ணோட்டத்தைக் கொண்ட சிலர் இந்த இயக்கத்தை எதிர்க்கிறார்கள்; இந்துமதம் என்பது வேறு மதங்களி லிருந்து மக்களை இழுத்து மதமாற்றம் செய்யும் மதமல்லவென்றும், இந்து என்பவன் பிறப்பிலேயே இந்துவாகப் பிறக்கிறான் என்றும் கூறுகிறார்கள். இந்தக் கண்ணோட்டத்திற்கு ஆதரவாகக் கூறுவதற்குச் சில விஷயங்கள் உள்ளன. நினைவு தெரிந்த காலத்திலிருந்தோ அல்லது பரம்பரை பரம்பரையான காலத்திலிருந்தோ மதமாற்றம் செய்யும் பழக்கம் இந்துமதக்கோட்பாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டதில்லை. ஜெர்மனியின் கற்றறிந்த அறிஞரும், கீழ்த்திசை நாடுகளைக் குறித்து கற்றறிந்த அறிஞருமான பேராசிரியர் மாக்ஸ் முல்லர், 1873 ஆம் ஆண்டு

டிசம்பர் மாதம் 3 ஆம் தேதியன்று வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் மதத்தைப் பரப்பும் குழுக்களைக் கொண்ட கூட்டத்தில் பேசினார்; அவ்வாறு பேசும்பொழுது இந்துமதம் என்பது சமயத்தைப் பரப்பும் நோக்கம் கொண்டமதம் அல்ல என்று திட்டவட்டமாகப் பிரகடனப் படுத்தினார். உசிதம் போல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை நம்ப மறுக்கும் பழமைவாதிகள் சுத்தி இயக்கத்தை எதிர்ப்பதற்கு தங்களுக்குப் பலமான பிடி உள்ளது என்று உணர்கிறார்கள்; இந்த இயக்கமானது இந்துமதக் கோட்பாட்டின் பெரும்பாலான அடிப் படையான விதிகளை நேரடியாகவே எதிர்க்கின்றது. ஆனால் சுத்தி இயக்கத்தை நடத்துபவர்களுக்கு ஆதரவு தர நற்பெயர் பெற்றுள்ள பல அறிஞர்கள் உள்ளனர்; அவர்களுடைய கருத்துப்படி இந்துமதம் என்பது மதத்தைப் பரப்பும் நோக்கம் கொண்ட மதமாகவே இருந்து வருகின்றது, இருந்தும் வரும் என்பதாகும். பேராசிரியர் ஜாலி (Prof. Jolly) என்பவர் 'டை அஸ்பிரெய் டுங் டெர் இண்டிசென் புல்சர்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்; அதில், நாட்டின் பூர்வ குடிகளிடையே இந்து மதத்தைப் பரப்புவதற்காக பண்டைக்கால இந்து ஆட்சியாளர்களும், புரோகிதர்களும் கடைப்பிடித்த உபாயங் களையும், வழிகளையும் விரிவாக விவரித்துள்ளார். பேராசிரியர் மாக்ஸ் முல்லருக்குப் பதிலளித்த காலஞ்சென்ற சர் ஆல்பிரட் லியாலும் இந்து மதம் என்பது சமயத்தைப் பரப்பும் நோக்கம் கொண்ட மதமே என்று நிரூபிக்க முயற்சித்துள்ளார்கள். இந்த விஷயம் குறித்த விவாதமானது திட்டவட்டமாக ஜாலி மற்றும் லியாலுக்கு ஆதரவாகவே உள்ளது. இந்துமதம் ஓரளவுக்கு மதத்தைப் பரப்பும் பணியைச் செய்திருக்கிறது என்று நாம் அனுமானித்தாலொழிய ஒரு பரந்த கண்டத்தில் தங்களுக்கென்று தனித்தனியான கலாசாரத்தைக் கொண்டுள்ள வெவ்வேறுபட்ட இனங்கள் வாழும் பகுதியில் அது பரவியிருப்பதற்குக் காரணம் கூறமுடியாது. தவிர, விராட்யர்களின் சுதி போன்ற சடங்குகள் இருந்தன என்று அனுமானித்தாலொழிய யக்ஞங்கள் மற்றும் யாகங்களை விளக்க முடியாது.

எனவே பண்டைக்காலத்தில் இந்துமதம் என்பது மதத்தைப் பரப்பும் நோக்கம் கொண்ட மதமாகவே இருந்துள்ளது என்பதை நாம் நிச்சயம் கூறமுடியும். ஆனால் வரலாற்றுப் போக்கின்போது நீண்ட காலத்திற்கு முன்னரே ஏதோ ஒரு காரணத்தால் அது நின்றுவிட்டது.

நான் ஆராய விரும்பும் விஷயமானது இந்துமதம் ஏன் மதத்தைப் பரப்பும் நோக்கத்தை விட்டுவிட்டது என்பதுதான். இதற்கு பல்வேறு விளக்கங்கள் இருக்கக்கூடும்; நானும் அதற்கேற்ற எனது

சொந்த விளக்கத்தைத் தர விரும்புகிறேன். மனிதன் ஒரு சமூகப் பிராணி என்று அரிஸ்டாட்டில் கூறினார். தனது கருத்திற்கு ஆதரவாக அரிஸ்டாட்டில் கூறிய காரணங்களின் விளக்கம் எதுவாக இருந்த போதிலும் ஒரு விஷயம் உண்மை; தனது சக சமூக உறுப்பினர் களிடமிருந்து முற்றிலும் பிரித்துக்கொண்டு தன்னந்தனி நபராக வாழ்வைத் துவக்குவது என்பது சாத்தியமற்றது என்றளவுக்கு அதில் உண்மை உள்ளது. இந்தச் சமூக பந்தமானது சுய-உணர்வு என்பதன் வளர்ச்சியிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது, அதிலேயே வேர் கொண் டுள்ளது. தன்னைக் குறித்தும் தனது நலன் குறித்தும் ஒவ்வொரு தனி நபருடைய கவலையானது மற்றவர்களையும் அவர்களுடைய நலன்களையும் அங்கீகரிப்பதில் அடங்கியிருக்கிறது. அவர் பின்பற்றும் ஒருவகைப்பட்ட நோக்கங்கள் பரந்த தன்மையுடையதாக இருந் தாலும் சரி அல்லது சுயநலனைக்கொண்டதாக இருந்தாலும் சரி அல்லது சுயநலனைக் கொண்டதாயிருந்தாலும் சரி அவையே இதரர்கள் பின்பற்றும் நோக்கங்கள் ஆகும்.

இந்த அனைத்து விஷயங்களிலும் சமூகஉறவு என்பது தனிநபரின் வாழ்க்கை, நலன்கள் மற்றும் நோக்கங்களின் இயல்பாக அடங்கியுள்ளது. அவருடைய வாழ்வின் அனைத்து நிலைமைகளிலும் சமூக உறவுகளின் ஜீவாதாரமான தன்மையை அவன் உணர்கிறான். சுருக்கமாகச் சொல்வதென்றால் எவ்வாறு நீரின்று மீன் இருக்க முடியாதோ அதேபோல் அவனுக்குச் சமூகம் என்பது இல்லாமல் வாழ்க்கை என்பது ஒருபோதும் சாத்தியமல்ல.

ஒரு சமூகம் பிறரை மதமாற்றம் செய்வதற்கு முன்பாக அன்னியர்கள் அதனுடைய உறுப்பினர்களாக ஆவதற்கும், அதனுடைய சமூகவாழ்வில் பங்கேற்கும்படியாக அனுமதிக்கப்படுவதற்கும் அதனுடைய சட்டதிட்டத்தில் இடமிருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அந்த சமூகத்தில் பிறந்தவர்களுக்கும் அதில் சேர்ந்தவர் களுக்குமிடையில் வித்தியாசமில்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அது ஒவ்வொருவரையும் வரவேற்கத் தயாராகி அதனுடைய வாழ்வில் அவரைப் பங்கேற்க அனுமதிக்கவேண்டும்; அதன் மூலம் அவர் சமுதாயத்தின் உறுப்பினராக வாழ்ந்து வளமடைவதைச் ச்ாத்தியமாக்க வேண்டும். அன்னியரின் மதமாற்றம் குறித்து இத்தகைய தொரு ஷரத்து இல்லையென்றால் அவ்வாறு மதம் மாறியவரை எங்கேவைப்பது என்ற பிரச்சினை உடனே எழும். மதம் மாறியவருக்கு

இடமில்லையென்றால் மதமாற்றத்திற்கான அழைப்பென்பது இருக்க முடியாது; அல்லது அதை ஏற்றுக்கொள்வதென்பதும் இருக்காது.

இந்து சமுதாயத்தில் பிற மதத்திலிருந்து வந்து இந்துமதக் கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டவருக்கு ஏதாவது இடமுண்டா? இந்து சமுதாய அமைப்பென்பது தற்பொழுது சாதிகளைக் கொண்டு குணாம்சப்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு சாதியும் தங்கள் இனத்த வரிடையே மட்டும் திருமணம் செய்யும் வழக்கத்தைக் கொண்டுள்ளன; இதரர்களைக் குறித்த வெறுப்பில் வாழ்கின்றன. வேறு வார்த்தை களில் சொல்வதென்றால் அந்த சாதியில் பிறந்தவர்களை மட்டுமே அதனுடைய உறுப்பினர்களாக அது அனுமதிக்கிறது, வெளியிலிருந்து யாரையும் உள்ளே கொண்டுவர அனுமதிப்பதில்லை. இந்து சமுதாயமானது சாதிகளின் கூட்டமைப்பாக இருப்பதால் ஒவ்வொரு சாதியும் தனக்கென ஒரு வேலி போட்டுக் கொண்டிருப்பதால் அந்த சமுதாயத்தில் வெளியிலிருந்து மதம்மாறி வருபவருக்கு இடமில்லை; ஏனென்றால் எந்த சாதியும் அவரை ஏற்காது. இந்துமதம் ஏன் சமயபரப்புப் பணியை நிறுத்திவிட்ட மதமாக உள்ளது என்ற கேள்விக்குப் பதிலானது அது சாதி முறையை உருவாக்கியுள்ளது என்பதேயாகும். சாதியானது மதமாற்றத்திற்கு ஏற்புடையதல்ல. பெருந்திரளாக மக்கள் மதமாற்றம் செய்யும்வரை இந்து சமுதாயம் அவர்களை மதமாற்ற முடியும்; ஏனென்றால் மதமாற்றம் செய்த வர்கள் பெரும் எண்ணிக்கையில் இருப்பதால் ஒரு புதிய சாதியை உருவாக்க முடியும்; அது, அவர்களுக்கிடையில் சமூக வாழ்வின் ஆக்கக்கூறுகளை அளிக்கமுடியும். பெருந்திரளாக மதமாற்றங்கள் இல்லாத நிலையில் தனி நபர்கள் மட்டுமே மதம் மாறும்போது இந்துமதம் சமய பரப்புப் பணியை நிறுத்த வேண்டியது அவசிய மாகிறது; ஏனென்றால் அதனுடைய சமூக அமைப்பானது உள்ளே வரும் மதமாற்றக்காரருக்கு எவ்வித இடமும் அளிப்பதில்லை.

இந்து சமயம் ஏன் சமயப் பிரசாரத்தை நிறுத்திவிட்ட மதமாக உள்ளது என்ற கேள்வியை ஆழமாக ஆராய்ந்திருப்பது ஒரு புதுமையான விளக்கத்தைக் கூறி சுயமாகச் சிந்தித்திருக்கின் றேன் என்ற பெருமையைப் பெறுவதற்காக அல்ல. நான் இந்தக் கேள்வியை ஆழமாக ஆராய்ந்து அதற்கு பதிலைக் கூறியிருப்பது ஏனென்றால் இவ்விரண்டும் சுத்தி இயக்கத்தின் மீது ஒரு மிக முக்கிய மான விளைவைக் கொண்டுள்ளன என்பதால்தான். இந்த

இயக்கத்தை நடத்துபவர்களுக்காக நான் இரக்கப்படும் அதே நேரத்திலேயே அவர்களுடைய இயக்கத்தின் வெற்றிக்கு குறுக்கே நிற்கும் சிரமங்களை அவர்கள் ஆய்வு செய்யவில்லை என்பதையும் நான் கூற வேண்டும். சுத்தி இயக்கத்தின் பின்னிற்கும் நோக்கம் எதுவென்றால் இந்து சமுதாய உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்து அதனுடைய பலத்தை அதிகரிக்கவேண்டும் என்பதாகும். ஒரு சமூகமானது அதனுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை மிக அதிக மாகயிருப்பதால் மட்டும் பலமானதாகி விடாது; ஆனால் அது திடமான மக்கள் திரளைக் கொண்டதாக இருக்கவேண்டும். திடமாக உருவாக்கப்பட்ட மதவெறியர்களின் குழு துருக்கியர்களிடமிருந்து புனித இடத்தைக் கைப்பற்றுவதற்காகச் சென்றவர்களின் அணி திரட்டப்படாத ஒரு மிகப் பெரும் சேனையை நிர்மூலம் செய்தது போன்ற சம்பவங்களுக்குப் பஞ்சமேயில்லை. இந்து-முஸ்லீம் கலவரங் களில்கூட, இந்துக்கள், அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்த இடங்களில் மட்டுமல்ல, மிக அதிகமாக இருந்த இடங்களிலும் முஸ்லீம்களால் தாக்கப்பட்டனர். உதாரணத்திற்கு மாப்ளாக்களைச் சுட்டிக்காட்டலாம். இந்துக்கள் பாதிக்கப்பட்டிருப்பது எண்ணிக்கை குறைவால் அல்ல, ஆனால் ஒருமைப்பாட்டுக் குறைவால்தான் என்று சுட்டிக்காட்டமுடியும். இந்து சமூகத்தின் ஒருமைப் பாட்டை அதிகரிக்க வேண்டுமென்றால் அதைத் துண்டுதுண்டாக்கியுள்ள சக்திகளைச்சமாளித்தாகவேண்டும். வெறும்சுத்தி இயக்கம் என்பது இந்து சமூகத்தை ஒருங்கிணைப்பதற்குப் பதிலாக, அதை மேலும் சிதைவுறச் செய்துவிடும் என்பதோடு இந்துக்களுக்கு எவ்விதப் பயனுமின்றி முஸ்லீம் சமூகத்தை எரிச்சல் கொள்ளவே செய்யும். சாதிகளை உள்ளடக்கியுள்ள சமுதாயத்தில் சுத்தி இயக்கமானது எந்தக்குழு வோடும் இணையாத ஒரு நபரைக் கொண்டு வருகிறது; எந்தவொரு விசுவாசமும் கொண்டிராத அவர் ஒரு தனிமைபட்டுப்போன, தனித்த வாழ்வு நடத்தவேண்டியிருக்கும். சுத்தி இயக்கமானது சித்தானந்தாவைப் பின்பற்றும் மல்கானா பிரிவு போன்ற மக்கட்திரளை இந்துமதப் பிடிப்பில் கொண்டுவருவதென்றால் அது இன்றுள்ள சாதிகளின் எண்ணிக்கையில் மேலும் ஒரு சாதியைத்தான் சேர்க்கும். சாதிகள் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க இந்து சமூகத்தின் தனிமைப்படலும் அதிகரிக்கும். பலவீனமும் அதிகரிக்கும். இந்து சமூகம் வாழ விரும்பினால் அது தன்னுடைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும் என்று சிந்திக்கக்கூடாது; மாறாக, அதனுடைய ஒருமைப்பாடு அதிகரிக்கவேண்டும் என நினைக்க வேண்டும்; அதன்

பொருள் என்னவென்றால் சாதியை ஒழிக்கவேண்டும் என்பதாகும். சாதிகள் ஒழிப்பு என்பதே இந்துக்களின் உண்மையான சங்காதன் ஆக இருக்கும்; சாதிகளை ஒழிப்பதன் மூலம் சங்காதன் அடையும்போது சுத்தி என்பது தேவையற்றது; அப்படியும் தொடருமானால் அது உண்மையான பலத்திற்கு ஆதாயமாக அமையும். சாதிகள் இருக்கும் பொழுது அது காரிய சாத்தியமற்றது; அப்படியும் தொடருமானால் அது இந்துக்களின் சங்காதனத்திற்கும் மற்றும் ஒருமைப்பாட்டிற்கும் தீங்காக அமையும். ஆனால் இந்து சமூகத்தின் மிகப் புரட்சிகாரரும் சாதியை ஒழிக்கவேண்டுமென்று கூறும் கருத்தைக் கேட்டுக் கூச்சப் படுகிறார்; அத்துடன், பிற மதத்திற்கு மாறிய இந்துக்களை மீண்டும் மதமாற்றம் செய்யவேண்டும், உணவுப்பழக்கத்தை மாற்றவேண்டும், அகதாஸ்களை ஆரம்பிக்க வேண்டும் என்பன போன்ற அற்பமான கருத்துகளை உபதேசிக்கிறார். தங்களுடைய சமூகத்தைப் பாதுகாத்துக் கொண்டே தங்களுடைய சாதியையும் வைத்திருக்கமுடியாது என்பது இந்துக் களுக்கு ஒரு நாள் புரியும், அந்த நாள் வெகு தொலைவில் இல்லை என்று நம்புவோமாக!

□□□

## இயல் 29

# தீண்டப்படாதவர்களைக் கிறித்தவர்களாக்குவது

**1. இந்தியாவில் கிறித்தவத்தின் வளர்ச்சி 2. மதத்தைப் பரப்பும் பணிக்குச் செலவிடப்பட்ட நேரம் மற்றும் பணம் 3. வேகமற்ற வளர்ச்சிக்கான காரணங்கள்**

## 1

இந்தியாவிற்குள் கிறித்தவ மதம் வந்து எவ்வளவு கால மாகிறது? இந்திய மக்களிடையே அது என்ன முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது? இத்தகைய கேள்விகளைத் தீண்டப்படாதவர் களைக் குறித்து அக்கறை கொண்டுள்ள எவரொருவரும் கேட்கத் தவறமாட்டார்கள். இவ்விரு கேள்விகளும் மிக நெருக்கமாகத் தொடர்புடையவையாகும்; எவ்வாறென்றால் ஏராளமாக உள்ள தீண்டப்படாத மக்கள் இந்தியாவில் இல்லையென்றால் கிறித்து வத்தைப் பரப்புவதென்ற முயற்சியே நம்பிக்கையற்றுப் போயிருக்கும்; விநோதமான சூழ்நிலை களில் வாழும் இந்த மக்கள், கிறித்தவ மதம் வெளிப்படுத்தும் சமூகக் கண்ணோட்டத்திற்குச் செவிமடுக்க மிகவும் தயாராயிருப்பவர்கள்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் இந்திய கிறித்த வர்கள் குறித்த மக்கட்தொகை விபரத்தை இந்தியாவில் உள்ள இதர சமூகங்களோடு ஒப்பிட்டுக் காட்டும்; இது 1931 ஆம் வருடத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டது.

## இந்தியாவும் பர்மாவும்

| மதவாரியாக மக்கட்தொகை | 1891 ஆம் வருடக் கணக் கெடுப்பு | 1921 ஆம் வருடக் கணக் கெடுப்பு | 1931 ஆம் வருடக் கணக் கெடுப்பு | அதிகம் குறைவு |
|---|---|---|---|---|
| இந்துக்கள் | | 216,734,586 | 239,195,140 | + 10.4 |
| முஸ்லீம்கள் | | 68,735,233 | 77,677,545 | + 13 |
| பௌத்தர்கள் | | 11,571,268 | 12,786,806 | +10.5 |
| சீக்கியர்கள் | | 3,238,803 | 4,335,771 | +33.9 |
| பூர்வகுடி மதத்தினர் | | 9,774,611 | 8,280,347 | -15.3 |
| கிறித்தவர்கள் | | 4,754,064 | 6,296,763 | 32.5 |
| ஜைனர்கள் | | 1,178,596 | 1,252,105 | +6.2 |
| பாரசீக மதத்தினர் | | 1,01,778 | 1,09,752 | +7.8 |
| யூதர்கள் | | 21,778 | 24,141 | +10.9 |
| சரியான தகவல் தராதவர்கள் | | 18,004 | 2,860,187 | ,, |
| மொத்தம் | | 316,128,721 | 352,818,557 | +10,6 |

1921 மற்றும் 1931 ஆம் ஆண்டுகளுக்கிடையே கிறித்தவ மதம் பெரும் வளர்ச்சிபெற்றது என்பது உண்மைதான். வளர்ச்சி என்று நோக்கும்பொழுது சீக்கியமதம் முதலிடம் பெறுகிறது. கிறித்தவ மதம் இரண்டாவது இடத்தையும், மதமாற்றம் செய்யும் மற்றொரு மதமான இஸ்லாம் மூன்றாவது இடத்தையும் பெறுகிறது. முதலாவது சொல்லப்பட்டதற்கும் இரண்டாவது சொல்லப்பட்டதற்குமான வித்தியாசம் என்பது மிகக் குறைந்தளவேயாகும்; எனவே இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ள கிறித்தவ மதமும் முதலிடத்தைப் பெற்றுள்ள தென்பதாகக் கருதலாம். இரண்டாவதாகச் சொல்லப்பட்டதற்கும்

மூன்றாவதாக சொல்லப்பட்ட இஸ்லாம் மதத்திற்குமிடையிலான வித்தியாசம் மிக அதிகமாகும்; எனவே ஒரு கடுமையான எதிராளியுடனான போட்டியில் மிகப் பெருமளவுக்கு முந்திக்கொண்டோம் என்றுகூடக் கிறித்தவர்கள் பெருமைப்படலாம்.

இவையனைத்தும் இருந்தபோதிலும்கூட மொத்த எண்ணிக்கையிலான 352,818,557 என்பதோடு ஒப்பிடும்பொழுது கிறித்துவர்கள் எண்ணிக்கை 6,296,763 என்ற அளவிலேயே உள்ளது. இதன் பொருள் இந்தியக் கிறித்துவ மக்களின் எண்ணிக்கை, நாட்டு மக்களின் மொத்த எண்ணிக்கையில் 1.7 சதவீதம் என்பதேயாகும்.

## 2

எத்தனை வருடங்களுக்குப்பிறகு, எவ்வளவு செலவிற்குப் பிறகு, இது நடந்துள்ளது? செலவைப் பொறுத்தமட்டில் சரியான தொகையைக் குறிப்பிடுவது சாத்தியமல்ல. திரு ஜார்ஜ் ஸ்மித் என்பவர் 1893 ஆம் ஆண்டில் வெளியிட்ட ''இந்தியாவில் மதமாற்றம்'' என்ற தமது புத்தகத்தில் பல புள்ளி விவரங்களைத் தருகின்றார்; கிறித்தவ மதம் பரவாத நாடுகளில் தங்கள் மதத்தைப் பரப்புவதற்காகக் கிறித்தவ நாடுகள் செலவிட்ட நிதியாதாரங்களைக் குறித்தவை இந்தப் புள்ளிவிவரங்கள். அவர் சொல்லுவதெல்லாம் இதுதான்:

''குறிப்பாகக் கிழக்கிந்தியத் திருச்சபைகளின் ஆதிக்கத்திலுள்ள ஆசிய மற்றும் வடக்கு ஆப்பிரிக்க நாடுகளில் அவர்கள் மேற்கொள்ளும் உத்வேகமிக்க முயற்சிகளையும் அவர்களுக்காக அமெரிக்கர்கள் ஏராளமாகச் செய்துவருவதையும் நாங்கள் கணக்கிலெடுத்துக்கொள்ளவில்லை. பரிசுத்த நம்பிக்கை மற்றும் வாழ்க்கையைக் கொண்ட கிறித்தவர்கள், கிறித்தவர்களுக்காகப் பாடுபடுவதையும் நாங்கள் கணக்கிலெடுத்துக்கொள்ளவில்லை. தங்களுடைய கணவன்மார்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சமயப் பிரசாரகர்களின் மனைவிகளையும் நாங்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. இவ்வாறு, டேனிஷ் மதப்பிரசாரக் கழகத்தின் தலைவரான ரெவரண்ட் ஜே.வாஹல், விபரங்கள் அளித்துள்ளார். சரியான விவரமென்று நாம் அதை ஏற்கிறோம்; செலவு தவிர்க்க இயலாத இடங்களில் மிக ஜாக்கிரதையாக அதை மதிப்பட்டுள்ளோம். துருக்கியிலும், எகிப்திலும் முஸ்லீம்களிடையில் செய்த பணி மட்டும் கணக்கிலெடுக்கப் பட்டுள்ளது.

| | 1890 | 1891 |
|---|---|---|
| வருமானம் (ஆங்கிலேய பணம்) | 2,412938 | 2,749,340 |
| மதப்பிரசாரகர்கள் | 4,652 | 5,094 |
| ,, ,, ,, (திருமணமாகாத பெண்கள்) | 2,118 | 2,445 |
| சுதேசி மதகுருக்கள் | 3,424 | 3,730 |
| இதர சுதேசி உதவியாளர்கள் | 36,405 | 40,438 |
| பிரசாரகர்கள் | 966,856 | 1,168,560 |

1892 ஆம் ஆண்டுக்கான விபரங்களை நாம் விரிவாக மதிப்பீடு செய்யவில்லை. ஏனென்றால் அவை இனிமேல்தான் கிடைக்க வேண்டும். அதேபோன்றுதான் 1893 ஆம் ஆண்டுக்கான விவரங்களை யும் மதிப்பிடவில்லை. வல்லுநர்கள் இதைத் தாங்களாகவே செய்து கொள்ளலாம். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நாம் கூறலாம்; இவ்விரு ஆண்டுகளிலும் சுதேசி பிரசாரகர்கள் எண்ணிக்கை மிக அதிகளவு அதிகரித்துள்ளது; அதிலும் குறிப்பாக இந்தியாவில் இவ்வாறு அதிகரித்துள்ளது. அதையும் கணக்கிலெடுத்துக் கொண்டு அவர்கள் எண்ணிக்கையை 13 லட்சம் என்று நிச்சயிக்கலாம்; இது, கத்தோலிக்க நாடுகளுக்கு வெளியில் உள்ள சுதேசிக் கிறித்துவ சமூகத்தைச் சேர்ந்த வர்கள் எண்ணிக்கையை 52 லட்சமாக ஆக்கும்.

மதகுரு வெஹலுடைய புள்ளிவிவரமானது 304 மதப்பிரசார கழகங்கள் மற்றும் அமைப்புகளிடமிருந்து 1891 ஆம் ஆண்டில் கிடைத்த அறிக்கையிலிருந்து பெறப்பட்டதாகும்; இது, அமெரிக்காவுக்கென 1649 ஆம் ஆண்டில் கிராம்வெல் துவக்கிய புதிய இங்கிலாந்து நிறுவனத் திலிருந்து துவங்குகின்றது. அடுத்த பக்கத்தில் கிறித்தவமதம் 17 நாடுகளில் சீர்திருத்தப் பணிகளை மேற்கொண்ட விபரங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. ஆங்கிலேய சாம்ராஜ்யத்திற்குட்பட்ட 160 மதப்பிரசார சர்ச்சுகளும், கழகங்களும் 1891 ஆம் ஆண்டில் 16,59,830 பவுண்டு பணத்தைத்திரட்டின; இதே நேரத்தில் ஐக்கிய அமெரிக்க நாட்டின் இத்தகைய 57 அமைப்புகள் 7,86,992 பவுண்டு பணத்தைத்

திரட்டின. மொத்தத்தில், கிறித்தவரல்லாத உலகைக் கிறித்தவமய மாக்குவதற்காக ஆங்கிலமொழி பேசும் இவ்விருநாட்டுமக்களும் மொத்தத்தில் 24,46,822 பவுண்டு பணத்தைச் செலவிட்டுள்ளனர். மீதமுள்ள 3.02,518 பவுண்டு பணமும் ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, டென்மார்க், பிரான்ஸ், நார்வே, சுவீடன், பின்லாந்து மற்றும் ஆசியாவினால் கொடுக்கப்பட்டதாகும்.''

இந்த நோக்கத்திற்காக இப்பொழுது பயன்படுத்தப்பட்டுவரும் நிதியாதாரங்களைக் குறித்து எவ்வித விபரத்தையும் தருவது இயலாத காரியம்; ஏனென்றால் அவை பிரசுரிக்கப்படவில்லை. ஆனால், இந்த 60 லட்சம் மக்களைக் கிறித்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்ய எத்தனை வருடங்கள் பிடித்தன போன்றவை குறித்து நம்மிடம் போதுமான விபரங்கள் உள்ளன.

இந்தியாவிற்கு வந்து இங்கே முதன்முதலாகக் கிறித்தவ மதத்திற்கான விதையை விதைத்தவர் குறித்து எவ்வித ஆவணமும் இல்லை. இந்தியாவில் கிறித்தவ மதம் என்பது தேவதூதரின் உபதேச வகைப் பட்டதுவக்கத்தைக்கொண்டிருந்ததென்றும் ஏசு கிறித்துவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான தாமஸ் அதைத் துவக்கினார் என்றும் கூறப் படுகின்றது. சென்னையில் உள்ள செயின்ட் தாமஸ் மலையில் இந்த சீடர் அடக்கம் செய்யப்பட்டு அந்த இடமே செயின்ட் தாமஸ் மலை என்று அழைக்கப்பட்டுவந்தாலும்கூட இந்தியாவில் கிறித்தவ மதம், இந்தத் திருத்தூதரால் துவக்கி வைக்கப்பட்டதாகக் கூறப்படுவது செவிவழி வந்த கதையாகவே உள்ளது. இந்தியாவில் முதலாவது நூற்றாண்டிலேயே கிறித்துவ மதக் கருத்துக்கள் பிரச்சாரம் செய்யப் பட்டன என்பதற்கு நம்பத்தகுந்த சாட்சியம் கிடையாது. இரண்டாவது நூற்றாண்டில் தென்னிந்தியக் கடற்கரையோரப் பகுதியில் வசித்து வந்தவர்கள், இலங்கையின் முத்துக் குளிப்பவர்கள், மலபார் மற்றும் கிழக்குக்கடற்கரையோரப் பகுதியில் வசித்து வந்த விவசாயிகள் ஆகியோரின் செவிகளில் இந்தக் கிறித்தவ மதப்பிரசாரம் விழுந்துள்ளது என்பதற்குச் சில சான்றுகள் உள்ளன. எகிப்திய மாலுமிகளால் இந்தத்தகவல் கொண்டுவரப்பட்டு, அது அலெக்ஸாண்டிரியாவி லிருந்த கிறித்துவர்களிடையே பரவியது. அலெக்ஸாண்டிரியாதான், கிறித்துவ மதப்பிரசாரகர் ஒருவரை இந்தியாவிற்கு முதன்முதலாக அனுப்பியது; அவர் பெயர் பென்டோனியஸ் என வரலாற்று ஆவணங்களில் பதிவாகியுள்ளது; அந்தப் பிரசாரகர் கிரேக்கத்தில் பரவியிருந்த ஸ்டாயிக் என்ற தத்துவப்பிரிவைச் சேர்ந்தவர். பின்னர் அவர் கிறித்தவரானார். அதன்பின்னார், அவர் கிறித்தவ மதக்

கோட்பாடுகளையும், விபரங்களையும் பயிற்றுவிக்கும் பள்ளியின் கிறித்துவ மதத்தில் சேரவிரும்பும் மாணவர்களுக்கு போதிப்பதற் கான பள்ளியின் ஒரே ஆசிரியராகவும், முதல்வராகவும் அலெக்ஸாண் டிரியாவின் தலைமை பிஷப் டெமட்ரியஸினால் நியமிக்கப்பட்டார்; இந்தப் பள்ளியானது கிறித்தவமதம் பரவாத நாடுகளில் கிறித்தவ மதக்கோட் பாடுகளைப் போதிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். 180 மற்றும் 190 ஆம் ஆண்டுகளுக்கிடையே ஒரு சந்தர்ப்பத்தில் இந்தியாவிலிருந்த கிறித்தவர்களிடமிருந்து அலெக்ஸாண்டரியாவின் பிஷப்புக்கு ஒரு வேண்டுகோள் வந்தது; ஒரு மதப்பிரச்சாகரைத் தங்களுக்காக அனுப்ப வேண்டுமென்று அவர்கள் கோரியிருந்தனர். அதன் காரணமாக பென்டேனியஸ் அனுப்பப்பட்டார். அவர் இந்தியாவில் எவ்வளவு காலம் இருந்தார், உள்நாட்டிற்குள் எவ்வளவு தூரம் பயணம் செய்தார், உண்மையில் அவர் என்ன செய்தார் என்பது குறித்து எந்த விவரமும் இல்லை. தெரிந்த விபரமெல்லாம், அவர் அலெக்ஸாண் டிரியாவிற்குத் திரும்பிச்சென்று அவருடைய பள்ளியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதன் முதல்வராக கி.பி.211 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து இருந்தார் என்பதுதான்.

இந்திய மண்ணில் மூன்றாவது நூற்றாண்டில் கிறித்தவ மதப்பிரச்சாரம் எந்தளவுக்கு முன்னேறியிருந்தது என்பது குறித்து விபரங்கள் இல்லை. ஆனால் ஒரு விஷயம் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டிய தகுதியைப் பெறுகின்றது. பேரரசர் கான்ஸ்டன்டைன் ஜோஹன்னஸ் கிறித்தவ மதத்திற்கு மதம் மாறியபின்பு, கி.பி 325 ஆம் ஆண்டில் நிகாகாவின் கவுன்சில் கூடியபொழுது அங்கே குழுமியிருந்த மதக்குருக்களில் ஒருவர் ''பெர்ஷியா மற்றும் இந்தியாவிற்கான தலைமைக் குரு'' என்று தன்னை வர்ணித்துக்கொண்டார். இந்த அம்சமானது இந்தியக் கடற்கரையோரப் பகுதிகளில் கணிசமான அளவிலும், குறிப்பிடத்தக்க விதத்திலும் கிறித்தவத் திருச்சபை இருந்த தென்பதை உணர்த்துகின்றது. மறுபுறத்தில் இது, இந்திய பெர்ஷிய சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணம் என்று திருச்சபை கூறுவதை மறைமுக மாகக் குறிப்பிடுகிறது. இக்கூற்று எஸ்தர் புத்தகத்தில் உள்ளது. இந்தக் காட்சி அலெக்ஸாண்டிரியாவிலிருந்து அன்டியாச்சிற்கு மாறியது. மூன்றாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து ஐந்தாம் நூற்றாண்டின் முடிவுவரை இந்நகரம்தான் கிறித்தவ மதப்பரசாரம் செய்யும் சுமையை தனது தோளில் தாங்கிக் கொண்டது.

ஆறாவது நூற்றாண்டானது கிறித்தவப் பிரசாரத்தின் கடைசி அமைதியான வருடமாகும். இது ஒரு சகாப்தத்தின் முடிவை குறிப்ப தாகவே உள்ளது. இதைத் தொடர்ந்து இஸ்லாமியர்கள் தலைதூக்கினர்.

அவர்கள் முகமதுவின் குரானையும் வாளையும் எடுத்துக்கொண்டு மேற்கு ஆசியா மற்றும் வடக்கு ஆப்பிரிக்கா முழுவதும் வியன்னா வரை சென்றும், ஸ்பெயினிலிருந்து பிரான்ஸ் நாட்டின் மையப்பகுதி வரை சென்றும் ஐரோப்பாவை அச்சுறுத்தினர். இதன் விளைவாக கிறித்தவ மக்களின் கவனம் முழுவதும் திசை திருப்பப்பட்டு மதத்தைப் பரப்பும் அவர்களுடைய முயற்சி பல நூற்றாண்டுகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது.

1497 ஆம் ஆண்டில் வாஸ்கோட காமாவின் இந்தியப் பயண மானது இந்தியாவில் கிறித்தவப் பிரச்சார வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தின் துவக்கத்தைக் குறித்தது; 1542 ஆம் ஆண்டில் பிரபல மதப்பிரசாரகர் பிரான்சிஸ் சேவியர் வருகையிலிருந்து மிகவும் கடுமை யான, உறுதியான முயற்சிகள் துவங்கின. போர்த்துக்கீசியர்கள்தாம் கீழ்த்திசைநாடுகளில் முதலாவது ஐரோப்பிய சக்தியாவர்; இந்திய சுதேசிமக்களை கிறித்தவர்களாக்குவதான திசைவழியில் நவீன காலத்தின் ஆரம்பகால முயற்சிகள் அவர்களுடைய ஆதரவிலேயே நடைபெற்றன. போர்த்துக்கீசியர்களின் ஆதரவினால் நடத்தப்பட்ட மதமாற்றங்கள் என்பவை ரோமன் கத்தோலிக்க நம்பிக்கைக்கு செய்யப்பட்ட மதமாற்றங்களாகும்; இவை ரோமன் கத்தோலிக்க மதப்பிரச்சார அமைப்புகளால் செய்யப்பட்டன.

எனினும், அவர்கள் விரோதிகள் இல்லாமல் நீண்டகாலம் இருக்க முடியவில்லை. பிராடஸ்டெண்ட் பிரிவினர் வெகுவிரைவில் களத்திற்கு வந்தனர். துவக்கக்கால பிராடஸ்டண்ட் மதப்பிரச்சாரம் லூதர்களால் செய்யப்பட்டது. டென்மார்க் அரசனின் ஆதரவோடு வந்த அவர்கள் 1706 ஆம் ஆண்டில் தரங்கம்பாடியில் தங்களை நிலைநிறுத்திக்கொண்டனர். மிகத் திறமையானவரும், அர்ப்பணிப்பு உணர்வு கொண்டவருமான ஸ்வார்ட்ஸ் என்பவர் 18 ஆவது நூற்றாண்டின் இரண்டாவது பகுதியில் திருச்சியிலும் தஞ்சை யிலும் கடுமையாக உழைத்தார். இந்த மதப்பிராக் குழுவின் உறுப்பினர் அவர். பின்னர் அந்தக் குழுவின் பணி மிகப்பெருமளவிற்குக் கிறித்துவ மதப் பிரச்சாரக் கழகத்தினால் எடுத்துக்கொள்ளப்பட்டது.

பின்னர் கேரே தலைமையில் பாப்டிஸ பிரச்சாரக் குழு வந்தது; இது 1793 ஆம் ஆண்டில் கல்கத்தாவில் வந்திறங்கியது. கடைசியாக வந்தவர்கள் இங்கிலாந்து திருச்சபையினர்; இவர்கள் 1813 ஆம் ஆண்டில் மதத்தைப் பரப்பும் பணியில் இறங்கினர்; அதிலிருந்து மதத்தைப் பரப்பும் பணி வேகமாகவும், தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறு கிறித்தவப் பிரச்சாரமென்பது இந்தியாவில் நீண்டகாலமாகவே நடைபெற்றுவருகின்றது. இந்தப் பிரச்சார நடவடிக்கையில் உடைப்பை ஏற்படுத்திய இஸ்லாமியர்கள் தோன்றுவதற்கு முன்னர், நான்கு நூற்றாண்டுக்காலம் கிறித்தவ மதத்தைப் பரப்புவதற்காகக் கிடைத்தது. இஸ்லாமிய வேகம் தணிந்த பின் கிறித்தவ மதத்தைப்பரப்புவதற்கு மீண்டும் நான்கு நூற்றாண்டுகள் கிடைத்தன. இவ்வாறு 800 ஆண்டுகளில் மொத்தம் 60 லட்சம் கனிகள் தான் கிடைத்தன. உண்மையில் இது மிகவும் மனச்சோர்வைத் தரும் பலன்தான். அது பிரான்சிஸ் சேவியரை சோர்வடையச் செய்தது; அபே துபாயிசையும்கூட சோர்வடையச் செய்துவிட்டது; சேவியருக்குப்பின் 300 ஆண்டுகள் கழிந்தபின்பு அபே துபாயிஸ் செய்த பிரகடனத்தில் இந்துக்களை கிறித்தவ மதத்திற்கு மாற்றுவது என்பது வீணாண நம்பிக்கை என்று கூறினார். அதற்காக அவர் மதமாற்ற முயற்சியில் மிகவும் நம்பிக்கைகொண்டிருந்த மதப்பிரச்சாரகர்களால் விமர்சிக்கப் பட்டார்; ஆனால் உண்மை என்னவென்றால் இந்தக்கால கட்டத்தின் முடிவில் மொத்தமுள்ள 35 கோடியே 80 லட்சம் மக்களில் 60 லட்சம் மக்கள் மட்டுமே கிறித்தவர்களாயிருந்தனர். சொல்லப்போனால் இது ஒரு மெதுவான வளர்ச்சிதான்; ஆனால் கேள்வி என்னவென்றால் இந்த மெதுவான வளர்ச்சிக்கு என்ன காரணம் என்பதாகும்.

## III

கிறித்தவ மதத்தின் வளர்ச்சிக்கு மூன்று காரணங்கள் வேகத் தடை போட்டுள்ளன என்று எனக்குத் தோன்றுகிறது. இவற்றில் முதலாவது காரணம் இந்தியாவில் ஆரம்ப காலத்தில் குடியேறிய ஐரோப்பியர்களின், அதிலும் குறிப்பாக கிழக்கிந்திய கம்பெனியால் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட ஆங்கிலேயர்களின் ஒழுக்கக் கேடுகளேயாகும். கிழக்கிந்திய கம்பெனிக்காகப் பரிந்து பேசுபவர்களில் ஒருவரும், அதன் ஊழியர்களில் ஒருவருமான கேயி என்பவர் தன்னுடைய ''இந்தியாவில் கிறித்தவமதம்'' என்ற நூலில் இந்தியாவிற்கு அனுப்பப்பட்ட இத்தகைய நபர்களின் நடத்தையை பின்வருமாறு விவரிக்கிறார்:

'' ...... அவர்களிடையே நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த சில நேர்மையான, கண்ணியமான மனிதர்களும் இருந்தார்கள் என்பதில் ஐயமில்லை..... ஆனால் சமகால எழுத்தாளர்கள் எழுதியவற்றிலிருந்து பார்க்கும்பொழுது பலர் சமூகத்தின் மோசமான

இளைஞர்களாக காணப்படுகின்றனர்; ஒருக்கால் அவர்கள் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருந்து அந்தக் குடும்பத்திற்கே அவமானச் சின்னமாக இருந்திருக்கலாம்; இந்தியாவிற்குச் சென்றவர்கள் அங்கிருந்து கெட்டுப்போனவர்களாக யாரும் திரும்பி வர மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் அங்கிருந்து அவர்கள் அனுப்பப் பட்டிருக்கலாம். தங்கள் நாட்டிலேயே கெட்டபெயர் சம்பாதித்துக் கொண்டவர்கள் அயல்நாட்டில் கௌரவமான வாழ்க்கை நடத்துவார்கள் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது.

★★★

''உண்மையில் ஒழுக்கத்தோடும் கண்ணியத்தோடும் நடந்து கொள்ள வேண்டும் என்ற வெளிப்படையான நோக்கம்கூட அவர்களிடம் இல்லை. இந்திய கடற்கரையில் இறங்கிய வினாடியிலிருந்து முதல் குடியேற்றக்காரர்கள், தங்களுடைய சொந்த கிராமத்தில் தங்களை கட்டுப்படுத்தி வைத்திருந்த இத்தகைய பந்தங்களை உதறி எறிந்தார்கள்; சலுகை பெற்ற மனிதர்களாகவே தங்களை கருதிக் கொண்டார்கள்; மதம் மற்றும் ஒழுக்க நியதிகள் அனைத்தையும் மீறுவதற்கும், வாழ்வின் கண்ணி யத்தை நாசம் செய்வதற்கும் சலுகை பெற்ற மனிதர்களாகவே தங்களைக் கருதிக் கொண்டார்கள். அங்கே சென்றவர்கள் பெரும்பாலும் வாழ்வில் நம்பிக்கை இழந்த முரட்டுச் துணிச்சல்காரர்கள். பைபிள் வாக்கியத்தில் அழுத்தமாகக் கூறுவதென்றால் அவர்களெல்லாம் இங்கிலாந்திலிருந்து களையெடுத்து அனுப்பப்பட்டவர்கள்; தங்களது இழந்த செல்வத்தை மீட்பதற்காக கீழ்த்திசையின் தங்கமணலை நாடியவர்கள்; இழிவான அவப்பெயரை பிறர் மறக்கச் செய்வதற்காகச் சென்றவர்கள்; அல்லது தங்கள் நாட்டில் தங்கள் திறமையின் மூலமோ உழைப்பின் மூலமோ செல்வத்தைப் பெறும் தகுதியைப் பெற்றி ராதவர்கள்; அதை சட்டவிரோதமான வழியில், பலவீனமானவர்கள் மற்றும் அப்பாவிகளிடமிருந்து பறித்து வரச்சென்றவர்கள். அவர்கள் மோசடிகள் செய்தார்கள்; சூதாடினார்கள்; குடித்தார்கள்; அவர்கள் அனைத்து வகைப்பட்ட தீயொழுக்கத்திலும் ஊறித்திளைத்தார்கள். தீமையின் கூட்டாளிகளான அவர்கள் பேராசை என்ற ஒரு பொதுவான பந்தத்தினால் ஒன்றாக இணைக்கப் பட்டார்கள்; இருந்தும் ஒருவரோடு ஒருவர் வன்மமும் பகைமையும் பாராட்டினார்கள். எண்ணிக்கையியல் அவர்கள் வெகுகுறைவாக இருந்தாலும் குற்றம் புரிவதைத் தவிர வேறெதிலும் அவர்களிடையே ஒற்றுமை இல்லை.''

*'' இவையனைத்தும் புதிதாக வந்திருப்பவர்களுக்கு எதிராகக் கூறப்படுவது; ஆகையால் சீரழிந்தவர்கள் திருந்துவதற்கு எவ்விதத் தூண்டுகோலும் கிடையாது; தவறிழைக்காதவர்கள் ஊழலிலிருந்து அபூர்வமாக தப்பினார்கள். இந்த நாசகரமான தவறை அவர்கள் அங்கேதான் கற்றுக்கொண்டார்களா அல்லது அதில் ஈடுபட்டார்களா என்பதிருக்கட்டும், அவர்களும் சூழ்நிலைக்குப் பலியானவர்களாகவே கருதப்பட வேண்டும்.''*

*துவக்ககாலத்தில் அங்கே சென்ற கிறித்தவர்களின் ஒழுக்கமும், என்பதை திரு. கேயி மேற்கோள்காட்டும் பின்வரும் சம்பவங்களிலிருந்து அறியலாம்.*

*''1669ஆம் ஆண்டில் பம்பாயின் உதவி-கவர்னர் பின்வருமாறு குற்றஞ்சாட்டப்பட்டார்:*

*''ஞாயிற்றுக்கிழமையன்று வல்லமைமிக்க கடவுளை மக்கள் பிரார்த்திக்க வேண்டிய நேரத்தில் அவர் அதற்கு இடையூறு செய்தார்; தொடர்ந்து குடித்துக்கொண்டேயிருந்தார்; இதரர்களையும் அவர்கள் விருப்பத்திற்கு மாறாக நிறுத்திவைத்தார்; அவர் குடிபோதையில் இருந்தபோது முழந்தாள் படியிட்டு அரசாங்கத்தின் நலனுக்கெனப் போலியான பிரார்த்தனை செய்தார்; இறைவனுக்குரிய நாளில் அவருக்குப் பிரார்த்தனை செய்ய வேண்டிய நேரத்தில் இம்மாதிரியாகச் செய்தார்.*

*''அந்தத் தீவில் வசிப்பவர்களும், அதைச்சுற்றியுள்ள இடங்களில் வாழ்பவர்களும் சிலைவணக்கம் செய்பவர்களும் ஏளனம் செய்யும் வகையில், பிராடஸ்டண்ட் மதத்தின் மேன்மையை அவமதிக்கும் வகையில் அவர் அதிகாலை 2,3 மணிவரை தொடர்ந்து குடித்துக்கொண்டேயிருந்தார். கடவுளுக்குக் காலை வணக்கம் செய்ய வேண்டிய பணியை உதாசீனம் செய்தார்; அதற்கிடையில் கம்பெனிக்கு செய்ய வேண்டிய பணியை உதாசீனம் செய்தார்; தூங்கப் போகும்போது, பொதுவாக கம்பெனியில் பணிபுரிபவர்களுக்கென்று வைத்திருந்த சிற்றுண்டிகளைத் தனிப்பட்ட முறையில் பயன்படுத்திக் கொண்டார்.''*

*கிழக்கிந்தியக் கம்பெனியின் தொழிற்சாலைகளில் உள் மோதல்கள் ஏராளமாகவிருந்தன; கம்பெனியின் ஏஜண்டுகள், கடவுள் விதிகளுக்குப் புறம்பாகவும், மனித கண்ணியத்திற்குப் புறம்பாகவும் அட்டூழியமான காரியங்களைச் செய்தனர். அவர்கள் தங்களுக்குள்ளேயே மிகக் கடுமையாக சண்டையிட்டார்கள்; வார்த்தைகளைத் தொடர்ந்து அடிதடி நடந்தது; அந்தக் குடியிருப்பிலிருந்த பெரிய அதிகாரிகள் குடிபோதையில், தங்களுக்குக் கீழ்ப் பணிபுரிபவர்களிடம் சண்டையிடும் போக்கிற்கு உதாரணமாயிருந்தனர்.*

சூரத்திலுள்ள கம்பெனியின் தொழிற்சாலை ஆவணங்களிலிருந்து பின்வரும் சம்பவம் குறித்த அறிக்கை கிடைத்துள்ளது:*

" மேன்மைதங்கியோருக்கு, 1695 ஆகஸ்ட் 21 ஆம் தேதி முதல் 1696 டிசம்பர் 31 ஆம் தேதி வரைப்பட்ட எங்களுடைய குறிப்புப் புத்தகங்களை அனுப்பியுள்ளோம்; இதில், தலைவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் ஒரு சதித்திட்டத்தைக் குறித்தும், அவருடைய பாதுகாவலர் இதை எதிர்ப்பார் என்பதால் அவரையும் கொலை செய்ய திட்டம் தீட்டியவர்களைக் குறித்துமான தகவல் அடங்கியுள்ளது. எந்தளவுக்குத் திருவாளர்கள் வாக்ஸும் அப்கிலும் இதில் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்பதை இதைக்கொண்டும், அளிக்கப்பட்டுள்ள சாட்சியங்களைக் கொண்டும் மேன்மைதங்கிய நீங்களே தீர்மானிக்க வேண்டும். தலைவரை முதலில் குத்திக்கொலை செய்ய அவர்கள் விரும்பியுள்ளனர் என்பதை நன்கு உணரமுடிகிறது; அது, எப்ரெய்ம் பென்டாலாலுடைய முன்ஜாக்கிரதையினால் தடுக்கப்பட்டது; காவலர்கள் எண்ணிக்கையை இருமடங்காக்கியதைத் தொடர்ந்து கொலைசெய்யும் திட்டம் தோல்வி யடைந்தது; இதன்பின்னர் விஷம் கொடுத்துக் கொல்ல முடிவு செய்துள்ளனர்; எட்மண்ட் கிளார்க்கும் மற்றுமிதரர்களும் கொடுத்த ரகசிய வாக்குமூலப்படி, இந்த முயற்சியைக் கண்டுபிடித்தவர் மீது இதரர்கள் பாய்ந்து அவரை வெட்டிக் கொன்றனர்."

அதே ஆவணத்தில், சூரத் கவுன்சில் தலைவருக்கெதிராக திரு.சார்லஸ் பீச்சே கொடுத்த புகாரும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

"நீங்கள் (தலைவர்) இருமுறை என் தலையில் வெட்டினீர்கள்; முதல் வெட்டு ஆழமானது; இரண்டாவது வெட்டு முதல் வெட்டோடு ஒப்பிடும்பொழுது சாதாரணமானது. அதன்பிறகு என்னுடைய இடது கையில் ஒரு பலமான அடி; இதனால் எனது தோள் அனலாகத் தகித்தது; இப்போது அந்த கையையே என்னால் உபயோகிக்கமுடியவில்லை; வலதுபுறத்தில் மார்புக்குக்கீழே என்னுடைய விலா எலும்புகளில் அடி விழுந்தது; அது என்னை மூச்சுவிட இயலாமற்செய்கிறது என்பதுடன் எனக்கு நானே உதவிசெய்து கொள்ளமுடியாத அளவுக்கு சக்தியற்றவனாக்கிவிட்டது; எனது இடது முழங்காலில் மற்றொரு அடி; அது முதலில் சொல்லப்பட்டதற்கு எவ்விதத்திலும் குறைவானதல்ல; அனைத்திற்கும் மேலாக கண் இமை மீது ஒரு வெட்டு விழுந்துள்ளது."

★ "இந்தியாவில் கிறித்தவ சமயம்" பக்கம். 106, மேற்கோள் காட்டுவது கேயி.

இதுதான், இந்தியாவிற்கு வந்து துவக்கத்தில் குடியேறிய ஆங்கிலேயர்களின் ஒழுக்கநிலை. இத்தகைய குடியேற்றக்காரர்கள், 17ஆவது நூற்றாண்டின் முதல் 80 ஆண்டுகளில் தாங்கள் வழிபடு வதற்காக கிறித்தவ தேவாலயம் ஒன்றை கட்டாமலேயே பணியாற்றி வந்திருக்கின்றார்கள். 18ஆவது நூற்றாண்டிலும் நிலைமை மேம் பாடடையவில்லை 18ஆவது நூற்றாண்டில் இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர்களின் ஒழுக்கநிலை குறித்து திரு.கேயி கூறுகிறார்:

''வாரன் ஹேஸ்டிங்ஸினுடைய நீண்டகாலத்திய நிர்வாகத் தின்போது ஆங்கிலேய இந்திய சமூகத்தின் நிலைமை குறித்து புகழ்ந்து பேச எதுவுமில்லை........ நல்ல முன்னுதாரணத்தை ஏற்படுத்தி யிருக்கவேண்டியவர்கள் தங்களுடைய ஒழுக்கமற்ற வாழ்க்கை மூலம் கிறித்தவ மதத்திற்கு மிகப் பயங்கரமான தவறைச் செய்திருக் கின்றார்கள்...... ஹேஸ்டிங்ஸ் மற்றொருவரின மனைவியை அவருடைய சம்மதத்துடனேயே தன்னுடையவளாக்கிக் கொண்டார்; இத்தகைய சம்மதம் இல்லாமலேயே அத்தகைய காரியத்தைச் செய்திருக்கிறார்....... உயர்பொறுப்பில் இருப்பவர்களே இப்படி யிருக்கும்போது கீழ்நிலையில் இருப்பவர்கள் எப்படி ஒழுக்கத் திலும், கண்ணியத்திலும் கவனமாக இருப்பார்கள் என்று எதிர்ப் பார்க்கமுடியும். உண்மையில், இந்தியாவிலுள்ள ஆங்கிலேயர்களின் கிறித்தவ மதம் என்பது இச்சமயத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப் பட்ட நிலையில் உள்ளது. ஆங்கிலேயர்கள் அதிகமாக குடிக் கிறார்கள்; சூதாடுவது என்பது அதிகரித்திருக்கின்றது; ஸ்தலத் திலுள்ள பெண்களை வைப்பாட்டிகளாக வைத்திருப்பது என்பது ஏதோ ஒன்றிரண்டு சம்பவங்கள் என்றில்லாமல் ஒரு விதியாகவே ஆகி விட்டது. ஏராளமான பெண்கள் நிறைந்த அந்தப்புரங்களை ஆங்கிலேய கனவான்கள் வைத்திருப்பதென்பது சர்வசாதாரண விஷயமாகி விட்டது. அந்நாள்களில் ருசிகரமான கேளிக்கைக்குப் பஞ்சமேயில்லை. நடனங்கள், மாறுவேடப் போட்டிகள், குதிரைப் பந்தயங்கள், நாடகங்கள் போன்றவை இந்தக் குடியிருப்புகளை அதிலும் குறிப்பாக குளிர்காலத்தில் ஏக கலகலப்பாக்கி இருந்தன; தட்பவெப்ப நிலைமைக் கேற்றார்போல் லேசான சண்டையும் நடக்கும். மனித வாழ்க்கை அற்பாயுசானது, அதற்குள் சகல போகங்களையும் அனுபவித்து மகிழ்ச்சியாக வாழ்வதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள்.''

★ ★ ★

சொல்லப்போனால் குடித்துக்கும்மாளம் போடுவது சர்வ சாதாரணமாகி விட்டது. இந்தக் களியாட்டத்தில் யார் வேண்டு

மானாலும் கலந்துகொள்ளலாம் என்று இருந்தது. அது அக்காலத்தில் இந்தியாவிலிருந்த ஆங்கிலேயர்களைப் பீடித்த ஒரு நோயாக, ஒழுக்கக்கேடாக, போலி நாகரிகப் பழக்கமாக இருந்தது. ராஜதானி நகரங்களில் - அதிலும் குறிப்பாகக் கல்கத்தாவில் - பொதுவான பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் என்பவை அதிகம் கிடையாது. நடனத்துடன் விருந்து என்பது அந்நாட்களில் காமக்களியாட்டமாக இருந்தது. குடித்துப் போதை தலைக்கேறிய பிறகு நடனமாடுவது என்பது எப்படி சாத்தியம்? அந்த இடத்தை அடிதடி சண்டைகள் எடுத்துக்கொண்டன. ஒரு பொது விருந்து என்பது ஒன்றிரண்டு வாட்போர் இல்லாமல் முடிவுற்றதென்று சொன்னால் அது ஒரு மகிழ்ச்சியான சம்பவமாகும். அந்நாளில் ஷெல்பியின் பொழுது போக்கு விடுதி என்ற பிரபலமான விடுதி இருந்தது; இங்கே கல்கத்தா வின் கனவான்கள், நன்றாகக் குடித்துவிட்டு சூதாட்டத்தில் இறங்கு வார்கள்; இங்கே சில சமயங்களில் அற்பமான விஷயத்திற்குக் கூட குடிபோதையில் 1000 மோஹர்கள்(தங்கக்காசுகள்) பந்தயம் வைப்பது வழக்கம். சீட்டாட்ட கோஷ்டியினர் இரவு முழுவதும் ஆடுவார்கள்; அது சனிக்கிழமை இரவாக இருந்துவிட்டால் அடுத்தநாள் முழுவதும் அது தொடரும்.

★ ★ ★

கண்ணியமான திருமணம் என்பது அபூர்வமானதாகும்.... கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாக இயக்குநர்கள் சபை, தங்க ளுடைய குடியேற்றக்காரர்களைச் சீர்திருத்தும் பணியில் ஈடுபட்டனர்; மரியாதையான திருமணங்களை உருவாக்கவேண்டுமென்றால் அதற்கு ஒரு முக்கியமான துணை இருக்கவேண்டும் என்று கருதி அவர்கள் சிப்பாய்களுக்கான மனைவிகள் என்ற கச்சாப்பொருளை அனுப்பியது மட்டுமில்லாமல், சில மேம்பட்ட பொருள்களையும் அனுப்பினார்கள்; அந்தப் பொருட்கள் என்னவென்றால் கிழக்கிந்திய கம்பெனியின் வர்த்தகர்களும், ஏஜெண்டுகளும் பயன்படுத்திக் கொள்வதற்கும், விரும்பினால் திருமணம் செய்து கொள்வதற்குமான மேல் மட்டப் பெண்களாவர். எனினும் இந்த முயற்சி வெற்றிபெறவில்லை. திருமணம் செய்துகொண்ட சிலர் இணக்கம் இல்லாத மனைவிகளைக் கொண்டிருந் தனர்; சொல்லப்போனால் திருமணம் செய்துகொள்ளாத வர்களும், செய்துகொண்டவர்களும் ஒரே நிலைமையிலேயே இருந்தனர். இந்தப்பெண்கள் சிறிதுகாலம் வரை பொதுப் பணத் திலிருந்து பராமரிக்கப்பட்டார்கள்; ஆனால் அரைகுறையாக வயிற்றை நிரப்பும் அளவுக்குத்தான் அவர்களுக்குப் பணம் கிடைத்தது;

தடைக்கல் எதுவென்றால் மதமாற்றத் திற்கான போட்டியில் யார் பெரியவர் என்று கத்தோலிக்க மதப்பிரச்சாரக் குழுக்களுக்கும், கத்தோலிக்கரல்லாத மதப்பிரச்சாரக குழுக்களுக்குமிடையே நடைபெற்ற போராட்டமேயாகும்.

இந்தியாவில் கிறித்தவ மதத்தைப் பரப்பும் பணியில் கத்தோலிக்க திருச்சபை இறங்கியது. 1541ஆம் ஆண்டிலாகும். அவ்வாண்டில் பிரான்சிஸ் சேவியர் வருகையைத் தொடர்ந்து இது துவங்கியது. போப்பாண்டவரின் தலைமைக்காதரவாக உருவாக்கப்பட்ட ஏசு கழகத்தின் முதலாவது மதப்பிரசாகர் அவர். கத்தோலிக்க திருச்சபை இந்த அரங்கத்தில் நுழைவதற்குமுன்பு, இந்தியாவில் குறிப்பாக தெற்கில், சிரிய கிறித்தவ திருச்சபைக்கு விசுவாசமான ஒரு பெரும் எண்ணிக்கையிலான கிறித்தவ மக்கள் இருந்தனர். இத்தகைய சிரிய கிறித்தவர்கள் மலபார் கடற்கரைப் பகுதியில் நெடுகிலும் பரவியிருந்தனர்; அவர்கள், தேவதூதர் தாமஸிடமிருந்து தங்கள் பூர்வீகத்தை தொடங்குகிறார்கள்; தாமஸ் ''சிரியா மற்றும் சிலிசியாவிற்கு சென்று கிறித்தவத் திருச்சபைகளை ஏற்கச் செய்தார்'' என்று கூறப்படுகின்றது. அவர்கள் தங்களுடைய ஆன்மீக வீடாக சிரியாவை காண்கிறார்கள். பாபிலோன் நகரத்து மூத்த மதகுருவின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்கின்றனர். ரோம் குறித்தோ, போப்பாண்டவர் குறித்தோ அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. போப்பாண்டவருடைய செல்வாக்கு அதிகரித்துவரும் நேரத்தில் இடைப்பட்ட நாடுகள் பலவற்றைப் பிடித்திருந்த முகமதிய சக்தி, மேற்கத்திய நாடுகள் நுழையமுடியாதபடி இந்தியாவின் வாசற் கதவுகளை மூடிவிட்டது. இது, இந்தியாவிலிருந்த சிரிய திருச்சபைகளை ரோமாபுரி கத்தோலிக்க திருச்சபைகளிலிருந்து காப்பாற்றிவிட்டது. கத்தோலிக்க திருச்சபையின் கிறித்தவம் உண்மையானதா அல்லது சிரிய திருச்சபையின் கிறித்தவம் உண்மையானதா என்பதைக் குறித்து இங்கே நான் ஆராயவில்லை. ஆனால் உண்மை என்னவென்றால் இந்தியாவில் கத்தோலிக்கத் திருச்சபையைப் பிரதிநிதித்துவப்படுத்திய போர்த்துகீசியர்கள், சிரிய திருச்சபைகளின் வருகையைக் கண்டு நிந்தனை செய்தார்கள்; ஆங்காங்கு தோன்றிய சிரிய திருச்சபையின் கிறித்துவத் திருக்கோவில்களை, கிறித்தவரல்லாத கோவில்கள் என்று போர்த்துகீசியர்கள் கூறினர். போர்த்துகல் ரோமன் கத்தோலிக்கர்களின் இந்தக் களங்கமான வர்ணனைகளால் சிரிய கிறித்தவர்கள் மிகுந்த வேதனையடைந்தனர்; தாங்கள் கிறித்தவர்கள் என்றும் உருவவழிபாடு

செய்பவர்கள் அல்ல என்றும் கூறினார். மற்றொரு விஷயம் என்ன வென்றால் மலபார் கிறித்தவர்கள் ரோமனிய மேலாதிக்கத்தையும் ரோமானிய கோட்பாடுகளையும் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை.

இவ்வாறு இவ்விரு திருச்சபைகளுக்கும் இடையே மோதல் தோன்றி வளர்ந்துகொண்டிருந்தது. ரோமபுரி கத்தோலிக்க மத விசாரணை என்னும் பெரும்நெருப்பு இந்த சச்சரவுகளை மேலும் தீவிரமாக்கிற்று.

கோவாவில் கத்தோலிக்க விசாரணை மன்றத்தில் இருந்தவர்கள் சிரிய கிறித்தவர்கள் மத நம்பிக்கையற்றவர்கள் எனக் கண்டு பிடித்தனர்; இதன்பேரில் இரைமீது பாயப்போகும் ஓநாயைப் போல போப்பாண்டவரின் பிரதிநிதிகள், சிரிய திருச்சபைகளின் மீது பாய்ந்தனர். அந்த மோதல் எத்தகைய உக்கிரம் வாய்ந்ததாக இருந்தது என்பதை ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள தனது நூலில் திரு.கேயி விவரித்துள்ளார்.

ரோமாபுரியிடம் மோதலுக்கு வந்த முதல் சிரிய மதகுரு கத்தோலிக்க விசாரணைக்கூடத்தின் இருட்டறையில் துணிவின்மை, நேர்மையின்மை காரணமாக பிராயச்சித்தம் செய்தார். இரண்டாவது மதகுருவிற்கும் அதே நிலைதான் ஏற்பட்டது. மூன்றாவது மதகுரு பட்ட வேதனைகள் கருணை காட்டப்படவேண்டியதற்கும் அதிக மானவை; அவர் நீண்ட விசாரணை என்ற பெரும் துன்பத்திற்குப் பிறகும் இறுதிவரை போப் பாண்டவருடைய மேலாதிக்கத்தை ஏற்க மறுத்து தன்னுடைய தேவாலயப் பகுதியிலேயே உயிர்நீத்தார். மதகுருவின் ஆதரவு முன்னைவிட அதிகமாகத் தேவைப்பட்ட இந்த நேரத்தில் இந்தத் தேவாலயங்கள், மதகுரு (பிஷப்) இன்றி இருந்தன. ஏனென்றால், ரோமாபுரி ஒரு பலம்வாய்ந்த மனிதரை நியமித்து தனது கரங்களை அங்கே நீட்ட வேண்டியிருந்தது. டான் அலெக்ஸிஸ் தே மெனசஸ் என்பவர் கோவாவின் உயர் மதகுருவாக நியமிக்கப்பட்டார். அவருடைய சமயப் பிரச்சாரப் பணியானது புதிய நபர்களை மத மாற்றம் செய்வதைவிட பழையவர்களை அடிபணிய வைப்பதிலேயே குறியாக இருந்தது. தமது எதிரிகளை ஒடுக்கும் பணியில் அவர் லட்சிய வெறியுடனும், வீரத்துடனும் குதித்தார்; இது ரோமாபுரியில் பேராதரவைப், பேரன்பை அவருக்கு சம்பாதித்துக் கொடுத்தது. அவருடைய ஏஜெண்டுகள் சுறுசுறுப்பாக, துரிதமாக செயல் படாததைக் கண்டு பொறுமையிழந்த அவர், தடியைத் தன் கரங்களில்

எடுத்துக்கொள்ள உறுதிபூண்டார். தெற்குப்பகுதிக்கு ஒரு கம்பீரமான ராணுவப்படையுடன் வந்த அவர், அங்கிருந்த சிரிய திருச்சபை யினரை வரச்செய்து, அவர்கள் தன்னுடைய கட்டுப்பாட்டிற்கு பணிய வேண்டும் என்று கூறினார். இந்த திருச்சபைகள் ஒரு மதகுருவின் கீழ் இருந்தன. அவர், தங்களுக்கு எதிராக வர இருக்கும் ஆபத்தை உணர்ந்து அதற்கு ஏற்றாற்போல் நடக்கத் தீர்மானித்தார். காலம் தாழ்த்தவும், அதே சமயத்தில் ரோமாபுரியின் கெடுபிடியை எதிர்த்து நிற்கத் தயாராக இருப்பவராகவும் காண்பித்துக் கொண்டார். வர இருக்கும் பெரிய மதகுருவுக்காகக் காத்திருந்தார். உறுதிவாய்ந்த 3 ஆயிரம்பேரின் துணையோடு மெனஸெஸை பார்க்க சென்றார்; அவர்களை மிக்க சிரமத்துடன் கட்டுப்படுத்தி வைக்க வேண்டியிருந்தது. தங்களுடைய எதிராளிகளைக் கண்டவுடன் அவர்கள் வன்முறையில் இறங்கி அவர்களை நோக்கிச் சென்றுவிடாமல் இருப்பதற்காக கட்டுப்படுத்திவைக்க வேண்டியிருந்தது. ரோமாபுரி திருச்சபையின் கட்டளைகளை முன்வைப்பதற்கு இது மனெஸெஸுக்கு உகந்த நேரம் அல்ல. ஆனால், பலமான எதிர்ப்பு இருக்கும் என்ற பயம் இல்லாதது அவருடைய நோக்கத்தில் இருந்து அவரை திசை திருப்பி விட்டது; அவர் பகிரங்கமாக பாபிலோன் மதகுரு ஒரு தொந்தரவான நபர் என்றும், மதத்திலிருந்து பிரிந்து செல்லும் குணமுடையவர் என்றும், அவருடைய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்வது என்பது மதத்திற்கு எதிரான கொள்கையென்றும் பிரகடனம் செய்தார். ரோமாபுரி மதகுருவைத்தவிர வேறு எவருடைய மேலாதிக் கத்தையும் யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் சிரிய திருச்சபை தலைவரைக் குறித்து தங்களுடைய திருச்சபை பிரார்த்தனையின்போது எதுவும் பேசக்கூடாது என்றும் அவர் உத்தரவிட்டார்; இந்த உத்தரவு ஏற்கப்பட்டது. அவர் சிரிய திருச்சபையின் மரியாதைக்குரிய தலைவர் களை பகிரங்கமாகவே மதப்பிரஷ்டம் செய்தார். அதன்பின் அவர் மதநீக்கம் செய்யும் கட்டளையில் கையெழுத்திடும்படி சிரிய மத குருவை அழைத்தார். பயத்திலும்,.குழப்பத்திலும் ஆழ்ந்துபோன அந்தப் பரிதாபகரமான நபர் போப்பாண்டவரின் ஆவணத்தில் கையெழுத்திட்டார்; அது திருச்சபையின் வாயிலில் பகிரங்கமாக ஒட்டப்பட்டது.

ஒருபுறத்தில் சகித்துக் கொள்ளமுடியாத இந்த அவமரியாதை யும் மறுபுறத்தில் பரிதாபகரமான சமரசமும் சேர்ந்து தங்களுடைய சொந்த பிரதான மதகுருவிற்கு எதிராகவே மக்களைக் கிளர்ந்தெழச் செய்தது. இரண்டாவதாக சொல்லப்பட்டவர் கோபம் கொண்டிருந்த மக்களின் வேகத்தை தணிக்கச் சென்றபோது அது கடிமான பணியாக

இருந்தது. தங்களுடைய மாசுபடுத்தப்பட்ட கடற்கரைகளில் இருந்து போர்த்துக்கீசிய ஆக்கிரமிப்பாளர்களை விரட்டியடிப்பதற்காக அவர்கள் ஒரு தாக்குதலைத் தொடுக்கவும் தயாராக இருந்தனர். ஆனால் பொறுமை வேண்டும் என்று அவர்களுடைய மதகுரு கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்; தன்னுடைய சொந்த பலவீனங்களுக்காக மன்னிப்பு கோரினார்; பழிவாங்குவதை விட பாசாங்குத்தனமாக நடிப்பது மிகவும் பயன்படும் என்று கூறினார்; தான் என்னதான் செய்திருந்தபோதிலும் தங்களுடைய மதத்தைப் பாதுகாப் பதாக அவர் உறுதிகூறினார்; போப்பாண்டவருடைய ஆதிக்கத்தை எதிர்த்து உறுதியாக நிற்கும்படி அவர்களை உற்சாகப்படுத்தினார். அதை ஏற்கும் முறையில் அவர்கள் பலமாக கோஷமிட்டனர்; தாங்கள் ஒருபோதும் பணியமாட்டோம் என்றும், போராட்டத்தைத் தொடரத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதாகவும் உறுதிமொழி ஏற்றனர்.

ஆனால், இத்தகைய மோதலைச் சந்திப்பதற்கு மெனஸஸிற்கு பல்வேறு உபாயங்களும், பலமும் இருந்தன. அவருடைய சக்தி அபார மானது; அவருடைய இடைவிடா முயற்சியும் தங்குதடையற்றது; அவருடைய தந்திரமுறை ஆழம்காண முடியாதது. ஒரு தாக்குதல் தோல்வியுறுமானால் அவர் அடுத்த தாக்குதலுக்கு முயற்சிப்பார். வன்முறை இடத்தை வஞ்சகம் எடுத்துக்கொண்டது; ஆயுதங்களின் இடத்தைப் பணம் எடுத்துக்கொண்டது. பயமுறுத்தி பணியவைக்க முடியாதவர்களுக்கு அவர் லஞ்சம் கொடுத்தார்; அவர்களுக்கு ஆசைவார்த்தை காட்டினார்; படிப்படியாக அவர் வெற்றியடைந்தார். முதலில் ஒரு திருச்சபை விழுந்தது; அதன்பின் மற்றொன்று விழுந்தது. ஆபத்துகளும், சிரமங்களும் அவர்களைச் சூழ்ந்தன. பலமுறை அவர் வன்முறை மோதல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது, பலமுறை அவற்றைத் தகர்த்தார். சிரிய கிறித்தவர்களின் எண்ணிக்கை தனக்கு மிக அதிகமாகப் பட்டபொழுது அவர் சுதேசி மன்னர்களைத் தனக்கு உதவிசெய்ய அழைத்தார். இந்த மோதலில் சிரிய மதகுரு களைத்துப் போனதாலும், மதப்பிரஷ்டம் செய்யப்போவதாக அச்சுறுத்தப்பட்ட தாலும் இறுதியில் ரோமாபுரி போப்பாண்டவருக்கு அடிபணிந்தார். மெனஸிஸ் உடனே மதத்தலைவர்களின் சபையைக் கூட்ட உத்தர விட்டார்; 1599 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 தேதியன்று தியம்பர் என்ற இடத்தில் திருச்சபைகள் கூடின. முதல் நிகழ்ச்சி அமைதியாக முடிந்தது; ஆனால் முணுமுணுப்புகள் இல்லாமலில்லை. இரண்டாவது நிகழ்ச்சியில் கட்டளைகள் படிக்கப்பட்டன. அந்த முக்கியமான நேரத்தில் குறுக்கீடுகள் எழுந்தன; விசுவாச பிரமாணத்தை அதிகாரப் பூர்வமாகப் பறைசாற்றியபின் மெனஸஸ், பாபிலோன் மதகுருவை நிந்தித்துப் பேசினார். உடனே சிரியர்களின் ஆத்திரம் பகிங்கரமாக

வெடித்தது. நம்பிக்கைப் பிரமாணத்தை அவர்கள் எதிர்த்தார்கள். அத்தகைய பிரமாணம், இத்தகைய மதத்தலைவர்களின் சபை கூடுவதற்கு முன்னர் தாங்கள் கிறித்தவர்களாக இருக்கவில்லை என்று பொருள்படும் என்று வாதித்தார்கள். ஆனால் மெனஸிஸ் அந்த நம்பிக்கைப் பிரமாணத்தைத் தனது பெயரிலும், கீழ்த்திசைத் திருச்சபை களின் பெயரிலும் கூறி, சிரியர்களின் பயத்தைப் போக்கினார்; அவர்களுடைய சந்தேகங்களையும் அகற்றினார். மொழிபெயர்ப் பாளராகச் செயலாற்றிய சிரிய பாதிரியார்களில் ஒருவர் அதன்பிறகு அந்த நம்பிக்கை பிரமாணத்தை மலபார் மொழியில் படித்தார்; கூடியிருந்த மக்கள் திரள் முழந்தாளிட்டு வார்த்தைக்கு வார்த்தை அதைத் திருப்பிக் கூறியது. இவ்வாறு சிரிய கிறித்தவர்கள், ரோமாபுரி நுகத்தடியில் தங்கள் கழுத்துகளை மாட்டினார்கள்.

தாம் அடைந்த ஆதாயங்களை மேம்படுத்துவதில் உறுதி கொண்டிருந்த மெனஸஸ் அந்த நடவடிக்கை வேகத்தைக் குறைக்க வில்லை என்பதுடன் கடந்தகால வெற்றிகள் என்ற சூரியஒளியில் குளிர்காயவும் விரும்பவில்லை. அவரை இயங்க வைத்தது மத வைராக்கியமாக இருந்தாலும் சரி, அல்லது இவ்வுலக ஆசையாக இருந்தாலும் சரி, அவர் தன்னுடைய முயற்சியை ஒருபோதும் தளர்த்த வில்லை; அனைத்து உபாயங்களைக் கொண்டும் சிரிய கிறித்தவர்கள் மீது நுகத்தடியை தாம் எண்ணிய அளவிற்குப் பூட்டவில்லை என்ற உணர்வு அவருக்கு இருந்தது. போப்பாண்டவர் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்ட திருச்சபைகளைச் சேர்ந்தவர்கள் உள்ளுக்குள் கோபமாகவே இருந்தார்கள். அவர்களிடையே சுறுசுறுப்பு மிகுந்த கூர்மையான பார்வைகள் கொண்ட மனிதர்களும் இருந்தார்கள்; அவர்கள் உலகில் 17ஆம் நூற்றாண்டு விடிந்தபொழுது எதிர் காலத்தை நம்பிக்கையுடன் பார்த்தார்கள். போர்த்துக்கீசியர்களின் செல்வாக்கு கீழ்த்திசையில் மங்கிக் கொண்டே போகிறதென்பதைச் சரியாகப் பகுத்துணர்ந்தார்கள். அதன்பிறகு சிரிய திருச்சபைகளுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. மெனஸஸினுடைய தண்டனைகள் மிகவும் வேதனை அளிக்கக்கூடியவையாக இருந்தன. அவர் பாதிரியார்களை அவர்களுடைய மனைவிகளிடம் இருந்து பிரித்துவைத்தார். திருச்சபை யின் உறுப்பினர்களை அற்பக் காரணங்களுக்காக மதப்பிரஷ்டம் செய்தார்; தங்களுடைய மத நம்பிக்கையின் துவக்ககால பரிசுத்தத் தன்மைக்கு ஆதாரங்களாக உள்ள அனைத்து பழைய சிரிய ஆவணங் களையும் அழித்தார். ஈடுசெய்யமுடியாத காட்டுமிராண்டித்தனமான இந்த கடைசி நடவடிக்கையை மறக்கவோ அல்லது மன்னிக்கவோ முடியாது; இதர அனைத்து துயரங்களுக்கும் நடுவில் அவர்களது சிந்தனையில் ஒரு ஆறுதல் உதித்தது; இந்தக் கொடுங்கோன்மை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கே இருக்கும் என்ற ஆறுதல் அது. "அறுபது

வருட அடிமைத்தனமும், கபடத்தனமும் பொறுமையுடன் சகித்துக் கொள்ளப்பட்டது; ஆனால் டச்சுக்காரர்களின் துணிவு, மற்றும் முயற்சியால் போர்த்துக்கீசிய சாம்ராஜ்யம் உலுக்கப்பட்டவுடன் கூட்டுக்குள் இருந்தவர்கள் தங்களுடைய தந்தையாரின் மதத்தை மிகுந்த வேகத்துடனும், சக்தியுடனும் நிலைநிறுத்தினார்கள். ஏசு சபையினர் தாங்கள் துஷ்பிரயோகம் செய்த அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்ள சக்தியற்றவர்களாக இருந்தனர். நாற்பதாயிரம் கிறித்தவர்களின் கரங்கள், வீழ்ந்து கொண்டிருக்கும், தங்களைக் கொடுமைப்படுத்திய கொடுங் கோலர்களைச் சுட்டிக் காட்டின; இந்திய சிரிய திருச்சபைத் தலைவர் பிஷப்பாகப் பணியாற்ற ஆரம்பித்தார்; பாபிலோன் சிரிய தலைமை குருவிடமிருந்து சிரிய சமயப்பிரச்சாரகர்கள் பெறவேண்டிய குரு பரிபாலன பரிசுகள் வரும்வரை அவர் பிஷப்பாகச் செயல்பட்டார்.'' என்று கிப்பன் எழுதுகிறார். சுருக்கமாக இவ்வாறு விளக்கப்பட்டுள் ளவை அனைத்தும் மெனஸஸினுடைய ஒடுக்குமுறை விளைவு களாகும். ஆறுமாத காலத்திற்குள் அந்த பேராசை பிடித்த, மனசாட்சி யற்ற மதகுரு சிரிய திருச்சபையை அடிமைப்படுத்தினார்; 60 வருடங்களுக்கு அவர்கள் ரோமாபுரியின் அடிமைச் சங்கிலியால் பூட்டப்பட்டிருந்தனர்; மெனஸஸ் தன்னுடைய சொந்த பலத்தில் நம்பிக்கை வைத்திருந்தார்; பூமியை வெல்பவராக அவர் வந்தார்; ஆன்மீக அதிகாரத்தின் கரத்தை நம்பியிருந்தார். ''அவருடைய உதாரண மானது அவர் உருவாக்கிய பாறையிலிருந்து எதிர்கால கிறித்தவ சமயப் பிரசாரகர்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் அடையாள விளக்கு என்றே கருதப்படவேண்டும்'' என்று திரு. ஹௌ எழுதுகிறார். நம்பிக்கை இல்லாமல் ஒரு திருச்சபையின் வளர்ச்சியை எதுவும் உறுதிப்படுத்த முடியாது. மெனஸஸின் திட்டங்கள் பார்வைக்கு மிக அற்புதமாக தோன்றியபோதிலும் இத்தகைய தன்மை இல்லாததால் முடிவில் ஒன்றுமில்லாமல் போயிற்று; தெய்வீகக் கருணை குறித்து இங்கே விசேசமாக குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்; இந்தியாவில் போர்த்துக்கீசிய நலனுக்கு நிரந்தரமான அடித்தளம் நாட்டிவிட்டேன் என்று மெனஸிஸ் தன்னைத்தானே புகழ்ந்துகொண்ட அதே கால கட்டத்தில்தான் இந்தியாவில் போர்த்துக்கீசிய நலன்கள் சுருங்கத் தொடங்கின.

கத்தோலிக்கத் திருச்சபைக்கும் பிராடஸ்டண்ட் மதப் பிரசாரகர்களுக்கிடையில் எத்தகையதொரு - மோதலும் இருந்த தில்லை. எனினும் அவர்களிடையே போதுமான அளவுக்கு விரோதம் இருந்தது; அது ஒத்துழைப்பையும், செயல்பாட்டையும் தடுத்தது; இதனால் கிறித்தவ மதம் வேகமாக வளர்வது தடுக்கப் பட்டது.

கிறித்தவ மதத்தின் மெதுவான வளர்ச்சிக்கு மூன்றாவது காரணமானது கிறித்தவ பிரச்சாரத்திற்குப் பொறுப்பாக இருந்த கிறித்தவப் பிரசாரகர்களின் தவறான அணுகுமுறையே யாகும். துவக்க காலக் கிறித்தவ மதப் பிரச்சாரகர்கள் கற்றறிந்த பிராமணர்களோடு கிறித்தவ மற்றும் இந்து மதங்களின் தகுதிகள் குறித்து ஒப்பிட்டுப் பேசி தன் பிரச்சாரத்தை ஆரம்பித் தார்கள். இது அவர்களுடைய கடமையைச் செய்வதற்கான விநோதமான வழியாகும். ஆனால் இதற்குப்பின்னர் ஒரு திட்டம் இருந்தது. அந்த கிறித்தவப் பிரச்சாரகர்கள் என்ன கருதினார்கள் என்றால் பிராமணர் களையும், இந்துக்களின் உயர்வகுப்பினரையும் மதம் மாற்றுவதில் வெற்றிபெற்றால் மக்களை மதம்மாற்றும் கடமையைச் சுலபமாகச் சாதித்துவிடலாம் என்று நம்பினார்கள். ஏனென்றால் அந்த உயர் வகுப்பினரும், பிராமணர்களும்தான் மக்கள் மீது செல்வாக்கு செலுத்தி வந்தனர். பிராமணர்களைச் சுலபமாக மதம் மாற்றுவதற்கான வழியானது வாதப்பிரதிவாதங்களில் அவர்களை தோற்கடித்து அவர்களுடைய மதம் தவறானது என்று சுட்டிக்காட்டு வதாகும். கிறித்துவ மதப்பிரசாரககர்கள் பிராமணர்களுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்திக்கொள்வதற்காக அன்றி வேறு எதற்காக கிறித்தவ மதப்பிரசாரகர்கள் பல பள்ளிக்கூடங்களையும், கல்லூரி களையும், மருத்துவமனைகள் போன்றவற்றையும் துவக்கினார் என்பதை எதுவும் விளக்கமுடியாது. அந்தக் கிறித்தவ மதப்பிரசார கர்கள் ஏமாற்றப்பட்டுவிட்டார்கள் என்பதைப் பலர் இப்பொழுது உணர்ந்துள்ளனர். பிராமணரும், உயர் வகுப்பினரும் கிறித்தவ மதப் பிரசார குழுக்கள் பராமரித்த கல்விநிலையங்களை முழுமையாகப் பயன் படுத்திக் கொண்டனர். இத்தகைய கல்விநிலையங்களைக் கொண்டு வந்த மதத்தைக் குறித்து ஒருபோதும் சிந்தித்தில்லை.

இதில் வினோதம் ஒன்றும் இல்லை. கிறித்தவ மதப் பிரச்சாரகர்கள் பிராமணர் மற்றும் இந்து உயர்வகுப்பினரின் பின்னால் ஓடுவது தோல்வியடைந்தே தீரும். இந்து மதக்கோட்பாடுகளுக்கும், கிறித்தவ மதக்கோட்பாடுகளுக்கிடையே வாதப்பிரதிவாதமும் செய்வதற்குப் பொதுவான அம்சம் என்று எதுவுமே கிடையாது; பொதுவான அம்சம் இருந்தால் இந்து எப்பொழுதும் கிறித்தவரை தோற்கடிக்கமுடியும்.

இந்துக்களுக்கும், கிறித்தவர்களுக்குமிடையே வாதப்பிரதி வாதங்களுக்கு பொதுவான அம்சம் எதுவும் இருக்கமுடியாது என்பது எதனாலென்றால் தத்துவம் குறித்தும், இறையியலுக்குக்குள்ள

உறவுகள் குறித்தும் இவ்விரு தரப்பினரும் முற்றிலும் வேறுபட்ட அணுகுமுறையைக் கொண்டுள் ளனர் என்பதேயாகும். திரு.பர்ன் இதை நன்றாக கவனித்துக் கூறுகிறார்: ★

''படித்த இந்து, மதப்பிரச்சினைகளை ஆராயும்போது தத்துவத்திலிருந்து இறையியலைப் பிரிக்க மறுக்கிறார்; தனக்குத் தென்படுவது எதார்த்தமான பிரபஞ்சத்தோற்றம் பற்றிய கோட்பாடு என்று கூறுகிறார். இந்துமதக் கோட்பாடுகளைக் குறித்து ஆராயும் பொழுது தற்சமயத்தில் நிலவும் அதனுடைய போக்கானது பிரபஞ்சத்தைக் கடவுளுடன் இணைத்துச் சொல்லும் போக்காகும்; குறைந்த பட்சம் 2 ஆயிரம் ஆண்டுகளாக, கடவுளும், ஆன்மாவும் ஆகிய இரண்டும் உண்டு என்று உறுதியாகக் கூறிவரும் மதக்குழுக்கள் தொடர்ந்து உருவாகிவந்த போதிலும், பிரபஞ்சத்தைக் கடவுளுடன் இணைத்துச் சொல்லும்போக்கும், இன்றைய உலகமானது மாயையினால் உருவாக்கப்பட்ட பிரமை என்று கருதும் போக்கும் தொடர்ந்து இருந்துகொண்டே வருகின்றது. சராசரி கிறித்தவர், தத்துவம் என்பதைக் குறித்து கவலைப்படுவதில்லை. அவசியமான மதநம்பிக்கை என்பதை விட எப்படியும் பணம்சேர்க்கவேண்டும் என்பதிலேயே குறியாக உள்ளார். மதிக்கப்படவேண்டும் என்றவகையில் உருவாக்கப்பட்டுள்ள ஒரு மனிதனின் சிந்தனை முறைகள் தவிர்க்கஇயலாதபடி அவருடைய முடிவுகளைப் பாதிக்கின்றன. படித்த இந்துக்களில் பெரும்பாலோர் கிறித்தவ மதத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்ற கருத்தை நம்பமுடியாது என்பதற்கு இதுவும் ஒரு காரணமாக எனக்குத் தோன்றுகிறது. ஒரு திட்டவட்டமான உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்; வெறுமையிலிருந்து பிரபஞ்சத்தைக் கடவுள் படைத்தார் என்ற நம்பிக்கையைக் கண்டு சாதாரண படித்த இந்து நகைக்கிறார் என்ற போதிலும், பிரபஞ்சப் படைப்பைக் கடவுளுடன் இணைத்துப் படைப்புக்கான காரண காரியத்தை ஏற்றுக்கொண்டு நம்புபவராகிறார். வரலாற்றுச் சான்றுகள் பற்றி அவர் கவலைப்படுவதில்லை. மனிதன் தன் முக்திக்குத் தானே பாடுபடவேண்டும் என்ற கருத்தை இது அடிப்படையாகக் கொண்டுள்ளது; இதன்மூலம் தெய்வீக மன்னிப்பு என்ற நம்பிக்கையுடன் முற்றிலும் மோதுகிறது.''

இவ்வாறு இந்து தத்துவ நிலையிலிருந்தும் கிறித்தவர் இறையியல் நிலையிலிருந்தும் பேசுகின்றார். இவற்றில் பொதுவான அம்சம் எதுவுமே கிடையாது. கிறித்தவர்கள் தங்களுடைய

★ *1901 ஆம் வருடத்திய மக்கட்தொகை கணக்கெடுப்பு தொகுதி 16,* N.W.*பண்ட்புத், பகுதி 1, பக்கம் 98*

கடவுளையும் அவர் மகனாக ஏசுநாதரையும், இந்துக்கள் தங்களுடைய கடவுளையும் அவருடைய அவதாரங்களையும் கொண்டுள்ள நிலையில் இருபகுதியினருமே இறையியலைக் கொண்டுள்ளனர்; ஆனால் ஒருவர், மற்றொருவரைவிட உயர்ந்தவர் என்பது அவர்களால் நிகழ்த்தப்பட்ட அற்புதங்களைப் பொருத்துள்ளது. இதில் இந்து இறையியல் என்பது கிறித்தவ இறையியலைத் தோற்கடிக்கும் என்பது மிகவும் வெளிப்படையானது; கிறித்தவ மதத்தில் தத்துவம் இல்லாததுதான் பிராமணரையும், படித்த இந்துக்களையும் ஈர்க்கத் தவறியதற்குக் காரணமாகும். அதைப்போன்றே இந்து இறையியலிலுள்ள ஏராமான அற்புதங்கள் ஒப்புநோக்குகையில் கிறித்தவ இறையியலை வெளிறச் செய்துவிடும். ரோமானிய கத்தோலிக்கப் பாதிரியாரான அருட்தந்தை கிரிகோரி இந்தச்சிரமத்தை உணர்ந்துள்ளார் என்று தெரிகிறது; அவருடைய கண்ணோட்டமானது சுவையானது என்ப தோடு போதனையூட்டுவதுமாகும். கர்னல் ஸ்லீமானுடைய புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதிலிருந்து பின்வரும் மேற்கோளை இங்கு தருகின்றேன். கர்னல் ஸ்லீமான் கூறுகின்றார்: ★

''ரோமானிய கத்தோலிக்க அருட்தந்தையான கிரிகோரி ஒரு நாள் மாலையில் எங்களுடன் உணவருந்தினார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு மேஜர் காட்பை உணவருந்தும்போது ஒரு கேள்வி கேட்டார். ''நம்முடைய மதம் மக்களிடையே என்ன முன்னேற்றம் கண்டுள்ளது?'' என்று கேட்டார்.

''முன்னேற்றமா?'' என்று கேட்டு அவர் கூற ஆரம்பித்தார்.

''ஏசுகிறிஸ்து நிகழ்த்திய அற்புத சம்பவங்களை நம்மிடம் கூறத் தொடங்குகிறார்கள்; அவர், பயங்கரமான மழையிலிருந்து கோவர்த்தனகிரியிலிருந்த இடையர்களைக் காப்பதற்காக தன்சுண்டு விரலைக் கொண்டு மலையைக் குடைபோல் தூக்கினார் என்று கூறுகிறார்கள்.

'' நமது வேதாகமத்திலுள்ள அற்புதங்கள் மற்றும் தேவ வாக்கியங்களின் எந்தவொரு பகுதியையும் இந்துக்கள் ஒருபோதும் சந்தேகிப்பதில்லை. அவற்றின் ஒவ்வொரு வார்த்தையையும் அவர்கள் நம்புகிறார்கள்; அவர்களை வியப்பிற்குள்ளாக்கும் ஒரேஒரு விஷயம் எதுவென்றால் அவர்களை உள்ளார்ந்து நம்பும் அர்களுடைய புனிதநூல்களில் காணப்படும் அற்புதங்களின் தன்மையைவிட

★ கர்னல் ஸ்லீமான், துணுக்குகளும், நினைவுக் குறிப்புகளும், தொகுதி I, V. 407

குறைவான தன்மையுள்ள அற்புதங்களே நமது நூலில் காணப்படுகிறது என்பதாகும். விஷ்ணுவின் இரண்டு அவதாரங்களான ராமனும், கிருஷ்ணனும் நடத்திய யுத்தங்களின் வரலாறுகளும், அவர்களுடைய காதல் லீலைகள் குறித்து எழுதப்பட்டவைகளும் 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டவை என்று நம்பும் மனிதர்கள் அவர்கள்; எனவே தெய்வீகவாக்கு நிறைவேற்றப்படுவது என்பதை வேறெந்தப் புத்தகத்திலிருந்து சொன்னாலும் அவர்கள் சுலபமாக நம்புவார்கள்; அற்புதங்கள் என்பவை சம்பந்தப்பட்டமட்டில் அவர்களுடைய நம்பிக்கைக்கு அது ஒன்றும் அதிவிசேமானதல்ல. மரியாதைக்குரிய ஒரு கிறித்தவர் ஒரு இந்துவிடம், கொரிந்தியர்களில் ஐயப்பட்டவர்களுக்குச் செயின்ட்பால் நிகழ்த்திய அற்புதத்தைக் கூறுவதாக வைத்துக் கொள்வோம்; செயின்ட் பால் சூரியனையும், சந்திரனையும் பூமிக்கருகே கொண்டுவந்து பின்பு அவற்றை அவர்களுடைய பழைய இடத்திலிருந்தே டென்னிஸ் பந்துகள் சுற்றுவதுபோல சுற்றும்படிச் செய்தார் என்றும், அந்த மூன்று கிரஹங்களுக்கும் எவ்வித சேதமும் ஏற்படாதபடி இதைச் செய்தார் என்றும் கூறுவதாக வைத்துக்கொள்வோம்; அதைக் கேட்கும் இந்துவிற்கு அதன் உண்மையைக் குறித்து மிகச்சிறிதளவு சந்தேகம் கூட எழும் என்று நான் நினைக்கவில்லை. ஆனால் அவர் இதைவிட இன்னும் அதிவிசேஷம்வாய்ந்த ஒன்றை உடனடியாக நினைவுக்குக் கொண்டுவருவார்; கிருஷ்ணர் தம் காலத்தில் ஐயப்பட்டவர்களை திருப்தி செய்வதற்காக செய்த அதிவிசேஷ அற்புதங்களை நினைவு கூர்ந்து எளிய கற்பனையோடு அவற்றை விவரிப்பார்.''

இந்தியாவின் சம்பவங்கள் காண்பித்ததுபோல இது ஒரு தவறான அணுகுமுறையாகும். நிச்சயம் அது ஏசுவும் அவருடைய சீடர்களும் கடைப்பிடித்ததற்கு முற்றிலும் நேர்மாறானதாகும். ரோமில் கிறித்தவமதத்தின் வளர்ச்சியைக் குறித்துக் கிப்பன் ஒரு வர்ணனை கொடுத்துள்ளார்; அது ஏசுவும் அவருடைய சீடர்களும் எவ்வாறு தொடங்கினர் என்பதைக் காண்பிக்கும். அவர் கூறுவதெல்லாம் இதுதான்:

''கிறிஸ்துவ மதத்தின் வளர்ச்சி குறித்த இந்த பாரபட்சமற்ற கணக்கெடுப்பானது சரியானதல்ல என்றபோதிலும் ஒன்றைத் தெளிவுபடுத்துகிறது; அதாவது மதம் மாறியவர்களின் எண்ணிக்கையானது ஒருபுறத்தில் பயத்தின் காரணமாகவும், மறுபுறத்தில் பக்தியின் காரண மாகவும் அதீதமாகக் கூறப்பட்டிருக்கலாம் என்பதற்குச் சாத்தியப்பாடு உள்ளது. ஆரிஜினுடைய குற்றம்காணமுடியா உறுதிமொழிப்படி

விசுவாசிகளின் விகிதாசாரம் என்பது உலகில் இதை நம்பாத கூட்டத்தினரோடு ஒப்பிடும்பொழுது மிகவும் சொற்பமே ஆகும்; ஆனால் எந்தவிதமான திட்டவட்டமான விபரமும் நமக்கு இல்லாத நிலையில் துவக்ககாலக் கிறித்தவர்களின் உண்மையான எண்ணிக்கையைத் தீர்மானிப்பது சாத்தியமற்றது என்பதோடு யூகிப்பது கூட சிரமமானதாக இருக்கும். எனினும், மிகவும் சாதகமான கணக்கை ஆண்டியோ, ரோம் உதாரணங்களில் இருந்து பிரித்தெடுக்கமுடியும்; அவையும்கூட கான்ஸ்டன்டைனின் முக்கியமான மதமாற்றத்திற்கு முன்னால் சாம்ராஜ்யத்தில் இருந்த மக்களில் இருபதில் ஒரு பங்கினர்க்கு மேல் கிறிஸ்துவமதத்தில் தங்களை இணைத்துக் கொண்டார்கள் என்று கற்பனை செய்யக்கூட நம்மை அனுமதிக்காது. ஆனால் அவர்களுடைய பழக்கங்கள், உற்சாகம், ஒற்றுமை முதலியன அவர்களுடைய எண்ணிக்கையைப் பெருக்கியிருப் பதாகத் தெரிகிறது; அவர்களுடைய எதிர்கால அதிகரிப்புக்குக் காரணமாக இருந்த இதே காரணங்கள் அவர்களுடைய உண்மையான பலத்தை மிகவும் வெளிப் படையாகவும், மிகவும் உறுதியானதாகவும் ஆக்க உதவியுள்ளது.

"இதுதான், சிவில் சமூகம் என்பதன் அங்கக அமைப்பாகும்; ஒரு சிலர் பணக்காரர்களாகவும், மரியாதை பெற்றவர்களாகவும், அறிவுச் செல்வத்தை அடைந்தவர்களாகவும் திகழ, மக்களில் பெரும்பகுதியினர் தெளிவின்மையிலும், அறியாமையிலும், வறுமையிலும், உழலும்படி தள்ளப்பட்டுள்ளனர். மனிதகுலம் முழுமைக்குமே தன்னை அளித்துள்ள கிறித்துவமதம் வாழ்க்கையின் கீழ்மட்டங்களில் உள்ளவர்களிலிருந்து மிக அதிகமானவர்களை மதமாற்றம் செய்திருக்கவேண்டும். இந்த அப்பாவித்தனமான மற்றும் இயற்கையான சூழ்நிலைமை வெறுக்கத் தக்க அருவருப்பான நிலையாக மாறியது; இது அந்த நம்பிக்கைக்கு எதிரானவர்களைவிட அதன் ஆதரவாளர்களால் ஊக்கத்துடன் மறுக்கப்பட்டது. கிறித்தவரக்களின் புதிய குழுவானது கிட்டத்தட்ட மக்களின் அடித்தட்டுப் பகுதியினரான-விவசாயிகள், மெக்கானிக்குகள், பையன்கள், பெண்கள், பிச்சைக்காரர்கள் மற்றும் அடிமைகளைக் கொண்டதாகவிருந்தது; கடைசியாகச் சொல்லப்பட்டவர்கள் ஒருக்கால் தாங்கள் அடிமைகளாக உள்ள பணக்கார மற்றும் பிரபுக்கள் குடும் பத்தினருக்கு மதப்பிரச்சாகர்களை அறிமுகப்படுத்தியிருக்கலாம். இந்தத் தெளிவில்லாத ஆசிரியர்கள் பொது இடத்தில் ஊமையாயிருப்பார்கள்; ஆனால் தனியிடத்தில் வாய் கிழிய, வறட்டுத்தனமாகப் பேசுவார்கள். அவர்கள், தத்துவவாதிகளுடன் கடுமையாக மோதுவதை எச்சரிக்கை யுடன் தவிர்த்த நேரத்திலேயே, முரட்டுத்தனமான, படிக்காத கூட்டத் துடன் வயது, ஆண், பெண் அல்லது அவர்கள் கல்வி போன்றவை

மூடத்தனம் மற்றும் பயப்போக்கு சிந்தனையை ஏற்கவல்லவை. எனவே, இந்த மதப்பிரசாகர்கள் மூடத்தனமான பயப்போக்கு உணர்வை அவர்கள் சிந்தனையில் புகுத்தினர்.

பேரசசர் ஹத்ரியனிடம் திறமையோடு புகழ்ந்து பேசிப் பரிசுகள் பெற்ற ஆரிஸ் டைடஸ் ஏதென்ஸ் நாட்டு தத்துவவாதி. ஐஸ்டின் மார்டியர் ஜெனோ அல்லது அரிஸ்டாடில், பித்தகோரஸ் மற்றும் பிளோட்டோவின் பள்ளிகளில் படித்து தெய்வீக அறிவைப் பெற முயற்சித்தார்; ஆனால் அதற்கு முன்பாகவே அவர் வயதான மனிதர்கள் சிலரைச் சந்தித்தார். அவர்கள், யூததீர்க்கதரிசிகளைக் குறித்துப் படிக்கும்படி அவரது கவனத்தைத் திருப்பிவிட்டனர். அலெக்சாண்டிரியாவைச் சேர்ந்த கிளமன்ஸ் கிரேக்க மொழியில் ஏராளமாகப் படித்து பெரும் பாண்டித்தியம் பெற்றார்; டெர்டுல்லியன் லத்தின் மொழியில் ஏராளமாகப் பிடித்தார். ஜீலியஸ் ஆப்ரிகாளைம் ஓரிகனும் அவர்கள் காலத்தில் ஏராளமானவற்றைப் படித்தார்கள்; சிப்ரியனின் நடையானது லேக்டன்டியசின் நடையிலிருந்து வெகுவாக வித்தியாசப்பட்ட போதிலும் அவ்விரு எழுத்தாளர்களும் அணி இலக்கணம் என்பதை மக்களுக்குப் போதித்தார்கள் என்பதை நாம் கண்டுகொள்ளமுடிகிறது. கிறித்தவர்களிடையேயும்கூட தத்துவத்தைக் குறித்த படிப்பு அதிகஅளவு அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் அது நன்மை பயக்கும் விளைவுகளை எப்பொழுதும் தரவில்லை; அறிவு என்பது விசுவாசத்தைப் போல மதத்திற்கு எதிரான கொள்கைக் கும், துணையாகும். ஆர்டமனுடைய ஆதரவாளர்களுக்காக உரு வாக்கப்பட்ட விளக்கம் திருத்தூதர்களின் வழித்தோன்றல்களை எதிர்த்த பல்வேறு குழுக்களும் அதே தன்மையில் பயன்படுத்தமுடியும். 'அவர்கள் புனித பைபிளை மாற்றுவதற்கும், பண்டைய நம்பிக்கை ஆட்சியை கைவிடுவதற்கும் தர்க்கவியலின் தந்திரமான விதிகளுக்கு ஏற்ப தங்களுடைய கருத்துகளை உருவாக்கிக் கொள்வதற்கும் நினைக்கிறார்கள். திருச்பையின் விஞ்ஞானம் நிலக் கணக்கியல் படிப்பிற்காக கைவிடப்படுகிறது; பூமியை அளப் பதற்கான பணி யில், உள்ள ஆர்வத்தால் அவர்கள் சொர்க்கத்தைக் காணத் தவறு கிறார்கள். யூக்ளிட் அவர்களுடைய கரங்களில் நிரந்தரமாக இருக்கிறார். அரிஸ்டாடாட்டிலும், தியோ பிராஸ்டசும், அவர்களுடைய போற்று தலுக்கான இலக்குகளாக இருக்கிறார்கள். கேலனுடைய எழுத்து களுக்குப் பிரத்யேகமான மரியாதை செலுத்துகிறார்கள். அவர்களின் தவறுகள், கலையையும், விஞ்ஞானங்களையும் மதநம்பிக்கை அற்றவர்கள் தவறாகப் பயன்படுத்துவதிலிருந்து பெறப்படுகின்றது;

மனிதப்பகுத்தறிவு என்ற நாசுக்கான வார்த்தையைப் பயன்படுத்தி தேவவாக்கியத்தின் எளிமையை அவர்கள் நாசப்படுத்துகிறார்கள்.

''பிறப்பு மற்றும் அதிர்ஷ்டத்தின் பலன்கள் என்பது கிறித்துவ மதத்தின் போதனைகளில் எப்பொழுதும் தனித்தனியாகவே வைக்கப் பட்டுள்ளது என்பதை உண்மையாகக் கூறமுடியுமா? பிளினியின் விசாரணை மன்றத்தில் பல ரோமானியப் பிரஜைகள் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர்; பித்தினியரின் ஒவ்வொரு படிமத்தையும் சேர்ந்த ஏராளமான நபர்கள் தங்களுடைய முன்னோர்களின் மதத்தைக் கைவிட்டிருப்பதைப் பிளினி விரைவில் கண்டுபிடித்தார். இந்த சம்பவத்தில் சந்தேகத்திற்கும் இடமற்ற அவருடைய சாட்சியானது தெர்துல்லியனுடைய துணிவான சவாலை விட அதிகமான நம்பிக்கைக்கு உரியது; ஆப்பிரிக்காவில் துணைமுதல்வர் முன்பு பிளினிபேசுகையில் அவர் தன்னுடைய குரூரமான நோக்கங்களைப் பின்பற்றுவரானால் அவர், கார்த்தேஜ்ஜை சுக்குநூறாக்கிவிடுவார் என்பதுடன் அவர் தனது வரிசையைச் சேர்ந்த நபர்கள், செனட்டர்கள், பிரபுக்கள், பாரம்பரியத்தில் வந்த எஜமானிகள் அவருடைய நெருக்கமான நண்பர்களின் நண்பர்கள் அல்லது உறவினர்கள் போன்ற குற்றம்புரிந்த நண்பர்களிடையே தன்னையும் காண்பார். எனினும் 40 வருடங்களுக்குப் பிறகு பேரரசர் வலேரியன் இந்தக் கூற்றின் உண்மையைப் புரிந்துகொண்டார்; அவருடைய கட்டளை ஒன்றில் செனட்டர்கள், ரோமபுரிபிரபுக்கள் மற்றும் ஏஜமானிகள் போன்றோர் கிறித்துவகுழுவில் இருந்தனர் என்று அவர் அனுமானிப்பதாகத் தெரிகிறது. கிறித்துவ திருச்சபையானது அதனுடைய வெளிப்புறப் பரிகாசத்தைத் தொடர்ந்து அதிரிக்கிறது; ஆனால் அது உள்புற பரிசுத்தத் தன்மையை இழந்துவிட்டது. டையாக்ளடியன் ஆட்சிக்காலத்தில் அரண்மனை, நீதிமனற்றங்கள், மற்றும் ராணுவத்திலும் கூட கிறித்து வர்கள் பெருந்திரளாக மறைக்கப்ப்டிருந்தனர்; அவர்கள் இன்றைய நலன்களை எதிர்கால வாழ்வோடு இணைக்கப்படுத்திப் பார்க்க முயற்சித்தனர்.

கிறித்தவ மதத்திற்கு முதலில் மதம் மாறியவர்க்ள் அறியாமை யினாலும், தெளிவற்ற தன்மையினாலும் சேர்ந்தனர் என்று அகந்தையாக அவர்களைப் பற்றி கூறப்படுவதை முற்றிலும் அகற்ற இத்தகைய விதிவிலக்குகள் எண்ணிக்கையில் ஒரு சிலவாக மட்டுமே உள்ளன. அல்லது மிகச் சமீபத்திய காலத்தியதாக இருந்தது. பிற்காலங்களில் சொல்லப்பட்ட கற்பனைக் கதைகளை நமது வாதத்திற்கு ஆதரவாக பயன்படுத்துவதற்குப் பதிலாக இந்த நிந்தனைக்குரிய சந்தர்ப்பத்தை

உபதேசமான விஷயமாக மாற்றலாம். நம்முடைய ஆழமான சிந்தனைகள் நமக்கு ஒரு விஷயத்தை முன்வைக்கின்றன; அதாவது திருத்தூதர்கள் என்பவர்களே கலிலேயாவில் இருந்த மீனவர்களில் இருந்து இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று யோசிக்க வைக்கிறது; முதல் கிறித்துவர்களின் பொருளாதார நிலைமையின் அடிமட்டத்தைக் காணும்பொழுது அவர்களுடைய தகுதியையும், வெற்றியையும் நாம் பாராட்டுவது நிச்சயம். பரலோக ராஜ்யம் என்பது உணர்வில் ஏழைகளுக்காக வாக்களிக்கப்பட்டுள்ளது; சிந்தனைகள் பெரும் துன்பத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன, மனிதகுலத்தின் சிந்தனை என்பது எதிர்கால மகிழ்ச்சி குறித்த தெய்வீக வாக்குறுதியை உற்சாகமாக கவனிக்கிறது; மாறாக அதிர்ஷ்டசாலிகள் இந்த உலகை வைத்துக் கொண்டு திருப்தி அடைகிறார்கள்; புத்திசாலிகள் சந்தேகத்தில் திளைத்துப் பகுத்தறிவு மற்றும் அறிவில் மேன்மை பெற்றவர்கள் என்று வீணாக வாதிடுகிறார்கள்.

இதைப் போன்றே ஹல்லம் தன்னுடைய ''மத்திய காலங்களின் வரலாறு'' என்ற நூலில் ஆரம்பகாலக் கிறித்தவர்கள் எந்த வர்க்கத்திலிருந்து ஈர்க்கப்பட்டார்கள் என்பதைப் பற்றிக் கூறுகிறார்.

கிறித்தவ மதமானது ரோமில் அனைத்துப்பிரஜைகளின் மதமாக விளங்கியது. அதாவது உயர்ந்த வர்க்கத்தினர்களையும் கொண்ட மதமாக ஏன் விளங்கியது என்பதற்கு இரண்டு வெளிப்புற காரணங்கள் உள்ளன. முதலாவது காரணம் கிறித்துவமானது அரசாங்க மதமாக மாற்றப்பட்டது; இதன் பொருள் என்னவென்றால், இதர மதங்கள் தடை செய்யப்பட்டன என்பதாகும். இரண்டாவது காரணமானது, ரோமப் பேரசசர்கள் கிறித்துவ மதத்திற்கு மதம்மாறியபிறகு வாரிசு சட்டத்தை மாற்றம் செய்ததாகும்; பெற்றோர்களின் சொத்துக்களில் மதம் மாறாத குழந்தைகளைவிட மதம் மாறிய குழந்தைக்கு முன்னுரிமை உண்டு என்பதாகும். இதுகர்ண்பிப்பது என்னவென்றால் கிறித்துவமதம் இயல்பாக மிக ஏழைகளின் வர்க்கம் என்றும், இவர்களிடையில்தான் கிறித்துவ மதமானது சட்டத்தின் உதவி இன்றியோ, அல்லது இதரவெளி உதவிகளின்றியோ முதலில் பரவியது.

ஆரம்பகாலக் கிறித்துவ மதப்பிரசாகர்கள் இயற்கையான இந்த வரிசைப்படியை மாற்றி வைத்தார்கள். நான் இதை இயற்கை என்று அழைக்கிறேன். ஏனென்றால், அது மனித மனோதத்துவத்திற்குப் பொருத்தமாக உள்ளது. மனோதத்துவத்தில் மிகப்பெரும் வல்லுனராக

கருதப்படும் தார்ன்டைக்* கூறுகிறார். ''ஒரு மனிதன் சிந்திக்கிறான் என்பது உயிரியல் அம்சம். ஆனால் அவர் என்ன நினைக்கிறான் என்பது சமூகவியல் அம்சம்''. இந்த ஆழமான பொருள் பொதிந்த கருத்தை ஆரம்பகால கிறித்தவ மதப்பிரசாரகர்கள் முற்றிலும் கவனிக்கத் தவறிவிட்டார்கள். ஒவ்வொரு வகைப்பட்ட சிந்தனையும் ஒவ்வொரு நபருக்கும் ஏற்புடையதாகாது. இது முதலாளித்துவம் பணக்காரர்களுக்கு ஏற்றதாகவும், ஏழைகளுக்கு ஏற்புடையதாய் இல்லை. இதற்குக் காரணம் என்னவென்றால் ஒரு மனிதனுடைய நலன்களுக்கும், அவனுடைய நலன்களுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் கருத்துகளுக்கும் இடையே மிகவும் நெருக்கமான தொடர்பு உள்ளது என்பதாகும். அவர் தன்னுடைய சிந்தனையில் அதற்கு இடமே அளிக்கமாட்டார். மனித சிந்தனை செயல்படும் விதம் குறித்த இந்த ஆய்வை வைத்துக் காணும்பொழுது பிராமணர்களும் மற்றும் இதர உயர்வகுப்பினரும் கிறித்துவக் கோட்பாடுகளை ஒருபோதும் வரவேற்கமாட்டார்கள் என்பது தெளிவாகும். அது மனிதர்களின் சகோதரத்துவத்தைப்போதிக்கிறது என்பதுடன் அதைப் பின்பற்றும் பொழுது அது மனிதர்களின் சமத்துவத்திற்கு இட்டுச் செல்கிறது. தற்பொழுது பிராமணர்கள் மற்றும் இதர வகுப்பினரின் ஆர்வமானது நால்வர்ணமுறை என்பதைப் பாதுகாப்பதாகவே உள்ளது. இந்த முறையானது அசமத்தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதோடு அது தராசில் அவர்களுக்கு, ஒரு உயர்ந்த படிமத்தை அளிக்கிறது; அத்துடன் இதரர்கள் மீது ஆதிக்கம் செலுத்தி அவர்களைச் சுரண்டுவதற்கு மிகப்பெரும் வாய்ப்பை அளிக்கிறது. கிறித்துவ மதத்தை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்? அதன் பொருள் என்னவென்றால் தங்களுடைய அதிகாரத்தையும், செல்வாக்கையும் சரணடையச் செய்வது என்பதாகும். அவர்கள் பின்னால் போவது வீண்வேலை, என்பதோடு, இது தொடர்ந்து நடைபெறுமானால் இந்தியாவில் ஒரு கிறித்துவர் கூட இருக்கமாட்டார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இந்தியாவில் இன்று நாம் காணும் கிறித்துவர்கள் எண்ணிக்கையானது சில கிறித்துவர்கள் பிரச்சாகர்கள் இந்த விஷயத்தின் பயனற்ற தன்மையையும் உணர்ந்தாலே ஆகும். இந்த தவறை அவர்கள் புரிந்துகொண்டு அடித்தட்டு வகுப்புகளைச் சேர்ந்த மக்களை வென்றெடுக்கும் பணியில் இறங்காமல் இருந் திருந்தால் இந்தியாவில் ஒரு கிறித்துவர் கூட இருந்திருக்கமாட்டார். இன்றுகூட லட்சக்கணக்கான உயர்சாதி இந்துக்கள், கிறித்துவப் பள்ளிகள், கிறித்துவக் கல்லூரிகள், கிறித்துவ மருத்துமனைகளைப்

★ மனோதத்துவம் - தொகுப்பு-1

பயன்படுத்திக் கொள்கின்றனர். இந்த பயன்களைப் பெற்றவர்களில் எத்தனைபேர் கிறித்துவர் கள் ஆனார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் இவற்றால் பயனடைந்து விட்டு ஓடிவிடுகிறார்கள்; மனித குலத்திற்கு இந்த அளவு சேவைபுரியும் ஒரு மதத்தின் தகுதிகளை ஆராய்வதற்கு ஒரு கணம்கூட நிற்பதில்லை.

□□□

## இயல் 30

# சமயம் மாறியவரின் நிலை

i. காந்தியும் அவரது கிறித்தவ சமயத்தின் எதிர்ப்பும்
ii. கிறித்தவமும் சமுதாய சேவையும்
iii. கிறித்தவமும் அஞ்ஞானமும்.
iv. கிறித்தவ சமூக உணர்வும் அதன் சமுதாயநிலையும்

## I

பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்களிடையே தோழமை உணர்வை வளர்க்கும் லட்சியம் கொண்ட சர்வதேச தோழமைக் கழகத்தின் கூட்டம் ஒன்று 1928ம் ஆண்டு நடைபெற்றது. கிறித்தவ சமயப்பரப்பாளர்களும் மற்றும் இந்து, முகமதிய சமயப் பரப்பாளர்களும் அதில் பங்குபெற்றனர். திரு. காந்தியும் வந்திருந்தார். இந்தத் தோழமைக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மற்றவர்களைத் தங்களின் சொந்த சமயத்திற்கு மாற்ற விரும்பினால் இந்தக் கழகம் தனது லட்சியத்திற்கு ஏற்ப எந்த அளவுக்கு இயங்கமுடியும் என்ற கேள்வி அக்கூட்டத்தில் எழுப்பப் பட்டது. இதை அடுத்து நடந்த விவாதத்தில் திருவாளர் காந்தி பேசினார். இந்த விவாதம் பற்றி அவரது நண்பர் திரு.சி.எப். ஆண்ட்ரூஸ் பின்வருமாறு எழுதுகிறார்:*

''இந்தியாவிலுள்ள கிறித்தவ சமயப் பரப்புக் குழுக்கள் முழுமைக்கும் இந்த கேள்வியின் பின்னால் ஒரு திட்டவட்டமான சவால் இருந்தது. கிறித்தவ சமயப் பரப்பாளர்களில் முற்போக்கு மனம் படைத்தவர்கள் இந்தத் தோழமைக் கழகம் பற்றி மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருந்தனர். அதன்பின் மகாத்மா காந்தியின் அறிவிப்பு வந்தது. அவர் கூறினார்: இந்தத் தோழமைக் கழகத்தில் சேருவதில், கழகத்தின் மற்ற உறுப்பினர் எவரையும், தங்கள் செல்வாக்குக்கு உட்படுத்துவது அல்லது சமய மாற்றம் செய்வது என்னும் சிறிதளவு எண்ணம்

---

* சி.எப். ஆண்ட்ரூஸின்'' இந்தியா, பர்மா, சிலோன் நாடுகளின் இளைஞர்கள்'' என்ற நூலில்,''பல்வேறு மதங்களிடையே தோழமையின் அடிப்படை'' ஜுன் 1928, தொகுதி 11, எண்.6

இருந்தாலோ அல்லது இன்னும் சொல்லப்போனால் மிகச்சிறிதளவு சிந்தனை எதுவும் இருந்தாலோ அப்பொழுது இந்த இயக்கத்தின் ஆன்மா அழிக்கப்படலாம். எனவே எவராவது அத்தகைய விருப்பம் உள்ளவராக இருந்தால் இந்தக் கழகத்திலிருந்து அவர் விலகிக் கொள்ள வேண்டும்.''

'எங்களிடம் உலகத்தின் மிகச்சிறந்த பொக்கிஷம் இருக்கு மாயின் அதை மற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பது தவறா?' என்று கிறித்தவ சமயப் பரப்பாளர்கள் மேலும் கேள்வி எழுப்பியபோது அவர்களின் அனுமானத்தைத் திரு. காந்தி உடனே மறுதலித்தார். ''அவர் தமது நிலையில் மிகப்பிடிவாதமாக இருந்தார்'' என்கிறார், திரு. ஆண்ட்ரூஸ். ''அத்தகைய கருத்தே தவறு'' என்று அவர் அழுத்தம் திருத்தமாகக் கூறினார். ''அந்த நிலையிலிருந்து அவர் மாறவே இல்லை.''

கிறித்தவ மதத்திற்கு மாற்றம் செய்யும் முயற்சிக்குத் திரு.காந்தி காட்டி வந்துள்ள எதிர்ப்பு அனைவரும் மிக நன்கு அறிந்ததே. 1936 லிருந்து, கிறித்தவமதப் பிரசாரத்திற்கு ஒரு உக்கிரமான எதிர்ப் பாளராக அவர் இருந்து வந்திருக்கிறார். தீண்டப்படாதவர்கள் மத்தியில் கிறித்தவ மத போதனைகளை மதபோதகர்கள் பரப்புவதை அவர் குறிப்பாக ஆட்சேபிக்கிறார்.

கிறித்தவ சமயப்பரப்பு அமைப்புகளுக்கும் தீண்டப்படாத வர்களைக் கிறித்தவ சமயத்திற்கு மாற்றம் செய்யும் முயற்சிகளுக்கும் அவர் காட்டும் எதிர்ப்பு சில கணிப்புகளின் அடிப்படையிலானது; இவற்றைச் சந்தேகத்திற்கு இடமில்லாதபடி அவர் தெளிவாக்கி யுள்ளார். இவ்வகையில் அவரது நான்கு கணிப்புகளை அவர் வார்த்தைகளிலேயே எடுத்துக் கூறுகிறேன். அவர் கூறுகிறார் :

I. ''எல்லாச் சமயங்களும் அடிப்படையில் சமமானவை என்பது என் நிலை. நமது சொந்த சமயத்திற்குப் போலவே எல்லாச் சமயங்களுக்கும் நாம் உள்ளார்ந்த மதிப்பு அளிக்கவேண்டும். பரஸ்பரம் சகித்துக்கொள்வது என்பதல்ல இதன் பொருள்; மாறாக பரஸ்பரம் மரியாதை செலுத்துவது என்பதே இதன் பொருள் என்பதை மனதில் கொள்ளுங்கள்.*

---

★ ஹரிஜன், 1936, பக்கம் 330

II. ''சமய போதகர்களிடம் நான் விரும்புவதெல்லாம், கிறித்தவ வாழ்க்கையை வாழுங்கள் என்பதுதான், விளக்க உரை நிகழ்த்து வதல்ல.* உங்கள் வாழ்க்கை எங்களிடம் பேசட்டும். ரோஜா மலரைப் பார்க்க முடியாத பார்வையற்றோர் அதன் மணத்தை நுகர்ந்து கொள்ளமுடியும். ரோஜா மலரின் உபதேச இரகசியம் அதுதான். ஆனால் ஏசு கிறிஸ்து உபதேசித்த மார்க்கம், ரோஜாமலரின் உபதேசத்தை விடவும் நுட்ப மானதும் ஈர்ப்புசக்தி உடையதுமாகும். ரோஜா மலருக்கு ஏஜெண்டுகளின் தேவை இல்லை எனின், ஏசு கிறிஸ்துவின் மார்க்கத்தை உபதேசிப்பதற்கு ஏஜெண்டுகளின் தேவை அதைவிடவும் மிகமிக குறைவே.''**

III. "இந்த சமயபோதகக் குழுக்களின் சமுதாயப்பணி சமுதாயப் பணி என்ற அளவில் செய்யப்படுவதில்லை. மாறாக, சமுதாய சேவையின் பலனைப்பெறுகிறவர் பாபவிமோசனம் அடைவ தற்கு உதவிகரமாக இருப்பதற்காகச் செய்யப்படுகிறது.***... நீங்கள் வைத்திய உதவி அளிக்கும்போது, அதற்கு வெகுமதியாக உங்களின் நோயாளிகள் கிறித்தவ மதத்தில் சேரவேண்டும் என்று எதிர் பார்க்கிறீர்கள்.''****

தீண்டப்படாதவர்கள் பற்றி அவர் கூறுவது:

IV. ஹரிஜன மக்களில் மிகப் பெரும்பான்மையோர், ஏன் இந்திய மக்களில் மிகப்பெரும்பான்மையோர் கூட கிறித்தவ சமயம் பற்றி அளிக்கப்படும் போதனையைப் புரிந்துகொள்ளமுடியாது என்பது என் கருத்து. மேலும் பொதுவாகக் கூறவேண்டுமெனில், எங்கெல்லாம் (கிறித்தவ) சமயத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதோ, அது ஒரு ஆன்மீக செயலாக எந்த விதத்திலும் இருந்ததில்லை. இவையெல்லாம் சௌகரியத்திற்காகச் செய்யப்பட்ட சமய மாற்றமே.*****

சமயங்களுக்கிடையே உள்ள தராதரங்களை எவ்வாறு ஒரு பசுவால் உணர்ந்துகொள்ளமுடியாதோ அவ்வாறே அவர்களாலும் (ஹரிஜனங்களாலும்) உணர்ந்து கொள்ளமுடியாது. (வார்த்தைகள் விடப்பட்டுள்ளன.) கடவுள் இருக்கிறார் அல்லது இல்லை என்பதை

---

* ஹரிஜன், 1936, பக்கம் 353

** ஹரிஜன், ஏப்ரல் 1937, பக்கம் 86

*** ஹரிஜன், 1937, பக்கம் 137

**** ஹரிஜன், ஜூலை, 18,1937, பக்கம் 178

***** ஹரிஜன் 1936, பக்கம் 140-141

பாகுபடுத்திப் புரிந்து கொள்ளும் மனமோ, புத்திக்கூர்மையோ, திறமையோ ஹரிஜனங்களுக்குக் கிடையாது.''* கிறித்துவ சமய போதகக் குழுக்கள் எதைச் செய்வது முறையாக இருக்கும் என்பது பற்றிக் காந்தி, அவர்களது மனத்தைப் புண்படுத்தும் முறையில் உபதேசம் செய்கிறார். அவர் கூறுகிறார்:

''கிறித்தவ சமயப் போதகக் குழுக்கள் தங்கள் பணியை அக்கறையுடன் ஆற்றவேண்டுமானால், ஹரிஜனங்களை மதம் மாற்றம் செய்யும் அநாகரிகமான போட்டியிலிருந்து அவர்கள் அவசியம் விலகிக் கொள்ள வேண்டும்''.

'' அஞ்ஞானிகள் வாழும் ஒரு நாட்டிற்கு வந்திருப்பதாக நீங்கள் கொண்டுள்ள எண்ணத்தை ஒருவிநாடி மறந்துவிடுங்கள்; நீங்கள் இறைவனைத் தேடுவது போலவே அவர்களும் இறைவனைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்... இங்குள்ளவர்களுக்கு ஆன்மீக விஷயங்களை அளிக்க இங்கு நீங்கள் வரவில்லை, மாறாக உங்களிடம் அதிகம் இருக்கும் லௌகிகப் பொருட்களை அவர் களுடன் பகிர்ந்து கொள்ளவே வந்திருக்கிறீர்கள் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள். அப்பொழுது மனதில் எந்த தயக்கமு மின்றி உங்கள் பணிகளை ஆற்றுவீர்கள்; அதன்மூலம் நீங்கள் உங்களின் ஆன்மீக பொக்கிஷங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இது விஷயமாக உங்களிடம் மனத் தயக்கம் இருக்கிறது என்ற எண்ணம், அதாவது ஒரு மனிதனுக்கு அளிக்கும் சேவைக்குப் பிரதியாக அவன் சமயம் மாற வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்ப்பது, உங்க ளுக்கும் எனக்கும் இடையே ஒரு வேலியை எழுப்புகிறது.''

'' எங்களிடையே தங்களது வாழ்க்கையை வாழவும் தங்களிடம் ஏதேனும் நறுமணம் இருப்பின் அதாவது நல்ல கருத்துகள் இருப்பின் அவற்றை எங்களுடன் பகிர்ந்துகொள்ளவும் கிறித்த வர்கள் இந்தியாவிற்கு வந்திருந்தார்களேயானால் இந்தியாவின் வரலாறு வேறுவிதமாக எழுதப்பட்டிருக்கும்.''**

கிறித்தவ சமயப்பரப்பு குழுக்கள் மீதும் அவர்கள் பணி மீதும் திரு.காந்திக்கு இருக்கும் காலத்தில் இந்தப் பகைமை மிகச் சமீப காலத்தில் ஏற்பட்டதே. இயோலா முடிவுக்குமுன் அது

---

* ஹரிஜன், 1936, பக்கம் 360

** ஹரிஜன், 1936, பக்கம் 353.

இருந்திருக்குமா என்பது எனக்குத் தெரியவில்லை. இந்தப்பகைமை எப்படி சமீபகாலத்தில் ஏற்பட்டதோ அவ்வாறே விசித்திரமான தாகவும் உள்ளது. இஸ்லாமிய சமயத்திற்குத் தீண்டப்படாத வர்கள் மாற்றம் செய்வதற்கு இவ்வளவு உறுதியான முறையில் தமது எதிர்ப்பை திரு.காந்தி வெளிப்படுத்தியிருக்கிறாரா என்பதை நான் அறியேன். தீண்டப்படாதவர்களைப் பற்றிய தங்கள் திட்டத்தை முகமதியர்கள் என்றும் மூடிமறைத்து வைத்திருந்ததில்லை. 1923ல் காக்கிநாடாவில் நடைபெற்ற காங்கிரஸின் வருடாந்திர மாநாட் டிற்குத் தலைமை வகித்து உரையாற்றும்போது மௌலானா முகமது அலி அத்தகைய திட்டத்தைப் பகிரங்கமாக அறிவித்தார். அவர் தமது தலைமை உரையில் கூறியதாவது:

> "அரச மரம் பற்றி இந்துக்களுக்கும் முகமதியர்களுக்கும் இடையே உள்ள சச்சரவுகளும் வாத்தியக் கோஷ்டிகளுடன் நடைபெறும் ஊர்வலங்கள் பற்றிய சண்டையும் உண்மை யிலேயே சிறுபிள்ளைத்தனமானவை. மதசம்பந்தமான நட வடிக்கைகள் பற்றி சுமூகமாக தீர்வு செய்யப்படாவிடில்) நட்புக்குப் புறம்பான நடவடிக்கை என்று புகார் செய்வதற்கு அடிப்படையாக அமையும் ஒரு பிரச்சினை இருக்கிறது: ஒடுக்கப் பட்ட சாதியினரை இந்து சமுதாயம் விரைவாகத் தன்வயப் படுத்திக் கொள்ளாவிடில் அவர்கள் சமயமாற்றம் செய்யப்படும் பிரச்சினையே அது. கிறித்தவ மத போதக சபைகள் இந்தப் பணியில் ஏற்கனவே தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன; இதுபற்றி சச்சரவு எதுவும் ஏற்படுவதில்லை. ஆனால் ஒரு முஸ்லீம் மதபோதக அமைப்பு இதே பணிக்காக திட்டமிட்டுச் செயல் பட்டால் மறுகணமே பத்திரிக்கைகள் வரிந்துகட்டிக் கொண்டு கூக்குரல் எழுப்புகின்றன. ஒடுக்கப்பட்ட சாதியினரைப் பெருமள வில் மதமாற்றம் செய்வதற்காக ஒரு (முஸ்லீம்) மதபோத அமைப்பிற்கு ஏற்பாடு செய்யும் திறமைவாய்ந்த செல்வாக்குள்ள செல்வந்தரான ஒரு கனவான் என்னிடம் ஒரு யோசனையை முன்வைத்தார்: பிரபல இந்து கனவான்களோடு ஓர் ஒப்பந்தத் துக்கு வரமுடியும் என்பது அவர் கருத்து. அதன்படி இந்து மதபோதக அமைப்புகளும் இஸ்லாம் மத போதக அமைப்பு களும் நாட்டில் அவை செயல்படவேண்டிய வட்டாரங்களைத் தனித்தனியே ஒதுக்கிக் கொள்ளலாம். ஒவ்வொரு மத சமுதாயத்தினரும் ஒவ்வொரு ஆண்டும் அவசியமாயின் அதற்கு அதிகமான கால அளவும் இருக்கலாம் - தங்கள் சமயத்தில் ஈர்க்கக்கூடிய அல்லது மதம் மாற்றம் செய்யக்கூடியவர்களின் எண்ணிக்கைபற்றி மதிப்பீடு செய்யலாம். ஒவ்வொரு(மத)

சமுதாயமும் திரட்டக்கூடிய ஊழியர்கள், நிதி ஆகியவற்றின் அடிப்படையிலும் முந்திய காலகட்டத்தில் மதமாற்றம் செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை அடிப்படையிலும் இதை நிர்ணயிக்கலாம். இம்முறையில் ஒவ்வொரு சமுதாயமும் ஈர்த்துக் கொள்வது அல்லது மதமாற்றம் செய்வது அல்லது சீர்திருத்தம் செய்வது ஆகியவற்றைச் செய்யும் பணிகளில் ஈடுபடமுடியும்; இதனால் ஒரு சமூகத்தினர் மற்ற சமுதாயத் தினருடன் மோதிக்கொள்வதற்குச் சந்தர்ப்பங்கள் இருக்காது.''

இதைவிட அதிகம் தெளிவாகக் கூறுவதற்கு வேறு என்ன இருக்கிறது! ஏதோ ஒரு வியாபார ஒப்பந்தம் செய்துகொள்வதுபோல் காங்கிரஸ் மேடையிலிருந்து வந்த இந்த அறிவிப்பைவிட மிக மோசமானது வேறு என்ன இருக்கமுடியும்! தீண்டப்படாதவர்களை மதமாற்றம் செய்ய கிறித்தவ சமயக் குழுக்கள் செய்யும் முயற்சியை இன்று கண்டனம் செய்யும் இதே திரு.காந்தி எப்பொழுதாவது மேற்சொன்ன முஸ்லீம் மத அமைப்புகளின் முயற்சிகளைக் கண்டித் திருக்கிறரா என்று தெரியவில்லை. காந்தியைச் சுற்றியுள்ளவர் எவரும் இந்த கொடூரமான யோசனையைக் கண்டிக்கவில்லை. முஸ்லீம்களுக்கு உதவுவது தங்கள் சமயக்கடமை என்று காங்கிரஸில் உள்ள இந்துக்கள் கருதுவதும் அதேபோல் மதம்மாற்றம் செய்வது தங்கள் சமயக் கடமை என்று முஸ்லீம்கள் நினைப்பதை யாரும் மறுக்கமுடியாது என்று இவர்கள் எண்ணுவதும் ஒருவேளை இதற்குக் காரணமாக இருக்கலாம். காங்கிரஸின் இந்து தலைவர்களின் நிலைபற்றி ஜார்ஜ் ஜோசப் 1920ல் குறிப்பிட்டது போல, ''ஜஸிருட்-அல்-அரபில்'' அரபுகள் மீது துருக்கிய கிலாபத்தின் மேலாதிக்கத்தை நிலை நிறுத்துவதில் முஸ்லீம் களுக்கு உதவுவது இந்துக்களின் சமயக் கடமையாகும்; ஏனெனில் முஸ்லீம் மதத்தலைவர்களும் அரசியல் தலைவர்களும் இது தங்களது சமயக்கடமை என்று நமக்கு உறுதி கூறினர். ஆனால் இது நியாயத் திற்கு முரணானது; ஏனெனில் இது அரபியர்கள் மீது அந்நிய சர்க்காரின் ஆதிக்கத்தைச் சுமத்துவதாகும்; ஆனால் இதை இந்துக்கள் ஜீரணிக்க வேண்டியதாயிற்று; ஏனெனில் இந்துக்களின் சமயக் கடமையின் பகுதியாகும் இது என்று அவர்களிடம் வலியுறுத்திக் கூறப்பட்டது!★ இது உண்மையெனில், மதமாற்றம் செய்வதற்குக் கிறித்தவர்களுக்கு ஏன் காந்தி உதவிசெய்யக்கூடாது. ஏனெனில் மதமாற்றம் செய்வது அவர்களின் மதக் கடமையை நிறைவேற்று வதுதானே!

---

★ ஹரிஜன், பிப்ரவரி 8, 1936, பக்கம் 415

கிறித்துவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதற்காக ஏன் இந்த வித்தியாசமான அளவுகோல்? இதனை ஒருவர் புரிந்து கொள்வது கடினம். திரு.ஜார்ஜ் ஜோசப் பின்வருமாறு கூறியது மிகப் பொருத்தமானதுதான்:-

''ஒரே வித்தியாசம் என்னவெனில், முஸ்லீம்கள் ஏழரைக் கோடி பேர் உள்ளனர்; கிறித்தவர்கள் 60 லட்சம் மட்டுமே. முஸ்லீம்களோடு சமாதானம் செய்துகொள்வது நல்லதாக இருக்கலாம்; காரணம், அவர்கள் தேசியத்துக்கு ஒரு முள்ளாக ஆகலாம். கிறித்தவர்களைப் பொருட்படுத்த வேண்டாம்; ஏனெனில் அவர்கள் எண்ணிக்கை குறைவுதான்.''

முகமதியர்கள், கிறித்தவர்கள் ஆகியவர்களின் எண்ணிக்கைப் பலம் மற்றும் இந்திய அரசியலில் அவர்களின் செல்வாக்கின் பலம் ஆகிய அம்சங்களின் அடிப்படையில்தான் திரு.காந்தியின் நிலை அமைந்துள்ளது; கிறித்தவர்களைச் சாடுவதற்கு ''அவதூறுப்பிரசாரம்'' என்ற சொற்பிரயோகத்தை அவர் பயன்படுத்தி இருப்பதிலிருந்து இது தெளிவாகிறது. கிறித்தவ மதபோதக அமைப்புகளிடமிருந்து அத்தகைய பிரசாரம் வெளிப்படும்போது, அதைக் கீழ்க்கண்ட வார்த்தைகளில் அவர் கண்டனம் செய்கிறார்: (கையெழுத்துப்பிரதியில் இந்த மேற்கோள் இல்லை) அதேசமயம் முஸ்லீம்களின் பிரசாரத்திற்கு எதிராக அவர் கூறுவதெல்லாம் இதுதான்: ★

''மக்களைக் கவர்ச்சி செய்து தங்கள் மதத்திற்கு இழுப்பதற்காக, லௌகீகத்தை இவ்வளவு கீழான, கொச்சையான முறையில் பயன்படுத்தி மதம் தாழ்த்தப்படுவது சோகமானது; லட்சோபலட்சம் மக்களின் மிகவும் உன்னதமான உணர்வுகளை இது காலால் மிதித்து நசுக்கிறது.

'' இந்த பிரசாரப் பிரசுரம் சிந்தனை செய்யும் முஸ்லீம்களின் ஆதரவை பெறவில்லை என்று நான் நம்புகிறேன்; இத்தகைய பிரசுரங்கள் எத்தகைய தீங்கை ஏற்படுத்தக்கூடும் என்பதைப் புரிந்து கொள்ள அவர்கள் அதை அவசியம் படிக்கவேண்டும்.

'' இந்த அபாயத்தை எவ்வாறு சமாளிப்பது என்று எனக்குக் கடிதம் எழுதியவர் கேட்கிறார். நான் அளிக்கும் ஒரு பரிகாரம் இத்தகைய பிரசாரத்தை முஸ்லீம் சமுதாயத்தில் பொறுப்பானவர்கள்

---

★ ஹரிஜன், ஆகஸ்ட் 8, 1936

கவனத்திற்குக் கொண்டுவருவதுதான். ஸ்தல முஸ்லீம் தலைவர்களின் கவனத்திற்கு அவரே இந்தப் பிரசுரத்தைக் கொண்டு வரலாம். இரண்டாவதும் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததும் உள்ளேயே ஆத்மபரிசுத்தப்படுத்துவதாகும். இந்து சமுதாயத்தில் தீண்டாமை நிலைபெற்றிருக்கும் வரை, வெளியிலிருந்து தாக்குதலுக்கு அது உட்படவே செய்யும். தீண்டாமையை அறவே அகற்றுவதன்மூலம் பரிசுத்தப்படுத்துதல் என்ற உறுதியான, தகர்க்க முடியாத சுவரை எழுப்புவதுதான் இத்தகைய தாக்குதலுக்கு எதிரான பதில் ஆகும்.''

முந்தியவரது உக்கிரமும் பிந்தியவரது இரக்கமும் கலந்த கோழைத்தனமும் தெளிவாக உள்ளன. சாதுரியமாக நபர்களை மதிப்பவர் என்று காந்தியை நிச்சயமாக சொல்லாம்.

முஸ்லீம், கிறித்தவ பிரசாரம் பற்றி வித்தியாசப்பட்ட கண்ணோட்டம் திரு.காந்தி கொண்டுள்ளார் என்பதைத் தவிர, கிறித்தவமத அமைப்புகள் பற்றி நான் சுருக்கிமேலே கொடுத்துள்ள அவரது வாதம் பொறுத்தமானதா? அவை தந்திரமானவை மட்டுமே. அவற்றில் ஆழம் எதுவும் இல்லை. பின்வாங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்ட ஒரு மனிதரின் முரட்டுத்தனமான வாதங்களே அவை. சமத்துவமான சகிப்பிற்கும் சமத்துவமான மரியாதைக்கும் இடையே ஒரு பாகுபாட்டைச் செய்வதன் மூலம் திரு.காந்தி துவங்குகிறார். ''சமத்துவமான மரியாதை'' என்பது புதுச்சொற்றொடர் பிரயோகம். இதன்மூலம் எத்தகைய பாகுபாட்டைச் செய்யவிரும்புகிறார் என்பதைப் புரிந்துகொள்வது கடினம்; ஆனால் இந்த புதுச்சொற்றொடரை உபயோகித்திருப்பது முக்கியத்துவம் பெறாததல்ல. ''சமத்துவ சகிப்புத் தன்மை'' என்ற பழைய பதப்பிரயோகம் தவறு ஏற்பட வாய்ப்பு அளிக்கிறது. மாறாக, ''சமத்துவ மரியாதை'' என்பது எல்லா சமயங்களும் சமமான அளவு உண்மையானவை, சமமான அளவு மதிப்புடையவை என்பதை ஏற்றுக்கொள்கிறது. அவரை நான் சரியாகப் புரிந்துகொண்டிருக்கிறேன் எனில், அவரது வாதம் தர்க்கரீதியாகவும் வரலாற்றுரீதியாகவும் முற்றிலும் தவறானது. சமயத்தின் நோக்கம் கடவுளைச் சென்றடைவதாகும் என்றும், - அவ்வாறு நான் கருதவில்லை - அவரை அடைவதற்கான பாதை மதம் என்றும் வைத்துக் கொண்டால்கூட ஒவ்வொரு பாதையும் இறுதியில் கடவுளைச் சென்றடையும் என்று நிச்சயமாகக் கூற முடியாது. மேலும் ஒவ்வொரு பாதையும், அது இறுதியாக கடவுளைச் சென்றடையக் கூடியதாக இருந்தாலும் சரியான பாதை என்று அதனைச் சொல்லிவிடவும் முடியாது. ஒருவேளை பூரணத்துவம் வாய்ந்த சமயம் இனிமேல்தான்

தோன்றவேண்டும் (இன்றுள்ள எல்லா சமயங்களும் பொய்யானவை) என்றும் இருக்கலாம். உண்மை என்னவெனில் மதங்கள் எல்லாம் நேர்மையானவை அல்ல; எனவே, ஒரு சமயத்தைப் பின்பற்றுகிறவர்களுக்கு, தவறுசெய்யும் நண்பர்களுக்குத் தாங்கள் உண்மையென்று கருதுவதை எடுத்துக்கூறும் உரிமை உள்ளது; அது அவர்களின் கடமையுமாகும். தீண்டப்படாதவர்கள் பசுமாட்டைவிட உயர்வானவர்கள் அல்ல என்ற கருத்தை அறிவிலியான அல்லது அகம்பாவம் பிடித்த ஒருவரால்தான் வெளியிடமுடியும். இது சுத்த முட்டாள்தனம்! தம்மை மிகச்சிறந்த மனிதராக திரு.காந்தி கருதுவதால்தான் இத்தகைய அறிவிப்பைத் தைரியமாக வெளியிடுகிறார். அறியாமையில் மூழ்கிப் போயுள்ள மக்கள் தம்முடைய அறிவிப்பை ஆட்சேபிக்க மாட்டார்கள் என்றும், நேர்மையற்ற அறிவுத் துறையினர் தாம் என்ன கூறினாலும் ஆதரவளிப்பர் என்றும் அவர் கருதுகிறார். இந்த வாதத்தின் 'விசித்திரமான அம்சம்' என்னவெனில், கிறித்தவ மதபோதக சபைகள் அளிக்கக்கூடிய பொருளாதாய வசதிகளைப் பகிர்ந்துகொள்ள அவர் விரும்புவதுதான். 'எந்தவித பிரதிபலனும் எதிர்பாராமலே தங்களது பொருளாதாய பொக்கிஷங்களைப் பகிர்ந்து கொள்ள மத போதக அமைப்பு அழைத்தால் அவர்கள் ஆன்மீகப் பொக்கிஷத்தைப் பகிர்ந்து கொள்ள அவர் தயாராக உள்ளார். இவ்வாறிருக்கும்போது கிறித்தவ மதபோதக அமைப்புகள் அளிக்கும் சேவைகள் தூண்டில் இரை போன்றவை அல்லது ஆசைகாட்டி ஏமாற்றுபவை என்றும், எனவே அவர்கள் மதமாற்றம் செய்வது முற்றிலும் சுயநல நோக்கம் கொண்டவை என்றும் திரு.காந்தி ஏன் வாதிக்கிறார் என்பதைப் புரிந்துகொள்வது கடினமாக இருக்கிறது. அல்லல்படும் மனித சமுதாயத்திற்கு இந்த அமைப்புகள் அளிக்கும் சேவை, அவர்களின் சமயத்தின் ஒரு அத்தியாவசியமான அம்சம் என்று ஏன் நம்பக் கூடாது?. இந்த சேவையின் மூலம் ஒருநபர் படிப்படியாக கிறித்தவ சமயத்திற்கு ஈர்க்கப்படுவது தவறாகுமா? ஒருதலைப்பட்சமான மனம் கொண்டவர்கள்தான் 'ஆம்', 'இது தவறு' என்று கூறத் துணிவார்கள்.

தீண்டப்படாதவர்களை மதம் மாற்றம் செய்வதிலிருந்து கிறித்தவ சமயக் குழுக்களைத் தடைசெய்யவே இந்த வாதங்களையெல்லாம் திரு. காந்தி முன்வைக்கிறார். இந்து சமயத்தின் பொருட்டுதீண்டப்படாதவர்களைக் காப்பாற்றுவதற்கான உரிமையைத் திரு. காந்திக்கு அளிக்க எவரும் மறுக்கமாட்டார்கள். அப்படியாயின் அவர் கபடமற்றமுறையில் இந்த அமைப்புகளிடம் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கலாம்: '' உங்கள் பணியை நிறுத்துங்கள். இப்பொழுது தீண்டப்படாதவர்களையும் எங்களையும் நாங்களே காப்பாற்றிக்

கொள்ள விரும்புகிறோம். எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் அளியுங்கள்.'' இந்த அமைப்புகளின் அபாயத்தைச் சமாளிப்பதற்கு இத்தகைய நேர்மையான முறையை அவர் கையாளாதது வருந்தத்தக்கதாகும். யார் என்ன சொன்னாலும், எல்லாத் தீண்டப்படாதவர்களும் - அவர்கள் மதம்மாற்றம் ஆனவர்களாகவோ ஆகாதவர்களாகவோ இருந்தாலும் கிறித்தவ மதபோதக அமைப்புகளுக்குத் திரு.காந்தி பெரிய அநீதி இழைத்துள்ளார் என்பதை ஒப்புக்கொள்வார்கள் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. பல நூற்றாண்டுகளாக இந்த அமைப்புகள் அவர்களுக்கு அடைக்கலம் அளிக்காவிட்டாலும் பாதுகாப்பு அளித்து வந்துள்ளன.

திரு.காந்தியின் இந்தப் போக்கு கண்டு மதபோதக அமைப்புகளோ அல்லது தீண்டப்படாதவர்களோ அச்சம் கொள்ள வேண்டியதில்லை. கிறித்தவ சமயம் இந்தியாவில் நிலைபெற்றுவிட்டது. அதை நசுக்கவதற்காக இந்துக்கள் தேசியத்தின்பேரால் தங்களது அரசியல், சமூக, பொருளாதார சக்தியைத் தவறாகப் பயன்படுத்தினாலன்றி, கிறித்தவ சமயம் இந்த நாட்டில் தொடர்ந்து நிலைபெற்று எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் வளர்ந்து வளம்பெற்று நன்மை புரியவே செய்யும்.

## II

கிறித்தவ சமய அமைப்புகளின் கோணத்திலிருந்தும் தீண்டப்படாதார் கோணத்திலிருந்தும் பார்த்தால், இந்தியாவில் கிறித்தவ சமயம் என்ன சாதித்தது என்பது பரிசீலிப்பதற்கு ஏற்ற விஷயமாக ஆகிறது.

இந்திய மக்களுக்குச் சேவை செய்வதற்கும் தமது அரவணைப்புக்குள் வந்தவர்ககளுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கும் கிறித்தவ சமய அமைப்புகள் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன என்பதை மறுக்க முடியாது. இந்த அமைப்புகள் இந்தியாவில் செய்துவரும் எல்லாப் பணிகள் பற்றியும் விவாதித்துக்கூறுவது இந்த இடத்தில் சாத்தியமல்ல. இந்த சமய அமைப்புகளின் பணிகள் ஐந்து தலைப்புகளில் அடங்குகின்றன: 1) குழந்தைகள் மத்தியில், 2) இளைஞர் மத்தியில், 3) வெகுஜனங்கள் மத்தியில், 4) பெண்கள் மத்தியில், கடைசியாக, 5) நோயாளிகள் மத்தியில்.

இந்த அமைப்புகள் ஆற்றியுள்ள பணிகள் மிகப் பரந்தவை. கல்வியளிப்பதிலும் நோயாளிகளுக்கு உதவுவதிலும் அவர்களின்

பணிகள் எந்த அளவில் உள்ளன என்பதைப் பின்வரும் புள்ளி விவரங்கள் எடுத்துக்கூறும் :

## I. கிறித்தவ மருத்துவ சேவை*

| | | |
|---|---|---|
| 1. | மருத்துவமனைகள் | 256 |
| 2. | மருந்தகங்கள் | 250 |
| 3. | காசநோய்ச்சிகிச்சை ஆரோக்கிய நிலையங்கள் | 10 |
| 4. | தொழுநோயாளிகளுக்கான இல்லங்கள் | 38 |
| 5. | மருந்துவப்பள்ளிகள் | 3 |
| 6. | மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகள் | 12,000 |
| 7. | ஆரோக்கியநிலையத்திலுள்ள படுக்கைகள் | 755 |
| 8. | வெளிநாட்டு மருத்துவர்கள் | 350 |
| 9. | உள்நாட்டு மருத்துவர்கள் | 390 |
| 10. | செவிலியர் வெளிநாட்டவர் | 300 |
| 11. | உள்நாட்டவர் | 900 |
| 12. | பயிற்சி செவிலியர் | 1,800 |
| 13. | அறுவை சிகிச்சைகள் - பெரியவை | 44,000 |
| 14. | பிரசவங்கள் - மொத்தம் | 32,000 |
| 15. | உள்-நோயாளிகள் | 2,85,000 |
| 16. | புற-நோயாளிகள் | 26,00,000 |

## II. கிறித்தவக் கல்விப் பணி**

| | | மொத்தப் பள்ளிகள் | அவற்றில் பயிலும் மாணவர்கள் |
|---|---|---|---|
| 1. | ஆரம்பப் பள்ளிகள் | 13,330 | 6,11,730 |
| 2. | மேல்நிலைப்பள்ளிகள் | 302 | 67,229 |
| 3. | கல்லூரிகள் | 31 | 11,162 |
| 4. | இறைமையியல் கல்லூரிகளும் பயிற்சிப்பள்ளிகளும் | 25 | 586 |
| 5. | பைபிள் பயிற்சிப்பள்ளிகள் | 74 | 2,855 |
| 6. | ஆரியப் பயிற்சிப் பள்ளிகள் | 63 | 3,153 |

* இந்தியா, பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளில்

** இந்தியாவில்

இதே சமயம் இத்துறைகளில் இந்துக்கள் என்ன சாதித்திருக் கிறார்கள்? வரலாற்று ரீதியாகப்பார்த்தால், மனித சமுதாயத் திற்குச் சேவை செய்வது என்பது இந்து சமயத்திற்கும் இந்துக்களுக்கும் அன்னியமானது. இந்து சமயத்தில் பிரதானமாக உள்ளவை சடங்கு களும் ஆசாரங்களுமே. அது ஒரு கோவில்களின் மதம். மனிதனை நேசிப்பது என்பதற்கு அதில் இடமில்லை. மனிதநேயம் இல்லாமல் சேவைகளை எவ்வாறு ஊக்குவிக்கமுடியும்? எந்த நோக்கங் களுக்காக, குறிக்கோள்களுக்காக இந்து அறநிலையங்கள் உள்ளன என்பதிலிருந்து இதனைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். இந்துக்கள் செய்யும் தர்மப்பணிகளின் வீச்சும் நோக்கங்களும் எந்த அளவுக்குச் சாதியால் நிர்ணயிக்கப்படுகின்றன என்பதை இந்தியாவில் வெகுசிலரே அறிவர். இந்து அறநிலையங்கள் சம்பந்தப் பட்ட முழுமையான, துல்லியமான விவரங்களை அறிந்துகொள்வது கடினமாகும். எனினும், பல ஆண்டுகளுக்கு முன்பு, பம்பாய் நகரத்தில் சேகரிக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் இந்த விஷயத்தைத் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. (நூல் கைப்பிரதியில் புள்ளி விவரங்கள் டைப் செய்யப் படவில்லை).

1918ல் பம்பாயில் இன்புளுயன்சா குளிர் காய்ச்சல் கொள்ளை நோயாக வெடித்தபொழுது நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதில் சில மருத்துவர்கள் சாதிக் கண்ணோட்டத்துடன் நடந்து கொண்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

ஒப்புநோக்கிக்கூறவேண்டுமெனில், கிறித்தவ சமயக் குழுக்கள் சமுதாயச் சேவையில் ஆற்றியுள்ள சாதனைகள் மகத்தானவையாகும்; கிறித்தவர் பற்றிய எந்த விஷயமானாலும் அதை வன்மையாக எதிர்ப்பவரைத் தவிர வேறு எவருக்கும் இதில் சந்தேகம் இருக்க முடியாது. இந்த் சிறந்த சேவைகளை ஒப்புக்கொள்ளும் அதேசமயம், ஒருவர் இரு கேள்விகளை எழுப்பலாம். இந்திய கிறித்தவ சமுதாயத்தின் தேவைகளுக்கு இந்த சேவைகள் அவசியமா? இந்த குழுக்களால் கவனிக்கப்படாத இந்திய கிறித்தவ சமுதாயத்தின் தேவைகள் வேறு ஏதேனும் உள்ளனவா?

இந்தியக் கிறித்தவர்கள் பிரதானமாக தீண்டப்படாதவர்கள் மத்தியிலிருந்தும் ஓரளவுக்குச் சூத்திர சாதியினரிடமிருந்துமே ஈர்க்கப் பட்டுள்ளனர் என்பதை மனத்தில் கொள்ளவேண்டியது அவசியம். எனவே, கிறித்தவ மத அமைப்புகளின் சமுதாய சேவைகள் இந்த வகுப்பினரது தேவைகளின் அடிப்படையிலேயே கணிக்கப்பட வேண்டும். அந்தத் தேவைகள் யாவை?

இந்த சமய அமைப்புகள் கல்வி, மருத்துவத் துறைகளில் ஆற்றிவரும் சேவைப்பணிகள் இந்திய கிறித்தவர்களுக்குப் பயனளிப்ப தில்லை. இவை மிகப்பெரும்பாலும் உயர்சாதி இந்துக்களுக்கே பயனளிக்கின்றன. இந்தியக் கிறித்தவர்கள் ஒன்று மேற்கல்வி பெற இயலாதவாறு மிகவும் ஏழ்மையில் உழல்கின்றனர் அல்லது அதில் அத்தனை ஆர்வமில்லாதவர்களாக இருக்கின்றனர். ஆகவே கிறித்தவர்களின் முன்னேற்றம் என்ற கண்கொண்டு நோக்கினால், இந்தச் சமய அமைப்புகள் நடத்தும் உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள், தங்கும் விடுதிகள் போன்றவை அவர்களுக்குப் பயன் படாதவையாகவும், அவர்களுக்குச் சம்பந்தப்படாத செலவினமாகவும் அமைந்துள்ளன. அதுபோலவே, இந்த அமைப்புகள் அளித்துவரும் மருத்துவ உதவியும் பெருமளவு சாதி இந்துக்களையே சென்றடை கின்றது. மருத்துவ மனைகள் சம்பந்தப்பட்டவரை இது முக்கியமாகப் பொருந்தும்.

கிறித்தவ சமய அமைப்புகள் பல இதை உணர்ந்துள்ளன என்பது எனக்குத் தெரியும். என்றாலும் இந்த செலவுகள் வருடாவருடம் செய்யப்பட்டுதான் வருகின்றன. இந்த சேவைகளின் நோக்கம், இச்சமய அமைப்புகளுக்கும் சாதி இந்துக்களுக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்த வேண்டும் என்பதே என்பதில் ஐயமில்லை. ஆனால் சமயமாற்றம் செய்யமுடியும் என்ற நம்பிக்கை பயனளிக்காது என்பதைக் கிறித்தவ சமய அமைப்புகள் உணரவேண்டிய தருணம் வந்துவிட்டது; அவற்றின் நோக்கம் முழுத் தோல்வியில்தான் முடியும் என்பது நிச்சயம். கிறித்தவ சமயத்தின்பால் இந்திய அறிவுத் துறையினர் கொண்டுள்ள கண்ணோட்டம் பற்றி செய்த ஆய்வுக்குப் பின் திரு.வின்ஸ்லோவின் கீழ்க்கண்ட முடிவு சரியானது என்றே எண்ணுகிறேன்:

"டப் மற்றும் செராம்பூர் கிறித்தவ சமய அமைப்புகளது பணியின் பலனாக குறிப்பிடத்தக்க சில சமய மாற்றம் ஏற்பட்டது. சிறிது காலத்திற்கு ஆங்கிலக் கல்வி அதைப்பெறுபவர்கள் பலரை கிறித்தவ சமயத்திற்குக் கொண்டு வந்துவிடும் என்றே தோன்றியது; ஆனால் திடீரென்று ஒரு எதிர்விளைவு ஏற்பட்டு அந்த இயக்கம் மடிந்துபோயிற்று. அந்த இடத்தை இந்து சமாஜங்கள் பிடித்துக் கொண்டன; குறிப்பாக வங்காளத்தில் பிரமசமாஜம் கைப்பற்றிக் கொண்டது; மேற்கத்திய சிந்தனைகளின் செல்வாக்கினால் விக்கிரக வழிபாட்டின் மீதும் சாதிமீதும் அதிருப்தி கொண்ட இந்துக்கள் இந்துமத அமைப்பில் தங்களுக்குள்ள இடத்தை முற்றிலுமாக

''மத அடிப்படையில் நாங்கள் கிறித்தவர்கள் - ரோமன் கத்தோலிக்கர்களும் புரோடெஸ்டெண்டுகளும் சென்னை மாகாணத்தில் உள்ள இந்திய கிறித்தவர்களின் மொத்த எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையே இருந்து மாறியவர்கள் சுமார் 60 சதவிகிதமாக உள்ளனர். கிறித்தவ சமயம் எங்கள் வட்டாரங்களில் போதனை செய்யப்பட்டபோது பள்ளர்கள், பறையர்கள், மாலாக்கள், மாதிகாக்கள் முதலிய நாங்கள் கிறித்தவ சமயத்தைத் தழுவினோம். நாங்கள் பிறந்த சாதிகளைச் சார்ந்த மதம்மாற்றம் செய்யப்படாதவர்கள், இந்துக்களாகவும் மதரீதியில் இந்து சமயத்தைப் பின்பற்றுபவர்களாக இருந்தும், இந்துமத தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்றே அழைக்கப் படுகிறார்கள். ஆண்டவன் முன்னிலையில் அனைத்து மனிதர்களும் சமம் என்ற கோட்பாட்டைக் கடைபிடிக்க வேண்டும், அண்டை அயலார்களிடம் அன்போடும் ஆதரவோடும் அரவணைப் போடும் நடந்துகொள்ள வேண்டும், பரிவு, சகிப்புத் தன்மை ஆகியவற்றைக் காட்டவேண்டும் என்று கிறித்தவ சமயம் எங்களுக்குப் போதித்தாலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையே இருந்து மதம் மாறிய நாங்கள், இந்து மதத்தில் இருக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினருள்ள அதே நிலையில் தான் இருக்கிறோம். பல்வேறு அம்சங்கள் எங்களுக்கு எதிராக செயல்படுகின்றன; அவற்றில் மிக முக்கியமானது கிறித்தவ மதத்திற்கு மாறியவர்களிடையே சாதியை விட்டுவிடாமல் வைத்துக் கொள்ளும் பலமான இந்துமத மனோபாவம் இருப்பதாகும். மேலும் கிறித்தவ சமயப் பரப்பாளர்களின் அலட்சிய போக்கு, அதிகாரமின்மை, அக்கறை இன்மை ஆகியவையும் சேர்ந்து, கிறித்தவர்களாக ஆவதற்கு முன்பு நாங்கள் எந்நிலையில் இருந்தோமோ அதே நிலையில் தான் இன்றும் எங்களை வைத்துள்ளன; அதாவது தீண்டப்படாதவர்களாக, நாட்டில் நிலவும் சமுதாய சட்டங்களால் கேவலமான முறையில் நடத்தப் படுபவர்களாக, சாதி கிறித்தவர்களால் நிராகரிக்கப்பட்ட வர்களாக, சாதி இந்துக்களால் வெறுக்கப்படுபவர்களாக, எங்களது சொந்த இந்துமதத் தாழ்த்தப்பட்ட சகோதரர்களால் ஒதுக்கப்பட்டவர்களாக இருந்து வருகிறோம்.''

''தென் இந்தியாவில் கிறித்தவர்கள் சிறு எண்ணிக்கை யிலேயே இருக்கிறார்கள்; அவர்களது பிரதிநிதிகள் சட்டமன்றத்தில் அதாவது சென்னை மாநில மேல்சபையில் - அங்கம் வகிக்கிறார்கள்; ஆனால் அவர்கள் சாதிக் கிறித்தவர்கள்; இந்தப் பதம் முரணாகத் தோன்றலாம். துரதிருஷ்டவசமாக, இந்து மதத்தின் உயர் சாதி யிலிருந்து மதமாற்றம் செய்யப்பட்டவர்களை இவ்வாறு வருணிப்பது

சரியானதும் ஏற்கக்கூடியதுமே ஆகும். சாதியின் எல்லா கடுமையான முறைகளும், தன்னலம் காக்கும் தன்மையும் அவர்களிடம் நீடித்து நிற்கின்றன. குறிப்பாக நகரங்களுக்கு அப்பாலுள்ள இடங்களிலும் கிராமங்களிலும், எங்களின் சக கிறித்தவர்களாக இருக்க வேண்டிய அவர்கள் எல்லா கடுமையான சனாதன பழக்கங்களையும் தங்களது சாதித் தன்மைப் போக்கையும் பின்பற்றுகிறார்கள். ''பஞ்சமர்கள் அல்லது பறையர்கள்'' என்று எங்களைக் கேவலமாக அழைக்கிறார்கள்; கிறித்தவன் என்ற எங்கள் உரிமையை அலட்சியப்படுத்துகிறார்கள்; தங்களது செல்வச் செழிப்பு, அதிகாரம், செல்வாக்கு, அந்தஸ்து ஆகியவற்றை முழுவதுமாகப் பயன்படுத்தி ஏழைக் கிறித்தவர்களாகிய எங்களை சமுதாயத்திலிருந்து விலக்கி வைக்கிறார்கள். பஞ்சமர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அடிக்கடி வெடிப்பது தென்னிந்திய கிறித்தவ வாழ்வின் ஓர் அவலமாகிவிட்டது; எங்களுடைய நிலையை உயர்த்தவும், முன்னேற்றவும், எங்களுடைய சாதாரண அடிப்படை உரிமைகளை நிலைநிறுத்தவும் நாங்கள் செய்யும் எந்த ஒரு முயற்சியும் அதிகாரியாக இருந்தாலும் சரி, அதிகாரி அல்லாதவராக இருந்தாலும் சரி, பிறப்பினால் தனக்கு ஒரு முட்டாள் தனமான உயர்வை கோரும் கிறித்தவனாக இருந்தாலும் சரி, இந்துவாக இருந்தாலும் சரி அவர்கள் எல்லோரது கோபத்திற்கும் பொறுப்புக்கும் உள்ளாகிறது. கிறித்தவ சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையே மறுத்து, நேசம், தர்ம சிந்தனை, சகோதரத்துவம் ஆகியவற்றிற்கு மாறாக எங்கள் 'சக- கிறித்தவர்கள்' மாதா கோவில்களில் கூட எங்களைத் தீண்டப்படாத வர்களாகவும் அணுகாதவர்களாகவும் நடத்துகின்றனர்; முன் இடத்தி லிருந்து பின்னுக்குத் தள்ளி எங்களுக்குத் தனி இடம் ஒதுக்கி, அதை அவர்கள் பகுதியிலிருந்து இரும்புகளாலோ சுவர் களாலோ தடுப்பு எழுப்புகின்றனர். அத்தகைய மாதா கோவில்கள் பல உள்ளன.

''புனித சடங்கு நிகழ்ச்சியின்போது, தீட்டைத் தவிர்ப்பதற்காக மிகவும் கேலிக்கிடமான முறையில் நாங்கள் ஒதுக்கிவைக்கப்படு கிறோம். எங்கள் பிள்ளைகளுக்குக் கல்வி அளிப்பதற்கும் வாழ்க்கைக்கு அவர்களைத் தயார்செய்யவும் எங்களுக்குள்ள உரிமைகள் ஈவு இரக்கமின்றி மறுக்கப்படுகின்றன; அப்பட்டமான பராபட்சக் கண்ணோட்டத்தோடு பள்ளிகள், கான்வெண்டுகள், தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் இவற்றில் எங்கள் குழந்தைகள் சேரும் வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன அல்லது அப்படி சேர்க்கப்பட்டாலும், இழிவான முறையில் தனி இடம் ஒதுக்கப்படுகிறது. உயர்சாதி மரபு வழியில் வந்தவர்கள் என்ற அடிப்படையில் சாதி கிறித்தவர்கள் உயர்

என்பவரால் இந்த அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. அவர் இந்தியாவிற்கு 1608ல் வந்தார். பிரான்ஸிஸ் சேவியரின் தோல்விபற்றி அறிந்துகொண்ட அவர், ஒரு புதுத்திட்டத்தை உருவாக்கினார். அவர் ஏசுநாதரின் சீடர் பாலின் வழியைப் பின்பற்றினார். எல்லாவற்றையும் எல்லோருக்கும் கொண்டுவர வேண்டுமென்றும் சிலரைத் காப்பாற்ற முடியும் என்றும் பால் குறிப்பிட்டிருந்தார். இந்த நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு மதுரை அரசர் திருமலை நாயக்கரின் அரசசபைக்குச் சென்றார். புகழ்பெற்ற மதுரை மிஷன் என்னும் கிறித்தவ சமயப் பரப்பமைப்பை நிறுவினார். எவ்வாறு அவர் தமது பணியைத் துவங்கினார் என்பதை 'இந்தியாவில் ஏசுநாதரின் சீடர்' என்ற தமது நூலில் டாக்டர். ஜே.என். ஓகில்வி சித்தரித்திருக்கிறார். அவர் கூறுகிறார்:

''ஒரு நாள் மதுரையில் ஒரு பரபரப்பான செய்தி பரவிற்று. தூரதேசத்திலிருந்து ஒரு துறவி இந்தப் புண்ணிய நகருக்கு வருகை தந்துள்ளார் என்றும், அவர் பிராமணர்கள் தங்கும் விடுதியில் தங்கியிருக்கிறார் என்றும் செய்தி கூறிற்று. அந்த புண்ணியப் புருஷரைக் காணுவதற்காக அவர் தங்கியிருந்த இல்லத்திற்கு மக்கள் பெருந்திரளாக குழுமினர்; ஆனால், அந்தப் பிராமணருடைய வேலையாட்கள் உள்ள செல்ல அவர்களை அனுமதிக்கவில்லை. ''எஜமானர் கடவுளை நோக்கி தியானம் செய்துகொண்டிருக்கிறார். அவரைத் தொந்தரவு செய்யவேண்டாம்'' என்று அந்த வேலையாட்கள் கூறினார்கள். இது அந்த மக்களின் ஆர்வத்தை மேலும் கிளர்த்திவிட்டது; அந்தத் துறவியின் புகழ் அதிகரித்தது; யாரையும் பார்ப்பதில்லை என்ற கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது; தினம் தனிச்சலுகைபெற்ற சிலருக்கு அவரது தரிசனம் கிடைத்தது.

'' அவர் ஓர் இருக்கையில் சப்பணம்போட்டு அமர்ந்திருந்தார். அந்த சன்னியாசியின் தோற்றமும் நடவடிக்கைளும், பிராமணர்களின் தோற்றத்தையும் செயற்பாடுகளையும் ஒத்ததாக இருந்தன. அவருடைய புஜத்தில் 5 நூல் சரடுகள் கொண்ட புனித பூணூல் தொங்கியது; அவற்றில் மூன்று சரடுகள் தங்கத்தால் செய்யப்பட்டிருந்தன; அவை மும்மூர்த்தங்களைக் குறித்தன; இரண்டு சரடுகள் வெள்ளியால் செய்யப்பட்டிருந்தன; அவை ஆண்டவரது உடலையும் ஆன்மாவையும் குறித்தன; அந்த பூணூலிலிருந்து ஒரு சிலுவை தொங்கிக்கொண்டிருந்தது. அவருடன் உரையாடியபோது அவரது ஆழ்ந்த கல்விப் புலமை வெளிப்பட்டது; அவரைக் கூர்ந்து கவனித்தபோது அவரது எளிய ஆன்மீக வாழ்க்கை புலப்பட்டது. ஒரு நாளில்

ஒரு உணவுதான்; கொஞ்சம் சாதம், பால், காய்கறிகள் ஆகியவை கொண்டது அந்த உணவு. விரைவில் சாதாரண பிராமணர்கள் மட்டுமன்றி பிரபுக்களும் அவரைக் காண வந்தனர். ஒருநாள் தமது அரண்மனைக்கு வரும்படி அரசரிடமிருந்தே அழைப்பு வந்தபோது அவரது பெருமை மேலும் உயர்ந்தது. ஆனால் அந்த அழைப்பை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அங்கு செல்லும் போது ஒரு பெண்ணின்மீது தமது கண்களின் பார்வைபட்டு அவரது ஆன்மாவின் பரிசுத்தத் தன்மை கெட்டுவிடும் என்பதால் அரண்மனைக்குச் செல்ல மறுத்துவிட்டார். மதுரை இத்தகைய ஒரு தலை சிறந்த ஞானியை என்றுமே கண்டதில்லை! அவருடைய வாழ்வின் தெய்வீகத் தன்மைக்கு இத்தகைய நிரூபணம் இருக்கும்போது அவரது போதனை உண்மையாகவன்றி வேறு எவ்வாறு இருக்கும்! தாம் உயர்ந்த சாதியைச் சேர்ந்த ''ரோமாபுரி பிராமணர்'' என்ற அவரது கூற்று ஏற்றுக் கொள்ளப்பட்டது. சாத்தியமான சந்தேகம் எதையும் நீக்குவதற்காக ஏதோ எழுதப்பட்ட பாடம் செய்யப்பட்ட ஒரு புராதனமான நைந்து நிறமற்ற ஆட்டுத்தோல் காண்பிக்கப்பட்டது; '' இந்த ரோமாபுரி பிராமணர்'' பிரம்மதேவனிடமிருந்து நேரடியாக தோன்றியவர் என்பதையும் அவ்ரது படைப்புகளிலேயே இவர்தான் மிக புனித மானவர் என்பதையும் அது எடுத்துக்காட்டியது. இந்த ஆவணம் உண்மையானது என்று அந்த சந்நியாசி ஆணையிட்டு உறுதி யாகக் கூறினார். இதன்பேரில் அங்கு கூடியிருந்த மக்கள் அவரது போதனையைத் திறந்தமனத்துடன் செவிமடுத்துக் கேட்கலாயினர். ''திறமையான, துணிச்சலான அவரால் பல நூல்கள் தொடர்ந்து எழுதப்பட்டன; இந்து சமயத்தை ஆதாரமாகக் கொண்டு கிறித்தவ சித்தாந்தத்தைச் சிற்சில மாற்றங்களுடன் உருவாக்கினர். இத்தகைய முயற்சிகளில் மிகவும் முக்கியமானது, சுவர்க்கத்திலிருந்து நேரடியாக பிராமணர்கள் பெற்ற நான்கு வேதங்களுக்குச் சிகரம் வைத்தது போல் ஒரு 'ஐந்தாவது வேதத்தை' அவர் தோற்றுவித்ததாகும். இது ஒரு ஆச்சரியமான, துணிச்சலான, சிக்கலான செயலாகும். அதாவது ஐந்தாவது வேதத்தைக் கிறித்தவர்கள் உபயோகத்திற்கு ஒரு இந்து தயாரிப்பது போன்ற ஒரு போலி ஆவணமாகும். எனினும் இந்தப் போலிஆவணம் நூற்று ஐம்பது ஆண்டுகள் நிலைத்து நின்றுவிட்டது.

''பிராமண சிஷ்யர்கள் அவருக்கு விரைவிலேயே சிரமமில் லாமல் கிடைத்தனர்; ஞானஸ்தானம் கணிசமான எண்ணிக்கையில் நடை பெற்றது; ஞானஸ்தானத்தோடு சம்பந்தப்பட்ட சடங்கைப் பொறுத்தவரையில் முந்திய ஐரோப்பிய சமயப்பரப்பு அமைப்புகள் செய்த அதே சடங்குகளே புதியவைபோல் தோற்றமளிக்கும்

வகையில் ஏமாற்றும் முறையில் செய்யப்பட்டன. வெளிப்படை யான அடையாளங்களின் படி, புதிய அமைப்புகளின் முறைகள் வழிவகைகள் வெற்றிகரமாக முடிந்தன. இந்து சமயத்திற்கு அளித்த அதிமுக்கியத்துவம் வாய்ந்த சலுகைகள் - குறிப்பாக சாதி சம்பந்தமான சலுகைகள் - முன்னேற்றத்தைப் பெரிதும் சாத்தியமாக்கின என்பதில் சந்தேகம் இல்லை. டி நோபிலிக்கு சாதி அத்தனை முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தோன்றவில்லை. அவருக்குப் பிரதானமாக அது ஒரு சமூக சடங்கே. எனவேதான், மதம் மாற்றப்பட்டவர்கள் தங்கள் சாதி சகோதரர்களிடமிருந்தோ அல்லது சடங்குகளிடமிருந்தோ தங்களைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று மதம் நிர்ப்பந் திக்கக் காரணம் எதையும் அவர் காணவில்லை. அவரால் மதம் மாற்றம் செய்யப்பட்டவர்கள், சாதி இந்துக்களை அடையாளம் காட்டும் குடுமியை வைத்திருந்தனர்; தங்களின் இந்து சகோதரர்களிட மிருந்து பிரித்து காட்டாதபடி புனித பூணூலை அணிந்தனர். முன்பு பசுவின் சாணத்தின் சாம்பலிலிருந்து செய்த விபூதிக்குப் பதிலாக இப்போது சந்தனக் கட்டையின் சாம்பலில் தயாரான பட்டையை நெற்றியில் அணிந்து கொண்டனர்.

''நாற்பது ஆண்டுகள் டி நோபிலி இவ்வாறு வாழ்ந்தார்; அந்த வாழ்க்கை தினசரி கஷ்டத்தையும், தியாகத்தையும், தம்மைத் தாமே தாழ்த்திக் கொள்வதையும் போன்றவற்றைக் கொண்டதாக இருந்தது; அதற்கு இணையானதைக்காண்பது அரிது. 1656 மே மாதம் 16ம் தேதி அவர் தமது எண்பதாவது வயதில் இயற்கையெய்தினார். நேரடியாகவோ மறைமுகமாகவோ அவர் மதமாற்றம் செய்தவர் களின் எண்ணிக்கை 1 லட்சம் என்று சொல்லப்படுகிறது. அதில் மிகைப்படுத்துதல் இருக்கலாம் என்று கருதி அதைக் குறைத்துக் கொண்டாலும் மாற்றம் செய்யபட்டவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாகவே இருக்கவேண்டும்.

''போர்ச்சுக்கல் நாட்டில் ஓர் உயர் பிரபுவின் குடும்பத்தைச் சார்ந்த ஜான்டி பிரிட்டோ 1673 ஆம் ஆண்டு இந்தியாவிற்குக் கடல் பயணத்தைத் துவக்கினார். ரோமன் கத்தோலிக்கச் திருச்சபையில் இப்போது அவர் ஒரு புனிதராகப் போற்றப்படுகிறார். லண்டன் மதபோதக சபையைச் சார்ந்தவரும் நமது காலத்தவருமான வில்லியம் ராபின்சன் அவர் பற்றிக் கூறுகிறார்:

''புகழ்பெற்ற சிஷ்யராக, துணிச்சலும், சுயநலமற்ற தன்மையும் கொண்டவராக, கிறித்தவர் வாழ்க்கையின் எல்லா கஷ்டங்களையும்

தாங்கும் சகல சிறந்த குணங்களையும் பெற்றவராக அவர் திகழ்ந்தார் என்பது நிச்சயம்.

''மதுரை மன்னராட்சி சீர்குலைந்து பல குட்டி அரசுகள் அமைந்ததற்குப் பின் அவரும் அவரால் மதம் மாற்றம் செய்யப் பட்டவர்களும் ஈவிரக்கமில்லாமல் கொடுமைக்குள்ளாக்கப்பட்டனர்.

'' எதிரிகளால் செய்யமுடிந்த அனைத்தையும் பொருட் படுத்தாமல், தாம் ஏற்றக் கடமையை அந்த ஊழியர் தொடர்ந்து செய்துவந்தார்; அவர் எங்கெல்லாம் பயணம் மேற்கொண்டாரோ அங்கெல்லாம் அவர் வெற்றிபெற்ற கதை கூறப்பட்டது. போதனை யின் சக்தியோடு அந்த தூதுவரின் வசீகர சக்தியும் சேர்ந்து கொண்டது. அவரால் மதம் மாற்றம் செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை பல ஆயிரமாயிற்று. தாடியத்தேவர் என்ற மறவர் குறுநில மன்னர் இவர் கையால் ஞானஸ்நானம் பெற்றதையடுத்து, அவரை (டி பிரிட்டோவை) கொலை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1693 பிப்ரவரி 4ஆம் தேதி அவர் ஈவிரக்கமின்றி கொலை செய்யப்பட்டார்.

''டி .பிரிட்டோவுக்குப் பின் அவருடைய இடத்திற்கு நியமிக்கப்பட்ட பாதிரியார் ஜோசப் பெஸ்கி 1707ல் இந்தியா வந்தடைந்தார். ''ரோமாபுரி பிராமணர்கள்'' எனும் கொள்கையைப் பெஸ்கியும் பின்பற்றினார்; ஆனால் முன்பு இருந்தவர்களிடமிருந்து அவர் பெரிதும் மாறுபட்டிருந்தார். டி நோபிலியைப் பொறுத்தவரை, சாத்தியமான அளவு பக்தியுடன் கூடிய ஒரு துறவியாக, ஒரு புனித குருவாக நடந்து கொண்டார். டி பிரிட்டோ சஞ்சாரம் செய்யும் சன்னியாசியாக, புனித யாத்திரை செய்பவராக இருந்தார்; அவர்கள் இருவரும் தங்கள் சொந்த வாழ்க்கையில் மிகச்சிறந்த துறவிகளாக எளிய வாழ்க்கை வாழ்ந்தனர். ஆனால் பாதிரியார் பெஸ்கி ஒரு புதுவழியைக் கடைப்பிடித்தார். இந்து சமயத்தில் ஒருபுறம் துறவிகள் இருந்தது போலவே இன்னொருபுறம் படாடோப வாழ்க்கை நடத்திய சமய குருமார்களும் இருந்தனர். பிந்தியவர்கள் வாழ்க்கை பகட்டு வாய்ந்த, சந்தர்ப்பவாதத் தன்மை கொண்டதாக இருந்தது. இந்த வழியையே பெஸ்கி பின்பற்றினார். அவரது ஆடம்பர ஆர்ப்பாட்டம் மக்களைப் பிரமிக்க வைத்தது. அவர் எங்கு செல்ல வேண்டியிருந் தாலும் விலை உயர்ந்த பல்லக்கில்தான் செல்வார். அவருக்கு முன்னால் ஓர் உதவியாளர் கருஞ்சிவப்புநிறப் பட்டுக்குடையைப் பிடித்துக் கொண்டு செல்வார்; பல்லக்கின் இருபக்கமும் கவர்ச்சிகரமான மயில்

தோகைகளாலான விசிறிகளுடன் பணியாளர்கள் ஓடிவருவார்கள்; பல்லக்கில் அவர் அழகான புலித்தோலில், விலை மதிப்புள்ள கவர்ச்சிமிக்கஉடையில் அமர்ந்திருந்திருப்பார். ஆனால் பெஸ்கி வெறும் வெத்துவேட்டு பாதிரியரல்ல. மக்களைப் பற்றிமுற்றிலு மாகப் புரிந்துகொண்டு அவர் தனது வழிமுறையைக் கையாண்டார். பலரிடம் அது நன்கு பலனளித்தது. அவரது புகழ் அவரது படோடோப மான நடைமுறைகளால் ஏற்பட்டதல்ல; அவருடைய வியக்கத்தக்க புலமையின் அடிப்படையில் கிடைத்தது. அவரை ஒரு பிறவி பன்மொழிப்புலவர் என்று தான் கூறவேண்டும். அவர் தமிழில் முழுமையாகப் புலமை பெற்றிருந்தார். அவர்காலத்தில் அவர் மிகவும் திறமை பெற்ற தமிழ் அறிஞராகத் திகழ்ந்தார். உள்நாட்டுப் பண்டிதர் எவரும் அவருக்குச் சமமாக இருக்கவில்லை. 'செந்தமிழ்', 'கொடுந்தமிழ்', பண்டித பிராமணரின் தமிழ், மக்களின் வட்டார மொழி இவை எல்லாவற்றிலும் தேர்ந்தவராக இருந்தார். அகராதிகள், இலக்கணநூல்கள், கவிதைகள், உரைநடைக்கட்டுரைகள் - இவை எல்லாம் அவரது பேனாவிலிருந்து மலையருவிபோல் பொழிந்த வண்ணமிருந்தன. அவை இன்றும் படித்துப் போற்றி மதிக்கப் படுகின்றன. இந்நூல்கள் முதலில் வெளிவந்தபோது தென்னிந்திய மக்கள் அவற்றைப் படித்துப்பரவசமமடைந்தனர். அவரது புலமையால் மிகவும் ஆகர்ஷிக்கப்பட்ட வேலூர் நவாப் சந்தா சாகிப் அவரைத் தமது அரசவையில் ஓர் உயர் பதவியில் நியமித்தார்; அவருக்கு உதவும் வகையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நான்கு கிராமங்களை அவருக்கு மான்யமாக வழங்கினார்; அவை 12,000 ரூபாய் வருமானத்தைக் கொடுத்தன. இந்தப் புகழையும் செல்வாக்கையும் பெஸ்சி விஸ்வாசத்துடன் தமது சமயப்பணியை முன்கொண்டு செல்லப் பயன்படுத்தினார். அவர் வாழ்நாளில் இப்பணி மிக உயர்நிலையில் இருந்தது; ஆனால் பாதிரியார் பெஸ்கி 1742ல் மரணமடைந்ததை யடுத்து அப்பணிவேகமாகச்சரிந்து இறுதியில் வீழ்ச்சியில் முடிந்தது.''

மதமாற்றம் செய்யப்பட்டவர்களுக்கு மனவருத்தம் ஏற்படுத்தக் கூடிய மேற்கத்திய பழக்கவழக்கங்களை அவர்களிடம் பரப்பாமல் கிறித்தவ சமயத்தை அவர்களுக்கு அளிக்கவேண்டுமென்ற ஆர்வம் காரணமாக மதுரை சமயப் பிரசாரகர்கள், பல இந்து சம்பிரதாயங்களை கடைப்பிடிக்கும் சலுகைகளை அனுமதித்தனர். புனித பூணூல் அணிவது, நெற்றியில் மத அடையாளங்களை இட்டுக் கொள்வது, வயதுக்கு வரும்முன்னரே குழந்தைக்குத் திருமணம் செய்துவிடுவது, சில சந்தர்ப்பங்களில் புனித சடங்குகளில் பெண்களை அனுமதிக்க மறுப்பது, தீட்டைப்போக்கக் குளிப்பது, தங்கள் சாதிக்கு வெளியே

திருமணம்செய்யவோ மற்ற சாதியினருடன் உணவு அருந்தவோ மறுப்பது ஆகியவையும் இந்த சலுகைகளில் அடங்கும். இவை ''மலபார் சடங்குகள்'' என்று அழைக்கப்பட்டன. இவையெல்லாம் போப் 14 - ஆவது பெனிடிக்டால் 1744 செப்டம்பர் 12ம் தேதி வெளியிட்ட கட்டளையால் ரத்து செய்யப்பட்டன. போப்பாண்டவரின் இந்த கட்டளைக்கு அன்றிலிருந்து ஒவ்வொரு மத போதகரும் கீழ்ப்படிய வேண்டியிருந்தது. இது எப்படியிருப்பினும், பழைய பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும் நெறிமுறைகளும் கிறித்தவ சமயத்துக்குப் புறம்பானவை அல்ல என்று மேலே கூறிய கிறித்தவ சமயபோதகர்கள் தோற்றுவித்த மரபு மறைந்துபோகாமல் அப்படியே இன்றளவும் நீடித்துவரவே செய்கிறது. மோசமான ஐரோப்பியர்கள் காட்டிய தீய முன்மாதிரிகளும் அதேபோல், ஐரோப்பிய பழக்க வழக்கங்கள் மீது இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இருந்த வெறுப்பும் 16ஆவது நூற்றாண்டில் கிறித்தவ மதபோதகர்களுக்கு அவர்களது பணியில் மிகுந்த இடைஞ்சலாக, இடையூறாக இருந்தன என்பதில் சந்தேகமில்லை. ஒருமோசமான ஐரோப்பியன் அடாத செயல்களில் ஈடுபட்டான் என்றால் கடவுள் பற்றும் சமயப்பற்றுமுள்ள ஐரோப்பியனோ மாட்டிறைச்சி உண்டும் மது அருந்தியும் பிராமணிய, முகமதியக் கோட்பாடுகளைப் புண்படுத்தி ஸ்தல உணர்வுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கினான். இவ்வாறு கிறிஸ்தவ மதம் பரங்கியர்மதம் என்ற அவப்பெயர் பெற்றது. ஐரோப்பியர்களும் அவமரியாதையாக பரங்கியர்கள் என்று அழைக்கப்பட்டனர். இத்தகைய பரிசுத்தமின்மையிலிருந்தும் குறைபாடுகளிலிருந்தும் கிறித்தவ சமயப்பரப்பு அமைப்புகள் காப்பாற்றப்படவேண்டும்; இது நியாயமானதும் மிக அவசியமானதும் பாராட்டிற்குரியதுமாகும். ஆனால் மதமாற்றம் செய்யும் உற்சாகத்தில் இந்த அளவுக்கு ரோமன் கத்தோலிக்க பிரசாரகர்கள் சென்றதும், ஒருவர் ஞான ஸ்தானம் பெற ஒப்புக்கொண்டு ஏசுநாதரை ரட்சகர் என்று ஏற்றுத் தன்னைக் கிறித்தவன் என்று அழைத்துக் கொள்ள தயாரென்றால், மதம்மாறிய அவர் என்ன நினைக்கிறார், என்ன செய்கிறார், எப்படி வாழ்கிறார் என்பதைப்பற்றி கவலைப் படாமலிருந்ததும் மிகவும் வெட்கக்கேடானதாகும்.

மதுரை சமயப்பரப்புக் குழுவுக்குப்பின் வந்த லூத்ரன் சமயப்பரப்புக் குழுவினர் இந்த முக்கிய பிரச்சினைபற்றி என்ன கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தனர்? இந்தியாவில் மிகச்சிறந்த மதபோதகராக விளங்கியவரும் தம்முள் சச்சரவிட்டுக்கொண்டிருந்த அரசர்களிடையே தமது சீலத்தின் காரணமாக சமாதானம் செய்து

வைத்தவராகவும் திகழ்ந்த சுவார்ட்ஸ் மதுரைக் குழுவின் கருத்தை ஆதரித்தவரல்ல. ஆனால் சாதியும் கிறித்தவ சமயமும் ஒன்றுக் கொன்று ஒத்துப்போக முடியாதவை என்பதை அவர் நம்பினரா? ஒரு உண்மையான கிறித்தவன் சாதியில் நம்பிக்கை வைக்கமுடியாது, அதைத் தனது வாழ்க்கைத் திட்டமாகக் கைக்கொள்ள முடியாது என்பதை அறிந்திருந்தாரா? இந்தப் பிரச்சினை பற்றி அவரது கருத்து எதுவாக இருந்தாலும், அதற்கு ஆதரவாக ஒரு பிரசாரத்தை அவர் நிச்சயம் செய்யவில்லை. புராட்டெஸ்டண்ட் சமயப்பிரச்சார அமைப்புகளின் நிலை என்ன? இந்தக் கேள்விபற்றி அவர்கள் கண்ணோட்டம் யாது? 'அவர்கள் விரும்பினால் இதற்கு ஒரு சமாதானம் கூறலாம். அதாவது தாங்கள் இங்கு வந்தது பின்னால்தான் என்பதே சமாதானம். வரலாற்றின்படி பார்த்தால், களத்தில் இறங்கியதிலிருந்து 1813 வரை அவர்கள் தடுக்கப் பட்டிருந்தார்கள் என்ற அவர்களின் கூற்றில் உண்மை உண்டு. இந்தியாவில் தங்களின் பிரதேசங்களில் சமயப் பரப்பு அமைப்புகளின் பணிபற்றி கிழக் கிந்திய கம்பெனி எடுத்த நிலைதான் இதற்கு முற்றிலும் காரணமாகும்.

இந்தியாவிற்கு வந்த ஐரோப்பிய அரசுகள் முதலில் இந்தியர்களைக் கிறித்தவ மத நம்பிக்கைக்கு மாற்றவேண்டுமென்ற தீவிரமான கண்ணோட்டம் கொண்டிருந்தன.

போர்ச்சுக்கீசியர்களைப் பற்றிக் கூற வேண்டுமாயின், கிறித்தவ சமயத்தைத் தீவிரமாக பரப்ப வேண்டும் என்பதிலும் மூடப்பழக்க வழக்கங்களையும் சம்பிராதயங்களையும் ஒழித்துக்கட்ட வேண்டுமென்பதிலும் அவர்கள் உறுதியாக இருந்தனர். கணவன் இறந்ததும் மனைவி உடன்கட்டை ஏறும் சதி என்னும் கொடிய வழக்கத்தை 1510ல் போர்ச்சுகீஸிய இந்தியாவில் அல்புகர்க் ஒழித்துக் கட்டினார். வில்லியம் பென்டிக் இந்நடவடிக்கை எடுப்பதற்கு முன்னூறு ஆண்டுகளுக்குமுன்பே அல்புகர்க் இதனைச் செய்தார். கட்டாய மதமாற்றத்திற்குப் போர்ச்சுகல் அரசர் மூன்றாவது ஜானின் உதவியைப் பிரான்ஸிஸ் சேவியர் நாடினார். அவ்வாறே இந்த உதவி அளிக்கப்பட்டது. புராட்டஸ்டெண்ட் போக்குடைய டச்சு அரசும் கிழக்கிந்திய தீவுகளில் சமயமாற்றப்பணியில் இத்தகைய உற்சாகத்தை வெளிப்படுத்தியது. இத்திசைவழியில் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. டச்சுக்காரர்கள் 1643ல் இலங்கையைக் கைப்பற்றியதிலிருந்து கிறித்தவ மதப்பிரச்சாரத்திற்கு அரசு உதவ வேண்டும் என்ற கோட்பாடு அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. கோவில்கள், பிற மதயாத்திரை ஸ்தலங்கள் கட்டுவதற்குத் தடை

விதிக்கப்பட்டது. சர்க்கார், உத்தியோகங்கள் கிறித்தவர்களுக்காக ஒதுக்கப்பட்டன. மதப்பள்ளிகளுக்கு வராமல் இருப்பது அரசாங்கக் குற்றமாகக் கருதப்பட்டது. 1685ஆம் ஆண்டுக்குள் 3,20,000 சிங்களவர் இந்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து கிறிஸ்தவர்களாயினர். கம்பெனியின் கப்பலின் கேப்டன் 1614ல் ஒரு இநதிய இளைஞனை லண்டனுக்கு அழைத்து வந்தார். அவர் மூலமாக அவரது நாட்டில் பலரை மதமாற்றம் செய்வதற்கு அவரை ஒருகருவியாக உபயோகிக்க கம்பெனி அவரைப் படிக்க வைத்தது. பாப்லாரில் அவருக்கு ஞானஸ்நானம் செய்து வைக்கப்பட்டது. லண்டனின் மேயரும் கம்பெனி இயக்குநர்களும் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். முதலாம் ஜேம்ஸ் மன்னர் அவருக்குப் பீட்டர் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தார்; அவருக்கு ஞானஸ்நானம் செய்துவைத்த பாதிரியார் அவரை இந்தியாவில் கனிந்த 'முதல் கனி' என்று அங்கு கூடி யிருந்தவர்களுக்கு அறிமுகப்படுத்தினார். 1617ல் சூரத்தில் ஒரு முகமதியரின் மதமாற்றம் நிகழ்ந்தது. இவ்வாறாக இரு இடங்களிலும் சமயமாற்றங்களோடு கம்பெனியின் பணி துவங்கியது. 'ஏசுநாதரின் போதனைகளைப் பரப்ப முயற்சி மேற்கொள்ளவேண்டுமென்று கம்பெனி முடிவுசெய்துள்ளதால், ஒரு மதகுரு வேண்டுமென்று கேம்ப்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகங்களுக்கு இயக்குநர்கள் மனுசெய்தனர். கம்பெனியின் சுதேசிகளுக்கு நன்கு பயிற்சியளிக்க உதவுதற்காக மதக்குருமார்களும், ஏஜெண்டுகளும் அந்தந்த நாடு களின் மொழிகளைக் கற்றுக்கொள்வதில் அக்கறை காட்டவேண்டும்; அவர்கள் புரொடெஸ்டெண்ட் மதத்தினராகவும் கம்பெனியின் சிப்பந்தியாகவோ, அல்லது ஏஜெண்டாகவோ இருக்கவேண்டும் என்ற விதியையும் தனது உரிமைப்பத்திரத்தில் சேர்த்துக்கொள்ள கம்பெனி சம்மதித்தது.

திடீரென்று, 1698க்குப்பின் கம்பெனியின் கண்ணோட்டத்தில் படிப்படியாக ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. மதமாற்றப் பணியில் போர்ச்சுக்கல் டச்சு அரசுகள் அதிவேகத்தில் சென்று கொண்டிருந்த போது கிழக்கிந்தியக் கம்பெனி வேகத்தைக் குறைத்துக் கொண்டது. அதே வருடத்தில் இந்த பிரச்சினைபற்றி இருமாதிரியான சிந்தனைகள் கம்பெனிக்கு இருந்தன எனத் தெரிகிறது. தனது மதக்குருக்களைப் பயனளிக்கும் பிரசாரக் கருவிகளாக ஆக்குவதற்கு அவர்களுக்கு இந்தியமொழிகளில் பயிற்சியளிக்க வேண்டியது தனது கடமையென்று ஒப்புக்கொண்ட அதேசமயம், கம்பெனிக்காக பின்வருமாறு பிரார்த்தனை செய்வதற்கும் கம்பெனி அனுமதி அளித்தது; அந்த பிரார்த்தனையின் வாசகம் வருமாறு: ''நாம் வாழ்ந்துவரும் இந்தியநாட்டினர் மத்தியில் நமது ரட்சகரின் போதனையை

அணிகலனாகக் கொண்டு நாம் ஆற்றிவரும் நல்ல பணிகளைக் கருத்தில்கொண்டு, அவர்கள் நம்பக்கம் ஈர்க்கப்படுவார்களாக'' இந்தப் பிராத்தனை 1750 வரை செய்யப்பட்டு வந்தது. இந்தப் பிரார்த்தனையின் வாசகங்களைக் கூர்மையாகப் பரிசீலித்துப் பார்க்கும்போது தீவிரமாக மதமாற்றம் செய்ய வேண்டும் என்று ஆரம்பத்தில் இருந்த கருத்தை முற்றிலுமாக கைவிடுவதை ஒப்புக்கொண்டதாக இல்லையா? கம்பெனியின் இந்த கண்ணோட்டம் வாதப்பிரதிவாதத்திற்கு உட்பட்டது. மதமாற்றம் வேண்டும் என்று கூறும் நண்பர்கள், கம்பெனி இந்தக் கண்ணோட்டத்தைக் கைவிடுமாறு நிர்ப்பந்திக்கும் தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். 1773வது ஆண்டின் ஒழுங்குபடுத்தும் சட்டமும் பிட்டின் கிழக்கிந்தியச் சட்டமும் 'வியாபாரி என்ற பெயரில் அரசு மாறுவேடம் பூண்டு செயல்படுவதை' முடிவுக்கு கொண்டுவந்தன; இந்தியப் பிரதேசங்களில் சர்க்காரை நடத்தி செல்வதற்கு பார்லிமெண்டின் உரிமை பெற்ற ஏஜெண்டாக கம்பெனியை ஆக்கின. சட்டத்தின்படி கம்பெனியின் உரிமைப் பத்திரம் 20 ஆண்டுகளுக்கு மட்டும் இருக்கும்; அதன்பின் புதுப்பிக்கப் படவேண்டும். 1793ஆம் ஆண்டு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது; ஏனெனில், கம்பெனியின் உரிமைப்பத்திரம் அந்த ஆண்டில்தான் புதுப்பிக்கப்படவேண்டும்.

கிறித்தவ அறிவைப் பரப்பு வதில் ஆர்வம் கொண்டவர்களுக்கு அவர்களுடைய பணி சுலபமாகி விட்டதுபோல் தோன்றியது. இந்த விஷயத்திற்குப் பொறுப்பாக இருந்த வில்பெர்போர்ஸ், பாராளு மன்றத்தில் முக்கிய நபர்களின் ஆதரவைப் பெற்றுவிட்டார். அதிமேற்றிராணியார் மூரின் ஆசிகளையும் பெற்று விட்டார். கிழக்கு இந்தியக் கம்பெனியின் உரிமைப் பத்திரம் பற்றிய விஷயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஆதரவையும் பெற்றது மேலும் அதிக முக்கியத்துவமானதாகும். இந்த மசோதா நிறைவேறுவதற்கு முன்நடவடிக்கையாக, உரிமைப் பத்திரத்தில் சேர்க்கப்பட வேண்டிய விஷயங்கள் காமன்ஸ் சபை நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்கள் வடிவத்தில் தயாரிக்கப்பட்டன. அவ்வாறு நிறைவேற்றப் பட்ட ஒரு தீர்மானம் பின்வருமாறு கூறுகிறது:

''இந்தியாவில் பிரிட்டிஷ் டொமினியன்களில் வாழும் பிரஜை களின் நலனையும் மகிழ்ச்சியையும் உயர்த்துவதற்காக எல்லாவித நியாயமான, நிதானமான நடவடிக்கைகளை எடுப்பது பிரிட்டிஷ் சட்டமன்றம் விசேடப் பொறுப்புணர்ச்சியுடன் செய்யவேண்டிய கடமை என்பதாலும், இந்த நோக்கங்களுக்காக அறிவுத்துறையிலும் மற்றும் மதம் போன்றவற்றிலும் பொதுவாக நடவடிக்கைகளை எடுக்கப்பட

வேண்டும் என்பதாலும், ''பின் வருமாறு சட்டமியற்றுகிறது: மேற்சொன்ன நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பள்ளி ஆசிரியர்களாகவோ, மத போதகர்களாகவோ, அல்லது வேறு எந்த வகையிலோ பணியாற்றுவதற்கு அவ்வப்போது தேவைப்படும் எண்ணிக்கையில் பொருத்தமான, தகுதியுள்ள நபர்களை நியமித்து அனுப்பிவைக்க இயக்குநர்கள் குழுவிற்கு இதன்மூலம் அதிகாரம் அளிக்கிறது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப் படும் ஒவ்வொரு நபரும் நியமிக்கப்படும் முன் அல்லது அனுப்பப்படும் முன் இப்போதைக்குக் காண்டர்பரி தலைமை மதகுரு அல்லது லண்டன் பிஷப்பிடமிருந்து அல்லது கிறித்தவ ஞானத்தைப் பரப்புவதற்காக லண்டனிலும் ஸ்காட்லந்திலு முள்ள கழகங்களிடமிருந்து திருப்திகரமான நற்சாட்சிப் பத்திரங்கள் அல்லது நன்னடத்தை சான்றிதழ்கள் பெற்று இயக்குநர் குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். கிறித்தவ ஞானத்தைப் பரப்புவதற்குப் போதுமான தகுதி அவர்களுக்கு இருக்கிறதா என்பதை இந்த நற்சாட்சிப் பத்திரங்கள் எடுத்துக் கூறுபவையாக இருக்கும். மேலும் பின்வருமாறு சட்ட மியற்றுகிறது: இந்தியாவின் சம்பந்தப்பட்ட ராஜதானி சர்க்கார் களுக்குத் தேவைப்படும் கட்டளைகள் இடும் அதிகாரம் இயக்குநர் குழுவுக்கு வழங்கப்படுகிறது; அவ்வாறு அனுப்பப் படுபவர்கள் பணியாற்ற வேண்டிய இடம் பற்றியும் அவர்கள் தங்களைக் கண்ணியமான முறையில் பேணிக்கொள்வதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பது பற்றியும் ஆவன செய்யும்படி அந்த சர்க்கார்களுக்குக் கட்டளைகள் அனுப்ப வேண்டும். மேலே சொன்ன நோக்கங்களை அடைவதற்கு உசிதமான நடவடிக்கைகள் பற்றி பரிசீலித்து முடிவு எடுக்கும் படியும் ராஜதானி சர்க்கார்களுக்குக் கட்டளையிட வேண்டும்.

பிரதானமாக துண்டாஸின் ஆதரவினால் காமன்ஸ் சபை தீர்மானத்தைத் தயக்கமின்றி ஏற்றுக் கொண்டது. வில்பெர்போர்ஸ் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அவரது கிழக்கு இந்திய விவகாரத் திற்குப் போல் ஆண்டவனினருள் எப்பொழுதும் இவ்வளவு தெள்ளத் தெளிவாக இருந்ததில்லை என்று அவர் தமது சஞ்சிகையில் எழுதினார். ஆனால் அவரது இந்த நம்பிக்கை அவசரப்பட்டது என்பது விரைவிலேயே புலனாயிற்று. ஏனெனில், இந்த மசோதா மூன்றாம் தடவை படிக்கப்பட்ட போது, துண்டாஸ் அனுமதியோடு அந்த ஷரத்து நீக்கப்பட்டது. தமது நண்பர் கிஸ்போர்னுக்கு, வில்பெர்போர்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''எனது ஷரத்து தூக்கி எறியப்பட்டு விட்டது... துண்டாஸ் இரட்டை வேடம் போட்டுவிட்டார்.''

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இவை போன்ற வாதங்கள்தான் மேலோங்கி இருந்தன. இதன் காரணமாக 1793ல் இந்த ஷரத்து நிராகரிக்கப்பட்டது. கிறிஸ்துவின் போதனை சௌகரியத்துக்கான ஒரு மதம் அல்ல; பதிலாக சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மதமாகும் என்பதைக் காமன்ஸ் சபை உறுப்பினர்களுக்கு ஞாபகப்படுத்தி, அவர்களை வில்பர்போர்ஸ் சாடினார். ஆனால் ஏற்கனவே எடுத்துக் காட்டியபடி, ''பதினெட்டாம் நூற்றாண்டில் மதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் சௌகர்யத்தின் பொருட்டு அரசும் சமுதாயமும் ஏற்றுக்கொண்ட மதம் சொந்த நாட்டில் எதார்த்தத்துடனும் விவேகத் துடனும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று கருதினர். வெளிநாடு களில் அதை முரட்டுத்தனமான முறையில் பரப்ப வேண்டிய தேவை இல்லை. பொதுவான சூழ்நிலை, ஏற்கனவே கூறியபடி அகஸ்டனின் ரோமாபுரி போல இருந்தது. அவையவைக்குரிய இடத்தில் இருக்கும் போது எல்லா மதங்களும் சமத்துவமானவையே என்பது அந்த ராஜதந்திரியின் கருத்து.''*

மதபோதகர்களுக்கு வழி திறந்து விடும் முயற்சி இவ்வாறு தோல்வியடைந்தது. 1813 வரை மதபோதகருக்கு வழி அடைக்கப் பட்டே இருந்தது. அதுமட்டுமல்ல, தங்களுடைய அனுமதி பெறாமல் இந்தியாவில் இங்குமங்கும் நுழைந்த மத போதகர்களின் நடவடிக்கை களையும் கம்பெனி சர்க்கார் உஷாராகக் கண்காணித்து வந்தது.

1793ல் அனுமதி பெறாமல் டாக்டர் கேரே வந்தார். இசைவுச் சான்றிதழ் இல்லாததால் கல்கத்தாவில் நுழைய அவர் அனுமதிக்கப் படவில்லை. எனவே கல்கத்தாவிலிருந்து 14 மைல் தொலைவில் உள்ள செராம்பூருக்குச் சென்றார் அவர். செராம்பூர் ஒரு டென்மார்க் குடியேற்றம். டச்சுக்காரர்கள் மதப்போதகர்களுக்கோ மத அமைப்பின் பிரசாரத்திற்கோ எத்தகைய தடையும் விதிக்கவில்லை. மாறாக செராம்பூர் கவர்னர் அவர்களுக்குத் தீவிரமாக உதவினார். கேரேயும் அவரது பிரசாரக்குழுவும் கம்பெனி சர்க்காரின் சந்தேகப் பார்வையில் எப்பொழுதும் இருந்துவந்தனர். 1798ல் செராம்பூர் சமயப் பிரசாரக்குழு நான்கு மதபோதகர்களைப் பிரசாரப் பணியில் ஈடுபடுத்த முடிவு செய்தது. அவர்கள் 1800ல் வந்து சேர்ந்தனர். கவர்னர் ஜெனரலுக்கும் இவர்களுக்குமிடையே எந்த சம்பந்தமும் இல்லை. உரிமம் பெறாமல் உற்சாகத்துடன் செயல் படும் இவர்கள் வெளிப்படையாக அங்கு

---

★ மேகெவின், ''கிறித்தவ சமயமும் இந்திய சர்க்காரும்'', பக்கம் 51.

தங்கி இருப்பது கம்பெனியின் கவர்னர்-ஜெனரல் வெல்லெஸ்லி பிரபுவின் கண்களை உறுத்தியது. இவர்கள் எந்த நேரமும் கிழக்கு இந்தியக் கம்பெனியின் பிரதேசத்தில் சட்ட விரோதமாக பிரவேசிக் கலாமாதலால் மேன்மை தங்கிய தாங்கள் அவர்களை வெளியேற்ற வேண்டும் என்று செராம்பூர் கவர்னருக்கு வெல்லெஸ்லி பிரபு எழுதினார். அந்த மாதிரி எதுவும்* தாம் செய்ய இயலாது என்று டேனிஷ் கவர்னர் பதிலளித்தார். இதேபோன்று 1806ல் கேப்டன் வைக்ஸ் இரு மதபோதகர்களைக் 'கிரிட்டேரியன்' என்ற கப்பலில் கல்கத்தாவிற்கு அழைத்து வந்தார். சர் ஜார்ஜ் பார்லோ அப்போது கவர்னர் - ஜெனரலாக இருந்தார். இந்த இருவரும் கரை இறங்குவதைத் தடுக்க அசாதாரண நடவடிக்கையை அவர் எடுத்தார். இந்த இரு போதகர்களையும் திருப்பி அழைத்துக் கொள்ளாவிடில், அவரது தஸ்தாவேஜுகள் அங்கீகரிக்கப்பட மாட்டா என்று கேப்டனுக்கு உத்தரவிட்டார். இத்தனைக்கும் அவர்கள் இருவரும் செராம்பூர்க்குச் சென்று டென்மார்க் அரசின் பாதுகாப்பில் இருந்தனர். மதபோத கர்கள் பற்றிய இந்தக் கண்ணோட்டம் மிகவும் நியாயமற்றது மட்டுமல்ல; அது விரோதமான கண்ணோட்டமும் ஆகும்.**

1806ல் இந்தியச் சிப்பாய்களிடையே வேலூரில் நடந்த சிப்பாய்க் கலகம் மதப்பிரசாரத்தின் விளைவு என்று தவறாகக் கணிக்கப்பட்டது. பீதியடைந்த நிலையில் இருந்த சர் ஜார்ஜ் பர்லோ உடனே செராம்பூர் மத போதகர்களின் நடமாட்டங்கள் மீது கீழ்க்கண்ட கட்டுப்பாடுகளை விதித்தார்:

1. மதபோதகர்கள் செராம்பூரிலேயே இருக்க வேண்டும்.
2. கடைத்தெருவில் பகிரங்கமாக போதனை செய்யக்கூடாது.
3. மதம் மாறிய சுதேசிகள் செராம்பூரிலிருந்து அதன் பிரதிநிதிகளாக அனுப்பப்படவில்லையெனில் அவர்கள் பிரச்சாரம் செய்யலாம்.

இஸ்லாம் பற்றிய ஒரு சிறு பிரசுரத்தை வெளியிட்டதற்காக 1807ல் வங்க சர்க்கார் செராம்பூர் மத அமைப்பை மிகக் கடுமையாக சாடியது. அந்தப் பிரசுரத்தில் கவனக்குறைவாக முகமது நபிகளைப் பற்றி ஆட்சேபகரமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. மத போதகர்கள்பால்

---

★ ஜே.ஸி. மார்ஷ்மென்னின் ''கரேயின் வாழ்க்கையும் காலமும்'' என்ற நூல் தொகுப்பு, தொகுதி, 1 ப.9

★★ மேற்படி நூல், ப. 307.

கம்பெனி கொண்டிருந்த பகைமை போக்கை இது மேலும் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டியது.

டாக்டர் கேரே மன்னிப்புக் கோரியும் வங்க சர்க்கார் திருப்தி யடையவில்லை. அவரது அச்சகத்தைச் செராம்பூரிலிருந்து கல்கத்தா வுக்கு மாற்ற வேண்டுமென்று வங்க சர்க்கார் வலியுறுத்தியது. அவர்கள் வெளியிடும் பிரசுரங்கள் மீது கடுமையான கட்டுப்பாட்டை ஏற்படுத்த சர்க்காரால் முடியும் என்பதாலேயே இவ்வாறு கூறப் பட்டது. இந்த செய்தி அந்த மதக்குழுவுக்கு கவலையை அளித்தது; இந்த முயற்சி அதன் பணிகளை நிச்சயம் சீர்குலைக்கும். வழக்கம்போல், டென்மார்க் குடியிருப்பின் கவர்னர் அவர்களது உதவிக்கு வந்தார். வங்காள சர்க்கார் அச்சகத்தை நிர்ப்பந்தமாக கல்கத்தாவிற்கு எடுத்துச் சென்றால் தாம் அவர்களுக்காக போராடப் போவதாக பீதியடைந்த செராம்பூர் மதபோதகர்களுக்குத் தைரியம் கூறினார். பின்னால் இந்த பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டு, அந்த உத்தரவு வாபஸ் பெறப் பட்டது. ஆனால் கம்பெனியின் சர்க்கார் மதபோதகர்களின் நண்பனாக இருக்கவில்லை என்பதை இது எவ்வகையிலும் மூடிமறைத்து விடவில்லை. தங்கள் நிலையை நியாயப்படுத்த அவர்கள் இவ்வாறு வாதிக்கலாம். ஆனால் 1813 ஆம் ஆண்டிற்குப் பின் சமய பரப்புக் குழுக்கள் செயல்படுவதை அனுமதித்த போது இவர்கள் மேற்கொண்ட கண்ணோட்டம் யாது? மதம் மாறியவர்களின் சிந்தனையிலிருந்தும் வாழ்விலிருந்தும் சாதி கட்டாயம் போகவேண்டும் என்ற கொள்கையை மேற்கொண்டனரா? ஒரு புரோடெஸ்டெண்ட் போதகர் இது பற்றி தெரிவித்த கருத்து இதற்கு ஒரு சாதகமான பதிலை அளிக்கக் கூடியதாக இல்லை.

மத போதகர்கள் சாதியை அனுமதிக்காதது: ''டாக்டர் கெய்னே 1814ல் பின்வருமாறு எழுதினார்:

''பல சந்தர்ப்பங்களில் மதபோதகர்கள் தங்களது விரைவான அல்லது முடிவான வெற்றிக்கு மிகவும் தீங்கு விளைவிக்கும் தவறைச் செய்துள்ளனர். ஒரு இந்துவைக் கிறித்தவ சமயத்திற்கு மாற்றுவதற்கு; அவர் அவசியம் தம் சாதியை இழக்கும் படியான கொள்கையை அவர்கள் கடைப்பிடிக்கின்றனர். இந்தியாவில் இது அவமரியாதை யாகக் கருதப்படுகிறது. இது மதமாற்றத்திற்கு ஒரு சக்திவாய்ந்த தடங்கலாக இருக்கும் என்று கருதப்படுகிறது. இந்துக்களின் அரசியல் பிரிவு அவர்களது மதக்கோட்பாடுகளின் அங்கமாக இல்லை; மிகவும் விஷயம் அறிந்தவர்கள் கூட இதைத் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள்.

இந்துக்களுக்குக் கிறித்தவ சமயத்தை அளிக்கும்போது அவர்களின் சாதியை வைத்துக் கொள்ள அனுமதியுங்கள்; அப்பொழுது தயக்க மின்றி கணிசமான எண்ணிக்கையில் கிறித்தவ சமயத்தைத் தழுவுவர்.''*

தனிப்பட்ட ஒருவரின் கருத்தை வைத்து மட்டும் இந்தப் பிரச்சினையில் புராட்டஸ்டெண்ட் சமயப் பரப்பு அமைப்புகளின் கண்ணோட்டம் பற்றி ஒரு முடிவுக்கு வர நான் விரும்பவில்லை.

முன்பு, அவர்களின் பணி ஆரம்பித்த காலத்தில், இந்தப் பிரச்சினை பற்றி எந்த நிலை எடுக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துக் கூறும்படி புரோடெஸ்டெண்ட் அமைப்புகள் கேட்டுக் கொள்ளப் பட்டன என்பதற்கு ஆதாரம் உள்ளது. அப்பொழுதுதான் அவற்றின் தேர்ந்து தெளிந்த முடிவாகக் கொள்ள முடியும். கல்கத்தா பிஷப்பாக ரெவரன்ட் ஹீபர் நியமிக்கப்பட்ட சமயத்தில்தான் இந்தப் பிரச்சினை ஆழமாக விவாதிக்கப்பட்டது. அவர் தமது பணியில் 1823ல் சேர்ந்தார். திருச்சபை பொறுப்பில் அவர் இருந்த பொழுது இந்தியா முழுவதிலும் இலங்கையிலும் அவர் விரிவான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். மதம் மாற்றம் செய்யப்பட்டவர்களிடையே சாதியைச் சகித்துக் கொள்ளலாம் என்ற பிரச்சினை பற்றி புரோடெஸ்டெண்ட் மதபோதகர் களிடையே தீவிரமான கருத்து மோதல் இருந்ததைத் தெரிந்து கொண்டார். இந்தக் கருத்து வேறுபாட்டைத் தீர்க்க அவர் விரும்பினார். அவர் இந்தப் பணியை எவ்வாறு செய்ய முயன்றார் என்பதை ரத்தினச் சுருக்கமாக திரு. காயி குறிப்பிட்டிருக்கிறார். அது வருமாறு:

> ''மதப் போதகர்களிடையே சச்சரவு இருந்தது. அதைப் போக்க ஹீபர் தீவிர அக்கறை காட்டினார். வங்காளத்திலிருந்து புறப்படும் முன்பே இந்த பிரச்சினை அவர் முன் கொண்டுவரப்பட்டது. தமக்கு கிடைக்கக்கூடிய எல்லாத் தகவல்களையும் சேகரித்து பிரச்சினையைப் புரிந்து கொள்ள முயன்றார். முன்னால் செயல் பட்ட புரோட்டெஸ்டெண்ட் மதபோதகர்கள் கடைப்பிடித்த நடைமுறை பற்றி மட்டுமல்லாமல் சாதி என்ற அமைப்பின் உண்மைத் தன்மையைப் பற்றியும் அறிந்து கொள்ள விரும்பினார். பிஷப் கல்லூரியில் கிறித்தவ சமயத்திற்கு மாறிய ஒருவர் இருந்தார். அவர் பெயர் கிறிஸ்டியன் டேவிட், அவர் சுவார்ட்ஸ்

★ கிருஷ்ணா மாவட்ட மானுவல், பக்கம் 282.

என்பவரின் மாணவர்; உண்மையிலேயே மிகத் திறமையானவர். தெய்வ பக்தியில் போலவே புத்திக் கூர்மையிலும் சிறந்து விளங்கியவர். தம்முடைய சந்தேகங்களுக்கு விரைவாக விடை கிடைப்பதற்கு அணுகவேண்டியவர்களுள் அவரும் ஒருவர் என்று ஹீபர் கருதினார். எனவே ஒரு கேள்விப் பட்டியலைத் தயாரித்து அந்த சுதேசி கிறித்தவரிடம் அளித்தார்; அவரிடமிருந்து பதில்களைப் பட்டியலாகப் பெற்றார்; அந்தப் பதில்கள் அருமையான ஆங்கிலத்தில் இருந்ததோடு, சுலபமாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாத அளவுக்குத் துல்லியமாகவும் ஆழமாகவும் இருந்தன.

''முதலாவதாக, சாதியின் தன்மை குறித்து : தென்னிந்தியாவின் சுதேசிகள் சாதி என்பதை இவ்வுலக வாழ்வு சம்பந்தப்பட்ட ஒரு கருத்தாகவே எடுத்துக் கொள்கின்றனர்; மற்றபடி எந்த மத எண்ணங்களோடும் அவர்கள் அதைச் சம்பந்தப்படுத்துவதில்லை'' என கிறிஸ்டியன் டேவிட் குறிப்பிட்டார். ''உயர்சாதியிலிருந்து மதம் மாறிய சுதேசிகள் கீழ் சாதியிலிருந்து மதம்மாறியவர்களுடன் உறவு வைத்துக் கொள்வதில் அக்கறை காட்டுவதில்லை; அது எந்த மதம் மதரீதியான அல்லது மூடநம்பிக்கையில் ஏற்பட்டதல்ல, மாறாக சமூக காரணங்களால் தோன்றியவையே; உயர் சாதிக்கும் கீழ் சாதிக்கும் இடையே உள்ள சில வேறுபாடுகள் எத்தகைய உயர்வான குறிக்கோள் அடிப்படையிலும் அமைந்தவையல்ல; இந்த பாகுபாடுகள் லௌகீகச் செல்வங்களை அடைவதால் மட்டுமே தங்கமுலாம் பூசிவிட முடியாதவை, என்றும் டேவிட் கூறினார். கீழ்ச்சாதியைச் சேர்ந்தவர்கள் வழக்கமாகவே சகிக்க முடியாத முறையில் பேசுகின்றனர். அடிக்கடி முரட்டுத்தனமான அல்லது உயர்சாதியினரின் உணர்வுகளை அவமதிக்கும் ரீதியில் கண்ணியமற்ற முறையில் பேசுகின்றனர் என்பதையும் அவர் குறிப்பாக எடுத்துக்காட்டினார்; அவர்கள் தங்கள் வாழ்க்கை முறையில் ஒழுக்கக் குறைவாகவும் சுயமரியாதைக் குறைவாகவும் இருக்கின்றனர். கல்வி அவர்களை உயர்த்தும் என்றார்; ஒரு பறையர் கல்விமானாக மாறினால் அவரை பண்டிதர் என்று அழைக்கின்றனர்; மாதா கோவிலும் அவரை மதிக்கும்; அப்பொழுது மதம் மாறிய அவரது சகோதரர்கள் அவரோடு பழகுவர்; ஆனால் உலகம் தூற்றும் என்றோ அல்லது பெருமையின் காரணமாகவோ ஒரே தட்டில் அவருடன் உணவு அருந்த மாட்டார்கள். சீகன்பல்க் காலத்திலிருந்தே மாதா கோவிலில் இரண்டு தனித்தனிப்

பிரிவுகளின் அமர்ந்து பழகிவிட்டார்கள்; கர்த்தரின் மேஜையில் தனித்தனியாக தங்களை வெளிப்படுத்திக் கொள்வர்; ஒரே கோப்பை யில் பானத்தை அருந்துவர்; ஆனால் உயர்சாதியிலிருந்து மாறிய வர்கள் முதலில் அருந்துவர்; இவை லௌகிக விஷயங்கள் சம்பந்தமான வேறுபாடுகள் மட்டுமே என்பதற்குச் சான்றாக கிறிஸ்டியன் டேவிட் ஒன்றைக் குறிப்பிட்டார்: அதாவது தெற்கத்திய கிறித்தவ கூட்டத் தினரில், உயர்சாதியைச் சார்ந்தவரும் கீழ்ச்சாதியினரும் மரணத்திற்குப் பின் பொதுவான ஒரு இடுகாட்டில் புதைக்கப்படுகின்றனர்; சவ அடக்கம் சம்பந்தமான சடங்குகளில், 'புற சமயங்களை அனுஷ் டிக்கும் தேசங்களுக்கு மாறாக, மரணம் எல்லா வேறுபாடுகளையும் சமப்படுத்தி விடுகிறது என்ற உணர்வில்' ஒன்றாகக் கலந்து கொள்கின்றனர்.''

''கிறித்தவ சமயத்திற்குத் தடங்கலாக ஆகிவிடக்கூடிய கடுமை யான விதிகளைக் கடைபிடிப்பதற்குப் பதிலாக இலேசான ஆட்சேபத் தின் மூலமும் நயந்து எடுத்துச் சொல்லி இணங்க வைப்பதன் மூலமும் அனுபவமிக்க மத போதகர்கள் தீங்கைக் குறைக்க முயன்றனர். சுவார்ட்ஸ் கீழ் சமய பரப்புக் குழுக்கள் இயங்கியபோது, தீங்கு கணிசமான அளவு குறைக்கப்பட்டது என்றார் டேவிட். ஆனால், கிறித்தவ சமயப் பரப்புக் கழகத்தைச் சேர்ந்த திரு. ரீனியஸ் - அவர் உண்மையான மனசாட்சிப்படி உணர்வுபூர்வமான, விசுவாசமுள்ள கிறித்தவர் - கிறித்தவ மத ஆசிரியர்களின் கடமைகள் பற்றி மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தார்; தென்னிந்தியாவின் இளைய மதபோதகர்களைத் தன் கருத்துகளுக்கு ஆதரவாளர்களைத் திரட்டி னார்; எனவே, சாதியை முற்றிலுமாக மறுப்பது - அது சமூக சம்பந்தமாக இருந்தபோதிலும் - கிறித்தவ சமயத்தில் சேர்த்துக் கொள்வதற்கு ஒரு அத்தியாவசிய நிபந்தனை என்பதை அவர்கள் ஒப்புக் கொண்டனர்; அதுமட்டுமன்றி முந்தைய மதபோதகர்களுக்கு எதிராகவும் பேசினர்; பிரசாரம் செய்தனர்; கிறித்தவ சமயத்தின் பரிசுத்தத்தை மாசுறச் செய்யும் விஷயங்களை அனுமதித்ததற்காக அவர்களை 'ஏசுநாதரின் போதனையைக் கறைப்படுத்தியவர்கள்' என்று கண்டனம் செய்தனர்; இவற்றையெல்லாம் பற்றி மிகவும் வருத்தத்தோடு கிறிஸ்டியன் டேவிட் தெரிவித்தார். அவரது கருத்து அவருடைய பழைய குருவான கிறிஸ்டியன் சுவார்ட்ஸின் கோட்பாடு களுடனும் நடைமுறையுடனும் இயல்பாகவே இசைந்து போகக் கூடியதாக இருந்தது. பிஷப்பின் இலேசான தலையீடும் அன்பான ஆலோசனையும் மிகுந்த சகிப்புத் தன்மையையும் பொறுமையையும் கடைப்பிடிக்கும்படி இளம் பிரசாரகர்களின் இதயங்களை ஒழுங்கு படுத்தியிருக்கும் என அவர் கருதினார்.

அது தவறான கருத்தை அளிக்காவிட்டாலும் இந்துக்களைத் தங்களின் எதிரிகளாகக் கருதுவதால் முஸ்லீம்கள் குறிப்பிடப்படுகிறார்கள் என்றால், சீக்கியர்கள் ஏன் குறிப்பிடப்படுகிறார்கள்? அவர்கள் இந்துக்களைத் தங்கள் எதிரிகளாக கருதவில்லை என்பது உண்மை. பின் அவர்கள் ஏன் குறிப்பிடப்படுகிறார்கள்? சீக்கியர்கள் குறிப்பிடப் படுவது மட்டுமல்ல; அவர்கள் முக்கியமானவர்களாக கருதப் படுவதோடு, அவர்களின் தீவிர ஒத்துழைப்பு இல்லாமல் சுயராஜ்யத் திற்கான போராட்டத்தை நடத்திச் செல்ல முடியாது என்ற கருத்தும் நிலவுகிறது. ஆனால் சீக்கியர்களின் ஒத்துழைப்பு நிபந்தனையின்றி அளிக்கப் படவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். தங்களின் ஒத்துழைப்புக்குப் பிரதியாகச் சீக்கியர்கள் இரு நிபந்தனை களை முன் வைத்தனர் என்பது நன்கு அறிந்ததே.* ஒரு நிபந்தனை, தேசியக் கொடியை வடிவமைக்கும்போது சீக்கியரின் நிறம் - அது கறுப்பு என்று கூறினர் - அதில் இடம்பெற வேண்டும் என்பது. சட்டசபைகளில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதைக் காங்கிரஸ் உத்தரவாதம் செய்ய வேண்டுமென்பது இரண்டாவது நிபந்தனை. சீக்கியர்கள் குறிப்பிடப்பட்டதோடு மட்டுமல்லாமல், திருப்தி படுத்தப்பட்டார்கள். ஆனால் கிறித்தவர்களைக் குறிப்பிடக் கூட இல்லை. இந்தியக் கிறித்தவர்களைக் குறிப்பிடாததற்கு இரண்டு விளக்கங்கள்தான் இருக்க முடியும். ஒன்று, சுயராஜ்யத்திற்கான போராட்டத்தில் அவர்கள் காங்கிரஸுடன் இல்லை அல்லது குறிப் பிடக்கூடிய அளவு அவர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக இல்லை. சுயராஜ்யத்திற்கான போராட்டத்தில் அவர்கள் காங்கிரஸுடன் இல்லை என்பதை எவரும் மறுக்கமுடியாது. 'இந்தியன் சோஷியல் ரிபார்மர்' என்ற பத்திரிகையின் ஆசிரியருக்கு ஒரு இந்தியக் கிறித்தவர் எழுதிய கடிதம் 'யங் இந்தியா'வில் மறு பிரசுரம் செய்யப் பட்டிருந்தது. கீழே கொடுத்துள்ள அந்தக் கடிதம் சுயராஜ்யம் பற்றி இந்தியக் கிறித்தவர்களின் நிலையை வெளிப்படுத்துகிறது:

> ''இந்தியாவில் கி.பி. இரண்டாவது நூற்றாண்டிலேயே கிறித்தவக் குடியிருப்புகள் இருந்தன என்பதற்குத் திட்டவட்ட மான ஆதாரம் எங்களிடம் உள்ளது. உண்மை அதுவாக இருக்கும் பொழுது, இஸ்லாம் மதத்தின் தோற்றத்திற்குச் சில நூற்றாண்டு களுக்கு முன்பே, இந்தியாவில் தாங்கள் வசித்ததாக இந்திய கிறித்தவர்கள் உரிமை கொண்டாட முடியும். அப்படியிருக்கும்

★ 'யங் இந்தியா', ஆகஸ்டு, 4, 1921.

போது இந்திய மண்ணில் பிறந்து வளர்ந்த, சுத்தமான இந்திய மூதாதையரைக் கொண்ட இந்தியக் கிறித்தவன் இந்த நாட்டின் புராதன வரலாற்றை அதன் கலாசாரத்தைப் போற்ற ஏன் கற்றுக்கொள்ளவில்லை? தங்களது மத நம்பிக்கையிலிருந்து எவ்வளவு வேறுபட்டிருந்தாலும் அதன் மக்களைத் தனது ரத்தத்தின் ரத்தமாக, தசையின் தசையாகப் பார்க்க அவன் ஏன் கற்றுக் கொள்ளவில்லை? அவனைப்போல் இல்லாமல், சக இந்து அல்லது முகமதிய பிரஜைகள் தாய்நாட்டின் கலாசர்ர, சமூக, அரசியல் வளர்ச்சியில் அதன் ஒவ்வொரு கட்டத்தையும் எக்காரணத்தால் உற்சாகத்துடன் வரவேற்று அதில் தங்கள் பங்கை ஆற்றினர்? **வந்தே மாதரம்** இந்துக்கள், முகமதியர்கள் ஆகியவர்களின் உணர்ச்சிப் பிரவாகமாக மட்டுமே ஏன் இருந்தது? ஏன் இதுவரை இந்தியக் கிறித்தவனால் அது எதற்காகப் புறக்கணிக்கப்பட்டது? தங்கள் அபிலாஷைகள்பால் இந்திய கிறித்தவனின் உணர்வு அரைகுறை மனதானது என - எதிரானதில்லை என்றாலும் - ஏன் இந்துக்களும் முகமதியர்களும் கருதுகிறார்கள்? இந்தியாவில் தொடர்ந்து வளர்ந்து வரும் தேசிய உணர்வானது இந்திய கிறித்தவன் தான் ஒதுக்கப்பட்டு விட்டதாக, தனக்கு உதவிகரமாக இல்லாததாக, எதிர்காலத்தில் தனது பாதுகாப்பு பற்றி சந்தேகப்படத்தக்கதாக ஆகியுள்ளது ஏன்?''*

திரு. ஜார்ஜ் ஜோசப், கே.டி. பால், டாக்டர் எஸ்.கே. தத்தா ஆகியோர் விஷயம் எப்படியாயினும், சுயராஜ்யத்திற்கான போராட்டத்தில் கிறித்தவ சமூகம் தீவிரமாகக் கலந்து கொள்வதற்கு மாறாக, அதைப் பற்றி உண்மையிலேயே பயந்து கொண்டிருந்தது என்பதில் சந்தேகமில்லை; இந்தியக் கிறித்தவர்களிடையே நிலவும் கண்ணோட்டத்தைக் இக்கடிதம் உண்மையாகப் படம் பிடித்துக் காட்டு கிறது. ஆகவே முகமதியர், சீக்கியரோடு ஏன் இந்தியக் கிறித்தவர் குறிப்பிடப்படவில்லை என்பதற்கான காரணம் தெளிவாகத் தெரிகிறது. குறிப்பிடாமல் விடப்பட்டது சுயராஜ்யத்தில் நண்பர்கள் என்பதல்ல. அவ்வாறு விடப்படுவதற்கு அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படாததுதான் காரணம் என்ற ஒரே முடிவுக்குத்தான் ஒருவர் வர முடியும். இவ்வளவு நன்றாக அறிவாற்றல் பெற்ற ஒரு சமூகம், நாட்டின் விவகாரத்தில் எந்த முக்கியத்துவமும் செல்வாக்கும் இல்லாமல் இருப்பது வருத்தமான விஷயமாகும்.

---

★ *'யங் இந்தியா', 21 டிசம்பர், 1922*

இத்தகைய நிலைக்குக் காரணங்கள் எதுவாக இருக்கமுடியும்? மிகவும் தெளிவான காரணம், அதன் எண்ணிக்கை சிறிதாக இருப்பது தான். முஸ்லீம்களைப் போலவோ அல்லது தாழ்த்தப்பட்டவர்கள் போலவோ பொதுவாழ்வில் ஒரு சக்தியாக கிறித்தவ சமூகம் உணரப் படாததற்குக் காரணம், அதன் எண்ணிக்கை மிக குறைவாக இருப்பதுதான். அவர்கள் முக்கியத்துவமில்லாமல் போனதற்கு இதுவே முழுவதும் காரணம் என்று ஆகிவிடாது. இந்த நிலைக்கு வேறு சில அம்சங்களும் இருக்க வேண்டும். இங்கு இரு அம்சங்களைக் காண்கிறேன்.

அதில் ஒன்று: இந்தியக் கிறித்தவர்கள் தேங்கிய நிலையாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் மிகப் பெரும்பான்மை யினர் மதப் போதகர்களின் மடிகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர் களின் கல்விக்கு, அவர்களின் மருத்துவ தேவைக்கு, மத சம்பந்தமான விஷயங்களுக்கு, அவர்களின் மிகச் சொற்பமான தேவைகளுக்கு அவர்கள் சர்க்காரை எதிர்பார்ப்பதில்லை. அவர்கள் மத அமைப்பு களையே நம்பியுள்ளனர். சர்க்காரை நம்பியிருக்க வேண்டிய நிலையில் இருந்தால், வெகுஜனங்களிடையே கிளர்ச்சி நடத்த, அவர்களுக்கு எடுத்துக் கூற, பயனளிக்கும் அரசியல் நடவடிக்கைக்கு அவர்களை ஒன்றுதிரட்ட வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். அம்மாதிரி ஒரு ஸ்தாபனம் இல்லாவிடில் அவர்களின் தேவை களையும் விருப்பங்களையும் பற்றி எந்த சர்க்காரும் கவலைப்படாது. நீரோட் டத்தில் அவர்கள் இல்லை; அதில் இல்லாததால், பொது வாழ்க்கை பற்றி அவர்கள் அக்கறை கொள்ளவில்லை; எனவே பொதுவாழ்வில் அவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட எந்த இடமும் இல்லை.

இரண்டாவது காரணம்! இந்தியக் கிறித்தவ சமூகம் சிதறிக் கிடக்கிறது - ஐக்கியமில்லாத சமூகம் என்பதைவிட இது மிகவும் சரியான வார்த்தை. அவர்களிடம் பொதுவாக இருப்பது ஆன்மீக சக்திதான். அதைவிட்டு விட்டால் அவர்களிடம் பொதுவாக இருப்பதெல்லாம் அவர்களைத் தனித்தனியாக வைப்பதற்கு உதவு பவையே; மற்றவர் களைப் போலவே கிறித்தவர்களும் இனத்தால், மொழியால், சாதியால் பிரிக்கப்பட்டு இருக்கின்றனர். மொழி, இனம், சாதி ஆகியவை வெறும் வேறுபாடுகளே என்று விளக்கிக் கூறி அவர்களை ஒற்றுமைப்படுத்த அவர்களின் மதம் போதுமான அளவு

சக்தி வாய்ந்ததாக இருக்கவில்லை. மாறாக, அவர்களை ஒன்று படுத்தக்கூடிய மதம் பல்வேறு பிரிவுகளினால் ஏற்படும் வித்தியாசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. விளைவு என்னவெனில், ஒரு பொதுவான லட்சியம், பொதுவான சிந்தனை ஏற்பட பொதுவான முயற்சி செய்ய முடியாத அளவு இந்தியக் கிறித்தவர்கள் மிகவும் சிதறுண்டு கிடக்கின்றனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு இந்தியக் கிறித்தவருக்கு ஒரு தமிழ் இந்து, பஞ்சாபிலுள்ள இந்தியக் கிறித்த வரைவிட மிகவும் நெருக்கமாக இருக்கிறான். அதேபோல் ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த ஒரு இந்திய கிறித்தவனுக்கு, மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த இந்தியக் கிறித்தவரைவிட, ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த இந்து நெருக்கமாக இருக்கிறான். சுருங்கக் கூறவேண்டுமெனில், இந்தியக் கிறித்தவர் என்ற சொற்றொடர் புள்ளிவிவரத்திற்கான சொற்றொடரே. இந்தச் சொற்றொடரில் சமூக உணர்வே இல்லை. ஒரு சமுதாயம் உள்ளது என்பதை நிரூபிக்கத் தேவையான உணர்வினால் இந்தியக் கிறித்தவர்கள் இணைக்கப்பட்டிருக்கவில்லை.

அவர்களின் வாழ்க்கையைப் பீடித்திருக்கும் பலவீனங்கள் குறித்த நான் கூறியுள்ளது பற்றி இந்தியக் கிறித்தவர்கள் என்ன நினைப்பார்கள் என்று எனக்குத் தெரியாது. ஒரு விஷயத்தை நான் கூறமுடியும். அது இதுதான்: இந்தியக் கிறித்தவர்கள்பால் நான் ஆழமான அக்கறை கொண்டிருக்கிறேன்; ஏனெனில், அவர்களில் மிகப் பெரும்பான்மையினர் தீண்டப்படாத சாதிகளிலிருந்து ஈர்க்கப் பட்டவர்கள். நான் செய்துள்ள விமர்சனங்கள் நண்பனின் விமர்சனங்களேயன்றி ஒரு எதிராளியின் விமர்சனங்கள் அல்ல. அவர்களின் குறைகளை அவர்களது கவனத்திற்குக் கொண்டு வந்ததற்குக் காரணம் அவர்கள் பலமுடையவர்களாக இருக்க வேண்டுமென்று நான் விரும்புவதால்தான்; ஏனென்றால், அவர்களைப் பெரும் அபாயங்கள் எதிர்நோக்குகின்றன. திரு. காந்தியின் அசாதாரணமாக மூடி மறைக்கப் பட்ட பகைமையை அவர்கள் சமாளித்தாக வேண்டும். ஆனால், இந்திய தேசியம் என்று போலி வேஷத்தில் உலவும் தீவிர இந்து தத்துவத்தையும் அவர்கள் சமாளித்தாக வேண்டும். அண்மையில் பிருந்தாவனத்தில் என்ன நடந்தது என்பதிலிருந்து பேய்க்குணம் படைத்த இந்து மதம், கிறித்தவர்களுக்கும் கிறித்தவ மதத்திற்கும் என்ன செய்ய முடியும் என்பதைக் காணமுடியும். பத்திரிகைச் செய்தி உண்மையென்றால்* ஒரு ஹிந்துமதக் கூட்டத்தினர் சத்தமின்றிச்

★ இந்தியன் விட்னஸ்

சென்று பிருந்தாவனத்திலுள்ள கிறித்தவ மதபோதனை சபையின் கட்டிடங்களைத் தீக்கிரையாக்கினர்; அதை மதபோதகர் மீண்டும் கட்டினால் திரும்பவும் வந்து அதை எரித்து வீழ்த்துவோம் எனப் பயமுறுத்திச் சென்றனர். இது தவறாக வழிநடத்தப்பட்ட தேச பக்தர்களின் தனித்த நிகழ்ச்சியாக இருக்கலாம்; அல்லது கிறித்தவர் களையும் கிறித்தவ மதத்தையும் ஒழிப்பதற்காக இந்துக்கள் என்ன திட்டமிட்டிருக்கிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணமாகவும் இருக்கலாம். இனி வர விருக்கும் நிகழ்ச்சிகளுக்கு நிழலாக இது இருக்குமாயின், அவற்றை எதிர்கொள்ள இந்தியக் கிறித்தவர்கள் தயாராக இருக்க வேண்டும். நான் எடுத்துக் கூறிய பலவீனங்களைக் களைந்து போக்காமல், அவர்கள் இதனை எவ்வாறு எதிர்நோக்க முடியும்? எல்லா இந்தியக் கிறித்தவர்களும் சிந்திப்பார்களாக!

□□□

## நூற்பட்டியல்

இந்த நூலில் ஆசிரியர் மேற்கோளாகக் காட்டியுள்ள நூல்களும் இதழ்களும் பின்வரும் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இந்த வெளியீடுகள் பற்றிய விவரங்களைப் பம்பாய் பல்கலைக்கழக நூலகம், ஆசியவியல் கழகம் ஆகியவற்றில் தேடி இவற்றை வெளியிட்டவர், வெளியிட்ட ஆண்டு முதலிய தகவல்களைப் பெறமுடிந்தது. இதில் குறிப்பிடாமல் விடுபட்டுள்ள ஆசிரியர்கள் பற்றிய விவரங்கள் தேடிப் பெறமுடியாமற் போனவையாகும்.

**- வசந்த் மூன்**

குறிப்பு : பெயர் வரிசை ஆங்கில நூலில் உள்ளபடியே தரப்பட்டுள்ளது.

- தமிழ்நூல் பதிப்பாளர்.


அபேடு போய் : இந்து பழக்கவழக்கங்களும், சடங்குகளும், ஆக்ஸ்போர்டு, கிளாரண்டன் அச்சகம், 1897

அம்பேத்கர், டாக்டர் பி.ஆர்., : சாதி ஒழிப்பு, 1936, 'தீண்டப்படாதவர்களுக்குக் காங்கிரசும் காந்தியும் செய்ததென்ன?' , தக்கர் அண்டு கோ, பம்பாய், 1945.

ஆண்ரூஸ், சி.எப், : 'சமயங்களுக்கு இடையிலான நேச உறவிற்கு அடிப்படை,' தி யங்மென் ஆப் இந்தியா, பர்மா மற்றும் சிலோன், ஜுன் 1928 தொகுதி XI, எண்.6.

பேடன் போவல், : பிரிட்டிஷ் இந்தியாவில் நிலவருவாய் முறைகளும், நிலக்குத்தகைகளும் பற்றிய கையேடு, கல்கத்தா, அரசினர் அச்சகம், 1882.

பரோ, ஆர்.எச் : ரோமானிய சாம்ராஜ்யத்தில் அடிமைத்தனம்.

போல்டன் : லண்டனில் காந்தி, ஏஷியா, நியூயார்க், பிப்.1932.

பிரைஸ், ஜேம்ஸ் : புனித ரோமானிய சாம்ராஜ்யம், லண்டன், மாக்மில்லன், 1913.

புன்சென்,ஈ.டி : கிறிஸ்துவ தேவாலயத்தில் முகம்மதுக்குரிய இடம், ஏஷியாடிக் கோட்டர்லி ரெவிவ்யூ, ஏப்ரல் 1889.

கிராவ்லி : வாழ்க்கை விருட்சம்

டர்க்ஹைம்பேரா., : சமய வாழ்க்கையின் அடிப்படை வடிவங்கள், லண்டன், ஜார்ஜ் ஆலன் அண்டு அன்வின் லிமி., 1915.

எல்வுட்., பேரா., சார்லஸ். ஏ., : சமயப் புத்துருவாக்கம், மனவியல் நோக்கில் சமூகம், 1913 என்சைக்லோபீடியா பிரிட்டானிகா, 11-வது பதிப்பு, தொகுதி-26.

கௌல்டிங், லூயிஸ் : யூதர் பிரச்சினை, ஹார்மன்ஸ் ஒர்த், பெங்குவின் நூல்கள், 1938

குரோட்டே, ஜார்ஜ் : பிளாட்டோவும், சாக்ரடீஸின் இதர தோழர்களும், 4 தொகுதிகள், லண்டன் 1888.

ஹாலம், ஹென்றி : இடைக்கால ஐரோப்பாவில் அரசு பற்றிய கோட்பாடு, 9-ம் பதிப்பு, 2 தொகுதிகள், லண்டன், 1848.

ஜான்சன், சார்லஸ் சி, : அமெரிக்க நாகரிகத்தில் நீக்ரோ,

கனே, : பி.வி, தர்ம சாஸ்திர வரலாறு,

கேயி, : இந்தியாவில் கிறித்தவம்.

கிருஷ்ணமாச்சாரியார், எம்., : செம்மொழி சமஸ்கிருத இலக்கிய வரலாறு, திருமலை - திருப்பதி தேவஸ்தான அச்சகம், 1937.

மார்ஸ்மென், ஜே.சி., : கேரியின் காலமும் வாழ்வும், மார்ஸ்மென் அண்டு வார்டு, 2-தொகுதிகள், 1859.

மேய்யூ, : இந்திய அரசாங்கமும் கிறித்தவமும், லண்டன், லாங்மென்ஸ், 1938.

மாக்ஸ் முல்லர், : புனித நூல்களில் சமயத் தாக்கம் குறித்து, சமய அறிவியலுக்கு முன்னுரை, லண்டன், 1873.

மக்டகல், வில்லியம்., : சமூக உளவியலுக்கு முன்னுரை, 26-ம் பதிப்பு, லண்டன், மெதுவன் கம்பெனி, 1945.

மூயிர். ஜே., : சமஸ்கிருத மூலநூல்கள், 5 தொகுதிகள், லண்டன், ட்ரூப்னெர் அண்டு கோ, 1873.

நீக்ரோ இயர் புக், 1931-32

நீபோர், ரெயினோல்ட் பேரா., : ஒழுக்கமுள்ள மனிதனும் ஒழுக்கமற்ற சமுதாயமும், ஓர் அறிவியல் மற்றும் அரசியல் ஆய்வு, நியூயார்க், சார்லஸ் ஷெர்ப்னர்ஸ் சன்ஸ், 1932.

ஒ கில்வீ, டாக்டர் ஜே.என், : இந்தியச் சமயத் தூதர்கள், லண்டன் பெயர்டு சொற்பொழிவுகள், 1915.

பேட்டன், எச்.ஜே, : நல்லெண்ணம், லண்டன், தத்துவ நூலகம், 1927.

பட்டாபி சீத்தாராமையா, : இந்திய தேசிய காங்கிரஸ் வரலாறு, சென்னை, காங்கிரஸ் காரியக் கமிட்டி, 1935.

சைனபோஸ், சார்லஸ், : பண்டைய நாகரிக வரலாறு, லண்டன், 1937.

ஸ்லீமான், சர், டபிள்யூ, எச்., : ஓர் இந்திய அதிகாரியின் துணுக்குகளும், நினைவுக்குறிப்புகளும், 2 தொகுதிகள், லண்டன் 1915.

ஸ்மித், ஜார்ஜ் : இந்திய மதமாற்றம், 1893

ஸ்மித், இராபர்ஸன், : செமித்தியரின் சமயம்

ஸ்ரேன்ஞ், சர்.தாமஸ், : இந்துச் சட்டம் பற்றிய ஆய்வுக் கட்டுரை, 2 தொகுதிகள், ஆலன் அண்டு அன்வின் லண்டன் 1830.

தார்ன்டைக், பேரா, எட்வர்டு எல், : ஒப்புமை மனவியல், 1934.

தர்ஸ்டன், : தென்னிந்தியக் குலங்களும் குடிகளும், ஏழு தொகுதிகள், சென்னை, அரசாங்க அச்சகம், 1909

டாவ்னி, ஆர்.எச்., : தொழிலாளர் என்ன செய்யமுடியும் என்பதில் நமக்குத் தோன்றும் சுதந்திரம், லண்டன்.

வின்ஸ்லோ, : இந்தியாவில் கிறித்தவம் பற்றி

சமய நூல்கள் : மனுஸ்மிருதி, காத்யாயன ஸ்மிருதி, நாரத ஸ்மிருதி, மகாபாரதம், இராமாயணம், விஷ்ணு புராணம், ஹரிவம்சம், குரான், பைபிள்.

இதழ்கள் : லக்னோ ஆதி இந்து, லாகூர் ஆரிய கெஜட்டி, பம்பாய் சமாசார், பாரத் ஜோதி, பம்பாய் கிரானிகல், சிவில் அண்டு மிலிட்டரி கெஜட்டி ஆப் லாகூர், தி காங்கிரஸ் ஆப் டெல்லி, எடின்பரோ ரெவீவ்யூ, ப்ரீ பிரஸ் ஜர்னல், ஹரிஜன், இந்து, இந்துஸ்தான் டைம்ஸ், இந்தியன் நியூஸ் கிரானிக்கல், தி இன்டிபென்டென்ட் ஆப் அலகாபாத், ஜீவன், மிலாப் நேஷனல் ஏரால்டு, நேஷன், பிரதாப், பிரகாஷ், சாவதான், சத்திய சம்வத் ஆப் லாகூர், பம்பாய் சமதா, சங்கரம்,

ஸ்டேஸ்மேன், சண்டே டைம்ஸ், டெல்லி தேஜ், டைம்ஸ் ஆப் இந்தியா, யங் இந்தியா

சென்சஸ் அறிக்கைகள் : *1881, 1891, 1901,1911,1931,1951*

அறிக்கைகள் : சைமன் கமிஷன் அறிக்கை, சௌத்பரோ குழு அறிக்கை, இந்திய வாக்குரிமைக் குழு அறிக்கை, இந்திய வட்ட மேஜை மாநாடுகளின் அறிக்கை

*30.9.1937* ஆண்டுக்கான தமிழ்நாடு ஹரிஜன் சேவக் சங்க அறிக்கை, உத்தர பிரதேச நகராட்சியின் 1916 ஆம் ஆண்டு அறிக்கை - 2, கிரிமினல் லா ஜர்னல் சென்னை, சட்ட மேலவை விவாதங்கள் பஞ்சாப் நகராட்சி சட்டம், 1911 இந்தியன் பினல் கோடு - வரைவு - இந்திய செயலாளருக்குச் சட்டக் கமிஷன் அனுப்பியது.

கிருஷ்ணா மாவட்ட மானுவல், ஸ்டார்ட்- தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் குறைபாடுகள் பற்றிய அறிக்கை, 1929.

★★★

# சிறப்புப் பெயரகராதி


அகலிகை, 112

அகில இந்தியத் தீண்டாமை ஒழிப்புக் கழகம், 368

அசீரியா, 15

அதர்மம், 229, 245

அபே டு போய், 200, 201

அமெரிக்கா, 384, 432

அயர்லாந்து, 256

அரிஸ்டாடில், 466, 496

அலிபாஸ்கல், 15

அல்புகர்க், 526

அல்பெருனி, 34, 36, 48

அல்ஸ்டர், 307

அன்சாரி, டாக்டர் 279

ஆகாகான், 308

ஆக்ஸ்போர்டு, 527

ஆங்கிலோ-இந்தியர், 305

ஆண்ருஸ், 511

ஆதிதிராவிடர் 248, 467

ஆரிய சமாஜம், 271

ஆலயப் பிரவேசம், 397

ஆலயப் பிரவேச மசோதா, 421

ஆல்பர்டு லியால், 465

இந்திரன், 112

இந்திராணி, 112

இந்து, 4, 88, 195, 229, 437, 447, 461, 471

இந்து நாகரிகம், 20, 27

இந்து மதம், 299, 427, 447, 465

இந்து மகாசபை, 270

இயேசு, 104, 396, 514

இராசகோபாலாச்சாரியார், 273, 279, 366, 367, 370

இராபர்ட் டி நொபிலி, 522

இராமநாதபுரம், 239, 241

இராமர், 519

இராமாயணம், 116

இறையியல், 440, 491, 493

இஸ்லாமியர், 4, 294, 307, 435, 463

ஈழவர் மாநாடு, 416

எகிப்து, 15, 97, 483

எரவாடா, 315, 325, 369

ஐரோப்பியர், 63, 503

கந்தோபா, 519

கபிலர், 18, 95

கலப்பு மணம், 295

காங்கிரஸ் கட்சி, 288, 291, 292

காதி, 116, 131

காத்தியாயனர், 106

காந்தியார், 105, 213, 251, 289-309, 329, 501, 510, 547

காலாராம் கோயில், 194, 211

கிறித்தவர், 4, 21, 100, 251, 433, 435

கிறித்தவம், 471, 502

கிழக்கிந்தியக் கம்பெனி, 488

கிரானிக்கல், 209

கிரிகோரி, 502

கிரேக்கம், 17, 199

கிலாபத், 257, 262
குசன், 116
குரான், 4
குஜராத்தி, 3
குசன், 116
குற்ற மரபினர், 7, 11, 20, 26
குருவாயூர், 404, 411
கேரே, 485, 542
கொலாபா, 495
கௌதம ரிஷி, 115
சங்கரர், 519
சங்கராச்சாரி, 404
சத்திரியர், 133
சதுர்வருண சித்தாந்தம், 404
சந்தா சாகிப், 534
சந்திரகுப்த மௌரியர், 31
சவுத்பரோ பிரபு, 167
சமுதாயம், 455
சமூகம், 455
சரோஜினி நாயுடு, 272
சாக்கியர், 96
சாதிகள், 50-69, 74, 84, 91, 135, 461, 463, 469
சிவன், 118
சீக்கியர், 3, 288, 299
சீக்கிய மதம், 471
சீனிவாசன், ஆர்., 405, 410
சுக்கிரன், 107
சுத்தி இயக்கம்
சூத்திரர், 34
சூரத், 489, 492
செயின்ட் தாமஸ், 483
செலுக்கஸ் நிக்கத்தர், 32
செவ்விந்தியர், 100
செராம்பூர், 513, 532
செனார்ட், 22
சென்னை, 314
சென்னை மாகாணம், 22, 180
சேவியர், பிரான்சிஸ், 520
சைமன் கமிஷன், 166, 168, 286, 525
சௌதார் குளம், 189-194
டால்ஸ்டாய், 386
டோரிகள், 5
தக்குகள், 10
தமிழ், 3
தரங்கம்பாடி, 485
தர்மம், 230, 245
தர்ஸ்டன், 22
தலித் தோதார் சபை, 275
தனித்தொகுதி, 290, 321, 327-331
தாணு பிள்ளை, 426
தாதாபாய் நௌரோஜி, 178
தாமஸ், செயின்ட், 494
திராவிடர், 135
திராவிடப் பிராமணர், 136
திரிசங்கு, 116, 119, 122
திருநெல்வேலி, 22.
திருமலை நாயக்கர், 520
திருவாங்கூர், 186, 484, 418
தீண்டாமை, 21, 28, 120, 163, 261, 292, 462
துர்க்கிம், பேரா., 85, 87
தேவேந்திரகுல வேளாளர், 240

நகுஷன், 111, 113
நபிகள் நாயகம், 104, 307
நாகபுரி, 262, 285
நாகரிகம், 16
நாசிக், 277
நாயர், 42
நாரத ஸ்மிருதி, 231
நாராயணசாமி, 428
நிமி, 115
நிஜாம், 8
நீக்ரோ, 384
நெஸ்பீல்டு, 88
நோபிள், ராபர்ட், 549
பச்சுமா, 400
பஞ்சமர், 299, 517
பஞ்சாப், 172
பட்டேல், சர்தார் வல்லபாய், 213, 214
பட்டேல், விட்டல்பாய், 271
பம்பாய், 138, 257
பரசுராமன், 132
பர்தோலி திட்டம், 264, 271
பள்ளர், 516
பறையர், 97, 460, 516
பலாய்கள், 242
பனியா, 37, 38
பன்னீர்செல்வம், சர். ஏ.டி., 421
பாணினி, 18
பாபிலோன், 16, 499
பாலக்காடு, 26
பார்போசா, 36
பாஸ்டில் சிறை, 199
பிந்தாரிகள், 9
பிரம்மம், 6
பிரம்ம சமாஜம், 514
பிரஜாபதி, 109, 116
பிர்லா, ஜி.டி., 384
பிராமணர், 39, 88, 136-154, 242, 426, 508
பிராமணங்கள், 83, 136, 154
பிரான்சிஸ் சேவியர், 476, 488
பிளாட்டோ, 216, 496
பிளினி, 497
பிரைஸ், 6
பிஷப் ஹூபர், 549
புத்தர், 93, 95
புதிரை வண்ணார், 22
புனா ஒப்பந்தம், 259, 335-354, 367
பெயின்ஸ், பேரா., 71
போப்பாண்டவர், 494, 497
போர்த்துகீசியர், 485, 526
பௌத்தர், 4, 95
மகர், 24, 204, 518
மக்கள் தொகை கணக்கெடுப்பு, 159
மக்டோனால்டு, ராம்ஸே, 332
மகாபாரதம், 107, 111, 129, 129
மதம், 441, 449-450
மதமாற்றம், 456, 463, 467
மதன்மோகன் மாளவியா, 407
மதுரை, 530
மதுரை சமயப் பரப்புக் குழு, 535
மதுரை மிஷன், 538
மராத்தியர், 3, 24
மலபார், 26, 44

மலபார் சடங்குகள், 231, 245, 525
மனு, 69, 106, 193, 194, 199, 232, 242, 249
மஹந், 186, 194, 209, 210
மாக்னா கார்ட்டா, 336
மாக்ஸ் முல்லர், 6, 61, 89, 90, 106, 464
மாண்டேகு-செம்ஸ்போர்டு, 166, 286
மாதிகா, 467, 526
மாப்ளா, 468
மாலா, 526
மிண்டோ-மார்லி, 161, 287
மிலேச்சர், 49
முகமது அலி, 505
முயிர், சர் வில்லியம், 101
முஸ்லீம், 159, 161, 301-307
மெகஸ்தனீஸ், 32, 48
மேனகை, 122
மேனன், 46
மோசஸ், 104
மோதிலால் நேரு, 278
வகுப்புத் தீர்ப்பு, 330, 346, 359
வங்காளம், 181
வசிஷ்டர், 117, 120
வந்தே மாதரம், 559
வட்டமேசை மாநாடு, 170, 177, 251, 289, 315-320
வால்டேர், 199
வால்மீகி, 18
வாஸ்கோடகாமா, 465
விக்குகள், 5
விசுவாமித்திரர், 94, 117, 120
விசேட சலுகைகள், 417
விவிலியம், 104
வியாசர், 18
விஷ்ணு புராணம், 115
வேதம், 209
வேத நாகரிகம், 17
வேலூர், 543
வேலூர் சிப்பாய்க் கலகம், 543
வீணா, 108, 110
வைக்கம், 277
'யங் இந்தியா', 556
ரங்க அய்யங்கார், 403, 405
ராபர்ட் தே நொபிலி, 519, 522, 535
ராமசாமி ஐயர், சர். சி.பி., 419, 420
ராஜா ராவ்பகதூர், 340, 361, 364, 368
ரிஸ்லி, 88
ரோம், 17
லோதியன் குழு, 169, 177
ஜப்பான், 14
ஜமதக்னி, 133
ஜார்ஜ் ஜோஸப், 506, 507, 559
ஜான் பிரிட்டோ, 522
ஜோஸப் பெஸ்கி, 523
ஹரிஜன சேவா சங்கம், 223, 375, 377, 388, 393
ஹரிஜன், 374
ஹர்தயாள், பேரா., 18
ஹோர், சர் சாமுவல், 316, 320
ஸ்மிருதிகள், 210, 231
ஸ்ருதி, 89, 91

★ ★ ★

